JL
Y31 m211,N65
N67:13
162738


சிராமநலம்
தமிழக அரசு - மாத இதழ்
கூவம் ஆறு-சீரமைப்புத்திட்டம்
தொடக்க விழா (19-9-1967)
அக்டோபர் 1967



"ஒன்று பட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே"

Y31:ம211,N55
N67.13-1-12

# கிராமநலம்

தமிழக அரசின் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை மாத இதழ்

கதிர் 13 | அக்டோபர் 1967 | நெல் 1

மாண்புமிகு முதல் அமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை அவர்களின் 59-வது பிறந்தநாளில், உள்ளாட்சித் துறை அளிக்கும் காணிக்கை பற்றி, மாண்புமிகு உள்ளாட்சி அமைச்சர் திரு மா. முத்துசாமி அறிவித்துள்ளதாவது :—

## காணிக்கை



தமிழக ஊராட்சி மன்றங்கள் தோன்று தொட்டே கிராம முன்னேற்றத்தில் பெரும் பங்கு கொண்டு பெருமிதம் கொள்ளத் தக்க வகையில் பணியாற்றி வந்துள்ளன. மேலும் பொலிவூட்டும் வகையில் பேரறிஞர் அண்ணாவின் 59—வது பிறந்த நாளன்று ஊராட்சி மன்றங்களும், ஊராட்சி ஒன்றியங்களும் கிராமங்களுக்குப் பெரும் பயன் விளைவிக்கும் வகையில் கீழே காணும் திட்டங்களை மேற்கொள்ளவிருக்கின்றன. அதன் மூலம் கிராம நலம் பெருக, தமிழகத்தின் பொருளாதார முன்னேற்றம் கூட வழியேற்படும். இவ்வாண்டு அண்ணாவின் பிறந்த நாளன்று மேற்கொள்ளப்படவிருக்கும் இத்திட்டங்கள், அடுத்த ஆண்டு அண்ணாவின் பிறந்த நாளுக்குள்ளாக முடிக்கப்பட்டு ஓராண்டுச் சாதனையாகச் செயற்படுத்தப்படும் (One Year Plan).

ஓராண்டுச் சாதனையாக மேற்கொள்ளப்படவிருக்கும் திட்டங்கள் :

(1) 1059 சமுதாய நலப் பாசனக் கிணறுகளைத் தோண்டி விசைப் பொறிகள் அமைத்து விவசாயிகட்கு உதவுதல்.

(2) 559 ட்ராக்டர்கள், 1059 டில்லர்கள், 2059 ஸ்ப்ரேயர்கள் வாங்கி குறைந்த கட்டணத்தில் விவசாயிகட்குப் பயன்படுமாறு செய்தல்

(3) ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில், மதிய உணவுக்கு உதவியாக இருக்கும் வகையில், 5059 காய்கறித் தோட்டங்களை அமைத்தல்.

(4) ஆரணிக்கருகில் உள்ள பூசிமலைக் குப்பத்தில் அரசினருக்குச் சொந்தமாக உள்ள 320 ஏக்கர் தரிசு நிலத்தில் விவசாயப் பண்ணை அமைக்க வகைசெய்தல்.

(5) இவை தவிர பேரூராட்சி மன்றங்களிலும் ஊராட்சி ஒன்றியங்களிலும் தேவையான இடங்களில் பல நோக்கு மண்டபங்கள் அமைத்து, ஏழை எளியவர்கள் அவற்றைத் திருமண மண்டபங்களாகவும், பல்சுவை நிகழ்ச்சிகள் நிகழ்விடங்களாகவும் பயன்படுத்திக்கொள்ள அனுமதிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.





# தமிழ் மணம் கமழும் தனிப் பாங்கு தேவை

சென்னை-600 005
162738

[மதுரைப் பல்கலைக் கழகத்தின் முதலாவது பட்டமளிப்பு விழா, 1967-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 7-ம் தேதி மதுரையில் நடைபெற்றது. அவ்வமயம், தமிழக மாண்புமிகு முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை அவர்கள் ஆற்றிய பட்டமளிப்பு விழாப் பேருரையின் முழு வடிவத்தையும் மகிழ்ச்சியுடன் இங்கே அளித்துள்ளோம்.

சங்கத் தமிழ் வளர்த்த மதுரையம்பதியில் முதலமைச்சர் நிகழ்த்திய விழாப் பேருரை—ஒரு இந்தமிழ்க் காவியமாகவே அமைந்துள்ளது. மாணவச் சமுதாயம் மட்டுமல்ல, தமிழ்ச் சமுதாயமே தன் நெஞ்சகத்துள் பதித்து வைத்துக்கொள்ள வேண்டிய அறிவுரைகளை அழகு தமிழில் வாரிவாரி வழங்குகிறது, முதலமைச்சரின் தித்திக்கும் தேன்நடையில் அமைந்துள்ள பேருரை....

—ஆசிரியர்.]

மதுரைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழாப் பேருரை நிகழ்த்தும் வாய்ப்பினைப் பெற்றமைக்குப் பேருவகை கொள்கின்றேன். இப் பல்கலைக் கழகம் தொடங்கி ஓராண்டே ஆகிறது; இதுவே முதல் பட்டமளிப்பு விழாப் பேருரையாகும். இந்த வாய்ப்பு நான் பெற்றிடச் செய்த பல்கலைக் கழகப் பெரியோர்கட்கு என் நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நான்மாடக்கூடலில் நிற்கின்றேன்; நானிலம் போற்றிடும் தனிச் சிறப்பினைப் பெற்றுத் தமிழகத்தின் அறிவுக்கோட்டமாய்த் திகழ்ந்தது இம் மதுரையம்பதி என்ற எண்ணம் தந்திடும் எழுச்சி பொங்கிடும் நிலையில் நிற்கின்றேன்.

நெஞ்சு நெக்குருகும் நினைவலைகள்

இங்கு நின்றிடும் எவருக்கும், அன்றொரு நாள், அறிவாளர் அரண் அளிக்க அரசாண்ட பாண்டியப் பெருமன்னர், தமிழ் வளர்த்து, தமிழர்தம் தனிச் சிறப்பினைக் காத்து, புகழ்க்கொடி நாட்டி, தரணி மெச்சக் கோலோச்சிவந்த வரலாற்று நினைவு எழாமலிருக்க இயலாது. நெஞ்சு நெக்குருகும் நினைவலைகள் எழத்தான் செய்யும்.

இன்று, நான் இங்கு நின்று, பட்டச் சிறப்புப் பெற்றிட வந்துள்ளோரையும் பெரும் பேராசிரியர்களையும் கண்டு களித்திடுகின்றேன்; இங்கன்றோ அந்நாளில் பாண்டியப் பேரரசர் சங்கப் புலவருடன் அளவளாவி, அறிவுப் புனலாடி, அகமகிழ்ந்திருந்தனர் என்பதனை எண்ணுகின்றேன்; இன்பத் தேன் சுவை நுகர்கின்றேன்.

மனக்கண்ணால் காணுகின்றேன்; முதுபெரும் புலவர்கள் அவைநோக்கி, முந்நூறு கல் தொலைவினின்றும், 'முதறிஞர், காணீர், தமிழ் நெறியை, தாரணியோர் மெச்சி ஏற்றிடத்தக்கதோர்



நன்னெறியை, ஈரடியில் யான் இயற்றியுள்ள சீரணியை' என்றுரைத்தவண்ணம், திருவள்ளுவனார் வந்திடும் காட்சியினை.

தத்தமது ஏடுகளை, வித்தகர் போற்றிடத்தக்கவென விளக்கி, புலவர் பெருமக்கள் பேருரையாற்றிய பெருமிதமிகு காட்சியெலாம் காணுகின்றேன்; காணாதார் எவருமிரார்.

எத்தகைய அறிவாற்றல், என்னென்ன திறனாய்வு, இங்கிருந்தன அற்றைநாளில்!

கொண்டு, தமிழ் மரபும் தமிழ் மாண்பும் என்றும் ஒளிமயமாய்த் திகழ்ந்திடச் செய்திடலாம் என்றோர் உறுதியினைப் பெறுகின்றேன்; பெறுகின்றார்; பெற்றிடச்செய்கின்றீர், பெரும் புலவர்களாம் நீவிர். பட்டமளிப்பு விழாவினிலே பாங்குடனே வந்துள்ள அறிவரசராம் நீவிர்; உமக்கென்ன் உரைத்திட உளது? உம் உள்ளம் அஃதறியும், உமது பெரும்பேராசிரியர் கருத்து அளித்துளார்; என் கடன் நீரறிந்ததனை மீண்டும் நினைவுபடுத்துவதேயாகும்.

## மதுரைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா

இந்தக் கவிதை எம்மான் இயற்றியது என்றியம்பிய சொற்கேட்டும், நெற்றிக்கண் காட்டினும் குற்றம் குற்றமே என்றுரைத்த அரிமாப் பெரும் புலவர் நக்கீரர் தெரிகின்றார்; நந்தமிழர் கொண்டிருந்த மாண்பு தெரிகின்றது. அச்சம் தவிர்த்திடுக! நவநிதியந் தந்திடினும் நத்திக் கிடந்திட இசையாதீர்! வாய்மைதனைக் காத்திடும் வன்மைதனைப் பெற்றிடுக! அதற்காக நெருப்பாற்றில் நீந்திடவும் துணிந்திடுக! யாந் தமிழர் என்பதனை மெய்ப்பித்திடுக! என்றன்றோ அந்நாள் நிகழ்ச்சி நமக்கெல்லாம் ஆணையிடக் காண்கின்றோம். இந்தத் திருநாட்டில் பிறந்திட்ட நாமெல்லாம் ஆன்றோர் அமைத்தளித்த அருமரபுதனைக் காத்தல் நீங்காத நற்கடமை என்பதனை உணர்கின்றோம், ஏறுநடை போட்டிடுக! ஏற்ற

அடிப்படைக் கேள்வி

பட்டம் பெற்றிடுகின்றீர்! பல்கலையில் வல்லுநர் ஆகின்றீர்! பல்கலைக் கழகம் ஈன்றெடுத்த நன்மணிகளாகின்றீர்! ஆம்! ஆயின், இஃது முடிவா, தொடக்கமா? அஃதே கேள்வி! பட்டம் பெற்றுள்ளீர்! பாராட்டுக்குரியீர், ஐயமில்லை. ஆயின் பட்டம் எதற்கு? காட்டிக் களித்திடவா? அன்றிப் பணி செய்திடக் கிடைத்திட்ட ஆணையெனக் கொண்டிடவா? நுமக்கா? நாட்டுக்கா? பொருள் ஈட்டிடவா? நாட்டுப் பெருமையினைக் காத்திடவா? எதற்கு இப் பட்டம் பயன்பட இருக்கிறது? அஃதே கேள்வி! விழாத் தந்திடும் மகிழ்ச்சியுடன் இழைந்து நம் செவி வீழ்ந்திடும் கேள்வி!

## மாண்புமிகு முதலமைச்சர் பேருரை

மிகு நிலையதனை இந்நாடு பெற்றிடவே உமதாற்றல் பயன்பட்டும் என்றெல்லாம் புலவர் பெருமக்கள் கூறிநிற்கின்றார்கள்; காண இயலவில்லை, கேட்கின்றோம் அவ்வுரையை.

தமிழகத்தின் இதயநாடி

பாண்டிநாடதற்குப் பாங்களித்த மாமதுரை, தமிழ் மரபு காத்திட்ட மன்றம் கண்ட மதுரை, தேமதுரத் தமிழோசை திக்கெல்லாம் எழச்செய்த திருமதுரை, வீரப்போராற்றலால் மட்டுமன்றி, அறிவுக்கணை தொடுத்த மாண்பினாலும், பெருமைதனைப் பெற்ற வெற்றிக்கோட்டம். 'அந்த நாளும் வந்திடாதோ!' என்ற உணர்ச்சியால் எவரும் உந்தப்படும் நிலை பெறுவர் மாமதுரைப் பதியின் வரலாற்றுச் சிறப்பறியின். ஆம்! ஆயின், ஏக்கம் நமக்கெதற்கு? அந்நாட் சிறப்பினை இந்நாளும் கண்டிடலாம், எந்நாளும் அச் சிறப்பு இருந்திடச் செய்திடலாம், இவரெல்லாம் அதற்கே தமை ஒப்படைத்துள்ளார்கள். இவர் ஆற்றல் துணை

தான் உண்ட நீரதனை, புன்மடங்கு பெருக்கி, பார்மகிழத் தருவதற்கே, சூல்கொண்டுலவுவது மேகம்; அறிகின்றோம்.

தன் தோகைதனை விரித்துக் கலாப மயில் ஆடுவது, தானே கண்டு களித்திடவா? பிறர் காண; பிறர் மகிழ!

தான் காத்து வைத்துள்ள பொற்குவியல்தனைக் கொண்டு, தானேயோ அணிகலனைச் செய்து நிலமாது பூட்டிக் கொள்கின்றாள்?—இல்லை—மற்றையோர் பெற்றிடத் தருகின்றாள்.

ஒளிதனை உமிழ்ந்திடும் திருவிளக்கு எதற்காக? இருளில் உள்ளோர் இடர் நீக்க!

பட்டம் பெற்றிடும் சிறப்புடையீர்! நீவிர், திருவிளக்கு—பொற்குவியல்—புள்ளிக் கலாப மயில்—கார்மேகம்—நாட்டைச் செழிக்கச் செய்திடும் வல்லுநர்கள், இசைபட மக்கள் வாழ உமதாற்றலை ஈந்திட வந்துள்ளீர்; இதற்கான அனுமதிச்



O.N. 1'

சீட்டே இந்தப் பட்டங்கள்; இத்தகையோரைப் பயிற்றுவித்து அனுப்பிக் கொடுப்பதுவே பல்கலைக் கழகத்தின் தனிச் சிறப்பு. நாட்டின் பொதுவுடைமை, நீவிர் இன்று நுமக்கென்று பெற்றுள்ள நற்பட்டங்கள். மறந்திடுவோர் அல்லர் நீவிர். எனினும் எடுத்துரைக்க வந்துள்ளேன், இயம்புகின்றேன்.

### ஆற்றல் மிகுந்த அறிவுப்படை—அச்சாணி

எந்நாடாயினும், இடரிலும் இழிவிலும் படாமல், இருளகன்று ஏற்றம் பெற்று இருந்திட வேண்டுமெனில், அந்நாட்டினில் தொடராய் அறிவாளர் தோன்றிய வண்ணம் இருந்திட வேண்டும். நன்று இது, இது தீது; நமதிது, பிறர் தந்ததிது; மரபு இது, மருள் இது என்பதனை ஆய்ந்தறிந்து கூறுவதற்கும், அவ்வழி நடந்து மக்கள் மாண்பினைப் பெற்றிடச் செய்வதற்கும், ஆற்றல் மிக்க அறிவுப்படை எழுந்தபடி இருந்திடவேண்டும்; அதற்கான பயிற்சிக்கூடம் வேறெதுவாய் இருந்திடமுடியும்? இஃதே அப் பயிற்சிக்கூடம், பல்கலைக் கழகம்; நாடு பல்வளமும் பெற்றிடும் நற்கலையைக் கற்றிட அமைந்துள்ள நக்கீரக்கோட்டம்.

1964–66-ஆம் ஆண்டுத் தேசியக் கல்விக் குழுவினர் இதனை வலியுறுத்திக் கூறியுள்ளனர். எவருக்கும் கட்டுப்படாமல், இழுப்பார் பக்கம் சாய்ந்துவிடாமல், சிந்தித்து உண்மை அறிந்து, அறிந்ததனை விளக்கமுடன் எடுத்துரைத்து, ஆளடிமையாகாமல். அச்சமற்று நிற்போரை அளிப்பதற்கே பல்கலைக் கழகம்—என்ற கருத்துப்பட அக் குழுவினர் கூறியுள்ளனர்.

ஆய்ந்தறிதல் வேண்டும்; அதற்கேற்ற அஞ்சாமை வேண்டும்; இன்றேல், சிந்தனையைச் சிறையிலிட்டுக் கொடுமையைக் கோலோச்சச் செய்வதற்கு உடந்தையானோர் ஆகிவிடுவோம்—என்றுரைக்கின்றார் — எச்சரித்திருக்கின்றார் பெர்ட்ரான்டு ரசல் எனும் பெருமகனார்.

ஈராயிரம் ஆண்டுகட்கும் முன்னர் இங்கு அமர்ந்திருந்த புலவோர்கள் கூறிச் சென்றார்கள் இவைபோன்ற ஏற்றமிகு நல்லுரைகள் பற்பலவற்றை; இடையில் அவை மறந்தோம்; அல்லுற்றோம்; இன்று அவனியின் பிற பகுதிகளிலுள்ள ஆன்றோர் அதனை அறிவிக்கின்றார்; நமக்குண்டு அந்தக் கருவூலம் நெடுங்காலமாக என்பதனை உணர்கின்றோம்; நாம் தமிழர் என்பதனை அறிகின்றோம்; நானிலம் இதனை அறியச் செய்திடும் தொண்டு புரிந்திட உறுதி கொள்கின்றோம்.

### உவகையுடன் உறுதிகொள்ளும் நன்னாள்

பட்டம் பெற்றிடும் இத் திருநாள் உவகை பெற்றிடும் விழா நாள்; ஐயமென்ன? ஆயினும், உவகை பெற்றிட மட்டுமே அமைந்ததன்று, உறுதி கொண்டிடவும் உள்ளதோர் நன்னாள். நாட்டைக் காத்திடும் நல் பணிக்கு நம்மை நாமே ஒப்படைக்கின்றோம் என்பதனை உணரும் நாளே இந்நாள்.

மதுரைப் பல்கலைக் கழகம் ஓராண்டுப் பருவத்திலுள்ளது.

நூற்றாண்டு விழா நடாத்தி முடித்திட்ட பல்கலைக் கழகங்கள் உள்ளன—நம் நாட்டில்.

பத்தோடு பதினொன்று என்ற முறையிலே அமைந்ததன்று, மதுரைப் பல்கலைக் கழகம்.

தமிழரின் தனித் தேவை ஒன்றினைக் கருத்திற் கொண்டு துவக்கப்பட்டதாகும் மதுரைப் பல்கலைக் கழகம்.



### அன்றைய அவலநிலை..

நூறு ஆண்டுகட்கு முன்னம் பல்கலைக் கழகங்கள் துவக்கப்பட்டபோது, நாடு, தன்னரசு இழந்து, தலை கவிழ்ந்து இருந்தது. மக்கள் மனம் வெதும்பிக் கிடந்தனர்; பல்வேறு துறைகளிலே சீர்குலைவு; எங்கும் அறியாமை மட்டுமன்று, இந் நாட்டினர் ஏதும் அறிந்திட வல்லர் அல்லர் என்ற எண்ணம் கப்பிக்கொண்டிருந்த நிலை. இங்கு எவரும் இதற்கு முன்னம் நினைத்துப் பார்த்திருக்க முடியாத அறிவுக் கலைகளை மேனாட்டார் வகுத்தளிக்கின்றார் என்ற உணர்வு மேலோங்கிய நிலையுடன் பல்கலைக் கழகம் நுழைந்தனர். அற்றைய நாட்களில் பயிற்சி தந்திட முனைந்தோரும், பரிதாப உணர்வுடனே பாடம் கற்பிக்க முற்பட்டனர். பிற நாட்டில் என்னென்ன கண்டனர் என்ற வியப்பு உணர்ச்சிக்கே முதலிடம்; நம்நாடு ஏதேது அறிந்திருந்தது என்பது பற்றிய கேள்விக்கு ஒதுக்கிடம்!

இந்நிலையில் வளர்ந்தன, பழம்பெரும் பல்கலைக் கழகங்கள்—ஆண்டான் அடிமைகட்கு, அன்பு காரணமாக, அறிவு வழங்கிடவும் வேலைக்கு ஏற்ற ஆட்கள் பெற்றிடவும் அமைத்திட்ட இடங்கள் என்று அவை கருதப்பட்டன.

அவற்றினிலே பயிற்சி பெற்று, பட்டம் பெற்ற அறிவாளிகளில் மிகப் பலரும், நடையாலும், உடையாலும், நாட்டத்தாலும், பிறந்த நாட்டில் வாழுகின்ற வேற்று நாட்டு வடிவங்களாகத் தம்மை ஆக்கிக்கொண்டனர்; அதிலே பெருமகிழ்வும் கண்டனர். நெடுங்காலம் இந்நிலை! இன்று அஃது பழங்கதை!!

மதுரைப் பல்கலைக் கழகம், அடிமைத்தளை அறுத்து, ஆளுவதற்கு உரிமையும் தகுதியும் பெற்றோம் நாம் என்ற முழக்கமிட்டு விழித்தெழுந்த மக்கள் உலாவந்திடும் நாட்களிலே அமைந்துள்ளது.

'ஒளிபடைத்த கண்ணினாய் வா! வா! வா!' என்ற பாரதியின் வீர அழைப்புக் கேட்டு, அணி அணியாய் வீரர்கள் திரண்டு வந்தனர்; பிறகு எழுந்தது இந்தப் பல்கலைக் கழகம்.

### சிந்தனை நமது உரிமை—கொள்கைக் கோட்டம்

நாட்டுக்கு விடுதலை கிடைத்திட்டது மட்டுமன்று, மனத்தளைகள் மெல்லமெல்ல அறுபட்டிடும் நிலையையும் நாம் கண்டோம்; அந்தச் சூழ்நிலையிலேயே இப் பல்கலைக் கழகம் கண்டோம்; சிந்தனை நமது உரிமை என்ற குறிக்கோளுக்கான கோட்டம் இஃது என்பதனை உணர்கின்றோம்.

எல்லாம் பிற நாடுகளிலே உள, நம் நாட்டிலே ஏதும் இல்லை என்ற பிச்சை மனப்பான்மை செத்தொழிந்து, 'எமக்கு ஈந்திடுக என்று எந்நாட்டவரும் கேட்டுப் பெற்றிடத்தக்க, ஏற்புடைய எண்ணக் குவியல் எம்மிடம் உண்டு; அது மாசு படிந்த மணிபோல, மங்கியதோர் ஓவியம்போல உளது; மாசு துடைத்திடுவோம், மணி ஒளியைக் காட்டிடுவோம்' என்று எழுச்சியுடன் கூறத்தக்க விழிப்புணர்ச்சி மேலோங்கி உள்ள காலம் இது; அதனைச் செவிலித்தாயாகப் பெற்றுளது இம் மதலை—மதுரைப் பல்கலைக் கழகம்.

### இதற்கென்று ஒரு தனிப் பாதை

எனவே, இதற்கென்று ஒரு தனித்தன்மை, இதற்காக ஒரு தனிப் பாதை இருத்தல் வேண்டும். இந்தப் பல்கலைக் கழகம், தமிழகத்துக் கருத்துக் கருவூலந்தன்னை உலகு காணுதற்கான வழி வகுக்கும் கோட்டமாகி, புலி பொறித்தான், கயல் பொறித்தான், ஆரியப்படை கடந்தான், கங்கைகொண்டான், கடாரம் வென்றான் என்றெல்லாம் புல்லரிக்கும் வரலாற்றினைப் படிக்கின்றோமே, அதற்கு ஒப்ப, குறளளித்தார், மேகலை ஒளி தந்தார், அகமும் புறமும் அறிவித்தார் என்று அவனியிலுள்ள நாடுகளில் வித்தகர் மெச்சிடத்தக்க, புது வரலாறு சமைத்திடுதல் வேண்டும்; அதற்கேற்ற அணிவகுப்பைத் திரட்டிடுதல் இந்தப் பல்கலைக் கழகத்தின் தனித்திறனாய் அமைந்திடுதல் வேண்டும். பாட முறை, பயிற்சி முறை, தேர்வு முறை எல்லாமே, இந்தத் தனி நோக்கம் கொண்டிடுதல் மிக நன்று. உரியவர்கள் இதுபற்றி ஆய்ந்தறிதல் வேண்டும். விருப்பம் உரைக்கின்றேன், வடிவம் கொடுத்திடும் பொறுப்பில் உள்ளோர் செய்திடுவர் எனும் ஆர்வம் கொண்டு.

அச்சம் தவிர்த்தல், ஆய்ந்தறிதல், நாட்டுநிலை உயர்த்தல், பிற நாடுகட்கு நம் தனிச் செல்வம் ஈது எனக் காட்டிடல், அளித்திடல், இவை எமது பணி என்று கூறிடுவீர். இந்த நிலை பெற்றோம் என்பதனை அறிவிக்கும் சான்றுகளே, யாம் பெற்றுள்ள பட்டங்கள் என்பதனைச் சொல்லாலும் செயலாலும் காட்டிட வாரீர் எனக் கனிவுடன் அழைக்கின்றேன்.

இவை ஏட்டில் படித்திட இனிப்பவை; விளக்கிப் பேசிட ஏற்றவை; வியந்து கூறிடத் தக்கவை. ஆனால், நடைமுறைக்குக் கொண்டு வருதல் எளிதன்று; தொடர்ந்து கடைப்பிடித்தல் அரிது. அதற்குத் தளராத உறுதியும், மங்காத ஊக்கமும், ஓயாத உழைப்பும், சீரான நோக்கமும், தன்னல மறுப்பும், மிக மிகத் தேவை. பல்கலைக் கழகம், இந்தப் பண்பினைத் தந்திடும்; தந்துளது என்று எண்ணுகிறேன். ஆம்! என்று உமது சீரிய பணியின்மூலம் மெய்ப்பிக்க வேண்டுகின்றேன்.

### "எப்பொருள் யார் யார் வாய்க் கேட்பினும்.."

தேவையற்றவை, தீது தருபவை, பொருளற்றவை, பொருத்தமற்றவை, இவையெல்லாம் பழமையின் பெயர் கொண்டோ நமது உடைமை என்ற பாசம் காட்டியோ நெளிந்திடக் கண்டிடின், விட்டு வைத்திடாமல், அவற்றினை நீக்கிடும் அறப்போரினைத் தொடுத்திடுதல் வேண்டும்.

அவர் கூறியுள்ளார், ஆகவே அஃது அறிவுடையதாகவே இருந்திடுதல் வேண்டும்—என்று எண்ணி இருந்திடாமல், அவர் உரைத்தது இஃது என்பதற்கு முதலிடம் தாராமல், உரைத்துளது யாது என்பதற்கே முதலிடம் தந்து, உண்மையெனில், உயிர் கொடுத்தேனும் காத்திடுவோம், அன்று எனில் உயிர் போவதெனினும் எதிர்த்து நீக்கிடுவோம் என்று முழக்கமிட்டு அறிவுத்துறைப் புரட்சியிலே ஈடுபட எழுமாறு, பட்டம் பெற்றுள்ள நல்லோரை அழைக்கின்றேன்.

(27-ம் பக்கம் பார்க்கவும்.)

# சென்னையை எழில்நகராக்க...

கூவம் ஆற்றை ஒழுங்குபடுத்திக் கரை அமைத்து, சென்னையை அழகிய திருநகராக்கும் கூவம் ஆற்றுச் சீரமைப்புத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 19—9—1967 அன்று துவக்கி வைத்தார்.

கூவம் சீரமைப்புத் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டும்படி முதலமைச்சர் அவர்களை வேண்டிக்கொண்டு, மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் திரு மு. கருணாநிதி பேசுகையில் கூறியதாவது :

### நகர வரலாற்றில் ஒரு பொன்னாள்

"சென்னை நகர வரலாற்றிலேயே இந்நாள் ஒரு பொன்னாள் என்று கூறலாம். பலப்பல ஆண்டுகளாக இந் நகராட்சியின் பொறுப்பை ஏற்றவர்களும், இம் மாநகர மக்களும் வேண்டி விழைந்த ஒரு திட்டம் இன்று உருவாகும் நிலைக்கு வந்துள்ளது.

கூவம் ஆறு, அதன் தலைப் பகுதிகளில் பாசன ஆதாரமாகப் பயன்பட்டு அதன்பின் வான் நீரையும், கழிவு நீரையும் தன்வயம் கொண்டு, வெள்ளம் போக்கி ஆறாக சென்னை நகர் எல்லைக்குள் நுழைந்து அந் நகர் ஊடே நெளிந்து, வளைந்து சென்று கடலில் கலக்கிறது. குப்பை கூளங்கள் கொட்டவும், வடிநீர் கழிநீர் சேர்க்கவும், மண்ணைக் கொட்டித் தூர்த்து மேடிட்டுக் குடிசைகள் கட்டி வாழவும், ஆற்றின் படுகை பயன்படுவதால், அதன் போக்குத் தடைப்பட்டு நீர் இடையாகக் கட்டி நின்று விடவும், கொசுக்கள் மலிந்து பெருகவும், நகரின் நலக் கேட்டைப் பெருக்கி உள்ளது.

### திட்டம் என்ன ?

வடகிழக்குப் பருவக் காலத்திலதான் கூவம் ஆற்றில் பெருக்கு எடுக்கிறது. பெருக்கில்லாக் காலங்களில் கடல் நீரை ஆற்றிற்குள் புக விட்டு ஓட்டத்தை எக்காலத்திலும் நிலையாகச் செய்தல் வேண்டும். இதற்கான அணை அமைக்கவும் திட்டத்தில் இடங் கொடுக்கப்பட்டுள்ளது.

மணலிட்டு மேடுறுவதால் கடல் நீர் புக விடாமல் தடைப்படும் இடத்தில் மணல் உறிஞ்சிகளைப் பொருத்தி அம் மண்ணை அகற்றவும், கடல் வாயைத் திறந்து, மூட விடாமல் தடுக்கவும் முறை செய்யப்பட்டுள்ளது.

### நோக்கம் நிறைவேற . . .

இந்த 'வேலைகளுக்கென எண்பத்தெட்டரை லட்சம் ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. ஆனால் இந்த வேலைகளால் மட்டும் நாம் மேற்கொண்டுள்ள திட்டத்தின் நோக்கம் நிறைவேறும் என்று கூறுவதற்கில்லை.

முதலாவதாக கூவம் ஆற்றில் சேரும் கழிவு நீரையும், சாக்கடைத் தண்ணீரையும் அதில் சேரவொட்டாமல் தடுக்கவேண்டும். இதை உணர்ந்து அரசு, இம் மாநகரை ஐந்து பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு பகுதிக்கும் தேவையான தனிக் கழிவு நீர் அமைப்புகளை செயலாற்ற முற்பட்டுள்ளது.

### கரைவாழ் மக்களுக்கு புதிய வீடுகள்

நம் எளிய மக்கள் இந்த ஆற்றின் கரையிலே குடிசைகளை அமைத்து, தங்களுக்கும் வசதியற்ற முறையில் வாழ்வதை நாம் அனைவரும் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும். அவர்களுக்கு நல்ல வீடுகள் கட்டித் தந்து, அவற்றில் குடியேறச் செய்வது இன்றியமையாத பெரும்பணி ஆகும்.

நகருக்கு எழில் செய்யும் இத் திட்டம் வீண் விரயம் இன்றி செவ்விய முறையிலே, பயனுறும் வகையில் விரைவில் செயல்பெற வேண்டும் என்று நான் வற்புறுத்துவேன். இதைக் குறிக்கோளாகக் கொண்டு பொதுப் பணித்துறையினரும், இத் திட்டத்திற்கு உதவ வேண்டிய வேறு பல துறைகளும் பணி புரிவர் என்று நம்புகிறேன்.

### கண்முன் தோன்றும் எழில் தோற்றம்

மாண்புமிகு முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை அவர்கள், திட்டத்தைத் துவக்கி வைத்துப் பேசும்போது குறிப்பிட்டதாவது :

இத் திட்டம் நிறைவேறியதும், அது தரக்கூடிய எழில் தோற்றத்தைத்தான் வரைப்படமாக்கி, இங்கே வைத்திருக்கிறார்கள். கிடைத்தற்கரிய கற்பனை அல்ல, உண்மை நிலையாக உருவாகும் இந்த திட்டம் சீரோடும் சிறப்போடும் நடைபெறும்.

மற்ற மாநகரங்களிலெல்லாம் இத் தகைய இயற்கை வசதியை—அதாவது நகருக்கு மத்தியில் ஆறு ஓடுவதை—பெரும் வாய்ப்பாகக் கருதுகிறார்கள்.

**கூவம் ஆறு சீரமைப்புத் திட்டம்**





(முன் பக்கத் தொடர்ச்சி)

தேம்ஸ் நதிக்கு லண்டன் மாநகர மக்கள் அளித்துள்ள முக்கியத்துவம் பற்றி, அங்கு போய் வந்தவர்கள் சொல்லவும், படித்தும் அறிந்திருக்கிறேன். உல்லாசமாக உலா வரத்தக்க பூங்காற்று வீசுகின்ற பூங்காக்கள் நிரம்பிய கரைகளை அந்த ஆறுகள் பெற்றிருக்கின்றன.

அப்படிப்பட்ட இயற்கை அழகைக் கொண்ட இந்த நதி, சென்னை நகரினுள் ஊடுருவிப் பாய்கிறது.

இப்போது, ரூபாய் இரண்டு கோடி அளவுக்கு செலவிடத்தக்க ஒரு திட்டம் வகுக்கப்பட்டு, இன்று அதன் கால்கோள் விழாவும் நடைபெறுகிறது.

பார்க்கிற வெளி நாட்டாரெல்லாம், இப்படி ஒரு ஆறு இந்த ஊரில் இருந்ததா என்று கேட்கும்படியாக இந்தத் திட்டம் அமைய வேண்டும்.

பாங்காக் நகரில் கடை வீதிக்கு நடுவே ஒரு வாய்க்கால், வாயைப் பிளந்துகொண்டிருக்கிறது. அதில், வேண்டும்போது மட்டும் கடல் நீரை விட்டு, அலங்காரப் படகுகளில் வியாபாரம் நடத்துகிறார்கள். வியாபார நேரம் முடிந்ததும், தண்ணீரை வடியச் செய்கிறார்கள். இப்படி அங்கெல்லாம் இயற்கை வளத்தை அழகு படுத்தவும், பயன் படுத்தவும் செய்கிறார்கள்.

### சிங்காரத் திருநகராக்குவோம்!

அதைப்போல, எழிலும் பயனும் ஒருசேர அமைந்த சீரிய திட்டம் இது. இதனோடு இணைந்த பக்கிங்காம் கால்வாய் சீரமைப்பு திட்டம், வாணிபத் துறையில் ஆந்திரத்துக்கும் தமிழகத்துக்கும் நெருக்கமான தொடர்பு ஏற்படுத்த உதவும்.

இத் திட்டத்தை நிறைவேற்றி சென்னையைச் சிங்காரத் திருநகராக்குவது நமது கடமை!

மாண்புமிகு உள்ளாட்சி அமைச்சர், வேளாண்மை அமைச்சர், பொதுநல அமைச்சர் ஆகியோரும் இவ்விழாவில் கலந்துகொண்டனர்.



## "புகாரில் ஒரு நாள்"--கவிதைப் போட்டி :

### ஆர்வம் மிக்க கவிதைகள் ஆயிரத்துக்கு மேல்

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி இளங்கவிஞர்களின் எழுச்சிக்கு ஆக்கமளிக்கும் வகையில் தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணாவின் விருப்பத்திற்கிணங்க மாண்புமிகு அமைச்சர் திரு முத்துசாமி அவர்கள் அறிவித்த 'புகாரில் ஒரு நாள்' கவிதைப் போட்டிக்குத் தேன்சொட்டும் கவிதைகள் திரளாக வந்துள்ளன. பாட்டுப் பரம்பரை, எண்ணங்களை எழிலுறக் குழைத்து வடித்துச் சத்துப் பாடல்களை—அழகிய முத்துப் பாடல்களைக் கொட்டிக் குவித்துள்ளது. போட்டியின் கடைசித் தேதிக்குள் ஏறத்தாழ ஆயிரத் திருநூறு பழச்சாற்றுப் பாடல்கள் ஆய்வுக் குழுவின் பார்வைக்கு வந்துள்ளன.

சிலர், பாடல்களைப் பழைய ஏட்டுச் சுவடி வடிவில் அனுப்பியுள்ளனர். சிலர், சித்திரம் சிறக்கத் தேன்கவி வரைந்துள்ளனர். சிலப்பதிகாரம், பட்டினப்பாலை போன்ற சங்க இலக்கியங்களைக் கற்றுத் தெளிந்து அவை வழி நின்று கவிதைகள் படைத்துள்ளோர் பலர். பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், பல்வகைத் தொழில் புரிவோர் எனப் பலதிறப்பட்டவர்கள் போட்டியில் கலந்துகொண்டுள்ளனர். பண்டைய இலக்கியங்களைப் படித்துணர்ந்து பூம்புகாரில் கற்பனைச் சிறகுகளை விரித்துப் பறந்து, சுவைமிகு காட்சிகளைச் சொல்லோவியமாக்க இப் போட்டி எண்ணற்ற இளங் கவிஞர்கட்கு தூண்டுகோலாக அமைந்துள்ளது.

சிறைத் தண்டனை பெற்றுள்ளோரும் இப்போட்டியில் சிந்தையைச் செலுத்தியுள்ளனர். சென்னை மத்திய சிறைக் கைதிகள் மூவரும், திருச்சி மத்திய சிறைக் கைதிகள் மூவரும் கவிதைகள் யாத்து அனுப்பியுள்ளனர். இவர்களுள் ஒருவர் ஆயுள் தண்டனை பெற்றவர். 'சிறைப் பறவைகளை' இப்போட்டி 'செந்தமிழ் சிட்டுக்களாகவும்' மாற்றியுள்ளது.

# சேரணியின் துப்புரவுப் பணி

சென்னை மாநகரில் ஆகஸ்டு மாதம் 16-ம் தேதியன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட சேரணி, செயல்படத் தொடங்கியிருக்கிறது.

மாநகரைப் பொறுத்த வரை துப்புரவு, முதியோர் கல்வி போன்ற பணிகளைச் சேரணியினர் மேற்கொள்ளலாம் என, மாண்புமிகு முதலமைச்சர் யோசனை கூறியிருந்தார், அதற்கிணங்க, வீட்டுச் சுற்றுப்புறங்களையும், வீதிகளையும் தூய்மையாக வைத்துக்கொள்ளும் உணர்வை, மக்களுக்கு ஊட்டவும், வளர்க்கவும் சேரணிப்படையினர் சென்னையில் செப்டம்பர் மாதம் 3-ம் நாளன்று, துப்புரவுப் பணியினை மேற்கொண்டனர். இதன் துவக்க விழா, நகரில் 10 இடங்களில் நடைபெற்றது. திருவல்லிக்கேணி வெங்கடரங்கம் பிள்ளைத் தெருவில், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி, துப்புரவுப் பணியைத் துவக்கி வைத்தார். விழாவில், மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் சிறப்புரை ஆற்றினார்.

மாண்புமிகு உள்ளாட்சி அமைச்சர் திரு மா. முத்துசாமி ஆற்றிய உரையின் சுருக்கம் வருமாறு :

"இன்று ஆரம்பமாகும் இந்தத் துப்புரவுப் பணி, புறத் தூய்மையோடு அகத் தூய்மையையும் வளர்க்கத் தக்கதாய் அமைய வேண்டும். கட்சி மாச்சரியங்களுக்கு இடமில்லாமல், சமூகம் முழுவதும் ஒரே குடும்பம் என்ற உணர்வு மலரச் செய்யவேண்டும். அத்தகைய அரிய வாய்ப்பு, சேரணித் தொண்டர்களுக்கு இருக்கிறது.

### சேரணியின் சீரிய நோக்கம்

இந்த அணி, வேறு எந்த அணிக்கும் போட்டியானது அல்ல ; யாரையும் பழி வாங்கவேண்டும் என்பதற்காகவோ, யாரையும் புறக்கணிப்பதற்காகவோ ஏற்பட்டது அல்ல. நாட்டு மக்களுக்கு நன்மைகள் விளைய, பெருகச் செயல்படும் அணியே இச் சேரணி.

துப்புரவுப் பணி, சேரணி மேற்கொள்ளத்தக்க பல பணிகளில் ஒன்றுதான். மற்றும் முதியோர் கல்வி, சமூகத்தில் துன்பம் நேர்ந்தோருக்கு உதவி செய்தல், நோயுற்றோருக்கு மருத்துவ வசதி அளித்தல் போன்ற பணிகளிலும் சேரணித் தொண்டர்கள் ஈடுபட வேண்டும்.

இன்று, இந்தத் துப்புரவு வேலையைச் சேரணித் தொண்டர்கள் செய்யப்போகிறார்கள் என்று அறிவிக்கப்பட்டவுடனே, மாநகராட்சியின் துப்புரவுத் துறையைச் சேர்ந்த ஊழியர்கள், தங்கள் கடமையைச் செவ்வனே செய்திருக்கிறார்கள். ஊழியர்களுக்கும், பொதுமக்களுக்கும் கடமை—பொறுப்புணர்வையும், விழிப்புணர்வையும் தருவது சேரணிப் பணிகளின் அடிப்படை நோக்கமாகையால் இது குறித்து நாம் யாவரும் மகிழ்ச்சி கொள்ளலாம். மாநகராட்சியுடன் தொடர்புடையவன் (உள்ளாட்சி அமைச்சர்) என்ற முறையில், எனக்கு இது தனித்த மகிழ்ச்சியைத் தருகிறது. நான் உங்களோடு சேர்ந்து, சேரணித் தொண்டர்களில் ஒருவனாகப் பாடுபடுவேன் என்று உறுதி கூறுகிறேன்".

மாண்புமிகு கல்வி—தொழில் அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் தமது சிறப்புரையில் கூறியதாவது :—

"நாம் இங்கு வருவதற்கு முன்பே, மாநகராட்சியின் துப்புரவு ஊழியர்கள், தெருக்களில் குப்பைகளைச் சீராக வாரி இருக்கிறார்கள். இந்த உணர்வை அவர்களுக்கு ஏற்படுத்தியதே சேரணி தான். பொது மக்களிடையேயும் அந்த உணர்வு பரவ வேண்டும்.

### தொடர்ந்து ஆற்ற வேண்டிய பணி

சேரணித் தொண்டர்கள், இந்த ஒரு வேலை—ஒரு நாள் துப்புரவுப் பணியில் ஈடுபடுவதால், இனி குப்பைகளே இல்லாது போய்விடும், ஆண்டாண்டு தோறும் தெருக்களெல்லாம் பளிங்கு போல் தூய்மை துலங்க பரிசென்று இருக்கும் என நாம் எதிர்பார்க்க முடியாது. ஆகையால், சேரணித் தொண்டர்கள் தொடர்ந்து பணியாற்ற வேண்டும். தெருவுக்கு நான்கு பேராக, சந்துக்கு ஆறு பேராக வேலையைப் பிரித்துக்கொண்டு, அந்த இடங்களெல்லாம் சுத்தமாக இருக்கும்படிக் கவனித்து வரவேண்டும்.

[10-ம் பக்கம் பார்க்கவும்]



# நகர்ப் புறங்களுக்கு— படி அரிசித் திட்டம்

"விலைவாசிகளைக் குறைப்பதில் தமிழக அரசு தன்னாலானதைச் செய்யத் தயங்காது. ரூபாய்க்குப் படி அரிசித் திட்டமே அதற்கொரு எடுத்துக் காட்டு" என்று மாண்புமிகு முதலமைச்சர் திரு அண்ணாதுரை அவர்கள் விடுதலை நாள் விழாவன்று, வில்லிவாக்கம் பகுதியில் ரூபாய்க்குப் படி அரிசித் திட்டத் துவக்க விழாவில் பேசும் போது குறிப்பிட்டார்.

விழாவிற்கு மாண்புமிகு உணவு அமைச்சர் திரு கே. ஏ. மதியழகன் தலைமை வகித்தார். திரு டி. எம். பார்த்தசாரதி வரவேற்புரை நிகழ்த்தினார். வில்லிவாக்கம் ஊராட்சித் தலைவர் திரு பலராமன், சட்டமன்ற உறுப்பினர் திரு அ. பொ. அரசு, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு லட்சுமிகாந்தன், பாரதி ஆகியோர் விழாவில் பங்கு கொண்டனர்.

மாண்புமிகு முதலமைச்சர் திரு அண்ணாதுரை அவர்கள், இவ்விழாவில் பேசும் போது குறிப்பிட்டதாவது :

"இம் மாவட்டத்தில், இப்படி அரிசி போடுகிற விழாவில் பங்கேற்பதில் மகிழ்ச்சியடைகிறேன். இன்று சுதந்திர நாள்—மக்கள் மகிழ்ச்சியும் எழுச்சியும் பெறத்தக்க நாள்.

### நல்லெண்ணத்தின் அறிகுறி

"தமிழக அரசு மேற்கொண்டுள்ள திட்டங்களுக்கெல்லாம் முன்னோடியாக விளங்குவது இந்தப் படியரிசித் திட்டம். விலைவாசி ஏற்றத்தால் மக்கள் படுகிற அவதியை அரசு உணராமல் இல்லை. இந்த ஒரு (படி அரிசித் திட்டம்) காரியத்தால் மட்டும் விலை வாசிகள் எல்லாம் குறைந்து விடாது. விலைவாசிகள் குறைக்கப்பட்டு மக்களது அவதி குறைக்கப்பட வேண்டுமென்பதில் எங்களுக்குள்ள நல்லெண்ணத்தின் அறிகுறியாகவே இந்தப் படி அரிசி திட்டம் விளங்குகிறது.

"ஒரு நாளைக்கு, நாம் ஒருவரை விரும்பி வேண்டி அழைத்து விருந்துண்ணச் சொல்வதால், காலமெல்லாம் அவரது கஷ்டம் தீர்க்கப்பட்டு விட்டதாகப் பொருளில்லை. நல்லெண்ணத்தைக் காட்டுவதாகவே அது அமையும். எங்களது இந்த நல்லெண்ணத்தை உணர்ந்து மக்கள் முழு ஒத்துழைப்பு அளிக்க முன்வர வேண்டுமென நான் கேட்டுக் கொள்கிறேன்.

### விலைவாசிப் பிரச்னையைத் தீர்க்க....

"ஒன்றை நான் வெளிப்படையாகவே சொல்ல விரும்புகிறேன்.

"விலைவாசிக் குறைப்பில் சில பண்டங்களின் விலைகளை மட்டுமே கட்டுப்படுத்த மாநில அரசு நடவடிக்கை எடுக்க முடியும். வேறு பல பொருள்களின் விலைகளை குறைக்க மத்திய அரசே நடவடிக்கை எடுத்தாக வேண்டிய நிலை உள்ளது. பருப்பு, துணி, மண்ணெண்ணை போன்றவற்றின் விலையைக் குறைக்க, மத்திய அரசே நடவடிக்கை எடுத்தாக வேண்டிய நிலையில் உள்ளது. எடுத்துக் காட்டாக பருப்பைக் கூறலாம். இதன் விலையை மாநில அரசே குறைத்துவிட முடியாது. வடக்கே அது ஏராளமாக விளைந்து, அது நமக்குத் தாராளமாகக் கிடைக்கும் நிலை இருந்தால் தான் விலை குறையும்.

"மத்திய அரசைப் பற்றி நான் சொன்னதுமே, இங்கே சிலர், எனக்கும் மத்திய அரசுக்கும் ஏதோ சண்டை என்பதாகக் கூறுகிறார்கள். இவர்களைக் காட்டிலும் மத்திய அரசுக்கும் எனக்குமிடையே மிகுந்த நேசப்பான்மை நிலவுகின்றது. மொரார்ஜி தேசாய் விலைவாசிகளைக் குறைக்க வெகு தீவிர திட்டங்களை மேற்கொள்ள விரும்புவதாகத் தெரிகிறது. அவர் இந்தப் பணியில் வெற்றி பெற வேண்டுமென்று விழைகிறேன்.

"விலைவாசிகளைக் குறைப்பதில் தன்னாலானதைச் செய்ய தமிழக அரசு தயங்காது. இந்த படியரிசித் திட்டமே அதற்கொரு எடுத்துக்காட்டு.

"விவசாயிகளிடம் வாங்கும் நெல்லுக்கு — விலையைக் குறைத்துக் கொடுத்தால்தான், அரிசியின் விற்பனை விலையைக் குறைக்க முடியும். நம் நாட்டு விவசாயிகள் மிகுந்த உழைப்பைச் செலுத்திப் பாடுபட்டு வேளாண்மை செய்து வருகிறார்கள். நெல்லுக்குக் கொடுக்கிற விலையைக் குறைத்தால், அவர்களது உற்பத்திச் செலவு கட்டாது.

"படி அரிசி திட்டத்திற்கென ரூ. 5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளதாக உணவு அமைச்சர் தெரிவித்தார். முழு வருடத்துக்குமாக ரூ. 8 கோடி தேவைப்படலாம். எவ்வளவானாலும் தாங்கிக் கொண்டு, தமிழ் மக்களின் உணவில் அடிப்படைப் பண்டமாக வுள்ள அரிசியின் விலையைக் குறைப்பதன் மூலம், மக்களின் வாழ்க்கையில் ஓரளவு நிம்மதியை ஏற்படுத்த வேண்டுமென்பதே அரசின் நோக்கமாகும்.

### உணவு செழிப்பை நோக்கி . . .

"வெகு தீவிர வேளாண்மை திட்டத்தின் கீழ், தஞ்சையிலே புதிய ரக நெல் பயிரிடப்பட்டு வருகிறது. பல லட்சம் ஏக்கர்களிலே இந்த நெல் பயிரிடப்படுகிறது. நல்ல மகசூல் கிடைக்கும். ஒரு போக நிலமெனத்

[அடுத்த பக்கம் பார்க்க.]

(நகர்ப்புறங்களுக்குப் படி அரிசித் திட்டம்—தொடர்ச்சி).

தையும் இருபோக நிலமாக்கி வருகிறோம். இரு போகம் விளையக் கூடியவற்றை முப்போக நிலங்களாக மாற்றி வருகிறோம். இந்த ஆண்டு நல்ல விளைச்சல் கிடைக்கும் என்ற நம்பிக்கையும் உற்சாகமும் எழுந்துள்ளது. அக்டோபர், நவம்பர் மாதங்களில் தமிழகத்தில் உணவு நெருக்கடி என்ற பேச்செல்லாம் பழம் பேச்சாக ஆகவேண்டும்.

"இந்த பசுமையான எண்ணத்தை தஞ்சை அளித்துள்ளது. வேளாண்மைத்துறை அதிகாரிகளும், தங்களது முழுத் திறமையைச் செலுத்தி உழைத்து வருகிறார்கள் நல்ல அறுவடையாகி, நமது தேவைக்கு நிரம்பக் கிடைக்கும் என்பதோடு, நமது அண்டை மாநிலமான கேரளத்துக்கும் உதவ முடியுமென்ற உறுதி ஏற்பட்டுள்ளது."

மாண்புமிகு உணவு அமைச்சர் திரு கே. ஏ. மதியழகன் பேசும் போது குறிப்பிட்டதாவது :—

"இன்றைய தினம், இந்த சுதந்திர விழாவில், சென்னை நகரை அடுத்துள்ள 47 கிராமங்களில், 6 லட்சம் மக்களுக்கு ரூபாய்க்குப் படியரிசி போடப்படுகிறது. இது படி அரிசி திட்டத்தின் இரண்டாவது கட்டமாகும். படி அரிசித் திட்டத்தை, சென்னை, கோவை, ஆகிய நகரங்களில் வாழுகிற 27 லட்சம் மக்கள், மே 15 முதல் அனுபவித்து வருகிறார்கள்.

"திருவொற்றியூர், ஆவடி, தாம்பரம், திருவான்மியூர் ஆகிய ஊர்கள் வரை இத் திட்டத்தின்படி இன்று ரூபாய்க்கு படி அரிசி வழங்குவார்கள். செங்கல்பட்டு மாவட்டத்தில் கால் பகுதி இதன் கீழ் வருகிறது.

படியரிசித் திட்டம்—மாநிலம் முழுமைக்கும் . . .

"மாநிலம் முழுவதற்கும் இந்தப் படியரிசித் திட்டத்தை விஸ்தரித்து, குடும்பக் கார்டு முறை அமுலில் உள்ள எல்லா இடங்களுக்குமாக இவ்வாண்டு டிசம்பர் 31-ம் தேதிக்குள்ளாக ரூபாய்க்குப் படி அரிசி போடுவோம். அதற்காக அண்ணா அவர்கள் 5 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். மேலும் நிதி தேவையெனினும் ஒதுக்குவதாக அவர்கள் சொல்லி இருக்கிறார்கள்.

"வறுமை, பிணியிலிருந்து நாட்டை விடுவிக்க நடக்கும் இப்பெரும் பணியில் இன்றுபோல் என்றும் மக்களது நல்லாதரவு இருந்து வர வேண்டும்"

அடுத்து மாண்புமிகு விவசாய அமைச்சர் திரு ஏ. கோவிந்தசாமி பேசும் போது "கேரளம் போன்ற அண்டை மாநிலங்களில் உணவுக்காக மக்கள் சொல்லொணாத் துன்பத்தை அடைந்து வரும் இந்நாளில், அண்ணா அவர்களின் சீரிய தலைமையின் கீழ், துணிவாக 5 லட்சம் டன் உணவு தானியத்தைக் கொள்முதல் செய்து, இன்று நடப்பது போன்ற நற்காரியங்களைச் செய்து வருகிறோம்" என்றார்.

---

சீரணியின் துப்புரவுப் பணி—[8-ம் பக்கத் தொடர்ச்சி]

சந்துகள் பற்றியே அதிக கவனம் தேவை. அதற்குத்தான் தொண்டர்கள் அதிகமாக வேண்டும்.

சீரணித் தொண்டர்கள், இந்தத் துப்புரவுப் பணியில்—குப்பை அகற்றும் வேலையில்—ஈடுபடுவதால், அதைக் காணும் பொதுமக்கள், தொண்டர்கள்பால் இரக்கம் கொள்வார்கள். அதுவே அவர்களிடையே ஒரு புதிய விழிப்புணர்வை, எழுச்சியை உண்டாக்கும், பொது இடங்களை அசுத்தப் படுத்தக்கூடாது, பாழ்படுத்தக்கூடாது என்ற எண்ணத்தை ஆழப் பதிய வைக்கும்.

இதில் இன்னொரு பலனும் இருக்கிறது, 'நான் ஆண் மகனாயிற்றே, நான் விளக்குமாற்றைக் கையில் ஏந்துவதா? பெண்கள் செய்யும் வேலையல்லவா அது?' என்று எண்ணத் தோன்றுகிறதல்லவா, பலருக்கு? அந்த எண்ணத்தை, "நான் ஆண் மகன்" என்ற அகந்தையை, கர்வத்தை இந்தத் துப்புரவுப் பணி அகற்றும். கூச்சம், நாணம் நீங்கும். எந்தப் பொதுப் பணி செய்வதிலும் பழுதில்லை, இழிவில்லை என்ற உயர்ந்த கோட்பாடு செயல் உருவம் பெறும்.

தெருக்கூட்டும் காந்தியடிகள்

காந்தியடிகளின் நூற்றாண்டு விழா துணைக் குழு கூட்டத்தையொட்டி, நான், காந்தியடிகள் பற்றிய நூல்கள் சிலவற்றைப் படித்துக்கொண்டிருந்த போது, 1929-ல் எடுக்கப்பட்ட காந்தியடிகள் புகைப்படம் ஒன்றைப் பார்த்தேன். பாரிஸ்டரான அவர், 1929-லேயே கையில் விளக்குமாற்றைப் பிடித்து, துப்புரவுப் பணியில் ஈடுபட்டிருக்கிறார். அதை இழிவுக்குரியதாக அவர் கருதவில்லை. அவரே அத்தகைய பணியில் ஈடுபட்டிருக்கும் போது அவர் வழி வழி வந்த நாமெல்லாம், அத்தகைய உணர்வினைப் பெறவேண்டும். ஆகையால் தான், வேட்டியை வரிந்து கட்டிக் கொண்டு தெருக்கூட்டும் காந்தியடிகளின் படத்தை அச்சடித்து, மாணவர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்துள்ளேன்.

துப்புரவுப் பணியில் மட்டுமின்றி கல்வி, வேளாண்மை, மருத்துவம், தொழில் துறைகள் எல்லாம் சிறக்க சீரணித் தொண்டர்கள் பாடுபட வேண்டும். "என் உழைப்பு, ஆற்றல், அறிவைப் பயன்படுத்திக் கொள்ளுங்கள்" என்று சொல்லி, ஒவ்வொருவரும் முன்வரவேண்டும். அப்போதுதான் ஏழ்மையில், வறுமையில், வாட்டத்தில் உள்ள நம் நாடு முன்னேற முடியும்.

சீரணியின் பணிகள் பல்கிப் பெருகி, நாணற்கரும்பிலிருந்து அடிக் கரும்புக்குச் செல்வதுபோல் சுவை மிக்கதாய், பயன்மிக்கதாய் அமைய வேண்டும். அத்தகைய பணிகள் மூலம், மக்களிடையே புதிய எழுச்சி தோன்ற, முயற்சிகள் வளர, பயன் பெருக, வளம் கொழிக்க, வறுமை அகல, மகிழ்ச்சி ததும்ப, அன்பு தழைக்க, அமைதி நிலவ, இன்பம் பொங்க, சீரணித் தொண்டர்கள் பெயரும் புகழும் பாராட்டும் பெற வேண்டும் என விழைகிறேன், வாழ்த்துகிறேன்".



# பரிசு பெறும் வழி

அந்தக் குடும்பத் தலைவி தினமும் வானொலியில் காய்கறிகளின் அன்றாட விற்பனை விலைகளை கேட்பது வழக்கம். அவருக்குத் தேவைப்படும் காய்கறிகளை அவருடைய தோட்டத்திலிருந்தே பறித்துக்கொண்டு, அவற்றிற்குரிய மார்க்கெட் விலையில், 20 பைசாவைக் குறைத்து, எஞ்சியதை ஒரு பெட்டியில் போட்டு வைப்பார். தன்னுடைய வீட்டுக் காய்கறித் தோட்டத்திற்கு ஏற்படும் செலவுகளை இந்த பெட்டியிலுள்ள பணத்தைக் கொண்டு செலவிட்டது போக, மிச்சமும் இருக்கின்றது.

வீட்டுத் தோட்டங்களில் காய்கறிகள் வளர்க்கும் போட்டியில் பங்குகொண்டு பரிசு பெற்ற திருமதி அருணா பிரசாத் அவர்களின் அனுபவமே இது. இவர் டில்லியில் வசிப்பவர்.

அவருக்கு தோட்ட வேலை செய்வது மகிழ்ச்சிகரமானதாகவும் பொழுது போக்காகவும் இருப்பதோடு கவலைகளை மறப்பதற்கும் உதவுகிறது. ஒவ்வொரு நாள் காலையிலும் அவர் தோட்டத்திற்குச் சென்று, அங்கு புதிதாக என்னென்ன மாற்றங்கள் தோன்றியுள்ளன என்பதை ஆர்வத்தோடு பார்த்து மேலே என்ன செய்யவேண்டும் என்பதை ஆராய்வார்.

அவருடைய கணவரும் குழந்தைகளும் அவரைப் போலவே தோட்டம் போடுவதில் ஆர்வம் காட்டிவந்தார்கள். அவரது கணவர் அடிக்கடி வெவ்வேறு ஊர்களுக்கு மாற்றப் பட்டாலும் ஆங்காங்கே மாற்றலாகிப் போகும் இடங்களில், அவர்களுடைய முதல் வேலை காய்கறித் தோட்டம் போடுவதுதான்.

ஆண்டு முழுவதும் காய்கறிப் பயிர்..

இவ்வாறு காய்கறிகளைப் பயிரிடுவதால் திருமதி அருணா பிரசாத்திற்கு பல வழிகளில் நன்மை ஏற்படுகிறது. ஆழம் அதிகமாக செல்லாத வேர்களையுடைய காய்கறிப் பயிர்களையும் நிழலை விரும்பும் காய்கறிப் பயிர்களையும் அவர் மரங்களின் கீழ் காலியாக உள்ள இடங்களில் பயிர் செய்வார். ஆழமாக வேர் சென்று வளரக்கூடிய, சூரிய ஒளி தேவைப்படும் காய்கறிச் செடிகளை, மரங்களை விட்டு சிறிது தூரம் விலகி இருக்கும்படி பயிர் செய்வார்.

அவருடைய தோட்டத்தில் எல்லாப் பருவங்களிலும் காய்கறிகள் விளையும். அவர், விதைக்கும் பருவங்களையும் வெவ்வேறு பருவங்களில் பயிரிடக்கூடிய காய்கறிகளையும் பற்றி நன்கு தெரிந்திருப்பதால் ஆண்டு முழுவதும் காய்கறிகளைப் பயிரிட்டு, பலனடைவது அவருக்குச் சாத்தியமாகிறது.

பெருமை தரும் தோட்டம்

குளிர்காலத்தின் இறுதியில் அவருக்குப் பலன் கிடைத்தவுடன், முன் கோடையில் பலன் கொடுக்கும் காய்கறிகளை உடனே பயிரிடுகிறார். கோடைக் காலத்தில், மற்றெல்லா இடங்களிலும் காய்ந்த புற்களும், செடிகளுமாக இருக்கும்போது, இவருடைய தோட்டம் மட்டும் பசுமையானதாக இருந்து காய்கறி தருவது இவருக்கே மிகவும் பெருமையாக இருக்கும்.

டெல்லியில் கோடைக் காலங்களில் தோட்டத்திற்கு தண்ணீர் பாய்ச்சுவது கடினமாக இருக்கும். ஆனால் இந்தத் தண்ணீர் பற்றாக்குறை பகலில்தான் இருக்கும்; மாநகராட்சி தோட்டங்களுக்கு நீர் பாய்ச்சுவதற்காக இரவில் தண்ணீர் விடும்போது, இவரது குடும்பத்தினர் அனைவரும் அதுவரை காத்திருந்து தோட்டத்திற்கு தண்ணீர் விடுவார்கள்.

திருமதி அருணா எப்போதும் நல்ல விதைகளை விதைப்பதால் அவருக்கு நல்ல தரமான காய்கறி எப்போதும் கிடைக்கும். சிலர் தபால் தலைகளைச் சேகரிப்பது போல் இவர் நல்ல தரமுள்ள விதைகளைச் சேர்க்கிறார். மேலும் இந்த விதைகளை மற்றவர்களுக்கும் கொடுத்து உதவுகிறார்.

அவர் ஒரு சமயம் நைனிடால் சென்றுவிட்டுத் திரும்பும் போது ருத்ராப்பூர் பண்ணையில் 6 சுரை விதைகளை வாங்கி வந்து தன் தோட்டத்தில் பயிர் செய்தார். அந்தச் செடியில் இருந்து 5 அல்லது 6 அடி நீளமுள்ள சுரைக்காய் விளைந்தது. டெல்லிக்கருகிலுள்ள பூசா நிலையத்திலிருந்து ஜப்பானிய முள்ளங்கி விதையும் கேரட் விதையும் வாங்கினார். மேலும் அவர் லக்னோவில் "லோபியா" என்ற விதையும், ஜம்முவில் அவரை விதையும் வாங்கினார். இவற்றையெல்லாம் அவர் விதைத்து, நிறைய விதைகளை அடுத்த பருவத்தில் சேகரித்துவிடுவார்.

அவருடைய பசுவும், கோழிப் பண்ணையில் உள்ள 24 கோழிகளும் அவருக்கு பாலும் முட்டையும் கொடுப்பதோடு அல்லாமல் போதுமான உரத்தையும் அவர் தோட்டத்திற்கு கொடுக்கிறது. மேலும் அவருடைய 100 சதுர அடி தோட்டத்திற்கு "ஆக்லா" என்ற இடத்தில் இருந்து ஆண்டுதோறும் 3 வண்டி

(12-ம் பக்கம் பார்க்க)

# தமிழக உழவரின் புதிய முயற்சி

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள சாத்தூரில் இருந்து எட்டு மைல் தூரத்திலுள்ளது உம்மாத்தம்பட்டி என்ற கிராமம். மழையை நம்பியே இங்கு விவசாயம் நடைபெறினும் கிணற்றுப் பாசனமும் இங்கு நடைபெற்று வருகிறது. சில விவசாயிகள் மின்சார பம்பு செட்டுகளைக் கொண்டு பாசனம் செய்து, விவசாயத்தில் ஈடுபட்டுள்ளனர். இங்கு உற்பத்தி செய்யப்படும் முக்கிய உணவுப் பொருள் கம்பு. பருத்தியும், மிளகாயும் வர்த்தகப் பயிர்கள்.

இவ்வூராட்சியின் தலைவரை கிராம சேவக் அனுகி வீரிய ஒட்டுக் கம்பு விதைகளை அவரது நிலங்களில் பயிர் செய்வதற்குக் கொடுத்தார். அந்த ஊராட்சித் தலைவர் அந்த ரகக் கம்பு விதையை அடுத்த பருவத்தில்—அதாவது 1966-ம் ஆண்டு அக்டோபரில்—பயிர் செய்வதாகக் கூறினார். இந்தப் பயிர் 90 நாட்களில் பலன் கொடுக்கக்கூடியது. விதைத்த 18-வது நாளன்றே நாற்று நடவேண்டும். பதினெட்டு நாட்கள் கழித்து நட்டால் அது விளைச்சலைப் பாதிக்கும். பம்பு செட்டு மூலம் நீர்ப் பாசனத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. இந்த கம்பைச் சாகுபடி செய்ய அவருக்கு ரூபாய் 235 செலவு ஆயிற்று.

### கூடுதல் வருவாய்

அவருக்கு மொத்தம் 10 கோட்டை—அதாவது 960 பட்டணம் படி—ஓர் ஏக்கரில் விளைந்தது. ஒரு கோட்டை கம்பு விலை ரூபாய் 110 வீதம், 10 கோட்டை கம்பிற்கும் ரூபாய் 1,100 கிடைத்தது. இதன் மூலம் அவருக்கு நிகர வருவாய் ரூபாய் 865 கிடைத்தது.

அவர் சாதாரணக் கம்புப் பயிர் செய்திருந்தால் இதே செலவுதான் ஏற்பட்டிருக்கும். ஆனால் 5 கோட்டை அளவிற்குத்தான் விளைச்சல் கிடைக்கும். மேலும் சாதாரணக் கம்பு ஒரு கோட்டை விலை ரூபாய் 85 வீதம் 5 கோட்டைக்கு ரூபாய் 425 தான் ஆகிறது. ஆகவே, சாதாரண கம்பை அவர் பயிர் செய்திருந்தால் அவருக்கு ரூபாய் 190 மட்டுமே வருவாய் கிடைத்திருக்கும்.

### சிக்கனமான, சுவையான உணவு

இந்த வீரிய ஒட்டுக் கம்பின் மற்றொரு நன்மை என்னவெனில், சாதாரண கம்பில் 1,200 கிராம் எடைக்குச் சமமாக வீரிய ஒட்டுக் கம்பு 165 கிராம் இருக்கிறது. மேலும் சாதாரணக் கம்பை விட இதில் உமி குறைவாகவும் தானியம் கனமாகவும் இருக்கிறது. மேலும் இந்த வீரிய ஒட்டுக்கம்பு மிகவும் ருசியாக இருப்பதாக அந்த ஊராட்சித் தலைவரின் மனைவி கூறினார். மேலும் இது சிக்கனமானதாகவும் இருக்கிறது. எப்படியெனில் சாதாரணக் கம்பு சாப்பாட்டிற்கு மூன்றுபடி. தேவைப்பட்டால், வீரிய ஒட்டுக்கம்பு முக்கால் படி போதுமானதாக இருக்கிறது. இந்த ஒட்டுக் கம்பை பூச்சிகள் அரிப்பதில்லை.

இந்தப் பகுதி மக்களின் முக்கிய உணவு கம்பாக இருப்பதால், அந்தக் கிராம ஊராட்சித் தலைவரைப் பின்பற்றி அதிக விவசாயிகள் இந்த ரகக் கம்பை சாகுபடி செய்வார்கள் என்று நம்பப்படுகிறது. இந்த வீரிய ஒட்டுக் கம்பு அதிக வருவாயைக் கொடுப்பதும் சுவையானதாக இருப்பதும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

## பரிசு பெறும் வழி

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

உரங்கள் வாங்கிப் போடுகிறார். மேலும் ரசாயன உரங்களையும் இடத் தவறுவதில்லை.

### காய்கறி உண்டியல்

திருமதி அருணா பிரசாத் நிபுணர்களை கலந்து ஆலோசித்த பின்பு, அதற்கு ஏற்ப ரசாயன உரங்களை வாங்குகிறார். மேலும் அவர், விவசாயம் சம்பந்தமாக வெளியாகும் பத்திரிகைகளையும், மாத இதழ்களையும் வாங்கிப் படிப்பதால் செடிகளைப் பூச்சிகளிலிருந்தும் நோய்களில் இருந்தும் எப்படிப் பாதுகாப்பது என்பது தெரிகிறது. இவ்வாறு பத்திரிகை வாங்குவதற்குக் கூட அவருடைய காய்கறி வருமான உண்டியலிலிருந்துதான் செலவு செய்கிறார்.

அவர் சிறந்த குடும்பத் தலைவியாக இருப்பதால் மீதமாக இருக்கும் காய்கறிகளை வத்தல்களாகத் தயாரித்து விடுகிறார். அவருக்கு எப்போதும் பசுமையான காய்கறிகள் கிடைப்பதால் அதிகமாக உள்ள காய்கறிகளை அவருடைய நண்பர்களுக்கு அன்பளிப்பாகத் தருகிறார்.

### வெற்றியின் இரகசியம்

உயர்ந்த ரக நல்ல உருளைக் கிழங்கு, முள்ளங்கி மற்றும் முட்டைக் கோஸ் ஆகியவை பயிர் செய்ததற்காக இந்த ஆண்டு நடந்த வீட்டுக் காய்கறி தோட்டப் போட்டியில் அவருக்கு நான்கு பரிசுகள் கிடைத்தன.

செடிகளை பூச்சிகள் தாக்காமலும், நோய்கள் அணுகாமலும் பார்த்துக் கொண்டு, செடிகளுக்கு தொழு உரமும், இரசாயன உரமும் போதிய அளவு போட்டு காய்கறிச் செடிகளை நன்கு கவனித்துக் கொண்டதே தன்னுடைய வெற்றிக்குக் காரணம் என்கிறார், திருமதி அருணா பிரசாத்.

அடுத்த மூன்றாண்டுகளுக்கு அவரது கணவர் வேறு இடத்திற்கு மாற்றலாகாதிருந்தால், அம்மூன்று முறையும் பரிசுகளை தாமே பெற்று, சுழற் கோப்பையையும் அடைந்து விடுவேன் என்று தன்னம்பிக்கையுடன் கூறுகிறார் அவர்.



## புள்ளி விவரப் பேழை



### சென்னைக்கு அருகே

## 'மணலி'யில் எண்ணெய் தூய்மைப்படுத்தும் ஆலை

'மதராஸ் ரிபைனரீஸ் லிமிடெட்' (Madras Refineries Ltd) என்று அழைக்கப்படும் இந்த ஆலை, இந்திய அரசு, அமோகா இந்தியா இணைப்பு (Amoco-India Inc.) மற்றும் தேசிய ஈரான் நிறுவனம் (National Iranian Oil Company) ஆகியோரின் கூட்டு முயற்சியாகும். இந்த ஆலை, சென்னை மாநகருக்கு வடக்கே, திருவொற்றியூருக்கும் எண்ணூருக்கும் இடையில் மணலி என்ற இடத்தில் 350 ஏக்கர் பரப்புள்ள நிலத்தில் அமைந்துள்ளது.

ஆலைக்குரிய வேலைகளெல்லாம் திட்டமிட்டபடியே, உரிய காலத்தில் முறையாக நடந்து வருகின்றன. பெரும் பெரும் இயந்திரங்களை நிறுவுவதற்கான பலமான கடைக்கால்கள் ஆங்காங்கே போடப்பட்டு வருகின்றன.

தற்போது 200 பேர்கள் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர். "அடுத்த ஆண்டு பற்பல இயந்திரங்களும், கருவிகளும் வேலை செய்வதை நீங்கள் கண்டு ரசிக்கலாம்" என்று பத்திரிகை நிருபர்களிடம் திட்டக் கூட்டு நிர்வாகி திரு என். வி. எஸ். சாஸ்திரி கூறினார்.

### ஒன்பதாவது ஆலை

இந்தியாவிலுள்ள எண்ணெய்த் தூய்மைப்படுத்தும் ஆலைகளில் இது ஒன்பதாவது ஆலையாகும். அசாம், விசாகப்பட்டினம், கௌஹாத்தி, பரௌனி, பரோடா, கொச்சி ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் ஓர் ஆலையும், பம்பாயில் இரு ஆலைகளும் உள்ளன. பத்தாவது ஆலையாக 'ஹால்டியா' ஆலை துவக்கப்படும்போது, எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகளைப் பொருத்தவரையில் இந்தியா தன்னிறைவு பெற்றுவிடும். ஆனால் மூலப் பொருளான "குரூட் ஆயில்" (சுத்தம் செய்யப்படாத எண்ணெய்) விஷயத்தில் தன்னிறைவு அடைய மேலும் 10 ஆண்டுகள் ஆகலாம் என்று ஆலையின் நிர்வாக இயக்குநர் திரு ராமப்பிரம்மம் கூறினார்.

இந்த ஆலைக்கு வேண்டிய சுத்தம் செய்யப்படாத எண்ணெய் பாரசீக வளைகுடாவிலுள்ள "டாரியஸ்" எண்ணெய்க் கிணறுகளிலிருந்து, கப்பல்கள் மூலம் சென்னை துறைமுகத்திற்குக் கொண்டு வரப்படும். அங்கிருந்து அந்த எண்ணெய், எஃகு குழாய்கள் வழியாக 5½ மைல் தூரத்திலுள்ள ஆலைக்குக் கொண்டு வரப்பட்டு, சுத்தம் செய்யும் வேலைகள் நடைபெறும்.

ஆலையின் தூய்மைப்படுத்தப்பட்ட எண்ணெய், குழாய்கள் வழியாக, ஆலைக்கருகிலும், துறைமுகத்திலுமுள்ள 4 இடங்களுக்கு எடுத்துச் செல்லப்படும். நெடுந்தூரத்திற்குக் குழாய்களை அமைத்து எண்ணெயைக் கொண்டு செல்லும் திட்டம் தற்போது இல்லையெனத் தெரிகிறது.

[சென்னைக்கருகிலுள்ள மணலியில் 44 கோடி ரூபாய் செலவில் எண்ணெய் தூய்மைப் படுத்தும் ஆலை ஒன்றை, அமைப்பதற்கான அடிப்படை வேலைகள் துவக்கப்பட்டு, மும்முரமாக நடைபெற்று வருகின்றன. இந்த ஆலை 1969-ம் ஆண்டு இறுதியில் செயல்படத் துவங்கும்போது, ஆண்டொன்றிற்கு 17·5 லட்சம் முதல் 20 லட்சம் டன்கள் வரை, எண்ணெய்ப் பொருட்களை உற்பத்திச் செய்யும். நாட்டின் தொழில் வளம் பெருக ஆக்கம் தரவிருக்கும் இத் தொழில் திட்டம், உள்நாட்டு நிதி, பொருள் ஆதாரங்களைக் கொண்டே பெரிதும் செயல்படுத்தப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.

—ஆசிரியர்.]

இந்த ஆலையிலிருந்து உற்பத்தியாகும் துணைப்பொருட்களில் கந்தகம், பெட்ரோல், மண்ணெண்ணெய், எரிவிளக்கு எண்ணெய் (Furace Oil), தார், டீசல் எண்ணெய், வீட்டுச் சமையலுக்கான வாயு ஆகியவை குறிப்பிடத்தக்கவை. வீட்டுச் சமையலுக்கான வாயு ஆண்டொன்றுக்கு 10,000 டன் உற்பத்தியாகும்.

இந்தியாவிலேயே கந்தகத்தை உற்பத்தி செய்யவிருக்கும் ஆலை இது ஒன்றுதான். இவ்வாலை ஆண்டொன்றிற்கு 14,000 டன் கந்தகம் உற்பத்தி செய்யும்.

எண்ணெய் சுத்தம் செய்யப்படும் பிரிவுகளெல்லாம் U வடிவத்தில் அமைக்கப்படும். அதனால் செலவில் சிக்கனம் ஏற்படுவதுடன் ஓர் அறையிலிருந்தவாறே ஆலையின் பல்வேறு அலுவல்களையும் நிர்வகிக்க இயலும்.

இவ்வாலையில் உற்பத்தியாகும் பொருள்களை, வெளிநாடுகளில் விற்பனை செய்வதற்குரிய ஆலோசனைகளை 'இந்திய ஆயில் கம்பெனி'யும் "ஸ்டேட் டிரேடிங் கார்ப்ரேஷனும்" செய்து வருவதாக திரு ராமப் பிரம்மம் கூறினார்.

துறைமுகத்திலிருந்து வரும் சுத்தம் செய்யப்படாத எண்ணெயைச் சேமித்து வைப்பதற்காக நான்கு பெரிய எண்ணெய்த் தொட்டிகளுக்கான அடித்தளம் அமைக்கும் வேலைகள் நடைபெற்று வருகின்றன. ஒவ்வொரு தொட்டியும் 63.3 மீட்டர் விட்டமுள்ளவை. நம் நாட்டிலுள்ள ஏனைய மிகப் பெரிய எண்ணெய்த் தொட்டிகளுக்குச் சமமாக இவற்றைக் கூறலாம். தென்னகத்தின் தேவை நிறைவு பெறும்

நம் நாட்டிலேயே எண்ணெய் ஆலைகளுக்கென முதன் முறையாக தயாரிக்கப்பட்ட இயந்திரங்கள், கருவிகளெல்லாம் இதில் பயன்படுத்தப்படவிருக்கின்றன. எண்ணெய்த் தொட்டிகளுக்குரிய தகடுகள், குழாய்கள் ஆகியவை ரூர்கேலாவிலிருந்து தருவிக்கப்படவிருக்கின்றன.

திட்டத்திற்கு வேண்டிய மின்சாரம் நிலையை இங்கேயே உற்பத்தி செய்துகொள்ளத் திட்டம் இருக்கிறது. அதற்குரிய இயந்திரங்கள் நிறுவப்படவிருக்கின்றன. அதோடு, எதிர்பாராத மின்சாரத் தடையைத் தவிர்ப்பதற்காக, தமிழக மின்சார வாரியத்திடமிருந்து மின் தொடர்பு பெறவும் ஏற்பாடு செய்யப்படும்.

நமது நாட்டில் தயாரான இயந்திரங்களையே இதில் பயன்படுத்தப்படவிருப்பதால், மொத்தச் செலவில் 60 சதவீதம் "ரூபாய்" நாணயமாகவே இருக்கும் என்றும், தென் பிராந்தியத்தின் எண்ணெய்த் தேவைகளை இந்த ஆலை பூர்த்திச் செய்வதோடு, ஏற்றுமதிக்கென மிஞ்சும் நிலையும் ஏற்படும் என்றும் திரு ராமப்பிரம்மம் கூறினார்.

---

குடும்பக் கட்டுப்பாடு விழா :

## "நாம் வாழப் பிறந்தவர்கள் ; வாடப் பிறந்தவர்கள் அல்ல."

குடும்ப நலத் திட்ட இருவார விழாவை ஒட்டி, மாண்புமிகு பொது நல அமைச்சர் திரு **எஸ். ஜே. சாதிக் பாட்சா** அவர்கள் 26-9-1967 அன்று நிகழ்த்திய வானொலி உரையிலிருந்து சில பகுதிகள் :

..மக்கள் இனத்தின் கட்டுப்பாடற்ற வளர்ச்சியால் மக்கள் இனத்திற்கே விளையக்கூடிய பேரழிவை மக்கள் நினைவுக்குக் கொண்டு வருவதுதான் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் நோக்கம்.

..வளங்கொழிக்கும் வண்ணத் தமிழ்நாடுதான். இயற்கை யெழிலும் எண்ணற்ற கனி வளங்களும் கொழிக்கும் புனித பூமிதான். எனினும், அதன் வளமைக்கும் ஆற்றலுக்கும் ஓர் எல்லை உண்டு. அதனை உணர்ந்து செயல்படுவதன் மூலம்தான், நாம் நாட்டின் வளர்ச்சியைப் பார்க்க முடியும். மக்களின் வாட்டத்தைப் போக்க முடியும்.

"அளவறிந்து வாழாதான்
வாழ்க்கை உளபோல
இல்லாகித் தோன்றாக் கெடும்"

என்பது வள்ளுவர் வாக்கு. இந்தப் பொன்மொழியில் பொதிந்துள்ள ஆழ்ந்த கருத்தை, உயர்ந்த தத்துவத்தை ஒரு கணம் சிந்தித்துப் பாருங்கள். எப்பொழுதும் நாம் வாழ்க்கையில் விழிப்பாய் இருக்க வேண்டும். அளவறிந்து, நாட்டின் நிலையறிந்து, நம்முடைய ஆற்றலின் எல்லையறிந்து வாழவேண்டும்.

எனவே, தமிழ்ப் பெருமக்கள் அனைவரும் சிந்தித்துச் சீர்தூக்கிப் பார்த்து, நாடு வாழ, வீடு வளம் பெற, ஒவ்வொருவரின் உழைப்பும் பலன் தந்து இன்பம் பொங்க நாட்டில் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் வெற்றிபெற உதவுங்கள் என்று விரும்பி வேண்டிக் கொள்கிறேன்.





## சங்கம் அமைத்து வருவாய் பெருக்கும் மண்கலத் தொழிலாளர்கள்

பாலமேடு என்னும் கிராமம், மதுரையிலிருந்து 16 மைல் தொலைவிலுள்ளது. 3,000 மக்களைக் கொண்ட அக்கிராமத்தில், 23 குடும்பங்களிலுள்ளவர்கள் (150 பேர்) மண்கலத் தொழிலாளர்கள். இத் தொழிலாளர்கள் பரம்பரை பரம்பரையாக, மட்கலங்கள் வனையும் தொழில் செய்து வருகின்றனர். குறைந்த விலையில் அலுமினியப் பாத்திரங்கள் கிடைப்பதே மண்கலத் தொழில் வளர்ச்சிக்கு ஓர் இடையூறாக உள்ளது. ஆண்டில் சில பருவங்களிலேயே மண்கலங்களை விற்க முடியுமாதலால், இத் தொழிலாளிகளுக்கு அதிக மூலதனமும், இடவசதியும் தேவைப்படுகின்றன. எனவே இவை கூடுதல் செலவாகவே கருதப்படுகிறது. இவற்றைத் தவிர, பாலமேடு மண்கலத் தொழிலாளர்கள், தொழிற் கூடங்கள்கூட இல்லாமல், இயற்கையின் கருணைக்குரியவர்களாக இருந்தனர். இச் சூழ்நிலையில்தான் அலங்காநல்லூர் ஊராட்சி ஒன்றியம் அவர்களின் வாழ்க்கையில் பரிவுகாட்டி, அவர்களை ஒன்றுசேர்த்து கூட்டுறவுச் சங்கத்தின்கீழ் கொண்டு வந்தது. அதையொட்டி 'பாலமேடு மஞ்சமலை ஆண்டவர் மட்கலத் தொழிலாளர் கூட்டுறவுக் குடிசைத் தொழில்கள் சங்கம்', 22 உறுப்பினர்களோடு, 1961-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 30-ம் தேதியன்று தமிழக கதர், கிராமத் தொழில் ஆயத்தால் பதிவு செய்யப்பட்டது. அவ்வாண்டு டிசம்பர் திங்களில், 22 உறுப்பினர்கள் கொண்டு ரூ. 430 மூலதனத்துடன் அச்சங்கம் பணிபுரியத் தொடங்கியது. அச்சங்கத்தில் இப்பொழுது, 29 உறுப்பினர்கள் இருக்கின்றனர். சங்கத்தின் செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 430 ஆகும்.

### சங்கத்தின் மேலாண்மை

தமிழக கதர், கிராமத் தொழில் ஆயம் நியமித்த, 7 உறுப்பினர்களைக் கொண்டு சங்கம் நிர்வகிக்கப்படுகிறது. இவ்வுறுப்பினர்களை ஆயம் ஐந்தாண்டு காலத்திற்கு நியமித்துள்ளது. ஒரு ஜூனியர் இன்ஸ்பெக்டர், இங்கு செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார். ஒரு எழுத்தரும், ஒரு விற்பனையாளரும் மாதச் சம்பளத்தில் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இத்தொழிலுக்கு, மூலப்பொருட்கள் முக்கிய பங்கு வகிக்கின்றன. மண்கலத் தொழிலுக்குரிய வழவழப்பான நேர்த்தியான களிமண் போதுமான அளவுக்குக் கிடைக்க வேண்டும். அப்பொழுது தான் மண்கலங்கள் சிறு துளைகளையுடையதாகவும், சூளையிடப்பட்டுக் காயும்பொழுது, கீறல் விழுந்துவிடாமலும் இருக்கும். அத்தகைய சிறந்த களிமண் அக் கிராமத்திலிருந்து மூன்று பர்லாங்கு தொலைவில், ஏராளமாகக் கிடைக்கிறது. 6 பர்லாங்கிலுள்ள மற்றோரிடத்திலிருந்து மணல் கொண்டு வரப்படுகிறது. எரி பொருட்களை அருகிலுள்ள குன்றிலிருந்து, தலைச் சுமையாகவே கொண்டு வருகின்றனர். மழைக் காலத்தில், குளக்கரையிலேயே களிமண்ணைச் சேமித்து வைக்கின்றனர். எதிர்காலத்தில் அத் தொழில் வளர்ச்சியுறுவதற்குத் தேவையான மூலப் பொருட்களைச் சேகரிப்பதற்குக் கூட எவ்வித கஷ்டமும் இங்கு இல்லை.

### கருவிகள்

பாலமேடு மட்கலத் தொழிலாளர்கள் மிகச் சிறந்த சக்கரங்களைப் பெற்றுள்ளனர். அவை 24 அங்குலம் முதல் 28 அங்குலம் வரை விட்டமுடைய வாகை மரப் பலகையால் ஆனது. அச்சக்கரத்தில் ஓர் இரும்புத் துண்டு அதை நடுவில் தாங்கி நிற்கிறது. இது, மற்றொரு துளையுடைய மரம் அல்லது கல் துண்டுடனும் பொருத்தப்பட்டுள்ளது. இச்சக்கரம் எளிதில், வேகமாக சுழல்வதற்கு, இதில் இரும்புக் கோலிகள் (Ball bearings) எதும் இல்லை. விளக்கெண்ணெய் அல்லது நல்லெண்ணெயை அச்சக்கரத்தில் தடவி, அவற்றை எளிதில் சுழலச் செய்கிறார்கள். 45 அல்லது 50 ஆண்டுகளாகத் தம் முன்னோர்கள் பயன்படுத்திய சக்கரங்களை இன்னும் சில குடும்பங்கள் கையாளுகின்றன. அச்சக்கரத்தைச் சுழற்றுவதற்கென ஒருவரும், மட்கலத்தைச் செய்வதற்கு ஒருவரும் ஆக இருவர் தேவைப்படுகின்றனர். அவ்வேலை முழுவதும் முடியும் வரை, அச்சக்கரத்தைப் பெண்கள் சுழற்றுவது இயலாது. மற்றொரு குறையும் இச்சக்கரத்தில் உள்ளது. அதிகமான சக்தியும் நேரமும் அதில் செலவழிக்கப் பட்டால் கூட, இச்சக்கரம் மெதுவாகவே சுழலுகிறது. மேலும் இது ஒரு பக்கமாக சாய்ந்துகொண்டும், குதித்துக்கொண்டும், ஒரு நிலையிலில்லாமல் சுழல்கிறது. இதனால் சக்கரத்தில் வனையப்படும் மட்கலத்தின் தன்மை கெட்டுவிடுகிறது.

தங்களது பரம்பரை பழக்கத்தைக் கைவிட அத் தொழிலாளர்கள் விரும்புவதில்லையாதலாலும், அச் சக்கரங்களிலே அவர்களுக்குள்ள

பற்றினாலும், நவீன முறைகளைக் கையாள அவர்கள் பெரிதும் விரும்புவதில்லை. பல ஆண்டுகளாக, கீழே அமர்ந்துக்கொண்டு மண் பாத்திரங்களை உற்பத்தி செய்தது போலவே, இன்றும் செய்து வருகின்றனர். புதிய சக்கரங்களைப் பயன்படுத்தினால், மட்கலங்களைச் செய்து முடிக்கும் வரை, கீழே குனிந்து நின்றபடி இருக்க வேண்டும். இப்பழைய சக்கரங்களுக்குப் பதிலாக நவீன சக்கரங்கள் அளிக்கப்பட்டுள்ளன. மட்கலங்களைச் சுடுவதற்குத் திறந்த சூளைகள் பயன்படுத்தப்படுகின்றன. 130 அல்லது 140 டிகிரி சென்டிகிரேட் உஷ்ணத்தில், மூன்று மணி நேரம் அம் மட்கலங்கள் சுடப்பெற்று, பின்னர் மெதுவாக குளிர்ச்சி செய்யப்படுகின்றன. மாதம் இருமுறை ஒவ்வொரு குடும்பமும் இவ்வாறு சூளையிடுகிறது. தனித்தனிச் சூளைகள், அவரவர்களுக்கென்று இருக்கின்றன.

### உற்பத்தியும் விற்பனையும்

இச்சங்கம் தொடங்குவதற்கு முன், மட்கலத் தொழிலாளர்கள், தங்கள் பொருட்களைத் திருவிழாக்கள், வாரச் சந்தைகளுக்குத் தலையில் சுமந்துச் சென்று, அவற்றைப் பண்டமாற்றாகவோ, பணத்திற்கோ விற்று வந்தனர். ஆனால் இப்பொழுது வாங்கும் விலையும், விற்கும் விலையும் சங்கத்தால் நிர்ணயிக்கப்படுகிறது. எனவே, மண் பாத்திரங்களை நேரடியாக சங்கத்திலேயே விற்று விடுகின்றனர்.

இவற்றால் அப் பொருள்களைச் சேமித்து வைக்கும் பிரச்சினையோ, நடைமுறை மூலதனக் குறைவோ ஏற்படுவது இல்லை. அங்கு அவர்கள், சாதாரணமாகப் பானைகள், சட்டிகள், குடங்களைச் செய்கின்றனர். அப் பொருட்களைச் சங்கங்கள். தங்கள் 'ஏஜண்டுகள்' மூலம், விற்பனை செய்து விடுகின்றன.

### வைப்புத் தொகையும் கடனும்

அச்சங்கம் விற்பனைக்காக, பணியாளர்களுக்காக 1,890 ரூபாயும், பட்டறைக்காக 1,000 ரூபாயும் மானியமாகப் பெற்றுள்ளது. 1961–62-ல் நடைமுறை மூலதனக் கடனாக ரூ. 4,000 அளிக்கப்பட்டு, அதில் ரூ. 3,240 திருப்பிக் கொடுக்கப்பட்டுள்ளது. தொழிற் பட்டறை கட்டுவதற்காகவும், நடைமுறைச் செலவுக்காகவும், 1964–65-லும் 1965–66-லும் ஆண்டிலும் முறையே ரூ. 1,000, ரூ. 2,000 என்று இச்சங்கத்திற்குக் கடன்கள் அளிக்கப்பட்டுள்ளன.

### உறுப்பினர்கள் பெற்ற இலாபம்

ஒரு குடும்பத்தில் இருவர் இம் மட்பாண்டத் தொழிலில் ஈடுபட்டால், அவர்களுக்கு சராசரியாக ஒரு நாளைக்கு ரூ. 5 கிடைக்கிறது. அதே நேரத்தில், விவசாயிகளுடைய தினக் கூலி ரூ. 1·50 மட்டுமே ஆகும்.

உறுப்பினர்களுக்கென ஒரு பட்டறை, ஒரு விற்பனை நிலையம் ஒரு காலி மனை, விற்பனை ஏஜன்சி ஆகியவை இருக்கின்றன. பொதுத் தேவைகளுக்கு உதவுவதற்காக ரூ 801·87 ஒதுக்கப்பட்ட நிதியாக தனியே வைக்கப்பட்டுள்ளது. 1966 மார்ச் 31–ம் நாளன்று சங்கத்திலுள்ள சொத்துக்களின் மதிப்பு ரூ. 26,100, சங்கத்தின் கடன் ரூ. 26,000 ஆகும்.

பாலமேட்டில் உள்ள 23 மட்கலத் தொழிலாளர் குடும்பங்களில் 17 குடும்பங்கள், இத் தொழிலை மட்டுமே நம்பி வாழ்வன; ஏனையோருக்குத் துணை வருவாய் அளிக்கக்கூடிய வகையில் 3 ஏக்கர் நிலம் இருக்கிறது. ஒவ்வொரு குடும்பமும் சங்கத்தில் உறுப்பினராக இருப்பது குறிப்பிடத்தக்கது. ஒவ்வொரு குடும்பத்திலும் வேலை செய்பவர்களைப் பொறுத்து, அவர்களுக்கு மாதம் ரூ. 100 முதல் ரூ. 200 வரை வருமானம் கிடைக்கிறது. இதனால் அவர்களின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து வருகிறது. ஓடுகளால் வேயப்பட்ட நல்ல வீடுகளில் அவ்வுறுப்பினர்களனைவரும் வசிக்கின்றனர்.

சமூகத்தில் அவர்களுக்கு நல்ல மதிப்பிருக்கிறது. அவர்களுள் ஒருவர் ஊராட்சி உறுப்பினர்; 12 சிறுவர்களும் 10 சிறுமிகளும் பள்ளியில் படிக்கின்றனர். பொறுப்புணர்ச்சியும், தொண்டு மனப்பான்மையும் அவர்கள் வளர்த்துக் கொண்டுள்ளனர். தேசிய சேமிப்பு நிதிக்கென அவர்கள் ரூ. 50 நன்கொடையாக அளித்துள்ளனர். மட்கலத் தொழிலாளர்கள் குடும்பம் வளமை நோக்கிச் செல்லும் பாதையைச் சங்கம் உணர்த்தியதோடு, நாட்டின் ஏனைய பகுதியிலுள்ளவர்களுக்கு அச்சங்கம் வெற்றிப் பாதையையும் அமைத்துத் தந்துள்ளது.

" பஞ்சாயத்து ராஜ் " இதழ்களிலிருந்து இடம் பெறுபவை :
பக்கங்கள் : 11, 12, 15, 16, 17, 30, 31, 32.

Articles reproduced from 'Panchayati Raj' on pages : 11, 12, 15 to 17 and 30 to 30.





## பிற மாநிலங்களில்

### பால் வளப் பெருக்கம்: மக்கள் காட்டும் பேரார்வம்

பழங்காலத்தில் கண்ணன் பிறந்த யாதவ குலத்தைச் சார்ந்த மக்கள் வாழும் அரியானா பகுதியில் சாதாரண மக்கள் மட்டும் அல்லாமல் இளவரசர்களும், கால்நடை வளர்ப்பதை ஒரு பிரியமான தொழிலாகக் கருதுவதால், அங்கு கால்நடை வளர்ப்பு மிகவும் பிரசித்தி பெற்று வளர்ந்து வருகிறது. சாதி, மதம், சமூக அந்தஸ்து கருதாமல் அதிக பால் உற்பத்தி செய்யவேண்டும் என்பதுதான் பாட்டியாலா மக்களின் ஒருமித்த கருத்து ஆகும். கால்நடை அபிவிருத்தித் திட்டத்தை மிகவும் விரிவானமுறையில் மாநில அரசு செயல்படுத்திவருகிறது. இந்தத் திட்டம், செயற்கை முறையில் கருத்தரிப்பு ஏற்படுவதற்கும், கால்நடைத் தீவனம் அபிவிருத்தி செய்வதற்கும் ஊக்கமூட்டி உதவி செய்கிறது. மாநில அரசு கால்நடை வளர்ப்புப் பயிற்சி கொடுப்பதால் அந்தப் பகுதிகளில் உயர்ந்த பண்ணை ஏற்படுவதற்கு வழியேற்படுகிறது.

அதிக பால் கொடுக்கக்கூடிய 'நிலி' போன்ற பசுக்களை வளர்ப்பதற்கு மாநில அரசாங்கம் ஒரு திட்டத்தை வகுத்திருக்கிறது. நாபா என்றும் இடத்தில் 'நிலி' பொலி காளைகள் வளர்க்கும் பண்ணை ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. பாட்டியாலாவில் உள்ள 50 பால் சேகரிக்கும் இடங்களின் தேவைகளைச் சமாளிப்பதற்கு, நாபாவில் உள்ள பண்ணை 100 'நிலி' காளைக் கன்றுகளை ஆண்டுதோறும் வளர்த்து வருகிறது.

#### 2,000 கன்றுகள் விநியோகம்

பாட்டியாலாவில் உள்ள பூபிந்தர் பால் பண்ணையைச் சீர்திருத்துவதற்கு, செயற்கைக் கரு வளர்ச்சி முறையினால் வம்சாவழிகளை உற்பத்தி செய்ததற்கு பல இடங்களை ஏற்படுத்தி யிருக்கிறது. அந்த மாநிலத்தின் பால் உற்பத்தியை அதிகப்படுத்துவதற்கு, அங்கு உள்ள கால்நடைகளை உயர்ந்த இன கால்நடைகளாக மாற்றும் பணி கேந்திர கிராமங்களில் இருக்கும் கால்நடை வளர்ப்பாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. 1966–67-ல், சாகிவால் என்ற ரக பொலிக்காளைகள் 20 விநியோகிக்கப்பட்டிருக்கிறது.

மாநில அரசு சமீபத்தில் ஜெர்சி பிரவுன் வகையைச் சேர்ந்த கால் நடைகளை, அமெரிக்காவில் இருந்து இறக்குமதி செய்திருக்கிறது. இவைகளைக் கொண்டு கலப்பு இன சேர்க்கையினால் உயர்ந்த வகை கால் நடைகள் உண்டாவதற்கு ஒரு விரிவான திட்டத்தை செயல்படுத்தி இருக்கிறது. இந்த முறையினால், உண்டாக்கப்பட்ட 2000 கன்றுகள் 20 செயற்கை முறை கருத்தரிப்பு கேந்திரங்கள், துணைக் கேந்திரங்கள் வாயிலாக விநியோகிக்கப்படுகிறது.

### பழங்களும் காய்கறிகளும்

பஞ்சாப் மாநிலத்தில் 1,500 ஏக்கர் நிலத்தில் புதிய பழத் தோட்டங்கள் உண்டாக்கப்படும். இதற்கு துணை செய்யும் வகையில், விவசாயிகளுக்கு தொழில் நுட்ப உதவியும், நிதி உதவியும் அளிப்பதற்கு ரூபாய் 1.77 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

புதிய திராட்சைத் தோட்டங்களை வளர்ப்பதற்கு மேலும் ரூபாய் 3.12 லட்சம் கடனாகக் கொடுக்கப்படும்.

நோயினால் பாதிக்காத உருளைக் கிழங்கு விதையை உற்பத்தி செய்வதிலும், விநியோகிப்பதிலும் தனிக் கவனம் செலுத்துவது வரவேற்கப்படும். ரூபாய் பத்து லட்சம் செலவில் உருளைக் கிழங்கு விதைகள் உற்பத்தி செய்யும் புதிய பண்ணை ஒன்று ஏற்படுத்தப்படவிருக்கிறது. அதிலிருந்து பெற்ற விதைகள் உருளைக்கிழங்குப் பயிர் செய்வோருக்கு விநியோகிக்கப்படும்.

### எளிதில் மின்சாரம் கிடைக்க...

மக்களின் ஒத்துழைப்பைப் பெற்று அவர்களுக்கு மின்சாரம் வழங்குவதற்கு உத்தரப்பிரதேச அரசு ஒரு திட்டம் தீட்டியுள்ளது.

இந்தத் திட்டப்படி, மின்சாரம் தேவைப்படுவோர், மூன்று சதவீத வட்டி தரும் மின்சார ஆயத்தின் வைப்புத் தொகைக்கு பணம் செலுத்த வேண்டும். இந்த வைப்புத் தொகையை செலுத்தியவர்களின் குழாய்க் கிணறுகளுக்கும், பம்புசெட்டுகளுக்கும் மின்சாரத் தொடர்பு கொடுக்கப்படும்.

மாதாந்திர மின்சாரக் கட்டணம் இந்த வைப்புத் தொகையிலிருந்து கழித்துக் கொள்ளப்படும்.

# வருங்கால சமுதாயத்தை உருவாக்குவதில் ஆசிரியர் பணி

"கல்வி முறையில் மறுமலர்ச்சி ஏற்படவும், வருங்காலச் சமுதாயத்தை நல்லமுறையில் உருவாக்கவும், ஆசிரியர்கள் பல துறைகளிலும் தங்கள் அறிவைப் பெருக்கி, இந்தப் புனிதமான பணிக்கு தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும்" என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு முத்துசாமி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

ஆசிரியர் தினத்தையொட்டி 1967-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ந் தேதி சென்னை பாலர் அரங்கில் நடைபெற்ற ஆசிரியர் தினத்தின்போது அமைச்சர் கலந்துகொண்டு உரையாற்றினர். அவர் குறிப்பிட்டதாவது.

"ஆசிரியர் தொழில், ஒரு புனிதமான சமூகப் பணியாகும். அவர்கள் சமுதாயத்தை ஆக்கவும் அழிக்கவும் சக்தி பெற்றவர்கள். தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட குழந்தைகளைச் சீரிய செம்மல்களாக உருவாக்கும் பொறுப்பு ஆசிரியர்களிடம் இருக்கிறது.



## அன்றும் இன்றும்

பழங்காலத்தில் கற்றவர்கள் மிகக் குறைவு. கற்பிக்கப் பட்டவர்களும் குறைவு. ஆசிரியர்களிடம் மாணவர்கள் அடங்கி ஒடுங்கி இருந்தனர். ஆனால் தற்காலத்திய நிலவேறு. ஆசிரியர்களையே பல கேள்விகள் கேட்பதில் திறன்பெற்ற மாணவர்களைக் கொண்ட காலம் இது. ஆதலால் தற்கால ஆசிரியர்கள் பல துறைகளிலும் வல்லுநர்களாக இருத்தல் வேண்டும். நூல் நிலையங்களை ஆசிரியர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். மாணவர்களின் அறிவுப் பசியைத் தீர்க்க, தங்களது அறிவை நன்கு பெருக்கிக் கொள்ள வேண்டும்.

சமுதாயத்தின் பல்வேறு மட்டங்களிலிருந்து மாணவர்கள் வருவர். அவர்களைக் கையாளும் முறையில்தான் ஆசிரியர்களின் திறமை இருக்கிறது. சீட்டு விளையாட்டில் மோசமான சீட்டுக்களை வைத்துக்கொண்டு, விளையாடும் திறமையினால் வெற்றி பெறுவோர் உண்டு. இதைப் போன்றே, மாணவர்களின் அறிவுத்திறன் எப்படி இருந்தாலும், ஆசிரியர் தமது திறமையினால் அவர்களைக் கற்றறிந்த மாணவர்களாக்க முடியும். மாணவர்களின் பரம்பரையைக் கவனிக்காது, அவர்களின் சமுதாய சூழ்நிலையைக் கவனித்து ஆசிரியர்கள் கல்வி புகட்ட வேண்டும். கல்வி கற்கும் நேரம் போக, பாக்கியுள்ள பொழுதெல்லாம் மாணவர்கள் சமுதாயத்தின் மத்தியிலேயே வாழ்கிறார்கள். அப்பொழுது

(20-ம் பக்கம் பார்க்க.)



# வேளாண்மை பற்றி காந்தியடிகள்

திரு நல். முருகேச முதலியார்
(முதல் அமைச்சரின் சிறப்பு ஆலோசகர்)

வேளாண்மை என்பது, பயிர்களை விளைவிக்கும் ஒரு தொழில் என்ற அளவில் மட்டும் கருதக்கூடாது. கிராம வளர்ச்சிக்குப் பெரிதும் ஆக்கம் தருவது வேளாண்மை என்பதை நினைவில் கொள்ளவேண்டும். அது பற்றியே அண்ணல் காந்தியடிகள், விவசாய மக்களின் ஏழ்மைபற்றியும் கிராம முன்னேற்றம் பற்றியும், அடிக்கடி பேசியும் எழுதியும் வந்தார். வறுமையில் கிடந்துழலும் நம்நாட்டு மக்களுக்கு விடிவு காலம் ஏற்படுவதற்கான முயற்சிகள் எல்லாம் கிராமங்களையே அச்சாணியாகக் கொண்டு செயல்படவேண்டும் என்பது அவரது உள்ளக் கிடக்கை. அதை அவர் சொந்த வாக்கில் கூறியது:— "இன்று கிராமங்கள் என்பவை குப்பை மேடுகள்போல் இருக்கின்றன. இதே கிராமங்கள், எதிர்காலத்தில், எழிலும் வளமும் கொழிக்கும் சிறு தேவலோகம்போல் மாறிவிடும். அங்கு வாழும் மக்கள் அறிவு கூர்மை படைத்தவர்களாக இருப்பார்கள். யாருடைய ஏமாற்றுதலுக்கும் சுரண்டலுக்கும் பலியாகும் அப்பாவிகளாக இருக்கமாட்டார்கள்." காந்தியடிகள் காண விரும்பிய இலட்சிய கிராமம் அது. அவர் கனவு நனவாக, நாம் பாடுபடுகிறோமா ?

## அடிப்படைத் தேவை

காந்தியடிகள், நிலங்களுக்குக் குப்பை எரு இடுவது பற்றியும், மலக் கழிவை உரமாக மாற்றிப் பயன்படுத்துவது பற்றியும் மிகவும் வலியுறுத்தி வந்தார். நம் மாநிலத்தில் குப்பை எரு தயாரித்தல் பெரும் அளவில் நடைபெறுகிறது. அநேகமாக எல்லா நகராட்சிகளும், பல பேரூராட்சிகளும் இத்தகைய எருவைத் தயாரித்து விவசாயிகளுக்குக் கிடைக்கும்படிச் செய்து வருகின்றன. ஆனால் அந்த நகரங்களிலிருந்து கிராமங்களுக்கு எடுத்துச் செல்லும் வண்டி அல்லது லாரிச் செலவு அதிகமாக இருப்பது, சில இடங்களில் ஒரு தடையாக இருக்கிறது. இப்பிரச்சினையைத் தீர்க்க காந்தியடிகள் கூறிய ஓர் எளிய முறையைப் பின்பற்றலாம். அதிக ஆழமில்லாத பள்ளத்தில் மலக் கழிவைப் போட்டு மண்ணால் மூடி வைத்தால், ஒரு வாரத்திற்குள் அது எருவாகிவிடும். இதை விவசாயிகள், தங்கள் தங்கள் கிராமத்திலேயே செய்துகொள்ளலாம். இதேபோல் கிராமங்களில் பயனற்றுக் கிடக்கும் எலும்புகளைத் தூளாக்கி, அதையும் நிலத்துக்குப் போடலாம். எலும்பு உரத்தில் உள்ள 'பாஸ்பேட்' சத்து, பயிர்கள் செழித்து வளரச் செய்யும். பயிர்களுக்கு 'நைட்ரஜன்' உரத்தை மட்டும் தந்து, 'பாஸ்பேட்' உரம் தராமல் இருப்பது, ஒரு மனிதனை ஒரே ஒரு சுவாசப்பையோடு இருக்கச் செய்து, அதுவே போதும் என்பது போல் விட்டுவிட்டு, உணவை மட்டும் வயிறு புடைக்கத் தின்னச்செய்வது போலாகும்.

காந்தியடிகள் கால் நடைகளின் அவசியத்தையும் வலியுறுத்தி வந்தார். கால்நடைச் செல்வம், கிராமங்களின் விவசாய வளத்தைக் காட்டுவதாகும் என்பதே அவர் கருத்து. உழவு வேலைகள், வண்டியிழுத்தல் போன்றவற்றிற்கு எருதுகளும், பால் உணவு தர பசுக்களும் கிராமங்களில் இருந்தாகவேண்டும். கால்நடைக் கண்காட்சிகள் முக்கியமாக கிராமப் பகுதிகளில் நடைபெற வேண்டும். பொங்கலையொட்டிய வேளாண்மை வார நிகழ்ச்சிகளில் கால்நடைக் கண்காட்சியும் இடம்பெறச் செய்வது சாலப் பொருந்தும்.

## நடைமுறைக் கண்ணோட்டம்

விவசாயத்தையே தொழிலாகக் கொண்ட குடியானவர்களுக்கு உள்ள நடைமுறைக் கண்ணோட்டம் காந்தியடிகளுக்கு இருந்தது. ஒரு முறை, சேவா கிராமத்தில் தலிமி சங்கத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்த நிலம் தரக் குறைவாக, விவசாயத்திற்குத் தகுதியற்றதாக இருப்பதாக ஒருவர் காந்தியிடம் முறையிட்டார். அதற்கு காந்தியடிகள், "நாங்கள் தென்னாப்பிரிக்காவில் எந்த மாதிரி நிலத்தை வைத்துக்கொண்டு விவசாயம் செய்ய ஆரம்பித்தோம் தெரியுமா?" என்று கேட்டுவிட்டு, "தரிசு நிலமாக இருந்தாலும் அதன் மேல்படுகையில் இருக்கும் சத்தை உபயோகித்து ஏதாவது காய்கறிகளையாவது, மூலிகைச் செடிகளையாவது பயிர் செய்யலாம்" என்று யோசனை கூறினர்.

குளித்த பின் வீணாகும் தண்ணீர், சமையலறையிருந்து செல்லும் தண்ணீர் இவற்றையெல்லாம் வீட்டுத் தோட்டப் பயிர்களுக்குப் பயன்படுத்த வேண்டும் என்றும், பானைகள்—பழைய தகர டப்பாக்கள் போன்றவற்றில் கூட மண்ணையிட்டு ஏதாவது கீரை பயிர் செய்யலாம் என்றும்' இத்தகைய சிறுசிறு முயற்சிகள் எல்லாம் அளிக்கும் பலன்களை, நாடு முழுமைக்கும ஒரு சேரப் பார்க்கும்போது, அது பிரமாண்ட உருவினதாய் இருக்கும் என்றும் காந்தியடிகள் எடுத்துரைத்தார். இந்தக் குறிப்புகளை எல்லாம், இன்றைய கிராம நல வளர்ச்சி அலுவலர்கள் கடைப்பிடிக்கவும் போற்றி வளர்க்கவும் வேண்டும்.

## உணவு இறக்குமதி—பெரிய விரயம்

நிலச் சீர்திருத்தம் என்பது, கிராமப் பொருளாதாரத்தை அஹிம்சை முறையில் உறுதிப்படுத்தும் சாதனமாக அமையவேண்டும், என காந்தியடிகள் கருதினர். சமப் பங்கீட்டின் உண்மையான நோக்கம், கிராம மக்கள் ஒவ்வொருவரும் தங்களது அடிப்படைத் தேவைகளைப் பெறுவதற்கான வாய்ப்பு வசதிகளை அவர்களுக்கு அளிக்கவேண்டும் என்பது தான் என்று அவர் கூறினர்.

(அடுத்த பக்கம் பார்க்கவும்)

கிராம மக்களுக்குத் தேவையான அளவு உணவுப் பயிர்களையும், அவர்களது உடைக்குத் தேவையான பருத்தியையும் சாகுபடி செய்வது தான் ஒவ்வொரு கிராமத்தின் தலையாய பணியாகும். இது போக, நிலம் மிச்சமாக இருந்தால், அதில் வாணிபப் பயிர்களைச் சாகுபடி செய்யலாம். நாம் கிராமங்களைத் தன்னிறைவு பெற்றவையாக்க முயற்சித்து வருகிறோம். எனினும் இன்னும் செய்ய வேண்டிய பணிகள் நிறைய இருக்கின்றன.

அயல்நாட்டுத் துணிரகங்களை இறக்குமதி செய்வதற்காக அந்நிய செலாவணியைச் செலவழிப்பது குறித்து, அண்ணல் காந்தியடிகள், வெகு நாட்களுக்கு முன்பே மிகவும் மன வேதனையுற்றார். துணி இறக்குமதி போன்றே உணவு இறக்குமதியும் ஒரு பெரிய விரயம் என்றே அவர் கருதினார்:

இந்த கருத்துக்களை காந்தியடிகள் எழுதின பத்திரிகையில் காணலாம்.

### உண்மையான காரணம்

நமது ஊராட்சிகள், இந்த இலட்சியத்தை முன்னிறுத்திச் செயல்பட வேண்டும். நமது கிராம மக்கள் கையாளும் விவசாய முறைகள் எல்லாம் பழங்காலத்தவை, இக்காலத் தேவைக்கு ஒத்துவராதவை என்று கருதுவது, கூறுவது இன்றைய போக்காக இருந்து வருகிறது. ஆனால், இதன் உண்மை நிலை என்ன ? திருந்திய விவசாய முறைகளை, ஏன் அவர்கள் பின்பற்றாமல் இருக்கிறார்கள் ? அவர்களது பொருளாதார நிலை அதற்கு இடந்தராதது தான். தங்களுக்குக் கிடைக்கும் சொற்ப வருமானத்தில் பொறுக்கு விதைகளை, ரசாயன உரங்களை வாங்கவோ, நவீன கருவிகளை உபயோகிக்கவோ — இவற்றிற்கான பணத்தை முதலீடு செய்ய—அவர்களால் இயலவில்லை.

ஆனால், நல்ல காலமாக நிலைமைகள் ஓரளவு மாறியிருக்கின்றன. கடந்த சில ஆண்டுகளில், உணவுப் பற்றுக்குறையினால் ஏற்பட்ட நிர்ப்பந்தம், சமுதாய அபிவிருத்தித் திட்டம், பஞ்சாயத்து ஆட்சியின் பலன் ஆகியவற்றின் விளைவாக, கிராம மக்களுக்கு அரசின் உதவி மானியம், கடன் உதவி, பொருள்கள் விநியோகம் போன்றவையெல்லாம் தாராளமாகக் கிடைத்து வருகின்றன. விலைவாசி ஏற்றமும், விவசாயிகளுக்கு ஊக்கம் தரும் ஒரு தூண்டுகோலாயுள்ளது.

### நல்லவை எல்லாம் அளிக்கும் சமுதாய லட்சியம்

நம் நாட்டு வேளாண்மையின் தோற்றம் மெல்ல மெல்ல மாறி வருகிறது. நாம் விரும்பும் வேகத்தில் இல்லாவிட்டாலும், காந்தியடிகளின் இலட்சியங்களை நோக்கி முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது. விவசாயம் என்பது, நல்லவை எல்லாவற்றையும் அளிக்கும் சமுதாய இலட்சியத்தைக் கொண்டது. நிலைத்து நிற்கும் பொருளாதாரத்திற்கும் அடிப்படை அதுதான். நமது காலத்து மிகப் பெரிய மனிதர் விழைந்த அத்தகைய வேளாண்மை வளர்ச்சி உருவாக, அனைவரும் பாடுபடவேண்டும். சிறப்பாக வேளாண்மை வாய்ப்புகள் நிறைந்த தமிழகத்திலுள்ள நாம் பாடுபட வேண்டும்.

உழவின் பெருமையைத் தெய்வப் புலவர் திருவள்ளுவர் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன்பே தமிழர்களுக்கு கூறிப்போனார்.

உதாரணமாக கீழ்க்கண்ட குறட்பாக்களை உன்னுக.—

உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து.

ஏரினும் நன்றால் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு.

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.

உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்
தொழுதுண்டு பின்செல் பவர்.

காந்தியடிகளும் திருவள்ளுவர் அடிச்சுவட்டைப் பற்றியே உழவின் சிறப்பையும், கிராம நலத்தின் இன்றியமையாமைப் பற்றியும், உழைப்பின் மேன்மை பற்றியும் இந்த நூற்றாண்டில் நீக்கதரிசியாய் போதித்துச் சென்றார். கிராம மக்கள் திருவள்ளுவரையும் காந்தியடிகளையும் பின்பற்றி நல்வாழ்வு பெறுவாராக !

## இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டு மலர்க்குழு எழுதும் கரங்களுக்கு அளிக்கும் இனிய தொண்டு

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டினையொட்டித் தமிழ் மணம் கமழும் சிறப்பு மலர் ஒன்றை வெளியிடும் பணியை ஏற்றுள்ள குழுவின் தலைவர் மாண்புமிகு அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்கள், கலையில் தெளிவும், கட்டுரை வன்மையும் வாய்ந்த அறிஞர்களிடமிருந்து, தமிழ் மொழியின் வளம்-நலம், பண்டைத் தமிழரின் வரலாறு, பண்பாடு, நாகரிகம், கலைகள் இன்ன பிறதுறைகள் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை விரும்பி வரவேற்கிறார்கள். உலகிலுள்ள நூலகங்கள் அனைத்திலும் இம் மலர் மணம் பரப்ப வேண்டுமென்பது குழுவின் விருப்பமாதலின், அறிஞர்கள் தனியார்வம் செலுத்தி ஆராய்ச்சி நலம் மிக்க கட்டுரைகளை எழுதியனுப்புமாறு குழு வேண்டுகிறது. கட்டுரை ஒவ்வொன்றும் 1,500 சொற்களுக்கு மிகாமல் இருத்தல் நலம்.

கட்டுரையை அனுப்புவதற்குரிய கடைசி நாள் : 25—10—1967.

கட்டுரையை அனுப்ப வேண்டிய முகவரி :

அமைப்புச் செயலாளர்,
இரண்டாம் உலகத் தமிழ் கருத்தரங்கு &
தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர்,
தமிழக அரசு, சென்னை-9.

தகுதியுடையவை என ஆய்வுக் குழுத் தேர்ந்தெடுக்கும் கட்டுரைகள் மட்டுமே மலரில் இடம் பெறும். கட்டுரைகள் திருப்பி அனுப்பப்படமாட்டா.





படம் 1.—தமிழ் நாட்டில், பவானிசாகரில் உள்ள கிராம வளர்ச்சிப் பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெற வந்த அமெரிக்க அமைதிப் பணித் தொண்டர்கள் (American Peace Corps), 19—9—67 அன்று சென்னையில் மாண்புமிகு முதலமைச்சரைச் சந்தித்தனர்.




படம் 2.—மதிய உணவுத் திட்டத்தின் தலைமைச் சமையற்கூட முறை துவக்க விழாவில் (15-8-67) டி.வி.எஸ்.-அலுமத் நிறுவனத்தார் நன்கொடையாக வழங்கிய கலன்களை, மாண்புமிகு அரிஜன நல அமைச்சர் பெற்றுக்கொண்டார். (கட்டுரை 25-ம் பக்கம்).



படம் 3.—மாண்புமிகு முதலமைச்சரின் பிறந்த தினத்தை, சென்னை நகர கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் 15—9—67 அன்று கொண்டாடிய போது, திருமதி ராணி அண்ணாதுரையிடம் வரவேற்புரை அளிக்கப்பட்டது. விழாவுக்கு மாண்புமிகு உணவு அமைச்சர் தலைமை வகித்தார்.









1. பிரதம மந்திரி திருமதி இந்திராகாந்தி, அண்மையில் தமிழகம் வந்திருந்தபோது, மாணவர்கள், மொழிப் பிரச்சினை குறித்து தங்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர்.

2, 6. தூத்துக்குடி ஆழ்கடல் துறைமுகத் திட்டப் பணிகளை மாண்புமிகு முதலமைச்சரும், மாண்புமிகு பொதுப்பணி அமைச்சரும் முறையே ஆகஸ்டு 23, 26 தேதிகளில் பார்வையிட்டனர்.

3. அண்மையில் சென்னை திரு வி. கே. ஆர். வி. ராவுடன் பற்றி உரையாடல்.

4. எண்ணூர் அனல் மின் வேலையை, மாண்புமிகு தொழி தேதியன்று துவக்கி வைத்தார்.

5. சென்னை பொது மருத் டமேடையை, 12—9—1967 அன்று துவக்கி வைத்தார். அருகில் எஸ். ஜே. சாதிக் பாட்சா.



ருந்த மத்திய போக்குவரத்துத் துறை அமைச்சர் ாண்புமிகு முதலமைச்சர், தூத்துக்குடி திட்டம்

நிலையத்திற்கான முதல் கொதிகலன் நிறுவும் மச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் ஆகஸ்டு 5-ந் ட.

மனையில் (General Hospital) புதிய எக்ஸ்ரே ண்புமிகு பொதுப்பணி அமைச்சர் திரு கருணாநிதி ப்பவர் மாண்புமிகு பொதுநல அமைச்சர் திரு



படம் 1.—குடும்பக் கட்டுப்பாடு இரு வார விழா, சென்னை மருத்துவக் கல்லூரியில் செபடம்பர் 16-ம் தேதியன்று, கவர்னர் சர்தார் உஜ்ஜல்சிங் அவர்களால் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மாண்புமிகு பொது நல அமைச்சர் திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா தலைமை வகித்தார். மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் திரு ஏ. கோவிந்தசாமி கண்காட்சியைத் திறந்து வைத்தார்.

படம் 2. — இந்திய அரசின் வேளாண்மை, சமுதாய வளர்ச்சித் துறை அமைச்சர் திரு எஸ். குருபாதசாமி ஆகஸ்ட் 28-ம் தேதியன்று சென்னையில் மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் திரு ஏ. கோவிந்தசாமி அவர்களைச் சந்தித்து உரையாடினார்.

படம் 3.—பீகார் வரட்சி—சென்னை தீ விபத்து துயர் துடைப்பு நிதிக்காக, திரைப்பட நடிகர்—நடிகையர்களின் கலை நிகழ்ச்சி ஆகஸ்டு 5-ம் தேதியன்று சென்னையில் நடைபெற்றது. அது போது நடிகை சந்திரகாந்தா, மாண்புமிகு முதல் அமைச்சரிடம் நன்கொடைத்தாள் விற்பனை செய்கிறார்.







மதிய உணவுத் திட்டம் செம்மையுற :

# தலைமைச் சமையற்கூட முறை

இந்தியா முழுமைக்கும் வழிகாட்டியாக, தமிழகம், மதிய உணவுத் திட்டத்தைப் பல ஆண்டுகளாகச் செயல்படுத்தி வருகிறது. இத் திட்டம் மேலும் செம்மையாக நடைபெறச் செய்ய, "தலைமைச் சமையற்கூட முறை" இப்போது மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. பல பள்ளிகளுக்குமாகச் சேர்த்து, ஒரே இடத்தில் மதிய உணவைத் தயாரித்து, "மோட்டார்" வாகனங்கள் மூலம், பிரித்து வழங்குவதே, இந்தப் புதிய முறை. அமெரிக்க "கேர்" (Co-operative for American Relief Everywhere) நிறுவனத்தாரின் உதவியைப் பெற்ற இத்திட்டத்தின் துவக்க விழா ஆகஸ்டு மாதம் 15-ம் தேதியில், பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சேக்காடு என்னும் ஊரில் நடைபெற்றது. நிகழ்ச்சி பற்றிய செய்தி, சென்ற இதழில் வெளியாகி இருக்கிறது,

விழாவில் பங்கு கொண்டு, உரையாற்றிய மாண்புமிகு அமைச்சர்களின் பேச்சு விவரம் இங்கு தரப்படுகிறது.

விழாவிற்குத் தலைமை வகித்த மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் தமது தலைமையுரையில் கூறியதாவது :

"எதிர்காலத்தில் தமிழகமெங்கும் அமைக்கத் தக்க இந்த முன்னோடித் திட்டத்தின் துவக்க விழாவை, அதன் பயன் கருதி, நன்மை கருதி இன்று விடுதலை தின நாளில் நடத்த, "கேர்" நிறுவனத்தார் பெரிதும் முயற்சி எடுத்து முடித்துள்ளனர். இதன் மூலம் பள்ளிக் குழந்தைகளுக்கான மதிய உணவு தூய்மையானதாகவும், தக்க அளவோடும், பாதுகாக்கப்பட்டதாகவும் கிடைக்க வழியுண்டாகிறது. பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் உள்ள அமெரிக்கர்கள் இத்தகைய உதவிகளைச் செய்யும் அவர்களது கொடைத் தன்மையை நாம் பாராட்டவும், ஒத்துழைக்கவும் கடமைப்பட்டுள்ளோம்.

## முழு வெற்றி பெற....

என்றென்றும், இத்தகைய உதவி கிடைத்துக்கொண்டிருக்கும் என நாம் எதிர்பார்க்க முடியாது. சில பல காலம் "கேர்" ஆதரவு தரலாம். பொது மக்கள் ஆங்காங்கு கொடுக்கும் ஒத்துழைப்பினால்தான் இந்தப் பயன்தரும் காரியம் முழுமையான வெற்றியைப் பெற முடியும். இது ஒரு தூண்டுகோல்தான் என உணர்ந்து, நாமே முன்வந்து பாடுபட வேண்டும். இந்தப் புனிதமான தினத்தில் நாம் ஒரு சூளுரை எற்க வேண்டும். நாம் அனைவரும் நமது வருமானத்தில் ஒரு சத விகிதம் கல்விக்குக் கொடுக்கும் முறையைக் கையாளலாம்."

"ரூபாய்க்கு ஒரு படி அரிசி' என்ற திட்டத்தைத் தமிழக அரசு செயல்படுத்தி வருவதையும், மாண்பு மிகு முதலமைச்சர் அவர்கள் தனி அக்கறை காட்டி வருவதைப் பற்றியும் குறிப்பிட்ட மாண்பு மிகு கல்வி அமைச்சர், "படி அளந்த பெருமாள் என்று இறைவனைக் கூறும் மரபு, மக்களிடையே உண்டு. நம்முடைய முதலமைச்சர் அவர்கள், படியளக்கும் பேரறிஞராக, இன்று பணியாற்றுகிறார். படிப்படியாகவும் அதைச் செய்து வருகிறார்", என்று கூறினார்,

## விவசாயப் பண்ணையின பயன்

தலைமைச் சமையற்கூடத்தையொட்டி அமைக்கப்படும் உழவுப் பண்ணைக்கு, நன்கொடையாக அளிக்கப்பட்ட விவசாயக் கருவிகளை எற்றுக்கொண்டு நன்றி தெரிவித்துப் பேசிய மாண்பு மிகு விவசாய அமைச்சர் திரு ஏ. கோவிந்தசாமி நவீன இயந்திரக் கருவிகளோடு கூடிய இந்த விவசாயப் பண்ணை, இந்த வட்டாரத்தின் விவசாய வளர்ச்சிக்குத் தக்கதொரு எடுத்துக்காட்டாக இருக்குமென்றும், இப் பண்ணை சிறபபான, மிகுதியான பயன் தரும் வகையில் இயங்கும் என்றும் தாம் நம்புவதாகவும், இந்தத் தலைமைச் சமையற்கூட முறை தமிழக மெங்கும் பரவி பயன் தர வேண்டுமெனத் தாம் அவாவுறுவதாகவும் கூறினார்.

அடுத்து, மின் விளக்குகளை எற்றி வைத்து உரை நிகழ்த்திய மாண்புமிகு உள்ளாட்சி அமைச்சர் திரு மா. முத்துசாமி கூறியதாவது :

"மதிய உணவுத் திட்டத்தை நடத்திவரும் பெருமை, பெரிதும் ஆசிரியர்களையே சாரும். இந்தத் திட்டத்திற்கு யாருடைய உதவியும் இல்லாத நேரத்தில், பொது மக்களிடம் பணம் திரட்டி, 1956-ம் ஆண்டு முதல் இத் திட்டத்தை ஆசிரியர்கள் நடத்தி வந்தார்கள். அதன் பின்னரே, திட்டம் படிப்படியாக வளர்ச்சி

தலைமைச் சமையற்கூட முறை—தொடர்ச்சி.

யடைந்து, ஊராட்சிகளும் இதற்கு உதவி செய்யலாம் என்று வந்தது.

இப்போது, அமெரிக்க "கேர்." நிறுவனத்தாரின் உதவி, நமது மதிய உணவுத் திட்டத்திற்குக் கிடைத்து வருகிறது. "கேர்" என்பது, அமெரிக்க மக்கள் கொடையுள்ளத்தோடு, தங்கள் சேமிப்பில் ஒரு பகுதியைக் காணிக்கையாகக் கொடுக்க, அதைக் கொண்டு நடைபெறும் அற நிறுவனமாகும். பொருளைச் சேமித்து வைக்கும் இடம் "பொருள் வைப்புழி" என்று சங்க கால இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளது. "கேர்." நிறுவனத்தார் ஏழைக் குழந்தைகளின் பசி மிகுந்த வயிற்றை, பொருள் சேமித்து வைக்கும் இடமாகக் கொண்டிருக்கிறார்கள். நாம் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதையும், அவர்கள் இதன் மூலம் உணர்த்துகிறார்கள்.

### புதிய வரவேற்கத்தக்க வழக்கம்

நம்மிடையேயும் கொடை வள்ளல்கள் இருக்கிறார்கள். அள்ளிக் கொடுப்பதற்குச் செல்வமும் இருக்கிறது. குழந்தையைத் தத்து எடுக்கும் பழக்கம் நமது சமுதாயத்திலே நிலவுகிறது. அதைப் போன்று, பள்ளிக் கூடங்களையே தத்து எடுத்துப் பேணி வளர்க்கும் புதிய வழக்கத்தை மேற்கொள்ளுமாறு மாண்பு மிகு கல்வி அமைச்சர் அவர்கள் புதிதாக வற்புறுத்திவரும் கருத்தை நான் உளமார வரவேற்கிறேன். இந்தப் புதிய வழக்கம் மக்களிடையே பரவ வேண்டும் என்று விருபுகிறேன்.

பள்ளிகளில் உணவு கொடுக்கும் உதவியோடு, மக்களின் பிணி நீங்கவும் உதவி செய்ய முயல்வோம். ஆரம்ப சுகாதார நிலையங்கள், இதற்குத் தக்க உதவி புரியலாம்,

### இருள் நீக்கும் ஒளிவிளக்கு

கோயில்களில் நந்தா விளக்கு ஏற்றுவது போல, இன்று இந்தச் சுதந்திர தின நன்னாளில் நான் ஏற்றி வைக்கும் ஒளி விளக்கு, சமுதாயத்தின் அறியாமை, பிணி, இல்லாமை போன்ற இருளை நீக்க உதவுமென்று நம்புகிறேன்.

ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பை ஏற்றுள்ள தலைமை ஊழியன் என்ற முறையில் என் வேண்டுகோள் இதுதான்.

'எல்லா ஊராட்சி ஒன்றியங்களின் ஆணையர்களும், இத் துறையில் ஒத்துழைத்து, மதிய உணவு திட்டத்தை வெற்றிபெறச் செய்வார்களாக!"

(மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு அரிஜன நல அமைச்சர் ஆகியோரின் பேச்சு விவரம் அடுத்த இதழில்.)

---

வருங்கால சமுதாயத்தை.... (18-ம் பக்கத் தொடர்ச்சி.)

வேண்டாதவையெல்லாம் அவர்களின் நினைவில் படிந்து விடுகிறது. அவைகளையெல்லாம் துடைத்தெறிந்த பின்னர் தான் அவர்களுக்கு அறிவு புகட்ட வேண்டியிருக்கிறது."

### ஆசிரியர்கள் அவல நிலை களைய அரசின் ஆர்வம்

ஆசிரியர்களின் பொருளாதார உயர்வுபற்றி அமைச்சர் மேலும் கூறியதாவது:

"காலையரும்பி பகலெல்லாம் போதாகி மாலை மலரும்" கடன் நோயினால் ஆசிரியர்கள் அவதிப்படுகிறார்கள். சமுதாயத்தில் ஆசிரியர்களின் அந்தஸ்து உயர வேண்டுமானால் அவர்களின் ஊதியம் உயர வேண்டியதவசியம். தற்போது ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொண்டுள்ள அரசாங்கம் ஆசிரியர்களின் அந்தஸ்தை உயர்த்துவதிலும் அக்கறை கொண்டுள்ளது. 'பொருளில்லார்க்கு இவ்வுலக மில்லை' என்பதை அரசு நன்கு உணர்ந்திருக்கிறது" என்றார்.

கூட்டத்திற்கு சென்னை கலெக்டர் திரு எ. எம். நபி I.A.S. தலைமை வகித்தார்.

இடைநிலை கல்வித்துறை இயக்குநர் திரு எம். டி. பால், துவக்கத்தில், அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், மொத்த வருமானத்தில் கால்பங்கு கல்விக்காகச் செலவழிக்கப் படுவதாகவும், 7 லட்சம் குழந்தைகளுக்கு வருடத்தில் 200 நாட்களுக்கு இலவச மதிய உணவு அளிக்கப் படுவதாகவும், தமிழகத்தில் இதுகாறும் திரட்டப்பட்ட ஆசிரியர் நல நிதியில், மத்திய ஆசிரியர் நல நிதிக்காக ஒதுக்கப்பட்ட 20 சதவிகிதம் போக, பாக்கி ரூ. 7.84 லட்சம் இருப்பதாகவும், இது தமிழக ஆசிரியர் நலனுக்காகப் பயன்படுத்த இருப்பதாகவும், தெரிவித்தார்.

ஆசிரியர்களுக்கான தேசிய விருதைப் பெற்றுள்ள சென்னை வேப்பேரி பெண்டிங் பெண்கள் உயர் நிலைப் பள்ளி தலைமை ஆசிரியை செல்வி திலகவதி பால், அறிமுகம் செய்துவைக்கப்பட்டு பாராட்டப் பெற்றார்.

எம். சி. டி. உயர் நிலைப் பள்ளி தலைமை [illegible]சிரியர் திரு எஸ். நரசிம்மன் நன்றி கூற, தேசிய கீ[illegible]த்துடன் விழா இனிது முடிவுற்றது.

விழா இறுதியில் கலை நிகழ்ச்சிக[illegible] நடைபெற்றன. பல பள்ளி மாணவ மாணவிகள் இ[illegible]தில் கலந்து கொண்டனர். திறம்பட நடித்த குழந்தை[illegible]களுக்குப் பரிசுகள் அளிக்கப்பட்டன.



# அரசு ஊழியர்களுக்குப் புதிய அகவிலைப் படி

தமிழக அரசு தன் ஊழியர்களுக்குப் புதிய அகவிலைப் படிகளை அறிவித்திருக்கிறது. இந்தப் படி விகிதங்கள் 1967-ம் ஆண்டு நவம்பர் முதல் தேதியிலிருந்து அமலுக்கு வருகின்றன. அதாவது, டிசம்பர் முதல் தேதி வழங்கப் படும் நவம்பர் மாதச் சம்பளத்திலிருந்து அமலாகின்றன. புதிய அகவிலைப்படி விவரங்கள் வருமாறு:

| சம்பளப் பிரிவினர். | அகவிலைப்படி விகிதங்கள். ரூ. |
|---|---|
| ரூ. 90-க்கு கீழே .. .. | 59 |
| ரூ. 90-ம் அதற்குமேலும் ஆனால் 150-க்கு கீழே .. .. .. | 84 |
| ரூ. 150-ம் அதற்கு மேலும் ஆனால் 210-க்கு கீழே .. .. .. | 106 |
| ரூ. 210-ம் அதற்கு மேலும் ஆனால் 400-க்கு கீழே .. .. .. | 128 |
| ரூ. 400-ம் அதற்கு மேலும் ஆனால் 500-க்கு மேற்படாதது .. .. | 140 |
| ரூ. 500-க்கு மேலே ஆனால் 519-க்கு மேற்படாதது .. .. .. | சம்பளம் ரூ. 640-க்கு எவ்வளவு குறைகிறதோ அந்தஅளவுத் தொகை. |

உயர்ந்த சம்பள விகிதங்கள் உள்ள அலுவலர்களுக்கு வழங்கப்படும் தற்போதைய அகவிலை விகிதங்களில் மாற்றம் எதுவும் இல்லை. நடை முதல் நிதியாண்டில் நான்கு மாதங்களுக்குத் தரப்படவேண்டிய கூடுதல் அகவிலைப்படி விகிதங்கள், ஊழியர்களின் பிராவிடண்ட் நிதியில் 1968-ம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதி சேர்க்கப் படும். அதன் பிறகு சாதாரணமாய் பிராவிடெண்ட் நிதியிலிருந்து பணம் எடுப்பதற்குரிய நிபந்தனைகளின் படி அதிலிருந்து அவர்கள் பணம் எடுத்துக்கொள்ளலாம். 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதி வழங்கப்படும் 1968-ம் ஆண்டு மார்ச் மாதச் சம்பளத்திலிருந்து, திருத்தப்பட்ட அகவிலைப்படி ரொக்கமாக வழங்கப்படும். திருத்தப்பட்ட இப்புதிய அகவிலைப்படி விகிதங்கள் மத்திய அரசு தன் ஊழியர்களுக்கு வழங்கும் விகிதங்களுக்குச் சமமாகும். இந்த விகிதங்கள் ரூ. 90–109 சம்பளப் பிரிவினர் விஷயத்தில் மத்திய அரசாங்க விகிதங்களைவிடச் சற்றுக் கூடுதலாகவே உள்ளன. ரூ. 500 வரை சம்பளம் வாங்கும் ஊழியர்களும் இந்தக் கூடுதல் விகிதங்களால் பயனடைகிறார்கள்.

கூடுதல் அகவிலைப்படி விகிதங்கள், உள்ளாட்சி நிறுவனங்களைச் சேர்ந்த ஊழியர்களுக்கும், உதவி பெறும் கல்வி நிலையங்களைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கும் பொருந்தும், அவர்கள் விஷயத்திலும் நடைமுதல் நிதியாண்டின் நான்குமாத காலத்திற்கான கூடுதல் அகவிலைப் படி விகிதங்கள் அவர்களது பிராவிடெண்ட் நிதியில் சேர்க்கப்படும். கூடுதல் அகவிலைப்படி விகிதங்களை அவர்களுக்கும் 1968-ம் ஆண்டு ஏப்ரல் முதல் தேதி வழங்கப் படும் 1968-ம் ஆண்டு மார்ச் மாதச் சம்பளத்திலிருந்து ரொக்கமாகப் பெறுவர்.

அகவிலைப்படி விகிதங்களில் அறிவிக்கப்பட்டுள்ள உயர்வால், ஆண்டொன்றுக்கு ரூ. 7 கோடி கூடுதலாகச் செலவாகும் என மதிப்பிடப்படுகிறது. ஆனால் இந்தப் பொறுப்பு அடுத்த நிதியாண்டில்தான் எழும்.

மதுரைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழாப் பேருரை—5-ம் பக்கத் தொடர்ச்சி.

இந் நாட்டுத் தேள், எனின் கொட்டிடின் குளிர்ச்சியோ காண்போம்? பிற நாட்டுத் தேன், எனின் பருகிடிற் கசப்போ இருந்திடும்?

எங்கிருந்து கிடைத்திடினும் ஏற்புடையதெனின், எமதாக்கிக்கொள்வோம் என்ற நோக்கம் தேவை; அதனைத் தந்திடவும், அதன்மூலம் பயன் கண்டிடவும் முனைந்து பணியாற்றிடவேண்டும்.

பல்கலைக் கழகங்கள் வளர்ந்துள்ளன; வளருகின்றன; கல்விக்கூடங்கள் பெருகிவருகின்றன; எனினும் இன்றும் மக்கள் தொகையுடன், பட்டம் பெற்றோர் தொகையினை ஒப்பிட்டுப் பார்க்கும் போது, எத்தனை சிறிய அளவினது நமது முன்னேற்றம் என்பதனை உணரலாம். எனவே தான், நாட்டுநிலை உயர்த்திட, நல்லோர் மிகப் பலருக்குக் கிடைத்திடா வாய்ப்பைப் பெற்றுள்ள உம்மிடம் மக்கள் நிரம்ப எதிர்பார்க்கின்றனர். நீவிர், இந் நாட்டைச் சூழ்ந்துள்ள இல்லாமை, போதாமை, அறியாமை, கயமை என்னும் பகையினை வீழ்த்திடப் புறப்படும் முன்னணிப் படையினர். பட்டந்தனைக் காட்டிப் பாங்கான வாழ்வு பெற முந்திக்கொள்ளும் நிலையினர் என்ற நிந்தனையை நீக்கிடுக! நீள் வெற்றி பெற்றிடுக! என வாழ்த்துகின்றேன்.

பட்டம் பெற்றிடுவோர் குறிக்கோளற்றுக் கிடந்திடின், நாடு நிலைகுலையும்; எதிர்காலம் எழில் உள்ளதாக அமையாது. குறிக்கோளற்ற நிலையே, மனக் குழப்பம், கொதிப்பு, அதிர்ச்சி, ஆர்ப்பரிப்பு, ஒழுங்கற்ற செயல்கள், ஊறு விளைவிக்கும் போக்கு, கலாம் விளைவித்தல், கட்டுக்கு உட்பட மறுத்தல் ஆகியவை எழக் காரணமாகிறது என்று கருதுகிறேன்.

நம் நாட்டு இளைஞர்களிடம், குறிப்பாக மாணவரிடம் கேடு நிறைந்த இயல்புகள் மிகுந்து விட்டிருப்பதாகப் பலர் கவலை தெரிவித்துள்ளார்கள். நான், 'நம் நாட்டு இளைஞர்களிடம்' குறிப்பாக மாணவரிடம், நம்பிக்கை இழந்து விடவில்லை; மாறாக, அவர்களின் இயல்பிலே அடிப்படையான கோளாறு ஏதும் இல்லை; அவர்முன் குறிக்கோள் சீரிய முறையிலே காட்டப் படாததாலும், அறிவுரை வழங்கிடும் அன்பர்களில் பலரும் தன்னலப் பிடியினிற் சிக்கித் தகாதன செய்கின்றனர் என்பதனைக் காண நேரிடுவதாலும், அவர்கள் இயல்பு திரிந்துவிடுகிறது; நேர்வழி அடைபடுகிறது: கேடு தரும் முறைகள் இனிப் பளிக்கின்றன என்று கருதுகிறேன்.

### மாணவர்—மற்றையோர் கடமை

எனவே, இளைஞரும் மாணவரும் நல்லியல்புடன் இருந்திடவேண்டுமெனில், மற்றையோர், தமது சொல்லும் செயலும் பொது நலனுக்கு

உகந்ததாக அமைந்திடுமாறு பார்த்துக்கொள்வது இன்றைய அவசரத் தேவை என்பதனைக் கூறிட விழைகின்றேன்.

அதேபோது, மாணவர்கள் தமக்கு அளிக்கப்பட்டுள்ள வாய்ப்பு எத்தனை அருமைமிக்கது என்பதனை உணர்ந்து, அதற்கேற்பத் தமது செயலினை வகுத்துக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

தத்தையின் கழுத்திலே பூட்டிடவோ, கத்தும் கடல் மூழ்கி முத்து எடுப்பர்? தனக்கென வந்துள்ள தையல் அன்றோ அதற்கு உரியாள்?

அரைத்தெடுத்துப் பூசி மகிழ்தற்கன்றோ சந்தனம், அடுப்பு எரிப்பதற்கோ? பட்டம் பெறுவதும் பயிற்சி பெறுவதும் நாட்டினருக்கு நல்வாழ்வு தந்திட; எனக்கென்ன தருகின்றனர், ஏன் இந்தத் தாமதம் என்ற கணை தொடுக்கமட்டுந்தானே? எவரும் அதுபோல் கூறுர்.

## தூய தொண்டாற்றும் திறன்

உம்மிடம் மிகுதியான நம்பிக்கை கொண்டுள்ளோரில் நானும் ஒருவன். புதியதோர் உலகு செய்வோம்—என்று பாடிச் சென்ற பாவலர், உம் போன்றோரை மனத்திற்கொண்டே பாடினர். உம்மிடமின்றி வேறு எவரிடம், தூய தொண்டாற்றும் திறனை எதிர்பார்க்கமுடியும்?

குறிக்கோள் தெளிவாக அமைந்திடின், மாணவர்களிடம் மாண்புமிகு செயலினை எதிர்பார்க்க முடியும் என்றுரைத்தேன். இந்தக் குறிக்கோளை மாணவர் பெற்றிடத்தக்க விதத்தில், பாடத்திட்டமும், பயிற்சி முறையும், பழகு முறையும், கல்விக்கூடங்களில் அமைந்திடவேண்டும்.

கல்விக்கூடங்களின் எண்ணிக்கை பெருகி, அரசுகளின் வருவாய்த்துறை அதற்கேற்ப அமையாதிருக்கும் நிலையில் கல்விக்கூடங்கள் எவ்விதமான சூழ்நிலையில் இயங்கவேண்டுமோ அவ்விதம் இருந்திடச் செய்வதும் இயலாததாக உள்ளது. படிப்படியாக, இந் நிலையினைச் செம்மைப்படுத்த அரசு முனைந்து பணியாற்றி வருகின்றது. ஆண்டு பல ஆகக்கூடும், அடிப்படைத் தேவைகளையேனும் அளித்திட முடிவதற்கு. அதற்கே பெரும் பொருள் ஈந்திடவேண்டியுள்ளது. அதுவும், எந் நிலையில் இப் பொருளைப் பெறுகின்றோம், தருகின்றோம் என்பதனை எண்ணிப் பார்த்திட வேண்டும்.

"முழு வயிறு காணுதார், முதுகெலும்பு முரியப் பாடுபடுவோர், வாழ்வின் சுவை காணுர், வலியோரின் பகடைக் காய்கள், ஓடப்பர்—இவரெல்லாம் தருகின்ற வரிப் பணமே, கோட்டையாய், கொடி மரமாய், பாதையாய், பகட்டுக்களாய், அமல் நடத்தும் அதிகாரிகளாய், அறிவு பெற அமையும் கூடங்களாய்த் திகழ்கின்றன.

## எதிர்காலம் மாணவர்களுடையது

வியர்வை பணமாகிறது—வரியாகப் பெறப்படுகிறது; அதனைக் கொண்டே பல்கலைக் கழக முதல் தொடக்கப்பள்ளிவரை கட்டப்பட்டுள்ளன. எத்தகைய தியாகக் கோட்டமாக இந் நாடு இந் நாளில் உள்ளது என்பதனை, எத்தனை ஏழைமைக்கு இடையில் இந் நாட்டு மக்கள் தாம் பெற்றிராத பெரிய வாய்ப்பினை நமக்கு அளிக்கின்றுர் என்பதனை மாணவர் உணர்ந்திடின்—அவர் உணர்வர்—அவர்களுடைய பொறுப்புணர்ச்சி மிகுந்திடும், ஏற்புடைய செயலில் ஈடுபடுவதே, இத்தனை தந்திடும் ஏழையர்க்கு நாம் காட்டும் நன்றியறிதல் என்று அறிவர்; அஃது மாணவர் உலகில் புதியதோர் திருப்பத்தைத் தந்திடும். கனவு காண்கின்றேனு? இல்லை; மாணவர் நினைப்பு அறிந்து கூறுகின்றேன். எதிர்காலம் அவர்களுடையது. அதனை இருளற்றதாக்கிடுவது அவர் பொறுப்பு. அதற்கான ஆற்றல் மிக்கார் அவர்கள். இஃது எனது நம்பிக்கை. ஒவ்வொரு நாட்டிலும், சிறப்பு மிக்க கட்டங்களில், மாணவர்கள் முன்னணியில் நின்று பணிபுரிந்தனர் என்பதனை வரலாறு காட்டுகின்றது. இன்று மாணவர்களாக நீவிர் இருந்திடும் காலம், நமது நாட்டின் புதிய வரலாறு எழுதப்படும் காலமாகும்.

கடினமாக உழைத்தால் மட்டுமே வெற்றி தரக்கூடிய இலட்சியங்கள் நம்முன் நிற்கின்றன. ஆனல், அதே வரிசையில், வசீகரப் பூச்சுக்களுடன், மயக்கமூட்டத்தக்க பேச்சுக்களையும், குறிக்கோள் என்ற பெயரால் நிற்கவிடுகின்றனர். தெளிந்து அறிதல் வேண்டும்.

நாட்டிலே ஒற்றுமை வேண்டும்—இது குறிக்கோள்—அனைவரும் ஏற்கத்தக்கது; இதன் வெற்றிக்காக அரும்பணியாற்றுவது மாணவர் கடன்.

---

## அரசு ஊழியர்களுக்கு நகர ஈட்டுப்படி

மாதம் ரூ. 500-க்கு மேற்படாத மாதச் சம்பளம் வாங்கும், சென்னை நகர எல்லைக்குள் இருக்கும் ஊழியர்களுக்கு நகர ஈட்டுப்படி வழங்கத் தமிழக அரசு தீர்மானித்துள்ளது. நகர ஈட்டுப்படி விவரங்கள் வருமாறு:

| சம்பளப் பிரிவினர் | படி விகிதம் |
|---|---|
| ரூ. 150-க்குக் கீழே | சம்பளத்தில் 10 சதவிகிதம். இது குறைந்தபட்சம் 7·50 ரூபாயாகவும், அதிகபட்சம் 12·50 ரூபாயாகவும் இருக்கும். |
| ரூ. 150-ம் அதற்கு மேலும், ஆனல் ரூ. 500-க்கு அதிகப்படாதது. | சம்பளத்தில் 8 சதவிகிதம். இது குறைந்தபட்சம் 12·50 ரூபாயாக இருக்கும். |

ரூ. 501-க்கும் ரூ. 530-க்கும் இடைப்பட்ட சம்பளக்காரர்கள் விஷயத்தில் சரிக்கட்டுதல் இருக்கும். 1967 அக்டோபர் மாதத்திற்குரிய சம்பளத்திலிருந்து, சென்னை நகர எல்லைக்குள் இருக்கும் தமிழக அரசு ஊழியர் அனைவருக்கும் இந்த நகர ஈட்டுப்படி அமலுக்கு வருகிறது.

இவ்வாறு நகர ஈட்டுப்படி வழங்குவதால், ஒரு முழு ஆண்டில் அரசுக்கு ரூ. 65 லட்சம் செலவாகும். நடைமுதல் நிதியாண்டில் எஞ்சியுள்ள காலத்திற்கு சுமார் ரூ. 25 லட்சம் செலவாகும்.

---





நாட்டின் ஒற்றுமைக்காக—உன் மொழி, உன் மரபு அழிந்திடவும் ஒருப்படவேண்டும்; பிற மொழியின் ஆதிக்கத்தை ஒப்புக்கொள்ளவேண்டும்—இஃது அறிவுள்ள எவரும் ஏற்க முடியாதது, தன்மானமுள்ள எவரும் எதிர்த்தாக வேண்டியது—இதனை இலட்சியம் என்றோ திட்டமென்றோ கூறுவது, இலட்சியம் என்பதற்கே களங்கம் தேடுவதாக முடியும்.

நாட்டுப் பொதுச் செல்வம் நாளும் வளர வேண்டும்; அதற்கான முறையில் அனைவரும் உழைத்திடவேண்டும்—இஃது எல்லோரும் ஒப்புக்கொள்ளத்தக்க இலட்சியம்—நாட்டுச் செல்வம் பெருகட்டும், அது நாலாறு பேர்களிடம் சென்று சிக்கிக் கிடப்பினும் கவலை வேண்டாம் என்றுரைப்பது, இலட்சியமாகாது—அதனைக் கேலிக்கூத்தாக்குவதாகும்.

கூடி வாழ்ந்தால் கோடி இன்பம்—இனிய எளிய இலட்சியம்.

கூடி வாழ்வோம், உன்னிடம் உள்ளது எனக்கு, என்னிடம் உள்ளதும் எனக்கு—என்று முறை வகுத்திடல், கூடி வாழ்வதாகாது. ஆட்டுக்குட்டியைத் தின்றுவிட்ட ஓநாய், 'என்னோடு ஒன்றுக ஆடு இணைந்துவிட்டது, நாங்கள் இணைபிரியாச் சோதரர் ஆகிவிட்டோம்' என்று கூறுவதுபோன்ற முறையில் 'ஒற்றுமை' வேண்டுவோர் நடந்திடக் கூடாது என்பதனை அறிவுறுத்த வேண்டும்.

பட்டம் பெற்றோரே, உமது தெளிவுரை கிடைத்து மக்கள் இதுபோன்ற விளக்கம் பெற்றிட வேண்டுமென விழைகின்றேன்.

அறியாமை, வறுமை ஆகியவற்றினை ஓட்டிடும் ஆற்றல்படை திரட்டிடப் பல்கலைக் கழகம் ஏற்ற இடம் என்பதனுல் இவற்றினை விரித்துரைத்தேன்.

## மொழிப் பிரச்னையில் தெளிந்த சிந்தனை

பயிற்றுமொழி, பாடமொழி, ஆட்சிமொழி, இணைப்புமொழி என்ற சொற்றொடர்கள் வேகமாக உலவிடக் காண்கின்றோம்.

'தாய்மொழி' என்னும் தகுதிக்கு ஈடாக, வேறு எந்தத் தகுதியையும் ஒரு மொழி பெற்றிடத் தேவையில்லை. ஆயினும் நமது தமிழ்மொழி, நமது தாய்மொழி என்பதால் மட்டுமன்று, வளமிக்கது என்பதாலும் எவரும் வியந்து பாராட்டத்தக்கதாகிறது. அந்த வளம் கெடாமலும், மேலும் வளரவுமான செயல்களைச் செம்மையாக்கித் தருவது உமது கடமையாகும். தமிழ், ஆட்சிமொழியாக எல்லாத் துறைகளிலும் திகழ்வதற்கான சூழ்நிலையை உருவாக்குவதில் வெற்றி பெற்றிட உமது நல்லார்வம் நிரம்பத் தேவை.

உலகுடன் ஒட்டி வாழ்ந்திட, உலகின் அறிவுக் களஞ்சியத்தின் துணைபெற, ஆங்கில மொழியறிவு இன்றியமையாததாகிறது.

இந்தியாவின் பல பகுதிகளுக்கு இணைப்பு மொழியாகவும், இந்தியாவுக்கும் வெளிநாடுகளுக்கும் இணைப்பு மொழியாகவும் ஆங்கிலம் இருந்திடட்டும் என்பதனை, நாட்டுப்பற்று அற்ற தன்மை என்றும், தேசியத் தன்மானம் அற்ற நிலை என்றும் கூறுவார் உள்ர். கூறுவார் என்று மட்டுமே குறிப்பிட்டேன்; கருதுவார் என்று கூறவில்லை, காரணத்தோடு.

ஆங்கிலம், முன்பு ஆதிக்கம் செலுத்தியவரின் மொழி என்பதாலே, அதனை இணைப்பு மொழியாகக் கொள்வது தேசியத் தன்மானமற்றது என்று கூறுபவர், அந்த ஆங்கில நாட்டுப் பணத்தைக் கடனுகவும் இனுமாகவும் பெற்றுத் தொழில் வளர்த்திட முனைவதை, தேசியத் தன்மானத்தைக் கெடுப்பது என்று கூறிடக் காணேம். தொழில் நுட்ப அறிவு பெற்றிட ஆங்கிலேயரின் துணை தேடும்போது இந்தப் பேச்சு எழக்காணேம். மொழிபற்றி மட்டுந்தான் இப் பேச்சுப் பேசுகின்றனர். எனவேதான் அவர்கட்கு ஆங்கிலம் கூடாது என்ற கருத்து இல்லை; கூறமட்டும் செய்கிறுர்கள் என்றுரைத்தேன்.

ஆங்கிலம் கூடாது என்று கூறுவதுடன், இந்தியே இணைப்புக்கு ஏற்ற மொழியென்று அவர்கள் வலியுறுத்தும்போது, கூறுபவரின் உண்மை நினைப்பும் வடிவமும் நன்ருகத் தெரிகிறது.

இந்தப் போக்கு வெற்றிபெற விடமாட்டோம் என மாணவருலகு உறுதியுடன் நிற்பதனை அறிந்திருக்கிறேன். மொழிப் பற்றின் எடுத்துக்காட்டாகத் திகழும் மாணவர்கட்கு என் பாராட்டுதலைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோது, மொழிப் பிரச்சினையிலே உள்ள சிக்கல்களை, புகுத்தப்பட்டுள்ள சிக்கல்களை, நீக்குவதற்கான முயற்சிகளை, மொழிப் பற்றிலே முழு நம்பிக்கை கொண்டுள்ள தமிழக அரசிடம் ஒப்படைக்கவேண்டும், நம்பிக்கையுடன், என்று கேட்டுக்கொள்கின்றேன்.

## பாசறைப் பருவம் என்ற உணர்வு

பல்கலைக் கழகத்தில் பயிலுங்காலை, வாழ்க்கையின் நீண்ட பெரும் பயணத்திலே, இது பாசறைப் பருவம் என்ற உணர்வுடன் இருந்திடுவதே முறையாகும்.

பட்டம் பெற்றிடும் நண்பர்களே! உம்மிடம் நாடு நிரம்ப எதிர்பார்த்தவண்ணம் இருப்பதனை அறிந்து, அதற்கேற்ப உமது செயல் முறைகளை வகுத்துக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

இம் மாமதுரையினின்றும் புறப்பட்ட படைகள், மாநிலம் மெச்சிடும் வெற்றிகளை, முடிமன்னர் நாட்களிலே பெற்றளித்தன என்று வரலாறு கூறுகிறது.

இன்று புறப்படும் படை அறிவுப் படை; இப் பல்கலைக் கழகத்தினின்றும் அமைந்து வெளிக் கிளம்பும் முதற் படை; இதனை வாழ்த்தி, வரவேற்று, பாராட்டி, சென்று வருக, வென்று வருக என்று கூறிடும் வாய்ப்பு எனக்குக் கிடைத்ததில் நான் உள்ளபடி பெருமிதம் கொள்கிறேன்.

தமிழ் உமது முரசு ஆகட்டும்; பண்பாடு உமது கவசமாகட்டும்; அறிவு உமது படைக்கலனுகட்டும்; அறநெறி உமது வழித்துணையாகட்டும்.

உறுதியுடன் செல்வீர்; ஊக்கமுடன் பணிபுரிவீர்; ஏற்றமிகு வெற்றியினை ஈட்டிடுவீர்; பாட்டு மொழியுடைய நமது தாயகம் வாழ, தரணிக்குத் துணை நின்றிடும் தகுதிபெற, சென்றிடுவீர்! வென்றிடுவீர்!

# புதுவாழ்வு கண்ட பழங்குடி மக்கள்

குவாலியரிலுள்ள கோதம் என்ற கிராமத்தில் 42 குடும்பங்களே இருக்கின்றன. அவர்கள் எல்லோரும் "ஜடாவாஸ்" என்ற சாதியைச் சார்ந்தவர்கள். அவர்கள் காலணிகள் தயாரிக்கும் தொழிலையே பரம்பரையாக செய்து வருபவர்கள். விவசாயிகளின் காலணிகளை பழுது பார்ப்பதும், அவர்களது நீர்ப்பாய்ச்சும் தோற் பைகளைத் தயாரிப்பதுமே அவர்களது வழக்கம். ஆனால் சமூகத்தில் அவர்களுக்கு எவ்வித மதிப்போ, கௌரவமோ இருந்ததே இல்லை. நிலச் சொந்தக்காரர்களெல்லோரும் இவர்களை அச்சுறுத்தி, உழைப்பைப் பெற்று வந்தனர்.

இந்த அவல நிலைமையிலிருந்து தங்களை விடுவித்துக்கொள்ளவேண்டுமென்ற எண்ணம் அவர்களிடையே அவ்வப்போது துளிர்ப்பதுண்டு. இறுதியில் அவர்கள் ஒன்றுபட்டு தங்கள் சாதியினரை ஒன்று சேர்த்து, ஓர் ஊராட்சியை ஏற்படுத்தினர். அவ்வூராட்சியின் அலுவலகத்தை தங்களது கிராமத்தின் மத்தியிலே அமைத்துக் கொண்டனர். தங்கள் ஊராட்சியின் முதற் பணியாக பரம்பரைத் தொழிலை கைவிட்டு, வேறு தொழில்களில் ஈடுபட்டு, செல்வ நிலையை உயர்த்திக்கொள்ள எண்ணினர். அரசின் பல்வேறு திட்டங்களும், வேலைவாய்ப்புகளும் அவர்களுக்கு பெரிதும் துணைபுரிந்தன.

### உயர்ந்த வருவாய்

கட்டிட வேலைக்கு அப்பகுதியில் நல்ல வாய்ப்பிருந்தது. எனவே அதில் இவர்களெல்லோரும் ஈடுபட்டு திறமுடன் வேலை செய்ததில், சிறிது காலத்திலேயே நல்ல கொத்தனார்களாகிவிட்டார்கள். இப்போது அவர்களில் எவரும் தங்கள் பரம்பரைத் தொழிலைச் செய்வதில்லை. அங்குள்ள 76 பேர்களில் 37 பேர்கள் கொத்தனார்களாகவும், 10 பேர்கள் அவர்களுக்கு உதவியாளர்களாகவும் 8 பேர்கள் கட்டிட காண்டிராக்டர்களாகவும் தொழில் செய்கிறார்கள். எஞ்சிய 21 பேர்களில் நால்வர் பொதுப் பணியிலும் ஈடுபட்டுள்ளார்கள். மற்றவர்கள் ஆலையில் தொழிலாளர்கள்.

இவ்வாறு அவர்களெல்லோரும் பல தொழில்களில் ஈடுபட்டுள்ளதால், அவர்களின் வருவாயும் உயர்ந்து வருகிறது. ஒரு குடும்பத்தின் சராசரி வருவாய் தற்போது ரூ. 200.

உயர்ந்த வருவாய் வாழ்க்கையில் ஒரு திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது. 18 வயதுள்ள சிறுவர்களில் 63 சதவீதத்தினர் பள்ளிக்குச் செல்கின்றனர். இவர்களில் பத்து சதவீத சிறுவர்கள் நடுத்தரப் பள்ளியில் படிக்கின்றனர். முன்பெல்லாம் 12 வயதிலேயே திருமணம் நடந்து விடுவதுண்டு. ஆனால் இப்போது அந்த வயதில் 8 பேர்களுக்கு மட்டுமே திருமணம் நடந்துள்ளது. வீடுகளை நல்ல முறையில் அமைத்துக்கொண்டுள்ளனர்.

### சச்சரவுகளே கிடையாது

42 குடும்பங்களில் சைக்கிள்கள் இருக்கின்றன. மேஜை, நாற்காலிகள் பெரும்பாலான வீடுகளில் காணப்படுகின்றன. 42 குடும்பங்களில் 3 குடும்பத்தினரிடம் தையல் இயந்திரம் இருக்கிறது. பத்து குடும்பங்களில் 6 ரேடியோக்கள் 2 டிரான்சிஸ்டர்கள், 4 ஒலிபெருக்கிகள், 2 மின் விசிறிகள் இருக்கின்றன.

ஊராட்சி அமைக்கப்பட்டபின், அவர்களது கிராமத்திற்கு காவலர்களே வந்தது கிடையாது. ஊரில் ஏதேனும் சச்சரவுகள் ஏற்படின், அவை முளையிலேயே கிள்ளி எறியப்படுகின்றன.

இவ்வாறாக பல்வேறு துறைகளிலும் கோதம் கிராமம் வளர்ச்சியடைந்து வருகிறது. இக்கிராமத்தின் அன்றைய நிலைக்கும், இன்றைய வளர்ச்சிக்கும் இடையில் அதிக உழைப்பும், ஆர்வமும் மலிந்துள்ளன.



# இறுதி வெற்றி

இன்று நாட்டை எதிர்நோக்கியுள்ள மிகப் பெரிய பிரச்னைகளில் உணவுப் பற்றுக்குறை பிரச்னையும் ஒன்றாகும். உணவு உற்பத்தியைப் பெருக்கும் எந்த முயற்சியும் விரும்பி, வரவேற்கப்பட வேண்டியதாகும். அறிவியலைத் துணைக் கொண்டு அதிக உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதற்கு விவசாய, மண்வள மற்றும் தாவர இயல் வல்லுநர்கள் ஒருபுறமும், தீவிர விவசாயிகள் மற்றொரு புறமும் ஆவலோடு முனைந்திருக்கின்றனர்.

ஹரியானா மாநிலத்தின் 'ரோடக்' என்ற மாவட்டத்திலுள்ள திரு புரான்லால் பத்ரா என்ற தீவிர விவசாயி, 1965–66-ம் ஆண்டு, முன்னாள் பஞ்சாப் மாநில அளவில் நடந்த போட்டியில், ஓர் ஏக்கரில் 33 குவிண்டால் கோதுமையும் (மெக்சிகன் சோனுரா 64 என்ற வகை) விளைவித்து ரூபாய் 3000-ஐ முதல் பரிசாகப் பெற்றார். அதே ஆண்டில் விவசாயப் பின் பருவத்தில், அதே ஓர் ஏக்கரில் 28.52 குவிண்டால் 'ஒட்டு பாஸ்ரா' விளைவித்து விவசாய பல்கலைக் கழகத்தின் பாராட்டுதலைப் பெற்றதோடு நாட்டின் விவசாய வரலாற்றில் ஒரு புதிய அத்தியாயத்தை ஏற்படுத்தினார். இந்த வெற்றிகளோடன்றி, மீண்டும் அதே நிலத்தில் பி. வி. 18 ரக கோதுமை, 42 குவிண்டால் விளைவித்ததால், மீண்டும் அனைத்திந்திய அளவில், எல்லா மாநிலமும் பங்குபெறும் போட்டியில் வெற்றிபெற்றுவிட முடியும் என்று அந்த விவசாயி திண்ணமாக நம்புகிறார்.

### மேல்நாட்டு விவசாயியுடன் போட்டி.

அவர், ஒரே ஆண்டில் 165 மணங்கு உணவு தானியங்களை இரண்டு சாகுபடிகளில் ஏற்கனவே விளைவித்திருக்கிறார். மூன்றாவது சாகுபடியாக, குறுகிய காலத்தில் பலன் கொடுக்கும 'சாத்தி' என்ற சோளத்தை அதே நிலத்தில் ஓர் ஆண்டில் விளைவிப்பதற்கு அவர் இப்பொழுது பரிசோதனையில் இறங்கி இருக்கிறார். இந்திய விவசாயிகள் மேல்நாட்டு விவசாயிகளோடு போட்டியிடமுடியும்என்ற நம்பிக்கையை இவர் நிரூபித்துக் காண்பித்திருக்கிறார்.

விவசாயப் பல்கலைக் கழக ஊழியர்களுடன் திரு பத்ரா நெருங்கிய தொடர்பு கொண்டிருப்பதால் அவருக்கு நல்ல யோசனைகளும் வழிமுறைகளும் சரியான சமயத்தில் கிடைக்கின்றன.

திரு புரான்லால் பத்ரா ஒரு மத்திய தர வகுப்பை சேர்ந்தவர். அறிவாற்றுள்ள, எதையும் விரைவில் உணர்ந்து செயலாற்றக்கூடிய திறமையுடன், நல்ல பழக்கங்களை யுடையவர். விவசாயப் பண்ணையை அபிவிருத்தி செய்வதில் இவர், தன் ஆரம்பக் காலத்தில் தோல்வியே கண்டார். பஞ்சாப் மாநிலம் இரண்டாகப் பிரிந்தபோது அவருடைய நிலம் 'ரோடக்' மாவட்டத்தோடு சேர்ந்து விட்டது. அந்த இடம் ஒரு மணல் மேடானதாகவும் தரிசு நிலமாகவும் இருந்தது. அந்த நிலத்தைச் சமப்படுத்த மூன்று ஆண்டுகள் ஆகியும், நீர்ப்பாசனம் போதுமானதாக இல்லாததால், விளைச்சல் தரவில்லை. இதனால் அவருக்கும், அவரது குடும்பத்தினருக்கும் சாகுபடியில் ஏமாற்றமே ஏற்பட்டது. எனவே இந்தத் தொழிலை விட்டுவிட்டு மோட்டார் உபரி பாகங்கள் தயாரிப்பதிலும் அவற்றை விற்பனை செய்வதிலும் அவர்கள் ஈடுபட்டனர். இந்த வேலையில் பத்து ஆண்டுகள் இருந்ததினால், தொழில்துறை வளர்ச்சியில் தம்மால் போட்டியிட முடியாது என்பது, 1963-ஆம் ஆண்டு அவருக்கு ஏற்பட்ட பல தொல்லைகளிலிருந்து தெரிந்து கொண்டார் தொழில்கள் விவசாயத் தொழில்தான் சிறந்த ஏற்றமுடைய ஒரே தொழில் என்பதை இறுதியில் தன் வெற்றியென அறிந்து கொண்டார். அதற்கேற்ப இருமடங்கு உற்சாகத்துடனும் தீர்மானத்துடனும் வயலில் இறங்கி வேலை செய்து தன் நிலத்தில் இருந்து தங்கத்திற்கொப்பான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்று அவர் கருதினார். விவசாய வளர்ச்சித் துறை அலுவலர்கள் உதவியும், தன்னுடைய பரம்பரை விவசாய அறிவும் மற்றும் அவர் தெரிந்துவைத்திருந்த நவீன முறைகளும் அவருக்கு விவசாயத்தில் புது உற்சாகம் ஏற்படச் செய்தன.

திரு புரன்லால், தம் குடும்பத்திற்குச்சொந்தமான 100 எக்கர் நிலத்தை தன் சகோதரர்களோடும் ஒன்றுவிட்ட சகோதரர்களோடும் பிரிவினை செய்து கொண்டார். ஒரு பாகத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்து ஒவ்வொரு 15 ஏக்கரிலும் காய்கறி பயிரிடுவதற்காக மூன்று குழாய்க் கிணறுகளைத் தோண்டினார். மீதியுள்ள 55 ஏக்கரில் கால்வாய் நீரைப் பாசனத்திற்கு பயன்படுத்தி சாகுபடி செய்தார். அவருடைய நாற்பது ஏக்கர் நிலத்தில் உருளைக்கிழங்கு பயிருக்கு, திராட்சைப் பயிரினால் சூரிய வெளிச்சம் தடைப்படாமல் இருக்கும்படி. திராட்சைப் பயிரை செங்குத்தாக வளரும்படி சாகுபடி செய்து தன்னுடைய நிலத்தை ஒரு 'மாதிரி பண்ணை'யாகச் செய்திருக்கிறார்.

திரு புரான்லால் பத்ரா ஏற்படுத்திய சாதனையை மற்ற உழவர்களும், பின்பற்றி முறைப்படி சாகுபடி செய்து நாட்டை உணவில் தன்னிறைவு ஏற்படச் செய்வார்கள் என்று நம்பலாம்.

## இருளிலே ஒளி . . .

"தியா" என்னும் இராமம் பஞ்சாப் மாநிலத்திலுள்ள ஹிஸாரிலிருந்து 16 மைல் தொலைவில் உள்ளது. அங்கு வாழும் மக்கள், வழக்கு விசாரணைக்காக நீதிமன்றத்திற்குச் சென்றதேயில்லை.

அக்கிராமத்தில், மதுவிலக்குச் சட்டம் அமுலில் இருக்கிறது. 95 சதவீத மக்கள் மது அருந்துவதை விரும்புவதில்லை. எஞ்சியுள்ளவர், மது அருந்துதற்குப் பண வசதி இல்லாதவர்கள். சமூகக் கட்டுப்பாட்டின் மூலம் மதுவிலக்கு கொண்டுவரப்பட்டது.

### தன்னலமற்ற சேவை

செல்வி சத்யபால தயாளு என்னும் பெண்மணியால்தான், அக்கிராமம் வெளியுலகுக்கு நன்கு தெரிய வந்தது. அப்பெண்மணி, ஹிஸாரிலேயே செல்வந்தராக விளங்கிய திரு ஜெய்தேவ் தயாளு என்னும், நிலக்கிழாருடைய மகள். அப்பெண்மணி, சர்வோதயத்தைப் பின்பற்றித் தன் பெற்ரோரைப் பூதான இயக்கத்திற்கு 200 பீகாக்கள் நிலத்தைத் தானமாக அளிக்கச் செய்தார். கால்நடைகள் அசுத்தம் செய்யாமலிருக்கக் கிராமக் குளத்தைக் கான்க்கிரீட்டால் கட்டிய முதல்வரும் இவரே. அக்குளத்து நீர் இப்பொழுது குளிப்பதற்கும் துணிகளைத் துவைப்பதற்கும் பயன்படுத்தப்படுகிறது. மற்றொரு குளமும், கிணற்று நீரைச் சேமித்து வைப்பதற்காகக் கட்டப்பட்டுள்ளது. கிணற்றிலிருந்து தான் குடி நீர் கிடைக்கிறது. அது சுவையாகவும் இருக்கிறது.

பெண்கள் மறுமலர்ச்சிக்காக, இக்கிராமத்தில் முதன் முதல் கொடி உயர்த்தியவர் இப்பெண்மணியே. இதற்கு முன்னர், கிராம ஊராட்சியில் பெண்களுக்கு இடமில்லை. அவர் இதை நீக்கி, பெண்களும் கிராம முன்னேற்றத்திற்காக ஆண்களோடு கலந்து கொள்ளச் செய்தார். இருளிலே ஒளியை ஏற்றிவைத்தார்.

1949-ம் ஆண்டு, அக்கிராமத்தில் செல்வி சத்யபால தயாளு ஆசிரமம் ஒன்று அமைத்தார். தொடக்கத்தில், குழந்தைகள் சிலரே அவரிடம் கல்வி பயின்றனர். பின்னர் மாணவர்கள் தொகை பெருகிவிட்டது. அவ்வாசிரமத்தில், ஆரம்பக் கல்வியோடு, வயதானவர்களும் மத்திய தரக் கல்வி கற்கக் குறுகிய காலத்திட்டம் ஒன்று உருவாக்கப்பட்டது. ஆரம்ப வகுப்புகளுக்கு "மாண்டிசோரி" முறையில் கல்வி கற்பிக்கப்பட்டது. 12 மாணவர்கள், குறுகிய காலக் கல்வித் திட்டத்தில், பயிற்சி பெற்ற ஆசிரியரிடம் கல்வி பயின்றனர். அக்கிராமம் நடுவில் அமைந்திருப்பதால் சுற்றியுள்ள 20 கிராமங்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய முடிகிறது. பெண்களுக்கென்று தனியே விடுதியும் இருக்கிறது. அதில் அறுவர் வசிக்கின்றனர்.

அந்த ஆசிரமத்தில் குழந்தைகள் இல்லம் இருக்கிறது. பெற்றோர்கள் தங்கள் வேலைக்காகப் பகலில் வெளியே சென்றிருக்கும் பொழுது, தங்கள் குழந்தைகளை அங்கு விட்டுச் செல்கின்றனர். மீண்டும் மாலையில் அங்குச்சென்று குழந்தைகளை அழைத்துப போகின்றனர். இரண்டு வயது முதல் நான்கு வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்குத் தனி அறை கட்டப்பட்டிருக்கிறது. சிறு குழந்தைகளை ஓர் அறையில தொட்டிலிலிட்டிருப்பார்கள்.

அந்த ஆசிரமத்தின் ஆதரவில் ஒரு சிறிய மருத்துவ நிலையமும் இருக்கிறது. ஆயுர்வேத மருத்துவத் துறையில் 4 ஆண்டுகள் பயின்று தேர்ச்சி பெற்ற ஒருவரின் மேற்பார்வையில் அம்மருத்துவ நிலையம் நடத்தப் படுகின்றது. அவர், சதாரண ஜுரத்திலிருந்து மகப்பேறு வரை எல்லாவற்றையும் கவனித்து, வைத்திய உதவி செய்கிறார். 6,034 நோயாளிகள் மருந்து பெற்றுக் கொண்டும், 39 நோயாளிகள் மருத்துவமனையிலேயே தங்கியும், 19 மகப்பேறு பெற்றவர்களும் 1966-ம் ஆண்டு, ஏப்ரல் முதல் செப்டம்பர் மாதம் வரை ஆறு மாதங்கள் சிகிச்சை பெற்றனர். அந்த மருத்துவ விடுதியில், 8 படுக்கைகள் இருக்கின்றன. விடுதியிலுள்ள நோயாளிகளுக்கு இலவச உணவு அளிக்கப்படுகின்றது.

### ஆர்வமுள்ள கிராமவாசிகள்

அந்த ஆசிரமத்தின் ஓராண்டுச் செலவு ரூ. 22,000 காந்தி சமாரக நிதி, செஞ்சிலுவைச் சங்கம், சமூக நல ஆயம், கதர் ஆயம், சமூக நலத்துறை ஆகியவற்றிலிருந்து கிடைக்கும் நிதியே, இவ்வாசிரமத்தின் வருமானம் ஆகும்.

இந்தக் கிராமம், பக்ரா கால்வாயின் முடிவில் இருப்பதால், நீர் வசதி இருக்கிறது. இயற்கையையே எதிர்பார்த்து நிற்க வேண்டிய இக்கிராமத்தில் விவசாய உற்பத்தி பெருக வழி இல்லை. பஞ்சம் இம்மக்களை வாட்டுகிறது. பாதை கரடுமுரடாக இருக்கிறது. கிராமத்தில் மின்வசதியும் இல்லை.

இவ்வளவு கஷ்டங்களுக்கிடையில் கிராம மக்கள் பல வழியிலும் முயன்று திட்டமிட்டுக் கிராமத்தை முன்னேறச் செய்துள்ளனர். சுகாதாரம், கல்வி, தொழில் துறையில் அவர்கள் பெரிதும் உழைத்துள்ளனர். அவர்களுடைய இந்த ஆர்வத்தினால், தங்கள் கிராமம் நல்ல சாலைகளும், மின்வசதியும் பெறும் நாள் அதிக தொலைவில் இல்லை என்று கூறுவதில் தவறில்லை.



# முன்னேற்றப் பணிகளில் மக்கள் ஆர்வம் தழைக்கச் செய்ய . . .

திரு ஜகஜீவன் ராம்
மத்திய உணவு அமைச்சர்

'சமுதாய வளர்ச்சிப் பணிகளில் மக்கள் பங்கு கொள்வது என்பது, ஒரு குறிப்பிட்ட பணிக்காக அவர்கள் ஓரளவு பணமோ, பொருளோ, உழைப்போ தருவது மட்டுமல்ல. சமுதாய வளர்ச்சி சம்பந்தப்பட்ட அனைத்தும் தங்கள் பொறுப்பே என்பதையும், இதில் அரசாங்கத்தின் பங்கு அவசியமான உதவியை மட்டும் தந்து துணை புரிவதுதான் என்பதையும் மக்கள் முற்றும் உணர வேண்டும். அப்போதுதான் மக்கள் ஈடுபாடு என்பது முழுமையாக முகிழ்க்க முடியும்' என்ற மிகச் சரியான கருத்தினை, (சமுதாய வளர்ச்சித் திட்டச் செயல்பாடு பற்றி ஆய்வு செய்த) பல்வந்தாராய் மேதா குழு வலியுறுத்தியிருக்கிறது.

### நடைமுறையில் நடப்பதென்ன ?

நடைமுறையில், இன்று, மக்கள் ஈடுபாடு என்பது எந்த அளவுக்கு இருக்கிறது ?

ஊராட்சி முறை கொண்டுவரப்பட்டதன் பயனாக, சில இடங்களில் புதிய தலைமை உருவாகி நல்ல பலன் விளைவித்திருக்கிறது ; மக்களிடையே முன்னேற்ற ஆர்வம் தோன்றியிருக்கிறது. எனினும் வேறு சில இடங்களில் காணப்படுவது என்ன ? பலகாலமாக கிராமங்களில் இருந்து வரும் சுயநல சக்திகள் மேலும் பலமாக வேரூன்ற, இந்த ஊராட்சி மன்றங்களும் ஒரு கருவியாகப் பயன்படுத்தப்படுகின்றன. இன்னும் சில இடங்களில் செல்வாக்கு இல்லாத, பலவீனமான மக்களைச் சுரண்டுவதற்கும், அடக்கி ஒடுக்குவதற்கும் பயன்படுத்தப்படுகிறது.

### தெரிந்த காரணங்களே

சமுதாய வளர்ச்சியில், மக்கள் உரிய அளவில் பங்கு கொள்ளாததற்குக் காரணங்கள் தெரியாதவை அல்ல. முதலாவதாக, நமது வளர்ச்சிப் பணி அலுவலர்கள் எல்லாம், கிராம மக்களின் நம்பிக்கையை, பற்றுதலைப் பெறும் அளவுக்குத் தகுதியும் திறமையும் உள்ளவர்கள் எனச் சொல்வதற்கில்லை. இத்தகைய அலுவல்களுக்கான ஊழியர்களைத் தெரிந்தெடுக்கும்போது, அலுவலர்களுக்கு இந்தப் பணிகளில் போதிய ஆர்வம், நாட்டம், திறமை இருக்கின்றதா என்பதைச் சரிவரக் கவனிக்கவில்லை. கல்வித்தகுதி, பெரிய இடத்துச் சிபாரிசு ஆகியவற்றைக் கொண்டு, தேர்வு நடைபெற்றது.

### சில குறைபாடுகள்

ஊழியர்களின் தகுதி, தரம் ஒருபுறமிருக்க, சமுதாய வளர்ச்சியின் கீழ் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள் சில, குறைந்த அளவு மக்கள் ஈடுபாட்டைப் பெறக் கூடியனவாகவே அமைந்தன, உதாரணமாக, வேளாண்மை, சிறுபாசனம், கிராமத் தொழில்கள் சம்பந்தமாக அரசு தரும் வசதிகளைப் பெற விரும்புவோர், போதுமான சொத்து ஈடு பொறுப்பு காட்டவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது. எனவே இந்த வசதி, பெரும்பாலான கிராம மக்களுக்குக் கிடைக்க வழியில்லாமல் போயிற்று. பெரிய நிலச்சுவான்தார்களும், செல்வாக்கு பெற்றவர்களுந்தான் பலன் அடைந்தனர். அண்மைக் காலத்தில் சில மாற்றங்கள் செய்யப்பட்டிருப்பது உண்மையே.

எனினும், மக்கள் ஈடுபாட்டைப் பரவலாக்க அவை எந்த அளவு பயன்படும் என்பது எனக்குத் தெரியவில்லை.

### ஆரம்பத் தவறு

இன்னொரு தவறு, ஆரம்பத்திலேயே நேரிட்டுவிட்டது. கிராம சமுதாயம் என்றால், அந்த சமுதாயத்தைச் சேர்ந்த எல்லா மக்களுக்கும் ஒரே மாதிரியான தேவைகள், நோக்கங்கள் இருக்கும் எனத் தவறாக மதிப்பிடப்பட்டது. ஆனால் உண்மை என்ன? கிராமச் சமுதாயம் முழுவதின் பொதுவான தேவை என, வெளிப் பார்வைக்குத் தோன்றும் ஒன்று, கிராமத்தில் செல்வாக்கும் ஆதிக்கமும் கொண்ட—மற்றவர்களை நெடுங் காலமாக அடக்கி ஒடுக்கிவரும்—மேல்மட்டத்தினருக்கு மட்டுமே உரிய தேவையாக இருக்கும்.

### ஆர்வம் தழைக்க..

மேல் மட்டத்தினருக்கு மட்டும் பயன்தரும் வேலைத் திட்டங்களில், பங்கு கொள்ள மற்ற மக்கள் விரும்பவில்லை. அவர்களுக்கும் பயன்தரும் வகையில் திட்டங்களை வகுத்தால் அவர்கள் மனநிறைவோடு ஈடுபாடு கொள்வார்கள் என்பது திண்ணம். நெடுங்காலமாக ஏழ்மையிலும் அறியாமையிலும் கிடந்துழல்வதால், அதுவே தங்களுக்கு வாய்த்த வாழ்க்கை என்பதாக கிராம மக்கள், ஒரு மந்தநிலையில் இருக்கிறார்கள். அபிவிருத்தி வேலைத் திட்டங்களில் பங்குகொள்ளும் ஆர்வம் அவர்களுக்கு இல்லை என முடிவு கட்டுவது தவறு.

—'குருக்ஷேத்திரா' இதழிலிருந்து.

---

## இயந்திரக் கலப்பைகள், தெளிப்பான்கள் : ஒன்றியங்கள் வாங்குவதற்கு அனுமதி

விவசாய உற்பத்தி வேலைத் திட்டங்களில் சிறப்புத் திட்டங்களுக்காக ரூ. 40,000 நிதி ஒதுக்கீடு இருக்கிறது. இதைக் கொண்டு ஊராட்சி ஒன்றியங்கள் இயந்திரக் கலப்பைகள் (டிராக்டர்கள்), விசைத் தெளிப்பான்களை (Power Sprayers) வாங்குவதற்கு இப்போது அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

ஊராட்சி ஒன்றியங்கள் அதிக அளவாக நான்கு விசைத் தெளிப்பான்களை வாங்கிக் கொள்ளலாம். ஏறகனவே ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட விசைத் தெளிப்பான்கள் ஒன்றியங்களிடமிருப்பினும் கூட, அவை அதிக அளவாக நான்கு விசைத் தெளிப்பான்களை மட்டுமே வாங்கிக் கொள்ளவேண்டும்.

இதுவரை இயந்திரக் கலப்பைகளையே வாங்காத ஊராட்சி ஒன்றியங்கள், ஓர் இயந்திரக் கலப்பையை வாங்குவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது. ஒன்றியங்கள் முன்பே ஓர் இயந்திரக் கலப்பையை வாங்கியிருப்பின், அவை விரும்பினால் மேலும் ஓர் இயந்திரக் கலப்பையை இப்போது வாங்கிக் கொள்ளலாம்.

## பாலூர் ஊராட்சியின் குடி மராமத்து சாதனை

பாலூர் ஊராட்சிக்குட்பட்ட ஏழு கிராமங்களின் 2,700 ஆயக்கட்டில் சுமார் 2,000 ஏக்கர் நவரை பயிர் செய்யப்பட்டிருந்தது. அதில் சுமார் 1,000 ஏக்கர் ஒன்று அல்லது இரண்டு தண்ணீரில் சாவியாகும் நிலையில் இருந்தது. ஏழு ஊர் ஊராட்சி மக்களை ஒன்று திரட்டி சுமார் 50 ஆண்டாய் பாழடைந்து பாலாற்றிலிருந்து வரும் வெள்ளக் கால்வாயை சுமார் 10 நாளில் தினம் 300, 200 ஆட்கள் வீதம் குடி மராமத்தில் ஆற்று வரை வெட்டி முடித்தார்கள். மேற்கொண்டு ஆற்று மணலை விலக்க, அரசின் சிபாரிசு மீது விவசாயத் துறையின் "டோசர்" வந்து 18 நாள் வேலை செய்து கால்வாயை உருவாக்கியது. இதற்காக காட்டாங்கொளத்தூர் ஊராட்சி ஒன்றியம் குடிமராமத்து திட்டத்தின் கீழ் ரூபாய் 4,000-ஐ புல்டோசருக்கு தினம் ரூபாய் 250 வீதம் கொடுத்து உதவியது.

### 28 நாள் கடும் உழைப்பின் பலன்

இந்தச் சாதனை 28 நாளில் கடும் உழைப்பின் மீது கால்வாய் இனி கெடாவண்ணம் உருவாக்கப்பட்டது. 1–5–1967 அன்று கிராம மக்கள், பெரும் விழா கொண்டாடி, காட்டாங்கொளத்தூர் ஒன்றியத் தலைவர், ஆணையாளர், ஒன்றிய பொறியாளர், செங்கை தாலுகா தாசில்தார், இவர்கள் சூழ, தலைவர் திரு பா. சா. கணபதி அவர்கள் தண்ணீரை திறந்து வைத்தார். திரளான மக்கள் சூழ 50 ஆண்டிற்கு பிறகு கால்வாயில் தண்ணீர் போவதைக் கண்டு களித்து ஆனந்தம் அடைந்தார்கள்.

அன்று தலைவர் திரு பா. சா. கணபதி அவர்கள் சுமார் 500 பேருக்கு மேல் பகல் உணவு அளித்தார். வருகைதந்த அதிகாரிகள் சாதனையைப் புகழ்ந்தார்கள். செங்கை கோட்ட ஆட்சித் தலைவர் திரு ஆர். வரதராசன் அவர்கள் மக்களின் சாதனையைப் பாராட்டி, மாவட்டம் முழுவதற்கும் இந்த சாதனை வழி காட்டியாக அமையட்டும் என்று வாழ்த்து கூறினார். பழைய சீவரம் அருகில் பாலாற்றில் கட்டும் குறுக்குப் பாதையால் கால்வாயின் வழியை அடைத்து விட்டதால் போதுமான தண்ணீர் வரவில்லை. என்றாலும், ஓடையின் தண்ணீர் ஏரிக்கு வந்து விழுந்துகொண்டு இருக்கிறது. இதனால் சுமார் 2,500 ஏக்கர் இரு போகத்திற்கு தண்ணீர் குறைவில்லை என்று மக்கள் சந்தோஷமாய் கூறுகின்றனர்.



கிராம நலம் பகுதி—2
GRAMANALAM PART—2

# ஊராட்சி அரசிதழ்
## PANCHAYAT GAZETTE

(இந்தப் பகுதியில் ஊராட்சி, ஊராட்சி வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய அரசு ஆணைகள், குறிப்பாணைகள், விதிகள் முதலியவற்றின் தமிழாக்கம் சுருக்கமாக இந்தப் பகுதியில் இடம் பெறுகிறது.)

—o—

## ஊராட்சி வானொலி பராமரிப்பு நிறுவனம்—பயன் தகுதி இழந்ததென்று கழிக்கப்பட்ட, திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்ட வானொலிப் பெட்டிகள்—ஆணைகள்—பிறப்பிக்கப்படுகின்றன

## Panchayat Radio Maintenance Organisation—Condemned and withdrawn Radio Receivers Disposal of—Orders—Issued.

ஊராட்சிகளிடமிருந்து பல்வேறு காரணங்களுக்காக, ஊராட்சி வானொலி பராமரிப்பு நிறுவனத்தால், திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்ட, திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டுவரும், வானொலிப் பெட்டிகளின் பேரில் ஊராட்சிகள் முடிவு எடுக்காமலிருப்பதுடன், அவை ஊராட்சிகளிடமாவது, அல்லது பழுதுபார்க்கும் நிலையங்களிலாவது வைக்கப்பட்டுள்ளன என்று கிராம வளர்ச்சி இயக்குநர் கூறியுள்ளார். வானொலிப் பெட்டிகளை இவ்வாறு வைத்திருப்பதால், இடப் பிரச்னை ஏற்படுவதுடன், அவற்றை பத்திரமாக பாதுகாக்கவும் வேண்டியுள்ளது. இவற்றுடன், அவற்றிற்கு அஞ்சல் துறையினரிடமிருந்து 'உரிமம்' (Licence) பெற வேண்டிய பிரச்னைகளும் ஏற்படுகின்றன. திரும்பப்பெற்றுக்கொள்ளப்பட்ட வானொலிப் பெட்டிகள், 'பைசல்' செய்யப்படும் வரை, அவற்றிற்குரிய உரிமங்கள் ஒவ்வோராண்டும் புதுப்பிக்கப்படவேண்டியுள்ளன. இதனால் உபயோகத்திலுள்ள வானொலிப் பெட்டிக்கென ஒன்றும், திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்ட வானொலிப் பெட்டிக்கென இன்னொன்றுமாக, இரண்டு உரிமங்களை, ஊராட்சிகள் பெறவேண்டியுள்ளன. எனவே ஊராட்சி வானொலி பராமரிப்பு நிறுவனத்தால், பயன் தகுதி இழந்துவிட்டதென்றும், திரும்பப் பெற்றுக்கொள்ளப்பட்டுவிட்டதென்றும் குறிப்பிட்டு கூறப்பட்டுள்ள வானொலிப் பெட்டிகளை, ஊராட்சிகளே பொதுவில் ஏலம் விட்டு, ஏல விற்பனைத் தொகையை சம்பந்தப்பட்ட ஊராட்சிகளின் கணக்குகளில் வரவு வைத்துக்கொள்ளலாம் என்று கிராம வளர்ச்சி இயக்குநர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

2. கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1962-ம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 1-ம் நாளியிட்ட அரசு ஆணை எண் 260-ல் பிற் சேர்க்கையாகவுள்ள அறிவிப்பு எண் 9-ல் விதி 5-ல் கண்டுள்ள விதியின் படி, பழைய மற்றும் பயன் தகுதியை இழந்த உபகரணங்கள், இயந்திரங்கள் சாமான்கள், பொருள்கள் மற்றும் துடைப்பான்கள் ஆகியவற்றை 'பைசல்' செய்வதற்கு, ஊராட்சிகளின் உத்தரவுகளை பெற்றுக்கொள்ளவேண்டும். எழுத்தில் குறிப்பிடப்படாத வேறு எந்தவித ஊராட்சிகளின் உத்தரவுகளைத் தவிர்த்து, இவ்வாறான உபகரணங்கள், இயந்திரங்கள், சாமான்கள், பொருள்கள், துடைப்பான்கள் எல்லாம் பொதுவிலேயே ஏலம் விடப்படவேண்டும். இந்த விற்பனைகளை ஊராட்சிகள் உறுதி செய்யவேண்டும். இவ்வித விற்பனை ரசீதுகளெல்லாம் 'பல்வகை விற்பனை பதிவேட்டில் (Register of Miscellaneous Sales) பதிவு செய்யப்படவேண்டும். ஊராட்சிகள் வானொலி பராமரிப்பு நிறுவனத்தால், பயன் தகுதி இழந்ததென்று கருதப்பட்ட வானொலிப் பெட்டிகளையெல்லாம், மேற்கண்ட வரம்புக்குட்பட்டு, ஊராட்சிகள் அவற்றை பொதுவில் ஏலம் விட்டு 'பைசல்' செய்வதற்கு அரசு, ஊராட்சிகளை அனுமதிக்கிறது.

3. வானொலி மேற்பார்வையாளர்களிடமுள்ள திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்ட வானொலிப் பெட்டிகளெல்லாம், பொதுவில் ஏலம் விடப்பட்டு 'பைசல்' செய்யப்படுவதற்காக, சம்பந்தப்பட்ட ஊராட்சிகளுக்கு திரும்ப அனுப்பப்படவேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 10-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1488-ன் சுருக்கம்).

## ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், தமிழக ஊராட்சிகள் சங்கத்திற்குச் சந்தா செலுத்துதல்— ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன

## Madras State Union of Panchayats—Payment of Subscription by Panchayat Union Councils—Orders—Issued.

கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 19-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1527-ன் பகுதித் திருத்தமாக, ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் விரும்பினால், தமிழக ஊராட்சிகள் சங்கத்திற்கு, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 30-க்கு (ரூபாய் முப்பது மட்டும்) மேற்படாமல் நன்கொடை அளிக்க அரசு அனுமதிக்கிறது.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 5-10-1967 தேதியிட்ட அரசு ஆணை எண் 1833-ன் சுருக்கம்).

* * * * *

## ஊராட்சி ஒன்றியக் குழுக்கள், தமிழக ஊராட்சிகள் சங்கத்திற்கு சந்தா செலுத்துதல்— ஆணைகள்—பிறப்பிக்கப்படுகின்றன.

## Madras State Union of Panchayats—Payment of subscription by Panchayat Union Councils—Orders—Issued.

தாலுகா ஊராட்சிகள் கழகங்களும்(Taluk Panchayat Association) ஊராட்சி ஒன்றியங்களும், "தமிழக ஊராட்சிகள் சங்கத்தில் (Madras State Union of Panchayats) உறுப்பினர்களாகி, சங்கத்தின் துணை விதிகளில், துணை விதி 20-ல் குறிப்பிட்டுள்ள விகிதத்தில் சந்தா செலுத்துவதற்கு, தாலுகா ஊராட்சிக் கழகங்களும், ஊராட்சி ஒன்றியங்களும் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1962-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 2-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 813-ல் உள்ள பத்தி 2-ல் அனுமதிக்கப்பட்டன. மேற்சொன்ன துணைச் சட்டத்தின்படி ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியக் குழுவும் ஆண்டிற்கு ரூபாய் 100-ஐ தமிழக ஊராட்சிகள் சங்கத்திற்கு சந்தாவாகச் செலுத்த வேண்டும். அதன்பின், கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1966-ம் ஆண்டு அக்டோபர் 6-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 2340-ல் (இந்த ஆணையின் தமிழாக்கத்தை 1967-ம் ஆண்டு பிப்ரவரி–மார்ச்சு 'கிராம நலம்' இதழில் காண்க) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் தமிழக ஊராட்சிகள் சங்கத்திற்கு ஆண்டொன்றுக்கு செலுத்த வேண்டிய சந்தாவை ரூபாய் 100-லிருந்து ரூபாய் 30-க்கு குறைத்து அரசு ஆணை பிறப்பித்தது.

2. அரசு இது குறித்து, கவனமாக ஆராய்ந்து, இனி ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் தமிழக ஊராட்சிகள் சங்கத்திற்கு எந்த சந்தாவும் செலுத்த வேண்டிய தேவையில்லை என்று முடிவு செய்துள்ளது.

3. எனவே, மேற் சொன்ன 2-வது பத்தியில் உள்ள ஆணையை செயல்படுத்த, சந்தா செலுத்துவதற்கு வகை செய்யும் துணை விதி 20-ஐ நீக்கிவிடுமாறு தமிழக ஊராட்சிகள் சங்கம் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967-ம் ஆண்டு ஆகஸ்டு 19-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1527-ன் சுருக்கம்).

---

## நிதிகள்—ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியக் குழுக்களும் முதலமைச்சரின் தீ விபத்துத் துயர் துடைப்புச் சீரமைப்பு நிதிக்கு நன்கொடை அளித்தல்— விளக்க ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன

## Funds—Panchayats and Panchayat Union Councils—Contribution to Chief Minister's Fire and Rehabilitation Fund—Instructions—Issued.

ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள், நகரியங்களின் நிர்வாக அதிகாரிகள் அனைவரின் கவனமும் கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தின் 1967-ம் ஆண்டு ஜூலை திங்கள் 10-ம் நாளிட்ட உ. மு. எண் 112902/கணக்கு—5/67க்கு கொண்டுவரப்படுகிறது. தீ விபத்தால் பாதிக்கப்பட்டோருக்கு மறுவாழ்வு அளிக்கும் பணியைத் துரிதமாக ஆற்ற



வேண்டியுள்ளதால், முதலமைச்சரின் தீ விபத்துத் துயர் துடைப்புச் சீரமைப்பு நிதிக்கு நன்கொடையளிக்க விரும்பும் ஊராட்சி ஒன்றியங்கள், அதற்காக உடனே தீர்மானங்கள் நிறைவேற்றி நன்கொடையளிக்கலாம். இதற்காக அவை கிராம வளர்ச்சி இயக்குநரின் முன் அனுமதிக்குக் காத்திருக்க வேண்டியதில்லை. முதலமைச்சரின் தீ விபத்துத் துயர் துடைப்புச் சீரமைப்பு நிதிக்கு நன்கொடை வழங்குவதற்காக, சிறப்புக் கூட்டங்கள் கூட்டப்பட்டு, தீர்மானங்கள் நிறைவேற்றப்படுமாறு ஆணையாளர்களும், நிர்வாக அதிகாரிகளும் பார்த்துக்கொள்ள வேண்டும். தீர்மானம் நிறைவேற்றப்பட்ட மூன்று நாட்களுக்குள், அவை உறுதி செய்யப்படுவதற்காக இயக்குநருக்கு அனுப்பப்படவேண்டும்.

ஊராட்சி மன்றங்களும், பேரூராட்சி மன்றங்களும் நன்கொடை கொடுப்பதற்கு, தகுந்த நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களும், வருவாய்க் கோட்ட அதிகாரிகளும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(கிராம வளர்ச்சி இயக்குநரின் 13—7—1967 நாளிட்ட குறிப்பாணை எண் 112902/கணக்கு—5/67)

---

## தேசிய ஒருமைப்பாடு—தேசிய ஒருமைப்பாடு உறுதி மொழி ஏற்கும் நாளை 1967-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2-ம் நாள் காந்தி பிறந்த தின நாளிலே கொண்டாடுதல்— விளக்க ஆணைகள்—பிறப்பிக்கப்படுகின்றன

## National Integration—National Integration Pledge Campaign observance on the Gandhi Jayanthi Day—2nd October 1967—Instructions—Issued.

சென்ற ஆண்டு, காந்தி பிறந்ததின நாளான 1966-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2-ந் நாளிலிருந்து ஒரு வார காலம் தேசிய ஒருமைப்பாடு உறுதி மொழி இயக்கம் நாடு முழுவதும் நடத்தப்பட்டது. இந்த மாநிலத்தில் எல்லா ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும் இந்த இயக்கத்தில் பங்கெடுத்துக் கொண்டன.

(2) இந்த ஆண்டும் தேசிய ஒருமைப்பாடு உறுதியெடுக்கும் இயக்கத்தை நடத்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது. காந்தி பிறந்த நாளான 1967-ம் ஆண்டு அக்டோபர் 2-ம் நாள் இந்த இயக்கம் துவக்கி வைக்கப்படும்.

(3) ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் அனைத்தும் பின்பற்றுவதற்காக, கீழ்க்காணும் பொதுவான நிகழ்ச்சி நிரலை அரசு தீட்டியுள்ளது. காந்தி பிறந்த நாளான 1967–ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2-ம் நாளன்று இந்த பொதுவான நிகழ்ச்சி நிரல் கவனமாக பின்பற்றப்பட வேண்டுமென்று அரசு விரும்புகிறது.

(4) கீழ்க்கண்டவை அந்த பொது நிகழ்ச்சி நிரலில் அடங்கும்.

| | | மணி | |
|---|---|---|---|
| கொடி ஏற்றுதல் | காலை | 8·00 | |
| இறை வணக்கம் | ,, | 8·05 | |
| ஊராட்சி ஒன்றியத் தலைவர் மற்றும் உள்ளோரின் சொற்பொழிவுகள் | ,, | 8·10<br>9·10 | முதல்<br>வரை |
| ஊராட்சி ஒன்றியத் தலைவர், உறுப்பினர்கள், ஊராட்சி ஒன்றியக் குழுவினர் ஆகியோர் உறுதி மொழிப் பத்திரத்தில் கையொப்பமிடல் | காலை | 9·10<br>9-30 | முதல்<br>வரை |

(5) மேற்கண்ட நடவடிக்கைகள், ஊராட்சி ஒன்றியக் குழுவின் தலைமையிடத்தில் மக்கள் பெருந்திரளாக கூடுமிடங்களில் நடைபெற வேண்டும். காந்தியின் நல்ல உருவப்படம் ஒன்று, முறையாக அலங்கரிக்கப்பட்டு, கூட்டத்தில் வைக்கப்படலாம். காலை 8 மணிக்கு தேசியக் கொடி ஏற்றப்படவேண்டும். இதைத் தொடர்ந்து, இறை வணக்கம் நடைபெற வேண்டும். தேசிய ஒருமைப்பாடு குறித்து உறுதியெடுக்கும் இயக்கத்தின் முக்கியத்துவம் பற்றி ஊராட்சி ஒன்றியக் குழுத் தலைவர் விளக்கமாக எடுத்துரைக்கலாம். சொற்பொழிவுகள் முடிவுற்றதும், உறுதி மொழியில் கையொப்பமிடுவதை தலைவர் துவக்கிவைத்து, அதன்பின் உறுப்பினர்களை கையெழுத்திடுமாறு வேண்டிக்கொள்ள வேண்டும். ஒவ்வொருவரிடமும் தனித் தனியே கையெழுத்தைப் பெறுவதற்குப் பதில், தேசிய ஒற்றுமை தினத்தில் உறுதி யெடுத்ததுபோன்று மொத்தமாக உறுதிமொழி யெடுக்கலாம் என்று யோசனை கூறப்படுகிறது.

* * *

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967-ம் ஆண்டு செப்டம்பர் 25-ம் நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 112113–ன் சுருக்கம்.

## வருங்காலச் சேமிப்பு நிதி—உள்ளாட்சிகளால் நிறுவப்பட்டும் நிர்வகிக்கப்படு வருங்காலச் சேமிப்பு நிதியை முதலீடு செய்யும் முறை—விளக்க ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

## Provident Fund—Provident Fund established and maintained by Local Bodies—Method of Investment—Instructions—Issued.

சென்னை மாநகராட்சி, நகராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், அரசு இடைநிலைப் பள்ளிகள் (மாவட்டக் கழகப் பள்ளிகள்) பேரூராட்சி மன்றங்கள் ஆகியவற்றில் பணிபுரிபவர்கள் சம்பளத்திலிருந்து வருங்காலச் சேமிப்பு நிதிக்காக கழிக்கப்பட்ட தொகையுடன், உள்ளாட்சிகளால் (சென்னை நகராட்சியைத் தவிர) அளிக்கப்படும் நன்கொடைத் தொகையையும் சேர்த்து, அவை, மாநில அரசிடம் "T. Deposits and Advances—Part 1. Deposits Bearing Interest (B) other Deposit Accounts-other Deposits—Provident Fund Deposit of Corporation, Municipal, Panchayat Unions and other Local Board Employees" என்ற கணக்குத் தலைப்பில் கருவூலகத்தில் செலுத்தப்பட வேண்டும் என்றும், உள்ளாட்சி மன்றங்களிடம் தற்போது சேமிப்பு நிதி ஈட்டுப் பத்திரங்களாக உள்ளவற்றை' சம்பந்தப்பட்ட உள்ளாட்சிகள் அரசு பெற்றுக்கொள்ளத் தக்கவகையில், அவற்றை மாநில அரசிடம் அளிக்கவேண்டும் என்ற நிதித் துறையின் 1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 17-ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 533-ல் அரசு ஆணை பிறப்பித்தது (இந்த ஆணையின் தமிழாக்கத்தை 1967-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 'கிராம நலம்' இதழ் பகுதியில் II-ல் காண்க).

2. தற்போதுள்ள வருங்காலச் சேமிப்பு நிதி முதலீடுகளை, ஈட்டுப் பத்திரத்தில் முதலீடு செய்வது பற்றி விரிவான விளக்க ஆணைகள் தனியே பிறப்பிக்கப்படும்.

3. உள்ளாட்சிகள், ஈட்டுப் பத்திரங்களை அரசிடம் ஒப்படைக்கவேண்டும் என்று, நிதித்துறையின் 1967-ம் ஆண்டு ஜூன் திங்கள் 17-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 533-ல் உத்தரவிடப்பட்டதற்கிணங்க, உள்ளாட்சி நிறுவனங்களின் பணியாளர்களுடைய வருங்காலச் சேமிப்பு நிதியின் முதலீடுகளும், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் முதலியவற்றிடமிருந்து வரும் நன்கொடைத் தொகையும் நான்கு சதவீத வட்டியுடைய 1967-ம் ஆண்டு தமிழகக் கடனில் இருக்கவேண்டுமேயல்லாது, 1967-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 19-ம் நாளில் அரசு அறிவித்த புதிய கடனுக்கு மாற்றக்கூடாது என்று அரசு ஆணை பிறப்பிக்கிறது. இந்த ஈட்டுப் பத்திரங்களின் தொகைகள் அரசு கருவூலகத்தில் மேற்கண்ட பத்தி 1-ல் கூறப்பட்டுள்ள கணக்குத் தலைப்பில் செலுத்தப்படவேண்டும்.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 19—8—67 நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 97633/-ன் சுருக்கம்)

---

## ஊராட்சி ஒன்றியங்கள்—சமூகக் கல்வித் திட்டம்—சமூகக் கல்வி நிலையங்களும், தகவல் நிலையங்களுக்கும் செய்தித் தாள்கள் பத்திரிகைகள் வாங்குதல்—நிதி ஒதுக்கம்—உத்தரவுகள் பிறப்பிக்கப்படுகின்றன.

## Panchayat Unions—Social Education Programme—Purchase of Newspapers, Journals for Social Education Centres and Information Centres—Allotment of funds—Orders Issued.

ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் ஓர் ஆண்டிற்கு, ஓர் ஒன்றியத்துக்கு செய்தித் தாள்கள், கிழமை, திங்கள் இதழ்கள் போன்றவற்றை சமூகக் கல்வி நிலையங்களுக்கும், தகவல் நிலையங்களுக்கும் வாங்குவதற்கு ரூ. 1000 வரை செலவு செய்யலாம் என்பது கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1966-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 10-ம் நாள் வெளியிடப்பட்ட அரசு ஆணை எண் 2604-ல் உள்ள ஆணைகளாகும்.

இந்த நிதி ஒதுக்கத்தை, ஓர் ஆண்டிற்கு ரூ. 1,500 ஆக உயர்த்தி அரசு இப்போது ஆணை பிறப்பிக்கிறது. இதனால், ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆண்டிற்கு சமூகக் கல்வித் திட்டங்களுக்கு ரூபாய் 500 அதிகமாகக் கிடைக்கும்.

[கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 5-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1460-ன் சுருக்கம்].



## புறம்போக்குகளில் பசுந்தாள் உர மரங்களை ஊராட்சிகள் வளர்த்தல்.

## Committee on Agricultural Production—Recommendations regarding the utilisation for porombokes for growing green manure trees by Panchayats—Regarding.

ஊராட்சிகளிடம் தரப்பட்டுள்ள புறம்போக்கு நிலத் தோடு, ஏரிக்கரைப் பகுதிகளிலும் கூட பசுந்தாள் உரங்களைக் கொடுக்கும் மரங்களை வளர்ப்பதற்கும், ஊராட்சிகளிடம் தரப்பட்டுள்ள நிலங்களில் சில சதவீதப் பகுதிகளில் பசுந்தாள் உரங்களை உற்பத்தி செய்யும் மரங்களைப் பயிரிடுவதற்கென, அந்நிலங்களை ஒதுக்கி வைப்பதற்கும், பண்ணைக் காடுகள் (Farm Forests) பகுதிகளில், பசுந்தாள் உற்பத்திக்கென சில பகுதிகளை ஒதுக்கி வைப்பதற்கும் விவசாய உற்பத்திக் குழு பரிந்துரைத்துள்ளது.

2. மேற்சொன்ன பரிந்துரைகளை நிறைவேற்றுவதற்கு கீழ்க்கண்ட விளக்க ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன:

3. ஊராட்சிகளிடம் தரப்பட்டுள்ள எல்லா புறம்போக்கு மற்றும் ஏரிக்கரைப் பகுதிகளில்—எங்கெங்கு உபயோகத்திற்கு கொண்டு வர முடியுமோ அங்கெல்லாம்—பசுந்தழை உரங்களைக் கொடுக்கும் மரங்களை, ஊராட்சிகள், தாங்களாகவே வளர்க்க வேண்டும். புறம்போக்கு நிலங்களிலுள்ள ஆக்கிரமிப்புகளைத் தீவிரமாக வெளியேற்ற வேண்டும்; அப்போதுதான் ஊராட்சிகள் அப்புறம்போக்குகளைப் பயன்படுத்திக் கொள்ள முடியும். பண்ணைக் காடுகள் உண்டாக்கப்படும் நிலங்களில் சிலவற்றை, பசுந்தாள் உர மரங்களை வளர்ப்பதற்கென தனியே ஒதுக்க வேண்டும்.

4. மேற்கண்ட விளக்க ஆணைகளை, தங்களது ஒன்றியத்திலுள்ள எல்லா ஊராட்சிகளின் கவனத்திற்கு கொண்டுவருமாறும், இவ் விளக்க ஆணைகளெல்லாம் பின்பற்றப்படுவதைக் கவனித்துக் கொள்ளுமாறும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(கிராம வளர்ச்சி இயக்குநரின் 1967-ம் ஆண்டு ஜூலை திங்கள் 13-ம் நாளிட்ட சுற்றறிக்கை எண் 83269-ன் சுருக்கம்)

---

## நம்பித்தலைவன்பட்டயம் ஊராட்சியின் (களக்காடு ஊராட்சி ஒன்றியம்—திருநெல்வேலி மாவட்டம் பெயரை "தளவாய்புரம்" என்று மாற்றுதல்—உத்தரவிடப்படுகிறது

## Panchayat—Nambithalaivanpattayam Panchayat—Kalakad Panchayat Union – Tirunelveli District—Altering the name of the Panchayat as "Dhalavoipuram" —Ordered.

1958-ம் ஆண்டு தமிழக ஊராட்சிகள் சட்டத்தின் (1958-ஆம் ஆண்டின் தமிழகச் சட்டம் 35) பிரிவு 3 (2) (c)(iii)-ன்படியும், கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1965-ம் ஆண்டு செப்டம்பர் 29-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 2191-ன்படியும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, திருநெல்வேலி மாவட்டத்தில் களக்காடு ஊராட்சி ஒன்றியத்திலுள்ள "நம்பித்தலைவன்பட்டயம்" என்ற ஊராட்சியின் பெயர் "தளவாய்புரம்" என்று மாற்றப்படவேண்டுமென்று தமிழக கிராம வளர்ச்சி இயக்குநர் உத்தரவிடுகிறார்.

(கிராம வளர்ச்சி இயக்குநரின் 29—8—1967 நாளிட்ட அறிவிப்பு எண் 55817-ன் சுருக்கம்)

---

## முன்னாள் படை வீரர்களின் குழந்தைகளுக்கும் அவர்களைச் சார்ந்திருப்பவர்களுக்கும் கல்விச் சலுகை அளித்தல்—காவல் ஆய்வாளர்களும் அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளும் வருமானச் சான்றிதழ் கொடுத்தல்.

## Education—Educational concessions to children and dependents of Ex-Servicemen—Issue of income certificates by Gazetted Officers and Inspectors of Police.

முன்னாள் படை வீரர்களின் குழந்தைகளும், அவர்களைச் சார்ந்திருப்பவர்களும் கல்விச் சலுகையைப் பெறுவதற்காக, முன்னாள் படை வீரர்களுக்கு வருமானச் சான்றிதழைக் கொடுக்க, வருவாய்த் துறையிலுள்ள துணைத் தாசில்தார்கள் பதவிக்குக் கீழ் நிலையில்லாத அதிகாரிகளுக்கும், ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள்—வட்

டார அபிவிருத்தி அதிகாரிகள் ஆகியோருக்கும் மட்டுமே தற்போது அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. தமிழக அரசு கல்வி விதிகளின், 9-வது விதியின் கீழ், கட்டணச் சலுகைகளை வழங்குவது போன்றே, அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளும், காவல் ஆய்வாளர்களும் (Inspectors of Police) மேற்சொன்ன சான்றிதழ்களை அளிக்கலாம் என்ற கோரிக்கையை அரசு பரிசீலனை செய்தது.

2. மேற்கண்ட கோரிக்கையை அரசு ஏற்றுக்கொண்டு அதற்கேற்ப முன்னாள் படை வீரர்களின் குழந்தைகளுக்கும், அவர்களைச் சார்ந்திருப்பவர்களுக்கும், கல்விச் சலுகை அளிக்கும் திட்டத்தின்கீழ் விண்ணப்பம் செய்வோருக்கு, அவர்களின் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலரின் வருமானச் சான்றிதழை வழங்க அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள், காவல் ஆய்வாளர்களுக்கு அரசு அதிகாரமளிக்கிறது.

3. சான்றிதழ் வழங்கும் அதிகாரிகளின் முத்திரை, அச்சான்றிதழில் இருந்தால்தான் அவை ஏற்றுக் கொள்ளத் தக்கதாயிருக்கும்.

(கல்வித் துறையின் 1967ம் ஆண்டு ஜூன் திங்கள் 19 ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 979-ன் சுருக்கம்.)

---

## ஏர்க்காடு நகரியம் (சேலம் மாவட்டம்)—அமைப்பு—திருத்தம்—வெளியிடப்படுகிறது

## Township—Yercaud Township—Salem District—Constituti on under the Madras Panchayats Act, 1958—Amendment—Issued.

பிற்சேர்க்கையிலுள்ள அறிவிப்பு செயிண்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழில் பிரசுரமாகும்.

### பிற்சேர்க்கை

#### அறிவிப்பு

1958-ம் ஆண்டு தமிழக ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழகச் சட்டம் 35/1958) பிரிவு 4, உட்பிரிவு (3)-ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, 1966-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 10-ம் நாளிட்ட செயிண்ட் ஜார்ஜ் கோட்டை தனி அரசிதழின் பாகம் II-ல் உள்ள பிரிவு II-ல்,2-ம் பக்கத்திலே பிரசுரிக்கப்பட்ட கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1966-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 7-ம் நாளிட்ட 1966-ம் ஆண்டு அறிவிப்பு II-2 எண் 23-க்கு (பிறகு திருத்தப்பட்டபடி) தமிழக கவர்னர் அவர்கள், கீழ்க்கண்ட திருத்தங்களைச் செய்கிறார்கள்:—

#### திருத்தம்

குறிப்பிட்டுள்ள அறிவிப்பின் நெறிமுறை 2-ன் பிரிவுகள் (i), (ii)-ல் உள்ள 'ஒன்பது' மற்றும் 'நான்கு' ஆகிய சொற்களுக்குப் பதில் முறையே 'பத்து' மற்றும் 'ஐந்து' என்ற சொற்களை இட்டு மாற்றிக் கொள்ள வேண்டும்.

[கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 4-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1427.]

---

## நில ஆக்கிரமிப்புகள்—ஜமாபந்தி சோதனைக்குரிய கேள்விப்பட்டியல்.

## Lands—Encroachments—Perambulation and Categoristation of Public Lands—Questionnaire to Jamabandi check—memorandum—Prescribed.

ஊராட்சிகளிடம் தரப்பட்ட அல்லது ஒப்படைக்கப்பட்ட பொது நிலங்களைச் சுற்றிப் பார்த்து, அடையாளமிடுதல், மற்றும் இவ்வகை நிலங்கள், இன்னும் பிறவகை பொது நிலங்களில் ஏற்பட்டுள்ள நில ஆக்கிரமிப்புகளின் பேரில் நடவடிக்கை எடுத்தல் சம்பந்தமாக, கிராம வளர்ச்சி,உள்ளாட்சித் துறையின் 8–11–1962 தேதியிட்ட அரசு ஆணை எண் 2428-ல் சுற்றறிக்கை விளக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. ஒவ்வொரு கிராமத்திலும் ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை அதற்கென நிர்ணயிக்கப்பட்ட படிவத்தில் வகைப்படுத்துவதற்கும் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

2. ஜமாபந்தியின்போது, நில ஆக்கிரமிப்புகளை வெளியேற்றுவது, மற்றும் நில ஆக்கிரமிப்புகளை தடுப்பது சம்பந்தப்பட்ட பல்வேறு பிரச்னைகளை பற்றி, ஜமாபந்தி சோதனைக் குறிப்பில் சேர்ப்பதற்காக, அக்குறிப்பில் மேலும் தகுந்த கேள்விகள் சேர்க்கப்படும் என்று கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 8–11–1962 தேதியிட்ட அரசு ஆணையின் பத்தி 8-ல் உள்ள இணைப்பு I-ல் கூறப்பட்டுள்ளது. அதற்கேற்ப, வருவாய்த் துறை கழகமும் கேள்விப் பட்டியல் வரைவு ஒன்றை சமர்ப்பித்துள்ளது.

3. வருவாய்த் துறை கழகத்தால் அனுப்பப்பட்ட அக் கேள்விப் பட்டியலை அரசு ஏற்றுக்கொண்டு, அதை இவ்வாணையுடன் இணைத்திருக்கிறது. அந்த வினாப்பட்டியலை, கிராம அதிகாரிகள் பின்பற்றுமாறு கவனித்துக் கொள்ளும்படி, வருவாய்த் துறை கழகத்தை அரசு கேட்டுக்கொள்கிறது.

### ஜமாபந்தி சோதனைக் குறிப்பிற்கு பிற்சேர்க்கை.

#### நில ஆக்கிரமிப்புகள்.

1. ஊராட்சியிடம் தரப்பட்ட நிலங்களெல்லாம், அவற்றினிடம் ஒப்படைக்கப்பட்டு விட்டனவா ? (அது பற்றி ஊராட்சித் தலைவர்களிடமிருந்து கையொப்பம் பெற்று, அவை பதிவு செய்யப்படவேண்டும்.)

2. ஊராட்சிகளிடம் தரப்பட்ட நிலங்களை அடையாளம் கண்டறிந்துகொள்வதற்கு கர்ணம், ஊராட்சித் தலைவர் இருவருமாகச் சேர்ந்து நிலங்களைப் பார்வையிட்டனரா ?

3. மேற் கூறப்பட்ட நிலங்களில் ஏற்பட்டுள்ள ஆக்கிரமிப்புகள் பற்றிய தகவல்களைக் கொண்ட பட்டியல் ஊராட்சி தலைவரிடம் கொடுக்கப்பட்டதா ? (கர்ணம், வருவாய் ஆய்வாளர் (Revenue Inspector) ஆகிய இருவருடைய கையொப்பத்துடன், அந் நிலங்களைப் பெற்றுக் கொண்டதற்கான கடிதம் பதிவு செய்யப்பட வேண்டும்.)

4. ஆக்கிரமிக்கப்பட்ட நிலம் உள்ள இடத்தின் பட்டியல், வரைபடம் போன்றவை, ஊராட்சித் தலைவரிடம் ஒப்படைக்கப்பட்டனவா ? (ஊராட்சித் தலைவர் அதைப் பெற்று கொண்டதற்கான கடிதம் பதிவு செய்யப்படவேண்டும்.)

5. பொது நிலங்கள் பற்றிய பதிவேடு (Public Land Register) முறையாக நிர்வகிக்கப்படுகிறதா ?

6. கிராமத்தின் படம், வீடுகள், தோட்டம் போன்றவை கொண்ட படங்கள், வயல் அளவை புத்தகங்கள் போன்றவற்றின் பிரதிகள், ஊராட்சியிடம் கொடுக்கப்பட்டனவா ? (விவரங்களையும், அவற்றை பெற்றுக் கொண்டதற்கான கடிதங்களையும் குறிப்பிடவும்.)

7. ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களை வகைப்படுத்தும் காரியம் முழுவதும் கிராமத்தில் முடிந்து விட்டனவா ?

8. வகைப்படுத்தியது பற்றிய விவரங்கள் :—

(அ) (i) நிலமில்லாத ஏழை மக்களால் ஏற்பட்டுள்ள மறுக்கப்பட்ட ஆக்கிரமிப்பு.

(ii) நிலமற்ற ஏழையில்லாதவர்களால் ஏற்பட்டுள்ள மறுக்கப்பட்ட ஆக்கிரமிப்பு.

(ஆ) நிலமற்றவர்களும், மற்றவர்களும் ஏற்படுத்திய, மறுக்கப்பட்ட ஆக்கிரமிப்புகள்.

(இ) B. ( Memo )வில் பதிவு செய்யப்பட்ட இதர எல்லா ஆக்கிரமிப்புகள். (சில பி. குறிப்புக்களை) ஆங்காங்கே தயவு செய்து சோதனையிடவும்.

9. B. குறிப்பில், குறிப்பிடப்பட்டதற்குப் பிறகு, எல்லா ஆக்கிரமிப்புக்களையும் வருவாய் ஆய்வாளர் சோதனை செய்தாரா ?

10. ஆக்கிரமிப்புக்கள் ஏற்பட்டிருந்து, அவற்றை தகுந்தபடி பதிவு செய்யப்பட்டிருந்த போது, ஏனைய எல்லா ஆக்கிரமிப்புக்களையும், வருவாய் ஆய்வாளர் சோதனை செய்தாரா ? (தயவு செய்து சரி பார்க்கவும்).

11. துணைத் தாசில்தாரால் மேற்கண்ட ஆக்கிரமிப்புக்கள் எல்லாம் 100 சத வீதம் மேலும் சோதனையிடப்பட்டதா ?

12. வருவாய்த்துறை கழகத்தின் 22–9–1962 தேதியிட்ட El. 7729/62-ல் கோரப்பட்டுள்ளபடி, வகைப் படுத்தப்பட்ட எல்லாவற்றையும், ஜமாபந்தி அதிகாரி அங்கீகரித்தாரா ?

13. முந்திய "பசலி" (Fasli) யில் குறிப்பிடப்பட்ட ஆக்கிரமிப்புக்களை, அடுத்த "பசலி"-யில், வருவாய் ஆய்வாளர் சோதனையிட்டு அவ்வாக்கிரமிப்புகள் தொடர்ந்திருந்து வருவதை அடுத்த பசலியில் குறிப்பிட்டாரா ?

14. நிலமில்லா ஏழை மக்களால் செய்யப்பட்ட எதிர்ப்பற்ற ஆக்கிரமிப்பு நிலங்களை பொது நிலத்திற்கு ஊறு நேரா வண்ணம் அந்நிலங்கள், அவர்களுக்கே அளிக்கப்பட்டதா ?

15. எதிர்ப்புள்ள ஆக்கிரமிப்பு நிலங்களிலிருந்து, ஆக்கிரமிப்பாளர்களை வெளியேற்றும் காரியம் துரிதமாக நடைபெறுகிறதா ?

(அ) மொத்த எண்ணிக்கை.

(ஆ) ஜமாபந்தி தேதிக்கு முன்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளவற்றின் எண்ணிக்கை.

(இ) ஜமாபந்தி தேதிக்கு முன்பு நடவடிக்கை எடுக்கப்படாதவற்றின் எண்ணிக்கை.

16. இக்காரியத்தை நிறைவேற்றுவதற்கு எந்த சிறப்பு அலுவலரும் கோரி விண்ணப்பம் செய்யப்பட்டுள்ளதா ?

17. 1962-ம் ஆண்டு அக்டோபர் மாதத்திற்குள் பட்டியல், வரைப்படம்

தயார் செய்தல், நிலங்களை சுற்றிப் பார்த்தல் முடிவுற்று, அவை பற்றிய முடிவான அறிக்கையொன்று வருவாய்த் துறைக் கழகத்திற்கு அனுப்பப்பட்டதா ?

18. அப்படியானுல் 1962-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 22-ம் தேதிக்குள், அவ்வேலையை முடித்துவிட்டதற்கான சான்றிதழ், சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டுவிட்டதா ?

19. 1962-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15-ம் தேதிக்குள், இதன் முன்னேற்றம் பற்றிய ஆய்வுரை, வருவாய்த் துறை கழகத்திற்கு அனுப்பப்பட்டு விட்டதா ?

20. பாகுபாடு சம்பந்தமாக, கழகத்தின் 1962-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 22-ம் நாளிட்ட இ-1. 7729/62-1-ல் பிறப்பிக்கப்பட்ட விளக்க ஆணைகள் செயல்படுத்தப் பட்டனவா ?

(கிராம வளர்ச்சி உள்ளாட்சி துறையின் 22-2-1967 தேதியிட்ட அரசு ஆணை எண் 344-ன் சுருக்கம்.)

---

## திட்ட மன்றங்கள்—செயலாற்றும் உறுப்பினர்களுக்குச் சான்றிதழ்கள் அளித்தல்—தொழிற் கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ள, அரசுப் பணிகளில் நியமனம் செய்ய இச் சான்றிதழ்களுக்கு அங்கீகாரம் அளித்தல்—ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

## Planning Forums—Certificate for active members-Recognition for admission to professional colleges and appointment in public services—Orders passed.

திட்ட மன்றங்களில் (Planning Forums) செயலாற்றும் உறுப்பினர்களுக்கு, இருவித சான்றிதழ்களை—(i) குறைந்தது ஓராண்டுக் காலம் மன்றத்தில் சேவை செய்ததற்கும் (ii) குறைந்தது இரண்டாண்டுக்காலம் திட்ட மன்றத்தில் சேவை செய்ததுடன்—ஆய்வுக் குழுக்கள், திட்டங்கள், சர்வேக்கள், மற்றும் முகாம்கள், திட்டம் பற்றி சிறிது காலம் பயின்றதற்கும்-கல்லூரி முதல்வர்கள் வழங்கவேண்டுமென்று, திட்ட மன்றங்களின் மாநிலக்குழு சிபாரிசு செய்துள்ளது. கல்லூரியிலுள்ள சமூகத் தொண்டுச் சங்கங்களின் சான்றிதழ்களைப் போன்றே, இச் சான்றிதழ்களையும் கருதி, தொழிற் கல்லூரிகளில் சேர்த்துக்கொள்வதற்கும், அரசுப் பணிகளில் அமர்த்திக் கொள்வதற்கும், பயன் படுத்திக்கொள்ள வேண்டும் என்று இக்குழு மேலும் சிபாரிசு செய்துள்ளது.

2. மாநிலக் குழுவின் இச் சிபாரிசுகளை அரசு பரிசீலனை செய்து—

(அ) அங்கீகரிக்கப்பட்ட திட்ட மன்றங்களின் உறுப்பினர்களாகவும், ஆய்வுக் குழு, திட்டங்கள், 'சர்வே'க்கள், முகாம்களில் கலந்துக் கொண்டு, திட்டம் பற்றி சிறிது காலம் பயிற்சி பெற்றவராகவும் இருக்கும் செயலாற்றும் உறுப்பினர்களுக்கு (active members) சான்றிதழ்கள் வழங்கப்படவேண்டுமென்றும்,

(ஆ) குறைந்த அளவாக ஓர் ஆண்டு சேவை செய்தவர்களுக்கு ஒருவகையிலும், குறைந்த அளவாக ஈராண்டுகள் சேவை செய்தவர்களுக்கு மற்றொரு வகையிலும், சம்பந்தப்பட்ட கல்லூரி முதல்வர்களால், சான்றிதழ்கள் அளிக்கப்பட வேண்டும் என்றும்,

(இ) தொழிற் கல்லூரிகள், தொழில் நுட்பக் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்வதற்குக் கல்லூரியிலுள்ள சமூகத் தொண்டுச் சங்கங்களின் சான்றிதழ்களைப் போன்றே, இச்சான்றிதழ்களையும் அங்கீகரிக்கவேண்டும் என்றும் அரசு ஆணை பிறப்பிக்கிறது.

(3) அரசுப் பணியிலும், உள்ளாட்சிப் பணியிலும், வேலைக்கு அமர்த்துவதைப் பொறுத்தவரை, கல்லூரியிலுள்ள சமூகத் தொண்டு சங்கங்களின் சான்றிதழ்களைப் போன்றே, இச் சான்றிதழ்களையும் கருதவேண்டும் என்பது பற்றி தமிழக அரசு அலுவலர் தேர்வுக் கழகத்துடன் (Madras Public Service Commission) ஆலோசனை செய்து, தேவையெழும் இடங்களில், சிறப்பு விதிகளைத் திருத்துவதற்கு, பரிசீலனை செய்யுமாறு செயலகத் துறைகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(கல்வித்துறையின் 17—6—1967 தேதியிட்ட அரசு ஆணை எண் 944ன் சுருக்கம்.)

---

## 1960-ம் ஆண்டு தமிழக அரசின் தளர்த்தப்பட்ட ஓய்வூதிய விதிகளில் விதி 2 (1)ஐ, அரசால் நடத்தப்படும் தொழில் நிறுவனங்களில் வேலை செய்பவர்களுக்கு ஏற்றதாக்குதல்—திருத்தம் பிறப்பிக்கப்படுகிறது.

## Madras Liberalised Pension Rules, 1960—Rule 2(i) Applicability to employees in Government Industrial undertakings—Amendment Issued.

**1960**-ம் ஆண்டு, தமிழக அரசின் தளர்த்தப்பட்ட ஓய்வூதிய விதிகளின் படி (Madras Liberalised Pension Rules, 1960), எழுத்தர்கள், மேற்பார்வை அலுவலர்களைத் தவிர, ஏனையோர், 1948-ம் ஆண்டின் தொழிற்சாலைகள் சட்டம் (1948-ம் ஆண்டின் 63-வது மத்திய சட்டம்) அல்லது 1952-ம் ஆண்டின் தொழிலாளர்கள் வருங்காலச் சேமிப்பு நிதிச் சட்டத்தில் (1952-ம் ஆண்டின் 19-வது மத்திய சட்டம்) இல்லாதோர், அரசாங்கத் தொழில் நிறுவனங்களில் வேலை செய்யும் அரசாங்க அலுவலர்கள், இவ் விதிகளில் கூறப்படும் ஓய்வூதிய நன்மைகளைப் பெற உரியவரல்லர். இதன் காரணமாக, முன்னர் ஓய்வூதியம் பெற்று வந்த அரசுதொழில் நிறுவனங்களிலுள்ள அரசு ஊழியர்களை, இவ் விதி பாதித்துள்ளது, என்பது அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப் பட்டுள்ளது. தமிழக அரசு அச்சகத் தொழிலாளர் யூனியனும் (The Madras Government Press Workers Union), தமிழக அரசு போக்குவரத்துத் துறையின் தொழிலாளர்கள் பலரும், தொழிலாளர்கள் வருங்காலச் சேமிப்பு நிதித் திட்டத்திலுள்ள நன்மைகளுக்குப் பதிலாக, முன்பு அவர்கள் பெற்று வந்த ஓய்வூதிய நன்மைகளையே அனுமதிக்குமாறு, அரசைக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர்.

2. வருங்காலச் சேமிப்பு நிதியின் மண்டல ஆணையாளருடனும் (Regional Provident Fund Commissioner) கணக்கு-ஆய்வுத் தலைவருடனும் (Accountant-General) இது பற்றி அரசு கவனமாக ஆலோசனை செய்தது. எந்த விதமான ஓய்வூதியமும் பெற முடியாதவர்கள், வருங்காலச் சேமிப்பு நிதித் திட்டத்திலுள்ள நன்மைகளையாவது பெற வேண்டும் என்ற நோக்கத்துடனேயே தொழிலாளர் வருங்காலச் சேமிப்பு நிதித் திட்டம் கொண்டு வரப்பட்டது. அரசு அலுவலர்களுக்குரிய ஓய்வூதியத்தை நீக்கி விடுவதோ, குறைப்பதோ அத் திட்டத்தின் நோக்கமல்ல. எனவே 1948-ம் ஆண்டு தொழிற்சாலைச் சட்டம் (1948-ம் ஆண்டின் 63-வது மத்தியச் சட்டம்) அல்லது 1952-ம் ஆண்டு தொழிலாளர் வருங்காலச் சேமிப்பு நிதிச் சட்டத்திற்கு (1952-ம் ஆண்டின் 19-வது மத்திய சட்டம்) உட்பட்டு, சட்ட பூர்வமான பணி விதிகளுக்குட்பட்டு, (Satutory Service Rules) ஓய்வூதியம் பெறும் பணித் துறையிலுள்ள தொழில் நிறுவனங்களிலுள்ள அரசு அலுவலர்கள், 1960-ம் ஆண்டின் தமிழக அரசு தளர்த்தப்பட்ட ஓய்வூதிய விதிகளின் படி ஓய்வூதிய நன்மைகளைப் பெறத் தகுதியுடையவராவார்கள் என்று அரசு ஆணை பிறப்பிக்கின்றது. இவ்வாணை 1-7-1960 முதல் அமுலுக்கு வரும். வேலையிலிருந்து ஓய்வு பெற்றவர்களும், 1-4-1960 அன்று, அல்லது அதற்குப் பின் ஓய்வு பெறுபவர்களும், 1960-ம் ஆண்டு தமிழக அரசின் தளர்த்தப்பட்ட ஓய்வூதிய விதிகளுக்குட்பட்டவர்களாகவே கருதப்படுவார்கள். இவ்வகைப்பட்ட பழைய விஷயங்களையெல்லாம் மீண்டும் ஆராய்ந்து, மேற் கூறப்பட்ட விதிகளின்படி, ஓய்வூதியம் மற்றும் கொடை (Gratuity)யை அளிக்க நடவடிக்கை மேற்கொள்ளும்படி துறைத் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். 1960-ம் ஆண்டு, தமிழக அரசின் தளர்த்தப்பட்ட ஓய்வூதிய விதிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள விரும்பினாலன்றி, 31-3-1964-ம் தேதியன்று வேலையில் இருப்பவர்கள், தமிழக அரசு அலுவலர்கள் குடும்ப ஓய்வூதிய விதிகளுக்கு (Madras Government Servants Family Pension Rules) உட்பட்டவரேயாவர்.

(நிதித் துறையின் 1967-ம் ஆண்டு மே திங்கள் 30-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 464-ன் சுருக்கம்.)

—0—

## 'கேர்' நிறுவன உதவித் திட்டம்—மாவட்ட அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்டுள்ள "ஜீப்"களை ஏனைய வேலைகளுக்குப் பயன்படுத்துதல்—அனுமதி அளிக்கப்படவில்லை.

## Education—Elementary—CARE Programme—Jeeps supplied to District Educational Officers—Requisitioning for other work—Not permitted.

மாவட்டத் தலைமை நிலையத்திலிருந்து, பள்ளிகள் துணை ஆய்வாளர்களின் (Deputy Inspectors of Schools) மண்டல அலுவலகத்திற்கு (Range Offices) "கேர்" நிறுவனத்தின் பொருட்களை (CARE commodities) வழங்குவதற்கும், மதிய உணவு நிலையங்களைக் காலாகாலத்தில் சோதனை செய்யவுமே மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்கு "ஜீப்" (Jeeps) கள் கொடுக்கப்பட்டுள்ளன. ஆனால் அந்த ஜீப்களை மற்ற துறைகள், வேறு ஏதாவது வேலைகளுக்குக் கேட்பதாக, செகண்டரி கல்வி இயக்குநகர் (Director of Secondary Education), அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்துள்ளார். சமீபத்தில், சிறு சேமிப்புத் திட்டத்தில் வசூலைப் பெருக்குவதற்கும், தீவிரமான கொள் முதல் வேலைக்கும், அந்த ஜீப்களை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கோரியிருந்தனர். இவ்வாறு, மற்ற துறையினர் அடிக்கடி "ஜீப்"களைக் கோருவதனால், "கேர்" திட்டத்தின் (CARE Programme) வேலைகளுக்குத் தடை ஏற்படுவதுடன், "கேர்" பொருட்களைத் தனியார் லாரிகளில் அனுப்புவதால், லாரிகளுக்கு வாடகை அளிப்பதன் மூலம் கல்வித் துறைக்குச் செலவும் ஏற்படுகிறது. இவ்வாறு தனியார் லாரிகளில் "கேர்" பொருட்களை அனுப்புவதால், அவை கெட்டுவிடவும், கலந்துவிடவும் கூடும்.

2. அரசு, இது பற்றிக் கவனமாகப் பரிசீலனை செய்து, மாவட்டக் கல்வி அதிகாரிகளுக்கு அளிக்கப்பட்ட "ஜீப்"கள் மதிய உணவுத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு, ஒவ்வொரு நாளும் இன்றியமையாததாக இருக்கின்றன என்பதால், அவற்றை மற்ற துறைகள் கோரக் கூடாது என்று ஆணை பிறப்பிக்கிறது.

(கல்வி, பொதுச் சுகாதாரத் துறையின் 20-12-1966-ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 2140-ன் சுருக்கம்).

---

## இந்த இதழில்

பக்கம்.


1. மதுரைப் பல்கலைக் கழகப் பட்டமளிப்பு விழா: மாண்புமிகு முதலமைச்சர் பேருரை .. .. .. .. 2
2. கூவம் ஆறு சீரமைப்பு .. .. .. 6
3. சீரணியின் துப்புரவுப் பணி .. .. 8
4. புள்ளி விவரப் பேழை : மணலியில் எண்ணெய் தூய்மைப் படுத்தும் ஆலை. 13


## அடுத்த இதழில்...


1. "கவிஞர் பாரதி"—மாண்புமிகு பொதுப்பணி அமைச்சரின் வானொலிப் பேச்சு
2. குடுமியாமலை விவசாயப் பண்ணை
3. ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் மாநாடு —படங்களுடன்
4. செங்கல்பட்டு மாவட்ட விவசாயிகள் கருத்தரங்கு
5. "கல்லும் சொல்லாதோ கவி"—சிறப்புக் கட்டுரை



வெளியிடுபவர்:

திரு வி. நடராஜன், ஐ. ஏ. எஸ்.

ஆசிரியர்:

திரு எஸ். வேங்கடசாமி, எம். ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras Edited by the Public Relations Officer and published by the Director of Rural Development Madras-9.




படம் 1—தர்மபுரி மாவட்ட அலுவலகப் புதிய கட்டடம் 19-8-67 அன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. திறப்பு விழாவுக்கு மாண்புமிகு உணவு அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் தலைமை வகித்தார்.

படம் 2—தமிழ் நாட்டில் கிராமப் பகுதிகளில் கால்நடை மருத்துவ வசதி மேன்மேலும் பெருகி வருகிறது.

படம் 3—மண்டபத்தில், நார்வே நாட்டுத் தொழில் நுட்ப உதவியுடன், நவீனப் படகுகள் கட்டும் தொழில் நடைபெறுகிறது.





REGD NO M 7277
©
தமிழ்நாடு அரசாங்கம் 1967



1. சென்னைக்கு அடுத்த ஊரூரில் சீரணியினர் கட்டித்தந்த பள்ளிக் கட்டடத்தின் 'மாதிரி'யை சட்ட மன்ற உறுப்பினர் திரு. எம். ஜி. இராமச் சந்திரன், மாண்புமிகு முதலமைச் சரிடம் அளித்தார். செப்டம்பர் 16-ம் தேதி அன்று அடையாற்றில் நடைபெற்ற இவ்விழாவுக்கு, மாண்பு மிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் தலைமை வகித் தார்.



2. படி அரிசித் திட்டம் ஆகஸ்ட் 15-ம் தேதி முதல் நகர்ப்புற பகுதி களுக்கும் விரிவுபடுத்தப்பட்டது. வில்லி வாக்கம் பகுதியில் நடந்த விழா வில், மாண்புமிகு முதலமைச்சர் முன் னிலையில் மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி திட்டத்தைத் துவக்கிவைத்தார்.



3. சீரணியின் துப்புரவுப் பணி, சென்னை நகரில் செப்டம்பர் 3-ம் தேதி அன்று ஆரம்பமாயிற்று. மாண்புமிகு உணவு அமைச்சர் திரு கே. ஏ. மதியழகன் 56-வது வட்டத்தில் துப்புரவுப் பணியைத் துவக்கிவைத்தார்.




காவிரி அன்னை










1. இலங்கையின் கவர்னர்—ஜெனரல் திரு வில்லியம் கோபல்லாவும் அவருடைய மனைவியாரும் 2—11—67-ல் சென்னைக்கு வருகை தந்தனர். அவர் வருகையை ஒட்டி கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

2. ரோமாபுரியில் நடைபெற்ற உலக உணவு மாநாட்டில் பங்குகொள்ள மாண்புமிகு தமிழக உணவமைச்சர் திரு கே. ஏ. மதியழகன் 2—11—67-ல் சென்னையை விட்டு புறப்பட்டார். மீனம்பாக்கம் விமான நிலையத்தில் அவரை வழியனுப்ப தமிழகக் கவர்னரும் அமைச்சர்களும் வந்திருந்தனர். (உணவு அமைச்சர் 26—11—67 அன்று சென்னை திரும்பினார். விமான நிலையத்தில் அவருக்கு பிரம்மாண்டமான வரவேற்பு அளிக்கப்பட்டது.)

3. "மற்ற நாடுகளுக்கு அமெரிக்க உதவி" பற்றிய கருத்தரங்கு, உதகமண்டலத்தில் 26—10—67-ல் நடைபெற்றது. அக் கருத்தரங்கினைத் துவக்கிவைத்த அமெரிக்க தூதர் செஸ்டர் பௌல்ஸும் கருத்தரங்கினுக்கு தலைமை வகித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சரும்.


# கிராமநலம்

தமிழக அரசின் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை மாத இதழ்

கதிர் 13 | நவம்பர் 1967 | நெல் 2





[திரு மு. ரா. பெருமாள் முதலியார், எம். ஏ., எல். டி.,]

[ 'மன்னிய மூவேந்தர்களின் மடியில் வளர்ந்த' தமிழ்ச் சங்கம், மதுரையம்பதியின் பொற்றாமரைக் குளத்தில் பொலிவுடன் தவழ்ந்தது, பண்டைக் காலத்திலே.

நமது தமிழ் மொழியின் பெருமைக்குரிய அந்தப் பொற்காலம் இன்று மறுமலர்ச்சி பெறுவதைக் காண்கிறோம்.

மாண்புமிகு முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை அவர்கள் இந்த விழாவிற்கு, தலைமை தாங்குவார். இதைப்பற்றிய முக்கிய விவரங்களை இச் சிறப்புக் கட்டுரையில் தொகுத்தளிக்கிறார், இம்மாநாட்டின் அமைப்புச் செயலாளர்.

இவற்றின் விரிவையும், விளக்கத்தையும் வானொலி, நாளிதழ்கள் வாயிலாக, அவ்வப்போது மக்களுக்கு அறிவிக்க ஏற்பாடாகியுள்ளது. —ஆசிரியர்.]

தமிழ் மக்கள் அனைவரும் ஆவலாக எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கு, சென்னை நகரிலே வருகின்ற 1968—ஆம் ஆண்டு ஜனவரி 3-ம் நாள் தொடங்கவிருக்கின்றது. முதல் கருத்தரங்கு கோலாலம்பூரில் 1966-ம் ஆண்டு நடைபெற்றது.

இரண்டாவது உலகத் தமிழ்க் கருத்தரங்கைத் தமிழக அரசும் உலகத்தமிழாராய்ச்சி மன்றமும் முன்னின்று நடத்துகின்றன. புலவர்க்கேயுரிய ஆராய்ச்சிக் கருத்தரங்காக மட்டுமின்றிப் பொது மக்களும் கண்டுங்கேட்டுங் களிக்கும் சிறப்பு மாநாடாக, இதனை நடத்தவேண்டுமென்று தமிழக அரசு எண்ணியிருக்கிறது.

இம்மாநாட்டைக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகிர் ஹுசேன் அவர்கள் தொடங்கி வைக்க இசைந்துள்ளார்கள். தமிழ்மறை தந்த திருவள்ளுவருக்கும், அமரகவி பாரதிக்கும், பாவேந்தர் பாரதிதாசனுக்கும் சிலையெடுக்கும் பொறுப்பைச் சென்னை மாநகராட்சி ஏற்றுக்கொண்டிருக்கிறது. திருவள்ளுவருடைய சிலையை நடிகர் திலகம் திரு சிவாஜி கணேசன் அவர்களும் கண்ணகியின் சிலையை தமிழக மாணவர்களும் நிறுவுவார்கள். மக்கள் திலகம் திரு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் தமிழகம் கண்ட தனிப் பெருந் தலைவரான மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணாவின் சிலையை நிறுவ முன்வந்துள்ளார்கள்.

## பல்வேறு நாடுகளிலிருந்தும் அறிஞர்கள்

கருத்தரங்கில் கலந்துகொள்ளச் சுமார் இருநூற்றைம்பது அறிஞர்கள் உலகில் பல்வேறு பகுதிகளிலிருந்தும்

வந்து கூடுவார்கள். கானடா, ஜெர்மனி, பிரான்சு, பின்லாந்து, இஃச்ரேல், ஜப்பான், ஹங்கேரி, அமெரிக்கா, ஹாங்காங், ஆஸ்திரேலியா, போலந்து, இத்தாலி, தாய்லாந்து, சுவீடன், தென் வியத்துநாம், செக்கோசுலோவேக்கியா, மெக்சிகோ, கொரியா, உருகுவே, சோவியத்து ஒன்றியம் ஆகிய நாடுகளைச் சார்ந்த அறிஞர்கள் தங்கள் வருகை குறித்து முன்னமேயே நமக்கு அறிவித்துள்ளனர்.

## *மாண்புமிகு முதலமைச்சர் தலைமையில் செயற்குழு*

இம்மாநாட்டைச் சிறப்புற நடத்த தமிழக அரசின் மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் ஒரு செயற்குழு அமைக்கப்பட்டிருக்கிறது. தமிழினத்தின் தொன்மையையும், பண்பாட்டையும், கலைச் சிறப்பையும், காவிய மாண்பையும், போர் முறையையும், வாழ்க்கைநெறியையும் புலவரைப் போற்றிப் புரந்த பெருமையையும் பலரும் கண்டும் கேட்டும் பரவசமடையும் வகையில் மாநாட்டை நடத்துவதற்குச் சீரிய ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன. இப்பணிகளைப் பல்வேறு குழுக்கள் பகிர்ந்துகொண்டுள்ளன. பல்சுவை நிகழ்ச்சிக் குழு, புறவேலைக்குழு, பொதுக் கூட்ட ஏற்பாட்டுக் குழு, பொருட்காட்சிக் குழு, இலக்கிய ஓவியக் காட்சி உட்குழு, சுற்றுலாக்குழு, சித்தவைத்தியக்குழு, மாநாட்டு மலர்க் குழு, வரவேற்புக் குழு, தமிழிசைக் குழு, முதலிய பல குழுக்கள் தங்களது பணிகளைச் செம்மையாகச் செய்து வருகின்றன. எனவே, இம்மாநாடு இத் தலைமுறையிலேயே தமிழர் காணவிருக்கும் விழுமியதொரு திருவிழாவாகத் திகழப்போவது திண்ணம்.

## *தமிழ் முதறிஞர்கள் முன்னின்று பணி புரிய..*

செயற்குழுவில் மாண்புமிகு கல்வி அமைச்சர் நாவலர் திரு இரா. நெடுஞ்செழியன், மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் கலைஞர் திரு மு. கருணாநிதி, முன்னாள் முதலமைச்சர் திரு எம். பக்தவத்சலம், புதுவைப் பேராசிரியர் பில்லியோசா ஆகியோர் துணைத் தலைவர்களாக இருக்கின்றனர். திரு இலக்குவனார், திரு மு. இராசாக்கண்ணனார் போன்ற பேராசிரியர்களும் மாநாட்டுப் பணிகளில் ஈடுபட்டிருக்கின்றனர். முத்தமிழ்க் காவலர் திரு கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்களும் துணைத் தலைவராக நியமிக்கப் பெற்றுள்ளார். அவரும் மாநாட்டு அமைப்புச் செயலாளர் தமிழ்ப் பெரும்புலவர் திரு மு. ரா. பெருமாள் முதலியார் அவர்களும் இணைந்து கீழ்க்காணும் வேலைகளைக் கவனித்துக்கொள்வார்கள்.

1. ஊர்வலம் ; 2. பொருட்காட்சி ; 3. பொதுக் கூட்டங்கள் ; 4. சிலையெடுத்தல் ; 5. மாநாட்டு மலர் வெளியிடல் ; 6. கொடை நாடகங்கள் ; நாட்டியங்கள் நடத்துதல் ; 7. பல்சுவை நிகழ்ச்சிகள் ; 8. சுற்றுலா.

இம்மாநாட்டிற்கான ஊர்வல ஏற்பாட்டைக் கவனித்துக் கொள்ளவும், மாநாட்டுச் செலவுக்கு நிதி திரட்டுவதற்காகக் கலை நிகழ்ச்சிகள் நடத்தவும், மாநாட்டை வெற்றிகரமாக நடத்தித் தரவும் திரைப்படம், நாடகம், ஆகிய துறைகளில் ஈடுபாடு கொண்டுள்ள பெருமக்கள் தங்களது ஆதரவையும், ஒத்துழைப்பையும் நல்க முன்வந்துள்ளனர். மாண்புமிகு முதலமைச்சர், மாண்புமிகு கல்வி அமைச்சர், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் முதலியோர், திரைப்படத் தயாரிப்பாளர்கள், இயக்குநர்கள் ஆகியோரைச் சந்தித்து மாநாட்டுப் பணிகள் குறித்து ஆய்வு செய்தனர். இது போலவே, அவர்கள் நடிகர்களையும் கலந்து பேசினர். இதன் விளைவாகத் திரு எஸ். எஸ். வாசன் அவர்கள் தலைமையில் ஊர்வலம் முதலிய ஏற்பாடுகளுக்கென்று ஒரு குழு அமைக்கப்பெற்றுள்ளது.

## *கலை நிகழ்ச்சிகள் முன்கூட்டியே நடைபெற..*

திருச்சி, வேலூர், நெல்லை, மதுரை, சேலம், கோவை, தஞ்சை ஆகிய இடங்களில் கொடை நாடகங்களும், நாட்டியங்களும் நவம்பரிலும் டிசம்பர் முதல் வாரத்திலும் நடைபெற விருக்கின்றன. செல்வி சந்திரகாந்தா குழுவினர் "பொன்னியின் செல்வி" என்னும் நாடகத்தை வேலூரிலும், நெல்லையிலும் நடத்துவர். இதற்கு மக்கள் திலகம் எம். ஜி. ஆர். தலைமை தாங்குவார். திரு டி. கே. எஸ். சகோதரர்கள் தங்களது புகழ் மிக்க "ஔவையார்" நாடகத்தைத் தஞ்சையிலும், மதுரையிலும் நடத்துவர். டிசம்பர் திங்கள் மூன்றும் நாள் நடிகர் திலகம் திரு சிவாஜி கணேசன் அவர்களின் 'வியத்துநாம் வீடு' என்னும் நாடகம் கோவையில் நடைபெறும். செல்வி செயலலிதாவின் "காவேரி தந்த கலைச் செல்வி" திருச்சியிலும், சேலத்திலும் நடைபெறும்.

## *கண்டோர் மெய்சிலிர்க்கும் ஊர்வலம்*

இம்மாநாட்டைச் சிறப்புறச் செய்யவிருக்கும் மாபெரும் ஊர்வல ஏற்பாட்டைத் திருவாளர்கள் எஸ்.எஸ். வாசன், ஏ. வி. எம்., ஏ. எல். எஸ்., நாகிரெட்டி முதலியோர் கவனித்து வருகின்றனர். "படைபெருத்தலின் பார் சிறுத்ததோ, பார் சிறுத்தலின் படை பெருத்ததோ" என்று கண்டோர் வியந்து போற்றும் வகையில் பிரம்மாண்டமாகத் தமிழர் அணி திரண்டு வரப்போகிறது. "வீதிகளில் நடப்பது கரும்பான காட்சி, காதுக்கு நறுந்தேன்" என்ற கவியரசரின் பாடலை நினைவு கூறத் தக்க விதத்தில் சென்னை திருநகரே இதுவரை கண்டிராத ஊர்வலமாய்த் திகழப்போகிறது. சினிமா அதிபர்களின் காட்சி அலங்காரங்களையும், வரலாற்றுப் புகழ்பெற்ற ஊர்வலங்களை நடத்தியுள்ள திரு நீலநாராயணன் திறமையையும் அறிந்தோர், இப்போதே கற்பனைக் கண்ணில் ஊர்வலத்தைக் காண முடியும்.

## *சிந்தனைக்கு விருந்தான கண்காட்சி ஏற்பாடுகள்*

பொருட்காட்சிக் குழுவின் தலைவர் திரு சா. கணேசன், தொல்பொருள் ஆராய்ச்சித் துறைத் தலைவர் திரு நாகசாமியும் மற்றும் பல வல்லுநர்களும் குழுவிலிருக்கின்றனர். பொருட்காட்சி சிறப்பாக விருக்குமென்று எதிர்பார்க்கலாம். புலவர்களின் சொல்லோவியங்கட்கு, ஓவியர் பாலு சகோதரர்கள் வண்ணம் தீட்டி உயிரூட்ட, ஓவிய



மன்னர் மாதவன் சில பாடல்களுக்குத் தமது கைவண்ணங் காட்ட, அதைத் திரு கணபதி போன்ற சிற்ப வல்லுநர்கள் சிலையாக வடிக்க எல்லாப் பணிகளிலும் கலை மணம் கமழ்ந்து நிற்கும். இலக்கிய ஓவிய உட்குழுவின் தலைவர் திரு மீ. ப. சோமசுந்தரம் அவர்கள் சுவைபட விளக்கும் காட்சிகள் அதில் இடம் பெறவிருக்கின்றன. கார், வேனில், விடியல், அந்தி போன்ற பருவ காலங்களையும் திணை வகைகளையும் வண்ண ஓவியமாக்க முடிவு செய்துள்ளனர். புகார்த் துறைமுகத்தில் பொதிகள் ஏற்றுமதியாவதும், நாற்படையும் அணிவகுத்துப் போர்க்களத்தில் நிற்பதும், பாண்டியன் அவையில் பத்தினித் தெய்வம் கண்ணகி வழக்குரைப்பதும், கண்ணில் நிற்கும் காட்சிகளாய் சித்தரிக்கப்படும்.

## *தமிழ் மணம் கமழும் மாநாட்டுச் சிறப்பு மலர்*

மாநாட்டுச் சிறப்பு மலர் வெளியிட மலர்க் குழு ஒன்று உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு மா. முத்துசாமி அவர்கள் தலைமையில் இயங்கி வருகிறது. மலர் அமைப்புக் குழுத் தலைவராகத் திரு எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் பொறுப்பேற்றிருக்கிறார். இதில் கட்டுரைக் குழுத் தலைவராகத் திரு முத்து. இராசாக் கண்ணனார் இருக்கிறார். மேலும், "புகாரில் ஒரு நாள்" என்ற கவிதைப் போட்டிக்குத் திரு மா. கி. தசரதன் தலைவராக இருக்கின்றார்.

## *கருத்தைக் கவரும் கலை நிகழ்ச்சிகள்*

மாநாட்டுக்கு வரும் வெளி நாட்டுப் பிரதிநிதிகளுக்குத் தங்கும் வசதி தந்து, அவர்களுக்கென தங்களது கார்களையும் தந்து போற்றி நிற்கும் பொறுப்பைச் சென்னை



*மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்களின் பொறுப்பில் உள்ள தமிழ் வளர்ச்சித் துறை இம் மாநாட்டைச் சிறப்புற நடத்த முழுப் பொறுப்பேற்றுள்ளது.*

வாழ் பிரமுகர்கள் பலர் ஏற்றுக்கொண்டுள்ளது நமக்கு மகிழ்ச்சியைத் தருவதாகும். சென்னை நகர செரீப் திரு மருதைப் பிள்ளை, திரு டி. எஸ். நாராயணசாமி ஆகியோர் இந்த ஏற்பாட்டைக் கவனித்து வருகிறார்கள். இப்பிரதிநிதிகளுக்குச் சனவரி 4 ஆம் தேதி முதல் 9 ஆம் தேதி வரை மாலை நேரங்களில் கலை விருந்து தருவதற்கான ஏற்பாடாகியுள்ளது. இசையரசு திரு எம். எம். தண்டபாணி தேசிகர், திரு சீர்காழி கோவிந்தராசன், மதுரை சோமு முதலியோர் இசை விருந்தளிப்பார்கள். மாநாட்டுக் கருத்தரங்கின் விவாதங்களில் இசைச் சித்தர் சிதம்பரம் திரு எஸ். செயராமன் அவர்கள் தமது கலை நுட்பம் காட்டி மகிழ்விக்க விருக்கிறார். திருமதி பாலசரசுவதி குழுவினர், திருமதி கமலா, திருமதி சுகரிதா, திருமதி ஏமாமாலினி, குமாரி வித்யா மூர்த்தி, திரு வழுவூர் இராமையாப் பிள்ளையின் மாணவிகள் ஆகியோர் கைவழி நயனஞ் செல்லக் கண்வழி மனமுஞ்செல்ல ஆடிக் காட்டுவர். இலட்சிய நடிகர் திரு எஸ். எஸ். இராசேந்திரன், திரு டி. கே. எஸ். சகோதரர்கள், திரு எஸ். வி. சகசுரநாமம், திரு சிவாஜி கணேசன் ஆகியோரது குழுவினர் நாடகங்களை நடிப்பார்கள். செல்வி வைசயந்திமாலா, திருமதி பத்மினி குழுவினர் நாட்டிய நாடகங்கள் நடத்துவர்.

இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகிர் ஹுசேன் கருத்தரங்கு மாநாட்டைத் தொடங்கி வைப்பார். அன்று மாநகராட்சியின் சார்பில் வெளிநாட்டுப் பிரதிநிதிகள் அனைவருக்கும் வரவேற்பு அளிக்கப் பெறும். பின்னர் 1968–ம் ஆண்டு ஜனவரி மாதம் 7–ம் தேதி அன்று கடற்கரையில் ஒரு பொதுக்கூட்டம் நடத்த மாநகராட்சியே ஏற்பாடு செய்யும். சனவரி 7 ஆம் நாள் ஞாயிறு மாலை கலாட்சேத்திரத்தில் அவர்களுக்கு ஒரு வரவேற்பு அளிக்கப்படும். சனவரி 10 ஆம் நாள் முதலமைச்சர் அவர்கள் பிரதிநிதிகளுக்கு விருந்து தருவார். அதை அடுத்து கரகம், காவடி, பொய்க்கால் குதிரை, பொம்மலாட்டம் போன்ற கலை நிகழ்ச்சிகளும் இருக்கும்.

## *தமிழன்னைக்கு எடுக்கும் பெருவிழா*

இப்பிரதிநிதிகள் அனைவரையும் மாநாடு முடிந்த பின்பு தமிழகத்துச் சிறப்புமிக்க இடங்களுக்கெல்லாம் அழைத்துச் செல்லச் சுற்றுலாக் குழு ஒன்று மாண்புமிகு அமைச்சர் திரு மதியழகன் தலைமையில் இயங்க விருக்கிறது. முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களும், திருவாசகமணி திரு கே. எம். பாலசுப்பிரமணியம் அவர்களும் அதில் துணைத் தலைவர்களாக இருக்கிறார்கள். சுற்றுலாவுக்குப் பிரதிநிதிகளை அழைத்துச் செல்லும் போது ஆங்காங்கே பொதுக்கூட்டங்கள் அமைக்கப் பொதுக் கூட்ட அமைப்புச் செயலாளர் திரு என். வி. நடராசனும் சுற்றுலாக் குழுவினருடன் பயணம் செய்வார். திருச்சி அனைத்திந்திய வானொலி நிலையத்தில் இசைக் கருவிகளை விளக்கவும் மஞ்சுவிரட்டு நிகழ்ச்சிகளை வெளிநாட்டவர்களுக்குக் காட்டவும் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் சிறந்த ஏற்பாடுகளைச் செய்திருக்கிறார்கள். எனவே, இம்மாநாடு இருபதாம் நூற்றாண்டில் தமிழன்னைக்கு நாம் எடுக்கும் பெருவிழா !

# ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்கள் மாநாடு..

[தமிழக ஊராட்சி ஒன்றியங்களின் பெருந்தலைவர்கள் மூன்றாவது மாநாடு, சென்னை இராஜாஜி மண்டபத்தில் 1967-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 20, 21, 22-ம் தேதிகளில் நடைபெற்றது. மகாநாட்டை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை துவக்கிவைத்தார். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி தேசியக் கொடியை ஏற்றி வைத்தார். மாநாட்டிற்கு திரு கே. இராஜாராம் நாயுடு, எம்.எல்.சி. தலைமை வகித்தார். மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு ஏ. கோவிந்தசாமி, மாண்புமிகு உணவமைச்சர் திரு கே. ஏ. மதியழகன், மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா ஆகிய அமைச்சர்களும் மாநாட்டில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள். மாநாட்டுத் தலைவர் திரு கே. இராஜாராம் நாயுடு அவர்கள் தன்னுடைய தலைமையுரையில் இரண்டு முக்கிய கருத்துக்களை வலியுறுத்தினார்.—(1) அபிவிருத்தி மாவட்டம் ( Development District ) ஒவ்வொன்றுக்கும் ஒருவர் வீதம் கொண்ட குழு ஒன்றை நியமித்து, உள்ளாட்சித் துறை அமைச்சர் குறிப்பிடும் ஒரு நாளில் அக்குழுவினர் அவரைச் சந்தித்துப் பேசி, அவர்கள் கூறும் குறைகளை சுமுகமாகத் தீர்த்து வைத்தல். (2) ஊராட்சி ஒன்றியங்களின் பிரதிநிதிகள் அடங்கிய நிரந்தர ஆலோசனைக் குழு ஒன்றை அமைத்து, ஆறு மாதத்திற்கு ஒரு முறையேனும் அக்குழு கூடி உள்ளாட்சி அமைச்சகம் சம்பந்தமான பிரச்சினைகளைப் பரிசீலித்து அரசாங்கத்திற்கு அதன் யோசனைகளைக் கூறவேண்டும், என்பவையே அவை.

திரு எம். ஸ்ரீராமுலு மாநாட்டிற்கு வந்திருந்தோரை வரவேற்றார். சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் திரு பி. ஜி. கருத்திருமனும் மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றினார். மாநாட்டில் ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் சம்பந்தமாக முக்கிய தீர்மானங்கள் சில நிறைவேற்றப்பட்டன. அவற்றுள் ஒன்று : "ஊராட்சித் தலைவரும், ஊராட்சி ஒன்றியத் தலைவரும் நேரடியானமுறையில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்" என்பது. முதலமைச்சரின் சிறப்பு ஆலோசகர் திரு நல். முருகேச முதலியார் அவர்களின் அறிக்கையையும் மாநாடு விவாதித்தது.]

[மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் உரையை 20-ம் பக்கத்தில் காண்க]





# உணவு உற்பத்திப் பெருக்கம்---மக்கள் தொகைச் சுருக்கம்

## ஊராட்சி மன்றங்களின் குறிக்கோள் குறித்து மாண்புமிகு முதலமைச்சர்

"மக்களாட்சி முறைக்கு அடித்தளமாக உள்ளது உள்ளாட்சி அமைப்புகள் என்பதையும், அந்த அடித்தளத்திற்கு வலுவேற்றினாலொழிய மக்களாட்சி செம்மையாக நடைபெறாதென்பதையும் நான் அடிக்கடி சொல்லி வந்திருக்கிறேன்.

உங்கள் பணி எந்த அளவுக்கு செம்மையாகவும் பாங்குடனும் நடைபெறுகிறதோ அந்த அளவு ஆட்சியின் பணியும் வெற்றிபெறும்.

அதனால்தான் இரண்டு முக்கியக் கடமைகள் உங்களிடம் விடப்பட்டுள்ளன. ஒன்று, உணவு உற்பத்தி; மற்றொன்று குடும்பக் கட்டுப்பாடு. ஒன்று பெருக்குவது; மற்றொன்று சுருக்குவது. இவ்விரண்டின் முக்கியத்துவத்தையும் மறுப்பவர் எவரும் இல்லை.

உணவுக்காக வெளிநாடுகளில் கையேந்துவதென்ற நிலை இழிவை ஊட்டுவதாகுமென்பதை எல்லோரும் உணர்ந்திருக்கின்றனர். இன்னும் சில ஆண்டுகளில் இந்நாடு உணவில் தன் தேவையைப் பூர்த்தி செய்து, தன்னிறைவு பெறும் என்பதோடு வெளிநாடுகளுக்கும் உணவை ஏற்றுமதி செய்யும் ஆற்றலை உடையதாக ஆகும் என்றால் அது வெறும் கனவல்ல, நடைமுறையில் நனவாகக்கூடியதொரு நம்பிக்கையே. 100-க்கு 80 பேர் விவசாயிகளாகவுள்ள இந்நாட்டில் உணவு விஷயத்தில் இதுகாறும் தன்னிறைவு பெறாமலே இருப்பது வருந்தத்தக்கது.

குடும்பச் செல்வத்தையே, குழந்தைப் பேற்றினையே பெரும் செல்வமெனக் கருதும் மக்கள் நம் மக்கள். ஒருவருக்கு எத்தனை ஏக்கர் நிலம் சொந்தம் என்பதைக் கேட்பதைக் காட்டிலும் எத்தனைக் குழந்தைகள் என்பதைக் கேட்டறிந்து மகிழ்கின்றனர்.

இதை நான் குறை சொல்லவில்லை. மக்கட்தொகை பெருக்கத்தையே உங்கள் நினைவுக்குக் கொண்டு வருகிறேன். நாட்டின் நிலப்பரப்பு,வளம், தொழில் திறன் அதிகமாக உள்ள சில நாடுகள் இன்னும் பலகோடி மக்களைத் தாங்கிக் கொள்ளும் நிலையில் உள்ளன. நம் நிலை அப்படியில்லை. தமிழ் நாட்டிலும் கேரளத்திலும் மக்கட் தொகை அழுத்தம் மிக அதிகம்.

இந்திய வரைப்படத்தைப் பார்த்தால் மேலே பரந்து விரிந்துள்ள நிலப்பரப்பு கீழே வரவர குறுகிக் கடலை ஊடுருவிச் செல்வதைக் காணலாம். இங்கு மக்கள் தொகை அழுத்தம் அதிகம். ஆகையினால்தான், தமிழர்கள் பல தீவுகளுக்குச் சென்றுகொண்டிருந்தார்கள். அந்நிலை இன்று இல்லை.

ஆகையினாலே மக்கட் தொகைப் பெருக்கத்தைக் குறைக்க வேண்டியதும் உணவு உற்பத்தியை அதிகரிப்பதும் மிக முக்கிய கடமைகள் என்பதில் எள்ளளவும் ஐயப்பாடு இல்லை.

### கிராம ராஜ்யம்

கிராம ராஜ்யம் என்பது காந்தியடிகளால் கூறப்பட்ட தத்துவமேயென்றாலும், பழங்காலம் முதலாய் கிராம ராஜ்ய முறை இருந்து வந்துள்ளது என்பதை சோழர் காலத்துக் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் நன்கு புலப்படுத்துகின்றன.

ஆங்கில அரசு அமைக்கப்பட்டதால் ஓரளவு கிராம ராஜ்ய அமைப்பு மங்கிற்று. இது புத்துயிர் பெற காந்தியடிகள் கிராம ராஜ்யமே சுயராஜ்யம் என்று குரலெழுப்பினார்.

கிராமங்களெல்லாம் ஒளியற்றதாய்—வேலையற்றதாய்—வசதிகளற்றதாய் இருக்கும் நிலை மாறவேண்டும். கிராமங்கள் ஒளிவீசக்கூடியவையாய்—மருத்துவ மனைகளை உடையனவாய்—பொழுதுபோக்கு இடங்களைப் பெற்றனவாய்—படிப்பகங்கள் நிறைந்ததாய் கிராமங்கள் சீர்திருந்த வேண்டும்.

ஏற்றம் இறைப்பது போல் :

கட்சிப் பாகுபாடு காரணமாக நட்புக் கெடுகிறதென்றால் தோழமைக்குக் குந்தகம் வருகிறதென்றால் கட்சி அரசியலே வேண்டாமென்று சர்வோதயத் தலைவர் ஜெயப்பிரகாஷ் நாராயணன் சொல்வதுபோல கட்சி அரசியலே வேண்டாமென்பேன். ஆனால் ஜனநாயகத்தில் கட்சிகள் தேவைப்படுகின்றன; அப்படி உள்ள கட்சிகளும் ஏற்றம் இறைப்பதுபோல ஒருவருக்கொருவர் துணையாக இருக்க வேண்டும்.

ஏற்றக்கோலுக்குள் நின்று செயல்பட வேண்டும். ஏற்றக் கோலுக்கப்பால் போனால் கிணற்றில் விழவேண்டி வரும். பயிருக்குத் தேவையான நீரும் கிடைக்காது. அந்த வகையில், அரசியல் கட்சிகளும் ஜனநாயகக் கோட்டுக்குள் இருந்து செயல்பட வேண்டும்.

ஏற்றப்பாட்டிலும் பாட்டுக்கு எதிர் பாட்டு என்று உண்டு. இரண்டுமே இனிமையானதாக இருக்கும். அதுபோலத்தான் ஜனநாயக அரசியலும் இருக்க வேண்டும்.

அரசியலுக்கு இத்தனை முக்கியத்துவம் அளிக்கப்படுவது நல்லதில்லை. எழுத்தாளனுக்கோ, விஞ்ஞானிக்கோ, கட்டிடக் கலைஞனுக்கோ, பொறியியலாளனுக்கோ இத்தனை முக்கியத்துவம் அளிக்கப்படுவதில்லை; இந்த நிலை நீக்கப்பட வேண்டும். சமூகத்துக்கு நிரந்தர நன்மைகளை ஏற்படுத்திடும் உழவர்களுக்கும் ஆசிரியர்களுக்கும் மருத்துவர்களுக்கும் முக்கியத்துவம் ஏற்பட வேண்டும். அத்தகைய நிலை ஏற்படாவிட்டால், நாட்டு முன்னேற்றம் தடைபடும்.

கிராமப் புறங்களில் அரசியலால் மனக் கிலேசம் வளராதிருக்கவேண்டும். உண்மையான கட்சி வளர்ச்சி, மாற்றார்களை மதிப்பதில்தான் ஏற்படும்.

சில ஊராட்சி ஒன்றியங்கள் திருத்தியமைக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கைகள் தமிழக அரசுக்கு வந்துள்ளன. சில ஒன்றியங்கள் கட்டுக்கடங்காத அளவு பெரியதாக உள்ளன. 60 ஊராட்சிகளை உள்ளடக்கியதாக சிலவும் வேறு சில ஒன்றியங்கள் சிறிய அளவில் பதினாறு ஊராட்சிகள் மட்டுமே உடையனவாகவும் இருக்கின்றன. இது குறித்தெல்லாம் கவனம் செலுத்தவேண்டியதுள்ளது.

முக்கியமாகக் கவனிக்கவேண்டியவை மூன்று பிரச்னைகள்: ஊராட்சிகளுக்கும், ஊராட்சி ஒன்றியங்களுக்கும் உள்ள உறவு முறை எப்படியிருக்கவேண்டும்.

ஊராட்சி ஒன்றியங்களுக்குள் ஆணையாளருக்கும் தலைவருக்குமிடையே நிலவவேண்டிய நல்லுணர்வு, அரசுக்கும் ஊராட்சி ஒன்றியங்களுக்குமிடையே இருக்கவேண்டிய தொடர்பு என்பது குறித்தெல்லாம் நல்ல முறையில் சிந்தித்து தீர்மான வடிவில் உங்களது யோசனைகளைத் தெரிவியுங்கள்.

இம் மாநாட்டில் நீங்கள் கலந்துரையாடி தக்க தீர்மானங்களெடுத்து அனுப்பி வைத்தால் அவற்றை உரிய மதிப்புடன் கவனித்து அவசியமானதைச் செய்வேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்".

[21, 22, 23 அக்டோபர் 67-ல் சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற தமிழக ஊராட்சி ஒன்றியங்களின் பெருந்தலைவர்கள் மகாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரை அவர்கள் ஆற்றிய பேருரையிலிருந்து....]






## சென்னை மாநகருக்கு—குடிநீர்ப் பெருக்கத் திட்டம்
### (காவிரி ஆறு வாயிலாக—வீராணம் ஏரியிலிருந்து)

- வளர்ச்சித் தேவைகளுக்கேற்ப வகுக்கப்பட்டது—காவேரி வாயிலாக தலைநகருக்குக் குடிநீர்த் திட்டம்.
- திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு ஆகும் செலவு ரூ. 24.5 கோடி.
- வருடாந்திர பராமரிப்பிற்கு—ரூ. 55 இலட்சம் ஆகும்.
- சென்னையிலிருந்து 135 மைல் தொலைவில் உள்ள வீராணம் ஏரியிலிருந்து—

  தலைநகரின் தாகம் தீர்க்க—குழாய்கள் மூலம் குடிநீர் கொண்டு வரப்படும்.
- இதனால் பாசனத்திற்கு ஊறு விளையாது.
- வழியில் உள்ள ஊராட்சிகளுக்கும்—நகரங்களுக்கும் இத் தண்ணீரை வழங்குவது பரிசீலனையில் உள்ளது.

காவிரி ஆறு வாயிலாக வீராணம் ஏரியிலிருந்து—சென்னை நகருக்கு குடி தண்ணீர் கொண்டு வருவதற்கான திட்டத்தின் கால்கோள் விழா, சென்னையில் 1967-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 30-ம் தேதியில் நடைபெற்றது. அவ்விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு சி. என். அண்ணுதுரை அடிக்கல் நாட்டினுர். மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு மு. கருணுநிதி, மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் திரு எஸ். ஜே. சாதிக் பாட்சா, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி ஆகியோர் விழாவில் கலந்து கொண்டனர்.

[அட்டைப்படம் : காவிரி ஆறு வாயிலாக வீராணம் ஏரியிலிருந்து சென்னைக்கு குடிநீர் கொண்டு வரும் திட்டத்தின் கால்கோள் விழா—30-10-1967.]



G.N.—2A

# தன்னைத் தானே நடத்திக் கொள்ளும் தன்மையுடன், ஆதாயமும் தரக்கூடிய திட்டம்

திட்டத்தைத் துவக்கிவைத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது:

"மாநகராட்சியிலுள்ள பல்வேறு கட்சிகள் வேறு பல வற்றில் கருத்து மாறுபாடு உடையவை யென்றாலும் சென்னைக்குக் காவிரி நீர் கொண்டுவரப்பட வேண்டு மென்பதில் பல வருடங்களாக ஒன்றுபட்ட குரலெழுப்பி வருகிறார்கள்.

**ஒருமித்த ஆதரவு:**

எல்லோராலும் ஒருமித்த கருத்தோடு ஆதரிக்கப் படுகிற திட்டமாக இது உள்ளது.

சுகாதாரமான வாழ்க்கைக்கு ஒவ்வொருவருக்கும் 40 காலன் தண்ணீராவது கிடைக்கவேண்டுமென்கிறார்கள். சென்னை நகரில் இப்போது கிடைப்பது தலைக்கு பத்து காலன்கள்தான். பம்பாயிலும், கல்கத்தாவிலும் 60, 70 காலன்கள் வரை கிடைக்கிறது. அந்த அளவு முடிய வில்லையென்றாலும் நாம் தலைக்கு 40 காலன் என்ற அளவையாவது அடைந்தாக வேண்டும்.

**பாசனத்துக்கு ஊறு விளையாது:**

வீராணம் ஏரியிலிருந்து தண்ணீர் கொண்டுவருவ தால் ஏற்படக்கூடிய நிலைமை பற்றி, அப்பகுதியின் முக்கிய நிலச்சுவாந்தாரர்களான திரு வாகீசம்பிள்ளை, திரு கனகசபை பிள்ளை முதலானோர் என்னிடம் வந்து விவாதித்தனர். அப்போது பொதுப் பணித் துறைச் செயலா ளர் திருமலை அவர்கள் நல்ல விளக்கம் அளித்து ஐயப் பாடுகளைப் போக்கினர். மேட்டூரிலிருந்து வருகிற நீரைத் தாங்குகிற ஒரு பாத்திரமே வீராணம் ஏரி. எவ்வளவு தண்ணீர் தேவையோ அதை அந்தப் பாத்திரத்துக்குள் விட்டு அதை எடுத்துக்கொள்வோம் என்று விளக்கினர். சென்னை நகரத் தேவைக்காக நாம் எடுக்கும் தண்ணீரின் அளவு அங்கு விவசாயத்துக்காகப் பயன்படுவதில் 100-ல் 1 பங்காகும்.

விவசாயத்துக்குத் தேவையான பாசன நீர் சென்னை நகரவாசிகளுக்கா என்ற ஒரு கேள்வியை எழுப்பு கிறார்கள். சென்னையைச் சேர்ந்தவர்கள் என்று பார்த் தால் 100-க்கு 50 பேர் காவிரிக்கரையிலிருந்து வந்தவர்கள் தான். எங்கெங்கு தேவையோ அங்கே செல்வது காவிரியின் இயல்பாக உள்ளது. கன்னட இலக்கியத்தைக் காட்டிலும் தமிழ் இலக்கியத்தில்தான் காவிரி பற்றி பலப்பட கூறப்பட்டுள்ளது. உயிரை ஊட்டியதாக, நாகரி கத்தின் தொட்டிலாகச் சித்தரிக்கப்பட்டுள்ளது காவிரி.

இத்திட்டத்தின் பயனாக, கூடுதலாகக் கிடைக்கக்கூடிய நீரை, தொழிற்சாலைகளுக்கும் துறைமுகத்தை நாடி வரும் கப்பல்களுக்கும் விற்பதன் மூலம் ஆண்டொன் றுக்கு ரூபாய் ஒரு கோடி முதல் ஒன்றரை கோடி வரு வாய் கிடைக்கும். இத்திட்டம் தன்னைத்தானே நடத்திக் கொள்ளும் தன்மை கொண்டதென்பதோடு, இன்னும் சில ஆண்டுகளில் ஆதாயம் தரத்தக்க திட்டமாகவும் ஆகும்.

மகிழ்ச்சியோடும், மனநிறைவோடும், எதிர்காலம் நன்றாக இருக்குமென்ற நம்பிக்கையோடும் இத்திட் டத்தைத் துவக்கி வைத்திருக்கிறேன் என்பதைத் தெரி வித்துக்கொள்கிறேன்."

❖ ❖ ❖

# "சென்னை மாநகர் வரலாற்றில் ஒரு பொன்னாள்."

[மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு மு. கருணாநிதி]

"மருங்கு வண்டு சிறந்தார்ப்ப
மணிப்பூ ஆடை அதுபோர்த்துக்
கருங்க யற்கண் விழித்தொல்கி
நடந்தாய் வாழி காவேரி

கருங்க யற்கண் விழித்தொல்கி
நடந்த வெல்லாம் நின்கணவன்
திருந்து செங்கோல் வளையாமை
அறிந்தேன் வாழி காவேரி."

சென்னை மாநகர் வரலாற்றிலேயே இந்நாள் ஓர் ஒப்பிலாப் பெருமையும் பேருவகையும் அளிக்கக்கூடிய பொன்னாள் ஆகும். எழிலும், பொலிவும் மிகுந்த நம் மாநகர் தொழில், வாணிபம் முதலிய துறைகளி லும் புற ஊர்களிலிருந்து இவ் வளர்ச்சிக்கு ஏற்ற முறையில் மக்கள் நகரிலும், நகர்ப்புறங்களிலும் குடியேறி பல குடியிருப்புப் பகுதிகளும் பெருகி வருகின்றன. தொழில் தேவை, கூடிவரும் மக்களின் தேவை, குடிநீர்



தவை இவை அனைத்தும், நாம் எப்படி கணக்கிட்ட போதிலும், நம் மதிப்பீடுகளை விஞ்சிக் கடந்தே கூடி வருகிறது. இன்னும் வருங்காலத்தில் நம் வளர்ச்சிக்கு ஏற்ப தேவைகள் பெருகியே தீரும்.

வளர்ச்சித்தேவைகளுக்கேற்ப நகர வாழ்க்கை வசதிகள், பொது நலப் பணிநிலைகள், குடிநீர் முதலிய பல்வேறு பண்பட்ட வாழ்க்கைக்குரிய தேவைகளைக் கருத்தில் கொண்டு, திட்டங்கள் வகுத்து, கூடிய அளவில் தேவை கள் எழும் முன்னரே, அல்லது அவ்வப்போதாவது இவைகளை நிறைவேற்றுவதும் இன்றியமையாதது. முன் னேற்றப் பாதையிலே செல்லும் எந்த அரசும் இந்த முறையில்தான் செயல்படும்; செயலுறவேண்டும். இதற்குத் தகுந்த முறையிலேதான் இன்றைய அரசு பதவி ஏற்ற ஒரு சில திங்களுக்குள்ளேயே பல ஆண்டு களாக வலியுறுத்தப்பட்ட இம்மாநகரின் குடிநீர் பற்றாக்குறையை அகற்ற வற்றா நிலையான காவிரியி லிருந்து இம்மாநகருக்கு நீர் வழங்கும் திட்டத்தை ஏற்று நடத்த முன் வந்துள்ளது.

### நம்பிக்கை முழுமை பெறுகிறது

உங்களுக்கு நினைவில் இருக்கலாம்: நம் தமிழக முதல் வர் சட்டமன்ற பேரவைக்கு அளித்த முதல் நிதி நிலை உரையிலேயே, சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு தலையாய இடம் அளித்து அதற்கு இவ் வாண்டே செலவிட கணிசமான தொகையும் (10 லட்சம் ரூபாயும்) ஒதுக்கியுள்ளார்கள். இது நம் மாநில அரசிற் கும் நம் முதல்வருக்கும் நம் மாநகர் மேம்பட்ட முறையில் சிறந்த வசதிகளோடு மேன்மேலும் வளர வேண்டும் என்ற கருத்தின் வெளியீடாகும். கூவம் ஆற்றிற்கு கரை வகுத்து, அதனைச் சீரமைத்து, கடல் நீரை உட்புகுத்தி அந்தக் கரைகளில் வாழும் குடிசை மக்களுக்கும் நல் வாழ்வு பிறக்கும் வகைக்கான திட் டத்தையும் நம் தமிழக முதல்வர் அவர்களே ஒரு சில திங்களுக்கு முன் துவக்கி வைத்தார்கள். இம்மாநகரின் பொது நலத்திற்கு எவ்வளவு அத்திட்டம் உதவுமோ அத்துணை இன்றியமையாதது, இன்று நம் முதல்வர் அவர்கள் துவக்கி வைக்கும் இக்குடிநீர்ப் பெருக்கத் திட்டம்.

### வளர்ந்து வரும் சமுதாயத்தின் பெருகி வரும் தேவைகள்

தொழில் விரிவு, மக்கள் பெருக்கம், குடிநீர்த் தேவை அதற்கேற்ற அளவில் பெருகுதல், இவையெல் லாம் வளரும் பொருளாதார அமைப்பின் இயற்கை விதிகள். இவ்வளர்ச்சி நிலைகளை எந்த ஒரு தரு ணத்திலும் நிறுத்தி, எக்காலத்திற்கும் ஈடு செய்யும் வகையில் பொதுநல வசதிகளைக் கட்டுப்படுத்த முடியாது. இவ்வசதிகள் பெருகப் பெருக தேவைகளும் கூடு வது பல நாடுகளிலும், நகரங்களிலும் கண்டுள் ளோம். கணக்கிலடங்கும் நம் நிதி நிலைக்குள், நமக்கு உற்ற பல்வேறு தேவைகளையும் பரவலாக நிறைவேற்றுவதே முறை. இந்த அடிப்படையில்தான் இன்று துவங்கும் இத் திட்டம் அரசினரால் ஏற்கப்பட்டுள்ளது. மாநகரின் மொத்தத் தேவை 1981-ம் ஆண்டில் 1,750 லட்சம் காலன்களாகும்; ஆனால் தற்சமயம் வழங்கப்படும் குடிநீர் அளவு 350 லட்சம் காலன்களே. அரசினர் மேற்கொண்டுள்ள ஒரு சில இடைக்காலத் திட்டங்களால் இன்னும் ஒரு 100–லிருந்து 150 லட்சம் காலன்கள் நாள் ஒன்றுக்கு அதிகமாகக் கிடைக்கப்பெறும். இருப்பினும் நம் மற் றைய நீர்நிலைகளைக் கணக்கிட்ட பின்பும் கூட 1,100 லட்சம் காலன்கள் குறைந்த அளவு நமக்கு அதிகமாகத் தண்ணீர் தேவை என ஐயமின்றி கூறலாம். இப் பொழுதே நகருக்குத் தேவையான முழு நீரையும் வழங்க முடியாத நிலையிலேயே நாம் உள்ளோம். இதை உடனடியாக சரிக்கட்டாவிட்டால் மக்களின் வாழ்க்கை வசதியற்று, இம்மாநகரின் வளர்ச்சிக்கும் தடை ஏற்பட்டு விடும் என்ற அச்சத்தை ஏற்கனவே ஒரு சிலர் தொனித்துள்ளார்கள். தொழில் வளர்ச்சிக்கும் இது குந்தகம் விளைவிக்கும்.

நான் குறிப்பிட்ட 1,100 லட்சம் காலன்கள் முழு வதையுமே ஈடு செய்யக்கூடிய நிலையில் ஆராய்ந்து திட்டம் வகுக்கலாகாதா என்ற ஒரு கேள்வி எழலாம். இப் பற்றாக்குறையின் பெருமளவு ஈடுசெய்யக்கூடிய நிலை கிருஷ்ணா–காவிரி போன்ற வற்றா ஆறுகளே. ஏற்கனவே மைசூர், மகாராஷ்டிரம், ஆந்திரப் பிரதேசம், ஆகிய மூன்று மாநில அரசுகளும், சென்னை மாநகர், புறநகர் இவற்றின் தேவைகளுக்கு கிருஷ்ணா—கோதாவரி ஆற்று நீரில் ஒவ்வொரு மாநிலமும் முறையே, 5,000 மில்லி யன் கன அடி நமக்கு தர இசைந்துள்ளனர். இதற்கு நாம் அவர்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளோம். ஆனால் இவ்விசைவு ஈடேற திட்டங்கள் வகுக்கப்பெற்று, செயலாக வேண்டும். இதற்கு சற்றுக்காலம் பிடிக்கத் தான் செய்கிறது. ஆயினும் நம்முடைய வருங்காலத் தேவைகளுக்கு ஈடுசெய்ய நம் அண்டை மாநிலங் களின் நல்லெண்ணமும், உதவியும் நமக்குத் தேவை யாகத்தான் உள்ளது. தக்க தருணத்தில் அவ்வுதவியை நாம் பெறுவோம் என்ற நம்பிக்கையும் எனக்கு உண்டு. இதற்கான முயற்சிகளை இவ்வரசு தொடர்ந்து கருத்திற்கொள்ளும்.

ஆனால், இப்பெருந்திட்டங்கள் உருவாகும்வரை நாம் வாளாயிருத்தல் ஒண்ணாது. நான் ஏற்கனவே குறிப்பிட் டேன், இத்திட்டத்தின் உடனடித் தேவையை. நம்மு டைய தற்போதைய கூடுதல் தேவைக்கும் நாம் உடனடி யாக செயல்படக்கூடிய முறைக்கும், ஏற்ற ஒரு திட்டம் இப்பொழுது தொடங்கும் திட்டம். இப்பொழுது வழங்கப் பெறும் 350 லட்சம் காலன்கள் எளிதில் இத்திட்டத் தால் இரட்டிக்கும். நம்மை எதிர்நோக்கி நிற்கும் ஒரு சில ஆண்டுகளுக்கு இத்திட்டத்தால் பயனளிக்க முடியும். அதற்கும் விஞ்சிய தேவைகளை ஈடு செய்ய நான் குறிப் பிட்ட கிருஷ்ணா–கோதாவரி முதலிய ஆறுகளை நோக் கித்தான் விழைதல் வேண்டும்.

காவிரியின் போக்கில் பல்வேறு இடங்களைத் தேர்ந்தெடுத்து ஒவ்வொன்றின் இயல்புகளையும் ஆராய்ந்து பல திட்டங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இவைகள் எல்லாவற்றிலும் வீராணத்திலிருந்து சென்னைக்குக் குடிநீர் கொண்டுவரும் திட்டத்தையே அரசு உகந்ததாக கருதியுள்ளது. வீராணத்திலிருந்து சென்னைக்கு குடிநீர் கொண்டு வருவதால் ஏற்கனவே அவ்வேரியின் கீழ் நடைபெறும் பாசனத்துக்கு ஊறு ஏற்படுமோ என்ற அச்சம் சில நாட்களுக்கு முன் தெரிவிக்கப்பட்டது. இதனை, நான் ஏற்கனவே சட்டமன்றப் பேரவையில் விளக்கியுள்ளேன். வீராணம் ஏரியிலிருந்து பாசன நீரை நாம் சென்னை நகருக்குக் கொண்டுவரப்போவதில்லை. அந்த அளவுக்கு தண்ணீரும் அந்த ஏரியில் நமக்கு கிட்டாது. வீராணம் ஏரி காவிரிப் பாசனத் தொடரில் ஒரு கூறு. ஒரு பாத்திரம் போல, பெரிய நிலையிலிருந்து அள்ளி எடுக்க உதவும் ஒரு வசதி. காவேரி நீரை வீராணம் ஏரியின் வழிச் செலுத்தி, மின் விசை இறைவைகளால் ஏற்றி, குழாய்கள் மூலமாக சென்னைக்குக் கொண்டுவர ஏற்பாடு, குடிநீர்த் தேவையை பாசன தேவைக்கு மேல் உள்ள நிலைகளிலிருந்தும் அளவிலிருந்தும் மட்டுமே சென்னைக்கு எடுத்துக்கொள்ளப்பெறும். பாசன மட்டங்கள் ஒவ்வொரு மதகிலும் அந்தந்தக்காலத் தேவைகளுக்கேற்ப காத்துத் தேக்கிய பின்னரே குடிநீர் இறைவை தொடங்கும். எனவே, இப்பொழுது உள்ள வீராணம் ஏரிப்பாசனம் எந்த விதத்திலும் பாதிக்கப்பெறாது என்பது ஐயமற உறுதி கூற நான் விழைகின்றேன். இருப்பினும் ஏரியில் தேவையான மராமத்துக்கள், பாசன சீரமைப்பு, தண்ணீர் ஏறி பாய்வதற்கான கால் அமைப்புகள், தூர் எடுப்பது இவற்றின் தேவையை அரசினர் நன்கு ஆய்ந்து தக்க நடவடிக்கைகளையும் மேற்கொண்டு, பாசன முறை இப்பொழுது உள்ளதைவிட இன்னும் நன்கு அமைய செயற் குறிப்புகள் தயாரிக்கப் பணித்துள்ளனர். குடிநீர்த் திட்டம் மேற்கொள்ளும் இத்தருணத்தில் பாசன வசதிக்கும் பிறக்கும் நல்ல காலத்தை நான் இங்கு அடிக்கோடிட்டு சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.

நான் ஏற்கனவே கூறினேன். சுமார் 24 கோடி ரூபாய் செலவில் தொடங்கும் இத்திட்டத்தில் 400 லட்சம் காலன்கள் கூடுதலாக இம்மாநகருக்கு குடிநீர் வழங்க இயலும் என்று. நம்முடைய பற்றுக்குறையின் ஒரு பகுதியைத்தான் இத்திட்டம் ஈடுசெய்யும். இதற்கு மேலும் நாம் நிச்சயமாக எதிர்பார்க்கக்கூடிய தேவைகளை ஈடுசெய்ய ஏற்கனவே இசைந்துள்ளதுபோல் பிற மாநிலங்களில் உள்ள நீர்நிலைகளிலிருந்து திட்டங்கள் அமைக்கப்பெற வேண்டும். இதனை இப்பொழுதிருந்தே தொடர்ந்து ஆய்ந்து செயல்படும் வகையில் தக்க தருணத்தில் நடவடிக்கை மேற்கொள்ள, நம் பொறியியல் வல்லுநர்கள் முனைந்து செயலாற்ற வேண்டும். இதற்கு வேண்டிய பிற மாநிலங்களிலுள்ள அரசினர், பொறியியல் வல்லுநர்கள், அதிகாரிகள் இவர்களுடைய ஒத்துழைப்பும் கிடைக்கும் என்று நம்புகிறேன்.

### மாநகராட்சி காட்டியுள்ள ஊக்கம் பாராட்டிற்குரியது

நம் பொறியியல் வல்லுநர்கள் எந்த வேலையையும் மேற்கொண்டதிலிருந்து முடிக்கும் வரை இடைவிடாத உழைப்புடனும், கருத்துடனும் செய்வார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு. அதோடு வீண் விரயமில்லாமல் சிக்கனமாக செயல்புரிதல் வேண்டும். எந்தெந்த கருவிகளை உபயோகித்து, எந்த முறைகளைக் கையாண்டால் குறைந்த செலவில் அதிகப் பயன் நமக்குக் கிட்டும் என்பதை நன்கு ஆய்ந்து சிக்கன முறைகளை அவர்கள் மேற்கொள்ள வேண்டும்.

இந்தத் திட்டத்தை உருவாக்குவதிலும், பின்னர் அதனைப் பேணி நடத்துவதிலும் சென்னை மாநகராட்சி காட்டியுள்ள ஊக்கம் போற்றத் தக்கது. இந்தக் குடிநீர் பெருக்குத் திட்டத்தின் அவசியத்தை உணர்ந்தவர்கள் அவர்களுமாவர். இத்திட்டத்தின் மதிப்பீடு 24 கோடிக்கு மேல் ஆகிறது. இதனை இப்பொழுது மாநில அரசு ஏற்று வீராணத்திலிருந்து சென்னை வரை தண்ணீரை கொண்டுவரும் பொறுப்பை மேற்கொள்ளுகிறது. மாநகராட்சிக்கு நீர் வழங்கும் நிபந்தனைகளையும் முறைகளையும் பற்றி தகுந்த முறையில் முடிவுகள் எடுக்கப்படும்.

"தமிழ்நாட்டை மகவாய் வளர்க்கும் தாயாகி ஊழி உய்க்கும் பேருதவி ஒழியாமல்" நின்று வாழ்வது காவிரி. இன்று உண்ண உணவு மட்டுமின்றி, பருக நீரும் காவிரி நமக்கு அளிக்கிறாள்; அதுவும் தொலைவில் உள்ள சென்னை நகர மக்களுக்கு அளிக்கிறாள். அக்காவிரி வாழி என வாழ்த்தி, நம் முதல்வர் அவர்கள் திருக்கரத்தால் இத்திட்டத்திற்கு அடிக்கல் நாட்டி துவக்கி வைக்குமாறு உங்கள் சார்பாகவும் என் சார்பாகவும் அவர்களை பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்."

[சென்னை குடிநீர் திட்ட துவக்க விழாவில், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு மு. கருணாநிதி அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து]

## காவிரி ஆறு வாயிலாக வீராணம் ஏரியிலிருந்து சென்னை நகருக்கு குடிநீர்த் திட்டம்: (விவரக் குறிப்புகள்)

1951-ம் ஆண்டு திட்டக்குழு அதன் தீர்ப்பில் (Planning Commission Award) சென்னையின் குடிநீரின் தலையாய தேவையை அங்கீகரித்து அதற்கென நீரை ஒதுக்கி வைக்க ஏற்றுக்கொண்டது. இதை ஆமோதித்து கோசலாக் குழுவும் தனது அறிக்கையில் கிருஷ்ணா, பெண்ணாறு திட்டத்தில் சிந்திக்கப்பட்ட சென்னைக் கால்வாய் நிரந்தரமாகச் சென்னைத் தண்ணீர் பிரச்னையைத் தீர்க்கும் எனக் குறிப்பிட்டுள்ளனர். ஆனால் 1953-ம் ஆண்டு ஆந்திரநாடு நம்மிடமிருந்து பிரிந்து போகவே, கிருஷ்ணா நதியிலிருந்து தண்ணீர் கொண்டு வரும் பிரச்னை இரு மாநிலங்களும் தொடர்பு கொண்டு முடிக்க வேண்டியதாயுள்ளது.

பிறகு, சென்னையின் குடிநீர்த் தேவைக்காக கிருஷ்ணா நதியிலி

[30-ம் பக்கம் பார்க்க]





### புதிய முயற்சி—

## குடுமியான்மலை

# காடுகள் கழனியாகின்றன...

[திருச்சிராப்பள்ளி மாவட்டம், புதுக்கோட்டை கோட்டத்தில் உள்ள குடுமியான் மலையில், சீரணிப் படையினர் காட்டைத் திருத்தி கழனியாக்குகின்றனர். இந்த இடத்தில் ஒரு விவசாயப் பண்ணை அமைய இருக்கிறது. காட்டைத் திருத்தி கழனியாக்கும் இப்பணியில் புதுக்கோட்டை கோட்டத்தைச் சார்ந்த சீரணிப் படையினர் ஈடுபட்டுள்ளனர். அந்தப் பணியைத் துவக்கி வைப்பதற்கான விழா, திருச்சிராப் பள்ளி மாவட்ட சீரணிப் படைத் தலைவர் திரு அன்பில் தர்மலிங்கம் தலைமையில் 1967-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 11-ம் தேதியில் நடைபெற்றது. மாண்புமிகு முதலமைச்சரின் அந்தரங்கச் செயலாளர் திரு. கே. சொக்கலிங்கம், ஐ. ஏ. எஸ்., இச்சீரிய பணியினைத் துவக்கி வைத்தார்.

உணவு உற்பத்தித் துறையில், தமிழகம் இன்று தலைநிமிர்ந்து முன்னேறுகிறது. அந்த வெற்றிப் பாதையில் முக்கியமானதொரு மைல் கல்லாக, குடுமியான்மலை விவசாயப் பண்ணை திகழும் என்பதில் ஐயமில்லை—ஆசிரியர்.]

திருச்சி மாவட்டம், புதுக்கோட்டை கோட்டம், அன்னவாசல் ஊராட்சி ஒன்றியத்தினுள் அமைந்துள்ள குடுமியான்மலை, சமதளமாக சுமார் 5,000 ஏக்கர்கள் பரப்பளவில் அமைந்துள்ளது.

புதுக்கோட்டை அரசர் வேட்டையாடுவதற்கெனவே பாதுகாக்கப்பட்ட காடாகும் இது. அருகேயுள்ள குடுமியான் மலை புராதனமானது. பாண்டிய மன்னரான பூச்சி நாயக்கர் காலத்தில் கட்டப்பட்ட கோயில் சிற்பக்கலை யழகு மிளிர நிற்கிறது. சுற்றிலும் உள்ள, காடு கல் காடு அதிகமில்லாத, சத்துள்ள செவ்வல் மண் வளம் கொண்டது.

இங்கே பெரிய அளவில் மாநில விவசாயப்பண்ணை அமைக்க அரசினரால் திட்டமிடப்பட்டுள்ளது. முதற்படியாக 1,000 ஏக்கர் நிலப்பரப்பு, விளைநிலமாகச் செப்பனிடப்படும். பண்ணை மேலாளரும், ஓர் உதவிப்பண்ணை மேலாளரும், இரண்டு களப்பணியாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். ஆக்க வேலைகளுக்கென ரூபாய் இரண்டு லட்சம் அளிக்கப்பட்டுள்ளது. பண்ணை வேலைக்கென இரண்டு டிராக்டர்கள் வாங்கப்பட்டுள்ளன. இரண்டு புல்டோசர்கள் மாநில விவசாயத் துறையிலிருந்து கொடுக்கப்பட்டு, மரங்களை அழித்து, மேடுபள்ளத்தைச் சமதளமாக்க முனைந்துள்ளன. 1968 மார்ச் மாதத்திற்குள் 500 ஏக்கர்கள் செப்பனிடப்பட்டு 16 கிணறுகள் பூர்த்தி செய்வதென்றும் ஜூன் மாதத்திற்குள் 1,000 ஏக்கர் விளைநிலமாக்கப்பட்டு 50 கிணறுகள் வெட்டி முடிப்பதென்றும் திட்டமிடப்பட்டுள்ளது. இப் பிரதேசத்தில் சமதளத்தில் 10 அடிக்குள் தண்ணீரும், சற்று மேடான இடத்தில் 25 அடிக்குள் தண்ணீரும் ஊற்றெடுக்கிறது. விவசாயத் துறையினரால் அளிக்கப்பட்ட இரண்டு துளையிடும் இயந்திரங்கள் வேலை செய்கின்றன. 21 ஏக்கர்களில் கம்பு, உளுந்து, கொள்ளுவிதைக்கப்பட்டுள்ளது. 5 ஏக்கர்களில் காய்கறி பயிரிடப்படும்.

மேட்டுப்பாங்கான, கல்சரளையான பகுதிகளில் சுமார் 150 ஏக்கர் வரை மரங்கன்றுகள் வைக்கப்படும். தென்னையும் மற்றைய பழமரங்களும் நட திட்டமிடப்பட்டுள்ளது.

### வேலை வாய்ப்புக்கு வகை செய்யும்

பொதுவாக, திருச்சி மாவட்டத்தில் அன்னவாசல் ஊராட்சி ஒன்றியம், விவசாய தொழில் துறையில் மிகவும் பின்தங்கிய பகுதியாக இருக்கிறது. இங்கு, இந்தப் பெரிய விவசாயப் பண்ணை அமைவதன் மூலம், அப்பகுதி மக்கள் விவசாயத் துறையில் முன்னேற்ற மடையவும், வேலை வாய்ப்புக்கள் பெறுவதற்கும், இப்பண்ணை வழிவகை செய்யும்.

உயர்ந்த ரகத்தைச் சேர்ந்த சி. எஸ். எச். 1 சோளம், எச். பி. கம்பு, டெக்கான் சோளம் போன்ற புஞ்சை பயிர்களுக்கான விதைகளை உற்பத்தி செய்து, பெருமளவில் வழங்க இப்பண்ணையில் அமைந்துள்ள மண் வளம் தகுதியுள்ளதாக இருக்கிறது. புஞ்சை தானிய பொருக்கு விதைகளை அதிக அளவில் பயிர்செய்து 'பாக்கேஜ்' திட்டத்தை முழு அளவில் செயல்படுத்தவும் வாய்ப்பு இருக்கிறது. இங்கே ஒரு விவசாயப்பள்ளி ஏற்படுத்தலாமா என்று அரசு சிந்தித்து வருகிறது.

### இலாபகரமான திட்டமாக இருக்கும்

இப்பண்ணையின் வாயிலாக சுயதேவையை பூர்த்தி செய்துகொள்வதற்கும், இதை லாபகரமாக நடத்தவும் அறிகுறிகள் காணப்படுகின்றன. பண்ணைக்கருகில் வெள்ளாறு என்னும் ஆறு பாய்கிறது. பூமிக்கடியில் நீரோட்டம் தரை மட்டத்திலிருந்து குறைவான ஆழத்தில் கிடைப்பது இப்பண்ணையை நீர்வளம் மிக்கதாகச் செய்துவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இப்பண்ணையினால் அரசுக்கு நல்ல வருவாய் கிட்டும். திட்டம் நிறைவேறினால், ஆண்டிற்கு ரூ. 10 லட்சம் அரசுக்கு வருமானமாகக் கிடைக்கும் என்று விவசாயத்துறை இயக்குநர் மதிப்பிட்டுள்ளார்.

குடுமியான்மலை மாநில அரசு விவசாயப் பண்ணை உணவு உற்பத்தியில், தமிழகம் தன்னிறைவு பெறுவதில் முக்கிய பங்கினை ஏற்று, முன்னோடியாகத் திகழும் என்பதில் ஐயமில்லை.

விளக்கம்: கடைசி அட்டைப்படம் (சீரணிப் பணியுடன்).

# குடுமியான்மலை

## (வரலாற்றுக் கண்ணோட்டம்)

(திரு எம். இரகுபதி, கண்காணிப்பாளர் (Curator), அரசாங்க தொல்பொருள் காட்சி சாலை, புதுக்கோட்டை)

[குடுமியான்மலைப் பகுதியில் இன்று காடுகள் கழனியாக்கப்படுகின்றன. சுமார் 5,000 ஏக்கர் காடாக கிடக்கும் நிலங்கள் இன்று திருத்தி அமைக்கப்படுகின்றன. வரலாற்றுப் புகழ் படைத்த இடம் குடுமியான்மலை. சிற்ப வேலைகளும், கலைநுணுக்கங்களும் செறிந்து திகழும் பகுதி அது. தொன்மைச் சிறப்பு வாய்ந்த கோயில் குடுமியான்மலையில் உள்ளது. குடுமியான்மலையின் வரலாற்றுச் சிறப்பையும் தொன்மைப் புகழையும் அழகாக விளக்குகிறது, இக் கட்டுரை—ஆசிரியர்.]

வரலாற்றுச் சிறப்பும், இயற்கை வளமும் கொண்டுள்ளது குடுமியான்மலை. சென்னையிலிருந்து தெற்காக 233 மைல் பயணம் செய்தால், இவ்விடத்தினை எளிதாக அடையலாம். புதுக்கோட்டைக்கு மேற்கே 12 மைல் தொலைவிலும், திருச்சிராப்பள்ளியிலிருந்து கிழக்கே 34 தொலைவிலும் அமைந்துள்ள குடுமியான்மலைக்கு பேருந்து வசதி உண்டு.

பழங்கால கல் வெட்டுக்களில் திருநலக்குன்றம் என்றும், பிற் காலத்தவைகளில் சிகநல்லூர் என்றும் குடுமியான்மலை குறிப்பிடப்படுகிறது. 'திருநலக் குன்றம்' என்றால், 'புனிதமான வளமிக்க மலை' எனப் பொருள். வளத்தையும் சிறப்பையும் குறிக்கும் நல் என்ற தமிழ்ச் சொல் பிற்காலத்தில் சம்ஸ்கிருதச் சொல்லாக்கப்பட்டு, 'நள' மன்னனைக் குறிப்பிட்டுள்ளதாக மாற்றப்பட்டது. 'சிக' என்ற சம்ஸ்கிருதச் சொல் 'குடுமி' என்ற தமிழ்ச் சொல்லின் பொருளில் வழங்கப்பட்டுள்ளதாகும்.

இங்கே கோயிலில் வழிபடப்பெறும் மூலக் கடவுளின் பெயர் 'சிகநாதர்' என்பதாகும். இந்த விசித்திரப் பெயர் ஏற்பட்டதற்கான காரணத்தைக் குறிப்பிட இங்கே ஒரு கதை விழங்கப்படுகிறது. ஒருகாலத்தில், இறைவன் அர்ச்சனைக்கு வைத்திருந்த மலர்களைக் கோயில் அர்ச்சகர் தன் காதலிக்குக் கொடுத்து விட்டதாகவும், அப்பகுதியை ஆண்ட மன்னன் அப்பொழுது எதிர்பாராத விதமாக வந்து விடவே, அர்ச்சகர் அந்த மலர்களை அவனுக்குப் பிரசாதமாக வழங்கியதாகவும், அந்த மலர்களில் தலைமயிரைக் கண்ட மன்னன் அதற்கான காரணத்தை வினவ, இறைவனுக்கு இயற்கை மயிர் உளதென்று அர்ச்சகர்கூறி தன்னை அந்தச்சோதனையிலிருந்து காத்தருளுமாறு இறைவனை வேண்டிக் கொண்டதாகவும், அதற்குச் செவிமடுத்த இறைவன் லிங்கத்தின்மேல் குடுமியொன்று தோன்றுமாறு செய்ததாகவும் இந்தப் புராணக் கதை சொல்கிறது. இதற்குச் சான்றாக இன்றும் லிங்கத்தின் மேல் ஒரு புடைப்புப் பகுதி பக்தர்களுக்குக் காட்டப்பட்டு, அர்ச்சகரைக் காக்க ஆண்டவன் தோன்றிச் செய்த குடுமி இதுதான் என்று சொல்லப்படுகிறது.

பழங்காலத்தில் குடுமியான்மலையைச் சுற்றிலும் மக்கள் வாழ்ந்திருந்ததாகத் தெரிகிறது. இம்மலையின் உச்சியில் ஒரு சுப்பிரமணிய கோயில் உள்ளது. மலை உச்சிக்குச் செல்லும் பாதையின் பக்கத்தில், பாறை முகடுகளின் கீழே இயற்கையாக அமைந்த குகை இருக்கிறது. பழங்காலத்தில் மக்கள் இங்கே வாழ்ந்ததற்கான அடையாளங்கள் காணப்படுகின்றன. மலையடிவாரத்தில் கிழக்குப் பக்கத்தில் சிகநாதர், அகிலாண்டேஸ்வரி ஆலயம் இருக்கிறது. தமிழகத்திலுள்ள மிகப் பெரிய கோயில்களில் இதுவும் ஒன்றாகும்.

வரலாற்று நிகழ்ச்சிகளோடு தொடர்புடையது குடுமியான்மலை. இது ஒரு காலத்தில் காராள வேளாளர்களால் மறவர்களுக்கு வழங்கப்பட்டதாகத் தெரிகிறது. இங்கே காணப்படும் மலைக்குடைவுக் கோயிலும், பல்லவ-கிரந்தத்தில் உள்ள கல்வெட்டும் கி.பி. 10-ம் நூற்றாண்டுக்கு முற்பட்ட பல்லவர் காலத்தைக் குறிப்பிடுகின்றன. முதலாம் குலோத்துங்கன் கல்வெட்டொன்றும் உள்ளது. இது கி.பி. 1106-ம் ஆண்டைச் சேர்ந்தது. புதுக்கோட்டை புள்ளி விவரப்படி (1813) இந்தக் கோயிலின் ஏழு நிலைக் கோபுரம் பாண்டியன் அளித்த பரிசாகும்; கோயிலின் சில மண்டபங்கள், இங்கே ஆட்சி செலுத்தி வழிபட்ட பல்லவராயர்களால் கட்டப்பட்டவையாகும்.

[31-ம் பக்கம் பார்க்க]



**அமைதியான கிராமவாழ்க்கைக்கு கூட்டு முயற்சியே ஒரு சிறந்த வழியென்பது உண்மையாயின், அதற்கு உறுதுணையாக நிற்பது ஊராட்சி முறையே. பொறுப்புக்களை ஏற்று, தங்களுக்குத் தாங்களே உதவிக் கொள்வதற்கு கிராமம், தாலூகா, மாவட்ட நிலைகளிலுள்ள ஊராட்சிகள் பெரிதும் துணை செய்கின்றன. இதை விளக்குவதற்கு மஹாராஷ்டிராவின் சோலாப்பூர் மாவட்டத்திலுள்ள "தெற்கு சோலாப்பூர் தாலூகா ஊராட்சி சமிதி"யை ஒரு சான்றாகக் கூறலாம்.**

# ஊராட்சியே உறுதுணை

இந்த தாலூகா சமிதியில் 78 கிராமங்களிலிருக்கின்றன. ஒரே ஒரு கிராமம் தவிர ஏனைய எல்லா கிராமங்களிலும் பள்ளிகள் உள்ளன. கடந்த ஐந்து ஆண்டுகளில் 115 புதிய பள்ளி வகுப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு வகுப்பறைக்கும் சராசரியாக ரூ. 5,000 செலவாயிற்று. இதில் 60 சதவீதம் மான்யமும், எஞ்சியவை உள்ளூர் மக்கள் அளித்த நன்கொடையும் அடங்கியுள்ளன. 1962-ம் ஆண்டில் இப்பள்ளிகளில் கல்விகற்ற மாணவர்களின் எண்ணிக்கை 14,942 மட்டுமே. ஆனால் 1966-ம் ஆண்டில் இது 16,607-க்கு உயர்ந்தது.

### புதிய இடங்களுக்கு நீர்ப்பாசனம்

மக்களின் உணவுத் தேவைகளை பூர்த்திச் செய்வதற்கு, சமிதி மிகவும் கவனம் செலுத்துகிறது. பூச்சி மருந்துகளின் அவசியம் பற்றி, உழவர்களுக்கு எடுத்துக்கூற ஆவன செய்யப்பட்டுள்ளன. ரசாயன உரங்களின் அவசியத்தைப் பற்றி சமிதி நன்கு அறிந்திருந்து, அதற்கு முக்கியத்துவம் அளித்த போதிலும், தழை உரங்களைத் தயாரிப்பதிலும், அது அதிக நாட்டம் செலுத்துகிறது. சிறிய நீர்ப்பாசனங்களின் அவசியத்தை உணர்ந்த சமிதி, 4,250 ஏக்கர்களை பாசனத்தில் கொண்டு வருவதற்கு ரூ. 17,64,054 செலவில் ஒரு திட்டத்தை செயல்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இது தவிர, ஹரியானா திட்டம் என்று ஒரு திட்டமும், ராம்பூர் ஏரி திட்ட வேலைகளும் ஒருங்கே நடைபெற்றால், மேலும் 2,600 ஏக்கர்களுக்கு பாசனம் தடையின்றி கிடைக்கும்.

தெற்கு சோலாப்பூர் சமிதி இன்னொரு திட்டத்தையும் சோதனை முயற்சியாக மேற்கொண்டுள்ளது. உணவு உற்பத்தியை பன்மடங்கு பெருக்குவதற்கு, சில தீவிர விவசாயிகள் நல்ல யோசனைகளை தெரிவித்தனர். ஆனால் பண வசதி குறைவால், அவற்றை நிறைவேற்ற முடியவில்லை. எனவே, இவ்வித முற்போக்கு விவசாயிகளுக்கு எல்லாவித உதவிகளையும் செய்யவேண்டும் என்ற நோக்கத்துடன், சமிதி ரூ. 1,37,910-ஐ, 99 விவசாயிகளுக்கு வழங்கியுள்ளது. இதைக்கொண்டு அவர்கள் வாழை, திராட்சை உற்பத்தியைப் பெருக்கி வருகின்றனர்.

இங்குள்ள சோளப்பயிர்கள் பூச்சிகளினால் அடிக்கடி தாக்கப்படுவது வழக்கம். எனவே விமான மூலம் பூச்சி மருந்துகளைத் தெளிக்க, ரூ. 9,358 செலவில் ஒரு சிறிய விமான தளம் இங்கு அமைக்கப்பட்டுள்ளது.

### பரிசு பெற்ற ஊராட்சி

ரூ. 35,000 செலவில் ஒரு கால்நடை மருந்தகம் நவீன வசதிகளுடன் கட்டப்பெற்று, கால்நடைகளுக்கு சிகிச்சை யளிக்கப்படுகிறது.

கோழிப்பண்ணையை துவக்குவதற்காக 8 தீவிர விவசாயிகளுக்கு ரூ. 4,000 கடன் வழங்கப்பட்டுள்ளது. பால் பண்ணைக்காக ரூ. 33,250 கடன் வழங்கப்பட்டுள்ளது.

கருத்தடை வளையத் திட்டத்தில் மிகுந்த ஆர்வம் காட்டி, சிறந்த பணியாற்றியதற்காக, இந்த சமிதிக்கு 1966–67-ல் பரிசு வழங்கப்பட்டது.

# பிற மாநிலங்களில்..

## உத்தரப் பிரதேசத்தில் மருத்துவ உதவி

உத்திரப்பிரதேசத்திலுள்ள எல்லா மக்களுக்கும் மருத்துவ வசதி கிடைக்கச்செய்வது மிகவும் சிக்கலான செயல்தான். இந்த மக்கள் 1,11,722 கிராமங்களிலும், 486 நகரங்களிலும் வசிக்கின்றனர். மருத்துவ உதவித் திட்டத்தில் நிதிப் பற்ருக்குறையும் சேரும்போது பிரச்னை மேலும் சிக்கலாகிறது. மேலும் போதுமான அளவில் டாக்டர்கள் இல்லை. இருப்பவர்களும் கிராமங்களுக்குச் செல்ல தயங்குகிருர்கள். கிராமத்தில் தான் 86 சதவீத மக்கள் வசிக்கின்றனர்.

தற்போது இம்மாநிலத்தில் 748 மருத்துவ மனைகளும், 1,614 மருந்தகங்களும் இருக்கின்றன. அதாவது, 1,10,112 பேர்களுக்கு ஒரு மருத்துவ மனையும், 51,030 பேர்களுக்கு ஒரு மருந்தகமும் இருக்கிறது. இந்த மருத்துவ மனைகளிலும், மருந்தகங்களிலும், 30,873 படுக்கைகள் இருக்கின்றன. அதாவது ஒவ்வொரு 2,666 பேர்களுக்கு ஒரு படுக்கை வீதம் இருக்கிறது. இதே போன்று 7,580 பேர்களுக்கு ஒரு டாக்டர் இருக்கிருர். இங்குள்ள மொத்த டாக்டர்களின் எண்ணிக்கை 2,738.

கிராமங்களில் வசிக்கும் லட்சக்கணக்கான மக்களுக்கு, தற்போதுள்ள நிதி நிலையைக் கருத்தில் கொண்டு போதுமான அளவு மருத்துவ வசதி கிடைக்கச் செய்வதே அரசின் எண்ணம். வேளாண்மையையே தொழிலாகக் கொண்டு, பாடுபடும் இச்சமுதாயத்தை புறக்கணிப்பது சிறந்ததல்ல.

### தமிழகத்திலிருந்தும் டாக்டர்கள்

பெரிய மருத்துவ நிலையங்களெல்லாம் தற்போது நகரங்களிலும், மாநகரங்களிலும் தான் இருக்கின்றன. கிராமங்களில் மூலை, முடுக்குகளில் இருக்கும் விவசாயிகள், மருத்துவஉதவி நாடி நகரங்களுக்கோ செல்லவேண்டியுள்ளது. இதனுல் அதிகச் செலவு ஏற்படுகிறது. அதை ஏழை மக்களால் சில சமயங்களில் தாங்க முடிவதில்லை. மேலும் பெண்களுக்கு மருத்துவ உதவி கிடைப்பது இன்னும் கஷ்டம்.

இம் மாநிலத்திலுள்ள 564 கிராம மருந்தகங்களில் டாக்டர்களே இல்லை. இங்கு டாக்டர்களை அமர்த்துவதற்கு சில முறைகள் கையாளப்படுகின்றன. ஆபத்துக் காலத்திற்காக உதவக் கூடியடாக்டர்கள், தனிப்பட்டமுறையில் தொழில் செய்யும் டாக்டர்கள், ஓய்வு பெற்ற இராணுவ டாக்டர்கள், மற்றும் மலேரியா, குடும்பக்கட்டுப்பாடுத்துறைகளிலுள்ள டாக்டர்கள் ஆகியோர் இந்த இடங்களில் அமர்த்தப்படுகின்றனர். இவை தவிர, தமிழகத்திலிருந்தும் 100 டாக்டர்கள் வரவழைக்கப்பட்டுள்ளனர்.

மருத்துவக் கல்லூரிகளிலுள்ள இடங்களில் 10 சதவீத இடங்கள் மலைப்பகுதிகளிலிருந்தும், 10 சதவீத இடங்கள் கிராமப் புறங்களிலிருந்து வருபவர்களுக்கு மட்டுமே ஒதுக்கப்பட்டுள்ளன. குறைந்தது பத்தாண்டு காலமாவது மலைப்பகுதி, அல்லது கிராமப்பகுதியில் பணியாற்றவேண்டும் என்ற உடன்பாடுடன் தான் அவர்கள் கல்லூரிகளில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.

### நடமாடும் மருந்தகங்கள்

ஏழை மாணவர்களுக்கு உதவிச் சம்பளம் அளிக்கப்படுகிறது. கிராமங்களில் குறைந்தது மூன்ருண்டுகள் பணிசெய்ய உடன்பட்டு, பத்திரத்தில் கையொப்பமிட்டால் தான் உதவிச் சம்பளம் அளிக்கப்படும். இதை மீறிஞல், உதவிச் சம்பளத்தொகை வசூலிக்கப்பட்டுவிடும்.

— 16-ம் பக்கம் பார்க்க.



# பெருகியது வருவாய்

திரு பலராம்சிங் அவர்களைப் பின்பற்றி நாட்டிலுள்ள ஏனைய உழவர்களும் வேளாண்மையில் ஈடுபட்டால், உணவுப் பிரச்னை வெகு விரைவிலே தீர்ந்து விடும். இவர் உத்திரப்பிரதேசத்திலுள்ள கான்பூர் மாவட்டத்தின் சகார்பூர் என்ற கிராமத்தைச் சேர்ந்தவர். இவரது கிராமத்தை எளிதில் அடைவதற்குச் சாலை வசதிகள் நன்கு அமைந்துள்ளன.

கான்பூரிலுள்ள அரசினர் விவசாயக் கல்லூரியைச் சேர்ந்தவர்கள் கிராமங்களுக்குச் சென்று, உழவர்களுக்கு பயிற்சியளித்து வருகிருர்கள். நவீன முறைப்படி எவ்வாறு விவசாயம் செய்யவேண்டுமென்பதை அவர்களுடன் நேரில் உரையாடி, அவர்களை நன்கு உணரச் செய்து, அம்முறைகளை கையாள தகுந்த உதவிகளையும் செய்கின்றனர். அவ்வாறு பணிபுரிந்து வருகையில், அவர்கள் திரு பலராம்சிங்கை சந்திக்க நேர்ந்தது.

### உண்மையைக் கூறுகிறீர்களா?

''தன்னுடைய இரண்டு 'பீகா'க்கள் நிலத்திலிருந்து, பதினுறு மணங்கு எடையுள்ள சோளம் மட்டுமே தான் விளைவிக்க முடிகிறது'' என்ருர் பலராம் சிங். ''அதே நிலத்திலிருந்து 60 மணங்கு சோளத்தைப் பெற நீங்கள் விரும்புகிறீர்களா? என்று விவசாயக் கல்லூரி ஆசிரியர் கேட்டபோது, பலராம் அதை சொல்லளவில் கூட நம்பத் தயாராக இல்லை. "நீங்கள் உண்மையைத்தான் கூறுகிறீர்களா? அவ்வாறு பயிர் செய்யமுடியுமா?'' என்று வியப்புடன் வினவினுர், திரு பலராம்.

அவரை நம்ப வைப்பதற்குள் ஆசிரியரின் நிலை மிகவும் சங்கடமாகிவிட்டது. இறுதியில், அருகிலேயுள்ள மற்ருெரு கிராமத்திற்கு அவரை அழைத்துச்சென்றனர். பண்டித சக்ராதர்சுக்ளா என்ற மற்ருெரு விவசாயியின் நிலத்தில் 'கங்கா-3' என்ற வீரிய ஒட்டுக்கம்பின் அமோக விளைச்சலை நேரில் கண்டபோதுதான் ஆசிரியரின் கூற்றை பலராம் நம்பினுர். "என்னுல் இவ்வாறு பயிர் செய்து, அமோக விளைச்சலைக் காணமுடியாதா?" என்று அவர் ஆவலுடன் கேட்டார். "ஏன் முடியாது"—இது ஆசிரியரின் பதில்.

"ஓர் ஆண்டில், ஒரே பயிருக்குப் பதில் இரு போகத்தை, ரசாயன உரம் கொண்டு, ஒட்டு ரக விதைகளை விதைத்து, விஞ்ஞான முறையில் பயிர் செய்தால், அதே வித விளைச்சலை நீங்கள் அடைய முடியும்'' என்று விளக்கினுர் ஆசிரியர்.

நாட்டிலுள்ள பழங்கால விவசாயிகளைப் போன்றவரே பலராம்சிங்கும். ரசாயன உரங்களை அவர் பயன்படுத்தியதே இல்லை. அதைப் பற்றி எதுவுமே தெரியாது அவருக்கு. விவசாயத்திற்கு அவர் உள்ளூர் ரக, பழைய விதைகளையே நம்பினுர். இவற்றுல் ஆண்டொன்றிற்கு அவர் பெற்ற வருவாய் ரூ. 6,000 மட்டுமே. இந்த சொற்ப வருமானத்தைப் பெறுவதற்குக்கூட, அவர் மிகவும் சிரமப்படவேண்டியிருந்தது.

பலராம்சிங்கிடம் 20 ஏக்கர்கள் நிலமிருந்தது. அவரிடம் குழாய்க் கிணறும், விவசாய செலவிற்காக ரூ. 4,000 ரொக்கமும் இருந்தன. நவீன விவசாயக் கருவிகள் சிலவற்றையும் அவர் பெற்றிருந்தார்.

### பழைய சிந்தனை ஒழிந்தது......

சக விவசாயியின் வயலில் ஏற்பட்டுள்ள மகத்தான விளைச்சலைக்கண்டு வியப்புற்ற பலராம், தன் பழைய சிந்தனைகளையும், பழைய விவசாய முறைகளையும், அறவே உதறித் தள்ளி, புது உலகில், நவீன கருவிகளுடன் இப்போது விவசாயத்தில் புகுந்துவிட்டார், அதோடன்றி, அவரது கிராமத்திலுள்ள ஏனைய விவசாயிகளுக்கும் இவர் ஒரு வழிகாட்டியாக இருந்து, அவர்களுடைய சந்தேகங்களையும் தீர்த்துவைத்து, துணை புரிகிருர்.

விஞ்ஞான முறைகளையும், பயிர்களையும் மாற்றி மாற்றி வேளாண்மை செய்யும் முறைகளை நன்கு கற்றறிந்த விவசாயியாகிவிட்டார் பலராம். இப்போது அவரது வயலில் மூன்று போக விளைச்சல் நடைபெறுகிறது.

எவ்வித விதைகளைத் தேர்ந்தெடுத்து, என்னென்ன உரங்களை, எவ்வெப்போது இட்டு, பயிர் செய்யவேண்டும் என்பது, அவருக்கு இன்று மிகவும் எளிதாகத் தெரிகிறது.

கோதுமைப்பயிருக்கு, ஏக்கர் ஒன்றுக்கு 120 கிலோ அம்மோனியம் சல்பேட்டும், 75 கிலோ சூப்பர் பாஸ்பேட்டும் போடுகிறார். "சோனுரா-64" வகை கோதுமையை பயிரிட அவர் மிகவும் உற்சாகமாயிருக்கிறார். இப்பயிருக்கு 290 கிலோ அம்மோனியம் சல்பேட்டும், 180 கிலோ சூப்பர் பாஸ்பேட்டும் போடுகிறார். ரசாயன உரங்கள் தவிர, தொழு உரங்களையும் அவர் இடுவதற்கு தவறவில்லை.

### ஐந்து மடங்கு வருவாய்....

புதிய ரக விதைகளான "சோனுரா-64" "லார்மாராஜோ" 'கே. 68', வீரிய ஒட்டுச் சோள ரகமான "கங்கா-2", மற்றும் "3", "டி. என். 1" என்ற நெல் ரகம், போன்றவற்றையே அவர் விதைக்கிறார். தன்னிடமுள்ள ரூ. 4,000 முதலைக்கொண்டே, மேற்கண்ட விதை ரகங்களைப் பயிரிட்டு, ரூ. 20,000 வரை வருமானம் பெறுகிறார்.

"தங்களைத் தாங்களே உதவிக் கொள்பவர்களுக்குத்தான், இறைவனும் துணைபுரிவார்" என்பது பலராமின் நம்பிக்கை. கையிலுள்ள ஒரு ரூபாயைக்கொண்டு ஐந்து ரூபாய் வருவாய் அடைவதற்கு விவசாயம் சிறந்த தொழில் என்கிறார் பலராம். 1964-65-ம் ஆண்டில் சோளம், கோதுமை பயிரிட்டதில் அவருக்குக் கிடைத்த வருவாய் ரூ. 5,250 மட்டுமே. ஆனால் அடுத்த ஆண்டு, விஞ்ஞான முறைப்படி, திருந்திய விவசாயம் செய்ததில் அவர் பெற்ற வருவாய் ரூ. 8,400. மேலும், 1966-67-ம் ஆண்டில் அதே கோதுமை, சோளம் பயிர்கள் அவருக்கு ரூ. 28,200 வருவாயைத் தேடித் தந்தன.

உணவுக்காக பிற நாடுகளை நம்பி வாழும் நாம், அந்த துன்பத் தளையிலிருந்து நம்மை விடுவித்துக்கொள்ள ஒரே வழி, விஞ்ஞான முறையில் விவசாயம் செய்வது தவிர வேறொன்றில்லை.

## உத்தரப்பிரதேசத்தில் மருத்துவஉதவி

—14-ம் பக்கத் தொடர்ச்சி

போக்குவரத்து வசதியில்லாத கிராமங்களிலுள்ளவர்களுக்கு மருத்துவ வசதி கிடைக்க, நடமாடும் மருந்தகங்களில் 150 ஏற்படுத்தப் பட்டுள்ளன. இவற்றில் மலைப்பகுதி வாழ் மக்களுக்கென்று 100 தனியே ஒதுக்கப்பட்டுள்ளன.

### குடிசைகளிலும் மருத்துவமனை

பெரிய, பெரிய கட்டிடங்கள் கட்டி மருத்துவ மனையை ஏற்படுத்தும் செலவை, கருவிகளையும் தரமான மருந்துகளையும் வாங்க பயன்படுத்தலாம் என்ற நோக்குடன் ரூ. 5,000 செலவிலேயே குடிசைகளில் மருத்துவ மனைகள் நிறுவப்பட்டுள்ளன. மருத்துவ மனைகள் இல்லாத வட்டாரத் தலைமையிடங்களில் இது போன்ற நிலையங்கள் அமைக்கப்படும்.

மேலும் மாவட்டத்தை பல வட்டங்களாகப் பிரித்து, ஒவ்வொரு வட்டத்திற்கும் ஞாயிறன்று ஒரு டாக்டர் செல்வார். நோயாளிகளுக்கு சிகிச்சையளிப்பது மட்டுமின்றி, நீண்டநாள் நோயுற்றவர்களை அரசாங்கச் சொந்தமான கார்களில் மருத்துவமனைக்கு அவர்களை அனுப்புவார். இது தவிர, சுற்றுப்புற துப்புரவு, குடும்பக் கட்டுப்பாட்டை பற்றி சொற்பொழிவுகள் நிகழ்த்துவதுடன், அவற்றிற்குரிய பயிற்சியையும் அளிப்பார்.

இவ்வாறு மேற்கொள்ளப்பட்டுள்ள முயற்சிகளெல்லாம் நல்ல பயனை தந்துள்ளன. கிராமப்புறங்களிலும் ஒரு நல்ல மாற்றம், புதிய திருப்பம் ஏற்பட்டுள்ளது.

---

## பெருமளவில் காய்கறித் தோட்டங்கள்

மார்த்தாண்டத்திலுள்ள (கன்னியாகுமரி மாவட்டம்) ஒய்.எம்.சி.ஏ. செயல் விளக்க நிலையம், 850 வீட்டுக் காய்கறித் தோட்டங்களை உருவாக்கியுள்ளது. இவற்றில் கத்திரிக்காய், பட்டாணி, பல்வகை பீன்ஸ் ஆகிய காய்கறிகள் பயிரிடப்படுகின்றன.

சத்துள்ள பசுமையான காய்கறிகளை தானிய உணவுடன் போதுமான அளவில் சேர்த்து, உண்ணவேண்டுமென்ற அவசியத்தை இத்தோட்டங்கள் விவசாயிகளிடையே வலியுறுத்தியுள்ளன.

மார்த்தாண்டத்திலுள்ள ஒய்.எம்.சி.ஏ. இரு ஏக்கர் நிலங்களை தனியே ஒதுக்கி, அதை காய்கறி விதைப் பண்ணையாக மாற்றியுள்ளது. 1967-ம் ஆண்டு ஜனவரித் திங்களிலிருந்து, 1,03,000 நாற்றுகளையும் 20 கிலோ காய்கறி விதைகளையும் அது 20 தொண்டர்களுக்கு வழங்கியுள்ளது. இத்தொண்டர்கள், திட்டத்தின் மேற்பார்வையாளர்களாவார்கள். ஒவ்வொரு தொண்டரும் 150 தோட்டங்களை உருவாக்கவேண்டும்.






ஹிமாசலப் பிரதேசத்தில் ஊராட்சிகள் ஏற்பட்டவுடன், கிராமங்கள், குக்கிராமங்கள் அனைத்தும் நன்கு முன்னேறியுள்ளன. அங்குள்ள கங்ரா மாவட்டத்தில் 'பார்மர்' என்னும் கிராமம் சிறப்பான முறையில் ஊராட்சித் திட்டங்களை நிறைவேற்றுகிறது. பத்தாண்டுகளுக்கு முன்பு அங்கு சென்றிருந்த ஒருவர், இப்போது அக்கிராமத்தை சுற்றிப் பார்த்தாரானால், அவருக்கு அங்கு ஏற்பட்டுள்ள மகிழ்ச்சியான மாற்றங்கள் தெளிவாகத் தெரியும்.

புதர்களாக மண்டிக்கிடந்த அந்த கிராமப்புற நிலங்களெல்லாம் சீரமைக்கப்பட்டு, விவசாயத்திற்குத் தகுதியுடையதாக மாற்றப்பட்டுள்ளன. எலிகள் வாழ்ந்த பொந்துகளும், பாம்புகள் நிறைந்திருந்த புற்றுகளும் இன்று பசுமையைப் பூக்கும் வயல்களாக மாறியுள்ளன. இவை மட்டுமல்ல; வாழ்க்கையின் ஏனைய துறைகளிலும் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது.

கிராம வாசிகள் அளித்த நன்கொடையையும் உழைப்பையுமே கொண்டு ஒரு துவக்கப்பள்ளி அமைக்கப்பட்டுள்ளது. பள்ளிக்குத் தேவையான அமைதியும், தூய காற்றும் கிடைப்பதற்கு துணை செய்யும் முறையில், இப்பள்ளி, ஒரு மலைச் சாரலில் அழகுற கட்டப்பட்டுள்ளது. இங்கு 1,700 பேர்களே வசித்தாலும், இது ஒரு பெரிய கிராமம் போல காட்சியளிக்கிறது. பள்ளியில் 288 குழந்தைகள் கல்வி கற்கின்றனர். பள்ளியில் இடநெருக்கடி ஏற்பட்டதன் விளைவாக, மக்கள் ஒன்று திரண்டு மேலும் மூன்று வகுப்பு அறைகள் கொண்ட ஒரு கட்டிடத்தை அமைத்துள்ளனர். இதுவக்கப் பள்ளியை உயர்நிலைப் பள்ளியாக்கும் முயற்சி தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பள்ளி பிறுதி வகுப்பு வரை கூட படித்தவரில்லாத அக்கிராமத்தில், இன்று பட்டதாரிகளும் கூட இருக்கின்றனர்.

### தடையில்லா குடிநீர் வசதி

கிராமத்திலும், கிராமத்தைச் சுற்றியும் தார்ச்சாலைகள் போடப் பட்டுள்ளன. ரெயில்வே பாதை, இக் கிராமத்தை பத்தான்கோட், ஜோகிந்தர் நகரங்களுடன் இணைக்கிறது. தந்தி, தொலைப்பேசி வசதிகள் கொண்ட அஞ்சல் நிலையமும் இங்கு பணியாற்றுகிறது. கீழ்மட்டத்திலுள்ள பகுதிகள் மழையினால் பாதிக்கப்படுவதைத் தவிர்ப்பதற்காக இரண்டு சிறு பாலங்கள் கட்டப்பட்டுள்ளன. இதனால் போக்குவரத்திற்கு வசதி ஏற்பட்டுள்ளது.

கிராமத்தில் ஆறு குடிநீர்க் கிணறுகள் இருக்கின்றன. இவற்றிலிருந்து ஆண்டு முழுவதும் குடிநீர் கிடைக்கிறது. பத்தாண்டுகளுக்கு முன் வரை இக் கிணறுகளை ஹரிஜனங்கள் பயன்படுத்தியதில்லை. ஆனால், அந்த நிலை மாறி எல்லோரும், எல்லாக் கிணறுகளிலிருந்தும், சமூகமாக நீரைப் பெற்றுக் கொள்கின்றனர். கோடைக் காலங்களில், கிணறுகளில் நீர் குறைந்து விடுவதால் விளையும் இன்னலைத் தவிர்க்க, பம்பு செட்டுகள் அமைக்கப் பட்டு, குடிநீர் மேலே கொண்டு வரப்படுகிறது. இவற்றால், சிறிதளவு பாசனமும் நடைபெறுகிறது. இங்கு கோதுமை, சோளம், நெல், பார்லி, எண்ணெய் வித்துக்கள் ஆகியவை முக்கியப்பயிர்கள். பற்பல காய்கறிகளும பயிரிடப்படுகின்றன.

—33-ம் பக்கம் பார்க்க.



## (காவிரிப்பூம்பட்டினம்-வரலாற்றுக் கண்ணோட்டம்)

[திரு இரா. நாகசாமி, எம். ஏ., தொல்பொருள் ஆராய்ச்சித் துறை இயக்குநர்]

தமிழகத்தின் பொற்காலம் என்பது சங்ககாலத்தைக் குறிக்கும். இது இன்றைக்கும் இரண்டாயிரம் ஆண்டு களுக்கும் முந்தியது. உலகின் பல பகுதிகள் நாகரிகம் என்றால் என்ன என்றே அறியாத காலம் அது. அக் காலத்தில் தமிழகத்தை சேரும் சிறப்புமாக சேரர், சோழர், பாண்டியர் என்ற மூவேந்தர்கள் ஆண்டனர், சோழர் குடியில் வந்த கரிகால்பெருவளத்தான் என்ப வனை அறியாத தமிழ் மக்கள் யாரும் இருக்கமுடியாது. ஒப்பற்ற அந்த மன்னனுடைய கடற்கரைப் பட்டினமாக திகழ்ந்தது பூம்புகார். தமிழ்நாட்டில தலைசிறந்த நதியாம் காவிரி கடலிலே புகும் இடம் ஆதலின் அதைக் காவிரிப்பூம்பட்டினம் என்றும் அழைப்பர். ஒரு பெரும் ஆறு கடலிலே புகும் இடத்தில் சிறந்த துறைமுகப்பட் டினம் அமைப்பது எளிது. ஆற்றில் வாயில் வழியே பெரும் கலங்கள் உள் வருவதற்கு இது ஏதுவாக இருக்கும். பெரிய ஆறு ஆகிய பொன்னி கடலிலே கலக்கும் இடத்தில் அமர்ந்த காரணத்தால், தமிழ் நாட்டிலேயே தலைசிறந்த நகரமாக பூம்புகார் விளங் கிற்று.

### வரலாற்றுப் புகழ் படைத்த பூம்புகார்

பூம்புகார் நகரை தூங்கெயில் எறிந்த தொடித் தோட் செம்பியன், முசுகுந்தன், மனுநீதிசோழன், கரிகால்பெருவளத்தான், கிள்ளிவளவன் போன்ற மன் னர்கள் ஆண்டிருக்கிறார்கள். சிலப்பதிகாரம், இந்திரவிழா எடுத்த காதையில் இப்பட்டினம்,மருவூர்ப்பாக்கம்,பட்டினப் பாக்கம்என இரண்டு பெரும்பிரிவுகளாக பிரிக்கப்பட்டிருந் தது என்று குறிக்கப்பட்டுள்ளது. இவ்விரு பகுதிகளுக்கும் இடையில் நாளங்காடி. இருந்ததும், கடற்கரைப் பகுதியில் யவனச் சேரியிருந்ததும், மற்றும் பல செய்திகளும் சிலப்பதிகாரத்தில் இருந்து அறிகிறோம். இந்நகரில் பல வணிகர் இருந்தனர். சம்பாபதியம்மன் கோயில் முதல் சதுக்கப்பூதம் வரையில் பல கோவில்கள் இருந்தன. பௌத்த விகாரமும் சமணர் பள்ளியும் இங்கு இருந்தன. இந்நகர மக்களின் வாழ்க்கையைப் பற்றி பட்டினப்பாலை மிக அழகாக சித்தரிக்கிறது. மேலை நாடுகளிலிருந்து உயர்ந்த ஜாதிக் குதிரைகள் கலங்களிலிருந்து வந்திறங்கின. மிளகு மூட்டைகள் வண்டியில் வந்திறங்கின. வடதிசையில் இருந்து வந்த மணியும், பொன்னும், குடதிசையில் இருந்து வந்த சந்தனமும் அகிலும், ஈழத்திலிருந்து வந்த பொருள்களும். கங்கை ஆற்றுப் பொருள்களும், காவிரி ஆற்று பொருள்களும், ஏராளமாக குவித்து விற்கப்பட்டன. மேலைநாடுகளுக்கும், கீழை நாடுகளுக்கும் இடையே சிறந்த துறைமுகமாக பூம்புகார்தான் அக் காலத்தில் திகழ்ந்தது என்று, அலெக்சாந்திரிய நாட்டு வணிகன் ஒருவன் எழுதிய ''பெரிபிலஸ்' என்ற நூலில் இருந்து அறிகிறோம். பிளினி என்பவர் இந்நகரை 'சபேரிஸ் எம்போரியம்' என்று குறித்துள்ளார். மூன்று விதமான கலங்கள் தமிழ்நாட்டு கடற்கரையில் இருந்த தாக குறிக்கப்பட்டுள்ளது. சோழமண்டல கரையிலிருந்து மேலைக்கடற்கரை வரை கரையோரமாகவே செல்லும் நாட்டுப் படகுகள், கட்டுமரங்கள், கங்கைகரை முதல், கடாரம்வரை செல்லும் சோழந்தியா என்ற மிகப் பெரிய கலங்கள் ஆக மூன்றுவித கலங்கள் இருந்தன. ரோமானிய மாலுமிகள் பூம்புகாரோடு நின்று விடுவர் என்றும், சோழ மாலுமிகள்தான் கீழைநாடுகளுக்கும், சீனத்துக்கும் சென்று வந்தனர் என்றும், ஆராய்ச்சி யாளர்கள் குறிப்பர். தமிழ்நாட்டிலிருந்து பருத்தியும், பட்டும் முக்கியமாக ஏற்றுமதி செய்யப்பட்டன.

பூம்புகாரைப் பற்றி பல பண்டை பிராகிருத நூல் களில் குறிப்புகள் காணப்படுகின்றன. முக்கியமாக புத்த தத்தர் என்ற பெரியார் எழுதி அபிதம்மாவதாரம் என்ற நூலில் இந்நகரைப் பற்றி குறித்துள்ளார்.

> [கன்னித் தமிழகத்தின் பண்பாட்டுப் புகழ்பாடும் காவிரிப்பூம்பட்டினத்தின் தொன்மைச் சிறப்பு பற்றி, வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் ஆராய்கிறது, இக்கட்டுரை பூம்புகார், பண்டைத் தமிழர் நாகரிகத்தின் தொட்டில் என திகழ்ந்தது. பண்டைத் தமிழ் மக்களின் வாழ்க்கை முறை, செல்வச் செழிப்பு, சீர் பெற்ற வாழ்வு— இவற்றை உலகுக்கே பறைசாற்றிய பழம் பெரும்பதி பூம்புகார்—புகழ் பெற்ற அந்த காவிரிப்பூம்பட்டினத்தைப் பற்றிய பல அரிய செய்திகளை இக்கட்டுரையில் காணலாம்—ஆசிரியர்.]

### தொல்பொருள் ஆராய்ச்சி—தொன்மைச் சிறப்பு

இச் சிறப்புவாய்ந்த பட்டினத்தை தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ந்து வருகின்றனர். சுமார் 55 வருடங்களுக்கு முன்பே 1910-ம் ஆண்டில் தொல்பொருள்துறை தென் பகுதி சூப்பரிண்டெண்டு, காவேரிப்பூம்பட்டினத்தில் பல பகுதிகளைப் பரிசோ தித்துப் பார்த்தார். அப் போதே பல பண்டைய சின்னங்கள் புதைந்து கிடப்பது கண்டுபிடிக்கப்பட்டது. முக்கியமாக கடற்கரையின் அருகிலே சில கிணறுகள் பூமிக்கடியிலே காணப் பட்டன. இக்கிணறுகளின் புறங்கள் சுடுமண் பூசப்பட்டும்; அதன்மேல் கெட்டியான களிமண் பூசப்பட்டும் விளங்கின. இவற்றை 'உறை கிணறு' என்று அழைப்பர். பட்டி னப்பாலையில் கடற்கரையோரத்தில் உறை கிணறுகள் இருந்தன என்று ''உறை கிணற்றுப் புறச்சேரி'' என்று குறிக்கப்பட்டுள்ளது. 1910-ல் இக்கிணறுகள் கண்டு பிடிக்கப்பட்டது சிறப்பான அம்சமாகும். அத்துடன் சம்பாபதியம்மன் கோயில், பல்லவனிச்சுரம் என்ற பகுதிகளில் உயர்ந்த மேடுகள் இருப்பதும், அங்கு பண்டைய சின்னங்கள் கிடைப்பதும், அதை அகழ்ந்து ஆராய வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார். 1910-லிருந்து 50 ஆண்டுகளுக்குப் பிறகு 1960-61-ல் மறு படியும் தொல்பொருள் துறை காவிரிப்பூம்பட்டினத்தை அகழ்ந்தாராயும் முயற்சியை எடுத்துக்கொண்டுள்ளது.

அலைகளால் அரிக்கப்பட்ட கடற்கரைப் பகுதிகளின் அடியில் பண்டைய செங்கற்களும் மற்ற சின்னங்களும் தெரிகின்றன. இதுவரை பல பகுதிகளைப் பரிசோதித் துள்ளனர். கீழையூர் என்ற பகுதியில் செங்கற்கட்டிடம் ஒன்று காணப்பட்டது. இதன் அருகில் மரத்தாலான கால்கள் காணப்படுகின்றன. உப்பை நெல்லுக்கு விற்று, அதை ஏற்றி வந்த படகுகள் மரத்தறிகளிலே கட்டப் பட்டிருந்தன என்று பட்டினப்பாலை குறிக்கிறது. இப்போது கண்டுள்ள பகுதி அதுவாக இருக்கலாம் என்று ஆராய்ச்சியாளாகள் கருதுகின்றனர். வானகிரி என்று அழைக்கப்படும் இடத்தில் ஒரு பொய்கை கண்டுபிடிக் கப்பட்டுள்ளது. அதன் புறங்கள் செங்கல்லால் உறை எடுக்கப்பட்டுள்ளன. இப்பொய்கை ''அர்த்த சந்திரன்'' வடிவிலே அமைந்துள்ளது. காவிரியாற்றிலிருந்து தண்ணீர் வரும் ஒரு வாய்க்கால் இதில் கலக்கிறது. இந்த வாய்க்கால் முழுவதும் செங்கல்லால் எடுக்கப் பட்டதாகும். இதுபோன்றவைகளை, ''தேய்பிறை யுருவக் கேணி'' என்று நம் இலக்கியங்கள் கூறு கின்றன.

### பூம்புகாரும்–புத்தமதமும் :

அனைத்திலும் முக்கிய மான அகழ்வாராய்ச்சி பல்லவனீச்வரத்தில் மேற் கொண்டதாகும். இங்கு தான் சதுரமான அறைகளை உடையதும் 60 அடிக்கு மேல் நீண்டதுமான புத்த விஹாரம் ஒன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. சிலப் பதிகாரத்திலிருந்தும், மணி மேகலையிலிருந்தும் பூம்பு காரில் பௌத்த மதம் சிறந்து விளங்கிற்று என்று அறிவோம். புத்த சைத்ய மும், இந்திர விஹாரம் ஏழும் இங்கிருந்தன என்று அந்நூல்களிலிருந்து நாம் அறிவோம். இலக்கியத்தில் கூறப்பட்டுள்ள பல பகுதிகள் இப்போது தொல்பொருள் ஆராய்ச்சியால் வெளிப் படுவது தமிழ் மக்களுக்கு பெருமைதரும் விஷயமாகும். காவேரிப்பூம்பட்டனத்தில் இப்போது கண்டுபிடிக்கப்பட் டுள்ள புத்த விஹாரம் ஆந்திர தேசத்தில் நாகார்ஜுன் கொண்டாவில் காணப்பட்ட விஹாரத்தைப்போல் இருக் கிறது.

மற்றும் இப்பகுதியிலே கல்லிலே செதுக்கப்பட்ட புத்த பாதம் ஒன்று கிடைத்துள்ளது. இது அமராவதி' நாகார்ஜுன் கொண்டா முதலிய இடங்களில் உபயோ கப்பட்ட ஒருவகைப் பளிங்கு கல்லால் ஆனது. சுமார் மூன்றரை அடி பீடமும், இரண்டரை அடி அகலமும் உள்ள இப்புத்த பாதத்தில், இரண்டு பாதங்களும், சுவஸ்திகம், பூர்ண கலசம், ஸ்ரீவத்சம் போன்ற மங்கலச்

—27-ம் பக்கம் பார்க்க.

## "கலைஞர் கைப்பட்ட வீணையாக மிளிரட்டும்"

### மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர், திரு மா. முத்துசாமி.

[" 'உணவு உற்பத்தியில் இன்று நாம் பெற்றுள்ள மகத்தான சாதனையை ஊராட்சி ஒன்றியங்கள் ஏற்படுத்தியுள்ளன என்று' மாண்புமிகு விவசாய அமைச்சர் ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு, ஊராட்சி ஒன்றியத் தலைவர்கள் பணியாற்றுகின்றனர்" என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் சுட்டிக் காட்டியுள்ளார். சென்னை இராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற சிறப்பு மாநாட்டிலே, அவர் ஆற்றிய உரையின் விவரம் இங்கே காணலாம்.

—ஆசிரியர்.]

"துணை நலம் ஆக்கந் தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும்"—குறள்.

தமிழக அரசென்ற அழகிய தேர் நலமுடன் ஊர்ந்து வர அச்சாணியாக இருப்பது கிராமக் குடியாட்சி. பண்டை நாள் தொட்டு இற்றை நாள் வரை தமிழகத்தில் குடியாட்சியானது, ஆள்வினையும் ஆன்ற அறிவும் என இரண்டின் நீள் வினையால் நிலைத்த புகழைப் பெற்று வந்துள்ளது. பொது மறையின் வழி நின்று அறம் பிறழாத குடிதழீஇ இக் கோலோச்சிய மூவேந்தர் காலம் தொட்டே கிராமக் குடியாட்சி முறை கண்ட இனம் நம்மினம். குடவோலை முறைப்படி ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர்கள் கிராமத் தன்னாட்சி நடத்தி முன்னேற்றம் கண்ட நம் முன் வரலாறு மேலை நாட்டாரும் கண்டு வியக்கும் ஒன்றாகும். இடையிலேற்பட்ட அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்களால் ஊராட்சிகளின் புகழ் மங்கத் தலைப்பட்டது. விடுதலை பெற்ற நாடு வீறு கொண்டு முன்னேறக் கிராம வளர்ச்சியே அடிப்படை என்ற கருத்து அண்ணல் காந்தியடிகள் நமக்குத் தந்து சென்ற அறவுரைகளின் தலையாயதும் தனித்தன்மை வாய்ந்ததும் ஆகும். இன்று நம்மிடையே வாழ்ந்து வரும் வள்ளுவராய், காந்திய நெறியின் உண்மைக் காவலராய் விளங்கி வரும் பேரறிஞர் அண்ணா அவர்களால் கிராமக் குடியாட்சியானது இழந்த பழம் புகழை எய்தித் தமிழக வரலாற்றில் பொற்காலத்தைத் தோற்றுவிக்கும் என்பது என் துணிபு.

#### மக்கள் வாழ்வின் வளமே நம் பணி

ஊராட்சி ஒன்றியங்கள் கலைக்கப்படும், நீக்கப்படும், அதனால், பலர் வேலை இழக்க நேரிடும் என்ற ஐயங்கள் எழத் தேவையேயில்லை. "நல்லதோர் வீணை செய்தே அதை நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ?" என்ற கவிஞர் பாரதியின் வினாவைத்தான் இக் கூற்றுக்கு விடையாகத் தர நான் ஆசைப்படுகிறேன். ஊராட்சி ஒன்றியம்—நல்லதோர் அமைப்பு—அது புழுதியில் எறியப்பட்டதாக இன்றி மீட்டி மகிழும் கலைஞன் கைப்பட்ட நல்ல வீணையாக இசை மிகுந்து விளங்க வேண்டுமென்பதே இன்றைய அரசின் அவா. இறைக்கும் நீர் வயலிற் சென்று பாயாது வழியிலேற்படும் உடைப்புகள் மூலம் வெளிச் சென்றுவிட்டால் பயிர் விளையாது! வாய்க்காலில் தோன்றும் உடைப்புகளை அடைக்காதவன் உழவனாக இருக்க முடியாது. ஊராட்சி மன்றமாகிய வரி நீர் எங்கும் சேதமாகாமல் மக்கள் வாழ்வெனும் வயலிலே சென்று பாய்தல் வேண்டும். அதற்காக அங்காங்கே தென்படும் அடைப்புகளை நீக்குவதே பணியில்தான் நாம் இப்போது ஈடுபட்டுள்ளோம். இப் பெரும் பணிக்குத் தங்கள் ஒத்துழைப்பு பெரிதும் தேவைப்படுகிறது.

#### விவசாய அமைச்சரின் கருத்து

தமிழக ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர்கள் ஊக்கமிக்கவர்கள்; எந்த ஆக்கப் பணியிலும் அயர்வின்றி உழைப்பவர்கள். உதாரணத்திற்கு ஒன்றினைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களை அண்மையில் நான் சந்தித்து உரையாடிக் கொண்டிருந்த பொழுது, அவர்கள் ஒரு மகிழ்ச்சி தரும் செய்தியினை வெளியிட்டார்கள். "நீங்கள் தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் சென்று ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர்களையும் ஊழியர்களையும் சந்தித்து அவர்களுடன் தோழமையுணர்வோடு கலந்துரையாடி அவர்களுக்கிருந்த ஐயப்பாடுகளைப் போக்கிய பிறகு, ஊராட்சி ஒன்றியங்கள் புதுமலர்ச்சி பெற்றுப் புதிய உற்சாகத்துடன் வேளாண்மைப் பெருக்கத்திற்குப் பூரண ஒத்துழைப்பினை நல்கி உணவு உற்பத்தியில் இன்று நாம் பெற்றுள்ள மகத்தான சாதனையை ஏற்படுத்தியுள்ளன" எனும் கருத்தினை வெளியிட்டார்கள். இதன் மூலம் இந்தத் துறையின் பொறுப்பினை ஏற்

—28-ம் பக்கம் பார்க்க.

படங்கள்: எதிர்பக்கம்



## தமிழ்நாடு ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்கள் மாநா

ஊராட்சி ஒன்றியங்களின் பெருந் தலைவர்கள் மாநா(டு) சென்னையில் அக்டோபர் மாதம் 20, 21, 22 தேதிகளி(ல்) நடைபெற்றது.

1. மாநாட்டினை ஒட்டி, விவசாயக் கருவிகள் கண்காட்(சி) ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. 'வால்டாஸ்' நிறுவனத்தைச் சேர்ந்த திரு ஜானகிராமன், கருவிகளை பற்றி விளக்கிக் கூறுகிறார்:
2. லால்குடி ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு அன்பி(ல்) தர்மலிங்கமும்—மற்ற தலைவர்களும்.
3. தேசியக் கொடியை ஏற்றிவைத்துப் பேசினார், மாண்புமி(கு) உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்கள்.
4. மாநாட்டில் பங்குகொண்டு சிறப்புரை ஆற்றினார், மாண்புமிகு பொது சுகாதாரத்துறை அமைச்சர் திரு எஸ். ஜே. சாதிக்பாட்சா.
5. மாநாட்டை மாண்புமிகு முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை துவக்கிவைத்தார்.


1.


2.


3.


4.


5.



1.



2.



3.



4.



5.

1. 7–10–1967-ல் சென்னை மாநகராட்சி மன்றம், இந்தியக் குடியரசின் துணைத் தலைவர் திரு வி. வி. கிரி அவர்களுக்கு வரவேற்பளித்தது.

2. இந்தியாவில் அமெரிக்க தூதரகத்தைச் சேர்ந்த திரு ஜோசப் என். கிரீன் அவர்கட்கு மாண்புமிகு தொழில் அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் 10–10–1967-ல் ஒரு விருந்தளித்தார். அவர்களுடன் அமெரிக்க கான்சல்-ஜெனரல் டாக்டர் பிராங்க்ளினையும் காணலாம்.

3. கல்பாக்கம் அணுசக்தி வேலைத்திட்ட விவரங்களை 21–9–1967-ல் மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் பார்வையிடுகிறார்.

4. கல்பாக்கம் மக்களுடன் தொழில் அமைச்சர்.

5. அகில இந்திய நில அளவையாளர்கள் மாநாடு, (All India Cadestral Survey) உதகமண்டலத்தில் 4-10-1967ல் நடைபெற்றது. தமிழகக் கவர்னர் திரு உஜ்ஜல்சிங் மாநாட்டை துவக்கிவைத்தார்.



1.




2.



3.



4.

1. பாரத அரசாங்க உணவமைச்சருக்கு சென்னை மாநகராட்சி மன்றம் (10–10–67)-ல் வரவேற்பளித்தது.

2. தஞ்சாவூர் மாவட்டத்தில் கொள்முதல் செய்யப்படும் நெல்லை ஏற்றிக்கொண்டு செல்லும் முதல் சாமான்கள் ரயில்வண்டி புறப்படும் வைபவத்தை, மத்திய அரசாங்க உணவமைச்சர் திரு ஜகஜீவன்ராம் துவக்கிவைத்தார். (11–10–67)

3. நெல் உலர்வைக்கும் பிரம்மாண்டமான இயந்திரத்தை மத்திய அரசாங்க உணவமைச்சர் திரு ஜகஜீவன்ராம் அவர்கள் கும்பகோணத்தில் 12–10–67ல் இயக்கி வைத்தார்.

4. மலிவு விலையில் மக்களுக்கு பால் வழங்கும் திட்டத்தை மதுரையில் 2–10–67 அன்று மாண்புமிகு உணவமைச்சர் திரு கே. எ. மதியழகன் துவக்கி வைத்தார்.



1. திருவள்ளூரை அடுத்த ஈக்காட்டில் 19-10-1967-ல் நடைபெற்ற பள்ளிச் சீரமைப்பு மாநாட்டில் மாண்புமிகு முதலமைச்சருக்கு பொன்னாடை போர்த்தப்பட்டது.

2. அம் மாநாட்டை ஒட்டி நடைபெற்ற கண்காட்சியில் ஒரு பகுதி.

3. கடலூர் நகராட்சியின் "நூற்றாண்டு நாளங்காடி"யை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்கள் 11-10-1967-ல் திறந்து வைத்தார்.

4. தீபாவளி தினத்தன்று, ராஜபவனில் தமிழகக் கவர்னர் 500 குழந்தைகட்கு விருந்தளித்தார். குழந்தைகளுடன் கவர்னரின் மனைவியார் சர்தாரிணி உஜ்ஜல்சிங்.

5. 30-10-1967 அன்று லார்சன்-டோப்ரோ கம்பெனியைச் சேர்ந்த திரு ஏ. கே. நடராஜன், சிறு சேமிப்பு நிறுவனத்தின் துணைத் தலைவர் திரு எம். ஜி. இராமச்சந்திரன், எம். எல். ஏ., அவர்களிடம் சிறு சேமிப்பில் போடுவதற்காக ரூபாய் ஒன்றேகால் இலட்சத்திற்கான 'செக்' ஐ அளித்தார்.









# புள்ளி விவரப் பேழை

["புள்ளி விவரப் பேழை" என்ற புதிய தொடரில் இது மூன்றாவது கட்டுரை. சேலம் உருக்காலை,—தூத்துக்குடி ஆழ்கடல் துறை முகத் திட்டம் பற்றிய விவரங்கள் "கருப்பொன்னும் வெண்முத்தும்" என்ற தலைப்பிலும், மணலி எண்ணெய் தூய்மைப் படுத்தும் ஆலையைப் பற்றிய விவரங்களும் கடந்த இதழ்களில் இடம் பெற்றன. இந்த இதழில் சென்னைக்கருகில் அமைக்கப்படவிருக்கும் "எண்ணூர் அனல் மின்சார நிலையம்" பற்றிய விவரங்கள் சுருக்கமாக தொகுத்துத் தரப்பட்டுள்ளன.

— ஆசிரியர்]

தமிழகத்தில் தற்போது 3 அனல் மின் நிலையங்களும் 12 நீர் மின் நிலையங்களும் உள்ளன. நமது இன்றைய மின்சாரத் தேவை 850 முதல் 950 மெகாவாட் ஆகும். நெய்வேலியின் 400 மெகாவாட் உட்பட இன்றைய நிறுவப்பட்டுள்ள மின்திறன் 1,470 மெகாவாட்டாக இருந் தாலும் நிரந்தரமான உற்பத்தித் திறன் 820 மெகா வாட்டே ஆகும். எப்படியெனில் மேட்டூர், பாபநாசம், பெரியாறு, பரம்பிக்குளம் ஆகிய நீர் மின் நிலையங்கள் விவசாய நீர்ப்பாசன தேவைக்குரிய நீரைக் கொண்டு தான் மின்சாரம் உற்பத்தி செய்கின்றன. விவசாயம் செய்யாத காலங்களில், அதாவது மேட்டூரில் 5 மாத காலமும் பாபநாசம், பெரியாறு ஆகிய இடங்களில் சுமார் மூன்று மாத காலமும் மிகச் சொற்ப அளவே மின்சாரம் உற்பத்தி செய்ய இயலும். எனவே, இந்த மாதங்களில் உற்பத்தித் திறன் மிகவும் பாதிக்கப்பட்டு விடுகிறது. மின் சார வெட்டு போடவேண்டியதாகிறது. இதைத் தவிர்க்க வேண்டுமானால், நீர் மின் உற்பத்தியும், அனல் மின் உற்பத்தியும் ஏற்றத்தாழ்வில்லாமல் சம அளவில் இருக்க வேண்டும். ஆனால், தற்சமயம் 70 சதவீதம் நீர் மின் சக்தியும் 30 சதவீதம் அனல் மின் சக்தியுமாக உள்ளது. நான்காவது ஐந்தாண்டுத் திட்ட காலத்தில் இந்த ஏற்றத் தாழ்வைப் போக்கி சம நிலைப் படுத்த ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

பருவமழையை எதிர்பார்த்து இருக்கும் நீர் மின் நிலையங்களை கட்டுவதைவிட பருவ மழைகளால் பாதிக்கப்படாத அனல் மின் நிலையங்களையே ஏன் கட்டக்கூடாது என்று கேட்கத் தோன்றும்.

நீர் மின் நிலையத்தில் மின்சாரம் உற்பத்தி செய்ய இயற்கையில் கிடைக்கும் நீரைத் தவிர வேறெதுவும் தேவையில்லை. அனல் மின் நிலையத்தில் நீரை எரித்து ஆவியாக்க கரி தேவைப்படுகிறது. 500—800 மைல் தொலைவிலுள்ள நிலக்கரிச் சுரங்கங்களிலுள்ள கரி கொண்டுவரப்படவேண்டும். சுரங்கத்தில் இருக்கும் கரியும் அளவில் ஆண்டு தோறும் குறைந்து கொண்டே வருகிறது. ஆனால் மழை தரும் வானம் வற்றாது. ஆகவே நிலக்கரிச் சுரங்கங்களைவிட வானத்தை நம்பலாம். குறைந்த செலவில் மின் உற்பத்தி செய்ய நீர் மின் நிலையங்களால் முடியும். அனல் மின் நிலையத்தில் அதிக செலவு ஆகும்; உதாரணமாக ஒரு யூனிட் மின்சாரம் உற்பத்தி செய்ய,

| | | | |
|---|---|---|---|
| | பைகாராவில் | 1·56 | பைசா செலவாகிறது. |
| அதே போல் | மோயாறு | 2·03 | ,, |
| | மேட்டூர் | 1·63 | ,, |
| | பாபநாசம் | 2·42 | ,, |
| | குந்தாவில் | 3 முதல் 5 | பைசா வரை செலவாகிறது. |

ஆனால், மதுரை அனல் மின் நிலையத்தில் 1 யூனிட்டிற்கு 10·88 பைசாவும், சென்னை அனல் மின் நிலையத்தில் யூனிட்டிற்கு 9·8 பைசாவும் செலவாகின்றன.



என்னூரில் 8 பைசா செலவில் 1 யூனிட் தயாரிக்கலாம் என்று கருதப்படுகிறது.

உற்பத்தி செலவு அதிகமானாலும் கூட, மின் வெட்டை தவிர்ப்பதற்காகவும் வளர்ந்து வரும் மின் தேவையைப் பூர்த்தி செய்யவும் அனல் மின் நிலையம் நிறுவுவது அவசியம் ஆகிறது.

தொழில் வளர்ச்சிக்கேற்ப தமிழகத்தின் மின்சாரத் தேவை வளர்ந்து கொண்டே வருகிறது. மூன்றாவது ஐந்தாண்டு திட்டக்கால முடிவில் இருந்ததைவிட நான்காவது திட்ட கால முடிவில் மின் தேவை ஏறக்குறைய இரண்டரை மடங்காக பெருகிவிடும் என்று கருதப்படுகிறது. மொத்த உற்பத்தித் திறனும் இரண்டு மடங்காகப் பெருகினாலும், உறுதியான உற்பத்தித் திறனைவிட, தேவை அதிகமானதாகவே இருக்கும் என்று கருதப்படுகிறது.

| தமிழக மின் இணைப்பில் மின் தேவை | மூன்றும் திட்ட கால முடிவில் (1965-66-ல்) 855 மெகா வாட். | நான்காம் திட்டகால முடிவில் (1970-71-ல்) 2150 மெகா வாட். |
|---|---|---|
| | மெகாவாட் | மெகாவாட் |
| மொத்த உற்பத்தித் திறன். | 1,370 | 2,415 |
| உறுதியான ,, ,, | 831 | 1,437 |
| பற்றாக் குறை | 124 | 823 |
| தேவையான மின்சாரம் (யூனிட் அளவில்). | 4,445 | 11,309 |
| கிடைக்கக்கூடிய மின்சாரம் | 3,985 | 8,357 |
| பற்றாக்குறை .. .. | 460 | 2,952 |

இந்த பற்றாக்குறை, நாட்டின் தொழில் வளம் பெருமளவில் பெருகுவதற்கான அறிகுறியாகும்.

ஆகவே, முன்கூறியபடி மாநில மின் அமைப்பில் உள்ள நீர், அனல் மின் உற்பத்தி சக்திகளுக்கிடையேயுள்ள ஏற்றத்தாழ்வுகளைச் சீர்படுத்தவும் மாநிலத்தில் வளர்ந்து வரும் மின் தேவையைப் பூர்த்தி செய்யவும் என்னூர், தூத்துக்குடி ஆகிய இடங்களில் அனல் மின் நிலையங்களை நிறுவ மத்திய அரசினை மாநில அரசு அணுகியது.

300 மெகாவாட் உற்பத்தித் திறனுள்ள அனல் மின் நிலையத்தை என்னூரில் நிறுவ திட்டக்குழு 1964 செப்டம்பரில் அனுமதித்தது. பின் வந்த மத்திய சர்க்காரின் தகவலின்படி என்னூரில் அமைக்கப்படவேண்டிய அனல் மின் நிலையத்தின் உற்பத்தித்திறன் 340 மெகாவாட்டாக இருக்க வேண்டுமெனக் கூறப்பட்டது.

முன்நிர்மாணிக்கப்பட்ட மின் நிலையத்தின் உற்பத்தித் திறனை 300 மெகாவாட்டிலிருந்து 340 மெகாவாட்டிற்கு அதிகரிக்கப்பட்டிருந்தாலும் மின் உற்பத்தி இயந்திரங்களின் எண்ணிக்கை 3-லிருந்து நான்காக உயர்த்தப் பட்டதாலும், மேலும் ரூபாயின் மதிப்பு குறைக்கப்பட்டதாலும் திட்டத்தின் குறியீட்டு மதிப்பு அதிகரித்து விட்டது. திட்டத்தின் திருத்தப்பட்ட மதிப்பு சுமார் ரூ. 58·14 கோடி ஆகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் ரூபாயின் மதிப்பு குறைக்கப்பட்டபின் அந்நிய செலவாணி தேவை ரூ. 16 கோடியாக இருக்கும். இந்த திருத்திய மதிப்பீடு மத்திய அரசு, திட்டக்குழுவின் ஒப்புதலுக்குக் காத்திருக்கிறது.

இயந்திர சாதனங்களின் பூர்வாங்க தொழில் நுட்ப விவரங்கள் தயாரிக்கப்பட்டு, செக்கோஸ்லோவேகியா நாட்டைச் சேர்ந்த பிராஹாவிலுள்ள டெக்னோ எக்ஸ்போர்ட் (தற்போதைய ஸ்கோடா எக்ஸ்போர்ட்) டாரிடமிருந்து பொறியாளர் தொகுதி 1965 ஜனவரியில் வரவழைக்கப்பட்டு 1965 மார்ச் 2-ந் தேதியில் திட்ட அறிக்கை கொடுக்கவும் 340 மெகாவாட் மின் நிலையத்திற்குத் தேவையான அமைப்புமுறைகள் வரைப்படங்களை வழங்கவும் ஓர் ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதே சமயத்தில் நில ஆர்ஜிதம் செய்யவும் முன்னேற்பாடான வேலைகளைச் செய்யவும் வேலை துவங்கப்பட்டது.

திட்ட அறிக்கை டெக்னோ எக்ஸ்போர்ட்டிடமிருந்து 1965 ஆகஸ்டில் வந்து சேர்ந்தது. செக்கோஸ்லோவாகிய தொழில் வல்லுநர்களுடன் மேலும் பேச்சு வார்த்தைகளுக்குப் பின் திட்ட அறிக்கைக்கு 1—10—1965-ல் அங்கீகாரம் அளிக்கப்பட்டது. இரண்டு 110 மெகாவாட் உற்பத்தி சக்தியுள்ள இயந்திர சாதனங்களையும் இரண்டு 60 மெகாவாட் உற்பத்தி சக்தியுள்ள இயந்திரங்களுக்கு வேண்டிய மீதமுள்ள சாதனங்களையும் வழங்குவது பற்றிய வாய்ப்புகளின் மீது விவாதிக்கப்பட்டு முடிவெடுக்கப்பட்டதுடன் 20—11—1965-ல் ஸ்கோடா எக்ஸ்போர்ட்டுடன் இவைகளை செக்கோஸ்லோவாகியாவிலிருந்து வழங்குவதற்கான வரைவு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது.

மணிக்கு 260 டன் நீராவி உற்பத்தித்திறனுள்ள 2 கொதிகலன்களையும் 60 மெகாவாட் உற்பத்தித்திறனுள்ள மின் இயந்திரங்களையும் வழங்குவதற்காக, 6 பாரத கனரக மின் இயந்திர, நிறுவனத்"தாருடன் நீண்ட பேச்சு வார்த்தைக்கு பின் 31—5—1966-ல் ஓர் ஒப்பந்தம் செய்துகொள்ளப்பட்டது.

இந்த திட்டத்தில் உச்ச கட்டமான வேலை நடைபெறும் காலத்தில் சுமார் 4000 பேருக்கு வேலை வாய்ப்பு இருக்கும்.

இந்த திட்டம் 1966-ம் ஆண்டில் மார்ச் மாதத்தில் துவக்கி வைக்கப்பட்டது.

பாரத கனரக மின் இயந்திர நிறுவனத்தாரால் வழங்கப்படும் முதல் 60 மெகாவாட் இயந்திரத்திற்கான மணிக்கு 260 டன் நீராவி உற்பத்தி செய்யும் முதல் கொதிகலன் அமைப்புப் பணியினை 5—8—1967-ல் மாண்புமிகு தொழில் மின் துறை அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் துவக்கி வைத்தார். மணற்பாங்கான இந்த இடத்தில் தொழிலாளர், நிபுணர்கள் கண்டிராக்டர்களின் இடைவிடாத 24 மணி நேர அயராத உழைப்பினால் அஸ்திவார வேலைகள் 15 மாத காலத்திற்குள் முடிக்கப்பட்டுள்ளது ஒரு சாதனையே.

இதுவரை திட்டத்தில் பத்து கோடியே அறுபது லட்சம் செலவு செய்யப்பட்டுள்ளது. இந்த திட்டத்தின் முதல் 60 மெகாவாட் இயந்திரம் 1968 டிசம்பரிலும், இரண்டாவது 60 மெகாவாட் இயந்திரம் 1969 ஜூனிலும், முதல் 110 மெகாவாட் இயந்திரம் 1969 டிசம்பரிலும் இரண்டாவது 110 மெகாவாட் இயந்திரம் 1970 ஜூனிலும் செயல்படத் துவங்கும்.



# ஆசிரியருக்கு கடிதங்கள்

## மாணவர்கள் பயனடைய ...

அன்புள்ள ஆசிரியருக்கு,

தமிழ்நாட்டு கிராம நல முன்னேற்றத்திற்கு அரும் பணி ஆற்றிவரும் "கிராமநலம்" இதழுக்கு பாராட்டுகள். ஆண்டுதோறும் தமிழகத்தில், சுமார் 150 பட்டதாரி மாணவர்கள், நாளைய கிராம நல முன்னேற்றத்திற்கு தம்மை அர்ப்பணித்துக் கொள்ளும்பொருட்டு, சமூகப் பணித்துறை முதுகலை வகுப்பில் (M. A. in Social Work) பயிலுகின்றனர். இவர்களின் பாடத்திட்டச் சிறப்புப் பகுதியாக சமுதாய முன்னேற்றம், (Community Development) கற்க, நம்நாட்டில்—சிறப்பாக தமிழ்நாட்டில் செயல் படுத்தப்படும் கிராம நல முன்னேற்றத் திட்டங்களைப் பற்றிய செய்திகள் புள்ளி விவரங்களுடன் தேவை. தங்கள் இதழில் வெளியாகும் செய்திகள், இத்தேவையில் ஒரு பகுதியையே நிரப்புகின்றன. ஆதலின், இச்செய்திகளை தனித்தனி வெளியீடுகளாக ஆங்கிலத்திலும், தமிழிலும், வெளியிட்டால், சமூகப் பணித்துறை மாணவர் மட்டுமன்றி, கல்லூரித் திட்ட அரங்கு (Planning Forum) களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான மாணவர்களும் பயன்பெற்று, நாட்டு மக்களிடையே இத்திட்டங்களைப் பற்றி நல்ல கருத்துக்களை உருவாக்கியும், பரப்பியும், நம் நாட்டு கிராம நல முன்னேற்றத் திட்டங்களின் வெற்றிக்கு வழிகோலுவர்.

இப்படிக்கு,

ந. ம கா க ண ப தி,

இரண்டாம் முதுகலை வகுப்பு, சமூகப்பணித் துறை, இலயோலா கல்லூரி, சென்னை-34.

பூம்புகார் போற்றுதும்:—19-ம் பக்கத் தொடர்ச்சி.

சின்னங்களும் செதுக்கப்பட்டுள்ளன. இதுபோன்றவை களைத்தான் பிடிகை என்றும் புத்தபீடிகை என்றும் நம் நூல்கள் குறிக்கின்றன. செங்கல்லாலும், சுதையாலும் ஆன தூண்களும், போதிகைகளும் இங்கு கிடைத்துள்ளன.

இங்கு கிடைத்த பொருள்களில் மண் பொம்மைகள் சில அழகாக உள்ளன. செப்புக் காசுகளும் இங்கு ஏராளமாகக் கிடைத்துள்ளன. அவற்றில் சதுரமாகவும்



கரிகாலன் காலத்தியது — காவிரிப்பூம்பட்டினத்தில் கிடைத்த காசு

வட்டமாகவும் உள்ள காசுகள் பல இருக்கின்றன. இக்காசுகளின் முன்புறம் வாலைத்தூக்கி நிற்கும் புலியின் உருவமும் அதன்மேல் சூரியனின் உருவமும் காணப்



காவிரிப்பூம்பட்டினத்தில் கிடைத்த காசு

படுகிறது. பின்புறத்தில் யானையின் உருவம் காணப்படுகிறது. சோழர்களது இலச்சினையான புலி காணப்படும் இக்காசுகள் கரிகாலன் காலத்தவையாக இருக்கலாம் என்று கருதப்படுகிறது. வெள்ளையனிருப்பு என்ற இடத்தில் ரோமானிய செப்புக் காசு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. இது சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியது. பூம்புகாரில் இருந்த யவனிருக்கையைப் பற்றி முன்பே கூறினோம். ரோமானியக் காசு அதை உறுதிப்படுத்துகிறது. பிற்காலத்தில் வழங்கிய இராஜராஜன் காசுகளும் கிடைத்துள்ளன. புத்தபிரான் தியானத்தில் அமர்ந்திருக்கும் நிலையில் செப்பு விக்ரகம் ஒன்றும் கிடைத்துள்ளது. பல மணிகளாலான பாசிகளும் கண்ணாடியாலான வளையல்களும், பவழங்களும், சங்கு வளையற்களும் கிடைத்துள்ளன.

றுள்ள தலைமை ஊழியன் என்ற முறையில் எனக்கு நீங்கள் அளித்துள்ள இப் பெருமை என்னை ஏற்று நடத்திச்செல்லும் தமிழக முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு நீங்கள் அளித்த அன்புக் காணிக்கை யென்றே கருதுகிறேன். இத்தகைய பேராளர்களுடன் ஒன்றி நின்று பணியாற்றும் பேறு பெற்றதைப் பெருமையாக நான் எண்ணுகிறேன்.

தமிழகத்தில் இன்று 12,881 ஊராட்சிமன்றங்களும், 438 பேரூராட்சி மன்றங்களும், 374 ஊராட்சி ஒன்றியங்களும், 14 நகரியங்களும் 88 நகராட்சிகளும், சென்னை மாநகராட்சி மன்றமும் சிறப்புறச் செயலாற்றி வருகின்றன. இவ்வமைப்புக்கள் ஆற்றிவரும் பணிகள் மாபெரும் பணிகளாகும். மக்கள் வாழ்வாங்கு வாழ்வதற்கான வழிகளை வகைப்படுத்தி நிறைவேற்றி வருவது ஊராட்சி மன்றங்களேயாம். ஊருக்குத் தேவையான ஒளியமைத்தல்—நல்ல வழியமைத்தல்; பள்ளியமைத்தல்—பாலம் கட்டுதல்—பாசன வசதி செய்தல் மருத்துவ உதவி அளித்தல்—மனமகிழ் மன்றம் நிறுவுதல்; குடி தண்ணீர் வசதியளித்தல், வானொலி நிலையம் அமைத்தல், விதையளித்தல், நல்ல உரம் அளித்தல், உழவர்க்குத் தேவையான உதவியளித்தல் போன்ற உயிர் நாடியான பணிகளை ஊராட்சிகள் மேற்கொண்டுள்ளன. இதுவரை நாம் செய்து முடித்துள்ளவை ஏராளம்! எனினும் நமது தேவைகளை நோக்குமிடத்து இவை மிகக் குறைவே!



### அறிவு விளக்கப் பணி

நம்மிடம் 22,401 தொடக்கப் பள்ளிகளும், 4,001 உயர் தொடக்கப் பள்ளிகளும் உள்ளன. அவற்றுள் 10,900 பள்ளிகட்கு மட்டுமே நாம் கட்டிடங்கள் கட்டித் தந்துள்ளோம், "கல்வி விலை போட்டு வாங்க முடியாத பெரும் சொத்து; குழந்தைகள் வேளைதோறும் சென்று கற்பதால் மட்டுமே அடையக்கூடியது." அறிவு நிலையங்களாகிய கல்விச் சாலைகள் மழலைச் செல்வங்களான குழந்தைகளை ஈர்க்கத்தக்க வண்ணம் பல்வகை வசதிகளையும், பரந்த விளையாட்டிடங்களையும், சிறந்த தோட்டங்களையும் கொண்டு, பேரெழில் நிறைந்தவையாய் விளங்கவேண்டும். இன்று 1,09,616 ஆசிரியர்கள் 35½ இலட்சம் குழந்தைகட்கு ஊராட்சிப் பள்ளிகளில் அறிவூட்டி வருகின்றனர். பள்ளி செல்லும் குழந்தைகளின் எண்ணிக்கை ஆண்டுதோறும் படிப்படியே முன்னேறிச் செல்லும் என்பதில் ஐயமில்லை. அனைவர்க்கும் அடிப்படைக் கல்வி அளிக்கப்பட்டாக வேண்டுமென்பது அரசின் எண்ணம்.

1967-68-ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தில் ஊராட்சி ஒன்றியப் பள்ளிகட்கு மட்டும் சுமார் 20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் ஏறத்தாழ 82 சத விதம் அதாவது 16·21 கோடி ரூபாய் அரசினர் மானியமாகும். மீதித் தொகையான 3 கோடி 77 இலட்சம் மட்டுமே ஊராட்சி ஒன்றியங்களின் செலவாகும். மேலும் இணை மானியமாக இவ்வாண்டில் 42·55 இலட்சம் பள்ளிக் கட்டிடங்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. இவை தவிர பெருமளவில் முதன் முறையாக 7·3 இலட்சம் ரூபாய் இப் பள்ளிகட்குத் தளவாட மானியமாகவும் கொடுக்கப்பட்டுள்ளது. இம்மானியம் தொடக்கப் பள்ளி ஒன்றுக்கு ரூ. 300, உயர் தொடக்கப் பள்ளி ஒன்றுக்கு ரூ 1,000 ஆக அளிக்கப்படும் இதன் மூலம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளிலுள்ள 1,122 தொடக்கப் பள்ளிகளும், 394 உயர் தொடக்கப் பள்ளிகளும், 658 நகராட்சித் தொடக்கப் பள்ளிகளும் 106 மாநகராட்சி தொடக்கப் பள்ளிகளும் பயன் பெறும். தளவாட மானியத் திட்டத்தை நிறைவேற்றக் கிராம வளர்ச்சித்துறை இயக்குநர் பொறுப்பாக்கப் பட்டுள்ளார். ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளுக்கான தேவைகளை அறிந்து ஆவன செய்ய, கிராம வளர்ச்சித் துறையில் கல்விப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தியிருப்பதை நீங்கள் அறிவீர்கள்.

### 'இல்லை' யென்ற குறையை 'இல்லை' யென்றாக்குவோம்.

கல்வி முன்னேற்றத்துக்குப் பெரிதும் துணை புரியும் மதிய உணவுத் திட்டம் மேலும் சிறப்படையும் வண்ணம் அமெரிக்க 'கேர்' நிறுவனத்தார் ஊராட்சி ஒன்றியங்களில் மைய உணவுக் கூடங்கள் (Central Kitchens) அமைத்துத் தருவதாக உறுதி கூறியுள்ளனர். முதலமைச்சர் அண்ணா அவர்களைக் கொண்டு சென்ற ஆகஸ்ட் 15-இல் பூவிருந்தவல்லியில் இத் திட்டத்தை அவர்கள் துவக்கியுள்ளனர். இத் திட்டம் ஒரு குறித்த கால எல்லைக்குள் எல்லா ஒன்றியங்களிலும் நிறைவேற்றப்படும் என நம்புகிறேம். இத்திட்டம் நிறைவேற நமது சீரிய ஒத்துழைப்பை நல்குவதே 'கேர்' நிறுவனத்தார்க்கு நாம் செலுத்தும் நன்றியாகும்.

"இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகும்"

தொழுவை கொண்டு தொடத் தொட, நிலமாகிய நல்லாள், பயிரெனும் மயிர்க் கூச்செறிந்து பன்மணிக் கதிர் ஈவாள். பயன்படுத்தாது நிலத்தைத் தரிசாகப்



போடுவது மாபெரும் பாதகமாகும். நிலத்தைச் சீர் திருத்தி விளைவைப் பெருக்கும் முயற்சியில் இதுவரை ஊராட்சி மன்றங்கள் காட்டி வந்த ஊக்கம் எண்ணி மகிழத்தக்கதாக உள்ளதாயினும், இப்பெரும் பணி இத்துடன் முடிந்துவிட்டதாக எண்ணிவிடக்கூடாது. பற்றுமை என்ற குறையை அகற்ற நாம் தொடர்ந்து பாடுபட்டாதல் வேண்டும். பசி மக்களைச் சுருண்டு விழச் செய்யும் பெரும் பிணி. உணவு உற்பத்தியில் நாம் மேற்கொள்ளும் முயற்சியானது இப் பசி அரக்கனைச் சுருண்டு விழச் செய்வதாக இருக்கவேண்டும். அதற்காக ஆண்டுதோறும் திட்டங்கள் தீட்டி அவற்றை நிறைவேற்றி வெற்றிகாணும் செயல் நிலையங்களாக ஊராட்சி ஒன்றியங்கள் திகழவேண்டும். இவ்வின்பத் தொடர் கதையின் முதல் அத்தியாயமாக இவ்வாண்டு அண்ணா அவர்களின் பிறந்தநாளன்று ஓராண்டுத் திட்டங்களாக உணவு உற்பத்தியைப் பெருக்கப் பல திட்டங்களை மேற்கொண்டுள்ளோம். விசைப் பொறியுடன் கூடிய சமுதாய நலப் பாசனக் கிணறுகள் தோண்டுதல், டிராக்டர்கள், டில்லர்கள் போன்ற விவசாயக் கருவிகளை வாங்கி அவை குறைந்த கட்டணத்தில் விவசாயிகட்குக் கிடைக்க வழி செய்தல், பள்ளிகளில் காய்கறித் தோட்டங்கள் அமைத்தல் போன்ற சிறந்த பணிகளை உள்ளாட்சித் துறை இவ்வாண்டின் திட்டங்களாகத் தந்துள்ளது. இவைகளை நிறைமனதுடன் உரிய காலத்தில் செய்து முடிப்பதோடு மேலும் தொடர்ந்து பல ஓராண்டுத் திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்த உங்கள் சிறந்த ஒத்துழைப்பு தூண்டுகோலாயிருக்க வேண்டும் என விரும்பி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

விளைச்சல் எவ்வளவு பெருகினாலும் மக்கட் பெருக்கம் கட்டுப்படுத்தப்படாவிட்டால் பற்றாக்குறை தொடர்ந்த வண்ணமே இருக்கும். எனவே குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டம் முழு வெற்றியடைய ஒன்றியங்கள் கருத்தூன்றிச் செயல்படவேண்டும். மேலும் கால்நடைகளைப் பேணுதல், பால் பண்ணைகளை ஏற்படுத்துதல், மீன் வளத்தை விரிவாக்குதல், பழத்தோட்டங்கள் பயிரிடுதல் ஆகிய துறைகளிலும் நமது கவனம் செல்ல வேண்டும்.

### நாம் ஆற்றவேண்டிய தலையாயப் பணி

மாநில அரசையும், மத்திய அரசையுமே முழுமையாக நம்பிக் கொண்டிராமல் தங்கட்குத் தேவையான நிதியைப் பெருக்க ஊராட்சி அமைப்புகள் கருத்தூன்றி முயலவேண்டும். வருமானத்தைப் பெருக்கும் நிறுவனங்களை ஊராட்சிகள் அமைத்து நிதிப் பற்றாக்குறையை நீக்க வழிகாண வேண்டும். தமது வரி நிதியை உற்பத்திப் பெருக்கத் திட்டங்களில் செலவிட முன் வரவேண்டும். சிக்கனமான, ஆனால் பயன்தரத்தக்க வேலைகளை மட்டுமே மேற்கொள்ள வேண்டும்.

கதர்-கிராமக் கைத்தொழில் வளர்ச்சி ஆகிய துறைகளிலும் மறுமலர்ச்சி காணவேண்டுமென்பது அரசின் அவா. இவைகட்கு இன்றைய அரசு எதிரியல்ல என்பது பன்முறையும் நன்கு விளக்கப்பட்டு வந்துள்ளது. இத்துறை ஒரு சாரார்க்கே உரியது என்ற நிலை மாறி அனைவர்க்கும் பொதுவானது என்ற சூழ்நிலை உருவாக வேண்டுமென்பதே அரசின் எண்ணம். எனவே கட்சி வேறுபாடு கருதாது மக்கள் நல்வாழ்வே நம் குறிக்கோள் எனக் கொண்டு

"கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது
தூக்கம் கடிந்து செயல்"—

செய்யும் செயல் வீரர்களாக நீங்கள் விளங்கி நலன் விளைக்க வேண்டுமெனக் கேட்டு அமைகிறேன்.

[தமிழக ஊராட்சி ஒன்றியப் பெருந் தலைவர்கள் 3-வது மகாநாட்டில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள் ஆற்றிய உரை.]

## வரப்பெற்றோம்

### செங்கல்பட்டு மாவட்ட சிரணித் துவக்க விழா மலர்

செங்கல்பட்டு மாவட்டத்தின் 27 ஊராட்சி ஒன்றியங்களிலும், சிரணி அமைக்கப்பட்டு 14—10—67-ல் துவங்கி 31—10—67-க்குள் செய்து முடிக்கவிருக்கும் செயல்திட்டங்களும் இம்மலரில் கொடுக்கப்பட்டுள்ளன. என்றும் நினைவு கொள்ளத்தக்க வகையில் மலர் அமைந்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், சென்னையில் சிரணியைத் துவங்கி வைத்து நிகழ்த்திய உரை என்றும் சிரணியின் தளராத உறுதிக்கு துணையாகும்.

### காஞ்சியில் நடைபெற்ற விவசாயக் கருத்தரங்கு சிறப்பு மலர்—1967

அதிக உணவு உற்பத்திக்கு, விவசாயக் கருத்தரங்குகள், புதிய பயனுள்ள நடைமுறைகளைக் கண்டறிந்து பலன் காண வழி வகுப்பவையாகும். அதிலும் விவசாயக் கருத்தரங்கு சிறப்பு மலர் வெளியிடுவது சாலச் சிறந்ததொரு, மற்றையோரும் பின்பற்றத்தக்க சீரிய முயற்சியேயாகும். இம்மாவட்டத்தில் விவசாய வளர்ச்சிக்குத் தேவையான குறிப்புகள், விவசாயப் பெருங்குடிகள் அறிந்து கொள்ளத்தக்கவாறு, இம்மலரில் இடம் பெற்றுள்ளன.

ருந்து சுமார் 1,50,000 இலட்சம் கன அடி நீர் எடுத்துக்கொள்ளலாம் என்ற குல்ஹாத்தி குழுவின் பரிந்துரையை இந்திய அரசு ஏற்றுக் கொண்டது. இதன்படி நாளொன்றுக்கு 2,500 லட்சம் காலன் குடிநீர் கிடைக்கப்பெறும். இத்திட்டத்திற்கான ஆய்வு வேலைகள் ஆந்திரா, மைசூர், மகாராஷ்டிரம் ஆகிய மாநிலங்களுக்குக் கிருஷ்ணா நதியிலிருந்து குடிநீர் வழங்கும் அளவை நிர்ணயித்த பிறகு துவக்கப் பெறும்.

*அன்னை காவிரியே அருமருந்து*

ஆகவே, சென்னைத் தண்ணீர் பிரச்சினை தீருவதற்கு, வற்றாத காவேரி நதியே சாலச் சிறந்ததாகுமென அறுதியிட்டு, காவிரியிலிருந்து சென்னைக்கு தண்ணீர் கொண்டு வருவதற்கு ஓர் ஆய்வை அரசினர் ஆணை எண் 1625, சுகாதாரம்—1960-ம் ஆண்டு ஜூன் மாதம் 18-ம் தேதியில் அங்கீகரித்தனர். அதன்படி காவிரியின் நீரை, மேட்டூர் நீர்த்தேக்கம், ஜேடர்பாளையம் அணைக்கட்டு, மேலணை, கீழணை, வீராணம் ஏரி, பெருமாள் ஏரி இவைகளில் எங்கிருந்து கொண்டுவருதல் தகுதியுடையது, எளியது, சிக்கனமானது எனத் தெரிந்துகொள்வதற்கு, வீராணம் ஏரியிலிருந்து கொண்டு வருவதே நலமெனக் கருதி, அதற்கு வேண்டிய பிரத்தியேக—ஆய்வு வேலைகள் 1960-61-ம் ஆண்டிலேயே எடுத்துக் கொள்ளப்பட்டன.

வீராணம் ஏரி சென்னையிலிருந்து 135 கல் தொலைவில் சிதம்பரம் தாலுகாவில் சேத்தியாத்தோப்பு மதகணையின் அருகாமையில் அமைந்துள்ளது. இந்த ஏரி, சிதம்பரம் தாலுகாவின் பாசன வசதிக்குப் பெரிதும் பயன்படுகிறது. இவ்வேரிக்கு, கொள்ளிடத்தின் தண்ணீர் கீழணையில் தேக்கப்பட்டு, வடவார் கால்வாய் மூலமாக இழுக்கப்படுகிறது. இவ்வடவார் கால்வாய் மூலமாக, வினாடிக்கு 2,000 கன அடி தண்ணீரை ஏந்திச் செல்லக் கூடிய தகுதியுடையது. இக்கால்வாய் பதினான்கு மைல் நீளமுள்ளது.

வீராணம் ஏரியின் கொள்ளளவு 144·6 கோடி கன அடித் தண்ணீராகும். இந்த ஏரி 42,000 ஏக்கர் நிலத்திற்குப் பாசன வசதியை அளிக்கின்றது. ஏரியின் மறுகால் மட்ட அளவு 45·50 அடி. ஏரிக்கரையின் உயர்மட்ட அளவு 54 அடி. நீர் நிறைந்திருக்கும்பொழுது, இவ்வேரியில் 15 சதுர மைல் அளவுக்குத் தண்ணீர் பரந்து விரிந்திருக்கும். ஆண்டுதோறும் மே திங்கள் பதினைந்தாம் தேதியிலிருந்து, ஜூன் திங்கள் பதினைந்தாம் தேதி வரை இவ்வேரியிலிருந்து, நீர், பாசனத்திற்கு அனுப்பப்படமாட்டாது. இக்காலத்திலும் இந்த ஏரியை உபயோகப்படுத்தவேண்டுமாயின் அதன் மறுகாலை ஒருஅடி உயர்த்தவேண்டும். இதனால் 30 கோடி கன அடித் தண்ணீரை ஏரியில் அதிகமாகத் தேக்கி வைக்கமுடியும்.

தற்சமயம் இந்த ஏரியிலிருந்து சென்னைக்கு தண்ணீர் எடுக்க ஏரியின் வடகோடியில் 40·50 அடி மட்ட அளவில் ஒரு தலை மதகு அமைக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது. ஏரியில் தண்ணீர் மட்டம் குறைந்த அளவில் இருந்தாலும் இந்த மதகிலிருந்து ஒரு நாளைக்கு 800 லட்சம் காலன் அல்லது ஒரு வினாடிக்கு 150 கன அடி தண்ணீர் எடுப்பதற்கு தகுதி உள்ளதாக அமைக்கப்படும். ஆனால் இதிலிருந்து நாளொன்றுக்கு எடுக்கப்படும் நீரின் அளவு 400 லட்சம் காலன்கள். இந் நீரை ஏரியின் அருகாமையிலேயே அமைக்க இருக்கும் சுத்திகரிப்பு நிலையத்திற்கு 60 அங்குல விட்டமுள்ள சிமென்ட் கான்கிரீட் குழாய்கள் மூலம் எடுத்துச் செல்லப்படும். சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்குத் தேவையான புறம்போக்கு நிலங்கள் ஏரியின் அருகாமையில் உள்ளன.

ஏரியின் நீரை, 680 குதிரை சக்தி உடையனவும், நிமிடத்திற்கு 25,125 காலன் தண்ணீர் ஏற்றக்கூடிய நீரேற்று இயந்திரங்களின் மூலம் நிலையத்திற்கு ஏற்றி, அங்கு விரைவு வடிகட்டிகள் மூலம் வடித்து, தூய நீர் தொட்டிகளில் சேர்க்கப்படும். இவ்வாறு சேகரிக்கப்பட்ட சுத்த நீரை 66 அங்குல விட்டமுள்ள முன்கூட்டி அழுத்தமேற்றிய கான்கிரீட் குழாய்கள் மூலம் முதல்படியாக 11½ மைல் தூரத்தில் வடலூருக்கு அருகாமையில் அமைக்கப்படும் முதல் இடைநிலை நீரேற்று நிலையத்திற்கு ஏற்றப்படும். இதற்காக வேண்டி நிமிடத்திற்கு 25,125 காலன் நீரை 145 அடி உயரத்திற்கு உந்துவதற்கு வேண்டிய 2,800 குதிரை சக்தி வாய்ந்த நீரேற்று இயந்திரங்கள் இரண்டு, சுத்திகரிப்பு நிலையத்தில் நிறுவப்படும்.

வடலூரில் அமைக்க இருக்கும் முதல் படிவ, இடைநிலை, நீரேற்று நிலையத்தில் 2,900 குதிரை சக்தி வாய்ந்த நீரேற்று நிலையங்கள் இரண்டு 25,125 காலன் நீரை 171 அடி உயரத்திற்கு ஏற்றி, திண்டிவனத்திற்கருகே அமைக்கவிருக்கும் இரண்டாவது இடைநிலை நீரேற்று நிலையத்திற்கு அனுப்பும். இவ்விரண்டு நிலையங்களுக்குமிடையே உள்ள தூரம் 48·25 மைல். இந்த நீளத்தில் குழாய்கள், கடிலம், பெண்ணையாறு போன்ற நதிகளையும், ஓங்கூர், சங்கராபரணி, தொண்டியார் போன்ற ஆறுகளையும், வடலூர், பன்ருட்டி—சென்னைச்சாலை வழியாக கடக்கும். மேலும் குழாய்கள் தென் இருப்புப் பாதையை 6 இடங்களில் கடக்க நேரிடும்.

திண்டிவனம் இடைநிலை நீரேற்று நிலையத்திலிருந்து மீண்டும் 2,900 குதிரை சக்தி வாய்ந்த இரண்டு நீரேற்று இயந்திரங்கள் மூலம் 25,125 காலன்கள் 171 அடி உயரத்திற்கு, காட்டுப்பாக்கம் கிராமத்திற்கு அருகேயும், சென்னை—திருச்சி சாலை 27-வது மைல் 3-வது பர்லாங்கு கல்லுக்கு அருகேயுள்ள மேட்டுப்பாங்கான இடத்திற்கு உந்தப்படும். இங்கிருந்து 60 அங்குல முன்கூட்டி அழுத்தமேற்றிய சரிவுக் குழாய்கள்மூலம் சென்னை வரை 26 மைல் நீளத்திற்கு தானாகவே தண்ணீர் சென்னை வந்துசேர்ந்து அங்கிருந்து மக்களுக்கு வழங்கப்படும்.

மொத்தத்தில் வீராணம் ஏரியிலிருந்து 135 மைல்கள் நீளத்திற்குப் பதிக்கப்படும் முன்கூட்டி அழுத்தமேற்றிய கான்கிரீட் குழாய்கள் ஆரம்பத்தில் சுமார் 109 மைல் நீளத்திற்கு 66 அங்குல விட்டமுள்ளவையாயும், எஞ்சியுள்ள 26 மைல்களுக்கு 60 அங்குல விட்டமுள்ளவையாயும் அமையும். இத்திட்டத்தை செயல்படுத்துவதற்கு ரூ. 24·5 கோடியும், வருடாந்திர பராமரிப்பிற்கு ரூ. 55 லட்சமும் ஆகுமென மதிப்பிடப்பட்டிருக்கிறது.

விரைவில் இத் திட்டம் உருவாக்கப்பட்டு, சென்னை மக்களுக்கு மிகவும் பயன்படும் வகையில் அமையும் என்பதில் ஐயமில்லை. சென்னை குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்க்கவும், உதவி புரிகிறது காவேரி.

*[பொது சுகாதாரப் பொறியியல் தலைமைப் பொறியாளர் அறிக்கையிலிருந்து தொகுத்து எழுதப் பட்டது].*





1615-ல், வளத்தூர் சிற்றரசர் அச்சுத பல்லவராயரும், மல்லப்ப பல்லவராயரும் இந்தக் கிராமத்தைச் சேர்ந்த அந்தணர்களுக்கு நிலங்கள் அளித்தனர். அதன் பிறகு, அச்சுத பல்லவராயர் மகனான மல்ல பல்லவராயர், ஒரு நாட்டியக்காரிக்குப் பரிசளித்தார். 1681-ல் மல்லப்ப நாயக பல்லவராயரும் செவந்தெழுந்த பல்லவராயரும் இந்தப் பகுதியை ஆண்டார்கள். அவர்களையடுத்து, புதுக்கோட்டை தொண்டைமான்கள் ஆண்டார்கள். பழைய மரபையொட்டி இவர்கள் அண்மைக்காலம் வரை இந்தப் பகுதியின் ஆட்சிப் பொறுப்பை வகித்து வந்தார்கள். ரகுநாதராய தொண்டைமான் (1686–1730) குகைக் கோயில் மண்டபங்களில் ஒன்றைக் கட்டினார். அவரது அமைச்சர் குருந்தபிள்ளை, கோயிலின் மற்றொரு பகுதியைக் கட்டினார். 1730-ல் ராஜா விஜய ரகுநாத தொண்டைமான் இந்தக் கோயிலில் முடிசூட்டப் பெற்றார். அவரது சேனாபதிகளான லிங்கப்பாவும், ரகுநாத சேர்வைக்காரரும் பொதுமக்கள் உபயோகத்திற்காகக் குளங்களை வெட்டினார்கள். அம்மன் கோயிலின் தெற்குச் சுவரிலுள்ள கல்வெட்டொன்று (1872) இரு கோயில்களுக்கும் புதுக்கோட்டை ராஜா ராமச்சந்திர தொண்டைமான் கும்பாபிஷேகம் செய்ததாக குறிப்பிடுகிறது.

குடுமியான்மலையில் வரலாற்றுத் தொடர்பும், கலைச் சிறப்பும் மிக்க செல்வங்கள் பின்வருமாறு (1) மேலைக் கோயில் என்ற மலைக்குடைவுக் கோயில் (2) மலையில் குடையப்பெற்றுள்ள வலம்புரி விநாயகர் (3) பல்லவ சிற்பத்திலுள்ள இசை விளக்கம் (4) விடையேறிய சிவ-பார்வதியுடன் அமைந்துள்ள அறுபத்துமூவர் திருவுருவங்கள் (5) சிகாநாதர்,அகிலாண்டேஸ்வரி கோயில்கள் (6) அணி ஒற்றைக்கால் மண்டபம், ஆயிரங்கால் மண்டபம் (7) தம்பிக் கிணறு, அண்ணன் கிணறு.

*மலைக்குடைவுக் கோயில்*

மலைக்குடைவுக் கோயில் ஒரு மூலஸ்தானத்தையும் ஓர் அர்த்த மண்டபத்தையும் கொண்டது. மூலஸ்தானத்தில் பாறையில் குடையப்பெற்ற உருளை வடிவமான லிங்கம் இருக்கிறது. பன்னிரண்டு படிகள் ஏறி இதனை அடைய வேண்டும். கோயிலின் தாழ்வாரத்தை நான்கு தூண்கள் தாங்கி நிற்கின்றன. இவையும் மலையில் குடையப் பெற்றவையே. கல்லில் கலைவண்ணத்தின் மேன்மையைப் புலப்படுத்துவனபோல் இரண்டு துவாரபாலகர்கள் உள்ளனர். அவர்கள் 7′ 3″ உயரம் இருக்கின்றனர், தலையில் முடியும், காது, கழுத்து, இடை ஆகியவற்றில் அணிகலன்களும் அழகு செய்கின்றன. எட்டாவது நூற்றாண்டு அல்லது அதற்கு முற்பட்ட காலத்தைச் சேர்ந்த பல்லவர் கோயில்களில் காணப்படுவது போலவே, இவர்களுக்கு இரண்டு கரங்களே உள்ளன. இவற்றில் ஒன்று இடுப்பின் மீதும், மற்றது பாம்பு சுற்றியுள்ள ஓர் தடியின் மீதும் பொருந்தியுள்ளது. தூண்களிலும், தாழ்வாரச் சுவர்களிலும் பல கல்வெட்டுக்கள் இருக்கின்றன. இவை 10-ம் நூற்றாண்டைச் சேர்ந்தவை எனக் கூறலாம்.

இந்தக் கோயிலுக்குத் தெற்கே வலம்புரி விநாயகர் இருக்கிறார். மலைச் சரிவில், கோயிலின் உயரத்திற்கு ஏறக்குறையச் சரியாக விநாயகர் திருவுருவம் வெட்டப்பட்டுள்ளது. இது பல்லவர் காலத்தைச் சேர்ந்ததாகச் சொல்லலாம்.

மலைக்குடைவுக் கோயிலுக்கும் வலம்புரி விநாயகருக்கும் இடையில், பல்லவ-கிரந்தக் கல்வெட்டில் இசை விளக்கம் காணப்படுகிறது. கல்வெட்டில் காணப்படும் இந்த எழுத்துக்கள் குறிப்பிடத்தக்கவை. இவை தெளிவாகவும் அழகாகவும் சீராகவும் செதுக்கப்பட்டிருக்கின்றன. திருச்சிராப்பள்ளியிலும் தென்ஆர்க்காட்டிலும் காணப்படும் மகேந்திரவர்மன் கல்வெட்டுகளை இவை மிகவும் ஒத்திருக்கின்றன. ஆகையினால், இவை கி.பி. 7-ம் நூற்றாண்டின் முற்பகுதியைச் சேர்ந்தவை எனக் கொள்ளலாம். இந்தக் கல்வெட்டு 13′ × 14′ பரப்பில் உள்ளது.

ருத்ராச்சாரியாரின் மாணவர் எனத் தம்மைக் கூறிக் கொள்ளும் மன்னன் ஒருவனால் இது இயற்றப்பட்டதாகத் தோன்றுகிறது. ஆயின், அந்த ஆசிரியரோ அல்லது இந்த மாணவரோ யார் என்று தெரியவில்லை. இந்த இசை விளக்கம், அக்காலத்தில் வழங்கிய ஏழு சாஸ்த்ரீய ராகங்களுக்கு ஒப்ப ஏழு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

இந்தக் கல்வெட்டின் முக்கியத்துவம் என்னவென்றால், பரதனின் நாட்டிய சாஸ்திரத்திற்கும் (கி.பி. 4-ம் நூற்றாண்டு), நரதி சிக்ஷி (காலம் தெரியவில்லை), சாரங்கதேவரின் சங்கீத ரத்னாகரம் (13-ம் நூற்றாண்டு) ஆகியவற்றுக்கும் இடையே கிடைத்துள்ள இசை விளக்கம் இது ஒன்றுதான் என்பதாகும்.

குகைக் குடைவுக் கோயிலுக்கு மேலே, ஆனால் அதற்குச் சற்று வடக்கே அறுபத்து மூவர் திருவுருவங்கள் அமைந்துள்ளன. சைவ நாயன்மார்களுக்கு இடையே சிவ-பார்வதி காளைமீது காட்சி தருகின்றனர்.

இங்குள்ள இறைவன், இறைவி திருக்கோயில்கள், கல்லில் கலைஞன் செதுக்கிய கலைக் கருவூலங்களாக விளங்குகின்றன. அம்மன் திருவுருவத்திற்கு எதிரில் அறுகோண மண்டபம் இருக்கிறது. இம் மண்டபத்தில் அமைக்கப்பட்டுள்ள அறுகோண வடிவக் கல்லின் மீது முடிசூட்டு விழாக்கள் முற்காலத்தில் நடத்தப்பட்டுள்ளன.

நுழை வாயிலில் உள்ள ஆயிரங்கால் மண்டபம் தற்போது சிதைந்த நிலையில் இருக்கிறது. அணி ஒற்றைக்கால் மண்டபத்தைச் சார்ந்துள்ள பகுதிகளில் வாலி, சுக்ரீவன், அனுமன் திருவுருவங்களும், விஷ்ணுவின் அவதாரங்களான மச்சம், கூர்மம், வராகம், நரசிம்மம் ஆகிய திருவுருவங்களும், கிளிகள் மீதாரும் மன்மதன், ரதி திருவுருவங்களும் காட்சியளிக்கின்றன.

இறைவன் கோயிலில் இரண்டாவது பிரகாரத்தில் அணி ஒற்றைக்கால் மண்டபம் இருக்கிறது. இங்கே தூண்களில் கணபதி, சுப்பிரமணியர், பத்து தலைகளோடு

முதலமைச்சரின் அந்தரங்கச் செயலாளர் திரு சொக்கலிங்கம் ஐ.ஏ.எஸ்., அவர்களின் துவக்க உரை.

# குடுமியான் மலைப் பகுதியில் விவசாயப் பண்ணை

"வறண்டிரக் காடாகக் கிடக்கும் இந்த இடத்தில் ஒரு விவசாயப் பண்ணை ஏற்படுத்தி, இதை ஒரு மாதிரி விவசாயப் பண்ணையாகச் செய்து காட்டினால், இதைக் கொண்டு இப்பகுதியிலுள்ள விவசாயிகள் பயன்பெற உதவியாக இருக்கும் என்ற எண்ணத்தில் செயல்படுத்த விரும்பினோம். அது எப்படியோ காலங் கடந்து விட்டது. இதற்கென்று முதலமைச்சர் அவர்களும் முதல் பட்ஜெட்டிலேயே தொகையும் ஒதுக்கியுள்ளார்கள்.

## சிரமிக்கு, கிராமத்தார் துணை புரிய வேண்டும்

இந்தப் பகுதி வருமானத்துக்கு இடமில்லாத இடம் என்றாலும், இத்திட்டம் நிறைவேற்றுவதன் மூலம், இந்தப் பகுதியிலுள்ளவர்கள் பயன்பெற வழி பிறக்கும். ஆதலால் இங்கே பண்ணை அமைக்கும் பணியில், அக்கம் பக்கத்திலுள்ளோர் ஆயிரக் கணக்கில் முன் வந்து சிரமியினருடன் ஈடுபடவேண்டும். அவ்வாறு ஒத்துழைப்பதன் மூலமாகத்தான் பண்ணையை நல்ல முறையில் அமைக்க முடியும்.

உணவு உற்பத்தியைப் பெருக்கியாக வேண்டும். ஒரு போகச் சாகுபடியை இருபோகச் சாகுபடியாகவும் பெருக்கவேண்டுமென்று விரும்புகிறோம். இவ்வாறு சாகுபடி முறையைத் தீவிரப் படுத்த வேண்டுமானால், பண்ணையில் நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தித்தான் ஆக வேண்டும்.

## விவசாயப் பள்ளி அமைக்கவும் யோசனை

இதே இடத்தில் புஞ்சை சாகுபடிக்கென்று ஒரு விவசாயப் பள்ளியை ஏற்படுத்தலாமென்று அரசு சிந்தனை கொண்டிருக்கிறது. டிராக்டர்களையும், டில்லர்களையும் ஓட்டுவதற்கு சிரமித் தொண்டர்கள் கற்றுக்கொள்ளலாம். நவீன முறையில் விவசாயம் செய்யும் முறையையும், மருந்து தெளிக்கும் முறையையும் கற்றுக்கொள்ளலாம். இம்முயற்சியில் சிரமியினர் நடந்து காட்டுவதன் மூலம் மற்ற பகுதிகளுக்கும் இம்முறையைப் பரவச் செய்யவேண்டும்.

நஞ்சை சாகுபடிக்கு விதைகள் கொடுப்பதற்கு பண்ணைகள் ஏராளம் இருக்கின்றன. ஆனால் புஞ்சைக்கு வேண்டிய சோளம், கம்பு, கேழ்வரகு போன்ற விதைகளை கொடுக்கக்கூடிய பண்ணைகள் குறைவு. வீரிய சோளம், ஒட்டுக் கம்பு போன்ற விதைகளுக்கான தேவை நம் மாநிலத்திலும் பிறவிடங்களிலும் இருந்து வருகிறது. இந்த தேவையைப் பூர்த்தி செய்கிற முறையில் இங்கே அமைகின்ற பண்ணை செயலாற்ற வேண்டும். இதன் மூலமாகவே இந்தப் புது முயற்சியின் முழுப் பலன் நிறைவேறும்.

## அரசுடன் மக்களும் ஈடுபட வேண்டும்

இதற்கு அரசாங்கம் மட்டும் முயன்றால் போதாது. பொது மக்களும் நாட்டை முன்னுக்குக் கொண்டு வரும் பணியில் அக்கறையுடனும் பங்கு கொள்ள வேண்டும். நாட்டின் மேம்பாட்டுக்காக அமையவிருக்கும் இந்த முயற்சியைத் துவக்கி வைப்பதில் நான் மகிழ்ச்சி கொள்கிறேன்."

---

குடுமியான்மலை (வரலாற்றுக் கண்ணோட்டம்)—தொடர்ச்சி.

கூடிய இராவணன், இரண்யன் மார்பைப் பிளக்கும் உக்கிர நரசிம்மர், அன்னங்கள் மீதூரும் ரதி, மன்மதன், முனிவர்களை மயக்கி வசீகரிக்கும் மோகினி கந்தர்வன் ஆகிய உருவங்கள் செதுக்கப் பட்டிருக்கின்றன. மேற்புறத்தில் புராண, இதிகாசக் காட்சிகள் இடம் பெற்றுள்ளன.

மலையின் தென் பகுதியில் தம்பிக்கிணறும், வட பகுதியில் அண்ணன் கிணறும் இருக்கின்றன. இவற்றில் தம்பிக் கிணறு பிரசித்தமானது. இதிலிருந்து இப்பொழுது குடி தண்ணீர் எடுக்கப்படுகிறது. நாலையூர் நாடாள்வார் அன்பளிப்பாகத் தந்தது அண்ணன் கிணறு என்று கூறப்படுகிறது. தம்பிக் கிணற்றுக்கு ஒரு கல்வெட்டு இருக்கிறது. மல்லப்பா செவெந்தெழுந்த பல்லவராயர் காலத்தில் திருச்சிராப் பள்ளியிலிருந்து வந்த இரண்டு செட்டியார்களால், உடையப்பன் என்பவன் பெயரால் இந்தக் கிணற்றில் 18 படிகள் அமைக்கப்பட்டதாக இந்தக் கல்வெட்டு கூறுகிறது.

குடுமியான் மலை வரலாற்றுப் பெருமை மிக்கது மட்டுமல்ல, இங்குள்ள இயற்கைச் சூழல், வளம் நிறைந்தது. குடுமியான் மலைக்காடு தழை உரம் தந்து உழவுக்கு உதவுகிறது. இங்கே கிடைத்த வருமானம், எதிர்பார்க்கக்கூடியதைவிட மிகவும் குறைவாக இருந்தது. எனவே, இது வேளாண்மைப் பண்ணையாக மாற்றப்படவிருப்பது அதிக வருமானத்திற்கு மட்டுமல்லாது, உணவுப் பற்றாக்குறையைத் தீர்ப்பதற்கும் உதவுவதாகும்.

புதுக்கோட்டை மண்ணில் செம்புறையும் (87 சதவிதம்) கரிசலும் (17 சதவிதம்) பிரதானமாக இருக்கின்றன. இதில் செம்புறை மிக அதிகமாக இருப்பதால், இந்தப் பகுதியில் வேளாண்மைக்கு ஒரே ஒரு முக்கியமான மண்தான் இருப்பதாகச் சொல்லலாம்.

கோடையிலும், மாரிக்காலத்திலும் மழை பெய்கிறது. வடகிழக்குப் பருவக் காற்று மழை ஆகஸ்டில் ஆரம்பித்து டிசம்பர் வரை நீடிக்கிறது. தென் மேற்குப் பருவக் காற்று எப்பொழுதாவது ஓரளவுக்குத் தான் மழையைக் கொண்டு வருகிறது.

—:o:—

இமயத்தின் மடியில் . . . 17-ம் பக்கத் தொடர்ச்சி:

விவசாயமே முக்கியத் தொழிலாக இருந்தபோதிலும், பட்டு உற்பத்தியும் ஒரு முக்கிய பங்கு வகிக்கின்றன. இரண்டு முசுக்கொட்டைப் பண்ணைகள் இங்குள்ளன. ஒன்று ஊராட்சியாலும், மற்றொன்று மாநில அரசின் தொழில் துறையாலும் கவனிக்கப்படுகின்றன.

### வீரர்கள் நிறைந்த கிராமம்

கூடைகள் பின்னுதல், மட்கலங்கள் செய்தல், கட்டிட வேலை, எண்ணெய் தயாரித்தல், மரவேலைகள் போன்ற பல தொழில்களில் கிராமவாசிகள் பலர் ஈடுபட்டுள்ளனர்.

இந்திய ராணுவத்தில் பெரும் பான்மையோர் சேர்ந்துள்ளனர். அவர்கள், கடந்த போரில் முன்னணியில் நின்று போர் செய்துள்ளனர். பாகிஸ்தானுடன் நடந்த போரில், இருவர் வீர மரணம் எய்தியுள்ளனர்.

பாசனத்தைச் செம்மைபடுத்துவதற்கான ஒரு திட்டத்தை உள்ளாட்சி தயாரித்துள்ளது. அது சீக்கிரமே செயல்படுத்தப்படவிருக்கிறது.

உழவர்கள் ரசாயன உரங்களை பயன்படுத்தினாலும், "கம்போஸ்ட்" உரங்களையே அவர்கள் பெரிதும் விரும்புகின்றனர்.

கிராமங்களில் இரண்டு கூட்டுறவுச் சங்கங்களிருக்கின்றன. இவை விதைகள், உரங்கள், நவீன கருவிகளை, விவசாயிகளுக்கு தவணை முறைகளில் அளித்து உதவுகின்றன.

கிராமங்களில் மின்வசதியில்லை. சீக்கிரமே அந்த வசதி கிடைக்குமென்று எதிர்பார்க்கப்படுகிறது. முன்பெல்லாம் இங்கு வைத்திய உதவி இல்லை. ஆனால், தற்போது ஐந்து மருந்து கடைகளுடன் டாக்டர்களும் இருக்கின்றனர்.

மனமகிழ் மன்றம் சிறப்பாக பணியாற்றுகிறது. கால்பந்து விளையாட்டில் இளைஞர்கள் பங்கு கொள்கின்றனர்.

சுக வாழ்க்கையும் முன்னேற்றத்தையும் நோக்கி, 'பார்மர்' கிராமம் சென்று கொண்டிருக்கிறது.

---

## உணவு உற்பத்தியில் அரசு அலுவலர்கள்

அரசு அலுவலர்களும் உணவு உற்பத்தியைப் பெருக்குவதில் மிகவும் ஆர்வம் காட்டியுள்ளனர். ஆக்ராவிலுள்ள இந்திய தொல்பொருள் துறையைச் சேர்ந்த தோட்டப் பிரிவிலுள்ள 34 அலுவலர்கள் தாங்களாகவே உழைக்க முன்வந்து, நாள்தோறும் நான்கு மணி நேரம் வயல்களில் வேலை செய்கின்றனர்.

ஆக்ரா கோட்டையைச் சுற்றியும், சிக்கந்த்ரா என்னுமிடத்திலுள்ள 30 ஏக்கர் நிலத்திலும் இவர்கள் கடுமையாக உழைத்து, ரூ. 40,500 மதிப்புள்ள உணவு தானியங்களை உற்பத்தி செய்துள்ளனர்.

இவர்களின் உழைப்பைக் கௌரவிக்கும் முறையில், இந்திய அரசின் கல்வி அமைச்சகம் ரூ. 1,945ஐ அன்பளிப்பாகக் அளித்துள்ளது.

இது தவிர, பிஜப்பூர் கோட்டைப் பகுதியைச் சார்ந்த அலுவலர்களும், அங்குள்ள நிலங்களில் தானியங்களை உற்பத்தி செய்ய முயற்சித்து வருகின்றனர். இங்கு நிலத்திற்கோ, நீருக்கோ பஞ்சமில்லை.

---

## சிறு சேமிப்பு பரிசுக் கேடயம்

சிறு சேமிப்பில் சிறிய பணியாற்றியுள்ளதற்காக மஹாராஷ்டிரத்திலுள்ள சங்கு என்ற மாவட்டத்திற்கு, சிறுசேமிப்பு பரிசுக் கேடயம் அளிக்கப்பட்டுள்ளது. 1966-67-ம் ஆண்டிற்கு இம் மாவட்டத்தின் திட்ட இலக்கு இருபது லட்ச ரூபாய் மட்டுமே. ஆனால் இம் மாவட்டம் ரூ. 22,50,511 வசூலித்துள்ளது.

## பிற மாநிலங்களில்

# சேவைக்கென ஒரு மன்றம்

ஒவ்வோராண்டும் இந்தியாவில் 40 லட்சம் இளைஞர்கள் வேளாண்மை, வணிகம், நிர்வாகம், தொழில் போன்றவற்றில் புதிதாக ஈடுபட்டு, வாழ்க்கையைத் துவக்குகின்றனர். இவர்களில் மூன்றில் இருவர் எவ்வித கல்வியறிவும் தொழிற் பயிற்சியும் இல்லாத நிலையிலேதான் பொருளீட்ட முனைகின்றனர். இவர்களை ஒன்று திரட்டி, பயிற்சி அளித்து அவரது சக்திகளை ஆக்கப்பணிகளில் நிறமுடன் செயல்படுத்துவதற்கு நாட்டில் இளைஞர் மன்றங்கள் தோற்றுவிக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை பெரும்பாலும் எதிர்பார்க்கப்படும் அளவிற்கு நிறமுடன் செயலாற்றுவதில்லை. இருப்பினும், சில இடங்களிலுள்ள இளைஞர்கள் ஒன்று திரண்டு மன்றங்களை நிறுவி, நற்பணியாற்றிவருகின்றனர்.

ஹரியானா மாநிலத்திலுள்ள, பானிபட்டிலிருந்து மூன்று கல் தொலைவிலுள்ள உக்ரகேரி என்ற கிராமத்தின் மக்கள் தொகை 1,875 மட்டுமே. இம்மக்களில் பெரும்பாலோர் விவசாயிகளே. 1951–ஆம் ஆண்டு ஜுன் திங்களில் தான் இங்கு ஓர் இளைஞர் விவசாய மன்றம் துவக்கப்பட்டது. சிறந்த விளையாட்டு வீரர்கள், தீவிர விவசாயிகள், உயரிய தொண்டாற்றும் மக்கள் தலைவர்கள் போன்றோரை இம்மன்றம் உருவாக்கி, அவர்களை சமுதாயத்திற்கு நற்பணியாற்றச் செய்துள்ளது.

**விளையாடுமிடம் கூட இல்லை . . .**

இம்மன்றத்தில் உறுப்பினராகச் சேர்வதற்கு இரண்டு ரூபாய் சந்தா செலுத்த வேண்டும். விளையாட்டுச் சாமான்கள், சீருடைகள் வாங்குவதற்கென ரூ. 200 மானியம் அளிக்கப்பட்டது. ஒவ்வொரு நாள் மாலையிலும் தவறாது விளையாட்டுக்கள் நடைபெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. ஆரம்ப காலத்தில், இம்மன்றத்திற்கு ஒரு விளையாடுமிடம் கூட கிடைக்கவில்லை. கால்நடைக் கொட்டகைக்கு அருகிலுள்ள ஒரு சிறு இடம் தான் உறுப்பினர்கள் விளையாடுமிடமாக இருந்தது.

இந்த இளைஞர் விவசாய மன்றத்திற்கு 1952–ஆம் ஆண்டு மேலும் நூறு ரூபாய் மானியம் அளிக்கப்பட்டது. விவசாயம் மற்றும் இதர பொருள்களைப்பற்றிய நூல்களில் 30 நூல்களும் இம்மன்றத்திற்கு அளிக்கப்பட்டன. ஆனால் உறுப்பினர்களில் எவருக்குமே எழுதப்படிக்கத் தெரியாது. என்ன செய்வது? அறியாமைப் போக்க உடனே இரவுப்பள்ளி துவக்கப்பட்டு, அதில் 20 உறுப்பினர்கள் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். சீக்கிரத்திலேயே அவர்கள் எழுத்தறிவு பெற்றவர்களாகிவிட்டனர்.

**வெற்றியை நோக்கி . . .**

இது சமயம் அருகிலுள்ள கிராமத்தில் ஒரு கண்காட்சி நடைபெற்றது. அங்கு வேளாண்மை, கால்நடை, கூட்டுறவு, கைத்தொழில், சுகாதாரம், சுற்றுப்புறத் தூய்மை முதலிய துறைகளின் கண்காட்சிகளைக் கண்ட அவர்கள், அனேக விஷயங்களைக் கற்றுக் கொண்டனர். அவை, அவர்களைப் பெரிதும் கவர்ந்தன. அங்கு கண்டவற்றையும், கேட்டவற்றையும்



தங்கள் கிராமத்தில் புகுத்த முனைந்தனர். இதற்காக, ஊராட்சியின் ஒத்துழைப்பை அவர்கள் நாடினர். ஆனால் கோரிய உதவி கிடைக்கவில்லை. தங்களுடைய திட்டங்களைச் செயல்படுத்த கிராமத்திற்குப் பொதுவான நிலங்கள் இல்லை. எனவே கண்காட்சியில் கண்டவற்றை, தங்கள் சொந்த நிலங்களிலேயே செயற்படுத்த அவர்கள் முனைந்து, அதில் படிப்படியாக வெற்றியும் அடைந்தனர்.

**மன்ற உறுப்பினரே ஊராட்சியின் தலைவரானால் . . . .**

இத்தருணத்தில், ஊராட்சியின் தேர்தல்கள் குறுக்கிட்டது. இளைஞர் மன்ற உறுப்பினரே ஊராட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டார். எனவே மன்றத்தின் வளர்ச்சிக்கும், கிராமத்தின் முன்னேற்றத்திற்கும் போதிய வாய்ப்புகள் தலைவரின் மூலமே கிடைக்கப்பெற்றது. மன்றம், ஊராட்சியுடன் இணைக்கப்பட்டது. தலைவரின் நேரடிப் பார்வை, ஊக்கம் காரணமாக, இளைஞர் மன்றத்தினர் இரு சாலைகளை அமைத்ததுடன், சாலையோரங்களில் உள்ள நடைபாதைகளையும் பழுது பார்த்தனர்; ஊராட்சி அலுவலகமும், குழந்தைகள் பூங்காவும், மன்றத்தினால் அமைக்கப்பட்டது.

ஊராட்சியின் வளர்ச்சி வேலைகளுக்கு அதிகமான நிதி தேவைப்பட்டது. அதற்கென நிதி திரட்டுவதில் மன்ற உறுப்பினர்கள் ஆர்வம் காட்டி, வீடுவீடாகச் சென்று நிதித் திரட்டினர், சிலர் நன்கொடையளிக்க சிறிது மறுப்பு தெரிவித்ததைக் கண்ட உறுப்பினர்கள், கிராமசேவக்கின் உதவியைக் கொண்டு கலைநிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்து நிதி திரட்டப்பட்டது. இந்த நிதியுடன் வட்டார மானியமும் கணிசமாக கிடைத்ததால், இளைஞர் மன்ற உறுப்பினர்கள் பற்பல திட்டங்களை மேற்கொண்டு, செம்மையாக நிறைவேற்றி, மக்களின் நல்லெண்ணத்தை பெற்றனர்.

**ஆதாயம் தரும் செயல்கள்**

காய்கறிகளை வளர்த்து, அதிக ஆதாயம் பெறலாம் என்று, கிராம சேவக், மன்ற உறுப்பினர்களுக்கு, யோசனைக் கூறவே, அத்துறையிலும் உறுப்பினர்கள் ஈடுபடலாயினர். இவர்களின் உற்சாக மிகுந்த உழைப்பையும், மிகு விளைச்சல் கொடுத்த காய்கறித் தோட்டங்களையும் கண்ணுற்ற இதர விவசாயிகளும் காய்கறி பயிரிட ஆரம்பித்தனர். இந்திய விவசாயக் கழகம் நடத்திய அனைத்திந்திய காய்கறிப் போட்டியில், மன்ற உறுப்பினர் ஒருவர் பரிசு பெற்றார்.

சோப்பு தயாரிப்பதற்குத் தேவையான பயிற்சி 1959-ம் ஆண்டு அளிக்கப்பட்டது. அதையொட்டி, 1960-ம் ஆண்டு சோப்பு தயாரிக்கும் சங்கம் ஒன்று, மன்ற உறுப்பினர்களில் பதினொரு பேர்களால் ஏற்படுத்தப்பட்டது.

டில்லியில் நடைபெற்ற குடியரசுத் தின விழாவிற்கும், அலஹாபாத்தில் நடைபெறும் கும்பமேளாவிற்கும் உறுப்பினர்கள் செல்ல விரும்பினர். ஆனால் அவர்களிடம் போதிய நிதி வசதியில்லை. எனவே நான்கு உறுப்பினர்கள், அலஹாபாத் வரை சைக்கிள்களில் சென்று, அங்கிருந்து ரயிலில் திரும்ப முடிவு செய்து, அவ்வாறே சென்று மீண்டனர். இது தவிர, ஹரித்துவாரம், டெஹ்ராடூன், முசோரி ஆகிய இடங்களுக்கு சைக்கிள்களிலேயே சென்று, அங்குள்ளவற்றை கண்டறிந்தனர்.

இளைஞர் சமுதாயம் விழிப்புற்று, நாட்டின் தேவையறிந்து, செயலில் முற்பட்டால், நாட்டின் பொருள் வளம், சமூக நலம் மிகவும் மேம்பாட்டையும் என்பதற்கு உக்ரகேரி இளைஞர் விவசாய மன்றம் நல்லதொரு எடுத்துக்காட்டு.

“ பஞ்சாயத்து ராஜ் ” இதழ்களிலிருந்து இடம் பெறுபவை :
பக்கங்கள் : 13, 14, 15, 16, 17, 33, 34, 35.
Articles reproduced from ‘Panchayati Raj’ on pages : 13 to 17 and from 33 to 35.

# சீரிய பணியாற்றும் நகராட்சிகள்

## 1. கடலூர் நகராட்சி—நூற்றுண்டு நாளங்காடி.

அண்மையில் நூற்றுண்டு நிறைவு விழா கொண்டாடிய நகர மன்றங்களில் ஒன்று, கடலூர் நகராட்சி. அதன் நினைவாக, திருப்பாதிரிப்புலியூரில் பான்பரி மார்க்கெட்டை இணைக்கும்படியாக புதிய பாதை அமைத்து அதில் அழகாக பல கடைகளைக் கட்டி அதற்கு "நூற்றுண்டு நாளங்காடி." என பெயரிடப்பட்டிருக்கிறது. மேற்படி நாளங்காடி புகைவண்டி நிலையத்திற்கும் கடைவீதியில் அதிக ஜனப்புழக்கம் உள்ள லாரன்ஸ் ரோட்டிற்கும் வெகு அண்மையில் உள்ளதால் அந்நாளங்காடியில் கட்டப்பட்டுள்ள கடைகள் நகரின் அழகான பாகமாக விளங்குவதுடன் நகராட்சிக்கு முதல் தர வருவாய் தரக்கூடிய இடமாகவும் உள்ளது. ரூ. 30,000 முதலீட்டில் அமைக்கப்பட்டுள்ள இந்நாளங்காடி மூலம், வருவாய் ரூ. 15,000 வரும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும், இந்த இடமானது எதிர்காலத்தில் பெரிய வணிகத் தலமாக மாறும் சூழ்நிலையில் உள்ளதால், வெறும் வணிகக் கண்ணோட்டத்துடன் அல்லாமல், எதிர்கால அபிவிருத்தியை கருதி, நகரசபை மேற்படி கடைகளுக்கு நியாய வாடகை நிர்ணயித்து வசூலிக்கும் பொறுப்பையும் நேரடியாக நிர்வகிக்கிறது. இந்நியாய வாடகை மூலம் ஆண்டுதோறும் ரூ. 10,000 கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

1967-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 11-ம் தேதி அன்று மேற்படி நாளங்காடியை தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு மா. முத்துச்சாமி அவர்கள் திறந்து வைத்தார். அவ்வமயம் அவர் நகராட்சிகளின் வருமானத்தை இம்மாதிரி மறைமுக வருமானங்கள் மூலம் வருவாயைப் பெருக்க வேண்டுவதன் அவசியத்தை வலியுறுத்தினார்.

## 2. திருநெல்வேலி நகராட்சி— "சொல்லின் செல்வர் நினைவு பிள்ளைப்பேறு விடுதி".

1866-ம் ஆண்டு நவம்பர் மாதம் 1-ம் தேதி தோற்றுவிக்கப்பட்ட திருநெல்வேலி நகராட்சிமன்றம் இப்போது முதல் தர நகராட்சி மன்றமாக திகழ்கின்றது.



நகராட்சிகள் ஆய்வாளராகப் (Inspector of Municipalities) பதவியேற்றிருக்கும் திரு டி. சீனிவாசன், ஐ.ஏ.எஸ்.,

இந்நகராட்சி மன்றம், மகளிர் உயர்நிலைப்பள்ளி இரண்டும், சிறுவர் உயர்நிலைப்பள்ளி இரண்டும், நடுநிலைப் பள்ளி ஒன்றும் நடத்தி வருகின்றது. இந் நகராட்சியில் ஒரு பெரிய மகப்பேறு மருத்துவமனை கட்டபெற்று மிகச்சிறப்பாக நடைபெற்று வருகிறது. புதிதாக ஆம்புலன்ஸ் வண்டி வாங்கப் பெற்று, உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றது.

பின் குறிப்பிட்டுள்ள திட்டங்கள் செயலாற்றப்பட இருக்கின்றன :—

(1) நகராட்சி - மத்திய பேருந்து நிலையம் ரூ. 4·45 லட்ச மதிப்பீட்டுத் தொகையில் கட்டபெற்று வருகிறது.

(2) நகராட்சி அலுவலகத்திற்குள் 1,80,000 மதிப்பீட்டுத் தொகையில் நூற்றுண்டு மண்டபம் ஒன்று கட்டப் பெற்று வருகிறது.



(3) பேட்டை நகராட்சி மன்ற உயர்நிலைப் பள்ளியில் ரூ. 19,500 மதிப்பீட்டுத் தொகையில் "ஆடிட்டோரியம்" ஒன்று கட்டபெற்று வருகிறது.

(4) நகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ள சிக்க நரசய்யன் கிராமத்தில் நகராட்சி உயர்துவக்கப்பள்ளி கட்டிடம் ஒன்று அமைக்க ரூ. 1,39,500க்குமதிப்பீடு அங்கீகாரம் பெற அரசினரை வேண்டிகொள்ளப் பெற்றிருக்கிறது.

(5) இந் நகராட்சி; கண்டியப்பேரி மகப்பேறு மனையில் "சொல்லின் செல்வர் திரு ரா. பி. சேதுபிள்ளை அவர்கள் நினைவு பிள்ளைப்பேறு விடுதி" ஒன்று அமைக்க, அவர் ஒரு லட்ச ரூபாய் உயில் எழுதி வைத்திருக்கிறார்கள். அரசினர் மேலும் ஒரு லட்சம் ரூபாய் மான்யமாக அளித்திருக்கும் தொகையோடு அந்த பிள்ளைப்பேறு விடுதிகட்ட தீவிர முயற்சி எடுக்கப்பெற்று வருகிறது. இப்புதிய கட்டிடத்திற்கு, 1967-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 21-ம் தேதியில் மாண்புமிகு முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

## 3. பரமக்குடி நகராட்சி

(1) ஏற்கனவே நகரப் பஞ்சாயத்துக்களாக இயங்கி வந்த பரமக்குடி, எமனேஸ்வரம் ஆகிய இரண்டு நகரப் பஞ்சாயத்துக்களையும் இணைத்து, 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ம் தேதி முதல் பரமக்குடி நகராட்சியாக அமைக்கப்பட்டு இயங்கி வருகிறது. தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட நகர் மன்றம் இன்னும் உருவாக்கப்படாமல், தனி அதிகாரி அவர்களின் பொறுப்பில் நிர்வாகம் இயங்கி வருகிறது.

(2) குடிதண்ணீர் விநியோகத் திட்டம் ரூ. 12 லட்சம் செலவில் முடிவடைந்து குழாய்கள் மூலம் பொது மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. மேலும் தனிப்பட்டவர்களின் இல்லங்களுக்கும் சுமார் 200 குழாய் இணைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. 100 இணைப்புகள் கொடுக்கும் வேலைகள் நடைபெறுகிறது.

(3) சாக்கடை வடிகால் பண்ணைத்திட்டம் செயல்பட அவசியமான வேலைகள் துரிதமாக நடந்து வருகின்றன. இதற்காக 30 ஏக்கர் பரப்புள்ள நிலம் ஆர்ஜிதம் செய்யப் பட்டுள்ளது.

(4) நகராட்சி ஆரம்பமான பிறகு, நகரசுத்தித் தொழிலாளருக்கான வீடுகள் மதிப்பீடு ரூ. 78,000-ல் கட்டப்பட்டு வருகிறது. இதற்கு தமிழக அரசு ரூ. 18,000 மானியமாக வழங்கியுள்ளது.

(5) நகராட்சி சாலைகளில் முக்கியமான நான்கு சாலைகளுக்குப் புதிதாக தார் பரப்பு போடப்பட்டது. இதற்கான மொத்தச் செலவில் (ரூ. 82,000-ல்) 50 சதவீதம் தமிழக அரசு மானியமாக வழங்கும். இன்னும் இரண்டு முக்கிய சாலைகளுக்கு தார் பரப்பு போடப்பட்டு வருகிறது.

(6) தமிழக அரசினரிடமிருந்து கடனாகப் பெற்ற தொகையிலிருந்து 2 டிராக்டர்களும், 1 டாங்கரும் வாங்கி கம்போஸ்ட் உர அபிவிருத்தி வேலைக்கு உபயோகப்படுத்தப் பட்டு வருகிறது. கம்போஸ்ட் உரம், மிகக் குறைந்த வாடகையில் டிராக்டர் வசதி முதலியவை இங்குண்டு.

## 4. வாணியம்பாடி நகராட்சி.

வட ஆர்க்காடு மாவட்டத்திலுள்ள மூன்று இரண்டாம் பிரிவு நகராட்சிகளில் இது ஒன்றாகும். பாலாறு இந்நகரை மூன்று இடங்களில் பிரித்து செல்கிறது.

இந்நகராட்சி ஓர் உயர் துவக்கப்பள்ளியையும், 11 துவக்கப் பள்ளிகளையும் நடத்தி வருகிறது. அதில் நான்கு பள்ளிகள் முஸ்லீம் பெண்களுக்காக நடத்தப்படுகிறது. முஸ்லீம் வகுப்பைச் சேர்ந்த மாணவிகள் பள்ளிச் செல்வதற்கான நான்கு வாடகை வண்டிகள் நகராட்சி செலவில் அமர்த்தப்பட்டிருக்கிறது. சில பள்ளிகளில் மதிய உணவுத் திட்டம் மிகச் சிறப்பான முறையிலே செயல்பட்டு வருகிறது. நகராட்சி நடத்தும் மருத்துவ இல்லத்தினால் நகர மக்கள் பயனடைவது மட்டுமன்றி, இந்நகரத்தின் சுற்றுப்புறங்களிலுள்ள கிராமங்களிலுள்ள மக்கள் பெரிதும் பயனடைகிறார்கள். மருத்துவ இல்லத்தில் படுக்கையில் தங்கி சிகிச்சைபெறும் நோயாளிகளுக்கு நகராட்சி நிதியிலிருந்து இலவச உணவு வசதி செய்யப்படுகிறது.

நகராட்சி மருத்துவ இல்லத்தைத் தவிர, பெண்கள் குழந்தைகளுக்கென அரசு ஒரு மருத்துவ இல்லத்தை இந்நகராட்சி தானமாக கொடுத்த கட்டிடத்தில் நடத்தி வருகிறது. இவைகளைத் தவிர தொழிலாளர்களுக்கென ஒரு மருத்துவ இல்லத்தையும் அரசு நடத்தி வருகிறது.

1966-ம் ஆண்டில் சிறுசேமிப்புத் திட்டத்தின்கீழ் ரூபாய் 1,41,005 வசூல் செய்து, இம்மாவட்டத்தில் முதன்மையாக வந்துள்ளது இந்நகராட்சியாகும்.

இம்மாவட்டத்தில் வரிவசூலில் இந்நகராட்சி சிறந்து விளங்குவதுடன் வரி வசூலிப்பவர்களுக்கு போனஸ் பெற்றுக்கொடுக்கும் தன்மையுடையது என்பது மிகச்சிறப்பான அம்சமாகும்.

---


கிராமநலம்

ஆண்டு சந்தா : ரூ. 2.00

தனிப் பிரதி விற்பனைக்குக் கிடையாது.

சந்தா மற்றும் கடிதப் போக்குவரத்துகளுக்கு :

"மக்கள் தொடர்பு அதிகாரி,
கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகம்,
கோட்டை, சென்னை-9"

என்ற முகவரிக்கு எழுதவும்.

கதை, கட்டுரை அனுப்புவோர் :

"ஆசிரியர், 'கிராமநலம்,'
கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகம்,
கோட்டை, சென்னை-9"

என்ற முகவரிக்கு அனுப்பவும்,

கிராம நலம் பகுதி–2
GRAMANALAM PART–2

# ஊராட்சி அரசிதழ்
# PANCHAYAT GAZETTE

(இந்தப் பகுதியில் ஊராட்சி, ஊராட்சி வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய அரசு ஆணைகள், குறிப்பாணைகள், விதிகள் முதலியவற்றின் தமிழாக்கம் சுருக்கமாக இடம் பெறுகிறது.)

—— o ——

## குடும்பக் கட்டுப்பாடு—கருத்தடை வளையத் (லூப்) திட்டம்—அரசு, உள்ளாட்சி நிறுவனப் பணிகளிலுள்ள திருமணமான பெண் அலுவலர்களுக்கு சிறப்பான சிறுவிடுப்பு ஒரு நாள் அளித்தல்—அனுமதிக்கப்படுகிறது.

## Family Planning—I.U.C.D. Programme—I.U.C.D. for married women employees under the Government and Local Bodies—Special casual leave for one day—Sanctioned.

தொழில் நிறுவனங்களிலல்லாத இதர மத்திய அரசு பணிகளிலுள்ள பெண் அலுவலர்கள், கருத்தடை வளையத் (லூப்) திட்டத்தில், கருத்தடை வளையங்களைப் பொருத்திக்கொள்ளும் நாளன்று, அவர்களுக்கு ஒரு நாள் சிறப்பான சிறுவிடுப்பு அளிக்கவேண்டுமென்று, மத்திய குடும்பக் கட்டுப்பாடு மன்றம் செய்துள்ள பரிந்துரையை, இந்திய அரசு ஏற்றுக்கொண்டு, அவ்வாறே ஒரு முடிவும் செய்துள்ளது. இந்தச் சலுகையை மாநில அரசு அலுவலர்களுக்கும் அளிக்கும்படி, இந்திய அரசு, மாநில அரசைக் கேட்டுக்கொண்டுள்ளது.

2. மத்திய அரசின் இந்தக் கருத்தை இந்த அரசு பரிசீலனை செய்தபின், அதை ஏற்றுக்கொள்வதென முடிவு செய்துள்ளது. அதற்கேற்ப அரசு, உள்ளாட்சி நிறுவனங்களில் பணிபுரியும் பெண் அலுவலர்கள், கருத்தடை வளையம் ('லூப்') பொருத்திக்கொள்வதற்கென விடுப்புக்கோரி, எழுத்து மூலம் விண்ணப்பித்துக் கொண்டால், அவர்களுக்கு ஒரு நாள் சிறப்பான சிறுவிடுப்பு அளிக்கவேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்கிறது. கருத்தடை வளையத்தைப் பொருத்திக் கொள்ளும் நாளன்றுக்குத் தான் இந்த சிறப்பு சிறுவிடுப்பை அனுமதிக்க வேண்டும்.

(பொதுச் சுகாதாரத் துறையின் 10–6–1967 நாளிட்ட அரசு ஆணை எண் 980–ன் சுருக்கம்.)

————

## நிதி நிலை அறிக்கை—மானியக் கோரிக்கை எண்களை அனைத்து நாடுகள் எண்களுக்கு மாற்றுதல்—ஆணையிடப்படுகிறது.

## Budget—Demands for grants—Numbers—Change over to Arabic numbers—Ordered.

நிதிநிலை அறிக்கையிலுள்ள கோரிக்கை எண்களை, ரோமன் எண்களிலிருந்து (Roman numerals), அனைத்து நாடுகள் எண்களுக்கு (Arabic Numerals) மாற்ற வேண்டுமென்ற ஒரு யோசனை அரசின் பரிசீலனையில் இருந்தது. 1968–69–ம் ஆண்டிற்குரிய நிதிநிலை அறிக்கை முதற்கொண்டு, கோரிக்கை எண்களெல்லாம் ரோமன் எண்களிலிருந்து, அனைத்து நாடுகள் எண்களுக்கு மாற்றப்படவேண்டும் என்று, தமிழக கணக்காய்வுத் தலைவருடன் கலந்தாலோசித்து, அரசு ஆணை பிறப்பிக்கிறது.

(நிதித் துறையின் 14–8–1967 நாளிட்ட அரசு ஆணை எண் 744)



கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை
அரசுச் செயலாளரின் சிறப்புக் கடிதம்:

**தமிழக அரசு**

கிராம வளர்ச்சி,
உள்ளாட்சித் துறை,
செயின்ட் ஜார்ஜ் கோட்டை,
சென்னை–9.

கடித எண்: 111965/பி4/67-1 நாள்: 16—10—1967.

அனுப்புபவர்:
டி.ஏ.எஸ். பாலகிருஷ்ணன், ஐ.ஏ.எஸ்.,
அரசுச் செயலாளர்.

பெறுபவர்:
நகராட்சிகள், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் அனைவரும்.

அன்புடையீர்,

பொருள்: ''கிராம நலம்''—சந்தாதாரர்களைச் சேர்த்தல்.

கிராம வளர்ச்சியைக் குறிக்கோளாகக் கொண்டே. 'கிராம நலம்' என்ற திங்கள் இதழ், மாநில அரசால் வெளியிடப்படுகிறது என்பது உங்களுக்குத் தெரியும். இந்த இதழ் பெருமளவில் விற்பனையாகி வருகிறது என்பதை அறிய நீங்கள் மகிழ்ச்சியடையக் கூடும். எனினும் அது விற்பனையாகக் கூடிய அளவிற்கு விற்பனையாகவில்லை. குறிப்பிட்ட அளவைத்தான் எய்தியிருக்கிறது. அதன் பயனுள்ள பணியை விரிவான முறையில் செய்வதற்கு, இந்த இதழை ஊராட்சிகளிலுள்ள எல்லாக் கிராமங்களிலும் கிடைக்கச் செய்ய வேண்டியது அவசியம்.

2. படிப்போரின் மனதைக் கவரும் வகையில் தலைசிறந்த எழுத்தாளர்களைக் கொண்டு பயனுள்ள பொருள்கள் பற்றி சிறப்புக் கட்டுரைகள் தீட்டவும், இதழுக்கு புதிய தோற்றத்தை அளிக்கவும் ஆவன செய்யப்படுகிறது. கிராம வாசிகளுக்கும்—அரசுக்கும் இடையில் நின்று கருத்துக்களைப் பரிமாறித் தர முக்கியத்துவம் அளிக்கப்படுவதுடன், தற்போதுள்ளதைவிட மேலும் சிறந்த முறையில் இந்த இதழ் அலங்கரிக்கப்பட விருக்கிறது. வேளாண்மைக்கும் அது பற்றிய வளர்ச்சிக்கும் முதல் இடம் அளிக்கப்படும். நகராட்சிகள், பேரூராட்சிகளின் கவனத்தை ஈர்க்கும் முறையிலும் செய்திகள் அமையும். சுருங்கக் கூறின், ஊராட்சி வளர்ச்சி செய்திகளை மிகத் தெளிவாக, திறமுடன் விளக்கி இவ்விதழ் வெளிவரும். இதனால் கிராம வாசிகள், ஊராட்சிகள், கூட்டுறவுச் சங்கங்கள், சேவை நிறுவனங்கள், பொது மக்கள் ஆகியோர் பலரும் ஒரு சேரப் பயனடையக் கூடும்.

3. சந்தாதாரர்களின் பட்டியலை பரிசீலனை செய்ததில், பல ஊராட்சி ஒன்றியங்களும், அவற்றில் அடங்கிய பல ஊராட்சிகளும் இந்த இதழுக்கு சந்தா செலுத்தவில்லை என்று அறிய முடிகிறது. தவிர உங்கள் அலுவல் வரம்பிலுள்ள முற்போக்கு உழவர்கள், கிராமத் தலைவர்கள், மற்றும் மேலே குறிப்பிட்டுள்ள நிறுவனங்களையும் சந்தாதாரர்களாகச் சேர்த்துக்கொள்ள வாய்ப்பிருக்கிறது. இந்த இதழின் ஆண்டு சந்தா ரூ. 2 (இரண்டு ரூபாய்) மட்டுமே.

4. உங்கள் பொறுப்பிலுள்ள ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள் ஆகியவற்றை இந்த இதழுக்கு சந்தாதாரர்களாக சேர்க்க நீங்கள் விசேஷக் கவனம் செலுத்துவீர்கள் என்ற எண்ணத்தில்தான் இந்த கடிதத்தை உங்களுக்கு நான் தனிப்பட்ட முறையில் எழுதுகிறேன். மற்ற நிறுவனங்களையும், பொது மக்களையும் நீங்கள் அணுகி அவர்களின் உதவியையும் பெறின், உங்களது செயல் மிகப் பயனுள்ளதாக அமையும். இதில் உங்களால் முடிந்ததைச் செய்ய வேண்டுமென நான் கேட்டுக் கொள்ளலாமா? இப்பணியில் உங்களது சாதனைகளை அறிய அரசும் கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகமும் மகிழ்ச்சியடையும்.

உங்கள் உண்மையுள்ள,
(ஒப்பம்) டி. ஏ. எஸ். பாலகிருஷ்ணன்,
அரசுச் செயலாளர்.

# ஊராட்சி வளர்ச்சி—1967-68-ம் ஆண்டில் மானியங்களை முறைப்படுத்துதல்—வழியுரைக்கும் விளக்க ஆணைகள்—பிறப்பிக்கப்படுகின்றன

# Panchayat Development—Regulation of Statutory and Non-statutory grants during the year 1967-68—Guiding instructions issued.

1967-ம் ஆண்டு மார்ச்சு திங்களில் 1967-68-ம் ஆண்டிற்குரிய இடைக் கால நிதிநிலை அறிக்கையை மட்டுமே சட்டப் பேரவை நிறைவேற்றியது. எனவே, ஊராட்சி ஒன்றியங்களின் பல்வேறு திட்டங்களுக்கு ஏற்படும் செலவினங்களை 1967-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 1-ம் நாள் முதல் 1967-ம் ஆண்டு ஜூலை திங்கள் 31-ம் நாள் முடிய முதல் நான்கு திங்களுக்கு முறைப்படுத்த தேவையான வழியுரைக்கும் விளக்க ஆணைகள், கிராம வளர்ச்சி, உள்ளாட்சித்துறையின் 1967-ம் ஆண்டு ஜூன் திங்கள் 12-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1091-ல், பிறப்பிக்கப்பட்டன. (இவ்வாணையின் தமிழாக்கத்தை 1967-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 'கிராம நலம்' இதழில் காண்க). 1967-68-ம் ஆண்டு முழுவதற்குமுரிய செலவினங்களின் நிதிநிலை மதிப்பீடுகள் (திருத்தப்பட்ட) சட்டபேரவையில் சமர்ப்பிக்கப்பட்டு, நிறைவேற்றப்பட்டுள்ளதால், கிராம வளர்ச்சி இயக்குநருடன் கலந்தாலோசித்து, ஊராட்சி ஒன்றியங்களின் செலவினங்களை 1967-68-ம் ஆண்டு முழுவதற்கும் முறைப்படுத்துவதற்கு தகுந்த விளக்க ஆணைகள் பிறப்பிக்க வேண்டியது பற்றி, அரசு பரிசீலனை செய்தது.

2. அதற்கேற்ப, 1967-68-ம் ஆண்டில், செலவினங்களை முறைப்படுத்துவதற்கு, 1960-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 16-ம் நாளிட்ட கிராம வளர்ச்சி அரசு ஆணை எண் 664, மற்றும் கிராம வளர்ச்சி உள்ளாட்சி துறையின் 1961-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 25-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 211 ஆகியவற்றில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணைகளுடன், இவ்வாணையின் இணைப்பில் உள்ள விளக்க குறிப்புகளும் சேர்த்து பின்பற்றப்படவேண்டுமென்று, அரசு ஆணை பிறப்பிக்கிறது.

• • •

## இணைப்பு

### விளக்கக் குறிப்புகள்

பிரிவு—I உள்ளூர் வருவாய் சாதாரணமானவை.

1. உள்ளூர் செஸ் வரி (Local Cess)
2. உள்ளூர் மேல் வரி (Local Cess Surcharge)
3. பதிவுப்பத்திர மேல் வரி (Stamp Duty Surcharge.)
4. கேளிக்கை வரி, மற்றும் காட்சி வரியின் மீது மேல் வரி
5. கிராம வீட்டு வரி
6. உள்ளூர் சிறிய வருவாய்கள்

1967-68-ம் ஆண்டிற்கு, மேற்கண்ட வருவாய் மற்றும் மானியங்களை முறைப்படுத்த 1960-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 16-ம் நாளிட்ட கிராம வளர்ச்சி அரசு ஆணை எண் 664, கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1961-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 25-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 211 மற்றும் அவற்றின் பிறகு பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் அனைத்தும் பின்பற்றப்பட வேண்டும்.

பிரிவு—II. அரசு மானியங்கள் (சட்டத்தில் வருபவை)

7. நில வரி ஒதுக்கீடு (சட்டத்தில் வருபவை)
8. உள்ளூர் கல்வி மானியம்
9. உள்ளூர் செஸ் மேல் வரி இணைப்பு மானியம் (Local Cess Surcharge Matching Grant)
10. உள்ளூர் சாலைகள் மானியம்
11. கிராம வீட்டு வரி இணைப்பு மானியம்

1967-68-ம் ஆண்டிற்கு, மேற்கண்ட மானியங்களை முறைப்படுத்த 1960-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 16-ம் நாளிட்ட கிராம வளர்ச்சி ஆணை எண் 664, மற்றும் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1961-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 25-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 211 ஆகியவற்றில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணைகள் பின்பற்றப்பட வேண்டும்.

பிரிவு—III அரசு மானியங்கள் (சட்டத்தில் வராதவை):

12. கல்வி துணை மானியம்
13. ஆசிரியர்களின் அகவிலைப்படிக்குரிய சிறப்பு மானியம்
14. மதிய உணவு மானியம்

1967-68-ம் ஆண்டிற்கு, மேற்கண்ட மானியங்களை முறைப்படுத்த, தற்போதுள்ள விளக்க ஆணைகள் பின்பற்றப்படவேண்டும்.

15. சமூகக் கல்வி மானியம்:

1967-68-ம் ஆண்டில், ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு, இம்மானியத்தின் கீழ் ஏற்படும் செலவு ரூ. 1,800-க்குள் (ரூபாய் ஓராயிரத்து எண்ணூறு மட்டும்) இருக்க வேண்டும். இந்த தொகையில் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967-ம் ஆண்டு ஜூன் திங்கள் 12-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1091-ல் அனுமதிக்கப்பட்ட ரூ. 700ம் அடங்கும். கிராம வளர்ச்சி, உள்ளாட்சித்துறையின் 1966-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 10-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 2604-ல் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணைகளுக்கு ஏற்ப, 1967-68 ஆண்டிற்கும் திட்டங்கள் உருவாக்கப்படவேண்டும்.

16. மகளிர் சேய் நல மானியம்:

1967-68-ம் ஆண்டில், ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு, இம்மானியத்தின் கீழ் ஏற்படும் செலவு ரூ. 4,900-க்குள் (ரூபாய் நாலாயிரத்து தொள்ளாயிரம் மட்டும்) இருக்கவேண்டும். இந்த தொகையில், கிராம வளர்ச்சி, உள்ளாட்சித்துறையின் 1967-ம் ஆண்டு ஜூன் திங்கள் 12-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1091-ல் ஏற்கனவே



ஒதுக்கப்பட்ட தொகையும் அடங்கும். இம் மானியத்தில் திட்டங்களை மேற்கொள்வதற்கு, தற்போதுள்ள ஆணைகள் பின்பற்றப்படவேண்டும்.

17. கிராம வேலைகள் மானியம்:

(அ) இணைப்புச் சாலைகள்:

1967-68 ம் ஆண்டில், ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு, இம்மானியத்தின் கீழ், இணைப்புச் சாலைகளுக்காகும் செலவுகள் ரூ. 29,100க்குள் (ரூபாய் இருபத்தொன்பதாயிரத்து, ஒரு நூறு மட்டும்) இருக்கவேண்டும். இந்தத் தொகையில், கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967–ம் ஆண்டு ஜூன் திங்கள் 12-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1091-ல் அனுமதிக்கப்பட்ட ரூ. 9,000-ம் அடங்கும். ஹரிஜனங்கள் மற்றும் இதர பின்தங்கிய வகுப்பினரின் நலனுக்காக மேற்கொள்ளப்படும் இணைப்புச் சாலைகளுக்காகும் செலவில், 10 சத வீதத்தை ஹரிஜன நலத்துறை அளிக்க வேண்டும் என்று, கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1964-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 4-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1414-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் இந்த ஆண்டிற்கும் பொருந்தும்.

(ஆ) குடிநீர் விநியோகம்:

சாதாரணக் கிணறு வேலைகள் மற்றும் குழாய் மூலம் குடிநீர் விநியோகம் ஆகியவற்றிற்கு, 1967-68-ம் ஆண்டில் ஓர் ஒன்றியத்திற்கு ஏற்படும் செலவுகள் முறையே 16,100-ம் (ரூபாய் பதினாறாயிரத்து, நூறு மட்டும்) மற்றும் ரூ. 13,400 (ரூபாய் பதிமூன்று ஆயிரத்து நானூறு மட்டும்) க்குள் இருக்க வேண்டும். இந்த தொகையில், கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967-ம் ஆண்டு ஜூன் திங்கள் 12-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1091-ல் அனுமதிக்கப்பட்ட தொகையும் அடங்கும். ஹரிஜனங்கள் மற்றும் பின்தங்கிய வகுப்பினரின் நலனுக்காக மேற்கொள்ளப்படும் குடிநீர் வேலைகளுக்கு ஏற்படும் செலவுகளில் 15 சத வீதத்தை ஹரிஜன நலத்துறை வழங்க வேண்டுமென்று, கிராமவளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1964-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 4-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1414-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் இதற்குப் பொருந்தும்.

(இ) பள்ளிக் கட்டிடங்கள்:

ஓர் ஒன்றியத்திற்கு, 1967-68-ம் ஆண்டில் ஏற்படும் செலவு ரூ. 11,400க்குள் (ரூபாய் பதினொரு ஆயிரத்து, நானூறு மட்டும்) இருக்க வேண்டும். இந்தத் தொகையில், கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967-ம் ஆண்டு ஜூன் திங்கள் 12-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1091-ல் அனுமதிக்கப்பட்ட ரூ. 6,600-ம் அடங்கும். இவ்வாணையின் இணைப்பில் விவரிக்கப்பட்டுள்ள இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்களுக்கு (இணைப்பில் பிற்சேர்க்கை) ஏற்படும் செலவுகள், "28. Education y. Development schemes —B. Schemes in the Fourth Five Year Plan—III Primary (iii) Grants to local bodies—H. Educational grants to post stage II—Blocks" என்ற கணக்குத் தலைப்பில் பற்றுவைக்கப்படவேண்டும். மேற்கண்ட கணக்குத் தலைப்பிற்கு தேவையான நிதியானது மறுநிதி ஒதுக்கீடு (Re-appropriation of funds) மூலம் வகை செய்யப்படும்.

கிராம வேலைகள் மானியத்திலுள்ள நிதி ஒதுக்கீட்டில் 20 சதவீதம் ஹரிஜனங்களின் நன்மைக்குரிய வேலைகளில் மட்டுமே செலவிடப் படவேண்டும்.

18. உள்ளூர் பாசன மானியம்:

கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1964-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1681-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளின்படி, இந்த மானியத்திற்குள்ள செலவுகள் முறைப் படுத்தப்பட வேண்டும்.

19. வேளாண்மை மானியம்:

கீழ்க்காணும் திட்டங்களுக்குரிய செலவினங்கள், 1967-68-ல் அவற்றிற்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள தொகைகளுக்குள் இருத்தல் வேண்டும். இதில் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967-ம் ஆண்டு ஜூன் திங்கள் 6-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1091-ல் அனுமதிக்கப்பட்ட தொகையும் அடங்கும்.

1. <u>வேளாண்மைத் திட்டங்கள்:</u> ஓர் ஒன்றியத்திற்கு ரூ. 21,700 (ரூபாய் இருபத்து ஓராயிரத்து எழுநூறு மட்டும்)

2. <u>கால்நடை பராமரிப்புத் திட்டங்கள்:</u> ஓர் ஒன்றியத்திற்கு ரூ. 6,300 (ரூபாய் ஆறுயிரத்து, முன்னூறு மட்டும்).

3 <u>மீன்வளம்:</u> ஓர் ஒன்றியத்திற்கு ரூ. 1,600 (ரூபாய் ஓராயிரத்து, அறுநூறு மட்டும்).

இத்திட்டங்களை நிறைவேற்ற, கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1966-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 26-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 2064 மற்றும் அதேத் துறையின் 1966-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 3-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 2115 ஆகியவற்றில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணைகள் பின்பற்றப் படவேண்டும்.

20. மகப்பேறு நிலையங்கள் நிர்வகிப்பு மானியம்:

21. மருந்தகங்கள் நிர்வகிப்பு மானியம்:

இம்மானியங்களை முறைப்படுத்த இப்போதுள்ள ஆணைகள் பின்பற்றப்படவேண்டும்.

பிரிவு IV —உள்ளூர் வருவாய் (சிறப்பானவை)

22. உள்ளூர் பாசனக் கட்டணம்:

23. கிராம வளர்ச்சி விகிதங்கள்: (Village Development Rates)

24. தன்னிச்சையாக அளிக்கும் வளர்ச்சி நன்கொடைகள்:

மேற்கண்ட வருவாய் ஆதாரங்களை முறைப்படுத்த, 1960-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 16-ம் நாளிட்ட கிராம வளர்ச்சி ஆணை எண் 664, மற்றும் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1961-ம் ஜனவரி திங்கள் 25-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 211 ஆகியவற்றில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் பின்பற்றப்பட வேண்டும்,

பொதுவானவை:

இவ்வாணையில் விவரிக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளெல்லாம், முடிவுறாத வேலைகளுக்கே முதலில் பயன் படுத்தப்படவேண்டும். முடிவுறாத வேலைகளுக்குரிய செலவுகளை சரிக் கட்டிய பின்னரே, புதிய வேலைகளை மேற்கொள்ளவேண்டும் என்று வருவாய்க் கோட்ட அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்படுகிறது. சில ஊராட்சி ஒன்றியங்களின் தேவைகள் சற்று கூடுதலாகவே இருக்கலாம். அவ்வித ஊராட்சி ஒன்றியங்களின் தேவை களைப் பூர்த்திச் செய்ய, அக்கோட்டத் திற்குரிய நிதி ஒதுக்கீட்டை, அக்கோட் டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங் களினிடையே தாம் விரும்பியபடி, வருவாய்க் கோட்ட அதிகாரிகள் மறு நிதி ஒதுக்கீடு செய்யலாம். ஆனால், இந்த மறு நிதி ஒதுக்கீடானது, அக்கோட்ட முழுவதற்கும், சம்பந்தப் பட்ட திட்டத்திற்குரிய நிதி ஒதுக் கீட்டிற்கு மேற்படக்கூடாது. அதே போன்று, மாவட்ட அளவில், சம்பந் தப்பட்ட திட்டத்திற்குரிய நிதி ஒதுக்கீட்டை, அந்த மாவட்டத்திற்கு, அந்த திட்ட முழுவதற்குமுள்ள நிதி ஒதுக்கீட்டிற்குள், மறுநிதி ஒதுக்கீடு செய்ய, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப் பட்டுள்ளது. இவ்வாறு மாற்றங்கள் செய்கையில், சமுதாய வளர்ச்சித் திட்டத்திலுள்ள முதல் நிலை, இரண்டாம் நிலை வட்டாரங்கள் ஒரு புறத்திலும், இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்கள் மற்றொரு புறத்திலும் தனித்தனியே உள்ள வாறு மறுநிதி ஒதுக்கீட்டை தனிமைப் படுத்திக் கொள்ளவேண்டும்.

இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்களின் பெயர்களை பிற்சேர்க் கையில் காண்க. பல்வேறு திட்டங் களுக்குரிய செலவினங்களை, பற்று வைக்கப்படவேண்டிய கணக்குத்தலைப் புகள், கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தின் குறிப்பாணை எண் 55380, கணக்கு.1/67-13 நாள் 31-7-1967ன்படி இருத்தல் வேண்டும்.

## இணைப்பிற்குரிய பிற்சேர்க்கை

**இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்கள்: 1-4-1967 அன்று:**

வட ஆர்க்காடு மாவட்டம்
1. கே. வி. குப்பம்
2. கலசப்பாக்கம்
3. துரிஞ்சாபுரம்
4. கீழ்ப்பெண்ணாத்தூர்
5. போளூர்

தென் ஆர்க்காடு மாவட்டம்
6. மேல்மலையனூர்
7. கீரப்பாளையம்
8. மேல்புவனகிரி
9. பன்ருட்டி
10. குறிஞ்சிப்பாடி
11. சின்னசேலம்

செங்கல்பட்டு மாவட்டம்
12. பூண்டி
13. திருவள்ளூர்
14. கடம்பத்தூர்
15. பள்ளிப்பட்டு
16. ஊத்துக்கோட்டை (எல்லாபுரம்)
17. திருக்கழுக்குன்றம்
18. ஸ்ரீபெரும்புதூர்

தஞ்சாவூர் மாவட்டம்
19. திருத்துறைப்பூண்டி
20. வேதாரண்யம்
21. தலைஞாயர்
22. கொள்ளிடம்
23. சீர்காழி
24. மாயூரம்
25. செம்பொனார் கோவில்
26. குற்றாலம்
27. அம்மாபேட்டை
28. வலங்கைமான்
29. திருப்பனந்தாள்
30. கும்பகோணம்
31. திருவிடைமருதூர்
32. பாபநாசம்.

திருச்சிராப்பள்ளி மாவட்டம்
33. வேப்பந்தட்டை
34. முசிறி
35. தாத்தையங்கார் பேட்டை
36. கே. பரமத்தி
37. திருவரங்குளம்
38. அரவக்குறிச்சி

மதுரை மாவட்டம்
39. மதுரை (கிழக்கு)
40. மேலூர் (வடக்கு)
41. வாடிப்பட்டி
42. அலங்காநல்லூர்
43. மேலூர் (தெற்கு)
44. மதுரை (மேற்கு)
45. உசிலம்பட்டி
46. செல்லம்பட்டி
47. திருமங்கலம்
48. கள்ளிக்குடி
49. டி. கல்லுப்பட்டி
50. சேடப்பட்டி
51. ரெட்டியார் சத்திரம்
52. ஆத்தூர்

இராமநாதபுரம் மாவட்டம்
53. சிங்கம்புணரி
54. கண்ணங்குடி
55. இராஜசிங்கமங்கலம்
56. திருவாடானை
57. காளையார் கோவில்
58. தேவகோட்டை
59. கமுதி
60. ஸ்ரீவில்லிபுத்தூர்
61. சிவகாசி
62. வத்திராயிருப்பு
63. இராஜபாளையம்

திருநெல்வேலி மாவட்டம்
64. சங்கரன் கோவில்
65. மேலநீலிதநல்லூர்
66. குருவிகுளம்
67. கோவில்பட்டி.
68. பாப்பாக்குடி.
69. சேரன்மாதேவி
70. வள்ளியூர்

கன்னியாகுமரி மாவட்டம்
71. அகஸ்தீஸ்வரம்
72. முஞ்சிறை

நீலகிரி மாவட்டம்
73. உதகமண்டலம்
74. கூடலூர்
75. கோத்தகிரி

கோயம்புத்தூர் மாவட்டம்
76. சத்தியமங்கலம்
77. கோபிசெட்டிப் பாளையம்
78. பெருந்துறை
79. கொடுமுடி.
80. மொடக்குறிச்சி
81. தூக்கநாயக்கன் பாளையம்
82. காங்கேயம்
83. வெள்ளக்கோயில்
84. குண்டடம்
85. ஈரோடு
86. பல்லடம்
87. சுல்தான்பேட்டை
88. திருப்பூர்
89. பொங்கலூர்

சேலம் மாவட்டம்
90. கங்கவல்லி
91. தலைவாசல்
92. பெத்தநாயக்கன் பாளையம்
93. ஆத்தூர்

தர்மபுரி மாவட்டம்
94. கிருஷ்ணகிரி
95. வேப்பனபள்ளி
96. காவேரிப்பட்டிணம்.

குறிப்பு:—மேற்குறிப்பிடப் பட்டுள்ள இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்களுக்குரிய திட்டங்களுக்கு ஏற்படும் செலவினங்களை, ஒவ்வொரு திட்டத்திற்கும் எதிரே குறிக்கப் பட்டுள்ள கணக்குத் தலைப்புக்களில் 1967-68-ம் ஆண்டு முழுவதற்கும் (1-4-67 முதல் 31-3-1968 வரை) பற்று வைக்கப்பட வேண்டும்.

கீழ்க்காணும் இரண்டாம் நிலை வட்டாரங்கள் (1-10-67 அன்று) இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்களாக மாறும். எனவே, இவ்வட்டாரங்களுக்குரிய திட்டங் களுக்கு ஏற்படும் செலவினங்கள் 30-9-1967 முடிய, முதல் நிலை, இரண்டாம் நிலை வட்டாரங் களுக்குரிய தகுந்த கணக்குத் தலைப்பு களில் பற்று வைக்கப்படவேண்டும். அதன் பிறகு (அதாவது 30-9-1967க் குப் பிறகு) இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்களுக்குரிய கணக்குத் தலைப்புகளில் பற்று வைக்கப்பட வேண்டும். (அதாவது 1-10-1967 முதல் 31-3-1968 வரை.)

வட ஆற்காடு மாவட்டம்
1. ஆற்காடு
2. சேத்துப்பட்டு
3. வெம்பாக்கம்
4. பெரணமல்லூர்

தென் ஆற்காடு மாவட்டம்
5. செஞ்சி
6. உளுந்தூர்பேட்டை
7. கள்ளக்குறிச்சி
8. மங்களூர்

செங்கல்பட்டு மாவட்டம்
9. பரங்கிமலை
10. மீஞ்சூர்
11. பூவிருந்தவல்லி
12. மதுராந்தகம்

தஞ்சாவூர் மாவட்டம்
13. முத்துப்பேட்டை
14. பட்டுக்கோட்டை
15. ஒரத்தநாடு
16. ஆவுடையார் கோவில்

திருச்சிராப்பள்ளி மாவட்டம்
17. தொட்டியம்
18. திருவெறும்பூர்
19. பெரம்பலூர்
20. துறையூர்

மதுரை மாவட்டம்
21. திண்டுக்கல்
22. போடிநாயக்கனூர்
23. பழனி
24. ஆண்டிப்பட்டி

இராமநாதபுரம் மாவட்டம்
25. கல்லல்
26. மானாமதுரை
27. கடலாடி
28. முதுகுளத்தூர்
29. விருதுநகர்
30. காரியாப்பட்டி

திருநெல்வேலி மாவட்டம்
31. கருங்குளம்
32. சாத்தாபுரம்
33. மானூர்
34. ஆலங்குளம்

கன்னியாகுமரி மாவட்டம்
35. மேல்புரம்
36. கிள்ளியூர்

நீலகிரி மாவட்டம்
37. கூடலூர்

கோயம்புத்தூர் மாவட்டம்
38. தாராபுரம்
39. பவானி
40. அவினாசி
41. சூலூர்

சேலம் மாவட்டம்
42. கொளத்தூர்
43. நாமகிரிப்பேட்டை

தர்மபுரி மாவட்டம்
44. பர்கூர்
45. பென்னாகரம்
46. ஊத்தங்கரை

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 28—9—1967 நாளிட்ட அரசு ஆணை எண் 1806-ன் ][சுருக்கம்.)

---

## தனியாருக்கு வேளாண்மைக் கருவிகள் அளிப்பதில் இரும்புக் கலப்பைகளை நீக்கி விடுதல்—திருத்தம் வெளியிடப்படுகிறது.

## Agriculture—Fourth Five-Year Plan—Agricultural Grant—Deletion of Mould Board Ploughs from the list of agricultural implements to be supplied to individuals—Amendment to G. O. Ms. No. 2064, R.D. and L.A., dated 26-8-1966—Issued.

இரும்புக் கலப்பைகளை (Mould Board Ploughs), அடக்க விலையில் 33⅓ சதவீத உதவித் தொகையுடன் (இந்த உதவித்தொகை ரூ. 15-க்கு மேற்படாதவாறு), விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என்ற முன்னோடித் திட்டம் ஒன்றிற்கு அரசு அனுமதி வழங்கி, விவசாயத் துறை யின் 17-6-1966 நாளிட்ட அரசு ஆணை எண் 2052-ல் ஆணை பிறப் பித்தது. கிராமவளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 26-8-1966 நாளிட்ட அரசு ஆணை எண் 2064-ல் பிறப்பிக் கப்பட்டுள்ள உதவித் தொகை விகித மானது, மேற்கண்ட விகிதத்திற்கு மாறாக இருப்பதால், இந்த உதவித் தொகை பற்றிய கொள்கை சீரான முறையில் இருக்கவேண்டுமென்று கருதி, அதற்கேற்ப, கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 26-8-1966 நாளிட்ட அரசு ஆணை எண் 2064-ன் இணைப்பு II-ல் உள்ள "A. இன்றி யமையாத" திட்டங்களில், இனம் 5-ல் உள்ள "இரும்புக் கலப்பைகளையும் சேர்த்து" என்ற சொற்கள் நீக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 18-8-1967 நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 46997-ன் சுருக்கம்.)

நகரியம்—மதுக்கரை நகரியக் குழு—கோயம்புத்தூர் மாவட்டம்—உறுப்பினர்கள்—நியமனம்—ஆணையிடப்படுகிறது.

**Township - Madukkarai Township Committee—Coimbatore District—Members—Appointment—Ordered.**

1963-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 6-ம் நாளிட்ட செயின்ட் ஜார்ஜ் கோட்டை தனி அரசிதழின் பக்கம் 4-ல் வெளியிடப்பட்டுள்ள, கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1963-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 4-ம் நாளிட்ட, 1963-ம் ஆண்டின் 174-ம் எண்ணுள்ள அறிவிப்பு II—2-ல் வெளியிடப்பட்டுள்ள நெறிமுறைகளில், நெறிமுறை 2 (iii)-ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தியும், கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1963-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 8-ம் நாளிட்ட அரசு ஆணை 801-ல் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணைகளுக்கு (பிறகு திருத்தப்பட்டுள்ளவாறு) பகுதி திருத்தமாகவும், கீழ்க்காணும் அட்டவணையிலுள்ள பத்தி (2)-ல் குறிப்பிடப்பட்டுள்ளவர்களை, அவரவர்களின் பெயர்களுக்கு எதிரே பத்தி (1)-ல் குறிப்பிடப்பட்டுள்ளவர்களுக்கு மாறாக, மதுக்கரை நகரியக் குழுவிற்கு உறுப்பினர்களாக, தமிழக கவர்னர் அவர்கள் நியமிக்கிறார்கள்.

அட்டவணை

| தற்போதுள்ள உறுப்பினர்கள் (1) | தற்போது நியமிக்கப்படும் உறுப்பினர்கள் (2) |
| --- | --- |
| 1. திரு எம். ஜி. தாளுக்தார், நிர்வாகி, ஏ. சி. சி. லிமிடெட், மதுக்கரை. | திரு டி. எஸ். சங்கரன், அலுவலக கண்காணிப்பாளர், ஏ. சி. சி. லிமிடெட், மதுக்கரை. |
| 2. திரு ஆர். பத்மநாபன், உதவி நிர்வாகி, (சிறப்பு அலுவல்) ஏ. சி. சி. லிமிடெட், மதுக்கரை. | திரு சி. கே. வேலாயுதன், ஊழியர்கள், மற்றும் நல அதிகாரி, ஏ. சி. சி. லிமிடெட், மதுக்கரை. |
| 3. கோட்டப் பொறியாளர் (நெடுஞ்சாலை கிராமப் பணிகள்) கோயம்புத்தூர். | உதவிப் பொறியாளர், (நெடுஞ்சாலை, கிராமப் பணிகள்) கோயம்புத்தூர். |

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 28-9-1967 நாளிட்ட அரசு ஆணை எண் 1801-ன் சுருக்கம்.)

### அடுத்த இதழில்...

கவிஞர் பாரதி—மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் பேச்சு

சேரணிப் படையினரின் சீரிய பணி

கிராம நூலகம் (ஆய்வுக் கட்டுரை)

'மலிவு விலையில் வீடுகள் கட்டுவோம்'

பக்கம்


தமிழ் அன்னைக்கு எடுக்கும் பெருவிழா .. 1
ஊராட்சி ஒன்றியங்களின் தலைவர்கள் மாநாடு 4
தலைநகரின் தாகம் தீர்க்க... .. 7
காடுகள் கழனியாகின்றன.. .. 11
ஊராட்சியே உறுதுணை .. .. 13
இமயத்தின் மடியில் .. .. 17
'பூம்புகார் போற்றுதும்—பூம்புகார் போற்றுதும்' 18
எண்ணூர் அனல் மின்சார நிலையம் .. 25
சீரிய பணியாற்றும் நகராட்சிகள் .. 36



வெளியிடுபவர் :
திரு வி. நடராஜன், ஐ. ஏ. எஸ்.

ஆசிரியர் :
திரு எஸ். வேங்கடசாமி, எம். ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras Edited by the Public Relations Officer and published by the Director of Rural Development Madras-9.




1 தேசிய ஒருமைப்பாடு தினம் (20-10-1967) சென்னை கோட்டையில் அநுஷ்டிக்கப்பட்டது. மாண்புமிகு முதலமைச்சர் உறுதிமொழியைப் படிக்க, தலைமைச் செயலக ஊழியர்கள் உறுதிமொழி எடுத்துக் கொண்டனர்.

2. அகில இந்திய வீட்டு வசதி அமைச்சர்கள் மாநாடு, 8-11-1967-ல் சென்னையில் நடைபெற்றது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை மாநாட்டைத் துவக்கி வைத்தார். மத்திய அரசாங்க வீட்டு வசதி அமைச்சர் திரு ஜகன்னாத ராவ் மாநாட்டிற்குத் தலைமை வகித்தார்.

3. 24-10-1967-ல் சென்னையில் ஐக்கிய நாடுகள் தினம் கொண்டாடப்பட்டது. தமிழகக் கவர்னர் தலைமை வகித்தார்.

4. ஐக்கிய நாடுகள் தினத்தை ஒட்டி நடைபெற்ற கலைவிழா நிகழ்ச்சிகளில் ஒன்று.









உலகத் தமிழ் மாநாடு [சிறப்புக் கட்டுரை - உள்ளே]

REGD © No.M.7277
தமிழ்நாடு அரசாங்கம்.
1967.







## காடுகள் கழனியாகின்றன

புதுக்கோட்டை கோட்டம் குடுமியான் மலையில் சேரணிப் படையினர் காட்டைத் திருத்தி கழனியாக்குகின்ற பணியில் ஈடுபட்டுள்ளனர். இச் சீரிய பணியினை, மாண்புமிகு முதலமைச்சரின் அந்தரங்கச் செயலாளர் திரு கே. சொக்கலிங்கம், ஐ.ஏ.எஸ். 11-10-1967 அன்று துவக்கி வைத்தார்.

1. காட்டைக் கழனியாக்கும் பணியில் ஈடுபட்டுள்ள பறம்புப் பொறி (Bull-dozor).

2. குடுமியான் மலையிலுள்ள கோயில்.

3. பணியைத் துவக்கி வைத்த மாண்புமிகு முதலமைச்சரின் அந்தரங்கச் செயலாளரும் மற்ற அதிகாரிகளும்.

4. பணியில் ஈடுபட்டுள்ள சேரணிப் படையினர்.




# கிராம நலம்

டிசம்பர் '67



படம் 1: சென்னை மாநகராட்சியின் 280-வது துவக்க நாள் விழா 21-11-1967 அன்று கொண்டாடப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் விழாவிற்குத் தலைமை தாங்கினார். விழாவினைத் துவக்கி வைத்த மாண்புமிகு மைசூர் மாநில முதலமைச்சர் திரு எஸ். நிஜலிங்கப்பா அவர்கட்கு நகர வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டது. விழாவினை யொட்டி நடைபெற்ற விருந்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சரும் மாண்புமிகு மைசூர் மாநில முதலமைச்சரும்

படம் 2: ரோமாபுரியில் அண்மையில் நடைபெற்ற உலக உணவு-விவசாய மாநாட்டில் இந்தியக் குழுவின் மாற்றுத் தலைவராக மாண்புமிகு தமிழக உணவமைச்சர் திரு கே. மதியழகன் கலந்து கொண்டார். மாநாட்டில் மாண்புமிகு தமிழக உணவமைச்சர் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். (6-11-1967)





# கிராமநலம்

தமிழக அரசின் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை மாத இதழ்

கதிர் 13 டிசம்பர் 1967 நெல் 3


## உலகத் தமிழே! வாழி!!

உலகத் தமிழே வாழி!
உயிர்மொழி யேநீ டூழி!
உலகின் முதன்மொழி நீயே!
உள்ளொளி வழங்கிடு வாயே!
..உலகத் தமிழே வாழி!

யாதும் ஊரென மொழிந்தாய்!
யாவரும் உறவென மகிழ்ந்தாய்!
காதலும் வீரமும் வளர்த்தாய்!
கவிநயக் களஞ்சியம் படைத்தாய்!
..உலகத் தமிழே வாழி!

'த'கரம் வல்லின அழுத்தம்!
'மி'கரம் மெல்லினம் உயர்த்தும்!
'ழ'கரவொற் றிடையினம் இணையும்!
'தமிழ்'எனில் இனிமை கனியும்!
..உலகத் தமிழே வாழி!

கன்னடம் தெலுங்குடன் துளுவும்
கவின்மலை யாளமென் மொழியும்
உன்னிடம் தோன்றிய பின்னும்
உன்பெயர் கன்னிஎன் அன்னை!
..உலகத் தமிழே வாழி!

உயிரினும் சிறந்தது மானம்!
ஒழுக்கம் தருவதுன் ஞானம்!
அயலக அறிஞரும் உன்னை
அமுதென விரும்புதல் உண்மை!
..உலகத் தமிழே வாழி!

—கவிஞர் புத்தனேரி சுப்பிரமணியம்

உலகத் தமிழ் மகாநாடு பற்றிய முழு விவரங்கள்—படங்களுடன்—
அடுத்த இதழில் இடம் பெறும்.

# இன்னலுறும் ஏழை மனிதனை முன்னேற்றும் புனிதப் பணி

[''புன்னகைப் பூக்கும் நிலம் நோக்கும் ஏழை மனிதனை—குடிசையில் வாழும் சாமான்ய மனிதனை—தனது குழந்தைகளின் எதிர்காலம் பற்றி ஏங்கும் மனிதனை முன்னேற்றும் புனிதப் பணியில் ஈடுபட வாரீர்'' என்று மாணவச் செல்வங்களுக்கு அழைப்பு விடுகிறார், மாண்புமிகு முதலமைச்சர் தன்னுடைய கருத்தாழம் செறிந்த பேருரையில். 18-11-1967—ல் நடைபெற்ற அண்ணாமலைப் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் மாண்புமிகு முதலமைச்சர் ஆற்றிய பட்டமளிப்பு விழாப் பேருரையின் சாரம் இது. சமூகப் பணி என்ற உயர்ந்த தத்துவத்தை வலியுறுத்தி கண்ணியத்தின் காவலர்களாய், கடமை வீரர்களாய், தாயகத்தின் திருவிளக்குகளாய், தன்மானத் தீரர்களாய், பொய்மையைச் சுட்டெரிக்கும் புனிதத் தொண்டர்களாய் மாணவர் சமுதாயம் திகழ வேண்டும் என்ற அடிப்படையை மையமாகக் கொண்டு, அறிஞர் அண்ணா அவர்கள் ஆற்றிய பேருரை, அறிவுக்கு விருந்தாக, சிந்தனைக்கு செந்தேனாக, உள்ளத்திற்கு அருமருந்தாக அமைந்துள்ளது. ஆற்றல் மிகு அண்ணா அவர்களின் பேருரையை வாசகர்களுக்கு வடித்துக்கொடுப்பதில் 'கிராம நலம்' பேருவகை கொள்கிறது; மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறது.

—ஆசிரியர்.]

"சமுதாயத்திற்குச் சேவை புரியும் உன்னதமான கடமைக்கு உங்களது உதவியையும் ஒத்துழைப்பையும் நான் விரும்பி வேண்டுகிறேன். இத்தருணத்தில் நீங்கள் கேலிப் புன்னகை புரிந்து கண் சிமிட்டி ''சொல்வது யார்க்கும் எளிது'' என்று தயவுசெய்து கூறிவிட வேண்டாம்.

உங்களது வாழ்க்கை வழித்தடத்திலுள்ள இன்னல்களை நான் அறியாதவனல்ல !

உங்கள் மீதுள்ள சுற்றுச் சார்பின் அழுத்தத்தையும் செல்வாக்கையும், 'இல்லை' என்று ஒதுக்கித் தள்ளி விடுபவனும் அல்லன் நான்.

எந்த உலகத்தில் உங்களது வாழ்க்கைப் பயணத்தைத் துவக்க இருக்கிறீர்களோ—அந்த உலகம் உங்களுடைய நம்பிக்கை ஒளியைக் குன்றச் செய்யலாம். உங்கள் உறுதியை உருக்குலைக்கும் தன்மையில் இருக்கலாம்.

உங்கள் வாழ்க்கைப் பயணத்தில் உங்கள் இதயம் படிந்த கொள்கை—கோட்பாடுகளுக்கு முற்றிலும் எதிரான பழக்கவழக்கங்களை நேருக்கு நேர் சந்திக்க வேண்டி வரும்.

உலகில் சுயநலம் விரும்பிகள் கனக சிம்மாசனத்தில் வீற்றிருப்பதையும் அமைதியுருக் கொண்ட உழைப்பாளி ஒடுக்கப்படுவதையும் கண்டிக்கப்படுவதையும் நீங்கள் காண நேரிடலாம்.

எல்லாவகைக் கொடுங்கோன்மையும் உங்கள் மீது மிரட்டு விழிப்பார்வை செலுத்தலாம்.

அந்தப் பயணத்தில் நீங்கள் எடுத்து வைக்கும் ஒவ்வொரு காலடியும் ஒவ்வொரு போராட்டமாக இருக்கலாம்.

சமுதாயத்திற்குப் பணிபுரியும் அருவியோட்டம் போன்ற தொண்டர் திருக்கூட்டம்

நேர்மைக்குணம் படைத்த நிறை நோக்கர்களையும்கூட உற்சாகம் குன்ற வைத்து, சுலபமும் வசதியுமிக்கக் குறுக்கு வழியைத் தேர்தெடுக்குமாறு பலவந்தப்படுத்தும் வலிமைமிக்கது இந்த



சமூகச் சூழ்நிலை என்பதை, நான் ஒப்புக் கொள்கிறேன். ஆனால் அதே நேரத்தில் நாம் ஒன்றை உணரவேண்டும். சமூகத்திற்குப் பணியாற்றும் உள்ளுணர்வு மிக்க ஆடவர்—பெண்டிர் உள்ளடங்கிய அருவியோட்டம் போன்ற தொடர்பான திருக்கூட்டம் இருந்து வருகிறது. அது இந்தப் புனிதப் பணியை வெற்றிகரமாக நடத்துகிறது; மனித சமுதாயத்திற்கு வளமிக்க பலனைத் தந்திருக்கிறது.

சமூகப்பணி என்னும் இந்தத் தத்துவத்தை தமிழர்களாகிய நாம் உச்சிமேல் வைத்து மெச்சத் தகும் வகையில் கடைப்பிடித்து பாராட்டியிருக்கிறோம்.

பிரச்சினை. அவ்விதம் இருக்குமாயின், அந்தப் பிரச்னையின் தீர்வுக்கு ஆழ்ந்த கவனிப்பு மட்டும் போதுமானது:

ஆனால் நமது பிரச்சினைகள் இதயத்தில் ஏற்படும் மண் அரிப்பு போன்ற செயலால் ஏற்படுவது.

நமது பணிக்கு வயல்களைத் தேடிப் போகவேண்டிய அவசியமில்லை—இருக்கிற வயலில் உரம் போட்டு—உழவு செய்யும் நிலைமையில் இருக்கிறோம்!

ஆம்; தத்துவங்களைத் தேடிச் செல்ல வேண்டிய அவசியமில்லை. அதைவிடக் கடுமையான

## அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டமளிப்பு விழா

புறநானூற்றில் அந்தக் கருத்தைக் காண்கிறோம்.

''உண்டால் அம்ம இவ்வுலகம்————

————————

தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே"

—இத்தகைய செழுமை மிக்க பாரம்பரியத்தின் வழித்தோன்றல்களாகிய நீங்கள் சமூகச் சூழ்நிலையின் அழுத்தத்திலிருந்து விடுபட்டு, உங்களது திறமைக்கேற்றபடி சமூகத்திற்கு உழைத்திட வேண்டும்!

நல்லது செய்ய நினைத்திடும் யாரும்—தங்கள் பாதையில் தடைப்படும் கற்களை மக்களில் சிலர் நீக்கியுதவுவார்கள் என்று எதிர்பார்க்கக் கூடாது.

அந்த தடைக் கற்களோடு மேலும் சில கற்களை உருட்டி விட்டாலுங்கூட மிகுந்த பொறுமையாய் இருந்திடல் வேண்டும்.

பணியில் ஈடுபட்டிருக்கின்றோம், இருக்கின்ற தத்துவங்களை வகைப்படுத்தி—தொகைப்படுத்தி—தணிக்கைப் படுத்தும் நிலையில் இருக்கிறோம்.

கலாச்சாரத்தை நாம் வேண்டி நிற்கும் நிலையில் இல்லை. இருக்கிற கலாச்சாரத்தில் காலம் ஏற்படுத்திய சிலந்திக் கூடுகளை அகற்றி—கலந்து விட்ட கலப்படங்களை நீக்கும் பணியில் நிற்கிறோம்.

கண்ணியமிக்க எல்லாவற்றிற்கும் காவலர்கள் நாம்

சுருங்கச் சொன்னால், நாம் நம்மையே கண்டு கொள்ளவேண்டிய நிலையில் இருக்கிறோம், நமது சிந்தனைக் கட்டிடத்தை மீண்டும் சீர்திருத்திக் கட்டவேண்டிய நிலையில் இருக்கின்றோம்.

கண்ணியமிக்க எல்லாவற்றுக்கும் நாம் ஒரு காலத்தில் காவலர்களாக இருந்தோம். ஆனால் அழிவின் சிருமிகள் பல்கிப் பெருகிட அனுமதித்தோம்!

## மாண்புமிகு முதலமைச்சர் பேருரை

''தடைகளைச் சந்தித்துப் பெறும் அனுபவம் மூலமாகவே நமது வலிமை தெளிவாகும்; மேலும் பலப்படும், பிறகு அந்த வலிமையே தடைகளை வெல்லும் திறனாய் மாறும்" என்கிறார் அறிஞர் ஆல்பர்ட் சுவிட்சைர்.

பல்வேறு நாடுகளிலுள்ள பிரச்சினைகள் ஒரே மாதிரியான இயல்புடையவை எனினும் நமது நாட்டின் பிரச்னைகளில் வினோதப் பண்பு சேர்ந்திருப்பதோடு தனித் தன்மையும் இருக்கும் !

எங்கோ ஏற்பட்ட சிறல்களிலிருந்து சிக்கல் எழுவதுபோன்ற தன்மை வாய்ந்ததல்ல நமது

இன்று நமக்குள்ள பணி தூய காற்றையும் உதயசூரியனின் ஒளியையும் அனுமதித்து—நமது உண்மையான பழைய உருவையும் பொலிவையும் அடைய வேண்டும் என்பதே. அத்தகைய பொலிவுமிக்க உருவந்தான் உலகின் நெடுந்தூர நாடுகளிலும் நிலப் பரப்புகளிலும் நமது புகழைப் பரப்பியது.

நமது இலக்கியமும், கலையும் சிற்பமும் மன்பதை அறிவின் சிறந்த சின்னங்களாய்த் திகழ்கின்றன. ஆனால் அவை இன்று காலம் ஆடிய சூறையாடல்களின் தழும்புகளை ஏற்று நிற்கின்றன.

ஆகவேதான் நமது அருமை பெருமைகளைப்பற்றி வெளிநாட்டு சரித்திர ஆசிரியர்களிடம் கேட்க வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பட்டதாரிகளே! உங்களுடைய—உங்கள் குடும்பங்களுடைய நன்னிலைக்குப் பாடுபடுவதோடு, சமூகத்திற்கான பணியையும் நீங்கள் செய்யவேண்டியிருக்கிறது.

பகுத்தறிவு வாதத்தின் ஒளிவிளக்கை ஏற்றிப் பிடிப்பவர்களாக நீங்கள் பணிபுரியவேண்டியிருக்கிறது.

பகுத்தறிவு வாதம் என்பது அடிப்படை உண்மைகளை—நெறிகளை—மறுப்பது என்பது அல்ல. போலித்தனமான எண்ணத்தையும் செயலையும் அழித்தொழிப்பதுதான் பகுத்தறிவு வாதம்.

அதாவது புதிய கருத்துக்களை ஏற்றுக்கொள்ளக்கூடிய இளம் இதயத்தைப்போல் பசுமையானதாக விளங்கவேண்டும்.

ஈவோஸ் என்னும் தேவதை "ஆண்டவனே! என் காதலனுக்கு அமரத்துவம் கொடு" என்று இறைவனை வேண்டினாள், சாகா வரம்பெற்ற அவள் காதலன் முதுமையடைந்தான், அந்த முதுமையினால் தளர்வுற்று முடக்கமுற்றான். எல்லோரும் அவனைக் கண்டு வெறுத்தனர். சிலர் வருந்தினர். அமரத்துவம் பெற்ற அவன் இறக்கமாட்டோமா என்று இறைஞ்சினான்.

தேவதை ஈவோஸ் பெருமூச்செறிந்து "இறைவா! என் காதலனுக்கு நீங்கா இளமை கேட்டுப் பெறவேண்டிய நான் அதை மறந்து அமரத்துவம் வேண்டினேனே" என்று வருந்தினாள்.

---

## சமுதாயத்திற்குப் பணியாற்றும் உள்ளுணர்வு கொண்ட திருக் கூட்டம்

---

முனைப்புடனும்-உறுதியுடனும் நீங்கள் உழைக்க வேண்டும். ஏனெனில் நாம் பல நூற்றாண்டுகளாய் கப்பிவிட்ட சிலந்திக் காடுகளை அகற்ற வேண்டும்; காரண—காரிய செயல் முறை உயர்ந்த நிலையிலிருந்து ஆட்சி புரியவைக்க வேண்டும்.

நமது நாகரிகமும் பண்பாடும் தொன்மை வாய்ந்தவை. அதில் தொய்வு உண்டாகச் செய்துவிட்டோம், காலத்தால் அதில் வடுக்கள் தோன்றிவிட்டன. அவற்றை நோக்கி நம்முடைய பண்பாட்டையும் நாகரீகத்தையும் மீண்டும் நிலைநாட்டுவதோடு மற்றைய நாட்டாரின் சாதனைகளிலிருந்தும் நாம் கற்றறியவேண்டும்.

### நமக்கென்று ஒரு நெறி, ஒருமுறை உண்டு

அறிவின் எந்த வொரு துறையாயினும் நமக்கென்று ஒரு முறை இல்லாமல் இல்லை. அற்புதமான உதாரணங்களாகத் திகழும் சான்றுகள் நமக்குண்டு; எனவே நம்முடைய வாழ்க்கை

இந்த நாட்டில் வாழ்கின்ற நாம் அத்தகைய நிலைமையில்தான் இருக்கிறோம். நம்முடைய நாகரிகம் பண்பாடு ஆகியவற்றுக்குப் புத்துயிரும் புதுப் பொலிவும் ஊட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம்.

### சாதிமுறைகளை எதிர்த்துப் போர் தொடுத்திடுவோம்

நெடுங்காலமாகப் பழைய முறைகளிலேயே ஊறி அவற்றைத் தாங்கி நின்று அவற்றுக்கெதிரான வாதங்களுக்கு எதிர்ப்புக் கூறிக் காலத்தை கழித்திருக்கிறோம்.

இதே காலத்தில் உலகத்தின் ஏனைய நாட்டவரெல்லாம் உண்மையை நாடிப் பொறுமையோடு தங்களது இடைவிடா சோதனை மூலம் பல புதிய முடிவுகளை எய்தி புதிய உயர்வுகளை அடைந்துள்ளனர்.

நாமோ பண்டைப் பழம் பெருமையினிடத்தில்—இடிந்து கிடக்கும் கோட்டைக் கொத்தளங்கள்

---

## மக்களை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்லும் அறிவாலயங்கள்

---

முறைகள் அழியாதவை அமரத்துவமுள்ளவை என்று நாம் கொண்டாடலாம்.

ஆயினும் அந்த முறைகளை இளமை குன்றாது பசுமையோடு தீவிரத்தன்மையோடு கூடியதாக வைத்திருக்க நாம் தவறிவிட்டோம். அவை சீரழிய நாம் இடமளித்துவிட்டோம்.

"ஒரு வாழ்க்கை முறை நிலைக்க வேண்டுமானால் என்றென்றும் இளமை குன்றாததாகவும் மாறுதலை ஏற்றுக்கொள்ளத்தக்கதாகவும் இருக்கவேண்டு"மென்று டாக்டர் இராதாகிருஷ்ணன் கூறியுள்ளார்.

ஓரத்தில்—அமர்ந்திருப்பதிலேயே திருப்தி கொள்கிறோம். நமக்கென்று வாய்த்த சமய சாத்திரமெல்லாம் வெறும் சடங்குகள் என்கிற நிலைக்குச் சீரழிந்துவிட்டன. வர்க்க பேதமற்ற சமுதாயமாக இருந்த நமது சமுதாயம் இன்று சாதி-இன-வேறுபாடுகளால் கூனிக் குறுகி சிறுசிறு அமைப்புகளாக கட்டப் பெற்றுள்ளது.

மூடப் பழக்க வழக்கங்களைக் காணுமிடத்தில் நம்மில் பலர் வாய்மூடி மௌனிகளாக இருக்கிறோம். சிலர் சாத்திரம் பேசி அவற்றைச் சமா

[27-ம் பக்கம் பார்க்க]





# "பாட்டுக்கொரு புலவன்"

[மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு மு. கருணாநிதி]

["நலிவற்ற நாடு—வலிவுற்ற மக்கள்—தாழ்வற்ற இனம்—வாழ்வுற்ற மொழி இந்தக் குறிக்கோள் வென்றிட பாரதி நாளில் உறுதி மேற்கொள்வோம்" என்று அடலேறு போல் அறுதியிட்டு அழைக்கின்றார் மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் தன்னுடைய வீர உரையில். மகாகவி பாரதியைப் பற்றி வானொலியில் மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் திரு மு. கருணாநிதி அவர்கள் நிகழ்த்திய உரையின் முழுவடிவம் இது. அவருடைய பேச்சிலே எழுத்துக்கு எழுத்து வீரம் முரசொலிக்கிறது. வரிக்குவரி அழகு தமிழ் அலங்கார நடைபோகிறது. கவிதையுள்ளம் கடல்மடை திறந்ததுபோல் பீறிட்டுக்கொண்டுவெளிவருகிறது. கவிஞரைப்பற்றி கலைஞருடைய பேச்சு, தேனாகத் தித்திப்பது மட்டுமல்ல; சிந்தனைக்கும் அரிய தொரு விருந்தாக அமைந்துள்ளது.

கவிஞர் பாரதி அமரரானது செப்டம்பர் திங்களில்; அவர் பிறந்தது டிசம்பர் திங்களில் பாரதியைப் பற்றி மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் 1967 செப்டம்பர் திங்கள் 11-ம் நாள் வானொலியில் ஆற்றிய சொற்பொழிவை, அப்படியே வாசகர்களுக்கு இந்த டிசம்பர் இதழில் அளிப்பதில் "கிராம நலம்" பேருவகை அடைகிறது. காலத்தால் அழிக்க முடியாத அமர கவிஞனுக்கு செலுத்தும் அஞ்சலியில் 'கிராம நல'மும், பங்கு கொள்வதில் தனிமகிழ்ச்சி அடைகிறோம்.

—ஆசிரியர்.]

தேர்ச் சாரதிபோல் தலைப்பாகை—
திசை நோக்கும் பெரு விழிகள்—
திருகிவிட்ட கூர் மீசை—
தேன்தமிழ்பால் தணியாத பேராசை;

ஏட்டுக்குள்
வீட்டுக்குள்—தமிழ்
நாட்டுக்குள்
இதயக் கூட்டுக்குள்

இடம்பெற்ற பாட்டுக்கொரு புலவன்!
பாவாணன்! பாரதிரக் கவிதைச் சாட்டை கொண்டு;
பரம்பரையைப் பழமைகளைத் தாக்கித் தகர்த்திட்ட
பத்தொன்பதாம் சித்தன்—பாரதியார்!

அவர் நினைவுநாள் இன்று! ஆம்; மகாகவி மறைந்தநாள்!

இன்றைக்கு எண்பத்தைந்து ஆண்டுகட்கு முன்பு பிறந்து, நாற்பதுக்கும் ஓராண்டு குறைவாக வாழ்ந்து, நாட்டு மக்களின் நாடிநரம்பெல்லாம் உயிரேற்றித் துடிப்பேற்றிச் சென்றுவிட்டவர் பாரதியார்.

ஆண்டுக்கொரு முறை என்றல்ல; ஆடுகின்ற மயிலைக் காணும்போதும்—கூவுகின்ற குயிலை ரசிக்கும்போதும்—ஓடுகின்ற மழலையைப் பார்க்கும்போதும்—பாரதியார் நினைவு வந்தே தீரும். குயில் பாட்டும் குழந்தைப் பாட்டும் மறக்கக் கூடியவைகளா!

"பாதகம் செய்பவரை கண்டால்—நாம்
பயங்கொள்ளலாகாது பாப்பா!
மோதி மிதித்துவிடு பாப்பா! —அவர்
முகத்தில் உமிழ்ந்து விடு பாப்பா!"

ஆகா—வினையும் பயிருக்கு அவர் இடுகின்ற வீர உரம் எப்படிப்பட்டது பார்த்தீர்களா? நீலவானமும் நெடிய கடலும் அவர் நினைவை ஒலித்துக்கொண்டேயிருக்கின்றன,

"நிலாவையும் வானத்து மீனையும் காற்றையும்
நேர்பட வைத்தாங்கே
குலாவும் அமுதக் குழம்பைக் குடித்தொரு
கோல வெறி படைத்தோம்;
உலாவும் மனச்சிறு புள்ளினை எங்கணும்
ஓட்டி மகிழ்ந்திடுவோம்."



பின்னஞ் சிறு மனப்பறவை எவ்வளவு ஆர்ப்பாட்டமாகப் பறக்கிறது? எவ்வளவு தெம்பான வார்த்தைகள் எழில் கூட்டிக்கொண்டு மனப் பறவையின் உற்சாகப் பயணத்திற்கு ஊக்கமளிக்கின்றன!

தாயின் மணிக்கொடி பறக்கும் போதெல்லாம் அந்தத் தமிழ்க்கவி வேந்தனின் எழுச்சி கீதம் கேட்டுக்கொண்டேயிருக்கும்.

"தாயின்மணிக்கொடி பாரீர்
—இதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்
திட வாரீர்"

காக்கைச் சிறகும்—வெள்ளைப் பூனையும் அவர் தம் கவிதை வரிகளை சுருக்கென்று நம் நெஞ்சில் பாய்ச்சும்.

காணி நிலமும்—கரும்புத் தோட்டமும் அவர் பாடலை எதிர் நிறுத்தி நம்மைப் பாடாய்ப் படுத்தும்,

'விடுதலை' என்ற நான்கு எழுத்துக்களுக்கு, எழுத்துக்கு எழுத்து எரிமலைக்கனலை உருவாக்கி வடித்தவர் பாரதியார்.

எங்கோ நடந்த புரட்சியின் முடிவை இங்கே எழுதிக் காட்டி, தோள் தட்டி நிற்கும் விடுதலை மறவர்க்கு அவர் தந்துள்ள போர்க்கருவி எத்துணை வீறு கொண்ட பாடலாக எழுகின்றது!

"இம் என்றால் சிறைவாசம், ஏனென்றால்
வனவாசம்; இவ்வா றங்கே
செம்மை யெலாம் பாழாகிக் கொடுமையே
அறமாகித் தீர்ந்த போதில்
அம்மை மனங் கனிந்திட்டாள்; அடி பரவி
உண்மை சொல்லும் அடியார் தம்மை
மும்மையிலும் காத்திடுநல் வழியாலே
நோக்கினள், முடிந்தான் காலன்"

கொடியவர்களின் முடிவுக்கு மகிழ்ந்து, பாரதி கொட்டிய மங்கல முரச மென்போம் இந்தப்பாடலை!

அறிவே தெய்வமென்று ஆர்த்தெழுந்தவர் அண்ணல் பாரதி.

"ஆயிரந் தெய்வங்கள் உண்டென்று தேடி
அலையும் அறிவிலிகாள்! பல்
லாயிரம் வேதம் அறிவொன்றே தெய்வமுண்
டாமெனில் கேளீரோ?"

எனச் சங்கநாதம் செய்த பிறகு, சிவலோகம் வைகுந்தம் சேர்ந்திடலா மென்றே எண்ணியிருக்கும் பித்த மனிதரைச் சாடியவர் பாரதி.

நெஞ்சில் உரமின்றி நேர்மைத் திறமும் இன்றி வஞ்சனை சொல்வாரைக் கடிந்துரைக்கும் கர்மவீரர்.

சிந்தையிற் கள் விரும்பிச் 'சிவ சிவ' என்பவரைச் சீறிச் சாடும் செந்தீ அவர்!

"இரும்பைக்காய்ச்சி உருக்கிடு
வோர்—
இயந்திரங்கள் வகுத்திடு
வோர்—
கரும்பைச் சாறு பிழிந்திடு
வோர்—
கடலில் மூழ்கி முத்தெடுப்
போர்—
மண் எடுத்துக் குடங்கள்
செய்திடுவோர்—
உண்ணக் காய் கனி தந்திடுவோர்—
உழுது நன்செய் பயிரிடுவோர்—
எண்ணெய் பால் நெய் கொணர்ந்திடுவோர்—
இழையை நூற்று நல்லாடை செய்திடுவோர்—
பாட்டும் செய்யுளும் கோத்திடுவோர்—
நாட்டிலே அறம் கூட்டிடுவோர்"—

—இவர்கள் அனைவரையும் தெய்வங்கள் என்றே தொழுதவர் பாரதியார்.

பழம்புலவர்கள் எல்லாம் சொர்க்கம் செல்ல வரம் கேட்பர்; பாரதியோ சொர்க்கத்தையே இந்தப் புவிமீது கொண்டுவந்து வைக்கும் வரம்பெற்றார்:—ஏழைகள் வாழ்வே அவருக்குச் சொர்க்கம். இந்தச் சூழ் நிலையில்



எழுகின்ற கவிஞர்கள்தான் மக்கள் கவிஞர்களாகிறார்கள். அவர்கள் கடல் முத்தைக் கண்டவுடன் அதனை உழைக்கின்ற ஏழைகளின் வியர்வை முத்துடன் ஒப்பிடவே முந்தி நிற்பர். அவர்கள், கோவைக் கனியைப் பாவையின் இதழுக்கு ஒப்பிடுவதைவிட, கொள்கைக்கென

## துள்ளி வரும் வேல் போல

குமுறி நிற்கும் வீரனின் சிவந்த விழிகளுக்கு ஒப்பிடுவதையே சிறந்ததெனக் கருதுவர். ஆண்டவனைப் பற்றி ஆயிரம் பாடல் எழுதுவதும்; ஒரு நாட்டின் அடிமைத் தளை முறிவதற்காக ஒரு பாட்டு எழுதுவதும் ஒன்றே தான் என எண்ணிச் செயல்படுவர் மக்கள் கவிஞர்.

அவர்களில் முதல்வரே, பாரதியார்!

"இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின்
பரந்து கெடுக உலகியற்றியான்"

எனும் குறள் படித்தார்.

"தனியொருவனுக் குணவில்லையெனில்—இந்த
ஜெகத்தினை அழித்திடுவோம்"

என்ற குரல் கொடுத்தார்.

"இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர் நாண
நன்னயம் செய்துவிடல்"

என்கின்ற குறளுக்கு;

"தின்னவரும் புலி தன்னையும் அன்போடு
சிந்தையிற் போற்றிடுவாய்"

என்று எளிய நடையில் விளக்கம் தந்தார்.

"நமக்குத்தொழில் கவிதை
நாட்டிற் குழைத்தல்
இமைப்பொழுதும் சோராதிருத்தல்"

எனக் கூறி அவ்வண்ணம் வாழ்ந்து காட்டியவர் அவர்.

## சொல்லடுக்கிச் சூடேற்றி

உரைகூற ஒரு புலவர் அருகில் இல்லாவிடில், பழந் தமிழ்நூல் படித்திட முடியாதென்ற நிலையிருந்தபோது பசுமரத்தாணிபோல் நெஞ்சத்தில், பாய்ந்து பதியும் கருத்துக்களை எளிய தமிழ்ச் சொற்களால் பாடிக்காட்டி அவ்விதமே தமிழகத்தைப் பழக்கிய பெருமை பாரதிக்கு உண்டு. கத்தியை உச்சிமட்டும் தூக்கிக் கர்ச்சனை புரியும் படைத் தளபதியின் கட்டளைக்குப் பணிந்து களம்செல்லும் வீரர்களைப்போல—பாரதியின் கவிதை மொழி கேட்டுப் பட்டாளத்து வீரரெல்லாம் தோற்றுப்போகும் பான்மையிலே பரங்கியரை எதிர்ப்பதற்கு அணி திரண்ட தமிழகத்துக் காட்சிதனை மறப்பதற்கு யாரால் முடியும்! எவரால் முடியும்!

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே—அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே"

நாட்டுப்பற்றும்—சுதந்திரக்கனலும் ஒவ்வொரு வரியிலும் ஒளிவிடுகிறதன்றோ; இந்தநாடு விடுபட்டே தீரும் என்ற கவிஞரின் தீர்க்க தரிசனம்.

"ஆடுவோமே—பள்ளுப் பாடுவோமே
ஆனந்த சுதந்திரம் அடைந்து விட்டோமென்று
ஆடுவோமே!"

என்ற நம்பிக்கை மிகுந்த சுதந்திரப் பள்ளாக அன்றே ஒலித்தது!

கனல் கொட்டி எழுதினர்—அனல் தெறிக்கப் பேசினர்—துள்ளிவரும் வேல்போல—ஆவேசத்தை அள்ளிவரும்

## ஆவேசத்தை அள்ளி வரும் வாள் போல

வாள்போல—சொல்லடுக்கிச் சூடேற்றிக் கவிதைகளைச் சுழல வைத்தார். அந்நியரின் தலை சுழல ஆட்டி வைத்தார்.

நெருப்புமிழும் நெஞ்சத்துடன் பகைவர்களை எதிர்த்த போதும், நெறியற்ற சொல் ஒன்றும் அவர் எழுத்தில் இருந்ததில்லை, பூண்டுவிட்ட விடுதலைப் போர்ச் கோலத்திலும பூவிதழாம் நல்ல தமிழ் எடுத்துப் 'பேரா முரசில் சூட்டிவிடப் பாரதி தவறியதில்லை.

எடுத்தேன் கவிழ்த்தேன் எனும் ஆணவ உரைகள் அண்டியதில்லை. இழிமொழிகள், அவர் எழுத்தேடுகளின் பக்கம் எட்டிப் பார்த்ததுமில்லை. கவிதைக் கனைகள் கிளம்பும்—அவை கண்யத்தோடு கிளம்பும்.

எதிரிகளைப் பண்படுத்தும் எழுத்து, புண்படுத்தும் எழுத்தல்ல பாரதியின் எழுத்து; தலையும் தொடையும் தெந்து விட்டால் தலைகீழ் நிற்கும் கவியுலகம் பாரதியின் காலத்தில் இல்லை.

பாரதியின் நோக்கு நிமிர்ந்த நோக்கு—உள்ளமோ அடக்கத்தின் கருவூலம், அவர் விழிகள் அம்பெனக் கூர் கட்டும்—ஆனால் அன்பினை மழைபோல் பொழியும். யார்க்கும் தலை தாழ்த்தா வணங்காமுடி. ஆயின் தமிழுக்கு—நல்ல தமிழர்க்குத் தென்டனிடும் தேன் தமிழன்.

பூமிக்கு எழுதுவது
புகழுக்கு எழுதுவது

என்ற நிலை மாற்றி நாட்டுப் போருக்கு எழுதிய கவிவீரன்!

## கவிதைகளைச் சுழல வைத்த பெருங் கவிஞன்

"ஏட்டையும் பெண்கள் தொடுவது தீமையென்
றெண்ணி இருந்தவர் மாய்ந்து விட்டார்
வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டி வைப்போமென்ற
விந்தைமனிதர் தலைகவிழ்ந்தார்."

இப்படிப் பெண்ணுரிமைக்காகப் புயல் வடிவம் கொள்கின்ற புலவன், இதோ தென்றல் வடிவம் தாங்கி வருகின்ற காட்சி காண்போம்:—

"சின்னஞ் சிறு கிளியே—கண்ணம்மா
செல்வக் களஞ்சியமே!
பிள்ளைக் கனியமுதே—கண்ணம்மா
பேசும்பொற் சித்திரமே"—

தென்றலென வந்த பாரதி, இதோ, சிந்து பாடும் அருவியாக;

யார் பாடினாலும்—அவர் எதைப் பாடினாலும்—பாரதி, விட்டதை அல்ல; தொட்டதைத் தானே பாடுகின்றார் என்ற நினைப்பு நமக்கு வராமல் இல்லை.

மறைந்த மாகவிக்கு நாம் செலுத்தும் மரியாதை அவர்தந்த கருத்துக்களை மறக்காமல்.. மறைக்காமல் இருப்பதுதான்!

அவர், சாதிகளைச் சாடினார்; நாம் அதனை முழுமையாக ஒழித்தோமா?

## எழுத்துக்கு எழுத்து எரிமலைக் கனலை உருவாக்கிய தமிழ்க் கவி வேந்தன்

"பாயும் ஒளி நீ எனக்கு
பார்க்கும் விழி நான் உனக்கு
தோயும் மது நீ எனக்கு
தும்பியடி நான் உனக்கு—
வீணையடி நீ எனக்கு
மேவும் விரல் நான் உனக்கு"

மேடையிலே வீசுகின்ற மெல்லிய பூங்காற்றாய், கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் வகை கிடைத்த குளிர் தருவாய், பாரதியின் இன்பக் கனவாய், இதோ ஒரு பாடல்......

"சிங்களத் தீவினுக்கோர்பாலம் அமைப்போம்—
சேதுவை மேடுறுத்தி வீதி சமைப்போம்.
வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால்
மையத்து நாடுகளில் பயிர் செய்வோம்.
சிந்துநதியின் மிசை நிலவினிலே
சேர நன்னாட்டிளம் பெண்களுடனே
சுந்தரத் தெலுங்கினில் பாட்டிசைத்துத்
தோணிகளோட்டி விளையாடி வருவோம்."

பாரதியின் வாரிசாம் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன்;

"பாரதியார் உலக கவி
அகத்தில் அன்பும்
பரந்துயர்ந்த அறிவினிலே ஒளியும் வாழ்ந்தோர்
ஒருவருக்கு ஒரு நாட்டுக்கு உரியதான
ஒட்டைச் சாண் நினைப்புடையார் அல்லர்."

என்று பாடி மகிழ்ந்தார்—தமிழரையும் மகிழ வைத்தார்,

அவர், வீர சுதந்திரம் வேண்டி நின்றார். பெற்றதைப் பேணிக் காத்திட நாம் நம்மைச் சரியாகத் தயார்படுத்திக் கொண்டோமா?

பெண்ணடிமை தீர்க என்று கூவினார்; முற்றிலும் தீர்த்தோமா?

"வெட்டுக்கனிகள் செய்து தங்கம் முதலாம்
வேறு பல பொருளும் குடைந்தெடுப்போம்"

என்றார்; இன்றும் அதில் குறைவைத்துள்ளோம்.

அவர் எண்ணியவைகளை யெல்லாம் நாம் செய்து விடப் போகிறோமா; அல்லது அவரே மீண்டும் எழுந்து வந்து நமக்கு உணர்த்தினால் தான் நாம் விழிப்போம் என்ற கருத்தில்;

பாரதி சென்ற திக்கு நோக்கி—

"ஒளிபடைத்த கண்ணினாய் வா வா வா
உறுதிகொண்ட நெஞ்சினாய் வா வா வா
களிபடைத்த மொழியினாய் வா வா வா
கடுமைகொண்ட தோளினாய் வா வா வா
தெளிவு பெற்ற மதியினாய் வா வா வா
சிறுமைகண்டு பொங்குவாய் வா வா வா"

என்று அவரை அழைக்கப் போகிறோமா? அழைப்பதற்கு முன்பு அவர் இதோ வந்து விட்டார்—அவர் கவிதைகளில் சிரிக்கிறார்—பாடல்களில் நடக்கிறார்—எழுத்துக்களில் நிற்கிறார்—எண்ணங்களில் நிறைகிறார்.

அந்த மாவீரர் முன்னிலையில்
மனிதனை மனிதன் மதித்திடக்
கற்றுக்கொள்வோம்—

## அறிவே தெய்வமென்று ஆர்த்தெழுந்த அண்ணல்

"சீன மிசிரம் யவனரகம்—இன்னும்
தேசம் பலவும் புகழ்வீசிக்—கலை
ஞானம் படைத் தொழில் வாணிபமும்—மிக
நன்று வளர்ந்த தமிழ்நாடு—"

பாரதி இனிக்க இனிக்கப் பாடிய தமிழ்நாடு.. இன்று இந்த மண்ணுக்குரிய பெயராய்.. மாநிலத்தின் புகழ் செறுக்கித் திகழ்கின்ற காட்சி கண்டுகளிக்கின்றோம்—பாரதியை வாழ்த்துகின்றோம்.

அரசியல் பண்பு போற்றுவோம்—
ஜனநாயக மரபு காத்திடுவோம்—
அவர் தொட்டபணி தொடர்வோம்;

நலிவற்ற நாடு—வலிவற்ற—மக்கள்—தாழ்வற்ற இனம்—வாழ்வுற்ற மொழி—இந்தக் குறிக்கோள் வென்றிட பாரதி நாளில் உறுதி மேற்கொள்வோம்.

வாழ்க பாரதியின் புகழ்! வாழ்க!!

[வானொலிப் பேச்சு (11—9—67)]



[இந்திய அரசின் சுகாதாரம்—குடும்பக் கட்டுப்பாடு அமைச்சகத்தின் சார்பில் "நகராட்சி நிர்வாகம் பற்றிய கருத்தரங்கும்" (Seminar on Local Administration) உள்ளாட்சித் துறை அனைத்திந்திய மையமன்றத்தின் (Central Council of Local Self Government) 12-வது மாநாடும், சென்னை இராஜாஜி மண்டபத்தில் 1967 டிசம்பர் 8-ம் தேதி முதல் 11-ம் தேதிவரை நடைபெற்றன. உள்ளாட்சித் துறையின் அனைத்திந்திய மையமன்றத்தின் 12-வது கூட்டத்தை இந்திய அரசின் சுகாதார அமைச்சர் திரு. சத்தியநாராயண் சின்கா துவக்கி வைத்தார். தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் சிறப்புரை ஆற்றினார். தமிழக அரசின் உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு மா. முத்துசாமி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். நகராட்சி நிர்வாகம் பற்றிய முக்கியமான தீர்மானங்கள் மாநாட்டில் நிறைவேற்றப்பட்டன.

கடலூர் நகராட்சி மன்றத் தலைவர் திரு வி. தங்கராஜ் முதலியார் அவர்களும், கும்பகோணம் நகராட்சி மன்றத் தலைவர் திரு என். காசிராமன் அவர்களும் மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு இராஜாஜி மண்டபத்தில் பகல் விருந்தளித்தனர். பிரதிநிதிகளில் ஒரு சிலர் காஞ்சிபுரம் சென்ற பொழுது, நகராட்சி மன்றத் தலைவர் திரு ஏ. கே. தங்கவேல் முதலியார் அவர்களை, வரவேற்று தேனீர் விருந்தளித்தார்.

நகராட்சி நிர்வாகம் பற்றிய கருத்தரங்கில் தமிழக அரசின் உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு மா. முத்துசாமி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். நகராட்சி, ஊராட்சி சம்பந்தப்பட்ட அனைவருக்குமே பெரிதும் பயன் அளிக்கக்கூடிய அவருடைய பேருரையின் முழுவடிவத்தை அப்படியே கீழே பிரசுரித்துள்ளோம்.

—ஆசிரியர்]

"இக்கருத்தரங்களில் கலந்து கொள்ள வருகை தந்துள்ள மத்திய அரசு மற்றும் பல்வேறு மாநில அரசுகளின் மதிப்பிற்குரிய பிரதிநிதிகளை வருக வருக என வரவேற்பதில் நான் பேருவகையடைகிறேன். நகராட்சி நிறுவனங்களின் நிர்வாகம் பற்றி ஒரு கருத்தரங்கினை ஏற்பாடு செய்திருப்பது மகிழ்ச்சிக்குரியது மட்டுமன்றி, தேவையானதும் பயன் தரக்கூடிய செயலுமாகும். "வாய்ப்புகளில் பொதுமை - சாதனைகளில் மேன்மை" என்ற கொள்கையை நிர்வாகம் குறிப்பிட்ட சில இலட்சியங்களையும் நோக்கங்களையும் அடிப்படையாகக் கொண்டு, நூறு ஆண்டுகளுக்கு முன்பாகத் தொடங்கி, செயல்பட்டு வருகிறது. மக்களுக்கு கல்வி வளர்ச்சி, சாலை வசதி, பொது சுகாதாரம், மற்ற பலவசதிகள் போன்ற வேலைகளை நகராட்சி நிர்வாகங்கள் ஏற்று நடத்த வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில் நகராட்சிகள் செயல்படத் தொடங்கின. ஆரம்ப காலத்தில் காவல்துறையின் அலுவல்களும் நகராட்சிகள் வசம் ஒப்படைக்கப் பட்டிருந்தன. ஆனால் சில ஆண்டுகளுக்குப் பிறகு இந்தப் பொறுப்பானது நகராட்சிகளிட

# ...நகராட்சி நிறுவனங்களின் வருவாயினைப் பெருக்க வழிவகை செய்யவேண்டும்...

மிருந்து எடுபட்டுவிட்டது. அந்தப் பொறுப்பு அவைகளிடமிருந்து எடுக்கப்பட்டதை, புத்திசாலித்தனமான செயலாகவே கருதலாம். சில பகுதிகளில் நகராட்சிகள் தங்களுடைய பொறுப்புக்களில் சிலவற்றை நிறைவேற்ற முடியாமல், சமுதாயத்தின் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலாத நிலையில் இயங்கி வந்துள்ளன. ஆகவே நகராட்சி மன்றங்கள், எந்த நோக்கங்களுக்காக முதலில் அமைக்கப்பட்டனவோ அந்த நோக்கங்களை எந்த அளவிற்கு அவை நிறைவேற்றி வந்துள்ளன என்பதைப் பற்றி மதிப்பீடு செய்ய அருமையானதொரு வாய்ப்பு நமக்கு இக்கருத்தரங்கின் மூலம் கிடைத்துள்ளது.

அமெரிக்க அறிஞர் ஜெபர்சன் கனவு கண்டபொழுது, உள்ளாட்சியைப் பற்றியும் சிந்தித்திருக்க வேண்டும் என்று, நான் திண்ணமாக நம்புகிறேன்.

### கனிந்த அனுபவம் பெற்றுள்ள தமிழகம்

தமிழகத்திலே நகராட்சி நிர்வாகம் 100 ஆண்டுகளுக்கு மேலாக நடைபெற்று, அத்துறையில் கனிந்த அனுபவத்தைத் தமிழகம் பெற்றிருக்கிறது. மற்ற மாநிலங்களுக்கும் இத்தகைய அனுபவங்கள் நிச்சயமாக ஏற்பட்டிருக்கும். ஆகவே, நாம் ஒருவருக்கொருவர் கூடிக் கலந்து பேசி நகராட்சி நிர்வாகம் பற்றிய கருத்துக்களைப் பரிமாறிக் கொள்பவர்களாக இருக்கிறோம். நகராட்சி

பல நகராட்சி மன்றங்கள், பல்வேறு இடர்ப்பாடுகள், வசதிக் குறைவுகளுக்கிடையே

தங்களது பணியை ஆற்றி வந்துள்ளன. நகராட்சி மன்றங்களுக்கு உள்ள இடர்ப்பாடுகள், வசதிக் குறைவுகள் என்னென்ன என்பது பற்றி நாம் கவனத்துடனும் அக்கறையுடனும் பரிசீலனை செய்து, அவைகளைப் போக்குவதற்கு ஏதாவது செய்ய முடியுமா என்பதுபற்றி சிந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

### அறிவுசால் பெரியோர்களின் அரிய தொண்டு

நகராட்சி நிர்வாகம் மிகச்சிறந்த நிர்வாகத் திறமை படைத்த பெரும் தலைவர்கள் பலரை இம்மாநிலத்தில் தோற்றுவித்துள்ளது. நகராட்சி மன்றத் தலைவர்கள் என்ற வரிசையில், கோவைகளைப்பற்றி குறிப்பிடாமல் இருக்க முடியாது. அவர் இக்கருத்தரங்கில் தமிழகக் குழுவில் ஒரு பிரதிநிதியாகவும் உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இப்படிப்பட்ட திறமையாளர்கள் பலரை நகராட்சி நிர்வாகத் துறையிலே நாம் பெற்றிருப்பது, உண்மையிலேயே நமக்குக் கிடைத்த அரியதொரு வாய்ப்பாகும். நகராட்சித் துறையில் அவர்கள் காட்டிய தீவிர ஆர்வமும், சலியாத உழைப்புமே இந்த மாநிலத்தில் எல்லா இடங்களிலும் நல்லதொரு, நிலையான நகராட்சி நிர்வாகம் நடைபெறுவதற்கு உறுதுணையாக அமைந்திருந்தன என்பது வெள்

## நகராட்சி நிர்வாகம்—அகில இந்தியக் கருத்தரங்கு

திரு இரத்தினசபாபதி முதலியார், செங்கற்பட்டு திரு வேதாசல முதலியார், பாளையங்கோட்டை திரு டேனியல் தாமஸ், திருச்சிராப்பள்ளி திரு பி. ரத்தினவேலுத் தேவர், மற்றும் அவர்களைப்போலவே புகழ்பெற்ற, திறமை வாய்ந்த தலைவர்கள் பலருடைய பெயர்களையும், அத்தலைவர்கள் நகராட்சித் துறையில் ஆற்றியுள்ள பெரும் பணிகளையும் நாம் மறப்பதிற்கில்லை. மதிப்பிற்குரிய இராஜாஜி அவர்கள் சேலம் நகராட்சியின் தலைவராகத்தான் தமது அரசியல் வாழ்க்கையை ஆரம்பித்தார் என்பதை இச் சந்தர்ப்பத்திலே குறிப்பிட்டுக் காட்ட விழைகிறேன். நாம் கூடியிருக்கும் இந்நாள், மதிப்பிற்குரிய இராஜாஜி அவர்களின் பிறந்தநாள். அவருக்கு, இங்கு குழுமியுள்ள நம் அனைவரின் சார்பாக, பிறந்த நாள் வாழ்த்துக்களை, மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்ளுகிறேன். இங்கே, சென்னையிலே மாநகராட்சியின் தலைவராகத் திகழ்ந்த 'வெள்ளுடை வேந்தர்' சர். பி. தியாகராஜ செட்டியாரை யாரால் மறக்க முடியும்? இந்தச் சந்தர்ப்பத்திலே நான் இன்னொரு கருத்தையும் உங்கள் கவனத்துக்குக் கொண்டுவர ஆசைப்படுகிறேன். நகராட்சி மன்றத் தலைவர்கள் பலர், தமிழகத்திலே சட்ட மன்ற உறுப்பினர்களாகத் திகழ்கிறார்கள். வேலூரைச் சேர்ந்த திரு எம். பி. சாரதி, ஆரணி திரு நரசிம்மன், ளிடை மலை. மேலே சொல்லப்பட்டவர்கள் போல, மேலும் பலரை நகராட்சி மன்றங்கள் நமக்கு அளித்துள்ளன. இத்துறையில் அவர்கள் ஆற்றிய பணியின் காரணமாக, தங்களுடைய வாழ்க்கையின் பிற்பகுதியில் மாநில அரசில் மதிப்பும் பொறுப்பும் வாய்ந்த பதவிகளை ஏற்று பணி புரியும் வாய்ப்பு அவர்களுக்குக் கிட்டியது. இப்படிப்பட்ட திறமைவாய்ந்த அறிவுசால் பெரியோர்களின் இலட்சிய வாழ்க்கைகளைப் பற்றி நினைக்கும்போது, நமக்கு புறநானூற்றில் உள்ள

"உண்டால் அம்ம இவ்வுலகம்......
.........................
நமக்கென முயலா நோன்றாள்
பிறர்கென முயலுநர் உண்மையானே"

என்ற வரிகள்தான் நினைவுக்கு வருகின்றன.

### தேவைகளைப் பூர்த்தி செய்ய முடியாத வசதிக் குறைவான நிலை

சமீப காலத்தில், நகராட்சி நிர்வாகத்தில் புதியதொரு தோற்றமும் மாற்றமும் ஏற்பட்டுள்ளது. கடந்த ஐம்பது அறுபது ஆண்டுகளில் நகரங்களிடையே மக்கள் தொகைப் பெருக்கமானது மிகவும் தீவிரமாக அல்லாமல் மெதுவாகவே இருந்து வந்தது. ஆனால்,

## மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் சிறப்புரை

இராஜபாளையம் திரு சுப்பராஜா, கும்பகோணம் திரு காசிராமன், திருப்பத்தூர் திரு சின்னராஜு கவுண்டர், அருப்புக்கோட்டை திரு சுந்தரபாரதி ஆகிய நகராட்சி மன்றத் தலைவர்களும், சென்னை மாநகராட்சியின் மேயர் திரு ஹபிபுல்லா பெய்கும், சட்ட மன்ற உறுப்பினர்களாகவும் திகழ்வதைக் காண்கிறோம். தமிழக அரசின் பொது சுகாதாரத்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. சாதிக் பாட்சா அவர்கள் உடுமலைப்பேட்டை நகராட்சி மன்றத் தலைவராக இருந்தவர். இறுதியாக, ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி மன்றத்துடன் கடந்த 40 ஆண்டுகளாகத் தொடர்புகொண்டு பணியாற்றிய திரு. சிவகாமிநாதபிள்ளை அவர்

தொழில் துறையிலே அண்மையிலே ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தின் காரணமாக, நகர்ப்புறங்களிலே மக்கள் தொகையானது வெகு வேகமாகப் பெருகிக் கொண்டே வருகிறது. இப்படி நகர்ப்புறங்களிலே மக்கள் அதிகமாக வந்து குவியத் தொடங்கியதால், பல்வேறு சிக்கலான பிரச்சனைகளை நகராட்சி மன்றங்கள் சமாளிக்க வேண்டியுள்ளது. இப்படிப்பட்ட வளர்ச்சி நாட்டிலே ஏற்படும்போதெல்லாம், நம்முடைய தேவைகளைப் பூர்த்தி செய்கின்ற அளவுக்கு இல்லாமல் வசதிகள் மிகக்குறைவாக இருக்கின்ற ஒருநிலை, நமக்கெல்லாம் வருத்

(30-ம் பக்கம் பார்க்கவும்)





# ஊருக்கு உழைக்கும் உத்தமர் அணி

[திரு வ. இராசமனோகரன், எம்.ஏ.]

"கொளுத்தும் வெயிலில் தலைச் சுமையைச் சுமந்து கொண்டு நடந்து செல்லும் மூதாட்டி ஒருத்தி வழியில் இளைப்பாற நினைக்கிறாள். சுமையை இறக்கி வைத்திட உதவிக் கரத்தை எதிர் பார்த்து, 'யாராவது வருகிறார்களா' என்று திரும்பிப் பார்க்கிறாள். பள்ளி மாணவன் ஒருவன் சைக்கிளில் வருகிறான். "தம்பி, இந்தச் சுமையைச் சிறிது இறக்கி வையப்பா" என்று உதவி கேட்கிறாள். பையனும் சைக்கிளிலிருந்து இறங்கி, உடனே சுமையை இறக்கிட உதவுகிறான். மூதாட்டி மனமார வாழ்த்துகிறாள். வாழ்த்தினைப் பெற்ற மகிழ்ச்சியோடு சிறுவன் சைக்கிளில் ஏறிப் பறக்கிறான்.

அன்றாட வாழ்வில் நாம் காணும் நிகழ்ச்சி இது. வழியில் உதவி நாடிய மூதாட்டிக்கு உதவியளித்ததால் சிறுவனுக்குக்கிடைத்த மன நிறைவு மகத்தானது. எங்கே, யாருக்கு, எப்படி உதவலாம் என்று ஒவ்வொருவரும் கருத்துடன் இருந்தால், அனைவருக்கும் அத்தகைய மனநிறைவு எளிதில் கிட்டும்.

ஒருவன் தனக்காக என்றில்லாமல், பிறருக்காக, நாட்டிற்காக வாழ்வது தான் உண்மையான வாழ்க்கையாகும். அதனால்தான் தமக்குள்ள அறிவை, ஆற்றலை சமுதாய நலனுக்காகப் பயன்படுத்த முன்வரும் தொண்டுள்ளம் படைத்தோரை உயர் சான்றோர் அணி திரட்டினர்; ஆக்கப் பணிகளில் ஈடுபடுத்தினர். மொழி, இனம், நாடு ஆகிய வேறுபாடுகளைக் கடந்து, உலக சமுதாயத்திற்கே உழைத்திடும் பண்பாட்டை அவர்களுக்கு ஊட்டி வளர்த்தனர்.

### மக்கள் சமுதாயம் மாண்புற ஆற்றிடும் பெரும் பணி

தொண்டு மனப்பான்மையைப் பேணி வளர்ப்பதன்மூலம் உலக சமாதானத்திற்கும் வழி காணலாம் என்ற கருத்தை அமெரிக்க நாட்டுத் தத்துவப் பேரறிஞர் வில்லியம் ஜேம்ஸ் 1904-ம் ஆண்டில் போஸ்டனில் நடைபெற்ற உலகச் சமாதான மாநாட்டில் தெரிவித்தார்.

"போரை அறவே அகற்றி விடுவதென்பது இயலாது. உலகச் சமாதானம் என்றெல்லாம் வெறுமனே பேசிக் கொண்டிருப்பது காலத்தை வீண் செய்வதாகும். போரும் இராணுவமும் என்றும் இருப்பவை. ஆனால் போர் ஏற்படாமல் தடுப்பதற்கான மாற்று மருந்தாக, மக்களுக்குள்ள போர்க் குணத்தை, ஆற்றலை, வேறு துறைகளில் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய அமைப்பை நாம் காணவேண்டும். வறுமையை, அறியாமையை, நோயை எதிர்த்துப் போரிடக் கூடிய சேனையை நாம் உருவாக்கவேண்டும்" என்றார் அவர். இந்த அடிப்படையில் தான் அமெரிக்க நாட்டுக் கிறித்துவ சமய அமைப்புகள் தொண்டர்களைப் பின்தங்கிய நாடு

ஆர்வமே முரசாய், பண்பாட்டே கவசமாய், அறிவே படைக்கலனாய், அறநெறியே வழித்துணையாய்க் கொண்டு, பாட்டு மொழியுடைய நமது தாயகம் வாழ உறுதியுடனும் ஊக்கத்துடனும் சமுதாயப் பணிபுரியும் தொண்டர் திருக்கூட்டம் அருவியோட்டம் போல தொடர்ந்து இருந்து கொண்டே வந்துள்ளது, நம் தமிழகத்தில். 'யான் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்", "மக்கள் பணியே மகேசுவரன் பணி" என்ற அடிப்படை உண்மைகள், ஆயிரமாயிரம் ஆண்டுகளாக தமிழர் தம் வாழ்வின் நெறிமுறைக் கோட்பாடுகளாக இருந்து வருகின்றன. சமுதாயப் பணி என்ற அந்த நீண்டு நெடுங்கதையிலே—முக்கியமான அத்தியாயம், இன்றையத் தமிழகத்திலே எழுதப்பட்டு வருகிறது. அதுதான் "அண்ணா கண்ட சேனை."

களுக்கு அனுப்பி, கல்விப் பணியிலும் பொதுப் பணியிலும் ஈடுபடுத்தின. 1953-ம் ஆண்டில் தோற்றுவிக்கப் பட்ட உலகப் பொதுப் பணிக் கழகத்தின் சார்பில் (International Voluntary Services) எகிப்து, ஜோர்டான், ஈராக், வியட்னம், நேபாளம், கம்போடியா, காங்கோ போன்ற நாடுகளுக்கெல்லாம் தொண்டர்கள் சென்று, அங்கெல்லாம் உழவும் தொழிலும் செழிக்க உதவினர்.

அமெரிக்க நாட்டு அதிபராகக் கீர்த்தி பெற்ற கென்னடியின் நல்லாசியுடன் 1961-ல் சமாதானச் சேனை பிறந்தது. சமாதானச் சேனையைத் துவக்கி வைக்கும்போது கென்னடி "உங்களுக்காக நாடு என்ன செய்யும் என்று கேட்காதீர்கள். நாட்டிற்காக நீங்கள் என்ன செய்வீர்கள் என்று உங்களையே கேட்டுக்கொள்ளுங்கள்" என்று குறிப்பிட்டார்.

கென்னடியின் நல்லுரையை ஏற்ற பல்லாயிரக்கணக்கான தொண்டர்கள், உதவி கேட்கும் நாடுகளில் கல்வி, வேளாண்மை, மருத்துவம், சமுதாய அபிவிருத்தி போன்ற துறைகளில் ஆக்கப் பணிகளை ஆற்றி வருகின்றனர்.

இங்கிலாந்து நாட்டில் 1958-ம் ஆண்டில் அலெக் டிக்சன் என்பவரால் நிறுவப்பட்ட பொதுத் தொண்டர் கழகம் (Voluntary Service Overseas) தொடர்ந்து அரும்பணி ஆற்றிவருகிறது.

**சின்னஞ் சிறு பிஞ்சு உள்ளத்தின் தொண்டார்வம்**

ஏழு ஆண்டுகளுக்கு முன்பு, இக் கழகத்தின் சார்பில் பொதுத் தொண்டாற்றச் சென்ற கோலின் என்பிரே எனும் ஆங்கிலேய மாணவனின் சாதனை குறிப்பிடத்தக்கது. அவனுக்கு வயது பதினெட்டு. சொந்த ஊர் ஹேம்ப்சயர். அங்கிருந்து அவன் ஓரியல்லா எனும் குக்கிராமத்திற்குச் செல்கிறான். அந்தக் குக்கிராமத்தின் மக்கள்தொகை ஆயிரம்தான். அது ஒரு தனிக்காடு. அந்த கிராமத்திற்கும், பக்கத்து ஊர்களுக்கு இணைப்பு ஏற்படுத்தக் கூடிய சாலை வசதிகள் கிடையாது.

அத்தகைய ஊரிலே என்பிரே மக்களோடு நெருங்கிப் பழகி, அவர்களின் நல்லெண்ணத்தைப் பெற்று, முன்னேற்றப் பணிகளில் ஈடுபட்டான். ஒரே ஆண்டில், அந்தக் கிராமம் பெற்ற வளர்ச்சி மகத்தானது. அங்கு கிராம ஆட்சி மன்றம் மீண்டும் உருவாக்கப்பட்டது. புது வீடுகள் கட்டப்பட்டன. சாலைகள் அமைக்கப் பட்டன. கிராமத் தொழில்கள் புத்துயிர் பெற்றன. எல்லாவற்றிற்கும் மேலாக என்பிரேயின் ஆலோசனைப் படி. நூற்றுக்கு மேற்பட்ட ஆடவரும் பெண்டிரும் சிறுவரும் அணிதிரண்டு, ஓரியல்லா ஆற்றில் நீர்த்துறை ஒன்றைத் தாங்களாகவே கட்டி முடித்தனர். அதனால் பக்கத்து ஊர்களிலிருந்து படகுகள் வந்து செல்ல வசதி ஏற்பட்டது. படகுகள் மூலம் பத்திரிகைகள் வந்தன. மருந்துகள் போன்ற பண்டங்கள் வந்தன. பக்கத்து ஊர்களோடு தொடர்பு கொள்ள வழி பிறந்தது. கிராம மக்களிடம் மறைந்திருந்த ஆற்றலை வெளிப் படுத்தி, அவர்களைக் கொண்டே அந்த ஊரை முன்னேற்றப் பாதையில் அழைத்துச்சென்ற என்பிரேயை அந்த ஊர் மக்கள் எப்படி மறப்பர்?

தொண்டின் பெருமையைப் பாரறியச் செய்யும் இத்தகைய நன்னெறிக் கழகங்கள் அமெரிக்கா, இங்கிலாந்தில் மட்டுமல்லாமல் இஸ்ரேல், இத்தாலி, நெதர்லாந்து, சுவிட்ஜர்லாந்து, மேற்கு ஜெர்மனி போன்ற நாடுகளிலும் நற்பணி ஆற்றி வருகின்றன.

தொண்டர் கழகங்கள் உலக நாடுகளிலெல்லாம் அமைந்திருப்பது போலவே, 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற மணிவாசகத்தை உலகுக்குத் தந்த நம் செந்தமிழ் நாட்டிலும், "ஊருக்கு உழைக்கும் உத்தமர் அணியை" உருவாக்கிட வேண்டும் என்று நம் தமிழக முதல்வர் ஆசைப்பட்டார்.

**ஒரு மணி நேரம் பொதுத் தொண்டிற்கு..**

"நாட்டிலே ஒரு புது சமுதாய உணர்வை ஊக்குவிக்க, அரசு மேற்கொள்ளும் திட்டங்கள் மட்டும் போதா. அவற்றினை நிறைவேற்றுவதில் அதிகாரிகள் காட்டும் திறமையும் அக்கறையும் மட்டும் போதாது. சமூகம் முழுவதும் எழுச்சி பெற்று, ஒவ்வொருவரும் தமது பங்கினைச் செலுத்தி, புது நிலையினை உருவாக்க வேண்டும் என்ற ஆர்வம் கொள்ள வேண்டும். தமது உழைப்பினை மனமுவந்து ஈந்திட பலப்பல ஆயிரவர் முன் வந்திடின், சமூகம் பெற்றிடக் கூடிய பயன், பெருமை தரத்தக்கதாக அமையும். 'எனக்காகவும், என் குடும்பத்துக்காகவும் செலவிட்டது போக, மிஞ்சியதில் ஒரு மணி நேரமாகிலும், நாட்டின் பொது நன்மைக்காகச் செலவிடுவேன்' என்று உறுதி கொண்ட சில ஆயிரவர் நமது உழைப்புச் செல்வத்தைத் தந்திடின் சமூக மேம்பாடு வளர்ந்திடுவது உறுதி. இந்த ஆர்வம் கொண்டோர் பல்லாயிரவர் உளர் என்ற நம்பிக்கையுடன், துவக்க கட்டமாக, மாவட்டத்துக்கு ஆயிரம் பேர் கொண்ட ஒரு சேவையை அமைத்திடும் திட்டத்தை மேற்கொள்ள அரசு முடிவு செய்திருக்கிறது" என்று தமிழகச் சட்டப் பேரவையில் சென்ற ஜூன் திங்களில் மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் அறிவித்தார்கள். அது கேட்ட ஆயிரமாயிரம் இளைஞர்கள் புத்துணர்ச்சியும் புதுப் பொலிவும் பெற்று, அண்ணாவின் அன்புக் கட்டளையை ஏற்று, ஊர் மெச்சிட உலகம் போற்றிடப் பணி செய்யத் தயாரானார்கள்.

செந்தமிழர் அணியாம் சேவையை ஆகஸ்ட் திங்கள் 16-ம் நாள் சென்னையில் அண்ணா துவக்கி வைத்தார். "அரசியல் கட்சி நோக்கத்திற்காகவோ வன்முறை, குழப்பத்தைத் தூண்டுவதற்காகவோ, சேவை அமைக்கப்படவில்லை. அதைச் சீனத்துச் செங்காவலர் படையுடன் ஒப்பிடுவது தவறானதாகும்" என்று தெளிவு படுத்தினார்.

சேவையின் தூய நோக்கத்தை, அன்று சந்தேகக் கண்கொண்டு பார்த்த சிலரும் ஐயம் தெளிந்து மனநிறைவு பெறும் வகையில்

[34-ம் பக்கம் பார்க்க]



# தீர்வு தன்னிடமே..

**பீகார் மாநிலத்துள்ள பகல்பூரில் ஊராட்சி முறை 1964-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2-ம் நாள் ஏற்படுத்தப்பட்டது. வளர்ச்சிப் பணிகள் அனைத்தும் ஊராட்சிகளிடமே ஒப்படைக்கப் பட்டன. ஊராட்சி செயல்படத் துவங்கி மூன்றாண்டுகளாகிவிட்டதால், ஊராட்சியின் வளர்ச்சியை, அதன் பயனை அறிவதற்காக ஓர் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.**

வேளாண்மையே பெரும்பான்மையோரின் தொழிலாக இருப்பதால், அதில் ஏற்பட்டுள்ள மாற்றங்களுடன், வளர்ச்சிகளைக் கருத்தில் கொண்டு, ஊராட்சியைப் பற்றி ஓரளவு அறிய முடியுமல்லவா ?

இதையொட்டி, மூன்று ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள அதிகாரிகள், ஊராட்சித் தலைவர்களிடமிருந்து முதலில் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. வேளாண்மைத் திட்டங்களை ஒன்றியத் தலைவர்கள் உருவாக்குவதில்லை என்று 75 சதவீத அதிகாரிகள் கூறினார்கள். ஆனால் மக்களால் தேர்ந்தெடுக்கப் பட்ட ஊராட்சித் தலைவர்கள்தான், இத்திட்டங்களைத் தீட்டுகின்றனர் என்று 83·63 சதவீத தலைவர்கள் மாற்றுக் கருத்துத் தெரிவித்தனர். இவ்விதம் மாறுபட்ட கருத்திற்கு காரணம் என்னவாயிருக்க முடியும் என ஆராய்ந்ததில், இரு சாராருமே திட்டங்களின் நோக்கங்கள் பற்றி தெளிவாக புரிந்திருக்கவில்லை என்பது தெரிந்தது, செலவினங்களைக் காட்டியே திட்டங்களின் தன்மையைப் பற்றி தலைவர்கள் கூறினர்.

**பிறர் மீது தான் குற்றம்**

வேளாண்மைத் திட்டங்களில் அடங்கிய முக்கிய வேலைகளையும் அம்சங்களையும் பற்றி வினவியபோது, அதிகாரிகளும், தலைவர்களும் ஒருமனதாக சிலவற்றைக் கூறினர். விதைகள், உரங்கள், நவீன முறைகள், பயிர்ப் பாதுகாப்பு ஆகியவையே அவர்களின் கருத்தில் மிகச் சிறந்தனவையாகும். நீர்ப்பாசனத்திற்கு அளிக்கப்படவேண்டிய முக்கியத்துவம் போதிய அளவில் இல்லையென்பது இரு சாராரின் கருத்தேயாகும்.

ஊராட்சி ஒன்றியத்தில் தயாரிக்கப் படும் வேளாண்மைத் திட்டங்கள் எவ்வாறு நிறைவேற்றப்படுகின்றன என்ற வினாவிற்கு, அவை ஒழுங்காக செயற்படுத்தப்படுவதில்லை என்ற பதிலே பெரும்பான்மையோரிடமிருந்து கிடைத்தது. நிதிப் பற்றாக்குறை, ஊராட்சித் தலைவர்களின் ஒத்துழைப்பு இல்லாமை ஆகிய இரண்டுமே திட்டங்கள் சரிவர நிறைவேற்றப் படாததற்குரிய காரணங்கள் என்று அதிகாரிகள் கூறுகின்றனர். ஆனால் அதிகாரிகளிடையேயுள்ள உற்சாகமின்மை, தலைவர்களை சரிவர புரிந்துக் கொள்ளாதது, திட்டத்தின் பொருத்தமற்ற தன்மை போன்றவையே திட்டங்களின் தோல்விக்கு காரணங்கள் என ஊராட்சி தலைவர்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

**பாசனத்திற்கே முதலிடம்**

வேளாண்மையில் அடங்கியுள்ள பல்வேறு கூறுகளைப் பற்றியும், அவற்றில் ஊராட்சி ஒன்றியம் ஆற்றியுள்ள சாதனைகள் பற்றியும் கேள்விகள் கேட்கப்பட்டன. வேளாண்மைத் திட்டங்களை உருவாக்குதல், உழவர்களுக்குப் பயிற்சி அளித்தல், கடன் வசதி, விதைகள், நவீன கருவிகள், பூச்சி மருந்துகள், உரங்கள், பாசனம் போன்றவற்றில் எதற்கு முதலிடம் தரப்படவேண்டுமென்ற கேள்விக்கு இருபிரிவினரும் பாசனத்திற்கே முதலிடம் தந்தனர். பொதுவில், எல்லா பணிகளுமே எதிர்பார்த்த நிலையை எய்தவில்லை. விதைகள், உரங்கள், கடன்கள் அளித்தல் ஆகியவற்றில் ஓரளவு முன்னேற்றம் இருக்கிறது. முதன்மை இடம் தரப்பட்ட பாசனமோ, பின் தங்கிய நிலையில் இருக்கிறது.

அதிகாரிகள், ஊராட்சித் தலைவர்களிடையே நிலவும் ஒற்றுமை, ஒத்துழைப்பு பற்றி அடுத்து ஆய்வு செய்யப்பட்டது. எந்த ஒரு திட்டத்திற்கும் ஊராட்சித் தலைவர்களின் ஒத்துழைப்பு துவக்கத்தில் நல்ல முறையில் இருக்கிறதென்று அறிய முடிந்தது. திட்டத்தில் ஏற்படும் பல்வேறு பிரச்னைகளுக்கு தலைவர்கள் நல்ல முடிவு காண்கிறார்கள். ஆனால் திட்டம் நிறைவேற்றப்படுகையில் அதனை பார்வையிடுவதிலும், உழவர்களுக்கு பயிற்சி அளிப்பதிலும் தலைவர்களுக்கு அதிக ஈடுபாடு இல்லை. இந்தக் கூற்றை, தலைவர்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. திட்டத்தின் பல்வேறு நிலைகளிலும் தாங்கள் ஒத்துழைப்பதாகவும், உழவர்களுக்கு பயிற்சியளிப்பதாகவும் தலைவர்கள் பதிலுரைத்தனர்.

வட்டார நிலையில் ஊராட்சி முறை ஏற்பட்ட பிறகு, வேளாண்மைத் துறையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன என்பது உறுதி. இருப்பினும், அந்த வளர்ச்சி மேலும் பெருகவேண்டும். ஆனால் போதிய நிதி வசதி, அதிகாரிகள், தலைவர்களிடையே நல்லுறவு, நேசமனப்பான்மை ஆகியவை பெருமளவில் தேவைப்படுகின்றன. இவர்கள் ஒருசேர நின்று, கைகோத்து பணியாற்றினால்தான், நாடு உணவுத் துறையில் தன்னிறைவை அடைய முடியும்.

## வேளாண்மையை இயந்திரமயமாக்குதல்:

இந்திய வேளாண்மையை இயந்திரமயமாக்குவது மெதுவாகவே செயல்பட்டுவரினும், அது உறுதியாக நடைபெற வேண்டிய ஒரு செயலேயாகும். கூட்டுறவுப் பண்ணைகள், பெரிய பண்ணைகளில், இயந்திரங்களின் உதவியால் வேளாண்மை செய்தல், வேளாண்மையை இயந்திரமாக்கும் வழிக்கே இட்டுச் செல்கின்றன. இதன் வாயிலாக பண்ணை இயந்திரங்களின் தேவை பெருகி வருகிறது.




நாட்டிலுள்ள ஒவ்வொரு ஐந்து இயந்திரக் கலப்பைகளிலும் (டிராக்டர்கள்) ஐந்தாவது இயந்திரக் கலப்பை சோவியத் யூனியனில் தயாரிக்கப் பட்டதேயாகும். ஏற்கனவேயே நாட்டில் 15,000 இயந்திரக் கலப்பைகள் இருக்கின்றன. மேலும் இயந்திரக் கலப்பைகளை இறக்குமதி செய்வதற்குரிய முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இந்திய உழவர்கள், சோவியத் இயந்திரக் கலப்பைகளை பெரிதும் விரும்புகின்றனர்.

நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இறுதியில், இந்தியாவிற்கு ஒவ்வோராண்டும் 30,000 இயந்திரக் கலப்பைகள் தேவைப்படும் என்று மத்திய அரசு உணவு, வேளாண்மை அமைச்சர் மாநிலங்கள் அவையில் கூறியுள்ளார். குறைந்த குதிரை யோட்ட சக்தியுள்ள இயந்திரக் கலப்பைகளுக்கே பெரும் தேவையிருப்பதால், சோவியத் யூனியன், செக்கோஸ்லவேகியா நாடுகளிலிருந்து இவற்றைப் பெற மத்திய அரசு முயன்று வருகிறது என்று அவர் மேலும் கூறியுள்ளார்.

இறக்குமதி செய்யப்பட்ட இயந்திரக் கலப்பைகளை வினியோகிக்கும் பணி, 'ஸ்டேட் டிரேடிங் கார்ப்பரேஷ'னிடம் விடப்பட்டுள்ளது என்றும், இதனால் இலாபம் அடைவது தவிர்க்கப்படக்கூடும் என்றும் மத்திய உணவு, வேளாண்மை அமைச்சர் திரு. ஜகஜீவன்ராம் கூறியுள்ளார்.

### இயந்திரக் கலப்பைகளின் தேவை

சிறப்பாக குறைந்த குதிரை யோட்ட சக்தி யுள்ளவற்றின் தேவை பெருகியுள்ளது என்பது முதலமைச்சர்கள் மாநாட்டிலும் வலியுறுத்தப் பட்டுள்ளது. எனவே, இந்த ஆண்டில் 2,000 சிறிய இயந்திரக் கலப்பைகளை, ரூ. 2·5 கோடி செலவில் இறக்குமதி செய்ய மத்திய அரசு முடிவு செய்துள்ளது.

சோவியத் இயந்திரக் கலப்பைகள் ஏன் இவ்வளவு புகழுடன் விளங்குகின்றன என்பது தெரியவில்லை. ஆனால் அவை விலையில் மிகவும் குறைவானவை. அதே குதிரை ஓட்ட

—16-ம் பக்கம் பார்க்க



# உழைப்பால் உயர்ந்த வட்டாரம்

'நம் மக்கள் உழைப்பதற்கு சற்று தயங்குபவர்கள்' என்று எவரேனும் கூறினால், அவரைப்பற்றி நாம் என்ன எண்ண வேண்டியிருக்கிறது? நம்முடைய கிராமவாசிகளுக்கு, திட்டங்களைப் பற்றி எடுத்துக் கூறி, அதன் நன்மைகளை விளக்கி, நவீன, தீவிர வேளாண்மை முறைகளை தெளிவாக்கினால், அவர்கள் வெகு சீக்கிரம் அவற்றை புரிந்தும் கொண்டு, உற்பத்தியைப் பெருக்கக் காத்திருக்கின்றனர். கேரள மாநிலத்திலுள்ள பெரிந்தாள்மன்னு என்ற வட்டாரம் இதை நன்கு விளக்குகிறது.

## கிராமநிலங்களில்

பல துறைகளிலும் இவ்வட்டாரம் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருந்தது. 35 சதவீதம் மக்களே எழுத்தறிவு பெற்றவர்களாயிருந்தனர். வேளாண்மையே அவர்களது முக்கியத் தொழில். இஞ்சி, மிளகு, மர வள்ளிக்கிழங்குகளும் ஆங்காங்கே பயிர் செய்யப்பட்டன. இவற்றின் மூலம் கிடைக்கும் வருவாய், ஆண்டு முழுவதற்கும் போதுமானதாகஇல்லை. இதனால், அவர்கள் வேறு பல தொழில்களையும் நாடி செல்ல வேண்டியிருந்தது. அவர்களின் பொருளாதார நிலை சீரற்ற முறையிலிருந்தது.

### சில முக்கிய திட்டங்கள்

அவர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்து, உணவு உற்பத்தியைப் பெருக்க, வட்டாரம் ஒரு விரிவான திட்டத்தைத்தீட்டி செயல்படுத்த துவங்கியது. அவற்றில் சிலவற்றை இங்கே கூறலாம்:

பெரிந்தாள்மன்னு வட்டாரம் அனைத்தும் தீவிர விவசாயத் திட்டத்தில் கொண்டு வரப்பட்டுள்ளது. ஒவ்வொரு விவசாயியின் தேவைகளையும் கருத்தில் கொண்டு, ஒவ்வொருவருக்கும் தனித்தனியே திட்டங்கள் தயாரித்து அளிக்கப்படுகின்றன. நவீன விவசாய முறைகளை நன்கு அறிந்துகொண்டு விட்ட அவர்கள், 1,625 ஏக்கர்களில் 'தய்நான்-3' என்ற நெல்ரகத்தை பயிரிட்டுள்ளனர். தரிசாகக் கிடந்த ஏராளமான நிலங்களில் மரவள்ளிக் கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது. நவீன முறைகளின் படி இஞ்சி, மிளகு, வாழை மரங்கள் போன்றவை பயிரிடப்படுகின்றன.

இயந்திரங்களைப் பயன்படுத்தியும் விவசாயம் நடைபெறுகிறது. வாடகைக் கிரயத் திட்டத்தில், சென்ற ஆண்டு இரண்டு ரஷ்ய டிராக்டர்கள் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளன. இவ்வாண்டு ஐந்து டிராக்டர்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. வட்டார தலைமை யிடத்திலும் ஒரு டிராக்டர் இருக்கிறது. உரிய வாடகையைச் செலுத்தி, வட்டார டிராக்டரைக் கொண்டு சென்று, அவரவர்கள் நிலத்தை உழுதுக் கொள்ளலாம்.

### வாடகைக் கிரயத் திட்டம்

பயிர்ப் பாதுகாப்பு கருவிகள், பூச்சி மருந்துகள் பாதி விலையில் விற்கப் படுகின்றன. 11 சிறிய நீர்ப்பாசனத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 14 திட்டங்கள் செயல்படுத்தப்பட விருக்கின்றன. வெட்டத்தூர் ஊராட்சியிலுள்ள "பூங்காவனம் திட்டம்" முடிவுறும் போது, சுமார் 300 ஏக்கர்களுக்கு பாசன வசதி கிட்டும். வாடகைக் கிரயத் திட்டத்தில் 116 'பம்பு செட்டு'கள் அளிக்கப்பட்டுள்ளன.

கால்நடைகள், கோழிப்பண்ணைகளை விருத்திச் செய்வதற்காக, பெரிந்தாள் மன்னுவில் ஒரு கால்நடை தலைமை நிலையமும், தாழக்கோடில் ஒரு துணை நிலையமும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. கால்நடைகளுக்கும், கோழிகளுக்கும் இங்கே இலவசமாக சிகிச்சையளிக்கப் படுகின்றன. செயற்கை கருத்தரிப்பு நிலையம் ஒன்றும் வட்டாரத் தலைமை யிடத்தில் நன்குக செயல்பட்டு வருகிறது.

மிகவும், பின்தங்கிய நிலையிலிருந்த கூட்டுறவு இயக்கம், வட்டாரத்தின் முயற்சியால் முன்னுக்கு கொண்டு வரப்பட்டுள்ளது. தற்போது, 10 சேவைக் கூட்டுறவு வங்கிகள், ஒரு விற்பனை வங்கி, ஒரு கூட்டுறவு நகர வங்கி, ஒரு நில அடமான வங்கி ஆகியவை இருக்கின்றன.

ஓர் ஆதார சுகாதார நிலையமும் அதற்கு மூன்று துணை நிலையங்களும் துவக்கப்பட்டுள்ளன. மெலட்டூர் என்ற இடத்தில், 12 படுக்கை வசதி கொண்ட கட்டிடம் ஒன்று ரூ. 81,000 செலவில், ஆதார சுகாதார நிலையத்திற்காக கட்டப்பெற்று வருகிறது. ஒவ்வொரு துணை நிலையமும் ரூ. 11,500 மதிப்பில் கட்டப்பெறுகின்றன.

### மக்களின் ஒத்துழைப்பு

ஐந்து அரசினர் பள்ளிக்கும், ஐந்து உதவி பெறும் பள்ளிக்கும் கட்டிடங்

[அடுத்த பக்கம் பார்க்க]

சோவியத் இயந்திரக் கலப்பைகள் : [ 14-ம் பக்கம் தொடர்ச்சி ]

சக்தியுள்ள பிற இயந்திரக் கலப்பைகளுடன், சோவியத் கலப்பைகளை ஒப்பிடுகையில், அவை விலை மலிவுடன், பராமரிப்பு, உழைப்புச் செலவுகளும் குறைவே.

### கலப்பையின் எண்ணற்ற பணிகள்

பல்வேறு மண்களிலும், வெப்ப நிலைகளிலும் சோவியத் இயந்திரக் கலப்பைகள் சோதித்துப் பார்க்கப்பட்டன. அவற்றிலெல்லாம் இவற்றின் தரம் நன்கு வெளிப்பட்டது. அவற்றை இயக்கும் முறையும் மிக எளிது. அவற்றின் நீண்ட நாள் உழைப்பு, தரம், நுணுக்கம் போன்றவற்றிற்கு உலகிலுள்ள எல்லோரும் ஒருமுகமாக நல்ல எண்ணம் கொண்டுள்ளனர். சோவியத் இயந்திரக் கலப்பைகளை உழுதல், சமப்படுத்துதல், விதைத்தல், உரமிடுதல், நடுதல், அறுவடை செய்தல், போக்குவரத்து, பாசனம் போன்ற பல்வேறு வேலைகளுக்கு பயன்படுத்தலாம்.

சான்றாக, ஓர் உழவர் ' DT 14 ' என்ற இயந்திரக் கலப்பையை வாங்கலாம். இது "மக்களின் இயந்திரக் கலப்பை" என்று பொதுவாக அழைக்கப்படுகிறது. பலவித வயல்களில் காய்கறி, பழங்கள், விவசாயப் பண்ணை, திராட்சைப் பண்ணை, காட்டுப் பண்ணைகள் போன்ற பலவித தொழில்களுக்கு ஏற்ப, இந்த இயந்திரக் கலப்பைகளை திருத்தி அமைத்துக் கொள்ள முடியும். மேலும் இவற்றை எளிதாக திருப்பவும், முன்னும் பின்னும் எளிதாக செலுத்தவும் முடியும். குறைந்த அளவிலேயே எண்ணெயைச் செலவாகிறது.

அல்லது "பேலாரூஸ்—1966" என்ற இயந்திரக் கலப்பைகளை எடுத்துக்கொள்வோம். வேகமாகச் செலுத்தும் சக்தியையுடையது மட்டுமின்றி, உழுவது முதல் அறுவடை வரை எல்லா காரியங்களிலும், எல்லா பயிர்களுக்கும் இது பயன்படக்கூடியது. பெருமளவில் சுமைகளை இது இழுத்துச் செல்லக்கூடியது. பலவித கருவிகளில், 80 விதக் கருவிகளை இத்துடன் இணைத்து பல்வேறு வேளாண்மைச் செயல்களுக்கு இதைப் பயன்படுத்தலாம்.

### இந்த இயந்திரக் கலப்பைகளின் புகழுக்குக் காரணம்

'விலாடி மிரெஜ்' (டி.—40) என்பது மற்றொரு இயந்திரக் கலப்பை. இந்த டி. 40 என்ற கலப்பையானது வேகத்தில் இதையொத்த மற்ற கலப்பைகளை மிஞ்சிவிட்டது. வரிசையாக நடுவதற்கும் பல்வேறு பயிர்களை அறுவடை செய்வதற்கும் இது ஏற்றது.

காய்கறித் தோட்டங்கள், பழத் தோட்டங்கள், வர்த்தகப் பயிர் தோட்டங்கள் ஆகியவற்றிற்கு, டி—20 என்ற ஓர் இயந்திரக் கலப்பை உலகெங்கும் நற்பெயர் பெற்று வருகிறது. இது பருத்திப் பயிர்களுக்கும் சிறந்தது.

இந்திய உழவர்கள் இவற்றை விரும்பி வாங்குவதில் எவ்வித வியப்புமில்லை. அவற்றின் நீண்ட நாள் உழைப்பு பழுதடையாத் தன்மை, சிக்கனம், இயக்குவதில் எளிமை, செப்பனிடுவதற்கு வசதி ஆகியவையே இவற்றின் புகழுக்குரியனவாகும்.

## உழைப்பால் உயர்ந்த வட்டாரம்

[முன் பக்கத் தொடர்ச்சி]

கள் கட்டித் தரப்பட்டுள்ளன. கல்வித் திட்டங்களுக்கு வட்டாரம் முதலிடம் அளிக்கிறது.

எல்லா ஊராட்சிகளிலும் மகளிர் மன்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. சமுதாய நலக் கட்டிடம் ஒன்று செத்தல்லூரில் இருக்கிறது. பல்வேறு துறைகளில் விவசாயிகளை பழக்க, பயிற்சி முகாம்களுக்கும், ஆய்வு சுற்றுலாக்களுக்கும் அவ்வப்போது ஏற்பாடு செய்யப்படுகின்றன.

### வட்டாரம் சிறக்க அரும்பணி

போக்குவரத்து வசதிகள் இவ்வட்டாரத்தில் மிகவும் குறைவு. 31 கிலோ மீட்டர் நீளத்திற்கு மட்டுமே புதிய சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன.

மக்களின் முழுமையான ஒத்துழைப்பு, வட்டார வளர்ச்சிக் குழுவின் ஆதரவு, தீவிர முயற்சி ஆகியவையே இவ்வட்டாரம் சிறந்து விளங்குவதற்கு முக்கிய காரணங்களாகும். வட்டார வளர்ச்சிக் குழுவில் உள்ள உறுப்பினர்கள் அனைவரும், வட்டாரம் சிறக்க வேண்டுமென்பதற்காக அயராது உழைக்கின்றனர்.

— o —



ஆந்திர மாநிலத்தில் ;

## சாதனைகள் நிறைந்த ஊராட்சி ஒன்றியம்

**விசாகப்பட்டிணம் (ஆந்திர மாநிலம்) மாவட்டத்திலுள்ள சுப்பாவரம் ஊராட்சி சமிதியில் 75 கிராமங்கள், 115 குக்கிராமங்கள் இருக்கின்றன. சமிதியின் மொத்த பரப்பு 149·5 சதுர மைல்கள். சமிதியில் 8 மைல்களுக்கு தேசிய நெடுஞ்சாலைகளும் 33 மைல்களுக்கு மாநில நெடுஞ்சாலைகளும 86·1 மைல்களுக்கு சமிதியில் சாலைகளுமாக 127·1 மைல்களுக்கு நல்ல சாலைகள் அமைந்துள்ளன. மொத்த நிலப்பரப்பான 149·5 சதுர மைலில் 127·1 மைல் நீள சாலைகள் அமைந்திருப்பதிலிருந்து, இந்தச் சமிதியில் நல்ல போக்குவரத்து வசதிகள் இருப்பது தெளிவாகிறது. சமிதியின் கூட்டம் நடைபெறுவதற்கென ரூ. 30,000 செலவில் ஒரு பெரிய அறை கட்டப்பட்டு வருகிறது.**

தும்பாலா, ஜேபுரம், சின்னதிபுலா அக்ரஹாரம், சுட்பாவரம், பாவதா மற்றும் லகாபுரம் என்ற பெரிய, பெரிய கூட்டுறவுச் சங்கங்கள் 75 கிராமங்களின் கடன் தேவைகளையும் நிறைவேற்றி வருகின்றன. குறுகிய காலக் கடனாக ரூ. 13,05,308 அளிக்கப்பட்டுள்ளது. இந்த தொகையில் லகாபுரம் அளித்த கடன்கள் சேரவில்லை.

### காய்கறி பயிர்கள் ஏராளம்

இங்குள்ள 17,261 குடும்பங்களில் 13,125 உறுப்பினர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்க்கப்பட்டுவிட்டனர். "ஸ்ரீ வெங்கடேஸ்வரா காய்கறி, பச்சை மிளகாய் உற்பத்தி செய்வோர் கூட்டுறவு சங்க"த்தில் 233 உறுப்பினர்கள் இருக்கின்றனர். இது சென்ற ஆண்டு பதிவு செய்யப்பட்டது. இந்த சங்கத்தின் கண்காணிப்பில் 43 கிராமங்களிருக்கின்றன. அங்கு விளையும் பச்சை மிளகாய்களெல்லாம் சங்கத்தினால் கமிஷன் முறையில் வாங்கப்படுகின்றன.

1965–66-ம் ஆண்டில் ஒட்டுச்சோளப் பயிரும் 'தாய்ச்சுங் நேடிவ் 1' என்ற நெல் ரகமும் இங்கே கொண்டுவரப்பட்டன. 'தெய்நான்-3', 'செனுன் 2' ஆகிய மிகு விளைச்சல் தரும் நெல் ரகங்களும் சீக்கிரமே புகுத்தப்படவிருக்கின்றன. வரட்சிப் பகுதிகளில் வழங்குவதற்காக 2,976 மூட்டை நெல் விதைகளை சமிதி கொள்முதல் செய்துள்ளது. காய்கறிகள் 2,400 ஏக்கர்களில் பயிரிடப்படுகின்றன.

### கால்நடை வளர்ச்சி

தக்காவிக் கடன்கள் திட்டத்தில் 1965–66-ம் ஆண்டு, 10 ஆயில் என்ஜின்களும் ரூ. 30 000 கடன் தொகையும் வழங்கப்பட்டன. ஒரு டிராக்டரும், 2 மின்விசை டில்லர்களும் நில அடமான வங்கி வாயிலாக இச் சமிதிக்கு அளிக்கபபட்டுளளது.

பாசன, நல மீட்சி திட்டத்தின்கீழ் 38 உழவர்களுக்கு ரூ. 38,200 அளிக்கப்பட்டுள்ளது.

இந்த சமிதியில் இரண்டு கால்நடை மருந்தகங்களும், உதவித் தொகை பெறும் கோழிப்பண்ணைகளில் ஐந்தும் இருக்கின்றன. உள்ளூர் கால்நடைகளின் தரத்தை உயர்த்த மூன்று முர்ரா காளைகள், உழவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

சுட்பாவரம் சமிதியில் 118 துவக்கப் பள்ளிகளும், ஓர் உயர் துவக்கப் பள்ளியும், ஓர் ஆதார முதுநிலைப் பள்ளியும் இருக்கின்றன. மதிய உணவுத் திட்டம் செயல்பட்டு வருகிறது. பள்ளிக்கு வரும் மாணவர்களின் எண்ணிக்கை 5,407. இங்குள்ள 123 பள்ளிகளில் 46 பள்ளிகள் சமிதிக்குச் சொந்தமான கட்டிடங்களிலும், 17 வாடகைக் கட்டிடங்களிலும், எஞ்சியவை வாடகையில்லாத கொட்டகைகளிலுமிருக்கின்றன.

இங்கு 60 இளைஞர் மன்றங்கள் இருக்கின்றன. இம்மன்றங்கள், எல்லா வளர்ச்சிப் பணிகளிலும் பங்கு பெறுகின்றன.

### வரிப் பாக்கியே இல்லை

58 கிராம ஊராட்சிகளில் தும்பாலா என்ற ஒரே ஓர் ஊராட்சிதான் முதல் நிலை ஊராட்சியாகும். எஞ்சியவை இரண்டாம் நிலை ஊராட்சிகளாகும். எல்லா ஊராட்சிகளுமே, வரி பாக்கி ஏதேனுமின்றி முழுவதையும் வசூலித்துவிட்டன.

மகளிர் மன்றங்கள் ஊராட்சிகளில் செயல்படுகின்றன. 60 மகளிர் மன்றங்களில் 976 உறுப்பினர்களிருக்கின்றனர்.

"வளமான வாழ்வைக் காண்போமா ?" என்று ஏங்கி, எண்ணியிருந்த 75 ஊராட்சிகளுக்கு சுப்பாவரம் ஊராட்சி சமிதி ஒரு நல்ல வளர்ச்சியைப் பெற்றுத் தந்துள்ளது.

# கிராம வானொலி மன்றக் கருத்தரங்கு

கிராம வானொலி மன்றங்களின் 8-வது ஆண்டு கருத்தரங்கும், மாவட்டரீதியான சிறந்த வானொலி மன்றங்களுக்குப் பரிசளிப்பு விழாவும் 22-11-67-ல், திருச்சிராப்பள்ளி அகில இந்திய வானொலி நிலையத்தில் அமைந்த பந்தலில் நடைபெற்றது. மாண்புமிகு விவசாய அமைச்சர் திரு. அ. கோவிந்தசாமி அவர்கள் கருத்தரங்கில் கலந்துகொண்டு, முதன்மை பெற்ற வானொலி மன்றங்களுக்குப் பரிசுகளை வழங்கினார்கள். திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையில், திருச்சிராப்பள்ளி வானொலி நிலைய இயக்குநர் திரு. எம். எஸ். கோபால் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். மற்றும் இக்கருத்தரங்கில், கிராம வளர்ச்சி இயக்குநர், மக்கள் தொடர்பு அதிகாரி, தலைமை வானொலி அதிகாரி, கோட்டாட்சித் தலைவர்கள், மாவட்ட விவசாய அதிகாரிகள், பஞ்சாயத்து ஒன்றியங்களின் பெருந்தலைவர்கள், ஆணையர்களும் கலந்துகொண்டனர். மேலும், தமிழக சட்டமன்ற உறுப்பினர்களான திரு எம். எஸ். மணி, திரு கந்தசாமி, திரு பி. எஸ். முத்துச்செல்வன் முதலியவர்களும் கருத்தரங்கில் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

பரிசு பெற்ற 13 வானொலி மன்றங்களுக்கும் ஒவ்வொரு சுழற்கேடயமும், நற்சான்றிதழும், டிரான்சிஸ்டர் ரேடியோ செட்டும் பரிசாக வழங்கிய பின், விவசாயத்துறை அமைச்சரவர்கள் தனது உரையில் வானொலி பற்றிக் குறிப்பிடும்பொழுது,

"வானொலி ஒரு சாதாரண பொழுது போக்குக் கருவியாக மட்டுமல்லாமல், மக்களைப் பல துறையிலும் முன்னேறச் செய்யத்தக்க பல அரிய நிகழ்ச்சிகளையும் ஒலிபரப்பி வருகிறது. எந்த ஒரு காரியத்தை விளம்பரம் செய்ய வேண்டுமென்றாலும், அதை வானொலியினால் தீவிரமாகவும் துரிதமாகவும் செய்ய முடிகிறது. திட்டமிட்டவாறு விவசாயத்துறையில் நூதன முறைகளை விவசாயிகளுக்கு உடனுக்குடன் வழங்குவதற்காகவே அகில—இந்திய ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்ட 10 நிலையங்களில் தீவிர விவசாய ஒலிபரப்புத் திட்டம் "பண்ணையும் இல்லமும்" என்ற பெயரில் 1966-ம் ஆண்டு ஜூன் மாதம் 6-ம் தேதி முதல் இயங்கி வருகிறது. புரிந்து கொள்ள கடினமாக இருக்கும் கருத்துக்களையும் திறமையாக எடுத்துரைக்கும் பொழுது கேட்டறிந்துகொள்வது எளிதாகவே இருக்கிறது" என்றார்.

மேலும், ஒலிபரப்பப்படும் நிகழ்ச்சிகளைப் பற்றி அவர் கூறியதாவது:—

"ஒவ்வொரு நாளும் விவசாய சம்பந்தமான ஏதாவது ஒரு பேச்சு அல்லது விவாதம் நடைபெறும். கிராம வானொலி மன்றங்கள் அனுப்பும் கேள்விகளுக்கு வாரந்தோறும் செவ்வாய், வெள்ளிக்கிழமைகளில் பதில் கூறப்படுகின்றன. தவிர, இந்த நாட்களில் விவசாயம் சம்பந்தமான பொருள் பற்றி பல நிபுணர்களின் பேச்சும் ஒலிபரப்பப்படுகிறது. மாதத்தின் முதல் நாளில், அந்த மாதத்திற்கான சாகுபடி குறிப்புக்களும், முதல் புதன்கிழமைகளில் விவசாய அரங்கம் பற்றிய நிகழ்ச்சிகளும், இரண்டாம், நான்காம் புதன்கிழமைகளில் விவசாயச் செய்திச் சுருளும் உழவர் பெருமக்களின் மனதைக் கவர்ந்துள்ளன. திடீரென்று ஏற்படும் சீதோஷ்ண மாறுதல்களும் காலை ஒலிபரப்பில் சுமார் 4 நிமிடங்கள் முக்கிய அறிவிப்பாகக் கூறப்படுவது மிக்க பயனுள்ளதாகும்.

இன்றைய உணவுப் பிரச்னையைத் தீர்க்க நாம் முழுக்க முழுக்க கிராமங்களையே நம்பி இருக்கிறோம். ஆகவே நமது நாட்டின் முன்னேற்றமும், கிராமங்களின் முன்னேற்றத்தைப் பொறுத்துத்தான் இருக்கிறது. இத்திட்டம் சிறப்பாகச் செயல்படுவதற்கு, கிராம வானொலி மன்றங்கள் விவசாய வானொலி நிகழ்ச்சிகளை அதிக அளவில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். விவசாயத்தின் இன்றைய நிலையை உணர்ந்து, நாடு தன்னிறைவு பெறுவதற்கு, நாம் யாவரும் ஒற்றுமை மனப்பான்மையோடும், தியாக உணர்ச்சியோடும் உழைப்போமேயாகின் உலகம் போற்றும் ஒப்பற்ற சமுதாயத்தை உருவாக்குவோம் என்பதில் ஐயமில்லை" என்றார்.

திருச்சி மாவட்டம் மணச்சநல்லூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் திரு பி. வேலாயுதம் அரிய கருத்துக்களை எடுத்துரைத்தார்கள். சேலம் மாவட்டம் முத்துக்குட்டியூர் பெண்கள் வானொலி மன்றத்தின் சார்பாக பரிசுகளைப்

## சிறந்த கிராம வானொலி மன்றங்களுக்குப் பரிசளிப்பு

### மாவட்ட வாரியாக பரிசு பெற்ற கிராம வானொலி மன்றங்கள்

1. செங்கற்பட்டு மாவட்டம்—
   **குணகரம்பாக்கம் பெண்கள் வானொலி மன்றம்**
   ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம்
   முத்துலட்சுமி பாசு, முக்கிய சேவிகா

2. வட ஆர்க்காடு மாவட்டம்—
   **எஸ். வி. நகரம் வானொலி மன்றம்**
   ஆரணி ஊராட்சி ஒன்றியம்
   திரு கே. எம். வரதராஜன் முதலியார், தலைவர்
   திரு எஸ். பட்டாபிராமன், ஆணையர்

3. தென்னார்க்காடு மாவட்டம்—
   **கீழ்மாம்பட்டு மன்றம்**
   வல்லம் ஊராட்சி ஒன்றியம்
   திரு ஜி. முத்துசாமி ரெட்டியார், தலைவர்
   திரு ஏ. என். ரெங்கநாதன், ஆணையர்

4. தஞ்சாவூர் மாவட்டம்—
   **பாபுராஜபுரம் வானொலி மன்றம்**
   திரு வி. நாகராஜன், அமைப்பாளர்
   திரு ஆர். சின்னத்தம்பி, ஆணையர் (பொறுப்பு)

5. தர்மபுரி மாவட்டம்—
   **பெண்ணகரம் வானொலி மன்றம்**
   பெண்ணகரம் பஞ்சாயத்து யூனியன்
   திரு எம். வி. வெங்கட்ராம செட்டியார், அமைப்பாளர்
   திரு பி. காசிராஜன், ஆணையர்.

6. சேலம் மாவட்டம்—
   **முத்துக்குட்டியூர் பெண்கள் வானொலி மன்றம்**
   மகுடஞ்சாவடி ஊராட்சி ஒன்றியம்
   திரு எம். வெள்ளையன், தலைவர்
   திரு ஆர். காளிதாஸ், ஆணையர்.

7. திருச்சிராப்பள்ளி மாவட்டம்—
   **சேருகுடி வானொலி மன்றம்**
   தாத்தையங்கார் பேட்டை ஊராட்சி ஒன்றியம்,
   திரு எம். ராமச்சந்திரன், தலைவர்
   திரு எம். ஏ. ஐ. செல்லையா, ஆணையர்,

8. கோயம்புத்தூர் மாவட்டம்—
   **பெத்தாம்பாளையம் வானொலி மன்றம்**
   பெருந்துறை ஊராட்சி ஒன்றியம்,
   திரு பி. எஸ் குப்புசாமி கவுண்டர், தலைவர்,
   திரு எஸ். ரெங்கசாமி, ஆணையர்.

9. கன்னியாகுமரி மாவட்டம்—
   **அச்சங்குளம் வானொலி மன்றம்**
   அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியம்
   திரு எஸ். தாசன், அமைப்பாளர்
   திரு எஸ். டி. ஜெயபாலன்; ஆணையர்.

10. இராமநாதபுரம் மாவட்டம்—
    **பாண்டுக்குடி வானொலி மன்றம்**
    திருவாடானை ஊராட்சி ஒன்றியம்
    திரு எம் டி. எஸ். பிச்சை செட்டியார், அமைப்பாளர்
    திரு என். ஏ. அழகப்பன், ஆணையர்.

11. மதுரை மாவட்டம்—
    **திருமால்புரம் வானொலி மன்றம்**
    மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியம்
    திரு என். ஐயம்பெருமாள், தலைவர்
    திரு பி. பாண்டியன், ஆணையர்.

12. திருநெல்வேலி மாவட்டம்—
    **செட்டியூர் வானொலி மன்றம்**
    கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம்
    திரு அ. மணியரசு, அமைப்பாளர்
    திரு எல். கோவிந்தன், ஆணையர்

13. நீலகிரி மாவட்டம்—
    **தும்மணப்பட்டி வானொலி மன்றம்**
    உதகமண்டலம் ஊராட்சி ஒன்றியம்
    திரு ஜே. தாத்தன், அமைப்பாளர்
    திரு பி. கே. மாதன். ஆணையர்.

பெற்ற திரு வெள்ளையன் அவர்கள், "உற்பத்திப் பெருக்கத்திற்கு முக்கிய காரணமாக இருப்பது வானொலி என்பது ஒப்புக்கொள்ள வேண்டிய ஒன்று. ஏ.டி.டி. 27 உயர்ரக நெல்லைத் தமிழகமெங்கும் பரப்பிய பெருமை கிராம வானொலி மன்றங்களையே சார்ந்தது" என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

நீலகிரியிலிருந்து வந்திருந்த திரு ஜே. நாதன், கன்னியாகுமரி மாவட்டம் அகஸ்தீஸ்வரம் திரு பி. எஸ். தாசன், எம். ஏ., நாத்தய்யங்கார் பேட்டை திரு எஸ். செல்லையா, கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியம் செட்டியூர் வானொலி மன்றம் திரு ஆ. மணியரசு ஆகியோர்களும் கருத்தரங்கில் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்கள்.

கிராம வளர்ச்சித்துறை இயக்குநர் அவர்கள் தமது உரையில் கேள்விச் செல்வத்தின் சிறப்பை தெளிவாக எடுத்துரைத்தார்.

"கற்றலிற் கேட்டல் நன்று" என்பது ஆன்றோர் வாக்கு. எனவே திருக்குறளில் கல்வியை அடுத்துக் கேள்வி என்ற தலைப்புடன் பத்துக் குறள்களில் கேள்விச் செல்வத்தின் சிறப்பு விரிவாகக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம். அறிவு பெறுவதற்கான முக்கிய சாதனம் கல்வி மட்டுமல்ல, கேள்வியும் வேண்டும். கேள்விச் செல்வத்தை வளர்ப்பதில் நமது நாட்டு மக்கள் தனிக் கவனம் செலுத்தி வந்தார்கள். தமிழ் நாட்டுப் பேரரசர்கள் புலவர் பெருமக்களுடன் உரையாடி, தமது அறிவை வளர்த்துக் கொண்டதை நமது இலக்கியங்கள் விளக்கிக் கூறுகின்றன. முகலாயப் பேரரசர் அக்பர் படிக்கத் தெரியாதவராக இருந்தாலும் கேள்விச் செல்வத்தின் துணையால் பேரறிஞராகி, பேரரசராக வாழ்ந்ததற்கு சரித்திரம் சான்று கூறுகின்றது. இக்கேள்விச்செல்வத்தின் மூலம் சமூகக் கல்வியை விரைவில் பரப்பி, குறிப்பாக விவசாயப் பெருமக்களிடையே அறிவொளியைப் பரப்புவதே கிராம வானொலி மன்றங்களின் அடிப்படைத் தத்துவமாகும். சமூகக் கல்வியை மக்களிடையே ஓயாமல் பரப்பிக்கொண்டிருக்க, கிராமங்களில் செய்துள்ள அமைப்பே கிராம வானொலி மன்றங்களாகும். ஜப்பான், மலேயா ஆகிய நாடுகளில் நடந்த ஒலிபரப்பாளர்கள் மாநாட்டிலும், கனடாவில் நடந்த 'காமன்வெல்த்' ஒலிபரப்பு மாநாட்டிலும் கிராம வானொலி மன்றத் திட்டம் பற்றி தீவிரக் கவனம் செலுத்தப்பட்டது.

மாதர் வானொலி மன்றங்களும் தமிழகத்தில் நன்கு செயலாற்றி வருவது பெருமைக்குரியதாகும். இந்த விஞ்ஞான யுகத்தில், வானொலி மன்றங்களின் மூலமாக மக்களுக்கு அறிவொளி பரப்பி உற்பத்தியைப் பெருக்கி நாட்டை வளம் பெறச் செய்வோமாக" என்று அவர் கேட்டுக் கொண்டார்.

ஆணையர்களின் சார்பாக உரையாற்றிய மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையர் திரு பி. பாண்டியன், வானொலி மன்றங்களின் வளர்ச்சியையும் அதனாலடைந்த பயனையும் செந்தமிழ்ப் பாக்களாகவே இயற்றிப் பாடியது, கருத்தரங்கிற்கே சுவையூட்டியது.

திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு ஹரிபாஸ்கர், ஐ.ஏ.எஸ். அவர்கள் கூறிய கருத்து நடைமுறையில் மேற்கொண்டு பயன்பெறத்தக்கதாகும். "கோட்டாட்சித் தலைவர்களும், மாவட்ட விவசாய அதிகாரிகளும், தங்கள் ஆய்வு அறிக்கைகளில் (Periodical Review) வானொலி மன்றங்களின் வளர்ச்சி பற்றிய தெளிவான குறிப்புகளையும் சேர்க்க வேண்டும். இந்த நிர்வாக நடவடிக்கையின் மூலம், கிராம வானொலி மன்றங்கள் இடையுறாது இயங்கச் செய்ய முடியும்" என்று கூறினார்.

திருச்சிராப்பள்ளி வானொலி நிலைய உதவி இயக்குநர் திரு பி. ஆர். பி. ரெங்கன் நன்றி கூற, கருத்தரங்கு இனிது நிறைவு பெற்றது.

தமிழக அரசு சிறந்த வானொலி மன்றங்களுக்குப் பரிசளித்ததன் மூலமாக வானொலி மன்றங்களின் வளர்ச்சியில் புதிய உற்சாகம் உண்டாகும் என நிச்சயமாக நம்பலாம்:

---

கிராம நலம்

ஆண்டு சந்தா ரூ. 2.

தனிப் பிரதி விற்பனைக்குக் கிடையாது.

சந்தா மற்றும் கடிதப் போக்குவரத்துக்களுக்கு
"மக்கள் தொடர்பு அதிகாரி,
கிராம வளர்ச்சி—இயக்குநர் அலுவலகம்,
கோட்டை, சென்னை-9"
என்ற முகவரிக்கு எழுதவும்.

கதை, கட்டுரை அனுப்புவோர்
ஆசிரியர், 'கிராமநலம்',
கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகம்,
கோட்டை, சென்னை-9"
என்ற முகவரிக்கு அனுப்பவும்.





இந்திய அரசின் சுகாதாரம்· குடும்பக் கட்டுப்பாடு அமைச்சகத்தின் சார்பில் நகராட்சி நிர்வாகம் பற்றிய கருத்தரங்கும், உள்ளாட்சித் துறை அனைத்திந்திய மைய மன்றத்தின் 12-வது கூட்டமும் (Central Council of local Self-Government) சென்னை இராஜாஜி மண்டபத்தில் டிசம்பர் 8-ம் தேதி முதல் 11-ம் தேதி வரை நடைபெற்றன. மத்திய அரசின் சுகாதாரத் துறை அமைச்சர் திரு சத்திய நாராயண சின்கா மாநாட்டில் உரையாற்றினார். தமிழக அரசின் உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு மா. முத்துசாமி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். தமிழக ஆளுநர் திரு உஜ்ஜல் சிங் சிறப்புரை ஆற்றினார்.







படம் 1. பெல்ஜிய நாட்டு நாளிதழான "De Nieuwe Gids" பத்திரிகையின் பொருளாதாரப்பகுதி ஆசிரியர் திரு ஏ. ஜி. சமாய் அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சரை, 5-12-'67-ல் சென்னையில் சந்தித்து உரையாடினர்.

படம் 2. மலேயா நாட்டு தமிழ்ப் பள்ளி ஆசிரியர்களின் தேசிய சங்கத்தினைச் சேர்ந்த 25 உறுப்பினர்கள், தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு மா. முத்துசாமி அவர்களை 4-12-'67 அன்று சென்னை கோட்டையில் சந்தித்தனர்.








படம் 1. 17-11-'67-ல் திருப்பாதிரிப்புலியூரில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கடலூர் நகராட்சியின் குறைந்த வருவாயினருக்குக் குடியிருப்புக்கான அடிக்கல்லினை நாட்டினர்.

படம் 2. அமெரிக்க நாட்டுப் பத்திரிகை நிருபர்கள் குழுவினர் 30-11-'67-ல் சென்னையில் இராஜாஜி அவர்களைச் சந்தித்து உரையாடினர்.

படம் 3. 'கோ' திருவனந்தா. பள்ளிச் சிறுவர்களுக்கு இலவசமாக அளிக்கும் பாடப் புத்தகங்களை, அவர்களுக்கு அளிப்பதற்காக வேண்டி, உள்ளாட்சித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு மா. முத்துசாமி அவர்கள் பெற்றுக் கொள்கிறார்.

(சேலம் மாவட்டம், நாமக்கல் தொகுதி-மோகனூர், 12-11-'67.)

# கேள்வியும்-பதிலும்

[கிராம வானொலி மன்றங்கள், கிராம மக்களிடையே அறிவொளி பரப்பும் பணியைச் செய்து வருகின்றன. கிராம மக்கள் வானொலி நிகழ்ச்சிகளை அமைதியாகக் கேட்டு, கூடிப்பேசி விவாதித்து, அநுபவத்தில் பயன் காணவேண்டும் என்பதே கிராம வானொலி மன்றத்தின் நோக்கம். வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்டு கிராம வானொலி மன்றங்கள் எழுப்பும் கேள்வி களுக்கு வானொலியில் பதில்கள் அளிக்கப்படுகின்றன. அவற்றில் சிலவற்றை இங்கே தொகுத்து "கேள்வியும்-பதிலும்" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ளோம்.

—ஆசிரியர்]

### ஏரல் கிராம வானொலி மன்றம்—திருநெல்வேலி மாவட்டம்.

கேள்வி: எங்கள் பகுதியில் விவசாய நிலத்தில் கோரை அதிகமாக இருக்கிறது. இதை எவ்வளவு எடுத்தாலும் போவதில்லை. இதற்கு எந்த களைக் கொல்லியை எந்த அளவு எப்பொழுது போடலாம்?

பதில்: கோரை—அருகு போன்ற புல் வகைக் களைகளை அழிக்க 'டால்பான்' என்ற களைக்கொல்லியை ஏக்கருக்கு 5–10 கிலோ அளவில் 50–60 காலன் நீரில் கலந்து தெளித்து அழிக்கலாம். இம்மருந்து தெளித்த 2 வாரங் களில் களைகள் பட்டுப்போகும். ஆனாலும் இக்களைகளின் கீழ் பரவியுள்ள தண்டு, மற்றும் கிழங்குகளின் உதவி யால் மறுபடியும் துளிர்க்குமாகையால், மருந்தைத் திரும்பத்திரும்ப தெளித்துத்தான் கோரை-அருகுபோன்ற புல் வகைகளை அழிக்க முடியும். குறிப்பிட்ட அளவு மருந்தை ஒரே த.வையில் தெளிப்பதற்குப் பதிலாக 2–3 முறைகள் 15–20 நாட்கள் இடைவெளியில் சிறிது சிறிதாகத் தெளிப்பது நல்லது.

### சீதக்கமங்கலம் கிராம வானொலி மன்றம்—தஞ்சாவூர் மாவட்டம்.

கேள்வி: பூமியில் போட்டு ஊறிவிடும் மருந்து ஓர் ஏக்க ருக்கு எவ்வளவு போட வேண்டும்? என்ன செலவாகும்?

பதில்: மண்ணில் இட்டுக் ஊற 'மெசின்' என்னும் மருந்தை ஏக்கருக்கு 4–6 கிலோ அளவில் போட்டு கலக்க வேண்டும். இதனால் ஏக்கருக்குச் சுமார் ரூ.30 செலவாகும்.

### பெத்தாம்பாளையம் கிராம வானொலி மன்றம்—கோயம்புத்தூர் மாவட்டம்.

கேள்வி: களைகளைக் கொல்வதற்கு மருந்து அடிக்கும் போது பயிரும் சாக நேரிடும் என்று கருதுகிறோம். தங்கள் கருத்து என்ன?

பதில்: அங்கத்தினர் கருதுவது சரியல்ல—தங்களின் கருத்துக்கு எதிராக ஓர் உதாரணமும் தர விரும்புகிறோம். அதாவது சோளம், கம்பு போன்ற தானியப் பயிர்களைத் தாக்கும் கடுமல்லியை, 2, 4–டி என்ற உப்பை 1½–2 கிலோ அளவில் கலந்து தெளிப்பதால் பயிரைப் பாதிக் காமல் கட்டுப்படுத்தலாம். எந்தப் பயிரும் இல்லாத தரிசு நிலத்தில் களைக் கொல்லி மருந்துகளை உபயோ கிப்பது மிகவும் நல்லது.

### சிவலார்குளம் கிராம வானொலி மன்றம்—திருநெல்வேலி மாவட்டம்.

கேள்வி: நிருபணங்கள் என்றால் என்ன?

பதில்: நிருபணம் என்றால் நிருபிப்பது என்று பொருள். அதாவது ஒரு நிலத்தின் ஒரு பகுதியில் விவ சாய முறைப்படி சாகுபடியும்—அடுத்த பகுதியில் இலாகா சிபாரிசுப்படி சாகுபடி முறையும் செய்து காண்பிப்பதும் பயிரின் வளர்ச்சி முதல் இறுதியாக மகசூல் கிடைக்கும் வரை ஒவ்வொரு நிலையிலும் ஒப்பிட்டு காண்பிப்பது போல் நிருபித்து சாகுபடி செய்வதையே நிருபணங்கள் என்று கூறுகிறோம்.







படம் 1. தென் ஆர்க்காடு மாவட்ட சீரணிப் படைத் துவக்க விழா. 17.11.'67-ல் நடைபெற்றது. மாண்புமிகு முதலமைச்சர் சீரணிப் படையின் அணி வகுப்பினைப் பார்வையிடுகிறார்.

படங்கள் 2, 3—சமுதாய நலத் துறைச் சீரமைப்பு—சகலகட்சித் தலைவர்களுடன் ஆலோசனை.

சமுதாய நலத் துறைச் சீரமைப்புப் பற்றி, திரு நல். முருகேச முதலியார் அவர்கள் அளித்த அறிக்கையின்மீது, சகல கட்சித் தலைவர்களுடன் மாண்புமிகு முதலமைச்சர் ஆலோசனை நடத்துகிறார். 26.11.'67-ல் கோட்டையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் கலந்துகொண்ட சகல கட்சித் தலைவர்கள்

கேள்வி: ஹெச். பி· 1 கம்பு (வீரிய ஒட்டுக் கம்பு) முதன்முதலில் எப்படிக் கண்டுபிடிக்கப்பட்டது ?

பதில்: வெவ்வேறு இன கம்பு ரகங்களை இனக் கலப்பு செய்து உருவான கம்பை விதைத்த பொழுது ஒரு தனிப் பட்டவீரியம் இருப்பதை உணர்ந்தனர். அவ்வாறு "டி.·.ப்ட் 23-ஏ" என்ற மூலவகையோடு "பில்-3 பி" என்ற வேறொரு வகையை இனம் கலந்த போது உருவான கம்பை விதைத்த போது, அதில் தனிப்பட்ட வீரியம் வெளிப்படுவது தெரிந்தது. இந்த இனத்திற்கு 'ஹெச். பி-1" என்று பெயரிட்டு விநியோகிக்கப்பட்டது. இது இறைவை சாகுபடிக்குச் ஏற்றது. ஓர் ஏக்கர் நடவு செய்ய' ஒரு கிலோ கம்பு விதை தேவைப்படும். இப் பயிர் 80-85 நாட்களில் அறுவடைக்கு வருகிறது.

## காவேரிராஜபுரம் கிராம வானொலி மன்றம்.

கேள்வி: நமது நாடு பருத்தி சாகுபடியில் எந்த நிலையில் உள்ளது?

பதில்: நமக்கு ஆண்டுக்கு 79 லட்சம் பேல் பஞ்சு தேவைப்படுகிறது. ஆனால் நமது நாட்டில் விளைவது 58 லட்சம் பேல் பஞ்சுதான். மீதியுள்ள 12 லட்சம் பேல் களுக்கு, எகிப்து, அமெரிக்கா போன்ற நாடுகளைத்தான் நம்பி இருக்கிறோம்.

## ஆவணிப்பூர் கிராம வானொலி மன்றம்,—தென் னார்க்காடு மாவட்டம்.

கேள்வி: புகையிலை சாகுபடி செய்ய அரசாங்க அனுமதி வாங்க வேண்டுமா?

பதில்: புகையிலை சாகுபடி செய்ய அரசாங்க அனுமதி எதுவும் தேவை இல்லை. சாகுபடி செய்யும் விவசாயி எவ்வளவு விஸ்தீரணத்தில் எந்த ரகம் புகையிலை பயிரிடு கிறார் போன்ற புள்ளி விவரத்தை சுங்க வரி இலாக்கா விற்குத் தெரியப்படுத்த வேண்டும். அறுவடையில் கிடைத்த மகசூல் விவரத்தையும் தெரிவிக்க வேண்டும். இதற்குண்டான சுங்கவரி விவசாயி கட்ட வேண்டியதில்லை. இந்தவரி கொள்முதல் செய்யும் வியாபாரிகளிடமிருந்து வசூலிக்கப்படுகிறது.

கேள்வி: புகையிலைச் சாகுபடியில் தமிழகம் தன் னிறைவு பெற்றிருக்கிறதா?

பதில்: ஆம். தமிழகத்தில் புகையிலை 42,500 ஏக்கரில் சாகுபடியாகிறது. நம் மாநிலத்தைப் பொறுத்தமட்டில் அகிலஇந்திய உற்பத்தியில் மூன்றாவது ஸ்தானத்தையும், பரப்பளவில் ஐந்தாவது இடத்தையும் பெற்றுள்ளது.

## குறிச்சி கிராம வானொலி மன்றம்.

கேள்வி: பசுக்களுக்குச் செயற்கை முறையில் கருத் தரிக்கச் செய்வதில் ஏதேனும் தீங்கு உண்டா? அதிகமாக எத்தனை தடவைகள் செயற்கை முறையைக் கையாள லாம்?

பதில்: பசுவுக்கு கன்று ஈனும் சக்தி இருக்கும் வரைக்கும்—ஒவ்வொரு தடவையும் செயற்கைமுறையையே அனுசரிப்பதில எவ்விதக் கெடுதலும் இல்லை. இயற்கை யிலேயே கருத்தரிக்காத பசுவை செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்ய முடியும்.

## கீழையூர் கிராம வானொலி மன்றம்.

கேள்வி: பசுக்கள் கன்று போட்டு எத்தனை மாதங்கள் வரை பால் கொடுக்கும்?

பதில்: கன்றுபோட்டு 300 நாட்கள் வரை பால் கறக்கலாம். பாலின் அளவு, இனம், பராமரிப்புத் தன்மையைப் பொறுத்தது. பசு கருத்தரித்த பின் 7 மாதங்கள் வரை பால் கறக்கலாம். பிறகு சிறிது சிறிதாகப் பாலின் அளவு குறைய ஆரம்பிக்கும்.

## கீழ அருணாசலபுரம் கிராம வானொலி மன்றம்.

கேள்வி: ஊராட்சிப் புறம்போக்குகளில் முந்திரி பயிரிட அரசாங்கம் கடன் வழங்குவதாகக் கூறப்பட்டது. ஊராட்சி மன்றம் கடன் பெற வழி முறைகள் யாது?

பதில்: ஊராட்சி மன்றத்தின் மாதாந்திர அல்லது விசேஷக் கூட்டத்தில், ஊராட்சிப் புறம்போக்கு நிலங்களில் முந்திரி பயிரிடுவதெனத் தீர்மானித்து, தீர்மான நகல் நிலத்தின் சிட்டா, அடங்கல் குறிப்புகளுடன் விண்ணப்ப நமூனாவில் தலைவரோ அல்லது நிர்வாக அதிகாரியோ கையொப்பமிட்டு, டிவிஷனல் பஞ்சாயத்து அதிகாரிக்கு அனுப்பவேண்டும். ஊராட்சி மன்றத்தின் பொருளாதார நிலை, கடனைத் திருப்பிக் கொடுக்கும் சக்தி ஆகியவை பரிசீலிக்கப்பட்டு, மாவட்ட விவசாய அதிகாரிக்கு அனுப்பப்படும். வட்டார விவசாய அலுவலர் சாகுபடி செய்யப் போகும் நிலங்களைப் பார்வையிட்டு தனது அறிக்கையை அனுப்புவார். மாவட்ட விவசாய அலுவலரால் ஊராட்சிக்கு ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 100 வீதம் அதிகப் பட்சமாக ரூ. 2.000 வரை கடன் தொகை வழங்கப்படும்,

—: o :—

முதலமைச்சரின் பேருரை : [4-ம் பக்கத் தொடர்ச்சி]

விக்கப் பார்க்கிறோம். இவற்றுக்கெதிரான கண்ட னங்கள்-எதிர்ப்புகள் தோன்றியிருந்தும் கூட நம்மையறியாமல் நாம் இவற்றைப் பாதுகாக்கக் கூடியவர்களாக இருந்திருக்கிறோம்.

இக் கொடுந் தீமைகளை எதிர்த்துப் போராட தீரமிக்க வீரர்கள் தோன்றியபொதெல்லாம் அவர்களை உன்னதமான கருத்துக்களையும்-புனித மான கொள்கைகளையும் ஒழிக்க வந்தவர்க ளென்று குறைகூறி வந்துள்ளோம்.

உள்ள வாழ்க்கை முறையைச் சீரழிய விட்டு விட்டு பகுத்தறிவாளர்களுக் கெதிராக குறை

ஒருமைப்பாடு ஏற்படவேண்டும் என நினைப்ப வர்களுக்கு உள்ளபடியே அந்தக் கருத்தில் ஆர்வம் இருக்கிறது என்றால், அந்தக் கருத்தைத் தெளிவாக இங்கு எடுத்துரைக்க வேண்டும்.

இலட்சியம் உயர்ந்ததானாலும் அதற்காக தவறான செயல்முறையைப் பின்பற்றமாட்டோம்

ஒற்றுமைக்கும் ஒரே தன்மைக்குமுள்ள வேறு பாடு புரியாது சிலர் குழப்பிக்கொள்கிறார்கள்.

ஒற்றுமை என்ற பெயரில் நாட்டின் ஒரு பகுதி மற்றொரு பகுதியின் அடிமைப் பண்ணை யாக மாறுவதற்கு தெரிந்தோ—தெரியாமலோ அனுமதிக்கக்கூடாது.

## கண்ணியமிக்க பரம்பரையின் வழித்தோன்றல்கள்

கூறுவது மென்மேலும் மூடநம்பிக்கைகள் வளர வும் இந்தச் சமுதாயம் சீரழியவுமே துணை புரிவ தாகும்.

சமுதாயத்தினைச் சீரமைக்கும் பணியில் நீங்கள் ஈடுபடவேண்டும். நீண்ட காலமாகவே இப்பணி செய்யப்படாமல் உள்ளது. பல்கலைக் கழகத்தில் தேர்ச்சி பெற்று பட்டதாரிகளாகி வெளியேறு வோரை அப்பணிக்குரிய தூதுவர்களாக நான் கருதுகிறேன். பல்கலைக் கழகங்களில் சமுதாயச் சீரமைப்புக் குறித்த சிக்கலான விஷயங்களை திறந்த மனதோடு—முழுமையாகவும் விவாதிக்க வாய்ப்பிருக்கின்றது.

இப்பல்கலைக் கழகம் போன்ற அறிவாலயங்கள் மக்களை முன்னேற்றப் பாதையில் இட்டுச் செல்வதாக இருக்க வேண்டுமென்று மக்கள் நினைக்கிறார்கள்.

அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பட்டதாரி களே! ஜனநாயகத்தோடு ஒட்டி வாழ முடி யாத சாதி முறையை எதிர்த்துப்போர் தொடுத்

எவ்வளவுதான் உயர்ந்த இலட்சியமாக இருந் தாலும் நாம் அதற்காக தவறான செயல் முறையைப் பின்பற்றுவோரில் ஒருவராக இருக்க முடியாது.

சுதந்திர நாளின்போது இராஜாஜி அவர்கள் தமக்கேயுரிய நுண்மான் நுழைபுலத்துடன் கூறி னார்கள்.

"நமது நாட்டின் அரசியல் அனுபவம்— இரும்பையும் உலோகங்களையும் உருக்கி வார்ப்ப டத்தில் வார்த்து தேய்மானத்திற்கு அஞ்சாத உருக்குசெய்வது போன்றதாகும்."

"இது சில நாடுகளில் உருவாகியுள்ள சைனா பீங்கான் போன்ற தல்ல. அந்த நாட்டினரின் ஜனநாயகமெல்லாம் பிளாஸ்டிக் செய்வதுபோல் எளிதில் செய்துவிடக் கூடியது. ஆனால் நமக்கு இங்கே ஈடுபாடு—உலோகங்களிடம்"

தேசிய ஒருமைப்பாடு என்பது நல்ல குறிக்கோள்; மதிக்கத்தக்கது. எனினும், அதற்காக மொழித்

## அடிப்படை பலவீனமாயிருந்தால் மகுடமும் இருளில் வீழும்

திடுங்கள் என நான் உங்களை அழைக்கிறேன். விஞ்ஞானத்தோடு ஒட்டி வாழ முடியாத மூடப்பழக்க வழக்கங்களுக்கு எதிராகவும் சுதந்திரம்-சமத்துவம்-சகோதரத்துவம் ஆகிய வற்றோடு ஒட்டி வாழ முடியாத பல்வேறு கோணங்களில் அமைந்த கொடுமைகளுக்கெதி ராகவும் போர்தொடுத்திடுமாறு உங்களை நான் அழைக்கிறேன்.

—நமது காலத்திலுள்ள விநோதமான இன் னொரு உண்மை—நாம் இப்போது ஒரு நாட்டை உருவாக்கிக் கொண்டிருக்கிறோம் என்பது;

துறையிலோ — பொருளாதாரத் துறையிலோ அநீதியையும், ஆதிக்கத்தையும் சகித்துக் கொள்ள முடியுமா?

சகித்துக்கொள்ள முடியாது என்பதற்காகத்தான் இந்த (தமிழக) அரசாங்கமே ஏற்பட்டிருக்கிறது.

இந்தியை ஆட்சி மொழியாக ஏற்கக் கட்டாயப் படுத்துவ தற்கு எதிரான மக்களின் வலிவுமிக்க உறுதிப்பாட்டையே இந்தத் தமிழக அரசு பிரதிபலிக்கிறது.

நாம் ஆங்கிலம் இணைப்பு மொழியாக நீடிக்க வேண்டும் என்று வேண்டுவதை சிலர் தவறாக வும் திரித்தும் கூறுகிறார்கள்.

நிலைக்க முடியாத வாதங்களையும், விவாதத்திற்குரிய புள்ளி விவரங்களையும் காட்டி அவர்கள் வீராப்பு பேசியபடி பிரிவினைப் பூச்சாண்டியைக் கொண்டுவந்து மிரட்டல்கள்—ராணுவம் ஆகியவற்றின் மூலம் மக்களை மௌனமாக்க முயல்கின்றனர்.

பிரச்சினைகளை ஆதிபத்ய முறைகளில் எப்போதும் தீர்க்க முடியாது. குறிப்பாக இந்த மொழிப் பிரச்சினை நமது வாழ்க்கை வழியுடன் நிகழ் காலத்திலும் எதிர் காலத்திலும் நெருக்கமாக இணைந்துள்ளதாகும்.

தமிழக அரசாங்கம், தவறும் தடுமாற்றமும் இல்லாத சொற்கள் மூலம் விளக்கியுள்ளது.

தமிழும் ஆங்கிலமும் நமது எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்யும்.

தமிழ், இந்த மாநிலத்தின் ஆட்சிமொழியாகவும் ஆங்கிலம் இணைப்பு மொழியாகவும் இருக்கவேண்டும்.

ஆங்கிலம் நமது நாட்டிற்கும் உலகின் பிற நாடுகளுக்குமிடையே இணைப்பு ஏற்படுத்த பணி புரியும் என்று இந்தி ஆதரவாளர்கள்கூட ஒப்புக்கொள்கிறார்கள்.

அதை அவர்கள் ஒப்புகொள்வார்களானால் இங்கு இணைப்பு ஏற்படுத்த இந்தி இணைப்பு மொழியாக இருக்கவேண்டும் என்று ஏன் கேட்கிறார்கள்?

வெளிநாட்டினருடன் இணைப்புக்கொள்ள எந்த மொழி பணியாற்றுகிறதோ—அதே மொழி அதே இணைப்புப் பணியை இந்தியாவுக்குள்ளும் செய்யும் ஆற்றல் பெற்றிருக்கிறது.

இரு இணைப்பு மொழிகள் தேவை என்று கூறுவது பெரியபூனை செல்வதற்கு பெரிய வழி சுவரில் இருக்கும்போது பூனைக்குட்டி செல்ல இன்னொரு வழி செய்ய வேண்டும் என்பதற்கு ஒப்பானதாகும். பூனைக்கு என்ன வழியோ அதுவே பூனைக்குட்டிக்கும் வழியாகும்.

ஆங்கிலம் அன்னியநாட்டு மொழி என்று சிலர் வாதிடுகிறார்கள்.

உள்ளபடியே (இலக்கிய நோக்கில்) ஷெல்லி-பைரன்-கீட்ஸ் கால்ரிட்ஜ் எமர்சன்-பேகன்—ஆகியோர் நமக்கு அன்னியர்களா? திருவள்ளுவர் வெறும் தமிழர் மட்டுமா? அவர்கள் எல்லாம் உலகக்குடி மக்கள்—உலகப் பேராசிரியர்கள்.

அவர்களது எண்ணங்களை மிளிரச் செய்யும் மொழிகள் வேறு நாட்டிலிருந்து வருகிறது என்பதால் தள்ளிவிடக்கூடியவை அல்ல.

எனினும், தமிழ் மொழியை கல்லூரிப் பாட மொழியாக ஆக்கத் தேவையான கவனத்துடன் படிப்படியாக செய்யும் கொள்கையை ஏற்று செயல்படுத்துவதால், ஆங்கிலத்திற்கு தமிழைவிட உயர்ந்த இடம் தந்துவிடமாட்டோம்....

### சாதாரண மனிதனை உயர்த்தும் திருப்பணி

......சாதாரண மனிதனை—கீழ்த்தட்டு மனிதனை உயர்த்தும் பணியில் நாம் எங்கிருந்தாலும் ஈடுபட வேண்டும். அந்த மனிதன் தான் இந்த நாட்டின் பிற நாடுகளின் முதுகெலும்பாய் இருப்பவன். அந்த மனிதனின் ஓவியத்தை உங்கள் முன் சமர்ப்பிக்க விரும்புகிறேன். 'அவன் நம்புதற்கு முடியாத நிலையில் வாழ்பவன். ஆனால் மனித குலத்தின் மூன்றில் இரண்டு பகுதியாய் இருப்பவன். குடிசையில் அவன் வாழ்கிறான். அவனால் எழுதவோ படிக்கவோ முடியாது, அவனது சக்தி நோயினால் பிடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அவன் ஒரு நாளைக்கு 15 மணி நேரம் வேலை செய்கிறான். அவனும் அவனது குடும்பமும் வழக்கமாகப் பசியுடனிருக்கிறது. இளையவயதிலேயே அவன் இறந்து விடுகிறான். ஆனாலும், அவன் தனது குழந்தைகளைப் பற்றி நம்பிக்கை கொண்டிருக்கிறான். அவர்கள் வலிமையுடனும் உடல் உறுதியுடனும் இருக்கவிரும்புகிறான். அவன் எழுதப் படிக்கத் தெரிந்தவனாக இருக்க விரும்புகிறான். சமாதான உலகில் தனி மனித உரிமையுடன் இருக்க வேண்டும் என்று விரும்புகிறான். இத்தகையவன்தான் (கீழ்த்தட்டில்) உள்ள சாமான்ய மனிதன்.

இந்த மனிதன் தனக்கு இழைக்கப்படும் அநீதியை உணர்ந்து கொள்ளத் துவங்கிவிட்டான். அதன் விளைவாக கிளர்ச்சிகளும், மோதல்களும் ஏற்படுகின்றன.

உறுதி எடுத்துக்கொள்ளுங்கள்—நாம் பின் தங்கப்போவதில்லை. நமது சாமான்ய மனிதனை இடர்ப்பாடான நிலையில் விட்டுச் செல்லப் போவதில்லை.

கண்ணியமிக்க பரம்பரையின் வழித் தோன்றல்களாகிய நீங்கள்தான் இந்த உன்னதமான பணிக்கு மிகவும் பொருத்தமானவர்கள். இந்தப் பணியில் நீங்கள் காணும் வெற்றியில்தான், இந்த நாட்டின் எதிர்காலமே இருக்கிறது.

அடிப்படை பலவீனமாயிருந்தால்—மகுடமும் இருளில் வீழும்.

புன்னகை பூக்கும் நிலம் நோக்கும் ஏழை மனிதனை-குடிசையில் வாழும் சாமான்ய மனிதனை—தனது குழந்தைகள் எதிர்காலம் பற்றி ஏங்கும் மனிதனை முன்னேற்றும் புனிதப் பணியில் ஈடுபட வாரீர்.

— o —




காலை முதல் மாலை வரை உழைத்து விட்டு, சோர்வுற்று இல்லம் திரும்பும் அவர்களுக்கு, இரவில் ஒரு தலையாயப் பணி காத்து நிற்கிறது. தங்களுடைய இளமை நாட்களில் கல்வி கற்காத அவர்கள், முதுமையில் பேரார்வம் காட்டி, அவ்வூர் மக்கள் அனைவரும் அறியாமையை அகற்றிக் கொண்டிருக்கின்றனர்.

இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள 'பிலூரா' என்ற கிராமத்தில் இந்த அரிய செயல் இன்றளவும் நடைபெற்று வருகிறது. இது மாஹிதி நதிக் கரையில் உள்ளது.

ஏனைய கிராமங்களைப் போன்றே, இதுவும் ஒரு சிறிய கிராமம்தான் இங்கேயும் மண் சுவர்கள், மண் தரைகள் மண்சாலைகள் போன்ற அனைத்தும் உண்டு. ஆனால் மாலை நேரம் நெருங்க, நெருங்க ஒருவிந்தை உங்களுக்காகக் காத்திருக்கிறது. அப்போதைய நிலையில்தான், அது மற்ற கிராமங்களைவிட பெரிதும் மாறுப்பட்ட ஒரு கிராமமாக காட்சியளிக்கிறது. மின் விளக்குகள் ஆங்காங்கே ஒளி விடுகின்றன; "பெட்ரோமாக்ஸ்" விளக்குகளும், மெல்லிய ஓசையுடன் ஒளியை உமிழ்கின்றன. பாய்களும், தட்டிகளும் ஆங்காங்கே தரையில் பரப்பப்படுகின்றன.

### தலையை ஆட்டிக் கொண்டே கற்கின்றனர்..

குழந்தைகளுக்கோ ஒரே வியப்பு! தங்களுடைய பெற்றோர்கள் பாய்களிலும், தட்டிகளிலும் அமர்ந்துக் கொண்டு, ஒவ்வொரு எழுத்தையும் உரக்கச் சொல்லி, தலைகளை ஆட்டிக் கொண்டு கற்பலகையில் எழுதுவது அவர்களை அப்படியே உற்சாகத்தில் திளைக்க வைக்கிறது.

முதியோர் கல்வி செயல்படும் 45 கிராமங்களில் "பிலூர்" கிராமமும் ஒன்று. அறியாமையை அறவே அகற்ற வேண்டுமென்று பிலூர் கிராமம் பெரிதும் முயன்று வருகிறது.

கணக்கெடுத்துப் பார்த்தால், ஊரிலுள்ள 1,200 முதியோர்களில் 515 பேர்கள் மட்டுமே கல்வியறிவு பெற்றவர்களாயிருந்தனர். அதில் 129 பேர்கள் பெண்கள். எஞ்சிய முதியோர்களுக்கு எழுத்தறிவிக்கும் பணியை "நவயுகச் சங்கம்" ஏற்றுக் கொண்டுள்ளது. அண்டைக் கிராமங்களிலுள்ள 60 ஆசிரியர்கள் இச்சங்கத்துடன் ஒத்துழைக்க முன் வந்துள்ளனர்.

### இரண்டாண்டுகளில் அறியாமை அகலும்..

ஆண்களைவிட பெண்கள் தான் கல்வி கற்க பேரார்வம் காட்டுகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. "பிலூரா எழுத்தறிவு பெற வேண்டும்" என்ற ஓர் இயக்கம் முதன் முறையாக துவக்கப்பட்டது. இன்னும் இரண்டு ஆண்டுகளில் பிலூராவில் எழுத்தறிவில்லாதவரே இருத்தலாகாது என்பதே இந்த இயக்கத்தின் முக்கிய கருத்து. திரு ஜகன்னாத் என்பவர் இப்பணியில் முதன்மையாக நிற்பவர்.

பிலூராவின் ஒவ்வொரு தெருக்களிலும் இந்த எண்ணம் செயல்படுவதை காண முடிகிறது. இரவில் முதியோர் கல்வி வகுப்பு நடைபெறுகிறது. பகலில் "பிலூரா எழுத்தறிவு பெற்றுவிடும்", "பள்ளிக்குச் செல்லுங்கள்" என்ற சொற்கள் ஆங்காங்கே சுவர்களில் எழுதப் பெற்றுவிடும்.

பிலூரா அமைந்துள்ள மாவட்டமான 'துன்கார்பூர்', பஞ்சத்தால் அவதியுறும் ஒரு மாவட்டமாகும். கிராமைப்பு வேலைகளைக் கவனிக்க மக்கள் காலையிலேயே இல்லத்தை விட்டு புறப்பட்டுவிடுவர். மாலையில் சோர்வுற்று திரும்புவர். ஆனால் "அறிவுத்தாகம்" அவர்களைச் சரியாக 8 மணிக்கு பாய்களிலும், தட்டிகளிலும் அமரச் செய்து விடுகிறது. ஒவ்வொரு எழுத்தையும் அச்சில் பார்க்கும்போது அவர்கள் கண்கள் ஆனந்தக் கண்ணீர் வடிக்கின்றன.

பிலூராவில் 125 பெண்கள் முன்பே எழுத்தறிவு பெற்றவர்கள். ஏனைய பெண்களுக்கு எழுத்தறிவிக்கும் பணி இவர்களிடம் தரப்பட்டுள்ளது. பள்ளி செல்லும் மாணவர்களும் இதற்கு முழுமையாக ஆதரவு அளிக்கின்றனர். எழாவது, பத்தாவது வகுப்பு மாணவர்கள் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பிலூரா ஒரு சாதாரண கிராமம் தான்; ஆனால் செயலில் மற்ற கிராமங்களும் பின்பற்றவேண்டிய ஒரு கிராமம்.

 [10-ம் பக்கத் தொடர்ச்சி]

தத்தைத் தரக்கூடிய அனுபவபூர்வமான ஒன்றாகும். நகராட்சிகளின் வருமானங்களில் உயர்வு ஏற்பட்டிருப்பதைப் பற்றி யாரும் மறுப்பதற்கில்லை. காலங்காலமாக போடப்பட்டு வரும் வீட்டு வரி, தொழில் வரி, கால் நடை வரி, வாகன வரி, போன்ற வரிகள் கடந்த பதினைந்து ஆண்டுகளில் பல மடங்கு உயர்ந்துள்ளன என்பது உண்மை. தமிழகத்தில், பொழுது போக்கு வரியும், நகராட்சியின் உசிதப்படி அதன் மீது விதிக்கப்படுகின்ற உபரிவரியும் கணிசமான வருவாயைத் தரக் கூடிய புதியதொரு நிதி ஆதாரமாகும். ஆனால், வரிகள் மூலம் கிடைக்கும் இவ்வருமானமானது, சமுதாயத்தின் தேவைகள் வளர்ந்

ஒரு கொள்கையை கடைப்பிடிக்க முடியாத நிலையில், மாநில அரசின் நிதி நிலைமை அமைந்துள்ளது. குடிதண்ணீர், வடிகால் வசதி, மற்றும் சில சிறிய வேலைகளுக்கு மட்டும்தான் மானியங்களும் கடன்களும் அளிக்க முடியுமென்று அரசு வரையறுத்துள்ளது. நீண்ட நெடுங்காலமாக, நிதி வசதி இல்லாமல் பற்றுக் குறையிலேயே அமிழ்ந்து கிடக்கும் நகராட்சி மன்றங்களுக்குத்தான் இவை அளிக்கப்படுகின்றன. இந்தக் கடன்களை 25 முதல் 40 ஆண்டுகளுக்குள் திருப்பிக்கொடுத்துவிட வேண்டும். இதற்கு 6 சதவிகித வட்டி செலுத்த வேண்டும். அப்படித் திருப்பிக் கொடுக்கின்ற தொகை, வருடாந்திர தவணை

## வருவாயைப் பெருக்க ஆக்கரீதியான கருத்துக்கள்

திருக்கின்ற அளவுக்கு வளரவில்லை என்றே குறிப்பிட வேண்டும். நகராட்சி நிர்வாகம் சமாளிக்க வேண்டிய மிகப் பெரிய பிரச்சினை என்னவென்றால், மேலும் அதிகமாக நிதிகளை அவை திரட்ட வேண்டியுள்ளதேயாகும். நகராட்சிகள், கடன் பத்திரங்கள், 'டிபன்சர்கள்' வெளியிட்டு நிதி திரட்டலாமே என்று சொல்லலாம். ஆனால், மூலதனம் முடக்கமாக உள்ள இன்றைய நிதி நிலையில், அப்படிப்பட்ட ஒரு செயலை உறுதியான வருவாய் கிடைக்கக் கூடிய வழி என்று கொள்ள முடியாது. வரி விதிப்பதைப் பொறுத்தவரை, நாம் உச்ச வரம்பினை அடைந்துவிட்டோம் என்ற கருத்தினை பலர் கொண்டுள்ளனர். கூடுதலாக வரி விதிப்பது மிகவும் கடினமான ஒன்று. விதிக்கின்ற வரிகளை வசூல் செய்வது அவ்வளவு சுலபமாக முடியக்கூடியதல்ல என்பது மட்டுமல்லாமல், வரி போடுதலின் மூலம் மக்களிடையே செல்வாக்கினையும் வரி போடுபவர்கள் இழக்க நேரிடுகிறது. ஆக, உடனடியாக வருவாயைப் பெருக்கித்தரக்கூடிய வழிவகை ஒன்றும் இல்லாத ஒரு நிலையே, நம்முன் உள்ளது. நகராட்சிகளின் வருவாயைப் பெருக்குகின்ற முறையில் ஆக்கபூர்வமான

களுடன் சமன்படுத்தப்படுகிறது. கடந்த 13 ஆண்டுகளில் நாம் குடிநீர் வழங்குவதற்காக ரூ. 9,10,85,100-க்கு மேல் அளித்துள்ளோம். * தற்சமயம் 61 நகராட்சிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது. ஆனால் பல நகராட்சிகளில் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்குவது போதிய அளவுக்கு இல்லை என்பதை நான் உணருகிறேன். கடந்த சில ஆண்டுகளாக குடிநீர் வழங்குவதற்காகும் செலவும் மிகவும் அதிகமாகப் பெருகியுள்ளது. குடிநீர் வழங்குவதற்குத்தான் முதலிடம் அளிக்கப்படவேண்டும். கடந்த நான்கைந்து ஆண்டுகளாக குடிநீர் வழங்க ஒதுக்கப்பட்டுள்ள தொகையை ஆண்டுதோறும் படிப்படியாக மத்திய அரசின் பொது சுகாதாரத்துறை குறைத்துக்கொண்டே வருகிறது. இக் கருத்தரங்கின் விளைவாக, என்னுடைய மாநிலத்திற்கு மட்டுமல்லாமல், மற்ற எல்லா மாநிலங்களுக்குமே, மத்திய அரசின் பொது சுகாதாரத் துறை தனது நிதி ஒதுக்கீட்டை அதிகப்படுத்துகின்ற நிலை ஏற்படுமேயானால், நாட்டிலுள்ள எல்லா நகராட்சி மன்றங்களுமே மத்திய அரசுக்கு நன்றி செலுத்தும் என்பதில் ஐயமில்லை. தமிழகத்திலுள்ள 84 நகராட்சி

## பிரச்னைகளுக்கு தீர்வு காண்கின்ற நம்பிக்கையும் உறுதியும் ஏற்படவேண்டும்

கருத்துக்களையும் வழிவகைகளையும் இக் கருத்தரங்கு அளிக்குமேயானால், நான் மிகவும் நன்றியுடையவனாக இருப்பேன்.

### குடிநீர் வழங்குதலுக்கு முதலிடம்

இப்படிப்பட்ட நிலையில், நகராட்சி மன்றங்கள், தங்களுடைய பல்வேறு வேலைத் திட்டங்களை நிறைவேற்ற, மேலும் நிதி கேட்டும், மானியங்கள் கோரியும், மாநில அரசினை அணுகுவார்களேயானால், நாம் அவர்களைக் குறை சொல்வதற்கில்லை. சமுதாயத்துக்கு நகராட்சி மன்றங்கள் செய்கின்ற பணிகளின் முக்கியத்துவம் பற்றியும், அதனால் விளையும் பயன்கள் பற்றியும் நமக்கு எள்ளளவும் ஐயப்பாடு கிடையாது. ஆனால், இப்படிப்பட்ட மானியங்களும் கடன்களும் அளிப்பதில் மிகவும் தாராளமான

மன்றங்கள், 4 நகரியங்கள் ஆகியவற்றிற்கு குடிநீர் வழங்குதல், வடிகால் வசதிபற்றிய மூலதன வேலைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ள செலவுத் தொகை ஓராண்டுக்கு ரூ. 90 லட்சம். இது மிக மிகக் குறைவான தொகையாகும்.

ஊழியரின் ஒரு பகுதியினருக்கு விலைவாசி உயர்வுப்படி அளிக்கும்போது, மற்ற பிரிவினைச் சேர்ந்த ஊழியர்களுக்கு அந்தச் சலுகையானது மறுக்கப்படக்கூடாது என்ற கொள்கையை, இந்த மாநிலத்தில் நாங்கள் கடைப்பிடித்து வருகிறோம். அதையொட்டி நகராட்சிகளில் பணியாற்றும் ஊழியர்கள் கடந்த மூன்று

* விவரம் அடுத்த பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ளது.



நான்கு ஆண்டுகளில் கொடுக்கப்பட்ட விலைவாசி உயர்வுப் படியை அனுபவித்து வருகின்றனர். இருந்தாலும் அவர்களுடைய அடிப்படைச் சம்பளம் குறைவாக இருப்பதனால், விலைவாசி உயர்வுப்படி உயர்வினால் கிடைக்கின்ற பயனும், அதையொட்டி, குறைவாகவே உள்ளது. இந்த விஷயத்தில் இதை எப்படிப் போக்கலாம் என்பது பற்றியோ வேறு யோசனைகளைச் சொல்லவோ நான் தயக்கப்படுகிறேன். அதிகப்படியான ஊதியம் வேண்டும் என்ற கோரிக்கையை எழுப்புகின்ற நகராட்சியில் பணியாற்றும் ஊழியர்களுக்கு, அரசின் அனுதாபமும் அக்கறையும் என்றும் உண்டு. ஆனால் அதை நாம் செயல்படுத்தத் தடையாக உள்ளது, தற்போதுள்ள நிதி நிலைமை ஒன்றுதான்.

நகராட்சி நிர்வாகத்துடன் நான் தொடர்பு கொள்ளத் தொடங்கிய கடந்த ஓராண்டில், பல நகராட்சிகளின் வேலை முறைகளைக் கண்டறிகின்ற வாய்ப்பு எனக்குக்கிடைத்துள்ளது. நாளங்காடிகள், பேருந்து நிலையங்கள், லாரி நிற்குமிடங்கள், கடைகள் போன்ற ஆதாயம் தரக்கூடிய முயற்சிகளில், பல நகராட்சி மன்றங்கள் ஆர்வம் காட்டுகின்றன. கடலூரில் இத்துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி கண்டு நான் வியப்படைந்தேன். கடந்த இரண்டு ஆண்டுகளில், ஐநூறு கடைகளுக்கு மேல், கடலூர் நகராட்சி மன்றத் தலைவர், கட்ட ஏற்பாடு செய்து, மாதம் 30 ரூபாய் என்ற குறைந்த அளவில் அவைகளை வாடகைக்கு விடவும் செய்துள்ளார். இதனால் நகராட்சிக்கு உறுதியான, நிலையான வருவாய் கிடைக்க ஏதுவாகிறது. அத்துடன் மக்களுக்கும் இதனால் பயன்கிடைக்கிறது. அதிகப்படியான கடைகள் தோன்றுவதினால், கடைக்காரர்களிடையே ஒரு பலமான போட்டி ஏற்படு

குடிநீர், வடிகால் திட்டங்களுக்காக, நகராட்சி மன்றங்களுக்கு அளிக்கப்பட்ட கடன்கள் விவரம்.

| ஆண்டு. | | | தொகை ரூபாய். |
|---|---|---|---|
| 1954-55 | .. | .. | 5,68 500 |
| 1955-56 | .. | .. | 33,90,000 |
| 1956-57 | .. | .. | 6[illegible],17,000 |
| 1957-58 | ... | .. | 55,89 300 |
| 1958-59 | .. | .. | 73,58,000 |
| 1959-60 | | .. | 92,52,000 |
| 1960-61 | .. | .. | 51,50,100 |
| 1961-62 | .. | .. | 65,95,600 |
| 1962-63 | .. | .. | 74,70,700 |
| 1963-64 | .. | .. | 62,18 300 |
| 1964-65 | .. | .. | 92,40,700 |
| 1965-66 | ... | .. | 93,58,200 |
| 1966-67 | .. | .. | 1,39,76,700 |
| | மொத்தம் | ... | 9,10.85,100 |

கிறது; அதன் விளைவாக பொருள்களை வாங்குபவர்களுக்குப் பயன் விளைகிறது. வியாபாரிகளிடம் விட்டுவிட்டிருந்தால், இவ்வளவு அதிகமாகக் கடைகளை ஆரம்பிக்க அவர்கள் முன்வந்திருக்கமாட்டார்கள். ஒரு சில கடைகளை மட்டும் கட்டி, அவைகளை அதிக வாடகை விகிதத்தில் ஏலம் விடுவதைவிட, கடலூர் நகராட்சி மன்றத்தலைவரின் செயல், நகராட்சி மன்றத்துக்கு மட்டுமல்லாமல், பொது மக்களுக்கும் அதிக பயன் விளைவிப்பதாக அமைந்துள்ளது. இந்தச் செயல்பற்றி மற்ற நகராட்சி மன்றத்தலைவர்களும் சிந்திக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.

### பயன் தரத்தக்க தொழில் முயற்சிகள்

பேருந்துகளையும்; திரைப் படக்கொட்டகைகளையும் நடத்துவதற்கு, சில நகராட்சி மன்றங்கள் அனுமதி கோருகின்றன. நகராட்சி மன்றங்கள் இப்படிப்பட்டவைகளைச் செய்ய வேண்டுமென்றால், அதற்கு முன்னால் நகராட்சி மன்றங்களின் சட்டமானது திருத்தப்பட வேண்டும். அப்படி திருத்தங்கள் கொண்டுவர முயற்சி எடுத்துக்கொள்வதற்கு முன்னால், இந்த கோரிக்கைகளில் உள்ள பலா பலன்களை நாம் ஆராய்ந்து பார்க்கவேண்டும். நகராட்சிகளுக்கு வியாபார ரீதியில் நடைபெறக்கூடிய வேலை முறைகளை ஒப்படைப்பது பற்றி, நாம் அதிகமாகக் கவனம் செலுத்தவேண்டும். வருங்காலத்தில் நகராட்சிகளுக்கு நல்ல பயன் அளிக்கக்கூடிய வேலைத் திட்டங்களை அவை ஏற்று நடத்துவதற்கான வழிவகைகள் தென்படுவதை நான் காண்கிறேன்.

நகராட்சி நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளில் ஒன்றான கல்வி வளர்ச்சியைப் பொறுத்தவரையில் இந்த மாநிலத்தில் பெரியதொரு முன்னேற்றத்தை நாம் அடைந்துவிட்டோம் என்று சொல்வதற்கில்லை. மூன்று அல்லது நான்கு நகராட்சி மன்றங்களும், 4 நகரியங்களும் சேர்ந்து மொத்தத்தில் 800 தொடக்கப் பள்ளிகளையும் 75 உயர்நிலைப் பள்ளிகளை மட்டுமே நடத்தி வருகின்றன. தொடக்கப்பள்ளி ஒன்றுக்கு ஆகும் பராமரிப்புச் செலவு சராசரியாக ஆண்டொன்றுக்கு ரூ. 15 ஆயிரம் ஆகிறது. உயர்நிலைப் பள்ளிக்கு ஓர் ஆண்டுக்கு ரூ. 1 லட்சம் ஆகிறது. நகராட்சி எல்லைக்குள் அரசினருடைய பள்ளிகள், தனியார் நடத்தும் பள்ளிகளே மிக அதிகமான அளவில் உள்ளன. உயர்நிலைப் பள்ளிகளை நடத்துவதற்காகும் செலவு அதிகமாகிக்கொண்டே வருகிறது. உயர்நிலைப் பள்ளிகளை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டுமென்று, பெருவாரியான நகராட்சி மன்றங்களிலிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. இந்தக் கோரிக்கைகளை, அரசு ஆழ்ந்த கவனத்துடன் பரிசீலனை செய்து வருகிறது.

சாலை வசதியைப் பொறுத்தவரை, தமிழகத்தில் எல்லா நகராட்சி மன்றங்களும் சேர்ந்து 4,200 கிலோ மீட்டர் நீளமுள்ள பாதைகளைப் பராமரித்து வருகின்றன. ஒரு கிலோ மீட்டருக்கு ஆகும் பராமரிப்புச் செலவு, கிட்டத்தட்ட ரூ. 2,000 ஆகும். இங்குமங்குமாய்ப்

[34-ம் பக்கம் பார்க்க]

# பிற மாநிலங்களில்

## விடா முயற்சிக்கு ஒரு சான்று

கிராமங்களிலுள்ள தொழிலாளர்களுக்கு உழைப்புணர்வையும், தொழிலறிவையும் புகட்டி, அவர்களிடம் மறைந்து கிடக்கும் திறமையை

## காளிராம் ஒரு தொழிலாளியானர்

வெளிக் கொணர்ந்து, உற்பத்தியைப் பெருக்குவதே, கிராமத் தொழில் வளர்ச்சித் திட்டங்களின் முக்கிய குறிக்கோள். நவீன கருவிகளைக் கையாண்டு பொருள்களை பெருமளவில் உற்பத்தி செய்ய அவர்களுக்கு போதிய பயிற்சியளிக்கப்படுகிறது. ஆனால் பயிற்சிக்குப் பின், அத் தொழிலாளர்களுக்கு மூலப் பொருள்கள், இயந்திரங்கள், சிறிது மூலதனம் தேவைப்படுகின்றன. பயிற்சிக்குப் பின் இவற்றிற்கும் ஆவன செய்யப்பட்டால், தொழிலாளர்கள் சொந்தமாகவே தொழிற்கூடங்களை அமைக்க இயலும். இதற்கு ஓர் எடுத்துக்காட்டு காளிராம்.

காளிராம் மிகவும் ஏழை. அவருக்கு நிலம் கிடையாது. பிறருடைய வயல்களில் வேலை செய்து நாட்களை கடத்திவந்தார். அருகிலிருந்த அரசினர் துவக்கப் பள்ளியில் படித்து, பின்பு ஜனதா உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்தார். பள்ளி இறுதி வகுப்பு தேர்வின் பொழுது, உடல்நிலை குன்றியதன் விளைவாக, பள்ளிக்குச் செல்லவில்லை. பள்ளிச் செலவில் பாதியை தந்தை தருவார். காலையிலும், மாலையிலும் உழைத்து சம்பாதித்து, மறு பாதிச் செலவை அவரே சமாளித்துக் கொண்டார்.

### நண்பர்கள் உற்சாகமிழக்கச் செய்தனர்

ஆங்காங்கே கூலி வேலைகள் செய்து நாளொன்றிற்கு 75 பைசா அல்லது ஒரு ரூபாய்தான் அவரால் சம்பாதிக்க முடிந்தது. இதனால் அவருக்கு வாழ்க்கையில் சலிப்பு ஏற்பட்டதுடன், ஏதாவது ஒரு தொழிலைப் பயின்று முன்னுக்கு வரவேண்டும் என்ற ஆவல் மிகுதியாயிற்று. வேலைத் தேடித்தரும் நிறுவனத்தில் தம் பெயரைப் பதிவு செய்து கொண்டபோதிலும், அங்கிருந்து அவருக்கு எந்தவித தகவலுமில்லை.

முயற்சியை தளரவிடாது, நில அளவை வேலை, ஆசிரியர் வேலை, குமாஸ்தா வேலை ஆகியவற்றிற்கு விண்ணப்பங்கள் செய்தார். ஆயினும் தோல்வியையே அவர் தழுவினார். அன்றொரு நாள் பத்திரிகையில் ஒரு விளம்பரத்தைக் கண்டார் காளிராம். சஹரான்பூர் மாவட்டத்தில், நகால் என்னுமிடத்திலுள்ள பயிற்சி-உற்பத்தி நிலையத்தில் சேருவதற்கு விண்ணப்பங்கள் கோரி ஒரு விளம்பரம் பத்திரிகையில் வெளியாகியிருந்தது. அது அவரை மிகவும் கவர்ந்தது. ஊரிலுள்ள பெரியோர்களை கலந்தாலோசித்தார். எல்லோரும் அவரை உற்சாகமிழக்கவே செய்தனர். ஆயினும் காளிராம் மனத் தளர்வுறாமல், நிலையத்திற்கே நேராக புறப்பட்டுவிட்டார்.

### நிலையத்தில் சேர மறுப்பு

பயிற்சி நிலைய முதல்வரை காளிராம் கண்டு தன் நிலையை விளக்கினார். காளிராம் ஒரு பரம்பரை தொழிலாளியல்லவென்றும், தொழிலைப் பற்றி ஏற்கனவே அவருக்கு எந்த அறிவும் இல்லை என்று கூறி அவரை பயிற்சி நிலையத்தில் சேர்த்துக் கொள்ள மறுத்துவிட்டனர். ஆனால் காளிராம் பல முறை நிலைய முதல்வரைக் கண்டு தன் நிலையையும், ஆர்வத்தையும் வெளிக்காட்டவே; இறுதியில் வெற்றி அவர் பக்கம் தான். மாதம் ஒன்றுக்கு ரூ. 25 உபகாரச் சம்பளத்துடன் அவர் நிலையத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். மேஜைகள், நாற்காலிகள், அலமாரிகள், கதவுகள், ஜன்னல்கள் போன்ற எல்லா பொருள்களையும் செய்ய நன்கு கற்றுக் கொண்டார். சொந்தத்தில் ஒரு தொழிற் பட்டறை அமைக்க என்னென்ன கற்றுக் கொள்ள வேண்டுமோ அவ்வளவையும் திறம்பட கற்றுணர்ந்தார். பயிற்சி 1956-ம் ஆண்டில் முடிவுற்றது. ஆனால் சொந்தத்தில் தொழிலை ஆரம்பிக்கவேண்டும் என்ற காளிராமின் எண்ணம் இதுகாறும் ஈடேற வழியில்லை. அதற்கு மூலதனமோ, மூலப் பொருள்களோ அவரிடம் இல்லை.

### நாள் கூலியில் வெறுப்பு

எனவே, வேதராஜ் என்ற ஒரு தச்சரிடம் நாள் கூலிக்கு அமர்ந்து ரூ. 1·25 பெற்றுவந்தார். ஓராண்டுகளாக இதே ஊதியம் பெற்ற காளிராமுக்கு அதில் வெறுப்பேற்படவே, மரச்சாமான்கள் தயாரிக்கும் ஒரு கம்பெனியில் சேர்ந்தார். அவர்களும் நாளொன்றுக்கு ரூ. 1·50 தான் அளித்தனர். இந்த நிலையிலும் அவரால் தனியே தொழில் செய்ய முடியவில்லை.

இச்சமயத்தில் கருமார் வேலைக்கு ஆள் தேவையென பத்திரிகையில் ஒரு விளம்பரம் வெளியாயிற்று. அதற்கு காளிராம் விண்ணப்பம் செய்யவே; அவருக்கு டில்லியிலுள்ள ராணுவ தொழிற் பட்டறையில் ஒரு வேலை கிடைத்தது. அவருக்குக் கிடைத்த மாத ஊதியமான ரூ. 133-ல் ரூ. 50 செலவானது போக, எஞ்சியதை சேமித்து வைத்தார். தனியே தொழிலைத் துவக்கவேண்டும் என்ற எண்ணம் அவர் மனதில் எப்போதும் சுடர் விட்டுக் கொண்டேயிருந்தது. ஆனால் சீக்கிரத்திலேயே உடல் நலம் குன்றிவிட்டதால், வேலையை விட்டு விட்டு, சொந்த ஊருக்கே திரும்பி விட்டார்.

### எண்ணங்கள் ஈடேற துவங்கின

பிறகு, பயிற்சி பெற்ற நிலையத்திற்கே மீண்டும் சென்று, அங்குள்ள ஆசிரியர்களிடம் யோசனைகள் கேட்டார். மீண்டும் கருமார்த் தொழில் பயிற்சிக்காக அவர் நிலையத்தில் சேர்த்துக்கொள்ளப்பட்டு அவருக்கு ரூ. 25 உபகாரச் சம்பளம் அளிக்கப் பட்டது. பயிற்சி முடிந்ததும், கருவிகள் வாங்கி, தொழிலைத் துவங்குவதற்காக காளிராமுக்கு ரூ. 300 மானியம் அளிக்கப்பட்டது. காளிராமுக்கு சந்தோஷம் தாங்க முடியவில்லை. இருப்பினும் இந்த மூலதனம் அவருக்கு போதவில்லை. எனவே சிறு தொழில்களுக்கு பொருளுதவி செய்யும் திரு. திருவேதி என்பவரை நேரில் கண்டார். காளிராம் விண்ணப்பம் செய்தால், ரூ. 1,000 கடன் தருவதாக அவர் கூறினார். ஆனால் எவ்வளவோ முயன்றும் பணம் சீக்கிரம் கிடைத்தபாடில்லை. ஓராண்டுகால விடா முயற்சிக்குப் பின், கமிஷனரின் நிதியிலிருந்து அவருக்கு ரூ. 400 கடன் தரப்பட்டது.

### மூலப்பொருள் வாங்க மூலதனம் இல்லை

இந்த தொகைகூட போதாதெனினும், மனந்தளராமல் தொழிற் பட்டறைக்குரிய கருவிகள் சிலவற்றை வாங்கினார். கருவிகள் வாங்குவதிலேயே எல்லா பணமும் செலவழிந்துவிடவே, மூலப் பொருள்கள் வாங்க மூலதனம் இல்லை. என்ன செய்வார்? அவருடைய ஊருக்கு அருகிலுள்ள ரயில் நிலையத்திற்கு சமீபமாக மரங்களடர்ந்த ஒரு பகுதி இருந்தது. அந்த பகுதிக்குரிய அதிகாரிகளை சந்தித்து அதை ரூ. 750-க்கு குத்தகை எடுத்துக் கொண்டார். ஏழு கூலியாட்களை சேர்த்துக்கொண்டு மரங்களை வெட்டித் தள்ளினார்.

இறுதியில் காளிராம் ஒரு தொழிலாளியாகிவிட்டார். உள்ளூர் வெளியூர் தேவைகளை நன்கறிந்திருந்த காளிராம், கதவுகள், அலமாரிகள், அனுவலக மரச் சாமான்கள், நாற்காலிகள், மேஜைகள், கட்டில்கள் போன்றவற்றைச் செய்து குவித்தார். அவர் தயாரித்த பொருள்களின் தரம் மிக உயர்வாக இருந்ததால், அவை சீக்கிரமே நல்ல விலையில் விற்றன. தொழில் வளரத் துவங்கிவிட்டது. ரூ. 2·50 நாள் ஊதியத்தில், மூன்று தச்சர்களை தன்னுடன் சேர்த்துக் கொண்டார். குறைந்தது நாளொன்றுக்கு ரூ. 8 முதல் ரூ. 10 வரை சம்பாதிக்கலானார். கடன்களை திரும்ப செலுத்த ஆரம்பித்தார்.

### உழைப்பின் சின்னம் காளிராம்

தொழிலில் காளிராமுக்கு எவ்வித இன்னலும் ஏற்படவில்லை. தனனுடைய பட்டறையை பதிவு செய்துக் கொண்டார். சுருங்கக் கூறின் ஒரு சாதாரண கூலியாளாக இருந்த காளிராம், சிறு தொழிலதிபதியாக மாறிவிட்டார் எனலாம். சமூகம் அவரை கௌரவித்தது. அவர் கூறும் யோசனைகளுக்கு கருத்துக்களுக்கு ஊரார் செவி மடுத்தனர். நாணயம், நேர்மை, இடைவிடா உழைப்பு ஆகியவற்றின் சின்னமாக காளிராம் திகழ்ந்தார்.

இதிலிருந்து ஓர் உண்மை நமக்குத் தெளிவாகிறது. "பயிற்சி பெற்றும் பொருள் வசதியில்லையெனில், பயிற்சியால் பயனில்லை. பொருளிலிருந்தும் தகுந்த பயிற்சியில்லையெனில், பொருளால் பயனில்லை".

"பஞ்சாயத்து ராஜ்" இதழ்களிலிருந்து இடம் பெறுபவை :
பக்கங்கள் : 13, 14, 15, 16, 17, 29, 32, 33.
Articles reproduced from 'Panchayati Raj' on pages : 13 to 17 and 29, 32 and 33.

**ஊருக்கு உழைக்கும் உத்தமர் அணி :** [12-ம் பக்கத் தொடர்ச்சி]

கடந்த மூன்று மாதச் சாதனைகள் அமைந்துள்ளன என்பதை எவரும் ஒப்புக்கொள்வர்.

### சீரணிப்படையின் சீரிய பணி

சீரணியின் முதற்பணியாக செப்டம்பர் திங்கள் 3-ம் நாள் சென்னை நகரில் சீரணிப்படையினர் தெருக் கூட்டும் பணியைத் துவக்கினர். அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆகியோரும் தெருக்கூட்டும் பணியில் ஈடுபட்டு தொண்டர்களை உற்சாகப்படுத்தினர். 1936-ம் ஆண்டில் வார்தாவில் தெருக்களைச் சுத்தம் செய்யும் வேலையில் அண்ணல் காந்தியடிகள் ஈடுபட்டு துப்புரவு இயக்கத்திற்கு அடிகோலினார். அவரது அடிச்சுவட்டைப் பின்பற்றி அன்று சீரணியினர் தெருக்களில் துப்புரவு வேலைகளில் ஈடுபட்டதைக் கண்ட பொது மக்களும், பத்திரிகையாளர்களும் சீரணி நோக்கத்தைப் பாராட்டினர்.

அடுத்த பணியாக, ஊரூரில் சீரணியினர் உழைப்புச் செல்வத்தை நல்கி, பத்தே நாளில் பள்ளிக்கூடம் ஒன்றை உருவாக்கி முடித்து செப்டம்பர் 15-ந் தேதியன்று அண்ணாவின் பிறந்த நாளில் அவருக்கு அன்புப் பரிசாக அளித்தனர். சர்வோதயத் தலைவர் திரு ஜெயப்பிரகாஷ் நாராயணன் பள்ளிக் கட்டிடத்தைப் பார்வையிட்டு "காந்தியார் இன்று இருந்திருந்தால், சீரணியின் செயலைக்கண்டு போற்றிப் புகழ்ந்திருப்பார்" என்று பாராட்டுரை கூறி தொண்டர்களைப் போற்றினார்.

மூன்றாவது பணியாக சென்னை வியாசர்பாடி, கல்யாணபுரத்தில் ஏழு பர்லாங்கு நீளமுள்ள கால்வாய் ஒன்றை வெட்டும் வேலையை அக்டோபர் 5-ம் நாள் அண்ணா துவக்கி வைத்தார். மழைகாலத்தில் தேங்கும் தண்ணீரை வெளியேற்றுவதற்கான இக்கால்வாயை சீரணித் தொண்டர்கள் இரவு பகலாக உழைத்து 24 நாட்களில் வெட்டி முடித்துள்ளனர்.

நான்காவது பணியாக, அக்டோபர் 22-ம் நாள் மேற்கு மாம்பலத்தில் சாலை அமைப்பு வேலைகளில் சீரணியினர் ஈடுபட்டனர். அதைத் தொடங்கி வைத்த அண்ணா அவர்கள் "இந்தச் சீரணி பற்றி முன்பு இருந்துவந்த ஐயப்பாட்டு சந்தேகம் இப்போது பெரும் அளவுக்கு நீங்கிவிட்டது" என்று மகிழ்ச்சி தெரிவித்தார்.

திருச்சி மாவட்டத்தில் செப்டம்பர் திங்கள் 18-ம் நாள் சீரணியை அண்ணா துவக்கி வைத்தார். புதுக்கோட்டை பகுதியில் உள்ள குடிமியான் மலையில் மாபெரும் விவசாயப் பண்ணை உருவாகி வருகிறது. அங்கு நிலந்திருத்தி, நீர்வளம் கண்டு, விளைச்சலைப் பெருக்கும் திருப்பணியில் நூற்றுக்கணக்கான சீரணியினரும் ஈடுபடுவது சீரணி வரலாற்றில் குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

சீரணிக் கதிர்கள் இதுவரை சென்னையிலும், திருச்சியிலும் மட்டுமல்லாமல், செங்கற்பட்டு, வடார்க்காடு தென்னார்க்காடு ஆகிய மாவட்டங்களிலும் தொண்டு எனும் ஒளியைப் பரவச் செய்துள்ளன. பிற மாவட்டங்களிலும் சீரணி தொடங்குவதற்கான ஆக்கவேலைகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இன்றைய தினம் நாட்டிற்காக ஏதாவது செய்திட வேண்டும் என்ற துடிப்போடு, தமக்குள்ள ஆற்றலை ஆக்கப்பணிகளில் ஈடுபடுத்தி, சீரணி ஒளியை எங்கும் பரப்பிட ஆயிரமாயிரம் இளைஞர்கள் முன் வந்திருக்கிறார்கள். அண்ணா கண்ட சீரணி அனைவருடைய இதயங்களையும் வென்ற நிலையில் வெற்றிநடை போடுகிறது.

"இப்படை தோற்கின் பின் எப்படை வெல்லும்".

---

**உள்ளாட்சித் துறை அமைச்சரின் உரை :** [31-ம் பக்கத் தொடர்ச்சி]

போடப்படுகின்ற புதிய பாதைகளும் இதில் சேர்க்கப்பட்டுள்ளன. இத்துறையிலும் பராமரிப்புக்காக ஆகும் செலவு படிப்படியாக அதிகமாகிக்கொண்டே வருகிறது.

#### அதிகப்படியான நிதி ஆதாரங்களைக் கண்டுபிடிக்க வேண்டும்

ஆகவே, நகராட்சி மன்றங்களின் நிர்வாகம் இக்கட்டான ஒரு நிலையினை அடைந்துள்ளது என்பதனை, நான் இக் கருத்தரங்கில் சுட்டிக் காட்ட ஆசைப்படுகிறேன். நகராட்சிகளின் நிதி ஆதாரங்கள் மிகவும் குறைவாக உள்ளன. இப்படிப்பட்ட நிலையில் உள்ள நகராட்சிகள், தங்களுடைய பணிகளையும், பொறுப்புக்களையும் நல்ல முறையில் நிறைவேற்றுவதென்பது, இயலாத ஒன்றாகும். பொதுமக்கள் தங்களுடைய பொறுப்புக்களைத் தக்க முறையில் அறிந்துள்ளார்கள். தங்களுடைய தேவைகளைப் பற்றியும் அவர்கள் நாள்தோறும் வலியுறுத்திக்கொண்டே வருகிறார்கள். நம் முன்னால் உள்ள இந்த நிலையை எப்படிச் சமாளிப்பது, எப்படி மேன்மேலும் இத்துறையிலே முன்னேற்றம் காணமுடியும் என்பது பற்றியெல்லாம், இத்துறையிலே ஆழ்ந்த அறிவும் அனுபவமும் பெற்ற நகராட்சி மன்ற நிர்வாகிகள் அனைவரும், ஒருசேர அமர்ந்து, பரிசீலனை செய்யவேண்டிய ஒரு கட்டத்தை நாம் நெருங்கியுள்ளோம். அதிகப்படியான நிதி ஆதாரங்களைக் கண்டுபிடித்து, பொதுமக்களுக்கு மேலும் தரமான வசதிகளை அளிக்க நாம் தவறுவோமேயானால், நாம் இருந்து செயல் படுவதின் பயன்தான் என்ன என்ற வினா கட்டாயம் எழும்.

இந்த அடிப்படையிலேதான், இக் கருத்தரங்கிலே விவாதிக்கப்படுகின்ற கருத்துக்களையும் ஆலோசனைகளையும் பற்றி, நாம் மிகவும் ஆவலுடன் ஆழ்ந்து கவனிக்கவேண்டியுள்ளது. நம்மை எதிர்நோக்கியுள்ள மாபெரும் இப்பிரச்சினைகளுக்கு தீர்வு காண்கின்ற நம்பிக்கையும் உறுதியும் நமக்கு ஏற்படவேண்டும். நல்ல தரமான நகராட்சி நிர்வாகம் நாட்டில் நடைபெறுவதற்கான வழிமுறைகளை நாம் வகுத்துத் தருகின்ற ஒரு நிலையில், இக்கருத்தரங்கிற்குப் பிறகு, நாம் நிச்சயமாக இருப்போம் என்பதிலே, எனக்கு எள்ளளவும் ஐயமில்லை.



# சீரிய பணியாற்றும் நகராட்சிகள்

## ஈரோடு நகராட்சியில் நிறைவுபெற்றிருக்கும் திட்டங்கள்

ஈரோடு நகராட்சியில் குடிநீர் விநியோகத் திட்டம் 1919-ஆம் ஆண்டு துவக்கப்பட்டது. இதனை அபிவிருத்தி செய்வதற்காக வகுக்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டத்தின் நான்காவது கட்டத்தை 6.73 லட்சம் ரூபாய் செலவில் செய்து முடிக்க 1959-ஆம் ஆண்டு அரசாங்கம் அங்கீகரித்தது. நான்காவது கட்டத்தின் கடைசி அம்சமாக விளங்கும் நிலமட்ட நீர்த்தேக்கம் பொது நலத் துறையினரால் கட்டப்பட்டு 1967-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23-ம் தேதி நகராட்சி வசம் ஒப்படைக்கப்பட்டது. இந்நீர்த் தேக்கம் 2½ லட்சம் காலன் நீர் கொள் அளவு கொண்டது. ஏற்கனவே பயன் படுத்தப்பட்டு வரும் நீர்த் தேக்கம் 1¼ லட்சம் காலன் நீர் கொள் அளவு கொண்டது. இவ்விரு நீர்த்தேக்கங்களும் நகரின் அழகிய பாகமாக விளங்கும் சிதம்பரனார் பூங்காவில் அமையப்பெற்றுள்ளன. புதியதாக கட்டப்பட்ட நீர்த் தேக்கம் தமிழக அரசின் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் திறக்கப்பட இருக்கிறது.

ஈரோடு நகராட்சி இரு உயர் நிலைப் பள்ளிகளை நடத்தி வருகிறது. இவ்விரு உயர் நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் ஆண்டுதோறும் அரசாங்க பள்ளி இறுதித் தேர்வில் நல்ல சதவீதத்துடன் தேர்வு பெற்று வருகிறார்கள். இவ்விரு பள்ளிகளில் ஒன்று வாடகைக் கட்டிடத்தில் இயங்கி வருகிறது. இக்குறையை போக்குவதற்காக நகராட்சி 7 ஏக்கர் 5002 சதுர அடி நிலத்தை விலைக்கு வாங்கி ரூபாய் 4,78,700 மதிப்பீட்டில் ஒரு பள்ளிக் கட்டிடம் கட்டியுள்ளது.

ஈரோடு நகராட்சியில பணியாற்றிவரும் துப்புரவு ஊழியர்களுக்கென 1,28,400 ரூபாய் மதிப்பீட்டில் 42 வீடுகள் கட்டப்பட்டு உள்ளன. ஏற்கனவே துப்புரவு ஊழியர்களுக்கென 122 வீடுகள் கட்டப்பட்டு அவைகளில் அவர்கள் குடியிருந்து வருகிறார்கள். புதியதாகக் கட்டப்பட்டுள்ள வீடுகளுக்கு மின்சார வசதி வழங்குவதற்கான வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறது.

## பெரியகுளம் நகராட்சியின் சாதனைகளும், ஆக்கத் திட்டங்களும்

### நகராட்சித் தங்கும் விடுதி

இந்த நகராட்சியில் சகலவசதிகள் கொண்டதான இரண்டு பகுதிகள் கொண்ட ஒரு தங்கும் விடுதிக் கட்டிடம் ரூபாய் 29,720 மொத்த செலவில் புதிதாக 1967-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 2-ம் தேதி காந்தி ஜெயந்தி தினத்தன்று திறந்துவைக்கப்பட்டது. இதற்கான விழாவில் பெரியகுளம் கோட்ட துணை ஆட்சியாளர் உயர்திரு துரைராஜ், ஐ.எ.எஸ். அவர்கள் தலைமை தாங்க நகர்மன்ற துணைத்தலைவர் உயர்திரு. எம். பேச்சிமுத்து தேவர் அவர்கள் திறந்து வைத்தார்கள். இவ்விடுதி புதிதாக திறந்து வைக்கப்பட்டதின் விளைவாக வெளியூரிலிருந்து வரும் அரசாங்க அலுவலர்களும், மற்றோரும் தங்குவதற்கு வழியேற்பட்டு, நெடுநாளைய குறையொன்று நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது எனலாம்.

### பாதாள சாக்கடைத் திட்டம்

இந்நகருக்கு அரசினரது 1965-ம் ஆண்டு ஜூலை மாதம் 14-ம் தேதிய 1587 (சுகாதாரம்) எண் ஆணையில் ரூ 14·15 லட்சம் செலவில் ஒரு பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு ஒப்புதலளிக்கப்பட்டுள்ளது. இதற்கு பாதி மான்யமும், பாதி கடனுமாக பணவசதி செய்துதர அரசாங்கம் ஒப்புதல் அளித்துள்ளது.

இந்த வேலையானது மூன்று நிலைகளில் செய்யப்பட வேண்டியுள்ளது. அவற்றில் முதல் இரண்டு நிலை வேலைகளுக்கான மதிப்புப் பட்டியல் அரசினர் அங்கீகாரத்திற்கு சென்னை பொது சுகாதார தலைமைப் பொறியாளர் மூலமாக அனுப்பப்பட்டுள்ளது. மூன்றாவது நிலை மதிப்புப் பட்டியல் தயாரிப்பு நிலையில் உள்ளது. மேலே சொல்லப்பட்ட மதிப்பீடுகளுக்கு அரசினரின் ஒப்புதல் கிடைத்தவுடன் பாதாள சாக்கடைத் திட்ட வேலை துவங்கப்படும்.

### நகரின் தண்ணீர்த் திட்டம் சீரமைப்பு

இந்நகர் தண்ணீர் திட்டம் 1914-ம் ஆண்டிலிருந்த தேவையை அனுசரித்து தயாரிக்கப்பட்டு செயல்பட்டு வருவதால், தற்போதுள்ள தேவைக்குத் தக்கபடி தண்ணீர் வசதி இல்லாத காரணத்தால் இத்திட்டத்தை சீரமைத்து நகரின் வருங்காலத் தேவைக்கும், புதிதாக செயல்படுத்தப்படவிருக்கும் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு தேவையான தண்ணீரும் கிடைக்குமாறு செய்ய உத்தேசமாக ரூ. 7 லட்சம் செலவாகுமென்றும் அதற்கான ஆய்வு நடத்தி சரியான மதிப்பீடு தயார் ஆகும் செலவிற்கும் அலுவலர் நியமனத்திற்கும் ஒப்புதல் கோரி அரசினரைக் கேட்கப்பட்டுள்ளது. அரசினரின் ஒப்புதல் கிடைத்தவுடன் மேற்கொண்டு தக்க நடவடிக்கை இது சம்பந்தமாக எடுக்கப்படும்.

### மகப்பேறு இல்லம்

இவ்வூரில் மகப்பேறு இல்லம் ஒன்று கட்டுவதற்கு 2350/1ஏ, 2350/1பி என்ற காலியிடங்களை அரசினரிடம் ஒதுக்கீடுமூலம் பெறப்பட்டுள்ளது. இவ்விடத்தில் மேற்படி மனை கட்டுவதற்கு தேவையான மதிப்புப் பட்டியல் ரூ. 60,000-க்கு தயாரித்து ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கான ஒரு பெண் மருத்துவ அதிகாரி, ஓர் ஏவலர், ஒரு பெண் தோட்டி. ஒரு காவலர் ஆகியோரின் நியமனங்களையும் ஒப்புதல் செய்ய கோரி பொதுநல இயக்குநருக்கு எழுதப்பட்டுள்ளது. இதற்காக ரூ. 75,000 கடன் கோரி அரசுக்கு மனு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு அரசினரின் ஒப்புதல் கிடைத்தவுடன் மகப்பேறு இல்லத்தை கட்டி முடித்து அதனை செயல் படும்படி செய்ய விரைவான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

## கடையநல்லூர் நகராட்சி
### (திருநெல்வேலி மாவட்டம்)

கடையநல்லூர் நகராட்சி 1966-ம் ஆண்டு அக்டோபர் மாதம் முதல் தேதி முதல் இயங்கி வருகிறது. இந்நகரின் மொத்த மக்கள் தொகை 1961-ம் வருடத்திய கணக்கெடுப்பின்படி 41,260. 1966-ம் வருடத்திய கணக்குப்படி 43,300. இந்நகரிலுள்ள மொத்த வீடுகளின் எண்ணிக்கை 10,100 ஆகும். இந்நகரில் சாலைகளின் மொத்த நீளம் 30 மைல். இந்நகரில் 575 மின் விளக்குகள் உள்ளன. இவற்றில் 64 குழல் விளக்குகள் உள்ளன. இந்நகராட்சி ஒரு தினசரிச் சந்தை, ஒரு வாரச் சந்தை, ஒரு பஸ் நிலையம், ஒரு ஆடு அறுக்கும் தொட்டி முதலியவற்றை நிர்வகித்து வருகிறது. இந்நகராட்சியின் சராசரி வருவாய் ஆண்டு ஒன்றுக்கு ரூ. 2,05,984 ரூபாய் ஆகும்.

இந்நகராட்சிக்குச் சொந்தமான அலுவலகக் கட்டிடம் கட்டுவதற்கு 1966-ம் வருஷம் டிசம்பர் மாதம் 12-ம் தேதியன்று அடிக்கல் நாட்டப்பட்டது. இந்தக் கட்டிடம் கட்டுவதற்கான செலவு ரூபாய் ஒரு லட்சத்து முப்பத்தி ஒன்பதினாயிரம் ஆகும். இந்தக் கட்டிட வேலை பொது சுகாதார பொறியியல் துறையினரின் மேற்பார்வையில் 1967-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 15-ம் தேதிக்குள் கட்டி முடிக்கப்பட்டது. மேற்படி கட்டிடம் 1967-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 21-ம் தேதியன்று நெல்லை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு எம். எம். இராஜேந்திரன், ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமையில் தமிழக முதலமைச்சர் மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

இந்நகரிலுள்ள மக்கள் குடிப்பதற்கும், குளிப்பதற்கும் தண்ணீர் வசதி குறைவாக இருப்பதால், இந்நகருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் அவசியமானதால் இத்திட்டம் ரூ. 30 லட்சம் மதிப்பீட்டில் அரசினரால் ஏற்கனவே அனுமதிக்கப்பட்டுள்ளது. அவற்றில் 1967-68ம் வருஷத்துக்கு அரசினரால் கடையநல்லூர் நகராட்சிக்கு ரூ. 2,50,000 கடனாக வழங்கப்பட்டிருக்கிறது. மேற்படி ரூபாய் 2,50,000-மும் பொது சுகாதார பொறியியல் துறையினர்க்கு நகராட்சியிலிருந்து செலுத்தப்பட்டிருக்கிறது.

## குடியேற்றம் நகராட்சி

### குடிநீர் அபிவிருத்தித் திட்டம்

இந்நகரில் பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டம் சிறிய அளவில் பல ஆண்டுகளாக உள்ளது. வளர்ந்து விட்ட இந்நகருக்கு இது போதுமானதாக இல்லாததால் ஒரு புதிய அபிவிருத்தி திட்டத்தை எடுத்து நடத்த தமிழக அரசு ரூ. 26.34 லட்சம் செலவு கடன் அனுமதித்தனர். திட்ட வேலை நடந்து வருகிறது. மேற்படி திட்டம் நிறைவேறினால் நகரில் எக்காலத்திலும் தண்ணீர் பஞ்சம் ஏற்படாது. இந்த திட்டத்திற்காக இதுவரை ரூ. 23,16,200 செலவு செய்யப்பட்டுள்ளது.

2. இந்நகராட்சிக்கு அரசினர் அளித்த ரூ. 5,000 கடன் தொகையுடன் பேருந்து நிலைய வளைவுக்குள் ஒரு கடை கட்டி 1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 15-ம் தேதி அன்று மன்ற துணைத் தலைவர் திரு. ஆர். கோவிந்தசாமி அவர்களின் தலைமையில் மன்றத்தலைவர் திரு. கே. எம். கோவிந்தராஜன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. மேற்படி கடை வாடகைக்கு விடப்பட்டுள்ளது.

### சுகாதாரக் கடைநிலை ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்கும் திட்டம்.

சுகாதார கடைநிலை ஊழியர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க இந் நகராட்சிக்குத் தமிழக அரசு ரூ. 18,000 கடனாகவும், ரூ. 18,000 உதவித் தொகையாகவும் அளித்தனர். 10 வீடுகள் கட்டும் வேலை தொடங்கப்பட்டு நடந்துவருகிறது.

### பயன் தரு முயற்சிகள்

நகர் மன்ற அலுவலக வளைவுக்குள் ஆறு கடைகள் கட்ட ரூ. 24,500 கடனும் மாட்டு சந்தை காலி இடத்தில் ஆறு கடைகள் கட்ட ரூ. 24,500 கடனும் தமிழக அரசினால் இந் நகராட்சிக்கு அளிக்கப்பட்டது. கடைகள் கட்டும் வேலை விரைவாக நடந்து வருகிறது.

மேற்படி வேலைகள் முடிந்து கடைகளை வாடகைக்கு விட்டால் நகராட்சியின் வருவாய் கூடுதலாகும்.

இந் நகருக்கு 1967-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 17-ம் தேதியன்று வருகை புரிந்த மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் திரு. இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு நகர் மன்றம் ஒரு வரவேற்புரை அளித்தது. அது சமயம் இந் நகரத்தில் ஒரு தொழில்பேட்டையை நிறுவவும், நகரில் இருக்கும் கல்லூரியில் மாணவியரை சேர்க்க அனுமதியளிக்கவும், மன்றத்தினால் நடத்தப்படும் இரண்டு உயர்நிலைப் பள்ளிகளை அரசினரே ஏற்று நடத்தவும், வேண்டி கோரிக்கைகளை அமைச்சரிடம் கொடுக்கப்பட்டது.

### சேரணி அமைப்பு

தமிழகத்தில் மற்ற மாவட்டங்களில் ஏற்படுத்தப்பட்டது போல் இம் மாவட்டத்திலும் ஒரு சேரணிப் படை ஏற்படுத்துவது சம்பந்தமாக வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்க இந் நகரத்தில் நகர்மன்ற ஆணையர் அவர்களால் 1967-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 24-ம் தேதியன்று ஐம்பது பேர் கொண்ட ஒரு நகர சேரணி அமைக்கப்பட்டது.

### கீழ்க்காணும் பொதுப்பணிகள் சேரணி தொண்டர்களினால் ஏற்று நடத்தப்படவிருக்கின்றன :—

1. 15 நகர் மன்றத் தொடக்கப் பள்ளிகளுக்கும் வெள்ளை அடித்தல்.
2. இரண்டு நகராட்சி உயர்நிலைப் பள்ளிக் கட்டிடங்களுக்கும் வெள்ளை அடித்தல்.
3. பள்ளிக் கட்டிடச் சுற்றுப்புறங்களைச் சமப்படுத்தி துப்புரவு செய்தல்.
4. கஸ்பா காலனியிலிருந்து புவனேஸ்வரிப்பேட்டை வழியாக பொடிப்பேட்டை ரோடை இணைக்கும் ஒரு சாலை அமைத்தல்.
5. கங்காதர மடாலயம் தெருவில் ஒரு பள்ளிக் கட்டிடம் கட்டுதல்.
6. நெல்லூர்பேட்டை நகர் மன்ற உயர்நிலைப் பள்ளியின் விளையாட்டு மைதானத்தைச் செப்பனிட்டு சமப்படுத்தல்.

கிராம நலம் பகுதி—2
GRAMANALAM PART—2

# ஊராட்சி அரசிதழ்
# PANCHAYAT GAZETTE

(இந்தப் பகுதியில் ஊராட்சி, ஊராட்சி வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய அரசு ஆணைகள், குறிப்பாணைகள், விதிகள் முதலியவற்றின் தமிழாக்கம் சுருக்கமாக இடம் பெறுகிறது.)

—o—

## "கிராம நலம்" இதழில் விளம்பரங்கள்—ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

## Books and Publications "Gramanalam" Tamil monthly published by the Director of Rural Development, Madras—Advertisements in the Journal—Orders passed.

"கிராமநலம்" என்ற திங்கள் இதழ் 1955-ம் ஆண்டு முதல் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. கிராம வாசிகள், தங்களின் வேளாண்மை, கால்நடை பராமரிப்பு, குடிசைத் தொழில், பொதுச் சுகாதாரம் போன்றவற்றை வளர்ச்சி செய்து கொள்வதற்கு தகுந்த வழிமுறைக் கூறி, அவர்களை முன்னேற்றப் பாதையில் அழைத்துச் செல்லும் நோக்குடனே இந்த இதழ் வெளியிடப்படுகிறது. இதன் ஆண்டுச் சந்தா ரூ. 2 மட்டுமே. தற்போதுள்ள நிதி நிலையை விட, இந்த இதழின் நிதி நிலை தன்னைத் தானே உதவிக்கொள்ளக்கூடிய முறையில் இருக்க வேண்டுமென்றும், பயனுள்ள விளம்பரங்களை வெளியிடுவதன் மூலம், கிராமங்களிலுள்ளவர்களுக்கு—சிறப்பாக உழவர்களுக்கு அவை உதவியாயிருக்குமென்றும்எண்ணி' இந்த இதழில், 12 பக்கங்களுக்கு, வணிக விளம்பரங்களைச் சேர்த்துக் கொள்ளலாம் என்று யோசனைத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2. இந்த யோசனையை அரசு ஏற்றுக்கொண்டு, 1968-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் "கிராமநலம்" இதழில், 12 பக்கங்களுக்கு மேற்படாமல் கீழ்க்காணும் முறைகளின்படி. விளம்பரங்களைச் சேர்த்துக் கொள்ள வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

(அ) முழுப் பக்கத்திற்கும், அரைப்பக்கத்திற்கு மட்டுமே விளம்பரங்கள் ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

(ஆ) விளம்பரக் கட்டணம் வருமாறு.—

| | அவ்வப்போது வெளியிடும் விளம்பரங்களுக்கு (casual) | குத்தகையாக (contract)) ஒரே அளவில் குறைந்தது 12 விளம்பரங்கள் |
|---|---|---|
| இரண்டாவது, மூன்றாவது அட்டைகள்— | | |
| | ரூ. | ரூ. |
| முழுப் பக்கம் | 420 | 315 |
| அரைப் பக்கம் | 215 | 165 |

| | அவ்வப்போது வெளியிடும் விளம்பரங்களுக்கு (casual) | குத்தகையாக (contract) ஒரே அளவில் குறைந்தது 12 விளம்பரங்கள். |
|---|---|---|
| நான்காவது அட்டை. | | |
| முழுப் பக்கம் | 450 | 325 |
| அரைப் பக்கம் | 230 | 170 |
| உள் பக்கங்கள்— | | |
| முழுப் பக்கம் | 400 | 300 |
| அரைப் பக்கம் | 210 | 160 |

(இ) துவக்கத்தில் விளம்பரங்கள் சாதாரண இடங்களிலேயே இருத்தல் வேண்டும்.

(ஈ) விளம்பர முகவர்களின் (Advertising Agencies) சேவையை பயன்படுத்திக் கொள்ளலாம்; ஒரே ஒரு விளம்பர முகவர் தான் இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை. மொத்த வியாபார உத்தரவாதமும் இருக்க வேண்டிய அவசியமில்லை.

(உ) "கிராமநலம்" இதழுக்காக சேகரிக்கப்பட்ட விளம்பரங்களுக்கென, முகவர்களுக்கு 15 சதவீதம் (பதினைந்து சதவீதம்) கழிவு (Commission) அளிக்கப்படவேண்டும். விளம்பரங்களை அனுப்புகையிலேயே, விளம்பர கட்டணத்திலிருந்து கழிவை, முகவர்கள் எடுத்துக் கொள்ளலாம். முகவர்கள் விளம்பரங்களை அனுப்பி விட்டு, அதற்குரிய கட்டணத்தை, விளம்பரதார்கள் மக்கள் தொடர்பு அதிகாரிக்கு நேரிடையாக அனுப்பிவிட்டால், விளம்பரத்திற்குரிய கழிவுத் தொகையை, மக்கள் தொடர்பு அதிகாரி, முகவர்களுக்கு செலுத்தவேண்டும்; ஆனால் விளம்பரதாரர்கள் செலுத்தவேண்டிய கட்டணம் முழுவதும் கிடைத்த பின்பே, மேற்கண்ட கழிவுத் தொகையை முகவர்களுக்கு அளிக்கவேண்டும்.

(ஊ) முகவர்களிடமிருந்து முதல் விளம்பரம் கிடைத்த பின்னர், அவர்களை விளம்பர முகவர் என்று ஏற்றுக்கொண்டு, அவர்களின் பெயரை தன்னுடைய அலுவலகத்தில், மக்கள் தொடர்பு அதிகாரி பதிவு செய்துக் கொள்ளவேண்டும்.

(எ) விளம்பரங்களின் நகல்கள், தேவையான "பிளாக்கு" (Blocks) களைப் பெறுவதற்கும், விளம்பரங்களை அச்சிடுவதற்கு தேவையான விளக்கங்கள் தருவதற்கும், ஆவணங்கள் (Records) போன்றவற்றை நிர்வகிப்பதற்கும் முகவர்களே பொறுப்பாளியாவார்கள்.

(ஏ) விளம்பரங்களைப் பெறுவதற்கு முகவர்கள் அனுமதிக்கப்படுவர். "கிராமநலம்" ஆசிரியரிடமிருந்து எழுத்து மூலம், முன்னரே அனுமதி பெறாத எந்த விளம்பரங்களையும், முகவர்கள் ஏற்றுக்கொள்ளக்கூடாது. "கிராமநலம்" ஆசிரியர் தகுதியெனக் கருதும் எக் காரணத்துக்காகவேனும், விளம்பரங்களை மறுக்கவோ, அல்லது அவற்றில் மாற்றங்கள் கோரவோ, அல்லது விளம்பரங்களின் தோற்றத்திலுள்ள சொற்கள், அமைப்பு அல்லது படங்களை மாற்றவோ, விளம்பரங்களை வெளியிட ஒரு குறிப்பிட்ட காலத்தை நிர்ணயிக்கவோ, அவருக்கு முழு உரிமை உண்டு.

(ஐ) மக்கள் தொடர்பு அதிகாரிக்கு நேரிடையாக வரும் விளம்பரங்கள் அல்லது நேர் உதவியாளர்களின் (ஊராட்சி வளர்ச்சி) வாயிலாக வரும் விளம்பரங்களுக்கு எவ்வித கழிவுத் தொகையும் கிடையாது.

• • •

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967ம் ஆண்டு நவம்பர் 27ம் நாளிட்ட அரசு ஆணை எண் 2187-ன் சுருக்கம்.

---

## சமுதாய வளர்ச்சி, ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களை, "கிராமநலம்" இதழில் பிரசுரித்தல்—விளக்க ஆணைகள்—பிறப்பிக்கப்படுகின்றன.

## Publicity—Activities under Community Development and Panchayat Development Programmes—Publication in the journal of "Gramanalam"—Instructions—Issued.

புகைப்படக் கருவிகளை, வருவாய்க் கோட்ட அதிகாரிகளின் பாதுகாப்பில் வைத்து, ஊராட்சி ஒன்றிய ஆணையர்களுக்கு அவற்றின் தேவை எழும்போதெல்லாம் வானொலி மேற்பார்வையாளர்கள் புகைப்படம் எடுக்க வேண்டுமென்று ஆணைகள் பிறப்பித்து, கிராம வளர்ச்சி உள்ளாட்சித்துறையின் 1967-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 17-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 304-ல், ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. மேலும், போட்டிகளுக்கு பரிசுகள் வழங்குதல், வானொலி மேற்பார்வையாளரிடமுள்ள புகைப்படக் கருவிகளுக்கு பிலிம் சுருள்கள் (Film Rolls) வாங்குதல், புகைப்படங்களைப் பெரிதாக்கி, அச்சடித்தல் ஆகிய செயல்களுக்கென சமூகக் கல்வி மாதிரித் திட்டத்தில் ஓர் ஒன்றியத்திற்கு, ஓர் ஆண்டிற்கு, ரூ. 50 ஒதுக்கப்பட்டுள்ளது. சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், ஊராட்சி வளர்ச்சித் திட்டங்களில், சிறப்பாக வளர்ச்சிப் பணிகளுக்கு விளம்பரம் அளிக்கும் வகையில், இப்புகைப்படக் கருவிகளை நன்கு பயன்படுத்தி, புகைப்படங்களை எடுத்து, அவற்றின் பேரில் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களால் செய்திக் குறிப்புகள், சாதனைக் குறிப்புகள், மற்றும் சிறப்புக் கட்டுரைகள் எழுதப்பட்டு, அவை "ஆசிரியர், "கிராம நலம்", கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகம், சென்னை-9" என்ற முகவரிக்கு "கிராமநல"த்தில் பிரசுரிப்பதற்கென அனுப்பி வைக்குமாறு, வருவாய்க் கோட்ட அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967-ம் ஆண்டு நவம்பர் 6-ம் நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 131802-ன் சுருக்கம்)

---

## மாண்புமிகு முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை அவர்களின் திருவுருவப்படத்தை குடியாத்தம் ஊராட்சி ஒன்றிய மன்றத்தில் அமைத்தல்.

## Portrait—Gudiyatham Panchayat Union Council (North Arcot District)—Portrait of Thiru C. N. Annadurai, Chief Minister of Madras—Installation—Permitted.

குடியாத்தம் ஊராட்சி ஒன்றிய மன்றம் கூடும் அறையில், தமிழக அரசு முதலமைச்சர் மாண்புமிகு திரு சி. என். அண்ணாதுரை அவர்களின் திருவுருவப் படத்தை அமைக்கவேண்டுமென்று, ஊராட்சியின் 1967-ம் ஆண்டு ஜூலை 31-ம் நாளிட்ட தீர்மானம் எண் 50-ல் உள்ள கோரிக்கைக்கு அரசு அனுமதியளிக்கிறது.

2. திருவுருவப் படத்தை வாங்கி, அமைப்பதற்கு ஏற்படும் செலவுகள் அனைத்தும் தனியாரின் நிதிகளிலிருந்து செலவழிக்கப்படவேண்டும்.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967-ம் ஆண்டு நவம்பர் 4-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1748.)



## கிராம மனித சக்தித் திட்டம்—திட்டம் செயல்படாத வட்டாரங்களை நீக்கி, அதற்கு மாறாக வேறு வட்டாரங்களைத் தேர்ந்தெடுத்தல்—ஆணைகள்—பிறப்பிக்கப்படுகின்றன

## Rural Manpower Programme—Implementation of—1967-68—Invalidating of blocks from the operation of the Rural Manpower programme and the selection of blocks in the place of weeded out ones—Orders issued.

மத்திய அரசின் உதவியுடன், கிராம மனித சக்தித் திட்டம், இம்மாநிலத்தில் 72 ஊராட்சி ஒன்றியங்களிலே இப்போது செயல்பட்டு வருகிறது. கிராம மனித சக்தித் திட்டம் செயல்படுவது பற்றி பரிசீலனை செய்யவேண்டுமென்றும், அப்போது தான், திறமுடன் செயலாற்றாத வட்டாரங்களை குறிப்பாக அறிந்து அவற்றை நீக்கிவிட முடியுமென்றும் உணவு, விவசாயம், சமுதாய வளர்ச்சி மற்றும் கூட்டுறவு அமைச்சகம் யோசனை கூறியுள்ளது. அதற்கேற்ப, இத்திட்டம் நிறைவேற்றப்படுவது பற்றி, மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன் கலந்தாலோசித்து, தமிழக கிராம வளர்ச்சி இயக்குநர் பரிசீலனை செய்தார். இவ்வட்டாரங்களின் நிதிநிலை, மக்கள் தொகையின் அமைப்பு, பரப்பளவு, பொருளாதாரநிலை போன்ற இதர முக்கிய ஆதாரங்களுடன் நிதி, திட்ட சாதனைகளைக் கருத்தில் கொண்டு, 72 வட்டாரங்களிலும் இத்திட்டம் செயல்படுவது பற்றி விரிவாக பரிசீலனை செய்யப்பட்டது. கிராம மனித சக்தித் திட்டத்திலிருந்து, கீழ்க்கண்ட ஐந்து வட்டாரங்களையும் நீக்கி விடுதற்குரியகோரிக்கைகளை கிராம வளர்ச்சி இயக்குநர் அனுப்பியுள்ளார்.

1. சோழவரம் வட்டாரம் — செங்கற்பட்டு மாவட்டம்
2. அன்னூர் வட்டாரம் — கோயம்புத்தூர் மாவட்டம்
3. அவினாசி வட்டாரம் — கோயம்புத்தூர் மாவட்டம்
4. பரமக்குடி வட்டாரம் — இராமநாதபுரம் மாவட்டம்
5. அன்னவாசல் வட்டாரம் — திருச்சிராப்பள்ளி மாவட்டம்

நீக்கப்பட்ட வட்டாரங்களுக்கு மாறாக, சில வட்டாரங்களில் கிராம மனித சக்தித் திட்டத்தை விரிவாக்கலாம் என்று அவர் கருத்துத் தெரிவித்துள்ளார். தங்களது வட்டாரங்களுக்கு கிராம மனித சக்தித் திட்டம் விரிவாக்கப்படவேண்டுமென்று ஊராட்சி ஒன்றியங்களிடமிருந்து வேண்டுதல்களும் கிடைக்கப் பெற்றுள்ளன.

2. கிராம வளர்ச்சி இயக்குநரின் கருத்தை, கவனமாகப் பரிசீலனை செய்தபின், அதை அரசு ஏற்றுக் கொண்டு, அதற்கேற்ப, கிராம மனித சக்தித் திட்டம் செயல்படுவதினின்றும் கீழ்க்கண்ட ஐந்து, செயல்படாத வட்டாரங்கள் உடனடியாக நீக்கப்படவேண்டுமென்று ஆணை பிறப்பிக்கிறது.

1. சோழவரம் வட்டாரம் — செங்கற்பட்டு மாவட்டம்
2. அன்னூர் வட்டாரம் — கோயம்புத்தூர் மாவட்டம்
3. அவினாசி வட்டாரம் — கோயம்புத்தூர் மாவட்டம்
4. பரமக்குடி வட்டாரம் — இராமநாதபுரம் மாவட்டம்
5. அன்னவாசல் வட்டாரம் — திருச்சிராப்பள்ளி மாவட்டம்

கிராம வளர்ச்சி இயக்குநரின் கருத்துக்களையும், இத் திட்டம் நிறைவேற்றப்படுவதினின்றும் நீக்கப்பட்ட வட்டாரங்களின் இடங்களில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்கென ஊராட்சி ஒன்றியங்களிலிருந்து கிடைக்கப்பெற்றுள்ள வேண்டுதல்களையும் கவனமாக பரிசீலனை செய்தபின், நடப்பாண்டில், கீழ்க்காணும் ஐந்து வட்டாரங்களில் கிராம மனித சக்தித் திட்டம் நிறைவேற்றப்படவேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

1. நாமக்கல் வட்டாரம் — சேலம் மாவட்டம்
2. திருப்பத்தூர் வட்டாரம். — வட ஆர்க்காடு மாவட்டம்
3. திருப்பத்தூர் வட்டாரம் — இராமநாதபுரம் மாவட்டம்
4. முகையூர் வட்டாரம் — தென் ஆர்க்காடு மாவட்டம்
5. நரிக்குடி வட்டாரம் — இராமநாதபுரம் மாவட்டம்

3. முடிவுறாத வேலைகளை நடப்பாண்டில் முடித்துவிடுவதற்கு, மேற்கண்ட பத்தி 2-ல் குறிப்பிட்டுள்ள நீக்கப்பட்ட வட்டாரங்களுக்கு அரசு அனுமதியளிக்கிறது; ஆனால் எந்த புதிய வேலையையும் அவை மேற்கொள்ளக்கூடாது.

4. இவ்வாணையின்படி செயல்படவிருக்கும் ஐந்து புதிய வட்டாரங்கள் ஒவ்வொன்றும், 1967–68-ம் ஆண்டிற்கென, ரூ. 75,000 வரை மதிப்புள்ள வேலைகளுக்கு திட்ட மதிப்பீடுகளைத் தயாரிக்க அரசு அனுமதியளிக்கிறது. புதிய வட்டாரங்கள் ஒவ்வொன்றிற்கும் நடப்பாண்டிற்கு சரியாக ஒதுக்கப்பட்டுள்ள நிதி அளவு, கிராம வளர்ச்சி இயக்குநரால் காலப் போக்கில் தெரிவிக்கப்படும்.

• • •

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967ம் ஆண்டு நவம்பர் 18ம் நாளிட்ட அரசு ஆணை எண் 2107-ன் சுருக்கம்)

---

## சமுதாய வளர்ச்சித் திட்டம்—கிராமத் தொழில்கள்—கிராமக் கலைகள், கைவினைப் பொருள்கள் தொழில்கள்—வட்டாரத்திலுள்ள தச்சு, கருமார்த் தொழிற் பிரிவுகள்—உழுபடைக கருவிகளைப் பழுது பார்த்தல்—விளக்க ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

## Community Development Programme—Village Industries—Rural Arts, Crafts and Industries—Carpentry and Blacksmithy units in Block—Undertaking of repairs to agricultural Implements—Instructions issued.

தெளிப்பான்கள் போன்ற சாதாரண கருவிகளைப் பழுது பார்ப்பதற்குக் கூட, வட்டாரங்களில் ஏற்பாடுகள் இல்லையென்பதும், அதனால் அவை பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன என்பதும், சிறிய பழுதுகளைச் செப்பனிடுவதற்குக்கூட அக்கருவிகளை வினியோகித்த நிறுவனங்களுக்கே அவை அனுப்பப்படுகின்றன என்பதும் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. உழுபடைக் கருவிகள் மற்றும் சாதனங்களை, ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள தச்சு, கருமார்த் தொழிற் பிரிவுகளில் செப்பனிட்டுக் கொள்ளலாம் என்று கருத்து தெரிவிக்கப்பட்டுள்ளது. இவ்வித கருவிகளை செப்பனிடுதற்குரிய செலவினங்கள், எந்த கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும் என்பதை ஊராட்சி ஒன்றியங்கள் நிர்மானிக்க இயலாதிருப்பதால், அவற்றைப் பழுது பார்க்க, ஊராட்சி ஒன்றியங்கள் தயக்கமடைகின்றன என்று குறிப்பாக கூறப்பட்டுள்ளது.

(2) உழுபடைக் கருவிகளைச் செப்பனிடும் பணியை, வட்டாரத்திலுள்ள தச்சு, கருமார்த் தொழிற் பிரிவுகள் மேற்கொள்ள வேண்டுமென்றும், சிக்கலான, நுணுக்கமான பழுதுகள் ஏற்பட்டிருக்கையில், விவசாய உதவிப் பொறியாளரின் உதவியை நாட வேண்டும் என்றும், கவனமாக பரிசீலனை செய்த பின், அரசு ஆணை பிறப்பிக்கிறது. எவ்வகை கருவிகளுக்கு அவர்களின் உதவி தேவைப்படுமோ, அவற்றின் பெயர்களடங்கிய பட்டியல் ஒன்றைத் தயாரித்துக்கொண்டு, விவசாய உதவிப் பொறியாளரின் உதவியை—அவரின் வருகையின்போது—நன்கு பயன்படுத்திக்கொள்ள வேண்டும். ஊராட்சி ஒன்றியக் கருவிகளுக்குரிய செப்பனிடும் செலவுகளை, ஊராட்சி ஒன்றியங்களின் பொது நிதிகளிலிருந்து செலவழித்து, கணக்குப் புத்தகங்கள் அளவிலேயே (Book Adjustments) சரி செய்துக் கொள்ள வேண்டும். தனியாரின் உழுப்படைக் கருவிகளைப் பழுது பார்க்கும் நேர்வுகளிலெல்லாம், அவர்களிடமிருந்து "சென்டேஜ்" கட்டணங்களை, கிராமத் தொழில்கள் திட்டங்களிலுள்ள பொது வசதித் தொழில் பட்டறைகள் பின்பற்றும் விதிகளின்படி வசூலிக்க வேண்டும், அதாவது, கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 9-11-1966 நாளிட்ட அரசு ஆணை எண் 2037-ல் பிறப்பிக்கப்பட்டுள்ள (நகல் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அதை கீழே காண்க) ஆணைகளின்படி "சென்டேஜ்" கட்டணங்கள் வசூலிக்கப்படவேண்டும். எப்படியெனில் ஒரு மணி நேரத்திற்கு, ஒரு நபருக்கு ரூ. 1 வீதத்தில் (ரூபாய் ஒன்று மட்டும்) ஊதியக் கட்டணத்துடன், உழைப்புக் கட்டணமாக 100 சதவீதமும் (ஒரு நூறு சத வீதம் மட்டும்), செப்பனிடுவதில் பயன்படுத்தப்பட்ட கருவிகளுக்குரிய விலையும் சேர்த்து வசூலிக்கப்பட்டு, அந்த தொகையானது, ஊராட்சி ஒன்றியத்தின் பொது நிதிகளில் வரவு வைக்கப்பட வேண்டும். மேலும், தொழிற் பிரிவுகளில் நிர்வகிக்கப்படும் கணக்குகளில் (Pro forma Accounts) தேவையான பதிவுகளைச் செய்த பின்னரே, மேற்கண்டவாறு வரவு வைத்துக்கொள்ள வேண்டும்.

* * *

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 19—9—1967 நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 40898-ன் சுருக்கம்)

(மேற்கண்ட அரசு குறிப்பாணையுடன் இணைக்கப்பட்டுள்ள அரசு ஆணை நகலின் தமிழாக்கம்.)

---

## கிராமத் தொழில்கள் திட்டம்—நாங்குநேரித் திட்டம்—பொது வசதி தொழிற்பட்டறைகள்—நிர்வாகச் செலவுகள் - கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 13-4-1966 நாளிட்ட அரசு ஆணை எண் 644-ல் பிறப்பிக்கப்பட்டுள்ள நடைமுறைகளை மேலும் நீடித்தல்—அனுமதிக்கப்படுகிறது

## Rural Industries Project—Nanguneri Project—Common Facility Centres—Charging of Overheads—Further Continuance of the procedure laid down in G. O. Ms. No. 644, R. D. & L. A., dated 13-4-1966—Sanctioned.

நாங்குநேரி திட்டப் பகுதிகளிலுள்ள 10 பொது வசதி தொழிற் பட்டறைகளிலும், ஒரு மணி நேரத்திற்கு, ஒரு நபருக்கு ரூ. 1 (ரூபாய் ஒன்று மட்டும்) வீதத்தில் ஊதியக் கட்டணத்துடன், உழைப்புக் கட்டணமாக 100 சத வீத (ஒரு நூறு சத வீதம் மட்டும்) "சென்டேஜ்" நிர்வாகக் கட்டணமும், கருவிகளைச் செப்பனிடுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட பொருள்களுக்குரிய விலையையும் சேர்த்து மொத்தமாக வசூலிக்க வேண்டுமென்று, கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 13-4-1966 நாளிட்ட அரசு ஆணை எண் 644-ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. மேற்கண்ட நடைமுறைகளை வருங்காலத்திற்கும் நீடிக்கலாம் என்று தொழில், வணிக இயக்குநர் பரிந்துரை செய்துள்ளார். தொழில், வணிக



இயக்குநரின் பரிந்துரையை அரசு ஏற்றுக்கொண்டு, அதற்கேற்ப, நாங்குநேரி திட்டப் பகுதிகளிலுள்ள 10 பொது வசதி தொழிற்பட்டறைகளிலும், ஒரு மணி நேரத்திற்கு, ஒரு நபருக்கு ரூ. 1 (ரூபாய் ஒன்று மட்டும்) வீதத்தில் ஊதியக் கட்டணத்துடன், உழைப்புக் கட்டணமாக 100 சதவீத (ஒரு நூறு சதவீதம் மட்டும்) "சென்டேஜ்" நிர்வாகக் கட்டணமும், கருவிகளைச்செப்பனிடுவதற்காகப் பயன்படுத்தப்பட்ட பொருள்களுக்குரிய விலையையும் சேர்த்து மொத்தமாக வசூலிக்கப்படவேண்டும் என்ற நடைமுறையானது 1-8-1966 முதல் மேலும் 6 திங்களுக்கு நீடிக்க வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

* * *

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித்துறையின் 9-11-66 நாளிட்ட அரசு ஆணை எண் 2031-ன் சுருக்கம்.)

---

## கையாடல்—'காசோலை'களிலுள்ள எழுத்துக்களை கள்ளத்தனமாக மாற்றுவதால் ஏற்படும் இழப்பு—முன்னெச்சரிக்கையான நடவடிக்கைகளை தவறாது பின்பற்றுதல்.

## Embezzlement—Loss due to fradulent alteration in cheques—Precautionary measures Instructions—Issued—Strict adherence of.

ரூபாய் 1000-க்கும் மேற்பட்ட தொகைகளுக்குரிய 'காசோலை' (Cheques) கள் 'குறுக்குக் கோடிடா(Uncrossed) தவாறே பெரும்பாலான நேர்வுகளில், நெடுஞ்சாலை, கிராமப் பணிகள் துறை, பொதுப்பணிகள் துறை, ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள், ஊராட்சி நிர்வாக அதிகாரிகள் ஆகியோரால், இன்னும் அளிக்கப்பட்டு வருகின்றன என்பது, கருவூல, கணக்குகள் இயக்குநரால் அரசின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது. தமிழக கருவூல நியதி (Madras Treasury Code)யிலுள்ள டி. ஆர். 16-ன் கீழ், துணை விதி 42 (b)-ல் உள்ள விதித் துறைகளுக்கு (Provisions) இச்செயல் எதிராக இருப்பதாலும், இதுபற்றி நிதித் துறையின் 1966-ம் ஆண்டு நவம்பர் 21-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1412-ல் ஏற்கனவேயே தெளிவான விளக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளதாலும், ரூ. 1000-க்கு மேற்பட்ட காசோலைகளை அளிக்கையில் மேற்கண்ட ஆணையிலுள்ள விளக்கங்களை தவறாது பின்பற்றும்படி, தங்கள் கீழுள்ளவர்களுக்கு ஆணைகள் பிறக்குமாறு துறைத் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(நிதித் துறையின் 1967-ம் ஆண்டு மே 25-ம் நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 50300-ன் சுருக்கம்)

---

## பர்மா அகதிகளின் துயர் துடைப்பு, சீரமைப்பு—ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களில் அவர்களுக்கு வேலை வாய்ப்பு தருதல்.

## Repatriates from Burma—Relief and Rehabilitation—Provision of employment in Panchayats and Panchayat Unions.

அரசுப் பணிகளிலுள்ள பல்வேறு பதவிகளிலே பர்மா அகதிகளை நியமனம் செய்வதில் சில சலுகைகளை அளிப்பது பற்றி அரசு பரிசீலனை செய்தது. ஒவ்வொரு அகதியின் தகுதியையும் பற்றித் தனித் தனியே பரிசீலனை செய்தபின், அவர் நியமனத்திற்கு தகுதியுடையவராயிருப்பின், விதிகளை தளர்த்திக்கொள்ளலாம் என்று பொதுத் துறையின் 1965-ம் ஆண்டு ஜனவரி 21-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 10-ல் அரசு ஆணை பிறப்பித்துள்ளது. பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றிலுள்ள பதவிகளில் கூட பர்மா அகதிகளை நியமித்துக்கொள்வதில் இதேவித சலுகைகளை அளிக்கலாம் என்று அரசு எண்ணுகிறது.

அதற்கேற்ப, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள பதவிகளுக்கு நியமனம் செய்கையில், அவ்வித பதவிகளுக்கு பர்மா அகதிகள் தகுதியுடையவர்களாயிருப்பின், அவர்களுக்கு சலுகைகள் அளிக்கும்படியும் அதற்கேற்ப அவர்களை நியமிக்க விதிகளைத் தளர்த்துவதற்கு அரசைக் கேட்டுக்கொள்ளும்படியும், பேரூராட்சி நிர்வாக அதிகாரிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் ஆகியோருக்கு தெரிவிக்கப்படுகிறது.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967-ம் ஆண்டு நவம்பர் 10-ம் நாளிட்ட அரசு குறிப்பாணை எண். 117502-ன் சுருக்கம்)

---

## நிதி நிலை அறிக்கை—மானியக் கோரிக்கை எண்களை அனைத்து நாடுகள் எண்களுக்கு மாற்றுதல்.

## Budget—Demands for grants—Numbers—Change over to Arabic figures—Regarding.

நடப்பாண்டிற்குரிய துணை மானியக் கோரிக்கைகளில், கோரிக்கை எண்களெல்லாம் அனைத்து நாடுகள் எண்களில் (Arabic numerals) விவரிக்கப்பட்டு, அவற்றிற்குரிய ரோமன் எண்கள் அடைப்புக் குறிகளில் காண்பிக்கவேண்டும் என்று, நிதித்துறையின் 14—8—1967 நாளிட்ட அரசு ஆணை எண் 744-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளைத் தொடர்ந்து, அரசு ஆணை பிறப்பிக்கிறது.

(நிதித் துறையின் 18-9-1967 நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 92232)

## 1965-ம் ஆண்டு தமிழக பொதுக் கட்டிடங்கள் (உரிமம் வழங்குதல்) சட்டம்—தனிப் பொறுப்பு வகிக்கும் துணைத் தாசில்தார்களை, தகுதி பெற்ற அதிகாரிகளில் சேர்த்துக் கொள்ளுதல்—அறிவிக்கப்படுகிறது.

## Madras Public Buildings (Licensing) Act, 1965—Competent Authorities—Notified under the Act—Inclusion of Independent Deputy Tahsildars as Competent Authorities—Notified.

1965-ம் ஆண்டு தமிழக பொதுக் கட்டிடங்கள் (உரிமம் வழங்குதல்) சட்டத்தில், குறிப்பிடப்பட்டுள்ள பகுதிகளில், தகுதி பெற்ற அதிகாரிகளாக (Competent Authority), அவரவர்களின் அலுவல் வரம்பில் செயல்புரிய, வருவாய்த் துறையைச் சார்ந்த தாசில்தாரர்களுக்கு அதிகாரம் அளித்து, கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1966-ம் ஆண்டு பிப்ரவரி 4-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 195, மற்றும் 1966-ம் ஆண்டு மே 17-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1244 ஆகியவற்றில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. (இவ்வாணைகளின் தமிழாக்கத்தை "கிராம நலம்" இதழ்களில் முறையே 1966-ம் ஆண்டு ஜூன், 1967-ம் ஆண்டு ஜனவரி திங்கள் இதழ்களில் காண்க.) மேற்கண்ட அரசு ஆணைகளில் குறிப்பிடப்பட்டுள்ள "தாசில்தார்கள்" என்ற சொல்லானது, தனிப் பொறுப்பு வகிக்கும் துணைத் தாசில்தார்களையும் (Independent Deputy Tahsildars) சேர்த்துத்தான் என்று, வட ஆர்க்காடு மாவட்ட ஆட்சித் தலைவர் விளக்கம் கோரியுள்ளார். மாவட்ட ஆட்சித் தலைவரின் இக்கேள்வியை வருவாய்த் துறை கழகத்துடன் அரசு பரிசீலனை செய்தது. மேற்படி சட்டத்தில், தகுதி பெற்ற அதிகாரிகளின் அலுவல்களைச் செய்ய, தனிப் பொறுப்பு வகிக்கும் துணைத் தாசில்தார்களையும் சேர்த்துக்கொள்வதென, அரசு முடிவு செய்துள்ளது.

2. அதற்கேற்ப பிற்சேர்க்கையிலுள்ள அறிவிப்பு செயின்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழில் பிரசுரிக்கப்படும்.

### பிற்சேர்க்கை

1965-ம் ஆண்டு தமிழக பொதுக் கட்டிடங்கள் (உரிமம் வழங்குதல்) சட்டத் (தமிழகச் சட்டம் 13/1965) திலுள்ள பிரிவு 2-ன் உட்பிரிவு (2)-ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, 1966-ம் ஆண்டு பிப்ரவரி 16-ம் நாளிட்ட செயின்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழ் பாகம் II, பிரிவு 1, பக்கங்கள் 198—199-ல் வெளியிடப்பட்டுள்ள கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1966-ம் ஆண்டு பிப்ரவரி 4-ம் நாளிட்ட, 1966-ம் ஆண்டு அறிவிப்பு 11—1—5490-க்கு (பிறகு திருத்தப்பட்டுள்ளவாறு), தமிழக கவர்னர் அவர்கள், கீழ்க்கண்ட திருத்தங்களைச் செய்கிறார்கள்.

### திருத்தங்கள்

மேற்சொன்ன அறிவிப்பிலுள்ள அட்டவணையில்—

1. பத்தி (1) மற்றும் (2)-ல் உள்ள 3-வது இனத்திற்கும், அது சம்பந்தப்பட்ட குறிப்பிற்கும் மாறாக, கீழ்க்கண்ட இனமும், குறிப்பும் முறையே சேர்க்கப்படவேண்டும்.

அதாவது :—

| | |
|---|---|
| 3. தாசில்தாருடன், தனிப் பொறுப்பு வகிக்கும் துணைத் தாசில்தாரும் சேர்ந்து. | நிலைமைக்கேற்றவாறு—தாலுகாவிலுள்ள கட்டிடங்கள் அனைத்திலும், வருவாய்க் கோட்ட அதிகாரி தகுதி பெற்ற அதிகாரியாக இல்லாத கட்டிடங்கள். |

2. பத்தி (1) மற்றும் (2)-ல் உள்ள 4-வது இனத்திற்கும் அது சம்பந்தப்பட்ட குறிப்பிற்கும் மாறாக, கீழ்க்கண்ட இனமும், குறிப்பும் முறையே சேர்க்கப்படவேண்டும்.

அதாவது :—

| | |
|---|---|
| 4. நீலகிரி மாவட்டத்திலுள்ள தாசில்தார் அல்லது தனிப் பொறுப்பு வகிக்கும் துணைத் தாசில்தார். | நிலைமைக்கேற்றவாறு—தாலுகா, அல்லது சப்- தாலுகாவிலுள்ள கட்டிடங்கள் அனைத்திலும், மாவட்ட ஆட்சித் தலைவரின் நேர் உதவியாளர் (பொது) தகுதிபெற்ற அதிகாரியாக இல்லாத மற்ற எல்லாக் கட்டிடங்கள். |

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967-ம் ஆண்டு அக்டோபர் 13-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1880).



## விடுமுறை நாட்கள்—1968-ஆம் ஆண்டிற்குரிய பொது, அரசு விடுமுறை நாட்கள்—ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

## Holidays—Public and Government, 1968—Orders Passed.

**1968**-ம் ஆண்டிற்குரிய, தமிழக விடுமுறை நாட்களை யொட்டி. அரசு கீழ்க்கண்ட ஆணைகளை பிறப்பிக்கிறது.

(1) **பொது விடுமுறை நாட்கள் :** (அ) ஒவ்வோராண்டிலும் ஜூன், டிசம்பர் திங்களிலுள்ள இறுதி நாட்களை, முறையே "அரையாண்டுக்குரிய வங்கி கணக்குகளை முடித்தல்." "ஓராண்டிற்குரிய வங்கி கணக்குகளை முடித்தலும்"என விடுமுறை நாட்களாக அறிவிக்கப் பட்டுள்ளது. இவற்றில் ஏதாவது ஒரு நாள் ஞாயிற்றுக் கிழமையாகிவிட்டால், அதற்கு முந்தைய நாள் விடுமுறை நாளாகவிருக்கும். 1968-ம் ஆண்டில் 1968-ம் ஆண்டு ஜூன் 30-ம் நாள் ஞாயிறன்று வருகிறது. எனவே அரையாண்டிற்குரிய வங்கிக் கணக்குகளை முடிப்பதற்காக 1968-ம் ஆண்டு ஜூன் 29-ம் தேதி (சனிக்கிழமை)-யை பொது விடுமுறையாக அறிவிக்க அரசு முடிவு செய்துள்ளது.

(ஆ) இவ்வாணை யில் பிற்சேர்க்கையிலுள்ள அறிவிப்பு செயின்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழில் பிரசுரமாகும்.

(2) **அரசு விடுமுறை நாட்கள் ;** தமிழக அரசின் கட்டுப் பாட்டிலுள்ள எல்லா அரசு அலுவலகங்களும்—

(அ) அறிவிப்பின் பிற்சேர்க்கையிலுள்ள 1968-ம் ஆண்டு ஜூன் மாதம் 29-ம் தேதி, மற்றும் டிசம்பர் 31-ம் தேதி ஆகிய நாட்கள் தவிர, ஏனைய நாட்களிலும் ;

(ஆ) 1968-ம் ஆண்டு மே திங்களிலுள்ள இரண்டாம் சனிக்கிழமை தவிர, ஏனைய எல்லா இரண்டாம் சனிக்கிழமைகளிலும் மூடப்படவேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

(இ) 1968-ம் ஆண்டு ஏப்ரல் 13-ம் நாளில் வரும் 'தமிழ்ப்புத்தாண்டு நாள், 1968-ம் ஆண்டு ஏப்ரல் திங்களில், இரண்டாம் சனிக்கிழமையான விடுமுறை நாளில் வருகிறது. 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ம் தேதி (சனிக்கிழமை) பொது விடுமுறை நாளாக அறிவிக்கப் பட்டுள்ளதால், திருவள்ளுவர் முக்தி நாளுக்காக 1968-ம் ஆண்டு ஜூன் 10-ம் தேதி (திங்கள்) நாளை அரசு விடுமுறை நாளாக அறிவிக்க அரசு முடிவு செய்துள்ளது. தமிழக அரசு அலுவலகங்களுக்கு மட்டுமே, இந்நாள் விடுமுறை நாளாகும்.

(ஈ) மே நாளான 1968-ம் ஆண்டு மே 1-ம் நாளை (புதன்), 1968-ஆம் ஆண்டு மே திங்களிலுள்ள இரண்டாவது சனிக்கிழமைக்கு மாறாக அரசு விடுமுறையாக்க அரசு முடிவு செய்துள்ளது. அதாவது எல்லா அரசு அலுவலகங்களுக்கும் 1968-ம் ஆண்டு மே 1-ம் நாள் (புதன்) விடுமுறை நாளாக ஆக்கப்படுவதால், அதற்குமாறாக 1968-ம் ஆண்டு மே 11-ம் நாள் (சனி) எல்லா அரசு அலுவலகங்களுக்கும் வேலை நாளாக இருக்கும்.

### பிற்சேர்க்கை

### அறிவிப்பு

இந்திய அரசு, உள்துறை அமைச்சகத்தின் 1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 8-ம் தேதி நாளிட்ட அறிவிப்பு எண் 20-25-56 பொது 1-ஐ, 1881-ம் ஆண்டு செலாவணி முறிச் சட்டத்தின் (Negotiable Instruments Act, 1881) (மத்தியச் சட்டம் 26/1881) பிரிவு 25-ல் உள்ள "விளக்கத்துடன் ஆராய்ந்ததால் ஏற்படும் வினைவாக, மேற்கண்ட "விளக்க"த்தில் குறிப்பிட்டு கூறப் பட்டுள்ள விடுமுறை நாட்களான 'ஞாயிற்றுக்கிழமை" களுடன், 1968-ம் ஆண்டில் கீழ்க்கண்ட நாட்களும் பொது விடுமுறை நாட்களாக பின்பற்றப்பட வேண்டுமென்று தமிழக ஆளுநர் அவர்கள் அறிவிக்கிறார்கள்.

| | | |
|---|---|---|
| 3— 1—1968 | புதன் | ரம்ஜான் |
| 15— 1—1968 | திங்கள் | பொங்கல் |
| 26— 1—1968 | வெள்ளி | குடியரசு நாள் |
| 11— 3—1968 | திங்கள் | பக்ரீத் |
| 29— 3—1968 | வெள்ளி | தெலுங்கு புத்தாண்டு நாள் |
| 10— 4—1968 | புதன் | முஹரம் |
| 12— 4—1968 | வெள்ளி | பெரிய வெள்ளிக்கிழமை |
| 13— 4—1968 | சனி | தமிழ் புத்தாண்டு நாள் |
| 29— 6—1968 | சனி | அரையாண்டிற்குரிய வங்கி கணக்குகளை முடித்தல் |
| 15— 8—1968 | வியாழன் | விடுதலை நாள் |
| 30— 9—1968 | திங்கள் | ஆயுத பூசை |
| 1—10—1968 | செவ்வாய் | ஆயுத பூசை |
| 2—10—1968 | புதன் | மஹாத்மா காந்திஜி பிறந்த நாள் |
| 21—10—1968 | திங்கள் | தீபாவளி |
| 21—12—1968 | சனி | ரம்ஜான் |
| 25—12—1968 | புதன் | கிருஸ்துமஸ் |
| 31—12—1968 | செவ்வாய் | ஓராண்டிற்குரிய வங்கி கணக்குகளை முடித்தல் |

(பொதுத் துறையின் 1967-ம் ஆண்டு அக்டோபர் 25-ம் நாளிட்ட அரசு ஆணை எண். 2282)

## இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு—ஜனவரி 1968—வாண வேடிக்கைகள், கிராமிய நடனங்கள் சம்பந்தமாக

## Second World Tamil Conference—January 1968—Display of fire works and folk dances—Regarding.

சென்னையில், 1968-ம் ஆண்டு ஜனவரி துவக்கத்தில், நடைபெறவிருக்கும் இரண்டாவது உலகத் தமிழ் மாநாடு பற்றிய செய்திக் குறிப்பின் நகல் ஒன்று, ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்கு அனுப்பப்படுகிறது. (அதை கீழே காண்க).

அவரவர்களின் அலுவல் வரம்பில், இச்செய்திக் குறிப்பிற்கு பெருமளவில் விளம்பரம் அளித்து, தலைசிறந்த வாணவேடிக்கைக்காரர்கள், கிராமிய நடனக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்களைச் சேகரித்து, அவற்றையெல்லாம் 1967-ம் ஆண்டு டிசம்பர் 7-ம் நாளுக்கு முன்பு "திரு மு. பா. பெருமாள் முதலியார், அமைப்புச் செயலாளர், இரண்டாம் உலகத் தமிழ் மாநாடு, செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை-9" என்ற முகவரிக்கு நேரடியாகவே அனுப்பி வைக்குமாறும், அவற்றின் நகலை திரு கே. வேங்கிட சுப்பிரமணியம், கிராம வளர்ச்சி துணை இயக்குநர் (கல்வி) மற்றும் சிறப்பு அதிகாரி, உலகத் தமிழ் மாநாடு, சென்னை-9" என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறும், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

### உலகத் தமிழ் மாநாடு

பத்திரிகை அறிக்கை

சென்னை மாநகரத்தில் நடக்கவிருக்கின்ற இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டையொட்டிப் பல சிறந்த கலை நிகழ்ச்சிகள் இடம் பெற விருக்கின்றன.

மாநாட்டின் முதல் நாளாகிய சனவரி 3-ம் நாள் மாபெரும் ஊர்வலம் ஒன்று நடைபெறும். அதன் பிறகு கடற்கரையில் நமது பெருமதிப்பிற்குரிய இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகிர் உசேன் அவர்களும், நமது அன்பிற்குரிய தமிழக முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்களும் மற்றும் வெளிநாட்டுத் தமிழறிஞர்களும் கலந்துகொள்ளும் மாபெரும் பொதுக்கூட்டம் நடக்கவிருக்கிறது. அந்தக் கூட்டத்தின் முடிவில் வாணவேடிக்கை நடக்கும். அதில் தலைசிறந்த வாண வேடிக்கைக்காரர்கள் கலந்து கொள்ளுவார்கள். அவர்களில் மிகச்சிறந்தவரென்று நடுவர்களால் தேர்ந்தெடுக்கப் படும் வாண வேடிக்கைக் கலைஞருக்கு மாண்புமிகு முதலமைச்சரவர்கள் ரூபாய் 1,000 பரிசு கொடுப்பார்கள்.

சனவரி 4-ம் தேதியிலிருந்து 10-ம் தேதிவரை நடக்கவிருக்கிற மாநாட்டில் தமிழகத்தின் தலைசிறந்த கிராமியக் கலை நிகழ்ச்சிகள் நடக்கவிருக்கின்றன. அந்நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளுகிறவர்களுக்கும் பரிசுகள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்ட நிகழ்ச்சிகளில் பங்குபெற விரும்புகிறவர்கள் 1967-ம் ஆண்டு டிசம்பர் 7-ம் தேதிக்குள் கீழே கண்ட முகவரிக்கு விண்ணப்பித்துத் தொடர்பு கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

தமிழ்ப்பெரும் புலவர்
திரு மு. பா. பெருமாள் முதலியார்,
எம்.ஏ.எல்.டி.,
தமிழ் வளர்ச்சி இயக்குநர்,
இரண்டாம் உலகத் தமிழ்க் கருத்தரங்கு மாநாட்டு அமைப்புச் செயலாளர்.
சென்னை-9.

(கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தின் 1967-ம் ஆண்டு நவம்பர் 28-ம் நாளிட்ட விரைவு சுற்றறிக்கை எண் 19736-ன் சுருக்கம்.)

---

### இந்த இதழில்


| | பக்கம் |
|---|---|
| இன்னலுறும் ஏழை மனிதனை முன்னேற்றும் புனிதப் பணி .. | 2 |
| பாட்டுக்கொரு புலவன் .. .. | 5 |
| நகராட்சி நிறுவனங்களின் வருவாயினைப் பெருக்க வழிவகை செய்ய வேண்டும் | 9 |
| ஊருக்கு உழைக்கும் உத்தமர் அணி .. | 11 |
| கிராம வானொலி மன்றக் கருத்தரங்கு .. | 18 |
| கேள்வியும் – பதிலும் .. .. | 25 |


### அடுத்த இதழில்...

மாண்புமிகு உணவமைச்சரின் ரோமாபுரிப் பயணம் பற்றிய சிறப்புக் கட்டுரை.

கிராம நூலகம்.

உலகத் தமிழ் மாநாடு—முழு விவரங்கள் படங்களுடன் (மாநாடு பற்றிய சிறப்புக் கட்டுரைகளும்).


வெளியிடுபவர் :
திரு வி. நடராஜன், ஐ. ஏ. எஸ்.

ஆசிரியர்
திரு எஸ். வேங்கடசாமி, எம். ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras Edited by the Public Relations Officer and published by the Director of Rural Development Madras-9.




# கிராம நலம்

ஜனவரி , 1968






சமுதாய நலத்துறை சீரமைப்பு-

சர்வ கட்சித் தலைவர்களுடன் ஆலோசனை




—வண்ணவிளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட ரிப்பன் மாளிகையின் எழில் தோற்றம் —



வள்ளுவப் பெருந்தகை



ஔவையார்



கண்ணகி



கம்பர்



வீரமாமுனிவர்



குடியரசுத் தலைவருக்கு
மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வரவேற்பு...
[2-1-68]



இராபர்ட் கால்டுவெல்



ஜி.யு. போப்



வ.உ. சிதம்பரனார்



சுப்பிரமணிய பாரதியார்



பாரதிதாசன்



கிராமநலம்

தமிழக அரசின் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை மாத இதழ்

கதிர் 13 சனவரி 1968 நெல் 4

# "உயரிய பண்பாட்டின் களஞ்சியம் - தமிழ் மொழி.."

## குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகிர் உசேன்

"இந்த உலகத் தமிழ் மாநாட்டுடன் தொடர்பு கொள்வதை ஒரு பேருக நான் கருதுகிறேன். தென்கிழக்கு ஆசியாவின் ஆக்கமுள்ள பரந்த கலாச்சாரத்தின் ஒரு களஞ்சியமாகத் தமிழ் விளங்குகிறது.

இந்த மகாநாட்டைத் துவக்கிவைக்கும்படி என்னை அழைத்ததன் மூலம், உண்மையில் நாம் எவ்வாறு ஒருவரையொருவர் சார்ந்திருக்கிறோம் என்பதையும், கலாச்சார, ஆன்மிக ஒற்றுமை பற்றிய உண்மையான ஆராய்ச்சி ஒற்றுமை உணர்வை எவ்வாறு வளர்க்க முடியும் என்பதையும் மேலும் தீவிரமான முறையிலும் புதிதாகவும் நான் தெரிந்துகொள்ளும்படி அழைத்திருக்கிறீர்கள்.

வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையே உள்ள முக்கிய தொடர்புகளை தமிழ்மொழி இணைத்திருக்கிறது. நம் நாட்டிற்கும் வெளியே அது பேசப்படுவதால், தமிழ் ஒரு சர்வதேச மொழியாகத் திகழ்கிறது.

தமிழ் நாட்டின் எல்லைகள் பழமையானவை. நில எல்லைகளையும் கலாச்சார எல்லைகளையும் தாண்டிச் செல்கின்ற ஒரு பண்பாட்டையும் தமிழ்மொழி பெற்றிருந்தது. தமிழ் உணர்ச்சி இருந்த இடமெல்லாம் தமிழ்நாடு பாவியிருந்தது. வடக்கில் இமயத்தையும், கிழக்கிலும் மேற்கிலும் திரைக் கடல்களையும் அந்தக் கடலுக்கு அப்பாலுள்ள நிலங்களையும், அது கண்டது.

### புனிதக் களஞ்சியம் குறள்

தமிழ் மொழி, தமிழ்ப் பண்பாட்டைப்பற்றி இங்கு குழுமியுள்ள பேரறிஞர்களைவிட அதிகமாக நான் ஒன்றும் கூறிவிட முடியாது. எல்லோருக்கும் தெரிந்தவற்றை நாம் மீண்டும் கூறினால், அது ஒரு மாபெரும் மரபிற்கு செலுத்தும் அஞ்சலிதான். இந்த மரபு, சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு உலகின் மிகப் பழமையான இலக்கியம் எனக் கருதப்படும் சங்க இலக்கியத்திலிருந்து ஆரம்பமாகிறது. செழித்த, பண்பட்ட தமிழ் இலக்கியம், பல நூற்றுண்டுகளாய் ஏற்பட்ட வளர்ச்சியைக் காட்டுகிறது. உலக அறிவின் புனிதக் களஞ்சியமாக விளங்குகிறது திருக்குறள். வால்மீகியின் கதையை அடிப்படையாகக் கொண்ட கம்பராமாயணம் ஒரு மாபெரும் காவியமாகும்.

தமிழ் மரபு பழமையானது மட்டுமின்றி, பரந்த உணர்வையும் பெற்றிருந்தது. தமிழ் மரபு எல்லா வகைகளிலும் சிறப்புற்று இருப்பதால், அதில் எந்த அம்சம் அதிகச் சிறப்பு வாய்ந்தது என்பதைக் கூறுவது கடினம். சமஸ்கிருத மொழிக்கு பாணினி செய்துள்ளதைப்போன்று, தமிழுக்கு தொல்காப்பிய ஆசிரியர் திடமான விஞ்ஞான ரீதியில் இலக்கண அடித்தளத்தை அமைத்திருக்கிறார்.

வேறு மொழிகளை அறிந்து தன்னுடைய அறிவாற்றலை பல்வேறு விதங்களில் வெளிக்காட்டுவதற்கு தமிழன் பேரார்வம் கொண்டிருந்தான். மாபெரும் ஆழ்வார்களில் ஒருவரான குலசேகரர், பெருமாள் திருமொழியின் ஆசிரியர் என்ற முறையில் தமிழ் இலக்கியத்தில் உயர்ந்த இடத்தை வகிக்கிறார். அவருடைய முகுந்தமாலா சமஸ்கிருத இலக்கியத்தில் சிறந்ததொரு படைப்பாக விளங்குகிறது. ராமானுஜர் ஆண்டாளின் பக்திப் பெருக்கையும், நம்மாழ்வாரின் ஆன்ம தத்துவத்தையும் சம்ஸ்கிருதத்தில் விவரித்திருக்கிறார். சம்ஸ்கிருத இலக்கியத்திற்கு தமிழர்கள் ஆற்றியுள்ள பணிபற்றி மேலும் விவரித்துக்கூற நான் விரும்பவில்லை.

### கலாச்சாரத்தின் நிலைக்களன்களாக அறிவாலயங்கள்

ஸ்தாபனங்களைத் தோற்றுவிப்பதில் தமிழர்கள் ஒரு தனித்திறனைப் பெற்றிருக்கிறார்கள். சமூக அமைப்புக்களைப் பற்றி நான் இங்கு குறிப்பிடவில்லை. உயர் கல்விக்கான பல பள்ளிகளும், ஸ்தாபனங்களும் இங்கு இருந்தன என்று தமிழ்நாட்டில் பல இடங்களில் உள்ள கல்வெட்டுக்கள் மூலம் நாம் அறிகிறோம். ஆலயம் இல்லாத கிராமத்தில் குடியிருக்கக்கூடாது: ஏனெனில் ஆலயம் பூஜைக்குரிய இடம் மட்டுமின்றி, கல்வி போதனைக்கான ஒரு இடமும் ஆகும். இவ்விதம் தமிழர்களின் அறிவு மூதாட்டியான ஔவை கூறியிருக்கிறார். இலக்கியம், கலை, மதம், சமூக உறவுகள் முதலிய கலாச்சார வாழ்க்கைக்கான அனேகமாக எல்லா அம்சங்களையும் உருவாக்கி ஊக்குவிப்பதில், ஆலயம் ஒரு மத்திய கேந்திரமாக விளங்கி வந்தது. மக்கள் தொகை அதிகமுள்ள பெரிய பட்டணங்களில் இவ்வசதிகளை ஆலயம் அதிகமாக அளித்தது. ''கடிகா'' அல்லது பல்கலைக் கழகம் பெருமதிப்புடன் விளங்கியது மட்டுமின்றி, அரசியல் துறையில் செல்வாக்கு பெற்றிருந்ததாகவும் அறிகிறோம். உதாரணமாக, அரச வாரிசு இல்லாமல் இருந்தபோது இரண்டாவது நந்திவர்மனை ஆட்சிபீடத்தில் அமர்த்துவதில் காஞ்சிபுரத்திலிருந்த பல்கலைக்கழகம் முக்கிய பங்கு ஆற்றியது. மதம், சரித்திரம் ஆகியவற்றை நேரடியாக போதிக்கும் ஒரு ஸ்தாபனமாகவும் ஆலயம் இருந்தது. காஞ்சிபுரத்தில் வைகுந்தநாதபெருமாள் கோவிலில் உள்ள சிற்பங்கள் பல்லவ மன்னர்களின் சரித்திரத்தைத் தெளிவுடன் விளக்குகின்றன என்பதையும், தஞ்சாவூரில் ராஜராஜேஸ்வர ஆலயத்திலுள்ள ஓவியங்கள் புகழ்பெற்ற ராஜராஜனின் சாதனைகளைச் சித்தரிக்கின்றன என்பதையும் நீங்கள் அறிவீர்கள்.

சங்ககால இலக்கியத்தில் 'யாதும் ஊரே, யாவரும் கேளிர்' என்று அழகான பாடல் ஒன்று வருகிறது. இப்பாடலில் ஊர் என்பதைக் கவனியுங்கள். என் இச்சைப்படி. வாழக்கூடிய வீடு அல்ல உலகம். உலகம் எனக்குச் சொந்தமில்லை. உலகம் எனது ஊர்; அங்கு வேலை செய்வதற்கும் களிப்புடன் இருக்கவும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. அங்கு எல்லா உயிர்களிலும் நேசத்தன்மை பொலிகிறது.

### பாரதி கண்ட கனவு

வருங்கால பாரதம் பற்றி கவிதை வடித்த கவி சுப்பிரமணிய பாரதி, குறுகிய எண்ணங்களற்ற, மொழி, பிராந்திய தடைகளற்ற இந்தியாவைப் பற்றி கனவு கண்டார்.

நம்மிடையே பாரதி இப்போது வாழ்ந்திருந்தால் அவர் என்ன எண்ணியிருக்கக்கூடும்? மனக்கசப்பு அடைந்திருப்பாரா? ஆழ்ந்த வருத்தத்தினால் கண்ணீர் சிந்தியிருப்பாரா? மனிதத் தன்மையுடனும் பரந்த நோக்குடன் கூடிய தங்களுடைய சிறந்த மரபை மறுக்கும்படி அவர் தமிழர்களைக் கேட்டுக்கொண்டிருப்பாரா? அல்லது அமைதியையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தி பொய்த் தோற்றங்களை நீக்க தமிழ் மரபின் நற்சக்தியை உபயோகித்திருப்பாரா?

ஒதுங்கி இருக்கும்படி தமிழர்களை அவர் கேட்டுக்கொண்டிருப்பாரா? அல்லது எல்லா இந்திய மக்களின் மேன்மையே தங்களுடைய மேன்மை எனக்கருதி அந்த இலட்சியத்திற்காகப் பாடுபட அழைப்புவிடுத்திருப்பாரா?

தாங்கள் நெடுங்காலமாகப் போற்றி வரும் பரந்த மனப்பான்மை கொண்ட பண்பாட்டிற்கிணங்க, இக்கேள்விகளுக்கு, தமிழர்கள் விடை கூறுவர் என்பதில் எனக்குச் சந்தேகமே இல்லை."

[உலகத் தமிழ் மாநாட்டில், குடியரசுத் தலைவரின் துவக்க உரை—3-1-1968.]

---



## "தமிழன் தனக்கென்று உள்ளதை இழக்க ஒருக்காலும் சம்மதிக்கமாட்டான்."

"நமது தமிழ் மொழி தொன்மைமிக்கது, மென்மை மிக்கது. வளம் பெற்றது. வலிமை பெற்றது. வலிவும், பொலிவும் வாய்ந்தது. தானும் வாழ்ந்து பிற மொழிகளையும் வாழ வைத்தது தமிழ். பல மொழிகளுக்கு தாயகமான அத்தகைய தமிழை, தமிழின் சிறப்பை பல பகுதிகளிலும் உள்ளோர் ஓரளவு அறிந்துள்ளார்கள். பெரும் அளவு, முழு அளவு தமிழின் சிறப்பை, மாண்பை உலகம் ஒப்புக்கொள்ளும் அளவுக்கு ஆவன செய்ய இந்த மாநாடும், மாநாட்டில் நடக்கும் ஆராய்ச்சியும் உதவும் என நம்புகிறேன். இத் தமிழ் ஆராய்ச்சியால் புதிய கட்டம், நல்ல கட்டம் ஏற்படுத்தப்படும் என நம்பலாம். இந்த ஆராய்ச்சியின் பயன், பல காலமும் தமிழ் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் தமிழர் வாழ்வுக்கும் வழிகோலும் என்பதில் ஐயமில்லை.

அகில இந்தியக் காங்கிரஸ் தலைவர் திரு காமராஜ் பேசுகையில் முதல் மாநாட்டையே இங்கே நடத்தியிருக்க வேண்டும் என்றார். உண்மை தான். ஏனோ அந்த வாய்ப்பு கிட்டாமல் போய்விட்டது. ஆனால் அண்ணன் அக்கறையற்றிருந்தாலும் தம்பி அதிக அக்கறை காட்டுவது வழக்கம். அந்த முறையில் இரண்டாவது மாநாடு இங்கு இப்போது நடக்கிறது. மலேசியாவில் நடந்த முதல் மாநாட்டில் 20 வெளிநாட்டுப் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். 2-வது மாநாட்டிற்கு 30-க்கும் மேற்பட்ட வெளிநாட்டினர் கலந்துகொண்டுள்ளனர். ரஷ்யா, செக்கோஸ்லோவேகியா, ஆஸ்டிரியா, ஹங்கேரி, இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய நாடுகளிலெல்லாம் இருந்து ஆராய்ச்சி வல்லுனர்கள் சென்னை வந்துள்ளனர்.

இத்தனை நாடுகளுக்கும் அறிமுகமாயுள்ள தமிழ் மொழி இந்தியாவுக்குள்ளேயே இன்னும் பல பகுதிகளில் இடம்பெற முடியாமலிருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். செக்கோஸ்லோவேகியாவில் தமிழ் மொழி வியந்து பாராட்டப்படுகிறது. அமெரிக்கர்கள் அறிந்து போற்றுகின்றனர். பிரிட்டிஷ், அமெரிக்கப் பல்கலைக் கழகங்களில் தமிழ் பயிற்றுவிக்கப்படுகிறது என்றெல்லாம் உணரும்போது, உணர்ச்சியால் விம்மும் நமது உள்ளம் நம்மை எங்கேயெல்லாமோ இட்டுச் செல்கிறது. இன்றுள்ள நிலையை எண்ணும்போதுதான், இருக்கின்ற இடத்திற்கு வருகிறோம். தமிழர் தமிழ்ப் பண்பாட்டை, தமிழ் வரலாற்றை அறிந்து ஆற்றலுடன் அறிவுடன் ஒன்றுபட்டு பெரும் முயற்சி செய்தால், நிச்சயம் அந்த இடத்திற்கு நாம் செல்வோம்.

அந்த நிலையும் இந்த நிலையும்;

உலகில் மொழி அறிவு தோன்றியிராத காலத்தில், மொழி இலக்கியம், மொழி இலக்கணம் பெற்றிருந்தது தமிழ். எட்டுத் தொகை என்றும், பத்துப் பாட்டு என்றும், பதினெண் கீழ்க் கணக்கென்றும் பெற்றிருந்தோம். ''எப்பொருள் யார் யார் வாய்க்கேட்பினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு'' என்ற உயரிய தத்துவத்தை உலகுக்கு உணர்த்தும் குறளுக்குச் சொந்தக்காரர்களாக நாம் இருந்தோம். அத்தகைய தமிழுக்கு புதிய வலிவும் பொலிவும் இந்த மாநாட்டினால் கிட்டும் என்பதில் ஐயமில்லை.

**உலகத் தமிழ் மாநாட்டில்**
**மாண்புமிகு**
**முதலமைச்சரின் தலைமையுரை**

தமிழ் மாநாட்டில் நடந்த, நடக்கின்ற அரிய நிகழ்ச்சிகளைக் கண்டும் தமிழ்

ஆராய்ச்சி, கருத்தரங்கு உரைகளின் சிறப்பைக் கேட்டும் புதுப்பயன் பெறலாம்.

நாம் அடைந்துள்ள இந்த அக மகிழ்ச்சி மற்றவர்கள் கருதுவது போல இல்லாமல் தமிழ் வளம்பெற, தமிழ் வளர்ச்சியுற வேண்டிய வழியினை, வகையினைக் காணப் பயன்படுத்தப்படும் என உறுதி கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

நமது தமிழ்மொழி பற்றி நடக்கும் ஆராய்ச்சிகளையும், முடிவுகளையும் தமிழ் மொழியின் வளர்ச்சிக்கு மட்டுமே பயன்படுத்திக்கொள்வோம் என்று உறுதியாகத் தெரிவித்துக் கொள்வோம்!

தமிழ்ப் பண்பாடு உலகத்தில் எல்லா மனிதர்களையும் சகோதரர்களாகவும், தோழர்களாகவும் ஏற்றுக்கொள்ளும் தன்னிடம் வருபவர்களை வாழ்த்தி வரவேற்கும்; எந்த மொழியையும் உரிய முறையில் மதிக்கும்; அறிவுச் செல்வம் உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும் தேடிச் சென்று எடுத்து வரும்!

ஆனால்..தமிழர்கள் தமக்கென்று உள்ளதை இழக்க ஒருக்காலும் சம்மதிக்கமாட்டார்கள்!

இங்கிலாந்திலிருந்தும் பிற நாடுகளிலிருந்தும் வருகிற நிபுணர்கள் தமிழ்மொழி இத்தகைய அருமையான மொழி என்று கூறுகிற நேரத்தில்—அந்த மொழிக்குச் சொந்தக்காரர் என்று நினைக்கும் போது, அந்த மொழி மீது பற்று—பாசம் ஏற்படாமலா இருக்கும்?

அத்தகைய மொழிக்கு எந்தக் காலத்திலாவது—எந்த நோக்குடனாவது—எப்படிப்பட்டவர்களிடமிருந்தாயினும் தனி மரியாதை கிடைக்கவில்லையென்றால், அதைத் தமிழகம் பொறுத்துக் கொள்ளாது.

ஆழ்கடல் கொந்தளித்துக் கொண்டுதானிருக்கிறது, பக்குவமாகக் கடக்க வேண்டுமானால், நல்ல நாவாயின்—கப்பலின் மூலம் கடக்கலாம்.

அதுபோல, தமிழர்களை அணைத்துக் கொண்டு சென்றால், அவர்களைவிடச் சிறந்தவர்கள் யாரும் இருக்க முடியாது.

ஐக்கிய நாடுகள் சபையில் ஒற்றுமையைக் குறிக்கோளாகக் கொண்டு பணியாற்றினாலும்—அனைத்து நாட்டுக் கொடிகளும் வெளியே பறக்க- உள்ளே பேசிவிட்டு வெளியே வந்தாலும் எந்த நாட்டின் மீது யார் படை-

“எனது தமிழ் உணர்வை வளர்த்த இருபெரும் ஆசான்கள்”

“தமிழ் மொழியை-என் கல்லூரி வாழ்வில் முறையாக நான் கற்கவில்லை. கல்லூரியிலிருந்து வெளியேறியபோது, தமிழைக் கற்க நான் முயற்சி எடுத்துக்கொண்டது உண்டு.

இண்டர்மீடியட் வகுப்போடு தமிழ்க் கல்வி நாங்கள் இருந்தபோது முற்றுப்பெற்றுவிட்டது. அதற்குப் பிறகு ஆங்கில மொழியில் எண்ணிடும் அளவுக்கு அமைந்த ஆங்கிலக் கல்வியே எனக்குக் கிடைத்தது.

நான் கல்லூரியில் பயின்றபோது தமிழ் வகுப்பு என்பது ஓய்வுக்குரிய நேரமாகக் கருதப் பட்டது.

தமிழ் வகுப்புக்குச் செல்லாமல் நூலகத்திற்குச் சென்று-சரித்திர ஏடுகளையோ - கணக்கு ஏடுகளையோ புரட்டிப் பார்ப்பது தான் திறமையான மாணவனுக்கு அடையாளம் என்று கருதப்பட்டு வந்தது.

அப்போதுகூட எனக்கு மிகவும் சுவையும் பயனும் அளித்த வகுப்பு - தமிழ் வகுப்புதான்.

எனது தமிழ் உணர்வை வளர்த்த இருபெரும் தமிழ் ஆசான்களில் ஒருவர் மோரூர் கந்தசாமி முதலியார்.*

அவர் ஆங்கிலம், தமிழ் ஆகிய இரண்டிலும் புலமையுடையவர். அவரது வகுப்பில் 40 நிமிடம் ஆங்கிலமும், 20 நிமிடம் தமிழும் நடமாடும்.

தமிழ்க் கவிதைக்கு நிகரான - அல்லது அதற்கு மேலான ஆங்கிலக் கவிதைகளை எடுத்துரைத்து, இரண்டையும் அழகுற ஒப்பிட்டுக் காட்டுவார்.

இன்னொரு ஆசான் மணி திருநாவுக்கரசு என்பவர். அவர் வகுப்பில் ஆங்கிலம் நுழையாது. தமிழின் அடித்தளத்திற்கே சென்று தமிழ் மொழியின் மாண்பினை எடுத்துக்காட்டி - தமிழ்த்தேனை மாந்தி மாந்தி இன்பம் துலங்கச் செய்வார்.

எனக்கு இப்போது ஏதாவது தமிழ் ஆர்வம் இருக்கிறது என்றால், அதற்குக் காரணம் இந்த இருபெரும் புலவர்கள்தான்.”

[பூம்புகார் நகரில் 5-1-68-ல் தமிழகப் புலவர் குழுவுக்கு அளிக்கப்பட்ட வரவேற்பில், மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணா.]



யெடுப்பார்களோ என்ற பேச்சும் இருக்கும்!

“தீதும் நன்றும் பிறர்தர வாரா”

ஆனால் உண்மையான ஒற்றுமை உணர்வினை ‘யாதும் ஊரே, யாவரும் கேளிர்’ என்ற பொன்மொழியில் வடித்து ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தந்த தமிழரின் பெருந்தன்மையை எண்ணி—எண்ணி நெஞ்சம் விம்முகிறது.

‘யாதும் ஊரே—யாவரும் கேளிர்’ என்று பாடிய புலவர் ‘தீதும் நன்றும் பிறர்தர வாரா’—என்றும் அடுத்த அடியில் பாடியிருக்கிறார்.

நல்லது வரவேண்டுமா? அது நாம்தான் செய்து கொள்ளவேண்டும். கெட்டது வர வேண்டுமா? நாம்தான் வரவழைத்துக்கொள்ள வேண்டும்! எனவே, தீது வருமோ என்று ஐயப்பாடு கொள்ள வேண்டாம்! தமிழருக்குத் தீது பிறர் தருவதால் அல்ல—நாமே தீது தேடிக்கொண்டாலொழிய, தமிழர்களுக்குத் தீது ஒருபோதும் வராது.

தமிழ் மொழியின் அருமை பெருமையை நாம் உணர்வதோடு பிறரும் உணர்ந்து, தமிழர்களாகிய நம்மை அவர்கள் நோக்கி இந்தத் தமிழ் மொழி உங்களுக்கு மட்டும் உரிய மொழி அல்ல, எங்களுக்கும் அதுதான் மொழி, அதுதான் இணைப்பு மொழி, அதுதான் பொது மொழி, அதுதான் ஆட்சி மொழி என்று கூறும் காலம் வரும்!

அந்தக்காலம் அவசர நடையால் வருவதல்ல! அவசரக் கோலத்தில் கிட்டுவதல்ல!

தூண்டில் போடுபவன் முள் அருகில் மீன் வரும்வரை எப்படிப் பொறுமையுடன் இருப்பானோ, அத்தகைய பொறுமையை நாம் கைக்கொள்ளவேண்டும், கற்றுக்கொள்ளவேண்டும். தமிழ் மறையிலும் தமிழ் நெறியிலும், காலம்—இடம்—வகை—பொருள் அறிந்து செய்யவேண்டும் என்று கூறப்பட்டிருக்கிறது. அந்த வழி நடந்து, தமிழ் மொழியை அரியாசனத்தில் அமர்த்திடக்கூடிய நன்னாளை நாம் உருவாக்குவோம்.”

## தமிழ்ப் பண்பாட்டின் மையம்

“அமிர்தசரசில் உள்ள சீக்கியக் கோயிலுக்கு நான் மூன்று நான்கு தடவைகள் போயிருக்கிறேன். அந்தக் கோயிலுக்குள் சென்றுவரக் கூடிய எவரும் சீக்கிய மதத்திடம் மிகுந்த மரியாதையுடனே திரும்புவர். அத்தனை நேர்த்தியாகவும் சுத்தமாகவும் அக்கோயில் வைக்கப்பட்டுள்ளது.

அக்கோயிலுக்குச் சென்றிருந்தபோது, அங்கே நான் ஒரு காட்சியைக் கண்டேன். நன்றாக உடுத்தியிருந்த ஒருவர் அக்கட்டிடத்தின் தாழ்வாரங்களை எல்லாம் சுத்தம்செய்ததோடு, அங்கிருந்த காலணிகளையெல்லாம் துடைத்துச் சுத்தப்படுத்திக் கொண்டிருந்தார். ஏனென்று நான் அவர் அருகில் சென்று கேட்டேன். “பண்புகள் எல்லாவற்றிலும் தன்னடக்கமே மிக உயர்ந்த பண்பு என்பதைச் செயலால் உணரவே, இவ்வாறு செய்கிறேன்” என்று அவர் சொன்னார்.

தங்களது மக்கள் ஒரு சமூகமாகக் கூடிப்பிணைந்து வாழவும் மக்கட்சமுதாயத் தொண்டிற்குத் தங்களை அர்ப்பணித்துக்கொள்ளவுமே, சீக்கிய சமயம் தோன்றிற்று,

பணி, தனக்கென மட்டுமல்லாமல், சமூகம் முழுமையும் அதன் மூலம் நாடு முழுமையும் பயனடைய வேண்டும் என்ற மனோ நிலையுடனே அவர்கள் பணி செய்கின்றனர். தமிழர்களாகிய நாங்களும் அத்தகைய உயர்ந்த கோட்பாடுகள் உடையவர்களாயிருந்தோம். சமுதாயத் தொண்டே தமிழர் பண்பாட்டின் மையமாக விளங்கிற்று.

இதனால்தான் தமிழகம் சீக்கியர்களை அணைத்துச் செல்கின்றது. இங்கே பெரிய சீக்கியப் பிரமுகர் “எங்கள் குழந்தைகளெல்லாம் இங்கேதான் பிறந்தன” என்றார். ஒன்றைச் சொல்கிறேன். உங்கள் குழந்தைகள் மட்டுமல்ல, உங்கள் பேரன்களும் கொள்ளுப் பேரன்களும் இங்கேயே பிறக்கட்டும். அக்குழந்தைகளெல்லாம் சுவாசிக்கிற முதல் காற்று, தமிழ் மணம் கமழும் காற்றாக இருக்கட்டும். தமிழ் மண்ணில அவர்கள் தவழட்டும். நிரந்தரமாக நீங்கள் இங்கேயே இருக்கலாம். வேறு சில சமூகத்தாரைப் போல கவலை கொள்ளத் தேவையில்லை.”

(7-1-68-ல் சென்னையில் சீக்கியர் கோவிலில நடைபெற்ற குரு கோவிந்தசிங்கின் 301-வது ஆண்டு நினைவு விழாவில், மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணா)

* மாண்புமிகு முதலமைச்சரின் தமிழ் உணர்வை வளர்த்த இருபெரும் ஆசான்களில் ஒருவரான மோரூர் கந்தசாமி முதலியார் அவர்களின் புதல்வியார் திருமதி வாசுகி அம்மையார், டில்லியில் உள்ள மகளிர் கல்லூரியில் தமிழ்த்துறையில் பணியாற்றுகிறார். அவர் உலகத் தமிழ் மாநாட்டில் பங்கு கொண்டதோடு, தமிழ் மாநாடு பற்றிய தன்னுடைய அனுபவங்களை, சுவைபட எழுதியுள்ளார். அவருடைய சிறப்புக் கட்டுரை, அடுத்த இதழில் இடம் பெறும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

—ஆசிரியர்.

வானொலிப் பேச்சு :

# வரலாற்றுப் புகழ்பெற்ற ரோமாபுரியில் விவசாயப் புரட்சிக்கு வித்திட்ட மாநாடு

[ மாண்புமிகு உணவமைச்சர் திரு கே. ஏ. மதியழகன் ]

"என்னருந் தமிழ்நாட்டின் பெரியோரே, பெற்ற நல் தாய்மாரே, உடன்பிறப்புக்களே, உங்கள் எல்லோருக்கும் என் அன்பு வணக்கங்கள். நான் நின்றுகொண்டிருக்கும் இத்தாலி நாட்டின் இணையற்ற கவிஞன் சொன்னான்: "எழில் சிறந்த இத்தாலிய நாடே, என் இதயத்தில் வாழ்கின்றாய்" என்று. தேசப்பிரஷ்டம் செய்யப்பட்ட 'தாந்தே' என்ற கவிஞன், வெளிநாட்டு மண்ணிலே இருந்தபோது, இந்தக் கவிதை வரிகளை வடித்தான். அதே பாடல்தான், என் இதயத்தில், காடுமலை, வனந்திரங்கள், பாலை வனங்கள், கடல்கள், வயல் வெளிகள் இவற்றையெல்லாம் தாண்டி ஐயாயிரம் மைல்களுக்கும் அப்பால் உள்ள போதும், அன்புத் தமிழகம் இன்பத் தமிழகத்தை நினைக்கும் போது, என் இதயத்தில் நர்த்தனமாடுகிறது. தொலை தூரம் சென்றவுடன்தான் சில பொருள்களின் அருமை மேலும் தெளிவாகிறது. இங்கே உங்கள் எல்லோரையும், நமது திருமண்ணின் பல்வளமும், காவிரிநதி தீரத்தின் பைந்திறப் பழனத்தையும், பாலாற்று மணலும், நீலகிரி மலையும், சிங்காரச் சென்னையும், குமரி முனையும், குற்றால நீர்வீழ்ச்சியும் பற்ற கோலக்காட்சிகளும் என் அகக்கண் முன்னே உருவெடுத்து உவகையூட்டுகின்றன.

அன்பு சாம்ராஜ்யமாகத் திகழும் வாத்திகன்

ஒரு காலத்தில் பளபளக்கும் கடகம் ஏந்தி தகதகக்கும் கவசம் பூண்டு ரோமானிய முடி மன்னர்கள் ஆரோகணிக்கும் புரவிகள் மீது அமர்ந்து, மண்டலங்கள் பலவற்றைத் தங்கள் காலடியிலே மிதித்துத் துவைத்து, சாம்ராஜ்யம் நிறுவியது போய், இன்றைக்கு அவை சவக்களை படிந்த—காலத்தின் புழுதி படிந்த பழமையின் சின்னங்களாகக் காட்சியளிக்கின்றன. ஆனால், ரோம் நகரின் நடுநாயகமாக விளங்கும் வாத்திகன் நகரம், உலகில் உள்ள ஐம்பது—அறுபது கோடி கத்தோலிக்கு மக்களுக்கு கலங்கரை விளக்கமாகவும், யாத்திரை செல்ல வேண்டிய திருத்தலமாகவும் இயங்குகிறது. பழைய போர்வெறி கொண்ட சாம்ராஜ்யம் எங்கோ மறைந்தது. கத்தோலிக்க மக்களின் லோக குருவின், போப்பாண்டவரின் சந்நிதானமாக பீட்டர்ஸ்பர்க் தேவாலயமும், மற்றைய தொழுகை—நிலையங்களும் இணைந்து அன்பு—சாம்ராஜ்யமாக இன்று இயங்குகின்றன.

[1967 நவம்பரில், ரோமாபுரியில் உலக உணவு-விவசாய மாநாடு நடைபெற்றது. அம்மாநாட்டில், இந்திய நாட்டுக்குழுவின் மாற்றுத் தலைவராக, தமிழக அரசின் மாண்புமிகு உணவமைச்சர் திரு கே. ஏ. மதியழகன் அவர்கள் கலந்து கொண்டார். உலக-உணவு விவசாய மாநாட்டைப் பற்றியும்-ரோமாபுரியின் சிறப்புக்கள் பற்றியும் மாண்புமிகு உணவமைச்சர், இத்தாலி நாட்டின் வாத்திகன் நகரின் வானொலி நிலையத்தின் தமிழ் ஒலிபரப்பில், தமிழில் ஆற்றிய சொற்பொழிவின் சாரம் இது: —ஆசிரியர்]

ரோம் நகரம், ஐரோப்பிய நாகரிகத்தின் தொட்டில். மறவர் கூட்டம்: கோட்டை—கொத்தளங்கள், கொடி மரங்கள், அரண்மனைகள், மலர்த் தோட்டங்கள், மாதா கோவில்கள், மைதானங்கள், வெற்றி வளைவுகள் தூண்கள்-ரோமாபுரியின் எல்லைச்சுவர், பழைய பாதைகள், மாநகர மன்றம்: ஓவிய மாளிகை, நினைவு மண்டபங்கள், நுழைவு வாயில்கள், மல்யுத்த வீரர்கள் சண்டையிட்ட விளையாட்டு அரங்கம்: நாடாளும் மன்றக் கட்டிடம், நீராடும் தடாகங்கள், அந்தப்புர மகளிரின் இருக்கை; மன்னர்களின் மாளிகை, நீர் ஊற்றுக்கள், பிறந்த மேனியுடன் கூடிய சலவைக் கல்லாலான சிலைகள், சின்னாபின்னமான நினைவு மண்டபங்கள், தூர்ந்து போன அகழிகள், கல்லறைகள்—இப்படியெல்லாம் எத்தனை யெத்தனையோ ஆயிரக்கணக்கான நினைவுச் சின்னங்கள் ரோமாபுரியிலே உள்ளன. அந்த நினைவுச் சின்னங்களோடு இல்லாமல், புதிய இத்தாலியினுடைய வடிவங்களாக, மாஜனியும், கரிபால்டியும், காவரும்—இந்தத் திருநாமங்களை—இவர்களைத்தான் புதிய இத்தாலியினுடைய வளர்ப்புத் தாதிமார்கள் என்கிறார்கள். புதிய இத்தாலி ஒன்றை இன்றைக்கு நாம் காணமுடிகிறது.



புதிய உலகம்-புதிய பிரச்னைகள்

நெடுநேரம் கல்லறைகளுக்குப் பக்கத்திலே நாம் நின்றுகொண்டிருக்க முடியாது. புதிய உலகத்திற்கே வரவேண்டும். இத்தாலிநாட்டில் மிகப் புராதனமான ஒரு இடத்தில், அங்கேதான் ஐக்கிய நாடுகள் சபையின் உணவு—வேளாண்மைத் துறையினுடைய மாநாடு நடைபெற்றது. அந்த மாநாட்டில் 117 நாடுகளைச் சேர்ந்த பிரதிநிதிகள் கலந்து கொண்டிருக்கிறார்கள். இந்தியாவினுடைய தூதுக்குழுவின் சார்பில் நானும் கலந்து கொள்கிற வாய்ப்புப் பெற்றேன். எழில் நிறை—மாடம் ஒன்றின் மாடியிலே உள்ள மண்டபத்திலே—இந்த மாநாடு நடைபெற்றது. இந்த மண்டபத்தைச் சுற்றி அதன் மேல் மாடியிலே நின்று, நான் ஒருநாள் பார்த்தேன். பெரும் நீரோ மன்னன் என்று நாம் கேள்விப் படுகிறோம்: அந்த நீரோ மன்னன் ரோம் நகர் பற்றி எரிகின்ற காட்சியைக் கண்ட அந்த ரோமாபுரிக்குப் பக்கத்தில் இந்த அருமையான அழகான புதிய மாடம் இன்றைக்கு அமைந்திருக்கிறது. மறுபுறத்திலே திரும்பினால், காரக்கல்லா என்று ஒரு மன்னன்: அந்த மன்னன் நீராடும் தடாகங்கள் அமைத்து, உல்லாசமாக நீராடிக் கிடந்தானும். அந்த இரண்டு கட்டிடங்களுக்கும் அதற்கு எதிராக பண்டைக் காலத்தில் ரோமாபுரி வீரர்கள் வெறித்தனமாக சிங்கத்திற்கும் புலிக்கும் மனிதனைப் பலியிட்டு மிருகங்களுடைய உணவுக்கு—பிரச்னைக்கு வழி தேடிய அதே ரோமாபுரி நகரத்தில், இன்றைக்கு உலகினுடைய பல்வேறு நாட்டுப் பிரதிநிதிகள் உலகத்தினுடைய உணவுப் பிரச்னையைச் சமாளிப்பதற்காக இங்கே கூடினர்.

உணவு நெருக்கடி. இன்றைக்கு உலகத்தில் ஒரு பயங்கரமான அறைகூவலாக இருக்கிறது. 117 நாட்டுப் பிரதிநிதிகளும் உலகத்திற்கு எவ்வளவு பெரிய பேரபாயம் நேர்ந்திருக்கிறது என்பதை உணர்ந்து ஒருவரோடொருவர் தங்களுடைய கருத்துக்களை இங்கே பரிமாறிக் கொள்கின்றனர் அதுவும் கடந்த இருபத்தைந்து ஆண்டுகாலமாக ஆப்பிரிக்க நாடுகள் பல,

உணவு நெருக்கடி—ஒரு பயங்கரமான அறைகூவல்

—0—

ஆசிய நாடுகள் பல,காலனி ஏகாதிபத்தியத்திடமிருந்து விடுதலை பெற்றதற்குப் பிறகு புதிய பொறுப்புகளும் புதிய நிலைமைகளும் அங்கெல்லாம் ஏற்பட்டிருக்கின்றன. உலகத்திற்கு வெளியே தெரிந்ததெல்லாம் புதிய ஆப்பிரிக்கா நாட்டில் விடுதலை பெற்ற சின்னஞ்சிறு நாடுகளில், ஆசிய நாடுகளில்—அங்கெல்லாம் ஜன

### ஒரு புறம் வளமும்

நாயக முறைகளையும், அரசியல் முறைகளையும்—அவர்கள் பின்பற்றுகிறார்கள்: புதிய வாழ்க்கை முறையை அமைக்கிறார்கள் என்பதைத்தான் உலகம் தெரிந்திருக்கிறது. ஆனால் இவைகளுக்குப் பிறகு மௌனமாக ஒரு பெரும் புரட்சி அங்கே இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்தந்த நாடுகள் தங்கள் தங்கள் மக்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக, இன்றைக்கும் பல்வேறு வகைகளிலே பொருளாதார முறையிலே செயல் புரிவதிலே ஈடுபட்டிருக்கிறார்கள்· உற்பத்தியைப் பெருக்கிறார்கள்· ஒரு போகத்தை இரு போகமாக்குகிறார்கள். உயர்ந்த ரக வித்துக்களையெல்லாம் பயிரிட்டுத் தங்கள் தங்கள் அனுபவங்களையெல்லாம் உணவு உற்பத்தி பெருக்கத்திற்காக வழங்குகிறார்கள்.

**சக்களத்திப் போராட்டம்**

ஆனால், அதே நேரத்தில், வளர்கிற மக்கள் தொகை பிடிக்க முடியாத அளவிற்கு, கண்ணுக்கெட்டாத தூரத்திற்குப் போட்டி போடுகிறது. ஒரு சக்களத்

### என்றுள்ள நிலை, உலகின்

திப் போராட்டமே உற்பத்திக்கும், வளர்கிற மக்கள் தொகைக்கும் நடைபெறுகிறது. இந்த மகத்தான பிரச்சினையைச் சமாளிப்பதற்குத்தான் 117 நாடுகள்—இன்றைக்கு இந்த மாபெரும் மாநாட்டிலே கலந்து கொண்டிருக்கின்றன. பல்வேறு நாடுகளுடைய பிரதிநிதிகள் தங்களது அனுபவங்களையெல்லாம் எடுத்துச் சொல்வதை நான் கேட்டேன். அவைகளிலிருந்து இந்தியாவும், குறிப்பாகத் தமிழகமும் பெற வேண்டிய எத்தனையோ நல்ல விஷயங்கள் நிச்சயமாக இருக்கின்றன.

**ஒளிமயமான எதிர்காலம்**

நம்முடைய தமிழகத்தைப் பொறுத்த வரையில், நமது வாய்ப்புகள், நம்முடைய எதிர்காலம் மிகப் பிரகாசமானது என்றே எனக்குத் தோன்றுகிறது. தஞ்சைத் தரணியில் நாம் இன்றைக்கு மேற்கொண்டுள்ள விவசாயப் புரட்சி, பேரறிஞர் அண்ணா அவர்களுடைய ஆட்சியின்கீழ் இன்றைக்குத் தமிழகம் உணவுத் துறையிலே நடத்திச் செல்கிற முன்மாதிரி, இவைகளைப் பலரும் இங்கே பாராட்டினார்கள். நம்முடைய ஆடுதுறை—27 நெல்விதைகளைப் பற்றியும், ஒரு போகத்தை இருபோகமாக நாம் தஞ்சைத் தரணியிலே செய்வது குறித்தும், படியரிசித் திட்டம் குறித்தும், பலநாட்டுப் பிரதிநிதிகள் இங்கே பெரிதும் பாராட்டுகிறார்கள்.

பல்வேறு நாட்டுக்காரரும் தத்தமது அனுபவத்தை இங்கே எடுத்துரைக்கின்றனர். யூக்ரடிஸ், டைப்ரஸ் நதிக்கரையிலே இருந்த ஈராக் நாட்டுக்காரர்கள் அரிசியைத் தாங்கள் எப்படி ஏற்றுமதி செய்கிறோம் என்று எடுத்துரைத்தார்கள். என்னை மிகவும் கவர்ந்தது, பிலிபைன்ஸ் நாட்டுக்காரர்கள் மீன்பிடிக்கும்

### ஒரு புறம் வறுமையும்

துறையிலே நம் நாட்டார் எப்படி முன்னேறலாம் என்பதைப்பற்றி எடுத்துரைத்ததுதான். அப்படி அவர்கள் எடுத்துரைத்த நேரத்தில், என்னுடைய உடலெல்லாம் சிலிர்த்தது. சூடான் நாட்டில் நைல் நதிக்கரையிலே இன்றைக்கு புதிதாக பல விவசாயப் புரட்சிகளை—நிலச் சீர்திருத்த முறைகளை ஈஜிப்ட் நாடும், சூடான் நாடும் மேற்கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு நாட்டாரும் தத்தமது அனுபவங்களை தத்தமருடைய முயற்சிகளை, இந்த அறைகூவலை சமாளிப்பதற்காக மேற்கொண்ட அருமையான அனுபவரீதியான முயற்சிகளை பல நாட்டாரும் எடுத்துரைக்கிற செயல்கள் இன்றைக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. இவைகளிடையே இருந்து நாம் பெறுவதற்கு ஏராளமாக இருக்கிறது. உலகத்திலே இன்றைக்கு இதைச் சமாளிக்காவிட்டால், ஒருபுறம் வளம் ஒரு புறம் வறுமை என்று இரு பெரும் நிலைமை இருக்குமானால், சமாதானத்திற்கும்,

### அமைதிக்கே ஊறு விளைவிக்கும்

ஒவ்வொரு நாட்டினுடைய அமைதிக்குமே இது அறைகூவலாகும். மனித சமுதாயம் தீர்க்கவேண்டிய அடிப்படை பிரச்சினையாகும் இது என்பதை எல்லோரும், உலக உணவு மாநாட்டில் கலந்துகொண்ட அனைவரும், தெளிவாக உணர்ந்திருக்கிறார்கள்."

—0—

# கிராம நலத் திட்டங்கள்

[மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி]

“ஏழை எளியவர் வாழ்வில் ஏற்றம்காணவேண்டும் என்ற நோக்கத்தோடு, பயனுள்ள திட்டங்களை, தமிழக அரசு உருவாக்கி நிறைவேற்றி வருகிறது. சிறப்பாக, இயற்கைச் சூழலில் வாழ்ந்து, உழைப்பையே பெரிதெனக் கொண்டிருக்கும் கிராமமக்களிடையே, முன்னேற்றம் ஏற்படச்செய்ய வேண்டியது மிகவும் அவசியம். ஏனெனில், நம் நாட்டில் வாழும் மக்களில் பெரும்பாலோர், கிராமங்களில்தான் வாழ்கின்றனர். எனவே கிராமங்களின் நல்வாழ்வுக்கான திட்டங்களை உருவாக்கும் பணி, உள்ளாட்சித்துறையில் முதலிடம் பெறுகிறது.

உள்ளாட்சித் துறையின் உறுப்புகளாக, ஊராட்சிகள், பேரூராட்சிகள், நகரியங்கள், ஊராட்சி ஒன்றியங்கள், நகராட்சிகள், மாவட்ட வளர்ச்சி மன்றங்கள், மாநகராட்சி மன்றம் முதலிய பல்வேறு நிறுவனங்கள் இயங்கி வருவது, அனைவரும் அறிந்ததே.

இந்த உள்ளாட்சி நிறுவனங்கள் அனைத்தும், மக்கள் நலனுக்கான தலைமைப் பண்பையும் பொதுநலப் பணியையும் வளர்க்கும் பயிற்சி நிலையங்களாக விளங்கி வருகின்றன. இக்கருத்தை, அண்மையிலே நமது சென்னையில் நடைபெற்ற அகில இந்தியக் கருத்தரங்கு ஒன்றில், நான் தக்க எடுத்துக்காட்டுகளோடு விளக்கி கூறியதோடு, நமது நாட்டில் புகழ்பெற்ற தலைவர்கள் பலர், தொடக்க நிலையிலே, உள்ளாட்சித்துறையில் பணியாற்றிப்பயிற்சி பெற்றதைச் சுட்டிக்காட்டினேன். இந்திய நாட்டில் பல்வேறு மாநிலங்களின் உள்ளாட்சித்துறை அமைச்சர்களும் அதிகாரிகளும் கலந்து கொண்ட அந்தக் கருத்தரங்கும், மாநாடும், டிசம்பர் 8-ந்தேதி முதல் 11-ந் தேதிவரை, மத்திய அரசின் ஆதரவில் நடைபெற்றன. அச்சமயம், தமிழக அரசின் சார்பில் நானும், நமது மதிப்பிற்குரிய மேதகு ஆளுநர் சர்தார் உஜ்ஜல்சிங் அவர்களும், உள்ளாட்சித் துறையில் நாம் பெற்றுள்ள மேன்மையான சாதனைகளை, விரிவாக எடுத்துரைத்தோம்.

**முதலமைச்சரின் பிறந்தநாள் விழா காணிக்கை**

கிராம நலத்திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தும் பொறுப்பு, தமிழகத்திலே உள்ள 12831 ஊராட்சி மன்றங்கள், 438 பேரூராட்சி மன்றங்கள், 14 நகரியங்கள், 374 ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றைச் சாரும். அங்கங்கே வாழும் மக்களின் உடனடியாக தேவைகளுக்கேற்றவகையில் கிராமநலத் திட்டங்களை உருவாக்கும் முழு உரிமையும், இந்த நிறுவனங்களுக்கு உண்டு.

இவற்றில் உணவுப்பொருள் பெருக்கத்திற்கான திட்டங்களுக்கே, முதலிடம் தரப்பட்டுள்ளது. விவசாய முன்னேற்றத்திற்கான ‘டிராக்டர்கள்’ மற்ற உழவுக் கருவிகள் முதலியவற்றை, ஊராட்சி ஒன்றியங்கள் வாங்கி வைத்து குறைந்த வாடகைக்கு, எளிய விவசாயிகளுக்கு அளித்து உதவ ஏற்பாடாகி உள்ளது. தரிசு நிலங்களைச் செப்பனிடவும், பள்ளிக்கூடங்களையடுத்து காய்கறிகளைப் பயிரிட்டு புதிய உணவுத் திட்டத்தை மேலும் செம்மையான முறையில் நடத்தவும், ‘ஓராண்டுத் திட்டம் ஒன்று’ உருவாகியுள்ளது. நமது பேரன்புக்குரிய மாண்புமிகு முதலமைச்சரின் பிறந்தநாள் விழா காணிக்கையாக விளங்கும் இத்திட்டம், கிராம மக்களின் நலனுக்கு, உடனடியாக வழி வகுக்கும் என்பதில் ஐயமில்லை. இதை நிறைவேற்றுவதில், அனைவரும் உள்ளன்போடு பணியாற்றுவார்கள் என்று உறுதியாக நம்புகிறேன்.

கிராமங்களுக்குக் குடிநீர், சாலைவசதி, பள்ளிக்கூடம், ஆரம்ப சுகாதார நிலையம், மகளிர் மன்றம், செய்தி நிலையம், நீர்ப்பாசனம் முதலிய பல்வேறு வசதிகளை அளிக்க ஏற்பாடாகியுள்ளது. இதற்கான நிதி ஒதுக்கீடும், ஆண்டுதோறும் தரப்பட்டு வருகிறது. இத்திட்டங்களின் முன்னேற்றம், ஊராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியத்தலைவர்கள் ஆகியோரின் ஆர்வத்தையும் ஒத்துழைப்பையும் ஒட்டியே அமையும். இவை தவிர, பிற்போக்கான பகுதிகளுக்குச் சிறப்புத் திட்டங்களும் நிறைவேறி வருகின்றன. மலைவாழ் மக்களின் முன்னேற்றத்திற்காக, மத்திய அரசின் உதவியுடன், சிறப்புத்திட்டம் ஒன்று, கொல்லிமலை, ஏர்க்காடு ஆகிய வட்டாரங்களில் நடைபெற்று வருகிறது. தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள ‘கல்ராயன்குன்று’ வட்டாரத்திலும், இதைச் செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. மேலும் கிராம மனித சக்தியைப் பயன்படுத்தும் திட்டம் 72 வட்டாரங்களிலும் சத்துணவுத் திட்டம் 9 வட்டாரங்களிலும் நடைபெற்று வருகின்றன.

[28-ம் பக்கம் பார்க்க....]

உலகத் தமிழ் மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு, முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் அரசினர் கோட்டத்தில் 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் 11-ம் தேதி ஒரு விருந்தளித்தார். அப்போது, தேங்காய் மூடியிலான மலர் வைப்புப் பொருளும், குங்குமம் வைக்கும் சிமிழும், உலகத் தமிழ் மாநாட்டுக்கு வருகைபுரிந்த வெளிநாட்டு அறிஞர்களுக்கு, கிராம வளர்ச்சித் துறையின் பரிசாக, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு *முத்துசாமி* அவர்களால் மாண்புமிகு முதலமைச்சர் மூலமாக, பரிசாக அளிக்கப்பட்டன. [*படம் : மூன்ருவது அட்டைப்பக்கம் பார்க்கவும்*]

*மூன்று கண்களும் முத்தமிழும்*

உலகத் தமிழ் மாநாட்டின் வெற்றிக்குழைத்தவர்களைப் பாராட்டி பொற்பதக்கங்களை *அண்ணா* அவர்கள் வழங்கினர். மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் *திரு கருணாநிதி* பேசும்போது குறிப்பிட்டதாவது:—

"உலகத் தமிழ் மாநாடு எனும் பெயரில் இரண்டு மாநாடுகள் இங்கு ஒரே நோக்கத்துடன் நடைபெற்றன.

## வெளிநாட்டு அறிஞர்களுக்கு

தமிழரின் வாழ்வு அகம்—புறம் எனப் பிரிக்கப்பட்டு, அந்த அகமும் புறமும் இணைந்த வாழ்வைத்தான் வாழ்ந்தார்கள். அவ்விதம் இம் மாநாட்டுக்கும் அகக்குழு—புறக்குழு என அமைந்தன. அகக் குழுவின் சார்பில் வெளிநாட்டறிஞர்களை அழைத்து தமிழ் ஆராய்ச்சி நடத்தப்பெற்றது. தீவுத்திடலில் அமைந்த பூம்புகார் மாநாட்டில் தமிழ்ச் சான்றோரும் தமிழறிஞர்களும் கூடிப் பேசினார்கள். அதனால் மக்களும் பயன்பெற்றார்கள்.

வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு தேங்காய் மூடியிலான கலைப் பொருட்கள் தரப்பட்டன. அந்தத் தேங்காயில் மூன்று கண்கள் இருக்கின்றன. அவை முத்தமிழை நமக்கு எடுத்தோதுகின்றன" என்றார்.

மலேசிய பிரதிநிதியான அந்நாட்டுச் செனட்டர் *திரு ஆதிநாகப்பன்* அவர்கள் பேசுகையில்,

## உலகத் தமிழ் மாநாட்டுக்கு வருகை தந்த

பிஜித் தீவைச் சேர்ந்த *திருமதி சந்திரா முருகேசனுக்கு*, அப்பொருட்களை, மாண்புமிகு உணவமைச்சர் *மதியழகன்* அவர்கள் வழங்கினர். நன்றியுரை கூறிய திருமதி சந்திரா முருகேசன் "பிஜித் தீவில் தமிழ் மக்கள் தமிழ் அறியாத நிலையில் இருப்பதைக் கண்டேன். அவர்கள் எல்லாம் தமிழ் கற்க, அண்ணா அவர்கள் உதவ வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்" என்றார்.

*சோவியத் நாட்டின் பரிசு*

சோவியத்நாட்டின் சார்பில், ருஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப்பட்ட பாரதியார் நூல் ஒன்று அறிஞர் அண்ணா அவர்களுக்கு அளிக்கப்பட்டது.

இலங்கையிலிருந்து வந்த பிரதிநிதி *திரு தம்பய்யா* பேசுகையில்,

"இலங்கையில் நாங்கள் இருந்தாலும், தமிழ்த்தாயின் பிள்ளைகள்தான் நாங்கள். இலங்கையின் பெரிய மதமான புத்த மதத்தினை தோற்றுவித்த புத்தரைத் தந்தது இந்நாடு.

"அகவேலை—புறவேலை என இரண்டு உண்டு. அந்த அகவேலை—உலகத்தமிழ்க் கருத்தாராய்ச்சி அரங்கில் நடைபெற்றது. புறவேலை பூம்புகார் நகரில் நடைபெற்றது. அங்கு இலட்சக்கணக்கில் தமிழர் கூடி உரை கேட்டது, உலகத்திலேயே உன்னத நிகழ்ச்சியாகும். இதுவரை இப்படியொரு நிகழ்ச்சி நடந்ததில்லை எனக் கூறத் தகுந்தது ஆகும். அடுத்த மாநாடு பாரிசிலும், அதற்கடுத்த மாநாடு, இலங்கையிலும் நடைபெற இருக்கின்றன. அதற்கடுத்து மலேசியாவில் நடைபெற இருக்கிறது. அந்த மாநாட்டிற்கு வருக என அனைவரையும் அழைக்கிறேன்" என்று அழைப்பு விடுத்தார்.

இலங்கையின் சார்பில் முதலமைச்சருக்குப் பரிசுப் பொருள்கள் அளிக்கப்பட்டன.

விருந்திற்குப் பிறகு உலகத் தமிழ்க் கருத்தரங்கின் பொருளாளர் திரு வி. எஸ். *தியாகராஜன்* அவர்கள்,

## கிராம வளர்ச்சித் துறையின் பரிசு.

எங்களுக்கு மொழியைத் தந்தது இந்நாடு. தமிழர்கள் தங்கள் தாய்க்கு அடுத்தபடியாக தாய்மொழியை உயிரினும் மேலாகக் கருதுகிறார்கள்' என்று குறிப்பிட்டார்.

முதலமைச்சர் அவர்களுக்கும், அமைச்சரவையிலுள்ள அனைவருக்கும், மற்றும் ஆர்வத்தோடு ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி கூறினார்.

*முதல் அட்டைப்படம் : உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி நடைபெற்ற ஊர்வலத்தில், "பண்டைத் தமிழகத்திலே மாடு கட்டிப் போரடித்தால் மாளாது என்று யானை கட்டிப் போரடித்த" காட்சியைச் சித்தரிக்கும் அலங்கார வண்டி.*



# "புகாரில் ஒரு நாள்"

பேராசிரியர் திரு மா. கி. தசரதன்

*(கவிதை ஆய்வுக் குழுத் தலைவர்.)*

*உலகத் தமிழ் மாநாட்டினை ஒட்டி அறிஞர் அண்ணா அவர்கள் கவிதைப் போட்டி ஒன்றினை அறிவித்தார்கள். 'புகாரில் ஒரு நாள்' எனும் தலைப்பினையும் தந்தார்கள்; இளங் கவிஞர்காள், எழுதுக பாடல்! என்றார்கள். கவிஞர் பலர் கற்பனைத் தேர் ஏறிக் கவிதை யுலகில் பறந்தனர். சுமார் ஆயிரத்திருநூறு பாடல்கள் வந்து குவிந்தன.*

*வந்த பாடல்களின் வரிசையறியும் பணியை மேற்கொள்ளக் குழு ஒன்று அமைக்கப்பெற்றது. கவிதையில் ஈடுபாடு கொண்ட புலமை சான்ற பலர் அக்குழுவின் உறுப்பினர்களாக இடம் பெற்றனர். யான் அக்குழுவின் தலைவனாகும் பேறு பெற்றேன்.*

*கவிதைகள் அனைத்தையும் யாப்பிலக்கணச் சல்லடையிட்டுச் சலித்தோம். தேறிய பாடல்களைத் தெரிந்தெடுக்கும் பணியில் குழுவினர் பல நாட்கள் ஈடுபட்டனர்; முடிவு : மூன்று கவிதைகள் பரிசுக்குரியனவாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.*

*கவிஞர் ஏ. சண்முகம் அவர்கள் முதலிடத்தைப் பெற்று அறிஞர் அண்ணா பரிசு பெறுகின்றார்; கவிஞர் ஞானச்செல்வம் அவர்கள் இரண்டாம் பரிசும், புலவர் ந. சந்தானம் அவர்கள் மூன்றும் இடமும் பெறுகின்றனர்.*

*இம்மூன்று கவிதைகளோடு பாராட்டுக்குரிய சில கவிதைகளையும் சேர்த்து, "புகாரில் ஒரு நாள்" எனும் கவிதைத் தொகுப்பு உருவாகியுள்ளது. பரிசும் பாராட்டும் பெறுபவையல்லாது எஞ்சிய கவிதைகளில் சுவையான பகுதிகளை எடுத்துத் "தேன் துளிகள்" என்ற தலைப்பில் சேர்த்துள்ளோம்.*

*இப் போட்டியை அறிவித்து ஊக்கமூட்டிய உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு மா. முத்துசாமி அவர்கட்கும், இளங் கவிஞர்களுக்கு வாழ்த்துரைத்துள்ள முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்கட்கும் தமிழ் இலக்கிய உலகு என்றும் நன்றி செலுத்தும்.*

# கவிதைப் போட்டி முடிவுகள்

உலகத் தமிழ் மாநாட்டினை ஒட்டி "புகாரில் ஒருநாள்" என்ற தலைப்பில் நடத்தப்பெற்ற இளங் கவிஞர்களுக்கான கவிதைப் போட்டிக்கு ஏறத்தாழ 1200 கவிதைகள் வந்தன. பேராசிரியர் திரு மா. கி. தசரதன் தலைமையில் கவிதை ஆய்வுக் குழுவினர் அக் கவிதைகளை ஆராய்ந்து கீழே காணும் பத்து கவிஞர்களின் படைப்புக்களைப் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரியதெனத் தெரிந்தெடுத்தார்கள்:—

முதல் பரிசு :

*திரு ஏ. சண்முகம், குருவிக்கரம்பை, பட்டுக் கோட்டை.*

இரண்டாவது பரிசு :

*புலவர் திரு கோ. திருஞானசம்பந்தம், திருவாரூர்.*

மூன்றும் பரிசு :

*புலவர் திரு ந. சந்தானம், கும்பகோணம்.*

பாராட்டுக்குரியவர்கள் :

*திருவாளர்கள் இரா. முத்துலிங்கம், சைதை.*

*,, சக்கரைப் புலவர், வெள்ளக்கோவில், ஈரோடு.*

*,, க. நெடுஞ்செழியன், மாநிலக்கல்லூரி, சென்னை.*

*,, அம்பிகைபாகன், தெல்லிப்பழை, இலங்கை.*

*,, புலவர் ஆர். கே. நாராயணசுவாமி, நாகப்பட்டினம்.*

*,, வி. நாகராசன், யாழ்ப்பாணம், இலங்கை.*

*,, புலவர் கி. வேங்கடசுவாமி, அவிநாசி*

முதல் மூன்று கவிஞர்கள் தங்கப் பதக்கம் பெற்றனர். ஏனைய எழுவர் பாராட்டுப் பெற்றனர்.

பரிசளிப்பு விழா "தீவுத்திடலில்" சனவரி 10-ந் தேதி நடைபெற்றது.

# பொன் மலர்

மாண்புமிகு திரு மா. முத்துசாமி

*மலர்க்குழுத் தலைவர்,*
*உள்ளாட்சித்துறை அமைச்சர்.*

"எழுத்தில் பேச்சில் இனிப்புக் கரும்பை
வழங்கும் அண்ணா! வண்டமிழ் அன்னை
மணிவயிற் றுதித்த மாண்பார் தலைமகன்
அணிதமிழ்மா நாட்டை யொட்டியோர் அறிவிப்புச்
செய்தனர்! அதுதான்...... ...... ....
நெய்யுங் கவித்தொழில் நிகழ்த்தும் நெஞ்சினர்
பூம்புகா ரிலொருநாள் என்னும் பொருளில்
தீஞ்சுவைக் கவிதை தேனூறு வரிகளில்
ஆக்கி யனுப்பினால் அதன்திறம் தேர்ந்து
தங்கப் பதக்கம் தருவோம் என்பது!
வேண்டுகோள் பலர்க்குத் தூண்டுகோ லாக
ஆயிரத் திருநூறு பாக்கள் வடித்து
அனுப்பினர்; சிலசில அலைகடல் கடந்து
வந்தன; வன்சிறைக் கோட்டக் கம்பிகள்
கடந்து வந்தன சிலசில! கற்றோர்
ஆய்வு மேடையை அடைந்து நின்றே
அழகும் திறமும் காட்டின! ஆய்ந்தோர்
பழக்குலைக் கவிகளில் பரிசுக் குரியதை
நன்காய்ந் தெடுத்து நல்கினர்.
பரிசு பெற்றிடும் பாகுப் பாடலும்
பாராட் டடையும் பலாச்சுளைக் கவிகளும்
தேன்துளி யாகிடும் தித்திப்பு வரிகளும்
சுவடி வடிவிலே சுடர்விட லாயின!
அண்ணா அளிக்கும் அருமைப் பதிகமும்
கருணா நிதியார் கவிதை முகமனும்
இந்நூல் சிறப்பை ஏற்றி யுள்ளன!
அறிவிப் புதவியும் அருங்கவி கண்டு
தங்கப் பதக்கம் தந்தா தரித்தும்
உருக்கொளும் இந்நூல் கருக்கொளக் காரணம்
ஆகிய அண்ணா அழகு மலரடி
தன்னில் இந்தப் பொன்மலர் தன்னைப்
படைத்தேன்! மகிழ்ச்சி படைத்தேன்."

"புகாரில் ஒரு நாள்" மலரிலிருந்து.

முதற் பரிசுக் கவிதை:

# புகாரில் ஒரு நாள்

(கவிஞர் ஏ. சண்முகம்)

மணிமிக உடையன கதிர்நிறைந் திரவன கலம்பல விளைவன வயல்,
வணிகமே புரிபவர் கலங்களில் உலவிட மறியில உடையது கடல்,
மணமிக உடையன மலர்மிகுந் திரவன மனம்கவர்ந் திரவன பொழில்,
அணிமிக உடையன விழிகவர்ந் திரவன பலபல நிறைந்தது புகார்!

உடலிடை உளமென உலகிடை இலங்கிய உயர்திறம் உடையது புகார்,
படைபல உடையராய்ப் பகைவரை அடையினும் பகைவரை இந்நகர் புகார்,
இடமில எனுமொழி இயம்பிய இருந்தவர் புகுந்திட இடமிடும் புகார்,
கடலிடைப் புகுந்தது கனவென அழிந்தது கவிதையில் நிலைத்தது புகார்!

அன்றொரு நாள்:

மேகத்தைச் சென்று கூடும் மிக்குயர் கழகின் உச்சி
தோகையை விரித்துக் காடும் மயிலெனத் தோற்றம் நல்கும்
வேகமாய்க் கடற்க ரைக்கு விரைந்திடு நாவாய் எல்லாம்
மேகத்தின் மேலு யர்ந்த கலங்கரை விளக்கம் மின்னும்!

கதிரவன் பொன்னி றத்தைக் கடலினில் வீசித் தோன்ற
எதிரவன் மருவூர்ப் பாக்கம் பொற்பணி செய்யா வீதி
பதியகத்துப் பொன்னி றத்தைப் பளபள வென்றே வீசும்
அதிசயம் எந்த யில்லா அதிசயம் அங்கே கண்டார்!

கூடங்கள் விண்ணின் வானம்! கொடிகளும் மணியும் தொங்கும்
மாடங்கள் நிலவுப் பந்தல்! மங்கையர் மாறாக் காதல்
பாடல்கள் நிறைந்த ஏடு! பரிதியின் வரவைக் கண்டு
கூடித்தான் அவர்கள் பாடும் கொம்புத்தேன் பாடல் உண்டு

காண்பவர் வியக்கும் வண்ணம் கடற்கரை ஓர மாக
மாண்புசால் யவன ரோடு வாணிகர் பிறரும் வந்தால்
நான்வர வேற்பேன் என்று நல்லவர் உள்ளம் போல
வான்வரை ஓங்கி நின்ற மாளிகை யதனில் புக்கார்!

சாலையில் கஞ்சி யாறு தான்நடக் கவண்டு பாடும்
சோலையின் மரங்கள் யாவும் சந்தனக் கடையின் தூண்கள்!
காலையில் தொடங்கும் நாளங் காடியில் மணியும் முத்தும்
மாலைகள் ஆகித் தொங்கும் மணவறை போல மின்னும்!

வணிகமே செய்ய வந்த அயலவர் தெருவில் வந்து
மணிகளின் குவியல் கண்டார்! மலைகளோ எனவி யந்தார்!
அணிகள், பொன் னுடை கண்டார் அசைந்திடும் காற்றை ஒத்த
துணிகளும் மாரியின் வீச்சால் சுடர்விட மயங்கி நின்றார்!

மாம்பழ நிறத்தை ஒத்த வடமலைப் பொன்னைக் காட்டித்
தாமவரை பகர்வோர் ஓசை! தண்மதி நிறமுத் தாலே
ஆம்பல்வாய் திறந்த வண்ணம் அதைவிலை கேட்போர் ஓசை!
பூம்புகார்க் கடலைப் போலப் பொழுதெலாம் ஒலித்தி ருக்கும்!

வடவரை வென்று வேந்தன் வாங்கிய முத்துப் பந்தர்
உடன்திகழ் நல்ல பட்டி மண்டபம் அருகே சோழன்
அடிதனில் பகைவர் வைத்த தோரண வாயில் கண்டு
படிதனில் மிக்கு யர்ந்த பட்டினம் புகாரே என்றார்!

நிலையிலாச் செல்வம் தன்னை நிலையென எண்ணித் தானே
அலைகடல் தாண்டி வந்தீர் அள்ளியே கொள்வீர் என்று
கலைகளால் உயர்வு பெற்ற காவிரிப் பட்டி னத்து
நிலமகள் சுமந்து நின்றாள் நீங்காத செல்வம் தன்னை!

பன்னிற மலரின் கூட்டம் பார்ப்பவர் விழியை ஈர்க்கும்!
செந்நிறப் பவழக் கோவை சிந்தையைச் சேர்த்தி ழுக்கும்!
கண்கொளாக் காட்சி அவ்வூர்க் கடைத்தெருக் காட்சி வேற்றூர்
மண்கொளாப் புகழ்ந் தருளும் மன்னவன் ஊரின் மாட்சி!

புலிக்கொடி ஏறி நின்ற புகாரின்நல் வேந்தன் வாளால்
பலிக்கொடி யாகிப் போன பகைவரின் கொடிகள் எல்லாம்
எலிக்கடி பட்ட ழிந்த எளியவர் துணிகள் போல
வலைக்கொடி யாகி நிற்க வணங்கினர் கப்பம் கட்டி!

தேர்த்தடம் பதிந்த வீதி! திருநாட்டின் வேந்தன், வீரர்
ஏர்த்தொழில் வல்லார், ஆடல் இயற்றுவோர், வணிகர் வாழ
நீர்த்துளி நகைகள் ஈனும் நிகரிலா வான வில்போல்
போர்த்தொழி லாளர் செங்கைப் போர்வில்லும் வாளும் மின்னும்

பட்டினப் பாக்கம் வேற்றூர்ப் பட்டினக் காரர் வந்தால்
பட்டினைப் பொன்னை நல்கிப் பசியையும் போக்கும் பாக்கம்
பட்டினப் பாக்கம் பண்பார் மருத்துவர் கலையால் திக்காம்
எட்டிலும் புகழைப் பெற்றார் இலங்கிடும் பாக்கம் தன்னில்

கணிகையர் இருப்பி டத்தில் காண்பவர் வியக்கும் வண்ணம்
மணிகளால் அழகு செய்த மாடியின் நிலாமுற் றத்தில்
வணிகனின் மைந்த னான கோவலன் வரவை வேண்டி
இனியசொற் கடிதம் தீட்டி ஏமாற்றம் பெற்ற தாலே

மலையினில் பிறந்து நல்ல மண்மிசைத் தவழ்ந்து பாடும்
அலைகடல் கலந்த பொன்னி ஆற்றினைப் போல ஆடற்
கலையினில் தேர்ச்சி பெற்றுக் கலைக்கடல் கலந்த தாலே
தலைக்கோலாம் பட்டம் பெற்ற மாதவி தவித்தி ருந்தாள்!

அதே நேரத்தில் மற்றொரு புறம்:

கண்டதோர் கனவைக் கூறிக் கண்ணகி கலங்கும் காலை
பண்டையோர் நோன்பு பொய்த்தாய் பயன்பெறக் காம வேளைச்
சென்றுமே தொழுவோம் என்ற தேவந்தி சொல்ம றுத்து
நன்றல என்றி ருக்கக் கோவலன் வந்தான் நாடி!

வறுமையைக் காணு ஊரில் வறுமையைப் பெற்ற தாலே
சிறுமையாம் வெம்மை பெற்றேன் செல்வமே! நிழலே! என்றான்,
பெருமையில் நிகரில் லாத சிலம்புள பெறுவீர் என்றாள்.
மறுமுறை செல்வ ஞக மதுரைக்குச் செல்வோம் என்றான்!

அணில்வாலைப் போன்ற மீசை அமைந்தநற் புலவர் நெஞ்சம்
பணிந்துபோய் உறங்கும் நேரம்! பால்நிலா வானில் வந்து
தணிந்திடா ஆசை யாலே தன்முகம் பொன்னி யாற்றின்
மணிநீரில் பார்த்து விட்டு மயங்கியே மறைந்த நேரம்

பூம்புகார் தன்னை விட்டுப் போகின்றார் இருவர் அந்தோ!
தேம்பியே கடல ழைக்கச் செல்வச்சீர் குடியின் றுரைப்
பூம்புகார் மன்ன ழைக்கப் பூங்காற்றும் தான ழைக்க
மாம்பிஞ்சு வடுக்கண் ணுளாம் மாதவி யாழ் அழைக்க.

தீம்புனல் பொன்னி யாற்றின் திரையெலாம் அழைக்கக் கொஞ்சுந்
காம்பினை மயங்கி விட்ட கடும்பசிக் குழந்தை யைப்போல்
பூம்புகார் தன்னைச் செல்வ புரியினை விட்டுச் சென்று
நாம்இனி வாழ்வோ மென்றார்! நடக்கின்றார் முடிவை நோக்கி!

பிறநாட்டு வணிகர் வந்து பெரும்பொருள் ஈட்டிச் செல்லத்
திறல்நாட்டு வணிகன் மைந்தன் திருவினைத் தேடற் கென்று
புறநாட்டிற் போன வந்நாள் பூம்புகார் வரலாற் றின்கண்
கறைபட்ட ஒருநாள் துன்பக் கண்ணீரைத் துடைப்ப தென்றோ?





இரண்டாவது பரிசு பெற்ற கவிதை:

# கண்டதெல்லாம் கனவு

[புலவர் கோ. திருஞானசம்பந்தன்]

காவிரிப்பூம் பட்டினத்துக் கடற்கரையில் அன்றொருநாள்
பூவிரியும் சோலைகளின் புதுமணத்தை அள்ளியுண்டு
மாலைப் பொழுதினிலே மணற்பரப்பின் மேலமர்ந்து
தாலை அசைத்தொரு தமிழ்ப்பாட்டுப் பாடலுற்றேன்
பாட்டின் சுவையாலோ பைந்தமிழின் திறத்தாலோ
கூட்டும் எழிலெல்லாம் கொண்டவிளம் பெண்ணொருத்தி
இளநகை காட்டியென்றன் எதிரிலே வந்துற்றாள்!
குளக்கமல முகமலரக் கொவ்வை இதழ்துடிக்க
வணக்கம் எனவுரைத்து வளக்காந்தள் கரங்குவித்தாள்!
இணக்கமுறும் அவளழகில் ஈடுபட்டுப் பேசலுற்றேன்;
"பெண்ணரசே! பேரெழிலே! பேசும்பொற் சித்திரமே!
விண்ணரசு மகளோநீ? விளங்கவுரை" யென்றேன்.
"பூம்புகார் மங்கையான் பொய்யுரையேன் உமக்கிந்தப்
பூம்புகார்ச் சிறப்பெல்லாம் புலப்படுத்த வந்தேனுல்!"
"நல்லதம்மா நானுமொரு நற்றுணையைத் தேடித்தான்
மெல்ல இவணிருந்தேன் மெல்லிழையே நன்றி"யென்றேன்
"வீண்பேச் சினியெதற்கு? விண்டுரைக்க மாட்டாத

மாணுயர்ந்த பூம்புகார் மாண்புகளைக் காட்டிடுவேன்;
பட்டினம் என்றாலே பூம்புகார்ப் பட்டினந்தான்!
தட்டில்லை! தடையில்லை! தவறில்லை; ஆதலினால்
இந்நகரார் வாழ்வதற்காய் எவ்வூரும் புகாரே!
என்பதன்றோ இவ்வூருக் கேற்ற பெயராகும்!
எழிலின் திருவுருவாய் எழிசைக்கு நாயகியாய்
அழிவுறு கூத்தியலின் ஆரணங்காய் அரங்கேறிப்
பண்ணுணர்க் கூத்துப் பதினொன்றும் திறங்காட்டி,
கண்டார்கள் உள்ளமெல்லாம் கவர்ந்த கலையரசி!
காதல் வரிபாடிக் காதலனைத் தானிழந்தாள்
தானோர் பிழையறியாள் தகவுடைய மாதரசி
மாதவியாள் நடமிட்ட மாமலர்ப்பூஞ் சோலையிது!
காதம் பலகடந்து கலங்கள் பலவந்து
நிற்கும் துறையாரார்! நெடுங்கலங்கள் கொண்டுவந்த
முத்தும் பிறபொருளும் மொய்த்துள்ள திறம்காணீர்!
கொண்டுவந்த பொருள்மீது குத்துகிறார் புலிச்சின்னம்!
பண்டங்கள் கொண்டுசெலும் பரந்த கலமிவையாம்!

ஆங்கொருபால்;

காவிரிப்பெண் தன்கணவன் கடலோடு கலப்பதுவும்
மேவுகடல் அலைக்கரத்தால் மெல்ல அணைப்பதுவும்
கண்டீரோ" என்றென்னைக் கடைக்கண்ணால் தான்கண்டாள்!
"கண்டேன்" என்றவள் கண்களையே யான்கண்டேன்!
"இருபத்தொரு நாட்கள் இந்திர விழாநிகழும்
பெருநகரை இருபிரிவாய்ப் பேசுதலும் அறியீரோ?
மருவூர்நற் பாக்கமிது மாநகரின் ஒருபிரிவு:
பெருநிலா முற்றமொடு பேசுமெழில் மாளிகைகள்
பயந்தொழிலை யறியாத பல்யவனர் இருப்பிடங்கள்
நயத்தபல நாட்டினர்கள் நன்குசெறி கரையிருப்பு!
வண்ணமும் சாந்தமும் சூழ்புகையும் பூவுடனே
சுண்ணமும் விற்போர்கள் வந்துலவும் பெருந்தெருக்கள்!
பட்டெலி மயிராடை பருத்தியுடை நெய்வார்கள்
இட்டமுறு பொன்னும் எடுத்தபிற மணிவகையும்
சந்தனமும் அகிலுமெனச் சார்ந்த வளப்பொருள்கள்
இந்த அளவினதென் றெண்ணரிய மறுகுகளும்
எவ்வகைக் கூலங்கள் இனிதுவிற்கும் அங்காடி
இன்னபிற சூழ்ந்துள்ள இப்பகுதி நீங்கிடுவோம்!.

அப்பாலே

பட்டினப் பாக்கமுண்டு பார்த்திடுவோம் வாரீரோ!
கட்டடம் பலசார்ந்த கடிநகர்ப் பகுதியது!
அரசப் பெருந்தெருக்கள் அருமறையோர் உறைவிடங்கள்;
பாகம் பெருவணிகர் பல்குமெழில் மாளிகைகள்;
தேரோடும் வீதிகளும், திருமணிகள் குயிற்றுநரும்,
பார்காக்கும் உழவினரும், பல்பிணியும் தீர்ப்பவரும்
நேருறவே சோதிடங்கள் நிலைமொழியாற் கூறுநரும்
உருறவே சித்திரங்கள் இனித்தமுடைச் சிற்பங்கள்
வல்ல பெருங்கலைஞர் வாழ்கின்ற வளமனைகள்
பல்லியுறா வீதிகளும் பார்த்து மகிழ்ந்திடுவீர்!
இவ்விரண்டு பாக்கங்கள் இடைப்பட்ட பெருநிலத்தில்
செவ்வியநா ளங்காடி திகழும் வகைகாணீர்!
அல்லங் காடியெனா அமைந்த இராக்கடைகள்
பல்பொருளும் கொண்டுதிகழ் பான்மையினைக் காண்பீரே!
அங்காடி வாயிலுற்ற அழகார் திருச்சிலை
இங்கிந்தப் பொருளென்றெவர் இயம்பும் திறமென்னே!

இவையன்றி,

முத்துநற் பந்தலொடு பட்டியுரை மண்டபமும்
மாவிலின் தோரணமும் வரிப்பொருளாய்க் கரிகாலன்
பெற்றுவந்த புகழ்க்குரிய பீடுமிகு சின்னங்கள்
உற்றிங்கே திகழ்கின்ற உயர்வுதனை என்சொல்வேன்!
கள்வோரைப் பிடித்தவர் கழுத்தில் சுமையேற்றும்
வெள்ளிடை மன்றமெனும் வியப்புடை மன்றமுண்டு!
கூனர் தொழுநோயர் குளத்தில் முழுகிவந்தால்
ஊனம் தனையொழிக்கும் இலஞ்சி மன்றமுண்டு!
நஞ்சுண்டார் பேயுற்றார் நாடி வலம்வந்தால்
விஞ்சு துயர்நீக்கும் நெடுங்கால் மன்றமுண்டு!

பொய்த்தவ வஞ்சரையும், பொய்யொழுக்கப் பெண்டிரையும்,
பொய்க்கரி புகல்வரையும், பிறர்மனை நயப்பரையும்
துணிவுடனே வஞ்சிக்கும் தூய்மையிலா அமைச்சரையும்
பிணித்துக் குரலெழுப்பும் பெரும்பூதச் சதுக்கமுண்டு!
அரைசுநெறி தான்தவறின் அறங்கூறும் அவையத்தார்
உரைசிறிது கோடினும் உள்ளம் மிகவருந்திக்
கண்ணீரைச் சிந்தித்தன் கருத்தைப் புலப்படுத்தும்
பண்பில் திரியாத பாவைமன்ற மிங்குண்டு.
நாமினிமேல்,
மக்கள் பலர்வாழும் மறுகுகளைச் சென்றடைவோம்;
தக்கநற் பட்டாடை தமைக்களைந்து பருத்தியுடை
பூண்ட இவரெல்லாம் பொங்கும் நிலாவழகில்
தூண்டும் மகிழ்வினராய்ச் சிலம், கடா, மோதவிட்டும்
மற்போரில் ஈடுபட்டும் மனம்துள்ளக் கடல்படிந்தும்
உறசாக முடன்வாழும் ஒப்பரிய காட்சியிதே!"
என்றுரைக்க, நானுந்தான் "எந்திழையே நீயெனக்கே
என்றுந் துணையாவாய்" என்றுசொல்லி அணைத்திட்டேன்;
'ஒன்றுமில்லை'—வெறுந்தரையில் உருண்டு கிடந்தேனன்!
கண்டதெலாம் கனவென்று கருத மனநெகிழ்ந்தேன்!
பூஞ்சோலை தானில்லை; பொட்டல் மணல்வெறிதான்!
மாஞ்சோலை, மாளிகைகள், மாடங்கள் எதுமில்லை!
விண்ணை மறைப்பதற்கோர் மேற்கூரை யில்லாது
கண்ணகி சிலையொன்று கவினிழந்து நிற்பதுவும்
சீர்நகரம் இன்றோர் சிற்றூராய் நிற்பதுவும்
யாரிடத்துச் சொல்லிடுவேன் யான்!

## கவிப் பூச்சொரிய வழிவகுத்தார்!

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர்.
திரு மு. கருணாநிதி,

'புகாரில் ஒருநாள்' என்றே
போட்டியை மூட்டிவிட்டு—பூம்
புகார்த் தமிழ் மாநாட்டில் - கவிப்
பூச்சொரிய வழிவகுத்தார்!—வாழ்க நன்று!
புதுநிலம் பிடிக்க எண்ணும் பகைவர் புகார்
—ஆயினும்
புகுந்துவிட்ட கடல் அலையின் ஆட்சிதான்
—இன்று அங்கே!
சமுத்திரத்தின் மடிதனிலே தூங்கிக்கொண்டு
சரித்திரத்தின் வரிகளிலே நடம்புரியும்
—பூம்புகாரே! உனைக்
கவித்திறத்தார்கொண்டு வந்தார் எம் எதிரே!
—என் வாழ்த்து!

(" புகாரில் ஒரு நாள் " மலரிலிருந்து)



உலகத் தமிழ் மாநாட்டுக்கு வருகை தந்த தமிழ்ப் பேரறிஞர்கள் தமிழகத்தின் பல பகுதிகளைக் காணச் சிறப்பான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சென்னையில் தமிழ் மாநாட்டு நிகழ்ச்சிகள் முடிந்ததும், 11-1-1968 இரவு 11-45 மணிக்கு சென்னை எழும்பூர் ரயிலடியில் தனி ரயில் அவர்களை ஏற்றிச்செல்ல தயாராகக் காத்திருந்தது.

# ... அறிஞர் பெருமக்களுடன் ஆறு நாட்கள் ...

[மாணவர் தலைவர் திரு இரா. சனார்த்தனம்]

### அறிஞர் அண்ணாவின் பரிசு

அன்று இரவு தமிழக முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா, வெளிநாட்டுத் தமிழ் நல்லோருக்கு நல்லுணவு அளித்து, சுவைமிகு உணவோடு கலைநயமிகு நினைவுப் பரிசும் கொடுத்து வழியனுப்பி வைத்தார். தேங்காய் ஓட்டால் செய்யப்பட்டு, வேலைப்பாடமைந்த தமிழக கைத்தொழிற் சிறப்பையும் கற்பனை வளத்தையும், எடுத்துரைக் கத்தக்க கலைப் பொருளை வழங்கி அன்பு நிலைவாக்கினார்.

தனி ரயிலில், அனைத்தும் முதல் வகுப்புப் பெட்டிகளில், இருநூறு பேரடங்கிய நல்லோர், தமிழ் நாட்டு வளம் காணப் புறப்பட்டனர். சிற்றுண்டி தயாரித்து வழங்கப் பணியாட்களும், உடல் நலம் பேண டாக்டர்களும், உதவி புரிய அலுவலர்களும், பயண ஏற்பாடுகளைக் கவனிக்கப் போக்கு வரத்துத் துறை தனி அலுவலரும் துணையாக இருந்தனர்.

### தில்லைக் கூத்தனின் திருப்பதியில்....

முதலில் சிதம்பரம் நோக்கிச் சென்ற நாங்கள், விடியற்காலை விழித்தபோது எதிரே மாபெரும் வரவேற்பைச் சந்தித்தோம். மாலைகளோடு மாவட்ட ஆட்சித் தலைவரும், மற்றும் பல அலுவலரும், மாணவர்களும் மக்களும், அரசியல் கட்சித் தலைவர்களும் அன்போடு வரவேற்றனர். வரவேற்பு வேட்டொலி முழங்க, வாத்திய இசை ஒலிக்க, மகிழ்ச்சிக் கடலாயிற்று சிதம்பரம் ரயிலடி..

அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவ நண்பர்கள் அன்போடு அழைக்க வந்திருந்தனர். தமிழகப் போக்குவரத்துத் துறையினரின் ஆறு பேருந்துகள் எங்களை அழைத்துச் செல்லத் தக்குத் தயாராக இருந்தன. காலைச்சிற்றுண்டி புகை வண்டியிலேயே முடிந்தது. அவர்கள் வழங்கிய நிகழ்ச்சி நிரல்படி, பயணம் துவங்கியது. சிதம்பரம் கோயிலைக் கண்ட மேலை நாட்டோர் மலைத்து நின்றதும், அண்ணாமலைப் பல்கலைக் கழகம் முழுதும் சுற்றிப் பார்த்துப் பாராட்டியதும், பிற்பகல் சிதம்பரத்தை அடுத்துள்ள கடலோரப் பரங்கிப்பேட்டைக் காட்சியை ரசித்ததும், பல்கலைக் கழக வரவேற்பில் துணை வேந்தரது கொஞ்சு தமிழைச் செவி மடுத்ததும், சிதம்பரம் நகரில் பாராட்டுக் கூட்டத்தில், நல்லோர் வரவேற்பால் மகிழ்ந்ததும், வாண வேடிக்கைகள் வானைப் பிளக்கச் செய்ததும், அண்ணாமலை அரசர் பகலும் இரவும் நல்லுணவு அளித்து மகிழ்வித்ததும், இச் சிறப்போடு உணவு அமைச்சர் திரு மதியழகனும், விவசாய அமைச்சர் திரு கோவிந்தசாமியும், சிலம்புச் செல்வர் திரு ம.பொ.சி.யும், முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதமும், பேராசிரியர் திரு மா. கி. தசரதனும், திரு சுப்பையாவும், திரு வி. எஸ். தியாகராஜனும், விருந்தினரைக் கவனித்துக்கொண்ட பாங்கும் சொல்லில் அடங்காச் சுவை மிக்கச் செய்திகளாகும்.

### தஞ்சைத் தரணியில் தமிழறிஞர் கூட்டம்

இரவு ரயிலில், சிதம்பரத்தில் வழங்கிய வேலைப் பாடமைந்த வண்ணப் பேழையைப் பார்த்தவண்ணம் உறங்கிய நாங்கள் கண் விழித்தபோது திருவாரூர் ரயிலடியில் இருப்பதை அறிந்தோம். குளிக்கவும், சிற்றுண்டியும் ரயிலடியிலேயே ஏற்பாடாகி இருந்தன. எதிரிலேயே இருந்த அரிசி ஆலையைக் கண்டு, பின் நகராத் தேரை நல்லபடி நோக்கி, கோயிலைக் கண்டு, திருவாரூர் தியாகராஜன் அளித்த நல்லுணவைச் சுவைத்துத் தஞ்சை அடைந்தோம்.

வாத்தியங்கள் முழங்க மலர்கள் தூவி, மாலைகள் அணிவித்து எங்களை மகிழ்வோடு தஞ்சைத் தரணி வரவேற்றது.

கரந்தைத் தமிழ்ச்சங்க வரவேற்பும், பூங்காவில் வழங்கிய தேநீர் விருந்தும், கண்டுகளித்த நூல்நிலையம் வாணி மகாலும், பெரிய கோயிலும், மறக்கமுடியா இனிய நினைவுகளாகும். இரவு, மக்கள் வரவேற்பில், சுவிட்சர்லாந்து தமிழறிஞர் செல்லர் நிகழ்த்திய உரை பலரையும் கவர்ந்தது. நினைவாக வழங்கப்பட்ட செம்புச் சிலைகள் நீங்கா நினைவுச் சின்னங்களாயின. இரவு விருந்தும், இனிய நடனமும் முடிந்து, இரயிலில் உறங்கச் சென்ற நேரம் இரவு மணி பதினொன்றுமா இருந்தது.

### கொங்கு நாட்டின் செங்கரும்பான வரவேற்பு

பொழுது விடிந்தது. கோவையை நெருங்கி விட்டோம். ஆலைகள் அன்போடு அழைத்தன. ரயிலடியில் பெருங் கூட்டம். அனைத்துக் கட்சியினரும் இருந்தனர். திருமதி சந்திரகாந்தி கோவிந்தராஜ் பொறுப்பில் இயங்கும் இருஷ்ணம்மாள் கல்லூரியைக் கண்டுகளித்து, வழங்கப்

> உலகத் தமிழ்நாட்டிற்கு வருகை தந்த வெளிநாட்டு அறிஞர்கள் மாநாடு முடிந்ததும் தமிழகத்தின் பல பகுதிகளுக்கும் சென்று பார்த்தனர். 12—1—68 முதல் 18—1—68 வரை ஆறு நாட்கள் இச் சுற்றுலா நடைபெற்றது. அவர்களுடன் அச் சுற்றுலாவில் கலந்து கொண்ட மாணவர் தலைவர் திரு இரா. சனார்த்தனம் அவர்கள் சுவைபட சுற்றுப் பயண அனுபவங்களை இக் கட்டுரையில் விவரிக்கிறார்.
>
> —ஆசிரியர்

பட்ட வெள்ளிக் குத்துவிளக்கைக் கையிலேந்தி பேரூருக்குப் பயணமாயினர். பேரூர் கோயிலைக் கண்ட விருந்தினர் சாந்தலிங்க அடிகள் தமிழ்க் கல்லூரியில், திரு ந. மகாலிங்கம் தலைமையில் அளிக்கப்பட்ட வரவேற்பை ஏற்றனர். வழங்கிய சைவ உணவைச் சுவைத்தனர். பிற்பகல் சித்திராவில் பேராசிரியர் அறிவழகன் எம். எல். சி. தலைமையில் திரு அவனாசிலிங்கம் செட்டியார் மனையியல் கல்லூரி வரவேற்பும், சிறப்புற அமைந்திருந்தன. ஐயா அவனாசிலிங்கனார் தலைமையில் நடந்த வரவேற்புக் கூட்டமும், முதல்வர் இராஜம்மாள் தேவதாஸ் வரவேற்க, மாணவியரும் ஆடிப் பாடி மகிழ்வித்ததும், தேனீர் விருந்தளித்ததும் கொங்கு நாட்டின் நல் உள்ளத்தின் விளக்கமாக அமைந்திருந்தன. இரவு, உணவு அமைச்சர் மாண்புமிகு திரு கே. ஏ. மதியழகன் அவர்களது தலைமையில் பாராட்டுக் கூட்டத்தோடு, கோவை நிகழ்ச்சி நிறைவுற்றது.

### சங்கம் வளர்த்த மதுரையில் நெஞ்சம் கவர்ந்த நினைவுகள்

மறுநாள் நான்மாடக்கூடல் மதுரை வரவேற்றது. ஜனவரி 15-ம் நாள் மகிழ்ச்சி பொங்கும் பொங்கல் புது நாள். இன்னிசை முழங்க இரயிலடியில் வரவேற்கப் பட்டோம். தமுக்கம் மைதானத்தில், ஆயிரத்திற்கு மேற்பட்ட பள்ளிச் சிறுவர் சிறுமியர், கல்வித்துறை துணை இயக்குநர் திரு சிட்டிபாபு கொடி வணக்கம் ஏற்க, பின் வண்ண உடைகளோடு பல விளையாட்டுகளால் கவரச் செய்தனர். பின் காந்தி மியூசியமும், மகாலும் கண்டு டி. வி. எஸ். நிறுவனத்தினர் அளித்த விருந்தினை உண்டு செலவு பெற்றனர். பிற்பகல் மூன்று மணிக்கு மதுரை பெரிய கோயிலில் பட்டாடையால் பரிவட்டம் சூட்ட, விருந்தினர் பெருவகையோடு கண்டு களித்தனர். பின்னர் தமிழவேள் திரு பி. டி. இராஜன் தலைமையில் தமிழ்ச் சங்க வரவேற்பு. தமுக்கம் மைதானத்தில் இரவு, மாண்புமிகு திரு மதியழகன் தலைமையில் பாராட்டுக் கூட்டம் நடைபெற்றது. ஆயிரக்கணக்கான மக்கள் நிறைந்திருந்தனர். திரு கருமுத்து தியாகராஜ செட்டியார் அவர்கள் அளித்த இரவு உணவும் இனிய வரவேற்பும் ஏற்றுப் பின் இரவு ரயிலடியை அடைந்தோம்.

### தென்பாண்டிச் சீமையிலே....

ஜனவரி 16-ம் தேதி காலை நெல்லையில் எல்லையற்ற அன்போடு வரவேற்றனர். நகர மன்றமும் மற்றும் பலரும் கூடி வரவேற்புக் கூட்டம் நடத்தி நினைவுப் பொருளாக பத்தமடைப் பாயை வழங்கி, குமரிமுனை நோக்கிப் போக வழியனுப்பினர்.

---

### "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து...."

"உலகத்திற்கே பொதுவான வழிகாட்டி நூலாக திருக்குறள் இருக்கிறது. எல்லா காலத்தினருக்கும், எல்லா மொழியினருக்கும், எல்லா வகுப்பினருக்கும், எல்லா சமூகத்தினருக்கும், எல்லா தரத்தினருக்கும், எல்லா நிலையினருக்கும், துறையினருக்கும் ஏற்றதாகவும் பயன்படக்கூடியதாகவும் இருக்கிறது.

சில புலவர்கள் சில நாடுகளுக்கு மட்டுமே உரியவர்களாகப் பாடுபட்டிருக்கிறார்கள். ஆனால், உலகத்திலுள்ள எல்லாருக்கும் எப்பொழுதும் பயன்படுகிற அளவுக்கு திருக்குறளைத் தந்திருப்பவர், திருவள்ளுவர் ஒருவர்தான்."

மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் (திருவள்ளுவர் சிலைத் திறப்பு விழாவில்)

### வெளிநாட்டாரின் சேவை

"உலக மொழிப் பண்பாட்டில் நாகரிகத்தில் தொன்மையானது தமிழ்தான். நூற்றாண்டு தோறும் புதுப் புது புதுமைகள் தமிழில் ஏற்பட்டு வருகின்றன. உலக மொழிகளில் வேறு எதிலும் அப்படி இல்லை.

தமிழன்—'தமிழில் என்ன இருக்கிறது' என்று கேலி பேசிய நேரத்தில், தமிழின் சிறப்பை ஆங்கிலேயர்கள் சொன்னார்கள். கால்டுவெல்லும், போப்பும் ஆராய்ந்து, உலகத்தில் தமிழ் போல் சிறந்த மொழி வேறு இல்லை என்றார்கள்."

(பூம்புகார்க் கருத்தரங்கில் டாக்டர் மு. வ.)

---

கேரள அரசு மாளிகையில் ஏற்பாடாகி இருந்த விருந்தும், சுசீந்திரம் மற்றும் கோயில்களும், குமரி முனையில் ஆதவன் மறையும் காட்சியும் விருந்தினரை மகிழ்வித்தன. இரவு, நானூத்தில் சட்டப் பேரவைத் தலைவர் திரு ஆதித்தனார் பொறுப்பில் அங்கம் வகிக்கும் சங்கர் நகர் சிமெண்ட் தயாரிப்பு நிறுவனத்தினர் படைத்த நல்லுணவு ஏற்று விடை பெற்றோம்.

### 'சிராப்பள்ளி குன்றுடையானை'க் காண...

திருச்சிராப்பள்ளி எங்களை வரவேற்கத் தயாராக இருந்தது. மகளிர் கல்லூரி மாணவியர் வரவேற்க, சிலம்பம் ஆட்டக் காட்சி நல்க சென்னை மின் வழங்குக் கழகத்தின் வரவேற்பு ஏற்கப் புறப்பட்டோம். சிற்றுண்டியும் வழங்கினர். பின் மலைத்து நோக்கச் செய்தது மலைக்கோட்டை. பரிவட்டம் சுற்றிப் பரிவோடு கோயில் அரங்காவலர் வரவேற்றனர். உச்சி வரை சென்று திருச்சி முழுவதும் கண்டு மகிழ்ந்தனர். திருவரங்கமும், திருவானைக்காவலும், ஸ்டான்ஸ் ஷாப்பினரும் அளித்த வரவேற்பு சிறப்பாக அமைந்திருந்தன. அடுத்து கரிகாலன் கட்டிய கல்லணையாம் நல்லணை கண்டு நனி மகிழ்ந்தனர், பிறநாட்டுத் தமிழ் வல்லோர். புனித சூசையப்பர் கல்லூரியில் மதிய உணவு மகிழ்வித்தது. தமிழ் சிரசு சல்லிக்கட்டு, பல்லாயிரம் மக்கள் கூடியிருந்த காசாமலையில் கண்டு களித்த பின் வானொலி நிலையம் வரவேற்றது. பல் இசைக்கருவிகள் ஒன்று கூடி இசைக்க, சிறப்புமிக்க வரவேற்பாக அது அமைந்தது. இலட்சக் கணக்கில் மக்கள் வெள்ளம் புனித சூசையப்பர் திடலில் காத்து இருந்தது, வரவேற்பு நல்க. திருச்சி தமிழ்ச் சங்கமும், நகர மன்றமும், மற்றைய நிறுவனங்களும் மகிழ்வோடு வரவேற்பிதழ் வாசிக்க, திரு அன்பில் தருமலிங்கம் அவர்கள் தலைமையில் வரவேற்புக் கூட்டம் சிறப்பாக நடைபெற்றது. எங்கும் காணாத அளவில் வாண வேடிக்கை அனைவரையும் திகைக்க வைத்தது. இரவு உணவு அரிஸ்டோவில் டால்மியா சிமெண்ட் நிறுவனத்தாரால் வழங்கப்பட்டது. சுற்றுலா நிகழ்ச்சி முடிந்து இரவு சென்னை நோக்கிப் புறப்பட ரயிலடி வந்தோம். முத்தமிழ்க் காவலர் வழி அனுப்பினார். சிலம்புச் செல்வர் திரு ம.பொ.சி., திரு சுப்பையா, திரு அறிவழகன் எம்.எல்.சி., திரு தியாகராஜன் ஆகியவரோடு சென்னை வந்தடைந்தோம்.

தமிழகத்தின் பல இடங்களில் வழங்கப்பட்ட வரவேற்பும், விருந்துகளும், வெளிநாட்டுப் பெருமக்களை மகிழ்ச்சிக் கடலில் தள்ளியது. தமிழர்தம் விருந்தோம்பலை விளக்கியது. மாவட்ட அதிகாரிகளும், வரவேற்புக் குழுவினரும், ஒருக்கு ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு உயர்வான முறையில் வரவேற்புச் சிறப்பித்தனர். பயணம் முடிந்தது. ஆனால் வரலாற்றில் பதிக்கத்தக்க அந்தப் பயண நினைவு மட்டும் நீங்காமல் நெஞ்சிலேயே நிற்கின்றது.



செந்தமிழர் பண்பாட்டினையும், நாகரீகத்தின் சிறப்பையும் விளக்கும் வகையில், உலகத் தமிழ் மாநாட்டினை ஒட்டி 3—1—1968-ல் அமைந்த மாபெரும் ஊர்வலம், தமிழரின் வரலாற்றிலே பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்கதொன்றாகும். சீரும் சிறப்பும் மலிந்து பொலிவுறும் சென்னை மாநகரின் வரலாற்றிலே, நினைக்கும் போதெல்லாம் தமிழ் மகனின் திண்டோள் விம்மத்தக்க, முத்தமிழ்க் காவலர்களின் முரசு கொட்டும் காவிய நிகழ்ச்சிகள் ஒருங்கிணைந்து கண்கொள்ளாக் காட்சியென பவனி வந்தன.

எழில் மிகுந்த அந்த ஊர்வலத்தின் முன்னால்—அலங்கரிக்கப்பட்ட யானைகள் ஒன்றன்பின் ஒன்றாகவர, இன்னிசை முழங்க, சங்ககாலமே நம் கண் முன்னால் ஊர்ந்து சென்றது.

முகப்பிலே—தமிழகத்திற்கே தனிச் சிறப்பளிக்கும் நாதசுர இசையைப் பழனி நாதசுரப் பயிற்சி பள்ளி மாணவர்கள் இசைத்து வந்தது, துவக்கத்திலேயே கண்டோர் மெய் சிலிர்க்கச் செய்தது.

அடுத்ததொரு ஊர்தியில், தமிழன்னையே பவனி வந்தாள். அத்திருமகள் பெற்ற இலக்கியச் செல்வங்களான தமிழ்ப் பெருங் காவியங்களும், காப்பியங்களும் மதலைகளாகச் சித்தரிக்கப்பட்டு, அன்னையின் காலடியில் தவழும் காட்சி அமையப்பெற்ற அலங்கார வண்டி வந்தது.

## ஊர்வலம்

திருவள்ளுவர் கண்ட தமிழகமாகத் திகழ்ந்தது மூன்றாவது ஊர்தி. நாட்டின் அச்சாணியான உழவர் பெருமகன் உழைப்பினால் பயனடைந்த பூரிப்போடு, அறுவடை முடிந்து, அகமும் முகமும் மலர, மனையிலே பொங்கலிட்டு மகிழும் காட்சி கண்டோர் நெஞ்சத்தையே நிறைத்தது.

"என் கணவன் குற்றமென்ன செய்தான் கொற்றவனே" எனக்கேட்கும் பாவனையில் முகத்திலே கோபம் கொந்தளிக்க, 'தீதிலா வடமீன் போன்ற தெய்வக் கற்பினளான' நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரக் காப்பியத்தின் நாயகியான கண்ணகி, பாண்டியனின் அரசவையில் வழக்குரைத்த காட்சியை கண்முன் கொண்டு வந்தது அடுத்து வந்த காட்சி.

இடையிடையே பருவமும் எழிலும் மிக்க பாவையர் ஆடிவரும் அலங்கார வண்டிகளும், கிராமியக் கலையழகின் சிறப்பினை ஆடிப் பாடிக் காட்டிய ஊர்திகளும், காண்போரையெல்லாம் மெய்மறக்கச் செய்தன.

தகடூரை தலைநகராக, தமிழ் வளர்ச்சியே மூச்சாகக் கொண்டு, வாரி வழங்கும் வள்ளல் தன்மையை வாழ்வின் அடித்தளமாகக் கொண்ட வள்ளல் அதியமான் என்றும் இளமையுடன் இருக்கச்செய்யும் நெல்லிக்கனியொன்றை, தானுண்ண விரும்பாமல், தமிழ் வாழ வேண்டுமெனில் தமிழ்ப் புலமை மிக்கோர் வாழவேண்டுமென்ற ஆர்வத்தால் உந்தப்பட்டு, அக்கனியை அவ்வை மூதாட்டிக்கு வழங்கிய அரியதோர் காட்சியும் கடலென திரண்ட மக்கள் இமையாது பார்த்திருக்க ஊர்ந்து சென்றது.

படருவதற்குக் கொழு கொம்பில்லாது தள்ளாடித் தனித்து நின்ற முல்லைக் கொடியைக் காண்கிறான், கானகத்தே வேட்டையாடவந்த பறம்பு நாட்டு மன்னன் பாரி வள்ளல். அக்கொடி படர தேரையே ஈந்து திரும்புகிறான். வெண்ணிறப் புரவியும், தேரும், அதனருகே பாரி வள்ளலும், அவன் கையில் தவழ்ந்த முல்லைக் கொடியையும் கண்டபோது, பழந் தமிழகத்துப் பண்பாட்டுக் காட்சியினில் மெய்மறந்தனர் இருமருங்கிலும் திரளாகக் கூடியிருந்தோர்.

---

### "ஔவை யார்?" நூல் வெளியீட்டு விழா

சிலம்புச் செல்வர் திரு ம. பொ. சிவஞானம் அவர்கள் எழுதிய "ஔவை யார்?" நூல் வெளியீட்டு விழா (இன்ப நிலைய வெளியீடு) புத்தாண்டுத் தினத்தன்று (1-1-68) மாண்புமிகு உணவமைச்சர் திரு மதியழகன் தலைமையில், சென்னை பாலர் அரங்கில் நடைபெற்றது. இவ்விழாவில் பங்கு கொண்ட மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள் "தாய்க்குலத்தின் ஆசியுடன் புத்தாண்டு பிறக்கிறது" என்று குறிப்பிட்டார். விழாவில் பேராசிரியர் இலக்குவனார், பேராசிரியர் சஞ்சீவி, ஔவை டி. கே. சண்முகம், திருமதி சௌந்தரா கைலாசம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தேரினடியில் அகப்பட்டு கன்று மாண்டது. கண்ணீருடன் நீதி வழுவாச் சோழ மன்னனின் அரண்மனை வாயிலில் ஆராய்ச்சி மணியை அசைத்து நீதி கேட்கிறது கன்றை இழந்த பசு. நீதி வழி நின்ற நம் முன்னவர்களின் நெறி யறிந்து மெய்சிலிர்க்க நிற்கிறோம். ஊர்தி மெதுவாக நகர்ந்து செல்லுகிறது. கைப்பொருள் இல்லாத நிலையிலும். தன் தலையைக் கொய்திச் சென்று தன் தம்பியிடம் கொடுத்து, பொருள் பெற்று வறுமை நீங்குமாறு புலவனிடம் கூறி நிற்கும் குமணனின் கொடைத் தன்மைக்கும், தமிழ்ப் பற்றுக்கும் இலக் கணமாகத்துலங்கியது அடுத்து வந்த காட்சி.

கல்லெல்லாம் கதைசொல்லும் மாமல்லபுரத்துக் குகைக் கோயில்களும் கண்முன்னால் பவனி வந்தன.

" நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே " என முழங்கிய தமிழ்ப் பண்பாட்டின் தலை மகன் நக்கீரன் வடித்த திருமுருகாற்றுப்படையில் ஒரு காட்சி அடுத்து வந்த அலங்கார ஊர்தியின் கருப்பொருளாக அமைந்திருந்தது.

பருவமும் பூரிப்பும் எழிலும் கொலுவிருக்க, ஆண்டாளின் இளமையுள்ளத்திலே கவித்துவம் மலர்ந்து திருப்பாவை செப்பிய காட்சியும் காணக்கிடைத்தது.

அன்றையத் தமிழகத்தில், பொங்கிப் பெருகிய வளமான வாழ்வை இன்றைய நிலையிலே நிற்கும் நம் கண் முன்னே கொண்டுவர, ' மாடு கட்டிப் போரடித் தால் மாளாது செந்நெல் என்று யானை கட்டிப் போரடிக்கும் ' தோற்றம் கண்டோரின் நினைவிலேயே தங்கிவிட்டது.

மனித இனம் தோன்றிய காலத்தே மேம் பாடடைந்த நாகரிகத்தை, தனது வாணிபத்தின் மூலம் உலகெங்கும் பரப்பியவன் தமிழன் என்பதை—புகாரில் படிகளால் முத்துக்களை அளக்க, அதை பல நாட்டு வணிகர் பொன் கொடுத்து வாங்கி கப்பலில் ஏற்றிச் செல்லுவது கண்டு, களிப்பொடு திகைப்புடன் நிற்கிறோம்.

யாவரும் அருகே நெருங்க இயலாத அரசு கட்டிலில் களைப்பு நீங்க துயில் கொண்டிருக்கிறார், மோசிகீரனார் என்னும் புலவர். அப்போது அங்கு வந்த சேர மன்னன் பெருஞ்சேரல் இரும்பொறை சினம் கொள் ளாது புலவருக்குச் சாமரம் வீசி நிற்கிறான். தமிழ்ப் புலவருக்கு தமிழ் மன்னர் அளித்திட்ட ஏற்றத்தைச் சித்தரிக்கும் சிற்பங்கள் காண்போர் கண்களில் நீர் மல்கச்செய்தன.

உலகத் தமிழ்த் திருவிழாக் கொடியுடன், தங்க யானை வாகனம் இறுதியாகச் சென்ற ஊர்தியை அலங்கரித்தது.

புதியதோர் வரலாறு படைத்திட்ட இம்மாபெரும் ஊர்வலம் சென்ற திசையெங்கும் மக்கள் வெள்ளம் கரைபுரண்டு ஓடியது. வெள்ளம்போல் தமிழர் கூட்டம், வீரங்கொள் வீரர்கூட்டம் நெஞ்சை யள்ளும் அணிகண்டு, நெகிழ்ந்து நின்றது.

# தமிழகத்தின் பொற்காலம் துவங்கியது!

[திரு மெ. சிதம்பரம், உதவியாசிரியர், ''தமிழ் முரசு'' நாளேடு சிங்கப்பூர்,]

''யாதும் ஊரே, யாவரும் கேளிர்'' என்று அன்று பாடிய தமிழ்ப் பெருமகன், இன்று தமிழகத் தலைநகரில் நடை பெறுகிற உலகத் தமிழ் மாநாட்டில், உலகமே தமிழுக்குத் தலை தாழ்த்துவதனைக் காண்பானாயில், தான் பாடியது எத்துணை உண்மை என்பது குறித்து, உள்ளம் பூரிப் பான் என்பது திண்ணம். தமிழகத்திற்குப் பொற்காலம் துவங்கியிருப்பதையே இந்த மாநாடு குறிக்கின்றது. ''வெளி நாட்டார் வணக்கம் செய்தல் வேண்டும்'' என்று பாடிய பாரதியின் கனவை நனவாக்கிய தனிப்பெருமை அறிஞர் பெருமகன் அண்ணாவின் தமிழக அரசிற்கே உரியதாகும். பொருளியல், அறிவியல் வசதிகள் மிக்க மேலைநாட்ட வருங்கூட, இத்துணை விரிவான மாநாட்டை இவ்வளவு சிறப்பாக நடத்தியிருத்தல் இயலாது. உலகமே வியக்கத் தக்கவண்ணம் இந்த மாநாட்டை நடத்தியுள்ள தமிழக அரசிற்கும் நாம்பட்டுள்ள கடன் கொஞ்ச நஞ்சமன்று. இனி நடைபெறவிருக்கும் உலகத் தமிழ் மாநாடுகளுக்கு இந்தச் சென்னை மாநாடே வரம்பாக அமையும் என்பது வெளிப்படை. வெளிநாட்டுப்பேராளர்களுக்குத் தமிழக அரசு வழங்கியுள்ள உண்டி, உறையுள், போக்கு வரவு வசதிகள், போற்றத்தக்க வியக்கத்தக்க சிறப்பினவாகும். சுருங்கக் கூறுமிடத்து, ஒருவரின் வாழ்நாளில் மறக் கொணாத நிகழ்ச்சிகளில், இந்த மாநாடும் ஒன்றாக அமையுமென்றே சொல்லவேண்டும் தமிழுக்கு மலாய், சீனம், ஆங்கிலம் ஆகிய மொழிகளுடன் சமநிலை வழங்கி அதனை ஆட்சிமொழியாக்கி, எல்லா வழிகளிலும் தமிழுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகின்ற எங்கள் சிங்கப் பூர்த் தலைமையமைச்சர் திரு லீ குவான் யூ அவர்கள் தமிழ் வழங்கும் நல்லுலகின் பாராட்டிற்கும் நன்றிக்கும் உரியவர்களாவார்கள் என்பதையும் இங்கே குறிக்க விரும்புகிறேன்.

தமிழன்னையின் பெறலரும் புதல்வர்கள் ஒவ்வொரு நாட்டிலும் உள்ளனர். இங்கே அண்ணா இருக்கின்றார்கள். எங்கள் நாட்டில் எங்கள் தமிழ் முரசு நாளேட்டின் ஆசிரியராகிய தமிழவேள் திரு கோ. சாரங்கபாணிஅவர்கள் இருக்கிறார்கள். சிங்கப்பூரிலும் மலேசியாவிலும் தமிழை நிலைபெறச்செய்த பெருமை எங்கள் தமிழவேள் அவர் களுக்கே உரியதாகும். இறுதியாக ஒன்று. ''அம்மா'' என வியக்கத்தக்கது, இம்மாநாடு என்பது எனது உறுதியான கருத்தாகும்.



உலகத் தமிழ் மாநாட்டினை ஒட்டி, மக்கள் திலகம் திரு எம். ஜி. ராமச்சந்திரனால் வழங்கப்பட்ட முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களின் உருவச்சிலை 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் 1-ம் தேதி சென்னை மலைச் சாலையின் மையத்தில், இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டின் முதல் நிகழ்ச்சியாக, டாக்டர் ஏ. ராமசாமி முதலியார் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

அனைவரையும் வரவேற்று மாண்புமிகு கல்வி அமைச் சர் திரு நெடுஞ்செழியன் அவர்கள் பேசுகையில்,

''தமிழகத்தில் முதல் அமைச்சர் என்பதற்காக அண்ணா வுக்கு இந்தச் சிலை வைக்கப்படவில்லை. தமிழகத்திற்கு புத்துயிரும், தமிழ் மக்களுக்குப் புத்துணர்ச்சியும் ஊட்டி, தமிழ்மொழிக்கு ஏற்றமும் எழிலும் தேடித்தந்த வர் என்பதற்காக இந்தச் சிலை வைக்கப்படுகிறது'' என்று குறிப்பிட்டார்.

உறுதிப்படுத்த அவரது கரங்களைப் பலப்படுத்துவோமாக'' எனக்கேட்டுக்கொண்டார்

1968-ம் ஆண்டு சனவரி மாதம் 2-ம் தேதியன்று கடற் கரையில் தமிழ்ச்சான்றோர்களின் சிலைகள் திறப்பு விழா, சீர்காழி கோவிந்தராஜனின் தமிழ்த்தாய் வாழ்த்துடன் தொடங்கியது.

தமிழ் வளர்ச்சிக் கழக இயக்குநர் திரு எம். ஆர். பெருமாள் முதலியார் வரவேற்புரைத்தார்.

முதலாவதாக திருவள்ளுவப் பெருந்தகையின் திரு வுருவச்சிலையினை மாண்புமிகு கல்வி, தொழிலமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் தலைமையில், முத்தமிழ்க் காவலர் திரு கி.ஆ.பெ. விசுவநாதம் திறந்து வைத்தார்.

ஔவை மூதாட்டியாரின் சிலையை, மாண்புமிகு தகவல்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்துவின்

டாக்டர் திரு ஏ. ராம சாமி முதலியார்—ஒரு மின்சார விசையை அழுத்தவும், சிலையை மூடி இருந்த பட்டுத் திரைவிலகி, கழுத்தில் ரோஜாப்பூ மாலையுடன் அண்ணாவின் முழுஉரு வச்சிலை வெளிப்பட, கூடி யிருந்த பல்லாயிரக் கணக்கான மக்கள் கைதட்டி மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர்.

உலகம் வியக்கும் தமிழ்ப் பெருவிழாவில்

## தமிழ் வளர்த்த சான்றோர்க்கு

[illegible]

டாக்டர் முதலியார் பேசும் பொழுது,

''அமெரிக்க மக்களின் உள்ளங்கவர்ந்த தலைவன் ஆபிரகாம் லிங்கனின் வாழ்க்கையைப்பற்றிக் குறிப்பிடும் பொழுது 'மரக்குடியிலிருந்து வெள்ளை மாளிகைக்கு உயர்ந்தவர், என்று வர்ணிப்பார்கள். அந்த ஆபிரகாம் லிங்கனைப் போல், உழைப்பால், சுய முயற்சியால் முன்னுக்கு வந்தவர் நமது முதலமைச்சர். உண்மையான உழைப்பு, ஊக்கம், விடாமுயற்சி, அடக்கம், ஆகிய நற் குணங்கள் காரணமாக, இன்று இவர் இந்த உன்னத நிலைக்கு வந்திருக்கிறார். தன்னைப் பின்பற்றுகிறவர்களிடம் அவர் பாசமிக்க அண்ணனாக நடந்துகொள்கிறாரே தவிர, கட்டளையிடும் தலைவனாகவோ, சர்வாதிகாரியாகவோ நடந்து கொள்ளவில்லை. அவரது உயர்வுக்குத் தன்னம் பிக்கையும் பொறுமையுமே காரணம் ஆகும்'' என்றார்.

தமிழக அரசின் சார்பில் இந்தச் சிலையை ஏற்றுக் கொண்டு, அதை வழங்கிய திரு எம். ஜி. ராமச்சந்திரன் அவர்களுக்கு நன்றி தெரிவித்துப் பேசிய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு கருணாநிதி,'' தமிழ் மக்களின் தலைவர், ஏழைகளின் பிரதிநிதி அண்ணா காட்டுகின்ற கொள்கைவழி நின்று, நிலையான ஆட்சியை

தலைமையில் ஆனந்தவிகடன் ஆசிரியர் ஜெமினி எஸ். எஸ். வாசன் திறந்து வைத்தார்.

கவியரசர் கம்பர் திருவுருவச் சிலையை மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் திரு ஏ. கோவிந்தசாமியின் தலைமையில் முன்னாள் முதலமைச்சர் திரு எம். பக்தவத்ச லம் திறந்துவைத்தார்.

மூன்றாவதாக, சட்டப்பேரவைத்தலைவர் திரு சி. பா. ஆதித் தனார் தலைமையில் ஜி.யு. போப் சிலையை பிஷப் லெஸ்லி நியூபிகின் திறந்து வைத்தார்.

ராபர்ட் கால்டுவெல் சிலையினை சட்டமன்ற மேலவைத் தலைவர் திரு மாணிக்கவேலர் தலைமையில் பன்மொழிப் புலவர் திரு கா. அப்பாத்துரையார் திறந்து வைத்தார்.

மாண்புமிகு சட்ட அமைச்சர் திரு செ. மாதவன் தலைமையில் நாமக்கல் கவிஞர் திரு வெ. ராமலிங்கம் பிள்ளை அவர்கள் பாரதியாரின் திருவுருவச்சிலையைத் திறந்து வைத்தார்.

அடுத்து புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் சிலையை மாண்பு மிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி தலைமையில் டாக்டர் மு. வரதராசனார் திறந்து வைத்தார்

# காணுதற்கரிய கண்காட்சி

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டையொட்டி கலைக்கண்காட்சியொன்று, 3—1—68 காலை சென்னை பல்கலைக் கழகத் தேர்வு மண்டபத்தில், சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் ஏ. இலட்சுமண ஸ்வாமி முதலியார் தலைமை வகிக்க, மூதறிஞர் இராஜாஜி அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. தமிழர் நாகரிகத்தைப்பற்றி பல ஆராய்ச்சிக் கட்டுரைகள் அடங்கிய 500 பக்க கையேடு ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் அவ்வமயம் வெளியிட்டார்.

விழாவிற்குத் தலைமை தாங்கிய சென்னைப் பல்கலைக் கழக துணை வேந்தர், தூய தமிழில் சில நிமிடங்கள் பேசி அவை யோரை மகிழ்வித்தார். அவர் பேசுகையில் "உலகின் எந்த ஒரு நிலப் பகுதியை எடுத்துக் கொண்டாலும், தமிழரின் சுவடு படா இடமே இருந்திராது என்னுமளவுக்கு, தமிழ்க் கலையும் பண்பாடும் உலகின் பல பகுதிகளுக்குப் பரவி இருந்தது. அந்தப் புகழை மீண்டும் நிலைநாட்ட, அகற்கெனச் சலிப்புத் தன்மையோடு நாம் உழைத்திட இம்மாதிரியான கண்காட்சிகள் நமக்குத் துணை செய்யட்டும். நம் மூதாதையர்கள் நடந்துகாட்டிய பண்புடன் நாமும் நடந்து புகழ்தேட வேண்டும்" என்றார்.

அடுத்து மூதறிஞர் இராஜாஜி அவர்கள் கண்காட்சியைத் திறந்துவைத்துப் பேசும்போது, "பண்டைய வரலாறு தக்கவாறு எழுதப்படாத நாடுகளில் இம்மாதிரியான கண்காட்சிகள் மிகவும் தேவை. நம் நினைவெல்லாம் எதிர்காலத்தைப் பற்றியதாக இருக்கவேண்டும். இந்தியாவில் உள்ள ஏனையோருக்கும், ஏனைய உலகத்தாருக்கும் தமிழ்மொழி, அதன் கலை, நாகரிகம், பண்பாடு, ஆகியவை பற்றிய தகவல்களை எடுத்துரைத்து அறிவூட்டும் பணியில் நாம் ஈடுபட வேண்டும். தமிழ் நாட்டின் பண்டைய பெருமைகள் குறித்து அறியவேண்டும் என்ற ஒரு ஆர்வம் இப்போது செயலாக மாறி இருக்கிறது. பல அறிஞர்கள் ஆராய்ச்சிகள் நடத்தி பல விஷயங்களை, பொருள்களை வெளிக்கொணர்ந்துள்ளனர். அவைகளை இப்பொருட் காட்சியின் மூலம் மக்கள் கண்டறிய இப்போது அரிய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. இதை யாவரும் பார்த்து பயனடைய வேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார்.

தமிழக முதலமைச்சர், அறிஞர் அண்ணா அவர்கள் கண்காட்சி மலரை வெளியிட்டுப் பேசிய பொழுது, "தமிழகத்தார் மட்டுமின்றி தமிழறிந்தோர் அனைவரும், அவர்கள் உலகின் எந்தப் பகுதியைச் சேர்ந்தவராயினும், கூர்ந்து கவனிக்கும் இம் மாநாட்டினையொட்டிய கலைக் கண்காட்சியை அமைத்து நடத்திட அமைத்த குழுவினர் மெத்த ஆர்வத்தோடு, தமிழகத்தின் பல பகுதிகளிலிருந்தும் அரிய கலைப் பொருட்களைச் சேகரித்து இன்று மட்டுமல்லாமல், என்றும் நிரந்தரமாக இருக்கத்தக்க கண்காட்சியை உருவாக்கி இருக்கின்றனர்.

தமிழ்மொழி, நாகரிகம், கலை, பண்பாடு ஆகியவை தனித்தன்மையது என்பதை இச்சின்னங்களும், இவற்றால் ஏற்படும் எண்ணங்களும் விளக்கிடும். இவற்றை நாமறிவதோடு, தரணி முழுவதும் அறிய இத்தகு கலைக்கண்காட்சிகள் தேவையே. பண்டைக் காலத்திலே கடல் கடந்து தமிழர்கள் கடாரம் போன்ற இடங்களுக்குச் சென்றார்கள். மகேந்திர சோழன் வெற்றி கொண்ட அம்மண்ணில் எல்லோரும் தமிழ் படித்தாக வேண்டுமென்று கட்டளை இடவில்லை. அன்பு வழியால் அம் மக்களைத் தன்வயமாக்கியிருந்தனர். இப்படியெல்லாம் கடாரம் வென்ற தமிழர் இன்று எந்தத் திக்கிலிருந்து என்ன உத்தரவு வருமோ என்று அஞ்சி வாழுகின்ற நிலையில் இருக்கிறோம். இந்நிலை மாற வேண்டிய ஆக்க வேலைகளில் நாம் ஈடுபட வேண்டும்" எனக் கேட்டுக்கொண்டார்.

கலைக் கண்காட்சி—தமிழரின் பண்பாடு, நாகரிகம் ஆகியவற்றை தெளிவுற எடுத்தியம்பும் கலைக் கருவூலமாக இலங்கிறது என்றால் அது மிகையாகாது.

[தமிழ் வளர்த்த சான்றோர்க்கு—முன் பக்கத் தொடர்ச்சி]

மாண்புமிகு உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் தலைமைவகிக்க, கப்பலோட்டிய தமிழன் வ.உ. சிதம்பரனார் திருவுருவச் சிலையை தமிழ்வேள் திரு பி.டி. இராசன் திறந்து வைத்தார்.

வீரமாமுனிவரின் சிலையானது பொதுநலத்துறை அமைச்சர் மாண்புமிகு சுகாதாரத்துறை அமைச்சர் திரு சாதிக்பாட்சா தலைமையில் ஆர்ச்பிஷப் அருளப்பா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

கற்புக்கரசி கண்ணகியின் சிலையை பொதுப்பணி அமைச்சர் மாண்புமிகு திரு மு. கருணாநிதி தலைமையில், சிலம்புச் செல்வர் திரு ம. பொ. சிவஞானம் திறந்து வைத்தார்.

சென்னையில் 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் 2-ம் தேதியில் நடந்த சிலைகள் திறப்பு விழாவில் ஐரோப்பியரான பிஷப் நியூபிகின் அவர்களும் பங்கு கொண்டு போப்பின் சிலையைத் திறந்து வைத்தார்.

தமிழிலேயே அவர் பேசும்போது குறிப்பிட்டதாவது:— "தமிழ் உலகத்தின் ஒரு சிறு பகுதியாருடைய செல்வம் அல்ல.

உலகச் செல்வத்தின் ஒரு பாகம். நூறு ஆண்டுகளுக்கு முன் ஜி.யு. போப் ஒரு கருத்தை எழுதினார்.

"தமிழ் நாட்டு இளைஞர்கள் ஊக்கத்துடனும், திறமையுடனும், ஆங்கிலக் கல்வி கற்கின்றனர். அவர்கள் வியக்கத்தக்க, தங்கள் இணையற்றத் தமிழ் மொழியைப் புறக்கணிப்பது நோக்கி வருந்துகிறேன்." என்று குறிப்பிட்டார்.

இப் பாது போப் உயிருந்திருந்தால் நூறு ஆண்டுகளுக்கு முன் எவ்வளவு வருத்தப்பட்டாரோ அவ்வளவு மகிழ்ச்சி அடைவார். அந்த அளவுக்குத் தமிழ் மறுமலர்ச்சி ஏற்பட்டுள்ளது."

தமிழக அரசின் சார்பில் சிலைகளை ஏற்றுக்கொண்டு தமிழக அரசின் தலைமைச் செயலாளர் திரு சி. ஏ. ராமகிருஷ்ணன், ஐ.சி.எஸ். நன்றி கூறினார்.





## உலகம் வியக்கும் தமிழ்ப் பெருவிழா

படம் 1 பூம்புகார் நகரில் அமைக்கப்பட்ட வண்ணமுகப்பின் எழில் தோற்றம்.

பள்ளி மாணவர்களின் திருக்குறள் திறமை

படம் 2 பழனியைச் சார்ந்த எம். குப்புசாமி, துரைசாமி, எம். கண்ணுத்தாள் ஆகிய மூன்று மாணவர்களின் திருக்குறள் புலமையைப் பாராட்டி, பூம்புகார் நகரில், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு மா முத்துசாமி பரிசுகள் வழங்கினர் (8—1—1968).

படம் 3 சென்னைக் கடற்கரையில், தமிழ் வளர்த்த சான்றோர்க்கு சிலையெடுப்பு விழா-இறை வணக்கம். (2—1—1968)

படம் 4 'பூம்புகார்' நகரில் மாண்புமிகு முதலமைச்சர் நிறைவு விழாச் சொற்பொழிவாற்றினார் (10—1—1968).

படம் 5 மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரிடம், பூம்புகார் நகரில், மாணவர்கள் தாங்கள் ஏந்தி வந்த தீப்பந்தத்தை அளித்தல்.













## உலகத் தமிழ் மாநாடு

படம் 1 கலைக் கண்காட்சியை, சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர் இலட்சுமணசாமி முதலியார் தலைமையில், மூதறிஞர் இராஜாஜி அவர்கள் 3-1-1968-ல் திறந்து வைத்தார்.

படம் 2 மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு மு. கருணாநிதி அவர்களின் 'பூம்புகார்' புத்தகப் பிரதி ஒன்றினை, இலங்கை அமைச்சரின் மனைவியார் திருமதி திருச்செல்வம் அவர்களிடம் மாண்புமிகு முதலமைச்சர் அளிக்கிறார். (18-1-1968)

படம் 3 'புகாரில் ஒரு நாள்' கவிதைப் போட்டியில் பரிசு பெற்றோருக்கு, 'மக்கள் திலகம்' திரு எம். ஜி. இராமச்சந்திரன் பரிசுகள் வழங்குகிறார். (10-1-1968)

படம் 4 'பூம்புகாரில்' 8-1-1968-ல் 'மகளிர் மாண்பு' என்ற தலைப்பில் சொற்பொழிவுத் தொடர் நடைபெற்றது





படம் 1 குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன் அவர்கள் மதுரைப் பல்கலைக் கழகக் கட்டிடத்தின் அடிக்கல்லை நாட்டினர் (4-1-1968)

### திருக்குறள் ஆராய்ச்சிக்கு ஒன்பது இலட்சம் ரூபாய்.

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டை ஒட்டி, தமிழகத்தில் உள்ள மூன்று பல்கலைக் கழகங்களுக்கும், திருக்குறள் ஆராய்ச்சி நடத்த, 9 இலட்சம் ரூபாய் வழங்கப்பட்டது.





படங்கள் 2, 3, 4: சென்னைப் பல்கலைக் கழகத்திற்கான 3 இலட்சம் ரூபாயை மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சரும், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கான 3 இலட்சம் ரூபாயை மாண்புமிகு உணவமைச்சரும், மதுரைப் பல்கலைக் கழகத்திற்கான 3 இலட்சம் ரூபாயை மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரும், அப் பல்கலைக் கழகங்களின் துணை வேந்தர்களிடம் அளித்தனர்.





# கிராம நலக் கண்காட்சி–

# "அறிவுச் செல்வம் வளர்க்கும் சாதனமாக அமையட்டும்"

[மாண்புமிகு முதலமைச்சர் அறிஞர் அண்ணா]

[செங்கல்பட்டு மாவட்டக் கிராமநலக் கண்காட்சி மதுராந்தகத்தில் 21—12—67 முதல் 28—12—67 வரை நடைபெற்றது. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு ஏ. கோவிந்தசாமி கண்காட்சியைத் திறந்து வைத்தார். மாண்புமிகு முதலமைச்சர் நிறைவு விழாப் பேருரை ஆற்றினார். அப்பேருரையின் சாரத்தை, இீழே வடித்துக் கொடுத்திருக்கிறோம்.

"இப்படிப்பட்ட கிராமநலக் கண்காட்சிகள், அறிவுச் செல்வம் வளர்க்கும் சாதனங்களாக சிற்றூர்கள் தோறும் அமைக்கப்படவேண்டும்" என்ற முதலமைச்சரின் வேண்டுகோள், பொன்னேபோல் போற்றத்தக்கதாகும். அதுமட்டுமின்றி, குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தை அவர் வலியுறுத்திக் கூறும் கருத்துக்கள் அனைவரும் சிந்தித்து, செயல்படவேண்டிய சொல்வளமும் பொருள் வளமும் செறிந்த மிக உயர்ந்த கருத்துக்களாக அமைந்துள்ளன.

—ஆசிரியர்]

"இந்தக் கண்காட்சியை ஒரு சிற்றூரில் நடத்த வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவரிடம் நான் சொன்னபோது உண்மையாகவே அது வெற்றிகரமாக நடக்கும் என்ற நம்பிக்கை எனக்கு இருந்தாலும் நான் எதிர்பார்த்ததற்கும் மேலாக பெரு வெற்றியாக இக்கண்காட்சி அமைந்துள்ளது. நம நாட்டில் இப்படிப்பட்ட கண்காட்சிகள் பல சிற்றூர்களில் நடத்தப்பட வேண்டும்.

இந்தக் கண்காட்சி அளிக்கும் வெற்றியானது, இன்னும் பல்வேறு கிராமங்களில் இம்மாதிரி நலன் பயக்கும் கண்காட்சிகளை அமைக்க ஊக்கம் தருகிறது.

அறிவுச் செல்வம் வளர்க்கும் சாதனமாக இது அமைந்துள்ளது.

நம் நாட்டில் மக்கள் எல்லாவற்றையும் படித்துத் தெரிந்து கொள்வார்கள் என்றிருந்தால், அது இயலாத காரியம். கண்ணால் கண்டு, கேள்விகள் கேட்டு விளக்கங்களைப் பெறும் இம்மாதிரிக் கண்காட்சிகள் மூலம்தான் நம் நாட்டு மக்களுக்கு அறிவுத் தெளிவை ஏற்படுத்த முடியும். அதற்கு உறுதுணையாக இது அமைகிறது.

இதே போன்று தமிழகத்தின் மற்ற பகுதிகளில் உள்ளவர்கள் அதிக ஈடுபாடுகொண்டு அந்தந்தப் பகுதிகளில்—குறிப்பாக கிராமங்களில், இம்மாதிரிக் கண்காட்சிகளை நடத்தவேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். கிராமங்களுக்குப் புத்தறிவைத் தரப்பயன்படும் இது.

**அறிந்தது குறைவு ; அறிய வேண்டியது அதிகம் !**

"நல்ல கருத்துக்களை இதன் மூலம் பெற வேண்டியுள்ளோம். நாம் அறிந்தது குறைவு, ஆனால் அறிய வேண்டியது மிக அதிகமாக இருக்கிறது.

நான், இன்று காலை, டெல்லி பட்டணத்தில் பிரிட்டிஷ் தூதரகத்தைச் சேர்ந்த ஒருவரிடம் பேசிக்கொண்டிருந்த போது எனக்கு தூக்கிவாரிப் போடும்படியாக அவர் ஒன்று கேட்டார். "உங்கள் தமிழகத்தில் இந்த ஆண்டு மழை

---

எதிர்ப்பக்க படங்கள் விளக்கம்:

படம் 1 :–செங்கற்பட்டு மாவட்டம், மதுராந்தகத்தில் கிராம நலக் கண்காட்சி டிசம்பர் கடைசி வாரத்தில் நடைபெற்றது. தமிழக அரசின் அமைச்சர்கள் கண்காட்சி விழாவில் கலந்துகொண்டு உரையாற்றினர். அமைச்சர்கள் கண்காட்சியினைப் பார்வையிடுதலை படங்களில் காணலாம்.

படம் 2 :–மாண்புமிகு உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் கிராம அதிகாரிகளின் குறைகளை நேரில் கேட்கிறார் (தமிழக அரசு தலைமைச் செயலகம், 21—12—1967)

படம் 3 :–பாதுகாப்புக் கண்காட்சி ரயில் வண்டி, சென்னைக் கடற்கரை ரயில் நிலையத்தில் 7—1—1968-ல் மாண்புமிகு முதலமைச்சரால் துவக்கி வைக்கப்பட்டது.

படம் 4 :–மதுராந்தகம் கிராம நலக் கண்காட்சியில் 27—12—1967-ல் பாசன நாள் (Irrigation Day) கொண்டாடப் பட்டது. நிலப்பட்டாக்களை அவ்வமயம் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் வழங்கினார்.

படம் 5 :–அண்மையில் சென்னையில் நடைபெறவிருக்கும் அகில இந்திய மதுவிலக்கு மாநாட்டினை ஒட்டிய பூர்வாங்கக் கூட்டம் 24—12—1967-ல் தமிழக அரசின் செய்தி நிலையக் கட்டிடத்தில் நடைபெற்றது. மாண்புமிகு முதலமைச்சர் அக்கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றினார்.

படம் 6 :–சிறு சேமிப்பு நிறுவனத்தின் ஆணைத்தலைவர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன், எம்.எல்.ஏ., சென்னை இராஜாஜி மண்டபத்தில் 6—1—1968-ல் தொழில் அதிபர்களுக்கு ஒரு தேனீர் விருந்தளித்தார். மாண்புமிகு முதலமைச்சர் அவ்வமயம் உரையாற்றுவதைப் படத்தில் காணலாம்.

15 நாட்கள் கழித்துதான் பெய்ததே, இதனால் உங்களுக்குப் பாதகமா—சாதகமா ?" என்று கேட்டார்.

உரிய நேரத்தில் நாட்டில் மழை பெய்ததா, காலந்தவறி மழை பெய்ததா என்பதை இங்கிலாந்து தூதர் கேட்கும் அளவுக்கு அவர்கள் அறிவு பெற்றுள்ளனர். அந்த அளவுக்கு அறிவுத்தாகம் அங்கு. ஆனால் இங்கு அவ்வளவு அறிவுத் தாகம் இல்லை.

சில ஆண்டுகளாக, கிராமப்புறத்தில் இந்தத் தாகம் ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கு எடுத்துச் சொல்லவும், உலக அறிவு பெறுவதற்கும் அதையே கிராமத்தில் உள்ளவர்கள் பெறுவதற்கும் உரிய வாய்ப்பு—பெரும் வித்தியாச நிலையில் உள்ளது. இந்த வித்தியாசங்களைப் போக்கக் கண்காட்சிகள் சிற்றூர்களில் நடத்தப்பட வேண்டும். அதன்மூலம் உலகத்தின் வளர்ச்சியை கிராம மக்களுக்கு எடுத்துக்காட்ட வேண்டும்.

1947–க்குப் பிறகு நம்முடன் சுதந்திரம் பெற்ற நாடுகள் இந்த பதினைந்து ஆண்டுகளில் எந்த அளவு முன்னேறியிருக்கின்றன, மக்கள் வாழ்க்கை எவ்வளவு

## மதுராந்தகம் கிராம நலக் கண்காட்சி

விளக்கிடவும் இம்மாதிரி கண்காட்சிகள் மெத்தவும் பயன்படும்.

இது முதல் முறையாக இங்கு நடத்தப்பட்டுள்ளது. இதில் இன்னும் பல திட்டங்கள் இணைக்கப்பட வேண்டும் என்பதை மாவட்ட ஆட்சித் தலைவரும் நாமும் பெற்றுள்ளோம்.

இன்னும் இதில் என்ன மாற்றங்களை செய்யலாம்—இதில், எதில் மக்களுக்கு அதிக விருப்பம் உள்ளது ? என்பதையெல்லாம் மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கடிதம் மூலம் தெரிவியுங்கள்.

ஏன் கடிதம் மூலமாக என்கிறேன் என்றால், நாம் அதிகாரிகளைப் பார்க்கும்போது சிபாரிசு கேட்கப்போவது பழக்கம். நல்ல காரியங்களைச் சொல்ல நாம் ஆலோசனைகளைச் சொல்ல அவர்களிடம் போவதில்லை. சிபாரிசுக்காகப் போவது ஜனநாயகக் கெடுதல் என்பதை பலர் உணராமல் அதில் ஈடுபடுகிறார்கள், ஆகையால்தான் ஆலோசனைகளைக் கடிதம் மூலம் அனுப்புமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்தக் கண்காட்சி செங்கல்பட்டு மாவட்டத்திலேயே பல சிற்றூர்களில் இன்னும் விரிவான முறையில் நடத்தப்பட வேண்டும் என்பதில் நான் நாட்டம் கொண்டுள்ளேன்.

சீர்திருத்தி அமைக்கப்பட்டுள்ளது எனத்தெரிந்து கொண்டு அதோடு நம் நாட்டு நிலைமைகளைப் பார்த்தால் நாம் அந்த நாடுகள் மாதிரி ஆக எடுக்க வேண்டிய முயற்சிகள் எவ்வளவு இருக்கின்றன என்பதை அறியமுடியும்.

100-க்கு 40 பேர் எழுதப் படிக்கத் தெரிந்ததாக நாவலர் சொன்னார். எழுதப் படிக்க என்றாரே தவிர, சரியாக எழுதப் படிக்க என்று சொல்லவில்லை. 'தான் எழுதியதை நான்தான் படிக்க முடியும், மற்றவர் படிக்க முடியாது' என்பவர்களையும், 'நான் எழுதினேன் ஆனால் எனக்கே விளங்கவில்லை' என்று சொல்பவர்களையும் சேர்த்துத்தான் இந்த 40 பேர்.

இன்னும் ஒரு கதை சொன்னால், கிராமத்தில் உள்ள ஒரு வீட்டில் எழுதப் படிக்கத் தெரியாதவன் வீட்டில் தவலை ஒன்று காணாமல் போனால் அவன் அடுத்த வீட்டுக் காரனை அழைத்துத் தவலை காணாமல் போனது பற்றி போலீசுக்கு மனு எழுதிக் கொடுக்கச் சொல்கிறான்.

மனு போலீசுக்கு அனுப்பப்பட்ட 1 மணி நேரத்தில் போலீஸ் உயர்தர அதிகாரிகள் வீடு நோக்கி வருவதைக் கண்ட தவலை பறிகொடுத்தவன் இதல்லவோ தர்ம ராஜ்யம் என்கிறான். வீட்டுக்கு வந்த அதிகாரிகளை

## மாண்புமிகு முதலமைச்சரின் நிறைவு விழாப் பேருரை

**உலக அறிவுபெற :**

**பட்டணத்திலுள்ள 10 படித்தவர்கள் அறிய வேண்டும் என்பதற்காகப் பொருட்காட்சி நடத்துவதைவிட, மற்றவர்களுக்கு—குறிப்பாக கிராம மக்களுக்கு உலக அறிவு ஊட்டக் கண்காட்சிகள் நடத்தப்பட வேண்டும். கிராம மக்களுக்கு நாம் உலக அறிவை ஊட்டவில்லையென்றால், அது நாட்டை வாழ வைக்காது ; வளர வைக்காது.**

நம்நாட்டில் 100–க்கு 80 பேர் கிராம மக்கள். 10 பேர் பட்டணத்திலும் மீதி 10 பேர் கிராமத்திலும் நகரத்திலும் ஊன்று கொண்டிருப்பவர்கள். நகரத்திலுள்ளவர்கள் வரவேற்று உட்கார சொல்கிறான், ஆனால் அதிகாரியோ பரபரப்போடு "எங்கே நடந்தது ? எங்கே நடந்தது ?" எனகிறார்.

அப்போது தவலை பறிகொடுத்தவர், "ஐயா —எதற்காக வந்தீர்கள் ?" எனக் கேட்டார். "ஏதோ இங்கே கொலை நடந்ததாக மனு வந்தது. நீதானே அனுப்பினாய் !" என்கிறார் அதிகாரி. உடனே அவன் மனுவை அடுத்த வீட்டுக்காரன் எழுதினான் ! எனக்கூறி அவனை அழைத்து வருகிறான். வந்தவன் நான்தான் எழுதினேன் என்கிறான். மனுவில் நீ ஏதோ கொலை விழுந்ததாக எழுதியிருக்கிறாயே என போலீஸ் அதிகாரி



கேட்க, நான் தவலையைக் காணோம் என்றுதானே எழுதினேன் என்கிறான். மனுவில் தவலை காணாமல் போய்விட்டது என்பதற்குப் பதிலாக நடுவில் உள்ள 'வ" எழுத்தை விட்டு விட்டு "தலை என" எழுதியதால் இந்தப் பரபரப்பு.

அப்படி எழுதிய அவனையும் சேர்த்துத்தான் இந்த 40 பேர்! ஆகையால் நாம் செல்ல வேண்டிய தூரம் வெகு தொலைவு. எடுக்க வேண்டிய முயற்சி ஏராளம். அறிவுத் தெளிவுபெற இக்கண்காட்சி பயன்படுகின்றது.

**இடைவெளியை நிரப்ப . .**

உலகத்தின் அறிவுக்கும் நமக்கு கிடைத்துள்ள அறிவுக்கும் எவ்வளவு வித்தியாசம் இருக்கிறது என்பதை மறந்துவிடக்கூடாது. மற்ற நாடுகளுக்கும் நமக்கும் செல்வம் என்ற காலம். அதுவும் 2 அல்லது 3 குழந்தைகள் வரைதான். அதற்கும் மேலிருந்தால் குழந்தை எத்தனை என்று கேட்பதில்லை, குழந்தை குட்டி எத்தனை என்றுதான் கேட்கிறோம்.

ஆகையால் குட்டி வேண்டாம். குழந்தை என்ற அளவோடு குடும்பத்தைக் கட்டுப்படுத்திக்கொள்ள வேண்டியதுதான்—ஒரு குழந்தைக்கும், 2–வது குழந்தைக்கும் நடுவில் இடை வெளி இருக்கவேண்டும். நாம் சினிமாவுக்கு போகிறோம். 3 மணி நேரம் நடக்கக்கூடிய அந்த சினிமாவிலும் 15 நிமிடம் இடைவெளி விடுகிறார்கள். ஆனால் பிள்ளைகளைப் பெறுவதில் இடைவெளியே இல்லாமல் செய்கிறோம்.

முதல் குழந்தை பிறந்து அது வளர்ந்து 2–வது குழந்தையை அது தூக்கி வைத்துக்கொள்ளும் அளவு

## கிராம மக்களுக்கு உலக அறிவை ஊட்டவில்லையென்றால் . . .

உள்ள இந்த பள்ளத்தை பல்கலைக் கழகங்களால் நிரப்ப முடியாது, அல்லது உயர்நிலைப் பள்ளிகளால் நிரப்ப முடியாது.

அதற்காகத்தான் இம்மாதிரி கண்காட்சிகளின் மூலம் பகுத்தறிவைக் கொடுத்து விஞ்ஞான அறிவை எடுத்துக் காட்டித்தான் இந்தப் பள்ளத்தை—உலக அறிவுக்கும், நம் மக்களுக்கும் உள்ள இடைவெளியை நிரப்ப முடியும்.

ரஷ்ய நாடு சுக்கிரமண்டலம் செல்ல வழி அமைத்துக் கொண்டுள்ளது. அமெரிக்கா சந்திர மண்டலத்திற்கு இன்னும பத்து வருடங்களில் சென்று வர பாதை அமைத்துவிட்டநாம் அந்த அளவுக்கு மற்ற நாடுகளில் விஞ்ஞான அறிவு வளர்ந்துவிட்டது.

நான் 12–மணிக்கு டெல்லியில் புறப்பட்டு 3–மணிக்கு விமானத்தின் உதவியால் 1,360 மைல்களைக் கடந்து வர முடிந்தது. இன்னும் 25 ஆண்டுகளுக்குப் பிறகு மதுராந்தகத்திலிருக்கும் ஒருவர் தன் நண்பரிடம், "நான் சந்திர மண்டலம் போய்விட்டு, அடுத்த வியாழக்கிழமை வருகிறேன்" என்று சொன்னால் அதைக்கண்டு வியப்படைவதற்கில்லை. அந்த அளவுக்கு விஞ்ஞான அறிவு

கால இடைவெளி ஒவ்வொரு குழந்தை பிறப்புக்கும் இடையே இருத்தல் வேண்டும். 3 அல்லது 5 வருட இடைவெளி இருக்க வேண்டும். ஒரு குழந்தைக்கும், மற்ற குழந்தைக்கும் இடையே எத்தனை வருட வித்தியாசம் என்று கேட்கும் நிலையில் குடும்பங்கள் இருக்க வேண்டும்.

நீங்கள் ஆண்டவனையே எடுத்துக்கொள்ளுங்கள் பரமசிவனுக்கு 2 குழந்தைகள், ஒன்று விநாயகர், மற்றொருவர் முருகன், விநாயகர் குடும்பக்கட்டுப்பாடே வேண்டாம் என திருமணத்தினின்றும் ஒதுங்கி விட்டார். மற்றொருவரான முருகனுக்கு இரண்டு மனைவிகள், ஆனால் குழந்தை இல்லை. முருகனுக்கே குடும்பக்கட்டுப்பாடு தேவையென்றால், முத்துசாமிக்கும், சின்னசாமிக்கும் தேவையில்லையா ? 20 ஆண்டுகளுக்குக் கொஞ்சம் மனதை திடப்படுத்திக் கொள்ளுங்கள். நாட்டின் உற்பத்தியை பெருக்கித் தொழில் வளத்தை ஏற்படுத்தி, வருமானத்தை உயர்த்தி வாழ்க்கைத்தரம் உயர்ந்து வளர வேண்டியவைகள் வளர்ந்து செல்வம் பெருகினால் பிறகு குழந்தை செல்வத்தைக் கவனிக்கலாம்.

## அது நாட்டை வாழ வைக்காது : வளர வைக்காது

மற்ற நாடுகளில் வளர்கிறது. ஆனால் நாம் காஞ்சீபுரத்தில் உட்கார்ந்துகொண்டு தேர் எந்த தெருவுக்கு போயுள்ளது எனப் பேசிக்கொண்டிருக்கிறோம். உலகம் நம் மனிதர்களை மதிக்க வேண்டும். பகுத்தறிவு இருந்தால் தான் மற்ற நாட்டவர் நம்மை பாராட்டுவர்.

**குழந்தையும் குட்டியும் !**

நம் நாட்டில் மக்கட்தொகை பெருக்கம் மிகவேகமாக நடந்து வருகிறது. நிபுணர் கணக்குப்படி நாம் ஒவ்வொரு ஆண்டும் ஒரு ஆஸ்திரேலிய (நாட்டு ஜனத்தொகையை) நாட்டை உண்டு பண்ணி நம் நாட்டோடு சேர்த்துக் கொண்டிருக்கிறோம். இதைத் தடுத்தாக வேண்டும். ஆகவே தான், குடும்பக் கட்டுப்பாட்டினை கைக் கொள்ள வேண்டும் என்று சொல்கிறோம். ஒரு காலம் இருந்தது—குழந்தைகளை

**ஆசிரியர்கட்கு மதிப்பு !**

கல்விச் செல்வத்தை அளிப்பதில் எவ்வளவு ஆர்வம் ஆசிரியர்கள் காட்டுகிறார் என்பதை இங்கு படங்கள் எடுத்துக் காட்டுகின்றன. அந்த ஆசிரியர்களுக்கு சமுதாயத்தில் நல்ல மதிப்பு கிடைக்கச் செய்ய வேண்டும். ஏனென்றால், அவர்கள்தான் அறிவுக் கண்களை திறந்து வைக்கிறார்கள். நான் இங்கு ஒரு பிரிவில் சென்றபோது திருக்குறளையும் சங்க இலக்கியத்தைப் பற்றியும் விளக்கி சொல்லும்போது மகிழ்ச்சியடைந்தேன். கிராம மக்களுக்கு இம்மாதிரி கருத்துக் கருவூலங்கள் கண்காட்சிகளின் மூலம் கிடைக்கப் பெற வேண்டும்."

[செங்கற்பட்டு மாவட்டம் மதுராந்தகத்தில் நடைபெற்ற "கிராம நலக் கண்காட்சி விழாவில் கலந்துகொண்டு மாண்புமிகு முதலமைச்சர் ஆற்றிய உரையின் சாரம்]

[கிராம நலத் திட்டங்கள்—9-ம் பக்கத் தொடர்ச்சி]

மக்கள் நலனைப் பேணுகின்ற பொதுநலப் பணியில் ஈடுபடுவோர், பல்வேறு துன்பங்களையும் சிக்கல்களையும் எதிர்கொள்ள நேரிடுவதில் வியப்பில்லை. எண்ணற்ற துன்பங்கள் நேரிடும் பொழுது, அவற்றை அஞ்சாமல் எதிர்கொண்டு. அவற்றை தீர்க்க உழைப்பவரைக் கண்டு, **திருவள்ளுவர்**

> **'இடும்பைக்கே கொள்கலம் கொல்லோ'** என்று பாராட்டுகிறார். இத்தகைய பொதுநலத் தொண்டர்களின் உள்ளத்தை, **'இன்பம் விழையான், இடுக்கண் இயல்பு என்பான்'** என்று படம் பிடித்துக் காட்டுகிறார்.
>
> மக்கள் சமுதாயத்தை, 'மன்பதை' என்று கூறுவது பழங்கால மரபு. **"மன்பதை காக்கும் நல்குடி பிறத்தல் துன்பம் அல்லது தொழுதவில்லை"** என்ற

**சிலப்பதிகார** வரிகள், அனைவரும் போற்றவேண்டிய பொன்மொழிகளாகும். மக்கள் நலனில் நாட்டம் கொண்டு உழைப்பவர் அனைவரும் இந்த மனப்பக்குவத்தைப் பெறுவது நலம்.

இன்றைய நிலையில் மக்களாட்சி முறையின்படி. 'மன்பதை' காக்கும் பொறுப்பு. தேர்தல் வாயிலாகக் கிடைக்கிறது. ஆகவே மக்களின் துன்பங்களை நன்குணர்ந்தவர்களே, அவற்றை தீர்க்கும் பொறுப்பை மேற்கொள்ளும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் தலைவர்கள், உள்ளாட்சி நிறுவனங்களைச் செயல்படுத்தும் பொறுப்பையும் பெருமையையும் பெறுகின்றனர் இவர்கள் வகுக்கும் திட்டங்களை நிறைவேற்றி வைக்கின்ற கடமையும் வாய்ப்பும், அரசாங்க, உள்ளாட்சி அலுவலர்களைச் சாரும். இந்த இரு சாராரும் தமது பொறுப்புக்களையும் கடமைகளையும் சரிவர உணர்ந்து, எத்தகைய மோதலுக்கும் இடமில்லாமல், இரயில்பாதையின் இரு தண்டவாளங்களைப் போல், சரியான நிலையில் இயங்க வேண்டும். கிராமநலத் திட்டங்கள் வெற்றி பெறுவதற்கு, மக்கள் தலைவர்கள், அரசாங்க அதிகாரிகள் ஆகியோர்களிடையே இருக்கும், பண்பட்ட தோழமை உணர்வே, அடிப்படையாக அமையும் என்பதில் ஐயமில்லை.

### மதிய உணவுத் திட்டத்தில் ஒரு புதிய மாற்றம்

கிராமங்களில் வாழும் ஏழை எளியவரின் குழந்தைகளுக்கு, மதிய உணவு அளிப்பதில், புதிய மாற்றம் செய்ய முயன்று வருகிறோம். ஒரு வட்டாரத்திலுள்ள எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் தேவையான மதிய உணவை, மையமான ஓரிடத்தில், தயார் செய்து, தக்க சுகாதார வசதிகளோடு எல்லாப்பள்ளிகளுக்கும் அளிக்க முன்வந்துள்ளோம். சோதனைத் திட்டமாக, பூவிருந்தமல்லி வட்டாரத்தில், 'கேர்' நிறுவனத்தாரின் உதவியுடன் செயல்படும் இத்திட்டம், விரைவில் பல்வேறு மாவட்டங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். இந்த வகையில் எல்லா ஊராட்சி மன்றங்களிலும், இதைப்பற்றிச் சிந்தித்து நடைமுறைக்கேற்ற ஏற்பாடுகளைச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன், வட்டார முழுவதிற்கும் மையமான ஒரே இடத்தில் உணவைத் தயாரிப்பதின்மூலம்; தற்சமயம் பள்ளிக்கூட ஆசிரியர்கள் இதற்காக எடுத்துக்கொள்ளும் நேரமும் சிரமமும், கணிசமாகக் குறையும் என எதிர்பார்க்கலாம்.

30 ஏக்கர் நிலம் பள்ளி மதிய உணவுத்திட்டத்துக்கென நன்கொடையாகக் கிடைத்தால், அதைச் சாகுபடி செய்து அதிலிருந்து கிடைக்கும் முதலைக்கொண்டு, ஒரு வட்டாரத்தில் எல்லாப்பள்ளிக்கூடங்களுக்கும் தேவையான மதிய உணவைப் பெற முடியுமென கருதப்படுகிறது.

கிராமங்களில் படிக்கும் ஏழைச் சிறுவர் சிறுமியர்களுக்கு இலவசமாகப் பாடப்புத்தகங்களை அளிக்கும் திட்டம், சேலம் மாவட்டம், நாமக்கல் பகுதியைச்சார்ந்த, மோகனூர், எருமைப்பட்டி, நாமக்கல் ஆகிய இடங்களில் 1967-ம ஆண்டு நவம்பர் மாதம் 12-ம் தேதியில் துவக்கி வைக்கப்பட்டது. இதை மேலும் மற்ற இடங்களுக்குப் படிப்படியே விரிவு படுத்த எண்ணியுள்ளோம்.

ஊராட்சி மன்றங்கள் எல்லாவற்றிற்கும், வானொலி மன்றங்களை அமைத்துக் கொடுத்ததில் இந்தியாவிலேயே, தமிழக அரசு, முதலிடம் பெற்றுள்ளது. கிராம மக்களிடையே புதிய விஞ்ஞானக் கருத்துக்களைப் பரப்பி, நாட்டின் நலனுக்கு ஊக்கம் அளிக்க, வானொலி மிகவும் பயன்பட்டு வருகிறது. அதற்கேற்ப, வானொலி வாயிலாக உழவர்கள் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதற்கு, கிராம வானொலி மன்றங்கள் பெரிதும் உதவி வருகின்றன. இவ்வாண்டு, மாவட்ட அளவில், பரிசுத் திட்டம் ஒன்றை நிறுவி, சிறந்த பணியாற்றும் வானொலி மன்றங்களுக்கு ஊக்கமளித்துள்ளோம். நவம்பர் மாதம், திருச்சி வானொலிநிலையத்தில் ஏற்பாடான விழா ஒன்றில் பங்கு கொண்டு பரிசளித்த மாண்புமிகு வேளாண்மைத் துறைஅமைச்சர் அவர்கள், கிராம வானொலி மன்றங்கள் விவசாயமேம்பாட்டுக்கு உறுதுணையாக இருப்பதைப் பாராட்டியது குறிப்பிடத்தக்கது,

### வள்ளுவர்கூறும் நல்லுரை

> **'பயன் மரம் உள்ளூர் பழுத்தற்றால்'** என்றும்
> **'ஊருணி நீர் நிறைந்தற்றே'** என்றும்,
>
> ஒப்பரவறிதலுக்கு, அதாவதுபொதுநலத் தொண்டிற்கு இரு சிறந்த உவமைகளை வள்ளுவர் மேற்கோடிட்டுக் காட்டுகிறார். அனைவருக்கும் பயன் தரும் தீங்கனிகளை வாரிவழங்கும் மரத்தை யார் தான் வாழ்த்த மாட்டார்கள்? அதேபோல, அனைவருக்கும் தேவையான நீரை வற்றாமல் அளிக் ஊருணியை யார்தான் போற்றாமல் இருப்பார்கள்?
>
> இக்காலத்தில் " மன்பதை " காக்கும் நன்குடிப் பொறுப்பை, தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் தலைவர்கள் மட்டுமின்றி, அரசாங்கத்தில் பணிபுரியும் அலுவலர்களும் ஏற்றுள்ளனர். இந்த இரு சாராரும், வள்ளுவர் கூறும் இந்த இரு முக்கிய பண்புகளை நினைவு கொள்வது நலம்.
>
> ஏழை எளியவர் அனைவரும், வேற்றுமையின்றிப் பயனடையும் வகையில் தீங்கனி பலதரும் நன் மரம் போலவும், தீஞ்சுவைநீர் தரும் ஊருணி போலவும், தொண்டாற்றுவோமாக."

[வானொலிப் பேச்சு 28—12—67]

---

# சீரிய பணியாற்றும் நகராட்சிகள்

### சங்கரன்கோவில் நகராட்சி, திருநெல்வேலி மாவட்டம்

சங்கரன்கோவில் ஊராட்சி மன்றம் நகராட்சி மன்றமாக 1964-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-தேதி முதல் உயர் நிலைப்படுத்தப்பட்டது. ஊராட்சி மன்றமாக இருந்த காலத்தில் இந்நகரிலுள்ள வீடுகளில் எல்லாம் 1000க்கு மேற்பட்ட சாக்கடை தொட்டிகள் இருந்து வந்தன. அவைகளை 10 சாக்கடை வண்டிகள் மூலம் அப்புறப்படுத்தி வந்தும் பிரச்சினை நீங்கவில்லை. மேலும் நகரெங்கும் சாக்கடைநீர் வழிந்தோடிக் கொண்டிருந்தது. 1964-ம் ஆண்டு ஜூலை மாதம் 1-ந் தேதி முதல் குழாய் மூலம் குடி தண்ணீர் வழங்கு திட்டமும் அமுலாக்கப்படவே கழிவு நீர் போக்கு மிகமிக அதிகமாகிவிட்டது. இப்பெருங் குறையைப் போக்க நகராட்சி யிலிருந்து ரூபாய் 50,000 வரை செலவு செய்து தாங்கு சுவர்கள் கட்டியும் 600க்கு மேற்பட்ட சாக்கடை தொட்டிகளை அதில் இணைத்தும் நகரின் அழகைக் கெடுத்து வந்த சாக்கடைப் பிரச்சினை பெருமளவில் நிவர்த்திக்கப்பட்டது.

நகராட்சி தண்ணீர் தேக்க நிலைய இடத்திலும் மற்றுமொரு இடத்திலும் அழகான இரண்டு பூங்காக்கள் உருவாக்கப்பட்டுள்ளன. ஒரு பூங்காவில் தத்ரூபமான பலவகை அலங்கார சிலைகள் வைக்கப்பட்டிருப்பது கண்ணுக்கும் கருத்துக்குமொரு விருந்தாகும்.

நகராட்சி ஆரம்பக் காலத்திலிருந்து இதுவரை ஆறு ரோடுகளுக்கு அரசாங்க கடனும் உதவித் தொகையும் பெற்று தார் ரோடு போடப்பட்டுள்ளது. நகரிலுள்ள முக்கியமான சில சந்துகளுக்கு சிமிண்டு தளம் போடப்பட்டுள்ளது. அரசாங்கத்திலிருந்து ரூபாய் 19 இலட்சம் செலவில் தண்ணீர் சப்ளை திட்டம் நிறைவேறி இந்நகராட்சி பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. செப்டம்பர் 1967 முடிய 726 வீடுகளுக்கு குழாய் இணைப்புக் கொடுக்கப்பட்டுள்ளது.

நகராட்சியான பிறகு நகரின் பல்வேறு தெருக்களிலும், சந்துகளிலும் தேவையான அளவுக்கு டியூப் லைட்டுகளும் சாதாரண பல்பு லைட்டுகளும் போட்டு நகர் அலங்காரப் படுத்தப்பட்டிருக்கிறது.

- 25 வீடுகளுக்கு புதிதாக தண்ணீர் இணைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கிறது.
- ரூ 3,043 செலவில் 4 தெருக்களில் தாங்கு சுவர்கள் கட்டி சாக்கடைகளின் பெருக்கை தடுக்கப் பட்டிருக்கிறது.

### குற்றால நகரியத்தின் புதிய வேலை விவரங்கள்

குற்றாலத்தின் உல்லாசப்பயணிகளின் வருகை ஆண்டு தோறும் ஜூன் மாதம் தொடங்கி செப்டம்பர் மாதம் வரை நீடித்திருக்கும். அந்தக் காலங்களில் வருகிறவர்களுக்கு கீழ்க்கண்ட வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன:

**நகரமைப்பு தங்கும் விடுதி.**—குற்றாலம், தென் காசி ரோட்டில் பஸ் ஸ்டாண்டிற்கு கிழக்கே ஒரு இலட்சம் ரூபாய் செலவில், நவீன கால வசதிகளுடன் நான்கு 'ஏ' வகுப்பு அறைகளும், ஆறு 'பி' வகுப்பு அறைகளும் கட்டப்பட்டுள்ளன. சமையலுக்கும், சாப்பிடுவதற்கும் தனி இட வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன.

**மேற்கூரை பூங்கா ஓட்டல்.**—குற்றாலம் பஸ் ஸ்டாண்டில் ரூபாய் 25 ஆயிரம் செலவில் மேற்கூரை பூங்கா கட்டப்பட்டுள்ளது. சீசனுக்கு வருகிறவர்கள் அனுபவிக்கத் தக்க ரீதியில் வண்ண விளக்குகள் ஒளி வீசும் காட்சிகளில், சிற்றுண்டிகள் அருந்த வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

**விளம்பரக் காட்சி அறை.**—குற்றாலம் முக்கிய அருவிப் பக்கம் விளம்பர காட்சி அறைகள் ரூபாய் 10 ஆயிரம் செலவில் கட்டப்பட்டுள்ளன. இவற்றில் உள்ள விளம்பரக் காட்சிகளை அருவியில் குளிக்க வருகிறவர்கள் கண்டுகளிக்கின்றனர்.

**ஐந்தருவி கார் நிற்குமிடம்.**—ஐந்தருவி சுமார் 2 மைல் தொலைவில் உள்ளது. அங்கு காரில் செல்பவர்கள் கார்கள் நிறுத்த இடமில்லாமல் இருந்ததை மாற்றி ரூபாய் 22 ஆயிரம் செலவில் கார்கள் நிறுத்தத்தக்க இடவசதிகள் செய்யப்பட்டிருக்கிறது.

**பொருள் காப்பறைகள்.**—ஐந்தருவிக்கு செல்பவர்கள் தங்கள் உடைமைகளைப் பாதுகாக்க இடவசதியில்லாத குறைவெகுகாலமாக இருந்ததை நிவர்த்திக்கும் பொருட்டு ரூபாய் 2,000 செலவில்பொருள் காப்பறைகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் அங்கு கக்கூஸ் வசதிகளும் செய்யப்பட்டிருக்கின்றன.

**சிற்றில்லங்கள்.**—குற்றாலம் தென்காசி ரோட்டில் புதிய விடுதிக்கு எதிர்ப் பக்கத்தில் இரண்டு சிற்றில்லங்கள் ரூபாய் 18000 செலவில் கட்டப்பட்டுள்ளன. நவீன வசதிகளுடன் கூடியவை இவை. இங்கு குடும்பத்தினர் தனிமையில் ஒரு சேர தங்குவதற்கு ஏற்றவாறு இருக்கும். இங்கு கார் நிறுத்தவும் வசதி இருக்கிறது.

லெட்சுமிபுரம் கிழக்கு ரோடு ரூபாய் 19 ஆயிரம் செலவில் போடப்பட்டிருக்கிறது. இதனால் புதிய வீடுகள் இங்கு கட்டப்படுகின்றன.

பேரருவியில் குளிக்க வருகிறவர்களுக்கு காபி அருந்துவதற்கு வசதியாக அங்கு காபி அருந்தும் இல்லம் ரூபாய் 1,500 செலவில் அமைக்கப்பட்டுள்ளது.

பொருட்காட்சி.—குற்றாலம் வருகிற பொது மக்களுக்கு; அவர்கள் பகலில் அருவியில் குளித்து இன்புற்ற பிறகு மாலையில் இன்பகரமாகவும், சுவையான அரசியல் திட்ட கருத்துக்களும், அதிசய காட்சிகளும் சுவைக்கும் வண்ணம் பல அம்சங்கள் கொண்ட பொருட்காட்சி ஜூலை 15-ந் தேதி முதல் ஒரு மாத காலத்திற்கு நகரியக் குழுவால் நடத்தப்படுகிறது. இதில் வருகின்ற நிகர லாபம் குற்றாலம் வருகின்ற மக்களுக்கு வசதிகள் செய்வதிலேயே செலவிடப்படுகின்றது.

**கலையரங்கு.**—குற்றாலத்தில் பூங்காவிற்கு பக்கத்தில் பாறையில், பொது மக்கள் நன்மையைக் கருதி ஒரு கலையரங்கு ரூபாய் 4 இலட்சம் செலவில் கட்டப்பட்டு வருகிறது.

## கிருஷ்ணகிரி நகராட்சி

இந்நகராட்சியானது 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 1-ந் தேதி முதல் ஏற்படுத்தப்பட்டது. நகராட்சியானபின் கீழ்கண்டவை பராமரிக்கப்பட்டு வருகின்றன.

| | |
|---|---|
| முதுநிலை ஆதாரப்பள்ளிகள் | 4 |
| ஆரம்ப பள்ளிகள் | 3 |
| தாய்சேய் நல விடுதிகள் | 2 |

**கல்வி:** 1966-67-ம் வருடத்தில் மேலும் மூன்று புதிய ஆரம்பப் பள்ளிகள் துவக்கப்பட்டன. 1967-68-ம் வருடத்திலும் மேலும் ஒரு புதிய ஆரம்ப பள்ளி துவக்க முன்மொழிவுகள் அனுப்பப்பட்டுள்ளன. மாவட்ட கல்வி அதிகாரியின் உத்திரவு இக்கல்வி ஆண்டு ஆரம்பிப்பதற்கு முன்பே கிடைக்கப்பெறாததனால், மேற்படி புதிய ஆரம்ப பள்ளியை 68/69-ல் துவக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

**பேருந்து நிலையம்.**—இந்நகராட்சி எல்லையில் பஸ்கள் நிற்பதற்கான சரியான பேருந்து நிலையம் இல்லாததனால் ரூ. 2,00,000 மதிப்பீட்டில், இந்நகரின் ஒரு பகுதியான பழையபேட்டையில் ஒரு பேருந்து நிலையம் கட்டப்பட்டு வருகிறது. கட்டப்பட்டுவரும் பேருந்து நிலையம் முடியும் தருவாயில் உள்ளது. இவ்வருட இறுதிக்குள் முடிவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**ரோடுகள்.**—ரோடுகள் பராமரிப்புக்காக நகராட்சியான பின் கீழ்க்கண்டவாறு செலவுகள் செய்யப்பட்டன.

| | | | |
|---|---|---|---|
| 1. | சிமெண்ட் காங்கிரீட் ரோடுகள் போட்டதற்கு | ரூ. | 11,600 |
| 2. | தார் ரோடுகளாக போட்டதற்கு | ரூ. | 28,900 |
| 3. | கற்கள் பரப்பினதற்கு | ரூ. | 77,300 |
| 4. | கல்வர்ட்டுகள் கட்டினதற்கு | ரூ. | 14,200 |
| 5. | சாக்கடைகள் கட்டினதற்கு | ரூ. | 16,500 |
| 6. | ரோடுகள் இருபுறமும் பக்கச் சுவர்கள் கட்டினதிற்கு | ரூ. | 33,500 |
| 7. | கால்வாய்கள் கட்டினதற்கு | ரூ. | 14,500 |

### மடத்துக்குளம் ஊராட்சி ஒன்றியம் வழிகாட்டுகிறது

கிராம நல-தல நிர்வாகத் துறைச் செயலாளர் அவர்கள், தமிழகத்தில் எல்லா ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்கும், நகராட்சி மன்ற ஆணையாளர்களுக்கும், கிராம வளர்ச்சிக்கெனவே அரசினரால் வெளியிடப்படும் 'கிராம நலம்' மாத இதழுக்கு அதிகப்படியான சந்தாதாரர்களை சேர்க்குமாறு, 17-10-1967-ல் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதற்கிணங்க, கோயம்புத்தூர் மாவட்டம் மடத்துக்குளம் பஞ்சாயத்து ஒன்றிய ஆணையாளர் திரு தி. பா. நாகமுத்து, 'கிராம நலத்'திற்கு 805 புதிய சந்தாதாரர்களை சேர்ப்பித்துள்ளார். இது மிகவும் பாராட்டுக்குரியதாகும். மடத்துக்குளம் பஞ்சாயத்து ஒன்றியத்தைச் சேர்ந்த அலுவலர்கள் ஆர்வத்தோடு மேற்கொண்டிருக்கும் இம் முயற்சி, ஏனைய ஒன்றியங்களும் நகராட்சிகளும் பின்பற்றத்தக்கதாகும்.

சென்ற வருடம் அரசினர் மானியம் பெற்று கீழ்கண்ட இரண்டு ரோடுகளுக்கு தார் போடப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| 1. | காலனி ரோடு | ரூ. | 9,600 |
| 2. | லக்ஷ்மணராவ் ரோடு | ரூ. | 11,600 |

இவ்வருடம் அரசினரின் மானியம் பெற்று கீழ்க்கண்ட இரண்டு ரோடுகளுக்கு தார் போடப்பட்டு வருகிறது.

| | | | |
|---|---|---|---|
| 1. | நேதாஜி ரோடு | ரூ. | 17,500 |
| 2. | சப்ஜெயில் ரோடு | ரூ. | 18,200 |

**விளக்குகள்.**—கீழ்க்கண்டவாறு தெரு விளக்குகள் இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

| | | |
|---|---|---|
| சாதாரண தெரு விளக்குகள் | .. | 322 |
| குழாய் விளக்குகள் | .. | 158 |
| மெர்குரி விளக்குகள் | .. | 18 |

நகரின் முக்கிய இடங்களிலுள்ள 84 சாதாரண விளக்குகளை குழாய் விளக்குகளாக மாற்றி பொருத்தவும், விளக்குகள் இல்லாத இடங்களில் 14 புதிய குழாய் விளக்குகள் பொருத்தவும் கோரிக்கைகள் அனுப்பப்பட்டுள்ளன. இவ்வருட இறுதிக்குள் விளக்குகள் யாவும் மின்சார போர்டாரால் பொருத்தப்பட்டுவிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நகராட்சிக்கு நீர் வழங்கு திட்டம் இல்லாததனால், மேல் நிலைத்தொட்டிகள் மூலம் பொதுமக்களுக்குத் தேவையான தண்ணீர் வழங்கப்பட்டு வருகிறது. அரசாங்கத்தினராலும் இந்நகராட்சிக்கான நீர்வழங்கு திட்டத்தை ரூ. 28 இலட்சம் மதிப்பீட்டில் முழுத்தொகையையும் கடனாக அளித்து அனுமதி செய்யப்பட்டுள்ளது.



## வளர்ச்சிப் பாதையில் ஆதிவாசிகள்

## கிராம நலங்களில்

**இந்தக் கிராமம் ஏனைய கிராமங்கள்போல் பரவலாக இல்லை; வீடுகளும் ஒன்றையடுத்து மற்றொன்று இல்லை; இங்கொன்று அங்கொன்றுமாக தனித்தனியே காணப்படுகின்றன. பல கிராமங்களிலுள்ள பாசன வசதிகளிலிருந்து அங்குள்ள பாசன வசதி பெரிதும் மாறுபட்டுள்ளது. அந்தக் கிராமம் நகரை யொட்டியோ, அல்லது நகரிலிருந்து சற்று தூரத்திலோ இருக்கவில்லை; நகரிலிருந்து பெருந் தொலைவிலிருக்கிறது. இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள இந்த கிராமத்தின் பெயர் 'கஹாரி' என்பதாகும்.**

இராஜஸ்தானிலுள்ள துங்கார்பூர் என்னுமிடத்திலிருந்து, மலைச்சரிவில் 16 மைல் தூரம் வளைவான பாதைகளில் பொறுமையுடன் சென்றால், கஹாரி என்ற கிராமத்தையடையலாம். ஒவ்வொரு விவசாயியும் தன் வயலின் நடுவில் ஒரு மேடான இடத்தை அமைத்து, அதில் குடிசையைக் கட்டிக்கொண்டு வாழ்கிறார். அவரது வீட்டைச் சுற்றி அவரது வயல்களே காணப்படும். இம் முறையில் சுமார் 500 வீடுகள் இருக்கின்றன. இங்கே இரண்டு வீடுகளைக் கூட ஒரு சேரக் காணக் கிடைக்கவில்லை.

### மக்கள் கட்டிய பள்ளி

சோளமும், கோதுமையுமே முக்கிய பயிர்கள். மழை நீர் சிறு சிறு ஓடைகளின் வழியே ஆங்காங்கு சென்று கொண்டிருக்கிறது. சில ஓடைகளை ஒன்று சேர்த்து, ஒரு சிறு அணையைக் கட்டி, மழை நீரை தேக்கி வைத்து, அதன் மூலம் தேவையான போது வயலுக்கு பாசனம் செய்து கொள்கின்றனர். முதலில் கோதுமையைப் பயிர் செய்கின்றனர்; அது அறுவடையானதும், மழை நாட்களில் சோளத்தைப் பயிரிடுகின்றனர். அதன் பிறகு மீண்டும் கோதுமை.

இங்குள்ள 500 வீடுகளும் தனித் தனியே காணப்படுகையில், ஒரே ஓர் இடத்தில் மட்டும் மூன்று கூரைகள் ஒன்றாகத் தென்படுகின்றன. அவை எதுவாயிருக்கக் கூடும்? அது தான் கஹாரி கிராமத்தின் கல்விக்கூடம். தாங்களாகவே முன்வந்து கட்டிய பள்ளி இது. அக்காலத்தில் எவருமே எழுத்தறிவு பெறாதிருந்த இக்கிராமத்தில், தற்போது குழந்தைகள் அனைவரும் கல்வி கற்க முனைந்துள்ளனர். நாடு விடுதலை பெற்றவுடன் ஏற்பட்ட மறுமலர்ச்சியில் கஹாரியும் பங்கு பெற்று தன் கடமையுணர்ந்து, செயல் புரியத் தொடங்கியுள்ளது. இந்த சிறு பள்ளியில் சுமார் 80 முதல் 100 மாணவர்கள் வரை கல்வி கற்கின்றனர்.

### சமூக விரோதிகள் தீவிர உழவர்களாயினர்

கஹாரி ஊராட்சியில், கஹாரியைத் தவிர பலோடா, தொல்வார் என்ற இரண்டு சிறிய கிராமங்களும் அடங்கியுள்ளன. பலோடா மக்கள் விவசாயத்தை அண்மைக் காலம்வரை புறக்கணித்து வந்தனர். விவசாயத்தின் மூலம் போதிய வருவாய் இல்லை என்பதே அவர்களின் இப்போக்கிற்குக் காரணம். ஆனால் அதே மக்கள், ஆறு இடங்களில் ஓடைகளைத் தடுத்து, கரைகளைக் கட்டி, ஆண்டிற்கு மூன்று போகம் விவசாயம் செய்யுமளவிற்கு வளர்ச்சியடைந்துள்ளனர். ஒரு காலத்தில் சமூக விரோதிகள் என்று அழைக்கப்பட்ட இம்மக்கள், இன்று முதல் தர விவசாயிகளாக மாறியுள்ளனர். மலையடிவாரத்திலுள்ள தங்கள் கிராமத்தில், பற்பல இடங்களில் கிணறுகளைத் தோண்டி, நீரை இறைப்பதற்காக பாரசீக சக்கரங்களைப் பொருத்தியுள்ளனர்.

### நிறைவேறா ஆவல்.....

கஹாரி கிராம வாசிகளின் ஒரே ஓர் ஆவல் இன்னும் நிறைவேறாமலேயே இருக்கிறது. அவர்களின் ஊரில் ஒரு வானொலிப் பெட்டிக்கூட இல்லை. நகரங்களுக்கு அப்பால் வெகு தொலைவில் வசிப்பதால், உலக நடவடிக்கைகளிலிருந்து அவர்கள் துண்டிக்கப்பட்ட நிலையில் வாழ்கின்றனர். ஒரு வானொலிப் பெட்டியாவது இருந்தால், நாடு நகரைப் பற்றி அறியக்கூடும் என்று தங்கள் ஆவலை வெளிப்படுத்துகின்றனர். இருப்பினும், கிராமத்திலுள்ள பள்ளிக்கு நாளிதழ்கள் தருவிக்கப்படுகின்றன. அவற்றை பள்ளிச் சிறுவர்கள் தங்கள் பெற்றோர்களுக்கு வாசித்து உதவுகின்றனர்.

ஆதிவாசிகள் தங்களின் பழைய வாழ்க்கையை உதறித் தள்ளி, புதிய உலகில் புகுந்துவிட்டனர். நம்பிக்கையுடனும், விடா முயற்சியுடனும் முன்னேற்றப் பாதையில் விரைந்து சென்ற வண்ணமிருக்கின்றனர்.

# சொல்வதைச் செய்வேன்...

**ஊராட்சியில்** நிறைவேற்றப்படவிருக்கும் எந்த ஒரு திட்டத்தையும், தனிப்பட்ட முறையில் அவர் செயல்படுத்தி பார்த்த பின்னரே, அதைப் பற்றி பிறருக்கு கூறும் இயல்புள்ளவர் திரு டி. எஸ். கொர்கேட் என்ற ஊராட்சி தலைமை நிர்வாக அதிகாரி. புல்தானா மாவட்ட (மகாராஷ்டிர மாநிலம்) அதிகாரி இவர்.

“நான் சொல்வதைச் செய்வேன்; செய்வதைச் சொல்வேன்” என்று ஆழ்ந்த அனுபவத்துடன் கூறும் இவர், “பஞ்சாயத்து ராஜ்” என்ற ஆங்கில திங்கள் இதழ் நிருபருடன் நிகழ்த்திய உரையாடலின் ஒரு பகுதி இது.

# ...செய்வதைச் சொல்வேன்.

ஒட்டுச் சோளப் பயிர் மிகச் செழிப்பாக கண்களுக்கு பெருவிருந்தாய் காட்சியளித்தது. அப்பயிரைக் காணும்போது, அங்கு மிகுந்த கவனம் அளிக்கப்பட்டுள்ளது என்பது தெளிவாயிற்று. பயிர் அறுவடைக்குத் தயாராயிருந்தது.

“எப்போது அறுவடை செய்யப் போகிறீர்கள்?” —நிருபர்.

“இவ்வார இறுதியில் அறுவடை செய்யலாமென்றிருக்கிறேன்.” —திரு கொர்கேட்.

“எவ்வளவு மகசூல் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறீர்கள்?”

“என்னுடைய நிலம் சுமார் ஓர் ஏக்கர்; சுமார் 10 குவிண்டால் கிடைக்குமென்று நினைக்கிறேன்.”

“தங்களுடைய மதிப்பு மிகவும் குறைந்ததாயிருக்கும்போலிருக்கிறது. நிச்சயமாக 12 குவிண்டால் கிடைக்கும்.”

அவருடைய புன்னகை ததும்பிய முகத்தை உற்று நோக்கினேன். “உண்மையை ஏன் ஒளிக்கிறீர்கள்? விளைச்சலை அதிகமாகவும் கூறவேண்டாம். குறைத்தும் சொல்லவேண்டாம் என்று நினைக்கிறேன்” என்றேன். அவர் அதற்கு ஒன்றும் பதில் சொல்லவில்லை.

தன்னைப் பற்றி கூறத் தயக்கம்....

புல்தானா மாவட்ட ஊராட்சி தலைமை நிர்வாக அதிகாரியான திரு டி. எஸ். கொர்கேட் என்ற இவரிடமிருந்து, தனிப்பட்ட முறையில் தகவல்களைச் சேகரிப்பது மிகவும் இன்னலான காரியம். ஆனால் அவரது ஊராட்சியின் திட்டங்கள், பணிகள், அதிகாரிகள், அலுவலர்களைப் பற்றி அவர் ஏராளமான தகவல்களைத் தருகிறார். ஆனால் தன்னைப்பற்றி கூறுவதற்கு அவருக்கு ஏனோ இந்த தயக்கம்!

“உங்கள் தோட்டத்தில் மலர்ச் செடிகளை பயிரிடாமல், ஒட்டுச் சோளத்தைப் பயிரிட்டிருக்கிறீர்களே, ஏன்?”

“செய்யாததை சொல்லமாட்டேன்”

“மலர்களையும் நான் வேறொரு இடத்தில் பயிரிட்டுள்ளேன். இந்த ஓர் இடத்தில் மட்டுமே சோளம் பயிரிடப்பட்டுள்ளது. ஊராட்சியின் சோளப் பயிர் திட்டம் ஒன்றை செயல்படுத்த தொடங்கியுள்ளோம். அப்பயிரின் நன்மை, தீமைகளைப் பற்றி நான் முதலில் நன்கறிந்திருத்தல் வேண்டும். இல்லாவிடில் அதைப்பற்றி நான் எப்படி பிறருக்கு கூறமுடியும்? இந்த ஒட்டுச் சோளப் பயிருக்கு கூடுதலாக செலவாகி, விவசாயிகளுக்கு ஏற்றதாக இல்லாவிடில், இத்திட்டத்தை எதிர்க்கக்கூடிய முதல் மனிதன் நானாகத்தான் இருக்கமுடியும். சொல்வதைச் செய்வேன். செய்வதைச் சொல்வேன்” என்றார், திரு கொர்கேட்.

“இப்பயிருக்கு அதிகமான செலவு எதுவும் கிடையாது. பனிரெண்டு மூட்டை சோளத்திற்கு மார்க்கெட்டில் கிடைக்கும் விலை ரூ. 800. ஆனால் எனக்கு ஏற்பட்ட செலவோ மிகக் குறைவு. தவிர, மூன்று மூட்டை அம்மோனியம் சல்பேட்தான் எனக்கு தேவைப்பட்ட உரம்” என்று மேலும் கூறினார் திரு கொர்கேட்.

“இப்போதுநான் கற்றுக் கொள்கிறேன்..”

அவருடன் மேலும் அளவளாவியதில், சாதாரண ரக விதைகளை விட ஒட்டுச்சோள ரக விதைகளின் விலை அதிகம் என்றும், விளைச்சலில் ஒட்டு ரக விதைகள் மூலம், மூன்று மடங்கு அதிக மகசூல் கிடைக்கும் என்பன நன்கு தெளிவாயிற்று.

சாதாரண ரக விதைகளைப் பயிரிட்டால் ஏக்கருக்கு 5 குவிண்டால்தான் கிடைக்கும். ஆனால் ஒட்டு சோள விதைகள் மூலம் 15 குவிண்டால் விளைச்சலை எளிதாகப் பெறமுடியும்.

“எனவே நீங்களும் ஒரு தீவிர விவசாயிதான்” என்றார் நிருபர்.

“எனக்குத் தெரியாது. இப்போது தான் விவசாயத்தைக்கற்றுக்கொண்டு வருகிறேன்” என்றார், திரு கொர்கேட் அமைதியுடன்.

# பிற மாநிலங்களில்!!

‘மெங்கன்வாடி’ என்பது ஒரு மிகச் சிறிய கிராமம். இது மகாராஷ்டிர மாநிலத்தில் சங்கிலி ஊராட்சி ஒன்றியத்தில் இருக்கிறது. கிராமத்தைச் சுற்றியுள்ள வயல்களுக்குப் போதிய பாசன வசதியின்மையால், வளமான நிலத்தில் கூட உணவுப் பொருள்களை விளைவிக்க முடியவில்லை. இங்கு 57 அடி. குறுக்களவுள்ள 35 அடி ஆழக் கிணறு ஒன்றைத் தோண்டினால், அதன் மூலம் ஏராளமான நீர் பாசனத்திற்கு கிடைக்கும் என்று கிராமவாசிகள் அனைவரும் எண்ணினர். மேலும் அதன் மூலம் குடிநீர் பிரச்னைக்கும் ஒரு முடிவு ஏற்படக் கூடும்.

1966-ம் ஆண்டு மே திங்களில் இப்பணி தொடங்கியது. மூன்றே நாட்களில் 25 அடி. அகலமுள்ள 125 அடி நீள கால்வாயும், 25 அடி ஆழ கிணறும் தோண்டப்பட்டுவிட்டன. நான்காம் நாள் வேலையை ஆரம்பிக்கையில் இயற்கை இவர்களுக்கு துணை செய்யவில்லை. அன்று முதல், அடுத்த மூன்று நாட்களில் ஓயாத பெருமழை பெய்ததன் விளைவாக, கால்வாய் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டுவிட்டது; 25 அடி ஆழ கிணறும் சேற்றால் மூடப்பட்டுவிட்டது. இருப்பினும் கிராமவாசிகள் மனந்தளராமல், மீண்டும் கால்வாயை வெட்டியதுடன், கிணற்றில் சேர்ந்த சேற்றையும் உடனே

## மனந்தளராத உழவர்கள்

கிணற்றை வெற்றிகரமாக தோண்டி முடித்துவிடின், மலைப் பகுதியினைக் குடைந்து, 600 அடி நீள சிமெண்ட் குழாய்கள் வாயிலாக வயல்களுக்கு பாசன வசதி செய்யக்கூடும். இப்பணியில் அரும் பணியாற்றியவர் திரு. பாபுராவ் சம்பாஜி என்ற வயது முதிர்ந்த கிராமவாசி.

விவசாயிகளின் பெரும்பாலோர் ஒன்றுகூடி, நில அடமான வங்கியில் தங்களது நிலங்களை அடகுவைத்து ரூ. 32,000 சேர்த்தனர். அத் தொகையைக் கொண்டு கிணறு வெட்டும் பணியில் தங்களது முழு உழைப்பையும், கவனத்தையும் செலுத்தத் தொடங்கினர்.

அப்புறப்படுத்தினர். இதைச் செய்வதற்காக பெண்கள் தங்களது நகைகளை அடகுவைத்து, பணத்தைத் தந்து, கிராமத்தைச் செழிப்பாக்க, தங்களது கடமையையாற்றினர் என்பது குறிப்பிடத்தக்கது.

கிராம மக்களின் இத்தியாக உணர்வைக் கண்ட ஊராட்சி ஒன்றியம், குழாய்ப் பாசனத் திட்டம் ஒன்றிற்கு அனுமதி வழங்கியது. ரூ. 7,500 செலவில் 9 அங்குல குழாய்களை ஒன்றியம் அளித்ததுடன் கிணறு தோண்டுவதற்கென, ரூ. 8,000-ம் தந்தது. இவற்றின் காரணமாக, இன்று 20 ஏக்கர் நிலத்தில் ஒட்டுச் சோளப் பயிர் செழித்து வளர்ந்துள்ளது.

# அசாமில் சத்துணவுத் திட்டம்

"இன்று என்ன சமைப்பது?"— இதுவே குடும்பப் பிரச்னை; இது தாய்மார்களின் தலையாயப் பிரச்னை; "மார்க்கெட்டில் என்னென்ன கிடைக்கும், எவற்றை வாங்க முடியும், எவற்றை வாங்கினால் பசியைப் போக்கிக் கொள்ள முடியும்?"—இவையெல்லாவற்றையும் பொறுத்துத் தான் அன்றைய சமையல் பிரச்னைக்கு ஒரு முடிவு காண முடியும். ஆனால் விஞ்ஞானம் இதற்கொரு எளிய முறையை வகுத்துத் தந்துள்ளது. உணவில் புரதம், மாவு, கொழுப்பு, தாதுச் சத்துக்கள், உப்பு உயிர்ச் சத்துக்களெல்லாம் வேண்டிய அளவில் கலந்திருத்தல் மிகவும் இன்றியமையாதது. அவ்வாறு உணவைச் சமைத்து உண்பது பெரும்பாலோர் எண்ணுவது போன்று ஓர் இன்னல் மிகுந்த காரியமல்ல. அது ஓர் எளிதான செயலே. குழந்தைகளின் உணவில் நாம் அதிக கவனம் செலுத்த வேண்டும். அவர்களின் வயது, வேலை, விளையாட்டுகளுக்கேற்ப உடல் வளர்ச்சியைப் பேணும் வகையில் சத்துள்ள உணவுகளை அவர்களுக்கு அளிக்க தவறக் கூடாது. நாட்டில் கிடைக்கும் உணவுப் பொருள்களை தகுந்த முறையில் சாப்பிட்டு, மிகுந்த அளவில் ஆரோக்கியத்துடன் வாழ, மக்களுக்கு போதிய பயிற்சி அளிக்கப்படுதல் வேண்டும்.

இதனைக் கருத்தில் கொண்டே, சத்துணவு திட்டமானது அசாமிலுள்ள 'மைய ஜொர்ஹாட் வளர்ச்சி வட்டார'த்தில் செயல்படுத்தப்படுகிறது. இவ்வட்டாரத்திற்கு சிபாஹிகோலா என்ற மாற்றுப் பெயரும் உண்டு. திட்டம் துவக்கப்பட்ட ஓராண்டிலேயே வட்டாரத்தில் அதற்கு நல்ல ஆதரவு கிடைத்துள்ளது. பள்ளிக் குழந்தைகளுக்கு, மதிய உணவு சத்துள்ளதாக இருக்க வேண்டியதன் அவசியத்தை மக்கள் தெளிவாக உணரத் தலைப்பட்டுவிட்டனர். குழந்தைகள் தூய உடையணிந்து, சுத்தமாக பள்ளி சென்று, சகோதரர்களாக பழக வழி வகை செய்யவேண்டுமென்பதையும் அவர்கள் அறிந்துள்ளனர். வேளாண்மை, கோழிப் பண்ணை, மீன்வளம், சமூகக் கல்வி பணிகளடங்கிய சத்துணவு திட்டமொன்று "யூனிசெஃப்"பின் ஆதரவில் 1966-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் துவக்கப்பட்டது.

### பள்ளிகளில் காய்கறித் தோட்டம்

பள்ளிகளில் காய்கறிகளை உற்பத்தி செய்வதற்கு முதலிடம் தரப்பட்டு, அதற்கென இருபது தொடக்கப்பள்ளிகள் தேர்ந்தெடுக்கப்பட்டன. இப்பள்ளிகளில் 1966-ம் ஆண்டு முதல் காய்கறிகள் பயிரிடப்படுகின்றன. மழைக் கால, கோடைக்காலக் காய்கறிப் பயிர்களுக்கேற்ப விதைகள் அளிக்கப்படுகின்றன. சிறுவர்களால் எளிதாகக் கையாளக்கூடிய உழுபடைக் கருவிகள், அவர்களிடம் தரப்பட்டுள்ளன. பள்ளிகள் தவிர, தனியார்த் தோட்டங்களிலும் காய்கறிகள் பயிரிடப்படுகின்றன. இத் தோட்டங்களில் பயிராகும் காய்கறிகள் அனைத்தும் பள்ளிகளுக்கு அனுப்பப் படுகின்றன.

பழத் தோட்டங்களை அமைப்பதற்கு தகுந்த இடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஐந்து பழத் தோட்டங்கள் அமைக்கப்படவிருக்கின்றன. இவற்றில் பழ உற்பத்தி தொடங்கியதும் குழந்தைகளின் பழ உணவுத் தேவை பூர்த்தியடைந்து விடும்.

### இருவித பண்ணைகள்

தனியார் கோழிப்பண்ணை, சமுதாய கோழிப்பண்ணைகள் என்று இரு வித பண்ணைகள் 45 இருக்கின்றன. இவை 1966-ம் ஆண்டு அக்டோபர் திங்களில் ஆரம்பிக்கப்பட்டவை. ஒவ்வொரு சமுதாய கோழிப் பண்ணைக்கு 100 பறவைகளும், தனியார் பண்ணைக்கு 20 பறவைகளும் அளிக்கப்பட்டுள்ளன. இப்பறவைகளுக்கென பண்ணைகள் அதன் உற்பத்தியில் 50 சதவீத முட்டைகளை பள்ளிகளுக்கு கொடுத்துவிடவேண்டும். பண்ணைகளுக்குரிய கருவிகள் எல்லா பிரிவுகளுக்கும் தரப்பட்டுள்ளன. தீவனங்களும் தவறாது கொடுக்கப்படுகின்றன.

### திட்டத்தை நிறைவேற்றும் மன்றம்

மீன் உற்பத்தித் திட்டம் இன்னும் மேற்கொள்ளப்படவில்லை. ஆனால் அதற்குரிய தொடக்க பணிகள் அனைத்தும் முடிவுபெற்றுள்ளன. கிராமத்திலுள்ள நீர் நிலைகளுக்கு, சீக்கிரமே மீன் குஞ்சுகள் வழங்கப் படவிருக்கின்றன.

சத்துணவு திட்டத்தை செம்மையாக நிறைவேற்றுவதற்கு இளைஞர் மன்றங்களும், மகளிர் மன்றங்களும் அமைக்கப்பட்டுள்ளன. மன்ற உறுப்பினர்களுக்கு, வட்டார தலைமையிடங்களில் போதிய பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

பள்ளிகளில் பாத்திகள் அமைக்கவும், தோட்டத்தைச் சுற்றி வேலிகளை அமைக்கவும் இளைஞர்கள் மன்றம் பெருதவி புரிந்

[அடுத்த பக்கம் பார்க்க]



# வீரர்கள் சமைத்த பாசறை

திரிபுராவிலுள்ள எல்லைப் பாதுகாப்பு வீரர்களுக்கு ஒரு தலைமையிடம் அவசியமெனத் தோன்றியது. அதற்கென மேலதிகாரிகளுக்கு விண்ணப்பம் செய்து நிலத்தை தேர்ந்தெடுத்து, திட்டங்கள் போட்டு, பொறியாளர்கள் வந்து, வேலையைத் தொடங்குவதற்கு நீண்ட காலநாமதம் ஆகுமல்லவா? எனவே, எல்லைப் பாதுகாப்புப் படையின் பிரிவுத் தளபதி தன்னுடைய வீரர்களை அணுகி, "இது போன்ற காரியங்களை யெல்லாம் நீங்களே செய்து கொள்வது தான் சிறந்தது; தன் கையே தனக்குதவி; மூன்று மாதகாலத்தில் இத் தலைமையிடத்தை நாமே அமைத்துக் கொண்டு விடலாம்" என்று கூறியபோது, ஒரு போர் வீரராவது அவர் சொல்வதை ஏற்க மறுக்கவில்லை. முடிவு? காட்டுப் பகுதியிலே ஓர் அழகான தங்குமிடம் மூன்று மாதத்தில் தோன்றி விட்டது.

இந்த எல்லைப்பாதுகாப்புப் படையினருக்கு, திரிபுரா காவலர்கள் தேவையான உதவிகளை செய்து வந்தனர். இருப்பினும், தங்களுக்கென ஒரு தலைமையிடத்தை தனியே அமைத்துக்கொள்ள படையினர் விரும்பினர். மேலும், மலையின் உச்சியிலுள்ள காந்தி கிராமம், கோகுல்நகர் ஆகிய ஊர்கள் இயற்கை வளம் மிகுந்த அழகிய தோற்றமுள்ளவை. இங்கு தலைமையிடத்தை நிர்மாணிக்கத் திட்டமிட்டிருந்ததானது, அவர்களின் உற்சாகத்தை பன்மடங்கு பெருக்கியது.

பாதுகாப்பு படை வீரர்கள் வேலையைத் தொடங்கினர். மரங்களெல்லாம் பளபளக்கும் இரம்பங்கள் கொண்டு அறுத்து கீழே தள்ளப்பட்டன. புதர்கள், செடிகளெல்லாம் கனவுகள் தோன்றி மறைவது போன்று சற்றென மறைந்தன. சுறுசுறுப்பான, ஓயாத உழைப்பினால், காட்டுப் பகுதிகள் சீரமைக்கப்பட்டு, தலைமை யிடத்திற்குரிய நிலம் கண்முன்னே தயாரென காட்சியளித்தது.

### அனுபவமற்ற கரங்கள் செயலில் முனைந்தன....

திரிபுராவில் மூங்கில்களுக்கோ பஞ்சமில்லை. களிமண் ஏராளம். புற்கள் தான் சில பிரச்னைகளை ஏற்படுத்தின. அங்குள்ள உள்ளூர் வாசிகள் எப்படி வீடுகளைக் கட்டுகின்றனர் என்பதை வீரர்கள் சீக்கிரத்திலேயே அறிந்துக்கொண்டனர். அனுபவமற்ற கரங்கள், கீற்றுக்களை தயாரித்தன. கூரைகளை வேய்வது தான் சற்று சிரமமான காரியமாக இருந்தது. ஆனால் போர் வீரர்கள் பின்தங்கக் கூடிய அளவிற்கு அவ்வளவு சிரமமான செயலாக அது இல்லை. சில கிழமைகளிலேயே, பாசறை மேல் நோக்கி வளர்ந்து வந்தது. இப்படித் துரிதமாக சுவர்கள் கட்டப்படுவதையும், கூரைகள் அமைக்கப்படுவதையும் கண்ட உள்ளூர் கட்டிட அமைப்பாளர்களுக்கு பொறுமையே ஏற்பட்டு விட்டது எனலாம். மேலும், அவை வலுவாக இருப்பது, அவர்களின் பொறுமையை மேலும் வளர்த்தது! ஆனால், எல்லைப் பாதுகாப்பு வீரர்களுக்கோ, தங்களுக்குச் சொந்தமாக பாசறையை அமைத்துக்கொள்ள வேண்டும் என்ற நெடு நாளைய அவா, கனவு சீக்கிரமாகவே நினைவாயிற்று.

நாட்டின் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்ட நேரம் போக, எஞ்சிய நேரத்திலேயே அவர்கள் இதில் ஈடுபடலாயினர். இடத்தை அமைத்ததில் பெரும் சிக்கனமும் ஏற்பட்டது. இதை முறையோடு கட்டியிருந்தால், அதற்கு குறைந்தது இருபதாயிரம் ரூபாயாவது ஆகியிருக்கும். ஆனால், வீரர்களின் தனிப்பட்ட உழைப்பு, மூங்கில், களிமண் போன்ற மூலப் பொருள்களின் சகாய விலை ஆகியவை செலவைக் குறைத்தன. ஏற்பட்ட செலவு சில நூறு ரூபாய்கள் மட்டுமே.

உள்ளூர் வாசிகள் கட்டடம் கட்டும் முறையைத் தான் வீரர்களும் கையாண்டார்கள். ஆனால், அவர்களின் செயல், அவர்கள் ஒரு முன்மாதிரியை ஏற்படுத்தவில்லையா?

---

அசாமில் சத்துணவுத் திட்டம்....

[முன் பக்கத் தொடர்ச்சி]

துள்ளது. மகளிர் மன்றங்கள் மதிய உணவுகளை சமைத்து, குழந்தைகளுக்கு பரிமாறும் பணியை மேற்கொண்டுள்ளன. இம் மன்றங்களின் சேவையைப் பாராட்டி, உறுப்பினர்களை ஊக்குவிப்பதற்கென, இளைஞர் மன்றத்திற்கு ரூ. 7,555-ம் மகளிர் மன்றத்திற்கு ரூ. 2,500-ம் மானியங்கள் வழங்கப்பட்டுள்ளன.

சுமார் 1,710 மாணவர்கள் வாரத்தில் இரு நாட்கள் மதிய உணவைப் பெறுகின்றனர். 'மைய ஜொர்ஹாட் வட்டாரம்' 1966-ம் ஆண்டு அக்டோபரிலிருந்து இந்த திட்டத்தை நிறைவேற்றி வருகிறது. உணவில் காய்கறிகளும், முட்டைகளும் உள்ளன. தேவையான அரிசியை பெற்றோர்கள் அன்பளிப்பாகத் தருகின்றனர். ஒவ்வொரு மாணவனுக்கும் 75 கிராம் அரிசி, 90 கிராம் காய்கறி, ஒரு முட்டை ஆகியவை அளிக்கப்படுகின்றன.

வெயிலின் கொடுமை தாங்க முடியவில்லை; புழுதிக் காற்று பலமாக அடித்துக்கொண்டிருக்கிறது. இருப்பினும், அவர்கள் வெயிலின் கொடுமைக்கோ, புழுதிக் காற்றுக்கோ சிறிதும் அஞ்சாமல், அந்த வாய்க்காலை

# துன்புற்றோருக்கு துணிவு பிறந்தது.

வெட்டும் பணியிலேயே அவர்களின் முழுக்கவனமும் ஆர்வமும் செல்கின்றன. ஆண்கள், பெண்கள், சிறுவர்களென சுமார் 150 பேர்கள் இதில் ஈடுபட்டிருந்தனர். இயற்கையை வென்று, அதை தங்களுக்கு அடிமைப்படுத்த எண்ணி அவர்கள் செயல்பட்டனர்.

இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள மற்ற இருபத்திரெண்டு மாவட்டங்களைப் போன்று, பில்வாரா மாவட்டமும் வரட்சியால் மிகவும் பாதிக்கப் பட்டுள்ளது. பில்வாரா மாவட்டத்திலுள்ள சாபுரா ஊராட்சி ஒன்றியமும் இதற்கு விலக்கல்ல. இங்குள்ள கிணறுகளும் வற்றிப்போய்விட்டன. பெரிய, பெரிய நீர்த் தேக்கங்களில் கூட ஒரு சொட்டு நீர் காணக் கிடைக்கவில்லை. செழிப்பு மிகுந்த கரிசல் பூமி, நீரில்லாமையால் வெடிப்பு கண்டுவிட்டது. ஆனால் இவையொன்றும் அத்தொண்டர்களின் நெஞ்சங்களை கலக்கவில்லை; அவர்களின் உற்சாகத்தை குறைக்கவில்லை. இவர்களின் ஆர்வத்தைக் கண்ட ஊராட்சியும், அவர்களுக்கு தேவையான உதவிகளைச் செய்ய முன் வந்தது.

### ஊராட்சி ஒன்றியமே விவசாயம் செய்தது

இங்குள்ள மூன்று ஏரிகளைச் சுற்றியும் சுமார் 5,106 ஏக்கர் நிலங்கள் விவசாயத்திற்குத் தகுதியானவை. இவற்றில் 485 ஏக்கர் நிலம் முதலில் சாகுபடிக்கு கொண்டுவரப்பட்டது. இந்த நிலங்களை விவசாயம் செய்வதற்காக 1965-ம் ஆண்டு உழவர்களிடம் தரப்பட்டது. ஆனால் அவற்றை சீராக்கும் பணிதான் விவசாயம் செய்வதைவிட, பெரியதொரு செயலாக விருந்தது. டிராக்டர்களையும் பம்புசெட்டுகளையும் அங்கே கொண்டு வந்து நிலங்களை சீராக்க ஊராட்சி ஒன்றியம் பெரிதும் உதவியது. அறுவடைக்குப் பின்னரே டிராக்டர், பம்பு செட்டுகளின் வாடகையை வசூலிப்பதென ஒன்றியம் தீர்மானித்தது. ஒன்றியத்தின் துணை கொண்டு, 1965–66-ம் ஆண்டில் சுமார் 1,500 ஏக்கர்களில் விவசாயம் செய்யப் பட்டன. விவசாயிகளுக்கு ஒதுக்கிய நிலம் போக, எஞ்சியிருந்த 824 ஏக்கர்களை ஊராட்சி ஒன்றியமே ஏற்றுக்கொண்டு, விவசாயம் செய்து, 20,000 மணங்கு கோதுமையை உற்பத்தி செய்தது. இந்த மகத்தான உற்பத்தியினால் ஊக்கம் பெற்ற ஊராட்சி ஒன்றியம், 1965-66 ஆண்டில் மேலும் 1,600 ஏக்கர்களில் விவசாயம் செய்ய தொடங்கியது.

அங்குள்ள நிலங்களை சீராக்கி, செப்பனிட்டு, அவற்றில் தானியங்களை உற்பத்தி செய்வது என்பது சாதாரண விவசாயி செய்யக்கூடிய ஒரு செயலன்று. நிலங்கள் வரண்டும், எங்கு நோக்கினும் புதர்களும் மண்டிக்கிடந்தன. டிராக்டர்களைக் கொண்டு புதர்களை அப்புறப்படுத்தி, நிலத்தை நான்கைந்து முறை உழுதால்தான் அதில் வேளாண்மையைத் தொடங்க முடியும்.

### துன்புற்றோருக்கு துணிவு பிறந்தது

கடந்த இரு வரட்சிகளாலும் துன்புற்ற விவசாயிகளிடம்,போதிய மூலதனமோ, பொறுமையோ இல்லை. ஆனால் ஊராட்சி ஒன்றியம் எல்லா உதவிகளையும் அளிக்க முன்வரவே விவசாயிகளுக்கு ஊக்கம் பிறந்தது. தங்களால் தனிப்பட்ட முறையில் சாகுபடி செய்ய நிதி வசதியற்றவர்கள், ஒன்றியத்துடன் சேர்ந்து உழைக்க முன்வந்தனர்; அவர்களிடம் தான் மதிப்பிற்கரிய உழைப்புச் சக்தி மலிந்து கிடக்கிறதே! திரு காலுமில் என்பவர் பசுமையான கோதுமை பயிர்களைச் சுட்டிக்காட்டி, "ஊராட்சி ஒன்றியம் தானே முன்னின்று உற்சாகமூட்டி, ஆதரவு தந்திராவிட்டால், இந்த பயிரைக் காண முடியுமா?" என்று மகிழ்ச்சியுடன்

[அடுத்த பக்கம்]





[முன் பக்கத் தொடர்ச்சி]

கூறினார். அவரது கண்களிலே நன்றியுணர்வு தெளிவாகத் தெரிந்தது.

சென்ற ஆண்டு, 824 ஏக்கர்களில் ஊராட்சி ஒன்றியம் விவசாயத்தை மேற்கொண்டது. இந்த ஆண்டின் நீண்ட பருவக் கால பயிரில், சாகுபடி இரண்டு மடங்காகப் பெருகியது. மொத்தமுள்ள 1,600 ஏக்கர்களிலே, சுமார் 1,200 ஏக்கர்களில் கோதுமை, பார்லியும், 200 ஏக்கர்களில் காய்கறிகளும் பயிரிடப்படுகின்றன. இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, மூன்று டிராக்டர்கள், 45 பம்பு செட்டுகள், மற்றும் சிறு சிறு கருவிகளை ஊராட்சி ஒன்றியம் விலைக்கு வாங்கியது. மேலும் வாய்க்கால்கள் வெட்டுதல், கிணறுகள் தோண்டுதல், சிறிய நீர்ப்பாசன வசதிகள் ஏற்படுத்துதல் போன்றவற்றிற்காக ரூ. 3·30 லட்சம் செலவழிக்கப்பட்டது. சம்பளம், எண்ணெய், விதைகள், கலவையுரம், ரசாயன உரம் போன்றவற்றில் சுமார் 60 லட்சம் செலவாயிற்று.

ஊராட்சி ஒன்றியத்திற்கு கிடைத்த வருவாய் ரூ. 9 லட்சம் என மதிப்பிடப்பட்டுள்ளது. காய்கறி விற்பனை மூலம் சென்ற ஆண்டு 1.95 லட்சம் வருவாய் கிடைத்தது; இந்த ஆண்டு கோதுமைப் பயிர் மூலம் ரூ. 1·50 லட்சமும் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. தரகுகளின் மூலம் கிடைக்கும் ரூ. 60 ஆயிரத்தையும் சேர்த்து ரூ. 2.60 லட்சம் மொத்தமாக இலாபம் கிடைக்குமென எதிர் பார்க்கப்படுகிறது.

"ஊராட்சிக்கு ஏற்பட்ட லாப நஷ்டங்களை மட்டும் கணக்கெடுத்துப் பார்ப்பதில் எவ்வித பயனும் இல்லை. ஊராட்சியின் பெருஞ் செயலை, அங்கு வருங்காலத்தில் ஏற்படவிருக்கும் கூடுதல் உணவு உற்பத்தியை கருத்தில் கொண்டு இதை ஆராய வேண்டும்" என்று கூறுகிறார், இத்திட்டத்தின் அதிகாரி. "தேசிய நெருக்கடி காலத்தில், இந்த ஒன்றியம் 30,000 மணங்கு அதிக உணவு உற்பத்தி செய்ததை ஒரு சாதனையாகவே கொள்ளலாம்" என்று மேலும் கூறினார் அவர்.

பனாரஸ் இந்து பல்கலைக் கழகத்திலிருந்து அரை பர்லாங் தூரத்திலிருக்கிறது, பகவான்பூர் என்ற ஒரு சிறிய கிராமம். நாடு விடுதலையடைவதற்கு முன் அந்த கிராமம் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே இருந்தது; நிலமும் வளமுடையதாக இல்லை. ஆனால் விவசாயமோ அவர்களின் முக்கியத் தொழிலாக இருந்தது. பாசனத்திற்கு போதிய வாய்ப்புகளும், வசதிகளும் இல்லை. வெள்ளம் அடிக்கடி பெருக்கெடுத்து, வயல்களை நாசம் செய்தது. இதனால் விவசாயிகள் மனங்குன்றி, செயலற்றவர்களாகி விட்டனர். ஒவ்வொரு நாளும் அவர்களுக்கு ஒரு யுகமாகக் கழிந்தது.

ஆனால் சமுதாய நலத்திட்டம் அங்கு செயல்படத் தொடங்கியவுடன் தான் வாழ்க்கையிலே ஏதோ ஒரு பொருள் இருப்பதாக அவர்கள் எண்ணத் தலைப்பட்டனர். திட்டங்கள், அவற்றை நிறைவேற்ற திறமை மிக்க வளர்ச்சி அதிகாரிகளின் உழைப்பால், அக்கிராமம் மிகுந்த முன்னேற்றத்தை அடைந்தது.

### சீரமைப்புப் பணி

பகவான்பூர் மக்கள் தொகை 1,430 மட்டுமே. இதில் பெரும்பான்மையோர் இந்துக்கள்; படித்தவர்கள் 14 சதவீதம். அறியாமையை அகற்றி, வாழ்க்கையை சீரமைத்துக் கொள்வதற்கென முதியோர் கல்விக்கூடங்கள், ஆங்காங்கே கிராமத்தில் இயங்குகின்றன; இது நல்ல பலனையும் தந்துள்ளது.

ஆங்கில, இந்தி நாளிதழ்களில் பெரும்பாலானவை இங்கு தருவிக்கப்படுகின்றன. வேளாண்மைக்கு உதவி புரியும் தகவல் கொண்ட செய்திக் குறிப்புகள் இங்கு வந்தவண்ணமிருக்கின்றன. ஒரு சிறிய நூலகத்தை ஏற்படுத்தும் முயற்சி தீவிரமாக நடைபெற்று வருகிறது. 'டிரான்சிஸ்டர்' களையும் வானொலிப் பெட்டிகளையும் கடந்த பத்தாண்டுகள் வரை அறியாதிருந்த அவர்களுக்கு, அவை இன்று இன்றியமையாதவையாகிவிட்டன.

ரசாயன உரம், கடன்கள் வழங்குவதற்கென ஒரு சேவைக் கூட்டுறவுச் சங்கம் இருக்கிறது, இது 1964-ம் ஆண்டு பிப்ரவரி 19-ம் நாளன்று பதிவு செய்யப்பெற்றது. ரூ. 15,878·96 மூலதனத்துடன் 155 உறுப்பினர்களால் இது நடத்தப்படுகிறது.

### பெருகிவரும் ஆர்வம்

இரண்டு டீசல் பொறிகளை ரூ. 8,000 செலவில் வட்டாரம் வாங்கி, அவற்றை கிராமத்திற்கு அளித்துள்ளது. இவற்றினுதவியால் வயல்களுக்கு பாசனம் கிடைக்கிறது; 35 டன்கள் இரசாயன உரம் விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது. இரண்டு செயல் விளக்கப் பண்ணைகள் ஏற்படுத்தப்பட்டு, அவற்றின் மூலம் கிராம வாசிகளுக்கு நவீன விவசாய முறைகள் விளக்கப்படுகின்றன. பொறுக்கு விதைகள், உரங்கள், பூச்சி மருந்துகள் ஆகியவற்றிற்கு நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது. தீவிர உழவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் வளர்ந்துக்கொண்டேயிருக்கிறது.

விவசாயத்தையே நம்பி வாழ்ந்த மக்கள் பிற தொழில்களிலும் தங்கள் கவனத்தை செலுத்த முனைந்துள்ளனர். வளர்ச்சிக்கு ஒரு எடுத்துக் காட்டாகும். தற்போது 60 சதவீத மக்களே விவசாயம் செய்கின்றனர். எஞ்சியவர்கள், வணிகம், போக்குவரத்து, கைத்தொழில்கள் போன்ற இன்னபிற தொழில்களில் ஈடுபடுவோராயினர்.

### புதிய வாழ்க்கை, புதிய கிராமம்

மக்களின் வாழ்க்கையில் ஒரு புதிய அத்தியாயம் தொடங்கியுள்ளது. பரம்பரைத் தொழிலையும், சொற்பத் தேவைகளைக் கொண்டே வாழ்ந்த வாழ்க்கையை அவர்கள் வெறுக்கத் தலைப்பட்டுவிட்டனர். குழந்தைகளுக்கு கல்வி, தீவிர விவசாயம், கடனில்லா வாழ்க்கை, நல்ல வீட்டு வசதி போன்றவற்றை பெற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டுகின்றனர். வாழ்க்கையில் முன்னேறி, தம் சந்ததியினருக்கு ஓர் அழகான பகவான்பூரை விட்டுச் செல்ல அவர்கள் தங்களை அர்ப்பணித்துக்கொண்டுள்ளனர்.

# புதிய வாழ்க்கை ....

"திராட்சை பயிர் செய்யும் முறையை நேரில் சென்று அறிந்துக் கொள்ள ஒரு விவசாயக் குழுவை மகாராஷ்டிரம், ஆந்திர மாநிலங்களுக்கு அனுப்ப இமாசல மாநில அரசு திட்டமிட்டு, அக்குழுவில் என்னையும் ஒருவனாகத் தேர்ந்தெடுத்தபோது, மற்றவர்களெல்லாம் என்னை வியப்போடு நோக்கினார்கள்" என்கிறார் ரானுராய் சிங். இவர் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுத்து தன்னையும் குழுவில் சேர்த்துக் கொண்டார் என்றும் கூட சிலர் கூறத் தயங்கவில்லை. ஆனால் என்னுடைய திராட்சைத் தோட்டத்தை கண்ட அவர்கள், "தகுதியானவரைத்தான் அரசு அம் மாநிலங்களுக்கு அனுப்பியிருந்தது" என்பதை ஒப்புக்கொள்கின்றனர் என்றார் திரு சிங்.

# பயிற்சியின் பயன்

திராட்சை வளர்ப்பதற்கென்றே பிறந்தவர் ரானு ராய் சிங். இமாசலப் பிரதேசத்திலுள்ள கங்கராவில் அவரை அறியாதார் யாருமில்லை. 1926-ம் ஆண்டில் பிறந்த அவர், 1951-ம் ஆண்டில் 'கும்மர்' என்ற ஊராட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 1960-ம் ஆண்டு வரை அப்பதவியை அவர் தொடர்ந்து வகித்து வந்தார். அதே ஆண்டில் அவர் விவசாயத்தைத் தொடங்கிய போது, "விவசாய சேவைக் கூட்டுறவுச் சங்கத்"திற்கு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். மகாராஷ்டிரம், ஆந்திர மாநிலங்களுக்குச் சென்று திராட்சை வளர்ப்பு முறையை நேரில் கண்டறிந்து வர, ஓர் விவசாயக் குழு ஒன்றை மாநில அரசு அனுப்ப திட்டமிடுகையில், திரு சிங்கும் அதில் ஒருவராக சேர்த்துக் கொள்ளப்பட்டார்.

1964-ம் ஆண்டில் அக்குழு இந்த இரண்டு மாநிலங்களுக்கும் சென்றது.

### பெருகிவரும் உற்பத்தி

சுற்றுலாவிலிருந்து திரும்பிய அவர், திராட்சையே பயிரிட்டு அதில் மிகு விளைச்சலை பெறவேண்டுமென்று தீர்மானித்துவிட்டார். முதலில் 40 திராட்சைத் துண்டுகளை அவர் நட்டார். மீண்டும் மகாராஷ்டிரா, ஆந்திரா மாநிலங்களுக்கு அவர் பயிற்சிக்காக அனுப்பப்பட்டார். பயிற்சி பெற்று திரும்பிய அவர், ஓர் ஏக்கர் நிலத்தில் திராட்சையை பயிரிடுவதற்குரிய எல்லா ஏற்பாடுகளையும் செய்து, அதில் முழு மனதுடன் செயல்பட்டார். இந்த ஓர் ஏக்கர் நிலத்தில் அவர் ரூ. 12,000 வரை முதலீடு செய்தார். 1966-ம் ஆண்டில் அவருக்கு 50 மணங்கு மகசூல் கிடைத்தது. அடுத்த ஆண்டில் இது 70 மணங்காக உயர்ந்தது. திராட்சைப் பயிர்கள் அனைத்திலுமிருந்து அவருக்கு கிடைத்த மொத்த உற்பத்தி 160 குவிண்டால் முதல் 200 குவிண்டால் வரை இருக்கக்கூடும்.

### பண்ணை ஒரு புனித இடம்

இந்த மலைப்பாங்கான மாநிலத்தில், திராட்சையைப் பயிரிட்டு, அது ஓர் இலாபகரமான தொழில் என்பதை முதலில் விளக்கிக் காட்டிய பெருமை திரு ரானுசிங்கையேச் சேரும். இம் மாவட்டத்திலுள்ள ஏனைய விவசாயிகள் இவருடைய பண்ணையை ஒரு புனித இடமாகக் கருதுகின்றனர். திராட்சையை பயிரிடும் முறையைக் கற்றுக்கொள்ள ஆந்திராவிற்கோ, மகாராஷ்டிராத்திற்கோ இனி எவரும் செல்ல வேண்டியதில்லை. திரு ரானுவிடம் சென்றால் போதும்; எல்லா ஐயங்களையும் அவர் தீர்த்து வைப்பார். இத்துறையில் அவர் பெரும் சேவை செய்தவராவார். உணவு தானியங்களை உற்பத்தி செய்வதைவிட, பழங்கள், காய்கறிகளை உற்பத்தி செய்வதில், கங்க்ரா மாவட்டம் அதிக கவனம் செலுத்தி பெரும் லாபமடையலாம் என்கிறார் திரு சிங்.

"மக்கள் கஷ்டப்பட்டு உழைக்கக் கூடியவர்கள்; சீதோஷ்ண நிலையும் அதற்கேற்றவாறே இருக்கிறது" என்கிறார் திரு சிங்.

திரு ரானு ராய் சிங் போன்று பல விவசாயிகள் நாட்டில் தோன்றினால், உணவு உற்பத்தியை நாம் பன்முறை அதிகரிக்க முடியும்.

---

"பஞ்சாயத்து ராஜ்" இதழ்களிலிருந்து இடம் பெறுபவை :

பக்கங்கள் : 31 முதல் 38 வரை.

Articles reproduced from 'Panchayati Raj' on pages : 31 to 38.

கிராம நலம் பகுதி-2
GRAMANALAM PART-2

# ஊராட்சி அரசிதழ்
## PANCHAYAT GAZETTE

(இந்தப் பகுதியில் ஊராட்சி, ஊராட்சி வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய அரசு ஆணைகள், குறிப்பாணைகள், விதிகள் முதலியவற்றின் தமிழாக்கம் சுருக்கமாக இடம் பெறுகிறது.)

---

## திருச்சிராப்பள்ளி வானொலி நிலயத்தில் ஊராட்சிகள், ஊராட்சி நிறுவனங்கள் பற்றி விளம்பரம் செய்தல்—செய்திகளைத் தொடர்ந்து அனுப்புதல்—விளக்க ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

## Publicity—Panchayats and Panchayat institutions over All India Radio, Tiruchirappalli Materials—Regular supply—Instructions—Issued.

திருச்சி வானொலி நிலயம், சமீபத்தில் இரண்டு புதிய நிகழ்ச்சிகளைத் தொடங்கியுள்ளது ; "ஊர் ஆட்சி", "பொது மேடை" ஆகிய இவ்விரண்டு நிகழ்ச்சிகளும், கிராம மக்களுக்காக ஏற்பட்டுள்ளன என்பதை ஊராட்சி ஒன்றியத் ஆணையாளர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

2. ஒவ்வொரு செவ்வாய்க்கிழமை மாலையிலும், 6-45 மணி அளவில், ஊராட்சி நிறுவனங்களைப் பற்றி 'ஊர் ஆட்சி' என்ற நிகழ்ச்சி ஒலிபரப்பப்படுகிறது. இந்த நிகழ்ச்சியில் (அ) "வட்டாரச் செய்திகள்" (ஆ) "அறிமுகம்" (இ) "சிற்றுரை" ஆகியவை அடங்கும். "அறிமுகம்" என்ற நிகழ்ச்சியில், ஊராட்சித் தலைவர்கள் வானொலி வாயிலாக, நேயர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கப்படுதலும், 'சிற்றுரை' நிகழ்ச்சியில், ஊராட்சி நிறுவனங்களைப் பற்றிய சுவையான குறிப்புகளும் அடங்கும்.

3. ஊராட்சி நிறுவனங்களைக் கருத்திற்கொண்டு, பாமரர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணும் முறையில், இந்தப் புதிய நிகழ்ச்சிகள் அமைந்திருப்பதால், ஊராட்சிகளும் ஊராட்சி ஒன்றியங்களும் இந்தப் புதிய நிகழ்ச்சியில் முக்கிய பங்கு பெறுவது அவசியமாகும்.

4. எனவே, ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள், தங்களுடைய ஒன்றியத்தில், கிராம வளர்ச்சி திட்டங்களைப் பற்றி—மேற்காணும் நிகழ்ச்சிகளுக்காக—தனிச் சிறப்பு உடைய நிகழ்ச்சிகள் கொண்ட விவரத்தை, தொடர்ந்து திருச்சி வானொலி நிலய இயக்குநருக்கு கட்டுரைகள் வடிவில் அனுப்புவதோடு, அதன் ஒரு நகலை "ஆசிரியர் 'கிராம நலம்' கோட்டை, சென்னை-9" என்ற முகவரிக்கு அனுப்பினால், அது பற்றிய நிகழ்ச்சிகளை அவர் அறிவதற்கும், மேல் நடவடிக்கை எடுப்பதற்கும், மற்றும் பிற மாநிலங்களில் சிறப்பாக விளம்பரம் செய்வதற்கும் உதவியாக இருக்கும் என்று ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

5. ஊராட்சி ஒன்றிய ஆணையர்களில் மிகச் சிலரே, கிராம வளர்ச்சி திட்டத்தில் அடைந்துள்ள சாதனைகளைப் பற்றி அறிக்கைகள் அனுப்பி வருகிறார்கள். ஊராட்சி ஒன்றிய ஆணையர்களின் பெரும்பாலோர், மேற்கூறிய நிகழ்ச்சிகளைப் பற்றிய செய்திகளை அனுப்பாததால், கிராமப் புறங்களில் மேற்படி திட்டங்கள் பற்றிய விளம்பரம் இல்லாமல் மிகவும் பின்தங்கிய நிலையில் இருக்கிறது. ஆகையால், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் இத் துறையில் தங்களது தனி ஆர்வத்தை செலுத்தி, குறித்த காலத்தில், அவை பற்றிய அறிக்கைகளை அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

6. ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் அனுப்பி வைக்கும் அறிக்கைகள், கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தில் விரிவாக மறு பரிசீலனை செய்யப்படும்; ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் இந்த அறிக்கைகளை அனுப்பத் தவறுவது கடுமையான நடவடிக்கை எடுக்கக் காரணமாக அமையும்.

* * *

(கிராம வளர்ச்சி இயக்குநரின் 1967-ம் ஆண்டு டிசம்பர் 29-ம் நாளிட்ட குறிப்பாணை எண் 214939-ன் சுருக்கம்.)

* * *

## உருவப்படங்கள்—ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியக் குழுக்கள் மற்றும் அவற்றால் நடத்தப்படுகின்ற நிறுவனங்களில் திருவள்ளுவர் திருவுருவப் படத்தை அமைத்தல்.

## Portraits—Panchayats and Panchayat Union Councils and institutions run by them—Installation of portraits of Tiruvalluvar.

திருவள்ளுவர் திருவுருவப் படத்தை அமைக்க விரும்பும் ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியக் குழுக்களும் ஓவியர் திரு கே. ஆர். வேணுகோபால் சர்மா அவர்கள் வரைந்த திருவள்ளுவர் திருவுருவப் படத்தை வாங்கலாம் என்று கிராம வளர்ச்சி இயக்குநருக்கு தெரிவிக்கப்படுகிறது. இது பற்றி சம்பந்தப்பட்ட அனைவருக்கும் ஒரு சுற்றறிக்கை அனுப்பிவைக்கும்படி கிராம வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

2. விற்பனைக்குத் தயாராக உள்ள திருவுருவப் படங்களின் அளவு, அவற்றின் விற்பனை விலை, மற்றும் எந்த வியாபாரியிடமிருந்து அவற்றைப் பெறலாம் என்ற விவரங்கள், இக் குறிப்பாணையின் இணைப்பில் தரப்பட்டுள்ளன.

### இணைப்பு

திருவுருவப் படத்தின் விற்பனை விலை—ரூபாய் 6 (ரூபாய் ஆறு மட்டும்).

திருவுருவப் படத்தின் அளவு—29" × 19"

அனுமதிக்கப்பட்ட விற்பனையாளர்கள் என்று ஓவியரால் தற்போது நியமிக்கப்பட்டிருக்கும் விற்பனையாளர்கள்: இவர்களிடமிருந்து திருவுருவப் படங்களைப் பெறலாம்.

| | | |
|---|---|---|
| 1. சென்னை மாநகர், வடஆர்க்காடு, தென் ஆர்க்காடு, செங்கற்பட்டு, சேலம், தர்மபுரி மாவட்டங்கள். | .. | லக்ஷ்மி ஸ்டோர்ஸ், 68, இராஜா தெரு, வாலாசாபாத் மற்றும் நெ. 2/27, பிராட்வே, சென்னை–1. |
| 2. கோயம்புத்தூர், நீலகிரி மாவட்டங்கள். | .. | ஸ்ரீ புவனா என்டர்பிரைசஸ், நெ. 85, இராமசந்திரா ரோடு, ஆர். எஸ். புரம், கோயம்புத்தூர்-2. |
| 3. மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்கள். | .. | வி. எம். நாராயண நாடார் அன்டு சன்ஸ் 37, அம்மன் சன்னதி, மதுரை–1. |
| 4. திருச்சி, தஞ்சாவூர், திருநெல்வேலி, கன்னியாகுமரி மாவட்டங்கள். | .. | கனி அன்டு சன்ஸ், நெடுஞ்சாலை, திருநெல்வேலி சந்திப்பு–1. |

• • •

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967–ம் ஆண்டு டிசம்பர் 4–ம் நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 130866–ன் சுருக்கம்)

* * *

## கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை—தந்திச் செய்திகளுக்கு சுருக்க முகவரி

## Rural Development and Local Administration Department—Abbreviated telegraphic address—Intimation of.

கீழ்க்காணும் சுருக்கமான தந்தி முகவரிகளை கைவிடும்படி ஆணையிடப்படுகிறது.

| வரிசை எண். | தந்திச் சுருக்க முகவரி. | முகவரிக்குரிய பதவிப் பெயர். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | 'காம்ஜெட்' (Comjet) | இணை அபிவிருத்தி ஆணையாளர், மற்றும் அரசு இணைச் செயலாளர், கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை, சென்னை-9. |
| 2. | 'விக்காஸ்' (Vikas) | அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் அரசுச் செயலாளர், கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை, சென்னை-9. |

2. கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் உதவி செயலாளர் பதவிக்குப் பதிவு செய்யப்பட்டிருந்த "டெவலப்மெண்ட்" (Development) என்ற சுருக்கமான தந்திச் சொல், சென்னை-9, செயின்ட் ஜார்ஜ் கோட்டையில் உள்ள, கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் அரசுச் செயலாளர் பதவிக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளது. எனவே, கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறைக்கு தந்தி அனுப்புவோர், மேற்கூறிய மாற்றத்தைக் கவனித்து, புதிய தந்தி முகவரியான "டெவலப்மெண்ட்" (Development) என்ற முகவரியை பின்பற்றும்படி சம்பந்தப்பட்ட அனைவரும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 27-ம் நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 103265-ன் சுருக்கம்).



## சமுதாய வளர்ச்சித் திட்டம் அலுவலக நடைமுறை—ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களைச் சோதித்தல்—வினாப்பட்டியல்—திருத்தம்—வெளியிடப்படுகிறது

## Community Development Programme—Office Procedure—Inspection of Panchayat Union Offices—Questionnaire—Amendment—Issued.

கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1966-ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 2-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1894-ல் நிர்ணயிக்கப்பட்ட வினாப்பட்டியலுக்கு, கீழ்க்கண்ட திருத்தம் வெளியிடப்படுகிறது.

### திருத்தம்

ஆணையின் இணைப்பிலே பிரிவு 111-ல் உள்ள, வளர்ச்சித் திட்டங்களில் "போக்குவரத்து" என்ற தலைப்பின் கீழ் உள்ள "கிராமப் பணிகள் திட்டத்தின் கீழ் தாழ்த்தப்பட்டோரின் நன்மைக்காக ஒட்டிய வேலைகளுக்கென தனியே 20 சதவீதம் ஒதுக்கப்பட்டுள்ளதா?" என்ற கேள்விக்கு மாறாக, கீழ்க்கண்டவற்றை சேர்த்துக்கொள்ள வேண்டும்.

### தாழ்த்தப்பட்டோர் நலம்

1. கிராமப் பணிகள் திட்டத்திலுள்ள நிதி ஒதுக்கீடு எவ்வளவு ?
2. தாழ்த்தப்பட்டோரின் நன்மைக்கென எத்தனைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன ?
3. தாழ்த்தப்பட்டோரின் நன்மைக்கென அனுமதிக்கப்பட்ட நன்கொடைத் தொகை எவ்வளவு ?
4. நன்கொடைத் தொகையைக் கோராதிருப்பின், அதற்குரிய காரணங்கள் ?
5. தாழ்த்தப்பட்டோருக்குரிய பணிகளுக்காக, கிராமப் பணிகள் திட்டத்திலிருந்து பெறப்பட்ட தொகை எவ்வளவு ?

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967-ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 30-ம் நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 27809–ன் சுருக்கம்).

## சைக்கிள்கள் வாங்குவதற்கு கிராமசேவக்குகள் முன்பணம் பெறுதல்—இழப்பீட்டு பத்திரத்தை 1-1-1967-க்கு பிறகும் நீடித்தல்—ஆணையிடப்படுகிறது

## Advances—Drawal of advances for the purchase of cycles by Gramasevaks—Indemnity Bond prescribed in G.O. Ms. No. 3100 Public (R.D.P.) dated 18-11-58—Continuance beyond 1-1-1967—Ordered.

கிராமசேவக்குகள் சைக்கிள் வாங்குவதற்கென முன் பணம் பெறுவதற்காக தமிழக நிதிச் சட்ட தொகுப்பு நூல் 1, பிரிவு 227 (2) (1)-ல் [Madras Financial Code, Volume 1, Article 227 (2) (1)] உள்ள விதித்துறைகளைத் (Provisions) தளர்த்தி, பொதுத் துறையின் (கிராம வளர்ச்சித் திட்டங்கள்) 1958-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 18-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 3100–ல் ஆணையிடப்பட்டுள்ளது. அந்த ஆணையின் இணைப்பிலுள்ள படிவத்தில், சொத்து மதிப்புடைய ஒருவரின் உறுதிமொழியுடன், கிராமசேவக்குகள் உடன்பாடு பத்திரம் எழுதிக் கொடுக்கவேண்டும். கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1960-ம் ஆண்டு நவம்பர் 29-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1012-ல், இந்தச் சலுகையை, அவ்வாணையை பிறப்பித்த நாளிலிருந்து, மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு நீடித்து ஆணை பிறப்பிக்கப்பட்டது. அடுத்து, கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1963-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 2637-ல், மேற்குறிப்பிட்ட சலுகைகளை மீண்டும் மூன்று ஆண்டுகளுக்கு அதாவது 1963-ம் ஆண்டு டிசம்பர் 18-ம் நாள் முதல் 1966-ம் ஆண்டு டிசம்பர் 31-ம் நாள் முடிய நீடித்து ஆணை பிறப்பிக்கப்பட்டது.

2. 1966–ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 26-ம் நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 150763-ல், மேற்குறிப்பிடப்பட்டுள்ள சலுகை நீடிப்பது பற்றி, தமது கருத்தைத் தெரிவிக்கும்படி, கிராம வளர்ச்சி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்பட்டார். மாவட்ட ஆட்சித் தலைவர்களில் பெரும்பாலோரும், தமிழக கிராமசேவக்குகள் சங்கத் தலைவரும் இச்சலுகையை நீடிக்கவேண்டும் என்று விரும்புவதாகக் கூறி, கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1963-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 2637-ல் நீடிக்கப்பட்ட இச்சலுகையை, மேலும்

இரண்டு ஆண்டுகளுக்கு—அதாவது 1967-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ம் நாள் முதல் 1968-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் முடிய நீடிக்கவேண்டும் என்று கிராம வளர்ச்சி இயக்குநர் பரிந்துரைத்துள்ளார்.

3. மேற்காணும் பத்தி 1-ல் அளிக்கப்பட்டுள்ள சலுகையை நீடிக்கும் அவசியம் பற்றி அரசு பரிசீலனை செய்தது. அதற்கேற்ப, கிராம வளர்ச்சி இயக்குநரின் பரிந்துரையை அரசு ஏற்றுக்கொண்டு, பொதுத் (கிராம வளர்ச்சித் திட்டங்கள்) துறையின் 1958-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 18-ம் நாளிட்ட அரசு ஆணையில், கிராமசேவக்குகள் சைக்கிள்கள் பெற அனுமதிக்கப்பட்டிருக்கும் சலுகைகளும், அதற்கென நிர்ணயிக்கப்பட்ட இழப்பீட்டு பத்திர (Indemnity Bond) படிவமும்—கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1963-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 16-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 2637-ல் இறுதியாக நீடிக்கப்பட்டவாறு—1967-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 1-ம் நாள் முதல், 1968-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 31-ம் நாள் வரை மேலும் நீடிக்கப்படவேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 2ம் நாளிட்ட அரசு ஆணை எண் 2230ன் சுருக்கம்).

## சாலைகளைப் பராமரித்தல்—விளக்க ஆணைகள்—பிறப்பிக்கப்படுகின்றன

## Roads—Maintenance of roads—Instructions—Issued.

பல்வேறு ஊராட்சி ஒன்றியங்களை கிராம வளர்ச்சி இயக்குநர் சோதனையிடுகையில், அவ்வொன்றியங்களில் ஏற்கனவே போடப்பட்டுள்ள சாலைகளெல்லாம் சரிவர பராமரிக்கப்படவில்லை என்பது கவனிக்கப்பட்டுள்ளது.

1958-ம் ஆண்டு தமிழக ஊராட்சிகள் சட்டத்திலுள்ள பிரிவு 63 (a)-ன்படி., கிராமம் அல்லது நகரத்தின் தேவைகளுக்கு ஏற்ப—அதாவது கிராமம் அல்லது நகரத்திலுள்ள பொதுச் சாலைகள் அனைத்தும்—அதன் ஆட்சி வரம்பிலுள்ள சாலைகளை செப்பனிடவும், பராமரிக்கவும், கிராமம் அல்லது நகரம், அதன் நிதி வரம்பிற்குள் ஒரு நிதியை ஒதுக்க வேண்டும். (இச் சாலைகளில் தேசிய நெடுஞ் சாலைகள், மாநில நெடுஞ்சாலைகள், மாவட்ட பெருஞ்சாலைகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய சாலைகள் அடங்கா.)

அதைப்போன்றே, 1958-ம் ஆண்டு தமிழக ஊராட்சிகள் சட்டத்திலுள்ள பிரிவு 65 (a)-ன் படி., ஊராட்சி ஒன்றியச் சாலைகள் என்று பிரிக்கப்பட்ட பொதுச் சாலைகள் அனைத்தையும் செப்பனிட, மற்றும் அவற்றைப் பராமரிக்கவும் ஒன்றியங்கள், அதன் நிதி வரம்பிற்குள் போதிய நிதியை ஒதுக்க வேண்டும்.

ஏற்கனவேயே போடப்பட்டுள்ள இணைப்புச் சாலைகள், கிராமச் சாலைகள் மற்றும் ஒன்றியச் சாலைகளை, ஊராட்சி நிர்வாகிகளும், ஊராட்சி ஒன்றிய மன்றங்களும் நல்ல நிலையில் பராமரிக்க வேண்டும். சாலைகளில் முளைத்துள்ள புற்பூண்டுகளையாவது அகற்றி, சிறிய பழுதுகளையாவது அவை செப்பனிடுதல் வேண்டும். மேற்கண்ட விளக்க ஆணைகளை பின்பற்றுமாறு ஒன்றிய ஆணையாளர்கள் அனைவரும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தமது அலுவல் வரம்பிலுள்ள ஊராட்சி நிர்வாகிகளுக்கு, இதன் நகல்களை அனுப்பி, இதிலுள்ள விளக்க ஆணைகளெல்லாம் தவறாது பின்பற்றப்படுவதை, அவர்கள் மேலும் கவனித்துக் கொள்ள வேண்டும்.

* * *

(கிராம வளர்ச்சி இயக்குநரின் 1967ம் ஆண்டு டிசம்பர் 1-ம் நாளிட்ட குறிப்பாணை எண் 132423/67-ன் சுருக்கம்.)

## ஒவ்வொரு ஆண்டிலும் முதல் அரையாண்டில், பல துறைகளின் பணிகளைப் பற்றி பிரசுரிக்கப்படும் ஆய்வுரை கைவிடப்படும்.

## Books and Publications—Publication of short review of activities of various departments for first half-year of each year—Discontinued.

பொதுத் துறையின் 1956–ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 23-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 3939-ல் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணைகளின்படி., ஒவ்வொரு துறையின் சாதனைகள், மற்றும் அதன் பணிகளைப்பற்றி ஒரு சிறு அறிக்கையைத் தயாரித்து, அதை அச்சிட்டு சட்டமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது. பிறகு ஏற்பட்ட தேசிய நெருக்கடி நிலையையொட்டி செலவினங்களில் சிக்கனத்தைக் கடைப்பிடிக்கவேண்டிய தேவையை முன்னிட்டு, அரையாண்டு அறிக்கைகளை அச்சிட்டு சட்டமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு மாறாக, சில 'ரோனியோ' (Roneo)



பிரதிகளை எடுத்து, அவற்றில் 10 பிரதிகளை சட்டமன்றத்தின் நூலகத்தின் வைத்தால் போதுமானது என்று பொதுத் துறையின் 1963-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 4-ந் நாளிட்ட அரசு ஆணை எண் 23-ல் ஆணையிடப்பட்டது. இந்த அரையாண்டு அறிக்கைகளைத் தொடர்ந்து தயாரிப்பதன் அவசியம் பற்றி, 'சிக்கனம் மற்றும் நிர்வாக சீரமைப்பு உயர் மட்டக் குழு' (High Power Committee on Economy and Administrative Reorganisation) பரிசீலனை செய்தது. வெவ்வேறு துறைகளின் அலுவல்களைப்பற்றி, கீழ்க்காணும் வெளியீடுகள் வாயிலாக, சட்டமன்ற உறுப்பினர்கள் அறிந்துகொள்கிறார்கள் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அவையாவன :

1. சம்பந்தப்பட்ட துறையின் ஆண்டு நிர்வாக அறிக்கை.
2. தமிழக அரசு நிர்வாக அறிக்கை.
3. தலையாய நிதி நிலையைப்பற்றி விவாதிக்கும் சட்டமன்றக் கூட்டத்தில் துறையின் பணிகளைப் பற்றிய அறிக்கை.

ஆகவே, ஒவ்வொரு துறையின் நிர்வாகத்தைப் பற்றியும் அரையாண்டு அறிக்கை தயாரித்து வெளியிடுதல், உடனடியாக கைவிடப்படவேண்டும் என்று இதன் வாயிலாக அரசு ஆணையிடுகிறது.

(பொதுத் துறையின் 1967–ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 9–ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1702–ன் சுருக்கம்.)

## முழுவதும் அல்லது பாதி அரசுக் கடன் தொகையைக்கொண்டு கட்டப்பெற்ற வீடுகளை வாடகைக்கு விடுதல்—கூடுதல் வட்டி விகிதம் விதித்தல்—தெளிவுபடுத்தி ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

## Loans and Advances—House building advances—Renting out of houses constructed partly or wholly out of Government loan—Levy of enhanced rate of interest—Orders—Clarification—Issued.

அரசு அலுவலர்கள், தங்களது வீடுகளை வாடகைக்கு விடுவதில் இலாபம் பெறவில்லையென்றால், அவர்களிடமிருந்து சாதாரண வட்டி விகிதமே வசூலிக்கப்பட வேண்டும் என்பதும், இவ்வாறான நேர்வுகளிலெல்லாம், அவர்கள் வசூலிக்கும் சரியான வாடகைத் தொகையைக் கொண்டு கணக்கிடுதல் வேண்டும் என்பதும் தொழில், தொழிலாளர் நலன், வீட்டு வசதித் துறையின் 1966-ம் ஆண்டு ஜூலை 11-ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 2918-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் பலவற்றில் ஒன்றாகும். ஓர் அரசு அலுவலர் இலாபம் அடைகிறாரா, இல்லையா என்பது பற்றி தீர்மானிக்க, ஒரு நியதி அல்லது ஓர் அடிப்படைக் கொள்கையை ஏற்படுத்துவது பற்றி அரசு ஆராய்ந்தது. வாடகைக்கு விடப்படும் வீடுகள் அனைத்திற்கும் பொருந்தும்படியாக, சரியான, ஒரு சீரான கொள்கை ஏற்படுத்துவது சிரமமாக இருக்கும் என்று அரசு கருதுகிறது. ஏனெனில், அரசு கடன் மற்றும், அரசு ஊழியர்களின் முதலீடுகளில் வேறுபாடுகள் இருப்பது தவிர, அந்த முதலீடுகளை அவர்கள் அடைந்தது பற்றியும் விவரமாக ஆராய வேண்டியுள்ளது. சான்றாக, ஓர் அரசு ஊழியர் ரூ. 45,000 அல்லது ரூ.50,000 மதிப்பில் ஒரு கட்டிடத்தைக் கட்டி, அதற்கு திங்கள் வாடகையாக ரூ. 750 அல்லது ரூ. 1,000 அடையும்போது தனக்கு சாதாரண வட்டி விகிதமே அனுமதிக்கவேண்டுமென்று வேண்டிக் கொள்ள முடியாது. ஏனெனில் உயர் வட்டி விகிதமான 9 சத. வீதத்தை அவர் செலுத்திய பின்பும் அவர் நிச்சயமாக இலாபம் அடைகிறார். இவ்வாறு இல்லாமல் கீழ் நிலையில் உள்ள அரசு அலுவலர்கள், தங்களது பொருளாதாரத் துன்பங்களின் விளைவாக தங்களுடைய சொந்த வீடுகளில் வசிக்க முடியாமல், அவற்றை வாடகைக்கு விடும் நிலையில் இருக்கலாம். அப்படித் துன்புறுபவர்கள், தங்களது இன்னல்களை நிரூபிக்கையில், அவர்கள் மீது அரசு அனுதாபங்கொண்டு அதை கவனிக்கும். எதனால் இலாபம் ஏற்படுகிறது என்பது குறித்து ஆராய்ந்து, சரியான கொள்கை ஏற்படுத்துவது அவசியமில்லாதபோது, தனிப்பட்டவர்களின் விஷயத்தை, தகுதி அடிப்படையில் ஆய்ந்து, முடிவு எடுக்க வேண்டும் என்று துறைத் தலைவர்களுக்கு அறிவிக்கப்படுகிறது.

(தொழில்கள், தொழிலாளர்கள் நலன், வீட்டு வசதித்துறையின் 1967–ம் ஆண்டு ஜூலை திங்கள் 18–ம் நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 33792–ன் சுருக்கம்.)

# மகிழ்ச்சி தரும் செய்தி!

தமிழ்நாட்டின் மூலைமுடுக்குகளில் உள்ள எல்லாக் கிராமங்களிலும் பணியாற்றுகின்ற ஊராட்சிகள், நூல் நிலையங்கள், செய்தி நிலையங்கள், பள்ளிக்கூடங்கள், மகளிர் மன்றங்கள் முதலிய பல்வேறு நிறுவனங்களுக்கெல்லாம் செல்லும் "கிராம நலம்" இதழில், கிராம மக்களுக்குத் தேவையான பொருள்கள் பற்றிய தகவல்களும், கிராமங்களில் தயாராகும் பண்டங்கள் பற்றிய விவரங்களும் விளம்பரங்களாக ஏற்றுக்கொள்ளப்படும். ஏப்ரல் 1968 இதழிலிருந்து "கிராமநலத்"தில் விளம்பரங்கள் வெளியிடுவதென தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

## விளம்பரக் கட்டண விவரம்

| | அவ்வப்போது வெளியிடப்படும் விளம்பரங்களுக்கு. (1) ஒவ்வொரு இதழுக்கும். ரூ. | குத்தகையாக ஒரே இட அள விற்கு [குறைந்தது 12 விளம்பரங்கள்.] (2) ஒவ்வொரு இதழுக்கும். ரூ. |
|---|---|---|
| **இரண்டாவது, மூன்றாவது அட்டைப் பக்கங்கள்—(ஒரே வண்ணத்தில்)** | | |
| முழுப் பக்கம் | 420 | 815 |
| அரைப் பக்கம் | 215 | 165 |
| **நான்காவது அட்டைப் பக்கம்—(இரண்டு வண்ணங்களில்)** | | |
| முழுப் பக்கம் | 450 | 825 |
| அரைப் பக்கம் | 230 | 170 |
| **உள்பக்கம்—** | | |
| முழுப் பக்கம் | 400 | 300 |
| அரைப் பக்கம் | 210 | 160 |

மேற்கொண்டு விவரங்களுக்குத் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
**மக்கள் தொடர்பு அதிகாரி,**
கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகம்,
**கோட்டை, சென்னை-9.**

---

உலகத் தமிழ் மாநாடு விழா மலர்:

*"குறளகத்தில்" விற்பனைக்குக் கிடைக்கும்.*

உலகத் தமிழ் மாநாடு விழா மலர் இப்பொழுது பொது மக்களுக்கு விற்பனைக்குக் கிடைக்கிறது. தமிழ் அறிஞர்களின் எழுத்தோவியங்களும், கண்ணையும் கருத்தையும் பறிக்கும் வண்ண ஓவியங்களும் அடங்கிய இம்மலரின் தனிப்பிரதி ஒன்றின் விலை ரூ. 30. இம்மலர், சென்னை நேதாஜி சுபாஷ் சந்திரபோஸ் சாலையில், சட்டக் கல்லூரிக்கு எதிரில் அமைந்துள்ள "குறளகத்தில்" விற்பனைக்குக் கிடைக்கும்.

'புகாரில் ஒரு நாள்' பரிசுக் கவிதைகள் அடங்கிய புத்தகமும் கலைக்காட்சி குழுவினர் வெளியிட்டுள்ள கையேடும் "குறளகத்தில்" கிடைக்கும். "புகாரில் ஒரு நாள்" தனிப்பிரதி ஒன்றின் விலை ரூ 1, கையேட்டின் விலை ரூ. 15.

---

### இந்த இதழில்


| | பக்கம் |
|---|---|
| உயரிய பண்பாட்டின் களஞ்சியம்—தமிழ்மொழி | 1 |
| தனக்கென்று உள்ளதை இழக்க தமிழன் ஒருக்காலும் சம்மதிக்கமாட்டான் | 3 |
| விவசாயப் புரட்சிக்கு வித்திட்ட மாநாடு | 6 |
| கிராம நலத் திட்டங்கள் | 9 |
| புகாரில் ஒரு நாள் | 11-14 |
| வரலாறு படைத்திட்ட ஊர்வலம் | 17 |
| தமிழ் வளர்த்த சான்றோர்க்கு சிலையெடுப்பு | 19 |
| காணுதற்கரிய கண்காட்சி | 20 |
| கிராம நலக் கண்காட்சி—அறிவு வளர்க்கும் சாதனமாக அமையட்டும் | 25 |


### அடுத்த இதழில்...


தமிழகத்தில் பனைத்தொழில்

ஏர்முனைவிழா—சட்டத்துறை அமைச்சர் கலந்து கொண்ட சிறப்பு நிகழ்ச்சிகள்

உள்ளத்தைச் சிலிர்க்க வைத்த உலகத் தமிழ் மாநாடு (சிறப்புக் கட்டுரை)

கிராம நூலகம் (கட்டுரைத் தொடர்)


---


வெளியிடுபவர்:
திரு வி. நடராஜன், ஐ. ஏ. எஸ்.

ஆசிரியர்:
திரு எஸ். வேங்கடசாமி, எம். ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras Edited by the Public Relations Officer and published by the Director of Rural Development Madras-9.
Wrapper printed at Vadapalani Press, Madras-26.







# கிராமநலம்

பிப்ரவரி - 1968








இந்திய உலக வர்த்தக
தொழில் பொருட்காட்சி
—திறப்பு விழா —>

திருப்பத்தூர் ஊராட்சி
ஒன்றியம் —ஏர்முனை
விழா



தமிழகத்திற்கு மைசூர்
மாநிலம் 300 மிலியன்
யூனிட் மின்விசை
வழங்கும் . . .




# கிராமநலம்

தமிழக அரசின் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை மாத இதழ்

கதிர் 13 பிப்ரவரி 1968 நெல் 5


## பசி பிணி பகை அற்ற திருநாடு நமது இலட்சியம்.

[மேதகு தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங்]

''உறுபசியும், ஓவாப்பிணியும், செறுபகையும்
சேராது இயல்வது நாடு''

''தமிழக மக்களுக்கு—இளைஞர்களுக்கும், முதியவர்களுக்கும்—ஒளிமிக்க எதிர்காலம் அவர்களை எதிர்நோக்கி நிற்கிறது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன். எல்லாத் துறைகளிலும் சீரான முன்னேற்றம் காண, அமைதியான சூழலும், கட்டுப்பாடான போக்கும் கடினமான உழைப்பும் இன்றியமையாதன என்பதை அவர்கள் உணர்ந்துள்ளனர் என்பதில் எனக்கு ஐயப்பாடில்லை. பெருமைக்குரிய இம்மாநில மக்களனைவரும்—எச்சமயத்தினராயினும், எச்சாதியினராயினும், எம்மொழியினராயினும்—நலமுடன் முன்னேறுவதற்கு வழிவகுக்கும் முறையில், நல்லதொரு சூழ்நிலையைப் பேணி வளர்ப்பதே நமது முயற்சியாக இருத்தல் வேண்டும். நாம் அனைவரும், எந்த அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாயிருப்பினும், வள்ளுவப் பெருந்தகை இயம்பியுள்ளது போன்று, பசியும் பிணியும் பகையும் அற்ற ஒரு இலட்சிய மாநிலமாக நமது மாநிலத்தை உருவாக்க வேண்டுமென்பதுதான், நம் அனைவருடைய குறிக்கோளாகும்.''

தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டு அவையில் மேதகு தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள் 10—2—68 அன்று கூட்ட மன்றத் தொடரினைத் துவக்கி வைத்துப் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். தலைப்பில் உள்ள திருக்குறளை ஆளுநர் அவர்கள் தமிழிலேயே கூறியது, குறிப்பிடத்தக்க அம்சமாகும். தமிழக அரசின் கொள்கையினை ஆளுநர் தன் உரையில் தெளிவாகவும் அழுத்தமாகவும் எடுத்துக்கூறியுள்ளார். அவருடைய உரையின் சாரம் இங்கே தரப்பட்டுள்ளது :—

''அரசும் கூட்டுறவுத் துறையும் வழங்கும் நிதி வசதிகள் தவிர, வேளாண்மை வளர்ச்சிப் பணிகளுக்கு ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் நிதி வசதிகளையும் ஒன்று திரட்டுவது அவசியமாகும். இந்த கருத்தில்தான் ஊராட்சி ஒன்றியங்கள் தங்கள் உபரி நிதிகளைக் கொண்டு டிராக்டர்கள், ஏனைய வேளாண்மைக் கருவிகள்

---

முதல் அட்டைப்படம் : ஆழ்கடல் மீன் பிடிப்புத் திட்டம்—விவரம் 7-ம் பக்கம் பார்க்க.

இரண்டாவது அட்டைப்பட விளக்கம் :

மேலே : இந்திய உலக வர்த்தகத் தொழில் பொருட்காட்சியை, இந்தியக் குடியரசின் துணைத் தலைவர் திரு வி. வி. கிரி அவர்கள் 21-1-68-ல் திறந்து வைத்தார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் விழாவிற்குத் தலைமை வகித்தார்.

நடுவில் : திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்ற ''ஏர்முனை விழாவில்'' மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் திரு எஸ். மாதவன் கலந்து கொண்டார். மாண்புமிகு அமைச்சர் இயந்திரக் கலப்பையை இயக்கும் காட்சியைப் படத்தில் காணலாம். [கட்டுரை : 21-ம் பக்கம் பார்க்கவும்.]

கீழே : தமிழகத்திற்கு மைசூர் மாநிலம், 300 மிலியன் யூனிட்டுகள் மின்விசை வழங்குவதற்கான உடன்பாடு ஒன்று, 22-1-68-ல். கையெழுத்தாயிற்று. திட்டக்குழு உறுப்பினர் திரு ஆர். வெங்கட்ராமன் அவர்களையும், திரு ஆர். திருமலை ஐ.ஏ.எஸ். (பொதுப் பணித்துறைச் செயலாளர்), அவர்களையும் படத்தில் காணலாம்.

## கூட்டுறவுப் பணிச் சீரமைப்பு—

இவற்றை வாங்கி உழவர்களுக்கு எளிய வாடகை விகிதங்களில் கொடுக்க பயன்படுத்திக் கொள்ளலாமென்று அரசாங்கம் ஏற்கெனவே அவைகளுக்கு அனுமதி வழங்கியுள்ளது. இந்தத் திட்டங்களுக்காக அரசாங்கம் செய்துள்ள வசதிகளை இது பெருக்குவதோடு, நவீன வேளாண்மைக் கருவிகளைப் பயன்படுத்தும் வசதிகளை உழவர்களின் வீட்டு வாயிற்படியிலேயே ஏற்படுத்திக் கொடுக்கவும் வகை செய்துள்ளது.



மேதகு தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங்.

**நீர் வளத் திட்டங்கள்**

நமது மாநிலத்தில் உள்ள கூட்டுறவு நிறுவனங்களின் பணியை ஆய்வதற்கென்று ஒரு குழுவினை அமைப்பதற்கான அரசின் செயற்குறிப்புகள் பற்றி என்னுடைய கடந்த உரையில் குறிப்பிட்டிருந்தேன். நிறுவனங்கள் வழங்கும் கடன் உதவியை, இதற்கு முன் பெற்று வந்ததைவிட அதிக அளவில் பெறுவதற்கு அரசு இப்போது முடிவு செய்திருப்பதால் அத்தகைய ஆய்விற்கான தேவை மேலும் பெருகி இருக்கிறது. எனவே நமது மாநிலத்தில் கூட்டுறவு இயக்கத்தின் பணியை ஆய்ந்து செவ்விய வழிகளில் அதனைச் சீர்திருத்துவதற்கும், சீரமைப்பதற்குமான செயற் குறிப்புகளைத் தயாரிப்பதற்காக திரு கே. சந்தானம் அவர்களைத் தலைவராகக் கொண்ட ஒரு குழுவினை நியமிக்க அரசு முடிவு செய்துள்ளது. குறிப்பாக, இக்குழு கூட்டுறவு நிறுவனங்களுக்கு நடக்கும் தேர்தல் குறித்தும், கூட்டுறவு நிறுவனங்களின் அமைப்பு குறித்தும் கூட்டுறவு சட்டத்தின் விதித் துறைகளில் செய்யவேண்டிய மாறுதல்களைப் பற்றியும் விரைந்து இடைக்கால அறிக்கையொன்று அனுப்புமாறு வேண்டப்படும். இக்குழு செய்யவிருக்கிற பரிவுரைகளை அடிப்படையாகக் கொண்டு, கூட்டுறவு நிறுவனங்கள் குறித்துச் செய்யப்படும் சீர்திருத்தங்கள், நமது கிராமப் பொருளாதாரத்தை வளர்ப்பதில் இம் மாநிலத்திலுள்ள கூட்டுறவு இயக்கம் மேலும் பயன் தரும் முறையில் பங்கு பெறுவதற்கு உதவியாய் இருக்கும் என்பதில் எனக்கு ஐயமில்லை.

மிகு பயன் தரும் தானிய ரகத் திட்டமும், உர வகைகளை அதிகமாய் பயன்படுத்தும் திட்டமும், பாசனவசதிகள் நிலையாகக் கிட்டினுல்தான் உரிய பலன்தர முடியும். பெரிய, நடுத்தரப் பாசனத் திட்டங்களின் கீழ், பாசன வசதிகளை விரிவுபடுத்தும்வாய்ப்பு குறைந்திருப்பதால், நிலத்திற்கு அடியிலுள்ள நீர் வளங்களைப் பயன்படுத்தும் திட்டங்களுக்கு அரசாங்கம் முக்கியத்துவம் அளித்திருக்கிறது. கிணறுகள், குழாய்க் கிணறுகள், வடிமுனைக் குழாய்க் கிணறுகள் இவற்றைத் தோண்டுவதற்கான் பெரியதோர் திட்டத்தின் வாயிலாகவும், இறவைப் பாசனத்திற்கு மேலும் மின்சார வசதி அளிக்கும் திட்டத்தின் வாயிலாகவும் மட்டுமே வேளாண்மை உற்பத்தியை பெருமளவில் உயர்த்த முடியும். திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட குறைந்த நிதி வசதிக்குள் இத்தகைய வேலைத்திட்டம் ஒன்றை நிறைவேற்றுவது இயலாதென்பதை உணர்ந்து, 20 கோடி ரூபாய் அளவிற்குச் சிறப்பு உதவி அளிக்குமாறு இந்திய அரசிற்கு எழுதினேம். சிறு பாசனத் திட்டங்களுக்குக் கூடுதலாகச் செலவிடுவதற்கேற்ப, உணவு உற்பத்தி அதிகரிப்பதனுல், பண வீக்கம் ஏற்படாது என்பதை உணர்ந்திருக்கவேண்டியிருப்பினும், இந்திய அரசு நமது வேண்டுகோளை ஓரளவுக்குக் கூட ஏற்கவில்லையென்பது வருந்தத்தக்கதாகும்.

## திரு கே. சந்தானம் தலைமையில் ஆய்வுக் குழு

**உழவர்களுக்குக் கடன் வசதிகள் :**

1965-66-ல் சுமார் 30,000 விசையேற்றங்களுக்கும், 1966-67-ல் 33,000 விசையேற்றங்களுக்கு மட்டுமே மின் வசதி அளிக்கப்பட்டிருக்க, நடப்பு ஆண்டில் கிட்டத்தட்ட 42,000 விசையேற்றங்களுக்கு ஏற்கெனவே மின் வசதி அளிக்கப்பட்டிருக்கிறது. இதுவரை மின் இணைப்பு தரப்பட்டுள்ள விசையேற்றங்களின் எண்ணிக்கை 3·31 லட்ச அளவில் அமைந்துள்ளது. புதிய கிணறுகள் தோண்டுவதற்கும், எண்ணெய்ப் பொறிகளையும், விசையேற்றங்களையும் வாங்குவதற்கும் வேண்டப்படும் கடன்களை வழங்குவதற்கு அரசு தனது நிதி வரம்பிற்கு ஏற்ப முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறது. உழவர்களின் உடன் தேவைகளை முற்றிலும் நிறைவேற்ற வேண்டுமென்ருல், ரிசர்வ் பாங்கி, ஆயுள் காப்புறுதிக் கழகம் (Life Insurance Corporation) வேளாண்மை மறு கடன் உதவிக் கழகம் (Agricultural Refinance Corporation) வர்த்தக வங்கிகள் போன்ற நிறுவனங்கள் இத் திட்டங்களுக்காக அளிக்கும் நிதி வசதிகளை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று அரசு உறுதியாக நம்புகிறது.

## நல்ல, திறமை மிக்க நிர்வாக இயந்திரத்தின் துணைகொண்டு

ஆயினும், இந்த நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் உதவிகளை அரசு பெற இயலாது. இவற்றை மத்திய நில அடைமான வங்கியின் மூலமாகவும், நில அடைமான வங்கிகளின் மூலமாகவும் மட்டுமே பெற முடியும். வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களுக்கு இத்தகைய நிறுவனங்கள் அளிக்கும் கடன் உதவியில் தனக்குரிய பங்கைப் பெறும் வாய்ப்பினை நழுவ விடக்கூடாது என்று அரசாங்கம் கருதுகின்றது. இதற்கென இந்திய அரசாங்கமும், திட்ட ஆணைக்குழுவும் தெரிவித்துள்ளபடி நமது கொள்கையில் மாறுதல் செய்ய வேண்டியுள்ளது. வருகிற ஆண்டில், புதிய கிணறுகளைத் தோண்டுவதற்கும், எண்ணெய்ப் பொறிகளையும் விசையேற்றங்களையும் நிறுவுவதற்கும் தேவைப்படுகிற கடன் உதவி அனைத்தையும் நில அடைமான வங்கிகளின் வாயிலாகவே அரசாங்கம் வழங்கும். முழு அளவில் பணியாளர்களை நியமித்துக்கொண்டு விரைவில் செயல்படவிருக்கிற வேளாண்மைத் தொழில் கழகம் (Agro Industries Corporation) தவணைக் கொள்முதல் அடிப்படையில் (Hire-Purchase terms) விசையேற்றங்களையும், டிராக்டர்களையும் வழங்குவதில் நாட்டம் செலுத்தும்.

## நிலையான, இணக்கமான ஆட்சியின் நலன்களைத் துய்க்க முடிந்தது....

மாநில அரசு மத்திய அரசிடமிருந்து இணை உதவியைப் பெற்று மத்திய நில அடைமான வங்கிகளின் கடன் பத்திரங்களின்மீது, இதற்கு முன் முதலீடு செய்துவந்த அளவைக்காட்டிலும் பெருமளவில் முதலீடு செய்யும். இதனுல் மத்திய நில அடைமான வங்கி, மத்திய அரசாங்கத்தைச் சேர்ந்த கடன் உதவும் நிறுவனங்களிடமிருந்தும் ஏனைய வர்த்தக வங்கிகளிடமிருந்தும் கிடைக்கும் நிதி வசதிகளில் தமக்கு உரிய பங்கினைப் பெறுவதற்கு அரசு வகை செய்யும். வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களுக்குக் கடன் உதவி அளிக்கின்ற இப் புதிய செயல்முறை காரணமாக, கூட்டுறவு நிறுவனங்கள் பெற்றுக்கொள்ளும் கடன் மனுக்கள்மீது நடவடிக்கை எடுத்துக் கொள்வதற்காக அவற்றில் தேவையான பணியாளர்களை நியமிப்பதற்கும், நடைமுறையை எளிதாக்குவதற்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளவேண்டுமென்பதை அரசு உணர்ந்துள்ளது. எனவே, அடுத்த நிதி ஆண்டின் தொடக்கத்திலிருந்து சங்கடம் ஏதுமின்றி இப் புதிய ஏற்பாட்டினைப் பின்பற்றுவதற்கிணங்க, இது குறித்து உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள அரசு கருதுகிறது. கூட்டுறவு நிறுவனங்கள் இவ்வறைகூவலை ஏற்கும் என்றும், உழவர் பெருமக்களுக்கு, குறிப்பாகச் சிறு உழவர்களுக்குச் செவ்விய முறையில் பணியாற்றுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்துகொள்ளும் என்றும் அரசு நம்புகிறது.

உழவர்களுக்கு ரசாயன உர வகைகளை வழங்குவதில் உள்ள இடர்ப்பாடுகளைப்பற்றி கடந்த எனது உரையில் குறிப்பிட்டிருந்தேன். உர வகைகளை வழங்குவதற்கான ஏற்பாடுகளை அரசு கூர்ந்து கவனித்து வந்திருக்கிறது. நமது மாநில உழவர்கள் இப்போது உர வகைகளைப் பயன்படுத்துவதில் மிகுந்த ஊக்கம் காட்டி வருகின்றனர். உர வகைகளின் வெகுமதியைப்பற்றி உழவர்கள் உணர்ந்து வரும் போது உர வகைகளுக்கு மத்திய அரசு கொடுத்துவந்த உதவித் தொகையை நிறுத்தியிருப்பது வருந்தத்தக்கதாகும். நடப்பு ஆண்டில் பயிர்களைக் காப்பதற்கு அரசு எடுத்துக்கொண்ட பல்வேறு ஏற்பாடுகளில், தென் ஆர்க்காடு, வட ஆர்க்காடு, செங்கற்பட்டு, கோவை, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் நெற்பயிருக்கு விமானம் மூலமாக மருந்து தெளிப்பதற்கு மேற்கொண்ட ஏற்பாடுகளைப்பற்றி சிறப்பாகக் குறிப்பிட வேண்டும். இதுகாறும் மேற்கொள்ளாத அளவிற்கு விமானம் மூலம் பயிர்களுக்கு மருந்து தெளித்ததால் நடப்பு ஆண்டில் பெரும்பகுதி நிலங்களில் பீடித்த பயிர் நோய்களை நாம் செவ்விதின் எதிர்த்துப் போக்க முடிந்தது.

### அரசுப் பணியாளர்களின் சீரிய பணி

சென்ற ஆண்டில் நம் நாட்டின் பற்பல பகுதிகளில் நிலவிய அரசியல் கொந்தளிப்பிற்கும், நிலையற்ற தன்மைக்கும் மாறாக, நமது மாநிலத்தில் நல்ல, திறமைமிக்க நிர்வாக இயந்திரத்தின் துணைகொண்டு, நிலையான இணக்கமான ஆட்சியின் நலன்களை நம்மால் துய்க்க முடிந்தது. எனவே, இதுகாறும் நீங்கள் ஆற்றியுள்ள பணிக்காக உங்களைப் பாராட்டுவதோடு நிலையான ஆட்சியின் பயனைப் பெற்ற மகிழ்ச்சியிலும் உங்களுடன் பங்குகொள்ள விழைகிறேன். ஆட்சிப் பொறுப்பு, ஓர் அரசியல் கட்சியின் கையி

> தத்தம் மொழிகளின்பால் மக்களுக்குள்ள அன்பையும்

லிருந்து பிறிதோர் கட்சிக்கு மாற்றப்பட்டதனால் தோன்றிய புதிய சூழ்நிலையைக் கணிக்க பற்பல பிரிவுகளைச் சேர்ந்த அரசாங்கப் பணியாளர்கள் பணியாற்றி வருவது, நமது அரசாங்கப் பணியாளர்களின் அரசியல் நடுநிலைமையினையும், தொழில் முறைத் திறனையும் மெய்ப்பித்துக்காட்டுகிறது. நமது மாநிலத்தில் மக்கள் ஆட்சிமுறை வெற்றியடையுமென்பதற்கு இது நல்லதோர் அறிகுறியாகும் என்பதில் ஐயமில்லை.

### வரலாற்றுப் புகழ்பெற்ற உலகத் தமிழ் மாநாடு

வரலாற்றுக் காலத்திற்கு முன்புதொட்டே, வளமார் பண்பாடும் உயர் நாகரிகமும் மலிந்த ஒரு நாட்டில் இத்தகைய வெற்றியை நாம் எதிர்பார்த்தல் இயல்பானதே. என்றுமே கண்டிராத மக்கள் உற்சாகத்திற்கும் ஈடுபாட்டிற்கும் இடையே நம் பெரு மதிப்புக்குரிய குடியாட்சித் தலைவர் டாக்டர் ஜாகிர் ஹுசேன் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட இரண்டாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, தமிழ் நாட்டின் பண்டைப் பெருமையின் மாட்சியை தமிழகத்தின் கண்முன்னே எடுத்துக் காட்டிற்று. உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்து வந்த நுண்ணறிவாளர்களும் புலவர் பெருமக்களும் பங்குகொண்ட இம் மாநாடு, நமது தமிழ் மொழி, காலத்திற்கிணங்க புத்தம் புதிய கலைகளைத் தெற்றென

> ஆர்வத்தையும் மதித்து நடப்பதே, அரசியல் நுண்ணறிவாகும்

விளக்கும் திறனும் வளமும் வன்மையும் வாய்ந்த விழுமிய மொழியென்பதை எடுத்துக் காட்டியுள்ளது. கவிதை, தத்துவம், கலை, சிற்பம் போன்ற பற்பல துறைகளில் தமிழ் கூறும் நல்லுலகம் எய்தியுள்ள சாதனைகள், இம் மாநாட்டிற்குத் தொடர்பான பற்பல விழாக்களிலே, குன்றின் மேலிட்ட விளக்கேபோல் குவலயத்தார்க்கெல்லாம் எடுத்துக் காட்டப்பெற்றன. சென்ற காலத்தைச் சிந்தை செய்யும்போது உண்மையான ஒரு பெருமித உணர்ச்சியையும் வருங்காலத்தை எண்ணும்போது இடையறாத ஒரு நம்பிக்கையையும் இன்றைய இன்னல்களுக்கு இடையிலும் தமிழர்களின் உள்ளத்திலே இவ் விழாவின் நிகழ்ச்சிகள் ஏற்றி வைத்திருக்குமென்பதில் சிறிதளவும் ஐயமில்லை.

### எல்லா மொழிகளும் தழைத்தோங்க:

மொழி, மக்களின் உள்ளத்தை ஈர்க்க வல்லது என்பதற்கு உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடு, தக்கதொரு சான்றாக அமைந்துள்ளது. எனவே, தத்தம் மொழிகளின்பால் மக்களுக்குள்ள அன்பையும் ஆர்வத்தையும் மதித்து நடப்பதே, அரசியல் நுண்ணறிவாகும். பற்பல மொழிகளும் பண்பாடுகளும் நாகரிகமும் படைத்த பல்வண்ணத் திருநாடு நம் இந்தியப் பெருநாடு. வேறு வேறான மொழிகளும், பண்பாடுகளும் ஒருமித்துத் தழைத்து அவற்றின் முழுத் திறனையும் எய்துவதற்கேற்ற சூழ்நிலையைத் தோற்றுவித்தல் வேண்டும். ஒரு மொழித் தொகுதியினர்க்குள்ள உரிமைகளும் வாய்ப்புக்களும், தங்களுக்கும் உள்ளன என்ற எண்ணமும் தாங்களும் இந் நாட்டின் பொதுச் செயல்களை உருவாக்குவதில் தங்கள் முழுப் பங்கினையும் ஏற்க முடியும் என்ற மன நிறைவும் மொழித் தொகுதியினர் ஒவ்வொருவருக்கும் ஏற்படவேண்டும். ஒரு மொழித் தொகுதியினர் பிற மொழித் தொகுதியினர்மீது ஆதிக்கம் செலுத்துவது தவிர்க்கப்பட வேண்டும் என்றால், தமிழையும் பிற தேசிய மொழிகளையும் மத்திய ஆட்சி மொழிகளாக ஏற்க வேண்டும். இதற்கிணங்க அரசியலமைப்பும் ஏற்ற வகையில் திருத்தப்பட வேண்டுமென்று எனது அரசு கருதுகிறது. இவ்வாறு குறிப்பாக, அரசியலமைப்பு திருத்தப்படுகிற வரையில், ஆங்கிலம் மட்டுமே மத்திய ஆட்சி மொழியாக நீடிக்க வேண்டும். அண்மையில் நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ள 1967-ம் ஆண்டு ஆட்சி மொழிகள் (திருத்த) சட்டம் பரந்த இந் நாட்டின் பல்வேறு தேசிய மொழிகளுக்கும் அவற்றிற்குரிய மதிப்பிடம் அளிக்கப்பட வேண்டுமென்கிற அடிப்படைக் குறிக்கோளுக்கும் முரணாய் அமைந்துள்ளது. ஆட்சி மொழிகள் (திருத்த) சட்டத்தோடு கூடவே நிறைவேற்றப்பட்டுள்ள மொழிக் கொள்கை தீர்மானம், பெருஞ் சுமையினை, இந்தி பேசாத மக்கள் மீது மட்டும் சுமத்துவதன் வாயிலாக குறிப்பாக அவர்களுக்கு விளைவித்துள்ளது என்பதும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. நாடாளுமன்றம் அண்மையில் நிறைவேற்றிய மொழிக் கொள்கைத் தீர்மானத்தைச் செயல்படுத்துவதை மத்திய அரசு உடனடியாக நிறுத்தி வைக்க வேண்டுமென்று, எனது அரசு எடுத்துக் காட்டியதற்கிணங்க, சட்டப் பேரவை

[25-ம் பக்கம் பார்க்கவும்]





# "உணவு உற்பத்தியில்- புரட்சிகரமான முன்னேற்றம் காண்போம்..."

[மாண்புமிகு முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை]

"தமிழ்நாடு உணவு உற்பத்தியில் உபரியாக இருப்பதாக ஒரு நினைப்பு ஏற்பட்டுள்ளது. இது சரியல்ல. உண்மையில் இப்போதுதான் முன்னேற்றப் பாதையில் நாம் காலடி எடுத்து வைத்திருக்கிறோம். தமிழக விவசாயத்துக்கு அவசியமான நிதி உதவிகளை மத்திய அரசு அளித்திடுமானால், இன்னும் இரண்டு ஆண்டுகளில் அரிசி உற்பத்தியை உபரியாக்குவதோடு, நேர்த்தியான சில ரக அரிசி வகைகளை அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வோம்" என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னையில் தீவிர சாகுபடித் திட்ட அதிகாரிகளின் மாநிலக் கருத்தரங்கை (7-2-68-ல்) துவக்கி வைத்துப் பேசுகையில் கூறினார். அவருடைய பேச்சின் சாரம் கீழே தரப்பட்டுள்ளது:—

"தமிழகத்தில் விவசாயிகள் முற்போக்கானவர்கள். நாம் கணக்கைப் போட்டு முடிப்பதற்குள் அவர்கள் கணக்கைப் போட்டு நமக்கே சொல்லுகிறார்கள். எத்தகைய நவீன விவசாய முறையானாலும், அவற்றை ஏற்று செயல்படுத்திட அவர்கள் தயங்குவதில்லை. 'மாறிய நிலைக்கேற்ப வசதிகளைக் கொடுத்திடுக' என்று நம்மை அவர்கள் கேட்டபடி இருக்கிறார்கள்.

### மத்திய அரசு துணை நிற்குமேயானால்....

தமிழ் நாட்டிலுள்ள நாம் தடைகள் எல்லாவற்றையும் மீறி முன்னேறிவிட்டோம் என்றும் தமிழ்நாடு உணவு உற்பத்தியில் உபரி மாநிலமென்றும் ஒரு நினைப்பு பரவியுள்ளது. இத்தகைய நினைப்பு ஏற்பட ஒருவகையில் நாமும் காரணம் எனினும் இது சரியல்ல. இது நீக்கப்பட வேண்டும்.

நாம் முன்னேற்றப் பாதையில் செல்கிறோம். ஆனால் முன்னேறிவிடவில்லை. கடந்த ஆண்டு நாம் பெற்ற நல்ல விளைச்சல் தொடர்ந்து இருக்குமா என்பதை நாம் பொறுத்துப் பார்க்க வேண்டும். ஆக, நமக்கு அவகாசம் அளித்து, மத்திய அரசும் மற்றவர்களும் நம்மோடு துணை நிற்பார்களானால், விவசாயத் துறையில் சிறப்பான வெற்றிகளை நாம் நிச்சயமாக பெற்றிட முடியும்.

தஞ்சை, திருச்சி, வட ஆர்க்காடு, செங்கல்பட்டு, நெல்லையில் கணிசமான பகுதிகளில் நெல் விளைச்சல் முழு அளவுக்கு நடைபெறுமானால், தமிழகத்தின் இதர மாவட்டங்களை பருத்தி, கரும்பு, நவதானியங்கள் ஆகியவற்றின் சாகுபடிக்கென ஒதுக்கிடலாம், ஆனால் துரதிருஷ்டவசமாக நிலைமை அவ்வாறில்லை, ஒரு சில இடங்களில் ஓர் ஏக்கருக்குப் பாசனத்தை ஏற்படுத்த ரூ. 8 ஆயிரம் வரை செலவழிக்க வேண்டியிருந்ததாக அதிகாரிகள் என்னிடம் தெரிவித்தார்கள். இவ்வளவு நிறைய செலவழித்து அதற்கேற்ப வரியைப்போட்டால் அதை நம் விவசாயிகள் தாங்குவார்களா? எனவே, அரசு தன்னாலானதைச் செய்கிற அதே நேரத்தில் பூமிக்கடியில் கிடைக்கும் நீரை விவசாயிகள் அதிக அளவில் பயன்படுத்தும்படி ஊக்குவிக்க வேண்டும்.

### தவறான கருத்தைப் போக்குவோம்

பூமிக்கடியிலிருந்து கிடைக்கும் நீர், தாதுச் சத்துக்கள் குறைந்தது என்று விவசாயிகளிடத்தில் நிலவுகின்ற அவநம்பிக்கையைப் போக்க வேண்டும்.

ஒரு காலத்தில் இரசாயன உரத்தைப் பற்றிக்கூட இப்படித்தான் கருதப்பட்டது. இன்று அந்த நிலைமையில்லை.

இன்றே, கலப்பு உரமா அதை நாங்களே தயாரித்துக் கொள்கிறோம். தேவையானதை மட்டும் எங்களுக்குக் கொடுத்துதவுங்கள் என்ற அளவுக்கு விவசாயிகளிடம் உரத்தைப் பற்றிய அறிவு வளர்ந்துள்ளது.

தீவிர சாகுபடித் திட்டமென்பது தஞ்சை மாவட்டத்துக்கு மட்டும் உரியதாக இருந்தால் போதாது. மாநிலம் முழுவதும் தஞ்சையை எதிர்பார்ப்பதென்பதும் இயலாது. எனவே படிப்படியாகத் தீவிர சாகுபடித் திட்டம் மற்ற மாவட்டங்களுக்குப் பரவ வேண்டும். இம்மாநிலம் உபரி மாநிலமாக வேண்டுமென்றால் அது ஒன்றே வழி.

தமிழ்நாட்டு உணவு உற்பத்தியை அதிகரிக்க சிறிய நீர்ப்பாசனத்திற்கு ரூ 20 கோடி செலவிட வேண்டுமென்று கூறி அதற்கான திட்டம் முழுவதையும் அழகுபட அச்சேற்றி புத்தக வடிவில் கொண்டு போய் நான் டெல்லியில் கொடுத்து வந்தேன். ஆனல் இன்று வரை அதற்கான பதில் வரவில்லை.

### தமிழகத்தின் செயல் திறன்

எந்த திட்டமானாலும் அதை சிறப்புற ஆற்றிக் கொடுக்கும் அதிகாரிகள் இங்கே இருக்கிறார்கள். தேவையானதைக் கொடுத்தால் உற்பத்தி செய்து குவிக்கும் உழைப்பாளர்களாக நமது உழவர்கள் இருக்கிறார்கள்.

மத்திய அரசு தான் நடத்திப் பார்க்க விரும்பும் எத்தகைய மேம்பாடான திட்டமாயினும் தமிழகத்தில் வந்து நடத்தட்டும். வெளிமாநிலங்களில் ஒரு காரியத்தைச் செய்ய 100 ரூபாய் செலவாகுமானல், இங்கே அதே காரியத்தைச் செய்ய 80 ரூபாய்தான் செலவாகும்.

முன்னாள் தமிழக முதலமைச்சர் திரு குமாரசாமி ராஜா அவர்கள் இதை அப்போதே வலியுறுத்தினர். வடக்கே கொட்டும் பணத்தில் ஒரு பகுதியைத் தமிழகத்திற்குக் கொடுங்கள், உணவு உற்பத்தியைக் குவித்துக் காட்டுகிறோம் என்று கூறியிருக்கிறார்.

தமிழகத்தில் ஏற்பட்ட புதிய ஆட்சி அதன் முதல் ஆண்டிலேயே இரண்டு புதிய வரிகள் மூலம் இந்த பத்து மாதங்களில் ரூ. 6 கோடி அளவுக்கு அதிக வருவாயைத் தேடியுள்ளது, இன்னும் இரண்டு மாதங்கள் உள்ளன. இன்னும் இரண்டு கோடி ரூபாய் சேரும். இந்த அளவுக்கு ஈடாகவேனும் மத்திய அரசு மானியம் கொடுத்து உதவக் கூடாதா?

இந்த நாட்டிற்கு ஒருங்கிணைந்த தேசிய தண்ணீர்த் திட்டம் தேவை என்று இங்கு பேசப்பட்டது. இதே கருத்தை நீண்ட நெடு நாட்களுக்கு முன்பாகவே டாக்டர் சி. பி. ராமசாமி ஐயர் தெரிவித்தார். நாள் தவறினலும் ஒருமைப்பாட்டைப் பற்றிய பேச்சு தவறுவதில்லை, ஆனல் நதிகளின் நீரை இணைப்பது பற்றி இதுவரை யாரும் சிந்தித்ததாகத் தெரியவில்லை.

> கிருஷ்ணு – கோதாவரியைப் பெண்ணாற்றுடன் இணைத்தால் வரண்டு கிடக்கும் தமிழ்நாட்டுப் பகுதிகள் பலனடையும். மேற்கே ஓடி கடலில் விழுந்து வீணுவதாகச் சொல்லப்படும் ஆறுகளின் நீரும் தமிழ்நாட்டிற்குத் திருப்பிவிடப்பட்டால், நல்ல பலனையளிக்கும். ஒருமைப்பாடு பற்றி பேசும் மத்திய அரசு இதை கவனத்தில் வைக்க வேண்டும்.

விவசாயிகள் அதைச் செய்ய வேண்டும் இதைச் செய்ய வேண்டும் என்று கூறிவிட்டு அவர்களுக்குத் தேவையானதைத் தராவிட்டால், அது பசியைக் கிளறிவிட்டுவிட்டு சோறு போடாமல் பட்டினிப் போடுவதற்கு ஒப்பாகும்.

### விவசாயிகளுக்குக் கடன் வசதிகள்

வர்த்தக பாங்குகள் விவசாயக் காரியங்களுக்காக கடன் வசதியளிக்க முன் வர வேண்டும். விவசாயக் காரியங்களுக்குக் கடன் கொடுக்கிறோம் என்று வர்த்தக பாங்கி ஒன்றின் நிர்வாகத்தினர் தெரிவித்தனர். முதலில் செங்கற்பட்டு மாவட்டத்தைத் தேர்ந்தெடுத்துக் கொள்கிறோம். ஐந்தாண்டுகளில் திருப்பிச் செலுத்தப்பட வேண்டிய கடனுக்கு எட்டரை சதவிகித வட்டியின் பேரில் நிதியுதவிசெய்யலாம் என்று அவர்கள் சொன்னார்கள். இதை நமது விவசாயிகள் ஏற்றுக் கொள்வார்களா?

எப்படியேனும் விவசாயிகளுக்குத் தேவையான கடன், சிக்கலில்லாமல் கிடைக்க வேண்டுமென்பதற்காகச் சில திட்டங்களைத் தயாரித்து வருகிறோம். சர்க்கார் மட்டுமே அல்லாமல் வேறு நிதி உதவி நிறுவனங்களும் விவசாயக் காரியங்களுக்காக கடன் வழங்க வகை செய்து சில விதிகளைச் செய்ய இருக்கிறோம்.

> தமிழக விவசாயத்துக்கு அவசியமான நிதி உதவிகளை மத்திய அரசு அளித்திடுமானல், இன்னும் இரண்டு ஆண்டுகளில் அரிசி உற்பத்தியை உபரியாக்குவதோடு, நேர்த்தியான சில ரக அரிசி வகைகளை அயல்நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வோம்.'

—o—



# "கடல் வளம் சிறக்க தொழில் திறமையைப் பெருக்குவோம்"

**பிரான்ஸ் நாட்டு உதவியைப் போற்றி, முதலமைச்சரின் பாராட்டுரை**

"வெளிநாடுகளிலுள்ள மீன்பிடிப்பாளர்களுக்கு மீன்களைப் பிடிப்பதற்கு நூதன கருவிகள் இருக்கின்றன. ஆனல் தமிழக மீனவர்களுக்கோ இத்தகைய சாதனங்கள் இல்லையென்றாலும், அபாயத்தை எதிர்நோக்கியே, வெறும் தைரியத்துடன் ஆழ்கடலுக்கும் சென்று மீன் பிடிக்கிறார்கள். தைரியத்தில் நாம் யார்க்கும் சளைத்தவரல்ல என்பதை நாம் வாழ்ந்து காட்டியுள்ளோம்" என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் சி. என். அண்ணாதுரை அவர்கள், பிரான்ஸ் நாடு அளித்த 'டோரிஸ்' என்ற இயந்திரப் படகுகளை ஏற்றுக்கொள்கையில் குறிப்பிட்டார்.

இந்திய-பிரான்ஸ் நட்புறவுத் திட்ட அடிப்படையில் நிறுவப்பட்ட "டோரிஸ் திட்டத்" துவக்க விழா, 31-1-1968 அன்று சென்னைத் துறைமுகத்தில் நடைபெற்றது. விழாவிற்கு ஆர்ச் பிஷப் அருளப்பா தலைமை வகித்தார். தமிழக மீன் வளத் துறை இயக்குநர் அனைவரையும் வரவேற்றார். துறைமுகப் பொறுப்பாணைக் குழுவின் தலைவர் திரு வி. கார்த்திகேயன், ஐ.ஏ.எஸ். அவர்களும் விவசாயத் துறை இணைச் செயலாளர் குமாரி அன்னு ஜார்ஜ் அவர்களும் விழாவில் கலந்து கொண்டனர்.

சுமார் ரூ. 15,000 மதிப்பில் உள்ள இந்த நவீன பிரெஞ்சுப் படகுகளை இயக்குவதற்கு இருவரே போதும். நாளொன்றுக்கு சராசரியாக 640 கிலோ வரை மீன்கள் பிடிக்கலாம். ஆனல் இது நாளொன்றுக்கு 3,000 கிலோ வரை மீன் பிடிக்கத் தகுதி பெற்றது. இந்த "டோரிஸ்" படகுகளில் பொருத்தப் பெற்றுள்ள "மீன் கண்டுபிடிப்புக் கருவி" (Electronic fish finder) யைக் கொண்டு கடலினடியில் 240 அடி ஆழத்தில் உள்ள மீன்களை கண்டு கொண்டு, அவற்றை எளிதாகப் பிடிக்க முடியும். 5 அல்லது 6 நாட் (Knot) வேகத்தில் போகும் 8 மீட்டர் நீளம் கொண்ட இப் படகிற்கு 2 முதல் 3 குதிரை ஓட்ட சக்தியுள்ள என்ஜின்கள் பொருத்தப்பட்டுள்ளன. இவற்றை நிறுத்தி வைக்க துறைமுகம் தேவையில்லை

மாண்புமிகு முதலமைச்சர் பேசுகையில், "மீனவர் சார்பிலும், தமிழக அரசின் சார்பிலும், பிரெஞ்சு நாட்டு அரசுக்கும் மக்களுக்கும் நன்றி தெரிவிப்பதாகக்" கூறினர். அவர் மேலும் கூறுகையில், "பிரெஞ்சுநாட்டின் வல்லுநரை இங்கு அறிமுகப்படுத்துகையில், அவர் பிரெஞ்சு நாட்டில் மீன் பிடிப்பதில் மிகச் சிறந்தவர் என்று பெருமையுடன் கூறினார்கள். இதனல் அவர்கள் எத்தொழிலையும் ஏற்றத் தாழ்வு காணமல் சிறப்பாக மேற்கொள்கிறார்கள் என்பதை நம்மால் கண்டு கொள்ள முடிகிறது. ஆனல் இங்கேயுள்ள செல்வந்தர்களான சிலரிடம் 'என்ன தொழில் செய்கிறீர்கள்? என்று கேட்டால், 'தொழில் செய்யும் அந்த நிலைமை எனக்கெதற்கு' என்ற பாவத்தில், பதில் சொல்லுவதைக் கேட்கிறோம். இந்த வகையில் மேலை நாட்டினருக்கும் நமக்கும் நிறைய வேறுபாடுகள் இருக்கின்றன. கை வந்த தொழிலை நம் சந்ததிகளுக்கு நாம் மனமுவந்து முழுவதையும் கற்றுக்கொடுப்பதில்லை. தேள் கடிக்கு, உடனே குணமளிக்கும் மூலிகை ஒன்று ஒருவருக்குத் தெரிந்திருக்கும். ஆனல் 'அது இன்னது என்பதை மற்றவர்களுக்குச் சொல்ல

முதல் அட்டைப்படம்: 'டோரிஸ்' இயந்திரப்படகில், தமிழக முதலமைச்சருடன் திரு அரங்கண்ணல், எம்.எல்.ஏ., முதல் அமைச்சரின் அந்தரங்கச் செயலாளர் திரு கே. சொக்கலிங்கம், ஐ.ஏ.எஸ்., மீன்துறை இயக்குநர் திரு ஏ. பத்மநாபன் ஆகியோரைக் காணலாம்.

மாட்டார். சொன்னால் மருந்து பலிக்காது என்பார்கள். நமக்குத் தெரிந்த வித்தையை பிறருக்குத் தெரிவிக்காமலேயே அழித்துவிடச் செய்வது நம்மிடையே உள்ள சித்தாந்தம். அந்த வித்தை அவருடனேயே போய்விட்டது என்று சொல்வதில் வீண் பெருமை கொள்கிறோம்''.

முதலமைச்சர் மேலும் கூறுகையில்,

"தாங்கள் அறிந்த தொழில் வித்தைகளை மற்றவர்களும் பெறச் செய்வதுதான், விஞ்ஞான வளர்ச்சி. எனவே இதை நாமும் பின்பற்ற வேண்டும். எத்தொழிலாக இருந்தாலும், அதன் நுணுக்கங்களை ஆராய்ந்து, அதைப் பயனுள்ளதாக்கிக்கொள்ள வேண்டும்".

''இங்கு தயாராகும் படகுகள் 35,000 ரூபாய்கள் வரை விலை மதிப்பாகின்றன. ஆனால் ரூ. 15.000 செலவிலேயே மீன் பிடிப்பதற்கு வசதியான கருவிகள் அமைந்த படகுகளை பிரெஞ்சு நாட்டினர் நமக்குத் தர முடிகிறது" என்பதைக் குறிப்பிட்ட முதலமைச்சர் அவர்கள், ''நல்ல கருவிகள் இல்லாவிட்டால் எதிர்பார்க்கும் பலன் கிடைக்காது. அந்த வகையில் பிரான்ஸ் நாட்டு படகுகளையும், அதை செலுத்த நமது மீனவர்களுக்கு பயிற்சியளிக்கும் நிபுணர்களையும் நமக்கு அந்நாடு அளித்திருப்பது வரவேற்கத்தக்கது; பாராட்டப் படக்கூடிய ஒன்று. கடல் வளம் சிறக்க தொழில் திறமையை நாம் பெருக்கிக்கொள்ள வேண்டும். இதை நல்ல முறையில் பயன்படுத்தி, வற்றாத கடல் செல்வத்தை நாம் பெறவேண்டும்" என்று கூறினார்.

### விவசாய அமைச்சருக்குப் பாராட்டு

மாண்புமிகு விவசாய அமைச்சர் திரு ஏ. கோவிந்தசாமி அவர்களை முதலமைச்சர் பாராட்டினார், ''விவசாய அமைச்சருக்கு உடல் நலம் சரியில்லாததினால், நான் இந்நிகழ்ச்சியில் கலந்துகொள்ள வந்துள்ளேன். மீன் வளர்ச்சித் துறையிலே விவசாய அமைச்சர் காட்டிவரும் ஆர்வம் மிகவும் பாராட்டுதலுக்குரியது. அவர் இத்துறையில் காட்டுகின்ற அக்கறையும் ஆர்வமும் மீன் வளர்ச்சித் துறையிலே மேலும் ஊக்கமும் செயல்திறனும் அமைவதற்கு காரணமாக இருக்கும் என திடமாக நம்புகிறேன்" என்று முதலமைச்சர் கூறினார்.

படகில் உள்ள கருவியின் மூலம் கடலின் அடியில் இருக்கும் மீன்களைக் கூட கண்டறிந்து ஒரு சில நிமிடங்களில் ஏராளமான மீன்களைப் பிடிக்க முடியும் என்றும் ஐந்தே மாதங்களில் 30 ஆயிரம் கிலோ கிராம் மீன்கள் பிடிக்கப்பட்டிருக்கின்றன என்றும் பிரெஞ்சு நாட்டு தூதுவர் திரு ராமேகிராஸ் டோரிஸ் படகு பற்றி விளக்குகையில் குறிப்பிட்டார்.

---

மா. முத்துசாமி, பி.ஏ.,பி.டி.,
உள்ளாட்சித் துறை அமைச்சர்,
தமிழக அரசு.

கோட்டை, சென்னை-9,
23—2—1968.

பேரன்புடையீர்,

" எண்ணிய எண்ணியாங் கெய்துவர்—எண்ணியார்
திண்ணியராகப் பெறின் "

வணக்கம். நம் பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு முதலமைச்சரவர்களும், மாண்புமிகு கல்வி அமைச்சரவர்களும், இவ்வாண்டு ஊராட்சி ஒன்றிய ஆரம்பப்பள்ளிகளின் நலனுக்காகச் சற்றேறக்குறைய 76 இலட்சம் ரூபாய்கள் அளித்திருக்கின்றார்கள். தமிழகத்தில் கல்வியின் தரம் சீரிய முறையில் உயரவேண்டுமானால் ஆரம்பக் கல்வியின் நலனை நாம் முதலில் கவனித்தாக வேண்டும். உங்களது மாவட்டத்திற்கு பள்ளிக் கட்டடங்கள் கட்டுவதற்கும், விஞ்ஞானக் கருவிகள் வாங்குவதற்கும், ஆசிரியைகளுக்கான வீடுகள் கட்டுவதற்கும் ஆக மொத்தம் * இலட்சம் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. உங்கள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் நான் இதுபற்றி நேர்முகக் கடிதம் எழுதியுள்ளேன்.

வருகின்ற மார்ச் மாத இறுதிக்குள் (31—3—1968) இந்த மானியங்கள் எல்லாம் விதிகளுக்குட்பட்டு நல்ல முறையில் பயன்படுத்தவேண்டியுள்ளதால், இப்பெரும் பணியில் தங்களது ஒத்துழைப்பை பெரிதும் விரும்பி வேண்டுகிறேன்.

எப்பணியையும் சீர்முறைச் செய்து முடிக்கும் தாங்கள் இப்பணியையும் எடுத்து நல்முறை வெற்றியுடன் முடிப்பீர்கள் என்ற பெரு நம்பிக்கையோடு உங்களிடம் இப்பணியை ஒப்படைக்கிறேன்.

தமிழகம் தனது வரலாற்றுச் சிறப்புகளைத் திரும்பவும் பெற்று ஒளி வீசித் திகழவும் " என்னருந் தமிழ்நாட்டின்கண் எல்லோரும் கல்வி கற்றுப் பன்னருங் கலை ஞானத்தால், பராக்கிரமத்தால், அன்பால், உன்னத இமயமலைபோல் ஓங்கிடும் கீர்த்தி எய்தி " இன்புற ஆவன செய்ய அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

தங்கள் அன்புள்ள,
மா. முத்துசாமி

[ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்களுக்கு மாண்புமிகு அமைச்சரின் நேர்முகக் கடிதம்.]

* ஒவ்வொரு மாவட்டத்திற்கும் வெவ்வேறு தொகையாக இருப்பதால், தொகையை இங்கே குறிக்கவில்லை.





# தமிழகத்திலே பனைத்தொழில்

[மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி]

[மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள், 4-10·67-ல் மதுராந்தகத்திலே நடைபெற்ற செங்கல்பட்டு மாவட்ட பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்களின் தலைவர்கள் கருத்தரங்கில் ஆற்றிய சிறப்புச் சொற்பொழிவின் சாரத்தை இங்கே அளித்துள்ளோம். அண்ணல் காந்தியடிகளின் அருந்தொண்டினைப் பற்றியும், மதுவிலக்கின் அவசியத்தைப் பற்றியும் அழகு தமிழில் வலியுறுத்திக் கூறும் அமைச்சரின் பேச்சில் கண்டுள்ள கருத்துக்கள், நம் சிந்தனையிலே பதித்துவைத்துக்கொள்ளக்கூடிய கருத்துக் கருவூலங்களாகத் திகழ்கின்றன என்பதனால், சென்னையில் அகில இந்திய மதுவிலக்கு மாநாடு அண்மையில் நடைபெறப்போகும் இவ்வேளையில் அப்பேச்சின் சாரத்தை வெளியிடுவது சாலப் பொருத்தமுடையது எனக் கருதி, அவற்றை இங்கே வெளியிட்டுள்ளோம்—ஆசிரியர்.]

''ஜனநாயக நாட்டிலே வாழ்கிறோம் என்கிற பெருமை நமக்கெல்லாம் ஏற்பட்டிருக்கிறது. அத்தகைய பெருமையை நமக்கு ஏற்படுத்திக் கொடுத்தவர் மறைந்துவிட்ட உலக உத்தமர் காந்தியார் ஆவார்கள். ஆகவே, நாமெல்லாம் காந்தி நாட்டு மக்கள் என்று சொல்வதிலே பெருமைப்பட்டுக்கொள்கிறோம். காந்தி சகாப்தத்திலே வாழுகின்றோம் என்பதிலே அதைவிடப் பெருமை நமக்கெல்லாம் இருக்கிறது. நாமெல்லாம் அவர்கள் கொண்டிருந்த இலட்சியக் கனவுகளை நிறைவேற்றுகின்ற கிராமக் கைத்தொழில் வளர்ச்சி பற்றிய முயற்சியில் ஈடுபட்டு அதற்கான கருத்துக்களை ஒருவருக்கொருவர் பரிமாறிக்கொண்டு, அவற்றிற்கு விடிவுகாணும் முயற்சியிலே ஈடுபட்டிருப்பது, அந்த உத்தமருக்கு நாம் செலுத்துகின்ற நியாயமான அஞ்சலி என்று நான் பெருமைப்படுகிறேன்.

## அண்ணலின் உறுதிமொழி

இந்த சமுதாயம், வரலாற்றுக் காலத்திற்கு முந்திய காலத்திலேயே, நாகரிகச் சிறப்புப்பெற்ற சமுதாயமாக விளங்கியிருக்கிறது என்பதை நம்முடைய புராதனச் சின்னங்களும், நம்முடைய நினைவுச் சின்னங்களும் தெளிவாக எடுத்துக்காட்டுகின்றன. அத்தகைய நிலையிலிருந்து இந்தச் சமுதாயம் தாழ்ந்து போனதற்குரிய பல்வேறு காரணங்களிலே இந்த நாடு மதுவை விடாப்பிடியாகத் தன்னிடத்திலே கொண்டிருந்ததும் ஒன்று. விடுதலை நாட்டிலே வாழ்ந்து கொண்டிருந்தவர்கள் என்கிற பெருமையிலிருந்து நாம் தாழ்ந்து போனதற்குக் காரணம் வெள்ளைக்காரன் நம்மிடத்திலே கொடுத்த மது வகையிலே மயங்கியதுதான் என்பதை நமது கடந்தகால வரலாறுகள் நமக்குத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன. காந்தியார் அவர்கள் அந்த மதுவை இந்த நாட்டை விட்டு ஓட்டவேண்டும் என அயராது பாடுபட்டார்கள். அந்த முயற்சியிலே அவர்கள் பலமுறை தோல்விகளைக் கண்டிருந்தாலும், விடாப்பிடியாக, அதில் வெற்றி காண்பதற்காகப் பெரிதும் பாடுபட்டார்கள். ''என்னை ஒரு மணி நேரத்திற்கு இந்த நாட்டின் சர்வாதிகாரியாக நியமித்தால், நான் முதற் காரியமாக கள், சாராயக் கடைகள் அனைத்தையும் நஷ்டஈடு தராமலே மூடிவிடுவேன்" என்று அவர்கள் உறுதிமொழி கூறினார்கள் என்றால், இந்த மதுவைப் பற்றி அவர்கள் எவ்வளவு வேகமான எதிர்ப்புணர்ச்சி கொண்டிருந்தார்கள் என்பதை நாம் தெளிவாக அறிய முடிகிறது.

அத்தகைய வகையிலே அன்றைக்கு இந்த நாட்டில் மதுவிலக்கு அமலாக்கப்பட்டது. அந்த மதுவிலக்கு அவர்கள் எதிர்பார்த்த அளவுக்கு இன்னமும் இந்த நாட்டிலே பூரணமாக வெற்றி பெறவில்லை. இன்னும் சொல்லப்போனால், காந்தியாரை நாம் நாளுக்குநாள் மறந்து கொண்டு வருவதைப்போலவே அவர்களுடைய இலட்சியங்களிலிருந்துகூட நாளுக்கு நாள் பின்வாங்கிக் கொண்டு போகிறோம் என்பதை இன்றைய வரலாறு நமக்குப் படம் பிடித்துக் காட்டுகிறது. இது அந்த உத்தமருக்குச் செய்கின்ற மிகப் பெரிய துரோகம்.

## நம்முடைய தலையாயக் கடமை

தமிழகத்தைப் பொறுத்த வரையில் இன்றைக்கு முற்றிலும் மாறுபட்ட கொள்கைகளைக் கொண்டிருக்கக்கூடிய ஒரு அரசு பொறுப்பு ஏற்றுக்கொண்டிருந்தாலும், அந்த அரசினுடைய தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிற மாண்புமிகு முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா

அவர்கள் காந்தியாருடைய கொள்கைகளி லிருக்கக் கூடிய நல்லவைகளை நாட்டிலே அமுல் படுத்துவதில், நாம் மற்றவர்களுக்குச் சளைத்தவர்கள் அல்லர் என்று மிக உறுதியாக காட்டிக் கொண்டிருக்கிறார்கள். மாற்றான் வீட்டு மல்லிகைத் தோட்டம் என்று சொன்னாலும் அதிலேயிருந்து வருகின்ற மணத்தை நுகருவதுதான் முறை என்பதைத் தெரிந்துகொண்டிருக்கக் கூடிய ஒரு பெருந்தகையாக அவர்கள் விளங்கி, இந்த நாட்டிலே மது விலக்கைத் தீவிரமாக அமுலாக்கிக் கொண்டு வருகிறார்கள்.

## அனைத்திந்திய மதுவிலக்கு மாநாடு

### ஏப்ரல் மாதம் சென்னையில் நடைபெறும்

ஏப்ரல் 12, 13, 14 நாட்களில் சென்னையில் நடைபெறும் அனைத்திந்திய மதுவிலக்கு மாநாட்டை, தமிழக முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை தொடங்கிவைப்பார். டாக்டர் சுசிலா நய்யார் தலைமை தாங்குவார். மருத்துவத் துறை அறிஞர்கள், உளநூல் வல்லுநர்கள், காந்தியடிகளின் கோட்பாடுகளில் நம்பிக்கைகொண்ட ஊழியர்கள், மாநில முதலமைச்சர்கள், அமைச்சர்கள், சமூகத் தொண்டர்கள் முதலானோர் நாடெங்கிலுமிருந்து இம்மாநாட்டில் கலந்து கொள்வார்கள். திரு இராஜாஜி, திரு கு. காமராஜ், டாக்டர் ஜிவராஜ் மேத்தா, ஸ்ரீமான் நாராயண், திரு மீ. பக்தவத்சலம், திருமதி சுசேதா கிருபளானி முதலியோர் மாநாட்டில் கலந்துகொள்வர்.

காந்தியாருடைய எண்ணத்தை இந்த நாட்டிலே ஈடேற்றவேண்டுமென்று பெருமுயற்சி எடுத்துக் கொண்டிருக்கிற அந்தப் பெரியவருக்கு, நம்முடைய பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு, நாமெல்லாம் உறுதுணையாக இருந்து இந்த நாட்டிலே மதுவிலக்கைத் தீவிரமாக அமுலாக்கி மது அரக்கனை முற்றிலும் ஒழித்துவிட்டோம் என்று கூறுகிற வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவது நம்முடைய கடமையாகும். அந்தக் கடமையிலே நாம் கொஞ்சம் பின் தங்குகிறோம் என்றாலும், சமுதாயத்தைச் சீரழிக்கிறோம் என்பது பொருள்; அந்தக் களங்கம் நமக்கு ஏற்பட்டுவிடும். ஆகவே நாம் இதிலே எச்சரிக்கையாக இருக்கவேண்டும்.

### பனைத்தொழில் புதியது—புனிதமானது

பனைத்தொழிலானது இந்த மதுவிலக்காலே பாதிக்கப்பட்டுள்ள குடும்பங்களைக் காப்பாற்றுவதற்காகக் காந்தியார் அவர்கள் புனருத்தாரணம் செய்துகொடுத்த ஒரு புதுத் தொழிலாகும். இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருப்பவர்கள் தங்களுடைய வாழ்க்கைத்தரத்தை உயர்த்திக் கொள்வதற்காக மட்டும் ஏற்பட்ட தொழிலாக இதைக் கருதாமல், சமுதாயத்திற்குச் செய்கின்ற பெருஞ் சேவையாகக் கருதிச் செயல்படவேண்டும் என்பதை நாம் உணரவேண்டும். ஒரு பக்கத்திலே மதுவை ஒழிக்கவும், அதே நேரத்தில் அந்த மதுப் பழக்கத்திலே பாதிக்கப்பட்டவர்களுக்கு புனர்வாழ்வு தரவும், புது முறைகளைக் காண வேண்டும் என்ற முயற்சியிலேதான் பதநீர் இறக்குகின்ற தொழிலிலே நம்முடைய கவனத்தை அதிகமாகச் செலுத்தவேண்டும் என்று காந்தியார் அவர்கள் கனவு கண்டார்கள்.

### இலட்சியத்தை பரப்புகிறோம் என்ற பெருமை

ஆகவே, இந்தப் பதநீரை இந்த நாட்டிலே கொடுக்கிறோம் என்று சொன்னால் நாம் காந்தியாருக்குச் சேவை செய்து கொண்டிருக்கிறோம் என்று பொருளாகும். நம்முடைய வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கிறோம் என்பது மட்டும் அல்லாமல் ஓர் இலட்சியத்தை இந்த நாட்டிலே முழுமையாகப் பரப்பிக் கொண்டிருக்கிறோம் என்கிற பெருமையையும் உங்கள் அனைவருக்கும் இருக்கும். ஆகவே, காந்தியாருக்கு மணி மண்டபம் எழுப்புகின்றவர்களைவிட, காந்தியாருக்குக் கோயில் எழுப்புகின்றவர்களைவிட, காந்தியாருக்குக் குளங்கள் வெட்டுகின்றவர்களைவிட, காந்தியாருடைய திருவுருவப் படங்களை நாடெங்கும் வைத்து ஊர்வலமாக வருகின்றவர்களைவிட, காந்தியாருடைய திருவுருவப் படத்திற்குத் தினந்தோறும் பூசை போடுபவர்களைவிட, பனைத் தொழில் செய்வது காந்தியாருடைய மனத்திற்கு நிறைவை அளிக்கின்ற காரியமாகும்.

இந்த தொழிலை ஏற்படுத்தியதற்கே காரணம், இந்த நாட்டிலே மதுவிலக்கைத் தீவிரமாக அமுல்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான். ஆனால் இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற ஒரு சிலர், இந்தத் தொழிலையே மதுவிலக்குக்கு எதிராகப் பயன்படுத்துகிற நிலையிருக்குமானால் அதைவிட அருசத்தக்க ஒரு காரியம் நிச்சயமாக இருக்க முடியாது. மதுவை ஒழிப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட இந்த இயக்கத்தில் ஈடுபட்டிருக்கிற சில நண்பர்கள், தங்களுடைய வயிற்றுப் பிழைப்புக்காகவோ, அல்லது மற்றவர்களுக்கு இன்பத்தைத் தரவேண்டும் என்பதற்காகவோ அல்லது கொஞ்சம் அதிகமாக இலாபம் கிடைக்கிறது என்பதற்காகவோ, கொஞ்சம் தனது நெறியிலிருந்து தவறிவிட்டாலும், சமுதாயத்திற்குப் பெருந்துரோகத்தைச் செய்கின்றோம் என்பதை அவர்கள் தங்களுடைய கவனத்தில் கொள்ளவேண்டும்.

### நம்மை நாமே திருத்திக்கொள்ளும் மனப் பக்குவம்

இந்தத் துறையிலே ஈடுபட்டிருப்பவர்களின் வாழ்க்கையிலே இருக்கக்கூடிய தொல்லைகளை, நான் மிக நன்றாக அறிகிறேன். என்றாலும், அதற்காக நாம் மாறான வழியிலே செயல்படுகிறோம் என்ற நிலைமை இருக்கக் கூடாது. ஆகவே நம்மை நாமே திருத்திக்கொள்கிற மனப் பக்குவத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும். அப்படி ஒரு சிலர் இருந்த மறுத்தாலும் இந்தத் துறையிலே ஈடுபட்டிருக்கக்கூடிய தலைமைப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருப்பவர்கள் அவர்களைத் திருத்துகிற முயற்சியிலே ஈடுபடவேண்டும். ஆகவே அத்தகைய குறைகளுக்கு இடமில்லாமல் நடந்துகொண்டால் சட்டத்திலே இருக்கக் கூடிய சிக்கல்களின் மூலமாக உங்களுக்கு ஏற்படுகிற பாதகங்களைப் போக்குவதற்கு, மிக எளிதில் நம்மால் முயற்சி எடுக்க முடியும். எனக்குத் தெரிந்த வரையில், கிராமப் புறங்களிலே இந்தப் பனைத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடியவர்களுடைய பல்வேறு நண்பர்களும் அந்தக் காலங்களிலே பெரும்பாலும் தவறாக நடந்து கொள்வதை நான் கண்கூடாகவே பார்த்திருக்கிறேன். பருவகாலம் வந்தாலே பலபேர் அந்தப் பனைமரத்தடியிலே போய்க் காத்துக்கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அங்கே என்ன வேலை? பனைமரத்தடியிலேயே போய்ப் பாலைக் குடித்தாலும் அதை யாரும் ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்ற பழமொழியை, உலகத்திற்குக் கொடுத்தவர்கள் நாம். அப்படிக் கொடுத்துவிட்டுப் பத்துப் பேர் காலை 7 மணியானால், அந்த மரமேறுகிற தொழிலாளியினுடைய வீட்டைச் சுற்றியோ, அல்லது அவர்களுடைய அந்தக் குடிசையைச் சுற்றிக்கொண்டோ, அல்லது மரத்தைச் சுற்றிக்கொண்டோ இருக்கிறார்கள் என்றால் என்ன பொருள்? ஆகவே, இந்த நிலை மாற வேண்டும். அதற்கு நம்மை நாம் தயார்ப்படுத்திக் கொள்ள வேண்டும்.



### புறம்போக்கு மரங்களும் வல்லுநர்களும்

இந்தத் துறையிலே ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர்களுக்குப் பனைமரம் வழங்குவதற்காக நம்முடைய உள்ளாட்சித் துறையிலிருந்து திட்டவட்டமான உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டிருக்கின்றன. ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த புறம்போக்கு நிலங்களிலே இருக்கக்கூடிய பனை மரங்களை, பனைத்தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் கேட்டால், முதலில் சங்கங்களுக்குத்தான் கொடுக்கவேண்டும். அப்படி யாரேனும் கொடுக்க மறுத்து விட்டு வேறு யாருக்காவது கொடுத்தால், அதனை நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், உடனடியாக அதை ரத்துச் செய்து, இந்தச் சங்கங்களுக்குக் கொடுக்கவேண்டுமென்று, திட்டவட்டமான உத்தரவும் இருக்கிறது. அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவைகளிலே ஏதாவது சங்கடங்கள் ஏற்படுமேயானால் அதை நம்முடைய மாவட்ட ஆட்சித் தலைவருடைய கவனத்திற்குக் கொண்டு சென்றால் மிக விரைவாகவே அந்தப்பிரச்சினை தீர்க்கப்பட்டுவிடும். அதே நேரத்தில், அந்த உரிமைகளைப் பயன்படுத்துகிறபொழுது மிக எச்சரிக்கையாக பயன்படுத்தவேண்டும்.

## அண்ணல் காந்தியடிகளுக்கு முதலமைச்சர் அஞ்சலி

"அவர் ஒரு தூயவர், நமது மார்க்கத்தின் மாசு துடைத்திட வந்த மகான் என்பாரும் ;

அவர் ஒரு விடுதலை வீரர், நமது நாட்டு அடிமைத் தளைகளை உடைத்தெறிந்த அஞ்சா நெஞ்சினர் என்பாரும் ;

அவர் ஒரு வேதாந்தி, பழைய தத்துவம் பலவற்றுக்குப் புதிய விளக்கமளித்தவர் என்பாரும் ;

அவர் ஒரு சமதர்மவாதி, ஏழை பங்காளர், ஏழைகள் புதுவாழ்வு பெற வழி வகுத்தவர் என்பாரும் ;

அவர் கிராம ராஜ்யம் அமைத்திட முனைந்தவர் என்பாரும், இதுபோல, அவரிடம் அவரவர் கண்டவற்றினைக் கொண்டு அளவிட்டு வியந்து பாராட்டுவார், பல்வேறு உளர். இவர்களில் எவருடைய பார்வையில் முழு காந்தி அடிகள் தெரிகிறார் என்பது, காலமெல்லாம் ஆராய்ந்தறிந்துகொள்ள வேண்டிய ஒரு பிரச்சினையாகும். காரணம், ஒரு தனி மனிதர் என்ற முறையிலே மட்டும் கவனிக்க வேண்டியவர் அல்லர் : அவர் காலத்தின் சின்னம், ஓர் எழுச்சியின் அடையாளம், ஒரு மறுமலர்ச்சியின் உருவகம்."

[காந்தியடிகள் பற்றி தமிழக முதல்வர் சி. என். அண்ணாதுரை—வானொலிச் சொற்பொழிவிலிருந்து—2—10—67]

இந்தச் சங்கத்திலே இருக்கக்கூடிய தொழிலாளர்களை வாழவைப்பதற்காகத்தான் ஒரு சங்கத்தை நிறுவி அதற்கு ஒரு தலைவர் என்று ஒருவரையும் போட்டிருக்கிறோம். தலைவரே, தனக்கு உரிமையாக அதை எடுத்துக்கொண்டு அதை உள் குத்தகைக்கு விடுகிற நிலைமைகள் உருவாகுமேயானால், வேலியே பயிரை மேய்ந்தால் வேளாண்மை உருப்படுமா? ஆகவே, அதில் சில சங்கடங்கள் இயற்கையாகவே ஏற்பட்டுவிடுகின்றன. எனவே, இந்தத் துறையிலே ஈடுபட்டிருக்கக்கூடியவர்கள், நல்லவரைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள், அந்தச் சங்கத்தினுடைய மொத்த உருவமாக விளங்கவேண்டும். ஆயிரம் தொழிலாளர்களுக்குத்தான் தலைவரென்றால், அந்த ஆயிரம் தொழிலாளர்களுடைய வாழ்வுப் பிரச்சினையும் தன்னுடைய கையில் இருக்கிறது என்கிற உணர்வு இருக்க வேண்டும். சேர, சோழ, பாண்டியர் ஆண்ட காலத்தில், மக்கள் அத்தனை பேரும் சேர்ந்த மொத்த உருவமாக மன்னன் விளங்கினான் என்பதை நாம் பார்க்கிறோம். அப்படிப்பட்ட உணர்ச்சியோடு தலைவர்கள் இருந்து, இந்தக் கடமையிலே ஒழுங்காக நடந்து கொள்வார்களேயானால், இந்தச் சங்கடங்கள் தீர்க்கப்பட்டுவிடும்.

அடுத்து, இந்தக் துறையிலே ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர்களுக்குக் குத்தகைக்கு மரங்களை எடுத்துக் கொடுப்பதைவிட, மரங்களைச் சொந்தமாக ஆக்கிக்கொடுப்பது சிறப்புடையதாக இருக்கும் என்கிற கருத்தெல்லாம் அரசாங்கத்தின் பரிசிலனையில் இருந்து வருகிறது.

### நவீன முறைகளைப் புகுத்துவதில் கவனம்

தமிழகம் முழுதும் ஏறத்தாழ 4 கோடி பனை மரங்கள் இருப்பதாக நம்முடைய கணக்குகள் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. அந்த 4 கோடி பனை மரங்களையும் நாம் முறையாக உபயோகித்தால், மிகச் சிறந்த வெளிநாட்டுச் செலாவணியை இந்த நாட்டுக்குப் பெற்றுத்தர முடியும்.

பனை மரத்திலே இருக்கக்கூடிய எல்லாப் பகுதிகளும் பயன்படுகிற ஒன்று. அதில் எந்த ஒரு பொருளும் வீணாகப் போவதாகச் சொல்ல முடியாது. அப்படிப்பட்ட ஒரு நல்ல கருவூலம்—நிலையாக நிற்கிற கருவூலம்—சீக்கிரத்தில் அழிந்துவிடாத உயர்ந்த கருவூலம்—நம்மிடத்திலே கிடைத்திருக்கிறது. ஆனால் அதில் நாம் ஈடுபடுவதில்லை. ஈடுபடாததற்குப் பல காரணங்கள் உள்ளன. தேவையான வருமானம் அதில் கிடைப்பதில்லை. மேலும் அதில் ஈடுபடுவதே ஒரு இழிவான காரியம் என்ற கருத்து இன்னும் பலரிடம் நிலவி வருகிறது. நாமெல்லாம் இன்றைக்கு வெள்ளைச் சட்டை போட்டுப் பழக்கப்பட்டு விட்டவர்கள். ஆகவே, தொழில் செய்வதே ஒரு கேவலமாகக் கருதுகிற ஒரு சமுதாயத்தை வளர்த்துக்கொண்டு வருகிறோம்.

கல்வி பெறுவது என்பது அறிவை வளர்த்துக்கொள்வதற்காக என்கிற நிலையிலிருந்து மாறித் தொழிலைத் தேடிக்கொள்வதற்காக ஏற்பட்டிருக்கக்கூடிய ஒரு சாதனமெனக் கருதி, ஒரு நாலு எழுத்துப் படித்துவிட்டாலே அதற்குப் பிறகு கிராமத்திலே போய் ஒரு தொழில் செய்வது என்பது தன்னுடைய கௌரவத்திற்கு இழுக்கு என்கிற மனப்பக்குவம் நம்மிடையே வளர்ந்து கொண்டு வந்திருப்பதால்தான், நாளுக்கு நாள் இந்த லைசென்ஸ்கள் எல்லாம் குறைவதற்குக்கூடக் காரணம் என்று கூறலாம். ஆகவே இந்தத் துறையை இலாபகரமான துறையாக மாற்ற வேண்டும்; நவீன கருவிகளைப் பொருத்தி மரமேறுத் தொழிலிலே பயிற்சியளித்தோமானால், படித்த பட்டதாரிகள் எல்லாம்கூட இந்தத் துறைக்கு வருவார்கள். நம்முடைய மாதவரம் பண்ணையிலே அதற்கான பயிற்சிகளெல்லாம் தரப்படுகிறது. அங்கு பி. எஸ் ஸி., பி. ஏ., படித்த மாணவர்களெல்லாம் இன்றைக்குப் பயிற்சி பெற்றுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, நவீன முறைகளை நாம் இதிலே புகுத்துவதிலே கவனம் செலுத்த வேண்டும். அதற்கு நாம் நம்மைத் தயாராக்கிக் கொள்ளவேண்டும்.

### நிரந்தரமான தொழிலாக ஆக்குவோம்

அந்த முயற்சியில் பனைத்தொழில் சம்மேளனம் முழுமையாக இன்றைக்கு ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது. அது

## "மானமுள்ள வாழ்வு பெற்றுத் தந்த மகான்"

"ஆகாயத் தாமரையைப் பறித்துக் கொடுத்திடும் அற்புதம் அவர் காட்டினரில்லை; ஆனால் ஊமைகளாய் இருந்துவந்த மக்களைப் பேச வைத்தார். உரிமை முழக்கமிடச் செய்தார்; படைபல வந்திடினும் தடைபல நேரிடினும் அஞ்சாதீர் என்றுரைத்தார், 'அஞ்சி அஞ்சிச் சாவார்! அவர் அஞ்சாத பொருள் இல்லை அவனியிலே' என்று துக்கம் தோய்ந்த குரலிலே பாடினரே பாரதியார், அந்த அச்சத்தைத் துடைத்தார்; ஆயுதம் தாங்கியவர் எதிரில் சாகப் பயப்படாதாரின் ஓர் அணிவகுப்பை நிறுத்திக் காட்டினர். சிட்டுக் குருவிகளுக்கு வல்லூறை எதிர்த்திடும் ஆற்றல் ஏற்படச்செய்தார், நம்மால் என்ன ஆகும் என்ற ஏக்கத்தை விரட்டினர். நாமிருக்கும் நாடு நமது என்பதறிந்தோம் என்ற உறுதி எழச் செய்தார், போர் முகாம் அமைத்து அல்ல, எளிய குடில் அமைத்து; வெட்டச் சொல்லி அல்ல, வெட்டுண்டவர் போக ஏனையோர் அறப்போர்ப் பாதை நடத்திடுக என்றுரைத்து; ஆத்திரம் ஊட்டி அல்ல, அன்பினை ஊட்டி. மகான்களிடம் அமைந்திருப்பதாகக் கூறப்படும் அற்புதங்களைக் கண்டவர் அல்ல, இன்று கதை கூறுவோர். காந்தி அடிகள், நடத்திய அற்புதத்தை நாம் நமது கண்களால் கண்டோம், அந்த 'அரை ஆடை' மனிதர் கோடானு கோடி மக்களுக்கு மானமுள்ள வாழ்வு பெற்றுத் தந்ததை விட, 'அற்புதம்' வேறு என்ன இருக்க முடியும்?"

*[காந்தியடிகள் பற்றி தமிழக முதல்வர்—வானொலிச் சொற்பொழிவிலிருந்து —2-10-67]*

மிக விரைவாக வளர்ந்து இந்தத் துறைக்கு அது பயன்படுவதாக அமையவேண்டும். இந்தத் தொழிலாளர்களுக்குப் பனந்தோப்புகள் விலைக்கு வாங்கக் கடன் கொடுத்து, கொஞ்சம் சொந்தமாக கடனைக் கட்டுகிற முயற்சியில் ஈடுபட வேண்டும் என்கிற கருத்துக்களை எல்லாம் அரசாங்கம் பரிசீலித்துக்கொண்டு வருகிறது. இது தமிழக அரசாங்கம் மட்டும் அல்லாது இங்கே, இருக்கிற கதர் கைத்தொழில் குழு மட்டும் செய்கிற காரியமல்ல. மத்திய குழுவினுடைய பொறுப்பும் இணைக்கப்பட்டிருக்கிற காரணத்தாலே இதில் சில பல சங்கடங்கள் இருக்கின்றன. இருந்தாலும் அவைகளை எல்லாம் போக்கி மிக விரைவாகவே இந்தத்தொழிலை நிரந்தரமான தொழிலாக ஆக்குவதற்கான முயற்சியிலே ஈடுபடுவோமென்கிற உறுதியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

### குறை போக்கி நலங்காண....

பனைத் தொழிலில் ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு ஆண்டு முழுவதும் தொழில் கிடைப்பதில்லை என்கிற ஒரு குறை சுட்டிக்காட்டப்பட்டது. நியாயமான குறை. ஆகவே, அந்தத் தொழில் நடக்கிற காலம் போக, மீதியுள்ள காலங்களில் கைத்தொழில் குழுவின் மூலமாக நடத்தப்படுகிற இதர தொழில்களிலே அவர்களுக்கு வாய்ப்பைக் கொடுக்க வேண்டும். அல்லது இந்தத் தொழிலோடு ஒட்டிய—தொடர்புடைய பிற தொழில்களிலாவது அவர்கள் கவனம் செலுத்துகின்ற அளவுக்குச் சொல்லி அவர்கள் 12 மாதமும் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை நடத்துவதற்கான முறைகளை மேற்கொள்கிற வகையிலே, அவர்களுக்கு ஆங்காங்கு தொழில்கள் அமைக்கப்படுவதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கு நாம் முயலுவோம் என்கிற உறுதியையும் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தொழிலிலே ஈடுபட்டிருக்கக்கூடிய தொழிலாளர்களுக்கு ஏற்படுகிற எதிர்பாராத இடையூறுகளுக்கு ஒரு பிராயச்சித்தம் கண்டாக வேண்டும்.

மரத்திலிருந்து தவறி விழுவது, அல்லது மரம் ஏறுகிற தொழிலாளி எதிர்பாராத வகையிலே உடல் நலக் குறைவாலே பாதிக்கப்பட்டு அவற்றால் ஆபத்துக்கள் விளைந்து பல்வேறு சங்கடங்கள்—அவர்களுடைய குழந்தைகள் படிக்கின்ற காலத்தில் உதவிசெய்ய முடியாத தொல்லைகள், அவர்கள் குடியிருப்பதற்கு தேவையான நல்ல வீடில்லாத குறை, அவர்களுக்கு மருத்துவ வசதிக்குத் தேவையான பண வசதி இல்லாத தன்மைகள், ஆகிய பல குறைகள் தொழிலாளியைத் தாக்குகின்றன. இந்தத் தொழிலாளர்களை எல்லாம் வைத்து, "தொழிலாளர் இயக்கம்" என்கிற ஒன்றை உருவாக்குவோமேயானால் அவர்கள் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திலே உறுப்பினர்களாகச் சேர்க்கப்பட்டு, அந்த விபத்திலிருந்து அவர்களைக் காப்பாற்றுவதற்கான முயற்சியை மேற்கொள்ளலாம். ஆனால் அப்படிப்பட்ட அமைப்புக்களை உருவாக்குகிற அளவுக்கு நம்மிடத்திலே தொழிலாளர்கள் நிறைய பேர் இல்லை. இந்தச் சட்ட திட்டங்களுக்கு உட்படுகிற நிலையிலே நமது பொருளாதாரம் இல்லை. ஆகவே, தொழிலாளர்கள் வளர்ச்சி நிதி என்று ஒன்றை உருவாக்கி, ஒரு தொழிலாளி, ஒரு ரூபாய் வியாபாரம் செய்திருக்கிறானென்றால் அதிலே 2 பைசாவை அவர் தன்னுடைய நிதியாகக் கொடுக்கவேண்டும். அரசாங்கம் 3 பைசாவைக் கொடுக்கவேண்டும். ஆக இந்த நான்கு பைசாவையும் ரூபாய்க்கு 4 பைசா என்கிற முறையிலே சேர்த்து வைத்துக் கொண்டு விடுவோம் என்று சொன்னால், அவர்களுக்கு இடையூறு ஏற்படுகின்ற காலத்திலே, அந்த நிதியிலிருந்து உதவி செய்வதற்கான முயற்சியை மேற்கொள்ளலாம். அப்படி எந்த இடையூறும் ஏற்படாமல் அவர்கள் இருப்பார்களேயானால், அந்த மொத்தத் தொகை அவர்களுடைய பிற்கால வாழ்க்கைக்கு பயன் உள்ளதாக வழங்க வேண்டுமென்னும் முறையிலே ஒரு 10 காரணங்களுக்காக, பாதிக்கப்படுவோர்களுக்கு உதவி செய்கின்ற ஒரு திட்டத்தைத் தயாரித்து, அது மத்திய குழுவினுடைய பரிசீலனைக்காக அனுப்பப்பட்டிருக்கிறது. அவர்கள் அதிலே, ஒரு சிலவற்றை எடுக்கவேண்டும்' இதெல்லாம் அந்த அபாயத்தில் என்கிற கட்டத்திலே வராது என்று கூறுகிறார்கள். அவைகளை எடுத்து விட்டாவது கொடுங்கள் என்கிற நிலையிலிருக்கிறது. அது இன்னைக்கு மத்திய அரசினுடைய பரிசீலனையிலிருக்கிறது. மிக விரைவாக அது முடிந்துவிடுமானால், அதை இங்கே அமுல்படுத்துவதற்கான காரியத்திலே நாம் ஈடுபடுவோம்.

### மதுவிலக்குக் குழுவைப் பயன்படுத்திக் கொள்க....

அவலுவலக அளவிலே இந்த மதுவிலக்குக் குழு அமைக்கப்பட வேண்டுமென்று கருத்துத் தெரிவிக்கப்படுகிறது. இது ஏற்கனவே நடைமுறையில் இருக்கிறது. அந்தக் குழு இப்பொழுது புதிதாக அமைக்கப்படத் தேவையில்லை. நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் சொன்னேன். இந்தச் சம்மேளனத்திலே தொடர்பு உடையவர்களையும், அந்தக் குழுவிலே அங்கம் பெறச் செய்துவிட்டவர்களேயானால், அவர்களுடைய கருத்துக்களை கேட்பதற்கு வசதியாயிருக்கும் என்று சொன்னேன். ஆனால் அந்தக் குழுவிடத்திலே யாரும் வந்து அவர்களாக முறையிட்டதாக எனக்குத் தெரியவில்லை என்று சொன்னார்கள். ஆகவே, குழு இருக்கிறது. அந்தக் குழுவை முழுமையாகப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

### ஏழை சிரிக்கவேண்டும்—அதுதான் அரசின் இலட்சியம்

புதிய அரசு பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தாலும், அந்த அரசு இந்தத் துறையை வளர்க்க வேண்டுமென்று பாடுபடுகிறது. கதருக்கோ, கிராமக் கைத்

[23-ம் பக்கம் பார்க்க]



"புகாரில் ஒரு நாள்" கவிதைப் போட்டி : [மூன்றுவது பரிசு பெற்ற கவிதை :]

# "முன்னீர்க் செய்வோம் முனைந்து"

(புலவர் திரு ந. சந்தானம்)

பொன்னாய் மணியாய்ப் புலவரெலாம் பாட்டெழுத
என்கவிதை யும்இரங்கி ஏற்பாயே—அன்னாய்
அமிழ்தன்ன சொல்லாலும் அரும்பொருளும் சேர்ந்த
தமிழ்தன்னை என்நாவில் தந்து

[கடலின் கரையில்]

பூவிரித்துப் பொன்விரித்துப் பூவுலகில் பாவலரின்
பாவிரித்து நாட்டின் பயன்விரித்துப் பாய்ந்தோடிக்
காதலனைக் கண்டவிளங் காரிகைபோல் காவிரியாள்
போதந்து புன்னகைப் பொங்கும் கடலரசன்
வா! வந்து நின்காதல் தா வென்று வலை வீசி
மேவுந்தன் கைகளினால் மெல்லிடையா ளைத்தழுவக்
கண்டுகோ டுண்டுயிர்த்த காதற் பெருமையென
விண்படர்ந்து சென்றதுவே வீங்கும் அலைவெள்ளம்!

[கவிஞன் கண்ட கனவு]

காலமெனும் கல்நெஞ்சன் கைகளிலே சிக்கியதால்
கோலமெலாம் குன்றிக் குறுகியதோர் சிற்றூராய்ப்
பொன்கோடி ஈந்தாலும் போய்ப்புகார் வேறிடத்தில்
என்றபெயர் மாறிவிட, இன்றெவரும் வந்துபுகார்
என்றபெயர் தாங்கி இருக்கும் புகார்தனிலே
நின்றிருந்தேன்! நெஞ்சில் நினைவலைகள் தாலாட்டக்
கண்துயின்றேன்! கண்ட கனவுகளோர் ஆயிரமாம்!

[கரை கண்ட கரிகாலன்]

பண்துயின்ற பாடல் பசுந்தமிழால் வாழ்வதனால்
வீரத்தைக் காட்டி விரும்புகவி வாணரிடம்
ஈரத்தைக் காட்டி இமயப் புகழ்காட்டிக்
காவிரிக்கு நல்லகரை கண்ட கரிகாலன்
பூவிரிக்கும் மஞ்சத்தில் பொற்கவரி நின்றசைய
என்னை வியப்பன்னான் எந்தும் திருமார்பில்
பொன்னார்ந்த பாதத்தால் புக்குதைத்தான் ஓர்சிறுவன்!
போரென்று நிற்கும் புரவலனின் தோற்றத்தில்
ஈரத்தைக் கண்டேன்நான் இல்லறத்தின் பீடுணர்ந்தேன்!

[கடல் வழி வந்த பொருள்கள்]

எழுமலை யென்றே இலக்கியங்கள் போற்றுமவை
தாழுமலை யாகத் தடைமீறி வானுயர்ந்து
நிற்கின்ற பண்டங்கள் நீள்கடலில் வந்திட்ட
பொற்குன்றம் அன்றோ!

[புலிக் கொடி.]

புறவுலகில் என்றும்
கலிக்குப் பகையென்று காட்டிப் பகைவர்
பலிக்கென்று பாய்ந்தசையும் பாரீர் புலிக்கொடியை!

[மகிழ்ச்சி வெள்ளம்]

பொற்பெல்லாம் தேக்கும் புகார்நகர வீதியிலே
கற்பெல்லாம் தேக்கிக் களியூட்டும் பெண்களினம்
வெற்பெல்லாம் தேக்கி விளையாடும் வீரர்கள்
மற்றென்ன வேண்டும்? மகிழ்ச்சிப் பெருவெள்ளம்!

[வளம்]

நீரின் வளத்தால் நிலவளமும் வானத்தில்
காரின் வளமும் கவின்சேர் குடிவளமும்
பொங்கும் குடிவளத்தால் போற்றுசெங் கோல்வளமும்
தங்கும் புகழ்வளமும் தாங்கும் புகார்நகரம்

[கண்ணகி சொன்ன திறம்]

எத்தனையோ தோற்றங்கள் என்கனவில் நான்கண்டேன்
மத்தளமும் யாழும்சேர் மாதவியின் நாட்டியத்தால்
கோவலன் செல்லக் கொடியிடையாள் கண்ணகி, தன்
காவலனை நோக்கியெதிர் காத்திருந்தாள் அவ்வேளை
பொன்னெல்லாம் போகப் புகழ்போகக் கண்ணகியினை
இன்னலும் போக எதிர்வந்த நாயகனை
இன்னமும் என்கால் எழிற்சிலம்பு கொள்கவெனச்
சொன்னதிறம் கண்டேன்!

[தவம் செய்யும் நங்கை]

சொக்கவெள்ளிப் பாற்குடமாய்ப்
பந்தாடும் வெள்ளலைகள் பாயும் கடற்கரையில்
வந்தாலும் நாயகற்கு வாழிதவம் செய்திருக்கும்
நங்கையை நான்கண்டேன்

[பெண்மையும் தாய்மையும்]

நல்லபெரும் போரினிலே
செங்கை சிவப்பச் சிலவீரர் கொண்டுவந்த
தந்தத்தால் தொட்டிலில் தங்க வடம்சேர்த்தே
எந்தாய் உறங்குக! என்மகனே தூங்கென்று
முந்தையோர் வீரம் முழுவதையும் தாலாட்டிப்
பாலூட்டி இன்தமிழைப் பாலோடு சேர்த்தூட்டி
மாலூட்டி நிற்காமல் மாவீரம் தானூட்டிப்
பெண்மை வளர்ந்து பெருந்தாய்மை யாய்நிற்கும்
வண்ணமும் கண்டேன்

[வீரர்கள்]

வளர்புகழின் வீரர்கள்
நாட்டிற்கு நல்லுடலை நாயகிக்கே தம் நெஞ்சைக்
காட்டும் திறன்கண்டேன்

[மாடங்கள்]

கட்டியநல் மாடங்கள்
சேவல் எனநிமிர்ந்த சீரான தோற்றத்தால்
ஆவல் எழுப்பும் அழகுணர்ந்தேன்!

[வாணிகம்]

வீதியினில்
பொன்னோ மணியோ புனைவடமோ மற்றுமுள
தென்னோ அவையெல்லாம் இங்குண்டாம் இந்நகரில்

இல்லாத தொன்றில்லை இந்நகரின் மாண்புகளைச்
சொல்லாதா ரில்லையினிச் சொல்வதற்கும் எல்லையிலை!

[நனவு]

கண் விழித்துப் பார்த்தேன் கனவெல்லாம் பொய்யாக
மண்ணிட்டு மேடான மாநகரை நான்கண்டேன்

[அன்றும் இன்றும்]

விண்முட்டும் கோபுரங்கள் வீதிகள் பூங்காக்கள்
எண்ணிக்கை யில்லா இவையாவும் மண்கொள்ளக்
கீற்றுக் குடிசைகளும் கீழ்நோக்கும் தென்னைகளும்
நாற்றும் வளராத நன்செய்யும் நான்கண்டேன்!

[தமிழர் கடன்]

பொற்கால மேன்மையெல்லாம் பொய்யில்லை என்
றெடுத்துத்
தற்காலம் காட்டல் தமிழர் கடனன்றோ!
ஆய்வோம்! அகழ்ந்தெடுப்போம் அந்நாளின்
வண்ணங்கள்!
ஓய்வோம் எனவுரையோம்! ஒன்றுபடும் உள்ளத்தால்
சாகாத சின்னங்கள் சான்றுகக் காலத்தால்
போகாத வண்ணம் புதுமைகள் செய்திடுவோம்

[நம் கடமை]

மண்ணை யொதுக்கி, மறைந்திட்ட பேரழகைக்
கண்ணின் விருந்தாக்கிக் காட்சிப் பொருளாக்கி
எந்நாட் டவரும் இவண்வந்து பார்த்தவுடன்
செந்நாத் தடுமாறச் சிந்தை வியப்படைந்து
முன்னுள் தமிழர்தம் மூதறிவைத் தாமுணர்ந்தே
எந்நாளும் போற்ற இவைசெய்தல் நம்கடமை

[பார்க்கும் நாள் வருமோ]

அந்நாள் இருந்த அழகுத் துறைமுகத்தை
இந்நாளிற் கண்டால் எழில்போன வெற்றிடமாய்க்
கப்பல்கள் நின்றவிடம் காட்டுப் புதர்வளர்ந்து
வெப்பப் பெருமூச்சாய் வேதனைதான் மேலோங்கும்!
விண்ணிற் படர்ந்துவரும் விஞ்ஞானக் கண்கொண்டு
மண்ணில் இதற்கேற்ற மார்க்கந்தான் காணுமோ?
சீரோங்கு நன்னகராய்ச் சீர்த்த துறைமுகமாய்ப்
பாரோங்க நிற்பதையும் பார்க்கும்நாள் வந்திடுமோ?
முன்வந்தால் பாரில் முடியாத தொன்றில்லை
பின்வாங்கு வோமா? பெருமைசேர் நம்பணியில்!

[முன் நிற்கச் செய்வோம்]

பொன்றின்று வாழ்ந்த புகார்நகரைப் பூவுலகில்
முன்நிற்கச் செய்வோம் முனைந்து.

பாராட்டுப் பெற்ற கவிதை :

# “தொல்பதியைத் தேடுகின்றேன்”

(புலவர் திரு கி. வேங்கடசாமி)

வானம் சினந்ததோ
  வையம் நடுங்கிற்றோ
மோனப் பெருங்கிழக்கே
  மூண்ட கனலெதுவோ?

ஊழிப் புலியின்
  உறக்கம் கலைந்ததுவோ?
ஆழக் கடலின்
  அமைதி குலைந்ததுவோ?

ஏழு கடலும்
  எழுந்துதிசை தூர்த்தனவே!
ஊளையிடும் காற்றில்
  ஒருதனிப்புள் தேம்பியதே!

தேம்பும் மனப்புள்ளின்
  தீங்கவிதை கேளீரோ?
பூம்புகார் வெள்ளத்தில்
  போனதை கேளீரோ

பண்ணைப் பணைத்த
  பழம்பெரிய சோணாட்டில்

பொன்னைக் கொழிக்கப்
  புனல்கொழிக்கும் காவிரியாம்

அன்னை கடலை
  அணைக்கும் கரையோரம்
பெண்ணின் பெருமையினைப்
  பேசும் துறையோரம்

பண்டொருநாள்
  மானெடுங்கண் மாதவியை,
மாசாத்து வான்மகனை
  கானல் வரியில்

  கலங்கவைத்த பட்டினத்தை,

நெஞ்சே,

நாமொருநாள் காண்போம்
  நடந்த கதைகேட்போம்
தேமொழியின் யாழைத்
  திரும்பவும் பேசவைப்போம்

கானல் வரிப்பாட்டில்
  காட்சி தடுமாறி
மானெடுங்கண் மாதவியை
  மாயத்தாள் என்றெண்ணி
ஊழாம் வினைதான்
  ஒருதனி யாழாய்த்தன்

வாழ்வினையே ஈருமொரு
  வாளான தோவென்று
தான்செய்த தீவினை
  தன்னைச் சுடுமுன்னே

தான்செய்த மாயத்தைத்
  தானுருத்தி மேலிட்டுக்
காவலனார் இல்லம்
  குறுகியதும், கண்ணகிதன்

காவலனைக் கண்டு
  களிமுறுவல் பூத்துச்
சிலம்புள கொண்மெனஅச்
  சேயிழையை அன்றேன்



“எழுக” எனும் போதே
  இழந்துவிட்ட தொல்பதியை

நெஞ்சே,

நாமொருநாள் காண்போம்
  நடந்த கதைகேட்போம்
தேமொழியின் யாழைத்
  திரும்பவும் பேசவைப்போம்
கொள்ளை அழகு
  கொலுவிருக்க, நெய்தலென

வெள்ளைமணல் பூத்து
  விளங்கும் கடற்கரையில்
காரெழுதிக் காமன்
  கலையெழுதிப் போவாரை

‘ஊர்திரைநீர் வேலி
  உழக்கித் திரிவாரை
ஒவ்வாய் நடையென்
  றெருபுள்ளைக் காய்வாரை

கள்வாய்ச் சிறுநீள்ம்
  கண்ணெவ்வா தென்பாரை
பொன்மீன் உணங்கஅதைப்
  புள்ளோச்சிக் காப்பாரை

கண்மீன் உணங்கஅதைக்
  காவாது நிற்பாரை
ஆருயிரைக் கொல்லும்
  அணங்கிதுவோ என்பாரை
ஊர்சுணங்கு மென்முலையால்
  உய்யாநோய் தீர்வாரை

நெஞ்சே,

நாமொருநாள் காண்போம்
  நடந்த கதைகேட்போம்
தேமொழியின் யாழைத்
  திரும்பவும் பேசவைப்போம்

பொன்மயிலை ஒக்குமோ
  பூம்புகார்? அம்மயிலின்
கண்வாற் படந்தான்
  கடற்பரப்போ? ஆங்கே

ஒருசிறகாய்த் தோன்றும்
  ஒருமருவூர்ப் பாக்கம்
மறுசிறகாய்த் தோன்றும்
  மறுபட் டினப்பாக்கம்

பாக்கம் இரண்டும்
  பயில்பூஞ் சிறகாக
மாக்களெனும் பார்ப்பை
  மருவும் மணிமார்பாய்

நாளங்கா டிச்சோலை
  நட்ட நடுவிடத்தில்

நாளும் ஒலிமிகுந்து
  நாள்முழுதும் ஆர்ப்பதுண்
                டாம்!

நெஞ்சே,

நாமொருநாள் செல்வோம்
  நடந்த கதைகேட்போம்
தேமொழியின் யாழைத்
  திரும்பவும் பேசவைப்போம்

தேம்பும் மடநெஞ்சே!
  தேம்பாதே! நாம்விரைவில்
பூம்புகார் காணப்
  புறப்படத்தான் போகின்
                றோம்!

காலம் அழைக்குமென்று
  காத்திருக்கச் சொன்னேன்அவ்
வேழை மனந்தான்
  இனியும் பொறுப்பதுண்டோ?

அண்ணா, நீ,

“பூவிரித்த கானலிலோர்
  போகம் பழுத்ததெனும்
காவிரிப்பூம் பட்டினத்தைக்
  காவியமாய்த் தாரீரோ?

நாவிரிப்பார் பேரவையில்
  நான்வியக்க, நீரந்தப்
பாவிரித்தே என்றன்
  பரிசுபெற வாரீரோ?”

என்றழைத்த அன்பழைப்பை
  இந்த மனங்கேட்டுக்
கன்று குதிப்பதுபோல்
  கட்டவிழ்ந்து கூத்தாட

நான் கேட்டேன்,
“பித்து மனப்பேடே!
  பேரறிஞர் நம்கவிக்கு
வைத்த பரிசென்ன?!
  வழங்கும் தொகையென்ன?!

குத்து மதிப்பெனும்
  கோடிட்டுக் காட்டினரோ
மன்னன் கரிகால்
  வளவனோ நம்மண்ணன்?

பண்டு பதினாறு
  நூறு யிரம்பொன்
உருத்திரங் கண்ணனெனும்
  ஒண்புலவர்க் கேற்ற

பரிசளித்தன் றேபெற்றான்
  பட்டினத்துப் பாலையினை?”
என்றேன், என, என்னை
  ஏளனமாய்ப் பார்த்துவிட்டு

விண்ணென் றெழுந்தந்த
  வேகமனம் பேசியது:
“மன்னன் கரிகாலன்
  மாமரபில் வந்தவனைத்

தென்னர் புகழைத்
  திசைதோறும் வைப்பவனை,
பாட்டு மடைதிறக்கும்
  பக்கமெலாம் நிற்பவனை

ஊற்றுத் தமிழால்
  உலகூட்டும் உத்தமனை,
சாய்ந்த மரபு
  தலைநிமிர்த்த வந்தவனை

ஓய்ந்த கவியை
  உயிர்ப்பித்துத் தந்தவனை
நாம்விரைவில் காண்போம்
  நடந்த கதைசொல்வோம்

பூம்புகார்ப் பட்டினத்தை
  போயின்றே நாம்கொணர்
                வோம்
அண்ணனுக்குக் காட்டி
  அவன்மனத்தை நாம்பெறு
                வோம்
மன்னவன் நெஞ்சைவிட
  மாப்பரிசும் வேறுண்டோ?”

என்றாங்கே,
ஒற்றை மனப்புள்
  உரைப் பறந்ததுவே

நானும்,

கற்பனையாம் தேரைக்
  கடிதுருட்டிப் பின்தொடர்ந்
                தேன்!
அந்தோவந் தோவந்தோ
  அந்தோநான் என்னென்பேன்!

அந்தோவந் தோவந்தோ
  அந்தோஈ தென்னென்பேன்!
ஒற்றை மனப்புள்
  உணர்வற்று வீழ்ந்ததுவே!
கற்பனையாம் தேரும்
  கடலுக்குள் வீழ்ந்துவே!

ஆம். அங்கே;

கண்ட தேதுவுமிலை
  காண எதுவுமிலை
விண்டுரைக்க வொண்ணாத
  வேதனையில் எங்கிருந்தோ

மாயக் குரலொன்று
  மாக்கடலின் ஆழத்தே
ஒய்ந்துறங்கும் பட்டிணத்தை
  உற்றுற்றுத் தேடிற்றே:

''நகரமென நேற்றிருந்த நகர
மெங்கே?
நாகரிகம் வீற்றிருந்த சிகர
மெங்கே?
பகலெங்கே? ஒளியெங்கே? பாழி
ருட்டில்
பழம்புதையல் புதைந்தஇடம்
எங்கே? எங்கே?

கானலிலே யாழெடுத்த கன்னி
எங்கே?
கரையெங்கே? துறையெங்கே?
காதல் எங்கே?
வேனிலெங்கே? மாரலெங்கே?
வீதி எங்கே?
வேந்தனுக்கு விழவெடுத்தார்
சேதி எங்கே?

முறையெங்கே? இறையெங்கே?
முடிகளெங்கே?
முறைமைக்கும் இறைமைக்கும்
குடிகளெங்கே?
அரசெங்கே? முரசெங்கே?
ஆட்சி எங்கே?
அரசுக்கும் முரசுக்கும் வீழ்ச்சி
எங்கே!

குழலெங்கே? யாழெங்கே?
பாண ரெங்கே?
கொட்டெங்கே? தட்டெங்கே?
கூத்தரெங்கே?
அழகெங்கே? கலையெங்கே? ஆட
லெங்கே?
ஆடலுக்கும் பாடலுக்கும்
மாத ரெங்கே?

கம்மியரும் காருகரும் புதைந்த
தெங்கே?
கைவினையும் செய்வினையும்
சிதைந்த தெங்கே?
தொன்மணிகள், பொன்மணிகள்
மறைந்த தெங்கே?
சுண்ணங்கள், வண்ணங்கள்
கரைந்த தெங்கே?

கரையருகே கலங்கரையும்
விளக்க மெங்கே?
கண்விழிக்கும் இடந்தோறும்
விளக்க மெங்கே?
துறையருகே மணிமாட விளக்க
மெங்கே?
தொல்பதியைத் தேடுகிறேன்
விளக்க மெங்கே?

—o—

புகாரில் ஒரு நாள்:

# தேன் துளிகள்

[பரிசும் பாராட்டும் பெற்ற கவிதைகள் அல்லாமல் மற்றக் கவிதைகளிலிருந்து சுவையான பகுதிகளைத் "தேன் துளிகள்" என்ற தலைப்பில் இங்கு தருகின்றோம்.]

வானைத் தொடுமென மாளிகை யின்நிரை
வாவியும் கொண்டதுவாம்!—புகார்
தேனைப் பழிமொழி, மானைநி கர்விழி
தேவியர் மண்டியதாம்!
தூய்மை நெறியினர், வாய்மை யுரையினர்
நல்லியர் வாழ்வதுவாம்!—அது
தாய்மை யுயர்வினைச் செய்மையி லின்றியே
தன்னகம் கொள்வதுவாம்!

—கு. பாலசுப்பிரமணியன்

மேழிச் சிறப்பாலே மிக்கவளந் தேக்கித்தன்
ஆழிக் கணவனுடன் அன்பாய் அணைவதற்குக்
காவிரிய வந்தே கடலோர ஊரிடையிற்
காவிரிபோம் பட்டினமே காவிரிப்பூம்
பட்டினமாம்!
முத்தமிழும் சங்கு முழங்கும் கடல்நகரம்!
முத்தமிழும் பொங்கி விளங்கும் புகார்நகரம்!
நட்டோர் புகும்புகார்! நண்ணார்வந் துட்புகார்!
கெட்டுப் பிறநகரம் கிட்டார்அப் புகார்நகரார்!
வாரியுண்ட நீரின் வளத்தால் பொழிகின்ற
மாரி வளங்குறையா வண்மையினால் காவிரித்தாய்
குன்றிற் பிறந்து குமுறும் கடல்தழுவி
நின்று புகழ்பாடும் நீண்ட புகார்நகரம்!
கோட்டை மதில்மேல் கொடிக்கம்பத் துச்சியின்
மேல்
கேட்டை அழிக்கக் கிளர்ந்தெழுந்து சோழர்பகை
மாயும் படியாக மாற்றாரைக் கொன்றே விண்
பாயும் புலிக்கொடியால் பாராண்ட பண்டைநகர்!

—புதுமதியன்

மடலவிழ் தாழை புன்னை
மணமது சூழக் காதல்
உடலுயிர் கலந்த வாழ்வின்
உயர்மணம் கரையில் சூழக்
கடலுடன் காவி ரிப்பெண்
கலந்திடும் திரு மணத்தின்
திடலதிற் பூம்பு காரின்
திகலெழில் பிறந்த தம்மா!
கள்ளம் அறியார், கலையறிவார்:
கன்னித் தமிழின் கவிதையுடன்
தள்ள முடியாக் குழலிசையும்
தனியாழ் அமுதும் இயல்கூத்தும்
வெள்ள மதுவாய் நெஞ்சினிலே
விளைவிப் பார்காண் புகார்மாந்தர்!
கொள்ளை யழகின் இருப்பிடமாம்
குன்றாப் புகழ்சேர் புகார்வாழி!

—மின்னூர் சீனுவாசன்

—o—





# நெஞ்சை விட்டகலா நினைவுகள்

(மோரூர் திருமதி வாசுகி, எம்.ஏ., எம்.லிட்.,)

இக்கட்டுரை ஆசிரியை, டில்லியில் உள்ள மிராண்டா மகளிர் கல்லூரியில் தமிழ்த் துறையில் பணியாற்றுகிறார். அண்மையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் ஒரு பிரதிநிதியாக அவர் கலந்து கொண்டார். தமிழ் மாநாட்டின் சிறப்பியல்புகள் பற்றி, தெள்ளு தமிழில் சுவைபட இக்கட்டுரையில் கூறுகிறார். மாநாட்டு ஊர்வலத்தைப் பற்றிக் குறிப்பிடும் பொழுது "ஊர்வலத்தைக் கண்டபோது மெய்சிலிர்த்து, கண்களில் இன்பக் கண்ணீர் ததும்பிற்று" என்று அவர் கூறுவது முழுதும் உண்மை. திருமதி வாசுகி அம்மையாருக்கு மட்டுமல்ல, அங்கே கூடியிருந்த இலட்சக் கணக்கான மக்களின் கண்களில் உவகை நீர் பெருக்கெடுத்தோடியது என்று சொன்னால் மிகையாகாது. தமிழக முதல்வருக்கு, தமிழ் உணர்வை வளர்த்த இருபெரும் ஆசான்களில் ஒருவரான மோரூர் கந்தசாமி முதலியார் அவர்களின் புதல்வியார் திருமதி வாசுகி அம்மையார். சென்ற இதழில் இவரைப் பற்றிக் குறிப்பிட்டிருந்தது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

—ஆசிரியர்.

தில்லியிலிருந்து வந்த "சதர்ன் எக்ஸ்பிரஸ்" (Southern Express) இரயில் சென்னை சென்டிரல் நிலையம் அடைந்தது. தாய்நாட்டிற்குத் தமிழ் மொழி மாநாட்டிற்கு வந்திருக்கிறேன் என்ற உணர்வு பொங்கி உள்ளத்தில் இருந்த சோர்வைப் மாற்றிவிட்டது. இரயில் நிலையத்தை விட்டு வெளியே வந்தேன். மாநாட்டின் ஆரம்ப விழா பற்றித் தெருவெல்லாம் தமிழ் முழக்கம் பட்டொளி வீசி பறந்ததைக் கண்டேன். சொல்லொணா இன்பம் இதயத்தில் பரவி நின்றது. "கல்லார்க்கும் கற்றவர்க்கும் களிப்பருளுங் களிப்பே" என்று வள்ளலார் இறைவன் தன்மையைக் கூறியதுபோல், இங்குத் தமிழன்னை அனைவருக்கும் களிப்பையருளும் கன்னித் தமிழாக இருந்தாள் எனலாம்.

## பெண் குலத்திற்கே பெருமை

புத்தாண்டு முதல் நாள் மாநாட்டை ஒட்டிய நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. தமிழ் வளர்த்த சான்றோர் பலருக்குச் சிலையமைத்தபோதும், மகளிர் பெருமைக்கே வழிகாட்டியாக அமைந்த ஔவை சிலையும், தமிழ் நாட்டுத் தனிப்பண்பாக அன்றும் இன்றும் விளங்கும் கற்பு வழி நிற்கும் செல்வியர்க்குக் குன்றின் மேலிட்ட விளக்குபோல் திகழும் கற்புக்கரசி கண்ணகியின் சிலையும் விளங்குவதைக் கண்டு பெண் குலமே பெருமையடைகிறது. அத்துடன் நின்றுவிடாமல் அவர்களை உயர்த்திய பண்புகள் எவையோ அவற்றைப் பின்பற்றி நாமும் உயரவேண்டும் என்று ஒவ்வொரு பெண் உள்ளமும் சிந்திக்கவேண்டும். செந்தமிழ்க் கடற்கரையில் செந்தமிழ்க் காவலர்கள் காத்து நிற்கின்றார்கள். சிலைகளைக் காணும்போது தமிழின் தொன்மையும், வளமும், இனிமையும், சிறப்புந் தோன்றி சிலையென்பதை மறந்து வள்ளுவரையும், இளங்கோவையும் (கண்ணகி சிலை நினைவு), கம்பரையும், பாரதியையும், பாரதிதாசனையும் காண்கிறோம். அவர்கள் தமிழ் முழக்கத்தைக் கேட்கிறோம். அந்த அளவுக்குச் சிலை நம்மைச் சிந்திக்க வைக்கிறது. அவர்கள் வளர்த்த வளமான தமிழ்ப் பயிரைப் பூச்சிகள் அழிக்காமல் தக்க மருந்திட்டுக் காக்க கடமைப்பட்டிருக்கிறோம்.

பல்கலைக் கழகத் தேர்வு மண்டபத்தில் தமிழ் நாட்டுக் கலைகளின் சிறப்பை எடுத்துக் காட்டும் கண்காட்சியை மூதறிஞர்—இராஜாஜி அவர்கள் தொடங்கி வைத்து உரையாற்றினார்கள். பல்கலைக் கழக துணைவேந்தர் டாக்டர் ஏ.எல். முதலியார் அவர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் சிறந்த சொற்பொழிவு நிகழ்த்தினார்கள். மக்கள், கலைக் காட்சியைக்காண உள்ளே சென்று

அருங்கலைச் செல்வங்கள் பலப்பல இடம் பெற்றுள்ளதைக் கண்டு மகிழ்ந்தனர். தமிழ்நாட்டுக் கோயில்களில் தெய்வங்களுக்கு அணிவிக்கப்படும் ஆபரணங்களும், சுடர்விட்டு ஒளி வீசும் குத்துவிளக்குகளும் இருந்தன. சிறந்த வைத்திய மூலிகைகளும், சித்த வைத்தியங்களும் இடம் பெற்றன. தமிழர்களின் இலக்கியப் படைப்புகளைச் சித்தரிக்கும் கைவண்ணங்களும் கண்காட்சியாகத் திகழ்ந்தன.

### வரலாறு கண்டிராத எழுச்சி

உலகத் தமிழ் மாநாட்டு விழாவையொட்டிச் சென்னை நகரமே விழாக்கோலம் பூண்டு விளங்கியது. பூம்புகாரிலிருந்து புறப்பட்ட பெரியதோர் ஊர்வலம் கண்கொள்ளாக் காட்சியாகத் திகழ்ந்தது. உள்ளத்தைத் தொடும் காட்சிகளை, அலங்கார வண்டிகளில் கண்டபோது மெய்சிலிர்த்துக் கண்களில் இன்பக் கண்ணீர் தளும்பிற்று. அதியமான் ஔவைக்கு நெல்லிக் கனி அளித்தது, பாரி முல்லைக்குத் தேர் ஈந்தது, கண்ணகி பாண்டியன் முன் வழக்குரைத்தது, முரசு கட்டிலில் மோசிகீரனார் உறங்கியது, ஆராய்ச்சிமணி அடிக்கும் பசு, இன்னும் இவை போன்ற பழம்பெருமைகளை விளக்கியும், கிராமிய நிகழ்ச்சிகளும், கரகம், பரதம் போன்றவையும் இடம் பெற்றன. நக்கீரர் இயற்றிய திருமுருகாற்றுப்படையின் விளக்கம், முருகனும் ஆறுபடை வீடுகளும் இருந்த சிறப்பைக் கண்டபோது சங்க இலக்கியத்தைப் பொது மக்கள் அறியுமாறு செய்த பெருமையினை நினைந்து மகிழ்ந்தேன்.

### கற்பனையிலும் எண்ண இயலாத பெருவிழா

அன்று மாலை (3-ம் தேதி) கடற்கரையில் தொடக்க விழாவிற்காக மக்கள் கூடியிருந்தனர். இலட்சக்கணக்கான மக்கள் அமைதியான முறையில் கூடியிருந்ததும் அவர்கள் காட்டிய ஆர்வமும், கட்டுப்பாடும், கண்ணியமும் பிறநாட்டினரை வியக்கச் செய்தது. ஒவ்வொரு உள்ளமும் தன் தாய்மொழியின் சிறப்பை எண்ணியே பொங்கும் மகிழ்ச்சியுடன் காணப்பெற்றது. கற்பனையிலும் நினைக்க முடியாத ஒரு பெருவிழா மொழிக்காக நிகழ்வதை நோக்கும்போதே தமிழின் பெருஞ்சிறப்புத் தோன்றுகிறது. இந்தியக் குடியரசு தலைவர் டாக்டர் சாகிர் உசேன் அவர்கள் ஆற்றிய சிறந்த உரை, அவருக்கு இருந்த தமிழ் இலக்கியப் புலமையையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்தியதுடன் மக்கள் மனத்தைக் கவர்ந்ததாகவும் அமைந்தது. அமைச்சர்கள் பலரும் பங்குகொண்டு உரையாற்றினர்.

இந்த நன்னாளில், வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய அரியதோர் சாதனையைத் தமிழக அரசு செய்தது குறித்து, தமிழ் நெஞ்சங்கள் பூரித்து மகிழ்கின்றன.

அதாவது திருக்குறள் ஆராய்ச்சிக்கென மும்மூன்று இலட்சம் ரூபாய், மூன்று பல்கலைக் கழகத்திற்கும் அந்தந்தப் பல்கலைக் கழக துணைவேந்தர்களிடம் பொதுமக்கள் அறிய அளித்தது மிகச் சிறப்பானதாக இருந்தது. உலகம் உள்ளவரை இந்த அரிய செயல் நிலைபெற்று வளரும், வாழும் என்று நினைக்கும்போது நெஞ்சம் நிறைந்த மகிழ்ச்சி ஏற்படுகிறது. கடைசியாகப் பலவகையான புதுமுறை வாணவேடிக்கைகளைக் காணப் பெற்ற மக்கள் மகிழ்ச்சி பொங்கும் உள்ளங்களோடு இல்லம் நோக்கி நடந்தனர்.

பிரதிநிதிகளுக்கு என்று அமைக்கப்பட்ட விரைவு வண்டிகளில் (Express Bus) நானும் மற்றவர்களுடன் சேர்ந்து இரவு விருந்துக்குச் சென்றேன். அன்றையிலிருந்து தில்லி திரும்பும்வரையும் அமுதான விருந்தோடு உபசரித்த முறையைப்பற்றிச் சொல்வதற்குரிய ஆற்றல் இல்லையென்றே சொல்லலாம். மிகச் சிறந்த முறையில் அமைக்கப்பட்ட பல்வேறு உணவுவகைகளைக் காணும்போது, எதை எடுத்து உண்பது என்று தெரியாமல் திகைக்க வேண்டியதாக இருந்தது. முடத்தாமக் கண்ணியார் எழுதிய பொருநராற்றுப்படையில் சோழன் அரண்மனையில் புலவர்களுக்கு அளித்த சிறப்பும், விருந்தும் நினைவுக்கு வந்தன. தமிழ் இலக்கியங்களில் விருந்து உபசரித்த முறை சான்றுகள் பல உள்ளன. அவற்றையெல்லாம் கடந்து நின்றது, இந்த முறை தமிழகத்து புலவர்களுக்கு விருந்து அளித்தது என்றுதான் கூற முடியும். உள்ளே நுழையும்போதே தமிழ்ப்பண்பாட்டை விளக்குவதுபோல் சந்தனம், பன்னீர், மலர்கொடுத்து அழைத்தது மிகச் சிறப்பாக இருந்தது. மிக்க அன்பும், பணிவும், இனிய முகமும், புன்முறுவலும் கொண்டு எங்களை உபசரித்த முறையைச் சிறப்பாகக் கூறவேண்டும். ஏதோ ஓர் இனிய உலகில் இருப்பது போன்றே மிதந்து இருந்தேன். உணவுவகைகளைத் தயார் செய்தவர்கள் திறமையைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. பலவகைகள் ஒரு நாளும் ஒரு குறையுமின்றி செம்மையாகவும், சுவையாகவும் தயார் செய்து காலமறிந்து அளித்த அவர்களின் அன்பை நினைத்துப் பார்த்து மகிழ்ச்சியோடு நன்றி சொல்லுகிறேன்.

### கண்ணுக்கினிய காட்சி—கருத்துக்கு விருந்து

கலைநிகழ்ச்சிகளின் சிறப்பை எப்படிச் சொல்வது என்று தெரியவில்லை. தலைசிறந்த நடிகர்களும், நடிகைகளும், கலைஞர்களும், இசைப்பேறிஞர்களும் பங்கேற்று அளித்த கலைநிகழ்ச்சி கண்ணுக்கு இனிய காட்சியாகி கருத்திற்கும் சுவையான விருந்தாகியது. பெருங்குறை என்னவென்றால் அன்றாட நிகழ்ச்சி நிரலைக் காணும்போது எங்கு போவது என்ற குறையேற்படும். மனமின்றி ஓர் இடத்துக் கலை நிகழ்ச்சிக்குப் போகமுடியாமல் விட்டுவிடுவேன். இவ்வாறே எல்லா நாட்களும் கண்ணுக்கும், கருத்துக்கும், அரியதோர் விருந்தினை அளித்த சிறப்பை எண்ணி மகிழ்கிறேன்.

கருத்தரங்கு பல்கலைக்கழக நூற்றாண்டு மண்டபத்தில் இனிய நாதசுர இசையுடன் ஆரம்பமாகும். இறைவணக்கம் திருக்குறளோடு ஆரம்பமாகி, பாரதியார் பாடலில் “யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்” என்ற வரி தமிழ் உள்ளங்களைத் தொட்டிழுக்கும் முறையில் தொடர்ந்து பாடி முடிப்பர். ஆராய்ச்சிக் கட்டுரைகள் பலர் படிப்பார்கள். ஆர்வமுடன் கேள்விகளைக் கேட்டு ஐயங்களைத் தீர்த்துக் கொள்ளவும், புதிய கருத்துக்களைத் தெரிந்துகொள்ளவும் வாய்ப்புக் கிடைத்தன. ஆயினும்

[20-ம் பக்கம் பார்க்க.]





# மறக்கமுடியாத மாநாட்டு நினைவுகள்

(திரு. ஏ. ரங்கநாதன்)

“ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனைச்
சான்றோன் எனக் கேட்ட தாய்”

இந்தக் குறளை எத்தனை தமிழர்கள், உட்பொருளை உணர்ந்து, சரியான பொருள் சொல்ல முடியும்? தமிழர்களின் நிலை இப்படி இருக்கும்போது, தமிழ் நாட்டிலிருந்து ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து வாழும் ஐரோப்பியர் ஒருவர் இந்தக் குறளை பழுதற்ற உச்சரிப்புடன் சொல்லி, பொருளையும் விளக்குவாரானால், யார்தான் வியக்காதிருக்கமுடியும்!

### ருஷ்ய அறிஞர் சொன்ன குறளின் பொருள்

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டிற்கு வருகை தந்த ருஷ்யக் குழுவினருள் ஒருவரான பேராசிரியர் எஸ். ஜி. ரூடின் (S. G. Rudin) மேற்கூறிய குறளைச் சொன்னபோது, என் காதுகளையே நான் நம்பமுடியவில்லை. அவரிடமே, குறளின் பொருளைக் கூறுமாறு கேட்டபோது அவர் புன்னகையுடன் விளக்கம் சொன்னார்.

திரு. ரூடின் அவர்கள் மூன்று ஆண்டுகளுக்கு முன்னதாகவே திருக்குறள் ருஷ்ய மொழியில் மொழிபெயர்க்கப் பட்டுவிட்டதாகச் சொன்னார். அருகிலிருந்த ரஷ்ய குழுவின் தலைவர் திரு. செலிசேவ் இந்தக் கூற்றை ஆமோதித்தார்.

ஜனவரி ஆறும் நாள் கருத்தரங்கில் பேசிய ஸ்விட்சர்லாந்து தேசத்தைச் சேர்ந்த டாக்டர் கார்ல் தெல்லர் (Dr. Garl Deller) தமிழில் பேசுவதை மிகத் தெளிவாகப் புரிந்துகொண்டார். அவருடன் எங்களோடு பேச்சில் கலந்துகொண்ட பேராசியர் ரூடின் அவர்கள் குறளைப் பற்றி மேலும் விளக்கவுரை கொடுத்தார்.

“ஒரு தாய் பேருவகை அடைவது இரண்டு முறை என்று திருவள்ளுவர் சொல்லுகிறார். இந்தக் கருத்துக்காக வள்ளுவருக்கு நான் தலைவணங்குகிறேன். ஆனால் தமிழ் இலக்கியங்களைப் படிப்பவர், ஒரு தாய் மூன்றுமுறை களிப்படைவாள் என்று சொல்லலாம். அதாவது, அவள் முதல்முறையாக, தனக்கு ஆண்குழந்தை பிறந்தபோதும், அடுத்ததாக, அந்த ஆண்மகன் வளர்ந்து கல்விக் கேள்விகளால் சிறந்தவனாகும் போதும் களிப்படைவாள். இரண்டையும் விட, மாற்றானின் அம்பு மார்பில் துளைத்து அந்த மகன் மடிந்தான் என்று அறிந்தபோது களிப்பு மிக்கவளாவாள்” என்றார்.

இதைக் கேட்டதும் நானும், சங்க நூல்களை நன்கு பயின்ற என் நண்பர்களிருவரும் உண்மையிலேயே பிரமித்துப் போய்விட்டோம்.

பிரபல முஸ்லிம் வணிகர் ஒருவர் அளித்த விருந்தில், ருமேனிய நாட்டுப் பிரதிநிதியாகிய டாக்டர் டெமிட்ரியன் (Dr. Demetrian) என்ற பெயருடைய அறிஞரோடு அறிமுகமாகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. இவர் மேல்நாட்டுப் பாணியில் உடை அணிந்திருந்தும், தலையில் காந்திக்குல்லாய் அணிந்திருந்தார். இதைப்பற்றி அவரிடம் கேட்டபோது, அவர் ஒரு சொற்பொழிவே நிகழ்த்திவிட்டார்.

“காந்தியின் அரசியல் கொள்கையை முழுக்க ஆதரிக்காவிட்டாலும், அவரை உலகம் போற்றும் உத்தமராக, இயேசு, புத்தர், முஹமது நபி போன்ற மகான்களுடன் வணககத்திற்குரியவராகக் கருதுகிறேன். அவரிடம் எனக்குள்ள பக்தியையும் மரியாதையையும் காண்பிக்கும் நோக்கத்துடன்தான், நான் இந்தக் காந்திக் குல்லாயை இந்தியா வந்ததும் அணிய ஆரம்பித்தேன்” என்றார்.

[கட்டுரை ஆசிரியர் திரு. ஏ. ரங்கநாதன் தமிழார்வம் மிக்கவர். உலகத் தமிழ் மாநாட்டில் கலந்துகொண்ட மேலைநாட்டுத் தமிழ் அறிஞர்களைப் பற்றிச் சுவைபடச் சொல்லுகிறார் தன்னுடைய கட்டுரையில்.

—ஆசிரியர்.

சிகப்பு கூரை நாட்டுப் புடவை கட்டி, நெற்றியில் குங்குமப் பொட்டுடன் வந்து நின்று அழகிய இளம் பெண்ணைப்

—20-ம் பக்கம் பார்க்க

நெஞ்சை விட்டகலா நினைவுகள்—[18-ம் பக்கத் தொடர்ச்சி]

காலம் போதிய அளவு இல்லாததால் மேலும் பல அறிஞர்கள் படிக்கும் வாய்ப்பைப்பெற முடியாமல் போய்விட்டதுடன், அவர்கள் கருத்துக்களை அறியவும் இயலாமல் போய்விட்டது.

### இதயத்தில் பதிந்துவிட்ட பூம்புகார்

பொதுமக்கள் மனங்குளிர அமைந்த பூம்புகார் சிறப்பைக் காணுதல் வேண்டும். பழம்பெரும் நகரை நினைவுபடுத்தும் பெயரைத் தாங்கி, அழகும், பொலிவும் பெற்றுத் திகழ்ந்தது. அறிஞர்களும், பொதுமக்களும் கலந்துகொண்டு விழாவைச் சிறப்பாக நடைபெறும்படி செய்தனர். ஊக்கத்துடனும், ஆர்வத்துடனும் ஆடவரும் மகளிரும், குழந்தைகளும் சளைக்காமல் சொற்பொழிவுகளைக் கேட்கவும், பட்டி மன்றத்தைப் பார்க்கவும், கவியரங்கைக் காணவும், புலவர் குழுவுக்குச் சிறப்புச் செலுத்தவும் வந்து குவிந்தனர். ஒரு நாள் பட்டி மன்றத்தில் 'அன்பில் சிறந்தவர் யார்? கண்ணகியா? மாதவியா?' என்பது குறித்து பலர் பேசியதைக் கேட்டபோது என் உள்ளத்தில் ஐயமேற்பட்டது. அந்த அளவுக்கு இருதரப்பிலும் ஆற்றல்மிக்க பேச்சுத்திறனால் பொதுமக்கள் மகிழ்ச்சி நிறைந்த கைதட்டல் ஆரவாரத்தைப் பெற்றார்கள். அன்று பூம்புகார் அமைப்பையும், சிறப்பையும் கண்டு சுற்றிப் பார்த்தேன். அழகான தமிழ்ச்சொற்கள் கடைகளின் பெயராக இருந்தன. பொதுமக்கள் காண்பதற்கென்றே ஊர்வலத்தில் இடம் பெற்ற அலங்கார வண்டிகள் நிறுத்தப்பட்டிருந்தன. என்னைக் கவர்ந்தது வண்ணக் கோலக் காட்சியாகும். நெல் உமியையும், மணலையும் கொண்டு பல வண்ண ஓவியங்கள் போன்று கையினால் கோலங்கள் போடப்பட்டிருந்ததை நோக்கும்போது, கலைத்திறனைப் பாராட்ட வேண்டியதாகும். தமிழ் நாட்டில கோலம் போடுவது மரபாக இருந்தாலும் மார்கழி மாதத்தில் சிறப்பாகவும், அழகாகவும் தெருக்களில் வெண்மையான கோலப் பொடியும், குருவிக்கல் (செம்மண்) பொடியும் சேர்த்துப் போட்டுத் தெருவிற்கே அழகையும் தனியான கலையையும் அளித்துவிடுகிறது. பெண்களின் கைத்திறனாலும் இன்று அந்தக் கலை எவ்வளவு சிறப்பாக வளர்ந்துள்ளது என்று வண்ணக் கோலக் காட்சியை நோக்கப் புலனாகிறது. அந்தக் கலை வளரவேண்டும். அதற்கு வாய்ப்புத் தரவும் வேண்டும்.

### அன்னைக்குச் செய்யும் சேவை

தமிழ்நாட்டுப் பல்துறை அறிஞர்களும், இளைஞர்களும், மகளிர்களும் சளைக்காமல் இன்முகங்காட்டி எங்களை உபசரித்த முறையை நினைக்குந்தோறும் நெஞ்சம் நெகிழ்கிறது. மகிழ்ச்சி பொங்குகிறது. மேலும் தொண்டர் படைகளும், காவற்காரர்களும், விரைவு வண்டி ஓட்டுபவர்கள். அதில் பணியாற்றியவர்களும் பொறுப்பும், கடமையும் கொண்டு நடந்ததுடன் இன்றி, அன்பான தமிழ்க் குரலையும் பெற்றிருந்தனர். எனவே இந்தத் தமிழன்னையின் சிறந்த விழாவில் ஒவ்வொருவரும் தன் தாய்க்குச் சேவை செய்வதாகவே நினைத்து அன்பும், பண்பும், ஆர்வமும் கொண்டு பணியாற்றினர். அவர்கள் ஒவ்வொருவரையும் இந்தப் பட்டியலில் குறிக்கப்படாமல் விடப்பட்டிருக்கும். எல்லா சகோதர சகோதரிகளுக்கும் என் அன்பு கலந்த நன்றியை வணக்கத்துடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

தில்லிக்குத் திரும்பும் நாள் நெருங்கி வருவது நினைவு வந்தபோது கண்கள் கலங்கின. தேமதுரத் தமிழோசை தெருவெல்லாம் முழங்கும் சிறந்த காட்சியையும், பூம்புகாரில் நடந்த நிகழ்ச்சி – சிலப்பதிகாரத்தையும், இந்திர விழாவையும் நினைவுபடுத்தி வருவதையும் கண்டு கேட்டு மகிழ்ச்சியோடு இருக்கும் தமிழ் நாட்டை, தாய்நாட்டைப் பிரியுங்கால் நெஞ்சம் பொறுக்காத துன்பத்தைத் தாங்கியே வந்த என்னை சென்ட்ரல் நிலையத்திலிருந்து சதர்ன் எக்ஸ்பிரஸ் இரயில் சுமந்து புறப்பட்டது.

தமிழ்த்திருநாடே! தாய்த்திருநாடே!
வாழ்க! வளர்க!!

---

மாநாட்டு நினைவுகள்—[முன் பக்கத் தொடர்ச்சி]

பார்த்து, 'இவர் எந்த நாட்டுப் பிரதிநிதியோ' என்று நாங்கள் திகைத்து நின்றபோது, அவரே நெருங்கி வந்து, தாய்லந்து நாட்டிலிருந்து வந்த பிரதிநிதியென்று தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டார். அவர் ஆங்கிலமும் தமிழும் கலந்து பேசினார்.

### அரியதொரு வாய்ப்பு

இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் கலந்து கொண்ட எல்லாப் பிரதிநிதிகளும், தங்களுடைய தாய்மொழிகளிலும், தமிழ் நடையிலும் பேசினார்கள். ஐரோப்பிய பிரதிநிதிகள் தமிழைக் கற்பதிலும், பிழையின்றி பேச முயலுவதிலும், பல்வேறுபட்ட ஆராய்ச்சிகளை நடத்துவதிலும், காட்டிய உண்மையான ஆர்வமும் ஊக்கமும் தமிழன்பர்களுக்கு ஆர்வத்தைத் தூண்டுவதாக அமையவேண்டும். ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பாலிருந்து வந்திருந்த இந்த மேனாட்டு அறிஞர்கள், தமிழ் பேசுவதைக் கேட்கும் வாய்ப்பே அரியதுதான்.

ஏறக்குறைய எல்லா ஐரோப்பிய பிரதிநிதிகளும் தமிழ்ச் சொற்களைச் சரியாகத்தான் உச்சரித்தார்கள். உச்சரிப்பதில் அவர்களுக்குச் சிரமம் கொடுத்த எழுத்துக்கள்— 'ழ, ள,' போன்றவை. 'வாழைப்பழம்' என்பதை, 'வாளப் பளம்' என்று, இந்த தமிழ் மண்ணிலே பிறந்த சிலர் சொல்வதில்லையா?

இலங்கை அமைச்சரின் மனைவியார் திருமதி புனிதவதி திருச்செல்வம் அவர்கள், மாநாடு ஆரம்பிப்பதற்கு மூன்று வாரங்களுக்கு முன்பே சென்னை வந்து, மாநாட்டு நிர்வாகிகளின் அரும்பெரும் பணிக்குத் தன்னாலியன்ற உதவியை அளித்ததாக, தன்னடக்கத்துடன் சொன்னபோது, அவர் திருச்செல்வத்திற்கேற்ற புனிதவதி தான் என்று நினைக்கவே எனக்கு தோன்றியது.

—0—

# “சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்”...

[திரு ஏ. கோபாலகிருஷ்ணன், ஆணையாளர், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம்,
இராமநாதபுரம் மாவட்டம்.]

பொங்கல் நன்னாளை நாடெங்கிலும் ஏர்முனை திருவிழாவாக நடத்த தமிழக அரசு பணித்துள்ளது. இத்திருவிழாவின் போது புத்துணர்ச்சியும் புது வேகமும் கொடுத்து விவசாயிகளுக்கு அமோக விளைச்சலை ஏற்படுத்த நம்மை அர்ப்பணித்துக்கொள்ள வேண்டுமென்பது தமிழக அரசின் அவா.

எத்துறையிலும் ஏற்றம் பெற்று பீடு நடை போடும் தமிழன்னைக்கு மற்றுமோர் அணிகலனாய் அமைந்தது மாண்புமிகு முதலமைச்சருக்கு கிராமநலத் துறையின் அமைச்சர் மாண்புமிகு திரு முத்துச்சாமி அவர்கள் அளித்துள்ள சிறப்புத் திட்டங்கள். இத்திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சரின் பிறந்த தினமாகிய 1968-ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 15-ம் நாளுக்கு முன்பு நிறைவேற்றி தங்களது காணிக்கையை, சமர்ப்பிக்க வேண்டுமென்பது ஊராட்சி ஒன்றியங்களின் குறிக்கோள்.

இராமநாதபுரம் மாவட்ட அளவிலான ஏர் முனை விழாவும், மாண்புமிகு முதலமைச்சருக்குரிய காணிக்கைச் சிறப்புத் திட்டத்தின் தொடக்க விழாவும் பொங்கல் புது நாளன்று திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள திருவிடையார்பட்டி என்ற கிராமத்தில் மாண்புமிகு சட்டம், கூட்டுறவு அமைச்சர் திரு மாதவன் அவர்களால் நடத்தி வைக்கப்பட்டது.

ஏர்முனை விழாவிலே தரிசாக இருக்கும் விளை நிலங்களைப் பண்படுத்தி பாசன வசதி ஏற்படுத்தி புஞ்சைகளை நஞ்சைகளாகவும், நஞ்சைகளை இரு போக நஞ்சைகளாகவும் ஆக்க வேண்டும் என்பது திட்டத்தின் ஓர் அம்சம். இதற்காக ஊராட்சி ஒன்றியங்கள் இயந்திர உழவுக் கருவிகளை வாங்கி விவசாயப் பெருங்குடி மக்களுக்கு மலிவு வாடகையில் அளிக்க வேண்டுமென்பதும் குறிக்கோள். திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் விவசாயிகளுக்கு வளமளிக்கும் திட்டத்தை துரிதமாக செயல்படுத்த முயற்சி எடுத்து, இராமநாதபுரம் மாவட்டத்திலேயே முதலாவதாக 1968-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 6-ம் நாளன்று ஓர் இயந்திர உழவு கருவியை (எஸ்கார்ட் டிராக்டர்) வாங்கியுள்ளது.

மேற்படி உழவுக் கருவிக்கு இணை இயந்திரங்களாக கொழுக் கலப்பை, கூண்டுக் கலப்பை, கட்டிக் கலப்பை சமப்படுத்திப் பரம்படிக்கும் இயந்திரம் இணைப்பு வண்டி ஆகியவை சுமார் ரூ. 40,000 செலவில் வாங்கப்பட்டுள்ளது. இவ்வியந்திர உழவுக் கருவியை மாண்புமிகு சட்டம் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் இத்திருவிழாவின்போது இயக்கி வைத்தார்கள். ஓராண்டுச் சிறப்புத் திட்டத்தின் கீழ் வாங்கப்பட்டுள்ள 'கிரிஷி பவர் டில்லர்'ரும் விவசாயிகளுக்கு குறைந்த வாடகைக்கு விடப்பட்டு வருகிறது.

**பாலைவனம் சோலைவனமாயிற்று!**

பெரும் பாசனத் திட்டங்களை நிறைவேற்றும் வாய்ப்புக்களையெல்லாம் முற்றிலும் பயன்படுத்திய பின்பு, பாசன வசதிகளை மேலும் பெருக்குவதற்குள்ள ஒரே சாத்தியக் கூறு, பூமிக்கடியிலுள்ள தண்ணீரை கிணறுகளில் பம்புகள் செட்டுக் அமைப்பதன் மூலமாக விளை நிலங்களாக பயன்படுத்துவது தான். இதை நன்கு உணர்ந்து கொண்ட தமிழக அரசு இத் திட்டங்களுக்குப் பெரு நிதி அளிக்க முன் வந்தது போற்றத் தக்கது. தனிப்பட்ட முறையில் கடன் பெற்று பாசனக்

இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், திருவிடையார்பட்டி என்ற கிராமத்தில் மாவட்ட அளவிலான ஏர் முனை விழாவும், மாண்புமிகு முதலமைச்சரின் பிறந்த தின காணிக்கைச் சிறப்புத் திட்டத்தின் துவக்க விழாவும், பொங்கல் திருநாளன்று நடைபெற்றன. மாண்புமிகு சட்டம், கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு எஸ். மாதவன் அவர்கள் இச்சிறப்பு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டார்.

அவ்விழாவினைப் பற்றியும், கிராம வளர்ச்சிப் பணிகளை சிறப்புடன் ஏற்று நடத்தும் திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்றுவரும் ஆக்க வேலைகளைப் பற்றியும் விவரிக்கிறது இக்கட்டுரை. மற்ற ஊராட்சி ஒன்றியங்களின் பணிகள் பற்றிய விவரங்கள் தொடர்ந்து ''கிராமநல''த்தில் வெளிவரும்.

— ஆசிரியர்

கிணறு மின்னிறவை இயந்திரமும் அமைத்துக்கொள்ள இயலாத நிலையிலுள்ள எண்ணற்ற விவசாயிகளுக்கு சமுதாயக் கிணறு அமைக்கும் திட்டம் அரசு அளித்த ஒரு பெரும் வாய்ப்பாகும்.

சமுதாயத்திற்கு பாத்தியப்பட்ட பொது இடங்களிலோ அல்லது தனி நபர் உரிமை விட்டுக் கொடுக்கும் இடங்களிலேயோ இக்கிணறுகளை அமைத்து மின் இறவை இயந்திரம் மூலம் தண்ணீர் வழங்கும் பொறுப்பை ஊராட்சிகள் ஏற்று நடத்தி இதற்கான கட்டணத்தை வசூல் செய்து விவசாய மக்களுக்கு உதவலாம் என்பதே இத்திட்டத்தின் கருத்து. இத்திட்டத்தை அமுல் நடத்துவதில் முதல் கட்டமாக திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம் இரண்டு சமுதாயக் கிணறுகளை திருவுடையார் பட்டி ஊராட்சியில் அமைத்து, மின் இறவை இயந்திரத்தை இயக்கி வைக்கும் பணியைப் பொங்கல் நன்னாளில் ஏர் முனை விழாவின் ஓர் அம்சமாக, மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கொண்டு நடத்தி வைத்தது, பெருமைக்குரிய நிகழ்ச்சியாகும். அமைச்சர் அவர்கள் மின் விசையை அழுத்தியதும் வற்றாத ஊற்றுள்ள கிணற்றிலிருந்து கடல் மடை திறந்தாற் போல் பெரு வெள்ளம், வலிமை மிக்க இளைஞர்கள் வகுத்த வாய்க்கால் வழியோடி காய்கறித் தோட்டத்தை அடைந்தது, அன்றைய துவக்க விழாவில் ஒரு கண்கொள்ளாக் காட்சி.

சில தினங்களுக்கு முன்பு வரை முட் புதரும் சப்பாத்திக் கள்ளிகளும் முளைத்து, புதர் நிரம்பி விஷப் பிராணிகளின் உறைவிடமாக இருந்த அவ்விடம், இயந்திர உழவுக் கருவியின் துணைக் கொண்டு, புதர் நீக்கி, காய்கறித் தோட்டமாக காட்சி அளித்தது.

மதுரை தேவகோட்டைப் பெருஞ்சாலையின் ஓரத்திலே அமைக்கப்பட்டுள்ள இக்காய்கறித் தோட்டம், சமுதாயக் கிணறுக்கு அருகாமையிலேயே அமைந்துள்ள தோடு, கல் நாட்டி முள்வேலி அமைத்துள்ளபடியால் பாசன வசதியும் தக்க பாதுகாப்பும் பெற்றுள்ளது.

இரணசிங்கபுரம் கிராமத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் துவக்கி வைக்கப்பட்ட காய்கறித்தோட்டம் ஓர் ஏக்கர் பரப்பு உள்ளது. இதில் நெல்லும் காய்கறியும் விளைவிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் பள்ளி இளஞ்சிறார்களின் உறுபசி தீர்க்க உணவளிக்க வழி வகை செய்ய முயற்சியெடுக்கப்பட்டுள்ளது.

வான் பொய்த்த நேரத்தில் ஏற்பட்ட வறட்சியின் காரணமாக வளமான நிலத்திலும் ஆண்டு ஒன்றுக்கு ஒரு மகசூல் கூட எடுக்க முடியாத நிலை உள்ளது. பூத்துக் குலுங்கிப் பொதிகட்டும் வேளையில் தண்ணீர் பற்றாக் குறையினால் பயிர்கள் கருகி விடுவது இப்பகுதியில் அடிக்கடி காணும் காட்சி. தமிழக மின் குழு ஊழியர்கள் இப்பகுதியில் விசேஷத் திட்டமிட்டு கிராமங்களுக்கு மின் விசையை துரிதமாகக் கொண்டு செல்லும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது மகிழ்ச்சிக்குரியது. அவர்களுக்கு ஊராட்சி ஒன்றியத்திலிருந்து மின் இறவை இயந்திரம் பொருத்துவதற்கு, 13 பேர்களுக்கு ரூபாய் 30,000 கடனாக வழங்கப்பட்டது ஏர் முனை விழாவின் மற்றுமொரு அம்சமாகும்.



மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர் இரணசிங்கபுரத்தில காய்கறித் தோட்டத்தைத் துவக்கி வைத்தார்.

## கருத்தைக் கவரும் விவசாயக் கண்காட்சி

விவசாயத்தில் திருந்திய முறைகளைப் பரப்புவதற்காகவும் மிகு விளைச்சல் தரும் தானிய வித்துக்கள் பற்றியும் அவற்றிற்குரிய செயல் முறை நேர்த்திகளையும், செயற்கை உரத்தை மட்டும் நம்பி இராமல் தழை உர, மரங்களையும் பயிரிடுவதற்கான அவசியத்தை வலியுறுத்திக் காட்டியும் அமைக்கப்பட்டுள்ள விவசாயப் பொருட்காட்சியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்கள். வளமான கால் நடைகளையும் கோழிகளையும் வளர்த்து முட்டை, பால் போன்ற உப உணவுகளைப் பெருக்குவது இந்நேரத்தில் எவ்வளவு முக்கியமான பணி என்பதை விளக்கிக் காட்டும் வகையில் ஒரு கால் நடைக் கண்காட்சியும் அமைக்கப்பட்டிருந்தது. அவ்வமயம் சிந்தி, முர்ரா, பொலிகாளைகள் காட்சியில் இடம்பெற்றன. மிகு விளைச்சல் பற்றிய எல்லாக் குறிப்புகளும் அடங்கிய பிரசுரம் ஒன்று விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. அமைச்சர் அவர்கள் கிராமத் தொழிலாளிகளின் உள்ளங்களிலும் உவகைப் பொங்கு மளவில் ஒரு தொழில் சேவை நிலையத்தையும் ஆரம்பித்து வைத்தார்கள். திருவிடையார்பட்டி கிராமத் தச்சுத் தொழி



லாளர்களுக்குப் பயனளிக்கும் வகையில் இத்தொழில் சேவா நிலையமும், தொழில் கருவிகளும் இவ் வூராட்சி ஒன்றியத்தினால் வழங்கப்பட்டது.

பின்னர் இன்று புரட்சிகரமாகக் கருதப்பட்டுள்ள சமுதாயக் கிணறு திட்டத்தை கடந்த ஓராண்டு காலமாக நடத்தி வரும் திருவிடையார்பட்டி ஊராட்சியின் சமுதாயக் கேணியை அமைச்சர் அவர்கள் பார்வையிட்டார்கள். மின் விசையை அழுத்தி நீர்ப்பாய்ச்சி பின்பு நிறுத்தியதும் கிணற்றில் பொங்கி மேலெழும் ஊற்றின் காரணமாக நீர் மட்டம் உயர்வதை அமைச்சர் கண்டு மகிழ்ந்து இப்பகுதியில் வற்றாத நீர் ஊற்று இருப்பதின் காரணமாக மேலும் பல சமுதாயக் கிணறுகளை அமைக்குமாறும் விவசாயத் துறை அரசாங்க ஆணை 121-ல் கண்டுள்ள மானியக் கடன் உதவி வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ளுமாறும் ஆணையிட்டார்கள். பின்னர் ஊராட்சி ஏற்று நடத்தி வரும் மாந்தோப்பினைப் பார்வையிட்டு அது மிக்க பயனுள்ளவகையில் அமைந்துள்ளது பற்றி தமது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள்.

ஏர்முனை விழாவை ஆரம்பித்து வைக்கும்போது அமைச்சரவர்கள் தமிழக அரசு விவசாயிகளின் வாழ்வு வளம் பெறத் தீட்டியுள்ள நல்ல பல திட்டங்கள் பற்றி விளக்கிக் கூறினார்கள். சமுதாயக் கிணறு, கிராமங்களுக்கு மின் வசதி அளித்தல், இறவை இயந்திரக் கடன் இவைகளுக்காக அரசு அள்ளி அள்ளிக் கொடுக்க முன் வந்துள்ளது என்பதை மக்களின் மகிழ்ச்சி ஆரவாரத்திற்கிடையே தெரியப்படுத்தினார்கள். கட்சி வேறுபாடின்றி பொது நோக்குடன் உழைத்து மிகவும் பின் தங்கியுள்ள இவ்வட்டார மக்களுக்கு பணி செய்ய தாம் அல்லும் பகலும் காத்திருப்பதாகக் கூறினார்கள்.

## சாலை அமைப்பு வேலை

முப்புறமும் நீரால் சூழப்பட்டு சாலை வசதியின்மையால் ஆண்டில் சில மாதங்கள் தீவு போல கண்மாய்களுக்கு மத்தியில் அமைந்துள்ள பல கிராமங்களுக்கு நிலச்சிக்கல்களைத் தீர்த்து வைத்து, சாலை அமைக்கும் பொறுப்பை மக்கள் மன்றமாகிய ஊராட்சி நிறுவனங்கள் ஏற்று நடத்தவேண்டும் என்பதையும் குறிப்பிட்டார்கள். இதற்காக இப்பகுதிக்கு ஊராட்சி நிறுவனங்களை செயல்படுத்தக்கூடிய நிலையில் மனித சக்தித் திட்டம் தமிழக அரசினால் கொடுக்கப்பட்டது என்பதையும் குறிப்பிட்டார்கள். ஆண்டாண்டுக் காலமாக தீர்க்கப்படாதிருந்த சாலை அமைப்பதற்குரிய நிலம் பெறுவதில ஏற்பட்ட சிக்கல் சுமுகமாகத் தீர்க்கப்பட்டு நாட்டார் மங்கலம் கோட்டையிருப்பு இணைப்புச் சாலை மனித சக்தித் திட்டத்தின் முதற் கட்டமாக தன்னால் ஆரம்பித்து வைக்கப்பட்டது குறித்து அமைச்சர் அவர்கள் தனது மகிழ்ச்சியைத் தெரிவித்தார்கள். இதேபோன்று இத்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள நிதி வசதியைத் தக்க முறையில் பயன்படுத்தி வசதி அற்ற சற்றேறக் குறைய 50 குக்கிராமங்களுக்கு சாலை வசதி ஏற்படுத்திக்கொள்ளுமாறு அதிகாரிகளையும் மக்கள் பிரதிநிதிகளையும் அமைச்சர் அவர்கள் வேண்டிக் கொண்டார்கள்.

[தமிழகத்திலே பனைத் தொழில்—12-ம் பக்கத் தொடர்ச்சி.]

தொழிலுக்கோ நாங்கள் விரோதிகளல்லர் என்பது திட்டவட்டமாக இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இந்தத் துறையை அழித்துவிடுவோம், ஒழித்துவிடுவோம் என்ற ஐயப்பாடு யாரும் கொள்ளத் தேவையில்லை. இந்த நாடு வாழவேண்டும். நாட்டு மக்கள் வாழவேண்டும். கிராமப் புறங்களிலே இருக்கக்கூடிய தொழிலாளர்கள் வாழவேண்டும். ஏழை சிரிக்க வேண்டும். அதுதான்—இன்றைய ஆட்சியினுடைய இலட்சியம். அந்த இலட்சியத்திற்கு நீங்கள் உறுதுணையாக இருக்க வேண்டும். உங்களுக்கு இருக்கக்கூடிய குறைகளை அவ்வப்பொழுது முறைப்படி நீங்கள் முறையிட்டீர்களானால் எந்த நேரத்திலும் அவைகளைக் கேட்டுப்பரிகாரம் தேடுவதற்கான உறுதியை நிச்சயமாக நான் தருகிறேன்.

## பட்டியல் படையுங்கள்:

அடிக்கடி நாம் இதுபோலச் சந்தித்து, கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டு, இந்தத் துறையை வளம்பெறச் செய்து, நல்ல வெளிநாட்டுச் செலாவணி பெருகுகிற அளவுக்கு வளர்த்துக் காட்டவேண்டும்.

அடுத்த ஆண்டு நிதி நிலை அறிக்கை தருகிறபொழுது இதிலே இவ்வளவு லாபம் வந்திருக்கிறது. இந்தத் துறை ‘இவ்வளவு வளர்ந்திருக்கிறது’ இத்தனை புதிய சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இத்தனை தொழில்கள் புதிதாக துவக்கப்பட்டிருக்கின்றன என்கிற பட்டியலைக் கொடுப்பதுதான் எனக்குப் பெருமை அளிப்பது. இந்தப் பட்டியலைத் தேடிக் கொடுக்கவேண்டிய பொறுப்பும், கடமையும் பனைத்தொழிலில் ஈடுபட்டுள்ளோரிடமே இருக்கிறது. ஆகவே, என்னையும் சக ஊழியனாக ஏற்றுக் கொண்டு அத்தனை பேரும் என்னுடைய உடன் பிறந்த ஊழியர்களாக நின்று எனக்கு உறுதுணையாக விளங்க வேண்டும்.”

——/o/——

# சீரிய பணியாற்றும் நகராட்சிகள்

## மன்னை நகராட்சி மக்கட்குச் செய்யும் நல்லாக்கப் பணிகள்

மன்னார்குடி நகராட்சி 1886-ல் உருவாகிய பழம்பெரும் நகராட்சி மன்றம் ஆகும். 19,447 எண்ணிக்கையுள்ள மக்கள் தொகையும் ரூ. 18,850 வருமானத்தையும் கொண்ட இந்நகராட்சி 1961-ம் ஆண்டு கணக்குப்படி 33,554 பேர் கொண்ட நகரமும் 9,64,396 ரூபாய் வருமானத்தையும் அடைந்துள்ளதிலிருந்து இந்நகரின் சிறப்பான வளர்ச்சியை நன்கறியலாம்.

16-வார்டுகளாகவும் 20 நகராட்சி மன்ற உறுப்பினர்களையும் கொண்டு செயல்படும் இம்மன்றம் 1968-ம் ஆண்டு ஜூலை 1-ம் நாள் முதல் 22 வார்டுகளையும் 24 உறுப்பினர்களையும் கொண்டு செயல்பட இருக்கிறது. இந்நகரில் அமைந்த மொத்த வீடுகளின் எண்ணிக்கை 10,713 ஆகும்.

இந்நகராட்சிக்குச் சொந்தமாக 101 ஏக்கர் புஞ்சை விளை நிலம் உள்ளது. இது வடுவூர்—மன்னார்குடி வழியில் உள்ளது. இதன் நீளம் சுமார் 11 மைல் ஆகும்.

சீரிய பணியாற்றிடும் இந்நகராட்சி அண்மையில் நகரமாந்தர்க்கு நற்பணி பல செய்துள்ளது. 36 தெருக்கள் தூசியில்லாத தளமாக தார்ச்சாலையாக மாற்றப்பட்டு இருக்கின்றன. பெரிய குடிநீர்த் தேக்கம் ஒன்று, சிறிய குடிநீர்த் தேக்கத்தொட்டி. 6 கட்டப்பட்டு, 53 குழாய்கள் மூலமாக பல தெருக்களுக்கு தண்ணீர் வசதி செய்யப்பட்டதுடன், வீடுகளுக்கும் குடிநீர் வசதி குழாய் மூலம் செய்யப்பட்டு வருகிறது. 29·53 இலட்சம் ரூபாயில் நகரம் முழுவதற்கும் குடிநீர் வழங்கும் திட்டம் ஒன்று பரிசீலனையில் இருக்கிறது.

நகராட்சி மன்றம் குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கும் நகரசுத்தித் தொழிலாளர்களுக்கும் 54 வீடுகளை கட்டிக் கொடுத்திருக்கிறது. புதிதாக ரூ. 25,000 செலவில் குறைந்த வருவாயினருக்கான புதிய குடியிருப்பு வீடுகள் 12 கட்டி முடிக்கப்பட்டுள்ளன. பாமணி ஆற்றில் கர்த்தநாதபுரம் அருகில் ரூ. 36,000 செலவில் நடைபாலம் ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. ரூ. 2,62,600 செலவில் நகரில் ஒரு பேருந்து நிலையம் கட்ட எல்லா ஏற்பாடுகளும் முடிந்து டெண்டர் வரவழைக்கும் நிலையில் உள்ளது.

கல்விப் பணியில் நகராட்சி மன்றம் மிகச்சிறப்பாக பணியாற்றி வருகிறது. நகராட்சி நிர்வாகத்தில் 3 உயர் தொடக்கப் பள்ளிகளும் 5 ஆரம்பப் பள்ளிகளும் உள்ளன. டியூப் லைட்டுகள் 403, சாதாரண மின் விளக்குகள் 554, முக்கிய இடங்களில் ஃபோகஸ் விளக்குகள் முதலியன பொருத்தப்பட்டு பாராட்டுதற்குரிய முறையில் உள்ளன. 5 இடங்களில் கம்பி ஒலி பெருக்கிகள் நிறுவப்பட்டுள்ளன.

### பெருமை தரும் நூற்றாண்டு விழா

வாரச்சந்தை 1, காய்கறிச் சந்தை 3, மீன் சந்தை 2, ஆடு அறுக்கும் இடம் 1, மாமிசக்கடை 8, பூங்காக்கள் 4, பார்மா அகதிகளுக்காக 9 கடைகளும், 2 கீழராஜ வீதியிலும், 2 மேலராஜ வீதியிலும், கல்விப் பூங்காவின் அருகே 2 கடைகளும் கட்டப்பட்டு நகராட்சிக்கு வாடகை வருமானம் கிடைக்கிறது. வண்டிக்காரர்களின் நலனுக்காக 3 வண்டிப் பேட்டைகள் நிறுவப்பட்டுள்ளன.

சுகாதாரப் பணியில் இந்நகர் பெரும் முன்னேற்றம் கண்டிருக்கிறது. ஆயுர்வேத மருந்து சாலை ஒன்றும் 3 மகப்பேறு நிலையங்களும் இயங்கி மக்களுக்கு நற்றொண்டு ஆற்றிவருகிறது. கம்போஸ்ட் உரத் தயாரிப்பில் தமிழகத்திலேயே இந்நகர மன்றம் முதற்பரிசு பெற்றிருக்கின்றது. இந்நகர மன்ற ஆணையர், சிப்பந்திகளின் அரும்பெரும் முயற்சியினால் 100 சத விகிதம் வரி வசூல் செய்து தமிழக அமைச்சர்கள், அதிகாரிகள் பாராட்டையும் பெற்றதற்கு நகர மக்களின் மகத்தான ஒத்துழைப்பே காரணமாகும். நூற்றாண்டு விழாவின் போது கடை வீதியில் பெரிய மணிக்கூண்டு திறக்கப்பட்டுள்ளது.

1967 டிசம்பர் 21-ம் நாள் முதல் 24-12-67 முடிய கொண்டாடப்பட்ட இந்நகராட்சியின் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகள் நகராட்சி மன்ற வரலாற்றிலேயே புகழாரம் சூட்டப்பட்ட பெரும் நிகழ்ச்சியாகும்,

தமிழக முதலமைச்சர் மாண்புமிகு சி. என். அண்ணாதுரை அவர்களும், மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் திரு மு. கருணாநிதி அவர்களும், மாண்புமிகு உள்ளாட்சி அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்களும் நூற்றாண்டு விழா நினைவாக நகரமன்ற நுழைவாயிலையும், நினைவு ஸ்தூபியையும் குறைந்த வருவாயினரின் குடியிருப்புக் காலனியையும் திறந்து வைத்தும், சிறப்பு மலரை வெளியிட்டும் சிறப்பித்தார்கள்.

—:o:—

மேதகு தமிழக ஆளுநர் உரை—[4-ம் பக்கம் தொடர்ச்சி]

அண்மையில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இந்த மொழிச் சிக்கலை மீண்டும் ஆய்வு செய்வதற்கும், மொழித் தீர்மானத்தின் விளைவாக ஏற்பட்டிருக்கும் இன்னல்களை நீக்குவதற்கான வழிகளை ஆய்வதற்கும் அரசியல் கட்சித் தலைவர்களின் உயர்மட்ட மாநாடு ஒன்றினைக் கூட்ட வேண்டுமென்று எனது அரசு வலியுறுத்தும்.

### ஒரு மொழித் திட்டம்

இம் மாநிலப் பள்ளிகள் அனைத்திலும் தமிழ், ஆங்கிலம் ஆகிய இரண்டு மொழிகள்

## மத்திய, மாநில அரசுகளின் அதிகாரங்களையும், நிதி வசதிகளையும்

மட்டுமே கற்பிக்கப்பட வேண்டுமென்கிற இச் சட்டமன்றப் பேரவையின் முடிவினைச் செயல்படுத்த இவ் வரசு ஏற்கெனவே நடவடிக்கைகள் மேற்கொண்டுவிட்டது. பல்கலைக் கழக அளவில் தமிழ் பயிற்சி மொழியாக மாற்றப்படும் முடிவினால், இன்றைய ஆங்கிலப் பயிற்சித் திறன் குறைந்துவிடும் நிலை ஏற்பட்டுவிடுமோ என்று கவலைப்பட வேண்டிய தேவையில்லை. நமது பாடத்திட்டத்தில் ஆங்கிலத்தின் முக்கியத்துவத்தைப்பற்றி அரசாங்கம் முற்றிலும் உணர்ந்திருக்கிறது. இன்றைய ஆங்கிலப் பயிற்சியின் தரங்களையும் சாதனைகளையும் மேநிலைப் படுத்துவதற்காக அரசாங்கம் கல்வித்துறை வல்லுநர்களையும் பல்கலைக்கழகங்களையும் கலந்து தக்க நடவடிக்கை மேற்கொள்ளும்.

மத்திய அரசிற்கும், மாநில அரசுகளுக்கும் இடையே, பொறுப்புக்களையும் அவற்றிற்கேற்ப நிதி வசதிகளை பகிர்ந்தளிப்பதிலும், நிலவுகின்ற சமனற்ற நிலை, பெரியதொரு கூட்

## மறு ஆய்வு செய்தல் இன்றியமையாதது

டாட்சியில், அரசிற்கும் உள்ளிணைந்த மாநிலங்களுக்கும் ஊடே நிலவ வேண்டிய இனிய தொடர்பினைக் கெடுத்துள்ளன.

பொருளாதார வளர்ச்சிக்கென மத்திய அரசு மாநிலங்களுக்கு வழங்கும் நிகர உதவி முந்திய ஆண்டுகளில் வழங்கப்பட்டு வந்ததை விட மிகவும் குறைந்துள்ளது. அரசியல் அமைப்பிற்கிணங்க, மாநிலங்களுக்கே உரிய தனி நிதி வசதிகள் அவைகட்குப் போதிய அளவில் இல்லை. மத்திய அரசு மாநிலங்களுக்குச் சட்டப்படியும், மற்றப்படியும் மாற்ற வேண்டிய நிதி வசதிகளின் அளவும், குறிப்பாகச் சென்ற இரு ஆண்டுகளில் தேவையைவிடக் குறைந்துள்ளது. இதனால், எந்தெந்தத் துறைகளின் வளர்ச்சிக்காக மாநிலங்கள் பெறுப்பேற்றுள்ளனவோ அத் துறைகளில் சீரான முன்னேற்றம் அடைய இயலவில்லை. கடந்த பதினைந்து ஆண்டுகளின் அனுபவத்தையொட்டி, மத்திய மாநில அரசுகளுக்கிடையே இருக்கவேண்டிய நிதி வசதிகளையும், அதிகாரங்களையும் வரையறுக்கிற அரசியலமைப்பின் விதித் துறைகளை உயர்மட்ட அளவில் மறு ஆய்வு செய்தல் இன்றியமையாததென்பது எனது அரசின் உறுதியான கருத்தாகும்.

### நிதி ஆணைக் குழு

இத்தகைய ஆய்விற்குக் காலம் சிறிது தேவை என்பதும் இந்த ஆய்வின் வரம்பினைத் தொடர்புள்ள அனைவருடனும் கலந்து விழிப்புடன் வரையறுக்கவேண்டும் என்பதும் உண்மையே. இதற்கிடையில் மாநிலங்களின் மிக நெருக்கடியான தேவைகளை நிறைவேற்றுவதற்கு ஏற்ப நிதி ஆணைக் குழுவின் (Finance Commission) ஆய்வு வரம்பினை விரிவுபடுத்துவதன் மூலம் மாநிலங்கள் கூறிவந்துள்ளதை ஓரளவுக்காவது ஏற்றுக்கொள்ள இயலும்.

முன்னர் நிதி ஆணைக் குழுவின் ஆலோசனை வரம்புகளை மத்திய அரசு மாநிலங்களைக் கலந்து ஆலோசியாமல் முடிவு செய்து வந்தது. கூட்டு அரசியலமைப்பின் உட்கிடக்கையையும், மத்தியிலும், மாநிலங்களிலும் வேறு வேறான அரசியல் கட்சிகள் ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்துள்ள புதியதொரு அரசியல் சூழ்நிலையையும் கருத்திற்கொண்டு நோக்கின், மாநிலங்களை முற்றிலும் கலந்து இப் புதிய நிதி ஆணைக் குழுவின் ஆய்வு வரம்புகளை நிச்சயிக்க வேண்டுமென்பது தெளிவாகும். இந்திய அரசு, அவ்வாறு கலந்து ஆலோசிப்பதற்கான நடவடிக்கையைத் தொடங்குமென்றும், புதிய நிதி ஆணைக் குழுவின் ஆய்வு வரம்புகளை மாநில அரசுகள் தெரிவிக்கும் கருத்துக்களுக்கிணங்க முடிவு செய்யும் என்றும் எனது அரசு எதிர்பார்க்கிறது.

—o—

# பிற மாநிலங்களில்

**பூனா மாவட்டம்** (மகாராஷ்டிர மாநிலம்) 13 வட்டங்களையுடையது. இந்த மாவட்டத்திலுள்ள 1529 கிராமங்களில் 1138 கிராமங்களில் குறுகிய காலப் பயிர்களும், எஞ்சிய 391 கிராமங்களில் நீண்ட காலப் பயிர்களும் சாகுபடியாகின்றன. ஆனால் 1965–66–ம் ஆண்டில் தொடர்ச்சியாக வரட்சி நிலைமையே இந்த மாவட்டத்தில் இருந்தது. இந்த மாவட்டத்தின் மேற்கு பகுதியில் பயிர் செய்யப்பட்டிருந்த பயிர்கள் மழையின்மையால் பெரிதும் பாதிக்கப்பட்டது. 1965–ம் ஆண்டு அக்டோபர், நவம்பர் மாதங்களில் வரட்சி நிலைமை மிகவும் மோசமாகியது. ஆனால் டிசம்பர் மாதத் தொடக்கத்தில் சிறிதளவு மழை பெய்தது. அதுவும் காலங் கடந்தே பெய்ததால் எப் பயனும் விளையவில்லை.

பூனா மாவட்டத்தின் வேளாண்மை நிலையை பரிசீலித்த மகாராஷ்டிர அரசு, கிராமங்களனைத்தும் பற்றுக் குறை பகுதி என்று அறிவித்தது. பற்றுக்குறையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்காக 76 இடங்களில் பற்றுக்குறை உதவி வேலைகள் ஆரம்பிக்கப்பட்டன. பற்றுக்குறை உதவி வேலைகளை திறமையாக நிறைவேற்ற தொழில் நுட்பம் அறிந்தவர்கள் போதிய அளவில் இல்லாதிருந்தும் பெரும் முயற்சியின் விளைவாக இந்த வேலைகள் திறம்பட நடந்தேறின. பூனாவில் வசிக்கும் மக்கள் இயற்கையின் சீற்றத்தைக் கண்டு பயந்துவிடவில்லை. பற்றுக் குறையால் ஏற்பட்ட சவாலை அவர்கள் உறுதியுடன் சமாளித்தனர்.

### ஒருங்கிணைந்த முயற்சிகள்

மகாராஷ்டிர முதல் அமைச்சரான திரு வி. பி. நாயக் அவர்கள் "நாம் எப்படியும் இரண்டு ஆண்டுகளில் உணவில் தன்னிறைவு அடைய வேண்டும் என்ற உறுதியை எடுத்துக் கொள்ள வேண்டும்" என்று கூறினார். இதன் பிறகு அரசு ஊழியர்களும், தனியார்களும் இந்த இலட்சியத்தை அடைய தீவிர முயற்சி எடுத்துக் கொண்டார்கள் என்று கூறினால் அது மிகையாகாது. ஏற்கனவே பயிர் செய்யப்பட்டிருந்த பயிர்களுக்கு பாசனத்தை தாராளமாக வினியோகிக்க மாநில அரசு ஏற்பாடு செய்திருந்த தோடன்றி வர்த்தகப்பயிர்களுக்கு கிடைக்கும் பாசன வசதியையும் கட்டுப்படுத்தியது. இந்த நடவடிக்கையானது பற்றுக்குறையைக் கருத்தில் கொண்டு எடுக்கப்பட்ட முன் நடவடிக்கையாகும். விவசாயிகளுக்கு வேண்டிய அளவு கடன் வசதி கிடைப்பதற்கும் 'பம்பு செட்டு'கள் மற்றும் ஆயில் இஞ்சின் ஆகியவை கிடைப்பதற்கும், உரிய முறையில் மாநில அரசு ஆணை பிறப்பித்தது. குழாய்கள் மூலம் குளங்களிலிருந்தும், கிணறுகளிலிருந்தும், நதிகளிலிருந்தும் நீர் இறைத்து விவசாயிகளுக்கு வினியோகிப்பதற்காக, பம்புகளை மாவட்ட மன்றங்கள் வாடகைக்கு கொடுத்து உதவின. விவசாயத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து, மாநில மின்சார ஆயம் மின்சாரக் கம்பங்களை நாட்டி, மின் வசதி செய்து கொடுத்தது. விவசாயத் துறை வீரிய ஒட்டு விதைகளை விவசாயிகளுக்கு கொடுத்து அதிக விளைச்சல் ஏற்பட வகை செய்தது. இதனால் 50 சதவீத கூடுதல் விளைச்சல் ஏற்பட்டது.

### தாய்மொழியில் விவசாய நுட்பங்கள்

உணவில் தன்னிறைவு ஏற்பட வேண்டும் என்ற உறுதியான நோக்கத்தை வகுத்துக் கொண்ட பின், முதல் அமைச்சர் சக அமைச்சர்களை மாநிலம் முழுவதும் சுற்றுப் பயணம் செய்து, தற்போதைய பற்றுக் குறையை எடுத்துச் சொல்லி, அதைப் போக்குவதற்கு உழவர்களுக்கு தற் போது என்னென்ன வசதிகள் செய்யப்பட்டிருக்கின்றன என்பதை அவர்களுக்கு எடுத்துச் சொல்லி, அவர்களை பயன் அடையச் செய்வதற்கு முயற்சி மேற்கொள்ளும்படி கேட்டுக் கொண்டார். வருவாய்த் துறை துணை அமைச்சரான திரு சங்கர் ராவ் பாட்டில், பூனா மாவட்டத்தின் எல்லா வட்டாரத்திற்கும் ஒரு சூறாவளி சுற்றுப் பயணம் மேற்கொண்டு அரசு உழவர்களுக்கு செய்துதரும் வசதி பற்றி விளக்கமாக எடுத்துச் சொன்னார். முதலமைச்சரே ஒரு தீவிர விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவரானமையால், உழவர்களுக்கு விளங்கக் கூடிய முறையில் தாய்மொழியிலேயே விவசாய நுட்பங்களை எடுத்துக் கூறி, அவர்களை நவீன வேளாண்மை முறைகளை பின்பற்றி அதிக விளைச்சல் செய்யத் தூண்ட முடிந்தது. மாவட்டத்தில் பற்றுக்குறையால் ஏற்பட்டுள்ள மிகப் பெரிய சோதனையான கட்டத்தை கடப்பதற்கு பொதுக் கூட்டங்களை அடிக்கடி கூட்டி, பற்றுக் குறையால் ஏற்பட்ட சவாலை சமாளிப்பதற்கு வழி முறைகள் விளக்கிச் சொல்லித் தரப்பட்டன.

### பாசனத்திற்கு தீர்மானங்கள் நிறைவேற்றுதல்

புதிய திட்டங்களை நிறைவேற்றி வரும் இடங்களுக்கு அரசு ஊழியர்களும் தனியார்களும் ஒன்று சேர்ந்து பிரயாணம் செய்து, அங்கு ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தை மற்றவர்களுக்கு விளக்கிச் சொன்னார்கள். மேலும் வருவாய்த் துறை அதிகாரிகள் மின் துறை பொறி இயல் வல்லுநர்கள்.



ஊராட்சி மன்ற அதிகாரிகள், வட்டாரத் தலைவர்கள் ஆகியோர் ஒரு குறிப்பிட்ட கிராமத்தில் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து பாசனத்தை எப்படி வளர்ச்சி செய்யலாம் என்பது பற்றி ஆராய்ந்தனர். நீர்ப்பாசனத் திட்டத்தைப் பற்றி உழவர்களுக்கு விளக்கிச் சொல்லி, எந்தெந்த இடங்களுக்கு பாசனம் கொண்டு வர முடியும் என்பது பற்றி ஒரு தீர்மானம் கொண்டு வரும்படி கிராம சேவக்குகள் கேட்டுக்கொள்ளப்பட்டனர். நீர்ப்பாசன வசதி செய்து தருவதற்கு விவசாயிகளிடம் பாதுகாப்பு பத்திரங்கள் வாங்கிக் கொண்டு கடன் கொடுத்து நீர்ப்பாசனத்தை விருத்தி செய்ய உதவி செய்யப்பட்டது.

பது சிரமமாக இருந்தது. மாவட்ட மன்றத் தலைவரான திரு சங்கர் ராவ் உர்சல், கட்டிடங்கள் வேலைகள் பற்றிய குழுவின் தலைவரான திரு சாகேப் ராவ் சட்கார் இருவரும் சேர்ந்து எடுத்துக் கொண்ட தீவிர முயற்சியினால் மாவட்ட மன்றங்களின் பணத்தில் அதிக அளவு சிமெண்ட் குழாய் வாங்குவதற்காக செலவழிக்கப்பட்டது. குழாய்ப் பாசனத்திட்டத்தில் சிமெண்ட் குழாய் வாங்குவதற்கென எட்டுலட்சம் ஒதுக்கப்பட்டது. மின்சார பம்பு செட்டு 'ஆயில் எஞ்ஜின்கள் கிடைப்பதிலும் சிரமம் இருந்தது. ஆகையால் அரசு அலுவலர்களும் தனியார்களும் மின்சார மோட்டார்கள் விற்பனை செய்யும் நிறுவனங்களோடு நேரடித் தொடர்பு கொண்டு, பூனா மாவட்டத்

கிணறு நிறுவுவதில் சிரமம் ஏற்பட்டது, இந்த சிரமத்தை போக்குவதற்கு ஒரு குழு ஏற்படுத்தப்பட்டது அதன் வாயிலாக பழங்காலத்திலிருந்து தொடரும் சண்டைகளையும், பூசல்களையும் மறந்து விட்டு அங்கு வரும் ஒன்று சேர்ந்து குழாய் நீர்ப் பாசனப் பெருக்கச் சங்கம் ஒன்றை அமைத்தனர்.

### வரட்சி அளித்த நல்வாய்ப்பு

வாகி என்ற இடத்தில் அமைந்த குழாய் நீர்ப்பாசனத் திட்டத்தை, மகாராஷ்டிர மாநில உள்துறை அமைச்சர் திரு பால சாகேப் தேசாய் அவர்கள் திறந்து வைத்து பேசுகையில், "இந்த நீர்ப்பாசனத் திட்டம் கொய்னா திட்டத்தைக் காட்டிலும் மிக

# வறட்சி அளித்த நல்வாய்ப்பு

கிராம வளர்ச்சியில் ஊராட்சிகள் பெரும் பங்கு ஆற்றுகின்றன. பூனா மாவட்ட மன்றத் தலைவரான திரு சங்கர் ராவ் உர்சல் தலைமையில் அரசு ஊழியர்களும் தனியார்களும் பெரு முயற்சியுடன், ஒவ்வொரு வட்டாரத்திற்கும் விவசாயக் கருவிகள், இயந்திரங்கள் கொடுத்து உதவியிருப்பதோடு 13,590 ஏக்கர் பரப்பளவில் வீரிய ஒட்டுச் சோளத்தை சாகுபடி செய்யவும் உதவியிருக்கின்றனர்.

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு பணத்தைக் கொடுத்து விட்டால் மட்டும் உணவு உற்பத்தி செய்து விட முடியுமா? பணத்தைக் கொண்டு விவசாயக் கருவிகள், மற்ற பொருட்கள் வாங்குவதற்கு, எளிய முறையில் வழி முறைகள் உருவாக்கப்பட வேண்டும். குழாய்க் கிணறு திட்டப்படி பாசனத்தை அபிவிருத்தி செய்வதற்கு சிமெண்ட் குழாய்கள் கிடைப்

தின் தேவையை பூர்த்தி செய்வதற்கு பேருதவி செய்தார்கள்.

### 3,000 டன் சிமெண்ட் கொள்முதல்

இங்கு கிடைக்கும் பாசன வசதி எவ்வாறு மின்சார 'பம்பு செட்டால்' சாகுபடிக்கு உபயோகப்படுத்தப்பட்டது என்று விளம்பரம் செய்வதற்கு 'கிர்லோஸ்கர்' என்ற நிறுவனத்தினர் இரண்டு 'மோட்டார் எஞ்சின்'களை இனாமாகக் கொடுத்தனர். இந்தத் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு பெருமளவு சிமெண்ட் தேவைப்பட்டது. தேவைப்பட்ட அளவு சிமெண்ட் கிடைப்பதில் சிரமம் இருந்ததால், மாவட்ட ஆட்சித் தலைவர்களும், வட்டார ஆணையர்களும் எடுத்துக் கொண்ட தனி ஆர்வத்தினால் 3,000 டன் சிமெண்ட் கொள் முதல் செய்ய முடிந்தது. ஒவ்வொரு உழவருக்கும் உயர்ந்த அளவாக ரூபாய் 5,000 மட்டுமே கடன்கொடுக்க முடியும் என்ற நிலை இருந்ததால்,



வும் சிறந்த திட்டம் என்று குறிப்பிட்டார். நீர்ப்பாசனத் திட்டத்தினால் பயன் பெறுபவர்கள் பலகாலமாகப் புறக்கணிக்கப்பட்டும், சரியான உரிமை மறுக்கப்பட்டும் வந்துள்ள தாழ்த்தப்பட்டவர்களின் வயல்களுக்கு இந்த திட்டம் வசதி செய்து கொடுக்கிறது" என்று குறிப்பிட்டார்.

இப்போது பூனா உணவில் தன்னிறைவோடு வெற்றி நடை போடுவதற்கு காரணம், இந்த மாநிலம் இதற்குமுன் வரட்சி நிலைமைய திறமையோடு சமாளித்து, பல திட்டங்களை நிறைவேற்றியதனால் தாம் எனின் அது மிகையாகாது. பூனா மாவட்டத்தின் சாதனையில் இருந்து அறிந்து கொள்ள வேண்டிய பாடம், அரசு அலுவலர்களும், தனியார்களும், ஆர்வம் உள்ளவர்களும் கூட்டாகச் சேர்ந்து அரசு திட்டங்களைப் பற்றி மக்களுக்கு எடுத்துச் சொல்லி, அவர்களை ஒன்று திரட்டி, இப்பணியில் ஈடுபடச் செய்ய வேண்டும் என்பதேயாகும்.

# பட்டம் பெற்றால் என்ன?

* மூன்று சகோதரர்களும் மூன்று தீவிர விவசாயிகள்.

* மூவரில் மூத்தவரும் இளையவரும் பட்டம் பெற்றவர்கள்.

* அலுவலகத்தைச் சுற்றி வருவதை தவிர்த்து தங்கள் நேரத்தை வேளாண்மையில் செலுத்துகின்றனர்.

*வெள்ளையுடையுடன் அலுவலகத்தில் ஊதியம் பெறுவதைக் காட்டிலும், வேளாண்மையில் அதிகமாக பொருளீட்டுகின்றனர்.

* மூவரும் மகாராஷ்டிர மாநில முதலமைச்சரின் மருமகன்கள்.



## விவசாயம் செய்யலாமே!

மகாராஷ்டிர மாநில முதலமைச்சர் திரு வி.பி. நாயக் அவர்களின் மூன்று மருமகன்களும் மூன்று தீவிர விவசாயிகள். இவர்கள் மூவரும் பூசாத் ஊரைச் சார்ந்தவர்கள். மூத்தவரான திரு சுதாகர்ராவ் நாயக் என்பவர், பூசாத் ஊராட்சி சமிதியின் தலைவர். அங்குள்ள சிறந்த விவசாயப் பண்ணையின் உரிமையாளரும் அவரே. இரண்டாமவரான திரு மதுகர் ராவ் நாயக், காகுலி என்ற பண்ணையின் சொந்தக்காரர் மட்டுமின்றி, சிறந்த ஒட்டுச் சோள விதைகள் உற்பத்தியாளரும்கூட. இளையவரான திரு மனோகர் ராவ் நாயக், 'சீலு' என்ற பண்ணையை நடத்துகிறார்,

### வேளாண்மையில் அதிக வருவாய்

முதலமைச்சரே இம் மூவரையும் விவசாயத்தில் ஈடுபடும்படி அறிவுரை கூறியவர். மூவரில் முதல்வரும் இளையவரும் கல்லூரிப் பட்டம் பெற்றவர்கள். பட்டம் பெற்று அலுவலகங்களைச் சுற்றி சுற்றி வருவதைக் காட்டிலும் வேளாண்மையில் ஈடுபட்டு பொன்னான நேரத்தை உணவு உற்பத்தியில் செலுத்த வேண்டுமென்று, அவர்களுக்கு முதலமைச்சர் தெளிவுபடுத்தினார். அலுவலகங்களில் சம்பாதிப்பதைவிட, வேளாண்மையில் நல்ல வருவாயைப் பெற இயலும் என்பதையும் கூறியவர் அவரே. அவர்கள் மூவரும் வயதால் மிகவும் இளையவர்களே.

### பட்டதாரிகளின் விவசாயப் பணி

திரு சுதாகர் ராவ் மது 32 வயதிலேயே பூசாத் ஊராட்சி சமிதியின் நிர்வாக வேலைகளில் பெரும் பங்கேற்றார். இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையான அவர் தமது முழு நேரத்தையும் வீரிய ஒட்டு சோளம், கம்பு ஆகியவற்றை விவசாயிகள் பயிரிட முனையவேண்டும் என்ற பிரச்சாரத்திலேயே கவனத்தை செலுத்துகிறார். வீரிய ஒட்டுப் பயிர் முறையே உணவுப் பற்றாக்குறையைத் தீர்க்கும் வழி என்று இவர் உறுதியாக நம்புகிறார். 110 ஏக்கர் பரப்பளவு உள்ள இந்தப் பண்ணை செழுமைக்குச் சின்னமாக விளங்குகிறது. வீரிய ஒட்டு சோளக்கதிர்களின் முதிர்ந்த மணிகள் நெருக்கமாக இருக்கின்றன. இந்த நிலத்தை திரு சுதாகர் ராவ் நாயக் தன்னுடைய மாமாவிடமிருந்து பெறுகையில் அது ஒரு தரிசான மலைப்பிரதேசமாகவே இருந்தது என்று இவர் கூறும்போது நம்பமுடியவில்லை. பெரும் முயற்சி எடுத்து, நிலத்தை பண்படுத்தி செழிப்புள்ளதாக மாற்றியிருக்கிறார்.

இந்த இளம் பட்டதாரிகளை விவசாய வேலைகளில் ஈடுபடும்படி தூண்டிய அவர்களது மாமாவான முதலமைச்சரும் ஒரு தீவிர விவசாயியே. வீரிய ஒட்டுச் சோளம், கம்பு, வாழை, வேர்க்கடலை, காய்கறி 'கோப்ரா' பண்ணையில் பயிர் செய்யப்படுகின்றன. இதில் விளையும் பொருட்களையும், அந்த நிலத்தின் வளத்தையும் மற்றவர்களுக்கு காட்டி, இதன் சாதனைகளை எடுத்துக்கூறி அவர்களையும் இவ்வாறு பயிர் செய்யத் தகுந்த வழிமுறைகள் கூறப்படுகின்றன.

### பாராட்டை எதிர்பார்க்கவில்லை

திரு மதுகர் ராவ் நாயக்கின் பண்ணையான 'காகுலி'யும் செழுமையாக, வளமுடையதாக இருக்கிறது. இந்தப் பண்ணை, மாலை நேர மங்கிய ஒளியில் செழுமை பொங்கி சிரிப்பதானது பொன்னேபோல் காட்சியளிக்கிறது. உண்மையிலேயே இந்தப் பண்ணை பொன்னிற்கு இணையானதாகும். இந்தப் பண்ணையின் உரிமையாளர் இந்தப் பண்ணையை இவ்வளவு சிறந்ததாக மாற்றியதற்கு எந்த சிறப்பான பாராட்டையும் எதிர்பாராமல் இருக்கிறார். இவர் அடக்கமும் கூச்ச சுபாவமும் உள்ளவராக இருக்கிறார். இவர் பண்ணையை எவரேனும் பாராட்டிக் கூறுகையில், இவர் அடக்கமாகவே இருக்கிறார். காகுலி கிராமத்தில் வசிக்கும் மக்களில் பெரும்பாலோர் 'பஞ்சாரா' இனத்தைச் சார்ந்தவர்கள். மனோகர் ராவைப் பின்பற்றி பஞ்சாரா இன மக்கள் அனைவரும் விஞ்ஞான முறைப்படி விவசாயம் செய்ய முற்பட்டுள்ளனர்.

### பதவி வேண்டாம்: வேளாண்மை போதும்

மனோகர் ராவ் எல்லா தானியங்களையும் பயிர் செய்வதில்லை. தமது நிலத்தில் அதிகப் பயன்தரக்கூடிய பயிர்களை மட்டுமே பயிர் செய்கிறார். இவரது நிலத்தில் சோளம், பருத்தி, மிளகாய், நெல், கோதுமை, கம்பு, வேர்க்கடலை, கரும்பு, திராட்சை ஆகியவை மட்டுமே பயிர் செய்யப்படுகின்றன. இவர் சமீபத்தில் 300 ஆரஞ்சுக் கன்றுகளை நட்டார். இவை 5 ஆண்டுகளில் பலன் தரும் என்று எதிர்பார்க்கிறார். இங்குள்ள நிலத்தில் பாசனம் செய்வது சிரமமாக இருக்கிறது என்றாலும் இவர் 'போர்காடி' என்ற ஏரி ஒன்றை வைத்திருக்கிறார். இது 110 ஏக்கர் பண்ணையின் ஒரு பாதியை பாசனம் செய்வதற்கு பயன்படுகிறது. மின்சார பம்பு செட்டுடன் கூடிய மூன்று கிணறுகளும் இங்குண்டு.

"நீங்கள் ஓர் இளம் பட்டதாரியாக இருக்கிறீர்களே, ஓர் ஐ.ஏ.எஸ். அதிகாரியாகவோ அல்லது அதற்கு சமமான பதவி உள்ள அதிகாரியாகவோ ஆக விருப்பம் இல்லையா?" என்று இவரைக் கேட்கையில் "எனக்கு பதவிகளில் விருப்பம் இல்லை. சாகுபடி செய்வதையே விரும்புகிறேன்" என்று மகிழ்ச்சியுடன் கூறுகிறார். இவருடைய ஒரே ஆவல் இந்த நாட்டின் 'தலைசிறந்த விவசாயி' என்று தாம் அழைக்கப்பட வேண்டுமென்பதே என்கிறார். ஒவ்வொரு சகோதரருக்கும் ஆண்டுதோறும் ரூ. 60,000 வரை விவசாயத்திலிருந்து வருவாய் கிடைக்கிறது.



## இருபோக சாகுபடித் திட்டம்.

உத்தரப்பிரதேச மாநிலத்தில், இந்த ஆண்டு கூடுதலான பாசன வசதியுள்ள 12 லட்சம் ஏக்கர் நிலங்கள், இருபோகச் சாகுபடிக்கு கொண்டுவரப்படவிருக்கின்றன. ஆறு லட்சம் ஏக்கர் நிலம் ஏற்கனவேயே நீண்ட காலப் சாகுபடித் திட்டத்தில் கொண்டுவரப்பட்டுவிட்டன. எஞ்சியுள்ள ஆறு ஏக்கர் நிலமும் இருபோகச் சாகுபடிக்கு கொண்டுவரப்படவிருக்கிறது.

இம்மாநிலத்தில், மொத்தச் சாகுபடி பரப்பளவான 421 இலட்சம் ஏக்கர் நிலத்தில் 120 இலட்சம் ஏக்கர்களில் ஒன்றுக்கு மேற்பட்ட சாகுபடிகள் மேற்கொள்ளப்பட்டுவிட்டன. இதனால் அதிக விளைச்சல் ஏற்படும்.

குறுகிய காலப்பயிரில் உயர் வகை கோதுமையை விதைப்பதற்கு ஊக்கம் அளிக்கப்பட்டுள்ளது. இத் திட்டம், ஒன்றுக்கு மேற்பட்ட சாகுபடியை ஒரே நிலத்தில் மேற்கொள்ள வேண்டும் என்ற குறிக்கோளையொட்டி மேற்கொள்ளப்பட்டுள்ளது. உற்பத்தியை பெருக்கும் விவசாயிகளுக்கு மேலும் இரசாயன உரங்களை கொடுக்க மத்திய அரசு உறுதியளித்திருக்கிறது.

குறுகிய காலப் பயிர் பருவத்தில், மிகு விளைச்சல் தரும் கோதுமையை உற்பத்தி செய்ய 25 இலட்சத்திற்கும் அதிகமான விவசாயிகள் பங்கு கொள்வர். இந்த விவசாயிகளுக்கு தங்களது பகுதிகளில் உள்ள அரசு பண்ணை, அல்லது தனியார் விவசாயப் பண்ணைகளில், மிகு விளைச்சல் கொடுக்கும் பயிர்களை சாகுபடி செய்வது பற்றிய பயிற்சி கொடுக்கப்படும்.

அந்த கிராம மக்கள் மகிழ்ச்சியில் திளைத்திருந்தனர். ஏனெனில் அவர்களின் நெடுநாளைய அவா அன்று நிறைவேறிவிட்டது. மங்கலாக ஒளி சிந்திக்கொண்டிருந்த அவர்களின் வீடுகளில், மின் விளக்குகள் பளிச்சென்று ஒளியை உமிழத் தொடங்கி விட்டன.

அவர்களின் பெருமைக்கு மின்வசதி கிடைத்தது மட்டும் ஒரு காரணமன்று. மின்வசதி கிடைப்பதற்காக குழி தோண்டுதல், கம்பங்களை ஓர் இடத்திலிருந்து மற்றொரு இடத்திற்கு எடுத்துச் செல்லுதல், அவற்றை வரிசையாக நடுதல் போன்ற பணிகளிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டனர்.

தங்களது 363 மாட்டு வண்டிகளை மின்வசதி அளிக்கும் பணியில் வேலை செய்வதற்கு வாடகையின்றி அளித்ததோடு, 2,083 மனித சக்தி நாட்களையும் அளித்தனர். உடல் உழைப்பையும் பயன் கருதாது தர முன் வந்ததனால், மின்விசை வசதி கொடுப்பதிலுள்ள செலவு பெருமளவு குறைந்தது.



# மின்விசை பரவ வேளாண்மை உயரும்

கிராம மக்கள் மின் வசதிகளை அடைவதற்கு, அவர்களுடைய உழைப்பை பயன் கருதாது தர அவர்களை ஊக்குவிக்கவேண்டும் என்ற அரசின் விருப்பப்படி, ஆந்திர மாநிலத்திலுள்ள நந்திராம் வட்டாரத்திலுள்ள ஒவ்வொரு வீட்டிற்கும் மின் வசதி செய்து தரப்பட்டது. இங்கு 150 கிராமங்களுக்கு மின் விசை வசதி அளிக்கப்படுவதுடன் 263 'பம்ப் செட்டு'களுக்கும் மின்சாரத் தொடர்பு கொடுக்கப்படும். இந்தத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்றியதால், மாநில மின்சார ஆயத்திற்கு ரூ. 83,000 வரை வருவாய் கிடைத்தது.

**மின்வசதியை இரு மடங்காக்க......**

விவசாய உற்பத்தியைப் பெருக்க வேண்டுமெனில், கிராம மக்களுக்கு மின் வசதி அளிக்கப்படவேண்டுமென்பதை இம்மாநில அரசு நன்கு உணர்ந்துள்ளது. எனவே, கிராம மின் வசதித் திட்டம், உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கேற்றவாறு திருத்தி அமைக்கப்பட்டது. மொத்த மக்கள் தொகையில் 12 கோடி மக்களுக்குத்தான் மின் வசதி கிடைத்திருக்கிறது. இன்னும் பல இலட்சக் கணக்கான கிராம மக்களுக்கு மின் வசதி கிடைப்பதற்கும், தற்போது கிடைத்திருப்பவர்களுக்கு மேலும் மின் வசதியை அதிகரிப்பதற்கும் வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. கிராமங்களுக்கு தற்போது கிடைத்து வரும் மின் வசதியை இருமடங்கு அதிகரிக்க வேண்டும் என்பது தற்போதைய குறியளவாகும். மகாத்மா காந்திக்கு நாம் செலுத்தும் காணிக்கையாக, அவரது நூறாவது பிறந்த நாளான 1969-ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் இரண்டாம் நாளுக்குள் எவ்வளவு கிராமங்களுக்கு மின்விசை வசதி கிடைக்கச் செய்ய முடியுமோ அவ்வளவு கிராமங்களுக்கும் மின்சாரம் கொடுக்கக்கூடிய திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு நடவடிக்கை எடுத்து வரப்படுகிறது.

**61,092 கிராமங்களுக்கு மின்வசதி**

இந்தியா விடுதலை அடைந்த பிறகு கிராம மக்களுக்கு மின் வசதி அளிக்க வேண்டிய திட்டம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் வகுப்பதற்குமுன் 150 கிராமத்திற்கு ஒரு கிராமம் தான் மின்சாரம் பெற்றிருந்தது. ஆனால் தற்போது 10 கிராமங்களுக்கு ஒரு கிராமம் மின்வசதி பெற்றிருக்கிறது. ஐந்தாண்டுத் திட்டம் வகுப்பதற்கு முன், நாட்டில், 3,677 கிராமங்களுக்குத்தான் மின் வசதி கிடைத்திருந்தது, ஆனால் சென்ற ஆண்டு மார்ச் திங்களோடு 61,092 கிராமங்களுக்கு மின் வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது. 15 ஆண்டுக்குள்ளாகவே, மின் விசை உற்பத்தி 2·3 மில்லியன் கிலோ வாட்டிலிருந்து 12·3 மில்லியன் கிலோ வாட்டாக உயர்ந்துள்ளது.

முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் தான், முதல் முறையாக திட்டமிட்ட மின் விசை உற்பத்தியும், கிராமங்களுக்கு மின்வசதி செய்து கொடுப்பதும் இணைத்து மேற்கொள்ளப்பட்டது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 27 கோடி. ஒதுக்கப்பட்டிருந்தது, இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இது ரூ. 75 கோடியாக உயர்ந்தது. இந்தத் தொகை மீண்டும் ரூ. 110 கோடியாக மூன்றாவது திட்டத்தில் பெருகியது. பல்வேறு சூழ்



நிலைகளால் கிராம மின் வசதித் திட்டம் மாநிலத்திற்கு மாநிலம் வேறுபாடடைகிறது.

**தமிழகத்திற்கு முதலிடம்**

மொத்த மின்விசை உற்பத்தியில் கிராம மக்கள் உபயோகிக்கும் மின் விசையானது, விவசாயப்பணிகளுக்கும் சேர்த்து 7 அல்லது 8 சதவீதமாகவே இருக்கிறது. தமிழகத்திலுள்ள மொத்த கிராமங்களில் பாதிக்கு அதிகமாகவே கிராமங்களுக்கு மின்விசை அளிக்கப்பட்டுள்ள செயல் மற்ற மாநிலங்களுக்கும் ஓர் எடுத்துக் காட்டாக விளங்கி வருகிறது. கிராமப் புறங்களுக்கு மின்விசை கொடுத்ததில் தமிழகத்திற்கு அடுத்த இடம் கேரள மாநிலத்திற்கு தாம் உண்டு.

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியான 1966-ஆம் ஆண்டில், கிராம மின்விசைத் திட்டத்தின் நோக்கம், வீட்டு உபயோகத்தைக் காட்டிலும், விவசாயக் காரியங்களுக்கு 'பம்பு செட்டு'கள் அமைத்தல், குழாய்க் கிணறுகள் அமைத்தல் ஆகியவற்றிற்கு முக்கிய இடம் கொடுக்க வேண்டும் என்ற நோக்கில் திருப்பி விடப்பட்டது. இதனால் பெருமளவு உணவு உற்பத்தியை அதிகரிக்க செய்ய முடியும் என்று எதிர்பார்க்கப் பட்டது. கிராம மின் விசைத் திட்டத்திற்காக ஒதுக்கப்பட்ட தொகையைக் காட்டிலும், அதிகமாகவே மூன்றாவது திட்டத்தின் இறுதி இரண்டு ஆண்டுகளில் ரூ. 11·21 கோடி செலவு செய்யப்பட்டது.

**தமிழகத்தில் 2,77,891 பம்புசெட்டுகள் குழாய்க் கிணறுகள்**

மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதியில் 5,10,000 'பம்பு செட்டு'கள், ஏற்படுத்தப்பட்டன. இவற்றில்1,06,000 பம்பு செட்டுகள் மூன்றாவது ஐந்தாண்டுத் திட்ட இறுதி ஆண்டில் நிறுவப்பட்டதாகும். தமிழகத்தில் மின் சக்தியால் இயங்கக்கூடிய 2,77,891 'பம்பு செட்'டுகள், குழாய்க் கிணறுகள் ஆகியவை ஏற்படுத்தப் பட்டுள்ளது மகத்தான செயலாகும். மற்றெந்த மாநிலத்தையும் விட தமிழகத்தில் தாம் அதிக எண்ணிக்கை கொண்ட 'பம்பு செட்'டுகள், குழாய்க் கிணறுகள் இருக்கின்றன. தமிழகத்தை பின்பற்றி ஆந்திர மாநிலத்தில் மொத்தம் 73,969 'பம்பு செட்'டுகள் இருக்கின்றன. இந்தத் திட்டத்தை தீவிரப்படுத்தப்படுவதற்கு அரசு தேவைப்பட்ட பணத்தை இதற்காக ஒதுக்கியிருக்கிறது.

1966–67-ல், கிராம மின் வளர்ச்சிக்காக மாநிலங்களுக்கு உதவி செய்வதற்கென ரூ. 39·33 கோடி ஒதுக்கப் பட்டுள்ளது. பஞ்ச, வரட்சி நிலைமைகளை போக்குவதற்கு, மாநில அரசு அமைக்க இருக்கும் 'பம்புசெட்'டுகள், குழாய்க் கிணறுகளுக்கு உதவுவதற்காக மேலும் ரூ. 22·79 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**மின்விசைக் கூட்டுறவுச் சங்கம்**

ஏற்கனவே திட்டமிட்டதற்கு அதிகமாக குழாய்க் கிணறுகளையும், 'பம்பு செட்டு'களையும் ஏற்படுத்த ஒரு தீவிர திட்டம் வகுக்கும்படி பீகார், உத்தரப் பிரதேச மாநிலங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கின்றன. ஏற்கனவே ஒதுக்கியுள்ளதற்கும் அதிகமாக, பீகார் உத்தரப்பிரதேச மாநிலங்கள் ஒவ்வொன்றிற்கும் 6 கோடி கொடுக்கப் பட்டுள்ளது. இதனால் 14,000 'பம்பு செட்டு'களும் குழாய்க் கிணறுகளும் அதிகரித்தன. உத்தரப்பிரதேசத்தில் இவை 17,000 ஆக உயர்ந்தது.

மின்சாரத் திட்டத்தின் அமைப்பு, செயல் முறையில் எவ்வாறு சிக்கனத்தைக் கையாளலாம் என்பது பற்றி கிராம மின்விசை கூட்டுறவு நிறுவனம் யோசனைகள் தெரிவித்துள்ளது. கிராமங்களுக்கு குறைந்த செலவில் மின்விசை கொடுப்பதோடு, மின்விசைக் கூட்டுறவு சங்கங்கள் கிராம மக்களிடையே பொறுப்புணர்ச்சியையும், மின்சாரத்தை உபயோகிப்பதில் கட்டுப் பாட்டையும், தாங்களாகவே நிதி வசதியைப் பெருக்குவதற்கு நிறுவனங்களையும் ஏற்படுத்த முயற்சிகளைச் செய்யும். மேலும் இந்தக் கூட்டுறவு நிறுவனம், நாட்டில் கிராம மின்சாரத் திட்டத்தை ஏற்படுத்தி, சீராக நடைபெறுவதற்குரிய கருவிகளை உற்பத்தி செய்தல், அவற்றை சேகரித்து வைத்தல் ஆகிய பணிகளைச் செய்து மின் விசைக்கு ஒரு சிறந்த சேவை செய்யும் என்பது நிச்சயம்.

## கால்நடை சத்துணவு

**பால் உற்பத்தியைப் பெருக்குவதற்காக, கால்நடை வைத்திருப்போருக்கு தீவனம் விநியோகிக்க உலக உணவு உற்பத்தி திட்டத்தின் உதவியுடன் உத்தரப் பிரதேசத்தில் ஒரு திட்டம் வகுக்கப் பட்டுள்ளது.**

**உலக உணவு உற்பத்தி திட்ட நிறுவனத்தோடு, இம்மாநில அரசு ஓர் உடன்பாடு செய்துள்ளது. இதன்படி ஆண்டொன்றிற்கு 5,000 டன் வீதம் மூன்று ஆண்டுகளுக்கு 15,000 டன் மட்ட ரக சோளத்தை உலக உணவு உற்பத்தி நிறுவனம் கொடுத்து உதவும்.**

**இந்த மட்ட ரக தானியங்களைக் கொண்டு, 45,000 டன் சத்துள்ள கால் நடைத் தீவனம் தயாரிப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும். இந்த சத்துணவு கால்நடைத் தீவனமானது, பால் விற்பனைச் சங்கத்தில் உறுப்பினராக உள்ளவர்களுக்கு தகுந்த விலையில் விற்கப் படும்.**

—o—



# நகரங்கள் நோக்கி...

**சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு ஒரு சிறு கிராமம் எவ்வாறிருந்தது ?**

அந்த கிராமத்தின் நெல் வயல்களின் பசுமையான தோற்றம் பொன்மயமாகத் தோன்றிற்று. அந்தக் கிராமத்தின் ஒவ்வொரு வீட்டிற்கும் முன்னால் அறுவடை செய்யப்பட்ட நெற்கதிர்க் கட்டுகள் வரிசையாக அடுக்கிவைக்கப்பட்டிருக்கும். வீட்டுத் தோட்டத்தில் பயிரிடப்பட்டுள்ள குளிர்காலக் காய்கறிச் செடிகளும், கொடிகளும் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தன. ஒவ்வொரு வீட்டுத் தோட்டத்திலும் வாழை, தென்னை மரங்கள் நடப்பட்டு அவை செழுமையாக வளர்ந்திருந்தன. அப்போது ஒவ்வொரு வீட்டிலும் ஏராளமான தானியங்கள் இருந்தன. அந்தக் கிராமத்து மக்கள் எப்பொழுதும் சுறுசுறுப்பு உள்ளவர்களாக இருந்ததால், அவர்களுடைய முகத்தில் களிப்பு, திருப்தி இழையோடிக் கொண்டிருந்தன. அப்போதிருந்த அவர்களின் மகிழ்ச்சியும் உற்சாகமும் இப்போது இல்லை.

**ஊரோடு பகிர்ந்துண்டனர்**

அந்த கிராமத்து சிறுவர்களும் சிறுமிகளும் மிகவும் மகிழ்ச்சியாக விளையாடி, உற்சாகமாக இருந்தனர். ஒரு வீட்டின் சிறுமி நட்டில் சோற்றுடன் மற்றொரு தோழி வீட்டிற்குச் சென்று அவளுடன் சேர்ந்து உண்டு மகிழ்ந்து இருப்பாள். சிறுவர்கள் ஒற்றுமையாக விளையாடுவார்கள். யாரும் மற்றவர்களை துன்புறுத்துவது கிடையாது. அனைவரும் மகிழ்ச்சியாக இருந்தனர். அந்தக் கிராமத்தைச் சேர்ந்த ஒருவர் கல்கத்தாவில் பணிபுரிகிறார். அவர் விடுமுறைக்கு ஊருக்கு வந்தார். இந்தச் செய்தி மின்னல் வேகத்தில் அந்தக் கிராமத்து சிறார்களிடம் பரவியதுதான் தெரியும், உடனே அனைவரும் அவர் வீட்டை அடைந்து அவரைச் சூழ்ந்துகொண்டனர். அவர் தன்னுடன் கொண்டு வந்திருந்த பை ஒன்றை தமது அன்னையிடம் கொடுத்தார். அந்த அன்னை பையிலுள்ள சுவையான இனிப்புப் பண்டங்கள் அனைத்தையும் சிறார்களிடம் பங்கிட்டுக் கொடுத்தார். கல்கத்தாவில் பணியாற்றுபவர், தன் குழந்தைகள், அன்னையுடன், மற்ற குழந்தைகளையும் சேர்த்துக்கொண்டு இந்த இனிப்புப் பண்டங்களை சரியாவில் பகிர்ந்து சாப்பிட்டனர்.

அந்தக் கிராமத்து மக்கள் விழாக்களிலும் துன்ப நிகழ்ச்சிகளிலும் ஒன்றுபட்டே பணியாற்றுவார்கள். அங்குள்ள ஒரு குடும்பத்தின் இன்ப, துன்ப நிகழ்ச்சிகளை அந்தக் கிராமத்து அனைவரின் இன்ப, துன்ப நிகழ்ச்சிகளாகவே கருதி, ஒரு குடும்பத்தவர் போல் இருந்தனர்.

**நகரங்கள் நோக்கி..**

நகர மக்களைப் போன்றே, தற்போது கிராம வாசிகளும் தனித்தனியே வாழத்தலைப்பட்டுவிட்டனர். ஒரு காலத்தில் கூட்டுக் குடும்பமாக வாழ்ந்த குடும்பங்கள் இன்று தனித்தனியே பிரிந்து விட்டது. பண்பட்ட நாகரிகம் உடையவர்கள் கூட தங்களது சகோதரர்களையும் உறவினர்களையும் விட்டு விட்டு, தங்களுக்கு சொந்தமான உரிமைகளை எடுத்துக்கொண்டு, பாகப் பிரிவினை செய்து வெளியேறுவது சாதாரண நிகழ்ச்சியாகிவிட்டது:

இப்போதெல்லாம் இளைஞர்கள் சிறு பட்டணங்களுக்கும் மாநகரங்களுக்கும் சென்று தங்குவது பெருகிக் கொண்டு வருகிறது. அறுவடையாகும் நெற்கதிர் கட்டுகளின் எண்ணிக்கை குறைந்துகொண்டே போகிறது. கிராமக் கைத்தொழிலாளர்கள் இயந்திரத்தோடு போட்டியிட இயலாமல், பாதிக்கப்பட்டிருக்கின்றனர்.

**வயோதிகப் பெற்றோரும் நகரங்கள் நோக்கி....**

அந்தக் கிராமத்தில் தாழ்த்தப்பட்டோர் இனத்தைச் சார்ந்த ஒருவர் கல்லூரிப் பட்டம் பெற்று, பக்கத்து ஊரில் ஆசிரியராகப் பணிபுரியச் சென்றார். அதனால் அவருடைய வயோதிகப் பெற்றோர்கள் கிராமத்தை விட்டே அவருடன் சென்று விட்டனர். இவர்களைப் பின்பற்றி அந்த ஆசிரியரின் உறவினர்கள் அனைவருமே அந்தக் கிராமத்தை விட்டுச் சென்று விட்டனர்.

நமது மக்களில் 80 சதவீதத்தினர் கிராமங்களில் வாழ்கின்றனர். இருந்தும் திறமை, அறிவு உள்ளவர்கள், இளைஞர்கள் போன்றோர் நகரங்களுக்கு சென்று விடுவதால், கிராமங்கள் பரிதாபமான நிலையில் இருக்கின்றன. கிராமங்களில் வாழ்க்கை வசதிகள், பொழுதுபோக்குகள் இருப்பது இல்லை. பெரும்பாலான கிராம மக்களுக்கு அதிகமான வருவாயும் இல்லையெனலாம்.

**கிராமம் செல்வோம்....**

இவற்றை களைவது சற்று சிரமமான செயல் எனினும் நாம் ஏமாற்றமுற வேண்டியதில்லை. கிராம மக்களை ஒரு சமுதாயத்தினர் போல் ஒற்றுமையுடைவர்களாகவும் ஒழுக்கம், திறமை முதலியவற்றில் சிறந்தவர்களாகவும் இருக்கும்படி. அவர்களுக்கு போதுமான வசதியும் நிலையும் ஏற்படுத்தித்தரவேண்டும்.

## ஆணையாளருக்கு கேடயம் பரிசு

உத்திரப் பிரதேசத்திலுள்ள தேராலி ஊராட்சி ஒன்றிய ஆணையாளரான திரு கே. பி. சன்வால் அவர்களுக்கு கேடயம் பரிசாக அளிக்கப்பட்டது. குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தை வெற்றிகரமாக நிறைவேற்ற, சிறந்த முறையில் பணியாற்றியதற்காக அவருக்கு இந்தக் கேடயம் பரிசாக அளிக்கப்பட்டது.

1966-67-ம் ஆண்டில் இவர் 232 பேர்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்ய முயற்சி எடுத்துக் கொண்டுள்ளார். உத்திரப் பிரதேசத்திலுள்ள 875 ஒன்றியங்களில் தேராலி ஒன்றியமே இச் சிகிச்சையில் முன் நிற்கிறது. இச்சேவையில் திரு சன்வால் அவர்களுடன் துணை புரிந்த மூன்று இதர ஊழியர்களுக்கும் கூட பரிசு அளிக்கப்பட்டது. இவர்களுடன் கிராம நல ஊழியருக்கும் பரிசு கிடைத்தது.



# சிறுமிகள் செய்யும் கண்ணாடி மணிகள்

முரியா என்ற பழங்குடி பெருமக்களின் சிறுவர்கள், சிறுமிகள் அணியும் ஆபரணங்கள் பல வண்ணங்கள் கொண்ட கண்ணாடி மணிகளால் செய்யப்பெற்றது. தாங்கள் தயாரித்ததையே அணிந்துகொண்டு அவர்கள் அழகுடன் விளங்குகின்றனர். மத்திய பிரதேசத்திலுள்ள பழங்குடி மக்களின் முக்கிய இடமான முரியாவில் கண்ணாடி மணிகள் செய்யும் தொழிற்சாலை ஒன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் தொழிற்சாலை, வட்டாரத் தலைமை இடத்தில் அமைக்கப்பட்டு அங்கு கண்ணாடி மணிகள் உற்பத்தி செய்வதுபற்றி பயிற்சி அளிக்கப்படுகிறது. இத்தொழிற்சாலை பழங்குடி மக்களின் இருப்பிடத்திலேயே இருப்பதால், அவர்கள் இத்தொழிலில் ஈடுபட பெரிதும் துணை செய்கிறது. பயிற்சி பெற்ற ஒரு பெண் நான்கு மணி நேரத்தில், சுமார் 250 கிராம் எடையுள்ள மணிகளை உற்பத்தி செய்ய முடியும். அதனால் அப்பெண்ணுக்கு உற்பத்தி செலவு போக, ரூபாய் இரண்டு ஆதாயம் கிடைக்கிறது. அவள் இதைத் தொடர்ந்து செய்வதனால், அவளுக்கு ரூபாய் நான்கு வரை வருவாய் கிடைக்கும். பெண்கள் அனைவருமே இப்பொழுது இம் மணிகள் செய்வதில் பயிற்சி பெற்றுவிட்டபடியால், அவர்கள் நாள்தோறும் மாலை நேரங்களில் இதர பயிற்சி வகுப்புகளுக்கு செல்கின்றனர். பயிற்சி பெற்ற ஒவ்வொரு பெண்ணிற்கும், மணிகள் செய்யும் கருவிகள் இலவசமாக அளிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. மேலும் அவர்களை கூட்டுறவு முறையில் ஒன்று சேர்க்கவும், முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. முரியா இனத்து பழங்குடி மக்கள், தங்களது இனத்தைச் சேர்ந்த பெண்கள் செய்த கண்ணாடி மணிகளை நாகரிகமாக கருதி இப்பொழுது அணிந்து வருகின்றனர்.

— o —

"பஞ்சாயத்து ராஜ்" இதழ்களிலிருந்து இடம் பெறுபவை :

பக்கங்கள் : 26 முதல் 33 வரை.

Articles reproduced from 'Panchayati Raj' on pages : 26 to 33.

# நமது பற்களும், பாதுகாக்கும் முறைகளும்

திரு ச. க. கண்ணப்பன், M.D.S.

பல் மருத்துவ ஆசிரியர், சென்னை மருத்துவக் கல்லூரி

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்." "உறுபசியும் ஓவாப் பிணியும்" என்கிறது குறள். பிணி நம்மை அணுகாமலிருக்க, உடலைச் சுத்தமாக, தூய்மையானதாக வைத்துக்கொள்ளவேண்டும். உள்ள உரம் மட்டுமல்ல; உடல் உரமும் வேண்டும். அவ்வகையில், மானிட உடலின் முக்கிய கூறுகளான பற்களைப் பாதுகாக்கும் முறைகளைப் பற்றி விவரிக்கும் இக்கட்டுரை, அனைவருக்கும் பயன்தரத்தக்க தொன்றாகும். —ஆசிரியர்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்"; ஒருவரின் சுகமான வாழ்வானது, அவருக்கு கிடைத்த பேறு. பண்டைக் காலத்திலேயே அதன் முறைகளை தமிழர் அறிந்துள்ளனர் என்பதை "கூழானாலும் குளித்துக் குடி, கந்தையானாலும் கசக்கிக் கட்டு" என்பதன் மூலம் கண்டுள்ளோம். மேலும் உடலுக்கு இட்ட கட்டளைப் போல் பற்களுக்கும் முதுமொழி கூறியுள்ளார்கள்.

"ஆலும், வேலும் பல்லுக்கு உறுதி
நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி" ஆகும்.

ஒருவன் சுகவாழ்வு உடலை மட்டும் பேணுவதல்லாமல், பற்களின் நலமும் நாடவேண்டும் என்பதை, நான் அறிவுறுத்த விரும்புகிறேன். பற்களினால் ஏற்படும் நோய் பற்களைக் கெடுப்பதோடல்லாமல், உடலையும் தாக்குகிறது. ஆகவே, பற்களை பேணுவதன் முக்கியத்துவத்தையும், அதன் முறைகளையும் இக் கட்டுரையில் ஆராய்வோம். சாதாரணமாக இந்த முறைகளை நாம் நாள்தோறும் எளிதாக பின்பற்ற முடியும்.

நமக்கு நிலையான பற்கள் முப்பத்திரெண்டு ஆகும். இப்பற்கள் நமது உணவுப் பொருட்களைச் சிறியதாக்கி, பொடித்து உமிழ்நீருடன் கலக்கி எளிதாகி விழுங்க உதவுகின்றன. இந்நிலையில் மாவுப் பொருட்கள் சிறிதளவு செரிமானமாகிறது. ஆகவே செரிமான மண்டலத்தில் முதன்மையாக நமது பற்கள் விளங்குகின்றன.

மேலும் நமது பற்கள் நமது முக அழகிற்கும் பேசுவதற்கும் உதவுவனவாக உள்ளன. பற்களினால் மேலும் பல நன்மைகள் உண்டு. எனவே பற்களைப் பற்றி நாம் அறியவேண்டியது மிக்க இன்றியமையாததாகும்.

"பல் போனால் சொல் போயிற்று"

"பல் போனால் சொல் போயிற்று" என்ற பழமொழியால் பற்களின் அவசியத்தை நமது முன்னோர்கள் நன்றாக அறிந்துள்ளார்கள் என்பது தெரிகிறது. தமிழில் பற்களைப் பற்றிய கவிதைகள் பல உள்ளன.

மனிதனுக்கு சாதாரணமாக இருமுறை பற்கள் முளைக்கின்றன. முதன்முறையாக வளர்வதை "பால் பற்கள்" என்றும், இரண்டாவதாக வளர்வதை" நிலையான பற்கள்" என்றும் சொல்லுகின்றோம்.

நோய் வாய்ப்பட்ட பற்களால் உடலுக்கும் பல தீமைகள் உண்டாகும். சாதாரணமாக ஏற்படும் நோய்கள் பல் சொத்தையும், பயோரியாவும் ஆகும். இந்த வியாதிகளினால் பற்களைத் தாங்கி நிற்கும் ஈறுகள், எலும்புகள் கெடுவதால் நாம் பற்களை இழக்க நேரிடும். மேலும் கெட்ட பற்களினால் பல நோய்கள் ஏற்படுகின்றன. அவையாவன: தசை மூட்டுப் பிடிப்பு, இரைப்பை குடல் நோய், இருதய நோய், உடலில் பல இடங்களில் சீழ் பிடித்தல், மூளையில் சீழ் கட்டுதல் போன்றவை. மேலும் ஒருவனுக்கு பலவீனம், வேலை செய்யப் போதுமான சக்தியில்லாமல் போதல், மன அமைதியின்மை, அதனால் கோபப்படுதல் போன்ற துன்பங்கள் ஏற்படுகின்றன.

ஆகையால் பற்களைப் பேணிப் பாதுகாத்தலை இன்றியமையாத அன்றாடப் பழக்கமாகக் கொள்ளவேண்டும். நாள்தோறும் காலையில் துயிலெழுந்த பின்பும், இரவில் துயில்கொள்வதற்கு முன்னும் பற்களைச் சுத்தம் செய்யவேண்டும். "கந்தையானாலும் கசக்கிக் கட்டு, கூழானாலும் குளித்துக் குடி," என்பதுடன் 'சாப்பிடு முன்னும், பின்னும் பல் துலக்குதல் என்பதனை வழக்கப் படுத்திக்கொள்ளுதல் வேண்டும்.

## திறம்பட பாதுகாக்கப்பட வேண்டும்

நவீனமாக, பல் துலக்கி (Toothbrush) யைக் கொண்டு சுற்று முறையில் பற்களைத் துலக்குதல் சரியான முறையாகக் கருதப்படுகின்றது. பல் துலக்கியில் உள்ள நார்கள் (Bristles) பிசிந்து இல்லாமல் விலகியோ, மடிந்தோ காணப்படுமானால் அந்தத் துலக்கியைப் பயன் படுத்தக் கூடாது. சாதாரணமாக ஒரு துலக்கியை ஒரு மாத காலத்திற்கு நல்ல முறையில் பயன்படுத்தலாம். நவீன பல் துலக்கியைப் பயன்படுத்த இயலாதவர்கள் "ஆலும், வேலும்" உபயோகப்படுத்தலாம். இவை



இயற்கையிலேயே பற்களுக்கும், ஈறுகளுக்கும் நல்ல மருந்தைக் கொண்டுள்ளன.

ஒரு குழந்தை பிறந்து பல் முளைக்க ஆரம்பித்தவுடன் தாய் தனது விரலில் பஞ்சை சுற்றிப் பற்களைத் தேய்த்து விடவேண்டும். இவ்விதம் சிறு வயதிலிருந்தே பல் துலக்கும் பழக்கம் ஒரு நல்ல பழக்கமாகும். அதனால் பால் பற்களைத் திறம்பட பாதுகாக்க முடியும்.

## சாப்பிடும் முறை

நம் நாட்டு உணவு பழக்கங்கள் நமது உடலின் நலத்துக்காக வகுக்கப்பட்டிருக்கின்றன. நமது உணவில் காய்கறி, கீரை இவற்றுடன் உணவை உண்டபின் பழவகைகளையும் உண்ணவேண்டும். பின் தாம்பூலம் தரிப்பது நம் நாட்டிற்கே உரிய நல்ல உணவு முறை. இவற்றை அளவுடன் தரித்தால் உண்ட உணவு நன்றாக சீரணித்து, செரித்து, உடலுள் ஈர்க்கப்படும். அசீரணம் தவிர்க்கப்படும். மேலும் ஈறுகளைக் கெட்டிபடுத்துவதுடன், பல் சொத்தையையும் தடுக்க ஏதுவாகிறது. அளவுக்கு மிஞ்சினால் நாக்கு தடிக்கும்; பற்களின் மேல் கறைபடிந்து அழகை கெடுக்கும்.

தாம்பூலம் தரிக்கும் முறை இன்று தவறாக கருதப்படுகிறது. பண்டைய நாட்களில் இம்முறையில் பல உபயோகமாகும் பொருட்களையும் சேர்த்து வந்தார்கள். நாளாவட்டத்தில் இந்த முறைகளைக் கடைப்பிடிக்காமலும், மறந்து வந்துள்ளதாலும் அதன் பயனை மறந்தது மட்டுமல்லாமல், அதனை கெடுதலாகவும் கொண்டுள்ளோம். ஆனால், தாம்பூலத்தை புகையிலையுடன் சேர்த்துக் கொள்வது திட்டவட்டமான கெடுதலாகும்.

நல்ல காய்கறிகள், பழங்கள், கீரை வகை பற்களுக்கு நல்லவை. பற்கள் முளைக்கும்போது நல்ல அமைப்புடன் பலமுள்ள பற்களாக ஆக்க உணவுப் பொருட்கள் தேவை. கருவுற்றிருக்கும் தாயும், பாலூட்டும் தாயும் நல்ல உணவை உண்ண வேண்டும்.

மேலும் பற்கள் முளைத்தபின் உணவை நன்றாக மென்று சாப்பிடுவதால் பற்களுக்கும் தாடைகளுக்கும் பயிற்சி ஏற்பட்டு நல்ல வளர்ச்சியைக் கொடுக்கும். மேலும் அவை பற்களை நன்கு சுத்தம் செய்துவிடும். அதனால் உணவுப் பொருட்கள் பற்களில் தங்கிக் கெடாமல், பல் சொத்தைப் போன்ற நோய் ஏற்படுவதில்லை. அதைப்போன்று, ஈறும் பலப்பட்டு பல்லில் சீழ் தங்குதல், இரத்தக் கசிவு போன்ற நோய் வராமல் தடுக்கின்றன. இனிப்புப் பொருட்களான மிட்டாய், பிஸ்கட், சாக்லெட் போன்றவை பல்லுக்கு முதல் எதிரிகள். அவற்றை உண்ண நேரிட்டால் உடனே பற்களைத் துப்புறவாகத் துலக்கவேண்டும்.

## பல் பாதுகாப்பு உடல் பாதுகாப்பாகும்

எல்லாப் பல் நோய்களும் ஆரம்பத்தில் வலியுடன் ஆரம்பிப்பதில்லை. பல் நோய் முற்றியபின் வலி, வீக்கம் ஏற்படுகின்றன. அந்த நிலையில் பற்களைப் பாதுகாக்கும் அளவிற்குச் சிகிச்சை அளிக்க இயலாது. பற்களை எடுத்தாலொழிய முழு குணம் கிடையாது. ஆகவே பற்களை எடுக்காமல் அவை பாதுகாக்கப்பட வேண்டின், ஒவ்வொருவரும் குறைந்தது ஆறுமாதங்களுக்கு ஒரு முறையாவது பல் மருத்துவரிடம் பல் பரிசோதனை செய்துகொள்வது நல்லது. நோய் ஆரம்பித்திருந்தால் அதற்கு வேண்டிய சிகிச்சை பெறுவது இன்றியமையாததாகும். இவ்வாறாகப் பற்களுக்கு ஏற்படும் நோயை அகற்றி பற்களைப் பாதுகாப்பதன் மூலம் நமது உடல் நலத்தையும் பேணுகின்றோம்.

சிலருக்குப் பற்கள் ஏறுமாறாகவும், முன்தள்ளியும் இருந்து முகத்தின் அழகைக் கெடுக்கின்றன. அவர்கள் சிறு வயதிலிருந்தே பல் சீர்திருத்த முறையைப் பயன்படுத்தினால் நல்ல பலன் கிடைக்கும். இந்த நாட்களில் இவ்விதமான சிகிச்சையை எளிதாகச் செய்யமுடியும். முகமும் அழகைப் பெறும்.

நல்ல பற்கள் உள்ளத்திற்கும், உடலுக்கும் தேவை. 'அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.' அஃதேபோல் உடலின் நலம் பற்கள் நலத்தில் தெரியும்.

The following particulars regarding the ownership of " GRAMANALAM ", the monthly magazine are published, as called for, by rule 8 of the Registration of Newspapers (Central) Rules, 1956:

**FORM IV**

(*See* rule 8.)

| | | |
|---|---|---|
| 1 | Place of publication .. .. .. | N.C.C. Buildings, Fort St. George, Madras-9. |
| 2 | Periodicity of publication .. .. | Monthly. |
| 3 | Printer's name .. .. | Thiru M. K. Gomethakavelu, B.A. (Hons.), Director of Stationery and Printing. |
| | Nationality .. .. .. .. | Indian. |
| | Address .. .. .. .. | Government Press, Madras-1. |
| 4 | Publisher's name .. .. .. | Thiru V. Natarajan, I.A.S., Director of Rural Development. |
| | Nationality .. .. | Indian. |
| | Address .. — .. .. | N.C.C. Buildings, Fort St. George, Madras-9. |
| 5 | Editor's Name .. .. .. .. | Thiru S. Venkataswamy, M.A., Public Relations Officer, Directorate of Rural Development. |
| | Nationality .. .. .. .. | Indian. |
| | Address .. .. .. .. | N.C.C. Buildings, Fort St. George, Madras-9. |
| 6 | Name and addresses of individuals who own the newspaper and partners or share-holders holding more than one per cent of the total capital. | Government of Madras, Fort St. George, Madras-9. |

I, V. Natarajan, hereby declare that the particulars given above, are true to the best of my knowledge and belief.

(Signed) V. NATARAJAN,
*Publisher.*

Dated 1st February, 1968.

# கிராமநலம்

## மாதப் பத்திரிகை

## விளம்பர விவரங்கள்

| | |
|---|---|
| ஆசிரியர் .. .. .. .. | மக்கள் தொடர்பு அதிகாரி, கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகம், கோட்டை, சென்னை-9. |
| வெளியிடுபவர் .. .. .. | கிராம வளர்ச்சி இயக்குநர், சென்னை-9. |
| பத்திரிகையின் நோக்கம் .. .. .. | வேளாண்மை, கால்நடைப் பராமரிப்பு, கூட்டுறவு, குடிசைத் தொழில், பொதுச் சுகாதாரம் முதலான கிராம வளர்ச்சித் திட்டங்கள், ஊராட்சிகள், ஊராட்சி மன்றங்கள், நகராட்சிகள் ஆகியவற்றின் சாதனைகள் பற்றி, மக்களுக்குப் பயனுள்ள தகவல்களை வெளியிடுதல். |
| கடிதப் போக்குவரத்துக்கான முகவரி .. .. | ஆசிரியர், "கிராமநலம்" & மக்கள் தொடர்பு அதிகாரி, கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகம், கோட்டை, சென்னை-9. |
| தொலைபேசி எண் .. .. .. | 29233—லைன் எண் 19 |
| தந்தி முகவரி .. .. .. | "ரூரல்" (RURAL) |
| ஆண்டுச் சந்தா .. .. .. | ரூபாய் இரண்டு மட்டும். |

### விளம்பரக் கட்டண விவரம்

| | அவ்வப்போது வெளியிடும் விளம்பரங்களுக்கு. | குத்தகையாக ஒரே இட அளவிற்கு குறைந்தது 12 விளம்பரங்கள். |
|---|---|---|
| இரண்டாவது, மூன்றாவது அட்டைப் பக்கங்கள் (ஒரே வண்ணத்தில்) | | |
| முழுப் பக்கம் | ரூ. 420 | ரூ. 315 ஒரு முறைக்கு |
| அரைப் பக்கம் | ரூ. 215 | ரூ. 165 |
| நான்காவது அட்டைப் பக்கம் (இரண்டு வண்ணங்களில்) | அவ்வப்போது வெளியிடும் விளம்பரங்களுக்கு | குத்தகையாக ஒரே இட அளவிற்கு குறைந்தது 12 விளம்பரங்கள். |
| முழுப் பக்கம் | ரூ. 450 | ரூ. 325 |
| அரைப் பக்கம் | ரூ. 230 | ரூ. 170 |
| உள் பக்கங்கள் | | |
| முழுப் பக்கம் | ரூ. 400 | ரூ. 300 |
| அரைப் பக்கம் | ரூ. 210 | ரூ. 160 |

**விளம்பர ஏஜென்சிகளுக்கு 15 சதவீத கமிஷன் அளிக்கப்படும்.**

**அச்சிடுதல் பற்றிய குறிப்புகள்.**

| | |
|---|---|
| பத்திரிகையின் அளவு .. | $8\frac{1}{4}'' \times 11\frac{1}{2}''$ |
| பத்திரிகை வெளியிடப்படும் நாள் .. | மாதந்தோறும் அதன் இறுதி வாரத்தில் வெளியாகும். |
| விளம்பரங்களைப் பெற இறுதி நாள் .. | பத்திரிகை வெளியாகும் தேதிக்கு 40 நாட்கள் வரை. |
| அச்சுப் பகுதிக்குரிய தனி அளவு .. | $6\text{–}5/6'' \times 10''$. |
| ஒரு "பத்தி"யின் (Column) அகலம் .. | 3–1/3". |
| பயன்படுத்தப்படும் காகிதம் .. | சாதாரண வெள்ளை அச்சுக் காகிதம் (Ordinary white printing paper) |
| அட்டைகளுக்கு பயன்படுத்தப்படும் காகிதம் .. | இந்தியன் "ஆர்ட்" காகிதம் (Indian art paper) |
| தேவைப்படும் ஹாஃப்டோன் (Half-Tone) .. | அட்டைப் பக்கங்களுக்கு 80<br>இதரப் பக்கங்களுக்கு 50<br>ஸ்டீரியோஸ் (Stereos) ஏற்றுக் கொள்ளப்படும். |

**விற்பனை**

**பிரதிகள்—20,000**

தமிழகத்திலுள்ள செய்தி நிலையங்கள், சமூகக் கல்வி நிலையங்கள், கிராம வானொலி மன்றங்கள் மகளிர் மன்றங்கள், பள்ளிகள், ஊராட்சி நிறுவனங்கள், இந்த இதழுக்குச் சந்தா செலுத்தி, மக்கள் படித்துப் பயன்பெற ஏற்பாடுகள் செய்து வருகின்றன.

(தமிழகத்தில் 12,881 ஊராட்சி மன்றங்கள், 438 பேரூராட்சி மன்றங்கள், 374 ஊராட்சி ஒன்றியங்கள், 88 நகராட்சிகள், 14 நகரியங்கள் உள்ளன.)

# ஊராட்சி அரசிதழ்

# PANCHAYAT GAZETTE

கிராம நலம் பகுதி-2

GRAMANALAM PART-2

(இந்தப் பகுதியில் ஊராட்சி, ஊராட்சி வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய அரசு ஆணைகள், குறிப்பாணைகள், விதிகள் முதலியவற்றின் தமிழாக்கம் சுருக்கமாக இடம் பெறுகிறது.)

———o———

## மும்மொழித் திட்டம் கைவிடப்பட்டு, இருமொழிப் பாடத் திட்டம் ஏற்படுத்தப்படுகிறது.

## Education—Schools—Study of languages—Three language formula—Discontinued—Two languages Introduced—Orders issued.

இம்மாநிலத்திலுள்ள பள்ளிகளில், மும்மொழித் திட்ட அடிப்படையில், கீழ்க்கண்டவாறு தற்போது மொழிகள் கற்பிக்கப்படுகின்றன:—

பிரிவு ஒன்று

பிராந்திய மொழி அல்லது பிராந்திய மொழியினின்று வேறுபடுகையில் தாய்மொழி.



பிரிவு இரண்டு

சிறப்புத் தமிழ் அல்லது இந்தி அல்லது பிரிவு ஒன்றில் எடுத்துக் கொள்ளாத பிற இந்திய மொழி.

பிரிவு மூன்று

ஆங்கிலம் அல்லது இந்திய மொழி அல்லாத பிற நாட்டு மொழி.

**2.** பள்ளிகளில் கற்பிக்கப்பட வேண்டிய மொழித்திட்டம் பற்றி அரசு தற்போது பரிசீலனைசெய்தது. 1968-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 23-ஆம் நாள் கூட்டப் பெற்ற இம்மாநில சட்ட மன்ற சிறப்புக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின்படி, பள்ளிகளில் மும்மொழித் திட்டத்தை நீக்கிவிட்டு, அதற்கு மாறாக மொழி பற்றிய பாடங்கள் இருமொழியில் இருக்கவேண்டும் என்று அரசு முடிவு செய்கிறது. அதற்கேற்ப, இம்மாநிலத்திலுள்ள பள்ளிகளில், மொழி பற்றிய பாடத் திட்டம், உடனடியாகக் கீழ்க்காணும் அடிப்படையில் இருக்கவேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

பிரிவு (அ)—பிராந்திய மொழி அல்லது பிராந்திய மொழியினின்றும் வேறுபடுகையில் தாய்மொழி.

பிரிவு (ஆ)—ஆங்கிலம் அல்லது இந்திய மொழி அல்லாத வேறு நாட்டு மொழி.

பிரிவு (அ)-ல் கூறப்பட்ட மொழியானது முதல் வகுப்பிலிருந்தும், பிரிவு (ஆ)-ல் கூறப்பட்ட மொழி மூன்றும் வகுப்பிலிருந்தும் கற்றுக் கொடுக்கப்பட வேண்டும். இந்த இரண்டு மொழிகளிலும் தேர்வுகள் கட்டாயமானதாக தொடர்ந்து இருக்கும்.

**3.** தற்போதுள்ள இந்தி ஆசிரியர்களை அவர்களின் தகுதி அடிப்படையில், தகுந்த பதவிகளில் அமர்த்துவதற்கு எல்லா முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என்று இந்த சூழ்நிலையில் அரசு தெளிவுபடுத்த விரும்புகிறது. இது பற்றிய ஆணைகள் தனியே பிறப்பிக்கப்படும்.

**4.** ஒன்பது, பத்து, பதினொன்றாவது வகுப்புகளின் பாடத் திட்டத்தில், தேவையான மாற்றங்களைச் செய்து, மேற்கண்ட ஆணைகளை உடனடியாக செயல்படுத்தும்படி, இடைநிலைக் கல்வி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(1968-ம் ஆண்டு ஜனவரி 24-ம் நாளிட்ட, கல்வித் துறையின் அரசு ஆணை எண் 105-ன் சுருக்கம்)

## தேசிய உடல் நலப்படைப் பயிற்சியில், இந்தி ஆணைச் சொற்களுக்குப் பதில், தமிழ் அல்லது ஆங்கில ஆணைச் சொற்களைப் பயன்படுத்தல்—விளக்க ஆணைகள்—பிறப்பிக்கப்படுகின்றன

## National Fitness Corps—Physical Education Training—Use of Tamil or English words of command in the place of Hindi words—Instructions—Issued.

தேசிய உடல் நலப் படைத் (National Fitness Corps) திட்டம் அல்லது வேறு எந்த உடற்பயிற்சிக் கல்வித் திட்டத்தின்படி நடைபெறும் உடற்பயிற்சிக் கல்வி வகுப்புகளில் பயன்படுத்தப்படும் ஆணைச் சொற்களெல்லாம், உடனடியாக தமிழ் அல்லது ஆங்கிலத்தில் இருக்க வேண்டுமேயன்றி, இந்தியில் இருத்தலாகாது என்று, கல்வித் துறையின் 1966-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 7-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 148-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளுக்குத் திருத்தமாக அரசு இப்போது ஆணை பிறப்பிக்கிறது.

• • •

(கல்வித் துறையின் 24-1-1968-ட்ட அரசு ஆணை எண் 104-ன் சுருக்கம்.)

## தமிழக அரசுத் தலைமைச் செயலகம்-நுழைவுக் கட்டுப்பாடு பற்றி அறிவிப்பு

தமிழக அரசின் தலைமைச் செயலகம் உள்ள சென்னை கோட்டைக்குள், மக்கள் செல்வது சம்பந்தமான கட்டுப்பாடு பற்றி. அரசு அறிக்கையொன்று வெளியிட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு :

தமிழக அரசின் தலைமைச் செயலகத்திலிருந்து பேனா, எவர்சில்வர் பாத்திரங்கள், மூக்குக் கண்ணாடி, மின்விளக்கு, தண்ணீர்க் குழாய்கள், தட்டெழுத்துப் பொறி, நூல்கள் போன்றவை காணமற் போவதாக 1966-ம் ஆண்டு நவம்பர் மாதம் 21-ந் தேதியும் அதற்கு முன்னும் புகார்கள் வந்தன. புதுடில்லியிலுள்ள மத்திய அரசிலுள்ள தலைமைச் செயலகத்திலும், மேற்கு வங்காளம், மகாராஷ்டிரம், மைசூர் போன்ற பல மாநிலங்களின் தலைமைச் செயலகங்களிலும் செய்யப்படுவது போல் செயலகத்திற்குள் மக்கள் நுழைவது அனுமதிச்சீட்டு மூலம் கட்டுப்படுத்தப்பட்டால், அதன் பயனாகத் திருட்டுகள் தடுக்கப்படுவதுடன், உண்மையாகவே அதிகாரிகளைப் பார்க்கவும் முறையிடு செய்யவும் வருகிறவர்களை ஒழுங்குபடுத்தி உரிய அதிகாரிகளிடம் அனுப்புவதால், அவர்களது குறைகள் தீர்க்கப்பட வசதியாக இருக்கும் என அரசு கருதியது.

### வாயில்கள்

அதனையொட்டி, தலைமைச் செயலகத்திற்குள் 8 வாயில்களை மட்டும் திறந்துவைப்பதென்றும், மற்றவற்றை மூடிவிடுவதென்றும் அரசு தீர்மானித்தது. சட்டமன்ற மண்டபத்தின் ஒவ்வொரு பக்கத்திலும் இருக்கும் வாயில்களும், சட்டமன்ற அங்கத்தினர்கள் ஓய்வு அறைக்கு எதிரிலுள்ள வாயிலும் ஆகிய மூன்று வாயில்கள் அமைச்சர்கள், சட்டமன்ற அங்கத்தினர்கள், நாடாளுமன்ற அங்கத்தினர்கள், சட்டமன்றத் துறை அதிகாரிகள், அலுவலர்கள் ஆகியோர் மட்டுமே செல்வதற்குரியவை. இவற்றின் வழியாக மற்றவர்கள் செல்வதைத் தடுக்க இந்த வாயில்களில் காவலர்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். மற்ற ஐந்து வாயில்கள் அலுவலர்கள் செல்வதற்குரியவை. தலைமைச் செயலக அலுவலர்களுக்கு, அவர்களது புகைப்படம் ஒட்டிய அடையாளச் சீட்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இந்த ஐந்து வாயில்களின் இரண்டில், அதாவது வடபகுதியிலும் மேற்குப் பகுதியிலும் இருக்கும் இயங்கேணிகளுக்கு (லிப்டுகளுக்கு) அருகில் வரவேற்பாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். அலுவல் காரணமாக தலைமைச் செயலகத்திற்குள் செல்ல விரும்புகிறவர்களுக்கு, வரவேற்பாளர் அனுமதிச் சீட்டுக்கள் வழங்குவார்.

சட்டமன்ற அங்கத்தினர்களுக்கு (சட்டமன்ற) மேலவைத்துறை வழங்கியுள்ள அடையாளச் சீட்டுக்களே தலைமைச் செயலகத்திற்குள் நுழையப் போதுமானதாகும்.

### பார்வையாளர்கள்

வரவேற்பாளருக்குத் தொலைபேசி உண்டு. பார்வையாளர் அவரிடம் செல்லவேண்டும். அவர் யாரைப் பார்க்க விரும்புகிறார் என்பதை வரவேற்பாளர் தெரிந்துகொண்டதும், அந்த அதிகாரி அல்லது அதிகாரியின் நேர்முக எழுத்தர் அல்லது அமைச்சரின் நேர்முக உதவியாளருடன் தொடர்புகொண்டு அவரைப் பார்க்க வசதிப்படுமா என்று கேட்பார். பார்க்கலாம் என்று பதில் கிடைத்தால், வந்தவருக்கு அவர் அனுமதிச் சீட்டு வழங்குவார்.



அந்தச் சீட்டில் பார்வையாளரின் பெயர், அவர் பார்க்க விரும்பும் அதிகாரி, அந்த அதிகாரி சார்ந்துள்ள துறை ஆகிய விவரங்கள் இருக்கும். அனுமதிச் சீட்டின் தேதி, எண், அது வழங்கப்படும் நேரம் ஆகியவையும் அதில் குறிக்கப்பட்டிருக்கும். அனுமதிச் சீட்டில் மூன்றுபகுதிகள் இருக்கும் எதிரிடைச் சீட்டுப் பகுதியை (Counterfoil) வரவேற்பாளர் நிறுத்திக் கொள்வார்; பார்வையாளர் சந்திக்க விரும்பும் அதிகாரி நிறுத்திக்கொள்ள வேண்டிய இரண்டாவது பகுதியும், வெளியே போகும்போது நுழை வாயிலுள்ள காவலாளரிடம் கொடுக்க வேண்டிய மூன்றுவது பகுதியும் பார்வையாளரிடம் தரப்படும். இந்த இரு பகுதிகளையும் எடுத்துக்கொண்டு பார்வையாளர் தான் பார்க்க விரும்பும் அதிகாரியிடம் செல்வார். அதிகாரி இரண்டாவது பகுதியைத் தன்னிடம் நிறுத்திக்கொண்டு, மூன்றுவது பகுதியைப் பார்வையாளரிடம் அளிப்பார். பார்வையாளர் தனது வேலை முடிந்து, செயலகத்தை விட்டு வெளியே போகும்போது, நுழை வாயிலிலுள்ள காவலாளரிடம் அந்தச் சீட்டைக் கொடுத்துவிடுவார். பார்வையாளர் போய்ப் பார்க்கும் அதிகாரி, அவரை வேறொரு அதிகாரியிடம் அனுப்புவதாக இருந்தால் அந்த அதிகாரியின் பெயரையும் பதவியையும் எழுதி, அனுமதிச் சீட்டின் இரண்டாவது பகுதியையும் பார்வையாளரிடமே தந்துவிடுவார். பார்வையாளர் இரண்டாவது பகுதியையும் மூன்றுவது பகுதியையும் எடுத்துக்கொண்டு, அவர் குறிப்பிட்ட அதிகாரியிடம் செல்வார்.

பார்வையாளர் பார்க்க விரும்பும் அதிகாரி, அல்லது அதிகாரியின் நேர்முக எழுத்தர், அல்லது அமைச்சரின் நேர்முக உதவியாளர் அந்த நேரம் வசதிப்படாது என்று, வேறொரு நேரத்தை வரவேற்பாளரிடம் தெரிவித்தால், அவர் அந்தச் செய்தியைப் பார்வையாளரிடம் சொல்லி, அந்த நேரத்தில் வந்து பார்க்குமாறு அவரைக் கேட்டுக் கொள்வார்.

ஒரே காரியத்திற்காக ஒரு குறிப்பிட்ட அதிகாரியைப் பலர் பார்க்க விரும்பினால், வரவேற்பாளர் அவர்களுக்கு ஒரே ஓர் அனுமதிச் சீட்டு வழங்கி, அதில் அந்தக் குழுவின் பிரதிநிதியின் பெயரையும் அவர் பிரதிநிதித்துவம் வகிக்கும் நபர்களின் எண்ணிக்கையையும் எழுதுவார்.

சட்டமன்ற அங்கத்தினர்களுடன் பார்வையாளர்கள் வந்தால், வரவேற்பாளரிடமிருந்து அந்தப் பார்வையாளர்கள் மட்டும் அனுமதிச் சீட்டு பெற வேண்டும்.

எந்த அதிகாரியைப் பார்ப்பதென்று பார்வையாளருக்குத் தெரியாவிட்டால், வரவேற்பாளர் அவரிடமிருந்து விவரம் கேட்டு அவருக்கு வழி காட்டுவார்.

இந்த ஏற்பாட்டால் வரவேற்பாளர்கள், பார்வையாளர்களுக்குத் தக்க முறையில் அதிகாரிகளை அவர்கள் சந்தித்துப் பேச உதவுவார்கள். அத்துடன் அதிகாரிகள் அவர்களது குறைகளைக் கவனிக்கக் கூடியவர்களாக இருப்பார்கள், இதனால் பார்வையாளர்கள் நேரம் வீணாவது தவிர்க்கப்படும்.

இந்த அனுமதிச் சீட்டு முறை 1968-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 21-ம் தேதியிலிருந்து நடைமுறைக்கு வருகிறது.

## ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள ஊழியர்கள், தங்களின் அலுவலக நேர் உயர்வு அதிகாரிகளல்லாதவர்களுடன் கடிதப் போக்குவரத்து, செய்தல், பேட்டி காணுதல் மற்றும் உயர்மட்ட அதிகாரிகள், அமைச்சர்களிடம் செல்வாக்கை பயன்படுத்துதல்—தடுக்கப்படுகிறது—விளக்க ஆணைகள்—உறுதிப்படுத்தப்படுகின்றன

## Panchayats and Panchayat Union Servants—Correspondence and interviews with authorities other than immediate official superiors and canvassing of influence to bear on high officials and Ministers—Prohibited—Instructions—Reiterated.

ஊராட்சி ஒன்றிய குழுக்கள், ஊராட்சிகளில் பணிபுரியும் அலுவலர்கள், தங்களின் சொந்த முன்னேற்றத்தைக் கருதி, உயர்தர அதிகாரிகளுக்கு கடிதம் எழுதுதல், அவர்களின் பேரில் தங்களது செல்வாக்கைப் பயன்படுத்துதல் அல்லது அவர்களைப் பேட்டி காணுதல் போன்ற செயல்களை, ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் அதிகாரிகள், ஊழியர்களின் தனிப்பட்ட ஒழுக்கத்தைப்பற்றிய விதிகளில் (Rules relating to Personal Conduct of Officers and Servants of Panchayat Union Councils) விதிகள் 18, மற்றும் 19-ம், ஊராட்சிகளின் அதிகாரிகள், ஊழியர்களின் தனிப்பட்ட ஒழுக்கத்தைப் பற்றிய விதிகளிலுள்ள விதிகளும் தடை செய்கின்றன. சமீபகாலமாக தங்களது சொந்த நலன் கருதி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள அலுவலர்கள், வேலை இடமாற்றங்களைக் கோருதல், இடமாற்ற ஆணைகளை தள்ளுபடி செய்யக்கோருதல், பதவி உயர்வு கோருதல் போன்ற செயல்களுக்கு, அமைச்சர்களையும், உயர் அதிகாரிகளையும் நிர்ப்பந்தப்படுத்தப்படுத்திய செயல்கள்

பல நிகழ்ந்துள்ளன. இம்மாதிரியான செயல்கள், நன்னடத்தை விதிகளுக்கு புறம்பானதாக இருப்பதோடு, ஊழியர்களின் நேர்மைப் போக்கை குலைப்பதாகவும் இருக்கிறது. இம்மாதிரியான பழக்கங்களுக்கு ஒரு முடிவு காண அரசு தீவிரமாக இருக்கிறது. ஊழியர்களுக்கு குறைகளிருப்பின், அவை பற்றி எழுத்துவடிவில், தங்களது நேர் உயர் அதிகாரி வாயிலாக, தகுந்த அதிகாரிக்கு முறையிட்டுக் கொள்ள வேண்டும். இருப்பினும், முறையீட்டின் ஒரு நகலை, முன்னதாகவே உயர் அதிகாரிக்கு அனுப்பிவிடுவதில் எந்த மறுப்பும் இல்லை.

3. அமைச்சர்கள், உயர் அதிகாரிகளின் மீது நிர்பந்தங்களைக் கொண்டு வருதல், நன்னடத்தை விதிகளை மீறும் செயலாகும். அவ்வாறு மீறப்பட்ட நேர்வுகளின் மீது ஒழுங்குமுறை நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று அறிவிக்க அரசு விரும்புகிறது. தங்களது மாவட்டங்களிலுள்ள ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள எல்லா அலுவலர்களின் கவனத்திற்கும், இந்த விளக்க ஆணைகளைக் கொண்டு வருமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 10-1-1968 நாளிட்ட அரசு ஆணை எண் 19.)

## நூலக ஆணைக் குழுக்களின் கட்டிடங்களுக்கு வாடகை செலுத்துதல்—விளக்க ஆணைகள்—பிறப்பிக்கப்படுகின்றன

## Panchayats—Contributions—Incurring of expenditure towards payment of rent for Local Library Authorities buildings—Instructions—Issued.

நூலக ஆணைக் குழுவின் (Local Library Authority) சில கிளை நூலகங்கள் ஊராட்சிகளால் அளிக்கப்பட்ட வாடகைக் கட்டிடங்களில் அமைந்திருப்பதும், இந்த கட்டிடங்களுக்குரிய வாடகைத் தொகைகள், ஊராட்சி நிதிகளிலிருந்து செலவழிக்கப்படுகிறது என்பதும் அரசின் கவனத்திற்கு வந்துள்ளது. இவ்வாறு வாடகைத் தொகைகளை செலுத்துவது முறையற்றது என்று மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

2. நூலக ஆணைக் குழுவின், கிளை நூலகங்கள் அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்களுக்கு, ஊராட்சிகளின் நிதிகளிலிருந்து வாடகைத் தொகையளிப்பது, ஊராட்சிகளின் மீது கடமையாக்கப்பட்ட ஒரு செலவினம் என்று 1958-ம் ஆண்டு தமிழக ஊராட்சிகள் சட்டத்தின் விதித்துறைகளில் கூறப்படவில்லை. இச்செலவினத்தை, ஊராட்சிகளின் நிதிகளிலிருந்து அளிக்கப்படும் ஒரு நன்கொடையெனக் கருதி, அதை எதிர்பாராத செலவினம் என்று, 1958-ம் ஆண்டு தமிழக ஊராட்சிகள் சட்டத்தின் பிரிவு 139 (4) iii-ல் கொண்டு வருதல் கூடாது; இச் செலவினம், நூலக ஆணைக் குழுவின் சட்டப் பூர்வமான செலவினமாயிருப்பதால், அக் குழுவின் நிதிகளிலிருந்தே, வாடகைத் தொகை அளிக்கப்பட வேண்டுமேயன்றி, ஊராட்சிகளின் நிதிகளிலிருந்து வாடகை அளிக்கப்படக் கூடாது. மேற்கண்ட விதித் துறையானது, எதிர்பாராத சூழ்நிலையில்தான் பயன்படுத்தப்பட வேண்டுமேயன்றி, இவ்விதமாக தொடர்ந்து ஏற்படும் செலவினங்களுக்கு, அந்த விதித்துறையை பயன்படுத்தக் கூடாது. 1958-ம் ஆண்டு தமிழக ஊராட்சிகள் சட்டத்திலுள்ள, பிரிவு 139 (4) iii-ஐ, பயன்படுத்தி, நூலக ஆணைக் குழு வசமுள்ள கட்டிடங்களுக்கு வாடகை செலுத்த, ஊராட்சிகளின் ஆய்வாளர் என்ற முறையில் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அனுமதி வழங்கியிருப்பின், அது உடனே கைவிடப்பட வேண்டும்.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 27-ந் நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 133815-ன் சுருக்கம்)

## அரசு ஊழியர்களைச் சார்ந்திருக்கும் திருமணமாகாத சகோதரிகளுக்கும் இலவச மருத்துவச் சலுகைகளை அளித்தல்—ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன

## Medical Attendance—Madras Medical Attendance Rules—Extension of free medical concessions to dependent unmarried sisters of Government servants—Orders Issued.

முன்னூறு ரூபாய்க்கு மேற்படாத மாத ஊதியம் பெறும் அரசு ஊழியர்கள், மற்றும் உள்ளாட்சி நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களின் குடும்பத்தினர்களும் தமிழக மருத்துவச் சலுகை விதிகளின்படி, இலவச மருத்துவச் சலுகை பெற தகுதி உடையவர்களாக இருக்கிறார்கள்.

பெற்றோர்கள், மனைவி, சட்ட பூர்வமான குழந்தைகள் (தத்து எடுத்த மகன் உள்பட) மாற்றாந்தாய் குழந்தைகள், அரசு ஊழியர்களுடன் வசிக்கும் அல்லது அவர்களைச் சார்ந்திருக்கும் மாற்றாந்தாய், சட்டப்படி நீதிமன்ற அனுமதியுடன் பிரிந்திருக்கும் மனைவியர்கள், அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகளின் கைம்பெண்ணாய் இருக்கும் மகள்கள் அல்லது விவாக ரத்து செய்து கொண்ட மகள்கள், மற்றும் அவர்களைச் சார்ந்திருக்கும் விதவைத்தாய் ஆகியோர் மட்டுமே இலவச மருத்துவச் சலுகை பெற தகுதி உடையவர்கள்.

2. அரசிதழ் பதிவு பெறாத அரசு ஊழியர்களைச் சார்ந்துள்ள திருமணமாகாத சகோதரிகளுக்கும் இலவச மருத்துவச் சலுகையை அனுமதிப்பது பற்றி, மருத்துவப் பணி இயக்குநருடன் அரசு பரிசீலனை செய்தது. அரசிதழ் பதிவு பெறாத அரசு ஊழியர்களைச் சார்ந்திருக்கும் திருமணமாகாத சகோதரிகளுக்கும், இலவச மருத்துவச் சலுகை அனுமதிப்பது நேர்மையுடையது என்று கூறி, அவ்வித சலுகையை அளிக்கலாம் என்று மருத்துவப் பணி இயக்குநர் பரிந்துரை செய்துள்ளார்.

3. மருத்துவப் பணி இயக்குநரின் பரிந்துரையை அரசு ஏற்றுக்கொண்டு, மாதம் ரூ. 300/-க்கு மிகாமல் சம்பளம் பெறும் அரசிதழ் பதிவு பெறாத ஊழியர்களுக்கும், உள்ளாட்சி நிறுவன ஊழியர்களுக்கும் அனுமதிக்கப்பட்டு வந்த இலவச மருத்துவச் சலுகையை இவர்களைச் சார்ந்திருக்கும் திருமணமாகாத சகோதரிகளுக்கும் நீடிப்பதற்கு அரசு ஏற்றுக்கொண்டு ஆணை பிறப்பிக்கிறது. இந்த ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து இந்த சலுகை செயலுக்கு வரும்.

(1966-ம் ஆண்டு அக்டோபர் 1-ஆம் நாளிட்ட, கல்வி, பொது சுகாதாரத் துறையின் அரசு ஆணை எண் 1769-ன் சுருக்கம்.)

## தமிழக பிரயாணப்படி விதிகள்—விதி 25-ல் உள்ள விளக்க விதி 5-க்கு திருத்தங்கள் பிறப்பிக்கப்படுகின்றன

## Madras Travelling Allowance Rules—Rule 25—Ruling 5—Amendment—Issued.

தமிழக அரசு பிரயாணப்படி விதிகளில் (Madras Travelling Allowance Rules) விதி 25-ல் உள்ள விளக்க விதி 5 (Ruling 5 under rule 25), பின்கண்டவாறு மாற்றப்பட வேண்டும் :—

பொதுத் தேர்தல்கள் மற்றும் துணைத் தேர்தல்களை நடத்துவதற்குரிய ஏற்பாடுகளை மேற்பார்வை செய்ய, தலைமை வாக்குப் பதிவு அதிகாரியும், தமிழக அரசு தலைமைச் செயலக அதிகாரிகளும் சுற்றுப்பயணம் மேற்கொள்ள வேண்டியிருக்கையில், 60 கிலோ மீட்டருக்கு அதிகமான தூரம் உள்ள பிரயாணத்திற்கும், முழு மைல் பிரயாணப்படி சலுகைகள், அவர்களுக்கு அனுமதிக்கப்படும். இந்தச் சலுகையானது பொதுத் தேர்தலாக இருப்பின், ஒரு மாதத்திற்கு—அதாவது வாக்குப் பதிவு நடைபெறுவதற்கு முதல் நாளிலிருந்து வாக்குப் பதிவு முடிந்த இரண்டு நாட்கள் வரையிலும் அனுமதிக்கப்படும். துணைத் தேர்தலாக இருப்பின், வாக்குப் பதிவு நடைபெறுவதற்கு 7 நாட்களுக்கு முன்பிருந்து வாக்குப் பதிவு முடிவுற்ற இரண்டு நாட்கள் வரை இச்சலுகை உண்டு.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள், வருவாய்த் துறையிலுள்ள இதர அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு பணிக்கென்றே சிறப்பாக அமர்த்தப்பட்ட அரசிதழ் பதிவு பெற்ற காவல் அதிகாரிகள் ஆகியோருக்கும், தமிழகத்தில் நடைபெறும் பொதுத் தேர்தல், துணைத் தேர்தல்களுக்கு இந்த முழு மைல் பிரயாணப்படிச் சலுகை விரிவுபடுத்தப்படும். காவல் துறையில் உள்ள மற்ற அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிகள், இந்த முழு மைல் பிரயாணப்படிச் சலுகையைப் பொதுவாகப் பெறுமல், 'தேர்தல் வேலைகளுக்காகவே பிரயாணம் செய்தார்கள்' என்ற சான்றிதழின் பேரில் மேற்குறிப்பிட்டுள்ள சலுகை பெற்றுக் கொள்ளலாம். காவல் துறை அதிகாரிகளின் அலுவல் வரம்பாக ஒரு மாவட்டம், அல்லது ஒரு பகுதி அல்லது மாநிலம் முழுவதுமே இருக்கும் நிலையில், அவரவர்களின் அலுவல் வரம்பிற்கேற்றவாறு, வாக்குப் பதிவின் முதல் நாளிலிருந்து, ஏழு நாட்கள் முன்பு வரை கணக்கிட்டுக் கொள்ளுதல் வேண்டும்.

நாடாளுமன்றம் மற்றும் சட்டமன்றத் தொகுதிகள் அனைத்திற்குமுள்ள தேர்தல் வேலைகளுக்காக பிரயாணம் மேற்கொள்ளும் மாவட்ட வாக்குப் பதிவு அதிகாரிகள் (District Election Officers), தேர்தல் அதிகாரிகள் (Returning Officers) துணைத் தேர்தல் அதிகாரிகள் (Assistant Returning Officers) ஆகியோருக்கும் மேற்குறிப்பிட்டுள்ள முழு மைல் சலுகை விரிவுபடுத்தப்படும். பொதுத் தேர்தலைப் பொறுத்தவரையில், வேட்பாளர் தமது விண்ணப்பத்தைத் திரும்பப் பெற்றுக் கொள்ளும் இறுதி நாளிலிருந்து, தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் நாள் முடிய மட்டுமே, இந்தச் சலுகைகளை இவர்கள் அடைய முடியும்.

(நிதித் துறையின் 1967-ஆம் ஆண்டு ஜூலை 29-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 695-ன் சுருக்கம்.)

## ஓய்வூதியம்—கைம்பெண்களின் இறுதிகாலம் வரை ஓய்வூதியம் அளித்தல்—மனைவியை இழந்த கணவர்களுக்கும் ஓய்வூதியம்—விளக்க ஆணைகள்—பிறப்பிக்கப்படுகின்றன.

## Pension—Madras Liberalised Pension Rules, 1960—Grant of family pension for life of widows—Applicability to widowers—Clarificatory orders—Passed.

1960-ம் ஆண்டு தமிழக அரசின் தளர்த்தப்பட்ட ஓய்வூதிய விதிகளின்படி, கைம்பெண்கள் வயது வராத குழந்தைகள் 1964-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 31-ம் தேதி அன்று குடும்ப ஓய்வூதியம் பெறும் தகுதியானது, கைம்பெண்களைப் பொருத்தவரையில் மரணம் அல்லது மறுமணம் வரையிலும், வயதுவராத குழந்தையாயிருந்தால், பருவம் அடையும் காலம் வரையிலும் அல்லது மகளாக இருப்பின் திருமண காலம் வரையிலும் நீடிக்கப்பட்டு, நிதித்துறையின் 1965-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 2-ந் தேதியிட்ட அரசு ஆணை எண் 345-ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன.

இந்த நாளுக்குப்பிறகு அவர் இறந்துவிட்டிருந்தால், (ஓய்வு பெற்ற நாளிலிருந்து ஐந்து ஆண்டுகளுக்குள்ளாக) கைம்பெண்களும், வயது வராத குழந்தைகளும் குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியுண்டு.

2. அரசுப் பணியிலுள்ள பெண் அலுவலர்களின் கணவர்களுக்கும் இந்த சலுகை பொருந்துமா என்பது பற்றி ஒரு கேள்வி எழுந்துள்ளது. ஏனெனில் தற்போதுள்ள ஆணைகளில் அது பற்றி ஒன்றும் குறிப்பிடப்படவில்லை. இந்திய அரசை கலந்தாலோசித்ததில், இந்த சலுகை, அரசு அலுவலிலுள்ள பெண்களின் கணவர்களுக்கும் பொருந்தும் என்று கூறியுள்ளது. எனவே, இந்தச் சலுகையானது, அரசுப் பணியிலுள்ள பெண் அலுவலர்களின் கணவர்களுக்கும் பொருந்தும் என்று, அரசு ஆணை பிறப்பிக்கிறது.

(நிதித் துறையின் 1967-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 20-ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 920-ன் சுருக்கம்).

## தாழ்த்தப்பட்டோர் நலன்—ஊராட்சிகளிலும் நகராட்சிகளிலும் வேலை செய்யும் துப்புரவுத் தொழிலாளிகளுக்கு வீட்டு வசதி செய்து தருதல்—உதவித் தொகை அனுமதித்தல்—விண்ணப்ப படிவம்—நிர்ணயிக்கப்படுகிறது

## Harijan welfare—Housing for sanitary workers employed in panchayats and municipalities Sanction of subsidy—Application forms—Prescribed.

கிராம வளர்ச்சி இயக்குநர் மற்றும் நகராட்சி ஆய்வாளரின் பரிந்துரைகளை அரசு ஏற்றுக்கொண்டு, வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் உதவித் தொகை பெறுவதற்கு, இந்த ஆணையின் இணைப்பில் நிர்ணயித்த படிவத்தில் அரசுக்கு விண்ணப்பம் சமர்ப்பிக்கவேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

### இணைப்பு

ஊராட்சி நகராட்சிகளில் பணிபுரியும் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்ட உதவித் தொகை கோரும் விண்ணப்பம் :

1. ஊராட்சி / நகராட்சி / நகரியக் குழுவின் பெயர்: ஊராட்சியாய் இருப்பின் கோட்டத்தின் பெயர்:
2. மாவட்டம்:
3. ஊராட்சி/நகராட்சி/நகரியக் குழுக்களில் பணிபுரியும் துப்புரவு தொழிலாளர்களின் மொத்த எண்ணிக்கை:
4. வீட்டு வசதி செய்து தரப்பட வேண்டிய குடும்பங்களின் எண்ணிக்கை;
5. இது வரை வீட்டு வசதி செய்து தரப்பட்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை:
   (அ) அரசு உதவித் தொகையுடன்—
   (குறிப்பு) அரசு உதவித் தொகை அல்லது அரசுக் கடன் அனுமதிக்கப்பட்ட ஆணையின் எண் மற்றும் தேதி இங்கு தரப்படவேண்டும்.
   (ஆ) ஊராட்சி அல்லது நகராட்சி நிதிகளிலிருந்து—
6. இன்னும் கட்டிக்கொடுக்கப்பட வேண்டிய வீடுகளின் எண்ணிக்கை:
7. ஊராட்சி/நகராட்சி மன்றம்/நகரியக் குழு, சொந்தத்தில் வீட்டு மனை வைத்திருக்கிறதா? அல்லது இக்காரியத்திற்கென பயன்படக்கூடிய முறையில், தன்னுடைய கட்டுப்பாட்டில் தகுதியான நிலம் வைத்திருக்கிறதா ?
8. இப்பொழுது கட்ட உத்தேசிக்கப் பட்டிருக்கும் வீடுகளின் எண்ணிக்கை:
9. தேவைப்படும் உதவித்தொகை:
10. ஊராட்சி/நகராட்சி மன்ற தீர்மானத்தின் பிரதி இணைக்கப் பட்டுள்ளதா?



11. ஊராட்சி / நகராட்சி மன்றங்கள் வீடு கட்டும் செலவை, தன்னுடைய சொந்த நிதியிலிருந்து சரிக்கட்ட உத்தேசித்திருக்கிறதா? அல்லது அரசிடம் கடன் பெற உத்தேசித்திருக்கிறதா? கடன் தேவைப்படின் அதை தவணை முறையில் இன்னலில்லாமல் திருப்பிச் செலுத்த இயலுமா?
12. கட்டப்படவிருக்கிற இடத்தில் குடியேற துப்புரவு பணியாளர்கள் விரும்புகிறார்களா?
13. திட்டங்களும், மதிப்பீடுகளும், மனைகளும் தயாரிக்கப்பட்டு, அவற்றிற்கு சம்பந்தப்பட்ட அதிகாரியினுடைய அனுமதி கிடைத்துள்ளதா?
14. ஊராட்சி/நகராட்சி மன்றங்கள், உதவித் தொகை அனுமதித்த தேதியிலிருந்து, ஓர் ஆண்டிற்குள் வேலையை முடித்துவிட இயலுமா?
15. கடந்த மூன்று ஆண்டுகளின் வரவு, செலவு விவரங்கள் அடங்கிய அறிக்கை, மற்றும் நடப்பு ஆண்டின் நிதி நிலை மதிப்பீடுகளின் பிரதி ஒன்று இணைக்கப்பட வேண்டும்.
16. இதர விபரங்கள், குறிப்புகள்.

(உள் துறையின் 1967-ம் ஆண்டு நவம்பர் 4-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 5256-ன் சுருக்கம்.)

## சென்னை மாநகரிலுள்ள வங்கிகளிலும் கருவூலகங்களிலும் பணம் செலுத்துதல்—மூன்று நகல்களில் செலுத்துச் சீட்டு முறை—தமிழக அரசு கருவூல சட்டத் தொகுப்பு நூல் ஒன்று, இரண்டிற்கு திருத்தங்கள்.

## Remittances—Remittances of money into Treasuries and bank in Madras city—Triplicate chalan system—Amendment to the Madras Treasury Code, Volumes I and II—Regarding.

தமிழக அரசு கருவூலக சட்டத் தொகுப்பு நூல் ஒன்று, இரண்டிற்கு (Madras Treasury Code, Volumes I and II) கீழ்க்காணும் திருத்தங்கள் வெளியிடப்படுகின்றன.

### திருத்தங்கள்

(1962-ம் ஆண்டு மார்ச் மாதம் 31-ம் தேதி முடிய திருத்தி வெளியிடப்பட்ட) தமிழக அரசு கருவூலக சட்டத் தொகுப்பு நூல் ஒன்றில் பக்கம் 39-ல் உள்ள கருவூலக விதி 10 (c)—

10 (c) என்ற துணை விதியில், இப்போதுள்ள விதித்துறைகளை (Provisions) நீக்கிவிட்டு, அவற்றிற்கு மாறாக, கீழ்க்கண்டவை சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும் :

10 (c) (i) : சென்னை மாநகரில் பணம் செலுத்தும் தனியார்கள், மூன்று நகல்கள் கொண்ட "செலுத்துச் சீட்டு" (Triplicate Chalan) உள்ள படிவத்தைப் பூர்த்தி செய்து, சம்பந்தப்பட்ட துறை அதிகாரியிடம் சோதனைக்காக அளிக்க வேண்டும். அந்த அதிகாரி, தமது கையெழுத்தையும், இரப்பர் முத்திரையையும் (Rubber stamp), செலுத்துச் சீட்டின் ஒவ்வொரு நகலிலும் இடுவார். அவை முறையே முதல் நகல், இரண்டாம் நகல், மூன்றும் நகல் செலுத்துச் சீட்டு என்பதாகும். அதன் பிறகு, செலுத்துச் சீட்டுகளை இந்திய ரிசர்வ் வங்கி (Reserve Bank of India)க்கு எடுத்துச் சென்றால், வங்கியில் தொகையைப் பெற்றதற்காக, முதல் சீட்டில் கையெழுத்திட்டு சம்பந்தப்பட்டவரிடம் அதைக் கொடுத்துவிடுவார்கள். இரண்டாவது, மூன்றாவது நகல்களான செலுத்துச் சீட்டுகளை சம்பளம், கணக்கு அதிகாரிக்கு (Pay & Accounts Officer) அனுப்பி வைக்கப்படும். சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுக்கு செலுத்துச் சீட்டின் மூன்றாவது நகலை, ஒவ்வொரு வாரமும் சம்பளம், கணக்கு அதிகாரி அஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பார். துறைத் தலைவர்களுடைய செய்தியாள்கள் (Messengers) நேரிடையாக சென்று, மூன்றாவது நகலைக் கேட்கையில், அவர்களிடம் அந்தச் சீட்டுக்கள் அப்போதைக்கப்போது கொடுக்கப்படும். செலுத்துச் சீட்டின் இரண்டாம் நகல்களை சம்பளம், கணக்கு அதிகாரி, தமது அலுவலகத்தில் வைத்துக்கொள்வார். சென்னையிலுள்ள இந்திய ரிசர்வ் வங்கியில் பணம் செலுத்தக்கூடிய நிலையில், சென்னையிலே உள்ள துறைத் தலைவர்கள் இரண்டு நகல்கள் கொண்ட செலுத்துச் சீட்டின் வாயிலாக பணம் செலுத்தலாம். ஆனால், துணை விதி 10 (g) (i)-ல் உள்ள விலக்குகளுக்கு இது உட்பட்டதாகும்.

(ii) வெளியூர்களிலுள்ள கருவூலகங்களில் பணம் செலுத்தும் தனியார்கள், மூன்று நகல்கள் கொண்ட

செலுத்துச் சீட்டினால் மட்டுமே பணம் செலுத்த வேண்டும். சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்களுக்கு செலுத்துச் சீட்டின் மூன்றாவது நகல்களை கருவூலகங்கள் அனுப்பி வைக்கும். வெளியூர்களிலுள்ள கருவூலகங்களில் பணம் செலுத்தும் துறைத் தலைவர்களும் கூட, மூன்று நகல்கள் உள்ள செலுத்துச் சீட்டின் வாயிலாகத்தான் பணம் செலுத்த வேண்டும்.

குறிப்பு 1.—கருவூலகங்களின் மூல ஆவணங்களிலிருந்து (Original record) வரவு சம்பந்தப்பட்ட விவரங்களை சரிபார்க்கும் முதல் பொறுப்பு கருவூலக அதிகாரியையே சாரும்.

குறிப்பு 2 :—ஒவ்வொரு வாரமும் திங்கட்கிழமையன்று, கருவூலக, துணைக் கருவூலக அதிகாரிகள் செலுத்துச்சீட்டின் மூன்றாவது நகல்களை, துறைத் தலைவர்களுக்கு அஞ்சல் வாயிலாக அனுப்பி வைப்பார்கள். செய்தியாளர்கள் நேரிடையாகச் சென்று செலுத்துச் சீட்டின் மூன்றாவது நகலை கேட்கும்போது, வாரம் ஒரு தடவை கொடுப்பதற்குப் பதிலாக, அவ்வப்போது கேட்கும் போது கொடுக்கப்படும். செலுத்துச் சீட்டில் மூன்றாவது நகலை நேரிடையாகக் கேட்காவிடில், ஒவ்வொரு திங்கட்கிழமை தோறும் அஞ்சல் வாயிலாக அனுப்பிவைக்கப்படும்.

(நிதித் துறையின் 1967-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 23-ம் நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 135633-ன் சுருக்கம்.)

* * * *

## இந்த இதழில்...


| | பக்கம் |
|---|---|
| பசி, பிணி, பகை அற்ற திருநாடே நமது இலட்சியம் (மேதகு தமிழக ஆளுநர் உரையின் சாரம்). | 1 |
| "உணவு உற்பத்தியில் புரட்சிகரமான முன்னேற்றம் காண்போம்" .. .. | 5 |
| "கடல் வளம் சிறக்க, தொழில் திறமையைப் பெருக்குவோம்" .. .. .. | 7 |
| தமிழகத்திலே பனைத் தொழில் .. .. | 9 |
| நெஞ்சை விட்டகலா நினைவுகள் .. .. | 17 |
| 'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்' .. | 21 |


## அடுத்த இதழில்...

தமிழக அரசின் 1968-69-ம் ஆண்டின் நிதி நிலை அறிக்கை, மாண்புமிகு முதலமைச்சரின் உரையின் முழு வடிவம்—விளக்கப் படங்களுடன்... சிறப்பிதழாக வெளிவரும்.

மூன்றாவது அட்டைப்பட விளக்கம் :

படம் 1 : குடியரசு தினத்தன்று, மேதகு ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் அளித்த தேனீர் விருந்தில், மாண்புமிகு முதலமைச்சர், முன்னாள் முதல்வர் திரு பக்தவத்சலம், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் திரு சி. சுப்பிரமணியம், சென்னை உயர் நீதிமன்ற நீதிபதி திரு எம். எம். இஸ்மாயில் ஆகியோர்.

படம் 2 : 29-1-68-ல், தமிழக அரசு தலைமைச் செயலகத்தில் சித்த மருத்துவ மருந்தகத்தை மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் திரு சாதிக் பாட்சா அவர்கள் திறந்து வைத்தார்.

படம் 3 : சென்னை சட்டக்கல்லூரிக்கு எதிரில் அமைந்துள்ள கதர் கிராமக் கைத்தொழில் ஆயத்தின் "குறளகம்" என்னும் கட்டடத்தை மாண்புமிகு முதலமைச்சரும், கதர் கைத்தொழில் அங்காடியை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரும், 14-1-68-ல் திறந்து வைத்தார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி விழாவிற்குத் தலைமை வகித்தார்.

படம் 4 : சர்வோதய தினத்தை (30-1-68) ஒட்டி, சென்னைக் கடற்கரையில், காந்தி சிலை அருகில் நூல் நூற்பு - பிரார்த்தனைக் கூட்டம் நடைபெற்றது.


வெளியிடுபவர் : திரு வி. நடராஜன், ஐ. ஏ. எஸ்.

ஆசிரியர் : திரு எஸ். வேங்கடசாமி, எம். ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras, Edited by the Public Relations Officer and published by the Director of Rural Development, Madras-9.
Wrapper printed at Vadapalani Press, Madras-26.




குடியரசு தின விழா—மேதகு தமிழக ஆளுநர் அளித்த தேனீர் விருந்தில் . . .



கோட்டையில் சித்த மருத்துவ மனைத் திறப்பு <—விழா



"குறளகம்"—கதர் கைத் தொழில் அங்காடி—திறப்பு விழா



சர்வோதய தினம்—நூல் நூற்பும் பிரார்த்தனைக் கூட்டமும் . . .

REGD. NO. M. 7277
© தமிழ்நாடு அரசாங்கம் 1968

"வையத்தின் புதுநிலவே! வாழ்வுக்கோர் புத்தமுதே!!"

பழைய மரபும் புதிய திறனும்

ஒன்று திரண்ட நமது கிராமக் கைத்தொழில் பண்டங்கள் தமிழகத்துக் கைவினைக் கலைஞர்களின் தொழில் நுட்பத் திறனை, உலகம் அறியப் பறை சாற்றி, நமது நாட்டின் நற்புகழை வளர்க்கின்றன.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் தித்திக்கும் தீந்தமிழைப்பற்றி தீட்டிய மேற் சொன்ன சொல்லோவியம், நமது கிராமக் கைத் தொழில்களுக்கும் அப்படியே பொருந்தும்.



குறளகம்



EMPORIUM OF RURAL PRODUCTS
KHADI & VILLAGE INDUSTRIES BOARD.
MADRAS . STATE.
தமிழகக் கிராம கைத்தொழில் ஆயம்

- 14-1-68-ல் தமிழக முதலமைச்சர் திரு. அண்ணாதுரை அவர்கள் குறளகத்தை திறந்து வைத்தார்.
- தமிழகக் கிராம கைத்தொழில் உற்பத்திப் பொருள்களின் விற்பனைக் கூடம்.
- மக்கள் வாழ்வின் அன்றாடத் தேவைகளுக்கான பல்வேறு பொருள்களையும், நமது கிராமங்களிலேயே தயாரித்து, ஏழை எளிய மக்களின் பொருளாதார நல் வாழ்விற்கு வழி கோலுகிறது.

இடம்: சென்னை சட்டக் கல்லூரிக்கு அருகே

# கிராமநலம்

மார்ச் 1968



தமிழக சட்டப்பேரவையின் கூட்டத் தொடரை தொடங்கி வைத்து, மேதகு ஆளுநர் சர்தார் உஜ்ஜல்சிங் உரையாற்றுகிறார்
(10-2-68)

1968-69-ம் ஆண்டின் நிதி நிலை அறிக்கை—




# கிராமநலம்

தமிழக அரசின் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை மாத இதழ்

கதிர் 13 மார்ச் 1968 நெல் 6


## 1968-69-ம் ஆண்டு, நிதி நிலை அறிக்கை - விளக்கக் கண்ணாடி

### (மாண்புமிகு முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை அவர்கள் ஆற்றிய உரை)

"இயற்றலும், ஈட்டலும், காத்தலும், காத்த
வகுத்தலும் வல்லது அரசு"

என்ற குறள் நெறிக்கிணங்க, நமது மாநிலத்தின் நிதிநிலையை விளக்கும் கண்ணாடியாக, மாண்புமிகு முதலமைச்சரும் நிதியமைச்சருமான திரு சி. என். அண்ணாதுரை அவர்கள் 1968—69-ம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டத்தை, 28—2—1968-ல் சட்டப் பேரவையின் முன்வைத்து, உரையாற்றினர். மக்களாட்சியில் இந்த விவரங்களை அனைவரும் தெளிவாக அறிந்துகொள்ளக் கடமைப்பட்டுள்ளனர். எனவே, அந்த உரையின் முழு விவரத்தை, ஒரு சில விளக்கப் படங்களுடன், இந்தச் சிறப்பிதழில் வெளியிடுவதில் மகிழ்ச்சியடைகிறோம்.—ஆசிரியர்.

"மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1968—69-ம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை இப்பேரவையின்கண் வைத்திடவேண்டி நான் முன்வந்துள்ளேன். 1966—67-ம் ஆண்டிற்கான இறுதிக் கணக்குகளும், 1967—68-ம் ஆண்டிற்கான திருத்த மதிப்பீடுகளும் இதனுடன் வைக்கப்பட்டுள்ளன. இன்றைய சமுதாயத்தில், அரசு ஆற்ற வேண்டிய பங்கு பற்றிய நமது எண்ணங்களிலே ஏற்பட்ட கருத்துப் புரட்சிக்கிணங்க, சில ஆண்டுகளாகவே, வரவு-செலவுத் திட்டம், அரசின் வரவினங்களையும் செலவினங்களையும் குறிக்கும் வெறும் விவர அறிக்கையாக நிலவிய நிலைமாறிவிட்டது. குடியாட்சியில் மக்களின் நம்பிக்கையைப்பெற்றுத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் குறிக்கோள்களையும் கோட்பாடுகளையும் எய்துவதற்கு ஏற்ற வலிமை வாய்ந்த ஒரு கருவியாகவே, தற்கால வரவு-செலவுத்திட்டம் அமைகிறது. இவ்வரசின் ஓராண்டு நிறைவோடு, இவ்வரவு-செலவுத் திட்டமும் இணைந்து அமைகிறதாதலின், நடப்பு ஆண்டின் திருத்த மதிப்பீடுகளும், வரும் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளும், மக்கள் முன் சிறப்புற வைத்த கொள்கைகளை அரசு நிறைவேற்றுவதில் எவ்வாறு பயன்படும் வண்ணம் அமைந்துள்ளனவென்பதை இத் தருணத்தில் சற்று விரிவாக நான் விளக்க வேண்டுமென இப்பேரவை எதிர்பார்ப்பது சாலப் பொருத்தமாகும்.

முதல் அட்டைப்பட விளக்கம் : தமிழ்நாடு சட்டமன்றக் கூட்டு அவையில், மேதகு தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல்சிங் அவர்கள், 10-2-68 அன்று, சட்டமன்றக் கூட்டத் தொடரினைத் துவக்கிவைத்து உரையாற்றுகிறார்.

இரண்டாவது அட்டைப்படம் : மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 28-2-68-ல், 1968-69-ம் ஆண்டுக்குரிய வரவு செலவுத் திட்டத்தை, சட்டப்பேரவையின் முன் வைத்து, உரையாற்றுகிறார்.

மூன்றாவது அட்டைப்படம் : சட்டப் பேரவையின் மற்றொரு பகுதி.

பொருளா தாரப் பின்னணி.

2. அவ்வாறு செய்யும்போது, இந்த அரசு பதவி ஏற்குங்காலையில் நாட்டிலே நிலவிய பொருளாதார நிலையைப் பற்றி, இம்மாமன்றத்தின் நாட்டத்திற்குக் கொண்டுவர வேண்டியிருப்பதை இம்மன்றம் பொறுத் தருளுமென நம்புகின்றேன். அவ்வமயம், மூன்றும் திட்டம் முழுமையாக நிறைவு பெற்று, நான்காம் திட்டம் முடிவு செய்யப்படுமா என்கிற ஐயப்பாடு தெளி யாமலே ஆண்டு ஒன்றும் கடந்து நின்றது. நிதி யளவில் பார்க்கும்போது, மூன்றும் திட்டம் எதிர் பார்த்த அளவிற்கு மேலாகவே நிறைவேற்றப் பட்டிருந்தது. முதற்கண் 7,500 கோடி ரூபாய் மட்டுமே வகை செய்யப்பட்டிருந்த நிதி ஒதுக்கத்திற்கு மாறுக, 8,630 கோடி ரூபாயளவில் செலவினம் உயர்ந் திருந்தது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான கூடுதல் வரியினங்களை ஏற்றதன் மூலம், தங்களிடமிருந்து எதிர்பார்க்கப்பட்ட தியாகத்தையும் நாட்டு மக்கள் செய்து முடித்தார்கள். அத்திட்டத்தில் திரட்டக் கருதி யிருந்த 1,710 கோடி ரூபாய் கூடுதல் வரிகளுக்கு மாறுக, மத்திய, மாநில அரசுகள் கூடுதல் வரிகளின் வாயிலாக 2,880 கோடி ரூபாயளவிற்கு நிதி வசதிகளைத் திரட்டின. முதற்கண் மதிப்பிடப்பட்ட 1,100 கோடி ரூபாய் அள விற்கு மாறுக, மத்திய அரசு மட்டும் விதித்துச் செயல் படுத்திய வரிகளின் மூலம் 2,270 கோடி ரூபாயளவிற்கு மக்கள் மீது கூடுதலாகச் சுமை ஏற்றப்பட்டது. செழுங் குடி மக்கள் மீது விழும் வருமான வரி, நிறுவன வரி (Corporation tax), சொத்து வரி போன்ற நேர்முக வரிகள் மூலம் 320 கோடி ரூபாய் மட்டுமே மத்திய அரசு திரட்டியது. எஞ்சிய தொகை, பாமர மனிதனின் அன்றாட வாழ்க்கைச் செலவின் மீது கடுமையான விளை வுகளை ஏற்படுத்த வல்லதும், உற்பத்திச் செலவுகளை பெருமளவிற்குக் கூட்டும் வகையிலுமுள்ள ஆயத் தீர்வை, சுங்க வரிகள், இரயில் கட்டணங்களில் செய்த சரிக் கட்டுதல்கள் போன்ற மறைமுக வரிகளின் வடிவில் எழுப் பப்பட்டது. நிதி அளவில் திட்டம் எதிர்பார்த்த அளவிற்குமேல் நிறைவேற்றப்பட்டிருந்தாலும், முக்கிய மான துறைகளில் குறிக்கோள் அளவுகள் பெருமளவிற்கு



எய்தப்படவில்லை. 1964—65-ம் ஆண்டு ஒன்றைத் தவிர, மூன்றும் திட்டக் காலத்தில் வேளாண்மை விளைச்சல் எந்த வகையிலும் உயரவில்லை. 1965—66-ல் 10 கோடி டன் உணவு உற்பத்தி செய்ய வேண்டும் என்பது குறிக் கோள் அளவு. ஆனல் 7·3 கோடி டன் உணவு தானி யங்கள் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டன. நாட்டு வருவாய் (National Income) ஆண்டுதோறும் சராசரி 5 சதவீதம் வளர்ச்சி அடைய வேண்டுமென்கிற குறிக் கோள் அளவிற்கெதிராக, 2·8 சத வீத அளவில் மட்டுமே வளர்ச்சி அடைந்தது. மக்கள் தொகை நிலையாக வளர்ச்சியடைந்து வந்ததால், நபர்வாரி வருவாய், மூன்றும் திட்டத்தில் ஆண்டிற்குச் சராசரி 0·3 சதவீத அளவில் மட்டுமே வளர்ச்சியடைந்ததாகக் கணக்கிடப் பட்டது. இவ்வாறுக, மலைப்பு எய்தும் அளவிற்கு செலவு செய்யப்பட்டிருந்தும், கூடுதல் வரிகளின் வடிவில் மக்கள் கணிசமான அளவிற்கு அல்லல்பட்ட போதிலும், நமது மக்களின் வாழ்க்கை நிலை எவ்வகையிலும் வளர்ச்சி பெறவில்லை. வேளாண்மை உற்பத்திப் பெருக்கம் நிறைவேருது போனதோடு, திட்டத்தின் பெயரால் பெருந் தொகைகள் செலவிடப்பட்டதும் ஒன்று சேர்ந்து, விலைவாசிகளின் ஏற்றத்தை மேலும் உயர்த்தி பெரும்பான்மையான மக்களைத் துன்பத்தில் ஆழ்த்தின. மூன்றும் திட்டக் கால அளவை முழுமையாக எடுத்துக் கொண்டால், அதற்கு முந்திய 10 ஆண்டுகளில் ஏற்பட்ட விலைவாசி உயர்வினைவிட மிக அதிக அளவில், 36·4 சதவீத அளவிற்கு விலைவாசிகள் உயர்ந்தன. இவ்விலைவாசி களின் பொதுவான ஏற்றம் ஒருபுறமிருக்க, உணவுப் பொருள்களின் விலைவாசிகள் மட்டும் 48 சதவீதம் உயர்ந்தன. விலைவாசிகள் துறையில் 1966—67-லும் எவ்வித மேம்பாடும் காணப்படவில்லை. 1966 ஜூன் திங்களில் ரூபாயின் நாணய மாற்று வீதம் குறைக்கப் பட்டதால், நிலைமை மேலும் சீர்கேடுற்றது. அதன் காரணமாக, 1966—67-ல் விலைவாசிகளின் அளவு 16·5 சதவீதம் உயர்ந்தது. உணவு தானிய விலைகளின் செங் குத்தான ஏற்றத்திலுைம், வேளாண்மை உற்பத்தியின் வீழ்ச்சியிலுைம், பாமர மக்களின் வாங்கும் திறன் கடுமையாகக் கரைய முற்பட்டது. இதன் விளைவாகத்



தொழில் துறைப் பொருள்களின் தேவை பெரிதும் சரிந்து, தொழில்களில் மந்த நிலையும் வேலையின்மையும் மலிந்தன. இவ்வண்ணம் பல தொழில்களில் உற்பத்தித் திறன் ஒருபுறம் விஞ்சிய நிலையை அடைந்திருந்தும், அதே நேரத்தில், மறுபுறம் மக்களின் தேவைகள் நிறைவேற்றப்படாமலுள்ள முரண்பாடான நிலையொன்று உருவாயிற்று. இவ்வாறான ஒரு நிலை ஏற்படாமல் காப்பதே திட்டமிட்ட பொருளாதாரத்தின் குறிப்பிட்ட நோக்கமாக இருத்தல் வேண்டும் எனினும், இந்நிலை ஏற்பட்டது விந்தையே.



3. இதுதான், இந்த மாநில அலுவல்களை நடத்துவதற்கு நாங்கள் பொறுப்பேற்றுக் கொண்டபோது எங்களை எதிர்நோக்கியிருந்த பொருளாதார நிலையாகும். நமது மக்கள் முன் நின்ற சிக்கல்களுக்குச் செவ்விய முறையில் தீர்வு காண்பது முற்றிலும் மாநில அரசின் அதிகார வரம்புக்குள் இல்லை என்பதும் விரைவில் தெளிவாகியது. அரசியலமைப்பில் செய்துள்ள அதிகார வரம்பின்கீழ், நாணயச் செலாவணியை முறைப்படுத்துதல், வங்கி அலுவல்கள், அயல்நாட்டு வாணிபம் ஆகிய துறைகளுக்குப் பொறுப்பு வகிக்கிற மத்திய அரசு மட்டுமே, நமது பொருளாதாரம் எந்த வழிகளில் முன்னேற்றம் அடையவேண்டுமென்று வரையறுக்கும் நிலையிலுள்ளது. மக்களின் நலனைக் கருதி இந்த அரசு அவசியமென்று கருதக்கூடிய திட்டங்களுக்கு மத்திய அரசு பொருத்தமான பொருளாதாரக் கோட்பாடுகளின் வாயிலாக ஆதரவு அளித்தாக வேண்டும். இந்தச் சூழலில் பொருளாதார வளர்ச்சியைப் பெருக்கும் பணி, மத்திய, மாநில அரசுகளின் கூட்டுப் பொறுப்பாகுமென்பதும் இதில் மத்திய அரசின் பங்கு மேலோங்கி நிற்பதும் வெள்ளிடை மலையாகும். எனவே, நமது மக்களை எதிர்நோக்கியுள்ள பொருளாதார இடர்ப்பாடுகளுக்குத் தற்போதைய இவ்வரவு-செலவுத் திட்டம் செவ்விய முறையில் துயர் தணிப்பு அளிக்கிறதா என்று முடிவு செய்கின்ற நேரத்தில், குறைந்த அளவே பங்குள்ள மாநில அரசு ஒல்லும் வகையில் மக்களின் நலன் கருதித் தன்னிடம் எதிர்பார்க்கப்படுகிற அனைத்தையும் ஆற்றியுள்ளதா என்பதை இம்மாமன்றம் ஆய்வு செய்தால், அது நனிமிகப் பொருத்தமானதாக இருக்கும் என்று நம்புகின்றேன்.

பொருளாதார வளர்ச்சியில் மாநில அரசின்பங்கு

4. பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதில் மாநில அரசின் பெரும் பொறுப்புகள் எவை யென்பதைப் பற்றிக் குறிப்பிடுவது கடினமானதல்ல வென்பது எனது கருத்தாகும். பற்பல வளர்ச்சிப் பணிகளை நிறைவேற்றுவதற்கு, ஏற்றதும் தகவும் உள்ள தொழில் நுட்ப-நிர்வாக அமைப்பு ஒன்றை உருவாக்கிக் கொள்வது மாநில அரசின் முக்கிய முதற் பொறுப்பாகும். அப்பால், திட்டமிட்ட பொருளாதார முன்னேற்றம் ஏற்படுங்காலத்தில் முளைக்கின்ற புதிய பொறுப்புக்களையும் இடையிலே எழுகின்ற அறைகூவல்களையும் ஏற்கும் வகையில், இந்த அமைப்பைச் செவ்விய முறையில் இடைவிடாது பேணி வரவேண்டியுள்ளது. குறித்த முறைக்கிணங்க, பாசனம், மின்சாரம், வேளாண்மை விளைச்சல் போன்ற முக்கிய துறைகளில் திட்ட வேலைகளை நிறைவேற்றிச் செல்லத் தக்க நிர்வாக இயந்திரமொன்றினை நமது மாநிலத்தில் உருவாக்கியுள்ளோம் என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். திட்டத்தில் அடங்கிய வேலைகளை நிறைவேற்றுவதற்காக மாநில அரசு இயன்ற பெருமளவிற்கு நிதி வசதிகளை வகை செய்யும் பொருட்டு, பொதுவாகத் திட்டத்தின்பாற்படாத செலவினங்களையும், குறிப்பாக வளர்ச்சித் தலைப்பின்பால் வாராத செலவினங்களையும் வரம்புகளுக்குள் கண்டிப்பாக நிறுத்த வேண்டியதன் அவசியத்தைக் குறித்தும் முதன்மையாக நாட்டம் செலுத்த வேண்டும். திட்டத்திற்குத் தேவையான நிதி வசதிகளை இயன்ற அளவிற்கு ஒதுக்கும் வகையில், இம்மாநிலத்தில் வளர்ச்சித் தலைப்பின்பாற்படாத செலவினங்களைப் பெரும் அளவிற்குக் கட்டுப்படுத்தியுள்ளோம் என்பதையும் மெய்ப்பித்துக்காட்ட முடியும். திட்டத்திற்கு உறுதுணையாயிருக்க வேண்டுமென்கிற நமது அவாவில், வளர்ச்சிச் செலவினங்களின் கீழ்வரும் பேணுதற் செலவுகளையும் (maintenance expenditure) வரம்பிற்குள் நிறுத்துவதில் விழிப்புடன் இருந்துவந்துள்ளோம்.



தனது நிதி வசதிகளை இவ்வாறு பாதுகாத்து வருவது ஒரு புறமிருக்க, திட்டத்தை நிறைவேற்றுவதற்குத் தேவையான கூடுதல் நிதி வசதிகளையும் மாநில அரசு திரட்ட வேண்டுமென எதிர்பார்க்கப்படுவது இயற்கையே. இத் துறையிலும் நமது மாநிலத்தின் சாதனை, எவ்விதக் கோல் கொண்டு அளப்பினும், செவ்விதாய்—பாராட்டுதற்குரியதாய் உள்ளது. நான்காம் திட்ட முதற் குறிப்பில், 1970—71-ல் முடிவடைகிற ஐந்தாண்டுக் கால அளவில், 825 கோடி ரூபாய் அளவிற்கு மாநிலங்கள் கூடுதல் நிதி வசதிகளைத் திரட்ட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. நமது மாநிலத்தின் நான்காம் திட்ட முதலீடு 564 கோடி ரூபாயென இறுதி செய்யப்பட்டது. இது, அனைத்து மாநிலத் திட்டங்களுக்காக எதிர்ப்பார்க்கப்பட்ட மொத்த முதலீட்டில், 8 சத வீதமாக அமைந்தது. இவ்வாறிருப்பினும், நமது மாநிலம், மாநிலங்கள் அனைத்தும் சேர்ந்து திரட்ட வேண்டிய கூடுதல் வரி வசதிகளில் 12·5 சதவீதமாக அமைகின்ற, 105 கோடி ரூபாய் அளவிற்குக் கூடுதல் நிதி வசதி திரட்டுமாறு வேண்டப்பட்டது. கூடுதல் நிதி வசதிகளைத் திரட்டுவது குறித்து நமக்கு விதிக்கப்பட்ட குறிக்கோள் அளவு, நாம் இத் துறையில் ஏற்கெனவே எடுத்துள்ள முயற்சியுடனும், நமது திட்ட அளவுடனும் ஒப்பிட்டுப் பார்க்குமிடத்து மிக அதிகமென்றே தோன்றுகிறது. ஆயினும், நமது மாநில முன்னேற்றத்திற்கு மிகத் தேவையெனக் கருதப்படுகிற குறைந்த அளவுத் திட்டம், நிதி வசதிக் குறைவினால் தடைப்பட்டு நின்றுவிடக் கூடாதே என்கிற கவலையினால் இக் குறிக்கோள் அளவினை முந்தைய அரசு ஏற்றுக் கொண்டது. திட்டத்திற்கு வேண்டிய நிதி வசதிகள் அனைத்தையும் திரட்டுவதாக மாநிலங்கள் உற்சாகத்துடன் வாக்களித்துவிட்டு, தங்கள் வாக்குறுதியைப் பின்னர் நிறைவேற்ற முயல்வதேயில்லையென்று பொதுவாகக் குறை கூறப்படுவதை நாம் அடிக்கடி கேட்டிருக்கிறோம். நான்காம் திட்டத்திற்கு இறுதி வடிவம் கொடுப்பது தள்ளிப் போடப்பட்டிருப்பினும், ஆண்டுத்









திட்டங்களில் செய்துள்ள முதலீடுகள், திட்ட ஆணைக் குழுவினால் முடிவு செய்யப்பட்டுள்ள ஐந்தாண்டுத் திட்டத்தின் முதலீடுகளைக் காட்டிலும் கணிசமான அளவிற்குக் குறைவாக இருப்பினும், இம் மாநிலம் தனக்கு ஒதுக்கப்பட்ட நிதி திரட்டும் குறிக்கோள் அளவுகளைப் பெருமளவிற்கு நிறைவேற்றியுள்ளதென்பதை வலியுறுத்திச் சொல்ல விரும்புகின்றேன். 1965 நவம்பர் திங்களில், முன்னைய அரசினால் விதிக்கப்பட்ட பற்பல வரியினங்களின் மூலம், சுமார் 50 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் கிட்டுமென்று கணக்கிடப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்டச் செயற்குறிப்புகளின் பகுதியாக, கடந்த ஜூன் திங்களில் இப் பேரவை ஏற்றுக்கொண்ட வரியினங்களின் வாயிலாக, 1970—71-ல் முடிவடையும் கால அளவில், 32 கோடி ரூபாய் மேலும் வருவாய் கிட்டும். எனவே, திட்ட ஆணைக் குழு விதித்துள்ளபடி கூடுதல் வரி விதிப்பின் மூலம் திரட்ட வேண்டிய 105 கோடி ரூபாய் குறிக்கோள் அளவில், நாம் ஏற்கனவே மேற்கொண்ட நடவடிக்கைகளின் மூலம் 82 கோடி ரூபாய் கிட்டும். அதாவது, இம் மாநிலம் தனது குறிக்கோள் அளவில் 80 சதவீத அளவினை நிறைவேற்றியுள்ளது. எனக்குக் கிடைத்துள்ள தகவல்படி, நான்காம் திட்டத்திற்கான நிதி வசதிகளைத் திரட்டுவதைப் பொறுத்த வரையில், வேறு எந்த மாநிலமும், நமது மாநிலத்தைப் போன்று இந்த அளவிற்குச் சிறப்புறச் செயல்படவில்லையெனத் தெரிகிறது.

5. மாநில அரசு, தனது சொந்த நிதி வசதிகளையும் மத்திய அரசு வகை செய்கிற நிதி வசதிகளையும் பயன்படுத்துங்காலையில், திட்டம் குறித்த பொருத்தமான முறைவைப்புகளைப் பின்பற்ற வேண்டுமென்றும், பொருளாதார நிலையைப் பெருமளவில் உரமூட்டுவதற்கு உதவியாய் அமையாத, நேரடியாகவோ அன்றி மறைமுகமாகவோ—ஆதாயம் தாராத புறக்கோலத் திட்டங்களில் நிதி வசதிகளைக் குறிப்பாக விரயம் செய்யக் கூடாது என்றும் எதிர்பார்ப்பது நியாயமானதேயாகும்.

G.N.—2a

இந்தக் கோணத்தில் நின்று பார்த்தாலும் விரயமாகிற திட்டங்களை நாம் தவிர்த்திருப்பதோடு, நம்முடைய திறமைக்குள் செவ்விய முறையில் நிறைவேற்றி, நிர்வகிக்கக்கூடிய திட்டங்களில் மட்டுமே நாம் நாட்டம் செலுத்தியிருக்கிறோம். இந்தத் திட்டங்களே, பொதுவாக நமது மாநிலப் பொருளாதாரத்தை வளமாக்கும் சிறந்த திட்டங்களாகும். பெரியதொரு திட்டத்தை நிறைவேற்றுவதால் மக்களின் வாங்கும் திறன் பெருமளவில் விஞ்சும். எனவே, இன்றியமையாப் பொருள்களின் விலைவாசிகளை உரிய வரம்புகளுக்குள் நிறுத்தும் பொருட்டு, அவற்றை முறைப்படுத்தி வழங்குவதற்கான செவ்விய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்பதையும் நாம் உணர்ந்திருக்கிறோம். இந்தத் துறையிலும், கடந்த ஆண்டில் மாநில அரசு தனது பொறுப்புக்களைச் சீரிய முறையில் நிறைவேற்றியுள்ளது என்பதை அழுத்தமுடன் கூற விழைகிறேன். உணவு தானியக் கொள்முதல் திட்டத்தைச் செவ்விய முறையில் செயல்படுத்தியதன் வாயிலாக, தானியங்கள் இடையீடின்றி வழங்குவதற்கான ஒரு நிலைமையை உருவாக்க முடிந்தது. நாட்டின் வேறெந்தப் பகுதியையும்விட, உணவு தானியங்களின் வெளி அங்காடி விலை நமது மாநிலத்தில் நியாயமான அளவில் நிலைபெற்றுள்ளது.

மத்திய உதவியின் பங்கு.

6. இங்ஙனமெல்லாம் செயலாற்றி வந்திருப்பினும், நமது மாநிலத்தில் வளர்ச்சி வேகம் தணியாது உயர்ந்த வண்ணமே இருக்கச் செய்ய இயலாமைக்கும், மக்களின் பலதிறப்பட்ட தேவைகளை முழு அளவில் நிறைவேற்ற ஏலாமைக்கும் காரணம் என்னவென்று இப்பேரவையினரும், மக்களனைவரும் அறிய விழைவது இயல்பேயாகும். மத்திய அரசுக்கும், மாநில அரசுகளுக்கும் இடையே நிதி வசதிகளைப் பகிர்ந்தளிப்பதிலுள்ள அகன்ற வேறுபாடு ஒருபுறம் இருக்க, மத்திய அரசு, வளர்ச்சித் தலைப்பின்பாற்படாத தனது செலவினத்தைக் கட்டுப்படுத்தி நிறுத்தத் தவறியமையே, குறிப்பாகக் கடந்த மூன்றாண்டுகளில் திட்ட முன்னேற்றம் தடைப்பட்டதற்குப் பெரிதும் காரணமாகும். அரசியலமைப்பின்படி, வளரும் வருவாய் வாய்ப்புகள் மத்திய அரசுக்கு ஒதுக்கப்பட்டு, அதற்கு மாறாக, கல்வி, பொதுச் சுகாதாரம் போன்ற, செலவினம் விரிந்து செல்லும் இயல்புடைய பரந்த பொறுப்புக்கள் மாநிலங்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. பொருளாதார வளர்ச்சித் திட்டங்களுக்கென நிலையாக உயர்ந்து வந்துள்ள மத்திய உதவியின் வாயிலாக, இதுகாறும் இந்த ஏற்றத்தாழ்வு ஓரளவிற்காவது சரிக்கட்டப்பட்டு வந்தது. ஆனால், 1966 நவம்பர் திங்களில், இம் மாநிலத்தின் நான்காம் திட்டம் தாற்காலிகமாக முடிவு செய்யப்பட்டபோது, இத் திட்டத்தின் 564 கோடி ரூபாய் முதலீட்டில், 250 கோடி ரூபாய் அளவுக்கு மட்டுமே மத்திய உதவி கொடுப்பதாகச் சொல்லப்பட்டது. மொத்த முதலீட்டில் 44 சத வீத அளவில் நிற்கிற இந்த மத்திய உதவி, இதற்கு முந்தைய திட்டக் கால அளவுகளில் அளிக்கப்பட்டு வந்த மத்திய உதவியைக் காட்டிலும் அதிக அளவில் குறைந்திருந்தது. நான்காம் திட்டத்திற்குரிய மொத்த மத்திய உதவியை எடுத்துக் கொண்டாலும், இந்த மாநிலத்திற்கு வழங்குவதற்காக ஒப்புக்கொண்ட தொகை குறைவுதான். இம் மாநில மக்கள் தொகைக் கணக்கின் அடிப்படையில், நமக்கு 7·8 சத வீதத்திற்காவது மத்திய உதவி கிடைத்திருக்க வேண்டும். ஆனால் மாறாக, ஒப்புக்கொள்ளப்பட்ட உதவி, மொத்த மத்திய உதவியில் 7 சத வீதமாகவே இருந்தது.






7. போதிய அளவில் இராத இந்த உதவியும், 1966—67-லும், 1967—68-லும் ஒத்த விகிதப்படி வழங்கப்படவில்லை. திட்ட ஆணைக் குழு நமது அழுத்தமான வேண்டுகோளுக்கிணங்கி, ஒப்புக்கொண்ட விகிதப்படி மத்திய உதவியை வரும் ஆண்டிற்கு நமக்கு ஒதுக்கித் தரவேண்டியதன் தேவையை ஏற்றுக் கொண்டுள்ளது. ஆனால், கடந்த இரண்டாண்டுகளில் ஏற்பட்ட உதவித் தொகைக் குறைவினைப் பொறுத்த மட்டில், ஆணைக் குழு, அதில் மூன்றில் ஒரு பங்கினை மட்டுமே ஈடுசெய்ய ஒப்புக்கொண்டுள்ளது. ஆனால்,



கடந்த இரண்டாண்டுகளில் ஏற்பட்ட குறைவினையும், அடுத்த ஆண்டில் நமக்குள்ள கடும் இடர்ப்பாடுகளையும் கருத்திற்கொண்டு, ஆணைக் குழு நியாயமாக முற்றிலும் ஈடு செய்திருக்க வேண்டும். சென்ற ஈராண்டுகளில் மாநிலங்களுக்குச் சேரவேண்டிய விகிதப் படியான உதவியைப் பெறாத ஒரு சில மாநிலங்களுள், நான்காம் நிதி ஆணைக் குழுவின் தீர்ப்பினையொட்டி, திட்டத்திற்குப் புறம்பான கணக்கில் உபரி எதுவும் பெற்றிராத மாநிலம், நமது மாநிலம் ஒன்றுதான். இதைக் கருதியாவது, திட்ட ஆணைக் குழு நமது வேண்டுகோளுக்குச் செவி சாய்த்திருக்க வேண்டும்.

8. மத்திய உதவியை வழங்குவதில் இவ்வாறு ஏற்படும் தேக்கம் ஒருபுறமிருக்க, மாநிலத் திட்டங்கள் அனைத்திற்கும் சேர்ந்து வழங்கப்படும் மத்திய உதவி வளராது நின்றதோடு, ஓரளவிற்குக் குறைந்தும் விட்டது. மாநிலத் திட்டங்களுக்கு 1966-67-ல் வழங்கிய மொத்த மத்திய உதவி, 617 கோடி ரூபாய் அளவில் நின்றது. இது இயல்பாக, 1967-68-ல் 650 கோடி ரூபாய்க்கும், 1968-69-ல் 700 கோடி ரூபாய்க்குமாவது உயர்ந்திருக்க வேண்டும். இவ்வாறு உயர்த்தப்பட்டு, உடன்பாடான விகிதப்படி உதவித் தொகை வழங்கப்பட்டிருக்குமானால், நடப்பாண்டிலோ, அடுத்த ஆண்டிலோ, நமக்கு ஏற்ற ஒரு திட்டத்தை நிறைவேற்றுவதில் எந்த விதமான இடர்ப்பாடுகளும் ஏற்பட்டிருக்காது. ஆனால், 1967–68-ல் வழங்கிய மத்திய உதவியின் அளவு, 617 கோடி ரூபாயிலிருந்து 590 கோடி ரூபாயாகப் பெரிதும் வெட்டப்பட்டது. வேளாண்மை உற்பத்தியில் நடப்பாண்டில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்தையும், அதன் விளைவாகத் தொழில் உற்பத்தியில் ஏற்படும் வளர்ச்சியையும் உள்ளத்திற்கொண்டு, வருகிற ஆண்டில் மத்திய நிதி வசதி பெருகுமென்று நாம் எதிர்பார்க்கலாம். ஆனால், மீண்டும் மாநிலத் திட்டங்களுக்கான மத்திய உதவி, நடப்பாண்டு அளவான 590 கோடி ரூபாய் அளவில் நிறுத்தப்பட்டுள்ளது. மத்திய உதவியின் வளர்ச்சியில் ஏற்பட்டிருக்கிற இந்த இடை ஓய்வு ஒருபுறமிருக்க,



மாநிலங்கள் பங்குகொள்ளும் மத்திய வரிகள், எழுச்சி அடைய வேண்டிய அளவு எழுச்சி பெறவில்லை. வருமான வரி, ஆயத் தீர்வை போன்ற மத்திய வரிகள், பொருளாதார மந்தநிலை காரணமாகவும் ஏனைய காரணங்களினாலும் வளர்ச்சி அடையவில்லையென்று சொல்லித் தப்பினாலும், மாநிலங்கள் கடும் நிதி இடர்ப்பாடுகளை எதிர்நோக்கி இருக்கின்ற இந்த நேரத்தில், அவைகளுக்குத் துயர்தணிப்பு அளிப்பதற்காக, இப்போது 550 கோடி ரூபாய்க்கு மேல் நிலுவையாக நிற்கிறதென மதிப்பிடப்பட்டுள்ள, வருமான வரி நிலுவைகளை வசூலிப்பதற்கு ஓரளவிற்காவது அக்கறையுடன் முயற்சிகள் செய்யப்படுமென்று நாம் எதிர்பார்க்கவேண்டும். வருமான வரியின்கீழ் கிடைக்கும் தொகையில் 75 சத வீதம் மாநிலங்களுக்கு இடையே பிரித்துக் கொடுக்கப்படவிருப்பதால், இது பெரும்பாலும் மாநில வருவாய் வாயில்களில் ஒன்றாகவே மாறியுள்ளது. இந்த வரியை விதித்துத் திரட்டும் பொறுப்பு மத்திய அரசைச் சார்ந்தது என்றாலும், முனைந்து வசூல் செய்வதில் மத்திய அரசின் இயந்திரத்தில் குறை ஏதும் ஏற்படின், மாநிலங்களே பெரிதும் அல்லற்படுகின்றன. வரி நிலுவைகளை வசூலிப்பதில் மாநில அரசுகள் செவ்வையான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டுமென்று திட்ட ஆணைக் குழு வற்புறுத்தி வருகின்ற அதே நேரத்தில், தற்போது வருமான வரியைப் பொறுத்தவரையிலுள்ள ஏராளமான நிலுவைத் தொகைகளை வசூல் செய்வதற்கு மத்திய அரசின் மீதும், அதே அளவு வன்மையாக அது வற்புறுத்த வேண்டும். விற்பனை வரியிலிருந்து, 1966–67-ல் 44 கோடி ரூபாய் அளவுக்கு வருவாய் கிட்டியிருக்க, நமது மாநிலத்தில் நிலுவையில் நின்ற தொகையின் மொத்தம் 7 கோடி ரூபாய் மட்டுமே ஆகும். இது, இதற்கான ஆண்டு வருவாயில் 16 சத வீதமே. வருமான வரியின்கீழ் வசூலிக்கப்படாத நிலுவைத் தொகைகளும், ஏறக்குறைய இந்த அளவில் நிறுத்தப்பட்டிருக்குமானால், மாநிலங்களுக்குக் கூடுதல் நிதி வசதிகள் கிட்டும் நிலைமையில், கணிசமான வளர்ச்சி ஏற்பட்டிருக்கும்.



வளரும் கடன் சுமை.

9. மாநிலத் திட்டங்களுக்கான மத்திய உதவியில் தேக்க நிலை ஏற்பட்டு, மத்திய வரிகளில் மாநிலங்களின் பங்கு வளர்ச்சி அடையாதுபோன அதே நேரத்தில், இந்திய அரசிற்குச் சேர வேண்டிய கடன்களைத் திருப்பிச் செலுத்தும் பொறுப்பு மிக அதிகமாய் உயர்ந்துள்ளது. எனது, கடந்த ஜுன் திங்கள் வரவு-செலவுத் திட்ட உரையில், கடன் பொறுப்புக்கள் ஏறியவாறே செல்வதை இப்பேரவையின் நாட்டத்திற்குக் கொண்டுவரும் வாய்ப்பினைப் பெற்றிருந்தேன். முதல் திட்டத்தின் தொடக்கத்திலே, 1950-ல் இந்திய அரசிற்குச்சேரவேண்டிய கடன் 14 கோடி ரூபாயாக இருந்ததற்கு மாறாக, மூன்றாம் திட்ட இறுதியில் 270 கோடி ரூபாய்க்கு மேல் உயர்ந்திருந்தது. அது, இப்போது 300 கோடி ரூபாய்க்கு மேல் உயர்ந்துள்ளது. மத்திய அரசிடமிருந்து பெறும் கடன்களுக்கு உரிய சராசரி வட்டி வீதம், 1955—56-ல் ஏறக்குறைய இரண்டரை சத வீதமாக இருந்ததற்கு மாறாக, இப்போது நாலரை சத வீதத்திற்கு மேல் போகிறது. இவையிரண்டின் விளைவாக, இந்திய அரசுக்குச் செலுத்த வேண்டிய வட்டித் தொகை, 1950—51-ல் ஏறக்குறைய 41 லட்சம் ரூபாயாக இருந்தது, 1968—69-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ஏறத்தாழ 15 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்துள்ளது. இந்திய அரசுக்குச் செலுத்த வேண்டிய வட்டித் தொகைகளின் சுமையினால் பல மாநிலங்கள் தடுமாறி நிற்கின்றன. எனவே, மாநில அளவில் செய்யப்படுகின்ற மூலதன முதலீட்டின் கணிசமான பகுதியின் ஆதாயமற்ற தன்மையை இந்திய அரசு கவனித்து, வட்டி வீதம் குறித்தும், கடன்களைத் திருப்பிச் செலுத்த வேண்டிய கால அளவினைக் குறித்தும் தற்போதுள்ள கடும் நிபந்தனைகளைத் தளர்த்தியமைத்து, ஆறுதல் அளிக்க வேண்டுமென, மாநில அரசுகள், இந்திய அரசுடனும், தொடர்ந்துவந்த நிதி ஆணைக் குழுக்களுடனும் வாதிட்டு வந்துள்ளன. பற்பல மாநிலங்களிலிருந்து தனக்குச் சேரவேண்டிய கடனைத் தொகுப்பதற்கான சில செயற் குறிப்புகளை இந்திய அரசு இப்போது அனுப்பியுள்ளது. ஆனால், அது தயாரித்து









அனுப்பியுள்ள செயற்குறிப்புகள், பெரும் பலன் அளிக்க மாட்டா. குறிப்பாக, அவை, கடனில் கணிசமான பகுதி, நீர் வழங்குதல், புயல் அல்லது பஞ்சம் காரணமாக ஏற்பட்ட துயர் துடைத்தல் அல்லது பொற்கொல்லர்கள் துயர் துடைத்தல், அவர்களுக்கு மறுவாழ்வு அளித்தல் போன்ற நோக்கங்களுக்குச் செலவிடப்பட்டுள்ளன என்பதையும், அத்தகைய கடன்கள், நியாயமாக மானியங்களாக மாற்றப்பட வேண்டியவை என்பதையும் நாட்டத்திற் கொள்ளாமல் தயாரிக்கப்பட்டுள்ளன.

10. வட்டிச் செலவுகள் ஒருபுறமிருக்க, 1968—69-ம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்டத்தை, நடப்பு ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இந்திய அரசுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன் தொகைகள் மிகவும் அதிகரித்துள்ளன. நடப்பு ஆண்டில் 20 கோடியே 30 இலட்சம் ரூபாய் திருப்பிச் செலுத்தவேண்டியிருப்பதற்கு மாறாக, நாம் திருப்பிச் செலுத்த வேண்டிய தொகை, குறுகிய காலக் கடன்களை நீக்கிப் பார்த்தாலும், 7 கோடி ரூபாய் கூடுதலாகி, மொத்தம் 27 கோடியே 30 இலட்சம் ரூபாய் அளவில் உள்ளது. அடுத்த ஆண்டில், திட்டத்திற்கான நமது நிதி வசதிகள் குறைவதற்குக் காரணமான முக்கியக் கூறுகளில், இது ஒன்றாகும். நிதி ஆண்டினை முழுமையாக எடுத்துக்கொண்டு பார்க்கும்போது, ரிசர்வ் வங்கியிடமிருந்து அதிகப்பற்று (over draft) இன்றி, நாம் இதுகாறும் நமது நிதி நிலையைச் சமாளித்து வந்திருக்கிறோம் என்பதை அறிய, இப்பேரவை மகிழ்ச்சியுறுமென்று நம்புகிறேன். 1966—67-ல் மத்திய அரசு, ஒரு சில மாநிலங்களின் அதிகப்பற்றைத் தீர்ப்பதற்கென அவைகட்கு 108 கோடி ரூபாய் அளவிற்குச் சிறப்புதவி அளித்தது. அத்தகைய உதவியெதனையும் நாட வேண்டிய நிலை ஏற்படாத மாநிலங்களில், தமிழ்நாடும் ஒன்று. நடப்பு ஆண்டில் கூட, பல மாநில அரசுகள் அதிகப்பற்று வாங்கும் நிலையை அடையலாமென்றும், மத்திய அரசு, அத்தகைய மாநில அரசுகளின் உதவிக்குச் செல்லக்கூடுமென்றும் நான் நினைக்கிறேன். மாநிலங்களது அதிகப்

பற்றுகளைக் கொடுத்துத் தீர்க்க, மத்திய அரசு, திட்டத்திற்குப் புறம்பாகச் சிறப்பு உதவி அளிக்க வேண்டிய நிலை ஏற்படாதிருப்பின், மாநிலத் திட்டங்களுக்கான மத்திய உதவி மேலும் உயர்ந்திருக்குமென்றும், நாமும் நமக்குரிய பங்கினை அடைந்திருப்போமென்றும் ஈண்டு எடுத்துக்காட்டுவது மிகையாகாது. மாநில அரசுகளின் நிதி நிலையை உறுதிப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை, இந்திய அரசு தொடங்க வேண்டுமென்றும், குறிப்பாக மாநில அரசுகள் முறையின்றி அதிகப் பற்று பெறும் நிலை அறவே நிறுத்தப்பட வேண்டுமென்றும் எல்லோராலும் உணரப்படுகிறது. எனவே, நிதி நெருக்கடி எதனிலும் சிக்காமல் இதுகாறும் இயங்கி வந்துள்ள ஒரு மாநிலம்—திட்டத்திற்குத் தேவையான நிதி வசதிகளைத்திரட்டுவதில் பின்னடையாத ஒரு மாநிலம்—தனது திட்டங்களின் வளர்ச்சி ஒட்டம் தளராமல் பேணி வருவதற்கென, அதற்கு இத்தருணத்தில் உதவிபுரிய வேண்டுவது கடமையாகும். அவ்வாறு உதவி அளிக்க மறுப்பது, கடந்த காலத்தில் நாம் விவேகத்துடன் செயலாற்றியமைக்காக நம்மைத் தண்டிப்பதற்கொப்பாகும். எனவே, அடுத்த ஆண்டில் கடன்களைத் திருப்பிச் செலுத்தும் பொறுப்பு, ஏறக்குறைய நடப்பு ஆண்டில் இருக்கும் அளவிலேயே நிற்கும் வண்ணம், அடுத்த நிதியாண்டில் இந்திய அரசுக்குச் சேர வேண்டிய கடன்களைத் திருப்பிச் செலுத்துகின்ற கால அளவினை மாற்றியமைக்கும்படி இந்திய அரசினைக் கேட்டுள்ளோம். தொடக்கத்தில் மத்திய அரசு அளித்துள்ள பதில் சாதகமாக இல்லாதிருப்பினும், நமது பக்கம் நியாயம் இருப்பதால், இதனைத் தொடர்ந்து வற்புறுத்தவேண்டுமென மாநில அரசு விரும்புகிறது.

11. இந்திய அரசிற்குப் பெருந்தொகைகளைத் திருப்பிச் செலுத்த வேண்டியிருப்பதோடு, கடந்த காலத்தில் எழுப்பியுள்ள பெரிய பொதுக் கடன்களைத் திருப்பிச் செலுத்த வேண்டிய பொறுப்பும் கூடியுள்ளது. நடப்பு ஆண்டில், 18 கோடி ரூபாய்க்கு வெளிச் சந்தைக் கடன் ஒன்றைத் திரட்டியுள்ளோம். தவணைக்காலம்









முடிவடைந்த ஒரு கடனுக்கு 10·5 கோடி ரூபாய் அளவில் திருப்பிச் செலுத்தப்பட்ட பின்னர், இக் கடன் வாயிலாக நிகரமாய்க் கிட்டிய நிதி வசதி, 7·5 கோடி ரூபாய் அளவினதாகும். அடுத்த ஆண்டில் நாம் திருப்பிச் செலுத்த வேண்டிய பெரிய வெளிச் சந்தைக் கடன் ஒன்று, 14 கோடி ரூபாய் அளவில் உள்ளது. இருபது கோடி ரூபாய் அளவில் புதிய கடன் ஒன்றினை நாம் திரட்ட முடியுமென்ற அடிப்படையில், இக் கடன் வாயிலாக அரசின் வழிவகை நிதி நிலைக்குக் கிட்டும் நிகர உதவி, 6 கோடி ரூபாய் அளவினதேயாகும். எனவே, நடப்பு ஆண்டுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இவ்வினத்தின்கீழ் மட்டும் திட்டத்திற்குத் தேவைப்படுகிற நிதி வசதியில் 1·5 கோடி ரூபாய் அளவில் துண்டுவிழும். கடந்த காலத்தில் கடன் கரைப்பு நிதிக்கென (Sinking Fund) போதிய நிதி ஒதுக்கம் செய்யப்பட்டிருக்குமானால், காலத் தறுவாயிலுள்ள கடன்களுக்கான தொகையைத் திருப்பிச் செலுத்துவதில் எந்த விதமான சிக்கல்களும் ஏற்பட வேண்டியதில்லை. இது குறித்து, 1955-ம் ஆண்டிலிருந்து, இந்திய அரசின் சிறப்பான சில அறிவுரைகளைப் பின்பற்றி, கடன் கரைப்பு நிதிக்கு, நமது மாநிலத்தில் மிகக்குறைந்த வீதங்களில் மட்டுமே தொகை ஒதுக்கப்பட்டு வந்தது. இதற்கு முந்திய மூன்று நிதி ஆணைக் குழுக்களின் போக்கிலிருந்து வேறுபட்டு, நான்காம் நிதி ஆணைக்குழு, மாநில அரசுகள் திரட்டும் பொதுக்கடன்களினால் ஏற்படுகிற வட்டிச் செலவுகளும், கடன் கரைப்புச் செலவுகளும், மாநில நடைமுறைக் கணக்கில் சேரும் நிதிமாற்றம் (Devolution) பெறுவதற்குரிய நியாயமான செலவினமாகக் கருதப்பட வேண்டுமென்று உணர்ந்தது. ஆயினும், கடன் கரைப்பதற்கு வகை செய்ய வேண்டிய தொகைகளை முழு அளவில் ஒதுக்குவதற்குப் பதிலாக, நிதி ஆணைக் குழுவினர் நிதி மாற்றம் பற்றிய தங்கள் திட்டத்தில், பற்பல மாநிலங்களிலே நடைமுறையிலுள்ள பழக்கத்தின் அடிப்படையில் கணக்கிடப்பட்ட தொகைகளை மட்டுமே சேர்த்துக்கொண்டார்கள். இந்த நடைமுறையினால், கால இறுதி அடைகின்ற கடன்களைத்

திருப்பிச் செலுத்துவதற்காக, சில மாநிலங்களுக்குப் பெயரளவுக்கான வீதங்களிலும், ஏனைய மாநிலங்களுக்குப் போதிய வீதங்களிலும், நிதி வசதிகளை வழங்க வகையேற்படுமென நிதி ஆணைக் குழு ஒளிவு மறைவின்றி ஒப்புக்கொண்டுள்ளது. இதன் விளைவாக, மாநிலங்கள் அனைத்தின் கடன் கரைப்பு நிதிக்கு கணக்கில் எடுத்துக்கொண்ட தொகைகள், ஐந்தாண்டுக் கால அளவில் 286 கோடி ரூபாய்க்குமேல் பெருமளவில் சென்றாலும், தமிழ் நாட்டில் கடந்த காலத்தில் கடன் கரைப்பு நிதி குறித்துப் பின்பற்றி வந்த பழக்கங்களின் அடிப்படையில், அதற்கு 8 கோடியே 90 இலட்சம் ரூபாய் மட்டுமே இந்த வகையில் கிட்டியது. நான்காம் நிதி ஆணைக்குழு பின்பற்றிய நடை முறை காரணமாக, தமிழ்நாடு போன்ற சில மாநிலங்களுக்குப் பெரும் அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்கிற உண்மையை, நான்காம் நிதி ஆணைக் குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான திரு. மோகன்லால் கௌதம் அவர்கள் தமது கருத்து வேற்றுமைக் குறிப்பில் தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறார். இதன் பின்னர், மாநிலங்கள் முழு அளவில் கடன் கரைப்புக்கென நிதி ஒதுக்கம் செய்யும் பொருட்டு, அவைகட்குச் சிறப்பு உதவி அளிக்க வேண்டியதன் தேவையை இந்திய அரசும் உணர்ந்துள்ளது மகிழ்ச்சிக்குரியதாகும். ஐந்தாண்டுக் கால அளவிற்கு, நான்காம் நிதி ஆணைக் குழுவின் நிதி மாற்றத் திட்டத்தின்கண் ஏற்கனவே அடங்கிய 8 கோடியே 90 இலட்சம் ரூபாய் நீங்கலாக, இந்திய அரசு வெளிச்சந்தைக் கடனைத் தீர்ப்பதற்கென 1966–67-லிருந்து தொடங்கி, ஆண்டொன்றுக்கு 6 கோடியே 5 இலட்சம் ரூபாய் அளவிற்குச் சிறப்பு மானியம் ஒன்றை அளிப்பதாக அறிவித்துள்ளது. ஆனால், இத்தொகையை ரொக்கமாக வழங்குவதற்கில்லையெனவும், திட்டத்திற்கு நிதி வசதி செய்வதற்கான பல்வகை வளர்ச்சிக் கடனில் ஒரு பகுதியை மானியமாக மாற்றிக்கொள்வதன் மூலம் இவ்வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றும் இயம்பியுள்ளனர். இந்த ஏற்பாட்டின்படி, நமது மாநிலம் பல்வகை வளர்ச்சிக் கடனுக்கு வட்டி செலுத்தும் வகையில் உடனடியாகச்








சிறிதளவிற்குப் பயனடையலாம்; 1970–71-லிருந்து அசல் தவணைகளை மேலும் குறைத்துச் செலுத்துவதன் வாயிலாகச் சற்று கணிசமான அளவில் நலனடையலாம். ஆயினும், வருகிற ஆண்டில் திட்டத்திற்கு நிதி உதவுவதற்காகக் கூடுதல் நிதி வசதிகள் பெருமளவில் கிட்டும் வாய்ப்பு இல்லை. நிதி ஆணைக்குழு கடைப்பிடித்த நெறி முறைகளினால், பற்பல மாநிலங்களுக்கு நிதி வசதிகளை ஒதுக்குவதில் வேறுபாடு ஏற்பட்டுள்ளதென்று இந்திய அரசு உணர்ந்தபோதே, திட்டத்திற்காக ஏற்கனவே வழங்க ஒப்புக்கொண்ட உதவித் தொகையை ஈடுசெய்ய முற்படுவதற்கு மாறாக, திட்டத்திற்குரிய மத்திய உதவியின் உச்ச வரம்பிற்குப் புறம்பாகக் கடன் கரைப்பிற்கென சிறப்பு மானியம் ஒன்றை வழங்க முன்வந்திருக்க வேண்டும். தமிழ்நாடு, ஆந்திரப் பிரதேசம், பீஹார், கேரளம், மத்தியப் பிரதேசம், மைசூர், ராஜஸ்தான் போன்ற ஒரு தொகுதி மாநிலங்களுக்குத் திட்ட உதவி, கடன் கரைப்பதற்கான சிறப்பு மானியத்தின் அளவிற்குச் சமமாகக் குறைந்து போகும் நிலையும், ஏற்கனவே நிதி ஆணைக்குழுவிடமிருந்து கடன் கரைப்பதற்கென போதிய உதவியைப் பெற்றுள்ள மகாராஷ்ட்ரம், குஜராத், உத்திரப் பிரதேசம் போன்ற ஏனைய மாநிலங்களுக்குத் திட்ட உதவி அவ்வாறு குறையாத ஒரு நிலையும், இந்திய அரசின் செயற் குறிப்புகளிலிருந்து உருவாவதற்கு இடமேற்பட்டுள்ளது. எனவே, 1966–67, 1967–68, 1968–69 ஆகிய இந்த மூன்றாண்டுகளுக்கும், கடன் கரைப்பதற்கென இந்திய அரசு வழங்கும் உதவித் தொகையான 18·15 கோடி ரூபாய், இயல்பான திட்ட உதவிக்குக் கூடுதலாக அமைவதுதான் நேர்மையாகும். 18·15 கோடி ரூபாய் அளவிற்கு முழுமையாக உதவியளிக்க இந்திய அரசின் வழிவகை நிதி நிலை இடங்கொடுக்காவிடினும், திட்டத்திற்குரிய பல்வகை வளர்ச்சிக் கடனுக்கு ஈடுசெய்ய முற்படாமல், 1968–69-ம் ஆண்டிற்குரிய உதவியான 6·05 கோடி ரூபாயையாவது வழங்குவதில், மத்திய அரசிற்கு

இடர்ப்பாடு ஏதும் இருக்காது என நினைக்கின்றேன். அவ்வாறு உதவியளிப்பின், வருகிற ஆண்டில் வளர்ச்சி வேகம் தணியாது போற்றிவர உதவியாயிருக்கும்.

அகவிலைப்படி வீத உயர்வுகளின் விளைவு.

12. கடன் பொறுப்புக்களின் சுமை பெருகியிருப்பது ஒரு புறமிருக்க, விலைவாசிகளின் ஏற்றத்தையொட்டியும் குறைந்த ஊதியம் பெறும் பணியாளர்களின் வாழ்க்கை நிலையைக் காக்க வேண்டிய தேவையைக் கருதியும்' அரசாங்கப் பணியாளர்களின் அகவிலைப்படி வீதங்கள் அடுத்தடுத்து உயர்த்தப்பட்டது முற்றிலும் நியாயமானதாயிருப்பினும், அவை மாநில நிதி நிலையில் கடும் விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன. 1965–66-ம் ஆண்டின் இறுதி வரையில் வழங்கப்பட்ட அகவிலைப்படி வீத உயர்வுகள், நான்காம் நிதி ஆணைக்குழுவின் தீர்ப்பின் வாயிலாக ஈடு செய்யப்பட்டிருக்க, அதன் பின்னர் வழங்கியுள்ள உயர்வுகளுக்கு, அத்தகைய உதவி ஏதும் கிட்டவில்லை. மாநில அரசுகளின் நிலையான இக்குறையினைப் போக்க, '' கஜேந்திர காட்கர் ஆணைக்குழு '' திட்டவட்டமான சில செயற் குறிப்புக்களை வகுக்குமென எதிர்பார்த்திருந்தோம். ஆனால், அக்குழு, '' மாநில அரசுப் பணியாளர்கட்குச் செலுத்தப்படும் அகவிலைப்படி வீதங்கட்கும் மத்திய அரசுப் பணியாளர்கட்குச் செலுத்தப்படும் வீதங்கட்குமிடையே வேறுபாடு இருப்பது எந்த வகையிலும் நியாயமாகாது '' என்ற வகையில், திட்டவட்டமான தனது முடிவைத் தெரிவித்துவிட்டு, இதற்கென இந்திய அரசு சிறப்பு உதவி ஏதேனும் வழங்கும் கேள்வி, தனது ஆய்விற்குப் புறம்பானது என்று இயம்பி வாளாவிருந்துவிட்டது. அடுத்த ஐந்தாண்டுக் காலத்தில் தோன்றக்கூடிய இப்பெற்றிவாய்ந்த பல்வேறு தேவையினங்கள் தனது ஆய்வில் அடங்கவில்லையென நான்காம் நிதி ஆணைக் குழுவே உணர்ந்து, '' அத்தகைய தேவைகளைக் குறித்து ஆய்வதற்கும், தேவைப்படும் இடங்களில் எல்லாம் மத்திய உதவியளிக்கவும் பொருத்தமான நடைமுறை ஒன்றினை வகுக்க வேண்டியிருக்கும் '' என அறிவித்துள்ளது. நிதி ஆணைக்குழுவின் முக்கியமான இப்பரி






வுரையைப் பின்பற்றி, இந்திய அரசு எந்தவிதமான நடவடிக்கையையும் மேற்கொள்ளாதது மிக்க வருத்தத்திற்குரிய ஒன்றாகும். ஆயினும், மத்திய உதவி கிட்டாத நிலையிலும், மத்திய அரசுப் பணியாளர்களுக்குரிய வீதங்களுக்கேற்ப, தங்கள் அகவிலைப்படி வீதங்களையும் உயர்த்த வேண்டுமென்கிற நமது பணியாளர்களின் வேண்டுகோளை மறுப்பது சரியல்லவென்று அரசு கருதியது. ஆகவே, 1967 டிசம்பர் 1-ம் நாள் சேரவேண்டிய நவம்பர் திங்கள் சம்பளத்திலிருந்து, நமது பணியாளர்களின் அகவிலைப்படி வீதங்கள் உயர்த்தப்பட்டிருப்பதை இப்பேரவையினர் நன்கு அறிவார்கள். 1967 டிசம்பர் 1-ம் நாளிலிருந்து, 1968 மார்ச் 1-ம் நாள் வரையிலான அகவிலைப்படியினை ரொக்கமாகச் செலுத்தாமல், பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதிக்கு வரவு வைத்து, மார்ச்சு மாதச் சம்பளத்திலிருந்து சேர வேண்டிய தொகையை ரொக்கமாகச் செலுத்த விருக்கிறோம். இதற்கிணங்க, 1968–69-ம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அகவிலைப்படி காரணமாக, நடைமுறைக் கணக்கில் 9·2 கோடி ரூபாய் அளவிற்குக் கூடுதல் பொறுப்பு ஏற்படும்.

நகர ஈட்டுப் படி.

13. ஐந்நூறு ரூபாய் வரையில் சம்பளம் பெறுகிற மாநில அரசுப் பணியாளர்களுக்கு, இந்திய அரசுப் பணியாளர்களுக்குப் பொருந்தும் அதே வீதங்களில், நகர ஈட்டுப்படியும் வழங்க அனுமதி அளித்திருக்கிறோம். சென்னை மாநகர எல்லைகளுக்குள் இருக்கிற, மானிய உதவிபெறும் பள்ளிகளின் ஆசிரியர்களுக்கும், நகர ஈட்டுப்படியை அதே வீதங்களில், அதே நிபந்தனைகளுக்குட்பட்டு வழங்குவதற்கும் இப்போது அரசு முடிவு செய்துள்ளது. பணியாளர்களிடம் இருந்து பெறப்பட்ட சில முறையீடுகளைக் கருத்திற் கொண்டு, அரசு இப்போது சென்னை மாநகர எல்லைகளை அடுத்து, ஏற்கெனவே சென்னை மாநகருக்குப் பொருந்தும் வீதங்களில் வீட்டு வாடகைப்படி வாங்கி வரும் பகுதிகளிலிருக்கும் பணியாளர்களுக்கும், நகர



ஈட்டுப்படி அதே வீதங்களிலும் அதே சம்பள வரையறைகளுக்குட்பட்டும் வழங்க முடிவு செய்துள்ளது. இம் முடிவிற்கிணங்க, நகர ஈட்டுப்படி, பரங்கிமலை, பல்லாவரம், குரோம்பேட்டை, தாம்பரம், அம்பத்தூர், வில்லிவாக்கம், ஆவடி, மாதவரம் போன்ற இடங்களுக்கும் விரிவுபடுத்தப்படும். இப்பகுதிகளிலுள்ள மானியம் பெறும் பள்ளிகளின் ஆசிரியர்களும் ஊராட்சி மன்றங்களின் பணியாளர்களும், அரசு எடுத்துள்ள இம்முடிவின் பயனைப் பெறுவர். மதுரை நகரை, நகர ஈட்டுப்படி பெறுவதற்கு உரிமையுள்ள B-2 வகுப்பு நகரமாக இந்திய அரசு வகைப்படுத்தியுள்ளது. இதற்கிணங்க, மதுரை நகர எல்லைக்குள் உள்ள அலுவலகங்களில், 500 ரூபாய்க்குக் குறைந்து சம்பளம் வாங்குகிற அனைத்துப் பணியாளர்களுக்கும் அவர்களுடைய சம்பளத்தில் 5 சத வீத அளவில், 5 ரூபாய்க்குக் குறையாது 10 ரூபாய்க்கு மேற்படாது, நகர ஈட்டுப்படி வழங்க இப்போது அரசு முடிவு செய்துள்ளது. மதுரை நகர எல்லைகளுக்குள் பணியாற்றுகிற ஊராட்சி மன்றங்களின் பணியாளர்களும், மானிய உதவிபெறும் பள்ளிகளின் ஆசிரியர்களும், அதே வீதங்களில், நகர ஈட்டுப்படியின் நலன்களைப் பெறுவர். 1968 ஏப்ரல் 1-ம் நாளில் சேர வேண்டிய மார்ச் திங்கள் சம்பளத்திலிருந்து செயல்படவிருக்கிற இச் சலுகைகளின் காரணமாக, வருகிற ஆண்டில் ஏறக்குறைய 40 இலட்சம் ரூபாய் அளவுக்குப் பொறுப்புகள் கூடும். இதற்கேற்ப, 1968–69 ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நிதி வகை செய்யப்பட்டுள்ளது.




இவ்வாண்டின் திட்டம்.

14. பொதுக் கடன்களையும், இந்திய அரசுக்குச் சேர வேண்டிய கடன்களையும் திருப்பிச் செலுத்த வேண்டிய பொறுப்பு கணிசமாக உயர்ந்திருப்பதனாலும், அகவிலைப் படி வீதங்களை உயர்த்தியதால் ஏற்படும் முழு விளைவினாலும், நடப்பு ஆண்டைவிட அடுத்த ஆண்டில் திட்டத்திற்கான நிதி வசதிகள் பெரிதும் குறையும் நிலை ஏற்பட்டுள்ளது. சிறுபாசனம், மீனளம், மின்சாரம் போன்ற திட்டங்களில் நடப்பாண்டில் செய்துள்ள



முதலீடுகள் பெரிதும் உயர்த்தப்பட்டுள்ளனவென்றும், இதனால் நடப்பாண்டின் திட்ட முதலீடு, வரவு-செலவுத் திட்டத்தில் நாம் வகை செய்திருந்த 85 கோடியே 28 இலட்சம் ரூபாய்க்கு மாறாக, 88 கோடியே 10 இலட்சம் ரூபாய் அளவிற்கு உயரும் என்பதை இவண் குறிப்பிட விரும்புகிறேன். மற்றும், இந்த ஆண்டில் மத்திய அரசு அளிக்கும் உதவியை, 38 கோடி ரூபாயிலிருந்து நாற்பத்து மூன்றரைக் கோடி ரூபாயாக உயர்த்த ஒப்புக்கொள்ளுமென்றும் நாம் எதிர்பார்த்தோம். ஆனால் அந் நம்பிக்கை ஈடேறவில்லை. எனவே, நமது நிதி வசதியின் துணைகொண்டே, பெரியதொரு திட்டத்தைச் சரிக்கட்ட வேண்டி வந்தது.

பருவ நிலையும் வேளாண்மை விளைச்சலும்

15. மேற்சொன்ன காரணங்களால், நமது நிதி வசதி பெரிதும் குன்றியிருப்பதை நினைவிற்கொண்டு, அடுத்த ஆண்டுக்குரிய திட்டத்தை வகுக்கையில், மிக முக்கியமான துறைகளில், வளர்ச்சியின் விரைவு தணியாமல்—நியாயமான அளவில் நிறைவேறிவரும் வகையில் நாட்டம் செலுத்தியிருக்கிறோம். நடப்பாண்டில், குறிப்பாக மிகு பயன்தரும் தானிய ரகத் திட்டங்களிலும், ஒருபோக நிலங்களை இருபோக நிலங்களாக மாற்றும் திட்டங்களிலும் நாம் வேண்டிய அளவிற்கு வெற்றி பெற்றிருப்பதைக் கருதி, வேளாண்மை உற்பத்தி வேலைத் திட்டங்களுக்கும், அதனோடு இணைந்த வேலைத் திட்டங்களுக்கும் தொடர்ந்து நமது திட்டத்தில் சிறப்பளித்து வந்துள்ளோம். உணவு தானிய உற்பத்தியில் ஏற்பட்டுள்ள உயர்வு, நல்ல பருவநிலை காரணமாக மட்டும் ஏற்பட்ட உயர்வல்ல என்பதை நான் இங்கு வலியுறுத்திச் சொல்ல விரும்புகிறேன். புள்ளிவிவரங்களைப் பாகுபடுத்திப் பார்த்ததிலிருந்து, நமது மாநிலம் முழுவதிலும் தென்மேற்குப் பருவ மழையினால், முந்திய ஆண்டில் 416 மில்லிமீட்டர் மழையும், 1965–66-ல் 315 மில்லிமீட்டர் மழையும் பெய்ததற்கு மாறாக, இவ்வாண்டு சராசரி 289 மில்லிமீட்டர் மழையே பெய்துள்ளது எனத் தெரிய வருகிறது. 1965–66-ம் ஆண்டில், நமது மாநிலத்தில் என்றுமே கண்டிராத அளவில் வறட்சி நிலை ஏற்பட்டது என்று





பொதுவாகக் கருதப்படுவதை இங்கே நினைவுறுத்த விரும்புகின்றேன். நடப்புப் பசலி ஆண்டில் பெய்த மழையின் அளவு, இதற்கு முந்திய ஆண்டுகளின் அளவைக் காட்டிலும் மிகக் குறைந்திருந்தது. இக் குறைவு, 1966—67-ம் ஆண்டோடு ஒப்பிடும்போது, 30·5 சத விகிதமும், 1965—66-ம் ஆண்டோடு ஒப்பிடும் போது 8·2 சத வீதமுமாக இருந்தது. இங்ஙனமே, வடகிழக்குப் பருவமழையும் பொய்த்துவிட்டது. 1966—67-ல் 606 மில்லி மீட்டர் மழை பெய்திருக்க, 1967—68-ல் சராசரி 496 மில்லி மீட்டர் அளவிற்கே மழை பெய்துள்ளது. இதனால் ஏற்பட்ட குறைவு, 18·1 சத விகிதமாகும். இவ்விரு மழைக் காலங்களையும் இணைத்துப் பார்த்தோமேயானால், நடப்பாண்டின் மழை அளவு, 1966—67-ம் ஆண்டின் மழை அளவைக் காட்டிலும் 23·1 சத விகிதம் குறைந்துள்ளது தெரிய வரும். இந்த இரண்டு பருவங்களிலும் ஆங்காங்கு பெய்த மழை அளவை மேலும் கூர்ந்து ஆய்வு செய்வோமானால், பருவ மழை மேலும் பாதகமாயிருந்திருப்பதை அறியலாம். 1966—67-ல் 48 நாட்களும், 1965—66-ல் 41 நாட்களும் மழை பெய்திருக்க, நடப்பு வேளாண்மை ஆண்டில், மொத்தம் 39 நாட்கள் மட்டுமே மழை பொழிந்துள்ளது. வடகிழக்குப் பருவ மழையும், பயிர் வளரும் காலமும் இணைந்து செல்லும் இந்தக் கால அளவில், 1966—67-ல் 24 நாட்களும், 1965—66-ல் 22 நாட்களும் மழை பெய்திருக்க, நடப்பு வேளாண்மை ஆண்டில் 18 நாட்கள் மட்டுமே மழை பொழிந்துள்ளது. எனவே, பயிர்கள் வளரும் முக்கிய தருவாயில் பெய்த மழை அளவு, பெருமளவிற்குப் பற்றாக்குறையாகவே இருந்தது. பெரிய பாசன நீர்த் தேக்கங்களின் நீர் மட்டமும், நெஞ்சம் மகிழும் அளவிலே அவ்வளவு நிறைவு அளிப்பதாகவில்லை. இத்தகைய இடையூறான பருவ நிலைகள் வாய்த்தபோதிலும், நடப்பாண்டில் உணவு தானிய உற்பத்தி, 1966—67-ம் ஆண்டின் உற்பத்திக்கு மேல் 2 இலட்சம் டன் உயர்ந்து, ஏறக்குறைய 60 இலட்சம் டன் அளவில் நிற்குமென்பது நமக்கு மகிழ்ச்சி அளிக்கக்கூடிய செய்தியாகும். நடப்பாண்டில்,



பொதுவாக 1965—66-க்கு நேர் என்று சொல்லத்தக்க பருவ நிலை அமைந்துள்ளது. அவ்வாறு 1965—66-உடன் ஒப்பிட்டு நோக்கின், நடப்பாண்டின் உற்பத்தி 7·4 லட்சம் டன் உயர்ந்திருக்கிறது. இந்த உற்பத்தி உயர்வு, நடப்பாண்டில் அரசு மேற்கொண்டுள்ள குறிப்பான திட்டங்களின் வாயிலாகக் கிட்டியுள்ள பலன்களை, முற்ற எடுத்துக் காட்டுகிறது என்று சொன்னால் அது மிகையாகாது. இவ்வாண்டில் மிகு பயன்தரும் தானிய ரகத் திட்டத்தின்கீழ் கிடைத்துள்ள பலன்களினால் ஊக்கமடைந்து, அத் திட்டத்தில், நெல் விளைச்சலின்கீழ் நடப்பாண்டில் இருந்த 13 லட்சம் ஏக்கர் பரப்பளவை, அடுத்த ஆண்டில் 25 லட்சம் ஏக்கர் அளவுக்கு உயர்த்த அரசு கருதுகிறது. இதைப் போலவே, இத் திட்டத்தின்கீழ், கலப்பின சிறு தானிய விளைச்சலின்கீழுள்ள நிலப் பரப்பும், நடப்பாண்டில் ஏறக்குறைய 1 லட்சம் ஏக்கராவிலிருந்து, அடுத்த ஆண்டில் 1·7 லட்சம் ஏக்கராவுக்கு உயர்த்தப்படும். மிகு பயன் தரும் தானிய ரகத் திட்டங்களின் வெற்றி, உர வகைகளை அதிகமாய்ப் பயன்படுத்துவதையே பெரிதும் பொறுத்துள்ளது. நடப்பாண்டில் உர வகைகள் வழங்கப்படும் நீர்மையிலிருந்து, அடுத்த ஆண்டு உர வகைகள் கிட்டும் நிலை எளிதாகுமென்று தெரிகிறது. இதற்கிணங்க, உர வகைகளைப் பயன்படுத்துவதை, நடப்பாண்டில் ஏறக்குறைய 1 லட்சம் டன் 'நைட்ரஜன்' அளவிலிருந்து, அடுத்த ஆண்டில் பெருமளவுக்கு உயர்த்தத் திட்டமிட்டிருக்கின்றோம். பருவநிலை பொய்க்காது, மிகு பயன்தரும் தானிய ரகங்களை மேலும் அதிகப் பரப்பளவில் பயன்படுத்தி, போதிய அளவில் உரமிட்டோமானால், அடுத்த ஆண்டில் உணவு தானிய உற்பத்தி பெருமளவிற்குப் பெருகும்.

சிறுபாசனத் திட்டங்களும் நிறுவன நிதி உதவியும்.

16. மிகு பயன்தரும் தானிய வகைத் திட்டமும், பாசன வசதிகளைப் பெருக்கும் திட்டமும், ஒன்றோடொன்று இணைந்து செயல்படவேண்டுமென்றும், குறிப்பாக, ஒரு போக நன்செய் நிலங்களை இருபோக நன்செய் நிலங்களாக மாற்றுவதற்கு நாம் முனைந்து

ஏ.டி.டீ. 27



நெல்




கோ 8



கேழ்வரகு




செயல்பட வேண்டுமென்றும் அரசு உணர்கிறது. இதற்காக இறைவைப் பாசனத்திற்குரிய வசதிகளை விரிவுபடுத்த வேண்டியிருக்கும் இந்த நிலையில், கிணறுகள், துளைக் கிணறுகள், வடிமுனைக் குழாய்க் கிணறுகள் இவற்றைத் தோண்டும் திட்டங்களும், விசையேற்றங்களை நிறுவும் திட்டங்களும் சிறப்பான இடம் பெறுகின்றன. அதே நேரத்தில், இந்தத் திட்டங்களைச் செயல்படுத்துவதில், நிறுவனங்களின் வாயிலாகப் பெருமளவில் நாம் கடன்கள் பெறலாமென்று திட்ட ஆணைக் குழுவும் சுட்டிக் காட்டியுள்ளது. ரிசர்வ் வங்கியும், ஆயுள் காப்புறுதிக்கழகமும், வர்த்தக வங்கிகளும், இப்போது வேளாண்மை உற்பத்தித் திட்டங்களுக்குப் பெருமளவில் கடன் வழங்க முன்வருகின்றன. ஆயினும், இந்த நிறுவனங்களிடமிருந்து பெறும் கடன் உதவி, கூட்டுறவுத் துறையின் மூலமாகவன்றி, அரசிற்கு நேரடியாகக் கிட்டாது. கடன் உதவும் நிறுவனங்களிடமிருந்து கிடைக்கிற உதவியில், நியாயமாகத் தனக்குள்ள பங்கை இந்த மாநிலம் இழந்துவிடக் கூடாதென்றும், குறிப்பாக, அத்தகைய உதவி, திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இந்திய அரசு வசதி செய்துதருகிற நிதிகளுக்குக் கூடுதலாக இருப்பதால், இத்தகைய நல்ல வாய்ப்பினை நழுவ விடக்கூடாது என்றும் அரசு கருதுகிறது. அடுத்த ஆண்டில் சிறு பாசனத் திட்டங்களுக்குக் கடன் வழங்கல் பற்றி, சில பெரிய கொள்கை முடிவுகளை நாம் எடுத்துள்ளோம். அரசு இப்போது முடிவு செய்துள்ள முறைப்படி, கிணறுகள் தோண்டுவதற்கும், விசையேற்றங்கள் அமைப்பதற்கும் வழங்கப்படுகிற புதிய கடன்கள், நில அடைமான வங்கிகளின் வாயிலாகவே கிடைக்கும். இதைப் போலவே, விரைவில், செவ்விய முறையில் செயல்படவிருக்கும் வேளாண்மைத் தொழிற் கழகம், விசையேற்றங்களையும் டிராக்டர்களையும் தவணைக் கொள்முதல் அடிப்படையில் வழங்குவதற்குப் பொறுப்பேற்கும். திட்ட ஆணைக்குழுவுடன் நாங்கள் நடத்திய உரையாடல்களின்போது, சிறு பாசனத் திட்டங்களுக்காகவும் டிராக்டர்கள் தவணைக் கொள்முதல் திட்டங்களுக்காகவும், கடன் வழங்கும்



பற்பல நிறுவனங்களிடமிருந்து ஏறக்குறைய 6 கோடி ரூபாய் அளவுக்கு, நமது மாநிலத்திற்கு நிதி வசதி கிட்ட வகை செய்யப்படுமென்று நமக்கு அறிவிக்கப்பட்டது. இத்தகைய நிறுவனக் கடன் வசதியைப் பெற்றுக் கொள்ள, மத்திய நில அடைமான வங்கியின் கடன் ஈட்டுறுதி ஆவணங்களை (Debentures) வாங்குவதற்கென்று, 1968–69-ம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் அரசு 2 கோடி ரூபாய் வகை செய்துள்ளது. அரசிடமிருந்து பெறும் இந்த உதவி உட்பட, மத்திய நில அடைமான வங்கி, அடுத்த ஆண்டில் தனது கடன் ஈட்டுறுதி ஆவணங்களின் மூலம் 8 கோடியே 70 இலட்சம் ரூபாய் அளவில் நிதி திரட்ட முடியுமென்று மதிப்பிடப்பட்டுள்ளது. இதில் குறைந்தது, 6 கோடியே 70 இலட்சம் ரூபாய் சிறு பாசனத் திட்டங்களுக்காகப் பயன்படுத்த இயலும். மாநில அரசு, வேளாண்மைத் தொழிற் கழகத்தின் பங்கு மூலதனத்திற்குத் தொகை செலுத்துவதற்காகவும் 1968–69-ம் ஆண்டிற்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கியுள்ளது. இந்தக் கழகத்தின் பங்கு மூலதனத்திற்காக மத்திய அரசும் 50 இலட்சம் ரூபாய்க்குக் குறையாமல் தொகை செலுத்துமென எதிர்பார்க்கப்படுகிறது. எனவே தவணைக் கொள்முதல் அடிப்படையில் விசையேற்றங்களை வழங்குவதற்காகக் குறைந்த அளவு 100 இலட்சம் ரூபாயும், டிராக்டர்கள் வழங்குவதற்காக 70 இலட்சம் ரூபாயும் ஒதுக்க இயலுமென்று கருதுகின்றோம். அதே நேரத்தில் நடப்பாண்டிலும் இதற்கு முந்திய ஆண்டுகளிலும் முதல் தவணைத் தொகை வழங்கப்பட்டுள்ள கிணறுகளுக்கான இரண்டாவதும் அதற்கு மேற்பட்ட கடன் தவணைத் தொகைகளையும் வழங்குவதற்கென, உதவித் தொகை நீங்கலாக, 250 இலட்சம் ரூபாய் அரசாங்கம் வகை செய்துள்ளது. எனவே, நில அடைமான வங்கிகளின் மூலமாகவும், வேளாண்மைத் தொழிற் கழகத்தின் வாயிலாகவும் கிட்டும்படிச் செய்துள்ள உதவித் தொகை உட்பட, உழவர்களுக்குக் கிடைக்கும் உதவித் தொகை எந்த வகையிலும் குன்றுது-குறையாது. அதற்கு





மாறாக, சிறு பாசனத் திட்டங்களுக்கென உழவர் பெருமக்களுக்குக் கிடைக்கும் கடன் உதவி கணிசமான அளவிற்கு உயரும்.

17. நில அடைமான வங்கிகளின் வாயிலாகச் செயல் படவிருக்கிற இயல்பான இத்திட்டங்களைத் தவிர, ஒரே தொகுப்பாக உள்ள பகுதிகளில், குறிப்பாக, பெரிய பாசனத் திட்டங்களிலிருந்து பாசன வசதி பெறும் பகுதிகளில், ஒரு போக நிலங்களைப் பெருமளவில் இருபோக நிலங்களாக மாற்றுவதற்கு வசதியாயிருக்கும் பொருட்டு, சிறு பாசன வசதிகளை முனைந்து பெருக்குவதற்கான சில திட்டங்களையும் அரசு வரைந்துள்ளது. இத்திட்டங்கள், வேளாண்மை மறுகடன் உதவிக் கழகத்திடமிருந்து சிறப்பு உதவி பெற்று நிறை வேற்றப்படும். புதுக்கோட்டைப் பகுதியில் மொத்தம் 92·5 இலட்சம் ரூபாய் முதலீடு செய்து, 2,000 கிணறுகளைத் தோண்டுவதற்கும் 500 விசையேற்றங்களை நிறுவுவதற்குமான ஒரு திட்டத்திற்கு, வேளாண்மை மறுகடன் உதவிக் கழகம் ஏற்கனவே அனுமதி வழங்கி யுள்ளது. இத்திட்டத்தின் பகுதியாக, அடுத்த ஆண்டில் 22·5 இலட்சம் ரூபாய்ச் செலவில் 500 கிணறுகள் தோண்டும் பணியும், 100 விசையேற்றங்கள் அமைக்கும் பணியும் நிறைவேற்ற இயலும். இவ்வாறே, கோவை மாவட்டத்தில், தொண்டாமுத்தூர், பெரியநாயக்கன் பாளையம் பகுதிகளில், மொத்தம் 168 இலட்சம் ரூபாய்ச் செலவில் 1,000 கிணறுகள் தோண்டுவதற்கும் 1,000 விசையேற்றங்கள் நிறுவுவதற்கும் வகை செய்துள்ள ஒரு திட்டத்திற்கு, ஏற்கனவே வேளாண்மை மறுகடன் உதவிக் கழகம் அனுமதி வழங்கியுள்ளது. இந்தத் திட்டத்திற் கிணங்க, அடுத்த ஆண்டில் 42 இலட்சம் ரூபாய்ச் செலவில், 250 கிணறுகள் தோண்டும் பணியையும் 250 விசையேற்றங்கள் நிறுவும் பணியையும் செய்து முடிக்கக் கருதுகிறோம். இந்தத் திட்டங்களுக்குத் தேவைப்படும் நிதிகளை மத்திய நில அடைமான வங்கி, சிறப்பு வளர்ச்சி ஈட்டுறுதி ஆவணங்களை வெளியிட்டுத் திரட்டும். இந்த



ஆவணங்களில் வேளாண்மை மறுகடன் உதவிக் கழகம் 75 சதவீதத்திற்கும், மாநில அரசாங்கம் எஞ்சிய 25 சதவீதத்திற்கும் முதலீடு செய்யும்.

18. வேளாண்மை மறு கடன் உதவிக் கழகத்திட மிருந்து பின்வரும் வேலைகளுக்காக உதவி பெறுவதற் கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. (1) கோவை மாவட்டத்தில், அமராவதி நீர்த் தேக்கத் திட்டப் பகுதியில், 160 இலட்சம் ரூபாய்ச் செலவில் 2,000 கிணறு களைத் தோண்டுதல், 2,000 விசையேற்றங்களை நிறு வுதல், (2) இராமநாதபுரம் மாவட்டத்தில், பெரியாறு விரிவுப் பகுதியில், 45 இலட்சம் ரூபாய்ச் செலவில் 900 கிணறுகளைத் தோண்டுதல், 900 விசையேற்றங்களை நிறுவுதல்; (3) திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், புதிய கட்டளைக் கால்வாய், புள்ளம்பாடிக் கால்வாய்ப் பகுதி களில், 165 இலட்சம் ரூபாய்ச் செலவில் 2,650 கிணறு களைத் தோண்டுதல், 4,000 விசையேற்றங்களை நிறுவுதல்; (4) மதுரை, மேலூர் வட்டங்களில், 100 இலட்சம் ரூபாய்ச் செலவில் 2,000 கிணறுகளைத் தோண்டுதல், 2,000 விசையேற்றங்களை நிறுவுதல்; (5) தருமபுரி மாவட்டத்தில், கிருஷ்ணகிரி வட்டத்தில், 100 இலட்சம் ரூபாய்ச் செலவில், 2,000 கிணறுகள் தோண்டுதல்; 2,000 விசையேற்றங்களை நிறுவுதல். வேளாண்மை மறுகடன் உதவிக் கழகத்தின் பிரதிநிதிகளுடன் நமது அலுவலர்கள் நடத்திய உரையாடல்களிலிருந்து, இத் திட்டங்களை அடுத்த நிதியாண்டில் நிறைவேற்றுவதற் கேற்ப, உரிய காலத்தில் கழகம் இசைவளிக்குமென நாம் எதிர்பார்க்கலாம். இந்தத் திட்டங்களைச் செயல் படுத்துவதற்கு, நில அடைமான வங்கிகளில் நிலவி வருகின்ற நடைமுறைகளும், மரபுகளும் பெருமளவில் சீராக்கப்படல் வேண்டுமென்பதை அரசு முற் றிலும் உணர்ந்து, அதற்கேற்ற நடவடிக்கைகளையும் தொடங்கிவிட்டது. இப்புதிய பொறுப்புக்களை மத்திய நில அடைமான வங்கி மேற்கொள்வதற்கிணங்க, அதற்குப் போதிய அளவில் நிர்வாகப் பணியாளர் களையும், தொழில் நுட்பப் பணியாளர்களையும் அரசு






கொடுத்து உதவும். இப்போது கருதியுள்ள அளவில், நிறுவனக் கடன் உதவித் திட்டம் தங்குதடையின்றிச் செவ்விய முறையில் செயல்படுகிறதாவென்பதை உறுதிப்படுத்துவதற்காக, மேற்சொன்ன திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருவது குறித்து, மாவட்ட அளவிலும் மாநில அளவிலும் கூர்ந்து நோக்கி வருவோம்.

நடுத்தரப் பாசனத் திட்டங்கள்.

19. நமது மாநிலத்தில் இன்னும் வாய்ப்புள்ள சில நடுத்தர பாசனத் திட்டங்களையும் மிக விரைவாக நிறைவேற்றி வருகின்றோம். 1968—69-ம் ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில், இவ்வேலைத் திட்டங்களுக்காக 3 கோடியே 58 இலட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. முந்தைய ஆண்டுகளைப் போலவே, பாசனத் திட்டங்களுக்கான முதலீட்டின் பெரும் பகுதியை ஈர்த்துக் கொள்ளும் பரம்பிக்குளம்-ஆளியாறு திட்டத்திற்கு, இவ்வாண்டு 2 கோடியே 6 இலட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. இப்போது வகை செய்யப்பட்டிருக்கிற 95 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கத்துடன், சித்தாறு-பட்டினங்கால் திட்டத்தின் தற்போதைய விரைவு தளராது காக்கப்படும். அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 34 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்வதோடு, மணிமுத்தா நதித் திட்டத்தை அதன் இறுதி நிலைக்குக் கொண்டுவந்துவிடலாம். திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள இராமநதி-கடனா நீர்த்தேக்கத் திட்டங்கள் இரண்டிற்கும், இப்போது 20 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளதால், அப்பணிகள் சுணக்கம் ஏதுமின்றி தொடங்கப்பெறும். 4 கோடி ரூபாய் அளவிற்கு மூலதனம் தேவைப்படுகின்ற வைகைக் கால்வாய்களின் அமைப்புகளைப் புதுப்பிப்பதற்கான திட்டத்தின் தொடக்கப் பணிகளும் மேற்கொள்ளப்படும்.

நில அடிமட்ட நீர்வள ஆய்வு.

20. நமது மாநிலத்தில் புதிய-பெரிய பாசனத் திட்டங்களை மேற்கொள்வதற்கான வாய்ப்பு மிகக் குறைவு என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவர். மேற்கொள்ளுவதற்கு ஏற்ற திட்டங்கள் என்று கருதப் படுகிற சில திட்டங்களும், அண்டை மாநிலங்களின்



இசைவைப் பொறுத்திருக்கின்றன. இவ்விசைவைப் பெறுவதற்கான காலமும் நீண்டுகொண்டே செல்லுகிறது என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே, பாலாற்றுப் பரப்பு, நெய்வேலிப் பகுதி, காவிரிக் கழிமுகம், சென்னை நகரைச் சூழ்ந்த பகுதிகள் போன்ற குறிப்பிட்ட பகுதிகளில், நில அடிமட்ட நீர்வளங்களை ஆய்வு செய்து முற்றிலும் பயன்படுத்துவதில் தனது முயற்சிகளைத் திருப்பவேண்டுமென்று சிறிது காலமாகவே அரசு உணர்ந்துள்ளது. ஐக்கிய நாடுகள் நிறுவனம் அனுப்பிய சிறப்பு ஆய்வுக் குழுவின் அறிக்கையை ஒட்டித் தீட்டிய திட்டமொன்று, 1966-ம் ஆண்டிலிருந்து செயல்பட்டு வருகிறது. தற்போதைய இத் திட்டத்தில், காவிரி கழிமுகப் பகுதியைக் குறித்துப் போதிய அளவில் ஆய்வு செய்யப்படவில்லையாதலால், அப்பகுதியில் நில அடிமட்ட நீர்வள ஆய்வினை மேலும் விரிவாக்குவதற்குக் கூடுதல் உதவியளிக்குமாறு, இந்திய அரசின் மூலம், ஐ.நா. நிறுவனத்தை இந்த அரசு அண்மையில் வேண்டிக்கொண்டுள்ளது. இத் திட்டத்தின் இரண்டாவது நிலையை முடிப்பதற்கு ஏறக்குறைய பதினெட்டு திங்களாகும். இப் பணி நிறைவேற, ஐ.நா. நிறுவனத்திற்கு 45 இலட்ச ரூபாயளவிலும், மாநில அரசிற்கு 48 இலட்ச ரூபாயளவிலும் செலவாகும். ஐ.நா. நிறுவனத்திலிருந்து வந்த குழு, அண்மையில் காவிரிக் கழிமுகப் பகுதிக்குச் சென்று, நாம் தெரிவித்த திட்டத்தைக் குறித்து நேரடியாக ஆய்வு செய்தது. நம்மால் குறிப்பிடப்பட்ட திட்டம், ஏற்றதென்றும் நிறைவேற்றக் கூடியதுதான் என்றும் தெரிவித்து, அதை ஏற்றுக்கொள்ள வேண்டுமென்றும் அக்குழுவினர் பரிவுரை செய்துள்ளார்கள். இத் திட்டப் பகுதிகளை, அயல்நாட்டுக் குழு ஒன்றின் துணைகொண்டு, விமானம் மூலம் ஆய்வு செய்வதற்காக, அரசு அண்மையில் 4·5 இலட்சம் ரூபாய் அளவிற்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. ஐ.நா. வளர்ச்சித் திட்டக்குழு இந்த ஆய்விற்கு ஏற்பாடு செய்து வருகின்றது.



இந்திய-ஜெர்மனித் திட்டம்.

21. மூன்றும் திட்டக் காலத்தில், உணவு முனையில் கிடைத்த நமது அனுபவம் காரணமாக, உணவு தானிய உற்பத்திப் பெருக்கத்தில் நமது நாட்டத்தைப் பெரிதும்





செலுத்தவேண்டியிருந்தாலும், உருளைக்கிழங்கு போன்ற துணைப் பயிர்களின் தேவையினை நாம் அடியோடு புறக்கணித்தல்கூடாது. ஜெர்மானிய கூட்டாட்சிக் குடியரசின் துணைகொண்டு, 1967-ம் ஆண்டின் தொடக்கத்தில், நீலகிரி மாவட்டத்தில் முனைப்பு வேளாண்மை வளர்ச்சித் திட்டம் ஒன்று தொடங்கப்பட்டதை இப்பேரவை அறியும். இத் திட்டத்தின்படி, நீலகிரி மாவட்டத்தில் உருளைக்கிழங்கு 'பின் கருகல் நோய்' (late blight) ஏற்படாவண்ணம், அதனைப் பேணிக் காப்பதற்குச் சிறப்பான நாட்டம் செலுத்தப்படும். இதைப் போன்றே, உருளைக்கிழங்கு விளைச்சலின் காணப்படுகிற பொன்னிற நூற்புழு (Golden Nematode) பரவாமல் தடுப்பதற்கும் ஆவன செய்யப்படும். கால்நடை வளர்ப்பு, கோழிப்பண்ணை, பாற்பண்ணைத் திட்டங்களின் வளர்ச்சியிலும் நாட்டம் செலுத்தப்படும். நமது பணியாளர்களுடன் இணைந்து செயலாற்றுவதற்கு, மேற்கு ஜெர்மனி வேளாண்மைத் துறை வல்லுநர்கள், தொழில் நுட்பப் பணியாளர்கள் அடங்கிய 23 பேரை அனுப்புமென்று எதிர்பார்க்கப்படும் இத் திட்டத்திற்கு, 1968-69-ன் வரவு-செலவுத் திட்டத்தில், 22·2 இலட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்திலுள்ள தேயிலைத் தோட்டங்களுக்கு, கூட்டுறவு நில அடைமான வங்கிகளின் மூலம் கடனுதவி அளிப்பதற்கும் அரசு ஒரு திட்டம் வகுத்துள்ளது. உதகமண்டலம், குன்னூர் வட்டங்களில் உள்ள கோத்தகிரி, குன்னூர், கீழ்க்கோத்தகிரி 'உள்வட்டங்கள்' (firkas) அடங்கிய ஓர் தொகுப்பான பகுதியில், 2,000 ஏக்கர் பரப்பளவில் தேயிலை முனைப்பாகப் பயிரிடப்படும். ஏக்கர் ஒன்றுக்கு 2,500 ரூபாய் வீதம் நில அடைமான வங்கிகள் கடனுதவி வழங்கும்; இக் கடன் 6 ஆண்டுக் காலம் கழித்து, 15 தவணைகளில் திருப்பிச் செலுத்தப்படல் வேண்டும். மொத்தத்தில் 50 இலட்சம் ரூபாய் செலவாகுமென்று மதிப்பிடப்படுகிற இத்திட்டத்திற்கு, சிறப்பு வளர்ச்சி ஈட்டுறுதி ஆவணங்கள் வாயிலாக நிதி எழுப்பப்படும். வேளாண்மை மறுகடன் உதவிக் கழகமும், மாநில அரசாங்கமும், 3:1 என்ற விகிதத்தில் இந்த ஆவணங்களில் முதலீடு செய்யும்.



# தமிழகத்தின் புகழ் ஒளி



உலகத் தமிழ் மாநாட்டின் நினைவுச் சின்னத்தினை, புது டெல்லியில், 15—3—68 அன்று, இந்தியக் குடியரசுத் தலைவர் டாக்டர் ஜாகீர் உசேன் அவர்களிடம், பாரத அரசாங்கத்தின் சுகாதாரம்—குடும்பக்கட்டுப்பாடு அமைச்சகத்தின் ராஜாங்க அமைச்சர் டாக்டர் எஸ். சந்திரசேகர் அளித்தார். தமிழக அரசின் சார்பாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை அவர்கள் இந்த நினைவுச் சின்னத்தை அனுப்பியிருந்தார்.

இந்திய-பிரான்ஸ் நட்புறவுத் திட்ட அடிப்படையில் நிறுவப்பட்ட டோரிஸ் திட்டத் துவக்கவிழா 31-1-68ல் நடைபெற்றது. அத்திட்டத்தின்கீழ் மீன்பிடிப்பதில் வல்லுநர்கள் அடங்கிய குழுவினர் நம் நாட்டு மீனவர்களுக்குப் பயிற்சி அளித்தனர். அப்பயிற்சி அளித்து முடிந்து தம் தாயகம் திரும்பும் அவர்களை மாண்புமிகு முதலமைச்சர் பாராட்டி. அவர்களுக்கு நன்றி கூறினார் (13—3—68)



ஜப்பான் நாட்டிலிருந்து வந்திருந்த மாணவர்கள் குழுவினருக்கு சென்னைக் கல்லூரிகள் மாணவ மன்றம், 17-2-68-ல் ஒரு வரவேற்பு அளித்தது. அவ்வமயம், ஜப்பான் நாட்டு மாணவர் குழுத்தலைவி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் பரிசுப்பொருள் மாணவர் கொடி ஒன்றினை வழங்கும் காட்சி.





2. நண்பகல் உணவுத்திட்டம் திறம்படவும் வெற்றிகரமாகவும் செயல்படுவதில் ஊராட்சிகளும், ஊராட்சி ஒன்றியங்களும், மிகுந்த அக்கறை காட்டி வருகின்றன. தற்போது அரிசன நலப் பள்ளிகள், சென்னை மாநகராட்சிப் பள்ளிகள் உட்பட 30,000 பள்ளிகளில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. இப் பள்ளிகளில் நண்பகல் உணவுபெறும் மாணவர்களின் எண்ணிக்கை 18·27 லட்சமாகும்.



4. “தரமான விதைகளை உழவர்களுக்கு வழங்குவது அரசின் நோக்கமாகும். 1966-67-ல் 354 டன் விதைகளும், 1967 டிசம்பர் 31-ம் தேதிவரையில் 356 டன் விதைகளும் வழங்கப்பட்டுள்ளன. 1968-69-ல் 506 டன் விதைகள் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.”

# நல்வாழ்வுப் பணிகளில் நாட்டு மக்களின் ஈடுபாடு



சென்னை நேரு அரங்கில் 25-2-68-ல் நடைபெற்ற சிறு சேமிப்புக் கலைவிழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் உரையாற்றினார்.




25-2-68 அன்று நடைபெற்ற சிறுசேமிப்புக் கலைவிழாவில் நடைபெற்ற கலை நிகழ்ச்சிகளில் ஒன்று

## சிறு சேமிப்பு சிறந்தோங்குக!




1. குழந்தை நலன் ஒருங்கிணைப்புத் திட்டத்தின்கீழ் பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்தில், குழந்தைகளுக்கு பால் வழங்கப்படுகிறது.



3. “ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றிலும் ஆரம்ப சுகாதார நிலையம் ஒன்றினை ஏற்படுத்துவது அரசின் கொள்கையாகும். இதுவரையில் தமிழகத்தில் மொத்தம் 257 ஆரம்பச் சுகாதார நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளன.”



இலங்கையின் உள்துறை துணை அமைச்சர் திரு பெல்லக மானா தமிழக சட்டப்பேரவை சபாநாயகர் திரு சி. பா. ஆதித்தனாரைச் சந்தித்து உரையாடினர் (28—2—68).

## கல்லூரி தொடங்க, நன்கொடை



நாமக்கல்லில் நிறுவப்படவிருக்கும் கலைக்கல்லூரி நிதிக்காக 4051 ரூபாயினை, காத்தப்பள்ளி ஊராட்சி மன்றத் தலைவர் திரு ருப்பண்ணக் கவுண்டர் மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்களிடம் நன்கொடையாக அளித்தார் (10—3—68).



குடிசை வாழ்வோர் தீ விபத்து நிவாரண நிதிக்கு இறுதியாக ரூபாய் பத்தாயிரம் அளிக்கும் விழா, 24—3—68 அன்று சென்னை ராணி மேரி கல்லூரி தோட்டத்தில் நடைபெற்றது. நிவாரண நிதிக் குழுத் தலைவி மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள், அவ்விழாவில் மாண்புமிகு முதலமைச்சரிடம், நன்கொடை அளித்தார்.

22. அடுத்த ஆண்டுத் திட்டத்தை வகுக்கையில், நமது உணவு வளங்களுடன் இணைந்து நிறைவு செய்யும் வகையில் மீனளங்களை மேலும் ஆர்வத்தோடு வளர்ப்பதற்கான வழிவகைகளையும் கருத்திற்கொண்டுள்ளோம். மீனளங்கள் குறித்த வளர்ச்சித் திட்டங்களுக்கான நிதி ஒதுக்கம் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வகை செய்யப்பட்டிருந்த 84·5 இலட்சம் ரூபாயிலிருந்து, திருத்த மதிப்பீடுகளில் 156·7 இலட்சம் ரூபாய்க்கு நடப்பு ஆண்டில் உயர்த்தப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் பெரும் எண்ணிக்கையில் விசைப் பொறிகள் பெறப்பட்டதன் காரணமாகவே, பெரும்பாலும் இம் முதலீடு உயர்ந்துள்ளது. இப்போது விசைப் பொறிகள் எளிதில் கிட்டுவதைக் கருதி, அடுத்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தில் 200 விசைப்படகுகள் கட்டுவதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மீன் படகுகளை, விசைப் படகுகளாக மாற்றுவதில் கடந்த சில ஆண்டுகளில் சிறந்த முன்னேற்றம் எய்தியிருப்பினும், ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கான வாய்ப்புகளைப் பயன்படுத்திக்கொள்ள, இதுகாறும் ஆர்வமுடன் எவ்வித முயற்சிகளிலும் ஈடுபடாமல் வாளாவிருந்தது, வருந்தத்தக்கதாகும். 36 இலட்சம் ரூபாய் மொத்தச் செலவில், நான்கு மீன் பிடி நாவாய்களை (Trawler) வாங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இந்த நாவாய்களை ஒப்படை செய்வதற்கு நீண்டகாலம் ஆகுமென்பதால், 1968–69-ல் ஒப்படை செய்வார்களென எதிர்பார்க்கப்படும் ஒரு நாவாய்க்கான செலவிற்காகவும், பிற்பட்ட ஆண்டுகளில் ஒப்படை செய்யவிருக்கும் எஞ்சிய நாவாய்களுக்கு முன்பணம் செலுத்துவதற்காகவும், 1968–69 வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 10·35 இலட்சம் ரூபாய் சேர்க்கப்பட்டுள்ளது. அழகுற நீண்டு செல்லும் கடற்கரை அமைந்த தமிழ்நாட்டில், ஆழ் கடல் மீன்வளத்தை வெகுநாட்களுக்கு முன்பே பயன்படுத்தத் தலைப்பட்டிருக்க வேண்டும். மீனளம்






23. இவ்வண்ணமே, விலங்கின வளர்ப்பின் கீழும் தற்போதைய அளவில் செயல்கள் பேணி வரப்படும். விலங்கினங்களுக்கு மருத்துவ வசதிகளைப் பரவலாக விலங்கின வளர்ப்பு

ஏற்படுத்துவதில் அரசு மிக முக்கியத்துவம் அளிக்கின்றது. இதற்கேற்ப, வருகிற ஆண்டில் பற்பல கிராம நிலையங்களில், 50 கால்நடை மருந்தகங்களை நிறுவுவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. இதுதவிர, நமது கால்நடைச் செல்வத்தைப் பாதுகாக்கும் முயற்சியில், கோமாரி நோயினை அறவே ஒழிப்பது குறித்த புதிய வேலைத் திட்டத்துக்காகவும் 5 இலட்சம் ரூபாய் ஒதுக்கப் பட்டுள்ளது.

தொழில் வளர்ச்சி : தனியார் துறை.

24. நமது பொருளாதாரத்தின் இன்றைய நிலையில், நமது ஆண்டுத் திட்டத்தில் வேளாண்மைத் துறையையும் அதனோடு இணைந்த துறைகளையும் வளர்ப்பதற்கான போதிய சிறப்பிடம் அளித்திருப்பது சாலப் பொருத்தமேயெனினும், மக்கள் தொகை நெருக்கமாகவுள்ள நமது மாநிலத்தைப் போன்ற ஒரு மாநிலத்தில், பெருந் தொழில்களையும் சிறு தொழில்களையும் வளர்க்க வேண்டிய தேவையையும் நாம் புறக்கணிக்க முடியாது. நமது தேசியப் பொருளாதாரத்தில் பொதுவாக ஏற்பட்டுள்ள மந்தநிலை காரணமாக, புதிய தொழில்களை நிறுவுவதிலும், முன்பேயுள்ள தொழில்களை விரிவு படுத்துவதிலும் நாடு முழுவதிலும் ஒரு சுணக்கம் ஏற்பட்டுள்ளதை உணரலாம். இவ்விதச் சூழலில், இம் மந்த நிலைக்குக் காரணமான சிக்கல்களைத் தீர்ப்பதிலேயே, இவ்வரசின் உடனடி நாட்டம் இயல்பாகவே சென்றது. பல நூறு தொழிலாளர்கள் வேலையிழக்காவண்ணம், நூற்பாலைகள் மூடப்படுவதைத் தவிர்க்க, அரசு உரிய காலத்தில் ஊக்கமுடன் மேற்கொண்ட நடவடிக்கைகளை இப்பேரவை பெரிதும் உணரும். விளைவு பெருகி, பண்டங்களின் விலைகள் உரிய அளவில் நின்றால், மக்களின் வாங்கும் திறன் பெரிதும் மேம்பாடு அடையும். அதன் விளைவாய், தொழில்துறை உற்பத்தியும் பல்கிப் பெருகுமென நாம் எதிர்பார்க்கலாம். மெல்லச் சீர்பட்டுவரும் இச்சூழலில், தனிப்பட்ட தொழில் முனைவர்கள் (entrepreneurs) நமது மாநிலத்தில் மீண்டும் பெருந்தொழில்களை நிறுவ ஆர்வமுடன் முன் வருகிறார்கள் என்பதை அறிய, அரசு களிப்படைகின்றது.









நமது மாநிலத்தில் பல்வகைச் செயற்கை நூல்களைத் (polyster fibre) தயாரிப்பதற்காக, ஏறக்குறைய 10 கோடி ரூபாய் மூலதன முதலீடு தேவைப்படுகிற தொழிற்சாலையொன்றிற்கு, விரைவில் தனியார்துறைக்கு உரிமம் வழங்கப்படுமென இந்திய அரசிடமிருந்து அறிகின்றோம். மின்குறைவுக் கடத்திகள் (semi conductors), மண்வாரிக் கருவிகள் (earth moving equipment), கரிக் கருப்பு (carbon black), குழந்தை உணவு இவற்றைத் தயாரிப்பதற்கான தொழிற்சாலைகளை அமைப்பதற்கும், தொழில் முனைவர்கள் அரசிற்குச் செயற்குறிப்புகளை அனுப்பியுள்ளனர். இச் செயற்குறிப்புகள் அனைத்தும் பற்பல நிலைகளில் ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. இத் திட்டங்களை நிறைவேற்றி முடிக்க, தனது அதிகார வரம்பிற்குட்பட்ட அனைத்தையும் மாநில அரசு செய்யுமென்பதை, இப்பேரவை திண்ணமாய் நம்பலாமென்று இயம்ப விரும்புகின்றேன். நமது மாநிலத்தில் தொழிற்சாலைகளை நிறுவ முன்வரும் தனியார் தொழில் முனைவர்களுக்கு, தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலம், தவணைக் கடன்கள் வடிவிலும், பங்கு மூலதனம் பெற உத்தரவாதம் அளிப்பதன் வாயிலாகவும் தொடர்ந்து உதவியளிப்பதற்கு வகை செய்யப்படும்.

மத்திய அரசினரின் வேலைத் திட்டங்கள்.

25. பெருந்தொழில்களை வளர்ப்பதில் மத்திய அரசு செய்யும் பெரிய முதலீடுகளில் இம் மாநிலம் தனக்குரிய பங்கினைப் பெறும் முறையில், நமது மாநிலத்தில் சில பெரிய தொழிற் திட்டங்களை நிறுவும்படி இந்திய அரசினை நமது மாநில அரசு தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றது. மின்னணுக் கருவிகள் (Electronic Instruments) தயாரிப்பதற்கு, 10 கோடி ரூபாய் மூலதன முதலீடு தேவைப்படுகிற ஒரு தொழிற்சாலையை நிறுவுவது குறித்த, முக்கியமான ஒரு திட்டத்தைப்பற்றி, நான் இந்திய அரசிடம் நேரில் முறையிட்டிருக்கிறேன். இத் திட்டம் நிறைவேற்றப்பட்டால், தேர்ச்சி பெற்ற 3,500 தொழிலாளர்கட்கு வேலைவாய்ப்புக் கிட்டும். மத்தியப் பாதுகாப்பு அமைச்சரிடம் இது குறித்து நான் நேரில் செய்துகொண்ட முறையீடுகள் நல்ல பலனை



அளிக்குமென நம்புகின்றேன். ருமேனியா நாட்டின் உடனுழைப்புடன் நமது மாநிலத்தில், கனரகத் தகடுகள்—கொள்கலன்கள் தயாரிக்கும் தொழிற்சாலை (Heavy Plates and Vessels Plant) ஒன்றை நிறுவுமாறும் இந்திய அரசிற்கு வரைந்துள்ளோம். இத் தொழிற்சாலை, இரசாயனத் தொழிற்சாலைகளுக்கும், உர உற்பத்தித் திட்டங்களுக்கும், பாறையெண்ணெய்த் (Petroleum) தூய்மைத் தொழிற்சாலைகளுக்கும் தேவைப் படுகிற அழுத்தக் கொள்கலன்களையும், கருவிகளையும் தயாரிப்பதற்கு ஏற்றது. ஏறக்குறைய 10 கோடி ரூபாய் முதலீடு தேவைப்படுகின்ற இத் தொழிற்சாலையில், 2,000 தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்புக் கிட்டும். பங்களூரிலுள்ள இந்தியத் தொலைபேசித் தொழிற் சாலையின் இரண்டாம் பிரிவு, நமது மாநிலத்திலே நிறுவப்படும் என்றும் அரசு எதிர்பார்க்கின்றது. இந்திய அரசும், திட்ட ஆணைக் குழுவும் முக்கியத்துவம் அளித்துவரும் கொள்கையான, ஒவ்வொரு பகுதியும் சமநிலை வளர்ச்சி அடைய வேண்டும் என்பது, நடை முறையில் பின்பற்றப்பட வேண்டுமானால், இப் பெரிய திட்டங்களை நிறுவுவது குறித்து, எங்களது வேண்டுகோள் ஏற்கப்பட்டாகவேண்டும். பெரிய தொழில்களை வளர்ச்சி செய்வதற்குத் தேவைப்படும் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தருவதற்கு, மாநில அரசு தன்னாலியன்ற நடவடிக்கைகள் அனைத்தையும் மேற் கொள்ளும் என்று இந்திய அரசு உறுதியாய் நம்பலாம். அத்தகைய வசதிகளை உறுதிப்படுத்துவதற்காகவே, நடப்பு ஆண்டில், அரசு, இப்போது மணலியில் நிறுவப் பட்டு வருகிற சென்னை பாறையெண்ணெய்த் தூய்மைத் தொழிற் சாலைக்கு (Madras Refineries) ஏறக்குறைய 88 இலட்சம் ரூபாய்ச் செலவில் நீர் வழங்கும் திட்டம் ஒன்றுக்கு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இத்திட்டத்திற் கென, 1968–69-ல் 36 இலட்சம் ரூபாய் வகை செய்யப் பட்டுள்ளது. 1969–70-ல் உற்பத்தித் தொடங்கு மென்று எதிர்பார்க்கப்படுகிற, சென்னை உரத் தொழிற் சாலைக்கு (Madras Fertilisers) நீர் வழங்குவதற்காக, ஏறக்குறைய 188 இலட்சம் ரூபாய்ச் செலவில் திட்டம்



ஒன்றை நிறைவேற்றுவது குறித்து, அரசு விரைவில் நடவடிக்கை எடுத்துக்கொள்ளும். சென்னைக்கு அண்மையில் பாறையெண்ணெய்த் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதால், இப்பகுதியில் பாறையெண்ணெய் இரசாயனத் தொழில்களின் இணைந்த வளர்ச்சிக்கு இனிய வாய்ப்புகள் ஏற்படும். எனவே, இப்பகுதியில் பாறை யெண்ணெய் இரசாயனத் தொழில்களின் இணைந்த வளர்ச்சி குறித்து ஆய்வு செய்யும்படி, இந்திய அரசின் நிறுவனமான, '' எஞ்சினியர்ஸ் (இந்தியா) லிமிடெட் '' என்கிற நிறுவனத்தின் பணியை அரசாங்கம் வேண்டி யுள்ளது. நெய்வேலி பழுப்பு நிலக்கரிக் கழகத்தின் துணைப் பொருள்களைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்புக்களைக் குறித்தும் ஆய்வு செய்து, ஓர் அறிக்கை அனுப்புமாறு அந்நிறுவனம் கேட்டுக் கொள்ளப்படும்.

தூத்துக்குடித் துறைமுகத் திட்டம்.

26. இந்த அரசின் வற்புறுத்தலுக்கிணங்கவும், கடந்த ஆண்டில் பொதுமக்களின் கிளர்ச்சிக்குச் செவிசாய்த்தும், இந்திய அரசு ஒருவாறு கடைசியில் தூத்துக்குடியிலே 24·40 கோடி ரூபாய்ச் செலவில், ஆழ்கடல் துறைமுகம் ஒன்றை அமைப்பதற்கு அனுமதி வழங்கியுள்ளதை, இப்பேரவையினர் முன்னரே அறிவர். இப்பணியை 1970-ம் ஆண்டிற்குள் நிறைவேற்றி முடிக்கும் வகையில், இந்திய அரசு, போதுமான அளவில் நிதி வசதிகளை ஒதுக்கித் தரும் என்று நம்புகிறோம். இத்துறைமுகம் செயலுக்கு வரும்போது, இப்பகுதியில் பல தொழில் திட்டங்களை நிறுவுவதற்கு வாய்ப்புகள் தோன்றும். இங்கே பரந்த நிலப் பகுதிகளைக் கையகப்படுத்து வதற்காகவும், நீர் வழங்குதல், மின்சாரம், சாலைகள் போன்ற மிகத் தேவையான அடிப்படை வசதிகளை ஏற்படுத்தித் தந்து, புதிய தொழிற்கூடங்களை நிறுவு வதற்கு முன்வருகிற தொழில் முனைவர்களுக்கு அந்நிலங்களை ஒதுக்கித் தருவதற்காகவும், ஏற்கெனவே நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டிருக்கிறது. இப்பகுதியில் இப்போது ஆய்விலுள்ள பற்பல திட்ட வட்டமான செயற்குறிப்புகளில், இத்தாலிய நாட்டின் உடனுழைப்புடன் 6·4 இலட்சம் டன் அளவில் செறிமணி






மாநில அரசின் நேரடித் தொழிற் திட்டங்கள்.

உரவகைகளை (concentrated granular fertilisers) உற்பத்தி செய்வதற்கான தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதும் ஒன்றாகும்.

27. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகத்திடம் ஒப்படைக்கப்பட்ட, இரு பெரும் திட்டங்களான அரக்கோணம் தொடர் உருக்கு வார்ப்படத் தொழிற்சாலைத் திட்டமும், ஆலங்குளத்தில் சிமெண்ட் தொழிற்சாலைத் திட்டமும் நிறுவுவது குறித்த பணிகள், மன நிறைவு தரும் அளவிலே முன்னேறி வருகின்றன. இந்த இரு திட்டங்களுக்கும் நடப்பு ஆண்டில் செய்துள்ள முதலீடு 250 இலட்சம் ரூபாய் ஆகும். அடுத்த ஆண்டில் இவற்றிற்கென அதே அளவான 250 இலட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. இந்த நிதி ஒதுக்கம், பணியின் வளர்ச்சியையொட்டி உயர்த்தப்பட வேண்டியிருக்கும். இத்திட்டங்களுக்குத் தேவைப்படுகிற தொழில் நுட்பப் பணியாளர்கள், பணிக்கு எடுக்கப்பட்டு, குறிப்பாக சிமெண்ட் தொழிற்சாலை சம்பந்தமான பணி, மிகவிரைவாக முன்னேறி வருகிறது. சிமெண்ட் தொழிற்சாலை, 1968–69-ம் ஆண்டின் இறுதியிலோ, 1969–70-ம் ஆண்டின் தொடக்கத்திலோ உற்பத்தியைத் தொடங்கும். இயந்திரக் கருவிகள் தொழிற்சாலை ஒன்றையும், துணுக்கு இரும்புத் தொழிற்சாலை ஒன்றையும் (Sponge Iron Plant), இயந்திரக் கருவி துணைப் பகுதிகள் தொழிற்சாலை (Machine Tools Accessories Plant) ஒன்றையும் ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகளையும் இக்கழகம் ஆய்வு செய்து வருகிறது. இயந்திரக் கருவிகள் திட்டத்தைப் பொறுத்தமட்டில், தொழில் உரிமம் ஒன்றை வழங்கும்படி இந்திய அரசுக்கு ஏற்கனவே வேண்டுகோள் அனுப்பப்பட்டுள்ளது. அவர்களின் ஒப்பளிப்பினை எதிர்பார்த்துக் காத்திருக்கிறோம். துணுக்கு இரும்புத் திட்டத்திற்கான தொழிற்சாலை இயந்திரங்களையும் கருவிகளையும் நமக்கு வழங்குவதற்கென, மேற்கு ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த ' லூர்கி ' (Lurgi) நிறுவனத்துடன் பேச்சு வார்த்தைகள் நடந்து வருகின்றன. இயந்திரக் கருவித் துணைப் பகுதிகள் தொழிற்சாலையை நிறுவுவதற்கு, பெங்களூரிலுள்ள



இந்துஸ்தான் இயந்திரக் கருவிகள் தொழிற்சாலையினர், தமிழ்நாடு தொழில் நிதிக் கழகத்தின் அறிவுரையாளர்களாக (Consultants) இருக்க ஒப்புக் கொண்டுள்ளனர். அவர்களின் நிதி உதவியையும், உடனுழைப்பையும் பெறுவதற்கான வாய்ப்புகள் இப்போது ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன. 1969–70-ம் ஆண்டிலிருந்து செயலுக்கு வரவிருக்கிற, புதிய நான்காம் திட்டத்தில் இடம் பெறும் வகையில், இத்திட்டங்கள் குறித்த முன்னோடிப் பணிகள் வருகிற ஆண்டில் நிறைவேற்றப்படும். சிறப்பாகக் குறிப்பிட வேண்டிய அரசுத்துறைத் திட்டங்களில், மற்றொரு திட்டம் திருமழிசையில் நிறுவப்பட்டுள்ள இயந்திர செங்கற் சூளைத் திட்டமாகும். இத் திட்டம் 1968 ஜனவரித் திங்களில், ஏறக்குறைய 70 இலட்சம் ரூபாய்ச் செலவில் செயல் படத் தொடங்கியுள்ளது. கூட்டுறவுத் துறையில் சர்க்கரை ஆலைகளை நிறுவுவது குறித்தும் ஆர்வமுடன் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படும். கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளின் பங்கு மூலதனத்தில் முதலீடு செய்வதற்காக, 1968–69-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் 35 இலட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே 15 இலட்சம் ரூபாய் அரசு முதலீடு செய்துள்ள தர்மபுரி ஆலையைத் தவிர, வட ஆர்க்காடு மாவட்டத்தில் இரண்டு ஆலைகளும், கோவை மாவட்டத்தில் ஒரு ஆலையும்—ஆக மேலும் மூன்று சர்க்கரை ஆலைகளை நிறுவ அரசு கருதுகிறது. இந்த மூன்று ஆலைகளுக்கும் உரிமங்கள் வழங்கும்படி இந்திய அரசினை அணுகியுள்ளோம்.



28. தொழிற்பேட்டைகளை நிறுவும் திட்டம் தளரா ஊக்கத்துடன் நிறைவேற்றப்பட்டு வருகிறது. கருவிகள் தயாரிக்கும் தொழில் (Instrument Industry), மின் அணுக் கருவிகள் தயாரிக்கும் தொழில் (Electronic Industry), மருந்துப் பொருள்கள் தயாரிக்கும் தொழில்—ஆகிய இத் தொழில்களுக்காக தனித் தொழிற்பேட்டைகளை நிறுவுவதற்கு நடப்பு ஆண்டில் வேலை தொடங்கப்பட்டுள்ளது. உதகமண்டலத்தில் இந்துஸ்தான் படச்சுருள்



தொழிற்சாலை சார்புள்ள தொழிற்பேட்டை ஒன்றை (Ancillary Industrial Estate) நிறுவுவதற்கும், கடலூரில் தொழிற்பேட்டை ஒன்றை நிறுவுவதற்கும், 1968–69-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நிதி வகை செய்யப்பட்டுள்ளது.

கனிவளத்தைப் பயன்படுத்துதல்.

29. தொழில் வளர்ச்சி பெருக வேண்டுமானால், நமது மாநிலத்தின் கனிச் செல்வங்களை முனைந்து ஆய்வு செய்ய வேண்டுமென்று அரசு உணர்ந்துள்ளது. எனவே ஐ.நா. வளர்ச்சித் திட்டத்தின் சிறப்பு நிதியிலிருந்து கிடைக்கும் உதவியைப் பெற்று, கனிவள மேம்பாட்டினைக் குறித்த திட்டமொன்றிற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதென்பதை அறிய இப்பேரவை பெரிதும் மகிழுமென்று நம்புகின்றேன். சேலம், வட ஆர்க்காடு, தென் ஆர்க்காடு மாவட்டங்களில், வேலூர், சேலம், விருத்தாசலம் இவற்றிற்கிடையே உள்ள பகுதிகளில், ஏறக்குறைய 14,000 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில், நவீன முறைகளில் விரிவாகவும் ஆழ்ந்தும் நிலவியல் ஆய்வு நடத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இப்பகுதி முழுவதையும் விமானத்தில் காந்த மானியையும் (Magneto meter), காமா கதிர் ஒளிப் பிரிமானியையும் (Gamma Ray Spectrometer) வைத்து நிலவியல் நிழற்படம் எடுக்கவும், நிலவியல் கூறுகளை ஆய்வு செய்யவும் கருதப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு ஏறக்குறைய 10 இலட்சம் டாலர் (ரூபாய் 75 இலட்சம்) உதவித் தொகை வழங்க, ஐ.நா. நிறுவனம் இணங்கியுள்ளது. இதில் மாநில அரசின் பங்கு ஏறக்குறைய 35 இலட்சம் ரூபாயாகும். பற்பல நிலவியல் ஆய்வுத் துறைகளிலுள்ள அயல்நாட்டு வல்லுநர்களும், அறிவுரையாளர்களும், இப்பணியை நிறைவேற்றுவதற்கும் நமது பணியாளர்கட்குப் பயிற்சி அளிக்கவும் அனுப்பப்படுவர். துளைபோடும் வைரமுனைக் கருவிகளும், இரசாயன ஆய்வுக்கூடங்களுக்கும் உலோகக்கனிகளைப் பதப்படுத்தும் ஆய்வுக்கூடங்களுக்கும் நிலவியல் ஆய்விற்கும் முக்கிய வளர்ச்சிப் பணிகட்கும் தேவைப்படும் நுண்ணிய






கருவிகளும், இத்திட்டத்தின்கீழ் வகை செய்து தரப்படும். விமான மூலம் ஆய்வு நடத்தும் பணி ஏற்கனவே தொடங்கி நடந்து வருகிறது.

சேலம் உருக்காலைத் திட்டம்.

30. நமது மாநிலக் கனிவளங்களை ஆய்வு செய்வதில் இம் முயற்சிகளை மேலும் தொடர்ந்து நடத்திக் கொண்டு போவது அவசியமாயிருப்பது ஒருபுறமிருக்க, இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்ட கனிவளங்களையும் பயன்படுத்திக்கொள்ள முடியாத நமது ஏலாமை வருத்தத்திற்குரிய ஒன்றாகும். கஞ்சமலை இரும்புக் கனியையும், நெய்வேலி பழுப்பு நிலக்கரியையும் கொண்டு சேலத்தில் உருக்காலை ஒன்றினை நிறுவுவதற்கான திட்டம், தொழில்நுட்ப வகையிலும், பொருளாதார முறையிலும், ஏற்ற ஒரு சீரிய திட்டமென்று கடந்த பத்தாண்டுகளுக்கு மேல் நடத்திய ஆய்வுகளின் வாயிலாகவும், ஆராய்ச்சிகளின் மூலமாகவும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. ஆனால், இதன் ஒவ்வொரு கட்டத்திலும், இந்திய அரசின் இணக்கமற்ற போக்கினால், இத்திட்டம் எவ்வாறு நிறைவேற்றப்படாமல் கட்டிப்போடப்பட்டுள்ளது என்பதை இப்பேரவையினர் அறிவர். நிதி வசதியின்மைதான், இத்திட்டத்திற்குத் தடையாய் நிற்கிறது என்று வாதிப்பதில் உண்மையில்லை; சற்று ஆழ்ந்து நோக்கின், இவ்வாதமும் பொருளற்ற வாதமென்பது புலனாகும். ஒரு துணைக் கண்டம் என்று சொல்லத்தக்க, விரிந்த, நமது இந்திய நாட்டில், பல்வேறு பகுதிகளில் சமநிலையில் வளர்ச்சி ஏற்பட வேண்டுமென்று, இந்திய அரசு ஓரளவிற்காவது உண்மையில் நம்பியிருந்தால், மலையொத்த பொகாரோ திட்டத்திற்கு வகை செய்துள்ள பெரும் நிதி ஒதுக்கத்தை, பொகாரோவில் நடுத்தர உருக்காலைத் திட்டம் ஒன்றையும், தென்னகத்திலே மூன்று உருக்காலைத் திட்டங்களையும் நிறுவுவதற்கு நன்கு பயன்படுத்தியிருக்கலாம். உருக்காலைகளை நிர்வகிப்பதில் காணப்படும் கடும் சிக்கல்களை, நாட்டின் வெவ்வேறான பற்பல பகுதிகளில் நடுத்தர அளவு உருக்காலைகளை அமைப்பதன் மூலம் பெரிதும் தவிர்த்திருக்கலாம். சேலம் உருக்காலையும், நாட்டின் சிறப்புக் கலப்பு உருக்குத் தேவைகளை நிறைவேற்றியிருக்கும்.

மின்சாரத் திட்டங்கள்.

31. வேளாண்மை முன்னேற்றத்திற்கும், தொழில் முன்னேற்றத்திற்கும், மின்சாரத் திட்டங்களை ஊக்கமுடன் நிறைவேற்றி வருவது இன்றியமையாததென அரசாங்கம் உணர்ந்துள்ளது. மின்சாரத் திட்டங்களுக்காக, முதற்கண் 30·60 கோடி ரூபாயாக வகை செய்யப்பட்டிருந்த நிதி ஒதுக்கம், திருத்த மதிப்பீடுகளில் 33·66 கோடி ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது. 1968–69-ம் ஆண்டுத் திட்டத்தில் 32·17 கோடி ரூபாய் ஒதுக்கப்படுவதால், திட்ட நிறைவேற்றத்தில் காணப்படும் தற்போதைய விரைவு, செம்மையாகப் பேணி வரப்படும். இந்த முதலீடும், அவ்வாண்டில் நிறைவேறி வரும் பணியின் முன்னேற்றத்தையொட்டியும், நமது நிதி நிலையையொட்டியும், மேலும் உயர்த்தப்பட வேண்டியிருக்கும். எண்ணூரில் அனல் மின் நிலையம் நிறுவும் பணி, அடுத்த ஆண்டில் மிக விறுவிறுப்பாக நடைபெறும். இதைக் கருத்திற்கொண்டு, இத் திட்டத்திற்கென 15 கோடி ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. கோதையாறு, பரம்பிக்குளம் நீர் மின்சாரத் திட்டங்களுக்கும் போதிய அளவில் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. மொத்தத்தில் அடுத்த ஆண்டிலே 235 மெகவாட் நிறுவிய மின்சாரத் திறன் கூடுதலாகக் கிட்டும். இது தவிர, நெய்வேலி அனல் மின்சார நிலையத்தில், 100 கிலோவாட் மின் உற்பத்தித் திறன் கொண்ட மற்றொரு இயந்திரப் பகுதி செயல்படத் தொடங்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இதனால், அதன் மொத்த உற்பத்தித் திறன் 500 மெகவாட்டாக உயரும். 1968-ல் சாராவதி திட்டத்திலிருந்து, 300 மில்லியன் யூனிட்டுகள் அளவிற்கு மின்சக்தியை வாங்குவதற்கும், மைசூர் மாநிலத்துடன் உடன்பாடு செய்துகொண்டிருக்கிறோம். எனவே, வருகிற ஆண்டில் நமது மாநிலத்தில் கூடுதல் மின்சாரம் தேவையென்ற குரல் எங்கிருந்து கேட்கப்பட்டாலும், தமிழ்நாடு மின்சார வாரியம், அக்குரலுக்கு மதிப்புக் கொடுத்து, அதிக மின்சாரம் வழங்கும் நிலையில் இருக்கும் என்பதிலே ஐயமில்லை. நமக்குக் கிட்டும் நிதி வசதிக்குட்பட்டு, இந்த நிலையில் கிராம மின்சார வசதித் திட்டங்களுக்கு 6 கோடி ரூபாய் மட்டுமே, நம்மால் வகை செய்ய முடிந்திருக்கிறது. 1965–66-லும், 1966–67-லும் இந்திய அரசு, கிராம மின்வசதித் திட்டங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து, திட்டத்திற்குப் புறம்பாகச் சிறப்பு உதவி அளித்துள்ளது. உற்பத்தியைப் பெருக்குவதில் இறைவைப் பாசனத் திட்டங்கள் உடனடியாகப் பலன் தருகின்றன. எனவே இதனை மத்திய அரசு உணர்ந்து, அதற்கேற்ற கூடுதல் நிதி வசதியை அளிக்க முன்வர வேண்டும்.



சாலை, சாலைப் போக்குவரத்து

32. நமது திட்டத்தில், சாலை அமைப்புகள் குறித்த பல்வேறு திட்டங்களுக்கு 160 இலட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டிருப்பதால், இத்துறையின் தற்போதைய முன்னேற்றம், தடையின்றி பேணி வரப்படுவதற்கு உதவியாக இருக்கும். இப்போது ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பிலுள்ள 300 மைல் நீளமுள்ள பேருந்துச் சாலைகளைப் பேணிவரும் பொறுப்பினை, அரசாங்கமே மேற்கொள்ளக் கருதுகின்றது; இதனால் ஊராட்சி ஒன்றியங்களுக்கு உதவி கிட்டுவதோடு, குறைந்த முக்கியத்துவம் வாய்ந்த ஏனைய சாலைகளைப் பேணிவருவதில் அவை நாட்டம் செலுத்தவும் இயலும். கடந்த ஜூன் திங்களில் அறிவிக்கப்பட்ட அரசின் கொள்கை முடிவினையொட்டி, பேருந்து வழித்தடங்களை நாட்டுடைமையாக்கும் திட்டமும், போக்குவரத்து வசதிகளைப் பெருக்கும் வகையில் அமைந்துள்ளது. அரசின் போக்குவரத்துத் துறையின் மூலதனச் செலவுகளுக்கென, 2 கோடியே 30 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. ஏனையவற்றோடு, அடுத்த ஆண்டு, குறித்துள்ள வண்ணம், 106 பேருந்து வழித்தடங்களை நாட்டுடைமையாக்குவதற்கும் இது வழிகோலும். நகராட்சி மன்றங்களின் நீண்டநாளைய வேண்டுகோளிற்கு இணங்கி, முதன்முறையாக, மாநகராட்சி மன்றம் நீங்கலான ஏனைய நகராட்சிகளில், சாலைகளைப் பேணி வருவதற்காக 7·5 இலட்சம் ரூபாய் சிறப்பு மானியம் ஒன்றை வழங்கவும் அரசு முடிவு செய்துள்ளது. சென்னை மாநகரில் சாலைகளை மேம்பாடு செய்யவும், மேம்பாலங்கள் கட்டவும்,



வருகிற ஆண்டில், மாநகராட்சிமன்றத்திற்குக் கடன்கள், மானியங்கள் வகையில் 47 இலட்சம் ரூபாய் அளவிற்குச் சிறப்பு உதவி வழங்கப்படும்.

கல்வி.

33. மத்திய, மாநில அரசுகளின் இடர்ப்பாடான நிதி நிலை காரணமாக, திட்ட ஆணைக் குழு, சமூகப் பணிகளுக்கு மிகக் குறைந்த அளவில் நிதி ஒதுக்கம் செய்யுமாறு பரிவுரை செய்திருப்பினும், இத்துறையின் வேலைத் திட்டங்களின் நியாயமான, குறைந்த அளவுத் தேவைகளுக்கு வகை செய்ய முயன்றுள்ளோம். பொறுப்பேற்கப்பட்ட செலவினம் உட்பட, 1968–69-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், ' கல்வித் ' தலைப் பின்கீழ் ஒதுக்கப்பட்டுள்ள தொகை, 56 கோடியே 28 இலட்சம் ரூபாய் ஆகும். இத்தொகை, நமது மாநில வருவாயில் 23 சதவீதமாகும். ஊராட்சி ஒன்றியங்களுக்கு, நடப்பு ஆண்டில், அகவிலைப்படிக்கான மானியம் முன்கூட்டியே வழங்கப்பட்டது போன்ற சில கூறுகளை நீக்கிப் பார்த்தால், அடுத்த ஆண்டின் கல்விக்கான செலவினத்தின் நிகர உயர்வு, ஏறக்குறைய 6 கோடி ரூபாய் அளவில் அமைவதைக் காணலாம். இத்துறைக்குரிய ஆண்டுத் திட்டத்தில், 6 முதல் 11, 11 முதல் 14, 14 முதல் 17 வயதுத் தொகுதிகளில் உள்ள மாணவர்களைப் பள்ளியில் சேர்த்துக்கொள்ளுவதற்கு ஏற்ப, மொத்தத்தில் கூடுதலாக, 7,200 ஆசிரியர்களை நியமனம் செய்வதற்கு வகை செய்யப்பட்டுள்ளது. பள்ளிகளின் வசதிகளை மேம்படுத்துவதற்கு நியாயமான தொகை ஒதுக்க வேண்டியதன் தேவையைக் கருத்திற்கொண்டு, பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கு 32 இலட்சம் ரூபாயும், அறிவியற் கருவிகளின் வகைக்காக 44 இலட்சம் ரூபாயும், அரசு ஒதுக்கியுள்ளது. தொடக்கக் கல்வி நமது மாநிலம் முழுவதிலும், இலவசமாகவும், கட்டாயமாகவும் ஏற்கெனவே அளிக்கப்பட்டு வருவதால், இத்துறையில் இப்போது அரசின் முயற்சிகள், கல்வியின் தரத்தை உயர்த்தும் பான்மையில் நெறிப்படுத்தப்படும். 1968–69-ல் 3,000 உயர்துவக்கத்தர (Higher Grade) ஆசிரியர் பதவிகள், இடைநிலைத்தர (Secondary Grade)








பதவிகளாக மாற்றப்படும். ஆசிரியர்கள் உயர்ந்த கல்வித் தகுதிகளைப்பெற்று, செவ்விய முறையில் மாணவர்களுக்குக் கல்வி புகட்ட, அவர்களுக்கு ஓரளவுக்கு ஊக்கமளித்திட வேண்டி, உயர்ந்த கல்வித் தகுதிகளைப் பெறுகின்ற ஆசிரியர்களுக்கு இரண்டு சம்பள உயர்வுகளை முன்கூட்டி அளிக்கும் ஒரு திட்டத்திற்கு அரசு ஏற்பளித்திருக்கிறது என்பதையும் அறிய இம்மாமன்றம் உவகை எய்துமென நினைக்கின்றேன். உயர்நிலைக் கல்வித் துறை பெரிதும் விரிவடைந்திருப்பதன் காரணமாக, கல்லூரிகளில் சேருவதற்கு மாணவர்கள் குவிந்தவண்ணமிருக்கின்றனர். இந்த நெருக்கடியைத் தீர்ப்பதற்காக, புதிய கல்லூரிகளைத் திறப்பதன் மூலமாகவும், ஏற்கனவேயுள்ள கல்லூரிகளில் மாணவர்களின் எண்ணிக்கையைக் கூட்டுவதன் மூலமாகவும், அரசு முயற்சி எடுத்திருக்கிறது. புதிய கலைக் கல்லூரிகளைத் திறப்பதற்கு, பொது மக்கள் வழங்க வேண்டிய நன்கொடைத் தொகை பற்றி, அரசு விதித்துள்ள விதிமுறைகள் நிறைவேற்றப்படுகின்ற இடங்களில், 6 புதிய கலைக் கல்லூரிகளைத் திறப்பதற்கு, 1968–69-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வகை செய்யப்பட்டுள்ளது. திருவண்ணாமலை, திண்டுக்கல், செய்யாறு ஆகிய இடங்களில் உள்ள கல்லூரிகளில், பட்டப் படிப்பு வகுப்புகளைத் திறப்பதற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. நகரங்களில் புகுமுக வகுப்புகளில் சேர விழையும் மாணவர்களின் எண்ணிக்கை, அவ்வகுப்புக்களில் கிட்டும் இடங்களின் எண்ணிக்கையைவிட மிக அதிகமாயுள்ளது என்றும், 'முறை ஏற்பாட்டைச்' (Shift system) செயல்படுத்தினால், மேலும் ஏராளமான மாணவர்களைச் சேர்த்துக்கொள்ள வசதியாயிருக்கும் என்றும், நடைமுறை வாயிலாகத் தெரிய வருகிறது. ஏற்கனவே கல்லூரிகளிலுள்ள கட்டிட வசதிகளையும், ஆய்வுக்கூட வசதிகளையும் முழு அளவிற் பயன்படுத்திக் கொள்ள மேலும் இது வழிகோலும். நமது மாநிலத்தில் உள்ள பல்கலைக் கழகங்களைக் கலந்து, கல்லூரிகளில் இம் முறை ஏற்பாட்டினைச் செயல்படுத்துவதைப்பற்றி அரசாங்கம் ஆய்வு செய்யக் கருதுகிறது. மதுரைப்

பல்கலைக் கழகத்துக்கான கட்டிட வேலையைத் தொடங்குவதென்றும் முடிவு செய்து, அதற்கென வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் பத்து இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. கலைக் கல்லூரிகளை விரிவுபடுத்துவதற்கு வேண்டிய, போதிய அளவு நிதி வசதிகளை வகை செய்யும் அதே வேளையில், மாணவர்களைத் தொழில் நுட்பக் கல்வியின்பால் திருப்பும் வண்ணம், அவர்களை ஊக்கப்படுத்த வேண்டியதன் தேவையையும் நாம் கருத்தில் இருத்தியுள்ளோம். கடந்த ஆண்டில், புகுமுகக் கல்லூரி வகுப்பு மாணவர்களுக்கு, சில வருவாய் வரம்புகளுக்குட்பட்டு, கல்லூரிச் சம்பளம் செலுத்துவதனின்றும் விலக்களிப்பது குறித்து நாம் எடுத்த முடிவிற்கிணங்க, புகுமுகக் கல்லூரி வகுப்பிற்கு நிகரென்று பல்கலைக் கழகத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள பல்தொழிற் பள்ளிகளின் புகுமுகத் தொழில் நுட்ப வகுப்புகளுக்கும் (Pre-Technical Course), இச் சலுகையை விரிவுபடுத்த வேண்டிய தேவை உணரப்பட்டுள்ளது. பல்தொழிற் பள்ளிகளில், புகுமுகக் கல்லூரி வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்பட்டிருப்பதைப் போலவே, அதே வருவாய் வரம்புகளுக்குட்பட்டு, புகுமுகத் தொழில் நுட்ப வகுப்பு மாணவர்களுக்கும் சம்பளம் செலுத்துவதினின்று விலக்களிக்க அரசு முடிவு செய்துள்ளதென்பதை அறிய, இம் மாமன்றம் களிப்படையும் என நம்புகின்றேன்.

**பின்தங்கிய வகுப்பினர் நலன்.**

34. பின்தங்கிய வகுப்பினர்களின் நலன், மாநில அரசின் நாட்டத்தில் சிறப்பாகத் தொடர்ந்து இருந்து வருகின்றது. 1968–69-ம் ஆண்டுத் திட்டத்தில், இத் தலைப்பின்கீழ் திட்ட ஆணைக் குழு 89 இலட்சம் ரூபாய் மட்டுமே ஒதுக்குமாறு பரிவுரை செய்திருப்பினும், இத் தலைப்பின்கீழ் உள்ள வேலைத் திட்டங்களின் குறைந்த அளவுத் தேவைகளை நிறைவேற்றும்பொருட்டு, அரசு 173 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கும் வகையில், திட்டம் ஒன்றினை வகுத்துள்ளது. பொறுப்பேற்றுக் கொண்ட செலவினத்தைச் சேர்த்து, அரிசனங்கள், பின்தங்கிய வகுப்பினர்கள் இவர்களின் நலனுக்காக, 6 கோடியே 51 இலட்சம் ரூபாய் அளவில், 1968–69-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. உதவிச் சம்பளங்கள் வழங்குதல், வீட்டு மனைகளைக் கையகப்படுத்துதல் போன்ற தற்போதையத் திட்டங்களைத் தொடர்ந்து செயல்படுத்துவதைத் தவிர, அரிசனங்கள் புதிய தொழில்களிலும், வாணிபத்திலும் ஈடுபடுவதற்குத் துணையாக, அவர்களுக்குக் கடன்கள் வழங்கும் ஒரு திட்டத்தை வருகிற ஆண்டிலிருந்து அரசு தொடங்கி வைக்கக் கருதுகிறது. இதற்கென ஒரு இலட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் சாதனைகளை யொட்டி, இனி வருகிற ஆண்டுகளில் இது மேலும் விரிவுபடுத்தப்படும். அரிசன நலத்துறை நடத்தும் தொடக்கப் பள்ளிகளில் பயிலும் எல்லாச் சிறுவர்களுக்கும், 3·8 இலட்சம் ரூபாய்ச் செலவில், ஒரு தொகுதி சீருடை வழங்க வேண்டும் என்றும், அரிசன மாணவர் விடுதிகளில், ஒவ்வொரு மாணவருக்கும் உரிய விடுதிச் செலவை உயர்த்தித் தருவதற்காக 4·3 இலட்சம் ரூபாய் கூடுதல் செலவு செய்வதற்கும், இப்போது அரசாங்கம் முடிவு செய்துள்ளது.





**இலங்கை அகதிகள்.**

35. விரைவில் பெருமளவில் தாயகம் திரும்பவிருக்கிற இலங்கை அகதிகள், இவ்வரசின் சிறப்பான நாட்டத்தை ஈர்க்கும் மற்றொரு மக்கட் தொகுதியினராவர். இந்திய அரசு, இலங்கை அரசுடன் செய்துகொண்ட ஒப்பந்தப்படி, அடுத்த 15 ஆண்டுகளில், இந்திய நாட்டைச் சேர்ந்த 5 லட்சத்து 25 ஆயிரம் பேர் நம் நாட்டிற்குத் திருப்பி அனுப்பப்படுவார்கள் என்று எதிர்பார்க்கிறோம். இவர்களில் ஏறக்குறைய 10,000 குடும்பங்கள், 1968–69-ல் இங்கு வந்து சேருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதால், காலங் கடத்தாது இவர்களின் நலனிற்கும், மறுவாழ்விற்குமுரிய திட்டங்களைச் செவ்வனே தொடங்கி வைக்க வேண்டியுள்ளது. இவர்களில் பெரும்பாலோர் தோட்டத் தொழிலாளர்களாய் இருப்பதால், முக்கியமாக தேயிலை, காப்பி, ரப்பர் தோட்டங்களிலும், நிலக் குடியேற்றத் திட்டங்களிலும்தான் இம்மக்களுக்கு மறுவாழ்வு அளிக்க வேண்டுமென்று அரசு கருதியுள்ளது.




இரு நாடுகளுக்குமிடையே ஏற்பட்ட ஒப்பந்தத்திற்கு இணங்க, இந்த அகதிகளுக்கு மறு வாழ்வு அளிக்க வேண்டியுள்ளதால், 'இதனை நாம், நாட்டுக்குப் பொதுவான சிக்கலாகவே அணுக வேண்டும். இந்தக் கருத்தில்தான், இந்திய அரசு, திட்டத்திற்கென்று நமக்களிக்கிற இயல்பான உதவிக்குப் புறம்பாக, இவ்வகதிகளின் மறு வாழ்விற்கும், நலனிற்கும் தேவைப்படும் நிதிகளை முற்றிலும் வகை செய்தாக வேண்டும் என்று மத்திய அரசைக் கேட்டோம். கடந்த சில திங்கள்களுக்குமுன், தென்னகத்திலுள்ள நான்கு மாநிலங்களுடன் கலந்து இந்திய அரசு சென்னையில் நடத்திய விவாதங்களின்போது, நமது கருத்தை இந்திய அரசு ஏற்றுக்கொண்டதென்பதை, மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன். நீலகிரி மாவட்டத்தில், 3,750 ஏக்கர் பரப்பளவில் மொத்தம் 3 கோடியே 75 இலட்சம் ரூபாய்ச் செலவில், தேயிலைத் தோட்டங்களை அமைப்பதற்கான ஒரு திட்டத்தை நாம் ஏற்கனவே இந்திய அரசின் இசைவிற்கு அனுப்பியுள்ளோம். வட ஆர்க்காடு மாவட்டத்தில், பூசிமலைக்குப்பத்தில் 330 ஏக்கர் பரப்பளவிலே, ஏறக்குறைய 10 லட்சம் ரூபாய்ச் செலவில் இந்த அகதிகளைக் குடியேற்றுவதற்கான ஒரு திட்டத்தையும் நாம் வகுத்துள்ளோம். அகதிகளின் திறமைக்கேற்ப, தொழில்களில் அவர்கள் ஈடுபடுவதற்கு வசதியாக, அவர்களுக்குக் கடன் வழங்கும் திட்டங்களும் திட்டப்பட்டுள்ளன. மேலும், பற்பல திட்டங்களும் பல நிலைகளில் உருவாக்கப்பட்டு வருகின்றன. இத்திட்டங்கள் அனைத்திற்கும் இந்திய அரசிடமிருந்து சிறப்புதவி பெற்று, அவற்றை முனைந்து செயல்படுத்தவில்லையென்றால், இவ்வகதிகளின் வருகையால் நமது மாநிலத்திலுள்ள வேலையின்மைச் சிக்கல் மேலும் சீர்கெடும் என்ற எனது கருத்தினை, இம்மாமன்றம் ஏற்றுக்கொள்ளுமென நம்புகிறேன்.

**பொதுச் சுகாதாரம்.**

36. மருத்துவம், சுகாதாரம், குடும்பக் கட்டுப்பாடு ஆகிய இந்தத் திட்டங்களின்கீழும், திட்ட ஆணைக் குழு 2 கோடியே 20 இலட்சம் ரூபாய் மட்டுமே நிதி ஒதுக்கும்படி பரிந்துரைத்துள்ளது. எனினும், இத்துறையில்



3 கோடியே 69 இலட்சம் ரூபாய் அளவில் செலவு செய்ய முற்பட்டிருக்கிறோம். இத்துறையில் திட்ட வேலைகளுக்கு உரிய நிதி ஒதுக்கம், நடப்பாண்டில் 3 கோடியே 38 இலட்சம் ரூபாய் மட்டுமேயாகும் என்பதை நினைவிற்கொண்டால், இத்துறையில் நியாயமான அளவிற்கு வளர்ச்சி ஏற்பட உறுதி செய்யப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் உணர்வார்களென நம்புகிறேன். செங்கற்பட்டு, பாளையங்கோட்டை, கோயம்புத்தூர் ஆகிய இடங்களில் வளர்ச்சி நிலையிலுள்ள மூன்று புதிய மருத்துவக் கல்லூரிகளுக்குக் கூடுதல் கட்டிடங்களைக் கட்டுவதும், கல்லூரித் தேவைப் பொருட்களுக்கு வகை செய்வதும் நமது நிதி வசதிகளின் முதற்பொறுப்பாக அமைய வேண்டுமென்பது வெளிப்படை, ஏனெனில், மருத்துவப் பணியாளர்களின் பயிற்சிக்கான வசதிகளை நாம் எந்த அளவில் வளர்த்துப் பெருக்கி வருகிறோமோ, அந்த அளவுதான் வருகிற ஆண்டுகளில் கிராமப் பகுதிகள் எங்கணும்மருத்துவ வசதிகளைப் பெருக்குவதற்கான திட்டத்தில் வெற்றி காண இயலும். எனவேதான், இம் மூன்று மருத்துவக் கல்லூரிகளுக்குமாகச் சேர்ந்து 77 இலட்சம் ரூபாய் வகை செய்யப்பட்டுள்ளது. வரவு-செலவுத் திட்டக் குறிப்பில் கொடுக்கப்பட்டுள்ள இத்துறை சம்பந்தமான இரண்டாம் பகுதித் திட்டங்களின் நீண்ட பட்டியலிலிருந்து, இம் மாநிலத்திலுள்ள கல்லூரிகளோடிணைந்த மருத்துவ மனைகள், மற்ற மருத்துவ மனைகள் போன்ற பற்பல மருத்துவ மனைகளில், கூடுதல் பணியாளர்கள், கருவிகள் இவற்றின் தேவைகளை ஒல்லும் வகையில் ஏற்றுக்கொள்ள நாங்கள் முயன்றுள்ளோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் காணலாம். திட்டத்திற்கான இயல்பான உதவிக்குப் புறம்பாக, 1 கோடியே 37 இலட்ச ரூபாய் மத்திய அரசு வழங்கும் உதவியின் துணை கொண்டு, மொத்தம் 1 கோடியே 80 இலட்சம் ரூபாய் அளவில் நிதி ஒதுக்கம் செய்வதன் மூலம், குடும்பக் கட்டுப்பாடு திட்டங்கள் செயல்படும் விரைவு குன்றாது இருக்க நாம் முயற்சி எடுத்துள்ளோம். சித்த மருத்துவ முறையை வளர்ப்பது





மிகவும் சிறப்புடைத்தான ஒன்று என்று அரசு கருது கின்றது. அரும்பாக்கத்தில் நூறு படுக்கைகள் கொண்ட நாட்டு மருத்துவ மனையொன்றைக் கட்டுவதற்கு அண்மையில் அனுமதி வழங்கப்பட்டது. இதற் கான கட்டிடங்களைக் கட்டும் பணி விரைவில் மேற் கொள்ளப்படும். மாவட்டத் தலைமையிட மருத்துவ மனைகள் அனைத்திலும் சித்த மருத்துவப் பிரிவுகளைத் திறப்பதற்கான செயற்குறிப்புகளும் அரசாங்கத்தின் ஆய்விலுள்ளன. பெரியம்மை, மலேரியா, யானைக்கால் போன்ற பிணிகளை அறவே ஒழிப்பதற்கான திட்டங்களைத் தொடர்ந்து நடத்துவதன் வாயிலாக, நோய்த் தடுப்புக் கூறுகளைப் பற்றிப் போதிய நாட்டம் செலுத்தப்படும். உலக சுகாதார நிறுவனத்தின் உடனுழைப்புடன், காஞ்சிபுரத்தில் புற்று நோய்க் கட்டுப்பாடு முன்னோடித் திட்டம் ஒன்றையும் விரைவில் தொடங்க அரசாங்கம் கருதுகின்றது. இந்தத் திட்டத்திற்குத் தேவைப்படும் கட்டிடங்களுக்கும் கருவிகளுக்கும் ஆகும் செலவை, உதவித் தொகையாக வழங்க, நார்வே அரசு அன்புடன் முன் வந்துள்ளது. இத்திட்டத்திற்கு விரைவில் இறுதி வடிவம் கொடுத்து இதனைச் செயல்படுத்த முற்படுவோம்.

நீர்வழங்கல், வடிகால் திட்டங்கள்.

37. சென்னை மாநகராட்சியின் நீர் வழங்கல், வடிகால் திட்டங்களை நிறைவேற்றும் வேகம், நடப்பு ஆண்டில் உள்ள அளவில் பேணி வரப்படும். ஆயினும், இத்திட்டங்களுக்காகும் செலவின் பெரும் பகுதியை மாநகராட்சி மன்றம், ஏனைய பெரிய மாநகராட்சி மன்றங்கள் பொதுக்கடன் எழுப்பி நிறை வேற்றி வருவதைப் போலவே, நிறைவேற்றி வர இயல வேண்டுமென்று அரசு கருதுகின்றது. அடுத்த ஆண்டில் நீர் வழங்கல், வடிகால் திட்டங்களுக்கு ஆகும் செலவில், 75 இலட்சம் ரூபாய் அளவிற்காவது மாநகராட்சி மன்றம் ஏற்க முடியும் என்கிற எண்ணத்தில், மாநகராட்சி மன்றத்தின் நீர் வழங்கல், வடிகால் திட்டங்களுக்காக, 1968–69-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு களில், அதற்குக் கடன் உதவியும், மானிய உதவியும்



அளிப்பதற்கென 60 இலட்சம் ரூபாய் மட்டுமே ஒதுக்கப் பட்டுள்ளது. சென்னை மாநகரின் நீர் தட்டுப்பாட்டிற்கு நிலையான தீர்வு காண்பதற்காக, 'காவிரி நீரை வீராணத் திலிருந்து கொண்டுவருவதற்கான அரசாங்கத்தின் செயற்குறிப்பைப் பற்றி, இம் மாமன்றம் முன்னரே அறியும். இந்தத் திட்டத்திற்கான விரிவான மதிப் பீடுகள், இப்போது தயாரிக்கப்பட்டுள்ளன. 5 கோடி ரூபாய்க்கு மேற்பட்ட திட்டங்களை நிறைவேற்றுவதற்கு, இந்திய அரசின் தொழில் நுட்ப இசைவினையும், நிதி பற்றிய இசைவினையும் முன்கூட்டியே பெறுதல் வேண்டும் என்ற மத்திய அரசின் நெறிமுறைக்கிணங்க, இந்த மதிப் பீடுகள், இந்திய அரசின் முறையான இசைவினைப் பெறு வதற்காக அனுப்பப்பட்டுள்ளன. வருகிற ஆண்டில் இத்திட்டத்தை நாம் ஆர்வமுடன் தொடங்கும் வகையில், இத்திட்டத்திற்கான இசைவினை, இந்திய அரசு விரைவில் வழங்குமென்று நம்புகிறோம். இத்திட்டத்திற்காக, இந்நிலையில் 25 இலட்சம் ரூபாய் வகை செய்யப் பட்டுள்ளது. 1969-70-ல் செயல்படவிருக்கிற புதிய நான்காம் திட்டத்தில், இதை நிறைவேற்றி முடிக்க மிக முதன்மை இடம் அளிக்கப்படும். 1968-69-ம் ஆண்டுத் திட்டத்தில், ஏனைய நகரங்களுக்கான நீர்வழங்கல், வடிகால் திட்டங்களுக்கு வகை செய்யப்பட்டுள்ள 125 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கத்தை, நடப்பு ஆண்டின் 155 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது சிறியதாகத் தோன்றினாலும், மாநகராட்சி மன்றத்தின் நீர்வழங்கும் திட்டங்கள் உட்பட, 120 இலட்சம் ரூபாய் முதலீடு செய்வதற்கான திட்டங்களை மட்டுமே திட்ட ஆணைக்குழு ஏற்றுக் கொண்டுள்ளது என்பதை, உங்கள் நினைவிற்குக் கொண்டு வர விரும்புகின்றேன். மிக முன்னேறிய நிலையில் உள்ள திட்டங்களை நிறைவு செய்தால், நெடுங்காலமாக சுணங்கிக் கிடந்த அத்திட்டங்கள் விரைவில் நிறை வேற்றப்பட்டு, அவற்றின் பலன்களை மக்கள் துய்க்க முடியும் என்கிற கருத்தில், அத் திட்டங்களை நிறை வேற்றி முடிப்பதில் போதிய நாட்டம் செலுத்தப் படும். ஆவடி, வந்தவாசி, திண்டுக்கல், ஏர்க்காடு,






நாமக்கல், வில்லிவாக்கம் ஆகிய இடங்களில் நீர் வழங்கல் குறித்த திட்டங்களும், மன்னார்குடி, தூத்துக்குடி ஆகிய இடங்களில் வடிகால் திட்டங்களும் அடுத்த நிதி ஆண்டில் நிறைவேறிவிடும் என்று தெரிகிறது.

ஆண்டுத் திட்டம், 1968-69.

38. எனவே, 1968-69-ம் ஆண்டில் செயல்படுத்துவதற்காக, 79 கோடியே 68 இலட்ச ரூபாய் அளவில் திட்டம் ஒன்றை வகுத்துள்ளோம். நடப்பு ஆண்டில் நாம் எதிர்பார்க்கக்கூடிய சாதனையுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, இத்திட்டம் பார்வைக்கு சிறியதாகத் தோன்றினுலும், நடப்பு ஆண்டிலும், அதற்கு அடுத்த ஆண்டிலும் வளர்ச்சித் திட்டங்களின் அளவுகளை சீர்தூக்கிப் பார்ப்பதற்கு, இதற்குமுன் நான் குறிப்பிட்டுள்ளவாறு, நிறுவனங்களிடமிருந்து பெறுகிற கடன் வசதிகளைக் கொண்டு, திட்டத்திற்குப் புறம்பாக வேளாண்மை வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி வசதி வழங்கக் கருதியிருப்பதையும் கருத்திற் கொள்ள வேண்டும். முறைப்படி கணக்கில் எடுத்துக்கொள்ளப் பட வேண்டிய இந்த நிதி வசதிகளும் சேர்க்கப்பட்டால், வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற்றப்படும் விரைவு தணியாமல், ஏறக்குறைய நடப்பு ஆண்டில் இருந்த அளவில் காக்கப்பட்டுவருமென்பதை இம் மாமன்றத்தினர் உணர்வார்களென நம்புகின்றேன். திட்டத்தின் வடிவத்தை முடிவுசெய்வதில், மத்திய உதவி எப்போதுமே முதன்மையான பங்கு வகிக்கிறது என்பதையும் இம் மாமன்றம் அறியும். உதவித் தொகையில் உரிய பங்கு நமக்கு வழங்கப்படாததும், 1966-67-லும் 1967-68-லும் ஒப்புக்கொண்ட உதவித் தொகையும் விகிதப்படி வழங்கப்படாததும், நமக்கு மனக்குறை அளித்துள்ளன என்பதை எனது உரையில் முன்னரே நான் குறிப்பிட்டுள்ளேன். இந்த இரண்டாண்டுகளில் ஏற்பட்ட குறைவினை முழுமையாக நிறைவு செய்வதுடன், பல பாசனத் திட்டங்களும், மின்சாரத் திட்டங்களும் இப்போது மிக வளர்ச்சி பெற்ற நிலையில் நிறைவேற்றப்பட்டு வருகின்றன என்பதைக் கருதி, தன்னால் இயன்றால், மேலும் அதிக உதவி அளிக்கும் ஏற்பாட்டிற்கு வகை செய்யுமளவிற்காவது, திட்ட ஆணைக் குழு செயல்பட வேண்டும். திட்டத்திற்காக 47·90 கோடி ரூபாய் மத்திய உதவி கிடைக்கும் என்ற நிலையில், நமது வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளைத் தயாரித்துள்ளோம். மத்திய அரசு 42 கோடியே 90 இலட்ச ரூபாயளவிற்கே உதவி தருவதாக உறுதியாக அறிவித்திருந்தபோதிலும், மேற்குறிப்பிட்ட அளவில் உதவி பெற நமக்கு உரிமையுண்டு என்றும் நாம் கருதுகிறோம்.

39. தற்போதைய வரவு-செலவுத் திட்டச் செயற் குறிப்புகளில், பொருத்தமான சில அடிப்படைப் புள்ளி விவரங்களை இப்போது ஆராய விரும்புகின்றேன். கடந்த ஜூன் திங்களில் நான் இப்பேரவையின் முன் வைத்த, 1967-68-ம் ஆண்டுக்குரிய வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில், நடைமுறைக் கணக்கில் 1 கோடியே 12 இலட்சம் ரூபாய் துண்டு விழும் என்று எதிர்பார்ப்பதாக இயம்பினேன். உணவு தானிய விற்பனையின் மீது வழங்கப்படும் உதவித் தொகைக்கான நிதி ஒதுக்கம், அப்போது "124—உணவுத் தானியங்களில் அரசு வாணிபம்" என்கிற மூலதனத் தலைப்பின்கீழ் வகை செய்யப்பட்டிருந்தது. அது, இப்போது வரவு-செலவுத் திட்ட மரபுகளைப் பின்பற்றி, நடைமுறைக் கணக்குக்கு மாற்றி எழுதப்பட்டுள்ளது. இதனால், நடைமுறைக் கணக்கில் செலவினம் 5 கோடியே 10 இலட்சம் ரூபாய் அளவிற்கு உயர்ந்துள்ளது. இவ்வாறு இருப்பினும், நடப்பு ஆண்டில் நடைமுறை வரவினங்கள் 227 கோடியே 95 இலட்சம் ரூபாயாகவும், நடைமுறைச் செலவினங்கள் 228 கோடியே 40 இலட்சம் ரூபாயாகவும் நிற்கின்றன என்பதையும், இதன் காரணமாக நடைமுறைக் கணக்கில் 45 இலட்சம் ரூபாய் மட்டுமே துண்டு விழுகிறது என்பதையும் அறிய, இப்பேரவையினர் களிப்படைவார்கள் என்று நினைக்கின்றேன். கடந்த ஆண்டில், இம் மாமன்றத்தின் முன்னர் வைக்கப்பட்ட, கூடுதல் வரி விதிப்புச் செயற் குறிப்புகளின் மூலம் கிட்டுமென நாம்

1967-68 திருத்த மதிப்பீடுகள்.









மொத்தமாகக் கணக்கில் எடுத்துக்கொண்ட 5 கோடியே 25 இலட்சம் ரூபாய், இப்போது வண்டிகளின் மீதான வரிகள், விற்பனை வரி, ஆயத் தீர்வைகள் போன்ற பொருத்தமான தலைப்புகளின்கீழ் பிரித்துக் காட்டப் பட்டுள்ளன. அவற்றிலிருந்து கூடுதல் வரி விதிப்பின் மூலம் கிடைக்கும் என்று நாம் எதிர்பார்த்த வர வினங்கள், பெரும்பாலும் எய்தப்பட்டிருப்பதைக் காணலாம். வருமான வரியில் நமது பங்குத் தொகை 2 கோடியே 63 இலட்சம் ரூபாயளவிற்கும், சொத்துரிமை வரியின் (Estate Duty) கீழ் 44 இலட்சம் ரூபாயளவிற்கும் வரவினம் பெருகியுள்ளது. முந்திய ஆண்டுகளுக்குரிய நிலுவைத் தொகைகள் செலுத்தப்பட்டமையால், பெரும்பாலும் இந்த வருவாய் உயர்வு ஏற்பட்டு உள்ளது. ஆயினும், மத்திய ஆயத் தீர்வையின்கீழ் 1 கோடியே 39 இலட்சம் ரூபாய்க்கு வரவினம் குறைந்ததன்மூலம், இது ஓரளவுக்குச் சரிக்கட்டப்பட்டுள்ளது. இந்த மூன்று வரவினங்களையும் ஒன்றுக எடுத்துக்கொண்டு, வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும் போது, திருத்த மதிப்பீடுகளில், மத்திய வரிகளில் நமது பங்கின்கீழ் மொத்தத்தில் 1 கோடியே 68 இலட்ச ரூபாய் அளவில் வருவாய் உயர்ந்துள்ளது. நடப்பு ஆண்டுத் திட்டத்திற்குரிய தனது உதவித் தொகையான 38 கோடி ரூபாயை உயர்த்த மத்திய அரசு ஒப்புக்கொள்ள வில்லை யெனினும், நாம் மதிப்பீடு செய்ததைவிட அவ் வுதவியின்கண் அடங்கிய மானியத் தொகை உயர்ந்துள்ள தால், நடைமுறை வரவினம் 1 கோடியே 45 இலட்ச ரூபாயளவில் மேம்பாடு அடைந்திருக்கிறது. வரியின்பாற் படாத வரவினங்களிலும் (non-tax revenues) குறிப்பாக, அரசினர் கடன்கள் மீதான வட்டியின் கீழும், வரவினம் உயர்ந்திருக்கிறது.

40. முந்திய ஆண்டுகளைப் போலவே, திருத்த மதிப் பீடுகள் தயாரிக்கப்படும்போது, நமது செலவினங்கள் முதற்கண் வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் வகை செய்திருந்த செலவினங்களைக் காட்டிலும் உயர்ந் துள்ளன. திருத்த மதிப்பீடுகளில் காணும் இச் செலவின உயர்வு, சில நாட்களுக்கு முன் இப்பேரவையின் முன் வைக்கப்பட்ட முதல் துணை மதிப்பீடுகளில் ஏற் கனவே கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. உணவு உதவித் தொகையான 5 கோடியே 10 இலட்சம் ரூபாயை, நடைமுறைக் கணக்கிற்கு மாற்றப்பட்டதனுல் பெரும் உயர்வு ஏற்பட்டுள்ள வழக்க மீறிய செலவுகளின் (Extraordinary Charges) கீழ் 5 கோடியே 46 இலட்சமும், காவல் துறையின்கீழ் 149 இலட்சமும், கல்பாக்கத்தில் அணுமின் நிலையத்திற்குத் தேவைப்படும் நிலங்களைக் கையகப்படுத்தியதற்கு 23 இலட்சம் ரூபாய் செலவினம் உயர்ந்ததன் காரணமாக உயர்ந்துள்ள பொது நிர்வாகத்தின்கீழ் 46 இலட்சமும், மருத்துவத்தின்கீழ் 62 இலட்சமுமாக, செலவின உயர்வுகள் முக்கியமாக ஏற் பட்டுள்ளன. கல்வி, சமுதாய வளர்ச்சி போன்ற சில தலைப்புக்களின்கீழ் வேலைத் திட்டங்களுக்கு, திட்டஆணைக் குழு மிகக் குறைந்த அளவில் நிதி ஒதுக்கம் செய்ததை யொட்டி, வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்திருந்த செலவினத்தைக் காட்டிலும் ஓரளவு குறைந்த அளவில் செலவினத்தை நாம் நிறுத்த வேண்டியிருந்தது. நடை முறைக் கணக்கில் ஏற்பட்ட ஏனைய முக்கியமான செல வின உயர்வுகளும், பெரும்பாலும் வளர்ச்சித் தலைப்புக் களின் கீழேயே ஏற்பட்டுள்ளன.




41. மூலதனக் கணக்கில் ஏற்பட்ட செலவினங்களை யெடுத்துக்கொண்டால், மத்திய நில அடைமான வங்கி யின் கடன் ஈட்டுறுதி ஆவணங்களில் 134 இலட்ச ரூபாயும், மணலியில் பாறை எண்ணெய்த் தூய்மைத் தொழிற் சாலைக்கு நீர் வழங்குவதற்கான திட்டத்திற்கு 40 இலட் சம் ரூபாயும், மண்டபத்தில் இலங்கை அரசாங்கத்திற்குச் சொந்தமான கட்டிடங்களை வாங்குவதற்கு 19 இலட்சம் ரூபாயும் முதலீடு செய்வதற்கு இப்போது வகை செய் துள்ளோம். சிறு பாசன வேலைகளுக்கான முதலீட்டை யும் 21 இலட்சம் ரூபாய் அளவில் உயர்த்தியிருக்கிறேம். ‘கடன்கள்’, ‘முன்பணத் தொகை’ களின்கீழ் குடியான வர்களுக்கு வழங்கப்படும் கடன்கள் (19 இலட்ச ரூபாய்),

மும்முர உரமிடும் திட்டத்திற்கான கடன்கள் (50 இலட்ச ரூபாய்), தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கப் படும் கடன்கள் (377 இலட்ச ரூபாய்) ஆகிய தலைப்புக் களின்கீழ், முதலீடுகள் குறிப்பாக உயர்த்தப்பட்டுள்ளன. மூலதன, கடன் கணக்குகளில் ஏற்பட்டுள்ள இச் செல வின உயர்வுகள், 'நிதியிடாக் கடன்-வைப்புத் தொகை' (Unfunded Debt-Deposits) தலைப்புக்களில் உயர்வு காணப்பட்டதால், தேவைக்கு மேலாகவே சரிக்கட்டப் பட்டன. உரவகை வாணிபங்களுக்குக் கடனுதவி அளிப்பதற்காக இந்திய அரசிடமிருந்து பெறப்படும் கடன்களைப் பொறுத்தவரையில், தற்காலிகமாக ஓரளவுக்கு மேம்பாடு ஏற்பட்டது. திட்டத்திற்காக மத்திய அரசிடமிருந்து பெறுவோம் என்று, நாம் முதற் கண் எதிர்பார்த்திருந்த கூடுதல் உதவித் தொகை கிட்டாமற் போனாலும், 'வைப்புத் தொகை'-'கடன்' தலைப்புக்களின்கீழ் ஏற்பட்ட இந்த மேம்பாடுகளின் காரணமாக, முதற்கண் வரவு-செலவுத் திட்டத்தில் வகை செய்யப்பட்டிருந்த 85·28 கோடி ரூபாய் அளவைவிட உயர்ந்து, இப்போது 88·10 கோடி ரூபாய் அளவில் வந்துள்ள திட்டத்திற்கு நிதி வகை செய்யவும், அதே நேரத்தில் முன்பு நாம் எதிர்பார்த்த 495 இலட்சம் ரூபாய் அளவிற்கு மாறாக, ரிசர்வ் வங்கியில் அனுமதி பெற்ற வழிவகை முன்பண வகையில், 295 இலட்சம் ரூபாய் மட்டுமே நிலுவையாக உள்ள நிலையில், இந்த ஆண்டுக் கணக்கினை முடிக்கவும் நம்மால் இயன்றது. இன்றைய நமது மதிப்பீடுகளின்படி, இம் மாநிலம், இந்த நிதி ஆண்டின் இறுதியில் இந்திய ரிசர்வ் வங்கியிடம் அதிகப் பற்று வாங்கும் நிலையில் இராது என்பதையறிய இம் மாமன்றம் இறும்பூதெய்துமென்று நம்புகின்றேன்.

1968-69 வரவு-செலவுத் திட்டம்.

42. 1968–69-ம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத் தில், வண்டிகள் வரி, விற்பனை வரி, மின்சார வரிகள் போன்ற நீட்சித் திறனுள்ள வருவாய் வழிகள் அனைத்தின் மீதும் இயல்பான வளர்ச்சிக்கு வகை செய்த பின்னர், நடைமுறைக் கணக்கில், நமது வரவினம் 248·28 கோடி ரூபாய் என்றும், செலவினம் 247·54 கோடி ரூபாய் என்றும், இதனால் 74 இலட்சம் ரூபாய் உபரி









ஏற்படும் என்றும் மதிப்பிடப்படுகின்றது. உணவு தானிய விற்பனையின்மீது உதவித் தொகை வழங்கும் திட்டம் இப்போது செயல்பட்டு வருகின்ற பகுதிகளில், அந்த உதவித் தொகைக்காக, 7 கோடியே 24 இலட்சம் ரூபாய்க்கு வகை செய்த பின்னரும், இந்த உபரி கிட்டி யுள்ளது. நகர ஈட்டுப்படி வழங்கும் திட்டத்தை, சென்னை மாநகரைச் சுற்றியுள்ள பகுதிகளுக்கும், மானியம் பெறும் பள்ளி ஆசிரியர்களுக்கும், மதுரை நகரத்திற்கும் இப் போது விரிவுபடுத்தியுள்ளதால், 40 இலட்சம் ரூபாய் கூடு தல் செலவினத்தையும், முன்பே நகர ஈட்டுப்படியின்கீழ் அளிக்கப்பட்டுள்ள 75 இலட்சம் ரூபாய் கூடுதல் செல வினத்தையும், கடந்த நவம்பர் திங்களில் ஒப்பளிப்பு வழங்கப்பட்ட அகவிலைப்படி வீதங்களில் ஏற்பட்ட உயர் வினையும், இந்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகள் முற்றிலும் எதிரொலிக்கின்றன. அகவிலைப்படி உயர் வின் விளைவாக ஏற்படுகிற செலவினம் 9·2 கோடி ரூபாய் ஆகும். அதில் 2·3 கோடி ரூபாய், பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதிக் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்.




அரசினர் பரிசுச் சீட்டுத் திட்டம்.

43. நடைமுறைக் கணக்கைப் பொறுத்தவரையில், நமது நிதி நிலை கவலை தராதிருப்பினும், வருகிற ஆண்டில், இந்திய அரசுக்குத் திருப்பிச் செலுத்த வேண்டிய கடன்களும், வெளிச்சந்தைக் கடன்களும் ஏராளமாகப் பெருகியிருப்பதால், அடுத்த ஆண்டில் நமது வழிவகை நிதி நிலை பெரிதும் இடர்ப்பாடு மிகுந்த தாக இருக்கும் என்பதைக் கருத்தில் கொண்டு விழிப் புடன் இருக்கவேண்டும். ஆகவே, பொருளாதார வளர்ச்சி காண்பதற்காக, நமது மக்களின் சேமிப்பைத் திரட்டுவதற்குப் புதிய முறைகளில் சில நடவடிக்கைகளை மேற்கொள்ளுவது அவசியமாகும். சிறு சேமிப்புகளைத் திரட்டுவதற்கான தற்போதைய திட்டங்களை முனைந்து செயல்படுத்துகிற நேரத்தில், மாநில வளர்ச்சிக்கு ஏழை எளிய மக்களும் தொகை வழங்குவதற்கு இயலும் வகை யில், 'பரிசுச் சீட்டுகள்' நடத்துவதற்கான திட்ட மொன்றை வகுப்பது அவசியம் என்றும், அரசு




உணர்ந்திருக்கிறது. இந்தத் திட்டத்தின் விவரங்கள் விரைவில் முடிவு செய்யப்பட்டு, அடுத்த நிதி ஆண்டின் தொடக்கத்தில் நிறைவேற்றப்படும். நிதியிடாக் கடன் தலைப்பில், பரிசுச் சீட்டுத் திட்டத்தின்கீழ் பரிசுத் தொகைகளையும், அனுமதி பெற்ற முகவர்களுக்குத் தரகுத் தொகைகளையும் செலுத்திய பிறகு, இத்திட்டத்தின் வாயிலாகக் கிட்டுமென்று எதிர்பார்க்கப்படுகிற நிகர வரவினம் ஒரு கோடி ரூபாய் அளவில் இருக்குமென நம்புகிறோம். நமது மாநிலத்திலுள்ள ஒவ்வொரு குடும்பமும், இந்தத் திட்டத்தில் பெரும் பங்கு கொண்டு, நமது மாநிலப் பொருளாதாரத்தை வளர்க்க உதவியளிக்குமென்பதில் எனக்குச் சிறிதும் ஐயமில்லை.

புது நிதி ஆணைக்குழு: அதன் பணிகள்

44. மேலே நான் எடுத்துக் கூறியுள்ள வரவு-செலவுத் திட்டக் கோட்பாடுகள், நமது நிதி நிலை குலையாது நாம் முன்னேற்றம் காண விழைகிறோம் என்ற உறுதியை, இம் மாமன்றத்திற்கு அளிக்குமென நம்புகிறேன். சிக்கனத்தையும் நிதி ஒழுங்கினையும் பெருமளவிற்குக் கடைப்பிடிக்க வேண்டியதன் தேவையை நாம் ஏற்றுக் கொள்கிற அதே நேரத்தில், மாநிலங்களின் பொறுப்புக் களுக்கும், அவற்றின் நிதி வசதிகளுக்குமிடையே நிலவியுள்ள அடிப்படையான சமநிறைவற்ற நிலையைச் சுட்டிக் காட்டுவது நமது கடமையாகும். நமது திட்டங்களின் மூலம் உருவாக்க எண்ணியுள்ள நல்லதோர் உயர் வாழ்வினை வகுத்துக் கொடுக்கும் வகையில், நமது மக்களின் குறைந்த தேவைகளை, மாநிலங்கள் செவ்விய முறையில் நிறைவேற்ற வேண்டுமெனின், இச் சம நிறைவற்ற நிலையை நாம் நீக்கியாக வேண்டும். இதுவரை நான்கு நிதி ஆணைக் குழுக்களை நாம் கண்டுள்ளோம். ஆனால், அவற்றின் பரிவுரைகள் சம நிறைவற்ற நிலையைச் சீர் செய்வதற்குப் பெருமளவில் பயனளிக்கவில்லை. மாநிலங் களின் தற்போதைய நிறுவனங்களையும் பணிகளையும் பேணிவருவது குறித்து அவற்றின் தேவைகளை இறுதி செய்து அறிந்து, இந்த நிறுவனங்களையும் பணிகளையும் பேணி வருவதற்கு மட்டுமே போதுமான அளவில்



அவைகளுக்கு நிதி வசதிகளை வகை செய்து தருவதில் தான், அவற்றின் முக்கிய முயற்சிகள் நெறிப்படுத்தப் பட்டுள்ளன. எனவே, வளர்ச்சிப் பணிகளின் தேவைகள் அனைத்தும் மத்திய அரசின் விருப்ப உதவிக்கே விட்டு விடப்பட்டு, மாநிலங்கள் மத்திய அரசையே முற்றிலும் அண்டியிருக்கும் நிலைக்குக் கொண்டுவரப் பட்டுவிட்டன. 1969–70-ம் ஆண்டிலிருந்து, புதிய நான்காம் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டுமென்று முடிவு செய்துள்ளதால், புதிய நிதி ஆணைக்குழு ஒன்றை நியமிப்பது அவசியமென்று எங்கணும் உணரப்படுகின்றது.

45. எனவே, இத்தருணத்தில், அப்புதிய நிதி ஆணைக் குழுவின் ஆய்வு வரம்பு, ஏனைய பொருள்களோடு, நிதி வசதிகளை மாநிலங்களுக்குப்பகிர்ந்து அளிப்பது குறித்த அரசியலமைப்பின் விதித் துறைகளை ஆழ்ந்து மறு ஆய்வு செய்ய வேண்டும் என்கிற பொருளும் அடங்கும்படி, விரிவுபடுத்தப்பட வேண்டுமென்கிற கருத்தினைத் தெரிவித்துக்கொள்ள விழைகின்றேன். புதிய நான்காம் திட்டத்தின் தொடக்கத்திற்குப் போதிய அளவு முன் கூட்டியே, மூன்றும் திட்டத்திற்கும் நான்காம் திட்டத்திற்கும் இடையே நிறைவேற்றப்பட்டுள்ள ஆண்டுத் திட்டங்கள் மூன்றின் பேணுதற் செல்வினத்தின் பொருட்டு, மாநிலங்களுக்கு எவ்வகையில் நிதி மாற்றம் செய்து தரவேண்டும் என்கிற குறுகிய கேள்விக்கு விடை பகரும் வகையில், இடைக்கால அறிக்கை ஒன்றினை வெளியிடுவதற்கு ஊறு நேராவண்ணம், மேற்சொன்ன மறு ஆய்வினை நிதி ஆய்வுக் குழு மேற்கொள்ள இயலும். நான் கருதியுள்ள இந்த மறு ஆய்வு, எந்த வகையிலும் மத்திய அரசின் வலிமையைக் குறைக்குமென்றோ, நாட்டின் ஒற்றுமையைத் தகர்க்குமென்றோ அஞ்சுவதற்கு எவ்வித நியாயமுமில்லை. மாறாக, மாநிலங்களுக்குள்ள பொறுப்புக்களை, அவை நிறைவேற்றுவதற்கு முன்னிலும் சிறந்த முறையில், அதிக நிதி வசதிகளைச் சட்டபூர்வமான அடிப்படையில் அவைகளுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதன் மூலம், அன்றாட நிதித் தொடர்புகளில் மாநிலங்களுக்கும்



— திட்ட ஆராய்வு —



திரு. க. இராமச்சந்திரன்,
ஐ.ஏ.எஸ்.,
நிதிச் செயலாளர்.

மத்திய அரசுக்குமிடையே பிணக்குகளும் எதிரெதிர் குற்றச்சாட்டுகளும் நிகழ்வதற்கான வாய்ப்புகள் குறைந்து, நாட்டிற்குப் பொதுவான எல்லாச் செயல்களிலும் மத்திய அரசுக்கும் மாநிலங்களுக்குமிடையே உடன்பாடு மிகுந்த பயனுள்ள கூட்டு மனப்பான்மை வளர்ந்திடவும் இயலும் என்று நான் சாற்ற விரும்புகிறேன்.

46. இந்த நிதி நிலை அறிக்கையைத் தயாரிப்பதில், விளக்கம் நிறைந்த துணை புரிந்த, நிதிச் செயலாளர் திரு க. இராமச்சந்திரன் அவர்கட்கும், அவருடன் பணியாற்றுபவர்களுக்கும், என் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஆர்வம் நிறைந்த ஒத்துழைப்பு தந்ததன் மூலம் அவர்கள் என் பொறுப்பின் பளுவினை மிக எளிதாக்கியுள்ளனர்.

47. இவை கூறி, 1968–69-ம் ஆண்டிற்குரிய இவ்வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளை இப்பேரவையினர் ஏற்கும்படி வேண்டுகின்றேன்."

| | |
|---|---|
| சென்னை,<br>1968 பிப்ரவரித் திங்கள்<br>28-ம் நாள். | சி. என். அண்ணாதுரை,<br>முதலமைச்சர். |

தமிழ்நாட்டின் மூலைமுடுக்குகளில் உள்ள எல்லாக் கிராமங்களிலும் பணியாற்றுகின்ற ஊராட்சிகள், நூல் நிலையங்கள், செய்தி நிலையங்கள், பள்ளிக்கூடங்கள், மகளிர் மன்றங்கள் முதலிய பல்வேறு நிறுவனங்களுக்கெல்லாம் செல்லும் "கிராமநலம்" இதழில், கிராம மக்களுக்குத் தேவையான பொருள்கள் பற்றிய தகவல்களும், கிராமங்களில் தயாராகும் பண்டங்கள் பற்றிய விவரங்களும் **விளம்பரங்களாக** ஏற்றுக்கொள்ளப்படும். ஏப்ரல் 1968 இதழிலிருந்து "கிராமநலத்"தில் விளம்பரங்கள் வெளியிடுவதென தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

## "கிராமநலம்" விளம்பரக் கட்டண விவரம்

| | | அவ்வப்போது வெளியிடப்படும் விளம்பரங்களுக்கு. (1) ஒவ்வொரு இதழுக்கும். ரூ. | குத்தகையாக ஒரே இட அளவிற்கு (குறைந்தது 12 விளம்பரங்கள்). (2) ஒவ்வொரு இதழுக்கும். ரூ. |
|---|---|---|---|
| **இரண்டாவது, மூன்றாவது அட்டைப் பக்கங்கள்— (ஒரே வண்ணத்தில்)** | | | |
| முழுப் பக்கம் | .. | 420 | 315 |
| அரைப் பக்கம் | .. | 215 | 165 |
| **நான்காவது அட்டைப் பக்கம்—(இரண்டு வண்ணங்களில்)** | | | |
| முழுப் பக்கம் | .. | 450 | 325 |
| அரைப் பக்கம் | .. | 230 | 170 |
| **உள்பக்கம்—** | | | |
| முழுப் பக்கம் | .. | 400 | 300 |
| அரைப் பக்கம் | .. | 210 | 160 |

## "மாவட்ட அளவில், உள்ளாட்சித் துறை சம்பந்தப்பட்ட சகல பொறுப்புகளையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்"

[மாவட்ட ஆட்சித் தலைவர்களின் (ஊராட்சி வளர்ச்சி) நேர்முக உதவியாளர்களின் கூட்டத்தில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் வேண்டுகோள்]



தமிழகத்தின் எல்லாக் கிராம மாவட்டங்களின் (13 மாவட்டங்கள்) மாவட்ட ஆட்சித் தலைவர்களின் (ஊராட்சி வளர்ச்சி) நேர்முக உதவியாளர்களின் கூட்டம், தமிழக அரசு தலைமைச் செயலகத்தில், 1968 மார்ச் 6, 7 தேதிகளில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில், பல்வேறு கிராம வளர்ச்சித் திட்டங்கள் குறித்து விரிவாக விவாதிக்கப் பட்டது. கிராம நல—தல நிர்வாகத்துறைச் செயலாளர் திரு டி. ஏ. எஸ். பாலகிருஷ்ணன், ஐ. ஏ. எஸ்., கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். கூட்டத்தின் இறுதியில் உரையாற்றிய மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்கள், தம்முடைய உரையில், கிராம வளர்ச்சித் திட்டங்களைப் பற்றியும், குறிப்பாக மாண்புமிகு முதலமைச்சரின் பிறந்த நாளன்று கிராம வளர்ச்சித் துறை காணிக்கையாக அளிக்கும் ஓராண்டுத் திட்டத்தின் வேலை விவரங்களை செயல்படுத்துவது பற்றியும் தம்முடைய ஆக்கபூர்வமான யோசனைகளையும் கருத்துக்களையும் எடுத்துரைத்தார். கிராம வளர்ச்சித்துறை இயக்குநர் திரு வி. நடராஜன், ஐ. ஏ. எஸ். கிராம வளர்ச்சித்துறையின் வேலைத்திட்ட துணைச் செயலாளர் திரு எம். சுவாமிநாதன், ஐ. ஏ. எஸ். கிராம வளர்ச்சித்துறை (பணித்துறை) துணைச்செயலாளர் திரு எஸ். பி. சுந்தரம், மற்றும் கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தின் அதிகாரிகளும் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

கிராம வேலைத் திட்டங்களைச் செயல்படுத்துவதில் உள்ள அனுபவ ரீதியான பல் வேறுபட்ட சிக்கல்கள், சிரமங்கள் குறித்து, விரிவாகவும் மனம்விட்டும் கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. அந்தந்த மாவட்டங்களுக்கென்று தனியாக உள்ள பிரச்னைகளும் சுட்டிக்காட்டப்பட்டு, அச்சிக்கல்களைத் தீர்ப்பதற்கான தகுந்த வழிமுறைகளும் எடுத்துக் கூறப்பட்டன.

சிரணிப்படை செயல்படுவது குறித்தும் விவாதிக்கப்பட்டு, சமூகப் பணி புரிவதில் தீவிர ஆர்வம் காட்டி வரும் நாட்டுணர்வு கொண்ட பெருமக்களின் ஆதரவினைப் பெறுவதற்காக தோற்றுவிக்கப்பட்ட, மக்களே முன்வந்து பணியாற்றும் இப்படிப்பட்ட நிறுவனங்கள், சீரிய முறையில் செயல்படுவதற்கான செயல்முறைக் குறிப்புகளும் விவாதத்தில் கோடிட்டுக் காட்டப்பட்டன. பள்ளிக்கூடக் கட்டிடங்கள் கட்டுவதற்கான வேலைத்திட்டங்கள், கிராம மனித சக்தித் திட்டம், சத்துணவுத் திட்டம் ஆகியவற்றைத் திறம்பட செயல்படுத்துவதற்காக வேண்டி, அவை ஆய்வுச் செய்யப்பட்டு, அதற்கான உருப்படியான யோசனைகள் எடுத்துக்கூறப்பட்டன.

ஓராண்டுத் திட்டம் முழு வெற்றியடைய:

மாண்புமிகு முதலமைச்சரின் பிறந்த நாள் காணிக்கையான ஓராண்டுத் திட்டத்தின் சிறப்பியல்புகள் பற்றி, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்கள், கூட்டத்தினர்க்கு விளக்கிக் கூறினார். இத்திட்டத்தை முழு வெற்றியடையச் செய்ய அனைவரும் முழுமூச்சுடன் பாடுபட வேண்டுமென்றும், அதன் மூலம் கிராம மக்களுக்கு பயனுள்ள சேவையை நாம் செய்தவர்களாவோம் என்றும் அவர் வேண்டுகோள் விடுத்தார்.

ஒரு குறிப்பிட்ட ஊராட்சி மன்றம் ஒன்றில் வீட்டு வரியானது 500-லிருந்து 600 சதவிகிதம் வரையில் உயர்த்தப்பட்டதை அமைச்சர் அவர்கள் சுட்டிக் காட்டி, இந்த வரி உயர்வினை, பொதுமக்கள் தன்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்தனர் என்றும், அதைப் பற்றி தமிழக அரசு தலைமைச் செயலகத்தில் பரிசீலனை செய்யப்பட்டது என்றும் கூறினார். வரி விதிக்கின்ற அதிகாரம், வரி உயர்வினை எதிர்த்து வரும் அப்பீலின் பேரில் முடிவு எடுக்கும் அதிகாரம் ஆகியவை ஊராட்சி மன்றங்களிடமே உள்ளன என்றும், வரி அப்பீல் விஷயங்களில் அரசாங்கம் குறுக்கிடுவதற்கில்லை என்றும், ஆகவே, இந்த வரி

உயர்வும், அதற்கான தீர்வு காண்கின்ற முறையும், ஊராட்சி மன்றங்களின் கையிலேயே உள்ளன என்பதையும், மனுச் செய்து கொண்ட மக்களிடம் அமைச்சர் விளக்கினார். இதைத் தெரிந்துகொண்ட மக்கள், ஊராட்சித் மன்றத் தலைவரையே அணுகி, விதிக்கப் பட்ட அதிக வரியைக் குறைக்க வழிவகை செய்து கொண்டனர். இந்த வரி உயர்வுக் கான காரணம், ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சி அதிகாரத்திற்கு வந்ததின் நேரடி விளைவே என்ற கருத்தை மக்களிடையே பரப்பும் வகையில், ஒரு சிலர் அரசியல் பிரச் சாரம் செய்வதற்கு இதைப் பயன்படுத்துகின்றனர் என்றும், இத்தகைய பிரசாரத்திற்கு எந்தவித அடிப்படையும் இல்லை என்பதையும் அமைச்சர் எடுத்துரைத்தார். மக்களுக்கு உண்மையை எடுத்துச் சொல்வது அவசியமென்றும், அதன் வாயிலாக மேற்சொன்ன முறையில் நடைபெறும் தவறான பிரசாரத்திற்கு அப்போது தான் இடமிருக்காது என்றும் அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

திருவள்ளுவரின் ஈராயிரம் ஆண்டு விழா :

உலகத் தமிழ் மாநாடு மிகச் சிறப்பான முறையில் நடைபெறுவதில் ஒத்துழைத்துப் பாடுபட்ட எல்லா மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், அமைச்சர் அவர்கள் தம்முடைய நன்றியறிதலைத் தெரிவித்து, அவர்களுக்கு (மலர் விழாக் குழுத் தலைவர் என்ற முறையில்) தமிழ் மாநாட்டு மலரினையும் அன்பளிப்பாகக் கொடுத்தார், 1969—ல் நடைபெறவிருக்கும் திருவள்ளுவரின் ஈராயிரம் ஆண்டு விழாவினை அமைச்சர் குறிப்பிட்டுக் கூறி, அதிகாரிகள் இந்த விழா அடுத்த ஆண்டு நடைபெற விருப்பதை தங்கள் கருத்தில் கொள்ள வேண்டு மென்றும், நடைபெறப்போகும் இவ்விழா, அகில உலகினரையும் தமிழகத்தின் பால் ஈர்க்கும் தன்மையில் அமையப் பணியாற்ற வேண்டுமென்றும் அவர்களைக் கேட்டுக் கொண்டார்.

உணவு உற்பத்தித் துறையில் சிரணிப்படையினர் பணி :

சிரணிப் படையினரின் அடிப்படைக் கொள்கைகளை அமைச்சர் அவர்கள் விவரித்துக் கூறி, கட்டடங்கள் கட்டுதல், சாலை அமைத்தல் போன்ற காரியங்களில் மட்டும் சிரணிப் படையினர் கவனம் செலுத்துவதோடு அல்லாமல், நீர்ப்பாசன வாய்க்கால்களை, குளங்களை சுத்தப்படுத்துதல் போன்ற உணவு உற்பத்திப் பணிகளில் அதிகமாக அவர்கள் தங்களுடைய கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று விருப்பம் தெரிவித்தார். ஊராட்சி மன்றங் களுக்கு ஆதாயம் தரக்கூடிய வேலைத்திட்டங்களைப்பற்றி அமைச்சர் குறிப்பிட்டுப் பேசு கையில், சமுதாயக் கிணறுகள், ஊராட்சித் தோட்டங்கள் போன்ற பிரதேசப் பிரச்சினை களுக்கு ஆங்காங்குள்ள அதிகாரிகளே தீர்வு காணவேண்டுமென்றும், பொதுப் பணத்தைச் செலவிடும்பொழுது, மிகுந்த கவனமும், எச்சரிக்கையாகவும் இருக்கவேண்டுமென்றும் அமைச்சர் கேட்டுக்கொண்டார்.

ஊராட்சி மன்றக் கூட்டங்கள் ஒழுங்காக அவ்வப்பொழுது தவறாமல் நடைபெற வேண்டுமென்றும், ஊராட்சிகள் சரிவர வேலை செய்கின்றனவா என்பதைக் கவனிக்க தகுந்த நடவடிக்கைகளை, மாவட்ட அதிகாரிகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் அமைச்சர் விருப்பம் தெரிவித்தார். அதிகாரிகள் அந்தந்தப் பகுதிகளுக்கு அடிக்கடி சென்று, ஊராட்சி மன்றக் கூட்டங்கள் அவ்வப்பொழுது ஒழுங்காக நடைபெறுவதற்கான வழிவகைகளை வகுத்துக்கொடுக்க வேண்டும். அந்தந்தப் பிரதேசங்களில் கிடைக்கும் ஆதா ரங்களையும், திறமைகளையும் பயன்படுத்தி, ஊராட்சி நிறுவனங்களின் வருமானத்தைப் பெருக்குகின்ற முறையில், கிராம மக்களுக்கு பயனளிக்கும் பணிகளை மேற்கொண்டு, அதி காரிகள் செயலாற்ற வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

இறுதியில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அனைவரும் ஒரு குடும்ப பாசத்துடன் தாங்கள் எல்லாம் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற ஒற்றுமை உணர்வுடன் பாடுபட்டு, ஓராண்டுத் திட்டத்தின் இலக்குகளை அடைவதில் ஒன்றுபட்டு உழைத்து, வெற்றி தேடித் தரவேண்டும் என்று அனைவரையும் விரும்பிக்கேட்டுக்கொண்டார். அதிகாரிகள்—பொதுமக்கள் அனைவரின் ஆர்வம் நிறைந்த ஒத்துழைப்புடன், 1968 செப் டம்பருக்குள் ஐந்து அம்சம் திட்டம் வெற்றியுடன் செயல்படுத்தப்பட்டு விடும் என்பதில் தனக்கு அசைக்க முடியாத நம்பிக்கை இருப்பதாக அமைச்சர் உறுதி தெரிவித்தார்.

ஆசிரியக் குழுத் தலைவர் :
திரு T. A. S. பாலகிருஷ்ணன், I.A.S.

வெளியிடுபவர் : திரு வி. நடராஜன், ஐ. ஏ. எஸ்.
ஆசிரியர் : திரு எஸ். வேங்கடசாமி, எம். ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Director of Rural Development, Madras-9. Chairman of the Editorial Committee: Thiru T. A. S. Balakrishnan, I.A.S., Wrapper printed at Vadapalani Press, Madras-26,






குழுவின் தலைவர்
திரு எஸ்.எஸ். வாசன் அவர்கட்கு
தமிழக அரசு
தலைமைச் செயலக (கோட்டை)
உருவம் பொறித்த
வெள்ளிக்கேடயம்
பரிசளிக்கப்பட்டது...
(ஊர்வலக் காட்சி விரைவில்
திரைப்படமாக வெளிவரும்)

உலகத் தமிழ் மாநாட்டு
ஊர்வலக் காட்சியை
உருவாக்கித் தந்த கலைஞர்
பெருமக்களுக்கு
தமிழக அரசின் பாராட்டும்
பரிசளிப்பும் (12-2-68)

கிராம நலம் ஏப்ரல் — 1968



"உழுவார் உலகத்தார்க்கு ஆணி"





# கிராமமங்கலம்

'தமிழக அரசின் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை மாத இதழ்'

கதிர் 13 ஏப்ரல் 1968 நெல் 7


## இரு பெரும் நாடுகளின் பண்பாட்டுணர்வு

" நவில் தொறும் நூல் நயம் போலும் பயில் தொறும்,
பண்புடையாளர் தொடர்பு "

" வால்கா கிராட்" நகரத்தின் துணை மேயர், நகராட்சி உறுப்பினர்கள், ஆகியோரை வரவேற்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

உங்கள் நாட்டைப் போலவே, எங்கள் நாடும் பழம் பெருமை வாய்ந்தது. பல நூற்றுண்டுகளாகவே, கவிதை, இலக்கியம், நுண்கலைகள் ஆகியவற்றின் சிறப்பியல்புகளை அடிப்படையாகக் கொண்டு, மிக உயர்ந்ததொரு பண்பாட்டை நாங்கள் உருவாக்கி வந்துள்ளோம். எங்களுடைய சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள், கடந்த ஜூன் திங்களில் உங்களுடைய நகரத்திற்கு வருகை தந்தனர். அதை ஒட்டி, இன்று ' வால்கா கிராட், நகராட்சி உறுப்பினர்களாகிய நீங்கள், எங்களுடைய நகரத்திற்கு வருகை தந்திருக்கிறீர்கள். நம் இரண்டு நகர மக்களிடையே உள்ள நட்புறவின் அறிகுறியாக இது விளங்குவதைக் கண்டு, நான் பேருவகை கொள்கிறேன்.

உங்களுடைய நகர மக்களுக்கு என்னுடைய உளமார்ந்த நல்லாசிகளையும் வாழ்த்துக்களையும் அன்புகூர்ந்து தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்."

மா. முத்துசாமி

[ சோவியத் நாட்டு "வால்காகிராட்" நகராட்சி மன்றத்தைச் சேர்ந்த அந்நகராட்சி மன்றத் துணை மேயர், மற்றும் இருவர் அடங்கிய குழுவினர், சென்னையில் 17—4—1968-ல் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்களைச் சந்தித்த பொழுது, அமைச்சர் அவர்கள் அக்குழுவினரை உபசரித்து, வாசித்தளித்த வரவேற்புரை. ]

முதல் அட்டைப்பட விளக்கம் : சிந்தனைத் தூண்டுகோல்

### " உழுவார் உலகத்தார்க்கு ஆணி "

தமிழ் மறை—

● " திருவள்ளுவர் காலத்திலும், அதற்கு முன்னும் பின்னும், நாட்டில் உழவு ஒன்றே மிகப் பெரும்பாலோரின் தொழிலாக இருந்து வருகிறது."

●● "விஞ்ஞான முற்போக்கு ஏற்பட ஏற்பட, பெரும்பாலோர் செய்யும் உழவைச் சிறுபான்மையோர் செய்து முடிக்க முடியும்."

●●● "எனவே ' உழவு ' என்ற தலைப்பில் வள்ளுவர் பெருமான் அமைத்துள்ள அதிகாரம் (பத்து ' குறள் ' கொண்டது), சிறப்புப்பற்றி, நிலத்தில் உழுது பாடுபடும் தொழிலைப் போற்றுவதாக இருந்தாலும் உடம்பால் உழைத்துப் பாடுபடும் எல்லாத் தொழிலையும், போற்றுவதாகக் கொண்டால், காலத்திற்கு ஏற்ற முறையில் பொருள் விளக்க வல்லதாகும்."

டாக்டர் மு. வ. அவர்கள் கருத்துரை—
("திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்"
என்ற நூலிலிருந்து)

# தமிழால் முடியும்!

(மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை)

[பச்சையப்பன் அறநிலைய 120-வது ஆண்டுவிழா, பச்சையப்பன் கல்லூரியில் 22-3-68-ல் நடைபெற்றது. அவ்விழாவில் கலந்துகொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் ஆற்றிய உரையின் சாரத்தை இங்கே அளித்துள்ளோம்.

மாண்புமிகு முதலமைச்சர் தம்முடைய பேருரையில், மூன்று முக்கிய கருத்துக்களை வலியுறுத்தினார். கனிவு-தெளிவு-துணிவு-இம்மூன்று குண நலன்களும், வாழுகின்ற, வளர்ச்சி பெறுகின்ற சமுதாயத்திற்கு, குறிப்பாக மாணவர் சமுதாயத்திற்கு அவசியம் தேவை என்பதை, மாண்புமிகு முதலமைச்சர் தமக்கே உரித்தான கம்பீர நடையில் எடுத்துரைத்தார். பாடமொழி பற்றிய தமிழக அரசின் கொள்கையை தெளிவுபட விளக்கிக் காட்டும் அவருடைய சொல்லோவியம், நம் சிந்தனைக்கெல்லாம் அரிய விருந்தாகும்—ஆசிரியர்.]

"தமிழ், பாடமொழியாக முடியுமா" எனச் சந்தேகம் எழத் தேவையில்லை. எதுவும் முயன்றால் முடியும். எல்லாம் தமிழால் இயலும்.

ஆங்கிலத்தின் அவசியம் பற்றி திரு முத்தையா செட்டியார் அவர்கள் பேசிக்கொண்டிருக்கும்போது, சில மாணவர்கள் தமிழால் முடியும் என்று குரல் எழுப்பியது கண்டு மகிழ்ச்சியடைந்தேன். ஆனால் அந்த மாணவர்கள் 'தமிழால் முடியும்' என்று கூறியதோடு 'எங்களால் முடியும்' என்று கூறி இருந்தால், நான் இன்னும் மகிழ்ச்சியடைந்திருப்பேன். ஏனெனில், இன்றைய தினம் தமிழுக்கு ஒரு குறையும் இல்லை. ஏற்கெனவே அது வளர்ந்திருக்க வேண்டிய அளவு வளர்ந்திருக்கிறது. இருக்கிற குறையெல்லாம், தமிழின் அளவுக்கு நாம் வளர்ந்திருக்கிறோமா என்பதுதான்.

உயர்தனிச் செம்மொழியான ஒருமொழியை-வன்மையும் மென்மையும் பெற்றிருக்கிற ஒரு மொழியை-நாம் பெற்றிருக்கிறோம். அந்த மொழியின் பெருமையைக்கூட நாம் எவ்வளவு காலம் கழித்து உணர்ந்தோம் என்பதையும் இந்த நேரத்தில் எண்ணிப்பார்க்க வேண்டுகிறேன்.

## மயக்கத்தின் அடிப்படையில்......

படிக்கும்போதே தமிழார்வம் மிக்கவர்கள், படிப்பை முடித்து வெளியே சென்று பணியாற்றத்துவங்கும்போதும், தமிழ் உணர்வோடு இருந்தார்கள் என்றால், நிச்சயம் இப்போதைக் கிருப்பதைவிட தமிழின் ஆக்கம் பெருகும். தமிழ்ப்பற்று மிக்கவர்கள் என்ஜினியர்களாக வந்த பிறகுதான்-ஹைரோடுகள், நெடுஞ்சாலை என்ற அழகு தமிழ் பெயரில் அழைக்கப்படுகின்றன. இல்லையென்றால் 'ஹைரோடு' என்ற ஆங்கிலச் சொல்லே தமிழ் வரி வடிவத்தில் இருக்கும்.



பாடமொழி தமிழில் முடியுமா என்பது துவக்கத்தில் கொஞ்சம் மயக்கம் தருவதுதான். அது தூங்கி எழுந்ததும் வரும் மயக்கம் போன்றது.

தூங்கி எழுந்ததும், ஆயாசமும், அப்பாடா என்ற சோர்வும்-கொட்டாவி விடுவதும் போலத்தான், பல்லாண்டுகளாய் வேறு மயக்கத்தில் இருந்த நாம் தமிழால் முடியுமா என்று கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

டாக்டர் ஏ. வேணுகோபால் அவர்கள் தமிழில் புதிதாகப் பேசினார். அதில் எவ்வளவு சுவையும் இனிமையும் கண்டோம்? அந்தப் பேச்சு, முயன்றால் முடியும் என்பதைப் பறைசாற்றுவதாக அமைந்தது.






## தகவல் அறிவும் மொழி அறிவும்

ஆங்கிலத்தைப் புறக்கணிக்கக் கூடாது என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். ஆனால் ஆங்கிலத்தைப் பாடமொழியாக வைத்துக் கொண்டால்தான், ஆங்கில அறிவைப் பெற முடியும்—என்பதிலிருந்து நான் மாறுபடுகிறேன். ஆங்கிலத்தைச் சிறப்புப் பாடமாக ஏற்றுப் படித்தாலே, அந்த மொழியில் போதிய அறிவுபெற முடியும். பாடமொழியாக இருந்துதான் அறிவுபெற முடியும் என்பதை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். கணக்குப் பாடத்தை ஆங்கிலத்தில் படிப்பதால் மட்டும் ஆங்கில நடையழகைப் பெறமுடியுமா? பூகோளப் பாடத்தை ஆங்கிலத்தில் படிப்பதால் மட்டும் போதுமான ஆங்கில அறிவு பெற்றுவிட முடியுமா? வெறும் தகவல் அறிவு பெறுவதால், மொழி அறிவு வளர்ந்து விடாது—என்று நினைப்பது, நீண்ட காலப் பழக்கத்தின் காரணமே தவிர வேறல்ல!

நான் பாடங்கள் அனைத்தையும் ஆங்கிலத்தில் படித்தவன். ஆனால் தமிழார்வம் வளரும் காலத்தோடு நானும் வளர்ந்ததால், எனக்கும் ஏதோ கொஞ்சம் தமிழறிவும்-ஆர்வமும் ஏற்பட்டது.

தமிழின் ஆர்வம் ஆங்கில அறிவின் வீழ்ச்சியாக இருக்கக்கூடாது-என்பதை ஒப்புக்கொள்கிறேன். நிலைமை அப்படி இல்லை என்பதையும் ராஜா சர் முத்தையா செட்டியார் போன்றோருக்கு விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இன்றைய தினம் சட்டமன்றத்தில் ஆங்கிலத்தை விட்டுவிடாதீர்கள் என்று என்னிடம் வேண்டுகோள் விடுக்கிறார்கள். ஆனால் 20-30 ஆண்டுகளுக்குமுன், ஆங்கிலம் படிப்பதே தேசத்துரோகம் என்று பேசப்பட்டது அது ஆங்கில வெறுப்பாகவே மாறியது. அதை நினைத்துக்கொண்டுதான் இப்போது பேசுகிறார்கள்.

## தமிழே தகுந்தது...

தமிழைப் பாடமொழி ஆக்குவதில் புதிய அரசு முழுமுச்சுடன் முனைந்து நிற்கிறது. அதில் வெற்றியும் பெறும். அவ்விதம் தமிழ் பாடமொழியான பிறகும், இந்திய துணைக் கண்டத்திலேயே ஆங்கிலத்தின் தரம்-தமிழ் நாட்டில்தான் முதல்தரமாயுள்ளது என்ற பெரும் புகழை நிச்சயம் நிலைநாட்டுவோம்.

ஏனெனில் இன்று உலகம் வேகமாக ஒன்று பட்டு வருகிறது. உலகின் ஒரு பகுதியிலிருந்து, இன்னொரு பகுதிக்குச் செல்ல முடிகிறது. ஒரு பகுதியின் கருத்து வேகமாக இன்னொரு பகுதிக் குப் பரவுகிறது.

### ஆங்கிலத்தின் இடத்தில் எந்த மொழி ?

வெண்டல்வில்கி என்னும் பேராசிரியர் சொன்ன ஒரே உலகத்தை நோக்கி-நாம் முய லாமலேயே முன்னேறிக்கொண்டிருக்கிறோம். ஆகவே ஆங்கிலத்தின் மூலமே அந்த உலகத் தொடர்பை நாம் பெற முடியும். இப்போது அந்த ஆங்கிலத்தின் இடத்தை நமது நாட்டில் பெறும் தகுதியுள்ளது எந்த மொழி? நாடாளு மன்றத்திற்கு, நீதிமன்றத்துக்கு ஆங்கிலத்தின் இடத்தைப் பெறும் தகுதியும், திறனும், வளமும் மிக்க மொழி இந்தியாவிலேயே தமிழ் மொழி ஒன்றுதான். இதை நான் தமிழன் என்பதால் கூறவில்லை. தமிழின் பெருமையை உணர்ந்தவர்கள் அதை ஒப்புக்கொள்வார்கள். ஏனெனில் இந்தி மொழியில் அந்த அளவுக்குத் தனிச் சொற்கள் குறைவு.

பச்சையப்பன் கல்லூரியில் நான் படித்த போது கணக்குத் துறையைச் சார்ந்த சின்ன தம்பி பிள்ளையும் வேதாந்தத் துறையைச் சார்ந்த சர்மாவும் பொருளாதாரத் துறையைச் சார்ந்த நாராயணசாமியும், அரசியல் துறை யைச் சார்ந்த ராஜேஸ்வரனும் கல்லூரி முதல் வராக இருந்தார்கள். இப்போது ரசா யனத் துறையைச் சார்ந்த சண்முக நாதன் அவர்கள் கல்லூரி முதல்வராக வராக இருக்கிறார். இது ஆங்கில இலக்கியப் புலமை மட்டும் இருப்பவர்களால்தான் நிர் வாகம் செய்ய முடியும் என்ற வாதத்தைப் பொய்யாக்குவதாகும். அடுத்தக் கட்டம் தமிழ்த்துறை தலைவரும் கல்லூரி முதல்வ ரானால், பச்சையப்பன் கல்லூரி மரபு வளர்ந்து வருவதைக் காட்டும்.

### உயர்ந்த எண்ணங்கள்

தமிழர்கள் முதலில் உலகத் தொடர்பு கொண்டிருந்தவர்கள். அதனால்தான் பல நூற் றாண்டுகளுக்கு முன்பே 'திரைகடலோடியும் திர வியம் தேடு' என்று கூறினார்கள். 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்றார்கள். 'நல்லதும் தீதும் பிறர் தர வாரா' என்றார்கள். சீர் திருத்தவாதிகளே வெளியே கூற அஞ்சும் 'ஒன்றே குலம்; ஒருவனே தேவன்' என்றார்கள்.




தமிழில் 'பட்ஜெட்' என்பதற்கு நிதி நிலை அறிக்கை என்று சுமார் பத்தாண்டுகளுக்கு முன்பே பெயரிட்டிருக்கிறோம். பட்ஜெட் என்பதற்குரிய முழுப்பொருள் பட்ஜெட் என்ற ஆங்கிலச் சொல்லுக்கே இல்லை. பட்ஜெட் என் பது, அந்த காகிதங்கள் உள்ள பெட்டியைத் தான் குறிக்கும். ஆனால் நிதிநிலை அறிக்கை என்றால்—மாநிலத்தின் நிதி எவ்வளவு?—அது எந்த நிலையில் இருக்கிறது ? அதை அமைச்சர் எப்படி அறிக்கையாகத் தருகிறார் என்பதை எல்லாம் அந்தச் சொல் காட்டுகிறது.

யார் பேசுவதில் எவ்வளவு இன்பம் இருந் தாலும், தாய் நம்மை 'வாடா மகனே' என்று கூறும்போது ஏற்படும் இன்பத்திற்கு நிகரில்லை. அதுபோல தாய்மொழியின் இன்பத்திற்கு— பயனுக்கு—நிகர் ஏதுமில்லை.

அவ்வளவு உயர்ந்த இடத்தில் நாம் இருந் தோம். என்ன காரணமோ கீழே விழுந்தோம். கீழே விழுந்ததால், எண்ணம் கீழ்நோக்கிப் போய்விடவில்லை. மேலேயே பார்த்துக்கொண் டிருக்கிறோம். மேலே வேகமாக ஏறுங்கள் என் கிறார்கள் சிலர்; நாங்களோ-காலை ஊன்றி வழுக்காதவாறு முன்னேற விரும்புகிறோம். நான்கு அடி ஏறி எட்டு அடி கீழே சறுக்குவ தில் பயனில்லை. படிப்படியாக-உறுதியாக முன் னேற வேண்டும். இதுவே நமது கொள்கை."

—:o:—

# 1967-68-ல் கூட்டுறவு வளர்ச்சித் திட்டங்களின் முன்னேற்றம்—ஓர் ஆய்வுரை

மாண்புமிகு சட்டம்—கூட்டுறவு அமைச்சர்
திரு செ. மாதவன்



இம் மாநிலத்திலே கூட்டுறவு இயக்கம் எல்லாத் துறை களிலும் 1967-68-ம் ஆண்டில் மேலும் வளர்ச்சி அடைந்துள்ளது.

வேளாண்மைக் கடன் வசதி, கூட்டுறவு விற்பனை, கூட்டுறவுப் பண்ணை, பயன் கொள்வோர் கூட்டுறவுச் சங்கங்கள், பலவகைக் கூட்டுறவு சங்கங்கள் பணியாளர் பயிற்சி முதலியவை "கூட்டுறவு" என்பதன் கீழ் வரும் பெருந் திட்டங்களாகும்.

### கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் உழவர்களுக்குக் கடன்வசதி

வேளாண்மை உற்பத்தித் திட்டங்களிலே கூட்டுறவுச் சங்கங்கள் முக்கியமான பணியாற்றி வருகின்றன. குடியானவர்களுக்கு வேண்டிய கடன் வசதியில் பெரும் பகுதியைக் கூட்டுறவுச் சங்கங்களே வழங்கி வருகின்றன; அவர்களுடைய விளைபொருள்களை விற்பனை செய்வதற்கும் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கின்றன. நான்காவது திட்ட இறுதிக்குள் கூட்டுறவுச் சங்கங்கள் குறுகிய கால, நடுத்தரக் காலக் கடன்கள் வகையில் ரூ. 80 கோடி கடன் வசதியளிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. இது வேளாண்மையில் ஈடுபட்டோரின் மொத்தத் தேவையில் 50 சத வீதமாகும்.

நிதி உதவும் கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்து வதற்காகவும், அவற்றின் கடன் வாங்கும் சக்தியைப் பெருக்கும் பொருட்டும், கூட்டுறவுக் கடன் வழங்கு சங்கங்களில் பங்கு மூலதனத்திற்கு அரசாங்கம் ஆண்டு தோறும் தொகை வழங்கி வருகிறது. 1967-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரை அரசாங்கம் தமிழ்நாடு கூட்டுறவு வங்கியில் பங்கு மூலதனத்திற்கு ரூ. 126 லட்சமும், மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கி களின் பங்கு மூலதனத்திற்கு ரூ. 174 லட்சமும், தமிழ் நாடு மத்திய நில அடமான வங்கியின் பங்கு மூலதனத் திற்கு ரூ. 45 லட்சமும், ஆரம்பக் கடன் வழங்கு சங்கங்களின் பங்கு மூலதனத்திற்கு ரூ. 108 லட்சமும் வழங்கியுள்ளது.

இம் மாநிலத்திலே முழு நிதி உதவித் திட்டம் 274 வட்டாரங்களிலே நிறைவேற்றப்பட்டு வருகிறது.

வசதியற்றவர்களுக்குக் கடன் வழங்குவதனால் ஏற்படக் கூடிய இழப்புகளைச் சரிக்கட்டுவதற்காக முழு நிதி உதவித் திட்டம் செயலிலுள்ள பகுதிகளில் இருக்கும் சங்கங் களுக்கு ஏற்படக்கூடிய இழப்பினை ஈடு செய்ய அரசாங்கம் ஒப்புக் கொண்டுள்ளது. அச்சங்கங்கள் வழங்கிய குறுகிய காலக் கடன்கள், நடுத்தரக் காலக் கடன்கள் இவற்றில் 10 சத வீதம் வரை மேற்சொன்னபடி இழப்பினை ஈடு செய்ய அரசாங்கம் ஒப்புக்கொண்டுள்ளது. தனிப்பட்ட நேர்வுகளில் ஏற்படுகிற இழப்பில் மூன்றில் இரு பங்கினை அரசாங்கமும் எஞ்சியுள்ள ஒரு பங்கினை மாநிலக் கூட்டுறவு வங்கியும், மத்திய வங்கிகளும், ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களும் ஏற்க வேண்டும் என்ற நிபந்தனைக்கு அது உட்பட்டதாகும்.

மும்முர வேளாண்மை மாவட்டத் திட்டம், தஞ்சாவூர் மாவட்டத்தின் 36 சமுதாய நல வளர்ச்சி வட்டாரங்களில் செயற்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்கீழ் 1,045 கிராமக் கூட்டுறவுச் சங்கங்கள் இருக்கின்றன. இவற்றில் 4·43 லட்சம் உறுப்பினர் உள்ளனர். இம்மாவட்டத்தில் இந்தத் திட்டம் நெல் விளைவிப்பது குறித்து முதற்கண் கொண்டு வரப்பட்டது. இத்திட்டம் இப்போது ஏனைய பயிர்களுக்கும் நீடிக்கப்பட்டுள்ளது.

கூட்டுறவுச் சங்க உறுப்பினர் ஒருவர் வாங்கக்கூடிய கடனில் மேல் வரம்பு இம்மாநிலம் எங்ஙனும் ரூ. 15,000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. சர்க்கரை ஆலைகளின் பதிவு பெற்ற கரும்பு உற்பத்தி உறுப்பினரைப் பொறுத்த வரையில், இந்த மேல் வரம்பு ரூ. 20,000 ஆகும். இந்த வரம்புகளுக்கு உட்பட்டு, பதிவு பெற்ற கரும்பு பயிரிடுவோரைப் பொறுத்த வரையில், ரூ. 15 ஆயிரம் வரையிலும், மற்றவர்களைப் பொறுத்த வரையில் ரூ. 10 ஆயிரம் வரையிலும், ஆள் பிணையத்தின் மீது கூட்டுறவுச் சங்க உறுப்பினர்கள் கடன் பெற உரிமையுள்ளவர்களாவர். உறுப்பினர்களின் நிகர சொத்து மதிப்பில்




எட்டில் ஒரு பங்கு வரை சங்கங்கள் கடன் வாங்கலாமென்றிருந்த மேல் வரம்பு இப்போது ஐந்தில் ஒரு பங்கு வரை வாங்கலாமென உயர்த்தப்பட்டுள்ளது.

### மும்முர உற்பத்தித் திட்டங்கள்

மேற்பட்ட முறைகளை முனைந்து மேற்கொண்டு உற்பத்தியைப் பெருக்கும் நோக்குடன், புகையிலை, வாழை, வேர்க்கடலை, தென்னை, பருத்தி முதலிய வணிகப் பயிர்களுக்கென மும்முர உற்பத்தித் திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன. குடியானவர்களுக்கு வேண்டிய கடன் வசதியையும் ஏனைய வேளாண்மை உற்பத்தித் தேவை பொருள்களையும் வழங்குவதே மும்முர வேலைத் திட்டத்தை நிறைவேற்றுவதில் கூட்டுறவுச் சங்கங்களின் பணியாகும்.

கிராம மக்கள் சேமித்து வைத்துள்ள தொகைகளைத் திரட்டுவதற்காக, கிராமப் பகுதிகளில் கிளைகளை ஏற்படுத்துவதற்கு மாவட்டக் கூட்டுறவு மத்திய வங்கிகள் நடவடிக்கை எடுத்து வருகின்றன. இம் மாநிலத்தில் நான்காவது திட்டக்காலத்தில் 16 மத்திய வங்கிகள் 100 கிளைகள் ஏற்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில் 41 கிளைகள், 1966–67-ம் ஆண்டில் தொடங்கப்பட்டுள்ளன. 1967–68-ம் ஆண்டில் 20 கிளைகள் தொடங்குவதெனத் திட்டமிட்டிருக்க இதுவரை 10 கிளைகள் தொடங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு கிளைக்கும் மூன்றாண்டு வரை ரூ. 10 ஆயிரம் அரசாங்கம் நிதி உதவியளித்து வருகிறது. மத்திய வங்கிகள் இக்கிளைகளை வைத்து வருவதற்காகவே இவ்வாறு ஆண்டுதோறும் படிப்படியாகக் குறையும் நிதி உதவியளிக்கப்படுகிறது.

### நீண்டகாலக் கடன் வசதிகள்

தமிழ்நாடு கூட்டுறவு மத்திய நில அடமான வங்கியும் அத்துடன் இணைந்துள்ள 105 ஆரம்பச் சங்கங்களும் இம் மாநிலத்திலுள்ள குடியானவர்களுக்கு நீண்ட காலக் கடன் வழங்கி வருகின்றன. 1966–67-ம் ஆண்டில் இந்த வங்கிகள், மொத்தம் ரூ. 3·79 கோடி. கடன் வழங்கியுள்ளன. பரம்பிக்குளம், ஆளியாறு திட்டத்தின் கீழ் நிலமீட்பு நிதி உதவித் திட்டத்தின்படிக் கொடுக்கப்படுகிற கடனும் இதிலடங்கும். நடப்பாண்டாகிய 1967–68-ல் இயல்பான திட்டத்தின்கீழ் இந்த வங்கிகள் நீண்டகாலக் கடனாக ரூ. 2·19 கோடி. வழங்கியுள்ளன.

### கடன் வசதியைப் பயன்படுத்திக் கொள்ளுதல்

கடனுதவியளிக்கும் நிறுவனங்களிடமிருந்து கிடைக்கும் உதவியை இயன்ற வரை முற்றிலும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதைக் கருதி அடுத்த ஆண்டிலிருந்து கிணறுகளை தோண்டுதல், விசை ஏற்றங்களை நிறுவுதல் ஆகியவற்றுக்கான கடன்களையும், நில அடமான வங்கிகள் மூலமாகவே வழங்குவதென முடிவு செய்யப்பட்டுள்ளது என்று முதல் அமைச்சர் அவர்கள் தமது நிதிநிலை அறிக்கை உரையில் தெரிவித்துள்ளார். 1968–69-ல் மத்திய நில அடைமான வங்கியின் கடன் பத்திரங்களில் அரசாங்கம் ரூ. 2 கோடி. முதலீடு செய்யும். மத்திய நில அடைமான வங்கி அடுத்த ஆண்டில் கடன் பத்திரங்களை வெளியிட்டு ஏறத்தாழ 8·7 கோடி.



ரூபாய் திரட்டும் என்றும், சிறு பாசனத் திட்டங்களுக்காக குறைந்தது ரூ. 6·7 கோடியாவது பயன்படுத்தும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

### வணிகப் பண்டக சாலைகள்

விலைவாசிகள் உயராமல் தடுக்கவும், பொது மக்களுக்கு முக்கியமான பொருள்கள் நியாய விலையில் கிடைக்கச் செய்வதற்காகவும் மொத்த வணிகப் பண்டகசாலைகளையும் ஆரம்பப் பண்டகசாலைகளையும் நிறுவுவது குறித்த திட்டம் 50,000-மும் அதற்கு மேற்பட்ட மக்கள் தொகையும் கொண்ட நகரங்களிலும், மாநகரங்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் கீழ் 29 மொத்த வியாபாரப் பண்டகசாலைகளும், 669 ஆரம்பப் பண்டகசாலைகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன.




இரண்டு லட்சத்திற்கு மேற்பட்ட மக்கள் தொகைகொண்ட நகரங்களிலும் மாநகர்களிலும் பல பொருள் அங்காடிகள் நிறுவும் திட்டம் 1966–67-ல் மேற்கொள்ளப்பட்டது. விலைவாசி உயராமல் தடுப்பதே இத் திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின்கீழ் 1966–67-ல் ஏற்படுத்த திட்டமிடப்பட்ட 6 அங்காடிகளில் 5 அங்காடிகள் தொடங்கப்பட்டன. தென் சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை, கோயம்புத்தூர், சேலம் ஆகிய இடங்கள் ஒவ்வொன்றிலும் 1966–67-ல் ஓர் அங்காடி தொடங்கப்பட்டது. நடப்பாண்டில் வட சென்னையில் பல–பொருள் அங்காடி ஒன்று நிறுவப்படும். இது ஆறுவது அங்காடி ஆகும்.

1967–68-ல் பல பொருள் அங்காடிகள் நிறுவும் திட்டம் 1·50 லட்சம் முதற்கொண்டு 2·00 லட்சம் வரை மக்கள் தொகையுள்ள நகரங்களிலும், மாநகர்களிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது. வேலூர், தஞ்சாவூர், கடலூர், திருநெல்வேலி, பாளையங்கோட்டை, தூத்துக்குடி, நாகர்கோயில் ஆகிய இடங்களில் பல பொருள் அங்காடிகள் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது. இவற்றில் வேலூரில் உள்ள அங்காடி 1968 பிப்ரவரி 11-ம் தேதி முதற்கொண்டு செயல்படத் தொடங்கியுள்ளது.

### பின்தங்கியோர் நலனுக்காக

சமுதாயத்தில் பின்தங்கியுள்ளோர் நலனுக்காக இம் மாநிலத்தில் 96 தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச் சங்கங்களின் பங்கு மூலதனத்திற்கும், கருவிகள் வாங்குவதற்காக அவற்றின் தொழில் மூலதனத்திற்கும் சேம நிதிக்கும் நிதி உதவி வழங்கப்படுகின்றது.

இம் மாநிலத்தில் 45 ஆரம்ப வீட்டு அடைமானச் சங்கங்களும், வீட்டு அடைமான மத்திய சங்கமொன்றும் செயல்பட்டு வருகின்றன. 1966–67-ம் ஆண்டில் இச் சங்கங்கள் ரூ. 99·98 லட்சம் அளவிற்கு கடன் வழங்கின. 1967–68-ம் ஆண்டில் 1967-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் தேதி வரையில் இவை ரூ. 60·80 லட்சம் அளவுக்கு கடன் வழங்கின. தமிழ்நாட்டு வீட்டு அடைமான மத்தியக் கூட்டுறவு வங்கியின் பங்கு மூலதனம் குறித்து அரசாங்கம் ரூ. 2 லட்சம் வழங்கியுள்ளது. வீட்டு அடைமான மத்தியச் சங்கத்தில் முதலீடு செய்துள்ள தவணை வைப்புத் தொகையை ரூ. 50 லட்சம் வரையில் திருப்பிச் செலுத்தவும், ஆயுள் ஈட்டுறுதிப் பொறுப்பாண்மைக் கழகத்திடமிருந்து பெற்ற கடன்களை ரூ. 2 கோடி. வரையில் திருப்பிச் செலுத்தவும் அரசாங்கம் உறுதியளித்துள்ளது.

கொள்முதல் பணிகளில் கூட்டுறவுச் சங்கங்களும் பங்கு கொள்கின்றன. ஆனால், இவை குறித்து திட்டவட்டமான இலக்கு எதுவும் முடிவு செய்யப்படவில்லை. ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களின் நிதி நிலைமை மனநிறைவு தரும் வகையில் இருந்து அவை எல்லா வசதிகளையும் பெற்றிருந்தால், நெல் கொள்முதல் வேலையில் அவை அரசாங்கத்தின் முகவர்களாக நியமிக்கப்படுகின்றன.

தஞ்சாவூர் மாவட்டத்தில், தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனைக் கழகம் பெரிய அளவில் கொள்முதல் வேலையை மேற்கொள்கின்றது. 15 ஆரம்பக் கூட்டுறவுச் சங்கங்களும் 565 கிராமப் பிரிவுகளும் முகவர்களாக நியமிக்கப்பட்டுள்ளன. 1967-ம் ஆண்டில் இக் கூட்டுறவுச் சங்கங்கள் 1·10 லட்சம் டன் நெல் கொள்முதல் செய்தது. இந்த நெல்லின் மதிப்பு ரூ. 4·95 கோடியாகும். இதில் தஞ்சாவூர் மாவட்டத்தில் கொள்முதல் செய்யப்பட்ட குறுவை நெல்லின் அளவு 95,102 டன் ஆகும்.

[கூட்டுறவு மானியக் கோரிக்கையின்போது, சட்டப்பேரவையின் முன் வைக்கப்பட்ட விவரக் குறிப்பிலிருந்து.]

# மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவோம்...

(மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் திரு. எஸ். ஜே. சாதிக்பாட்சா.)

“குடும்பக் கட்டுப்பாடு பற்றிய இக்கருத்தரங்கைத் தொடங்கி வைக்க என்னை அழைத்ததை நான் பெரியதொரு வாய்ப்பாகக் கருதுகின்றேன். சென்னை மருத்துவக் கல்லூரியில் இதனை ஏற்பாடு செய்த கருத்தரங்கு அமைப்பாளர்களை நான் பாராட்டுகின்றேன். இக் கருத்தரங்கில் பங்கு கொள்ளும் உறுப்பினர்கள், குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்துவதற்கு உருவான யோசனைகளை நல்குவார்கள் என நம்புகின்றேன்.

மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த இதயபூர்வமான முயற்சிகளும், விஞ்ஞான வழிமுறைகளும் பின்பற்றப் படாவிட்டால், ஐந்தாண்டுத் திட்டங்களால் ஏற்பட்டுள்ள, ஏற்படும் என நாம் எதிர்பார்க்கின்ற முன்னேற்றங்களால் பயன் ஏதும் விளையாது. நாட்டின் பொருளாதார முன்னேற்றம் குடும்பக் கட்டுப்பாடு பிரச்னையுடன் பின்னிப் பிணைந்துள்ளது.

## மாபெரும் பிரச்னை

குடும்பக் கட்டுப்பாடு என்ற பெயரிலிருந்தே அது குடும்பத்தை திட்டமிடுவது என்பது புலனாகும். இது தனி மனிதர்களின் பிரச்னையல்ல, அல்லது ஒரு குடும்பத்திற்கு மட்டுமோ, சமுதாயத்திற்கு மட்டுமோ உரிய பிரச்னையுமல்ல. தேசிய முக்கியத்துவம் வாய்ந்த மாபெரும் பிரச்னையாக இது வளர்ந்துள்ளது. நாட்டின் ஆட்சியாளர்களும், சமுதாயத்திலுள்ள நல்லறிஞர்களும் இந்தப் பிரச்னையைப் பெரிய அளவிலே சமாளித்தாக வேண்டியுள்ளது. சுகாதார நடவடிக்கைகளைக் கவனித்து வரும் மத்திய, மாநில அமைச்சகங்கள், பொதுச் சுகாதார அமைச்சகங்கள் என்ற பெயரை இதுவரை பெற்றிருந்தன. இப்பொழுது அவை பொதுச் சுகாதாரம் மற்றும் குடும்பக்கட்டுப்பாடு அமைச்சகங்கள் என வழங்கப்படுகின்றன. குடும்பக் கட்டுப்பாடு திட்டம் பெற்றுள்ள அதிமுக்கியத்துவத்தையே இது காட்டுகிறது.

அதிர்ஷ்டவசமாகவோ, துரதிருஷ்டவசமாகவோ குடும்பக் கட்டுப்பாடு கொள்கையையும், அதன் செயல் முறையையும் பொறுத்தவரை இதுவரை மத்திய அரசுக்கும் இந்த மாநில அரசுக்கும் இடையில் தகராறு எதுவும் ஏற்படவில்லை. பல்வேறு குடும்பக் கட்டுப்பாடு திட்டங்களின் அமுலுக்கு நிதி ஒதுக்கீடு செய்யும் பொழுது நமக்குரிய பங்கைச் சில சமயங்களில் உரிய நேரத்தில் பெற முடியாமல் போனதைத் தவிர, மத்திய அரசுக்கும் நமக்கும் தகராறு எதுவும் இடையாது.

மாண்புமிகு நம்முடைய முதலமைச்சர் அவர்கள் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு மிகுந்த ஆதரவளித்து வருவது உங்களனைவருக்கும் தெரிந்ததே. சுவைபடப் பேசும் சொல்லாற்றல் நிறைந்த அவர்கள், குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் முக்கியத்துவத்தை, வாய்ப்பு நேரும்பொழுதெல்லாம் வலியுறுத்தத் தவறுவது இல்லை. ‘சிவபெருமானே குடும்பக்கட்டுப்பாட்டைக் கடைப்பிடித்திருக்கிறார்; அதனால் தான் அவருக்கு இரண்டே பிள்ளைகள்’ என்று அவர் சொல்லக் கேட்டிருக்கிறோம்.

நாட்டை எதிர்நோக்கியுள்ள மிகப்பெரிய பிரச்னை, மக்கள் தொகைப் பெருக்கமாகும். அசுர வேகத்தில் பெருகிவரும் மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தி, தடுத்து நிறுத்த வேண்டியது, நாட்டின் நல்வாழ்விலே அக்கறைகொண்டுள்ள ஒவ்வொரு குடிமகனின் தலையாய கடமையாகும். மக்கள் தொகைப் பெருக்கமானது, கட்டுப்படுத்தப்படவில்லையென்றால், மக்களின் எதிர்கால நல்வாழ்வுக் காக்ச் செய்யப்படும் மற்ற முயற்சிகள் அத்தனையும் விழலுக்கிறைத்த நீராகிவிடும். இந்தக் கருத்தை, குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தை வலியுறுத்திக் கூறும் மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சரின் உரை, இன்றுள்ள நிலையில் அனைவரும் இதயத்தில் பதித்து வைத்துக்கொள்ளவேண்டிய ஒன்றாகும்.

—ஆசிரியர்.

## தமிழக அரசின் அக்கறை

நாட்டில் மக்கள் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த நாம் இதய பூர்வமான முயற்சிகள் மேற்கொண்டு வருவதால் நமக்கு இரண்டு நாடாளுமன்ற இடங்கள் குறைந்துவிட்டன என்று சிலர் சுட்டிக்காட்டுவதை நீங்கள் அறிவீர்கள். சட்ட மன்றத்தில் உறுப்பினர் ஒருவர் இந்தக் கேள்வியைக் கேட்க, இவையெல்லாம் பொருட்படுத்தத் தேவையில்லாத சிறிய விஷயங்கள் என்று நம்முடைய முதலமைச்சர் பதிலளித்தார். மக்கள் தொகையைக் கட்டுப்படுத்தும் அல்லது குடும்பத்தைத் திட்டமிடும் இப்பிரச்னையை, இந்த அரசு அமைச்சரவை துணைக்குழு அமைத்துக் கவனித்து வருகிறது, இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு இன்று காலை குடும்பக் கட்டுப்பாடு அமைச்சரவை துணைக்குழு கூட இருக்கின்றது. அதில் குடும்பக் கட்டுப்பாடு பற்றிய பல்வேறு பிரச்னைகள் விவாதிக்கப்படுவதுடன், இந்தக் கருத்தைத் தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் எடுத்துச் சொல்வதற்கான எதிர்காலத் திட்டங்களும் வகுக்கப்படும். குடும்பக் கட்டுப்பாடு கருத்தைத் திரைப்படங்கள், நடனங்கள், நாட்டுப் பாடல்கள் போன்றவற்றின் மூலம் மக்களுக்கு விளக்குவதற்கு ஒத்துழைப்பு நல்குமாறு புகழ் மிக்க திரைப்பட நடிகர்களை நம் முதலமைச்சர் இன்று அழைத்திருக்கிறார் என்பதையும் உங்களிடம் குறிப்பிட விரும்புகின்றேன்.



மகப்பேறு கட்டுப்பாடு என்பது இன்று உங்களது விவாதத்திற்குரிய பொருள் என்று நான் அறிகிறேன். இது கொச்சையாகக் ‘கருத்தடை’ என வருணிக்கப்பட்டு வந்தது. கருத்தடை என்றாலே பொதுமக்கள் முகம்சுளித்த காலம் இருந்தது. அதைப்பற்றி பேசுவது கண்ணியக் குறைவாகவும் கருதப்பட்டது. ‘கருத்தடை’ என்ற சுவையற்ற சொற்றொடருக்குப் பதிலாகக் ‘குடும்பக்கட்டுப்பாடு’ என்ற சொற்றொடர் வழக்கிற்கு வந்தது. கருத்தடையைக் கைக்கொள்வது பண்பற்றது, சமயத்திற்கு விரோதமானது எனக் கருதப்பட்ட காலம் இருந்தது, சமயத் தலைவர்கள் இதனை வன்மையாகக் கண்டித்து, அது கடவுளுக்கு விரோதமானது என்று சொன்னார்கள். கடவுள் குழந்தையைக் கொடுப்பதாகவும், அதைக் கட்டுப்படுத்துவது கடவுளுக்கு விரோதமான செயல் என்றும் கூறப்பட்டது. மனிதன் பகுத்தறிவுள்ளவன். அவனது பகுத்தறிவே அவனுக்குக் குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தை வலியுறுத்தியுள்ளது. மனம்போன போக்கில் உடல் இன்பம் துய்த்து, குழந்தைகளைப் பெற்றுக்கொண்டே போவதற்குத்தான் இல்லை என்பதனை அவன் உணர்ந்துள்ளான். இன்று குடும்பக் கட்டுப்பாடு, அதன் ஆதரவாளராக இருந்தாலும் சரி, எதிர்ப்பாளராக இருந்தாலும் சரி, அனைவராலும் பேசப்படும் சொற்றொடராக இருக்கின்றது. அதன்பால் காட்டிய வெறுப்பு மெல்ல மறைந்து வருகிறது.

மேதைகள் உள்ள இந்த அவையில் மக்கள் தொகைப் புள்ளி விவரங்களைச் சொல்லவேண்டிய அவசியமில்லை என்று கருதுகின்றேன். அண்மை ஆண்டுகளில் மக்கள் தொகை இரு மடங்காகவும், மும்மடங்காகவும் பெருகி வந்துள்ளது யாவரும் அறிந்த உண்மையாகும். மக்கள் தொகை இதே வேகத்தில் பெருகுமாறு விட்டுவிட்டால், உலகில் மக்கள் நிற்பதற்கு மட்டுமே இடம் கிடைக்கக் கூடிய ஒரு நிலை ஏற்பட்டுவிடும் என்று சொல்கிறார்கள்.

இந்திய அரசியல் அமைப்பின் பீடிகையில்,

“இந்தியாவின் மக்களாகிய நாம், இந்தியாவை ஒரு முழு அதிகார ஜனநாயகக் குடியரசாக அமைத்து, அதன் குடிகள் அனைவருக்கும்—

சமூகம், பொருளாதாரம், அரசு—இவற்றில் நீதியும், எண்ணம், வெளியீடு, கோட்பாடு, சமயம், வழிபாடு—இவற்றில் சுதந்திரமும்,

தகுதி, வாய்ப்பு—இவற்றில் சமத்துவமும்,

தனியொருவரின் கண்ணியமும் நாட்டுமக்களின் ஒருமைப்பாடும் நிலைபெறும் வண்ணம் அவர்கள் அனைவரிடமும் சகோதரத்துவம் ஓங்குமாறு செய்யவும் உறுதி பூண்டுள்ளோம்”

எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நியாயமான வரம்புகள்!

இந்த உயரிய இலட்சியங்களை அடைவதற்கு, திட்டமிட்ட சிறு குடும்பமே நமக்கு இருக்க வேண்டும். அரசியல் அமைப்பு மக்களுக்கு அடிப்படை உரிமைகளை வழங்கியுள்ளது. அவை மிகப் புனிதமானவையாகப் போற்றப் படுகின்றன. இந்த அடிப்படை உரிமைகள், அல்லது அரசியல் அமைப்பில் கண்டுள்ள சில சுதந்திரங்களுக்குக்கூட, சில நியாயமான வரம்புகள் இருக்கின்றன. இதைப்போலவே, நாட்டின் நலனையும் நல்வாழ்வையும் முன்னிட்டு மனிதன் தனது நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்திக்கொண்டு, குடும்பத்தைத் திட்டமிடக் கடமைப்பட்டுள்ளான்.

நம்முடைய நாட்டின் மக்கள் தொகை ஆண்டுதோறும் 12 மிலியன் என்ற அளவில் அபரிமிதமாகப் பெருகி வருகிறது என்பதை உங்களுக்கு நான் எடுத்துச் சொல்ல வேண்டிய தேவையில்லை. கடந்த முப்பதாண்டுகளில் அரிய மருந்துகள் கண்டுபிடிக்கப்பட்டதாலும், நல்வாழ்வுத் திட்டங்கள் அமுலாக்கப்பட்டதாலும் இறப்பு விகிதம் குறைந்தது. ஆனால் பிறப்பு விகிதம் குறையவில்லை. இதனால் மக்கள் தொகைப் பெருக்கப் பிரச்னை மிகப் பயங்கரமாக உருவெடுத்துவிட்டது. 1961-ல் இந்தியாவின் மக்கள் தொகை 439 மிலியன். 1967–68-ல்




இது 514 மிலியனாக இருக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளது. இந்த ஆறுண்டுக் காலத்தில் மட்டும் 75 மிலியன் மக்கள் அதிகரித்திருக்கிறார்கள். ஆண்டொன்றுக்கு நாட்டில் 2·46 சத விகித மக்கள் பெருகி வருவதாகச் சொல்கிறார்கள்.

**தமிழகத்தின் சாதனை**

தமிழகத்தைப் பொறுத்தவரை, 1956-ல் குடும்பக் கட்டுப்பாடு திட்டம் தொடங்கப்பட்டதிலிருந்து அதனைச் செயல்படுத்துவதில் நாம் பின்னடையவில்லை. அலுவலர்களின் ஊக்கமிகு முயற்சியாலும், பொதுமக்களின் ஒத்துழைப்பாலும் 1967 டிசம்பர் இறுதி வரை சுமார் 6·5 லட்சம் அறுவைச் சிகிச்சைகள் செய்யப்பட்டிருக்கின்றன.

மக்கள் ஜாதி, சமய வேறுபாடின்றி, தங்கள் குடும்பத்தின் நல்வாழ்வும், குழந்தைகளின் ஆரோக்கியம், ஆனந்தம் ஆகியவையும் குடும்பத்தின் அளவையொட்டித் தான் இருக்கின்றன என்பதை அதிக அளவில் உணர்ந்து வருவதால்தான், இத்தகைய சிறந்த சாதனையை அடைய முடிந்திருக்கிறது. அறுவைச் சிகிச்சை, லூப் போன்ற பல்வேறு குடும்பக் கட்டுப்பாடு முறைகளை இங்கே விவாதிக்க நான் விரும்பவில்லை. அரசு எந்தவொரு குறிப்பிட்ட முறையை எதிர்க்கவோ, ஆதரிக்கவோ இல்லை. எல்லா வகை முறைகளையும் ஊக்குவிக்கவே விரும்புகின்றது. குடும்பக் கட்டுப்பாடு திட்டம வெற்றியடைய அது மக்கள் தாமாக விரும்பி ஏற்றுக் கொள்வதாக இருக்க வேண்டுமே தவிர, கட்டாயம் எதுவும் இருக்கக்கூடாது. அரசு வழங்கும் சிறு தொகை ஓர் ஊக்குவிப்புதானே தவிர, வாசெக்டமி போன்றவற்றை மக்கள் மேற்கொள்ள அவர்களைக் கவர்ந்திழுப்பதற்கான பணம் அல்ல. அறுவைச் சிகிச்சை செய்கிறவர்கள் பக்கம் அரசு இருக்கிறது. அவர்களது உண்மையான நடவடிக்கைகளில் அரசு அவர்கள் பக்கம் இருந்து வரும்.

**கட்டாயமே கூடாது**

மக்கள் தொகைப் பெருக்கத்தை ஒரு நியாயமான காலத்திற்குள் நிலைப்படுத்தி, குறைந்த இறப்பு விகிதத்திற்குப் பதிலாகக் குறைந்த பிறப்பு விகிதத்தை அடைவதே குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் லட்சியமாகும். தற்போது திட்டமிடப்பட்டுள்ள குடும்பக் கட்டுப்பாடு திட்டம் முற்றிலும் விருப்பத்தை அடிப்படையாகக் கொண்டது. ஒவ்வொருவரும் அதனை ஏற்றுக்கொள்வதைப் பொறுத்தே அதன் வெற்றி அமைந்துள்ளது. மக்களுக்கு இதனை எடுத்துச் சொல்லி, ஏதாவது ஒரு முறையைக் கைக்கொண்டு, குடும்பக் கட்டுப்பாட்டை மேற்கொள்ளச் செய்வதே இப்போதைய உடனடித் தேவையாகும்.

குடும்பக் கட்டுப்பாடு திட்டம் வெற்றியடைவதற்கு, மகப்பேற்றுக்கான விஞ்ஞான அடிப்படை உண்மைகளை மேலும் அறிந்து கொள்வதும், அவற்றைப் பற்றித் தகுதி வாய்ந்த மருத்துவ அலுவலர்கள் மூலம் பொது மக்களுக்கு எடுத்துச் சொல்வதும் அவசியமாகும்.




இந்தியாவிலுள்ள மருத்துவக் கல்லூரிகள் இந்தத் திட்டத்தில் முக்கியப் பங்கு ஏற்றுப் பணியாற்ற வேண்டும்.

இம்மாதிரி கருத்தரங்குகளின் நடவடிக்கைகள், மக்கள் பெருக்கத்திற்கு முக்கிய இடங்களாக விளங்கும் சென்னை நகரக் குடிசைப் பகுதிகள், தொலைதூரக் கிராமங்கள் ஆகியவற்றை எட்டவேண்டும்.

குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் பல்வேறு அம்சங்கள் பற்றி உங்களிடையே விவாதித்து, இந்தத் தேசியப் பிரச்னையைத் தீர்த்து வைப்பதில் எங்களுக்கு வழி காட்டுவீர்கள் என நம்புகின்றேன். ”

[1968-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 23-ம் தேதி அன்று சென்னை மருத்துவக் கல்லூரியில் 'குடும்பக் கட்டுப்பாடு' கருத்தரங்கினைத் துவக்கிவைத்து, மாண்புமிகு சுகாதாரத் துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை]

—0—

# “வினை நலம் வேண்டிய எல்லாம் தரும்”

## (மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி)

[13—3—68 அன்று, 1968–69-ம் ஆண்டு சமுதாய வளர்ச்சி, ஊராட்சி, நகராட்சி மானியங்கள் கோரிக்கைகளை, சட்டப் பேரவையின் முன் வைத்து, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரையின் சாரம் இது. கிராம வளர்ச்சிப் பணியில் ஈடுபட்டிருப்போர் அனைவரும் தெரிந்துகொள்ளவேண்டிய அரிய விஷயங்களும், விவரங்களும் அமைச்சர் அவர்களின் பேச்சில் அடங்கியுள்ளன. படித்துப் பயன்பெற வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம்—ஆசிரியர்.]

“நாட்டின் பெருமைக்கு இயற்கை வளத்தினும் ஊக்கமிக்க மக்கட் சிறப்பே பெருங் காரணமாகும். மக்களைப் பொதுப் பணிக்கு ஊக்குவிப்பதான கிராமக் குடியாட்சி முறை தமிழக மக்களுக்குப் புதியதல்ல. பண்டை நாள் தொட்டு இற்றை நாள் வரை தமிழகத்தில் கிராமக் குடியாட்சி நல்ல முறையில் வளர்ந்து, சமுதாயத்தின் நல்-வளர்ச்சிக்கு அடிப்படையாக இருந்து வந்திருக்கிறதென்ற உண்மையைத் தமிழக வரலாற்றுப் பொன்னேடுகள் நமக்குத் தெரிவிக்கின்றன, சங்க நூல்களில் ‘மன்றம்’, ‘பொதியில்’ எனக் குறிக்கப்பட்டவை பின்னர் ஊராட்சிகளாக உருப் பெற்றுப் பெரும் புகழுடன் செயல்பட்டு வந்தன. இடையிலேற்பட்ட சில அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்களால் அவ்வூராட்சிகளின் புகழ் குடத்திலிட்ட விளக்குபோல் மங்கத் தலைப்பட்டது. அதனை குன்றின் மேலிட்ட விளக்காக ஆக்க வேண்டுவது நம் தலையாய கடமையாகும்.

**தமிழகம் வழிகாட்டியாகத் திகழவேண்டும்**

விடுதலை பெற்ற நாட்டின் உண்மையான வளர்ச்சிக்குக் கிராம வளர்ச்சியே அடிப்படை என்ற பேருண்மையை காந்தியடிகள் வலியுறுத்தினார்கள். கிராமக் குடியாட்சிகள் வேரும் விழுதுமாக நிலைபெற்று நல்ல முறையில் அமைந்து செயலாற்ற முற்பட்டாலன்றி, நமக்குக் கிடைத்துள்ள விடுதலை, குடியாட்சி என்பதெல்லாம் பேச்சளவிலும் ஏட்டளவிலேயுமே நின்றுவிடும். குடியாட்சி இந்நாட்டில் நல்ல முறையில் நிலைத்திருக்க வேண்டுமென்று நினைக்கின்ற அனைவரும் கிராமக் குடியாட்சிகள் சீரிய முறையில் இயங்கப் பாடுபடவேண்டியது இன்றியமையாததாகும். இத்துறையில், தமிழகம் நம் நாட்டிற்கு ஒரு வழிகாட்டியாக திகழவேண்டுமென்பது என் அவா. நம் அனைவருடைய அவாவும் அ·.தேயென்பது பற்றி எனக்கு ஐயமில்லை.

சமுதாய வளர்ச்சித் திட்டங்களின் காரணமாகத் தமிழகத்தில் இன்று 12,407 ஊராட்சி மன்றங்களும், 457 பேரூராட்சி மன்றங்களும், 374 ஊராட்சி ஒன்றியங்களும், 14 நகரியங்களும், 88 நகராட்சிகளும், சென்னை மாநகராட்சி மன்றமும் சிறப்புறச் செயல்பட்டு

வருகின்றன. இவ்வமைப்புகள் ஆற்றி வருபவை அரும்பெரும் பணிகளாகும். மக்கள் வாழ் வாங்கு வாழ்வதற்கான வழிகள் வகைப்படுத் தப்பட்டு ஊராட்சிகளில் நிறைவேற்றப்படு கின்றன.

தென்னார்க்காடு மாவட்டம் கல்ராயன்மலைப் பகுதியில் உள்ள பழங்குடி மலைவாழ் மக்களின் நலனுக்காகத் தனியான வளர்ச்சி வட்டாரம் ஒன்றினை துவக்க அரசு ஆலோசனை செய்து வருகிறது. இம்மாதிரியான வளர்ச்சி வட்டா ரங்கள் சேலம் மாவட்டம் கொல்லிமலையிலும், ஏற்காடு மலையிலும் உள்ளன. நடப்பு ஆண்டில் இவ்வட்டாரங்கட்காக 19·81 இலட்சம் ரூபாய்கள் செலவழிக்கப்பட்டுள்ளன.




இந்த மாலியத்தில் சமுதாய வளர்ச்சித் திட்டம் என்ற தலைப்பின்கீழ் ரூ. 5,61,73,600 மானியம் கோரியிருப்பினும் மொத்தமாக ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக ரூ. 52 கோடியே 62 இலட்சம் செலவாகுமென்று இவ்வாண்டு வரவு-செலவுத் திட்டத்தில் கணக்கிடப்பட்டுள்ளது. இது இவ்வாண்டின் மொத்த நிதி ஒதுக்கத்தில் 21 சத வீத மாகும்.

### உயிர்நாடிகளான பணிகள்

ஊருக்குத் தேவையான நல்ல ஒளியமைத் தல், '' அற்றம் காக்கும் கருவி '' யாய அறிவைப் பரப்ப நல்ல பள்ளியமைத்தல், பாலம்-பாசன வசதி செய்தல், மருத்துவ உதவியளித்தல், மன மகிழ் மன்றம் நிறுவல், குடிதண்ணீர் வசதியளித்தல், வானொலி நிலையம் அமைத்தல், விதையளித்தல், நல்ல உரம் அளித்தல், உழவர்க்குத் தேவையான உதவி யளித்தல் போன்ற உயிர் நாடிகளான பணிகளை ஊராட்சிகள் மேற்கொண்டுள்ளன.

ஆரம்பக் கல்வியைப் பரப்புவது ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொண்டுள்ள வளர்ச்சித் திட்டங்களில் மிகப் பெரியதாகும். ஆரம்பக் கல்விக்காக 2,274 இலட்சம் ரூபாய் இவ் வாண்டில் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாகச் செலவு செய்யப் படும் தொகையில் இது 43 சத விதமாகும். இத்துறையில் 23,000 ஆரம்பப் பள்ளிகளும், 4,800 உயர் தொடக்கப் பள்ளிகளும் உள்ளன. இவற்றுள் 11,000 பள்ளிகளுக்கு மட்டுமே கட்டிடங்கள் எழுப்பப்பட்டுள்ளன. இன்று தமிழகத்தில் 37 இலட்சம் சிறுர்களுக்கு 1,14,600 ஆசிரியர்கள் ஊராட்சிப் பள்ளிகளில் அறிவூட்டி வருகின்றனர். தரமான கல்வியைப் பரப்பும் வகையில் பல மானியத் திட்டங்கள் தொடக்கப் பள்ளிகட்கு அளிக்கப்பட்டுள்ளன.

### நாடு போற்றும் நண்பகல் உணவுத் திட்டம்

ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் அமைக்கப்பட்டதினுல் நண்பகல் உணவுத் திட்டத்தை செவ்வனே நிறைவேற்றுவதற்கு வாய்ப்புக் கிடைத்தது. 1957–58-ம் ஆண்டில் தொடக்கப்பட்ட இத்திட்டத்தின்கீழ் உணவு வழங்கப்படும் சிறுர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் உயர்ந்து வருகின்றது. அரிசன நலப் பள்ளிகள், சென்னை மாநகராட்சிப் பள்ளிகள் உட்பட 30,000 பள்ளிகளில் இத் திட்டம் செயல்பட்டு வருகின்றது. இப்பள்ளி களில் 18·27 இலட்சம் பிள்ளைகள் நண்பகல் உணவு பெறுகின்றனர். பெருமளவில் முதன் முதலாக 7·30 இலட்சம் ரூபாய் இப்பள்ளி களுக்குத் தளவாட மானியமாக 1967–68-ம் ஆண்டில் கொடுக்கப்பட்டுள்ளது. இம் மானியம் தொடக்கப்பள்ளி ஒன்றிற்கு ரூ. 300 வீதமும், உயர் தொடக்கப் பள்ளி ஒன்றிற்கு ரூ. 1,000 வீதமும் அளிக்கப்படும். இதன் மூலம் 1,122 தொடக்கப் பள்ளிகளும், 394 உயர் தொடக்கப் பள்ளிகளும் பயன்பெறும்.

ஆண்டுதோறும் வழக்கமாகச் சமுதாய வளர்ச்சி நிதியிலிருந்து பள்ளிக் கட்டிடங்கட் கென ஒதுக்கப்படும் தொகையைத் தவிர, இவ் வாண்டில் கல்வி மானியத்திலிருந்து பள்ளிக் கட்டிடங்கள், ஆசிரியை குடியிருப்பு வீடுகள்



கட்டுவதற்கும், தளவாடச் சாமான்கள் வாங்குவதற்கும் 27·65 இலட்சம் ரூபாய்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந் நிதியைச் செவ்வனே பயன்படுத்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் பொதுமக்கள் ஒத்துழைப்புடன் செயலாற்றி வருகின்றனர். ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில் கல்வித் திட்டங்கள் நிறைவு பெற ஆவன செய்ய வேண்டி துவக்கப்பட்ட கல்விப் பிரிவு இதற் கான வழி வகைகள் செய்து வருகிறது, 'என்னருந் தமிழ்நாட்டின்கண் எல்லோரும் கல்வி கற்றுப் பன்னரும் கலைஞானத்தால்.




பராக்கிரமத்தால், அன்பால் உன்னத இமய மலை போல் ஓங்கிடும் கீர்த்தியெய்தி' இன்புற்று வாழும் நிலை விரைவில் மலரக் கல்வி வளர்ச் சியை மேலும் வளப்படுத்துவோமாக !

இவ்வாண்டில் கிராமப் பணிகள் திட்டத்திற் கென ரூ. 182·22 இலட்சம் நிதி ஒதுக்கப்பட் டுள்ளது. 1967 செப்டம்பர் 30-ம் தேதி முடிய 2,700 மேல் நிலை நீர்த் தொட்டிகள், 48,900 குடிநீர்க் கிணறுகள், 17,000 மைல் களுக்கு மேற்பட்ட இணைப்புச் சாலைகள் ஆகியவை அமைக்கப்பட்டிருக்கின்றன. பாதை பராமரிப்புக்கென ஒவ்வொரு ஊராட்சி ஒன்றி யத்திற்கும் நபர் ஒருவருக்கு 40 காசு என்ற விகிதத்தில் கணக்கிடப்பட்ட '' சாலைகள் மானியம்'' தனியாக வழங்கப்படுகிறது. இதற்காக இவ்வாண்டில் 110 இலட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் சுமார் 29.000 சிறு பாசன ஆதாரங்கள் உள்ளன. இவற்றில் சுமார் 23,800 ஆதாரங்களைப் பேணி வரும் பொறுப்பினை ஊராட்சி ஒன்றியங்கள் மேற்கொண்டுள்ளன. இதற்காக ''தல பாசன மானியங்கள்'' என்ற தலைப்பின்கீழ் இவ் வாண்டு ரூ. 52·83 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக் கிறது. சாலைகளைப் பேணுவதற்காக ஊராட் சிகள் அரசினரிடமிருந்து நிதி உதவி பெற, தமிழக ஊராட்சிச் சட்டத்தில் வழிவகை செய்யப்படவில்லை. இது குறித்து அரசினரிடம் பல முறையீடுகள் செய்யப்பட்டு வந்துள்ளன. இவற்றிற்கிணங்க பேரூராட்சி மன்றங்களில் புழுதியற்ற மேற்பரப்பையுடைய சாலைகளை அமைப்பதற்காகும் செலவில் பாதியை மானிய மாக வழங்கும் பொருட்டு, முதல் முறையாக வரவு-செலவுத் திட்டத்தில் ஐந்து இலட்சம் ரூபாய்கள் இவ்வாண்டு ஒதுக்கப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக் கொள்வதில் பெரு மகிழ்ச்சி அடைகிறேன். 1967-ல் வீசிய புயலி னுலும், ஏற்பட்ட வெள்ளத்தினுலும் சாலைகள் பெரிதும் சேதமடைந்த மாவட்டங்களில் ஊராட்சி ஒன்றியச் சாலைகளையும், ஊராட்சி களின் சாலைகளையும் செப்பனிடுவதற்கு ஊராட்சிகளுக்கு அரசு சிறப்பு மானியம் வழங்கியுள்ளது.

### உணவு உற்பத்தி

வேளாண்மை உற்பத்தியை அதிகரிப்பது ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பாகு மென்று 1958-ம் ஆண்டு தமிழக ஊராட்சிச் சட்டத்தின் முன்னுரையில் குறிப்பிடப்பட் டுள்ளது. அரசின் வேளாண்மை மானியங்களைப் பொறுத்த வரை, ஊராட்சி ஒன்றியங்களின் வேளாண்மைத் திட்டங்கள், ''இன்றியமையா தவை , ''விருப்பத் திட்டங்கள்' என இரு பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மேலும் ஊராட்சி ஒன்றியங்கள் தங்களுடைய மற்றத் திட்டங்களை மேற்கொள்ளுவதற்காக ''குறிப் பிட்ட பகுதிகளுக்கான வேலைகள்'' என்பதன் கீழும் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. வேளாண்மை மானியத்தின்கீழ் மீனள வளர்ச்சிக்காகத் தமிழகத்திலுள்ள ஒன்றியங்கள் நான்கு பிரிவு களாகப் பிரிக்கப்பட்டுள்ளன. இதனுல் மீனளத் திட்டங்கள் நன்கு செயல்பட்டு வருகின்றன.

மருத்துவ அகங்களை நிறுவுவதும் அவற் றைப் பேணி வருவதும் ஊராட்சி ஒன்றியங் களின் பொறுப்பாகும். இதற்காக அரசு ஒன்றியங்களுக்கு மானியம் வழ்ங்குகிறது.

தாய்-சேய் நல விடுதிகள் பல அமைக்கப்பட்டு அவை நன்கு பணியாற்றிவருகின்றன. குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை ஊராட்சி ஒன்றியங்கள் செவ்வனே செயல்படுத்த இவை உதவியாக இருக்கின்றன.

கிராம மனித உழைப்புத் திட்டம் தமிழகத்தில் 72 ஊராட்சி ஒன்றியங்களில் செயல்பட்டு வருகின்றது.

### முதலமைச்சரின் பிறந்த நாள் காணிக்கை

ஆண்டுதோறும் திட்டங்கள் தீட்டி அவற்றை நிறைவேற்றித் தங்களது வருமானத்தைப் பெருக்கும் வகையில் ஊராட்சி ஒன்றியங்கள் செயல்படவேண்டுமென்பது எனது கருத்து. இதனைக் கருத்தில் கொண்டு; 1967-ம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நன்னாளன்று ஓராண்டுத் திட்டங்களாக பல திட்டங்களை வகுத்துள்ளோம். விசைப்பொறியுடன்கூடிய சமுதாயப் பாசனக் கிணறுகள் தோண்டுதல், டிராக்டர்கள், டில்லர்கள், போன்ற விவசாயக் கருவிகளை வாங்கி அவற்றைக் குறைந்த கட்டணத்தில் விவசாயிகட்குக் கிடைக்க வழி செய்தல், பள்ளிகளில் காய்கறித் தோட்டங்கள் அமைத்தல் போன்ற சிறந்த பணிகளை உள்ளாட்சித்துறை இவ்வாண்டின் திட்டங்களாக மேற்கொண்டுள்ளது. இவைகளை நிறை மனதுடன் உரிய காலத்தில் செய்து முடிப்பதோடு நில்லாமல், மேலும் தொடர்ந்து பல ஓராண்டுத் திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்த உங்கள் மேலான ஒத்துழைப்பு தூண்டுகோலாயிருக்க வேண்டும் என விரும்பி வேண்டி விழைகின்றேன்.

நாம் செய்யவேண்டிய வேலைகள் நாளுக்கு நாள் பெருகிக்கொண்டே செல்கின்றன. இதற்கு வேண்டிய நிதி வசதி அதே அளவில் பெருகாததினால், நம் திட்டங்கள் சில பாதிக்கப்படுகின்றன. மாநில அரசுக்கு மைய அரசின் உதவி ஆண்டுதோறும் குறைந்து கொண்டே வருவது நீங்கள் அறியாதது அல்ல. இத்தருணத்தில், ஊராட்சி நிறுவனங்கள் தங்கள் நிதிப் பெருக்கத்திற்கான வழிவகைகளை ஆராய்ந்து கருத்தூன்றி செயல்பட வேண்டும். வருமானத்தைப் பெருக்கும் திட்டங்களை ஊராட்சிகள் அமைத்து நிதிப் பற்றுக்குறையை நீக்க வழி முறை காண வேண்டும். இப்பணியில் பொதுமக்கள் பெரிதும் துணை நிற்பார்களென்று நம்புகிறேன்.

தமிழகத்தில் இன்று 88 நகராட்சி மன்றங்களின் மொத்த வருமானம் 1965—66-ம் ஆண்டுக் கணக்குகளின்படி 12½ கோடி ரூபாய் அளவில் உயர்ந்துள்ளது. இத்துடன் இம் மாநில அரசு மானியம் கடன் மூலமாக இரண்டு கோடியளவில் கொடுத்துள்ளது.

### நகராட்சிகளின் வருவாய் பெருக....

பொதுவாகக் கூறுமிடத்து, உள்ளாட்சி மன்றங்கள் அனைத்தும் நிதிநிலைக்கேற்பத் தம் பணிகளை திறம்பட செயலாற்றி வருகின்றன. இன்னும் ஆற்ற வேண்டிய பணிகள் பலப்பல. இவற்றைச் செயல்படுத்த வேண்டுமானால் நிதி வசதி பெருக வேண்டியதாயிருக்கிறது. குடி தண்ணீர், வடிகால் துறைகளில் மானியம் வழியாக மற்ற ஆட்சித் துறைகளுக்கு அளித்துள்ள சலுகைகளை நகராட்சிகளுக்கும் அளிக்க மைய அரசு ஒப்புக்கொண்டால், நகராட்சி மன்றங்களின் நிதி நிலைமை குறிப்பாக முன்னேற்றமடையும் என்பது என் கருத்து.

நகராட்சி நிர்வாகத்துடன் நான் தொடர்பு கொள்ளத் தொடங்கியபின் கடந்த ஓராண்டில் பல நகராட்சிகளின் வேலை முறைகளை கண்டறிகின்ற வாய்ப்பு எனக்குக் கிட்டியுள்ளது. நாளங்காடிகள், பேருந்து நிலையங்கள், லாரி நிற்குமிடங்கள், கடைகள் போன்ற ஆதாயம் தரக்கூடிய முயற்சிகளில் பல நகராட்சி மன்றங்கள் ஆர்வம் காட்டுகின்றன. இத்துறையில் ஏற்பட்டுள்ள வளர்ச்சி கண்டு நான் வியப்படைகிறேன். நகராட்சி நிறுவனங்களிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கின்ற பணிகளில் ஒன்றான கல்வி வளர்ச்சியைப் பொறுத்த வரையில் நிதி நிலை பற்றுக்குறையினால் இம் மாநிலத்தில் நகராட்சிகள் பெரிய முன்னேற்றத்தை முற்றிலும் அடைய முடியாத சூழ்நிலை உள்ளது. நகராட்சி உயர்நிலைப் பள்ளிகளை அரசாங்கமே ஏற்று நடத்த வேண்டுமென்று நகராட்சி மன்றங்களிடமிருந்து கோரிக்கைகள் வந்துள்ளன. இந்த கோரிக்கைகளை அரசு ஆழ்ந்த கவனத்துடன் பரிசிலனை செய்து வருகிறது.

நகராட்சி மன்றங்கள் நெடுங்காலமாக வேண்டி வந்ததற்கு இணங்க, நகராட்சி சாலைகளைப் பேணுவதற்கென ரூ. 7·5 இலட்சம் ரூபாய் தனி மானியம் (ad hoc grant) வழங்கவும் அரசு முதன் முதலாக முடிவு செய்துள்ளது.



தற்போது நகராட்சித் துறையில் ஆணையர்களும், பணித்துறை அலுவலரும், சுகாதாரத் துறை அலுவலரும்தான் அரசின் ஊழியர்களாக—ஓய்வு ஊதியம் பெறும் ஊழியர்களாக—பணிபுரிந்து வருகின்றனர்: இன்னும் பல்வேறு சிப்பந்திகள் இதே போல அரசினர் அலுவலர்களாக மாற்றப்படவேண்டும் எனும் கோரிக்கை பல நாட்களாக இருந்துவருகிறது. இதுவும் அரசின் பரிசிலனையில் இருந்து வருகிறது.

''துணை நலம் ஆக்கந்தரூஉம் வினைநலம்
வேண்டிய எல்லாம் தரும்''

என்ற பொய்யாமொழியின்படி வினை நலம் பெற்று ''எண்ணிய எண்ணியாங்கு எய்தும் நிலையை நாம் பெறுவதற்கு முயற்சிப்போமாக.

நான் பொறுப்பேற்றுக்கொண்ட ஓராண்டு காலமாக எனது ஆக்கப் பணியில் ஊக்கமுடன் ஒத்துழைத்த நகராட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர்கள், ஊராட்சித் தலைவர்கள் மற்றுமுள்ள அலுவலர் பலருக்கும் எனது உளங் கனிந்த பாராட்டுகளை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி கொள்கிறேன்.

''எல்லார்க்கும் தேசம், எல்லார்க்கும்
உடமைஎலாம் !
எல்லார்க்கும் எல்லா உரிமைகளும்
ஆகுகவே !
எல்லார்க்கும் கல்வி சுகாதாரம்
வாய்ந்திடுக !
எல்லார்க்கும் நல்ல இதயம்
பொருந்திடுக !

[1968--69-ம் ஆண்டு சமுதாய வளர்ச்சி, ஊராட்சி, நகராட்சி மானியங்கள் கோரிக்கைகளை சட்டப் பேரவையின் முன்வைத்து, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரையின் சாரம்.]

தமிழ்நாட்டின் மூலைமுடுக்குகளில் உள்ள எல்லாக் கிராமங்களிலும் பணியாற்றுகின்ற ஊராட்சிகள், நூல் நிலையங்கள், செய்தி நிலையங்கள், பள்ளிக்கூடங்கள், மகளிர் மன்றங்கள் முதலிய பல்வேறு நிறுவனங்களுக்கெல்லாம் செல்லும் "கிராமநலம்" இதழில், கிராம மக்களுக்குத் தேவையான பொருள்கள் பற்றிய தகவல்களும், கிராமங்களில் தயாராகும் பண்டங்கள் பற்றிய விவரங்களும் விளம்பரங்களாக ஏற்றுக்கொள்ளப்படும். ஏப்ரல் 1968 இதழிலிருந்து "கிராமநலத்"தில் விளம்பரங்கள் வெளியிடுவதென தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

## "கிராமநலம்" விளம்பரக் கட்டண விவரம்

| | அவ்வப்போது வெளியிடப்படும் விளம்பரங்களுக்கு. (1) ஒவ்வொரு இதழுக்கும். ரூ. | குத்தகையாக ஒரே இட அளவிற்கு (குறைந்தது 12 விளம்பரங்கள்). (2) ஒவ்வொரு இதழுக்கும். ரூ. |
|---|---|---|
| இரண்டாவது, மூன்றாவது அட்டைப் பக்கங்கள் (ஒரே வண்ணத்தில்) | | |
| முழுப் பக்கம் .. | 420 | 815 |
| அரைப் பக்கம் .. | 215 | 165 |
| நான்காவது அட்டைப் பக்கம் (இரண்டு வண்ணங்களில்) | | |
| முழுப் பக்கம் .. | 450 | 825 |
| அரைப் பக்கம் | 280 | 170 |
| உள்பக்கம்— | | |
| முழுப் பக்கம் .. | 400 | 800 |
| அரைப் பக்கம் .. | 210 | 160 |

**சிறுகதை**




(திரு. வி.எஸ். சுப்பையா)

[அனைத்திந்திய மதுவிலக்கு மாநாடு, தமிழகத்தில் 1968, ஏப்ரல் 12, 13, 14 தேதிகளில் சிறப்புடன் நடைபெற்றது. இந்தியாவிலேயே தமிழகம், குஜராத் ஆகிய இரண்டு மாநிலங்களில் மதுவிலக்குச் சட்ட மானது முழுமையாக அமுல் நடத்தப்படுகிறது. டாக்டர் சுசீலா நய்யார், இராஜாஜி, திரு. காமராஜ் ஆகியோர் பங்குகொண்ட இம்மாநாட்டை, நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சென்னைப் பல்கலைக் நூற்றாண்டு விழா மண்டபத்தில் துவக்கிவைத்து, அனைத்திந்திய மாநிலங்களுக்கும் வழிகாட்டும் வகையில் அரியதொரு சொற்பொழிவாற்றினர். (மாநாடு பற்றிய படங்களை இந்த இதழில் காணலாம்.]

இதை ஒட்டி, மதுவிலக்குச் சட்டம் அமுல் வராத காலத்தில் தமிழகத்தில் நடைபெற்றுவந்த நிகழ்ச்சிகளை மையமாகக் கொண்டு சுவையான ஒரு சிறு கதையை இங்கே வெளியிடுகிறோம். இந்தச் சிறுகதையின் ஆசிரியர் திரு வி. எஸ். சுப்பையா, ஐ.ஏ.எஸ். அவர்கள், தொழில், தொழிலாளர், வீட்டுவசதித்துறை இணைச் செயலாளர் (Additional Secretary) ஆவார். இவருடைய இலக்கியப் படைப்புகள் வானொலி, தனி நூல்கள், பத்திரிகைகள் வாயிலாக தமிழ் மக்களிடையே நன்கு பரவியுள்ளன

—ஆசிரியர்.]

**தா**மிரபரணி தன் தடக்கைகளை எட்டிய மட்டும் தொட்டுச் செழிப்பித்த இடத்தில் உள்ளது மாவடி கிராமம். ஏறக்குறைய நூறு தலைக் கட்டுகள் கொண்டது. அந்த வட்டாரத்திலுள்ள கிராமங்களில் எல்லாம் மாவடி கிராமத்தார் தான் வறுமை இன்னதென்றே அறியாமல் வாழ்ந்தனர்.

ஆற்றுப்பாய்ச்சலில் அறுவடை நடக்கும் போது, ஏரிப்பாய்ச்சலில் நடுகை மும்முரமாக இருக்கும். நதி தீர நஞ்சைகளில் புழுதி உழவு நடந்து கொண்டிருந்தால் ஏரிக் கழனிகளில் களைபறியில் பெண்கள் ஈடுபட்டிருப்பார்கள். ஆக, ஆண்டு முழுவதிலுமே மாவடிவாசி களுக்கு உழைப்பு இருந்துகொண்டே இருக்கும்.

களைபறி முடிந்து சூல்கொண்ட நெற்பயிர் இப்போதோ சற்று நேரத்திலோ கதிர்களை ஈன்று விடுவேன் என்று விம்மிக்கொண்டிருக்கும் சமயத்தில் கண்ணுக்கு எட்டியதூரம் கழனிக் காட்டைப் பார்த்தாலோ அப்பப்பா அந்தக் காட்சியே ஒரு தனி.

இந்தக் காட்சியை எல்லாம் நன்றாய் அனுபவிக்க மாவடி கிராமத்திலுள்ள ஜில்லா போர்டு பள்ளிக் கூடத்துக்கு ஆசிரியராக வந்து சேர்ந்தான் இளைஞன் நாகய்யா.

பழைய ஆசிரியர் வயதானவர், தலை வழுக்கை விழுந்து நடக்கும்போதே கொஞ்சம் தள்ளாடுவார். கையில் ஒரு கம்பும் முட்டை வடிவ மூக்குக் கண்ணாடியும் அவருடைய முத்திரைகள். பத்து ஆண்டுகளாக அந்த ஊரிலேயே பணி செய்தவர்.

ஆனால் ஊரார் சிலர் அவருடைய மாற்றலைத் தடுத்து மறு உத்தரவு வாங்க முயன்றார்கள். அவருக்கும் அந்த ஊரைவிட்டுப் போக மனம் இல்லை. அதனால் நெருங்கிப் பழகிய அந்தரங்க நண்பர்களைக்கொண்டு உத்திரவை ரத்து செய்து இன்னும் ஒரு வருஷமோ இரண்டு வருஷமோ அங்கேயே பணி செய்து ஓய்வு பெற விரும்பினார்.

நாகய்யாவுக்கு ஆசிரியர் பயிற்சி முடிந்து இது முதல் நியமனம். இளைஞன், கல்யாணமாகாதவன்.

இந்தக் காரணத்தையும் சுட்டிக்காட்டி அவன் அங்கே வேண்டாம் என்று மனுவில் குறிப்பிட்டு பெரும்பான்மையோர் கையெழுத்தும் கைநாட்டும் வாங்கப்பட்டன.

பழைய ஆசிரியர் புது ஆசிரியருக்கு வேலையை ஒப்புக் கொடுக்க மறுத்துவிட்டார், ஊரார் ஜில்லா போர்டு தலைவருக்கு அனுப்பிய மனுவுக்கு உத்திரவு வரும் வரை வேலையை அவனிடம் ஒப்படைக்க முடியாதென்று கண்டிப்பாகச் சொல்லிவிட்டார். உத்திரவும் வந்தபாடில்லை.



நாகய்யாவுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. வேறு எந்த ஊருக்காவது மறுநியமனம் வந்தாலாவது போதும். வேண்டாத ஊரில் வலுக்கட்டாயமாக இருந்து பணி செய்வதில் மனக்கஷ்டமே தவிர வேறு என்ன லாபம்?

இந்த நிலையில் ஊரார், கள்ளுக்கடை கண்ணுசாமியை அனுப்பி அவன் ஜில்லா போர்டு தலைவரை நேரில் கண்டு உத்திரவை ரத்து செய்து வாங்கிவரும்படிக் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, கண்ணுசாமியும் அதிகாலையில் போகும் ரயிலில் போய்விட்டான். இரண்டு மூன்று நாட்கள் ஆனாலும் அங்கேயே தங்கி உத்திரவை கையோடு வாங்கி வருவதாகச் சொல்லிவிட்டு அவன் போனதாக கமுக்கமாய் பேசிக்கொண்டார்கள்.

நாகய்யா அன்று மாலை ரயிலில் அந்த ஊரைவிட்டுப் புறப்பட்டுப் போகத் தீர்மானித்துவிட்டான், முதல் நியமனம் இப்படி ஆகிவிட்டதே என்ற கவலை அவன் முகத்தில் நன்றாகத் தெரிந்தது.

வந்து இந்த ஒரு வாரத்துக்குள்ளேயே மாவடி கிராமத்து இளைஞர்கள் அவனைச் சூழ்ந்து கொண்டார்கள்.

எழுத்து வாசனை இதுவரை பெறாதவர்கள் அவனிடம் இரவில் கற்றுக் கொள்ள விரும்பினார்கள்.

நாகய்யாவின் மனதில் என்ன என்னவோ திட்டம் உருவாகியிருந்தது படிப்பைப்பற்றி. எல்லோரும் படிக்க வேண்டும். எல்லோருக்கும் எழுதப் படிக்கத் தெரிய வேண்டும். பெண்களும் படிக்க வேண்டும். ஒரு பெண் தன் கணவனுக்குக் கடிதம் எழுதும் அளவுக்காவது எழுதத் தெரிந்திருக்கவேண்டும். அதற்காக அவள் இன்னொருவர் துணையை நாடக்கூடாது என்றெல்லாம் திட்டம் வைத்திருந்த அவனுக்கு மாவடி கிராமத்தில் தொடக்க காலத்திலேயே ஏற்பட்ட எதிர்ப்பு பெரு வெறுப்பையும் சோர்வையும் விளைவித்தது.

கடைசியாக அதைவிட்டுப் போய் ஜில்லாபோர்டில் மறு நியமனம் பெறவேண்டியதுதான் என்று முடிவுகட்டி தன் கொஞ்ச நஞ்ச சாமான்களோடு ரயில் நிலையத்தை அடைந்தான். அவன் போகும்போது ஆண்களும் பெண்களும் அவரவர் வீட்டிலிருந்து எட்டிப்பார்த்தார்கள். பழைய ஆசிரியருக்கு வெற்றி. அந்த வெற்றிக்குப் பாடுபட்டவர்கள் பெருமிதம் அடைந்தார்கள். அதில் ஆச்சரியம் எதுவும் இல்லை.

ஆனால் ரயிலடியில் அவன் போகும் வண்டி வருவதற்குள் இளைஞர்கள் கூட்டமாகச் சென்று அவன் போகக் கூடாது என்று தடுத்தார்கள்.

''மேலாளிலிருந்து உத்திரவு என்னதான் வருகிறது என்று பார்ப்போமே அதுவரை எங்களுக்காக தங்குங்கள். அப்புறம் நடக்கிறபடி நடக்கட்டும்'' என்று வாதாடினார்கள்.

அவர்கள் அன்பைப் புறக்கணிக்க விரும்பவில்லை நாகய்யா.

''கள்ளுக்கடை கண்ணுசாமி செல்வாக்கு உள்ளவன் என்கிறார்களே, உத்திரவை ரத்து செய்து வாங்காமலா வருவான்.'' என்று ஐயம் தெரிவித்தான் நாகய்யா.

''அப்படி உத்திரவு வாங்கிவந்து விட்டால் நாங்களே உங்களை வழியனுப்பி வைக்கிறோம்'' என்று சொல்லி ரயில் நிலையத்திலிருந்து திரும்பக் கூட்டிக்கொண்டு வந்துவிட்டார்கள்.

எதிர்பார்த்ததற்குமாறாக, கண்ணுசாமியின் பாச்சா ஜில்லா போர்டு தலைவரிடம் பலிக்கவில்லை. போன மச்சான் திரும்பிவந்த கதையாகத் தலையைத் தொங்கப்போட்டுக் கொண்டு வெறுங்கையோடு மாவடி வந்தான்.

நாகய்யா ஆசிரியர் பதவியை ஒப்புக்கொண்டதோடு மாற்றலாகிச் செல்லும் பழைய ஆசிரியருக்கு தக்கபடி ஒரு பிரிவு உபசாரம் வேறு நடத்திக் காண்பித்தான். பழைய ஆசிரியரின் ஆதரவாளர்கள் வெளிப்படையாக இந்த உபசாரத்தை ஆதரித்ததாகக் காட்டிக்கொண்டாலும் உள்ளுக்குள் அவர்களுக்கு ஒரே வேக்காடு.

கண்ணுசாமி உள்ளுக்குள் கருவினான். ''இரு இரு உன்னை என்ன செய்கிறேன் பார்'' என்று வன்மம் வைத்தான். நாகய்யாமீது என்ன பழியைச் சுமத்தி ஊரைவிட்டு விரட்டலாம் என்று இராப் பகலாய் யோசனை செய்ய ஆரம்பித்தான்.

2

யார் இந்த கண்ணுசாமி ? கண்ணுசாமி குடும்பமே பரம்பரையாக கள்ளுக்கடை குத்தகை எடுக்கிறவர்கள். கண்ணுசாமி அக்கரை சீமையிலிருந்து அண்மையில்தான் ஊருக்கு வந்தவன். மலேயாவிலோ சிங்கப்பூரிலோ ஒரு சாராயக்கடையை நடத்துகிறதாம் அவன் குடும்பம். குடும்பத்தில் ஒருவர் மாறி மாறி அங்கேபோய் அதை மேற்பார்வை பார்ப்பார்கள். ஊரில் நிலபுலங்கள் பனந்தோப்பு தென்னந்தோப்பு சேர்க்கை நாளுக்குநாள் அதிகமாகிக்கொண்டே வந்தது.

கண்ணுசாமிக்கு நாற்பது வயதிருக்கும். சமீபத்தில் அவனில் ஏற்பட்ட மாற்றம் இரண்டு தங்கப் பல் கட்டிக் கொண்டு வந்திருப்பதுதான். அவன் சிரிக்கும்போது மற்றவர்களும் சிரிப்பார்கள்—ஏகத்தாளமாக அந்தப் பல்லைப் பார்த்து. கண்ணுசாமி வருவதற்குமுன் அவன் வரவுக்குக் கட்டியம் கூறுவது கள் வாசனை அல்ல; அவன் சிங்கப்பூரிலிருந்து கொண்டுவந்திருக்கும் ஒருவித வாசனை. அது சீமைச்சாராய வாசனைதான் என்று சிலர் மறைவாக தங்களுக்குள் எள்ளி நகையாடுவது வழக்கம்.

மதுவிலக்கு, மாவடியிலும் அதைச்சுற்றியுள்ள கிராமங்களிலும் வெகுகாலமாக தலைகாட்டவில்லை. சில இளைஞர்கள் மட்டும் அவ்வப்போது நகர்ப்புறங்களில் கேட்ட கொள்கைகளைப் பின்பற்றி மதுவிலக்கு பிரசாரம் செய்யத் தொடங்குவார்கள். ஆனால் கள்ளுக்கடை கண்ணுசாமி இரவோடு இரவாய் எல்லா பெரியதனக்காரர்களையும் அழைத்து அழகாக ஒரு கள் பார்ட்டி நடத்திக் காண்பித்துவிட்டானானால்—அவ்வளவுதான்—படம் எடுத்த பாம்புபோல அந்தப்பிரச்னை படுத்துவிடும்.

ஆயினும் கள்ளை ஒழித்தே ஆகவேண்டும் என்ற உணர்ச்சி அந்த வட்டாரத்தில் மறைந்துபோய் விடவில்லை. அதுவும் சங்கிலியோடு வளர்ந்து வந்தது என்றுகூடச் சொல்லலாம்.

சங்கிலி இதற்காகத்தானோ என்னவோ புழுதியில் நட்ட சம்பா நடுகையைப்போல செழிப்பாக வளர்ந்து விட்டாள். இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் சிற்றாடையைக்கூட நன்றாகச் சுற்றிக்கொள்ளத் தெரியாத சங்கிலி, இப்போது நம்பமுடியாதபடி பச்சை மஞ்சளை முறித்ததைப்போல கண்ணைப்பறிக்கும் பொலிவோடு விளங்கினாள்.

பலதடவைகளில் வாய்க்கால்கரைகளிலும் வயல்வரப்புகளிலும் சங்கிலியை அவன், எதிரேவரக் கண்டிருக்கிறான். அவன்தான் புதிதாக வந்த ஆசிரியர் என்று அறிந்த பொழுது, சங்கிலியும் கண்களை அகலவிழித்து; தன் நெஞ்சகத்துப் புகவும் வழிவிட்டாள்.

இதற்குமுன்னில்லாத புத்தம்புது உணர்ச்சிகள் சங்கிலியிடம் தோன்றி வலுக்க ஆரம்பித்தன. நாகய்யாவின் அழகிய முகம், கூரிய விழிகள், தூய ஆடம்பரமற்ற தன்மை, இனிய மொழிகள் எல்லாம் அவளுடைய இதயத்தில் சதா உலவி அவனைப்பற்றி இடையறாமல் நினைக்கத் தூண்டின.

அறுவடை சமயத்திலும் அறுவடை முடிந்த உடனுந்தான் கள்குடி அபரிமிதமாக இருக்கும். களங்களிலும் களத்துமேட்டுகளிலும் கள் மிடாக்களிலும் குடங்களிலும் குடுவைகளிலும் வந்து இறங்கிய வண்ணமாக இருக்கும். ஆண்களும் பெண்களும், ஓலைப்பட்டைகளிலும், கலயங்களிலும், கள்ளை ஊற்றி ஊற்றி குடித்து மயங்குவார்கள்.

காசை வாங்கிக்கொண்டு கள் விற்பதிலும், நெல்லுக்குக் கள்ளைப் பண்டமாற்று செய்வதில்தான் அதிக லாபம் என்பது கண்ணுசாமி கண்டு வைத்திருந்த சிதம்பர ரகசியம். அதனால்தான் வயல்களிலும் களத்துமேடுகளிலும் கள்ளை ஆறாகப் பாயவிட்டு வயல்நெல் வீடு வந்து சேர்வதற்குள்ளேயே அவன் நெல்லை அபகரித்துச் செல்லும் கொடுமையை மாவடி இளைஞர்கள் கண்டிக்கத் தலைப்பட்டார்கள்.

முதல்நாள் இரவில் பள்ளிக்கூடத்தில் ஆசிரியர் தலைமையில் ரகசியக்கூட்டம் நடத்தி கள்ளை அடியோடு ஒழிக்க ஆலோசனை செய்தார்கள். அதில் முக்கியமான யோசனை கள்குடியின் தீமையைப்பற்றி முதலில் மக்கள் உணர்ந்து மனம் திருந்த வேண்டும்.

ஆகையால் ஊரில் பெரியவர்களை நேருக்கு நேர் சந்தித்து அதைப்பற்றி விளக்கவேண்டும். அடுத்து, கள் விற்பனை, கடையோடு மட்டும் நிற்காமல் வயல்களிலும் களங்களிலும் விற்கப்படுவது உடனே நிறுத்தப்பட வேண்டும்.

ஆலோசனைப்படி மறுநாள் இளைஞர்கள் வயல்களிலும் களங்களிலும் சுற்றித்திரிந்து, விற்பனை நிலவரத்தை அறிந்து வந்து மூன்றும் நாள் இரவில் ஊர்க் கூட்டம் போட்டு அதைத் தடுத்துவிடத் திட்டம். நாகய்யா தற்செயலாக போவதுபோல பல களங்களைப்போய்ப் பார்த்தான்.

சங்கிலி வீட்டார் களத்தை தங்கள் வயலிலேயே வைத்திருந்தார்கள்.

நெல்லும் நெற்கதிர் கட்டுகளும், வைக்கோலும், வைக்கோல் பொருளுமாக காட்சியளிக்கும். களத்தில், ஆடவரும் பெண்டிரும் இயல்பாக மகிழ்ச்சியோடு விளங்குவார்கள். பாடுபட்ட பலன் கிடைக்கும் சமயம் அல்லவா ? அறுவடை முடியும் வரை இரவும் பகலும் களங்களிலேயே தங்கி விடுவதும் உண்டு. வெயிலுக்கும்—பனிக்கும் மறைவாக சிறு சிறு குடில்களை அமைத்துக் கொண்டு, அங்கேயே உண்டு உறங்கி உழைப்பதில் ஒரு தனி மகிழ்ச்சிதான்.

நாகய்யா களத்தை அடைந்தபோது ஆசிரியருக்கு உரிய மரியாதையோடு அவனை வரவேற்றார்கள். சங்கிலியின் தமையன் அங்கே கிடந்த வைக்கோல் கட்டு மீது நாகய்யாவை அமரும்படி வேண்டினான்.

பக்கத்து கிராமத்துக்கு ஒரு வேலையாகத் தான் போவதாகவும் வரும் வழியில் தற்செயலாக அங்கு வந்ததாகவும் கூறிக்கொண்டு, அங்கு கள் நடமாடுகிறதா என்று நோட்டம் விட்டான்.

கள் வாசனை களத்து வாசனையோடு எங்கும் பரவியிருந்தது. அதிகாலையிலேயே கள் அங்கு வந்துவிட்டதற்கு அறிகுறியாக கள் பானைகள், முட்டிக்கலயங்கள், சொண்டான்கள் அங்கே தென்பட்டன.

சங்கிலியின் தமயன் முத்தன் அவனிடம் மிக மரியாதையாக உரையாடினாலும்—கள்குடி மயக்கத்தால் உரை குளறினான். சங்கிலி அங்கே வைக்கோல் போருக்கு அருகே நின்று கொண்டிருந்தாள். இரண்டு மூன்று தடவைகள் அவர்கள் கண்கள் சந்தித்தன. நாகைய்யா முத்தனிடம் விடை பெற்றுக் கொண்டு அங்கிருந்து அகன்று வந்து விட்டான். அதற்குப் பின்னர் வேறு எந்தக் களத்துக்கும் போகவில்லை—போகத் தெம்பு இல்லை. சங்கிலி கள்குடி மயக்கத்தில் நின்றிருந்ததைக் கண்ட பாவம் தான். அவள் கண்கள் செவ்வலரி போல சிவந்திருந்தன. இயற்கையாக மலர விழிக்கும் மான் போன்ற மருண்ட விழிகள் எங்கே ! கட்குடியால் சிவந்து தன்னைப் பார்க்க கூசிய இந்த விழிகள் எங்கே !

இவ்வாறு நொந்து போயிருந்த அவன் உள்ளத்தில் இன்னொரு அடி விழ்ந்தது உடனடியாக. அவனைப் போலவே களத்து மேட்டுகளில் சுற்றி வேவு பார்த்து விட்டு வந்த இரு உற்சாகமான இளைஞர்கள் இந்தச் சங்கதியையும் கொண்டு வந்தார்கள். அதாவது: சங்கிலி வீட்டுக்குக் கள்ளுக்கடை கண்ணுசாமி குடுவை குடுவையாகக் கள் அனுப்புவதைப் பற்றி மாவடியிலும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களிலும் பலவித வதந்திகள் அருவருக்கத்தக்க விதமாக உலாவுவதைத்தான் அவர்கள் நாகய்யாவிடம் சொன்னார்கள்.



அந்தச் சங்கதி அவன் காதில் விழுந்த போது தூண்டில் புழுவைப் போல் துடித்தான். 'சே ! இப்படி ஒரு நாளும் இருக்காது. ஒரு வேளை உள் நோக்கத்தோடு கண்ணுசாமி இலவசமாகக் கள் அனுப்புவதில் வேணுமானால் ஒரு வேளை உண்மை இருக்கலாம். ஆனால் அதற்காகச் சங்கிலி மீது இந்த அவதூறு சுமத்துவது அபாண்டம். அடுக்காது. இரவு பகலாக ஒரு புழு இருந்து குடைவது போல நாகய்யா துடித்துக் கொண்டிருந்தான்.

ஒரு வாரம் கழிந்தது. தற்செயலாக சங்கிலியின் தமையன் முத்தனை வாய்க்கால் ஓரத்தில் சந்தித்தான். முத்தன் மிகவும் நல்லவன். நாகய்யாவிடம் தனி மதிப்பும் கொண்டவன். அவனிடம் நாகய்யா முதலில் பொதுவாகக் கிராமத்தைப் பற்றிப் பேசிவிட்டு பின்பு சாமர்த்தியமாக அந்த வதந்தியைப் பற்றி விசாரித்தான்.

பெண்கள் குடிப்பது வழக்கம் என்றும் அம்மாதிரியே சங்கிலியும் குடிப்பது உண்டு என்றும் அதைத் தவிர மற்றபடி பேசுவது எல்லாம் வம்பு என்றும் சொன்னான்.

நாகய்யாவுக்கும் மகிழ்ச்சியும், துக்கமும் கலந்த ஓர் உணர்ச்சி. அந்த வதந்தியில் உண்மை எதும் இல்லை என்பதில் மட்டற்ற மகிழ்ச்சி. சங்கிலியும் குடிக்கிறாள் என்பதில் ஒரே வருத்தம்.

“ போகட்டும், சங்கிலி சின்னவள் தானே? அவளாவது குடிக்காமல் இருக்கலாகாதா ?” என்று உருக்கமாக வேண்டிக் கொண்டான்.



மறுநாள் அதிகாலையில் நாகய்யாவின் வீட்டுக் கதவைத் தட்டினான் முத்தன். நாகய்யா வெளியே வந்தான். முத்தன் சொன்னான் : “ வாத்தியாரையா ! நீங்க சொன்னதை சங்கிலியிடம் சொன்னேன். அவ்வளவு தான். தங்கச்சி என்ன சொன்னாள் தெரியுமா ? கள்ளைக் கையால் இனிமேல் தொடுவது கூட இல்லை என்று என் தலையில் அடித்துச் சத்தியம் செய்து விட்டாள். உங்கள் மனம் நோகும்படி நடந்து கொண்டோமே என்று சங்கிலி ரொம்பச் சங்கடப்பட்டாள் ” அதைக் கேட்ட நாகய்யா அது நனவு தானா என்று தன் காதுகளை நம்பமுடியாமல் திகைத்தான்.

நாகய்யா இவ்வளவு காலமும் தனிமையைத் துணையாகக் கொண்டு வாழ்ந்து வந்தான் அல்லவா ! இப்போது சங்கிலியைக் கல்யாணம் செய்து கொள்ள வேண்டுமென்ற எண்ணம் வேரூன்றி விட்டது. இனி முத்தனிடம் தன் விருப்பத்தைத் தெரிவிக்க வேண்டியது தான்.

ஒரு நாள் முத்தன் வயலில் வேலை செய்து கொண்டிருந்தபோது அவனை அணுகித் தன் விருப்பத்தை மெதுவாக அவனிடம் வெளியிட்டான்.

முத்தன் அங்கலாய்த்தான். “ தம்பி இதை நீ முன்னமே சொல்லியிருக்கக்கூடாதா. சங்கிலிக்கு உனக்கு வாழ்க்கைப்படக் கொடுத்து வைத்திருந்தால் அது புண்ணியம் செஞ்சதாச்சே ! இந்தக் கள்ளுக்கடை கண்ணுசாமியினால் ஏற்பட்ட புரளியினாலே அவளுக்குக் கருங்காட்டுக் கிராமத்தில் ஒருத்தனுக்கு கொடுக்க நிச்சயமாயிட்டதே ! ”

நாகய்யாவுக்கு அவன் மனசைப் போலவே, அவன் கண்ணுக்குத் தோன்றிய பொருள்கள் யாவும் சுழன்றன.

## 3

சங்கிலி மாவடியைவிட்டு கருங்காட்டுக் கிராமத்துக்குப் போன ஒரு வாரத்துக்குள், மாவடியும் அதைச் சுற்றியுள்ள கிராமங்களும் ஒரு நல்ல ஆசிரியரை இழந்து விட்டன எப்படியோ நாகய்யா அந்த ஊரை விட்டுத் தன்னை மாற்றிக் கொண்டான்.

நாகய்யா மாவடியை விட்டு நான்கு ஆண்டுகள் ஓடி மறைந்து விட்ட பின்னர், புளியங்குளம் என்ற ஊரிலுள்ள ஒரு பெரிய பள்ளிக்கூடத்துக்கு உதவி ஆசிரியராக அவன் நியமிக்கப்பட்டு மாற்றல் உத்தரவு வந்து சேர்ந்தது.

புளியங்குளத்தில் நாகய்யாவுக்கு வசதியான வீடு எதுவும் கிடைக்கவில்லை. ஆகையால் புளியங்குளத்துக்கு அருகில் உள்ள கருங்காடு என்ற கிராமத்தில் வீடு கிடைக்கும் என்று தலைமை ஆசிரியர் சொன்னார்.

'கருங்காடு' என்ற பேரைக் கேட்ட மாத்திரத்திலேயே திடுக்கிட்டது நாகய்யாவின் மனம். அலை அலையாக எண்ணங்கள் வந்து மோதின. பேசாது கற்சிலைபோல நின்றான்.

இதற்குள் தலைமை ஆசிரியர் கருங்காட்டிலிருந்து அங்கு வேலை செய்ய வந்திருந்த ஒருவனிடம் நாகய்யாவை அறிமுகப்படுத்தி வைத்து. அவனுக்கு வசதியாகவுள்ள ஒரு சின்ன வீடு பார்த்துக்கொடுத்து உதவி செய்யும்படி சொன்னார்.

உற்சாகமாக அதை ஒப்புக்கொண்டான் அவன். தன்னிடமே ஒரு வீடு இருப்பதாகவும் அந்த ஆசிரிய

ருக்குப் பிடித்திருந்தால் அதிலேயே தங்கலாம் என்றும் சொன்னான். எனவே, அவனுடைய சாமான்கள் கொண்ட மாட்டு வண்டி மீண்டும் பூட்டப்பட்டது.

அப்போது பொழுது மறையும் வேளை. தடத்தின் வழியாக வண்டி முன்செல்ல இருவரும் பின்னால் நடந்து சென்றனர்.

அந்த மனிதனிடம் அப்போதே சங்கிலியைப் பற்றி விசாரிக்க வேண்டுமென்ற எண்ணம் அவனை உந்தித் தள்ளியது. ஆனால் அது அழகாக இருக்காது என்று படவே அதைப்பற்றி எதுவும் பேசாது அந்த எண்ணத்தை அடக்கிக்கொண்டான்.

சாலை ஓரத்தில் உள்ள ஒரு வீட்டின் முன்னால் வண்டி நிறுத்தப்பட்டது. அவன் சாவி கொண்டு வந்து வீட்டு முன்வாசலைத் திறந்து அரிக்கேன் லாந்தல் ஒன்றை ஏற்றி வைத்துச் சாமான்களையும் வீட்டினுள் கொண்டு வந்து சேர்த்தான் அங்கு கிடந்த ஒரு கயிற்றுக்கட்டிலில் அவனுடைய படுக்கையை விரித்துப் போட்டான், அதில் உட்கார்ந்துகொண்டிருந்தான் நாகய்யா.

"இந்தா, இவனைப் பிடி, எவ்வளவு சேட்டை பண்ணுது வர வர" என்று குழந்தையை அவனிடம் கொடுத்து விட்டு, "இவர்தான் புது வாத்தியார் அய்யாவா?" என்று அன்புடன் தன் வரவேற்பைத் தெரிவித்தாள் அவன் மனைவி, தானும் ஏதாவது பேசவேண்டும் என்பதற்காக.

"குழந்தைக்கு வயது என்ன?" என்று கேட்டான் நாகய்யா.

"மூனு வயசு முடிஞ்சு போச்சு" என்றாள் அவள்.

"பேரு?"

"பேரு நாகய்யா."

நாகய்யா திடுக்கிட்டது அந்த தம்பதிக்கு தெரியாது, "நாகய்யாவா......?" பலமான சிந்தனை ஓட்டம் அவன் இதயத்தில் ஓட ஆரம்பித்தது,

வந்த களைப்பினால் படுத்துக்கொண்டான் நாகய்யா. சுவர்க்கோழிகள் விடாமல் 'உய்ங்' என்று கத்திச் செவியைப் பிய்த்துக்கொண்டிருந்தது.

சற்று நேரம் கழிந்ததும் கதவு திறக்கும் சப்தம் கேட்டது. நாகய்யா எழுந்தான். அவன் கண்களை நம்ப முடியவில்லை. சங்கிலி: ஆமாம், சங்கிலியேதான் !!

மீண்டும் கதவைச் சாத்திவிட்டு அவன் அருகில் வந்தாள் சங்கிலி. அவள் கண்களில் கண்ணீர் வெள்ளம் புரண்டோடியது. நாகய்யா என்ன பேசுவது என்று தெரியாமல் திணறிக்கொண்டிருந்தான்.

"உங்களுக்காக நான் எவ்வளவு நாள் காத்துக்கொண்டிருக்கிறேன்; என்னை நீங்கள் மறந்துவிட்டீர்களா? என்னால் ஒரு நிமிஷம் கூட உங்களை மறக்க முடியவில்லையே. என் மனம் உங்களையேதான் சுற்றிக்கொண்டிருக்கிறது, மலரைச் சுற்றி சதா வட்டமிடும் வண்டைப் போல...." என்று கூறியவண்ணம் அவனை நெருங்கிக் கட்டிலின் மீது அமர்ந்தாள்.

சங்கிலி இவ்வளவு அழகாகப் பேச எங்கு கற்றுக் கொண்டாள்? சாதாரண கிராமப் பெண். மாவடி கிராமத்தை விட்டுக்கூட நகர்ப்புறங்களுக்கு அவள் அதிகம் போனது இல்லை. தன்னிடம் இவ்வளவு தூரம் அவள் அன்புகொண்டிருந்தது தனக்குத் தெரியாமல் போயிற்றே. அவளுக்காக யாராவது காத்துக்கொண்டிருந்தார் என்றால் அது தான் அல்லவா? அவளை அல்லவா தான் மறந்துவிட முடியவில்லை. அவளை அல்லவா தன் மனம் சதா சுற்றிக்கொண்டிருக்கிறது. ....

இவ்வாறு நினைத்த நாகய்யா வெள்ளம் எனப் பாயும் அவள் கண்ணீரைத் துடைக்க எண்ணி கட்டிலில் படுத்துக் கிடந்த அவன் எழுந்து அவளை நெருங்கி அமர்ந்த பொழுது கதவு மீண்டும் கீச்சிட்டுக்கொண்டு திறந்தது!

நாகய்யா திடுக்கிட்டுக் கண்விழித்தான். சங்கிலி? —சங்கிலி எங்கே? என்ன பயங்கர இன்பக் கனவு!

அவன் உணவோடு உள்ளே வந்து அவனைச் சாப்பிட வேண்டினான். அவன் மனைவி பாத்திரத்தில் தண்ணீர் கொண்டுவந்து வைத்துவிட்டுப் போய்விட்டாள்.

அந்த மனிதனிடம் நாகய்யா, "ஆமாம்.. மாவடி கிராமத்திலிருந்து ஒரு பெண் இந்த ஊருக்கு வாழ்க்கைப்பட்டு வந்திருக்கிறாளே—சங்கிலி என்று பேர்—அவள் வீடு எங்கே? அவள் சவுக்கியமா? நான் நாலு வருஷங்களுக்கு முன்னால் மாவடி பள்ளிக்கூடத்தில் ஆசிரியராக இருந்தேன். அவர்கள் குடும்பத்தை எனக்கு நன்றாகத் தெரியும்" என்றான்.

அவன் முகம் திடீரென்று மாறுதல் அடைந்தது. விம்மலும் பொருமலும் அவன் தொண்டையை நெரித்தது. "இந்தப் பாவிக்குத் தான் தங்கம்போல அந்தப் பெண்ணைக் கொடுத்தார்கள். ஒரு வருஷத்துக்குள் இந்தப் பிள்ளையைப் பெத்துவிட்டுப் பாயும் படுக்கையும் ஆனாள். அவள் மனசில் என்ன கவலையோ தெரியாது. நீங்க உக்காந்திருக்கும் கட்டிலில்தான் ஆறு மாதம் கிடந்தாள். பண்ணாத வைத்தியம் இல்லை. எண்ணாத தெய்வம் இல்லை. கடைசியில் என்னை விட்டுவிட்டுப் போய்விட்டாள்.."

நாகய்யாவின் மனமும் தலையும் பம்பரம்போல் சுற்றியது மேலும் சங்கிலியின் கணவன் சொன்னது அவன் காதில் விழவில்லை.

—o—


விவசாய வளமைக்கு வழிகோலான சிறந்த பயிர்களின் விளைச்சலுக்கு—உலகப் பிரசித்திபெற்ற

**35எச்.பி. மக்கார்மிக் இண்டர்நேஷனல் பி-275 ட்ராக்டர்**

இப்பொழுது இந்தியாவில் தயாரிக்கப்படுகிறது



விரைவில் சேர்ப்பிக்கப்படும்

அனுமதிபெற்று, தயாரிப்பவர்கள்,

இண்டர்நேஷனல் டிராக்டர் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட், பம்பாய் (இண்டர்நேஷனல் ஹார்வெஸ்டர்அவர்களின்)

ஏகபோக வினியோகஸ்தர்கள்,

VOLTAS

**வால்டாஸ் லிமிடெட்**

அக்ரோ—இண்டஸ்டிரியல்—
பிராடக்ட்ஸ் டிவிஷன்,
150-பி. மவுண்ட் ரோடு,
சென்னை-2.



PRESYN/IT/IA/66

BUY THE SENSATIONAL NEW
GEM MONOBLOCK PUMP?



FOR AMAZING
RELIABILITY !

☆ STURDY
☆ STRONG
☆ DEPENDABLE

by the makers of
dependable GEM Motors

GAUTAM ELECTRIC
MOTORS
42, Okhla Industrial Estate,
New Delhi-20

Sole Selling Agents:
Messrs
TURNER HOARE & Co. Ltd
Bharat Buildings
Mount Road, P. B. 2427
MADRAS.

IWT/GEM/4229

ஏ. பி. சி. காரேஜ்,

ஆட்டோமொபைல் இஞ்சினியர்ஸ், 84, பாலக்கரை, திருச்சிராப்பள்ளி-1.

(தமிழக அரசினர் அங்கீகாரம் பெற்றது) தொலைபேசி எண் : 5619

சப்டீலர்ஸ் : எஸ்கார்ட் டிராக்டர், டெம்போ த்ரீ வீலர்,
வைக்கிங், வெஸ்பா ஸ்கூட்டர், வெஸ்பா ஆட்டோ
ரிக்ஷா மற்றும் எல்லா விதமான கார், ஜீப், பஸ்,
லாரி, டிராக்டர் முதலானவைகளை குறித்த
காலத்தில், குறைந்த சார்ஜில், நல்ல
முறையில் வேலை செய்து கொடுக்கிறோம்.

ஏ. பி. சின்னப்பன், உரிமையாளர்.

தி ரஞ்சனா மோட்டார் வேர் ஹவுஸ்

84, பாலக்கரை, திருச்சிராப்பள்ளி-1

(இறக்குமதியாளர்கள் : சீல் டெஸ்ட் U.S.A., ஜீப் சாமான்கள், இங்கிலீஷ் ஸ்டான் பார்ட்ஸ்,
பி.எம்.சி. பார்ட்ஸ், பெமாக்ஸ் பார்ட்ஸ் முதலியன)

எங்களிடம் கார், லாரி, ஜீப், டிராக்டர் முதலியவைகளுக்கு எல்லாவிதமான ஒரிஜினல்
சாமான்கள், குறைந்த விலைக்குக் கிடைக்கும்.



இல்லம் நோக்கி

நாள் முழுவதும் கடுமையான உழைப்பு. இன்ப இல்லம்—உங்களது சொந்த இல்லம்—நோக்கிச் செல்ல வேண்டும் என்ற அவா உங்களுக்கு இல்லையா?

பிறகு ஏன் தயக்கம்? இன்றே கட்ட ஆரம்பியுங்கள் உங்களது இல்லத்தை. நாங்கள் வேண்டிய அளவு தருகிறோம்

SANKAR I C BRAND

சங்கர்
பிராண்ட்
சிமெண்ட்

தேவைக்கு உங்கள் அருகாமையிலுள்ள எமது ஸ்டாக்கிஸ்டுகளை அணுகவும். அல்லது எமக்கு எழுதவும்.

இந்தியா சிமெண்ட்ஸ் லிட்.
ரிஜிஸ்டர்ட் அலுவலகம்:
'தன் பில்டிங்', 175/1 மவுண்ட் ரோடு, சென்னை-2.
தொழிற்சாலைகள்: சங்கர்நகர், திருநெல்வேலி மாவட்டம்
சங்கரி மேற்கு, சேலம் மாவட்டம்

Criterion-ICT-1546T

விவசாயிகளுக்கு வேளாண்மை ஆண்டு முழுதும்
வேலை வாய்ப்பளிக்கும் முழுநேரத் தொழிலும் அல்ல;

விவசாயத்தின் மூலம் கிடைக்கும்
வருமானமும் போதுமானதல்ல.

## கதரும் கிராமத் தொழில்களும்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலை வாய்ப்பளிக்கின்றன.

* கதர் - கிராமத் தொழில்களை ஆதரிப்பது
* உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்.

தமிழ்நாட்டுக் கதர் - கிராமத் தொழில் ஆயத்தின்
நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்பெற்ற

* கதர் * கதர்ப்பட்டு * சோப் * தேன் * செக்கெண்ணெய் * பனைவெல்லம் * சர்க்கரை * மண்பாண்டம் * தோல் பொருள்கள் * வார்ப்படங்கள் * பித்தளை, வெண்கலப் பாத்திரங்கள் * பனைப் பொருள்கள்—இன்னும்—

பற்பல கைநுட்பத் தொழில் பொருள்கள்
கதர்-கிராமத் தொழில் விற்பனை நிலையங்களிலும்
சென்னை "குறளகத்"தில் இயங்கும்
கதர்-கிராமத் தொழில் அங்காடியிலும்
விற்பனைக்கு உள்ளன.

வெளியீடு—

கதர்-கிராமத் தொழில் துறை,
2, சர் தேசிகாச்சாரி ரோடு, சென்னை-4.

படத் தொகுப்பு விளக்கம்: முதல் பக்கம் (எதிரில்)

படம் 1: பத்து நாட்கள் தமிழகத்தில் சுற்றுப் பயணம் செய்துவிட்டு, இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் திரு வி. வி. கிரி, அவர்கள் 4-4-68 அன்று ரயில் மூலம் நெல் லூருக்குப் பயணமானார். சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில், அவருடன், மாண்புமிகு கல்வி அமைச்சரும் மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சரும்.

படம் 2: 28-3-68 அன்று நடைபெற்ற மாநிலங்களவைத் தேர்தலில், மாண்புமிகு வேளாண் மைத் துறை அமைச்சர் தன்னுடைய வாக்கினைப் பதிவு செய்கிறார்.

படம் 3: செக்கோஸ்லேவியா நாட்டுத் திரைப்படக் குழுவினர் 19-4-68 அன்று, மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்களைச் சந்தித்து உரை யாடினர்.

படம் 4: சோவியத் நாட்டிலுள்ள 'வால்காகிராட்' நகராட்சி மன்றத்தைச் சேர்ந்த மூவர் அடங்கிய தூதுக்குழு ஒன்று 17-4-68-ல், தமிழகத்திற்கு வருகை தந்தது. அத்தூதுக் குழுவினர், 17-4-68 அன்று, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கோட்டையில் சந்தித்து, அளவளாவினர்.

இரண்டாம் பக்கம் (அடுத்தது)

### தமிழக முதல்வரின் வெளிநாட்டுப் பயணம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரை அவர்கள், 15-4-68-ல் அமெரிக்க நாட்டிற்குப் புறப்பட்டுச் சென்றார்.

படம் 1: சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில், தமிழக முதலமைச்சருடன், மாண்புமிகு தமிழக அமைச்சர்கள் (15-4-68).

படம் 2: மேதகு தமிழக ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள், மீனம்பாக்கம் விமான நிலையத்திற்கு வந்திருந்து, முதலமைச்சரை வழியனுப்பி வைத்தார் (15-4-68).

படம் 3: விமான நிலையத்தில் மாண்புமிகு முதலமைச்சருடன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்கள் (15-4-58).

விமான நிலையத்தில் மாண்புமிகு அமைச்சர்கள், நாடாளுமன்ற, தமிழக சட்டப்பேரவை உறுப்பினர்கள், அதிகாரிகள், பொது மக்கள் பெருந்திரளாகக் கூடியிருந்து, முதல மைச்சரை வழியனுப்பி வைத்தனர்.

கிராம நலம்-சந்தா விவரம்
ஆண்டு சந்தா ரூ. 2·00
தனிப்பிரதி விற்பனைக்குக் கிடையாது.




















## அருமனை கூட்டுறவு விவசாய பாங்கு

(வரையறுக்கப்பட்டது)

நிர். ஒய். 47 அருமனை தொலைபேசி எண். 5.

அருமனை அஞ்சல், கன்னியாகுமரி மாவட்டம்,

திரு. கே. வி. தம்பி, தலைவர்.

திரு. என். புஷ்பதரன், மேற்பார்வையாளர்—காரியதரிசி.

| | ரூ. |
|---|---|
| அனுமதிக்கப்பட்ட மூலதனம் .. .. | 1,00,000 |
| வழங்கப்பட்ட பங்கு மூலதனம் .. .. | 90,000 |
| டிப்பாசிட்டுகள் (Deposits) .. .. | 60,000 |
| நடைமுறை மூலதனம் .. .. | 8,50,000 |

பாங்கிலிருந்து விவசாய முன்னேற்றத்திற்காக குறுகிய கால கடன்களும், நிலச்சீர்த்தத்திற்காக மத்திய கால கடன்களும் வழங்கி வருகிறோம். ரசாயன உரங்கள், உணவு தானியங்கள் முதலிய அத்தியாவசியப் பொருட்களை அரசாங்கம் நியாயமான விலையுடன் பாங்கின் கீழ் நடக்கும் 11 டிப்போக்கள் மூலம் பொது மக்களுக்கு வழங்கி வருகிறோம்.

"கூட்டுறவே நாட்டுயர்வு"

என். புஷ்பதரன்,
மேற்பார்வையாளர்—காரியதரிசி.


படத் தொகுப்பு விளக்கம் : இடப்பக்கம்.

படம் 1: புதுடெல்லி ஜும்மா மஜீத் இமாம் அவர்கள், குடும்பக் கட்டுப்பாட்டின் அவசியத்தைப் பற்றியும், மதவேறுபாடின்றி அனைவரும் அதைக் கடைப்பிடிக்க வேண்டியது பற்றியும் அறிவுரை கூறுகிறார்.

படம் 2. செங்கற்பட்டு மாவட்ட "கிராம நலப் பணிகள் நிறைவு விழா" 9–4–68 முதல் 30–4–68 முடிய நடைபெற்றது. தமிழக அமைச்சர்கள் இவ்விழாவில் பங்கு கொண்டு சிறப்பித்தனர்.

செங்கற்பட்டு மாவட்டம் அச்சிறுபாக்கம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த தின்னனூரில், பள்ளிக் கட்டிடம் ஒன்றை, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்கள் 19–4–68-ல் திறந்து வைத்தார்.

படம் 3: இராமநாதபுரம் மாவட்டம், சிங்கம்புணரி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கணபதிபட்டி கிராமத்தில், சீரணிப்படையினர், ஊருணி ஒன்றினை மக்களுக்குப் பயன்படும் வகையில் திருத்தி அமைக்கும் பணியில் அண்மையில் ஈடுபட்டனர்.

படம் 4: செங்கற்பட்டு மாவட்டம் குன்றத்தூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த கொல்லடி பேட்டை கிராமத்தில் சீரணிப்படையினர் பள்ளிக் கட்டிட வேலையில் ஈடுபட்டனர்.

படத் தொகுப்பு விளக்கம் : உள் பக்கம்.

### அனைத்திந்திய மதுவிலக்கு மாநாடு

படங்கள் 1-2. நான்காவது அனைத்திந்திய மதுவிலக்கு மாநாடு சென்னையில், 1968 ஏப்ரல் 12, 13, 14 தேதிகளில் நடைபெற்றது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை அவர்கள் 12–4–68 அன்று மாநாட்டினைத் துவக்கிவைத்து சிறப்புரை ஆற்றினார். திருமதி டாக்டர் சுசீலா நய்யார் மாநாட்டிற்குத் தலைமை தாங்கினார். திரு கு. காமராஜ் பொருட்காட்சியைத் திறந்து வைத்தார். முன்னாள் முதலமைச்சர் திரு எம். பக்தவத்சலம் மாநாட்டு மலரினை வெளியிட்டார்.

படம் 3: மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு தமிழக முதல்வர் 14–4–68 அன்று விருந்தொன்று அளித்தார். இவ்விருந்து, சட்டமன்ற உறுப்பினர்களுக்கான புதிய விடுதியின் முகப்பில் நடைபெற்றது.

படம் 4: 'செங்கற்பட்டு மாவட்ட கிராம நலப் பணிகள் நிறைவு விழாவினை' ஒட்டி நடைபெற்ற நிகழ்ச்சிகளில் மாண்புமிகு உணவமைச்சரும் கலந்து கொண்டார். ஸ்ரீபெரும்புதூர் ஊராட்சி ஒன்றியம் சந்தவேலூர் கிராமத்தில், குழாய் மூலம் கிராம மக்களுக்கு குடிநீர் வழங்கும் திட்டத்தை அவர் துவக்கிவைத்தார். (9–4–68).

**கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம் லிமிடெட் நிர். ஒய். 26**

நாகர்கோவில்

தந்தி : மார்க்கட்டிங்

தொலைபேசி எண் : அலுவலகம் : 261

கிடங்கு : 476 அரிசி ஆலை : 477

திரு டி. சி. சுப்பிரமணிய பிள்ளை,
தலைவர்.

திரு வை. சுப்பிரமணியம்,
உப-தலைவர்.

| | | |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் .. .. | ரூ. | 6,00,000 |
| செலுத்தப்பட்ட மூலதனம் .. .. | ரூ. | 1,99,402 |
| அலுவல் நிதி .. .. .. .. | ரூ. | 8,92,355 |

கிளைகள் :—திங்கட் சந்தை, குளச்சல், தக்கலை, குழித்துறை, கன்னியாகுமரி, வீரநாராயண சேரி, ஆசாரிப்பள்ளம், குலசேகரம், அருமனை, கோதையாறு மேல் அணைக்கட்டு, கோதையாறு கீழ் அணைக்கட்டு, கேசவன்புதூர், கிரிப்பாறை.

நாகர்கோவில் : 12 கிளைகள்

- மாவட்டத்திலுள்ள கூட்டுறவுப் பண்டக சாலைகளுக்குத் தேவையான அத்தியாவசியப் பண்டங்களை விநியோகம் செய்யும் மொத்த விற்பனைக் கூட்டுறவுச் சங்கம்.
- அரிசி, சர்க்கரை, கோதுமை, கோதுமைப் பண்டங்களின் மொத்த விற்பனையாளர்கள்.
- தமிழக அரசு சார்பில், இரசாயன உரம் விநியோகிக்க மாவட்டத்தின் ஏகபோக விற்பனையாளர்கள்.
- H.M.T. கைக்கடிகாரங்களுக்கு மாவட்டத்தின் ஏகபோக விற்பனையாளர்கள்.

பொதுமக்களின் தேவைக்கான அத்தியாவசியப் பண்டங்களை, தங்களது 26 கிளைகளின் மூலம் விற்பனை செய்யும் ஒரே மொத்தக் கூட்டுறவு பண்டகசாலை.

உங்களுக்குத் தேவையான பொருள்களை எங்கள் கிளைகளின் மூலம் மொத்தமாகவும், சில்லறையாகவும் வாங்கிப் பயனடையுங்கள்.

ம. சுவாமிதாஸ், பி.ஏ.,
கூட்டுறவு உப-பதிவாளர்—செயலாளர்.



**" கூட்டுறவே நாட்டுயர்வு "**

**வடசேரி கைத்தறி நெசவாளர் (உற்பத்தி—விற்பனை) கூட்டுறவுச் சங்கம்**

லிமிடெட் நம்பர் 2183

ராமவர்மன் புதுத் தெரு, வடசேரி, நாகர்கோவில்.

(கன்னியாகுமரி மாவட்டம்)

நிறுவனம் : 1941

தொலைபேசி எண் : 141

எங்களிடம் 20s, 26s, 40s, 60s, 80s, நூல் கௌண்ட்களில் தயார் செய்த வேட்டி, பீஸ், துவர்த்து, புளியிலைக்கரை வேட்டி, கலர் பீஸ், லுங்கி, பெட்ஷீட், பல டிசைன் களிலும் டேப், குண்டஞ்சு பார்டர் வேட்டி, டவல் முதலியவைகள் எப்பொழுதும் சிறந்த தயாரிப்புடன் குறைந்த விலையில் சில்லறையாகவும் மொத்தமாகவும் விற்பனை செய்யப் படுகிறது. எங்கள் உற்பத்தி ஜவுளிகள்

" ஹான்லூம் ஹவுஸ் "

" கோவாப்டெக்ஸ் "

விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

சங்கத்தின் கிளைகள் :

நாகர்கோவில், கோட்டாறு, ஒழுகினசேரி, எர்ணாகுளம், கோட்டயம், சென்னை முதலிய இடங்களில் உள.

K. சண்முக சுந்தரம், B.A.,
கூட்டுறவு உப-பதிவாளர்—செயலாளர்.

சு. இராமசாமி,
தலைவர்.



# அளவோடு பெற்று வளமோடு வாழுங்கள்



சிவப்பு முக்கோணம்
குடும்ப நல திட்டத்தின் சின்னம்

# குடும்பக்கட்டுப்பாடு செய்திடுவீர்

# SAKTHI SUGARS LIMITED

*Manufacturers of :*

**HIGH QUALITY WHITE CRYSTAL SUGAR**

*Now produce also Seeds of :*

HYBRID SORGHUM
HYBRID MAIZE AND
HYBRID BAJRA

These seeds are marketed after Certification by the National Seeds Corporation: Limited

*Registered Office :*
72, SENGUPTA STREET,
RAMNAGAR,
COIMBATORE.

*Sugar Factory at :*
APPAKUDAL POST
JAMBAI (via) BHAVANI TALUK
ERODE (RMS)

*Managing Agents :*

Messrs. BHAVANI ENTERPRISES, POLLACHI


## உலகத் தொழில்-வர்த்தக பொருட்காட்சியில்

# தமிழக அரங்கு

(திரு ஆர். பசுபதி, ஐ.ஏ.எஸ்., தொழில்—வாணிபத்துறை இயக்குநர், தமிழக அரசு)

1968 நல்லாண்டு, உலகத்தமிழ் மாநாட்டுடன் தொடங்கியது. தமிழ் மக்களின் உள்ளமெல்லாம் பூரிக்கும் வகையில் நடைபெற்று முடிந்த தமிழ் மாநாட்டை ஒட்டி, சிங்காரச் சென்னையிலே, இன்னொரு விழா, கண்ணுக்கும் கருத்துக்கும் விருந்தாக அமைந்தது. அந்த விழாவான உலக தொழில், வர்த்தகப் பொருட்காட்சியில், தமிழக அரசின் அரங்கு, மணிமகுடமாகத் திகழ்ந்தது. அவ்வரங்கின் சிறப்புகளை எடுத்து விவரிக்கிறது, இக் கட்டுரை—ஆசிரியர்.

"இணைந்து நின்று, வளம் பெருக்குவோம் (Prosperity through partnership) என்ற சீரிய நோக்குடன், நமது நாட்டின் வாணிபத்தை, வெளிநாடுகளில் மேன்மை அடையச் செய்யவும், விரிவுபடுத்தவும்—இந்த இலட்சியத்தை மையமாகக் கொண்டு, அகில இந்திய தயாரிப்பாளர்கள் சங்கமானது (All India Manufacturers' Association) சர்வதேசத் தொழிற் சந்தை ஒன்றினை ஏற்பாடு செய்வதென 1965-ல் விரும்பியது. மத்திய அரசு, தமிழக அரசுகளின் முழு ஆதரவுடனும், ஒத்துழைப்புடனும் இப்படிப்பட்ட ஒரு தொழிற் சந்தையை சென்னையில் நடத்த, தொழில் துறையில் பாரதத்தின் முக்கிய உற்பத்தியாளர்களை உறுப்பினர்களாகக் கொண்டுள்ள இச்சங்கமானது, விழைந்து முன் வந்தது- தொழில் துறையில் பாரதம் அடைந்துள்ள மகத்தான முன்னேற்றங்களையும் சாதனைகளையும், நாடு சுதந்திரம் பெற்ற பிறகு பல்வேறு பொருளாதார வளர்ச்சித் துறைகளிலும் கண்டுள்ள பாராட்டத்தக்க விரைவான முன்னேற்றத்தினையும், நாட்டு மக்கள் முன்னிலையில், அவர்கள் அறிந்து கொள்வதற்காகவும், நாட்டின் வெளிநாட்டு வர்த்தகத்தை அதிலும் குறிப்பாக புதிது புதிதாக தோன்றியுள்ள தொழில் வளர்ச்சியை மேலும் ஊக்குவிக்கவும், பெருமளவுக்கு அதிகப்படுத்தவும் வேண்டும் என்ற சீரிய நோக்கமே, இப்படிப்பட்ட ஒரு தொழிற்சந்தையை ஏற்பாடு செய்வதின் அடிப்படை எண்ணமாக அமைந்திருந்தது.

பொருட்காட்சியை நடத்தும் பொறுப்பேற்றுள்ளவர்களிடம் தமிழக அரசு 300 ஏக்கர் நிலத்தை, இதற்காக வேண்டி, ஒப்படைத்தது. பாதை வசதி, ரயில் வசதிகளால் எளிதில் அடையக்கூடியதாக, சென்னை நகரில் புது ஆவடி பாதைக்கு அருகில் இந்த இடம் அமைந்தது. அரசுப்பகுதி, வெளிநாடுகள் பகுதி, தனியார்ப்பகுதி, கடைகள், விற்பனைப் பகுதி என்று, பல்வேறு பிரிவுகளாக, இந்த உலகச்சந்தையின் அமைப்பானது பாகுபடுத்தப்பட்டது.

தமிழக அரசு, இத் தொழிற் சந்தையில் பங்கெடுத்துக் கொள்ள முடிவு செய்தது. தொழில், விவசாயம், விலங்கின வளர்ப்பு, மின் விசை, பாசனம், கிராமிய வளர்ச்சி ஆகிய துறைகளில் நமது மாநிலத்தில் கண்டுள்ள முன்னேற்றங்களை விளக்கியும், அத்துறைகளில் உள்ள சிறப்பியல்புகளை மக்களுக்குத் தெள்ளத்தெளிய விளக்கிக் காட்டும் வகையில் மாநிலத்தின் பல்வேறு துறைகளும் இப்பொருட்காட்சியில் பங்கேற்றன. தமிழக அரசின் அரங்குக்காக, ஒரு லட்சம் சதுர அடி உள்ள இடமானது ஒதுக்கப்பட்டது.

முதலில், இப்பொருட்காட்சியானது, 1967 ஜனவரியில் துவங்குவதாக இருந்தது. ஆனால் பின்னர் இது 1968 ஜன

வரிக்குத் தள்ளிப் போடப்பட்டது. இந்தியக் குடியரசின் துணைத் தலைவர் திரு வி. வி. கிரி அவர்களால் 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் 21-ந் தேதி இப்பொருட்காட்சி துவக்கி வைக்கப்பட்டது.

பொருட்காட்சியில் பங்கு கொண்ட வெளிநாடுகளில், சோவியத் குடியரசு, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு, போலண்டு, பல்கேரியா, ஹங்கேரி, ருமேனியா, யூகோஸ்லேவியா ஆகிய நாடுகள் முக்கியமானவைகளாகும். மைசூர், ஆந்திரம், மஹாராஷ்டிரம், அசாம், டெல்லி, உத்திரப் பிரதேசம், புதுச்சேரி, குஜராத் ஆகிய மாநிலங்களும் பொருட்காட்சியில் கலந்து கொண்டன.

## உள்ளம் கவர்ந்த உயரிய அரங்கு

தமிழக அரசு சிறப்பான முறையில் இப்பொருட்காட்சியில் பங்கெடுத்துக் கொண்டது. 'தமிழக அரங்கு' எல்லோருடைய கண்களையும் கருத்தையும் கவர்வதாக அமைந்திருந்தது எனலாம். கண்காட்சியின் முக்கிய நுழைவாயிலில் தமிழக அரசின் கம்பீரமான அரங்கம், பொருட்காட்சிக்கு வருகை தந்த இலட்சக்கணக்கான மக்களை வரவேற்கும் முறையில் எடுப்புடன் அமைந்திருந்தது. விவசாயம், தொழில், விலங்கின வளர்ப்பு, மீன்வளம், மின் விசை, பாசனம், செய்தித் துறை ஆகிய பலவேறு துறைகள் தமிழக அரசின் அரங்கில் இடம் பெற்றிருந்தன. கண்காட்சியில் நேரடியாக பங்கு கொண்டதோடு மட்டுமல்லாமல், தமிழக அரசானது, பொருட்காட்சியினை நடத்துபவர்களுக்கு எல்லாவித உதவியையும் ஒத்துழைப்பையும் அளிக்க முன் வந்தது. அரசுத் துறைகளுடன், அவ்வப்போது ஏற்படுகின்ற அன்றாடப் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்காக வேண்டி, தமிழக அரசானது, தன்னுடைய தொழில் துறை அரங்கினைச் சேர்ந்த சிறப்பு அதிகாரி ஒருவரை, கண்காட்சியில் பங்குகொண்ட எல்லா மாநில அரசுத் துறைகளுக்கும்—கண்காட்சி பொறுப்பாளர்களுக்குமிடையே மாநில அரசின் ஒரு தொடர்பு அதிகாரியாகப் பணியாற்ற, நியமனம் செய்தது.




தமிழக மண்ணின் பண்பாட்டின் இலக்கணமாகத் திகழும் கண்ணைக் கவரும் வகையில் பிரமாண்டமான கோபுர அமைப்பு தமிழக அரசின் அரங்கின் நுழைவாயில் அமைந்திருந்தது. அற்புதமான 12 சிற்பங்கள் கோயில் முகப்பில் தீட்டப்பட்டு—கவர்ச்சிகரமான கலைக் கவசம் ஏதும் ஒன்று கோபுரத்தின் எதிர் முகப்பில் அமைந்திருப்பது போல அமைக்கப்பட்டிருந்தது. இந்த முகப்பு தமிழக அரங்குக்கே ஒரு தனிக்களையை ஊட்டியது. பழம் பெரும் சிற்பக்கலையும், ஓவிய வேலைப்பாடும் இணைந்து அற்புதமான தோற்றத்துடன் தோற்றமளித்துக் கொண்டிருந்தது. முகப்பு கோபுரத்தின் வடக்குப் பக்கத்தில் பெரிய பெரிய தூண்கள் வரிசை அமைக்கப்பட்டு கம்பீரமாகத் தோற்றமளித்துக் கொண்டிருந்தன. இத்தூண்களின் வரிசைகளுனூடே, தூரத்திலிருந்து பார்க்கும்பொழுதுகூட, தமிழக அரங்கின் உள்ளே அமையப்பெற்றுள்ள பல்வேறு துறைகளின் அரங்குகளும் மிகவும் அழகாகக் காட்சி அளித்துக் கொண்டிருந்தன.

அரசின் கட்டிடக்கலைத் துறைத் தலைவர், இந்த அரங்கின் அமைப்புக்கு வரிவடிவம் அமைத்துக் கொடுத்திருந்தார். பலவேறு துறைகளின் அரங்குகளின் புறத்தோற்ற அமைப்புகளை பொதுப் பணித்துறை அமைத்துக் கொடுத்திருந்தது. அந்த அமைப்புகள் எளிய அழகிய கம்பீரமான முறையில் அமைக்கப்பட்டிருந்தன. பல்வேறு துறைகளின் உட்புற அமைப்பு, ஒளி அமைப்பு எல்லாம் அந்தந்தத் துறைகளால் செய்யப்பட்டிருந்தன. சவுக்கு, மரப்பலகைகள் இரும்புக் குழாய்கள், தகடுகள் போன்ற அதிக விலையில்லாத பொருள்கள் அரங்குகளை நிர்மாணிப்பதில் பயன்படுத்தப்பட்டன. கல் கட்டிடமாக இல்லாமல், இப்படி தற்காலிக அமைப்பாக இருப்பதினால் ஒரு பயன் உண்டு. பொருட்காட்சி முடிந்ததும், அநேகமாக இந்தப் பொருள்களை எல்லாம் மீண்டும் பயன்படுத்திக் கொள்ள முடியும்; அத்துடன் அவைகளை அப்படியே ஏலத்தில் விற்றுவிடலாம்; சேதம் ஒன்றுமில்லை.

## அற்புதக்கலவை—அழகுத்தோற்றம்

தமிழக அரங்கினுள் அமைக்கப் பட்டிருந்த எல்லா அரங்குகளும் ஒன்றுசேர்ந்து ஓர் அற்புதமான கலவையாக இணைந்து அழகுடன் தோற்றமளித்தது மட்டுமல்லாமல், கலைநோக்குடன் மாநிலத்தின் முன்னேற்றங்களை எடுத்துப் பறைசாற்றிக் கொண்டிருந்தன. தமிழகத்தின் பழம் பெரும் பண்பாட்டோடு இணைந்து அவை காட்சி அளித்துக்கொண்டிருந்தன. தமிழக அரங்கினுள் நுழைந்ததும், நம் கண்ணில் படுவது விவசாயத்துறை அரங்குதான். அதைச் சுற்றிப் பார்க்கும்பொழுது நமது மாநிலம் வேளாண்மைத் துறையில் பல்வேறு வகைகளிலும் கொண்டுள்ள முன்னேற்றம் நம் கண் முன்னே அப்படியே



படம் பிடித்துக் காட்டப்பட்டது போல தோற்றமளித்துக் கொண்டிருந்தன. பல்வேறு அதிக விளைச்சல் தரும் தானிய அபிவிருத்தித் திட்டங்கள்—விவசாய பொறியியல் துறையில் கையாளப்படும் நவீன முறைகள் தெளிவாக அங்கே விளக்கப்பட்டிருந்தன.

விவசாய அரங்கிற்கு அடுத்தபடியாக, தொழில் துறை அரங்கு அமைந்திருந்தது. அத்துறையில், பழங்காலத்து அழகுக் களஞ்சியங்களான கைவேலைப் பொருள்களுடன் தனியார்த் துறை, அரசுத் துறைகளில் கண்டுள்ள தற்கால பொருளாதார வளர்ச்சியினை விளக்கிக் காட்டும் வகையில் தொழில் துறை அரங்கு தோற்றமளித்தது. அழகோவியமாகத் திகழும் செம்பினால் செய்யப்பட்ட உருவச்சிலைகள் வண்ணவிரிப்புகள், கம்பளங்கள்—அழகான பத்தமடைப் பாய்கள்—இயந்திரங்கள்—இப்படி பல்வேறு பொருள்கள்



எல்லாமே பார்வையாளர்களின் சிந்தனைக்கும் கண்களுக்கும் விருந்தாக அமைந்திருந்தன. கடந்த காலத்திலிருந்து, அதாவது சென்னப்ப நாயக்கர் சென்னை நகரினைத் தோற்றுவித்ததிலிருந்து—1635-லிருந்து இன்று வரையில், நமது மாநிலத்தில் ஏற்பட்டுள்ள தொழில் வாணிபத்தின் வளர்ச்சியானது படங்களாலும், கவர்ச்சிச்சித்திரங்களாலும் மிகவும் தெளிவான முறையில் விளக்கப்பட்டிருந்தன. தனியார் நிறுவனங்கள் தயாரித்திருந்த பொருள்களும் அரங்கில் வைக்கப்பட்டிருந்தன. அத்துடன் அரசுக்குச் சொந்தமான சிறு தொழில் நிறுவனத்தின் பல்வேறு பகுதிகளில் தயாராகும் பொருள்களும் அரங்கினை அலங்கரித்தன. கைத்தறிப் பிரிவினரும் அழகானதொரு அரங்கினை ஏற்பாடு செய்திருந்தனர். இதற்கடுத்தாற்போல் அமைந்திருந்தது விலங்கின வளர்ப்புத் துறையாகும். கால்நடைகள் கோழி வளர்ப்பு பற்றிய நவீன கால முறைகள் விளக்கிக் காட்டப்பட்டிருந்ததுடன், விலங்கினச் செல்வத்தை போற்றிப் பாதுகாக்க வேண்டிய அவசியம் மிக நல்ல முறையில் வலியுறுத்திக் காட்டப்பட்டிருந்தது. இவைகள் அத்தனையும் படங்கள் மூலமாக, மிக அழகாவும், தெளிவாகவும், மனதில் பதியும்படியாகவும் விளக்கிக் காண்பிக்கப்பட்டிருந்தன. அடுத்தது, மீனளத்துறை. அவ்வரங்கினைப்பார்க்கும் ஒவ்வொருவரும் இந்த மாநிலத்தில் மீன்போன்ற கடல் செல்வங்களின் செழிப்பு, அந்தச் செல்வத்தை அடைய பயன்படுத்தப்படும் விசைப்படகுகள் பற்றியெல்லாம் மிகவும் தெளிவாக அறிந்து கொள்ளமுடியும். கடல் முத்துக்கள் போன்ற பல்வேறு கடலில் கிடைக்கும் பொருள்களை விற்கும் அரங்குகளை எப்பொழுதும் மக்கள் மொய்த்துக் கொண்டேயிருந்தனர். விற்பனைக்குச் சொல்லவும் வேண்டுமா?

அடுத்துள்ள மின்சாரப் பகுதியில், மாநிலத்தில் உள்ள மின்விசை நிலையங்களின் மாதிரி அமைப்புகள் காட்சி அளித்துக்கொண்டிருந்தன.

நீர்ப்பாசனப் பிரிவில் மாநிலத்தில் உள்ள நீர்ப்பாசனத் திட்டங்கள், அழகாகவும் இயற்கையாகவும், காட்சி அளிக்கும் வகையில் அமைக்கப்பட்டிருந்தன. கடைசியாக, செய்தித்துறை அரங்கு அமைந்திருந்தது. தமிழகத்தின் பழம்பெருமைகளும் கலாச்சாரச் சிறப்புகளும், இவ்வரங்கினில் மிக அழகான முறையில் விளக்கப்பட்டிருந்தன.

## இலட்சக் கணக்கான மக்களின் பாராட்டு

உலகத் தொழில் கண்காட்சியினைப் பார்க்க வந்த இலட்சக்கணக்கான மக்களும், கண்காட்சியில் பங்கேற்றிருந்த மிகச் சிறந்த அரங்குகளில் "தமிழக அரங்கு" எல்லோரும் தவறாமல் கண்டுகளிக்க வேண்டிய சிறப்பான ஒன்றாகும் என்று பாராட்டியிருப்பர் என்பதில் ஐயமில்லை. கண்காட்சியைப் பார்க்க வந்த பிரமுகர்கள் அத்தனைபேரும் கண்டு பாராட்டிய அரங்குகளில் தமிழக அரங்கு முன்நின்றது எனலாம். பல இலட்சக்கணக்கான மக்கள் பொருட்காட்சியினைக் கண்டுகளித்தனர். மத்திய அமைச்சர்கள், மாநில அமைச்சர்கள், வெளிநாட்டுப் பிரமுகர்கள், தொழில் அதிபர்கள், வியாபாரிகள், மாணவர்கள் என்று சமுதாயத்தின் பல்வேறுபட்ட துறையினர் கண்காட்சியினைக் கண்டுகளித்தனர்.

தமிழக மக்களுக்கு, தமிழ்நாடு அரங்கு பெருமை அளிக்கும் ஒன்றாகும். தமிழகத்தின் வெளியிலிருந்து வந்தவர்களுக்கோ, எப்படி அரங்கு அமைக்கவேண்டும் என்பதற்கு அது ஓர் எடுத்துக்காட்டு. வெளிநாட்டுக்காரர்களுக்கோ, அது நாட்டின் முன்னேற்றத்தை எடுத்துக்காட்டும் கண்ணாடி.

# சீரிய பணியாற்றும் நகராட்சிகள்

## சேலம் நகராட்சி

1. சேலம் மாநகராட்சி ஒரு பேருந்து வண்டி நிலையம் நடத்தி வருகிறது. பேருந்து வண்டி நிலையத்தில் 8 அறைகள் கொண்ட விடுதி இருந்தது. நகரம் வெகு விரைவாக முன்னேறி வருவதாலும் பேருந்து வண்டி நிலையத்தில் பொது மக்களின் போக்குவரத்து அதிகரித்து வளர்வதாலும் மக்களின் நன்மையை கருதி நகராட்சி மேலும் 14 அறைகள் மேல் மாடியில் நல்ல வசதிகளுடன் கட்டியுள்ளது. இந்த அறைகள் உந்து வண்டி நிலையத்திலேயே இருப்பதால் சுற்றுப்பயணக்காரர்களுக்கு மிகவும் பயனுள்ளதாயுள்ளது.

2. சேலம் நகராட்சியின் ஒரு பயணர் விடுதி (கிருஷ்ண ராஜேந்திர சத்திரம்) ஏற்கனவே சேலம் மார்கெட் ரயில்வே ஸ்டேஷன் அருகில் இருந்து வருகிறது. இது பழமையானதாக உள்ளது. ஆகவே நவீன வசதியுடன் ஒரு பயணர் விடுதியை நகராட்சி கட்ட விரும்பியது. அவ்வாறே ஹஸ்தம் பட்டியில் நகராட்சிக்கு சொந்தமான நிலத்தில் ரூ. 99,000 செலவில் நவீன வசதிகளுடன் கூடிய புதியதாக ஒரு பயணர் விடுதியை கட்டி முடித்தது. இந்தப் பயணர் விடுதி மைய அரசின் சுற்றுலா, விமானப் போக்குவரத்து அமைச்சர் திரு. கரண்சிங் அவர்களால் 29-12-1967-ம் தேதி திறந்து வைக்கப்பட்டது. இது நான்கு அறைகளைக் கொண்ட மேல்மாடிக் கட்டடம். உல்லாச பயணிகள் இதை மிகவும் விரும்பும் வகையில் அமைந்துள்ளது.

## ஆம்பூர் நகராட்சி

ஆம்பூர் நகராட்சியினால், நிறைவேற்றப்பட்டுள்ள, நிறைவேற்றப்படவிருக்கும் திட்டங்களின் விவரம்.—1. ஆம்பூர் நகர சலவைத் தொழிலாளர்களின் உபயோகத்திற்காக 14,500 ரூபாய் செலவில் பாலாற்றங்கரையும் ஒரு சலவைத்துறை (Dhobi khana) கட்டப்பட்டு 24-12-67-ம் தேதியன்று மாண்புமிகு தமிழக சட்டமன்ற அமைச்சர் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது.

ஆம்பூர் நகரில் பிராட் பஜார் என்னும் பகுதி வியாபார முக்கியத்துவம் வாய்ந்ததாகும். மக்களின் வசதியை முன்னிட்டு ரூபாய் 32,000 மதிப்பீட்டில் 30 கடைகள் கட்டி வாடகைக்குவிட திட்டமிடப்பட்டு, வேலை நடைபெற்று வருகிறது. இவ்வேலை முடியும் தறுவாயில் இருக்கிறது.

இந்நகரின் நீண்ட நாளைய தேவையான பாதுகாக்கப்பட்ட குடிநீர் திட்டம் ரூபாய் 40 லட்சம் மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டது. 8-5-1967-ம் தேதிய 790 என்னுள்ள பொது நலத்துறை அரசினர் ஆணையில் அக்குடிநீர் திட்டத்திற்கு அங்கீகாரம் அளித்து ரூபாய் 40 லட்சம் நகராட்சிக்கு கடனாக வழங்க ஒப்புக் கொள்ளப்பட்டது. 13-12-67-ம் நாளன்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு அண்ணாதுரை அவர்களால் அக்குடிநீர் திட்டத்துக்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

## விழுப்புரம் நகராட்சி

1919-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 1-ம் தேதி தோற்றுவிக்கப்பட்ட இந்நகராட்சி தற்பொழுது இரண்டாந்தர நகராட்சியாக திகழ்கின்றது.

இந்நகராட்சி, பேருந்து நிலையமொன்றை நல்ல முறையில் பேணி வருகின்றது. அண்மைக் காலத்தில் இந்நகர், வணிகம், தொழில்துறை ஆகியவைகளில் வளர்ச்சி பெற்று வருகின்ற காரணத்தால், வெளிநகரங்களிலிருந்து, வருவோர், போவோர்களின் எண்ணிக்கை மிகுந்து அவர்களுக்கு வசதியான தங்கும் அறைகள் தேவை ஏற்பட்டு வருகின்றது. இத்தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில் தனியார் தங்கும் வாடகை அறை விடுதிகள் சில இருப்பினும், நகர் மையத்தில் அமைந்துள்ள நகராட்சி பேருந்து நிலையத்தில் தங்கும் அறைகள் கட்டி, வாடகைக்கு விட்டால் நகராட்சியின் பொருளாதார வசதியை பெருக்க உதவும், அத்துடன் பயணிகளுக்கு வசதியாக இருக்கும் என இந்நகராட்சி மன்றம் எண்ணி தங்கும் வாடகை அறைகள் கட்ட முடிவெடுத்தது.

மொத்தம் ஏழு அறைகளைக் கொண்ட இப்பேருந்து நிலைய தங்கும் அறைகள் ரூபாய் 20,870 செலவில் கட்டி முடிக்கப்பட்டது.

இப்பேருந்து நிலைய தங்கும் அறைகள் கொண்ட விடுதி, 11-9-1967-ல் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணாதுரை அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. தமிழக முதலமைச்சர் நகராட்சியின் முயற்சியினைப் பாராட்டி, பேருந்து நிலையங்களில் இத்தகு அறைகள் அமைப்பது குறிப்பாக பயணிகளுக்கு மிக்க வசதியாய் இருக்குமெனக்கூறி இம்மாதிரி நகராட்சியின் வருவாயைப் பெருக்க வேண்டியதின் அவசியத்தையும் வலியுறுத்தினார்.



தவிர பயணிகளுக்கு வசதியாக பேருந்து நிலையத்தில் குளிக்கும் அறைகள், தேவையான வசதிகளுடன் கட்டப்பட்டு வருகின்றன.

இந்நகராட்சி மன்றம் பயணர் விடுதி யொன்றினை நல்ல முறையில் நடத்தி வருகின்றது. இவ்வகையில் முதல் முயற்சியாக இந்நகராட்சி இந்த பயணர் விடுதியிடத்தில் நெடுதூரம் பிரயாணம் செய்யும் பயணிகள் சிறிது நேரம் இளைப்பாறி உணவருந்திச் செல்ல வசதியாக சிறிது நேர இளைப்பாறும் விடுதி (Rest A while shed) ஒன்று கட்டப்பட்டு, குறைந்த வாடகையை வசூலித்து வருகிறது. இது பயணிகளின் கவனத்தைப் பெரிதும் ஈர்க்கும் வகையிலும், முக்கிய வசதியாகவும் இருந்து வருகிறது.

## கோவில்பட்டி நகராட்சி

இந் நகரம் 1967-ம் ஆண்டு எப்ரல் மாதம் முதல் தேதி முதல் ஊராட்சியிலிருந்து நகராட்சியாக மாற்றப்பட்டது. நகராட்சியின் முக்கிய பணிகளான நகரத் தண்ணீர்த் திட்டம், சுகாதார வசதி, சாலை வசதி, கல்வி வசதி, பொது அறிவு வசதிகள் மற்றும் பிரயாண வசதிகளைச் இந் நகராட்சி மேற்கொண்டு செய்து வருகிறது.

### குடிநன்னீர் வசதி

எவ்வித நிரந்தர பாதுகாக்கப்பட்ட குடிதண்ணீர் வசதி திட்டமும் இல்லையாகையால், அதற்கான முயற்சிகளை மேற்கொண்டு சுமார் 80 லட்ச ரூபாய் செலவாகுமென எதிர்பார்க்கப்படும் நிரந்தரத் திட்டத்தின் பரிசீலனை வேலைகளுக்கு இந் நகராட்சி ரூ. 27,500 செலுத்தியது. பொதுச் சுகாதாரப் பொறியியல் துறையினரால் ஆரம்ப வேலைகள், திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அரசு ஒப்புதலுக்கு அனுப்பப்பட்டுள்ளது.

இந் நகராட்சி யோசனைப்படி பொதுச் சுகாதாரப் பொறியியல் துறையினரால் இடைக்காலக் குடிதண்ணீர் நிவாரணத் திட்டம் ஒன்று இந் நகராட்சிக்கு தயாரிக்கப்பட்டது. அந் திட்டச் செலவின் முழுத் தொகையான ரூ. 2,76,000 இந் நகராட்சி நிதியிலிருந்து பொதுச் சுகாதாரப் பொறியியல் துறையினருக்கு செலுத்தப்பட்டு மேற்படி துறையினரால் அவ் வேலையில் முதல் கட்டம் துவங்கப்பட்டுவிட்டது. இதற்கிடையில் இந் நகராட்சி ரூ. 18,651 செலவில் 20 கிணறுகளை ஏற்படுத்தியுள்ளது. நகரில் தண்ணீர் விநியோக வசதிக்காக இரண்டு டிராக்டர்கள் & டிரெயலர்களுடன் ரூ. 37,325 செலவிலும் இரண்டு டேங்கர் டிரெய்லர்கள் ரூ. 22,120 செலவிலும் வாங்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. இந் நகராட்சி பராமரிப்பிலுள்ள 34 கிணறுகள் ரூ, 27,796 செலவில் ஆழப்படுத்தி பராமரிப்புச் செய்யப்பட்டுள்ளது. 93 குழாய்க் கிணறுகளில், 23 கிணறுகள் தானேயங்கும் மோட்டார்களாக ஆக்கப்பட்டுள்ளதையும், பராமரித்து வருகிறது. ரூ. 15,200 செலவில் ஏழு இரும்பு டேங்குகள் நகரின் முக்கிய இடங்களில் நிறுவப்பட்டு தண்ணீர் சேமிக்க உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. ரூ. 7,516 செலவில் இரண்டு டீசல் என்ஜின்கள் வாங்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. நகரில் கடுமையான தண்ணீர் பஞ்சம் நிலவிய காலத்தில் தூத்துக்குடித் துறைமுகத் திட்ட லாரி, தீயணைப்புத் துறை லாரிகள் வாடகை முறையில் ரூ. 5,630 செலவில் நகரில் தண்ணீர் விநியோகம் செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

### சுகாதார வசதி

இந் நகரின் சுகாதார வசதியை முன்னிட்டு ரூ. 41,895 செலவில் ஒரு புதிய லாரி வாங்கப்பட்டு உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. கழிவு குப்பைகளை உரமாக்க 3 சதுர ஏக்கர் நிலம் ரூ 1,143 செலவில் வாங்கப்பட்டு குழிகள் வெட்டப்பட்டு வருடத்திற்கு சுமார் 1,500 மெட்ரிக் டன் கம்போஸ்ட் உரம் தயாரிக்கப்படுகிறது. கட்டாய அம்மை தடுப்பு ஊசி போடும் முறை நிர்வகிக்கப்பட்டு வருகிறது. மலேரியா ஒழிப்புத் திட்டமும் நடைபெற்று வருகிறது. அதற்கென ஊழியர்கள் தனித்தனியாக உள்ளனர். பாதாள சாக்கடைத் திட்டம் இந் நகராட்சியில் இல்லையெனினும் கட்டுமான சாக்கடைகளை ரூ. 26,220 செலவில் பராமரிப்பு செய்யப்பட்டது. மேலும் இந் நகராட்சி மூலம் ஒரு தாய் சேய், நல விடுதி நிறுவி அதனைப் பராமரித்து வருகிறது. மேலும் மூன்று விடுதிகள் விரைவில் திறக்கப்பட உள்ளன. நகரில் தேங்கியுள்ள சாக்கடை தண்ணீரை வெளியேற்ற உறிஞ்சு பம்பு ஒன்று டிராக்டருடன் இணைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

### கல்வி வசதி

ஊராட்சி ஒன்றியத்தினால் ஓர் உயர் ஆதாரப் பள்ளிக்கூடமும், ஓர் ஆதாரப் பள்ளியும், பத்து செகண்டரி கிரேடு, மூன்று ஹையர் கிரேடு ஆசிரியர்களுடன் இந் நகராட்சிக்கு ஒப்படைக்கப்பட்டது. இப்போது புதிதாக 3 இடங்களில் நகராட்சி மூலமாக பள்ளிகூடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்போது 24 ஹையர் கிரேடு ஆசிரியர்களும், 8 செகண்டரி கிரேடு ஆசிரியர்களும் பணியாற்றி வருகின்றனர், பள்ளிக்கூடங்களுக்கு கூடுதல் இடவசதி மின்சார இணைப்பு வகைகளுக்காக ரூ. 14,900 செலவிடப்பட்டுள்ளது. மேலும் வருடாந்திர பராமரிப்பாக ரூ. 1,069 செலவழிக்கப்பட்டுள்ளது. மேலும், சுமார் ரூ. 75,000 செலவில் கட்டிடங்கள் நகராட்சி உயர் ஆதாரப் பள்ளியில் கட்டுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எல்லா பள்ளிகளிலும் மதிய உணவு வழங்கப்பட்டு வருகிறது. வருடாவருடம் நகராட்சிப் பள்ளிக்கூட ஏழைக் குழந்தைகளுக்கு இலவசப் புத்தகம் கொடுக்கப்பட்டு வருகிறது.

—:o:—

# இகழ்ச்சி புகழ்ச்சியாயிற்று!

அது ஒரு சிறிய கிராமம். காடுகளால் சூழப்பட்ட அக்கிராமம் பசுமையான தோற்றத்துடன் விளங்குகிறது. 1955-ம் ஆண்டு வரை, அக்கிராமம் உலகத்தோடு எவ்வித தொடர்பும் இல்லாமலேயே இருந்தது. 1956-ம் ஆண்டில் இவ்வூர் வாசிகள் நாட்டில் ஏற்பட்டுள்ள மறுமலர்ச்சியைக் கண்டு விழிப்புற்று செயல்படத் தொடங்கினர். இக்கிராமத்தின் பெயர் ஷான்சுனியா. இது ஒரிசா மாநிலத்திலுள்ளது.

கிராமத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல விரும்பிய அம்மக்கள், முதலில் குடிநீர் பிரச்னைக்கு ஒரு தீர்வுகாண விரும்பினர். அதற்கென அரசை அணுகியதில், அரசும் ஒரு குளம் வெட்டிக்கொள்வதற்கு மானியம் வழங்க, அனுமதி வழங்கியது. ஆனால் அதற்கு முதலில் நன்கொடை வசூலிக்க வேண்டுமே! எனவே அவர்கள் நன்கொடை வசூலிப்பதில் மும்முரமாக ஈடுபடலாயினர்.

## இசை தந்த நன்கொடைகள்

ஆரம்ப காலங்களில் இவர்களின் நேர்மையான உழைப்பிற்கு பல தடைகள் இருந்தன. வயது முதிர்ந்த கிராம மக்களில் பலர், கிணறு தோண்டுவதற்கு பணம் எங்கிருக்கிறது என்று வினவினர். "நாம் முதலில் நம்முடைய நன்கொடைகளை சேகரித்த பின்புதான், அரசிடமிருந்து மானியம் கேட்க முடியும்" என்று இளைஞர்கள் கூறினர். நன்கொடை வசூலிப்பது அவர்களுக்கு மிகவும் சிரமமாக இருந்தது. எனினும் அவர்கள் மனம் தளர்ந்து விடாமல், முயற்சி செய்தவண்ணமிருந்தனர். இசைக் கருவிகள் கொண்டு பாட்டுப் பாடியே பல இடங்களிலும் நன்கொடைகளை வசூலித்தனர்.

இதன் பின் அவர்கள் குடிநீருக்கு கிணறு தோண்டினர். வெகு ஆழமாகத் தோண்டிய பின்னரே அவர்களுக்கு சுத்தமான நல்ல குடி தண்ணீர் கிடைத்தது. இந்த கிராம மக்களின் ஆர்வமிக்க பணி அந்த வட்டாரத்துணை அதிகாரியின் கவனத்தைக் கவர்ந்தது. ஆனால் அவர் இக்கிராமத்திற்கு வருவதற்கு கார் வண்டி போகக்கூடிய சாலைகள் இல்லாததால், அவர் நடந்தே வந்து இவர்களின் முயற்சியை நேரில் வந்து பார்வையிட்டார்.

கூட்டுறவு முறையினால் அரிய சாதனைகளைச் சாதிக்க முடியும் என்பதை இப்பொழுதுதான் அவர்கள் உணர்ந்தனர். அவர்களின் சாதனை மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் கொடுத்துள்ளது. அவர்கள் தங்களுடைய கிராமத்தை சிறந்த முறையில் விளங்கச் செய்வதற்கு தற்போதுள்ள ஆர்வமும் ஊக்கமும் குறைந்துவிடாமல் இருக்கும்படி பல பயனுள்ள பணிகளைச் செய்து வந்தனர். அவர்களுக்கு அடுத்துத் தோன்றிய பிரச்னை பள்ளிக்கூடக் கட்டிடம் கட்டவேண்டும் என்பதாகும். பள்ளிக்கூட கட்டிடம் கட்டுவதற்கு நிதி வசூலிப்பது மிகவும் சிரமமானதாக இருந்தது. ஆனாலும் அவர்கள் அனைவரையும் நேரில் சென்று நிதியுதவி கேட்டதனால், மக்களும் தாராளமாக இதற்கு உதவி செய்தனர். மக்கள் அளித்த நிதியுதவியோடு அரசின் மானியத்தையும் கொண்டு பள்ளிக் கட்டிடம் கட்டி முடிக்கப்பெற்றது. கட்டிடம் முடிந்தவுடன் எந்த ஆசிரியர் இந்த பள்ளியை நடத்துவது என்ற கேள்வி எழுந்தது. உடனே அந்தக் கிராமத்து இளைஞர்களில் ஒருவர் இந்த வேலையை ஊதியம் ஒன்றும் இல்லாமல் தானே செய்ய முன் வருவதாகக் கூறினார். சமுதாய வளர்ச்சி அதிகாரிகள் இந்தப் பள்ளிக்கூடத்தை அங்கீகரித்து ஆசிரியர்களை நியமிக்கும் காலம் வரை அதாவது ஓராண்டு காலம் வரை—அந்தக் கிராமத்து இளைஞரே பாடம் கற்பித்து வந்தார்.

ஷான்சுனியா கிராமத்து மக்களில் பெரும் பகுதியினர் மூட நம்பிக்கை கொண்ட விவசாயிகளாக இருந்ததால், அவர்கள் பரம்பரையாக பின்பற்றி வந்த சாகுபடியையே செய்து வந்தனர். அவர்கள் நவீன விவசாய முறைகளைப் பின்பற்றும்படி செய்வது கிராம சேவக்குகளுக்கு மிகவும் சிரமமான பணியாக இருந்தது. அவர்களுக்கு நவீன முறையில் வரிசையாக நாற்று நடுவது, ரசாயன உரங்களை இடுதல் களையெடுக்கும் கருவி வெட்டுதல் போன்றவை கூட தெரியாமல் இருந்தன. தற்போதைய விவசாய முறைகளைப் பின்பற்றும்படி அவர்களிடம் சொன்னால், அவர்கள் விவசாயத்திற்கு அதிகமாக செலவழிப்பதைப் பற்றி கேலி செய்தனர். திரு சடபதி என்பவர் நவீன விவசாய முறைகளை பின்பற்றியதினால், அக்கிராம மக்களின் இகழ்ச்சிக்கு உட்பட்டார். ஆனால் இவரைப் பழித்துக் கூறியவர்கள், இவர் அதிகமாக நெல் அறுவடை செய்ததைக் கண்ட பின்னர் தங்களின் பழிச் சொல்லை நிறுத்தினர். ஆனாலும் கொஞ்ச காலம்தான் இந்த நிலை நீடித்தது.

அவர்களில் ஒருவரான திரு பிஸ்வால் என்பவர் நவீன முறையில் அதிக விளைச்சல் கொடுக்கும் வகையைச் சேர்ந்த உருளைக்கிழங்கு முள்ளங்கி, முட்டைக் கோஸ் ஆகியவற்றைச் சாப்பிட்டு பெரும்பான்மையான கிராம மக்கள் வயிற்று வலியால் துன்புறப் போகிறார்கள் என்று கேலியாகக் கூறிவந்தார். இதன் நன்மையைப் பொறுத்திருந்து பார்க்கவேண்டுமேயல்லாது உடனே இதைஎல்லோரும் பயிரிடக்கூடாதுஎன்றும் குறிப்பிட்டார். பெரும்பான்மை மக்களின் ஆர்வம் இந்த வகைப் பயிர் முறையை ஆதரித்ததனால் திரு பிஸ்வாலும் அவரைப் போன்றவர்களின் மூடநம்பிக்கையும் வெகு நாட்கள் நிலைக்கவில்லை. அவர்கள் பேசிய இகழ்ச்சிச் சொற்களெல்லாம் நாளடைவில் புகழ்ச்சியாயின.

இக்கிராம மக்கள் கூட்டுறவு முறைப்படி செயல் ஆற்றுவதற்கு தாங்களாவே முன் வந்தனர். மாநில அரசு தேர்ந்தெடுத்துக் கூறிய உயர் விளைச்சல் விதைகளை உபயோகிக்கத் தொடங்கினர். காய்கறிகளைப் பயிர் செய்து நல்ல வருமானம் அடைந்தனர். குளத்திற்கு பக்கத்திலிருந்த நிலங்கள் தரிசாக காட்சி தராமல் இருக்க பழங்கள் தரும் மரங்களையும் பூச்செடிகளையும் பயிரிட்டு பசுமையான தோற்றத்தை ஏற்படுத்தினர்.

## வானொலிச் செய்தி, சாலை அமைக்க உதவியது.

இவர்களின் தற்போதைய முன்னேற்றமெல்லாம் ஓர் ஆரம்பம் என்றே கூறவேண்டும். இந்தக் கிராம மக்கள் ஒரு நாள் மாலையில் கட்டாக் வானொலி நிலையத்திலிருந்து ஒலி பரப்பாகிய அகில இந்திய வானொலி நிகழ்ச்சியைக் கவனமாக கேட்டுக் கொண்டிருந்தனர். ஒரு குறிப்பிட்ட கிராமத்தில், மக்களின் கூட்டு முயற்சியினால் எவ்வாறு ஒரு சாலை அமைக்கப்பட்டது என்பதைப் பற்றிஅன்றைய நிகழ்ச்சியில்விவரித்துக் கூறப்பட்டது. இதைக் கேட்டுக் கொண்டிருந்த அக்கிராமத்து இளைஞர்கள் நாமும் சாலை அமைப்போம் என்று கூறினார்கள். எந்தக் காரியத்திற்கும் வழக்கமாக தடைசொல்லிக் கொண்டிருப்பவர்கள், இதற்கும், தடை சொன்னார்கள். "நாம் என் கார், வண்டி, சைக்கிள், வைத்திருப்பவர்களின் நன்மைக்காக சாலை அமைக்கவேண்டும்?" என்று வாதம் செய்தனர். இதனுடன் சாலை அமைப்பதில் இன்னொரு தடையும் ஏற்பட்டது. மக்கள் தங்களுடைய நிலத்தையும் உழைப்பையும் இனமாகக் கொடுக்க வேண்டும் என்று கூறப்பட்டபோது, குழப்பமே ஏற்பட்டுவிட்டது. இந்திய உழவர்கள் உயிரைக் கொடுத்தாலும் கொடுப்பார்களே தவிர, தங்கள் நிலத்தைக் கொடுக்கமாட்டார்கள் என்று சொல்லப்படுவதுண்டு. இந்திய விவசாயிகள் நிலத்தின் மேல் அதிக பற்று உள்ளவர்கள் என்பதை அறிந்த கிராமத்து இளைஞர்கள் தங்கள் முயற்சியை கைவிட்டுவிடாமல் பாடுபட்டு வந்தனர். சீனப்படையெடுப்பின் போது அமைக்கப்பட்ட, கிராமத் தொண்டர் படை, அதனுடைய உழைப்பைத் தந்து, சாலை அமைப்பில் மிகுந்த கவனம் செலுத்தியது. அத்தருணத்தில் மக்களின் ஒத்துழைப்பையும் அத்தொண்டர் படை பெற முடிந்தது.

தேசிய கீதத்துடன் சாலை அமைக்கும் வேலை ஆரம்பமாயிற்று. நல்ல முறையில் ஆரம்பித்தது போலவே, சாலை அமைப்பு வேலை, நன்றாக முடிவு பெற்றது. இக்கிராம மக்கள் தங்களின் சாதனையைப் பற்றிய விபரங்களை சாலையின் ஆரம்பத்தில் பெயர் பலகையில் எழுதி வைத்துள்ளனர். அவர்களுக்கு இந்த முயற்சி சிறிய செயலாகத் தோன்றவில்லை. கூட்டுறவு முயற்சியின் பயனாக ஏற்பட்ட நினைவுச் சின்னம் என்றே அவர்கள் இச்செயலைக் கருதுகின்றனர். இந்தச் சாதனை அக்கிராம மக்களுக்கு புதியதாக ஏற்படுத்தப்பட்ட 'கோனாரக்' கோயில் போலவே காட்சியளித்தது.

## கோழிகளுக்கு

உலக உணவுத் திட்டத்தின்கீழ் இந்தியாவிற்கு ரூ. 5 லட்சம் மதிப்புள்ள தானியங்கள் கிடைக்க விருக்கிறது.

இந்திய அரசிற்கும், அனைத்து நாடுகள் அவையின், உணவு, வேளாண்மை நிறுவனத்திற்கும் அண்மையில் ஏற்பட்டுள்ள ஓர் உடன்பாட்டின் விளைவே இந்த உதவியாகும்.

இந்த தானிய உதவியைப் பயன்படுத்தி, கோழிப் பண்ணைகளை விருத்தி செய்யவும், அவற்றின் உணவில் புரதச்சத்தை அதிகரிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

இந்நிறுவனம் ஐந்தாண்டுகளில் வினியோகிக்கவிருக்கும் 50,000 டன் சோளத்தை நம் நாட்டு சோளத்தோடு கலந்து எல்லாச் சத்துக்களும் கலந்த சம உணவாக தயாரிக்கப்பட்டு, அவை கோழிப் பண்ணைகள் வைத்திருப்போருக்கு விலைக்கு விற்கப்படும்: இந்த முறையில் லாபமோ, நஷ்டமோ, இல்லாதவாறு, பண்ணைகளின் உரிமையாளர்களுக்கு இத்தீவனம்அளிக்கப்படும்.

## சம உணவு

## கால்நடைகளுக்கு அகத்திக் கீரை

ஒரு வரிசையில் நடப்பட்ட 40 அல்லது 50 அகத்தி மரங்கள் கால் நடைகளுக்கு ஒரு நாளைக்கு தேவையான பசுமையான கால் நடை தீவனங்களை ஆண்டு முழுதும் கொடுக்கிறது. அகத்தி மரம் ஆண்டு முழுதும் கால் நடை தீவனங்களை தருவதால் விவசாயிகள் அனைவரும் பயிரிட்டு பலன் அடையலாம். அகத்தி சத்துள்ள கால்நடை தீவனமாக இருப்பதை விவசாயிகள் அறிந்திருந்தும், இதை ஒரு சில விவசாயிகள்தான் கால்நடைகளின் உணவுக்கென பயிரிடுகிறார்கள்.

வட இந்தியாவில் கால் நடை தீவனத்திற்காக பயிரிடப்படும் ஒரு வகைச் செடியைக் காட்டிலும், அகத்தியில் புரத சத்து அதிகமிருக்கிறது. அகத்தியில் வைட்டமின் ஏ என்ற உயிர் சத்தும் மலிந்திருக்கிறது. ஒரு நாளைக்கு இரண்டு அல்லது மூன்று கிலோ அகத்திக்கீரை ஒரு கால்நடைக்கு போதுமானது. இதைவிட அதிகமாக அகத்திக் கீரை உணவாகக் கொடுத்தல் விரும்பத்தக்கதல்ல.

# சிறந்த ஊராட்சி

திரு சாந்தன் சிங் என்பவர் இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள பாங்கிலி ஊராட்சி ஒன்றியத்தில் கிராம சேவக்காக பணியாற்றுகிறார். இவர் எளிமைத் தோற்றமுடைய ஓர் இளைஞர்தான். பணியாற்றும் பகுதியிலுள்ள மக்கள் செழிப்புடனும் வளத்துடனும் வாழ்வதையே தன்னுடைய மகிழ்ச்சியாகக் கருதுகிறார். ஒரு கிராம சேவக் தன்னுடைய பணியில் சிறந்து விளங்க வேண்டுமானால், அவர் தன்னுடைய கடமையில் பற்றுள்ளவராக விளங்க வேண்டும். திரு சாந்தன் சிங் அவர்கள் இத்தகைய கடமைப் பற்றும் சேவை மனப்பான்மையும் நிரம்பப் பெற்றவராக இருக்கிறார். இவருடைய இதயம் எப்பொழுதும் அப்பகுதி மக்களின் முன்னேற்றத்தையும், அவர்களின் செழிப்பான வாழ்க்கையையும் பற்றிய சிந்தனையிலேயே இருக்கிறது. அவருடைய ஒளி பொருந்திய கண்கள் அவரின் ஆர்வத்தையும் விருப்பத்தையும் புலப்படுத்துகின்றன.

இவருடைய அயராத உழைப்பும், கடமைப் பற்றும் பாங்கிலி ஊராட்சி மக்களை விழிப்படையச் செய்துள்ளன. கிராம மக்கள் தங்களது சோம்பல் தன்மையிலிருந்தும், செயல் அற்ற நிலையிலிருந்தும் விழிப்புற்று பொருளாதார வளர்ச்சியில் தங்களின் கவனத்தைச் செலுத்தத் தொடங்கியுள்ளனர்.

### கிராம சேவக்தான் காரணம்.

இராஜஸ்தான் மாநில அளவில் நடைபெற்ற போட்டியில் திரு சாந்தன் சிங் சிறந்த கிராம சேவக்காகவும், அவர் பணியாற்றிய பாங்கிலி கிராமமே சிறந்த ஊராட்சியாகவும் பாராட்டப் பெற்றுள்ளன. இவருக்கு கிடைத்த பாராட்டைக் குறிப்பிட்டு இவருக்கு வாழ்த்துக் கூறியபோது இவர் அதை அடக்கத்துடன் ஏற்றுக்கொண்டார். இந்த ஊராட்சித் தலைவர், இவரைப் பற்றி பெருமைகொள்வதோடு; இக்கிராமத்திலுள்ள மூவாயிரம் மக்களின் வளமான வாழ்வுக்கு இந்த கிராம சேவக் தான் காரணமாக இருந்தார். என்றும் கூறுகிறார். ஆனால், கிராம சேவக்கோ தான் ஒன்றும் செயற்கரிய செயல்களை செய்யவில்லை, என்றும், இந்த நிலைமைக்கு காரணமாக அமைந்தவர்கள் விவசாயிகளே என்றும் பதிலுரைத்தார். விவசாயிகள் தங்களது ஆலோசனையின்படி, திறம்பட உழைத்ததன் விளைவே, தற்போதைய வளத்திற்கு காரணம் என்று மேலும் தெரிவித்தார்.

பாங்கிலி ஊராட்சி எல்லா வகையிலும் மிகவும் பிற்பட்ட பகுதியாக இருக்கிறது. இங்கு வாழ்கின்ற மக்களில் பெரும் பகுதியினர் விவசாயிகள். இவர்கள் பழமையான விவசாய முறைகளைப் பின்பற்றி விவசாயம் செய்வதால், இரண்டு வேளைச் சாப்பாட்டிற்கே மிகவும் சிரமப்படுகிறார்கள். 1961-ம் ஆண்டில் திரு சாந்தன் சிங்கை கிராம சேவக்காக இக்கிராமத்தில் பணியாற்ற நியமித்த பின் பழைய நிலைமைகள் வெகுவாக மறையத் தொடங்கின.

### லைன்மேன் விவசாயியானார்

அவருடைய எண்ணங்களுக்கு துணை செய்யும் முறையில் மறு ஆண்டிலேயே குஜராத் மாநிலத்திலுள்ள பாரோடா மாவட்டத்திலிருந்து இரண்டு விவசாயக் குடும்பங்கள் பாங்கிலி கிராமத்திற்கு பிழைப்பிற்காக குடியேறின. அவர்களை கிராம சேவக் முதன்முதலாக சந்தித்து நவீன விவசாய முறைகளைக் கடைப்பிடித்து விவசாயம் செய்யும்படிக் கேட்டுக் கொண்டார். இந்த விவசாயிகளும் இவரின் ஆலோசனைகளுக்கேற்ப நவீன விவசாய முறைகளைப் பின்பற்றினார்கள். அதன்பிறகுதான் பாங்கிலி கிராம மக்களும் நவீன விவசாய முறைகளைப் பின்பற்றி விவசாயம் செய்யத் தலைப்பட்டனர். நீர்ப்பாசன வசதியில்லாமல் பெரும்பான்மை நிலங்கள் இருந்தன. இதனால் இக்கிராமத்திலுள்ள 8,403 ஏக்கரில் 5928 ஏக்கரில்தான் சாகுபடி செய்ய முடிந்தது. இதில் மூன்றில் இரண்டு பங்கு நிலங்களுக்குத்தான் பாசன வசதி கிடைத்தது. சென்ற ஆண்டு

# சிறந்த கிராம சேவக்

பெய்த மழையினால் அணைக்கட்டுகளில் அதிகமாக நீர் வந்து நிரம்பப் பெற்றது. இதனால் கிணறுகளில் நீர்மட்டம் உயர்ந்து பாசனத்திற்கு அதிகமாக நீர் இறைக்க முடிந்தது. நீர்ப்பாசனத்திற்கு குழாய்க்கிணறுகள் பல ஏற்படுத்தப்பட்டதினால், பாங்கிலி கிராமத்தில் முன்னால் இருந்ததைவிட இரண்டு மடங்கு பாசன வசதி தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ளது. மிகக் குறைந்த ஆழத்தில் தண்ணீர் இருப்பதை இக்கிராம மக்கள் கண்டுபிடித்தனர். அதனால் 1,000 சதுர கெஜ நிலத்தில் ஆறு கிணறுகள் தோண்டினார்கள். இவற்றிலிருந்து ஏராளமான நீர் குறைந்த ஆழத்திலிருந்தே கிடைத்தன. இக் கிராம மக்கள் தண்ணீரைப் பணம் போல் கருதுகின்றனர். வாய்க்கால் மூலமாக பாசனம் செய்வது இக்கிராம மக்களை வெகுவாகக் கவர்ந்திருக்கிறது. குஜராத் மாநிலத்திலிருந்து இக் கிராமத்தில் குடி புகுந்தவரான திரு சன்வார்பாய் அடுத்த காரிப் பருவத்திற்குள் எல்லா வாய்க்கால்களையும் முழுமையாக கட்டி முடித்துவிடுவதாக உறுதி கொண்டுள்ளார்.

இவர் மின் விசை ஆயத்தில் லைன் மேனாகப் பணியாற்றியவர். ஐந்து ஆண்டுகளுக்கு முன் இப் பதவியை விட்டு விலகி, அக்கிராமத்தில் உழவராக குடியேறியவர். இவரிடம் "நீங்கள் ஏன் அரசாங்க வேலையை விட்டு, விவசாயத்தில் ஈடுபட்டீர்கள்?" என்று கேட்கையில், "இதில் சுதந்திரத்திற்கும் அடிமை தன்மைக்கும் நிரம்ப வேறுபாடுண்டு" என்று குறிப்பிட்டார். மேலும் இவர், இளைஞர்கள் அனைவரும் அரசாங்க வேலையை விரும்பிச் சென்றால், அனைவருக்கும் வேலை கொடுக்க முடியுமா என்றும் கேட்டார். இவரோடு சேர்ந்து வந்து இக்கிராமத்தில் குடியேறியவரான திரு தயாபாய் என்பவர் தமது மணற்பாங்கான நிலத்தின், பாசன வசதிக்காக ஒரு மைல் நீளமுள்ள சிமெண்ட் குழாய் ஏற்படுத்தியிருக்கிறார்.

### அதிக அளவில் உரம்

இக்கிராம மக்கள் ரசாயன உர உபயோகங்களை நன்கு உணர்ந்து அவற்றை அதிக அளவில் பயன்படுத்தி வருகிறார்கள். இவர்களின் தேவைக்கு வேண்டிய ரசாயன உரங்கள் சென்ற ஆண்டில் இவர்களுக்கு கிடைக்கவில்லை. அதனால் இவர்கள் கலவை உரங்களையும், தொழு உரங்களையும் பயன்படுத்தி, தங்களது தேவையைப் பூர்த்தி செய்துகொண்டனர். இவர்கள் யூரியா என்ற உரத்தையும் தங்களின் வயல்களுக்கு பயன்படுத்துகிறார்கள்.

இந்தப் பகுதிகளில் பருத்தி அதிகமாக உற்பத்தியாகிறது. பாங்கிலி கிராம மக்கள் இந்த ஆண்டு 700 ஏக்கர் நிலத்தில் பருத்தி சாகுபடி செய்திருக்கிறார்கள். இவர்கள் ரசாயன உரங்களையும் பூச்சி மருந்துகளையும் பயன்படுத்தி வருவதால் மிகுந்த அளவில் பருத்தி விளைச்சல் இந்த ஆண்டில் கிடைக்கும் என்று நம்புகின்றனர். தங்கள் நிலத்தை சீர்திருத்தும் வேலைக்காகவும் அவற்றின் நீர்ப்பாசனத்திற்காகவும் வாங்கிய கடனை இந்த ஆண்டு பருத்தி மகசூலில் திருப்பிச் செலுத்திவிடுவோம் என்று உறுதியாகக் கூறுகிறார்கள்—இந்த விவசாயிகள்; இங்குள்ள விவசாயிகளின் பொருளாதார மறுமலர்ச்சிக்கு கிராம சேவக்கான திரு சாந்தன்சிங்கின் தளரா உழைப்பும், விவசாயிகளை அபிவிருத்தி திட்டங்களில் ஈடுபடும்படி தூண்டியதுமே முக்கிய காரணங்களாக அமைவன. இந்த கிராம சேவக் ஊராட்சி மன்ற உறுப்பினர்களின் உதவியோடு, ஊராட்சிகளின் பல்வேறுபட்ட வளர்ச்சித் திட்டங்களின் வளர்ச்சிக்கு பல குழுக்களை அமைத்தார். இந்தக் குழுக்கள் ஒவ்வொன்றும் பயிரிடுதல், பயிரைப் பாதுகாத்தல், ரசாயன உரங்களை விநியோகித்தல் போன்ற வேலைகளை தனித் தனியே கவனித்துக்கொண்டன. இவ்வாறு பருத்திச்செடிகளின் பாதுகாப்பிற்காகவும் மூன்று பேர் கொண்ட துணைக்குழு ஏற்படுத்தப்பட்டது. இந்தக்குழு பருத்தி வளர்ச்சியில் ஆர்வம் காட்டி அதிக உற்பத்திக்கு வழி கோலியது.

### நீர், மண் சோதனைகள்

இங்குள்ள 100 ஏக்கர் நிலங்களுக்கு வரப்புகள் ஏற்படுத்தப்பட்டன. இவை பாசன வசதிக்கும், மண் அரிப்பை தடுப்பதற்கும் பயன்படுகின்றன. இக்கிராமத்திலுள்ள நிலங்களின் விலை அதிகரித்துக்கொண்டே போவதால், இவர்கள் மண் பாதுகாப்பிற்காக பல முறைகளைக் கையாண்டு வருகின்றனர். கிராமவாசிகள் அனைவரும் நவீன அறிவியல் முறைகளைப் பின்பற்றி சாகுபடி செய்வதால் தங்களது நிலத்திற்கு எந்த வகை ரசாயன உரம் பெரும் பயனைக் கொடுக்கும் என்று ஆராய்ச்சி செய்வதற்காக 287 மாதிரி மண் வகைகளை பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பியுள்ளனர். இதே போன்று நீரிலும் சோதனை செய்வதற்காக 130 வகைகளை சோதனைக்கு அனுப்பியுள்ளனர்.

திரு சர்தார் சிங் என்ற ஆசிரியர் தனது வேலையை விட்டுவிட்டு, விவசாயத்தை தனது தொழிலாக்கிக் கொண்டார். ரசாயன உரங்களுக்காகவும், பயிர் பாதுகாப்பிற்காகவும் பொறுக்கு விதைகளுக்காகவும் செலவழித்துள்ள பணம், நல்ல பயன் கொடுக்கும் மூலதனங்கள் என்று விவசாயிகள் தற்போது கருதுவதாக திரு சர்தார்சிங் கூறுகிறார். "கண்ணியமுள்ள ஆசிரியர் தொழிலை விட்டு விட்டு நீங்கள் ஏன் கடின உடல் உழைப்பு செய்ய வேண்டிய விவசாயத்தை மேற்கொண்டீர்கள்?" என்று சர்தார் சிங்கை கேட்டபோது இவர் தனக்கு இந்த வாழ்க்கையில் தான் மகிழ்ச்சியிருக்கிறது என்றும் இதை தாழ்வாக நினைக்கவில்லை என்றும் குறிப்பிட்டார். இப்பகுதிவாழ் விவசாயிகள் பொருளாதார வளர்ச்சியுற்று சிறந்து விளங்குவதுதான் தமது குறிக்கோள் என்று இவர் மேலும் கூறினார்.

# புதுவாழ்வு - புது சூழ்நிலை

ஜோத்பூர் நகரப் பகுதியிலிருந்து ஆறு மைல் தூரத்தில் மாண்டூர் என்ற சரித்திரப் பிரசித்தி பெற்ற கோட்டையின் அழிந்த பகுதிகள் காணப்படுகின்றன. ஜோத்பூருக்கு வரும் உல்லாசப் பயணிகள் பார்க்கவேண்டிய இடங்களில் மாண்டூர் தனியிடத்தைப் பெறுவதோடு, இது இந்தியாவில் சிறந்த கவர்ச்சி மிகுந்த தோட்டங்களும் இயற்கை அழகு மிகுந்த பகுதிகளும் நிறைந்த இடமாக விளங்குகின்றன. மேலும் ஜோத்பூர் ஊராட்சி மன்றத்தின் தலைமையிடம் சமீபகாலமாக மாண்டூரில் இருந்து வருவதோடு, இந்த ஊராட்சி மன்றம் சமுதாய வளர்ச்சித் திட்டத்தில் சிறந்த பணியாற்றி வருவதாக புகழ்மாலை சூட்டப்பட்டுள்ளது. ஜோத்பூர் ஊராட்சி மன்றம் 1959-ம் ஆண்டில்தான் ஏற்படுத்தப்பட்டது. இந்தப் பகுதியின் முக்கிய உணவுப் பொருட்களான சோளம், கோதுமை, கம்பு ஆகியவை இங்கு விளைவிக்கப்படுகின்றன.

விவசாய வளர்ச்சியில் இந்த ஊராட்சி மன்றம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் அடைந்திருக்கிறது. இந்த ஊராட்சி மன்றம் தொடங்கிய நாட்களில் இங்கிருந்த மொத்த சாகுபடி நிலம் 3,631 ஏக்கர் மட்டுமே. ஆனால் இப்பொழுது இது 4,000 ஏக்கர் வரை உயர்ந்துள்ளது. விவசாயத்தைப் பெருக்குவதற்கு ரசாயன உரங்கள் வினியோகிக்கப்படுகின்றன. இந்த ஊராட்சி மன்றம் 1958—59-ம் ஆண்டில் நான்கு டன் ரசாயன உரம் மட்டுமே விவசாயிகளுக்கு வினியோகித்தது. ஆனால் இது 1966-67-ஆம் ஆண்டில் 125 டன்னாக உயர்ந்தது.

ஜோத்பூர் நகரின் காய்கறித் தேவைகளை மாண்டூர் ஊராட்சி மன்றம் நிறைவேற்றி வருகிறது. விவசாயிகளின் வேளாண்மைச் செலவினங்களுக்கு இந்த ஊராட்சி மன்றம் உதவி செய்வதோடு, விவசாயிகளின் பயிர்களை, பூச்சி மற்றும் இதர நோய்களிலிருந்து பாதுகாப்பதற்கும் மன்றம் உதவி செய்து வருகிறது. தவிர 620 ஏக்கர் நிலங்களுக்கு சென்ற ஆண்டு பயிர் பாதுகாப்பு பணி மேற்கொள்ளப்பட்டது. விவசாயி… நிலைமையைக் கருதி பல கிராமங்களில் விவசாயக் கண்காட்சிகளை இந்த ஊராட்சி மன்றம் ஏற்படுத்தி வருகிறது. சென்ற ஆண்டு ஒரு கிராமத்தில் கோதுமை பயிரைப் பற்றி ஒரு கண்காட்சி ஏற்படுத்தி, அதன் வாயிலாக கோதுமை பயிர் செய்யும் விவசாய நுணுக்கங்கள் விளக்கிக் காட்டப்பட்டன.

இந்த ஊராட்சியின் முன்னோடித் திட்டங்களில், கால் நடை வளர்ப்பிற்கு தனிக் கவனம் செலுத்தப்படுகிறது. ஒவ்வொரு ஊராட்சிக்கும் இரண்டு பொலி காளைகள் கொடுக்கப்பட்டுள்ளன. நூறு பசுக்களுக்கு ஒரு பொலி காளை கொடுக்கும் திட்டம் வகுக்கப்பட்டிருக்கிறது. 26 இடங்களில் செம்மறி ஆடு வளர்ப்பு நிலையங்கள் தொடங்கப்பட்டுள்ளதோடு செம்மறி ஆட்டு இனங்களில் 64 வகை வினியோகம் செய்யப்பட்டிருக்கின்றன. இது தவிர முர்ரா இனத்தைச் சேர்ந்த ஐந்து எருமை மாடுகளையும் இந்த ஊராட்சி வினியோகித்துள்ளது. மேலும் 66 கோழிப் பண்ணைகளை ஏற்படுத்தியிருப்பதோடு கால் நடைகளுக்கு தடுப்பு ஊசிகளும் போட்டு அவற்றின் வளர்ச்சிக்கு ஆவன செய்யப்பட்டுள்ளது. கால் நடை பராமரிப்பைப் பற்றி விளம்பரம் செய்வதற்காக, அகில இந்திய கால்நடை கண்காட்சிக்கு இந்த ஊராட்சி மன்றம் ஏற்பாடு செய்தது. இந்தக் கண்காட்சிக்கு பஞ்சாப், உத்திர பிரதேசங்களிலிருந்தும் கால் நடைகளைக் கொண்டு வந்திருந்தார்கள். இந்தக் கண்காட்சியில் மொத்தம் 5,108 கால் நடைகள் பங்கெடுத்துக்கொண்டன.

மக்கள் சமூக பொருளாதார நிலைகளில் முன்னேற வேண்டுமானால், கூட்டுறவு முறையினால்தான் விரைவில் முன்னேற முடியும் என்பதை ஜோத்பூர் ஊராட்சி தெளிவாக அறிந்துள்ளது. இதனுடைய ஊக்கத்தினாலும், உதவியினாலும், தற்போது பல்வேறுபட்ட கூட்டுறவுச் சங்கங்களில் 93 நிறுவனங்கள் பணியாற்றி வருகின்றன. இந்த ஊராட்சி மன்றம் ஐந்து இலட்சத்திற்கும் அதிகமான பணம் கடனாக கொடுத்திருக்கிறது. மாண்டூர் பகுதிகளில் மக்களின் அறியாமையைப் போக்குவதிலும் இந்த ஊராட்சி மிகவும் வெற்றி பெற்றிருக்கிறது. முதியோர் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து, அவர்களுக்கு கல்வி அறிவு கொடுத்து வருகிறது. இதனால் இப்பகுதியில் வசிக்கும் சிறுவர், சிறுமியர்கள் பெருமளவில் கல்வி கற்று தங்களது அறியாமையைப் போக்கிக்கொண்டுள்ளனர். மேலும் இந்த ஊராட்சி மன்றப் பள்ளிகளில் விளையாட்டிற்கு முக்கியத்துவம் கொடுத்து, விளையாட்டையும் பாடத்திட்டத்தில் சேர்த்திருக்கிறது. இதனால் ஏழு இடங்களில் பெரிய விளையாட்டு நிலையங்கள் ஏற்பட்டுள்ளது சிறப்புத் தகுதிகளோடு விளங்கும் விவசாயிகளுக்கும் மாணவர்களுக்கும் ஒவ்வொரு ஆண்டிலும் பரிசு வழங்கும் திட்டம் ஒன்று ஏற்பட்டுள்ளது. கிராம ஊராட்சிகள் அனைத்தும் சாலை வசதிகளால் இணைக்கப்படவேண்டுமென்று, இந்தச் சமிதி பேராவல் கொண்டிருக்கிறது. இத் திட்டப்படி தற்போது பதினொறு கிராம ஊராட்சிகள் சாலைகளால் இணைக்கப்பட்டிருக்கின்றன.

இந்த ஊராட்சி எல்லா வளர்ச்சி வேலைகளிலும் சிறந்து விளங்குவதற்கு இதில் வேலை செய்யும் எல்லா அலுவலர்களின் ஊக்கமும் ஆர்வமுமே யாகும். அனைவரும் பாராட்டும் அளவிற்கு இவ்வூராட்சி முன்னேறியிருக்கிறதென்றால் அதற்கு முக்கிய காரணங்களாக இருந்த திரு தௌலத் ராம் சௌத்ரியை குறிப்பிடாமல் இருக்க முடியாது. திரு ராம் மற்றும் அவரோடு பணியாற்றிய அலுவலர்களையும் ஜோத்பூர் ஊராட்சி மறக்க முடியாது. இவர்கள்தான் இப்பகுதி மக்களுக்கு புது வாழ்வும், புதுச் சூழ்நிலையும் ஏற்படுத்தியவர்கள். வருங்காலச் சந்ததியினர் இவர்களை நன்றியோடும் மதிப்போடும் தங்கள் நினைவில் வைத்துக்கொள்வார்கள் என்பதில் ஐயமில்லை.



# சோள மாவு ஆலை

வேளாண்மை தொழில் வளர்ச்சி கார்பரேசன் இந்தியாவின் முதல் சோள மாவு ஆலையை மகாராஷ்டிர மாநிலத்தில் ஏற்படுத்த திட்டமிட்டுள்ளது. இந்த இயந்திரத்தினால் சோளத்தை மாவாக்கவும், சோள ரவா, சோளத் தவிடு முதலியவற்றை உற்பத்தி செய்யவும் முடியும். சோளத்திலுள்ள எண்ணெய்ச் சத்துக்களை தனியேப் பிரித்து, உயர்ந்த ரகத்தைச் சேர்ந்த உணவிற்கு பயன்படும் எண்ணெய் தயாரிக்கப்படவிருக்கிறது. சோளத்திலிருந்து செய்யப்படும் மாவு, ரவா, முதலியவை கோதுமையிலிருந்து செய்யப்படும் உப உணவுப் பொருட்களுக்கு மாற்றுப் பண்டங்களாக அல்லது அதையொத்த தன்மையுடையதாக இருக்கும்.

பூனாவிற்கு அருகில் நிறுவப்பட இருக்கிற இருபது லட்சம் ரூபாய் மதிப்புள்ள இத்தொழிற்சாலை, ஒரு நாளில் 100 டன் சோளத்தை மாற்றுப் பண்டங்களாக தயாரிக்கும் உற்பத்தித் திறன் உள்ளதாக இருக்கும். மனித ஆற்றலைப் பயன்படுத்தி கோதுமையை மாவாக (ஆட்டாவாக) மாற்றுவதற்கு, ஒரு கிலோவிற்கு 10 பைசா ஆகிறது. ஆனால் இந்த இயந்திரத்தினால் அதே பொருட்களை தயாரிப்பதற்கு ஒரு கிலோவிற்கு $3\frac{1}{2}$ பைசா மட்டுமே செலவு ஆகிறது.

ஒட்டுச் சோளப் பயிர் சுமாரான வளமுள்ள நிலங்களில்கூட பயிர் செய்ய இயலுவதால், சோளத்தின் உற்பத்தியானது ஓர் ஏக்கரில் விளையும் கோதுமை உற்பத்தியைக் காட்டிலும் அதிகமாகவே இருப்பதால், சோளம் அரைக்கும் இயந்திரங்களை வளர்ச்சி செய்வது நாட்டில் தனி முக்கியத்துவம் பெற்றிருக்கிறது. 1965–66-ல் 40,000 ஏக்கரில் பயிர் செய்யப்பட்ட வீரிய ஒட்டுச் சோளத்தை, அடுத்த ஐந்து அல்லது ஆறு ஆண்டுகளில் 4,00,000 ஏக்கரில் பயிரிட மகாராஷ்டிர அரசு முயற்சி செய்து வருவதாகத் தெரிகிறது.

## ஓயாத உழைப்பு

அந்த சிறுவன் சில ஆண்டுகளாக பிறரது பண்ணைகளிலேயே வேலை செய்து வந்தான். ஆண்டுகள் உருண்டன ; சிறுவன் இளைஞனுன். அப்போதும் அவன் வயல்களிலேயே உழைத்த வண்ணமிருந்தான். ஆனுல் ஒரு சிறு மாற்றம். . . அப்போது குத்தகைக்கு விவசாயம் செய்தான். 1952-ம் ஆண்டு பிறந்தது. அவன் வாழ்க்கையிலும் ஒரு புதிய ஒளி உதயமாயிற்று. குத்தகைக்கு விவசாயம் செய்த அதே நிலங்களை—34 ஏக்கர்—அவன் விலைக்கு வாங்கிவிட்டான். அந்த உழவன் திரு துக்காராம் ஹரி பாடில்..

திரு துக்காராம் ஹரி பாடில், மகா ராஷ்டிர மாநிலத்திலுள்ள புல்தானு மாவட்டத்தைச் சார்ந்தவர். தலாதா என்னும் கிராமத்திலே அண்மையில் ஒரு பழத் தோட்டத்தை ஏற்படுத்தி யுள்ளார். அதில் மத்திய உள்துறை அமைச்சர் திரு சவான் ஒரு திராட்சைக் கொடியை நாட்டி, திரு பாடிலை வெகு வாகப் பாராட்டினர்.

**உழைக்கப் பிறந்தவர் பாடில்....**

தமது சாதனைகளுக்கெல்லாம் இறைவனின் கருணைதான் காரணம் என்கிறார். தெய்வ பக்தியுள்ள திரு பாடில்—இரண்டு இலட்ச ரூபாய் மதிப்பிற்கு பண்ணையைப் பெற்ற இவர்—எளிமையான உடையணிந்து, இனிமையாக உறவாடுபவர். எப் போதும் வயல்களில் வேலை செய்த வண்ணமிருப்பார்.

திரு பாடில் தொடக்கத்தில், 34 ஏக்கர் நிலத்தை வாங்கி, அதன் வளர்ச்சிக்காகத் தமது சேமிப்புஅனைத் தையும் செலவழித்தார். மண் அரிப்பை தடுப்பதற்காக வரப்புகள் கட்டினர். மறு ஆண்டே பாசனத் திற்காக கிணறு தோண்டினர். தமது நிலத்தில் ஏழு ஏக்கரை பாசனத்திற்கு கொண்டு வந்து, பல் வேறு பயிர்களைச் சாகுபடி செய்தார். நல்ல பாசன வசதியிருந்ததால் மிகு விளைச்சலைப் பெற்றுர் விரைவி லேயே மின் வசதி அவர் கிராமத் திற்கு கிடைத்துவிட்டதால், மின்சார மோட்டார் ஒன்றை விலைக்கு வாங்கி, அதன் வாயிலாக நிலையான பாசனத் திற்கு வழி செய்து விட்டார். இதனுல் அமோக விளைச்சல் ஏற்பட்டு, மிகுந்த ஆதாயம் அவருக்குக் கிடைத்தது. இவர் தன்னுடைய நிலத்தில் பொது வாக கோதுமை, சோளம், மிளகாய் ஆகியவற்றை சாகுபடி செய்தார். தவிர, தமது நிலத்தோடு சேர்ந்திருந்த இன்னொரு 8 ஏக்கர் நிலத்தையும் விலைக்கு வாங்கினர். இவர் அதை வாங்கும் போது அந்நிலம் தரிசாகவே இருந்தது. தனது பழைய நிலங்களை முன்பு சீர்திருத்தியது போன்றே இதையும் செம்மைப்படுத்தி, இதில் ஒரு கிணற்றை தோண்டியதோடன்றி ஓர் ஆயில் எஞ்சினையும் பொருத்தி விட்டார். பருத்தி, வேர்க்கடலை, மிளகாய் ஆகிய வர்த்தகப் பயிர்களை இந்நிலத்தில் பயிரிட்டார். தமது மேற்பார்வையில் பண்ணை இருக்க வேண்டுமென்பதற்காக, ஒரு வீட்டை யும், கால்நடை கொட்டகை ஒன்றையும் தனது பண்ணையிலேயே அமைத்துக் கொண்டார். பெருகிவரும் தமது வருவாயிலிருந்து மேலும் ஒரு மின் சார மோட்டார் வாங்கினர்.

வாழைத் தோட்டம் போட வேண்டு மென திட்டமிட்டு, அதன் பாசனத் திற்கென மேலும் ஒரு கிணறு வெட்டினர். இதனுல், இவர் முதன் முறையாக கூட்டுறவு வங்கியில் கடன் பெற வேண்டியதாயிற்று. ஆனுலும் கடனை திருப்பிச் செலுத்திவிட்டார்.

வேளாண்மை வளர்ச்சி நிறு வனம் அனுமதித்த ரூ. 7,000த்தை வைத்துக்கொண்டு திராட்சை சாகுபடி செய்யத் தொடங்கினர். முதல் ஆண்டு இரு ஏக்கரில் திராட்சை சாகுபடி செய்தார். மறு ஆண்டில் மேலும் ஒரு ஏக்கரை திராட்சை சாகு படியின் கீழ் கொண்டு வந்தார். இவ்வாறு திராட்சை சாகுபடிக்கு ரூ. 50 ஆயிரம் முதலீடு செய்துள்ளார். தமது தோட்டத்தில் பல்வேறு திராட்சை இனங்களைச் சாகுபடி செய்வது மட்டுமின்றி, இவர் பழத் தோட்டங்களில் ஆரஞ்சு, எலுமிச்சை முதலிய பழங்களும் உற்பத்தி செய்யப் படுகின்றன.

**வளமான வாழ்வு**

இவர் தமது நிலத்திலேயே இருப துக்கு மேற்பட்ட எருக்குழிகளையும், ஓர் ஆழமான உரக்கிடங்கையும் அமைத் தார். இந்த உரக்கிடங்குகளில், பண்ணை யிலிருந்து கிடைக்கும் எல்லா கழிவுப் பொருட்களையும் போடுவதால் அது கலவையுரமாக மாறிவிடுகிறது. இதன் வாயிலாக 200 வண்டி உரங்கள் கிடைக்கின்றன. இதோடு ஒவ்வொரு ஆண்டும் சுமாராக எட்டு டன் அமோ னியம் சல்பேட், ஐந்து டன் சூப்பர் பாஸ்பேட், மூன்று டன் நைட்ரோ பாஸ்பேட், இரண்டு அல்லது மூன்று டன் ரசாயன உரங்களான யூரியா முதலியவற்றை தமது நிலத்திற்கு இடுகிருர்.

"உங்களுக்கு ஆண்டொன்றிற்கு எவ்வளவு இலாபம் கிடைக்கிறது என்று கேட்டபோது இவர் தலையை தாழ்த்திக் கொண்டு, "எனக்கு வரவிற்கும் செலவிற்கும் சரியாகப் போய்விடுகிறது" என்று கூறுகிருர்.

இவருக்குச் சொந்தமாக நான்கு கிணறுகள், ஒரு மின்சார மோட்டார், ஓர் ஆயில் எஞ்ஜின் ஆகியவை பண்ணையிலிருக்கின்றன. இரண்டு மாடி வீடுகள் இருப்பதோடு, கிராமத் திலும் இவருக்கு ஒரு வீடு இருக் கிறது. அதன் மதிப்பு ரூபாய் 25,000 ஆகும். இவை தவிர, இவருக்கு ஒரு எருமை, மூன்று பசுக்கள், ஏழு எருதுகள் ஆகியவை உள்ளன.

**ஆண்டிற்கு ரூ. 50 ஆயிரம் வருவாய்**

நான்கு குழந்தைகளுக்கு தந்தை யான திரு பாடிலின் மூத்தமகன் கோபால், தந்தைக்கு பெரும் உதவியாக இருக்கும் பொருட்டு, பள்ளிப் படிப்பை விட்டு தந்தையோடு இருக்கிருர். இவரது இரண்டாவது மகன் ஏகாநாத், விவசாயக் கல்லூரி யில் பட்டம் பெற்று, விவசாய மேற் பார்வையாளராக, ஆசல்கான் பண்ணை யில் வேலை செய்கிருர். இவரது மூன்ருவது மகன், கல்லூரியிலும் நான்காவது மகன் பள்ளியிலும் படித்து வருகின்றனர். திரு பாட்டில் தன் மக்களைப் பற்றிக் கூறும் போது "என்னுடைய வயல்கள் எவ்வாறு நல்ல, வருமானம் கொடுக்கிறதோ அதே போன்று என் மக்களும் எனக்கு நல்ல புகழைக் கொடுப்பார் கள், என் மக்கள்தான் என்னுடைய மூலதனங்கள்" என்று பெருமை யாகக் கூறுகிருர். இவருடைய பண்ணையிலிருந்து இவருக்கு ஆண்டு ஒன்றிற்கு ரூ. 50 ஆயிரம் நிகர வருவாய் கிடைக்கிறது.



## கிராம மனித சக்தித் திட்டம்— ஓர் ஆய்வு

திட்ட மதிப்பீடு நிறுவனம், மனித சக்தித் திட்டங்கள் பற்றிய மதிப் பீட்டு அறிக்கையில், மனித சக்தித் திட்டத்திற்கு தேர்ந்தெடுக்கப்படும் பகுதிகள், வேலை இல்லாதவர்கள், போதுமான வேலை வசதி இல்லா தவர்கள் இருக்கும் பகுதிகள் எவை என்று ஆய்வு செய்து அறிந்து, அப்பகுதிகளில் இந்திட்டத்தை நிறைவேற்றவேண்டும். என்று குறிப்பிடு கிறது. மேலும் இந்த அறிக்கையின்படி, முழுவதும் வேலையில்லாத காலங்கள், போதுமான வேலையில்லாத காலங்கள் பற்றிய விவரங்களை குறிப்பிட்டுக் கூறினுல், அந்த காலங்களுக்கு ஏற்ப மனித சக்தித் திட்டத்தை நிறைவேற்ற முடியும் என்று குறிப்பிடுகிறது. இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் பகுதிகளில் ஒரு பெரிய மனித சக்தித் திட்டத்தை வகுக்கவேண்டும். இவ்வாறு வகுக்கப்படும் பெரிய மனித சக்தித் திட்டத் தினுல், சிறு சிறு, பொறியியல் நுட்ப அனுமதி வாங்கும் பிரச்னை நீங்குவதோடு, மனித சக்தித் திட்டத்தின்கீழ் நிறைவேற்றப்படும் மற்ற திட்டங்களையும் இணைத்து நிறைவேற்றலாம். இவ்வாறு ஏற்படுத்தப்படும் பெரிய மனித சக்தித் திட்டம் மாவட்ட அளவில் இருக்க வேண்டும். மாவட்ட அளவில் இருந்தால் தான் ஒவ்வொரு வட்டாரத்திற்கும் இதை விரிவு படுத்த வசதி ஏற்படும்.

திட்டங்களை நிறைவேற்றுதல், மேற்பார்வையிடுதல் போன்ற காரியங் களில், ஊராட்சிகள் அதிகமாக ஒத்துழைப்புத் தருகிறது என்பது பல திட்டங்கள் நிறைவேற்றியிருப்பதன் மூலம் தெரியவருகிறது, திட்டமிடுதலில் ஊராட்சிகளின் பங்கும், ஊராட்சிகள் தேர்ந்தெடுக்கும் திட்டங்களும் நான்கு மாநிலங்களில் தாம் அதிக அளவில் நடைபெறுகிறது. என்று அறிக்கை கூறுகிறது. குஜராத், மகாராஷ்டிர, ஒரிசா, ஆகிய மாநிலங் களில் இப்படிப்பட்ட கூட்டுறவு முறை ஏற்படுத்தப்படவில்லை. பஞ்சாப், மத்திய பிரதேசம் ஆகிய மாநிலங்களில் இப்படிப்பட்ட கூட்டுறவுச் சங்கங்கள் இருந்தும், இவற்றின் மூலம் எந்தக் கிராம வேலைத் திட்டமும் மேற் கொள்ளப்படவில்லை. இத்திட்டப் பகுதிகளில் வேலை வாய்ப்புகளை சீராக ஏற்படுத்த வேண்டுமானுல், தற்போதுள்ள நிர்வாக மற்றும், அவற்றை நிறை வேற்றும்முறைகளைப் போதிய அளவு மாற்றி அமைக்க வேண்டுமென்று இந்தஅறிக்கை பரிந்துரைத்துள்ளது. இவ்வாறுன பெரிய திட்டங்களை தீட்டுவ திலும், அவற்றை நிறைவேற்றுவதிலும் ஊராட்சி நிறுவனங்களின் பங்கு அதிகமாக இருக்கவேண்டும். குறிப்பாக இந்த திட்டத்தில் பங்கு கொள் ளாத ஊராட்சிகள், இதில் அதிக கவனம் செலுத்தவேண்டும். ஊராட்சி அளவில் இப்படிப்பட்ட தீவிரபங்கு இருக்குமானுல், இத்திட்டத்திற்குவேண்டிய வழி முறைகளும் ஊக்கமும், மேற்பார்வையும் உறுதியாகக் கிடைக்கும் என்று அறிக்கை வலியுறுத்துகிறது.



# தக்காளிப் பயிரில் மிகு விளைச்சல் அடைய

பெரிய, பெரிய தக்காளிப் பழங்கள் பார்ப்பதற்கு கண்ணையும் கருத்தையும் கவர்கின்றன. அவற்றில் ஒரு தனிக் கவர்ச்சி இருப்பதோடன்றி, அவற்றிற்கு நல்ல விலையும் கிடைக்கக்கூடும். அதனால் வருவாயும் பெருகும்.

ஓர் எளிய முறையைப் பின்பற்றி தக்காளிச் செடிகளைப் பயிர் செய்வதனால், இவ்வித பெரிய அளவிலான தக்காளிகளைப் பெற்று, பெரிதும் பயனடையலாம்.

செடியிலுள்ள முக்கியத் தண்டை மட்டும் செழிப்புடன் வளரவிட்டு, அதன் கிளைகளை கிள்ளி எறிந்து விட்டால், மண்ணிலிருந்து கிடைக்கும் எல்லா சக்திகளையும் அத்தண்டே பெற்று, தக்காளிகளை பெருமளவில் தரும். இம் முறையில் செடியின் இலைகளுக்கு சிறிதளவே சக்தி விரயமாவதால் பெருமளவு சக்தி, பழங்களின் உற்பத்திக்கே பயன்படுகிறது.

இவ்வாறு பயிர் செய்வதால், தக்காளிகள் அதிக எடையுடன் காணப்படும். எனவே, அந்த சுமையை தண்டுகளால் தாங்கிக்கொள்வது எளிதன்று. அதற்காக, ஆறு அடி நீளமுள்ள மரக்கம்பை பூமியில் நட்டு அதனுடன் செடியை கட்டி விடவேண்டும்.

சாதாரண முறையில் பயிர் செய்யப்பட்டு கிடைக்கப்பெறும் தக்காளிகளை விட இவ்வித தக்காளிகள் மிக நன்றாக இருக்கும். ஏனெனில், சாதாரண முறையில் பயிர் செய்வதால், செடிக்கு போதிய சூரிய ஒளி கிடைப்பதில்லை. இதோடன்றி செடியின் கிளைகளும் பூமியைத் தொடுவதால், சில பழங்கள் நாசமாகிவிடவும் கூடும்.

தக்காளிப் பயிர்காலம் நெருங்குகிறது. அதிக தக்காளிகளைப் பயிர் செய்து, பெருமளவில் இலாபம் அடையுங்கள்.

—From "(Intensive Agriculture)"

"பஞ்சாயத்து ராஜ்" "இன்டென்சிவ் அக்ரிகல்சர்" இதழ்களிலிருந்து இடம் பெறுபவை : பக்கங்கள் : 36 முதல் 46 வரை.

Articles reproduced from 'Panchayati Raj' on pages : 36 to 45 and from "Intensive Agriculture" Page 46



கிராம நலம் GRAMANALAM
ஊராட்சி அரசிதழ்
PANCHAYAT GAZETTE

(இந்தப் பகுதியில் ஊராட்சி, ஊராட்சி வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய அரசு ஆணைகள், குறிப்பாணைகள் விதிகள் முதலியவற்றின் தமிழாக்கம் சுருக்கமாக இடம் பெறுகிறது.)

---

## ஊராட்சிகளின் ஆய்வு, மேற்பார்வை அதிகாரிகளாக ஊராட்சி வளர்ச்சி அதிகாரிகள், நியமனம்—ஆணையிடப்படுகிறது.

**Act—Madras Panchayats Act 1958—Extension officers of Panchayats—Appointment as inspecting and superintending officers of panchayats in their respective jurisdiction—Ordered.**

1958-ஆம் ஆண்டு தமிழக ஊராட்சிச் சட்டத்தின் (தமிழகச் சட்டம் 35/1958) பிரிவு 144-ல் உள்ள உட்பிரிவு (1)-ல் வழங்கப்பட்ட அதிகாரத்தைப் பயன்படுத்தி, வருவாய்க் கோட்ட அதிகாரிகள் மற்றும் கோட்ட ஊராட்சி அதிகாரிகள் ஆகியோருடன், வளர்ச்சி அதிகாரிகளை (ஊராட்சிகள்) யும் அவர்களது அலுவல் வரம்பிற்குட்பட்ட பகுதிகளில் ஆய்வு, மற்றும் கண்காணிப்பு அதிகாரிகளாக (Inspecting and Superintending officers) தமிழக ஆளுநர் அவர்கள் நியமிக்கிறார்.

[கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 1968-ஆம் ஆண்டு பிப்ரவரி 26-ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 377-ன் சுருக்கம்]

## உள்ளாட்சி நிறுவனங்கள்—தமிழில் பெயர்ப் பலகைகளை அமைப்பதற்கு விளக்க ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

**Local Bodies—Display of name boards in Tamil—Instructions—Issued.**

நகராட்சிகள், ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், நகரியங்கள் மற்றும் இவற்றின் அதிகாரத்திற்குட்பட்ட நிறுவனங்களின், பெயர்ப்பலகைகள் தமிழில் இருக்க வேண்டுமென்று, 1967-ம் ஆண்டு ஜூலை மாதம் 25-ம் நாளிட்ட கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் அரசு ஆணை எண் 1352.ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. சிறுபான்மை மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் அதிகமிருக்கும் இடங்களில், பெயர்ப் பலகைகளை அந்த மொழியிலும் எழுதினால், அவர்கள் இந்த நிறுவனங்களை எளிதில் அறிந்துகொள்வதற்கு உதவியாக இருக்கும் என்று யோசனை கூறப்பட்டுள்ளது.

இந்த யோசனையை அரசு ஏற்றுக்கொண்டு அதற்கேற்ப, சிறுபான்மை மொழியைப் பேசும் மக்கள் சிறிதளவு மேம்பட்ட பகுதிகளிலுள்ள உள்ளாட்சி நிறுவனங்கள், மற்றும் அவற்றின் அதிகாரத்திற்குட்பட்ட நிறுவனங்களின் பெயர்ப் பலகைகளை தமிழில் எழுதுவதோடு அந்தப் பகுதியில் பேசப்படுகின்ற சிறுபான்மை மொழியையும் சேர்த்து பெயர்ப்பலகைகள் எழுதப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கிறது.

[கிராம வளர்ச்சி உள்ளாட்சித்துறையின் 1968-ஆம் ஆண்டு பிப்ரவரி 19-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 298-ன் சுருக்கம்.]

## சீரணி—1967-ம் ஆண்டில் சீரணித் திட்டத்தை நிறைவேற்றுதல்—விளக்க ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

## Prosperity Brigade—Implementation of Scheme in 1967—68—Procedure to be followed—Detailed instructions—Issued.

1967–68-ஆம் ஆண்டிற்குரிய நிதி நிலை அறிக்கையை தமிழக சட்ட மன்றத்தில் முதலமைச்சர் சமர்ப்பிக்கையில் கீழ்க்கண்டவாறு கூறினார்:—

தமது உழைப்பினை மனமுவந்து ஈந்திட பலப்பல ஆயிரவர் முன் வந்திடின், சமூகம் பெற்றிடக் கூடிய பயன், பெருமைதரத்தக்கதாக அமையும். 'எனக்காகவும் என் குடும்பத்துக்காகவும் செலவிட்டது போக, மிஞ்சியதில் ஒரு மணி நேரமாயினும், நாட்டின் பொது நன்மைக்காகச் செலவிடுவேன்' என்ற உறுதி கொண்ட சில ஆயிரவர் தமது உழைப்புச் செல்வத்தைத் தந்திடின், சமூக மேம்பாடு வளர்ந்திடுவது உறுதி, இந்த ஆர்வம் கொண்டோர், பல்லாயிரவர் உளர் என்ற நம்பிக்கையுடன், துவக்க கட்டமாக, மாவட்டத்துக்கு ஆயிரம் பேர் கொண்ட ஒரு சீரணியை அமைத்திடும் திட்டத்தை மேற்கொள்ள, அரசு முடிவு செய்திருக்கிறது.

2. இதுபோன்று தாமாகவே முன் வந்து செயல்படும் நிறுவனங்கள் பல்வேறு நாடுகளில் எவ்விதம் செயல்படுகிறது என்பதை அறியவும், அதன்பின் தமிழகத்தின் சமூக, பொருளாதார சூழ்நிலைகளுக்கேற்ப சீரணிப்படையை எவ்வாறு தொடங்கலாம் என்பன பற்றி ஒரு விபரமான திட்டத்தைக் கொடுப்பதற்காக, சீரணிப் படைக்கென ஒரு தனி அதிகாரி நியமிக்கப்பட்டார். தமிழகத்தில் சீரணிப்படையை அமைப்பது பற்றிய விளக்கமான திட்டத்தை அவர் சமர்ப்பித்துள்ளார்.

3 ... .. .. .. ..

4. சீரணி தனி அதிகாரியினுடைய பணிகள் தனித் தன்மை கொண்டதாக இருப்பதால், அவர் மாநில முழுவதிலும் சுற்றுப் பயணம் மேற்கொள்ளும் ஓர் அதிகாரியாக இருப்பார். அவரது கடமைகளை நிறைவேற்றுவதற்கு (அவரின் முழுக் கட்டுப்பாட்டின்கீழ், ஓர் ஊர்தி (Vehicle) கொடுக்கப்படும். தமிழக அரசு தலைமைச் செயலகத் தளவில் பல திட்டங்களை உருவாக்க வேண்டியிருப்பதால், அவருக்கு கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையில் உதவிச் செயலாளரின் (தன் பதவியின் காரணமாக) பதவி அளிக்கப்படும்.

5. சீரணி செம்மையாக செயல்படுவதற்கு, மாநில நிர்வாக அமைப்பின் உதவி பெருமளவில் அதற்கு கிடைக்க வேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவர்களும், துறைத் தலைவர்களும், சீரணிக்கு அவசியத் தேவைகளான தொழில் நுட்ப நிர்வாக சம்பந்தமான அறிவுரைகள் கொடுத்திட வேண்டும். பொதுப் பணித்துறை அதிகாரிகளால் அளிக்கப்படும் தொழில் நுட்ப உதவிகள் மற்றும் இதர உதவிகளுக்கு எந்தவிதமான 'சென்டேஜ்' கட்டணமும் விதிக்கக் கூடாது.

6. தேவையான விளம்பர அட்டைகள், அடையாளச் சீட்டுகள் போன்றவற்றை அச்சிட்டு விநியோகிக்கும் பணியை தமிழக எழுது பொருள் அச்சக இயக்குநர் கவனிக்க வேண்டும்:

7. 1967—68 ஆம் ஆண்டில் இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு ஏற்படும் செலவுகளை சரிக்கட்ட ரூ. 10,00,000 (ரூபாய் பத்து லட்சம்)க்கு அரசு அனுமதியளிக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவர்களின் நேர் உதவியாளர்களும் (ஊராட்சி வளர்ச்சி) தனி அதிகாரியும் உணவு போன்ற கட்டணங்களுக்கு ஆகும் செலவுகளைச் சரிக்கட்டுவதற்கு, தங்கள் மாவட்டங்களுக்கும் சென்னை மாநகருக்கும் ஒதுக்கப்பட்ட தொகையிலிருந்து தேவைப்படும் பணத்தை, ஒரு சமயத்தில் ரூபாய் 3000-க்கு மேற்படாமல் முன் பணமாக எடுத்துக்கொள்வதற்கு அனுமதிக்கப்படுகிறது. இந்த முன் பணத்தை செலவழித்தது பற்றிய விவரமான செலவு அறிக்கையை இரசீதுகளோடு காட்டி, முதலில் வாங்கிய பணத்திற்கு கணக்கு காட்டி சரி செய்தபின்புதான் இரண்டாவது முறை முன் பணம் பெற முடியும்.

* * * * * * *

8. சீரணி தனி அதிகாரி தமது அலுவலக வேலையை நிறைவேற்றுவதற்கு, உதவியாக இருக்கும் பொருட்டு பொதுவாக வைக்கப்பட்டிருக்கும் ஊர்திகளிலிருந்து ஓர் ஊர்தி (Jeep) கொடுக்கப்படும்.

9. உள்ளாட்சி நிதிகளின் ஆய்வாளர் (Examiner of Local Funds) சீரணிப் படையின் கணக்குகளை தணிக்கை செய்வார்.

10. 1967-ஆம் ஆண்டு ஜூலை முதல் நாளிலிருந்தே இந்த ஆணை அமுலுக்கு வந்ததாக கருதப்பட வேண்டும்.

* * * * * *

[கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 1968 பிப்ரவரி 10 ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 270-ன் சுருக்கம்.]



## பொள்ளாச்சி தெற்கு ஊராட்சி ஒன்றியத்திற்கு அலுவலர்கள் நியமனம்—ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

## Establishment—West Coimbatore Development District—Pollachi Development Block—Bifurcation into Town Panchayat, Development Blocks—Sanction of staff for Pollachi South Panchayat Union—Orders—Issued.

மேற்கு கோயம்புத்தூர் வளர்ச்சி மாவட்டத்திலுள்ள பொள்ளாட்சி ஊராட்சி ஒன்றியத்தை, வடக்கு பொள்ளாட்சி, தெற்கு பொள்ளாட்சி ஊராட்சி ஒன்றியங்கள் எனப் பிரித்து அந்த இரண்டு ஊராட்சி ஒன்றியங்களுக்கும் ஊராட்சி ஒன்றியக் குழுக்களை 2—10—1966 முதல் ஏற்படுத்துவதற்கான அறிவிப்பு ஒன்றையும் வெளியிட்டு கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 22—8—1966 நாளிட்ட அரசு ஆணை எண் 2026, மற்றும் 30—9—1966 அரசு ஆணை எண் 2320 ஆகியவற்றில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. பொள்ளாட்சி வட்டாரத்தில் தற்போது பணிபுரியும் அலுவலர்கள் பொள்ளாட்சி வடக்கு வளர்ச்சி வட்டாரத்திற்குப் பயன்படுத்திக்கொள்ளப்படவேண்டும்.

பொள்ளாட்சி (தெற்கு) வளர்ச்சி வட்டாரத்திற்கு, கீழ்க்காணும் தற்காலிக அலுவலர்களை அவர்கள் நியமிக்கப்பட்ட நாளிலிருந்து 29—2—1968 வரை, அல்லது அவர்கள் தேவைப்படும் காலம் வரை, (இதில் எது முன்னால் ஏற்படுகிறதோ அதுவரை) நியமித்துக்கொள்வதற்கு அரசு இப்போது அனுமதியளிக்கிறது:—

வட்டார வளர்ச்சி அதிகாரி
ரூ. (250-15-400)—1

வளர்ச்சி அதிகாரி (விவசாயம்)
ரூ. (200-10-250-15-400)—1

வளர்ச்சி அதிகாரி (கால்நடை பராமரிப்பு)
ரூ. (225-10-275-15-425)—1

வளர்ச்சி அதிகாரி (கூட்டுறவு)
ரூ. (200-5-240-10-270)—1

வளர்ச்சி அதிகாரி (ஊராட்சிகள்)
ரூ. (140-5-220)—1

வளர்ச்சி அதிகாரி (கல்வி)
ரூ. (125-5-200-10-250)—1

கிராம சேவக்குகள் (முதல் நிலை)
ரூ. (125-5-175)—3

கிராம சேவக்குகள் (இரண்டாம் நிலை)
ரூ. (90-4-110-3-140)—7

(பட்டதாரிகள் ரூ. 102-லிருந்து தொடங்க வேண்டும்)

நிர்வாகி .. ரூ. (150-5-200)—1

கணக்கர் ரூ. (125-5-175)-ம் தனிச் சம்பளமாக ரூ. 15-ம்)—1

உதவியாளர்கள்
ரூ. (125-5-175)—2

ஊர்தி ஓட்டி
ரூ. (70-1-80)—1

3. மேற்காணும் பத்தி இரண்டில் குறிப்பிட்ட பதவிகளுக்கு நியமிக்கப்படுவோர் அப் பதவிக்கு நேரில் விவரிக்கப்பட்டுள்ள விகிதப்படி ஊதியம் பெறவும், நடைமுறை விதிகளுக்கு ஏற்ப அகவிலைப்படி மற்றும் இதர படிகளையும் பெறுவதற்கு தகுதியுடையவராக அரசின் அனுமதியை எதிர்நோக்கி, சில அலுவலர்களை நியமித்துள்ள கிராம வளர்ச்சி இயக்குநரின் நடவடிக்கைக்கு ஒப்புதல் அளிக்கப்படுகிறது.

4. பொதுப்பணித் துறையிலிருந்து நியமிக்கப்படும் ஊராட்சி பொறி இயலாளர் ஊராட்சி ஒன்றிய நிதியிலிருந்து ஊதியம் அளிக்கப்படும் இதர ஊழியர்கள் பற்றியும் முறையே பொதுப்பணித் துறை, கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையால் தனியே ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1968-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 9-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 210-ன் சுருக்கம்.)

---

## தமிழகத்தில் நகராட்சி மன்றங்கள் தேர்தல்—ஆகஸ்ட் மாதம் தொடங்கும்

"சென்னை மாநகராட்சித் தேர்தல் 1968-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் நடைபெறும். மற்ற நகராட்சி மன்றங்களின் தேர்தல், மூன்று கட்டங்களாக நடைபெறும். 1968-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் கடைசி வாரம் முதல் அக்டோபர் மாதம் முதல் வாரம் வரை இந்தத் தேர்தல் நடைபெறும்.

## நகர கலவையுரத்திட்டம் —1966-67-க்குரிய பரிசுத் திட்டம்—நகராட்சிகள், பேரூராட்சிகளுக்கு சுழற்கேடயம்

## Agriculture—Food production—Urban Compost Scheme—Best work in compost making—Competition for 1966-67—Award of rolling shields to Municipalities and Town Panchayats—Approved.

நகர கலவையுரத் திட்டத்தின் (Urban Compost Scheme) 1966-67-ஆம் ஆண்டிலே சிறந்த முறையில் பணியாற்றியுள்ள நகராட்சிகளுக்கு பெரிய சுழற் கேடயமும் பேரூராட்சிகளுக்கு சிறிய சுழற் கேடயமும் பரிசளிப்பது பற்றி விவசாய இயக்குநர் கூறியுள்ள யோசனையை அரசு ஏற்றுக்கொள்கிறது. அதற்கேற்ப கீழ்க்காணும் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு சுழற் கேடயம் வழங்கப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

(அ) நகராட்சிகள்—

| | |
|---|---|
| சிறப்புத் தரம், தேர்வுத் தரம். (Special and Selection grade). | மதுரை. |
| முதல் தரம் | திண்டுக்கல் (மதுரை மாவட்டம்) |
| இரண்டாம் தரம்- | போடிநாயக்கனூர் (மதுரை மாவட்டம்). |
| மூன்றும் தரம். | திண்டிவனம் (தென்னார்க்காடு மாவட்டம்). |

(ஆ) பேரூராட்சிகள் (மாவட்ட வாரியாக வெற்றி பெற்றவர்கள்).

| | |
|---|---|
| தென்னார்க்காடு | நெல்லிக்குப்பம். |
| வடஆர்க்காடு | தாரபடவேடு. |
| தஞ்சாவூர் | சீர்காழி. |
| திருச்சிராப்பள்ளி | அரியலூர். |
| தர்மபுரி | ஓசூர். |
| கோயம்புத்தூர் | காங்கேயம். |
| மதுரை | சின்னமனூர். |
| திருநெல்வேலி | வாசுதேவநல்லூர். |

2. மாவட்டத்தின் தலைமையிடத்திலாவது, அல்லது மாவட்டத்திலேயே வேறோர் இடத்திலாவது ஒரு சிறப்பான விழாவிற்கு ஏற்பாடு செய்து அவ்விழாவில் உள்ளாட்சி நிறுவனங்களுக்கு கேடயங்களை பரிசளிக்குமாறு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். கேடயங்களை மாவட்ட ஆட்சித் தலைவர்களே பரிசாக அளிக்கலாம். அல்லது உயர்தர அதிகாரிகள் அல்லது ஒரு அமைச்சரைக்கொண்டு கேடயங்களை பரிசளிக்க விழாவிற்கு ஏற்பாடு செய்யலாம். பரிசளிப்பதற்குரிய கேடயங்களை விவசாய இயக்குநர், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அனுப்பி வைப்பார்.

(விவசாயத்துறையின் 1967-ம் ஆண்டு நவம்பர் 4-ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 3070-ன் சுருக்கம்.)

## ஊராட்சி ஒன்றியங்களில் "ஜீப்" வண்டிகளுக்கு பெட்ரோல் உச்ச வரம்பு—விளக்க ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

## Community Development Programme—Jeeps in Blocks—Normal consumption of petrol—ceiling fixed—Excess consumption—Ratification by Collectors—Instructions—Issued.

சமவெளிப் பிரதேசங்களில் உள்ள ஊராட்சி ஒன்றியங்கள் ஒரு ஜீப் வண்டிக்கு மூன்று மாத காலத்திற்கு 900 லிட்டர் பெட்ரோலும், மலைப் பிரதேசங்களில் உள்ள ஊராட்சி ஒன்றியங்கள், மூன்று மாத காலத்திற்கு ஒரு "ஜீப்" வண்டிக்கு 1,100 லிட்டர் பெட்ரோலும் உபயோகப்படுத்தலாம் என்று உச்ச வரம்பு நிர்ணயிக்கப்பட்டு கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1965-ஆம் ஆண்டு நவம்பர் 5-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 2374-ல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் பெட்ரோலை உபயோகப் படுத்தியது பற்றிய ஒரு பருவ அறிக்கையை அவர்களிடமிருந்து பெற்று அதை மூன்று மாதங்களுக்கொரு முறை பரிசீலிக்க வேண்டும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு ஆணையிடப்பட்டது. இந்த ஆணைகளை மதிக்காதிருக்கும் சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கும்படியும், அதிக அளவில் பெட்ரோலை உபயோகித்திருந்தால், அதற்கான விலையை அவர்களிடமிருந்து வசூல் செய்யும்படியும் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு மேலும் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

2. மேற்கண்ட அரசு ஆணையில் நிர்ணயித்த உச்ச வரம்பிற்கு அதிகமாக பெட்ரோல் செலவு செய்யப்பட்டிருப்பதை பரிசீலித்து, ஒப்புதல் அளிக்க (Ratify) மாவட்ட ஆட்சித்



தலைவர்களுக்கு அதிகாரமளிக்கலாம் என்று யோசனை கூறப்பட்டுள்ளது. உண்மையாக அலுவலக வேலைகளுக்கு மட்டுமே ஜீப் வண்டிகள் பயன்படுத்தப்பட்டதால்தான் அதிக பெட்ரோல் செலவு செய்யப்பட்டிருக்கிறது என்றும், பெட்ரோல் தவறாக பயன்படுத்தப்படவில்லை என்ற அளவிற்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் திருப்தியடைந்த பின்னர், அவ்வாறு அதிகமாக செலவழிந்த பெட்ரோலுக்கு ஒப்புதல் அளிக்கலாம் என்று அரசு, ஆழ்ந்த பரிசீலனைக்குப் பின் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது. சாதாரண நிலையில், இந்த உச்ச வரம்பை மீறி பெட்ரோலைச் செலவழிக்கக் கூடாது என்று கடுமையான விளக்க ஆணைகளை அவர்களுக்கு பிறப்பிக்க வேண்டும். இந்த உச்ச வரம்பிற்கும் அதிகமாக பெட்ரோல் செலவு செய்திருந்து, அதுபற்றிய அவர்களின் விளக்கங்கள் திருப்திகரமாக இல்லாவிடில், அவர்களிடமிருந்து அதற்கான தொகைகள் வசூலிக்கப்படும் என்றும், அவர்களை அறியச் செய்ய வேண்டும். அதிகமான பெட்ரோலைச் செலவழித்ததற்கு ஒப்புதல் அளிக்க வேண்டிய கோரிக்கைகளை மூன்றாவது மாதம் முடிந்த உடனேயே ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள், மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு சமர்ப்பிக்கவேண்டும். இதில் கால தாமதம் ஏற்படுவது கடுமையான நடவடிக்கை எடுக்க காரணமாக அமையும்.

3. இந்தக் குறிப்பாணையில் அடங்கியுள்ளவற்றை கோட்டாட்சித் தலைவர்கள், ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் அனைவரும் அறியும்படி செய்யவேண்டுமென்று கிராம வளர்ச்சி இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1968-ம் ஆண்டு ஜனவரி மாதம் 29-ம் நாளிட்ட அரசு குறிப்பாணை எண். 16648-ன் சுருக்கம்.)

## 1965-ம் ஆண்டு தமிழக பொதுக் கட்டிடங்கள் (உரிமம் வழங்குதல்) சட்டம்— சிலவகைக் கட்டிடங்களுக்கு சட்டத்தினின்று விலக்கு அளித்தல்—திருத்தம் – வெளியிடப்படுகிறது.

## Act—Madras Public Buildings (Licensing) Act, 1965—Exemption of Certain Categories of Buildings from the Provisions of the Act for the Period of three years—Inclusion in notification issued G.O. Ms. No. 2083 R.D. and L.A., dated 30-8-1966, Amendment—issued.

1965-ம் ஆண்டு தமிழக பொதுக் கட்டிடங்கள் (உரிமம் வழங்குதல்) சட்டத்திலிருந்து [ Madras Public Buildings (Licensing) Act, 1965 ] சிலவகை கட்டிடங்களுக்கு விலக்கு அளித்து, கிராம வளர்ச்சி, உள்ளாட்சித்துறையின் 30—8—1966 அரசு ஆணை எண் 2083 மற்றும் அதேத் துறையின் 22—11—1966 நாளிட்ட அரசு ஆணை எண் 2680 ஆகியவற்றில் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. அரசு கவனமாக பரிசீலனை செய்தபின், முதற் கட்டமாக, 1—4—1966 முதல், மூன்றாண்டுகளுக்கு கல்வி பயிலும் இடங்களில் அமைந்துள்ள கட்டிடங்களுக்கு விலக்கு அளிக்க முடிவு செய்துள்ளது.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 31—1—1968 நாளிட்ட அரசு ஆணை எண் 145-ன் சுருக்கம்)

## "ஊராட்சி" என்ற தலைப்பிலே, உயர்நிலைப் பள்ளிகளில் கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்துதல்—ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன.

## Essay and debating competitions on subject of "Panchayati Raj" in High schools during 1967—68—Conduct of—Orders—Issued.

உயர்நிலைப் பள்ளிகளிலும், உயர் இடைநிலைப் பள்ளிகளிலும் ஊராட்சி பற்றி கட்டுரை, பேச்சுப் போட்டிகள் நடத்துவதற்கு, மாநில அரசுகள் தகுந்த நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசின் உணவு, விவசாயம், சமுதாய வளர்ச்சி, கூட்டுறவு அமைச்சகம் கேட்டுக்கொண்டுள்ளது.

2, இம்மாநிலத்தில், இத் திட்டத்தை இந்த ஆண்டும் நிறைவேற்றுவது என்று, தகுந்த பரிசீலனைக்குப் பின், அரசு முடிவு செய்துள்ளது. இத் திட்டத்திற்குரிய விவரங்களும், விளக்க ஆணைகளும் முந்தைய ஆண்டுகளில் பிறப்பிக்கப்பட்டதுபோல இருக்கும். போட்டிகளுக்குரிய பொருள்கள் பின்கண்டவாறு அமையும்.

கட்டுரை—

(1) ஊராட்சியும் மக்கள் பங்கும்
(2) கிராமங்களில் மனித சக்தித் திட்டம்
(3) ஊராட்சி மற்றும் வேளாண்மை, கால்நடை வளர்ப்பு. மீன் வளம் ஆகியவை உட்பட்ட உற்பத்தித் திட்டம்.

பேச்சுப் போட்டி—

(1) கிராம வளர்ச்சித் துறையின் சாதனைகள்.
(2) ஊராட்சி முழு வெற்றியடைவதற்கு உங்களின் கருத்துக்கள்.
(3) ஊராட்சியும் உங்கள் திட்டமும்.

(கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 1968 பிப்ரவரி மாதம் 26-ம் தேதியிட்ட அரசு ஆணை எண் 379-ன் சுருக்கம்,)

## மருத்துவத் துறை, பொதுச் சுகாதாரத் துறைகளை ஒன்றாக இணைத்து, சுகாதாரப் பணிகள்—குடும்பக் கட்டுப்பாடு துறை என்ற ஒரே துறையை அமைத்தல்.

## Establishment—Integration of Medical and Public Health Departments—

மருத்துவத் துறையும், பொதுச் சுகாதாரத் துறையும் ஒன்றாக இணைக்கப்பட்டு, சுகாதாரப் பணிகள் இயக்குநர் அலுவலகம்(Directorate of Health Services) என்ற புதுத் துறை ஏற்படுத்தப்படும் என்று, சுகாதாரத் துறையின் 1966-ஆம் ஆண்டு ஏப்ரல் 27-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 740-ல் அரசு ஆணைகள் பிறப்பித்தது. தற்போது, சுகாதாரப் பணிகள், குடும்பக் கட்டுப்பாடு இயக்குநர் அலுவலகம் (Directorate of Health Services and Family Planning)என்ற ஒரு புதிய இயக்குநர் அலுவலகம் உடனே அமைக்கப்பட்டு, அந்த புதிய துறைக்கு ஒரு இயக்குநர் நியமிக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

[சுகாதாரம், குடும்பக் கட்டுப்பாடு துறையின் 1968 பிப்ரவரி 20-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 299-ன் சுருக்கம்]

## சென்னையிலுள்ள அரும்பாக்கத்தில் 100 படுக்கைகள் கொண்ட இந்திய முறை மருத்துவ மனை கட்டுவதற்கு அனுமதி.

## Indian Systems of Medicine—Construction of a 100-bedded Hospital at Arumbakkam Farm, Madras—Sanctioned

சென்னையிலுள்ள அரும்பாக்கத்தில் இருக்கும் இந்திய வைத்திய மூலிகைப் பண்ணையில் (Arumbakkam herbal farm of Indian Medicine) 100 படுக்கைகள் கொண்ட இந்திய முறை வைத்திய மருத்துவ மனையை ரூ. 8·18 லட்சம் மதிப்பளவில் கட்டுவதற்கு அரசு அனுமதி யளிக்கிறது.

[பொதுப்பணித் துறையின் 1968-ம் ஆண்டு பிப்ரவரி 23-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 411-ன் சுருக்கம்]

## இந்த இதழில்...


| | பக்கம். |
|---|---|
| தமிழால் முடியும் .. .. .. | 2 |
| கூட்டுறவு வளர்ச்சி—ஓர் ஆய்வுரை .. .. | 5 |
| மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப் படுத்துவோம் .. .. .. | 8 |
| "வினை நலம் வேண்டிய எல்லாம் தரும்" .. | 11 |
| மது விலக்கு (சிறு கதை) .. .. | 16 |
| உலக தொழில் வர்த்தக பொருட் காட்சியில் தமிழக அரங்கு .. .. .. | 33 |


## அடுத்த இதழில்...


தமிழக ஆளுநர் மாளிகையிலே—பேட்டி

எழுத்தாளர் கார்க்கி—அகிலன் (சிறப்புக் கட்டுரை).

கால்நடைகளின் சுகாதாரம்—டாக்டர் மந்திர மூர்த்தி.

அனைத்திந்திய மது விலக்கு மாநாடு—தொகுப்பு.

கூட்டுறவு இயக்கம் எட்டுச் சுரைக்காயா?—திரு வி. கே. பி. நடராஜன், ஐ. ஏ. எஸ்., கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர்



ஆசிரியக் குழுத் தலைவர் :
திரு T. A. S. பாலகிருஷ்ணன், I.A.S.

வெளியிடுபவர் : திரு வி. நடராஜன், ஐ. ஏ. எஸ்.
ஆசிரியர் : திரு எஸ். வேங்கடசாமி, எம். ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Director of Rural Development, Madras-9. Chairman of the Editorial Committee: Thiru T. A. S. Balakrishnan, I.A.S., Wrapper printed at Vadapalani Press, Madras-26.



*With the best compliments of :*

**MADRAS CEMENTS LIMITED**

(MANUFACTURERS OF PORTLAND CEMENT)

| *Regd. Office :* | *Factory :* |
|---|---|
| "Ramamandiram" | Ramasamyraja Nagar |
| RAJAPALAIYAM | TULUKKAPATTI, R. S. |

*ALWAYS INSIST ON*

**RAMCO BRAND "GOPURAM MARK" PORTLAND CEMENT**

*FOR QUALITY*

A UNIT OF "RAMCO" GROUP, RAJAPALAIYAM


## அண்மையில் சென்னை நகரில் நடந்த நிகழ்ச்சிகள் குறித்து

## நீதி விசாரணை

### சாட்சியமளிக்க முன் வருமாறு பொதுமக்களுக்கு வேண்டுகோள்

தமிழக அரசு பஸ் போக்குவரத்துத் துறையில் சில ஊழியர்களுக்கும், மாணவர்களுக்குமிடையே சென்னை நகரில் சில பகுதிகளில் 1968-ம் ஆண்டு மார்ச்சு மாதம் 25, 26-ஆம் நாட்களில் நடந்த நிகழ்ச்சிகளைப்பற்றி விசாரிக்க மாவட்ட செஷன்ஸ் நீதிபதி திரு பி. எஸ். சோமசுந்தரம், நீதி விசாரணைக் கமிஷன் நீதிபதியாகத் தமிழக அரசினரால் நியமிக்கப்பட்டிருக்கிறார்.

இந்த விசாரணை, இந்த நிகழ்ச்சிகளைப் பற்றியும், அவைகள் நடப்பதற்கு ஏதுவான காரணங்கள், சூழ்நிலைகள் பற்றியும் விசாரிக்கும், பகிரங்க விசாரணையாக நடைபெறும். இந்நிகழ்ச்சிகள் பற்றி நேரடியாகத் தெரிந்திருந்து, சாட்சியமளிக்க விரும்புவோர் அனைவரும் சாட்சியமளிக்க முன் வரும்படி கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். சாட்சியமளிக்க விரும்புபவர்கள் கீழ்க்காணும் விவரங்களை, பழைய சட்டமன்ற உறுப்பினர் விடுதி, எண்-2, அரசாங்க மாளிகைத் தோட்டம், சென்னை-2 என்ற முகவரியில் உள்ள விசாரணைக் கமிஷன் அலுவலகத்துக்கு, 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15-ஆம் தேதிக்குள் எழுத்து மூலம் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்:—

1. பெயர் :
2. முகவரி :
3. தொழில் அல்லது பதவி :
4. எந்த குறிப்பிட்ட நிகழ்ச்சி பற்றிய சாட்சியம் என்ற விவரம் :

விசாரணை 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 22-ஆம் நாள், மேற்குறிப்பிட்ட அலுவலகத்தில் தொடங்கி, முடியும்வரை தொடர்ந்து நடைபெறும். இக்கமிஷன் முன்பு உண்மையான சாட்சியமளிப்பவர்களுக்கு சிவில், கிரிமினல் நடவடிக்கையிலிருந்து மேலே குறிப்பிட்ட சட்டத்தின் 6-ஆவது பிரிவில் கண்டுள்ளபடி பாதுகாப்பு அளிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

REGD. No. M. 7277

©
தமிழ்நாடு அரசாங்கம் 1968

இராமநாதபுரம் ஜில்லா கூட்டுறவு சப்ளை
அண்டு மார்க்கெட்டிங் சொசைடி லிட்.,
க்யு. 816, மதுரை-1.

தலைமை அலுவலகம் :
156, வக்கீல் புதுத் தெரு, மதுரை-1.

பொது மக்களின் எல்லாத் தேவைப்பொருள்களுக்கும்
மாவட்ட மொத்த விநியோகஸ்தர்கள்.

“ராம்கோ”
கலப்பு உர தயாரிப்பாளர்கள்

வி. வி. இராமசாமி, எம்.பி.,
தலைவர்.

ஆர். எஸ். எட்வர்டு,
காரியதரிசி.




# கிராம நலம்

மே 1968



**The Planters Stores and Agency Agents,**
**Estate Supplies and Hardware Merchants.**
54, Mount Road, Coonor-2.

(The Nilgiris)

Telephone : 2492. Telegrams : 'PLASA'

DEALERS in 'SIMCO' Agricultural Tools, Digging Forks, Hand Forks Mamooties, Alavangoes, Pruning Knives, Jungle Knives, Shovels, Rakes, etc— Polythene Films, Polythene Nursery Bags and Tubes, Insecticides, Fungicides, Acaricides and Weedicides—Engineering and Mechanical Tools, V/Belts, Tigs, Steel Pipes and Steam Pipes and Fittings, Asbestos sheets, Pipes, etc,—Electrical Goods, Motor Pumps, etc., etc., ANIMAL AND POULTRY FEEDS, etc :—

போன் : 284 தந்தி : "குமரி பாங்க்"

**கன்னியாகுமரி மாவட்ட கூட்டுறவு மத்திய பாங்கு லிமிடெட், நாகர்கோவில்.**

கிளைகள் : மார்த்தாண்டம், தக்கலை.

திரு எல். ராமச்சந்திர நாடார், தலைவர்.

திரு ஜி. டானியல், பி.எ.,பி.எல்., உப-தலைவர்.

| | | |
|---|---|---|
| அதிகாரம் பெற்ற மூலதனம் | .. | 30 லட்சம். |
| செலுத்தப்பட்ட மூலதனம் | .. | 24 லட்சம் |
| நல நடை முதல் மூலதனம் | .. | 2 கோடிக்கு மேல். |

கீழ்க்கண்ட வட்டி விதங்களில் டிபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

கரண்ட் டிபாசிட் ½% .. சேவிங்ஸ் டிபாசிட் 4%
சீசன் டிப்பாசிட்டுகள் ரூ. 10,000-ம், அதற்கு மேலும்.
15 நாட்கள் முதல் 45 நாட்கள் வரை 1½%
46 நாட்கள் முதல் 90 நாட்கள் வரை 3%
நிரந்தர டிப்பாசிட்டுகள் ரூ. 100-ம், அதற்கு மேலும் 5% முதல் 7½% வரை.

மூன்று ஆண்டுகளுக்கு மேற்பட்டு போடும் நிரந்தர டிபாசிட்டுகளுக்கு, தமிழ்நாடு சர்க்காரின் உத்தரவாதம் கொடுக்கப்படுகிறது.

கே. எஸ். நமச்சிவாயம், பி. ஏ.,
துணைப் பதிவாளர், காரியதரிசி.

**கிராமநலம்**

தமிழக அரசின் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை மாத இதழ்

கதிர் 13 மே 1968 நெல் 8

# தலைவாயிலின் திறவுகோல்

திரு. ஜெகஜீவன்ராம், மைய அரசு உணவு-வேளாண்மை, சமுதாய வளர்ச்சி, கூட்டுறவு அமைச்சர்.)

"இந்தியாவின் அமைப்புக்கும், சூழ்நிலைக்கும் ஏற்ப, நம் நாட்டு மக்களில் பெரும்பாலோர் கிராமங்களிலேயே வாழ்கிறார்கள். எனவே தேசிய வளர்ச்சிக்கான எந்தத் திட்டத்திலும் கிராம மக்களின் ஈடுபாடு மிக முக்கியமாகும்.

கிராமப் புறங்களின் வளர்ச்சித் திட்டங்கள் அனைத்திலும் நம் நாட்டு மக்களின் பங்கு இருக்க வேண்டும் என்ற அடிப்படையான எண்ணத்துடன், சமுதாய நலத் திட்டங்கள் உருவாகின.

கிராம மக்களின் ஈடுபாடு.

கிராம மக்களின் தொடர்பின்றியும் அவர்களுக்கு மனநிறைவு அளிக்காவண்ணமும் வளர்ச்சித் திட்டங்கள் அமைந்தால், அத்திட்டங்களால் கேடுதான் விளையும், ஆகவே, நமது குறிக்கோள், சமுதாய நலத் திட்டங்களில் கிராம மக்கள் உணர்ச்சிப் பூர்வமாகவும் ஆக்க உணர்வோடும் ஈடுபடவேண்டும் என்பதாகும்.

சமுதாய நலத் திட்டங்களிலும், பிற ஜனநாயக அடிப்படையானத் திட்டங்களிலும், கிராம மக்களின் ஆர்வமும் ஈடுபாடும் எந்த வகையிலும் குறைந்துவிடக்கூடாது—குறைத்துவிடவும் கூடாது என்பதை 1952-ம் ஆண்டில் சமுதாய நலத் திட்டங்கள் தொடங்கிய பொழுதிலிருந்தே எல்லா சந்தர்ப்பங்களிலும் நிர்வாகத்தில் உள்ளவர்கள் கடமையுணர்வோடு கருதி வந்துள்ளனர். அந்த உணர்வுடன் செயலாற்றி வந்துள்ளனர்.

அண்மைகாலங்களில் கூட, சமுதாய நலத் திட்டம், பஞ்சாயத்து ராஜ்யம் முதலியவைகளைப்பற்றி பல கேள்விகள் எழும்பின. நம்முடைய குறிக்கோள்கள் நல்ல முறையில் நிறைவேறுகின்றனவா என்பவை பற்றிய அந்தக் கேள்விகளுக்கு உடனடியாக விடைகளும் கிடைத்தன. அதனால் அந்தக் கேள்விகள் தொடக்கத்திலேயே நின்றுவிட்டன.

அந்த வினாக்களுக்கு கிராம மக்கள் அளித்த விடை, கிராம ராஜ்யம் சமுதாய நலத் திட்டங்களில் காட்டிய ஈடுபாடுதான்.

நாட்டுக்கு நலம் பயக்கும் திட்டங்களை மனமகிழ்ச்சியோடு நமது மக்கள் ஏற்க முன்வந்துவிட்டனர். பொறுப்புகளை ஏற்றுக் கொண்டனர்.

கிராம மக்கள்தான் வளர்ச்சித் திட்டங்களின் உரிமையாளர்கள் என்ற உண்மை புலப்படத் தொடங்கியது. அது மட்டுமல்ல; கிராம மக்களின் வெற்றி, தேசிய முக்கியத்

துவம் வாய்ந்ததுடன், நாட்டின் எல்லாத் திட்டங்களுக்கும் நல்வாழ்வுக்கும் அடிப்படை பயன் விளைவிப்பதாகவும் அமைந்துள்ளது.

சமுதாய நலத் திட்டம்—பஞ்சாயத்து ராஜ்யம் முதலியன சில நிலைகளில் ஆரம்பநிலை அமைப்புகளாகத் தோன்றலாம். ஆனால், சமுதாய நலத் திட்டம் கிராம ராஜ்யம் ஆகியவற்றில் ஏற்படும் சிக்கல்களும் தடங்கல்களும் நாட்டின் எல்லாத் திட்டங்களிலும் பிரச்னைகளிலும் எதிரொலிக்கும்.

ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் :

கடந்தகால அனுபவங்களை வைத்தும் நடைமுறைய நிகழ்ச்சிகளை வைத்தும் நான் முழு மனதுடன் நம்புகிறேன்.

சமுதாய நலத் திட்டங்கள், கிராம வளர்ச்சித் திட்டங்கள் முதலியனவற்றின் வெற்றியில் எள்ளளவும் ஐயம் தேவையில்லை. அதே நேரத்தில் இப்பொழுது நமக்கு ஏற்பட்டுள்ள பல பிரச்னைகளால் வெற்றியை, ஈட்டிட நாட்டு மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து ஒன்றுபட்டு உழைக்க வேண்டும் என்பதையும் நாம் மறைப்பதற்கில்லை.

நாட்டின் நல்வாழ்வுக்காக காலவேகத்தால் ஏற்படும் எந்த அறைகூவலையும் கிராம மக்கள் ஏற்க முன்வந்துவிட்டார்கள்.

ஜனநாயகம்—நல்வாழ்வு இவைகளின் தலைவாயிலின் திறவுகோல் கிடைத்துவிட்டது.

சமுதாய நலத் திட்டம்—கிராம ராஜ்யம் முதலியவற்றில் கிராம மக்கள் காட்டும் ஈடுபாடும், ஒத்துழைப்பும் சமுதாய நலத்துக்கும் ஜனநாயகத்துக்கும் செழுமையை—பொலிவை உருவாக்கி வருகிறது.

ஆமாம், நமக்குகிடைத்துள்ள தலைவாயிலின் திறவுகோல் காட்டும் காட்சி அதுதானே!"

(From " KURUSHETRA ")


விவசாயிகளுக்கு வேளாண்மை ஆண்டு முழுதும்
வேலை வாய்ப்பளிக்கும் முழுநேரத் தொழிலும் அல்ல;

விவசாயத்தின் மூலம் கிடைக்கும்
வருமானமும் போதுமானதல்ல.

## கதரும் கிராமத் தொழில்களும்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலை வாய்ப்பளிக்கின்றன.

* கதர்-கிராமத் தொழில்களை ஆதரிப்பது
* உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்.

தமிழ்நாட்டுக் கதர்-கிராமத் தொழில் ஆயத்தின்
நிறுவனங்களில் உற்பத்தி செய்யப்பெற்ற

* கதர் * கதர்ப்பட்டு * சோப் * தேன் * செக்கெண்ணெய் * தோல் பொருள்கள் * பனைவெல்லம் * சர்க்கரை * மண்பாண்டம் * வார்ப்படங்கள் * பித்தளை, வெண்கலப் பாத்திரங்கள் * பனைப் பொருள்கள்- இன்னும்—

பற்பல கைநுட்பத் தொழில் பொருள்கள்
கதர்-கிராமத் தொழில் விற்பனை நிலையங்களிலும்
சென்னை "குறளகத்"தில் இயங்கும்
கதர்-கிராமத் தொழில் அங்காடியிலும்
விற்பனைக்கு உள்ளன.

வெளியீடு—

கதர்-கிராமத் தொழில் துறை.
2, சர் தேசிகாச்சாரி ரோடு, சென்னை-4.




ஒற்றுமைச் சங்கநாதம் :

1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 13-ம் தேதி சென்னையில் சீக்கியர் கோயிலில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் மாண்புமிகு உணவமைச்சர் திரு கே. ஏ. மதியழகன் அவர்கள் ஆற்றிய ஆங்கில உரையின் சாரத்தை, தமிழில், கீழே கொடுத்துள்ளோம். வீரர்களின் பாசறை—தியாகச் செம்மல்களின் கோட்டம், பஞ்சாப் மாநிலம். நாட்டின் வளர்ச்சிக்கு சீக்கிய சமுதாயம் ஆற்றியுள்ள பணிகள்—அச்சமுதாயம் போற்றி வளர்க்கின்ற வாழ்க்கை நெறிகள்—இவைபற்றி தன்னுடைய கருத்தாழம் நிறைந்த உரையில், அழகாகச் சொல்கிறார், மாண்புமிகு உணவு அமைச்சர் அவர்கள். இந்தச் சொற்பொழிவில் கண்டுள்ள மையக்கருத்து—தமிழ் மக்களுக்கும் சாலப் பொருத்தமுடையது என்பது மட்டுமல்ல; அனைவரின் சிந்தனையில் தேக்கி வைத்துக்கொள்ள வேண்டிய ஒன்றாகும்—ஆசிரியர்.]

# மூன்று உண்மைகள்...

[சீக்கிய சமுதாயப் பண்பாடுகள்.]

"புனிதமும் முக்கியத்துவமும் பொருந்திய 'வைசாகி' தினமாகிய இப்பொன்னாளில், என்னுடைய தோழமை கலந்த நல்வாழ்த்துக்களை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். கல்சா இயக்கம் உதயமான நன்னாள் இன்று. பெருமகிழ்ச்சி அளிக்கின்ற புனிதத் திருநாள் இது. சீக்கியப் பெருமக்களின் பெருமைமிகு பாரம்பர்யத்தை நினைவூட்டும் இத்திருநாள், சமுதாயத்திற்கும், நாட்டின் நல்வாழ்வுக்கும் நீங்கள் உங்களையே மறுபடியும் மறுபடியும் அர்ப்பணித்துக்கொள்கின்ற புத்துணர்ச்சியையும் எழுச்சியையும் உங்களிடையே ஊட்டுகின்ற நன்னாளாகும்.

அடிப்படை இலட்சியங்கள் :

இன்றைக்கு 269 ஆண்டுகளுக்கு முன்னால், "கல்சாபந்த்" (Khalsa Panth) இயக்கத்திற்கே புனிதத்துவமும் புதுப்பொலிவும் அளிக்கின்ற வகையில், சீக்கியப் பெருமக்களின் 10-வது மத குருவான குருகோவிந்த சிங், ஓர் அற்புதமான பணியைப் புரிந்தார். கல்சாபந்த் எடுத்துக் கூறும் உண்மைகள்—எக்காலத்திற்கும் பொருத்தமானவை; காலத்தால் அழிக்க முடியாத அமரத்துவம் வாய்ந்த உண்மைகள்; கருத்துக் கருவூலங்களாகும் அவை. பல்வேறு வகுப்பினர்களிடையேயிருந்து, அதுமட்டுமல்ல, நாட்டின் பல்வேறு



பகுதிகளிலிருந்து, அவர், தன்னைப் பின்பற்றும் 5 தொண்டர்களைத் தேர்ந்தெடுத்தார். குறுகிய மனப்பான்மை—தனக்கென்று வகுத்துக் கொண்ட, கோடிட்டு வரையறுக்கப்பட்ட சுயநலம்—இவை அத்தனையையும் தகர்த்தெறிந்து விட்டு, 'எல்லோர்க்கும் எல்லாம்' என்ற சீரிய தத்துவத்தின் விடிவெள்ளியாக, அச்செய்கை பரிணமித்தது. 'எல்லோரும் ஒரு குலம்' 'எல்லோரும் என் உடன் பிறந்தோர், என்ற பரந்த நோக்கம்—அந்த நோக்கத்தின் அடிப்படையாகத் திகழ்கின்ற சேவை உள்ளம்—தொண்டுள்ளம்—கல்சா இயக்கத்தின் கருவூலங்களாகத் திகழும் இச்சீரிய அடிப்படை உண்மைகள்—இன்றைய உலக வாழ்க்கையோடு ஒட்டிப் போவதல்லாமல், பழங்காலப் பாரம்பரியத்தின் நிலைக்களன்களாகவும் நின்று ஒளி வீசுகின்றன. சமூக நீதி—சமுதாயத்தில் ஒருவருக்கு ஒரு நீதி, இன்னொருவருக்கு ஒரு நீதி என்றில்லாத நிலை—பொய்மைக்கு அஞ்சாமல்—உண்மைக்காக இறுதிவரை போராடுகின்ற உறுதி—ஏற்றுக்கொண்டுள்ள இலட்சியத்தில் அசைக்கமுடியாத நம்பிக்கை—பிடிப்பு—சக்தி பொருந்திய நெஞ்சுரம்—பாசம், பரிவு காரணமாக தோன்றுகின்ற அனைவரும் ஒன்று என்ற ஒன்றுபட்ட உணர்வு—பொது வாழ்விலும் சரி, தனிப்பட்ட வாழ்க்கையிலும் சரி-அப்பழுக்கற்ற

தூய்மை நெறி—இந்த இலட்சியங்கள்—இந்த அடிப்படைத் தாரக மந்திரங்கள்—கல்சா இயக்கத்தின் புனிதப் பிதாமகன்—வீரத் திருமகன்—குருகோவிந்த் சிங்கின் வாழ்வின் இலட்சிய முரசங்களாகும்.

என்றுமில்லாத அளவில், இன்றைய நவீன உலகில்தான், இந்த உண்மைகள்—இந்த உணர்வுகள்—இந்த கருத்துக்கள்—நமக்கு மிக மிக தேவையாக இருக்கின்றன. 'தேசிய ஒருமைப்பாடு' என்பது வெறும் வாய்க்கூச்சலாக இல்லாமல், வெறும் கோஷமாக நின்று விடாமல், அது அடிப்படையில் உண்மையானது—செய்து முடிக்கக்கூடிய ஒன்று என்ற நிலை மலர வேண்டுமானால்—நீதியும் சமத்துவமும் வெறும் கோஷங்களாக சில பேர் கைகளில் மட்டும் அகப்பட்டுக்கொண்டு உருளும் பகடைக் காய்களாக இல்லாமல்—சமுதாயம் முழுமையும் நல்ல முறையில் ஊடுருவி, ஒவ்வொருவரின் இதயநாடியையும் தடவுகின்ற ஓர் அற்புத நிலை மலர வேண்டுமானால்—கல்சாபந்த இயக்கம் நம்முன் வைத்துள்ள அரும்பெரும் உண்மைகளான, சுதந்திர உணர்வு—வாழ்க்கையில் தூய்மை—'எல்லோருக்கும் எல்லாம்' என்ற பொது நோக்கு—என்றுள்ள இந்த மூன்று அடிப்படை இலட்சியங்கள், நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கையையும்—பொது வாழ்க்கையையும் நடாத்திச் செல்கின்ற மூலாதாரக் கொள்கைகளாக அமைய வேண்டும். இன்றைக்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழ்ப் பெருமகன் ஒருவன் பாடினன், ''யாதும் ஊரே, யாவரும் கேளிர்'' என்று. யாவரும் உடன் பிறந்தோர் என்ற இந்த உணர்வு—இந்த உயரிய பண்பாட்டுணர்ச்சி—கல்சா இயக்கத்தின் அடிப்படைக் கொள்கையிலே எதிரொலிக்கிறது கண்டு நான் பெருமிதமும் பெருமகிழ்வும் கொள்கிறேன்.



உண்மையுடன் உழைக்கும் சமுதாயம் :

கல்சா இயக்கம் சீக்கிய மக்களிடையே தோற்றுவித்த கட்டுப்பாடு உணர்வு—நாட்டின் நல்வாழ்விற்காக, சீக்கிய சமுதாயம் பெரும் பணி ஆற்றுகின்ற நல்வாய்ப்பை அவர்களுக்கு ஏற்படுத்தித் தந்துள்ளது. நாட்டின் பாதுகாப்புப் பணிகளில் சீக்கிய சமுதாயத்தின் பங்கு மகத்தானது, எல்லையற்றது, போற்றிப் புகழத்தக்கது. பல நூற்றுண்டுகளாகவே சீக்கிய சமுதாயம், நாட்டின் பாதுகாப்புப் பணியில் தன்னைத்தானே அர்ப்பணித்துக் கொண்டு, வரலாற்றுப் புகழ் பெற்றுள்ளது. போர் முனையில் மட்டும் சிறந்த போர் வீரர்களாக திகழ்வது என்பதல்லாமல்—அமைதி காக்கும் அறப்பணியிலும் அவர்கள் தலை நிமிர்ந்து உள்ளனர். சுறுசுறுப்பு, செயல் திறமை, செய்கின்ற பணியில் காட்டுகின்ற சலியாத ஆர்வம்—விவசாயத் துறையில் விஞ்ஞான ரீதியில் முற்போக்கு முறைகளைக் கையாளுதல்—ஆகிய வழிகளில், பஞ்சாப் மக்கள், தங்களுக்கென்று ஒரு சிறப்பான இடத்தைப் பிடித்துக் கொண்டுள்ளனர். நவீன இயந்திரங்களின் மூலம் விவசாயம் செய்வதிலும்—விவசாயத் துறையில் நவீன முறைகளைக் கையாள்வதிலும்—அவர்களுடைய திறமையும் ஆர்வமும்—உற்சாகமும், அவர்களுக்கு அமோக பலன்களை அளித்திருக்கின்றன.

உணவு உற்பத்திப் பணியில் ஈடுபட்டிருப்பவர்களில் நானும் ஒருவன் என்ற முறையில், விவசாயம் செய்கின்ற நிலங்களை ஒன்றுபடுத்தி—நல்ல முறையிலே அதிக விளைச்சல் காண்கின்ற பஞ்சாப் மாநிலத்தைக் கண்டு உண்மையில் பெருமிதமும், பூரிப்பும் கொள்கிறேன். உங்களுக்கே இயற்கையாக உள்ள தொழில் ஆர்வம், துணிந்து செயலாற்றுகின்ற மனத்திண்மை இவைகளின் காரணமாக சிறு தொழில் வளர்ச்சியிலே நீங்கள் அடைந்துள்ள பெரும்வெற்றி—இவையெல்லாம்—உங்களுடைய சலியாத உழைப்பின்—ஆர்வத்தின்—பிரதிபலன்களே அல்லாமல் வேறு என்னவாக இருக்க முடியும்? அதனால்தான், நாட்டின் எதிர்கால நல்வாழ்வுக்காக நீங்கள் நல்ல பல ஆக்கப் பணிகளை புரிய முடிகிறது.

கட்டுப்பாடு, கடமை, தியாகம்—மூன்று அடிப்படைகள்

தனிப்பட்ட மனிதன் என்ற முறையில் வாழ்வில் முன்னுக்கு வரவேண்டும் என்பதிலே உங்களுக்கு உள்ள துடிப்பு—சமூக ஒருமைப்பாட்டிலே உங்களுக்கு உள்ள அசைக்கமுடியாத உறுதி—நாட்டின் மீது நீங்கள் கொண்டுள்ள தூய்மையான பற்றும், பாசமும்—இந்த மூன்றும், மற்ற எல்லா மக்களும், உங்களிடமிருந்து அறிந்துகொள்ள வேண்டிய, கடைப்பிடிக்க வேண்டிய உண்மைகளாகும். அசைக்கமுடியாத நெஞ்சுறுதி—தன்னலமற்ற சேவை, உயிரைத் திரணமாக மதித்துப் போராடும் தியாக உணர்வு—இம் மூன்றையும் தன் அடிப்படைக் கருவூலங்களாகக் கொண்டுள்ள கல்சா இயக்கம், நாட்டிற்கும் மக்களுக்கும் அளிக்கும் செய்தி ஒன்றுள்ளது. மனிதனின் எதிர்கால நல்வாழ்வு—நாட்டின் முன்னேற்றம்—இவை இரண்டுக்கும் அடிப்படையாக வேண்டியது—கட்டுப்பாடு, கடமை உணர்வு—தன்னைத்தானே அதற்காக அர்ப்பணித்துக் கொள்கின்ற தியாக உணர்வு—ஆகிய மூன்றுமே என்பதைத்தான், கல்சா இயக்கம் நாட்டிற்கும் மக்களுக்கும் பறைசாற்றிக் கொண்டு வருகிறது''.

—o—



தஞ்சைத் தரணியின் விவசாயப் பெருங்குடி மக்கள் கடந்த ஆண்டு ஆடுதுறை 27 நெல் ரகத்தின் மூலம் உற்பத்தியைப் பெருக்கிய சாதனை, இந்திய விவசாய வரலாற்றிலேயே பெருமைக்குரிய நிகழ்ச்சியாகும். அந்தப் புதிய சரித்திரத்தைப் படைத்த உழவர் பெருங்குடி மக்கள், இன்னொரு சரித்திரம் படைக்க, சாதனையை உருவாக்க, அன்புடன் அழைப்பு விடுக்கிறார், மாண்புமிகு தமிழக அரசு வேளாண்மைத் துறை அமைச்சர்.

# பொன்னி வளநாட்டினரே புறப்படுவீர்!

(மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு ஏ. கோவிந்தசாமி)

'' அன்புக்குரியோரே!

''வளங்கொஞ்சும் தஞ்சை உழவர் பெருங்குடி மக்களே,

''பொன்னிவள நாட்டில் செந்நெல் கொழித்திட உழுபடை வீரர்களே, உங்களை அன்புடன் அழைக்கிறேன்.

தஞ்சை மாவட்டத்தில் 441 முன்னணி விவசாயிகள் 5000 ஏக்கர் நிருபணை பண்ணைகளில் ஆடுதுறை 27 அற்புத நெல்லை வெற்றிகரமாக விளைத்து தமிழகத்தின் மற்ற மாவட்டங்களுக்கு மட்டுமல்லாமல், இந்திய துணைக் கண்டம் முழுவதிலும் இந்நெல்லின் அருமை பெருமைகளை உணர வழிகாட்டியுள்ள உங்களை அழைப்பதில் பெருமைப்படுகிறேன்.

கடந்த கால சோகக் கதை

1965-ம் ஆண்டு மே மாதத்தில் சிறந்த நெல் வித்தான ஆடுதுறை 27 வெளியிடப்பட்டதிலிருந்து, நிச்சயமற்ற காலநிலை பல கோணங்களிலும், நிலைகளிலும் இதன் சிறப்பியல்புகளை சோதனைக்கு உள்ளாக்கியதை அறிவீர்கள்.

1965-ம் ஆண்டில் மேட்டூர் அணை ஜூன் மாதம் 12-ம் தேதி திறக்கப்பட்டதால் ஆடுதுறை 27 நெல் சரியான பருவத்தில் நாற்று விடப்பட்டு 5000 ஏக்கரில் நடவு செய்யப்பட்டது. ஆனால் பயிர் நல்ல வீரியத்துடனும், செழிப்புடனும் வளர்ந்த நேரத்தில் பருவமழை தவறியதால், வாய்க்கால்களில் நீரோட்டம் மிகவும் குறைந்து விட்டது. அதனால் கொடுமையான வரட்சிக்கு பயிர் உள்ளாகியது.

நாகப்பட்டினம் பகுதியில் தவிர்க்க முடியாத நிலையில் பல விவசாயிகளின் பயிர்கள் ஒரு மாத காலத்துக்கு மேல் வரட்சியால் பாதிக்கப்பட்டுவிட்டன. இந்த இடையூறையும் மீறி 5000 ஏக்கரில் ஆடுதுறை 27 நெல் ஏக்கர் ஒன்றுக்கு 3857 பவுண்டு சராசரி விளைச்சல் கொடுத்ததை நீங்கள் பார்த்தீர்கள். அதே நேரத்தில் மற்ற ரகங்களுக்குக் கிடைத்த கிடைத்த விளைச்சல் 2301 பவுண்டுதான்.

இந்த அனுபவம் கொடுத்த நல்ல நம்பிக்கையினால்தான் அடுத்து வந்த ஆண்டில் இந்த நெல்லை இரண்டு லட்சம் ஏக்கர் குறுவையில்

விஸ்தரிக்கும் திட்டத்தை செயல்படுத்த தமிழக அரசுடன் தஞ்சை விவசாயிகளாகிய நீங்கள் ஈடுபட்டீர்கள். இதற்கான பூர்வாங்க ஏற்பாடுகள் யாவும் செய்து முடிக்கப்பட்ட கட்டத்தில் இயற்கை நம்மை கைவிட்டு விட்டதை அறிவோம். அவ்வாண்டு 21-7-1966-ல் தான் மேட்டூர் அணை திறந்து விடப்பட்டது. இதனால் குறுவை சாகுபடி சிறப்பாக நடைபெறக்கூடிய நாற்பது பொன்னான நாட்களை இழந்தோம். இருப்பினும் ஆடுதுறை 27 நெல்லின் வெற்றியில் நீங்கள் கொண்டிருந்த ஆழ்ந்த நம்பிக்கையே குறுவைப் பட்டத்தை தள்ளிப்போய்விட்டாலும், சம்பா பட்டத்திலேயே குறுவை நிலங்களில் இந்நெல்லை சாகுபடி செய்யும், துணிவை உங்களுக்குக் கொடுத்தது. இந்த சோதனை போதாதென்று மீண்டும் அறுவடை நேரத்தில் சாதாரணமாக 8 அங்குல மழை பெய்யக்கூடிய அந்த மாதத்தில் எதிர்பாராத விதமாக 28 அங்குலத்திற்கு மேல் அடைமழை பெய்து பெருத்த வேதனையை விளைவித்தது. அந்த சூழ்நிலையில் ஆடுதுறை 27 நெல்லுக்குப் பதிலாக ஆடுதுறை 3 அல்லது ஆடுதுறை 20 நெல்லை சாகுபடி செய்திருப்பீர்களானால், இயற்கை செய்த கொடுமை உங்களுக்கு பேரிழப்பையல்லவா கொடுத்திருக்கும்.

அவ்வாண்டு ஒரு லட்சம் ஏக்கரில் ஆடுதுறை 20, ஆடுதுறை 3 போன்ற இதர ரகங்களை சாகுபடி செய்தவர்கள். ஏக்கருக்கு சராசரி 1200 பவுண்டே கண்டு முதல் செய்தார்கள். ஆனால் 2 லட்சம் ஏக்கரில் ஆடுதுறை 27, ஏக்கருக்கு சராசரி 3300 பவுண்டு விளைந்து நம்பிக்கை நட்சத்திரமாகத் திகழ்ந்தது.

வரலாறு படைத்திட்ட நிகழ்ச்சி

இந்த அனுபவங்களினால் பின்னர் 1967-ல் அரசாங்கம் மேற்கொண்ட ஒரு போக சம்பா நிலங்களிலும் இருபோக சாகுபடி செய்யும் திட்டத்தை நீங்கள் வரவேற்பதற்கு நல்ல அடிப்படையாக அமைந்தது. அவ்வாறே வழக்கத்திலுள்ள இருபோக சாகுபடியை இரட்டிப்பாக்கி பெருமையைத் தேடிக்கொண்டீர்கள். இது உழவியல் சரித்திரத்திலேயே எங்கும், என்றும், கேட்டும், கண்டும் இராத பெரும் சாதனையாகும்.

சென்ற ஆண்டும் பருவ மழை காலந்தவறியதனால், ஜூலை மாதம் 3-ம் தேதிதான் மேட்டூர் அணை திறந்துவிடப்பட்டது. குறுவை போகத்தில் தஞ்சாவூர் மாவட்டத்தில் வழக்கத்தைவிட மழையும் குறைவு. இருந்த போதிலும் மனந்தளராது இவ்வரிய சாதனையை செய்து முடித்தீர்கள். உங்களின் இவ் வரலாற்றுப் பெருமைவாய்ந்த பெருமுயற்சிக்கு சிறப்பளிக்கும் வகையில் எல்லா தேவைப் பொருட்களையும் கடன் வசதியுடன் தக்க நேரத்தில் போதுமான அளவிற்கு கொடுக்கும் பெரும் பணியை அரசாங்கம் செய்ததை நீங்கள் அறிவீர்கள்! மகிழ்ச்சியோடு நன்றியும் தெரிவித்துக் கொண்டீர்கள்.

நீங்கள் அசாதாரண சூழ்நிலையிலும் உற்பத்தியைத் தொடர்ந்து கூடுதலாக்கி வருகிறீர்கள். இப்பாராட்டுக்குரிய அந்தச் சாதனையை பெரும் சிரமத்துக்கிடையே நீங்கள் சென்ற பருவத்தில் செய்து முடித்திருக்கும்போது, இவ்வாண்டு இதனிலும் அரிய செயலை, சென்ற ஆண்டின் அனுபவத்தின் துணைகொண்டு சாதிக்கப் போகிறீர்கள் என்பதில் எனக்கு திடமான நம்பிக்கை உண்டு.

சாதாரணமாக காவிரி டெல்டாப் பகுதியில் கோடை மாதங்களில் 6—லிருந்து 7 அங்குல மழை பெய்வது உண்டு. சென்ற மூன்று ஆண்டுகளில் கோடை மழை மிகமிகக் குறைவு. இவ்வாண்டு கோடை மழை வழக்கமான அளவைவிட கூடுதலாகப் பெய்திருப்பதை மகிழ்ச்சியோடு குறிப்பிட விரும்புகின்றேன்.

ஆகவே இவ்வாண்டு நல்லதொரு சாகுபடி பருவம் தொடங்க இருக்கிறது என்று நிச்சயமாக எதிர்பார்க்கலாம். மேட்டூர் அணையில் தண்ணீர் மட்ட அளவு சென்ற பத்து நாட்களில் 12 அடியிலிருந்து 25 அடிக்கு இன்று உயர்ந்து இருப்பதைக் காணும்போது உவகையும், உற்சாகமும் ஏற்படுகிறது.

நினைவில் கொள்ளுங்கள்

பாசனத்திற்குத் தண்ணீர் உரிய காலத்தில் திறந்துவிடப்படும் என்ற ஆசை கலந்த நம்பிக்கையுடன் உங்களுக்கு இந்த வேண்டுகோளை விடுக்கின்றேன்.

நீங்கள் நெடுங்காலமாக செய்து வரும் இருபோக நிலங்களில் குறுவை சாகுபடியையும் அடுத்து செய்யப்படும் தாளடிக்கான ஏற்பாடுகளையும் எக்காரணத்தை முன்னிட்டும் மாற்றத் தேவை இல்லை.

வருகிற ஜூன் 20—ம் தேதிக்குள்ளாக வழக்கமான குறுவை நாற்றங்காலை விதைத்து

[16-ம் பக்கம் பார்க்க]



# நகராட்சித் தலைவர்கள் — ஆணையாளர்கள் கூட்டு மாநாடு

நகராட்சி மன்றத் தலைவர்கள், ஆணையர்கள் கூட்டு மாநாடு சென்னை பாலர் அரங்கில் 1968 மே 11, 12 நாட்களில் நடைபெற்றது.

தமிழ்நாடு நகராட்சி மன்றத் தலைவர்கள் பேரவைத் தலைவர் திரு சிவகாமிநாத பிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினார். ஆணையர்கள் சங்கச் செயலாளர் திரு காளி நாடார் ஆணையர்கள் சார்பில் வரவேற்புரை நிகழ்த்தினார்.

மாநாட்டில் நகராட்சி மன்றத் தலைவர்கள், ஆணையர்கள் ஒவ்வொருவரும் அறிமுகம் செய்து வைக்கப்பட்டனர்.

மாநாட்டினை தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு மா. முத்துசாமி அவர்கள் தொடங்கி வைத்தார்கள். மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் திரு மு. கருணாநிதி அவர்கள், மாண்புமிகு சுகாதார அமைச்சர் திரு சாதிக் பாட்சா முதலியோர் சிறப்புரை நிகழ்த்தினார்கள்.

## உள்ளாட்சி மன்றங்கள்—செயற்களங்கள்

" நகராட்சி போன்ற உள்ளாட்சி நிறுவனங்கள் கொள்கை வகுக்கும் இடங்கள் அல்ல. சட்ட மன்றத்திலும் நாடாளுமன்றத்திலும் எடுக்கப்பட்ட முடிவுகளைச் செயல்படுத்தும் களங்கள் தாம் அவை " என்பதை மாநாட்டில் சிறப்புரையாற்றிய மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் அழகுற எடுத்துரைத்தார்.

"நகராட்சிகள் ஜனநாயகத்தின் தொட்டில்கள். இந்த ஜனநாயக முறையை ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பாகவே தமிழக மக்கள் ஏற்படுத்தி அனுபவித்திருக்கிறார்கள்.

"ஜனநாயக முறையில் ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்க ஐம்பெருங்குழு, எண்பேராயம் என்பன போன்ற முறைகள் தமிழர்கட்குப் பயன்பட்டன" என்று தமிழிலக்கியங்கள் தரும் காட்சிகளை எல்லாம் எடுத்து அமைச்சர் தமக்கே உரிய முறையில் விளக்கினார்.

அமைச்சர் விளக்கிய ஓர் இலக்கிய காட்சி இது—

போர்க்களத்தில் வீரன் ஒருவன் மாண்டு கிடக்கிறான். அவனது பிணத்தைக் களத்திலே உள்ள கழுகு ஒன்று கொத்தித் தின்கிறது. கழுகு களத்தில் மாண்டு கிடக்கும் வீரனைக் கொத்தித் தின்பது எப்படியிருக்கிறது என்றால் குடவோலையில்போட்ட சீட்டுகளை எடுப்பதுபோல இருக்கிறது.

குடவோலையில் போடப்பட்ட சீட்டுகளை கையை விட்டு எடுக்கும்போது எப்படி ஒவ்வொரு ஓலையாக வருமோ அதைப்போல மாண்ட வீரனின் குடலைக் கழுகு குத்தி ஒவ்வொரு குடலாக உருவிக்கொண்டிருக்கிறது.

குடவோலை முறை தமிழகத்தில் நன்கு பரவியிருந்தது."

ஜனநாயக முறைகளை தமிழர்கள் எப்படி எப்படியெல்லாம் வளர்த்திருக்கின்றனர் என்பவைகளுக்கு அமைச்சர் எடுத்துரைத்த இலக்கிய காட்சிகள் சான்று பகர்ந்தன.

மேலும் பொதுப்பணி அமைச்சர் அவர்கள் "நகராட்சி மன்றங்களில் பணியாற்றும் தலைவர்கள், ஆணையர்கள் எலியும் தவளையும் காலைக் கட்டிக் கொண்டது போல இருக்கக் கூடாது. ஜோடிப் புறாக்களுக்குள்ள ஒற்றுமையுடன் அவர்கள் இயங்க வேண்டும்.

தலைவரும் ஆணையரும் இணையாக போனாலும் சிலர் ஏதாவது பேசுவார்கள். நான்கு நாட்களுக்கு அவர்கள் கூடிப் போகாவிட்டாலும் ஏதாவது பேசுவார்கள் என்பதையும் சுட்டிக்காட்டினார்கள்.

நகராட்சித் தலைவர்கள் — ஆணையர்கள் அகலாது அணுகாது பணியாற்ற வேண்டும். நெருப்பை நாம் நேரடியாகத் தொடுவதில்லை. ஆனால், அருகே இருந்து அதன் தன்மையை அனுபவிக்கிறோம். அதனைப் போல நகராட்சித் தலைவர்கள்—ஆணையர்கள் அகலாது அணுகாது மக்களின் வசதிகளை பெருக்கவும் செயல் திட்டங்களை நிறைவேற்றவும் பாடுபட வேண்டும். போட்டத் திட்டங்களை நிறைவேற்றும் செயற் களங்கள் உள்ளாட்சி மன்றங்கள். அதற்கு கட்சி சார்பு தேவையில்லை. உள்ளாட்சி மன்றங்களில் கட்சிக் கண்ணோட்டத்திற்கு இடமே இல்லை, அது கூடவே கூடாது" என்றும் பொதுப்பணித்துறை அமைச்சர் விளக்கினார்.

## நகரச் சீரமைப்பு தீவிரமாகட்டும்

மாநாட்டில் சிறப்புரையாற்றிய மாண்புமிகு அமைச்சர் திரு சாதிக் பாட்சா அவர்கள் சுகாதார முறைகளில் நகராட்சிகள் தீவிரமாக கவனம் செலுத்தவேண்டியது பற்றியும், கலப்படச் சட்டம், நகரமைப்பு சட்டங்களில் செலுத்தவேண்டிய கவனம் பற்றியும் எடுத்துரைத்தார்.

"கல்வி சுகாதாரம் குடிதண்ணீர் திட்டங்கள் நகராட்சிகளுக்கு உரியவைகளாகும். மிகவேகமாக திறமையாக

மக்களின் வாழ்க்கைக்கு ஏற்ற திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பு நகராட்சிகளிடம் உள்ளது.

சில பணிகளில் நகராட்சிகள் இன்னும் கவனம் செலுத்தவேண்டும். குறிப்பாக மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்த எல்லா நடவடிக்கைகளும் எடுக்கவேண்டும்.

குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் நல்ல முறையில் நடக்க எல்லா நகராட்சிகளும் ஒத்துழைக்க வேண்டும்'' என்றும் சுகாதார அமைச்சர் வலியுறுத்தினர்.

**அரசியல் பண்ணைகள் போர்க்களங்கள் அல்ல**

''உள்ளாட்சி மன்றங்கள் அரசியல் வாதிகளைத் தயாரிக்கும் பண்ணைகளாக அமையலாம். ஆனால் அவை அரசியல் போர்க்களங்களாக அமைதல்கூடாது'' என்பதை மாநாட்டை தொடங்கிவைத்த மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்கள் வலியுறுத்தினர்.

''ஆட்சியில் எந்தக்கட்சி இருந்தாலும் அரசு தயாரித்துக் கொடுக்கும் திட்டங்களை நகராட்சிகளும் ஏனைய உள்ளாட்சி நிறுவனங்களும் திறமையுடன் செயல்படுத்த வேண்டும்''

''அரசியல் ஆசாபாச உணர்ச்சிகளுக்கு நகராட்சித் தலைவர்கள் இடம் கொடுக்கக்கூடாது. நகராட்சித் தலைவர்கள் ஆணையர்கள் ஒருவருக்கொருவர் ஒன்றுபட்டு காரியமாற்றவேண்டும்.''

எங்கே குடிதண்ணீர்த் திட்டங்களை அமுல்படுத்தினரோ அங்கெல்லாம் குடிநீர் திட்டங்களைச் செயல்படுத்த வேண்டும். இல்லாவிட்டால் நோய் பரவ காரணமாகிவிடும் என்பதையும் உள்ளாட்சித்துறை அமைச்சர் எடுத்துரைத்தார்.

''கல்வியைப் பொறுத்தவரையில் மக்களிடம் ஒருமனக்குறை இருக்கிறது. நகராட்சி நடத்தும் பள்ளிகளில் கல்வியின் தரம் மற்ற பள்ளிகளின் கல்வித் தரத்திற்கு ஈடாகவில்லை. என்பதுதான் அந்தக்குறை. அதை கவனத்தில் வைத்து கல்வியின் தரத்தை உயர்த்தவேண்டும்'' என்றார் அமைச்சர்.

நகராட்சிகளின் வருவாயைப் பெருக்க நகரப்பேருந்து போக்குவரத்தை நடத்துவது திரைப்பட அரங்கை நடத்துவது போன்றவற்றில் அவசரமுடிவு எடுக்க இயலாமையைப் பற்றியும் உள்ளாட்சித் துறை அமைச்சர் விளக்கினர்.

மாநில நகராட்சி ஆணையர்களின் சங்கச் செயலாளர் திரு. எஸ். காளி நாடார் நமது வரவேற்புரையில் நகராட்சியின் ஊழியர்களின் நியமனங்களுக்குத் தேர்வு செய்வது ஒரு மத்திய நிறுவனம் மூலமாகவும், பதவி உயர்வுகள் மாநில, மாவட்ட அடிப்படையிலும், ஓய்வுக்கால ஊதியமும் இருக்கவேண்டியதின் அவசியமும் சிந்திக்கத்தக்கது என்று கூறினர்.

1968–69 ஆண்டுக்கு நகராட்சி மன்றங்களின் தலைவர்கள் சங்கத்திற்கு, திரு சிவகாமிநாத பிள்ளை தலைவராகவும். திரு கே. தர்மராஜ பிள்ளை உப தலைவராகவும், திரு எம். எஸ். மகாராஜ பிள்ளை செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

—நமது நிருபர்.


பரங்கிமலை ஊராட்சி ஒன்றியத்தின்

விவசாய, தொழிற் துறைகளின் வளர்ச்சித் திட்டங்கள்

வெற்றியடைய வாழ்த்துகிறோம்.

இங்ஙனம்

**நடேசன் இண்டஸ்ட்ரீஸ்**

மோட்டார் கார் பாகங்கள் தயாரிப்பாளர்கள்.

தொழிற்சாலை :

**சோழிங்கநல்லூர்**

தலைமை அலுவலகம் : தேனாம்பேட்டை, சென்னை-18.




# எழுத்தாளர் கார்க்கி

**—அகிலன்**

''ஏதாவதொரு மாயா ஜாலத்தால் இந்த உலகம் முழுவதையுமே விடுதலை பெறச் செய்து என்னையும் விடுவித்துக் கொண்டு, அந்த விடுதலை களியாட்டத்தில் உலகத்தோடு ஒன்று சேர்ந்து ஆனந்தக் கூத்தாடவேண்டும் என்ற பேராசை என்னை உந்தித் தள்ளியது. இந்த மண்ணின் மீது வாழும் மக்களனைவரும் ஒருவருக்கொருவர் தங்கள் அன்பைக் கொடுத்துக் கொண்டு, ஒருவருக்கொருவர் உதவி செய்து கொண்டு, துணிவோடும் அழகாகவும் இன்பமாகவும் வாழச் செய்ய வேண்டுமென்று நான் ஆசைப் பட்டேன்....''

இப்படி ஆசைப்பட்டவர் வேறுயாருமல்ல; உலகப் பெரும் எழுத்தாளர்களில் ஒருவரான ருஷ்ய நாட்டுப் பேராசிரியர் மாக்சிம் கார்க்கிதான். இந்த ஆசை அவருக்குள் கனலாக மூண்டெழுந்தபோது அவருக்கு இருபது வயதுகூட நிரம்பவில்லை. அவரது சுயசரிதையின் இரண்டாம் பாகமான 'இந்தஉலகத்தில்' என்ற நூலின் கடைசிப் பக்கத்தில் அவரது இந்த இலட்சியம் வெளிப்படுகிறது.

அவர் இவ்வாறு ஆசைப்படுவதற்குக் காரணமென்ன? இப்படி ஒரு நோக்கம், ஒரு குறிக்கோள், அந்த இளம் பிராயத்திலேயே அவருக்குள் எப்படிக் குடிபுகுந்தது?.. இவ்வளவுக்கும், இன்று உலகம் புகழும் அந்த மாபெரும் எழுத்தாளர் மழைக்கு ஒதுங்கிய அளவுக்கே பள்ளிக்கூடத்தில் ஒதுங்கி வெளியில் வந்தவர். மேற்படிப்புப் படிக்க வேண்டுமென்று அவர் ஆசைப் பட்டதென்னவோ உண்மைதான். ஆனால் அது நிறைவேறவில்லை.

**வாழ முயன்றபோது..**

என்றாலும் அவர் பெற்ற கல்வியின் ஆழமும் பரப்பும் இந்த உலகில் வெகு சிலருக்கே கிடைக்கக் கூடியவை இளம்பிராயத்தில் வாழ்க்கையில் அவர் பெற்ற கொடுமைகள் நிறைந்த அனுபவங்களை யாரும் எந்தக் கல்லூரியிலும், எந்தப் பல்கலைக் கழகத்திலும் பெற்றிருக்க முடியாது. 1868-ல் ஓர் ஏழைத் தச்சருக்கு மகனாய்ப் பிறந்து, முதலில் தகப்பனாரையும் அடுத்துத் தாயாரையும் பறிகொடுத்து விட்டு அநாதையானார். தாயாரைப் பெற்ற பாட்டனாரின் கொடுமைகளுக்கு எதிராக அவருக்குப் பாட்டியின் அன்பே இந்த உலகத்தில் பற்றுக் கோடாக இருந்தது. வறுமைப் பேயிடமிருந்து தப்புவதற்காக எத்தனை எத்தனையோ தொழில்களைச் செய்தவர் அவர். தெருக் குப்பையில் விழும் ஓட்டை உடைசல்களைப் பொறுக்கி விற்றார்; செருப்பு கடையில் எடுபிடி ஆளாகவும், கடைக்காரர் வீட்டில் வேலைக்காரப் பையனாகவும் உழைத்தார்; கப்பலின் சாப்பாடு அறையில் எச்சில் தட்டுக் கழுவும் பொடியனாக இருந்தார்; காட்டிற்குள் போய் சுள்ளி பொறுக்குவதும் பாடும் பறவைகளைப் பிடித்து விற்பதுமாகக் காலம் கழித்தார்; கட்டிடம் கட்டும் கொத்தனார்களின் மேலாளராகவும், பொம்மைக் கடைப் பையனாகவும், ரொட்டிக்கடைக் கூலியாகவும் பாடுபட்டார். இப்படியெல்லாம் அவர் பெற்ற அனுபவக் கல்விதான், அவருக்கு உலகத்தின் இருள் நிறைந்த பகுதியை வெளிச்சம் போட்டு காட்டியது.

'உள்ளத்தில் ஒளி யுண்டாயின் வாக்கினிலே ஒளியுண்டாகும்; வெள்ளம் போல் கலைப் பெருக்கும் மேவும்; பள்ளத்தில் வீழ்ந்திருக்கும் குருடரெல்லாம் விழிபெற்று பதவி கொள்வர்' என்ற பாரதியின் வாக்குக்கு, ஓர் எடுத்துக் காட்டாகத் திகழ்பவர் கார்க்கி.

சோவியத் நாட்டின் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவர் மாக்சிம் கார்க்கி. ''ஏட்டுக்குள், நாட்டுக்குள், மக்கள் இதயக் கூட்டுக்குள் இடம் பெற்றுவிட்ட'' எழுத்தாளப் பெருமகன், பஞ்சைப் பராரிகளின் நல்வாழ்வையே இலட்சிய முரசாகக்கொண்டு நாட்டு மக்களின் நாடிநரம்பெல்லாம் உயிரேற்றித் துடிப்பேற்றிச் சென்று விட்டவர் கார்க்கி. எழுத்துக்கு எழுத்து எரிமலைக்கனலை உருவாக்கி வடித்த ஒப்பற்ற எழுத்தாளர். புரட்சிக்கு வித்திட்ட புதுமை வாதி, சிறுகதை இலக்கியத்தில் தனக்கென்று ஒரு தனி இடத்தை, தன் எழுத்தாற்றலால், சிந்தனை ஓட்டத்தால், பிடித்துக்கொண்ட அந்தப் பெருமகனின் நூறுவது ஆண்டு விழாவை உலகம் அண்மையில் கொண்டாடியது. தமிழகத்தின் தலைசிறந்த எழுத்தாளர்களில் ஒருவரான ''அகிலன்'' அவர்கள் கார்க்கியைப் பற்றி 'கிராமநலத்'திற்கென்றே எழுதிய கட்டுரையை, இச் சந்தர்ப்பத்தில் பிரசுரிப்பதில் பெருமகிழ்வு அடைகிறோம். —ஆசிரியர்.

### இரத்தத்தில் ஊறிப்போன போராட்ட உணர்ச்சி

இருள் நிறைந்த வாழ்க்கைதான் அவருடைய உள்ளத்துக்கு ஒளியையும், போராட்டச் சக்தியையும் கொடுத்தது. எத்தனையோ கோடிக் கணக்கான மக்கள், வறுமையும், அறியாமையும், அடிமைத்தனமும் நிறைந்த இருளால் விழுங்கப்பட்டு இந்த உலகில் இருந்தவிடம் தெரியாமல் மறைந்து போகிறார்கள். ஆனால் கார்க்கியோ தமது குழந்தை பருவம் முதற்கொண்டே தீமையையும் அநீதியையும் அது எந்த உருவில் வந்தாலும் எதிர்த்துப் போராடும் துணிவை இயல்பாகவே பெற்றிருந்தார். அவருடைய பாட்டனார் அவரைக் குப்புறக் கிடத்தி அடித்தபோது குழந்தையாக இருந்த கார்க்கி அதை எதிர்த்து, அளவுக் கதிகமான அடிகள் பெற்றார். அவருடைய பாட்டி அவர் பாட்டனாரால் கொடுமைப் படுத்தப் பட்டபோது, பாட்டிக்குப் பரிந்து கொண்டு தாத்தாவின்மீது பாய்ந்தார். இப்படி ஒவ்வொரு முறையும் அவர் தமக்கு நேர்ந்த கொடுமைகளையும், தம்மைச் சுற்றியிருந்தோருக்கு நேர்ந்த துன்பங்களையும் எதிர்க்கத் தயங்கவில்லை. தீமைக்கு எதிரான இந்தச் சத்திய ஆவேசமும் எதிர்ப்புச் சக்தியுமே, அவரை அவர் வாழ்ந்த காலத்து ருஷ்ய நாட்டுத் துன்ப இருள் விழுங்காமலும் தடுத்தது; அதை எதிர்த்துப் போராட மற்றவர்களுக்கு அவர் வழிகாட்டியாக விளங்கவும் வகை செய்தது.

அனுபவக் கல்வியால் இவ்வாறு அவருக்கு உண்மையில் இலட்சிய ஒளி புலப்பட்டுவிட்டது; அவருடைய தனித் தன்மையான போராட்ட உணர்ச்சி அவருக்குத்தேவையான துணிவையும் கொடுத்துவிட்டது. எழுத்தாற்றல் பொங்கிப் பீறிட்டு உலகம் முழுவதிலும் பள்ளத்தில் வீழ்ந்து தடுமாறும் குருடர்களை கரைசேர்க்க இவை மட்டிலும் போதுமா? எப்படி அவர் சிறு கதையாசிரியராக, நாவலாசிரியராக, நாடக ஆசிரியராக உருவம் பெற்றார்?



### எழுத்தாளர் ஆனது எப்படி ?

கல்வி அறிவில்லாத பாட்டி அவர் சிறுவராக இருந்த காலத்தில் அவருக்கு எத்தனையோ கதைகளைக் கூறினார். கப்பல் சமையற்காரன் தன் வாழ்க்கை அனுபவங்களை அவரிடம் வெளியிட்டதோடு, கண்ட புத்தகங்களையெல்லாம் அவரிடம் கொடுத்து ஓய்வு நேரத்தில் படித்துக்காட்டச் சொன்னான். அவற்றில் கோகல், புஷ்கின் போன்ற சிறந்த ஆசிரியர்களின் நூல்களும் இருந்தன. இப்படித் தொடங்கிய படிக்கும் பழக்கம் பிறகு அவரை விடாப் பிடியாகப் பிடித்துக்கொண்டது. பத்திரிகைகளில் சிறு கதைகளாக, தொடர்கதைகளாக, கட்டுரை—கவிதைகளாக வந்தவற்றையும், நூல்களாக வந்தவற்றையும் எப்படியெல்லாமோ படித்துத் தீர்த்தார். இரவல் வாங்கிப் படிப்பது, வீட்டுக்காரர்கள் உறங்கியபின் அவர்களுக்குத் தெரியாமல் அவர்களுக்கு வந்தவற்றைப் படிப்பது இவ்வாறெல்லாம் படித்தார். புத்தகம் வாங்குவதற்காக அவர் தம் முதலாளியின் சட்டைப் பையிலிருந்து காசு திருடவும் திட்டம் போட்டார். ஆனால், அவரே அதைக் கடைசியாக முதலாளியிடம் சொல்லிவிட்டு, அவர் கொடுத்த காசுடன் புத்தகக் கடைக்கு ஓடினார்—அனுபவக் கல்வி ஒரு பாதியென்றால், மறு பாதி ருஷ்ய நாட்டுத் தலை சிறந்த எழுத்தாளர்களின் படைப்புக்களைப் படித்ததால் அவருக்கு கிடைத்ததாகும். அந்தக் காலத்து வாழ்க்கை அவருக்கு நேரடியான அனுபவங்களாகவும் கிடைத்தது; மற்ற எழுத்தாளர்களின் படைப்புக்களின் வழியாகவும் கிடைத்தது. அத்தோடு எழுதுவதற்கு வேண்டிய தனித் திறனும் அவருக்குள் வேர்விட்டு மேலே தழைத்து வளர முற்பட்டது.

இளம் வயதில் அவர் எழுதிப் பார்த்த முதல் கவிதை அச்சைப் பார்க்காமலேயே போய்விட்டது. அடுத்து அவர் தமது 24-ம் வயதில் 1892-ல் முதல் சிறு கதையைப் பத்திரிகைக்கு அனுப்பினார். அது வெளிவந்தவுடன் தொடர்ந்து அவர் ஊக்கத்தோடு எழுத முனைந்து விட்டார். நகரங்களிலும் கிராமங்களிலும், ருஷ்யாவின் மூலை முடுக்குகளிலும் அவருடைய கதைகள் ஆர்வத்தோடு மக்களால் படிக்கப்பட்டன. மக்களுடைய மொழியிலேயே மிகவும் எளிய நடையில் வலிமையான கருத்துக்களை அவர் மக்களின் வாழ்வைப் படம் பிடித்தே கூறியதால், மிக விரைவில் அவருடைய பெயர் பிரபலமாகிவிட்டது.

அவருடைய இயற்பெயர் அல்யோஷா பெஷ்கோவ். அதை அவர் கார்க்கி என்று புனை பெயராக மாற்றிக்கொண்டதற்கு அடிப்படைக் காரணம் ஒன்று உண்டு. "கார்க்கி" என்றால் ருஷ்ய மொழியில் கசப்பு என்று பொருள். அவரது இளமைக் காலத்தில் பெரும்பான்மையினரான ருஷ்ய மக்கள் வாழ்ந்த துன்பம் நிறைந்த வாழ்க்கையில் கசப்பே மிகுந்திருந்தது. அதனிடையே ஊறி வளர்ந்து, அதையே தம் எழுத்துக்களில் அவர் வெளிக்கொண்டுவர விரும்பியதால், அந்தப் பெயரே ஏற்ற பெயர் என்று அவர் கருதினார் போலும்; அவருடைய எழுத்துக்கள் கசப்பான உண்மைகளைத் துணிவோடும் சுயநலத்தோடும் எடுத்துக் காட்டும் எழுத்துக்களே.

### எழுத்துக்கு மதிப்பளிக்கும் நாடு

கார்க்கி, செகாவ், டால்ஸ்டாய், கோகல் போன்ற எழுத்தாளர்களால் ருஷ்ய நாட்டு மக்களின் மனப்போக்கில் தீவிரமான மாறுதல்களை ஏற்படுத்த முடிந்ததென்றால், அதற்கொரு காரணமும் இருக்கிறது. ருஷ்ய நாட்டு மக்கள் படிக்கும் பழக்கம் கொண்டவர்கள். அதில் தீவிரமான ஆசை கொண்டவர்கள். படிக்கத் தெரியாதவர்கள் கூட மற்றவர்களைப் படிக்கச் சொல்லிக் கேட்பது அங்கு அந்தக் காலத்திலிருந்தே வழக்கமாக இருந்திருக்கிறது. இப்போதுகூட ரெயிலிலும், பஸ்ஸிலும் வீட்டிலும், வெளியிலும் அவர்கள் புத்தகங்கள் படிப்பதையே பயன்மிகுந்த பொழுதுபோக்காகக் கொண்டிருக்கின்றனர். பொழுதுபோக்குமிடங்களிலும், பூங்காக்களின் அருகிலும் தெருக்களிலும் அங்கு புத்தகங்கள் விற்கப்படுகின்றனவாம். நம் நாட்டில் திரைப்பட நட்சத்திரங்களுக்கு உள்ள விளம்பரங்களைப்போலல்லாமல், அங்கு வாழும் கவிஞர்களுக்கும் கதாசிரியர்களுக்கும் நாடக ஆசிரியர்களுக்கும் மிகப்பெரும் மதிப்பு கொடுப்பார்களாம் ருஷ்ய நாட்டு மக்கள்.

இப்படியொரு பழக்கம் புரட்சிக்கு முன்பு கூட அங்கு இருந்ததால், கார்க்கி விரைவிலேயே நாடறிந்தவராகி விட்டார். ஆனால், எழுத்துக்கு அந்த நாட்டில் அவ்வளவு வலிமை இருந்ததாலேயே, எழுத்தாளர்களுக்கு அங்கு ஆபத்தும் இருந்தது. ஜார் மன்னரின் ஆட்சி கார்க்கியின் எழுத்துக்களைக் கண்டு அஞ்சியது. அவரை சிறைக்குள் தள்ள முயன்றது. டால்ஸ்டாயின் குறுக்கீட்டால், கார்க்கி வெளிச்சிறைக்கு அனுப்பப்படாமல் வீட்டிலேயே காவல் வைக்கப்பட்டார். எழுத்துக்கள், கடிதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன. உண்மையென்று தோன்றியதை வெளியில் சொல்ல முடியாதபடி அரசாங்கத் தடைகள் மிகுந்தன. ஆகவே அவர் வெளிநாடுகளுக்குச் செல்லும் நிலை ஏற்பட்டது. மேற்கு ஐரோப்பாவுக்கும் அமெரிக்காவுக்கும் சென்றார். பிறகு இத்தாலியில் வந்து தங்கிக்கொண்டு எழுதினார். எதற்கும் அஞ்சி அவர் தம் கருத்தையோ எழுத்தையோ விட்டுவிடவில்லை. அவருக்கு ருஷ்யப் புரட்சியின் தந்தையான லெனினின் நட்பு கிடைத்தது. தம் வாழ்நாளிலேயே தாம் கண்ட கனவு நனவாக மாறுவதைப் பார்த்துவிட்டு, புரட்சிக்குப் பிறகு சுமார் இருபதாண்டுக் காலம் வாழ்ந்திருந்து 1936-ல் புகழுடம்பெய்தினார்.

### உரிமைக்குப் போராடிய வீரன்

எழுத்தாளனும் ஒரு தொழிலாளியே, உழைப்பாளியே, என்ற கருத்தை நிலைநாட்டியவர் அவர். ருஷ்ய நாட்டு இளம் எழுத்தாளர்களைக் கூட்டி வைத்து அவர்களுக்கு வழி காட்டியாகவும் ஊக்கமூட்டுபவராகவும் விளங்கினார். இலக்கியத் துறையில் 'சோஷலிஸ எதார்த்தவாதம்' என்ற புதியதோர் கோட்பாட்டை இவர்தாம் முதன் முதலில் தோற்றுவித்தவர். இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் நம் நாட்டில் விடுதலை இயக்கம் தீவிரமாகப் பரவியிருந்தபோது, நம் நாட்டு எழுத்தாளர் பலருக்கும் அவர் எழுத்துக்கள் ஊக்கமூட்டியிருக்கின்றன. 'கார்க்கி'யின் நூல்கள் அப்போது இந்த நாட்டில் தடை செய்யப்பட்டிருந்தன. என்றாலும் அவற்றின் ஆங்கில மொழி பெயர்ப்பு எப்படியோ விடுதலை வேட்கையாளர்களுக்குக் கிடைக்கத்தான் செய்தது. காந்தியடிகளே, "மாக்சிம் கார்க்கியைப்போல் மக்களின் உரிமைக்காகப் போராடிய வீர எழுத்தாளர் ஐரோப்பாவில் வேறு யாருமில்லை" என்று அவரைப் போற்றியிருக்கிறார்.

கார்க்கி தம் நாட்டு மக்களின் விடுதலைக்காக மட்டிலும் வாழ்ந்தவரல்லர். உலக மக்களின் ஆனந்தமயமான வாழ்வே அவர் நோக்கம். ருஷ்யாவில் இருந்து கொண்டே, வெள்ளையரின் காலனி ஆதிக்கத்துக்கு உட்பட்டிருந்த இந்திய நாட்டின் விடுதலைக்காக அவர் குரல் எழுப்பியிருக்கிறார். நம் நாட்டு மகாகவி பாரதி எவ்வாறு ருஷ்ய விடுதலையைப் பாடினாரோ அவ்வாறே கார்க்கியும் இந்திய விடுதலையைப் பறைசாற்றினார்.

அவருடைய எழுத்துக்களைப்பற்றி எழுதுவதென்றால் அது மிகவும் விரிவடையும். சிறு கதைகள், நாவல்கள், நாடகங்கள், கட்டுரைகள், கவிதைகள் என்று அவர் அதிகமாகவே எழுதியிருக்கிறார். எல்லாவற்றிலுமே அவருடைய வாழ்க்கையும் இலட்சியமும் பின்னிப் பிணைந்து கிடக்கின்றன. தாழ்த்தப்பட்டவர், ஒடுக்கப்பட்டவர், பாதாளத்தில் அழுத்தப்பட்டவர் போன்றோரைப் பற்றி அவரைப்போல் வேறு யாரும் அப்பட்டமாக எழுதவில்லை; உருக்கமாகவும் உயர்வாகவும் துணிவோடும் எழுதவில்லை. அவருடைய கதைத் தலைவர்—தலைவியர் அவர் காலத்துச் சமூகத்தால் வஞ்சிக்கப்பட்டவர்களே. ஆனாலும் அவர்கள் எந்த வஞ்சனைக்கும் குனிந்து கொடுக்காதவர்கள். கார்க்கியைப் போலவே எதிர்த்துப் போராடத் துணிந்தவர்கள். கடுமையான உழைப்பும், மனித சமுதாயத்திடம் பரந்த அன்பும், கடமை உணர்ச்சியும், உரிமை விழிப்பும் கொண்டவர்கள்.

### சிறுகதைகளின் தனிச் சிறப்பு

'கார்க்கி'யின் நாவல்களில் உலகப் புகழ் பெற்றது 'தாய்' ஆகும். தனிப்பட்ட கதைத் தலைவனோ, தலைவியோ கதையில் பெரும்பங்கு கொள்வது போன்ற நிலையிலிருந்து அது மாறுபட்டது. சமுதாயமே அதில் புதிய ஆர்வம் கொண்டு இயங்குகிறது. தாய் முதலில் தன் மகனை நேசிக்கிறாள். அந்த நேரம் அவள் மகன் கொண்டிருந்த சமுதாயப் பற்றுதலாக விரிவடைகிறது. பிள்ளைப் பாசம் மக்கள் குலத்தின் மீதுள்ள பாசமாக வளர்கிறது; அதன் விடுதலைக்காகவும் அவள் போராடுகிறாள்.

அவருடைய சிறு கதைகள் உள்ளத்தை உருக்கும் உணர்ச்சிப் படைப்புக்களாகும். கல் நெஞ்சத்தையும் கசிந்துருகச் செய்யக்கூடிய பல அற்புதமான சோகச் சித்திரங்களை அவர் சொல்லோவியங்களாகத் தீட்டியிருக்கிறார். அவர் காலத்து ஏழை எளியோரின் வாழ்க்கைப் போராட்டங்களையும் அவருடைய சொந்த வாழ்க்கையின் துயர் நிறைந்த பகுதிகளையும் நாம் அவருடைய சிறு கதைகளில் காணலாம்.

எடுத்துக்காட்டாக ஒரே ஒரு சிறு கதையைக் கவனிப்போம்:—

**வேண்டுமென்றே குதிரை வண்டியின் குறுக்கே விழுந்து தன்னை மாய்த்துக்கொண்ட கோலூஷா என்ற ஏழைச் சிறுவனின் கதை இது. கோலூஷாவின் தகப்பன் பணத்தைக் கையாடிய குற்றத்துக்காக ஒன்றரை ஆண்டுகள் சிறையிலிருந்து விட்டுத் திரும்புகிறான். அவன் சிறைப்பட்டிருந்த காலத்தில் கோலூஷாவின் தாயார் எப்படியெல்லாமோ சிரமப்பட்டு கூலி வேலை செய்து குடும்பம் நடத்தினாள். கோலூஷாவும் சுள்ளி பொறுக்கி வந்து கொடுத்துத் தன்**

உங்களுக்குத் தேவையான செயற்கை உரங்களுக்கு, எங்களுடைய பசு மார்க் உரங்களை உபயோகியுங்கள். எங்களுடைய உரங்களை உபயோகித்து கூடுதல் விளைச்சல் பெறுங்கள்.

கிடைக்குமிடம் :

**நீலகிரி பெர்டிலைசர் லிமிடெட்,**

கிரெளன் பிரின்ஸ் ஹால்,
குன்னூர்-1.

உற்பத்தி சாலை :

நீலகிரி பெர்டிலைசர் லிமிடெட்,
சாயிபாபா மிஷன் போஸ்ட், கோயம்புத்தூர்-11.

தாயாருக்கு உதவினான். கோலுஷாவுக்குப் பனியின் கொடுமையிலிருந்து தப்ப நல்ல காலுறை கிடையாது. கிழிந்த பூட்சை அகற்றினால் கால் இரணமாகிச் சிவந்திருக்கும். அத்தோடு அவன் காட்டுக்குப் போய்ச் சுள்ளி பொறுக்கி வந்து தன் தாய்க்கு உதவி செய்யத் தவறுவதில்லை. இந்த நிலையில் தகப்பன் சிறையிலிருந்து விடுதலை பெற்றான். நல்ல தேகத்தோடு சிறையில் நுழைந்தவனை, பாரிச வாய்வு நோயோடு வீட்டிற்குள் கொண்டு வந்து போட்டுவிட்டுப் போனார்கள். காலமெல்லாம் குடும்பத்துக்குச் சுமையாய்த் திரும்பிவந்தான் குடும்பத் தலைவன்.

குடும்பத்தலைவி உள்ளங்காலில் உள்ளெலும்பு தேய உழைத்தும், அவள் பெற்ற கூலி ஒரு வேளை உணவுக்குக்கூட அந்த மூவருக்கும் கட்டி வரவில்லை. நிலைமை மோசமாகிக்கொண்டே வந்தது. ஒருநாள் ஆத்திரம் தாங்காமல் பையனின் தாய், "சே! என்ன வாழ்க்கை இது? யாராவது ஒருவர் செத்து ஒழிந்தாலாவது துன்பம் கொஞ்சம் குறையுமே" என்று கத்தி விட்டாள். நோயாளித் தகப்பன் இதைக் கேட்டு "நான் சீக்கிரம் போய்விடுவேன்; அதுவரையில் திட்டாதே!" என்று அவளைத் தடுக்கப் பார்த்தான்.

அன்றைக்கு மாலையிலேயே ஒருபணக்காரனின் குதிரை வண்டிக்குக் குறுக்கே விழுந்தான் சிறுவன் கோலுஷா. குற்றுயிரும் குலை உயிருமாய்க் கிடந்தவனுக்கு வண்டியின் சொந்தக்காரனும் காசு கொடுத்தான். தெருவில் கூடிய கூட்டமும் காசு கொடுத்தது. செய்தி கேட்டு அலறியடித்துக்கொண்டு மகனைக் காண ஓடி வந்தாள் தாய்.

காசை அவளிடம் நீட்டி. "நான் இப்படிச் செத்துப்போனால், உனக்கு இந்த உதவிக்காசும் கிடைக்கும். குடும்பச் சுமையும் குறையும்" என்று கூறியவாறே கண்களை மூடினான் கோலுஷா.

*இப்படி எத்தனையோ கதைகள். உலகத்துச் சிறந்த சிறு கதாசிரியர்கள் என்று ஒப்புக்கொள்ளப்பட்டவர்கள் கூட வாழ்க்கையின் இருள் நிறைந்த பகுதியைக் கார்க்கியைப்போல் இந்த அளவுக்கு ஊடுருவி நோக்கவில்லை— வெளிப்படுத்தவில்லை.*

'பள்ளத்தில் விழுந்து புழுக்களென நெளியும் பஞ்சைகளின் கூட்டத்தை நாடிச்செல்லுங்கள்' அவர்களோடு பழகி அவர்களது துயர் மிகுந்த வாழ்க்கையை உலகத்துக்கு எடுத்துச் சொல்லுங்கள்' என்று உலகத்து எழுத்தாளர்களுக்கு இன்னும் கார்க்கி அறைகூவல் விட்டுக்கொண்டிருக்கிறாரென்றே எனக்குத் தோன்றுகிறது.



# கூட்டுறவு இயக்கம்— ஏட்டுச் சுரைக்காயா?

[ திரு வி. கே. சி. நடராஜன், I.A.S., கூட்டுறவுத் துறை பதிவாளர்.]

[சென்னையில் மார்ச் 4, 5, 6 தேதிகளில் நடைபெற்ற கூட்டுறவு மாநாட்டில் விவாதிப்பதற்கென, கூட்டுறவுத் துறை பதிவாளர் விளக்கக் குறிப்பு ஒன்றினை அளித்திருந்தார். அக் குறிப்பிலிருந்து, ஒரு சில பகுதிகளை எடுத்து அப்படியே கீழே தந்துள்ளோம்.

பதிவாளர் அவர்கள் கூறியுள்ள கருத்துக்கள், ஒளிவு மறைவு இல்லாமல், கூட்டுறவுத் துறையில் இன்றுள்ள பிரத்தியட்ச நிலைமையைத் தெளிவாக எடுத்து விளக்குகின்றன. மருந்து கசப்பாக இருந்தாலும், நோய் அதனால் தானே தீருகிறது? கூட்டுறவு இயக்கத்தில் இன்று கண்டுள்ள குறைபாடுகள் தவிர்க்கப்பட வேண்டும். கூட்டுறவு இயக்கம் மக்கள் இயக்கமாக மலர வேண்டும். அந்த நல்ல சூழ்நிலையை உருவாக்க, அனைவரும் பாடுபட வேண்டும்—ஆசிரியர்]

*தமிழகத்தின் மூலைமுடுக்குகளிலெல்லாம் உள்ள பட்டி தொட்டிகள் பலவற்றிலும் கூட்டுறவு இயக்கம் பரவியிருந்தும், இன்றுள்ள புள்ளிவிவரங்களின்படி, மக்களில் 89·8 சதம் கூட்டுறவு இயக்கத்தில் சேர்ந்திருப்பதாகச் செப்புகின்றனர். இது கூட்டுறவில் உள்ள உறுப்பினர் தொகையை ஐந்தால் பெருக்கிக் கணக்கிட்டுக் கூறும் முறைப்படியாகும். ஆனால் உண்மையில் இந்த அளவு கூட்டுறவு விரிவடைந்திருக்கின்றது எனக் கூற இயலாது. பல குடும்பங்கள் இந்த இயக்கத்தில் இன்னும் பங்கு கொள்ளாமலும், பயன் பெறாமலும் இருக்கின்றன.*




**கூட்டுறவுக் கொள்கையே கலகலத்துப் போய்விட்டதா ?**

*உழவர்களின் பயிர்க் கடன் தேவையில் 20 சதத்திற்கும் குறைந்த அளவே கூட்டுறவுச் சங்கங்களால் பூர்த்தி செய்யப்படுகிறது. உள்ள உறுப்பினர்களிலும் 30 சத விகிதத்தினரே கடன் பெறுகின்றனர். கூட்டுறவு இயக்கம் தொடங்கி 63 ஆண்டுகளுக்கு பின்னரும் இந்த அவல நிலையென்றால், இது வெட்கித் தலை குனிய வேண்டிய ஒன்று. கூட்டுறவுக்கொள்கையே கலகலத்துப் போய்விட்டது என்றுதான் சொல்ல வேண்டும். எனவே கூட்டுறவு இயக்கம் மக்கள் இயக்கமாகப் பரிணமிக்கவுமில்லை. பரிமளிக்கவுமில்லை.*

*ஓர் உழவன் கூட்டுறவில் கடன் பெறுவது என்பது இன்னும் எளிதாகவுமில்லை. எளிதாக்கப்படவுமில்லை. இயக்கத்தின் செயல் திறமையை வளர்க்க வியக்கத்தக்க மாறுதல்கள் பல செய்யப்பட்டிருந்தும், அதற்கேற்ற பலனில்லை.*

கூட்டுறவு இயக்கத்தில் 89·8 சதம் மக்கள் அங்கத்தினராக உள்ளனர் என்று அறிவித்தபோதிலும், பெரும்பான்மையான உழவர்கள் இயக்கத்திற்கு வெளியிலேயே உள்ளனர். ஒவ்வொரு குடும்பத்திலும் ஒருவராவது அங்கத்தினராக உள்ளனரா என்பது குறித்து புள்ளிவிவரம் சேகரித்து, இயக்கத்தில் சேராத குடும்பங்களை சங்கங்களில் அங்கத்தினர்களாகச் சேர்க்கவேண்டும். இதை வாக்காளர் பட்டியல் அடிப்படையில் செய்ய வேண்டும். கூட்டுறவு இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்ற, கூட்டுறவாளர்கள் பாடுபட வேண்டும். உறுப்பினராக சட்டப்படி தகுதியுள்ள அனைவரையும் உறுப்பினராக்க முயற்சிக்கவேண்டும். உழவர்கள் அல்லாதவர்களை 'பி' வகுப்பு அங்கத்தினர்களாகச் சேர்க்க வேண்டும். இது குறித்து, வாக்காளர் பட்டியல் அடிப்படையில் குடும்பப் பதிவேடு ஒன்று வைக்கப்பட வேண்டும்.

பயிர்க்கடன் தேவை ஆண்டு ஒன்றுக்கு ரூ. 160 கோடி எனக் கணக்கிடப்பட்டிருப்பினும் தற்போது கூட்டுறவுச் சங்கங்கள் ரூ. 31 கோடிதான் கடன் வழங்குகின்றன. அதாவது உழவர்களின் தேவையில் சுமார் 20 சதத்திற்கும் குறைவாகவே கூட்டுறவுச் சங்கங்கள் வழங்குகின்றன. மேலும், கடன் பெறும் உறுப்பினர்களின் எண்ணிக்கை சங்க உறுப்பினர்களின் எண்ணிக்கையில் 30 சதம்தான்.

### மக்கள் இயக்கமாக மலர வேண்டும்.

ஒருவேளை 'கூட்டுறவுகளில் இன்றுள்ள செயல் திறமையின்மையைக் கருதித்தானோ என்னவோ நாட்டரசு வர்த்தக வங்கிகள் பயிர்க்கடன் 'வழங்க முன்வர வேண்டும் எனப் பணித்திருக்கிறது. வர்த்தக வங்கிகளும் கூட்டுக்கள் அமைத்துக் கொண்டு கடன் வழங்க முன்வர முயற்சிக்கின்றன. அரசின் ஆணைப்படி இவர்கள் பயிர்க்கடன் வழங்க ஆரம்பித்தால், வசதிப் படைத்த பலரும் வர்த்தக வங்கிப் பக்கமே சாய்வார்கள். கூட்டுறவின் துணையை நாடமாட்டார்கள். எனவே வசதிக் குறைந்தவர்களும், மற்றவர்கள் மட்டுமே கூட்டுறவுத் துறையில் கடன் வாங்குவார்கள். இப்படியொருநிலை ஏற்படுமானால் ஏற்கனவே வலு குறைந்து விளங்கும் கூட்டுறவு வங்கிகள் பொலிவுகுன்றி செயலிழந்து சீர்கெட்டு மங்கி விடும். வர்த்தக வங்கிகளை புகவிட்டால், கூட்டுறவு வங்கிகள் நாளடைவில் நலிந்துவிடும். இதையும் இதுபோல வர இருக்கும் பல இன்னல்களையும் தவிர்த்து, கூட்டுறவை வளர்க்க வேண்டும்.

"கூட்டுறவுச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர யார் விரும்பினாலும், ஒரு மனு அனுப்பினால் போதும். உடனே அனுமதிக்கப்படுவார்" என்று சட்டம் கூறுகிறது. நாமும் கூறுகிறோம். ஆனால் நடைமுறையில் இது எட்டுச் சுரைக்காயாகத்தான் உள்ளது. உறுப்பினராக அனுமதி மறுக்கப் படுவதாகவும், பாரபட்சமாகவே கடன் வழங்கப்படுவதாகவும், கூட்டுறவுச் சங்கங்கள் பலருடைய நன்மைக்கான முறையில் பாங்காக இயலாமல், ஒரு சிலருடைய கோட்டையாக விளங்குகிறது என்றும் விண்ணப்பங்கள் வந்தவண்ணமாகவே உள்ளன. இவை சங்கங்கள் முழுப் பொறுப்புணர்ச்சியுடன் செயல்படுவதில்லை என்பதையே காட்டுகின்றன. இந்த நிலை மாற வேண்டும்.

### உண்மையாக உதவ வேண்டும்.

உழவர்களுக்கு இன்னும் அதிக அளவில் பயிர்க் கடன் வழங்க வேண்டும். அது வேண்டிய அளவு வேண்டியபோது செய்யும் பயிருக்கு ஏற்றபடி வழங்க வேண்டும்.

தீவிர பயிர் பெருக்கத் திட்டம், அமோக விளைச்சல் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களுக்குக் கடன் வழங்கும் பொறுப்பு கூட்டுறவுகளுக்கு இருந்தும், ரிசர்வ் வங்கி வழங்கும் கடனை பயன்படுத்தும் மத்திய வங்கிகளின் திறமை ஆண்டுக்கு ஆண்டு குறைகிறது என்றால், அது ஏன் எனச் சிந்திக்க வேண்டும். வங்கிகளின் சொந்த






மூலதன வலிவின்மையோ. தவணை கடந்த கடன் பெருக்கமோ, ரிசர்வ் வங்கி நிர்ணயித்தபடி கடன் வழங்குவதில் சொந்த முதலீடு (Minimum Involvement) செய்ய இயலாமையோ அல்லது தவணை கடவாத நிலுவையைக் காவாமையோ காரணமாக இருக்கலாம். இல்லை வேறு காரணங்களும் இருக்கலாம். எது எப்படி இருந்த போதிலும் உள்ள இடைஞ்சல்களை ஆய்ந்து அவற்றை நீக்க வழி செய்வதுடன், வரும் ஆண்டுகளில் ரிசர்வ் வங்கி வழங்கும் கடன் அளவு முழுமையும் பெற்று உழவர்களுக்கு வழங்கி உணவு உற்பத்தியைப் பெருக்க உதவுவது எப்படி என ஆய்வது நல்லது.

### வலு குன்றி, செயலிழந்த நிலை ஏன்?

கடன் நிலுவை அதிகரிப்பது ஒரு சிலருக்கு அளவுக்கு மீறி கடன் வழங்குவதாலும், ஒரே குடும்பத்தில் ஒருவருக்கு மேல் கடன் வழங்குவதாலும், பலர் பெயரைப் பயன் படுத்தி ஒரு சிலர் பெருந்தொகையை ஒரு சில இடங்களில் எடுத்துக் கொள்வதாலும், செய்யும் பயிருக்குக் கடன் வழங்காது ஆளைப் பார்த்துக் கடன் வழங்குவதாலும், வழங்கிய கடனை வாங்க முயற்சித்தால் தமக்குள்ள 'நற்பெயர்' கெட்டுவிடுமோ என அஞ்சுவதாலும் இருக்கலாம். இவற்றில் கடைசியாகக் கூறப்பட்ட காரணமே பரவலாக உள்ள ஒன்று. இக் குறைபாடுகளை நீக்கி வங்கிகளின் செயலாற்றலைச் செம்மைப்படுத்தி, நாட்டின் உணவு உற்பத்தியைப் பெருக்கி நல்ல பணியாற்றச் செய்ய என்ன செய்ய வேண்டும் என ஆராயலாம். ஏறக்குறைய மூன்றாண்டுகளுக்குள் இருமடங்காக வளர்ந்திருக்கும் தவணை கடந்த பாக்கியில் வராக் கடன் எவ்வளவு என நிர்ணயித்துப் பொறுப்பானவர்கள் மீது நடவடிக்கை எடுப்பது மிகமிக இன்றியமையாதது. வசூலாகக் கூடிய பாக்கியை வரப் பற்றுவதும் அவசியம் நடப்பு ஆண்டில் இது வரையில் கொடுத்துள்ள கடன் அளவு 22·75 கோடி மட்டுமே. இது சென்ற ஆண்டைக் காட்டிலும் மிகமிகக் குறைவு. கூட்டுறவு வங்கிகளும் சங்கங்களும் நாளுக்கு நாள் வலிக்குன்றி செயலிழந்து வருவது ஏன்? இந்நிலையைத் தவிர்ப்பது எப்படி என ஆய்ந்து முடிவு செய்வது நல்லது.

[1968-ம் ஆண்டு மார்ச் மாதம் 4-ம் தேதி முதல் 6-ம் தேதி வரை சென்னையில் நடைபெற்ற கூட்டுறவு மாநாட்டில், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் திரு வி. கே. சி. நடராஜன், ஐ.ஏ.எஸ்., அவர்கள் முன் வைத்த விளக்கக் குறிப்பிலிருந்து தொகுக்கப்பட்டது.]


## விவசாயிகளுக்கு ஓர் அரிய சாதனம்!

பறவைகளாலும், மிருகங்களாலும் அழிக்கப்படும் பயிர்களை பாதுகாத்து நஷ்டத்தை தவிர்க்க விவசாயிகளுக்கு ஓர் அரிய சாதனம் இதோ காணப்படும்,



### "ப்யூரிவாக்ஸ்"

இது துப்பாக்கி போல் பயங்கர வெடி சத்தத்தை உண்டாக்கி பறவைகளையும், மிருகங்களையும், பயிர்களை அணுகாதபடி தடுத்துவிடுகிறது. இந்த இயந்திரம் மிகக் குறைந்த செலவில் கால்சியம் கார்பைடில் இயங்குகிறது. இந்த இயந்திரத்தை ஒரு மரத்தில் தொங்கவிட்டு, ஒரு முறை இயக்கிவிட்டால் நாம் அதை நிறுத்தும் வரை தொடர்ச்சியாக 1 முதல் 5 நிமிடங்கள் இடைவெளியில் தானாகவே வெடித்துக்கொண்டிருக்கும். இயக்கும் முறை மிகவும் சுலபமானது. நீண்ட நாள் உழைக்கும். இயந்திரத்தின் விலையும் குறைவு.

### "ப்யூரிவாக்ஸ்"

தமிழக அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டது. இதை பஞ்சாயத்து யூனியன்கள் மூலமாக விவசாயிகளுக்கு பாதி விலைக்கு விநியோகம் செய்ய அரசாங்கம் உத்தரவிட்டிருக்கிறது. உடனே உங்கள் தேவைகளுக்கு எழுதவும்.

கிடைக்குமிடம் :

**வி. வி. பாலு அண்டு கம்பெனி பிரைவேட் லிமிடெட்,**

நெ. 17, அங்கப்ப நாய்க்கன் தெரு, சென்னை-1.

SEMBI/CCB/2

# கவனிக்கவும் —
# யானை டிரேட் மார்க்

## யானை டிரேட் மார்க், உர மூட்டைகளில் இருக்கிறதா என்று கவனித்து வாங்கவும்

பாக்ட் கம்பெனியாரின்
உரத் தயாரிப்புகள்

**பாக்டம்பாஸ்**
(அமோனியம் பாஸ்பேட் 16 : 20)

**அல்ட்ராபாஸ்**
(மிகவும் பொடியாகத் தூளாக்கப்பட்ட மினரல் பாஸ்பேட்)

**அமோனியம் ஸல்பேட்**
**சூபர்பாஸ்பேட்**
**N.P.K. கலப்பு உரங்கள்**

பாக்ட் ...யானை மார்க் உரங்கள்

பெர்டிலைஸர்ஸ் அண்டு கெமிகல்ஸ் திருவிதாங்கூர் லிமிடெட்
பதிவு காரியாலயம்: ஏலூர், உத்யோகமண்டல், P. O. கேரள ராஜ்யம்
பிராந்திய அலுவலகம்: 2வது மாடி 19, கமாண்டர்-இன்-சீப்ரோடு எழும்பூர் சென்னை

Criterion-FT-2004 A


பொன்னி வள நாட்டினரே புறப்படுவீர்! [6-ம் பக்கத் தொடர்ச்சி.]

முடித்துவிடுங்கள். இந்த கால வரம்புவரை சம்பா நிலங்களுக்கு ஆடுதுறை 27 நெல்லை விதைக்க வேண்டாம்.

சம்பாவிற்கு ஜூன் 20-ம் தேதி அளவில் ஆரம்பித்து ஆடிப்பட்டத்தில் பெரும் பகுதி விதைப்பது தான் வழக்கம். ஆகவே ஜூன் 20—ம் தேதியிலிருந்து ஆகஸ்டு 7-ம் தேதிவரை நீண்ட கால வயதுள்ள சம்பா நெல் ரகங்களுக்குப் பதிலாக ஆடுதுறை 27 ரக நெல்லை சம்பா நிலத்தில் முதல் பயிராக விதையுங்கள்.

ஒருவேளை பருவமழை தவறி மேட்டூர் அணை ஜூன் மாத இறுதிக்குள் திறக்கப்பட முடியாமல் போய்விட்டால் வழக்கமான குறுவை நிலத்திற்கும் புதிதாக இரு போக மாக மாற்றப்படும் சம்பா நிலத்திற்கும் ஆடுதுறை 27 நெல்லை விதைக்கும் பட்டத்தில் அதிக வேறுபாடு இருக்காது.

அந்தச் சூழ்நிலை உருவானல் அதிகபட்சம் எந்த அளவிற்கு நீங்கள் ஒரு போக நிலங்களை இரு போகமாக மாற்றமுடியுமோ, அந்த அளவிற்கு மாற்றி, குறுவை நிலத்திற்கும் சம்பா நிலத்திற்கும் ஆடுதுறை 27 நெல்லை விதையுங்கள், இதனை எவ்வாறு செய்வதென்பதை உங்களால்தான் சரிவர தீர்மானிக்க முடியும் என்பதோடு சென்ற ஆண்டு சாதித்ததைப் போலவே இவ்வாண்டும் நீங்கள் வெற்றிகரமாக செயலாக்கிக் காட்டுவீர்கள் என்பதில் நான் திட நம்பிக்கை கொண்டுள்ளேன்.

உங்கள் இரண்டாம் பயிருக்குத் தேவையான குறுகிய, நடுத்தர வயதுள்ள நெல் ரகங்களை சேமித்து வைக்க தமிழக அரசு தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

உங்களை உழைப்பின் சாதனை மாபெரும் வெற்றியாக மாற மாநிலமே விரும்புகிறது.

'சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்', எனவே உழவர் பெருங்குடி மக்களே,

தஞ்சைத் தரணிச் சரிதத்தில் உழவரணி படைக்கும் புதுப் பரணியை—புகழ்ப் பரணியை—வெற்றிப் பரணியைக் கண்டிட—வேளாண்மைத்துறை சரித்திரத்தில் இன்னொரு சாதனையை விளைத்திட புறப்படுவீர்.''




குறைந்த செலவில் தட்டுப்பாடின்றி

# சக்தி அளிப்பது

Kirloskar கிர்லோஸ்கர் AV-1, 5 B.H.P. டீஸல் இன்ஜின்






கிர்லோஸ்கர் டீஸல் இன்ஜின் குறைந்த செலவில் தொந்திரவின்றி வேலை செய்வதற்கென்றே நிர்மாணிக்கப்பட்டது. வேலை நேரத்தையும் அதனுல் செலவையும் மிச்சப்படுத்துகிறது. விவசாயத்தில் உற்பத்தியைப் பெருக்குகிறது.

குறிப்பிட்ட தேவைகளுக்கேற்ப (60 H.P. வரை) நீராலோ அல்லது காற்றுலோ குளுமையடையும் இரு வகைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்போர்:
**கிர்லோஸ்கர் ஆயில் இன்ஜின்ஸ் லிட்., பூனு**

மேலும் விவரங்களுக்கு கீழ்கண்ட விலாசத்தை அணுகவும்:
**பாரி & கம்பெனி லிட்.,**
மதருஸ் • பம்பாய் • கல்கத்தா • புது டில்லி

PKZ-1678/TAM

# திரைப்படத்தில் தமிழக அரசின் செய்தித்தொகுப்பு



> தமிழக அரசின செய்தித் துறையினரால் தயாரிக்கப் பட்ட முதல் 'செய்தித் தொகுப்பு' திரைப்பட வெளியீட்டு விழா, அண்மையில் நடைபெற்றது. தமிழகத்தின் மூன்று அமைச்சர்கள் இவ் விழாவில் பங்கு கொண்டு விழா சிறப்புற வாழ்த்தினர். இது கன்னி முயற்சி. ஆனால் தமிழக அரசின் செய்தித் துறையின் வரலாற்றில், இது ஒரு மைல்கல். இச் சீரிய பணி—மேன்மேலும் சிறக்க, நல்லிதயம் படைத்த அனைவருடனும் சேர்ந்து, 'கிராம நலமு'ம் வாழ்த்துகிறது.

தமிழக அரசு செய்தித் துறையின் செய்திப் படத் தயாரிப்பான "செய்தித் தொகுப்பு" வெளியீட்டு விழா, 4—5—1968 அன்று சென்னை பாலர் அரங்கில் நடைபெற்றது.

இவ்விழாவில் செய்தித் தொகுப்பின் முதலாவது செய்திக் கதிர் திரையிடப்பட்டது.

விழாவுக்கு வந்திருந்த அனைவரையும் தமிழக அரசு தலைமைச் செயலாளர் திரு. சி. ஏ. ராமகிருஷ்ணன் ஐ. சி. எஸ். அவர்கள் வரவேற்றார்....

தலைமைச் செயலாளர் தமது வரவேற்புரையில்

"இந்திய அரசு செய்திப் படங்களை வெளியிட்டு வருகிறது. ஆனால் இந்திய அரசின் செய்திப் படங்களில் தமிழ்நாட்டில் நடைபெறும் எல்லா முக்கிய நிகழ்ச்சிகளையும் காட்ட முடியாத நிலை இருந்தது. அதை மாற்றி மக்களுக்கு மகிழ்ச்சி ஊட்டிய 'செய்தித் தொகுப்பு' வெளியிடப் படுகின்றது"

என்றார்.

## நாட்டின் வளர்ச்சிக்கு நல்லதொரு முயற்சி

விழாவுக்குத் தலைமை வகித்த மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்கள் தமது தலைமையுரையில் கூறியதாவது:—

"அகில இந்திய ரீதியில் செய்திகளைத் தொகுத்து காட்டப்படும் செய்திப் படங்கள் பெரும்பாலும் மாநில சூழ்நிலைகளுக்கு ஏற்றவைவாக அமைவதில்லை. குறிப்பாக, தமிழகத்தின் சாதனைகளும், வளர்ச்சித் திட்டங்களும் அப்படங்களில் பூரணத்துவத்துடன் இருந்ததில்லை என்ற குறைகள் இருந்தன. அக்குறைகளை நீக்கும் முயற்சி தான் 'செய்தித் தொகுப்பு' வெளியீட்டு விழா."

"மாநில அரசு செய்திகளுக்கும், பயனுள்ள காரியங்களை நாட்டு மக்களுக்கு எடுத்துச் சொல்வதும் புதிய ஆக்கங்களைத் தேடித் தருவதும் நமது கடமையாகும்.

"அந்த முறையில் தமிழக அரசின் செய்தித் துறை இந்த நல்ல முயற்சியில் ஈடுபட்டுள்ளது."

## தமிழக மக்களுக்கு பயன்தரும் அமைப்பு

"செய்தித் தொகுப்பு" வெளியீட்டைத் தொடக்கி வைத்த மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. இரா நெடுஞ்செழியன் அவர்கள் தமது உரையில் குறிப்பிட்டதாவது:—

"தமிழக அரசின் செய்தித் துறை தனியான அமைப்பை ஏற்படுத்தி 'செய்தித் தொகுப்பை' வெளியிடும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறது. உரிய முறையில் இந்த அமைப்பு செய்யும் காரியங்களால் மக்களுக்கு நன்மை ஏற்படும்.

மத்திய அரசு செய்திக் கதிரில் தமிழகத்தைப் பற்றிய நிகழ்ச்சிகள் செய்திகள் இரண்டு நிமிடம் கூட இடம் பெறுவதில்லை. பரந்த நிலப்பரப்பான இந்த நாட்டில் நடைபெறும் அத்தனை நிகழ்ச்சிகளையும் தொகுத்துக் காட்டுவது எளிதல்ல. எனவே, தமிழக அரசின் சார்பில் தமிழக மக்கள் நன்மையடையும் விதத்தில் செய்தித் தொகுப்பு அமையும். கருத்தையும், காதையும், கண்ணையும் ஈர்க்கும் செய்தித் தொகுப்பால் எல்லாவகையிலும், எல்லாத் தரப்பினரும், நிலையினரும காட்சிகளோடு கருத்துக்களை பெறும நிலைஏற்படும்.

தமிழக அரசின் சாதனைகளையும், புள்ளி விவரங்களையும், திட்டமுள்ள திட்டங்களையும் நிறைவேற்றியுள்ள பணிகளையும் நிகழ்ச்சிகளையும் மக்களுக்கு அறிவிக்க செய்தித் துறையும் செய்தித் தொகுப்பு முறையும் நன்கு பயன்படும்.

பல்வேறு துறைகளில் தமிழகம் முன்னணியில் நிற்பதுபோல, செய்தித் தொகுப்பிலும் முன்னணியில் நிற்க வேண்டும்."

## நல்ல பணிகளை நாடறியச் செய்வோம்

செய்தித் தொகுப்பின் முதலாவது செய்திக் கதிர் திரையிடுவதை தொடக்கிவைத்த மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி தமது உரையில் கூறியதாவது:—

"பல்வேறு செய்திகளைத் தொகுத்தளிக்கின்ற காரணத்தால்—நாம் பெரிதென்று நினைக்கின்ற—நாம் சிறப்பானதென்று கருதுகின்ற நம் மாநிலத்திற்குத் தேவையானது என எண்ணுகின்றவற்றை இந்திய அரசு செய்திப்படப் பிரிவால் நிறைவேற்ற முடியவில்லை. அப்படிப்பட்ட குறைகள் நீக்க செய்தித் துறை செய்தித் தொகுப்பை வெளியிட முன் வந்துள்ளது.

தொடர்ந்து பல்வேறு படங்களைச் செய்தித் துறை தொகுக்கவிருக்கிறது. ஒவ்வொரு பட நிலையத்திலும் செய்தித் தொகுப்பை தமிழக மக்களுக்கு காட்டுவதற்காக வகை செய்யப் பட்டுள்ளது.

நிகழ்ச்சிகளை படமாக்கி காட்டுவதோடு மட்டுமல்லாமல், தமிழக மக்கள் அரசின் சார்பில் ஏற்றுக் கொள்ள வேண்டிய கடமைகள் பற்றிய கருத்துக்களையும் அறிவுரைகளையும் கூறும் விதத்திலும் செய்தித் தொகுப்பு அமையும்.

கட்சி சார்பற்ற முறையில் நாட்டு நன்மைக்காக செய்யப்படும் பணிகளை நாடறியச் செய்வதே செய்தித் தொகுப்பின் முக்கிய நோக்கமாகும்.

செய்யப்படும் நல்ல காரியங்களை விரைவாக மக்கள் அறிந்து கொள்ளவும், அப்படிப் பட்ட நல்ல பணிகளைச் செய்வோருக்கு மக்கள் ஒத்துழைப்பு தரவும் செய்தித் தொகுப்பு மெத்தவும பயன்படும்.

இது சிறிய படம்தான். ஆனால் சீரிய படம்."

## "செய்தி"—புதிய விளக்கம்

பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தமது உரையின் இடையில செய்தி பரவுதலை வலியுறுத்த, 'செய்தி' என்ற சொல்லுக்கு ஒரு புதிய விளக்கத்தை அளித்தார்.

"குறும்புத்தனமாக யோசித்துப் பார்த்தால்–செய்தி என்ற சொல் இப்படி உண்டாகியிருக்கலாம் என்று நினைக்கத் தோன்றுகிறது.

செய்யப்படும் செயல்கள் அனைத்தும் தீ போல பரவுவதால் தான் 'செய்தி' என்ற சொல் உண்டாகியிருக்கும்."

அமைச்சரின் கலைநயத்துடன் கூடிய புதிய விளக்கம் நல்ல செய்திகள், உண்மையான செய்திகள் வேகமான மக்களிடம் பரவ வேண்டும் என்பதை வலியுறுத்தியது.

செய்தித் துறையின் துணை இயக்குநர் திரு. சி. என். கிருஷ்ணபாரதி நன்றி கூறுகையில், தமிழக அரசின் செய்திப் பணி ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் திரு. டி. ஏ. எஸ். பாலகிருஷ்ணன், ஐ. ஏ. எஸ்., குழுவின் செயலாளர் மக்கள் தொடர்பு அதிகாரி திரு. எஸ். வேங்கடசாமி, தொழில் கல்வி இயக்குநர் திரு. டி. முத்தையன், திரைப்படத் தொழில் நுணுக்கக் கல்லூரித் தலைவர் திரு. ப. சிவதாணு பிள்ளை ஆகியோர் இம்முயற்சியில் காட்டிய ஆர்வத்தையும், ஒத்துழைப்பையும் குறிப்பிட்டார்.

விழாவுக்கு, சென்னை நகர மேயர் டாக்டர் ஹபிபுல்லா பேக், பட அதிபர் திரு. ஏ. எல். சீனிவாசன் முதலியோர் வந்திருந்தனர்.

மக்கள் திலகம் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் அவர்கள் விழாவுக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பியிருந்தார். இறுதியில் செய்தித் தொகுப்பின் முதலாவது, செய்திக் கதிர் திரையிடப்பட்டது.

இந்தியாவில் மாநில அளவில் செய்திப் படங்கள் தயாரிப்பதற்கு தமிழகச் செய்தித் தொகுப்பு முன்னோடியாக விளங்கும் என்பதைக் காட்டுகிறது செய்தித் தொகுப்பின் முதற்படைப்பு

## முதலாவது செய்திக் கதிரில்...

சென்னையிலுள்ள திரைப்பட தொழில் நுட்பக் கல்லூரியின் ஒத்துழைப்புடன் தயாரிக்கப்பட்டுள்ள செய்தித் தொகுப்பின் முதலாவது செய்திக் கதிரில்—

நான்காவது அனைத்திந்திய மதுவிலக்கு மாநாடு நில அடமான வங்கியின் புதுமனை புகுவிழா.

தமிழக முதலமைச்சரின் வெளிநாட்டுப் பயணம்.

குடும்ப நலத் திட்டம் பற்றிய சிறு துணுக்கு முதலியன இடம் பெற்றுள்ளன.

அடிநாள் தொட்டு அண்ணல் காந்தியடிகள் அறநெறி வழிநின்று இந்தியா முழுவதற்கும் வழிகாட்டும் மாநிலமாகத் திகழும் தமிழகத்தின் செய்தித் தொகுப்பின் தொடக்கமே உத்தமர் காந்தியடிகள் திரு உருவச் சிலையைக் காட்டுவதிலிருந்து தொடங்குகிறது—

உட்கப் படாஅர் ஒளியிழப்பர் என்றும்
கட்காதல் கொண்டொழுகு வார்—என்ற

வள்ளுவரின் வாய்மொழியை நான்காவது அனைத்திந்திய மதுவிலக்கு மாநாட்டில் பங்கேற்ற சான்றோர்கள் எடுத்துரைக்கும் காட்சியும் பிறவும் காட்டப்படுகின்றன.

இந்தியாவிலேயே முதன் முதலில் தமிழகத்தில தொடங்கப்பெற்று சீரோடு வளர்ந்திருக்கும் நிலஅடமான வங்கியின் புதுமனை புகுவிழா காட்சி. இவ்வங்கியின் மிகப் பழைய உறுப்பினரான திரு. கே. எஸ். ரங்கையா கவுண்டர் புதிய கட்டிடத்தைத் திறந்துவைத்தார்.

'திறமான புலமையெனில் அதை வெளிநாட்டார் வணக்கம் செய்தல் வேண்டும்' என்ற அமரகவி பாரதியின் கனவை நனவாக்கிய முதலமைச்சரின் வெளிநாட்டுப் பயணம் பற்றியது.

பொதுப் பணித் துறை அமைச்சர் இல்லத்தில் பத்திரிகை நிருபர் கூட்டத்தில் தமது வெளிநாட்டுப் பயணம் பற்றி முதலமைச்சர் கலந்துரையாடினார். தமிழக அமைச்சர்களும் பெருமக்கள் பலரும் முதலமைச்சரை அவர் இல்லத்தில் கண்டு மகிழ்ச்சியினைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

தமிழகத்தின் அன்புப் பரிசாக தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம், உலகத் தமிழ் மாநாட்டு மலர், காஞ்சிபுரம் பட்டுத் துணிகளையும் முதலமைச்சர் அவர்கள் எடுத்துச் சென்றார்.

"வெள்ளம்போல் தமிழர் கூட்டம்
வீரங்கொள் கூட்டம்; அன்னார்
உள்ளத்தால் ஒருவரே மற்
றுடலினால் பலராய்க் காண்பார்"

என்ற புரட்சிக் கவிஞர் பாரதிதாசனின் கவிதை வரிகளை கண்முன்னே காட்சியாக்கித் தருகிறது. முதலமைச்சரை வழியனுப்ப கூடியுள்ள மக்கள் திரள்.

நல்வாழ்த்துக்கள்

## தி பிரிட்டானியா பிஸ்கட் கம்பெனி லிமிடெட்

பம்பாய்—கல்கத்தா—டெல்லி—சென்னை

## R. மனோகரன் & கம்பெனி

*விற்பனையாளர்கள் :*

கிர்லோஸ்கர் ஆயில் என்ஜின்கள், எலக்ட்ரிக் மோட்டார்கள், பாரி உரங்கள்,
பூச்சி மருந்துகள், பவர் ஸ்ப்ரேயர்கள், வீரிய ஒட்டு விதைகள்.

*2. வடக்கு ரத வீதி,*
*ஸ்ரீவில்லிபுத்தூர்,*
*ராமநாதபுரம் மாவட்டம்.*




உங்கள் குடும்பம் ஆயிரம் காலத்துப்பயிர் ஒவ்வொரு தலைமுறையும் நூறாண்டு வாழ இன்பம் தேவை, இனிய வாழ்வுக்கு ஓர் இரு குழந்தைகள் இருந்தாலே போதும்.

*வெளியீடு :* மாநில குடும்ப நலதிட்ட அமைப்பு
சுகாதார, குடும்ப நலதிட்ட இயக்குநர் அலுவலகம்
சென்னை-6.

*குடும்பக் கட்டுப்பாடு செய்திடுவீர்*

# சித்த வைத்தியம்

[“உடம்பை வளர்த்தேனே உயிர் வளர்த்தேனே” என்பது திருமூலர் வாக்கு. “மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது அற்றது போற்றி உணின்” என்கிறது குறள். பழம்பெருமை வாய்ந்த தமிழகத்தில் எல்லாக் கலைகளும் ஓங்கி வளர்ந்து வந்துள்ளன. அக் கலைகளில், தமிழரின் மருத்துவக் கலை ஒன்றாகும். நிமிர்ந்த நெஞ்சம், நேர்கொண்ட பார்வையும் கொண்ட—மக்களை உள்ளடக்கிய வீரத்தின் விளைநிலமாகத் திகழ்ந்த பண்டைத் தமிழகத்தின் தொன்மைப் புகழ் வாய்ந்தது, சித்த மருத்துவக் கலை. அப்படிப் பட்ட விலை மதிக்க முடியாத கருவூலங்களை நமக்கு விட்டுச் சென்றுள்ளனர், நமது முதாதையர்கள்.

இடைக் காலத்தே சித்த மருத்துவம் ஒளி குன்றியிருந்தது. புதிய தமிழ அரசு அமைந்ததுமே, சித்த மருத்துவம் மறுபடியும் ஒளிவீசிப் பிரகாசிக்கத் தொடங்கிவிட்டது. போற்றிப் பாதுகாக்க வேண்டிய சித்த மருத்துவக்கலை பற்றி, தன்னுடைய வானொலிப் பேச்சில், கருத்தாழத்துடனும், பரந்த ஆய்வுத் திறனுடனும், அழகாக எடுத்துக் கூறியுள்ளார், தமிழக அரசின் சுகாதாரப் பணிகள்—குடும்பக் கட்டுப்பாடுத் துறையின் துணைச் செயலாளர். அவர் கூறும் கருத்துக்கள் அனைவருக்கும் பயன்பட, அப்பேச்சின் முழு வடிவத்தைக் “கிராம நலம்” இங்கே அளித்துள்ளது.

—ஆசிரியர்.]

நம் தமிழ் மொழியில் 64 கலைகள் உள்ளன. அவற்றுள் தலையாயது, சித்த மருத்துவம். ஏனைய கலைகள் அறிவை வளர்க்கவும் மனத்திற்கு உற்சாகத்தை தரவும் உதவுகின்றன. ஆனால், சித்த மருத்துவமோ, உடலை ஓம்பி உயிரை ஓம்புகிறது.

### வரலாற்று காலத்திற்கும் முந்தியது

இம் மருத்துவம் மிகத் தொன்மை வாய்ந்தது. இக் கலையை பண்டைத் தமிழர்கள் குமரிக் கண்டத்திலே தோற்றுவித்தார்கள் என்று வரலாற்று ஆராய்ச்சியாளர்களால் உணர்த்தப்பட்டுள்ளது. அப்பழைய குமரிக் கண்டம் பல கடற்கோள்களால் மறையவே அங்கு வசித்த பண்டைய தமிழர்கள் சிந்து கங்கை இடைவெளியை நோக்கிச் செல்லவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அவர்கள் ஆகமத்தையும் அதைச் சார்ந்த பல கலைகளையும் தோற்றுவித்தனர். மோகஞ்ஜாதாரோ, ஹாரப்பா என்னும் புவியியல் ஆராய்ச்சியில் திராவிட நாகரிகம் சிந்து கங்கை வெளியில் பரவியிருந்தது என்பதை வலியுறுத்துகிறது. அக்காலத்தே சிலாசத்து இரசம் போன்றவைகளைக் கொண்டு மருந்துகள் செய்ய உபயோகித்துள்ளனர் என்பது தெரியவருகின்றது.

வடக்கில் “ சப்த சிந்து ” என்னும் நாடு வழங்குவதற்கு முன்பு “ போக பூமி ” என்று வழங்கிய நாட்டில்


திரு கே. சிதம்பரம்
துணைச் செயலாளர், சுகாதாரப் பணிகள்—குடும்பக் கட்டுப்பாடுத் துறை—தமிழக அரசு.


ஆதி தமிழர்கள் நாகரிகத்திலும் பண்பாட்டிலும் உயர்ந்திருந்தார்கள். அவ்வறிஞர்கள் ஆன்ம விசாரம்செய்து மறைமொழி, நிறைமொழி மாந்தர்களாக விளங்கினர். அம்மாபெரும் அநுபூதிமான்கள் இயற்றிய மறைமொழிகள் இங்கு ஆகமங்களாகப் பரிணமிக்கின்றன. ஆகமங்களில் அறிஞர்களையும், அநுபூதிமான்களையும் பல தொகுதிகளாகவும் கணங்களாகவும் பாகுபாடு படுத்தியுள்ளனர். அவ்வகையில் பொதுத் தொகுதியினரே சித்தர்கள் ஆவர். இவர்கள் வேத காலத்திற்கு முன்பே அதாவது ஆரியர்கள் நுழைவிற்கு முன்பே தோன்றி “ அறம், பொருள், இன்பம், வீடு ” என்னும் நாற்பொருட்களை முறையாகவும் தெளிவாகவும் எடுத்துப் பகர்ந்தனர். ஆரியர்களின் வருகையால் இவர்கள் தென்னகம் புகுந்தனர். அப்படி புகுந்தவர்கள் பெரும்பாலும் ‘ வியன்தரர்கள் ’ ஆவர். அவர்களுள் சிறப்பானவர்கள் அகத்தியர், தொல்காப்பியர், திருமூலர் போன்றவர்கள் ஆவர். பெரும்பான்மையோர் முக்கூடல், காஞ்சி, திருப்பாதிரிப்புலியூர் போன்ற இடங்களில் மடங்களையும் குருகுலங்களையும் ஏற்படுத்தி தமிழ் மொழியை வளர்த்ததோடு அன்றி மக்களுக்கு நற்சேவை செய்தார்கள். சித்தர்கள், வியன்தரர்கள், அறிவர்கள் ஆகியோர்கள் அநேக சில விரதங்களைக் கொண்டவர்கள். ஒரு சிறிதும் பிறழாமல் விரதங்களைக் கடைப்பிடித்து வந்தார்கள். அவைகளில் மருந்துதானமும் ஒன்று. தங்கள் மடங்களில் மருந்துதானம் செய்வதற்காக மருத்துவ சாலைகள் ஏற்படுத்தி, மக்களுக்கு பிணி நீக்கத் தொண்டாற்றினர். சித்தர்கள் ஆகமவாதிகளானபடியால் கொல்லாமை கொள்கையைப் பூண்டிருந்தனர். அதனால் அவர்கள் முக்கியமாக உலோக பாடாணங்கள் போன்றவைகளையே பஸ்ப, செந்தூரங்களாகச் செய்து பிணி நீக்கம் செய்தனர். ஏனென்றால், மூலிகைகளுக்கும் உயிருண்டு என்ற தத்துவம் கண்டிருந்தனர். எனினும் மக்களின் பிணி நீக்கத்தைக் கருதி மூலிகை உபயோகிக்க நேர்ந்தால் அவைகளுக்கு பூசைகள் செய்து உபயோகித்து வந்தனர். அவர்கள் கூடியவரையில் சீவன்களுக்கு இன்னல் இழைக்காதிருந்தனர். அதனாலன்றோ சித்தர்கள் பரப்பிய மருத்துவத்தில் பெரும்பாலும் பற்ப, செந்தூரங்களே முதலிடம் பெற்றுள்ளன. இதுவே சித்த மருத்துவத்திற்கு அடிப்படையாகும். இன்றைய நாளில் தம தம் முறைகள் மற்றவைகளைவிட முன்தோன்றிய தென்ற பிரச்சினைகள் நம் நாட்டில் எழக் காண்கிறோம். ஆராயுமிடத்து எங்கு மனித இனம் முதன் முதல் தோன்றியதோ, அங்கு மருத்துவமும் தோன்றியிருக்கவேண்டும் என்ற நியதி உள்ளது.



உலகின் தென்பாதி முகத்தில்தான் முதல் முதல் உயிரினங்கள் தோன்றின என்ற உயிரியல் ஆய்வாளர்கள் புவியியல் ஆராய்ச்சியாளர்களும் தெற்றெனக் கூறியுள்ளனர். ஆதியில் மனித இனம் தோன்றியது பண்டைய தமிழகமாகிய குமரிக் கண்டம் அல்லது கடல் கொண்ட தென்னகம் ஆகும். இதனால் பெறப்படுவது யாதெனில் முதன் முதலில் குமரிக் கண்டத்தில் தோன்றிய தமிழர் மருத்துவமே—சித்த மருத்துவமாக இன்று நிற்கின்றது.

இம் மருத்துவம் நவக்கோடி சித்தர்களால் உண்டாக்கப்பட்டது என்றும் பதினெண் சித்தர்களால் தோற்றுவிக்கப்பட்டது என்றும் கேள்வி. அவர்களுடைய வரலாறுகளை நோக்குங்கால் சிலர் தென்னாட்டிலும், சிலர் வடநாட்டிலும் வாழ்ந்திருந்தார்கள் என்பதை அறியலாம். பெரும்பாலும் தென்னாட்டில் வாழ்ந்த சித்தர்கள் முதல் தமிழ்ச் சங்கம் முதற்கொண்டு வாழ்ந்துள்ளதை சங்க நூல்களால் அறியலாம். ஆகவே சித்த மருத்துவத்தில் சிறந்து விளங்கும் மெய்ஞானம், விஞ்ஞானம், உடல் தத்துவம், சமயம், மருத்துவம், பரிகாரம் போன்ற நூற்களை ஐயம் திரிபற ஓலைச் சுவடிகளில் எழுதிப் போயினர். இவைகளெல்லாம் சித்த மருத்துவத்திற்கு அடிப்படையானவை ஆகும். சில நூற்களே அச்சுக்கு வந்துள்ளன. எண்ணற்றவை அச்சுக்கே வரவில்லை. தென்னாட்டில் சித்த மருத்துவம் பெரும்பாலும் ஒவ்வொரு வீடுதோறும் பரம்பரையாக வளர்ந்து வந்திருக்கிறது. வீட்டிலுள்ள பெரியோர்கள், அறிஞர்கள், ஆண்களும் சரி பெண்களும் சரி சிக்கன முறையில் தங்கள் குடும்பங்களில் எழும் நோய்களை நீக்கி வந்துள்ளனர். மக்களுக்கு குரு–மாணவ ரீதியில் பிணி நீக்கம் செய்து சேவை புரிந்து வந்துள்ளனர்.

### தனியான சிறப்பியல்புகள்

சித்த மருத்துவத்திற்கே உரித்தான சில சிறப்பான குணங்களையும் தன்மைகளையும் கூற விரும்புகிறேன். சித்த முறையில் கட்டு, களங்கு, சுண்ணம், பற்பம், செந்தூரம் போன்ற மருந்து வகைகள் மிகவும் சிறப்பானவை. மேலும் குளிகை மணி போன்ற காயகல்ப முறைகள் மற்ற எம்மருத்துவங்களிலும் காண்பதரிது. மூலிகைகளை உபயோகித்து பற்ப செந்தூரங்களை ஆக்குவதைவிட இலகுகளிலும் விரைவிலும் பற்ப செந்தூரங்கள் ஆக்குவதற்கு சித்தர்கள் பகை, நட்புப் பொருட்களை அறிந்து பஞ்சபூத இலக்கணங்களைக் கொண்டு உலோகங்களை மடிய வைத்தார்கள். பற்பங்கள் அணுப்பிரமாணமாக்க ஜெயநீர் திராவகங்கள் செய்துள்ளனர். மற்றும் ஒரே பற்பம் அல்லது செந்தூரத்தைக் கொண்டு வெவ்வேறு அநுபானத்தினால் பல்வேறு நோய்களைப் போக்க முடியும். சித்தர்கள் தாழ்ந்த உலோகங்களை, உயர்ந்த உலோகங்களாக்கவும் முயன்று சாதித்துள்ளனர். அம்முறைகளை மக்களுக்கு எளிதாகப் புரிந்து கொள்ளுமாறு ஏட்டில் எழுதாமல் மறைமுகமாகக் கூறியுள்ளனர். இம்முறை எல்லோராலும் கைவரப்பெற்றால் உலகில் அனர்த்தம் உண்டாகும் எனக் கருதியே பரமரகசியமான தக்க மாணவர்களுக்கு கூறிப் போந்தனர். எவ்வாறு உலோகங்களை உயர்ந்த உலோகங்களாக மாற்ற முடியுமோ, அவ்வாறே உடலையும் கற்பமாக்குவதற்கு வேண்டிய சாதனங்களைச் சொல்லிச் சென்றனர். சித்த மருத்துவத்திற்கே உரியதான மற்றொரு சிறப்பு நாடித் தேர்தல் முறையாகும். சித்தர்கள் நாடியின் இலக்கணம் கூறுகையில் “ ஆன்மாவின் சலனத்தை உணர்த்துவது நாடி என்பதாகும் ” எனக் கூறினர். நாடியைப் பற்றி எண்ணற்ற நூற்கள் உள்ளன. நாடியைக் கொண்டே நோயைக் கணிப்பது சித்த மருத்துவத்தில் முக்கியமானது. சித்த மருத்துவத்திற்கே உரியது.

முப்பு என்ற [பொருள்பற்றி சித்தர்களாலும், சித்த மருத்துவர்களாலும், சித்த நூற்களிலும் கூறப்பட்டுள்ளது. மற்ற மருத்துவ முறையில் இல்லாதது முப்பு ஆகும். சித்தர்கள் கூற்றில் “ முப்பு ” மூன்று வகைப்படும். அவை :—

1. யோகமுப்பு
2. வாத முப்பு
3. மருத்துவமுப்பு—ஆகும்.

யோக முப்பும்; வாத முப்பும் செய்வது கடினம்; மருத்துவமுப்புவை எளிதில் செய்து சித்த மருத்துவர்கள் கையாளுகின்றனர். இம்முப்பின் சிறப்பு என்னவென்றால் இதைக் கொண்டு செய்வித்த பற்ப செந்தூரங்கள், செய்கையிலும் வீரியத்திலும் தீவிரமடைகிறது.

தொகுத்து கூறுமிடத்து :—

1. காலத்தால் தொன்மை வாய்ந்தது, சித்த மருத்துவம்

2. சித்த மருத்துவம்தான் நம் நாட்டு வைத்திய மாகும். ஏனையவைகள் அந்நியர்களுடன் நம் நாட்டுக்கு வந்தவைகள் ஆகும்.

3. நவலோகம், நவமணி, நவபாஷணங்களைப் பற்ப செந்தூரங்களாக்கும் முறை சித்த மருத்துவத்திற்கே உரியது.

4. கையாளுவதில் எளிதானது ; விலையில் குறைந்தது ; நூற்றுக்கு நூறு பலனளிக்கக் கூடியது.

### தமிழக அரசின் அக்கறை

இம் மருத்துவம், மற்ற மருத்துவங்களைவிட நன்கு வளம் பெறுததற்கு, சித்த மருத்துவத்திற்கு மாநில மத்திய அரசின் ஏனைய மருத்துவங்களுக்கு ஒப்ப ஆதரவு போதிய அளவு இல்லை என்பதும், சித்த மருத்துவ நூல்கள் கடினமான தமிழில் இருப்பதும், பல பரம்பரைச் சித்த வைத்தியர்கூட, தம் பரம்பரையினரை நவீன மருத்துவக் கல்விக்கு அனுப்பி, சித்த வைத்தியத்தை புறக்கணித்ததும் காரணங்களாகும்.

புதிய தமிழக அரசின் அரவணைப்பினாலும் ஆதரவினாலும் சித்த மருத்துவம் நிலைநிமிர்ந்து நடைபோட துவங்கிவிட்டது. அதன் எடுத்துக் காட்டுகள்தான்—பாளையங்கோட்டையில் உள்ள தனி சித்த மருத்துவக் கல்லூரி (பட்ட படிப்புண்டு) தலைமைச் செயலகத்திலுள்ள சித்த மருந்தகம்—அரும்பாக்கத்தில் கட்டவிருக்கும் சித்தவைத்திய மருத்துவமனை—திருச்சி மாவட்ட மருத்துவமனையில் சித்தவைத்திய பகுதி—ஆக புதிய அரசின் ஆதரவோடு, மத்திய அரசின் துணையோடு சித்த மருத்துவம் சீர்படுத்தப்பட்டு புதிய பாதையில் தமிழகத்திற்கு ஒளி தந்து தமிழர்களுக்கு உடல், உள்ள வன்மையை அளிக்கப்போவது உறுதி.''

(வானொலிப் பேச்சு 10-4-68)

## "கிராமநலம்" விளம்பரக் கட்டண விவரம்

| | | அவ்வப்போது வெளியிடப்படும் விளம்பரங்களுக்கு. (1) ஒவ்வொரு இதழுக்கும். ரூ. | குத்தகையாக ஒரே இட அளவிற்கு (குறைந்தது 12 விளம்பரங்கள்). (2) ஒவ்வொரு இதழுக்கும். ரூ. |
|---|---|---|---|
| **இரண்டாவது, மூன்றாவது அட்டைப் பக்கங்கள் (ஒரே வண்ணத்தில்)** | | | |
| முழுப் பக்கம் | .. | 420 | 315 |
| அரைப் பக்கம் | .. | 215 | 165 |
| **நான்காவது அட்டைப் பக்கம் (இரண்டு வண்ணங்களில்)** | | | |
| முழுப் பக்கம் | .. | 450 | 335 |
| அரைப் பக்கம் | .. | 230 | 170 |
| **உள்பக்கம்—** | | | |
| முழுப் பக்கம் | .. | 400 | 300 |
| அரைப் பக்கம் | .. | 210 | 160 |







2

அமெரிக்காவில் தமிழக முதல்வர்

படம் 1. தமிழக முதலமைச்சர் திரு சி.என். அண்ணாதுரை அவர்கள், வாஷிங்டனிலுள்ள 'லிங்கன்' நினைவுக் கண்காட்சியைப் பார்வையிட்டார். வெளியுறவு அலுவலர் எச். ஈ. கிர்பி (H. E. Kirby) கண்காட்சியிலுள்ளவைகளை முதலமைச்சருக்கு விளக்கினார். படத்தில் முதலமைச்சரின் அந்தரங்கச் செயலாளர் திரு சே. சொக்கலிங்கம் அவர்களையும், காணலாம்.

லிங்கனின் முகத்தோற்றம் வைக்கப்பட்டுள்ள பகுதியை முதலமைச்சர் பார்வையிட்டார்.

படம் 2. நியூயார்க் நகரத்தில் ஐ. நா. சார்பில் முதலமைச்சர் அவர்களுக்கு அளிக்கப்பட்டவரவேற்பின்பொழுது முதலமைச்சர் இந்திய மாணவர்கள் அலுவலர்கள், ஆகியோருடன் உரையாடும் காட்சி.


3



படம் 3. முதல்வர் அவர்கள், 'யேல்'பல்கலைக் கழக "சப் ஃபெல்லோஷிப்" (CHUBB FELLOWSHIP). பட்டம் பெற, டிமோதி டுவைத் (Timothy Dwight College) கல்லூரியில் தங்கியிருந்த பொழுது, திருக்குறள் வகுப்பு நடத்தினார்.

படம் 4. ஐ. நா-விலுள்ள இந்திய தூதுவர், திரு ஜி. பார்த்தசாரதி முதலமைச்சர் அவர்களுக்கு ஐ. நா-விலுள்ள அமெரிக்க மற்றும் வெளிநாட்டு அதிகாரிகளை அறிமுகப்படுத்தினார்.

## தொகுப்பு வெளியீட்டு விழா







படம் 1. தமிழக அரசு-செய்தித் துறையின் செய்திப் படத் தயாரிப்பான "செய்தித் தொகுப்பு" வெளியீட்டு விழா 4-5-1968 அன்று, சென்னை பாலர் அரங்கில் நடைபெற்ற பொழுது, முதலமைச்சர் மனைவி திருமதி ராணி அம்மையார், மற்றும் அமைச்சர்களின் குடும்பத்தினர், செய்தித் தொகுப்பைக் காண வந்திருந்தவர். விழாவைத் தொடங்கி வைத்து, மாண்புமிகு கல்வியமைச்சர் உரை நிகழ்த்துகிறார்.

படம் 2. செய்தித் தொகுப்பு விழாவில், தமிழக அரசு சார்பில், தலைமைச் செயலாளர் திரு சி. ஏ. இராமகிருஷ்ணன், ஐ. சி. எஸ்., அனைவரையும் வரவேற்கிறார்.

படம் 3. மாண்புமிகு சுகாதார அமைச்சர் திரு சாதிக் பாட்சா அவர்களை, ஐக்கிய நாடுகள் குழந்தைகள் நல பாதுகாப்பு நிறுவனத்தின் தென் மத்திய ஆசியப் பகுதி இயக்குநர் திரு கார்டன் கார்டர் (Gordon Carter) ஏப்ரல் 30-ம் தேதியன்று சந்தித்துப் பேசினார்.

படம் 4. (ஜூன் மாதத்தில் சென்னையில் சமுதாய வளர்ச்சித் துறை கூட்டுறவுப் பணிகளின் எதிர்காலம் பற்றி ஆராயக் கூடும் மாநாட்டில், மத்திய உணவு அமைச்சர் கலந்து கொள்கிறார்.)

மத்திய உணவு அமைச்சர் சென்ற [illegible] சென்னை வந்த போது மாண்புமிகு தமிழக உணவு அமை[illegible] அவரை வரவேற்கிறார். அருகில் நிற்பது, நாடாளுமன்ற [illegible] உறுப்பினர், நாஞ்சில் கி மனோகரன்.









படம் 1. வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு, 12-5-68-ல், தாயகம் திரும்பிய தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு, சென்னை விமான நிலையத்தில் மாபெரும் வரவேற்பு.

படம் 2. விமான நிலையத்திலிருந்து முதலமைச்சர் அவர்கள் ஊர்வலம்.

படம் 3. தமிழக நகராட்சித் தலைவர்கள், ஆணையாளர்கள், கூட்டு மாநாடு, சென்னை பாலர் அரங்கில். மே 11, 12 நாட்களில் நடைபெற்றபொழுது, தமிழக அமைச்சர்கள் கலந்து கொண்டார்கள்.

படம் 4. ஆண்டு தோறும் நடைபெறும் சிறந்த கிராம சேவக் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு, புதுடெல்லியில் ஏப்ரல் 3-ம் நாளன்று, மத்திய அரசு உணவு-வேளாண்மை சமுதாய நலத் திட்டம் கூட்டுறவுத் துறை ராஜாங்க அமைச்சர் திரு எம். எஸ். குருபாத சுவாமி பரிசுகள் வழங்கினார்.




ஆளுநர் மாளிகையிலே....

படம் 1. தமிழக முன்னாள் முதலமைச்சர்கள் உருவப் படங்கள். மேதகு ஆளுநர் திரு உஜ்ஜால்சிங், தமது அலுவலக அறையில் திருக்குறள் படிக்கிறார்.

படம் 2. நூல்களைப் படிப்பதில் ஆர்வம் கொண்ட திருமதி சாந்த்சேல் உஜ்ஜால்சிங்.

படம் 3 ஆளுநரின் மெய்க் காவலர் திரு கே. கே. வி. சிங்.

படம் 4. கலைச் செல்வங்களைப் பேணிப் பாதுகாக்கும் திருமதி சர்தாரிணி.

படம் 5. ஆளுநரின் அந்தரங்கச் செயலாளர் திரு கே. வி. சுப்பிரமணியம், மெய்க் காவலர் திரு பெருமாள்சாமி.

படம் 6. ஆளுநரின் செயலக அலுவலர்கள்.

படம் 7. ஆளுநரின் அலுவலகம், மாளிகை பொறுப்பாளர்கள்.



# ஆளுநர் மாளிகையிலே....

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்கு
இறையென்று வைக்கப் படும்"
—திருக்குறள்

"அரசியல் அமைப்பு முறைப்படி குடிமக்களைக் காப்பாற்றும் ஆட்சித்தலைவன் மக்களின் பாதுகாவலன் எனப் பெரிதும் கருதி மதிக்கப்படுவான்" என்று இறைமாட்சியின் பெருமையை எடுத்துரைக்கிறார் திருவள்ளுவர், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே.

குடியாட்சிமுறை குவலயம் முழுவதும் கோலோச்சி வருவதையே அறிஞர் உலகு விரும்புகிறது. மக்களாட்சி முறையே மன்பதைக்கு நலம் பயக்கும் என்பதை நாமறிவோம்,

### நயத்தக்க நாகரிகம்

'அறனிழுக்கா தல்லவை நீக்கி' குடியோம்பும் ஆட்சியமைப்பு நம்நாட்டில் நம்மாலே உருவாக்கப்பட்டது 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்ற உரிமையையும், பெருமையையும் நாம் பெற்றுள்ளோம். நம்மை ஆளும் தலைமையும், வள்ளுவர் வாய்மொழிக்கேற்ப, அமைந்துள்ளது.

மக்களாட்சி வேரூன்றி தழைத்திருப்பது, நயத்தக்க நாகரிகமாகும்,

நாகரிகம் என்பதற்கு இலக்கணம் வகுக்கும் வகையில் சர்ச்சில் அவர்கள் சொன்ன கருத்துக்கள் உலகப் புகழ் பெற்றவை யாகும். அவர் சொன்னார்:

"நாகரிகம் என்பது, ஆட்சி அலுவலர் கருத்துப்படி உருவாகும் சமுதாயமே ஆகும். அதாவது யுத்த வெறிகொண்ட ராணுவத் தலைவர்களின் பாசறைகளும் போர்முறைகளும் நீங்கி, கலகமும் தனியார் ஆட்சிக் கொடுமையும் ஒழிந்து, பாராளுமன்ற ஆட்சி ஏற்பட்டு, மக்களின் நல்வாழ்வுக்கான சட்டங்கள் உருவாகி, அவற்றை நிறைவேற்றும் பொறுப்பும் உரிமையும் பெற்ற நீதிமன்றங்கள் நிறுவப்பட்டு, பல்லாண்டுகளாக இந்த ஆட்சிமுறை தொடர்ந்து நடைபெற வழி காணப்பட்டுள்ளது,"

ஆம், உலக வரலாற்றிலேயே இந்த அடிப்படையான கருத்தை மையமாகக் கொண்ட பல்வேறு புரட்சிகளும் ஆக்கத் திட்டங்களும் உருவாகி செயல்பட்டு வருதை ஆழ்ந்து சிந்திக்கும் அனைவரும் நன்கு உணரலாம்.

இப்படித்தான் சுதந்திர இந்தியாவின் அரசியலமைப்புச் சட்டம் மக்களாட்சி முறைக்கு வழிவகுத்துள்ளது. நம் அரசியலமைப்புச் சட்டத்தின்படி ஒவ்

மக்களாட்சி என்ற மாளிகையின் பெருந் தூண்களாக அணி செய்பவை, ஆட்சி அமைப்பு, சட்டப் பேரவை, நீதி மன்றம், பத்திரிகைகள் ஆகியவை என்பர். "இந் நான்கின் மாட்சி, உயர்வு, உரிமை, செயல் திறமை ஆகிய தனிப் பண்புகளை யொட்டியே, மக்களாட்சியின் வெற்றி உருப்பெறும்" என்பது, உலகப் பேரறிஞர்கள் அனைவரும் ஒப்புக் கொண்டுள்ள கருத்து.

எனவே, தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில், இவற்றைப்பற்றிய கருத்தோவியங்களை, தொடர்ச்சியாக வடித்துக் கொடுக்க எண்ணியுள்ளோம். இவற்றுள், நிர்வாக அமைப்பின் தலைமையில் விளங்கும் மேதகு ஆளுநரைப் பற்றிய "பேட்டி" ஒன்றை, இங்கே வெளியிடுகிறோம்.

'கவர்னர்' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு "ஆளுநர்" என்ற அழகியச் சொல்லை உருவாக்கி, உலவ விட்ட பெருமை மாண்புமிகு நம் முதலமைச்சர் அவர்களையே சாரும் என்பதை வாசகர்களுக்கு நினைவூட்டுகிறோம்.

—ஆசிரியர்.

வோரு மாநிலமும் ஆளுநர் ஒருவரின் பொறுப்பில் இயங்க வகை செய்யப்பட்டுள்ளது.

நம் நாட்டில் மக்களாட்சி முறையானது திருவள்ளுவர் சொன்ன 'முறை செய்து காப்பாற்றும் இறைமாட்சி' புத்துருவம் பெற்று புதுப்பொலிவுடன் காட்சியளிப்பதாக உள்ளது.

பாரதத்தின் மாநிலம் ஒவ்வொன்றும் ஆளுநர் ஒருவர் தலைமையில் ஆட்சி நடைபெற வழிவகுக்கப் பட்டுள்ளது. சுதந்திர இந்தியாவில் ஆளுநர்கள் மாநிலங்களின் பொறுப்புகளை ஏற்று ஆட்சி செலுத்துகின்றனர்.

மக்கள் கருத்தை உணருவதற்கேற்ற வகையில் குறித்த காலத்திற்கு ஒருமுறை பொதுத் தேர்தல்கள் நடைபெறுகின்றன. தேர்தல்களில் வெற்றிப் பெற்றவர்கள், சட்டமன்றங்களிலும் நாடாளுமன்றங்களிலும் பொறுப்பேற்கின்றனர். அங்கே பெரும்பான்மையாக உள்ள உறுப்பினர்கள் சார்பில் அமைச்சரவை அமைகிறது.

இந்த அடிப்படையான கருத்துக்கணாங்க, தமிழக அரசின் அமைச்சரவையும், தலைமைச் செயலகமும் அதன் ஆட்சிக்கும் உட்பட்ட எல்லா அலுவலகங்களும் இயங்கி வருவதை அனைவரும் அறிவர்.

### நிலையான மக்களாட்சியின் இலக்கணம்

நிலையான ஆட்சி முறையின் அறிகுறியாக மாநில ஆட்சியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுள்ளவர் தான் மேதகு ஆளுநர் (His Excellency the Governor) என அழைக்கப்படுகிறார், பாரத குடியரசுத் தலைவர் அரசியலமைப்புச் சட்டத்தின்படி ஆளுநரை நியமிக்கிறார். ஆளுநரின் பதவிக்காலம் ஐந்து ஆண்டுகளாகும். இவை பற்றிய விவரங்களை அரசியலமைப்புச் சட்டத்தின் பிரிவுகள் 153-லிருந்து 164-வரை, மற்றும் 166, 167 ஆகியவற்றிலும் விரிவாகக் காணலாம்.

அரசாங்க ஆணைகள் அனைத்தும் ஆளுநர் பெயராலேயே வெளியாவது வழக்கம். ஆனாலும் அரசாங்க ஆணைகளை உருவாக்கும் பொறுப்பு முழுதும் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சட்டப் பேரவை உறுப்பினர்களின் நம்பிக்கையைப் பெற்றுள்ள அமைச்சரவையையே சாரும்.

தமிழகத்தின் இன்றைய ஆளுநர் மேதகு சர்தார் உஜ்ஜல்சிங் அவர்கள், சென்னை மாநகரத்தைச் சார்ந்துள்ள, கிண்டியில் எழிலுற அமைந்துள்ள சீரும் சிறப்பும் மிகுந்த மாளிகையில், இருந்து வருகிறார். (கோடைக் காலத்தில் மட்டும் உதகையிலுள்ள மாளிகைக்குச் செல்வதுண்டு.)

ஏறத்தாழ ஆயிரம் ஏக்கர் நிலப்பரப்புள்ள அழகிய முல்லை நிலத்தில், ஆளுநர் மாளிகை எழில் தோற்றமளிக்கிறது. "ராஜ்பவன்" என்றழைக்கப்படும் ஆளுநர் மாளிகையின் கட்டிடங்கள் 1830 முதல் 1840 முடிய கட்டப்பட்டு அவ்வப்போது மாறுதல் செய்யப் பட்டும் விரிவாக்கப்பட்டவையுமாகும்.

## மேதகு தமிழக ஆளுநர்— வாழ்க்கைக் குறிப்புகள்

நமது மாநில ஆளுநர் மேதகு உஜ்ஜல் சிங் அவர்களை பற்றிய சில குறிப்புகள்:

மேதகு சர்தார் உஜ்ஜல் சிங் பஞ்சாப் மாநிலத்தில் 1895-ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 27-ம் நாள் பிறந்தார். எம். ஏ. பட்டம் பெற்றுள்ள இவர் படித்தது லாகூர் அரசினர் கல்லூரியில்.

கல்லூரிப் படிப்பு முடிந்தவுடன் வேளாண்மையில் விருப்பத்துடன் ஈடுபட்டவர் உஜ்ஜல் சிங். இவர் பஞ்சாப் மாநிலத்தில் சட்டப்பேரவை உறுப்பினராக, 1926 முதல் 1956 முடிய தொடர்ந்து இருந்திருக்கிறார். பாராளுமன்ற உள்துறைச் செயலாளராக 1937 முதல் 1942 வரை பணியாற்றியிருக்கிறார். 1942-ல் நடைபெற்ற பாரதநாட்டு விடுதலைப் போராட்டத்தின் போது இவர் தம் பதவியை ராஜினமா செய்தார்.

லண்டனில் நடைபெற்ற முதல், இரண்டாவது, வட்டமேஜை மாநாடுகளில் கலந்து கொண்டிருக்கிறார். 1930—31 ஆண்டுகளில் தம் துணைவியாருடன் ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப்பயணம் செய்திருக்கிறார். ஐ.நா. அமைப்புச் சார்பில் 1945-ல் கனடாவிலுள்ள கியூபெக்கில் நடைபெற்ற உணவு வேளாண்மை மாநாட்டில் பிரதிநிதியாக பங்கேற்றார். அவ்வாண்டில் அமெரிக்க நாட்டில் சுற்றுப்பயணம் செய்தார்.

இந்திய மத்திய கல்வி ஆலோசனைக் கழகத்திலும், அனைத்திந்திய தொழில் நுட்ப கல்விக் குழுவிலும் உறுப்பினராக 1945 முதல் 1949 முடிய இருந்திருக்கிறார்.

1946-ல் அமைக்கப்பட்ட இந்தியச் சட்ட மன்றத்தின் உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட இவர் கிழக்கு பஞ்சாப் அரசாங்கத்தில் தொழில் உணவுப் பொருள்கள் வழங்கும் துறையின் அமைச்சராக, 1949-ல் இருந்தார். 1952 முதல் 1956 வரை தொழில், நிதியமைச்சராக இருந்துள்ளார்.

இரண்டாவது நிதிக்குழுவில் உறுப்பினராக இருந்த இவர், அமிர்தசரஸ் கல்ஸா கல்லூரியின் (Amritsar Khalsa College) நிர்வாகக் குழுவில் 30 ஆண்டுகளாக இருந்து வருகிறார். இப்பொழுது கல்லூரியின் தலைவரும் இவர்தான்.

1965 செப்டம்பர் முதல் நாளிலிருந்து 1966 ஜூன் 27 வரை, பஞ்சாப் மாநிலத்தின் ஆளுநராக இருந்துள்ளார்.

இப்படி எத்தனை எத்தனையோ பொறுப்புகளை நம் ஆளுநர் ஏற்றுள்ளார். சுருக்கமாகச் சொன்னால், நமது தலைமுறையின் தேசியத் தலைவர்களில் ஒருவர், மேதகு சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள்.

தமிழகத்தின் தற்காலிக ஆளுநராக 1966 ஜூன் 28-ம் நாளன்று பொறுப்பேற்றுக் கொண்டார்.

1967 ஜூன் 16-ம் நாள், நிரந்தர ஆளுநராகப் பதவியேற்றார்.

ஆளுநர் மாளிகையைச் சுற்றியுள்ள செடிகொடிகள் அடர்ந்த சிறுவனம், தேசியப் பூங்காவாக விளங்குகிறது. இதன் கிழக்குப் புறத்தில்தான் நாட்டின் தந்தை அண்ணல் காந்தியடிகளின் நினைவு மண்டபம் அமைந்துள்ளது.

துள்ளித்திரியும் புள்ளிமான்கள், கலைமான்கள், புள்ளினங்கள், நானாவிதமான பறவைகள் முதலியன ஆளுநர் மாளிகை வனத்தில் காணப்படுகின்றன. இயற்கை எழிலும் செயற்கைத் தோற்றமும் பொலிவுற அமைந்த இம் மாளிகையில்தான், நமது ஆளுநர் அவர்களும் அவரது துணைவியாரும் வாழ்ந்து வருகின்றனர்,

தமிழகப் பண்பாட்டின் நிலைக்களனாய் மாநிலத் தலைமையின் உறைவிடமாய் விளங்கும் இம்மாளிகையில், தமிழக அரசின் சார்பில் நடைபெறும் பல்வேறு முக்கிய விழாக்களும் நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. தமிழகத்துக்கு வருகைதரும் முக்கிய விருந்தினர்கள் இங்கே தங்க அரசாங்கத்தின் சார்பில் ஏற்பாடாகும்.

* * * *

ஆளுநர் மாளிகையிலே ஆளுநரைச் சந்திக்க நாம் இப்பொழுது கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை செயலாளர் திரு டி. ஏ. எஸ். பாலகிருஷ்ணன் ஐ. ஏ. எஸ். தலைமையில் செல்கிறோம்.

நாம் பார்க்கப் போகும் நாளான இன்று (26—4—1968) நம் வாழ்வில் மகிழ்ச்சியான நாள்.

'ராஜ்பவன்' எனப்படும் ஆளுநர் மாளிகைக்குச் செல்கிறோம்.

ஆளுநர் மாளிகை வாயிலிலே கம்பீரத் தோற்றத்துடன் தோற்றமளிக்கும் காவலரைக் காணலாம்.

முன் அனுமதிப் பெற்று அங்குப் போவோருக்கு தடையேதுமில்லை. ஆகவே, நமக்கு அன்பான வரவேற்பு கிடைக்கிறது. ஆளுநரின் மெய்க்காவலர் அறை, அங்கு வருவோரை வரவேற்கும் கூடமாக அமைந்துள்ளது.

### கவின்கலையழகு கொஞ்சிட....

கண்ணையும் கருத்தையும் ஈர்க்கும் பல்வேறு நூல்களும் பத்திரிகைகளும் நிரம்பிய அந்த அழகிய அறையில் தமிழகத்தின் அண்மைக்கால வரலாறு புன்னகைப் பூக்குகிறது. ஆம், அந்த அறையில் காட்சி அளிக்கும் முன்னாள் முதலமைச்சர்கள் அனைவரும், நம்மைக் கண்டு வாழ்த்து கூறுகின்றனர்.

1946 முதல் முதலமைச்சர் பொறுப்பில் வீற்றிருந்த திருவாளர்கள் பிரகாசம், ராமசாமி ரெட்டியார், குமாரசாமி ராஜா, ராஜாஜி, காமராஜ், பக்தவத்சலம் ஆகியோரின் உருவப்படங்கள் அங்கே வரிசையாக அமைந்துள்ளன.

ஆளுநரின் அந்தரங்கச் செயலாளர் திரு. கே. வி. சுப்பிரமணியம் நம்மை அழைத்துச் செல்கிறார். கேப்டன் கே. கே. வி. சிங், திரு பெருமாள்சாமி ஆகிய இருவரும் ஆளுநரின் மெய்காப்பாளர் ஆவர். அவர்களும் உடன் வர, மாளிகையின் மற்றொரு பெரிய கூடத்திற்கு நாம் செல்கிறோம். பழைய ஆங்கில பாணியில் கட்டப்பட்ட மாளிகை இது என்பதை மாளிகையின் ஒவ்வொரு பகுதியும் நமக்கு நினைவூட்டுகிறது.

அங்கே உள்ள அறைகள், கூடங்கள், மாடங்கள், சாளரங்கள், தூண்கள், படிகள், தோட்டவெளிகள், திரைச் சீலைகள் முதலிய அனைத்திலும் ஓர் அலாதியான எழிலும் ஏற்றமும் கைகோர்த்து களிநடம் புரிவதைக் காண்கின்றோம்.

கண்ணில் தோன்றும் காட்சி எல்லாம் கவின்கலையழகு கொஞ்சும் காட்சிகளாக உள்ளன. நேரம் நீள்வதை மறந்து—திகைத்து நின்று அங்கே உள்ள சித்திரங்களையும் சிற்பங்களையும் கண்ணுக்கு விருந்தாக்கிக்கொண்டிருக்கிறோம்.

*அப்பொழுது—*

மேதகு ஆளுநர் அவர்கள் வெண்தாடி தவழும் முகத்தினராய், தமக்கே உரிய ஏறு நடையினராய்—பணிவு நிறைந்த இன்முகப் பொலிவுடன், ஒளி படைத்த கம்பீரத்தோடு வருகிறார்.

இன்சொலால்தான் இவ்வுலகம் மகிழும் என்பதற்கு இலக்கியமாய் நின்று, நமது நலன் விசாரிக்கிறார். பின்னர், அமைதியாக பண்புநிறைந்த சான்றாண்மையோடு தமது கருத்துகளை நம்முடன் பரிமாறிக் கொள்கிறார்.

ஆளுநரின் பேச்சு ஒவ்வொன்றும் அவருக்கு வேளாண்மைத்தொழிலிலுள்ள ஈடுபாட்டை எடுத்து விளக்குகின்றது. ஆமாம். விவசாயத்தில் அவருக்குள்ள தனிப்பயிற்சியும் ஆர்வமும் அவருடைய கருத்துகளுக்கு உரமூட்டுவதை சிறிது நேரத்திலேயே உணருகிறோம்.

ஆளுநரின் கருத்துகளிலுள்ள சிந்தனைத் தெளிவும், செயல் திட்டமும் பயனுள்ள அறிவுரைகளும் நமக்குப் புத்துணர்ச்சியை அளிக்கின்றன. பேருவகையுடன் அவைகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறோம். அப்பொழுது அங்கு வந்த ஆளுநரின் துணைவியார், திருமதி சாந்த் சேவ் உஜ்ஜல்சிங் அவர்களும் நம்முடைய உரையாடலில் கலந்துகொள்கிறார்.

## தமிழகத்தின் தனிப்பெரும் சாதனை

ஆளுநர் அவர்கள் மிகுந்த மகிழ்ச்சியோடு சொல்கிறார்:

"தமிழகத்தின் மின் வளர்ச்சியும் குழாய்க் கிணறுத் திட்டங்களும் பாராட்டுக்குரியனவாகும். இவை தமிழகத்தின் தனிப்பெரும் சாதனையாகும். எல்லா மாநிலங்களைவிட தமிழகம் மின் வளர்ச்சியிலும் குழாய்க் கிணறுத் திட்டத்திலும் முன்னணியில் நிற்கிறது."

மேலும் தொடர்ந்து பேசுகையில் நாட்டில் உள்ள மின் தொடர்பு கொடுப்பட்ட குழாய்க் கிணறுகளின் மொத்த எண்ணிக்கையில், பாதிக்குமேல் தமிழ்நாட்டிலேயே உள்ளது பெருமைக்குரியதாகும்".

நாமும் பூரிப்போடு கேட்டுக்கொண்டிருக்கிறோம். அதே நேரத்தில் ஆளுநர் வேறொன்றையும் சுட்டிக் காட்டுகிறார்.

## கால்நடை வளர்ப்பில் கவனம்

தமிழகத்திலுள்ள கால்நடைகள் பெரும்பாலும் செழிப்புள்ளதாக இல்லை என்பதை எடுத்துரைக்கும் ஆளுநர், அதன் காரணத்தையும் விளக்கினார்.

"தமிழக உழவர்கள் கால்நடையில் போதிய கவனம் செலுத்துவதில்லை. தீவனங்களைச் சரிவர பயன்படுத்துவதில்லை என்றுகூட அஞ்சுகிறேன்" என்றார்.

"பஞ்சாபில் சிறுசிறு விவசாயிகள்கூடநான்கைந்து கறவை மாடுகள் வைத்திருக்கின்றனர். அவைகளுக்கு நல்ல தரமான தீவனங்களை அளிக்க பெரும் முயற்சி எடுத்துக்கொள்கின்றனர். இதனால் விவசாயிகளுக்கு நிறைய பால் கிடைக்கிறது. ஆனால் தமிழகத்தில் கால் நடைகளுக்குப் போதிய கவனம் செலுத்தப்படுவதில்லை. ஆகவே பால் உற்பத்தியும் மனநிறைவு அளிப்பதாக இல்லை" என்கிறார் ஆளுநர்.

"அதிகம் பால் தரும் முர்ரா எருமை இனம்கூட, குறைவாகவே பால் தருவதாக கேள்விப்படுகிறேன். ஆகவே சத்துள்ள தீவனங்களை கால்நடைகளுக்கு அளிக்க தமிழக விவசாயப் பெருங்குடி மக்கள் முன்வரவேண்டும்" என்ற ஆளுநரின் அறிவுரை ஆக்கப் பணிக்கு நம்மைத் தூண்டுகிறது.

இந்தச் சமயத்தில் ஆளுநர் அவர்களின் துணைவியார் அவர்கள் தமது அனுபவத்தைக் குறிப்பிட்டார்.

"திருமதி ஜெயம்மாள் என்ற ஒருவர் இல்லத்திற்குச் சென்றிருந்தபொழுது அவர் வைத்திருந்த பசுக்கள் நிறைய பால் கொடுப்பதைக் கண்டேன். கால் நடைகளுக்குத் தரமான தீவனம் கொடுத்து தக்கவகையில் பேணிக் காப்பாற்றுவதே, நல்ல அளவு பால் கிடைக்க வகை செய்யும்.

"பொதுவாக தமிழ் மக்கள் அனைவரும் கால் நடைகளுக்கு நல்ல தீவனம் அளிப்பதில்லை என்று குறைபாடாக கருதவேண்டியதில்லை. தனிப்பட்டவர்கள் சிலர் நல்ல முறையில் கால்நடைகளைப் பேணுகிறார்கள். தாய்மார்கள், இதில் நன்கு கவனம் செலுத்தலாம்."

சர்தாரிணியின் இக்கருத்தை தமிழகத்தாய்க்குலம் வரவேற்று செயல்திட்டத்துடன் நிறைவேற்றும் என்று நம்புவோம்.

### ஓராண்டுத் திட்டம்—

### உள்ளாட்சி அமைச்சரின் காணிக்கை

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை அவர்களின் பிறந்த நாளான செப்டம்பர் 15-ம் நாளன்று உள்ளாட்சித் துறை காணிக்கையாக அறிவித்த ஓராண்டுச் சாதனையாக உருவாக்கிய திட்டங்களின் விவரங்களை, மேதகு ஆளுநரிடம், கிராம நல உள்ளாட்சித்துறைச் செயலாளர் திரு டி. ஏ. எஸ். பாலகிருஷ்ணன், ஐ. ஏ. எஸ். எடுத்துரைக்கிறார். அகமும் முகமும் மலர, ஆளுநர் அவைகளைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

சிறு சிறு விவசாயிகள் பெறவிருக்கும் நன்மைகளை நம் கண்முன்னே ஆளுநரே கொண்டு வந்து நிறுத்துகிறார். "இதுபோன்ற திட்டங்களால் சமுதாயம் முழுவதற்கும் பெரிய நன்மையை உருவாக்க வேண்டும்" என்கிறார்.

[37-ம் பக்கம் பார்க்க.]



# கிராம நூலகம்

திரு அ. திருமலை முத்துசுவாமி, சென்னை பல்கலைக் கழகம்.

["எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்" என்பது தமிழ் முதுரை. கிராமங்கள் நிறைந்த நமது நாட்டில் படிப்பறியாத கிராம மக்களுக்கு கல்விச் செல்வத்தை அளிக்கும் பணி, சமூகப் பணிகளில் எல்லாம் மகுடம் போன்றதாகும். "கிராமத்திற்கு இது இல்லை—அது இல்லை என்றில்லாமல்—இல்லாதது எதுவும் இல்லை என்று சொல்லத்தக்க அளவில் நகரத்தில் உள்ள வசதிகளையெல்லாம் கிராமங்களுக்குச் செய்ய வேண்டும்" என்பது மாண்புமிகு தமிழக முதலமைச்சரின் வேண்டுகோள். கிராம மக்களின் அறிவு விளக்கைத் தூண்டி, ஏற்றம் காணுகின்ற திருப்பணியைச் செய்யக்கூடியவை கிராம நூலகங்கள்—இந்தக் கருத்தினை தெள்ளு தமிழில் எடுத்து விளக்குகிறது இக் கட்டுரை—ஆசிரியர்.]

கிராம மக்களது சீரிய வாழ்விற்கு, சிறந்த நிலைக்கு, வாழ்வாங்கு வாழும் நெறிக்கு, வாழ்க்கை வளத்திற்கு வழிவகுப்பன கிராம நூலகங்கள் என்பதை அனைவரும் அறிவோம். எனவே, ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு நூலகம் அமைக்க வேண்டியது, நமது தலையாயக் கடமைகளில் ஒன்றாகும்.

### தவறான கருத்து

கிராம மக்களில் பெரும்பாலோர் கல்வி அறிவில்லாதவர்களாக உள்ளனர். ஒரு சிலர் ஓரளவு கல்வி அறிவுடையவர்களாக விளங்குகின்றனர். மற்றும் சிலர் கல்வி கற்க இப்பொழுது தொடங்கியுள்ளனர். இந்நிலையில் இருக்கும் கிராம மக்கள், எவ்வாறு நூல்களைப் படிக்க இயலும் என்று ஒரு சிலர் எண்ணலாம். அவ்வாறே நூலகங்கள் கற்றவர்களுக்காகத்தான் இயங்கி வருகின்றன என்று நம்மில் பலர் நினைக்கலாம். அது தவறான முடிவாகும். கல்வி அறிவில்லாத காரணத்தால் கலங்கித் தவிக்கும் மக்களுக்கு அக் கல்வி அறிவினை அள்ளி அள்ளி வழங்கும் தகுதியினை நூலகங்களே கொண்டுள்ளன. கல்வி அறிவில்லாத மக்களுக்கு அதனை வழங்கி, அவர்களைக் கலையுணர்வுடையவர்களாக, கற்றறிந்தவர்களாக ஆக்கவேண்டிய பொறுப்பு இன்று நூலகங்களைச் சார்ந்ததாகும். அது இன்றையச் சூழ் நிலையில் நூலகங்களின் தலையாய பணிகளில் ஒன்றாகக் கூட விளங்குகின்றது என்று கூறினும் மிகையாகாது. பொதுமக்களிடையே, கல்வி அறிவை பரப்புவதற்குரிய சிறந்த சாதனமாக இன்று நூலகம் கருதப்படுகின்றது. சிறப்பாக, கிராமங்களில் வாழும் மக்களை மாண்புடைய மக்களாக ஆக்கும் கல்வி அறிவைப் பரப்புவதற்குரிய சிறந்த சாதனமாக இன்று நூலகம் கருதப்படுகிறது. சிறப்பாக, கிராமங்களில் வாழும் மக்களை மாண்புடைய மக்களாக ஆக்கும் கல்வி நெறியை வளர்ப்பதற்கு கிராம நூலகங்கள் பெரிதும் துணை செய்யும்.

### இரண்டு முடிவுகள் :

இன்று நம் நாட்டில் பல கிராம நூலகங்கள் ஏற்கெனவே அறிவுப் பணியில் ஈடுபட்டுள்ளன, இன்னும் பல நூலகங்களை நாம் அமைக்க இருக்கின்றோம். கிராம நூலகங்களை மக்கள் நன்கு பயன்படுத்தி, நன்மைகள் பலவற்றைப் பெறவேண்டும் எனின், பின்வரும் இரண்டு பொருட்களைப் பற்றி நாம் நன்கு சிந்தித்து நல்லதொரு முடிவிற்கு வரவேண்டும். ஒன்று, கிராம நூலகங்களுக்கு வாங்கவேண்டிய நூல்கள் எத்தகையனவாக இருக்கவேண்டும் என்பது பற்றி ஆராய்ந்து ஒரு முடிவிற்கு வருதல் ஆகும். மற்றொன்று, கிராம நூலகங்களை மக்களுக்குப் பயனுள்ளவையாக ஆக்கும் பணியில் ஈடுபடக்கூடிய ஆற்றலும், அறிவும் அனுபவமும் உடைய, அதாவது தக்காரை நூலகர்களாக அந்நூலகங்களுக்கு நியமிப்பது பற்றி ஒரு முடிவினை எடுத்தல் ஆகும்.

கிராம மக்களில் பெரும்பாலோர் கல்வி அறிவில்லாதவர்களாக விளங்குகின்றனர் என்பதை நாம் முன்னர் கண்டோம். எனவே அவர்களுக்காக திறக்கப்படும் கிராம நூலகங்களில் எளிய நடையில் எழுதப்பெற்றதும், விளக்கப் படங்களுடன் கூடியதும், தடித்த எழுத்துக்களில் அச்சிடப் பெற்றதும் ஆகிய நூல்களே முதலிடம் பெறுதல் வேண்டும். படவிளக்கங்கள், அவர்களது கண்ணையும், கருத்தையும் ஈர்ப்பனவாக இருத்தல் வேண்டும். நூலில் அச்சிடப் பெற்றிருக்கும் எழுத்துக்கள் பெரியவையாக, அதாவது தடித்தவையாக விளங்கின், அவர்கள் சிரமம் எதுவும் இன்றி எளிதாக நூலைப் படிக்க இயலும். அடுத்து அவர்களுக்கு விருப்பமான பொருள்கள், அவர்கள் அவசியம் தெரிந்து கொள்ளவேண்டிய பொருள்கள், அவர்களது வாழ்க்கை வளத்திற்கு, நல்வாழ்விற்கு வழிகாட்டும் பொருள்கள் ஆகியவை பற்றிய நல்ல நூல்களைச் சேகரிப்பதில் கிராம நூலகங்களை அமைப்பவர்கள் கண்ணும் கருத்துமாக

இருக்கவேண்டும். அத்தகைய நூல்களைத்தான் அவர்கள் ஆர்வத்துடன் படிப்பர்; மேலும் அந்நூல்கள் தாம் அவர்களது படிக்கும் ஆர்வத்தினைத் தூண்டிக்கொண்டே இருக்கும்.




கிராம மக்களுக்கு அன்றாடச் செய்திகளை அறிவதில், நாட்டு நடப்புகளைப் புரிந்து கொள்வதில, உலகத்தில் நடப்பவற்றைத் தெரிந்து கொள்வதில் விருப்பம் இருக்கலாம். அத்தகையவர்களுக்கும், ஏனைய மக்களுக்கும் செய்திகளை அறிவிக்கும் செய்திப் பலகையினை ஒவ்வொரு நூலகமும் கொண்டிருக்கவேண்டும். முக்கிய செய்திகளை அன்றாடம் நல்ல, நல்ல தாளில் கண்ணைக் கவரும் வண்ணம் எழுதி, அதனை மக்கள் கண்களில் படும்படி செய்தி அறிவிப்புப் பலகையில் ஒட்டி வைக்கவேண்டும். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்குத் திட்டப் பெறுகின்ற திட்டங்களைப் பற்றி, கிராம மக்கள் நன்கு அறிந்து கொள்ளுதற்பொருட்டு, அத்திட்டங்களின் இயல்பையும் சிறப்பையும், அவை வெற்றி பெற்றால் நாம் அடையும் நன்மைகளையும், அவற்றால் நாட்டிற்குக் கிட்டும் பயன்களையும் விளக்குகின்ற காட்சிப் படங்களை அழகுற கிராம நூலகங்கள் தயாரித்து வைக்கவேண்டும். மக்களுக்கு அவற்றைக் காட்டுவதோடு, அவை பற்றிய விளக்கங்கள் அனைத்தையும், நூலகர் மக்களுக்கு எடுத்துக் கூற வேண்டும். விண்ணை முட்டி நிற்கும் மாமலைகள், நீர் வளம் சுரக்கும் பெரிய ஆறுகள், இயற்கை எழிலுடன் விளங்கும் காடுகள் ஆகியவை தரும் இயற்கைக் காட்சிகளை எழில் ஓவியங்களாகத் தீட்டி வைக்கலாம். அல்லது அவற்றைச் சித்திரிக்கும் ஒளி நிழற் படங்களை வாங்கி வைக்கலாம். இவற்றின் மூலம், மலை வளத்தை, ஆற்றின் சிறப்பை, இயற்கையின் எழில் கோலத்தை அவர்கள் நன்கு தெரிந்து கொள்ள முடிகின்றது. விஞ்ஞான கண்டு பிடிப்புக்களையும் இவ்வாறு அவர்களுக்கு அறிமுகம் செய்து வைக்கலாம். அணைக்கட்டு, மின்சார நிலையம், போன்றவற்றின் ஒளி நிழற் படங்களையும் மக்கள் பார்வைக்கு வைக்கலாம். விலங்குகள், பறவைகள் ஆகியவற்றின் வண்ணப் படங்களும் நூலகங்களில் அவசியம் இடம் பெறுதல் வேண்டும். இவற்றோடு கிராம, மாவட்ட, மாநில நாட்டு வரைப் படங்களையும் கிராம நூலகங்கள் வாங்கி வைக்கவேண்டும். அவை பற்றி அடிக்கடி நூலகத்தார் மக்களுக்குக் கூறவும் வேண்டும். சமூக, அரசியல், பொருளாதார வளர்ச்சிகளைச் சித்திரிக்கும் படக்காட்சிகளை கிராம நூலகங்கள் அடிக்கடி மக்களுக்குக் காட்டி உதவலாம். அவ்வாறே விவசாய வளர்ச்சி, விவசாய நுணுக்கங்கள், ஆகியவை பற்றி செய்திப் படக் காட்சிகளையும் காட்டுவதற்கு அவை ஏற்பாடு செய்யலாம். ஆரோக்கிய வாழ்வு, உடல்நலம் பேணும் வகை ஆகியவை பற்றி மக்கள் நன்கு அறிந்து கொள்ளுதற்பொருட்டு அவை சம்பந்தமான படக்காட்சிகளுக்கும் நூலகங்கள் ஏற்பாடு செய்யவேண்டும்.

## வானொலிப் பெட்டியும் தேவை

வானொலிப் பெட்டி ஒன்றும், ஒவ்வொரு நூலகத்தில் இருப்பது மிகவும் நல்லது. வானொலியில் ஒலிபரப்பாகும் இசை, நாடகம், சொற்பொழிவு, செய்தி முதலியவற்றை மக்கள் கேட்டு மகிழ்வதற்கு இது சிறந்த வாய்ப்பினை அளிக்கும். மாலை நேரத்தில் ஒவ்வொரு நாளும் ஒலிபரப்பாகும் கிராம நிகழ்ச்சியைப் போன்று பல நிகழ்ச்சிகளை கிராம மக்களுக்காகத் தயாரித்து அவ்வப்பொழுது ஒலிபரப்புவதற்கு அகில இந்திய வானொலி நிலையத்தினர் ஏற்பாடு செய்யவேண்டும். கிராம நூலகங்கள் இந் நிகழ்ச்சிகளை எல்லாம் முன்கூட்டியே தெரிந்துகொண்டு, அவற்றைப் பற்றி உரிய காலத்தில் கிராம மக்களுக்கு அறிவித்து, அவர்கள் அவற்றைக் கேட்டு மகிழும்படிச் செய்யவேண்டும். அவைபற்றிய அறிக்கைகளை அறிவிப்புப் பலகையில் ஒட்டி வைக்க வேண்டும்.

கிராம நூலகம், கிராம ஊராட்சி அலுவலகத்தைச் சேர்ந்த அல்லது பள்ளிக்கூடத்திற்குரிய விசாலமான அறை ஒன்றில் அமைக்கப்படலாம். விசாலமான அறையில் நூலகம் இருந்தால்தான் மக்கள் எவ்விதச் சிரமும் இன்றி அங்கு வந்து போக இயலும். மேலும் படக்காட்சிகள் நடத்துவதற்கும், சொற்பொழிவுகள் ஏற்பாடு செய்வதற்கும் அவ்வறை மிக வசதியாக இருக்கும். மேலும் அவ்வறையில் இயற்கை வெளிச்சமும் காற்று வசதியும் இருக்கவேண்டும். அவ்வாறு இல்லையெனில், செயற்கை வெளிச்சத்திற்கும் காற்றிற்கும் ஏற்பாடு செய்யவேண்டும்.

## பயிற்சி பெற்ற நூலகர்கள்

கிராம நூலகங்கள் மக்களால் நன்கு பயன்படுத்தப் பட வேண்டுமெனில், அவ்வாறே மக்கள் அவற்றால் நல்ல பலன்களைப் பெற வேண்டுமெனில், கிராம நூலகங்கள் பயிற்சி பெற்ற நூலகர்களுடைய மேற்பார்வையில் நடைபெற வேண்டும். பயிற்சி பெற்ற நூலகர்களே அவற்றை நன்கு நடத்த இயலும். எனவே "யாரை யாவது நியமித்து எப்படியாவது நடத்தலாம்" என்ற



எண்ணத்தை நாம் இனியாவது அறவே விடுத்து, அதற்கெனப் பயிற்சி பெற்றோரே, அவற்றைத் திறமையாக நடத்த முடியும் என்று எண்ணவேண்டும். நூலகப் பயிற்சி பெற்றோரையே கிராம நூலகங்களில் நூலகர்களாக நியமிக்கவேண்டும். இதற்கு மக்களும் அரசும் பெரும் ஆதரவு தரவேண்டும்.

## பக்குவமான மனப்பாங்கு படைத்தவர்கள்

பள்ளி இறுதி ஆண்டுத் தேர்வில் வெற்றிபெற்று, குறுகிய கால நூலகப் பயிற்சியினையும் முடித்தவர்களையே நூலகர்களாக நியமிக்கவேண்டும். அவர்களுக்கு உயர் நிலை எழுத்தர்களுக்குரிய ஊதியம் அளிக்கவேண்டும். இதற்குப் பொருளாதார நிலை இடங்கொடுக்கவில்லையெனில், பள்ளி ஆசிரியர் ஒருவரது பொறுப்பில் நூலகத்தை விட்டுவிடலாம். அவருக்கு இதற்காக மேற்கொண்டு சிறிய ஊதியத்தைக் கொடுக்கலாம். ஊதியம் இல்லாது இருப்பின் அப்பணியை ஒருவரும் ஏற்க முன்வரமாட்டார்கள். அந்த ஆசிரியர்கள், நாளடைவில் நூலகப்பயிற்சி பெற்றால் நல்ல பயனுள்ள நூலகப் பணிகளைச் செய்ய இயலும் என்பது பலரது கருத்து ஆகும். பொதுக் கல்வி அறிவு, நூலகவியல் அறிவு ஆகியவற்றோடு இப்பணியில் ஈடுபடுவோருக்கு, கிராமத்தின் அருமை பெருமைகள், நாட்டின் வளர்ச்சிக்கு கிராமத்தின் பங்கு முதலியவை பற்றிய தெளிந்த அறிவும் இருத்தல் அவசியமானதாகும். மேலும் அவர்கள் பண்புடையவர்களாகவும், நமது நாட்டின் நாகரிகம், பண்பாடு ஆகியவற்றைப் போற்றுகின்ற புனித எண்ணத்தை உடையவர்களாகவும் இருக்கவேண்டும். இவற்றிற்கெல்லாம் மேலாக, கிராம மக்களது விருப்பு, வெறுப்புக்களை எல்லாம் நன்கு அறிந்து அவற்றிற்கேற்ப பக்குவமாக அவர்களை நூலக உணர்வு உடையவர்களாக ஆக்குகின்ற திறனையும் உடையவர்களாக அவர்கள் இருத்தல் வேண்டும். தொழில் திறமை, பணி செய்யும் ஆர்வம், மனிதாபிமானம், மலர்ந்த முகத்துடன் பொறுமையாக நூலகத்திற்கு வருகின்ற மக்களை வரவேற்று, கனிவாகப் பேசி அவர்களுக்கு உதவுகின்ற இயல்பு, முதலியவை இப்பணியில் ஈடுபடுவோருக்கு இருக்க வேண்டிய முக்கிய பண்புகள் ஆகும்.

மேலே கூறியவற்றோடு பரந்த நூலறிவு, உயர்ந்த நோக்கம் பிறரைப் புரிந்துகொள்ளக்கூடிய திறன், பிறருக்கு வழிகாட்டுவதற்குரிய தன்னம்பிக்கை, வருங் காலத்தை நன்கு புரிந்துகொள்ளக்கூடிய திறமை, அதற்கேற்ப கிராம மக்களை வழி நடத்துகின்ற ஆற்றல், விட்டுக்கொடுக்கின்ற இயல்பு, உலகியலுக்கு ஏற்ப தன்னை மாற்றி அமைத்துக் கொள்ளுகின்ற பண்பு, பரிவு, சுறுசுறுப்பு, பணியில் ஆர்வம், அக்கறை, மகிழ்ச்சி, உண்மையான உழைப்பு, பிறரைத் தன்வயப்படுத்தல், நன்னடத்தை, நல்ல பழக்க வழக்கங்கள், பிறரோடு ஒத்துழைக்கும் தன்மை, மேலதிகாரிகளுடைய நல்லெண்ணத்தைப் பெறுகின்ற வண்ணம் பணி செய்தல், முதலியனவும் அவர்களிடம் காணப்படுமாயின் அவர்கள் சுடச்சுடச் ஒளிவிடும் பொன்போல் விளங்கி, பேரும் புகழும் பெறுவர். இவற்றிற்கெல்லாம் மேலாக பிறரது கண்டன உரைகளைப் பொறுக்கின்ற பொறையுடைமையும் அவர்களுக்கு இருக்கவேண்டும். இத்துடன் கிராமத்தில் வாழும் மக்கள் அனைவரையும் தனித் தனியாகச் சந்தித்து, அவர்களது எண்ணத்தை அறிந்து, அதற்கேற்ப நூலகர் வழிகாட்டுவாராயின், அது அவருக்குச் சிறந்த வெற்றியைத் தேடித்தரும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.




## பயன்படும் நூல்களும் பயிற்சி பெற்ற நூலகர்களும்

கிராம நூலகங்களை மேற்பார்க்கும் பணியில் ஈடுபடுவோருக்கு பரந்து விரிந்த அறிவு இருத்தல் நல்லது. நூலகவியல் அறிவோடு, அரசியல்கட்சிகள், அமைப்புக்கள், ஆட்சிமுறை, கிராமச் சமூக இயல், சமூக பொருளாதாரம், பிறப்பு, நோய், முதலிய சமுதாய நிலை பற்றிய விவரங்கள் கிராமங்கள், ஊர்கள், நகர்கள், ஆகியவற்றிடையே காணப்படும் வேறுபாடுகள் ஆகியவை பற்றிய அறிவும் அவர்களுக்கு இன்றியமையாததாக விளங்குகின்றது. ஆதாரக் கல்வியின் சிறப்பு, அக்கல்விக்குரிய பாடத் திட்டம், நூல்கள், புதிதாகப் படிக்கத் தொடங்கி இருக்கும் மக்களுக்குரிய நூல்கள் ஆகியவை பற்றியும் அவர்கள் நன்கு தெரிந்திருக்க வேண்டும்.

இறுதியாக, நூலகங்களைத் திறம்பட நடத்துகின்ற திறனும், அன்றாட வேலைகளை நல்லமுறையில் முடிக்கின்ற அநுபவமும், அரியவற்றை, நல்லவற்றை, கேட்போர் மனங்கொள்ளும் வண்ணம் எடுத்துக் கூறுகின்ற சொல் வன்மையும் அவர்களுக்கு இருத்தல் வேண்டும். இதுவரை கூறியவற்றால், கிராம மக்களுக்குப் பயன் படும் நூல்களையே கிராம நூலகங்கள் கொண்டிருக்க வேண்டும் என்பதும், பயிற்சி பெற்ற நூலகர்களே கிராம நூலகங்களைச் செம்மையுடன் நடத்த முடியும் என்பதும் இனிது பெறப்படும்.

—0—

" அன்பு வேண்டுகோள் "

விவசாயப் பெருங்குடி மக்களே! வர்த்தகப் பிரமுகர்களே!
அனைவருக்கும் எங்கள் உளம் கனிந்த வணக்கம்

* * *

அரசாங்கத்தாரால் அங்கீகரிக்கப்பட்ட ஸ்வான் பிராண்டு
கலப்பு உரங்களை வாங்கி, நெல், கரும்பு, வாழை,
குச்சிக்கிழங்கு மற்றும் எல்லா பயிர்களுக்கும்
உபயோகித்து அதிக இலாபம் அடையுமாறு
வேண்டுகிறோம்.

* * *

ஏஜெண்டு இல்லாத ஊர்களுக்கு ஏஜெண்டுகள் தேவை.
விவரங்களுக்கு விண்ணப்பிக்கவும்.

* * *

போன் : 3992 & 4758 தந்தி : MANURE

தயாரிப்பாளர்

பெவிக் சயின்டிபிக் பெர்டிலைசர்ஸ்,
அம்மாப்பேட்டை.
சேலம்-3.



நமது நாடு விவசாயத் துறையில் வெற்றி பெற வேண்டுமானல்
விளைச்சல் பெருகவேண்டும்

விவசாயிகளே!

உற்பத்தியைப் பெருக்கி அதிக லாபம் அடைய
உங்கள் பயிர்களுக்கு எங்களது 'ஸ்ரீ பாலமுருகன்'
இரசாயன கலவை உரங்களையே உபயோகியுங்கள்

ஏஜெண்டுகள் இல்லாத ஊர்களுக்கு இன்றே விண்ணப்பிக்கவும்.

" ஸ்ரீ பாலமுருகன் பெர்டிலைசர்ஸ்"
2/1097: சந்நியாசிக் குண்டு ரோடு,
கிச்சிப்பாளையம், சேலம்-1.

போன் : 4102 & 5103. தபால் பெட்டி எண் : 39.


 [32-ம் பக்கத் தொடர்ச்சி]

விவசாயத்துறையில் நவீன முறைகளை பின்பற்ற வேண்டும் என்பதை ஆளுநர் ஆதாரங்கள் பல வற்றைச் சுட்டிக்காட்டி, எடுத்துரைக்கிறார்.

"இயந்திரக் கலப்பைதான் இலாபம் தரும்; டிராக்டர்கள் கொண்டு உழுவதினல் சிக்கனம் ஏற்படுகிறது; காலமும் விரயமாவதில்லை. இரு எருதுகள் ஒரு நாள் முழுவதும் ஒழுங்காக உழுதால் கூட, சிறு அளவு வயலைத்தான் உழமுடியும், ஆனல் டிராக்டர்களைக் கொண்டு ஆழ உழுது மிகு விளைச்சலைப் பெறமுடியும்"

விவசாயக் கருவிகளில் ஏற்படும் பழுதுகளை, அந்தந்த வட்டாரங்களிலே செப்பனிட்டுக்கொள்ள சிறு தொழிற்சாலை அமைவது அவசியம் என்று ஆளுநர் வலியுறுத்துகிறார்.

வேளாண்மைத் துறையில் வல்லுநரான அவரைத் தவிர, வேறு யார் இப்படிப் பொருத்தமாக ஆலோசனை கூற இயலும்?

பஞ்சாப் மாநிலத்தில் நிலத்தைத் தரிசாகப் போடக் கூடாது. அவ்வாறு செய்தால் அரசே அந்நிலத்தை எடுத்துக்கொண்டு பிறருக்கு குத்தகைக்கு கொடுக்கும். இதன் வாயிலாக உற்பத்தி பெருகுகிறது என்பதையும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

* * *

மொத்தத்தில் நாம் பேசிக் கொண்டிருந்த நேரத்தில் பெரும்பாலும் விவசாயத்தைப் பற்றியே ஆளுநர் அதிகம் பேசுகிறார், ஏழை, எளிய விவசாயிகள் நலனைப் பற்றி அவர் எடுத்துரைக்கும் கருத்துக்கள் 'உழுவார் உலகத்தார்க்கு ஆணி' என்பதை அடிக்கடி உணர்த்துகின்றன.

ஆளுநரின் அலுவலக அறையில் திருக்குறள் ஆங்கில மொழிபெயர்ப்பு நூல் இருப்பது, நம் கண்ணுக்கு 'பளிச்' என்று தெரிகிறது. குறிப்புணர்ந்த ஆளுநர் அவர்கள், நாள்தோறும் சில குறள்களைப் படித்துவருவதாகக் கூறினர்.

* * *

மேதகு ஆளுநருடன் உரையாடிக்கொண்டிருக்கும் பொழுது, உரையாடலில் இடை இடையே கலந்து கொள்ளும் திருமதி சாந்த் சேவ் உஜ்ஜல்சிங் அவர்களுடைய கருத்துக்களும் நம்மை கவர்கின்றன.

அம்மையார் அவர்கள் தமக்கு மிகவும் பிடித்தமான பாடல் ஒன்றின் கருத்தை எடுத்துரைத்தார்கள். அது இதுதான்.

"துன்புற்ரோரின் துன்பம் தீர்க்க
உதவிசெய்வதே
மனித சமுதாயத்திற்கு [ஒருவர்
செய்யும் பணியாகும்.
இந்தப் பணிக்கேற்ற உள்ளக்கனிவோ
அல்லது அதற்குத்
தேவையான அவகாசமோ, ஆற்றலோ
பெற்றிருக்கும்
வாய்ப்பு அனைவருக்கும் கிட்டாது."

ஆனல், அம்மையார் அத்தகைய நல் வாய்ப்பினைப் பெற்றிருக்கிறார், அதன் விளைவு? "எம் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற தமிழ்நாட்டுச் சான்ரோர் மொழிக்கு விளக்கமாக இருக்கிறார், மேதகு ஆளுநரின் துணைவியார்.

சர்தாரிணியின் தொண்டுள்ளம் பல்வேறு சமூக பணிகளில் அவரை முக்கியப் பொறுப்பேற்கச் செய்துள்ளது. சேவைக்குழு [Guild of Service] செஞ்சிலுவைச் சங்கம் (Red Cross Society) முதலியவற்றின் தலைவியாக இருக்கிறார்.

## மகளிர் மழலைகள் நலனுக்காக ஏடுகளில் தனி இடம்

செஞ்சிலுவைச் சங்க பணிகளுக்கு புதிய ஊக்கம் தரும் வகையில் சிறப்பாக உருவாகியுள்ள பல்வேறு திட்டங்களின் விவரங்களை இவர் விளக்கினர்.

குறிப்பாக, சென்னை மாநகரின் சிந்தாதிரிப் பேட்டைப் பகுதியில் நடைபெறும் குடும்ப நலத் திட்டப் பணிகளை விவரித்தார். ஊனமடைந்த மக்களின் நல்வாழ்வில் நாட்டங்கொண்டு நற்பணியாற்ற. டாக்டர் எம். நடராஜன் போன்ற பல நிபுணர்களின் உதவியுடன் தக்க பணிமனைகளை உருவாக்கவிருப்பதை ஆர்வத்துடன் எடுத்துரைக்கிறார். இப்பணிகளுக்காக மற்ற மாநிலங்களில் உள்ள நிலைகள், தமது மேனாட்டு அனுபவங்கள் முதலியவைகளை தமிழகச் சூழ்நிலைகளுக்கேற்ப மாற்றியமைக்கவிருப்பதாகவும் கூறினர்.

குழந்தைகளிடம் இவருக்குள்ள தனி அன்பு, தாய்க் குலத்திற்கே உரிய தனி பண்பல்லவா? அதில் வியப்புக்கு இடமேது? ஆனல் சர்தாரிணி அவர்களின் தாயன்பில், தனிச்சிறப்பு ஒளிவிடுகிறது. அதை ஆலோசனையாக எடுத்துரைத்தார். வேண்டுகோளாகவும் விடுத்தார்.

"குழந்தைகள் நலனுக்கானப் பணிகளில் எல்லா பொது நல அமைப்புகளும், பத்திரிகைகளும்கூட, உள்ளன்போடு பணியாற்ற வேண்டும்" என்று வேண்டுகோள்விடுத்தார் அவர். "ஏடுகளில் குழந்தைகள் நலனுக்காக தனியிடமும், பக்கங்களும் ஒதுக்க வேண்டும்" என்கிறார். திருமதி உஜ்ஜல்சிங் நிறைய புத்தகங்கள் படிக்கும் பழக்கம் உடையவர். அதுமட்டுமல்ல; புத்தகங்களை விலைக்கு வாங்கிப் பாதுகாப்பதையும் கடமையாகக் கொண்டவர்.

"குழந்தைகள் நலமும், மாதர் நலமும் ஒருங்கிணைந்து நாடு எங்கும் நற்பணிகள் பரவ வேண்டும்" என்று தமது தாய் உள்ளத்தை, தமக்கே உரிய பாணியில்

அழுத்தம் திருத்தமாக எடுத்துரைத்தார். (இந்த அம்மையாருக்கு மூன்று புதல்வியரும், ஒன்பது பேரக் குழந்தைகளும் உள்ளனர்).

• • •

ஆளுநர் மாளிகையிலே ஆட்சிப் பொறுப்பு அலுவல்களை கவனிக்கவும், மாளிகைக்கு வரும் விருந்தினர்களை உபசரித்தல் முதலிய பொறுப்புகளை கவனிக்கவும், ஆளுநரின் அந்தரங்கச் செயலாளர் மெய்க்காப்பாளர் ஆகியோருக்கு உதவியாக வேண்டிய அலுவலாளர்கள் உள்ளனர்.

ஆளுநர் மாளிகையில், மருத்துவப் பணிகளை டாக்டர் சி. என். பாண்டுரங்கம் ஏற்றுள்ளார்.

நம்முடைய ஆளுநர் அவர்களுக்குத் தோட்டக் கலையில் மிகுந்த ஈடுபாடு உண்டு. மாளிகையிலே உள்ள அலுவலாளர்களிடம் உற்சாகமான குறிப்புகளை அளித்து தோட்டக்கலை பணிகளை செம்மையுற கவனித்து வருகிறார்.

• • •

இனிக்கும் இன்னொரு சேதி—

சர்தாரிணி தமிழ் மொழியைக் கற்பதில் மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறார். தக்க ஆசிரியை ஒருவரிடம் தமிழ்க் கற்று வருவதாக அகமகிழ்வுடன் தெரிவிக்கிறார்; அதுமட்டுமல்ல, தமிழிலேயே மேடையில் சொற்பெருக்காற்று மளவுக்குப் பயிற்சி பெறப் போவதாகவும், இதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் கூறியிருப்பதாகவும், தெரிவித்தார்.

அவருடைய உறுதியும், ஆர்வமும் நம்மை பெருமிதம் கொள்ளச் செய்யும் அதே நேரத்தில் ஆளுநர் இன்னொன்றையும் எடுத்துரைக்கிறார்:

''அதோ அந்தக் கோப்புகளில் (Files) முக்கியமான பத்திரிகை குறிப்புகளை எல்லாம் நானே வெட்டியெடுத்து அவற்றை மாவட்டவாரியாகப் பிரித்து வைத்திருக்கிறேன். இதை நானே செய்து கொள்கிறேன். என் பணிகளை நானே செய்தால்தான் மகிழ்ச்சி'' என்கிறார்.

அவருடைய பேச்சு, நம் நெஞ்சில் நீங்கா இடம் பெறுகிறது.

முடிவாக, மேதகு ஆளுநரிடமும், திருமதி சாந்த் சேவ் உஜ்ஜல்சிங்கிடமும் விடைபெறுகிறோம்.

அப்பொழுது

ஆளுநர் மேஜை மீதுள்ள "பகவத் கீதை" நூல் நம் கண்ணில் படுகிறது.

''என்னால் செய்யத்தக்கதுவும்,
என்பால் இலதும், உலகினிலே
என்னால் அடையத் தக்கதுவும்,
இல்லை; வினைகள் செய்கின்றேன்''

பகவத்கீதையின் அந்த வாசகங்கள் நமக்கு நினைவுக்கு வருகின்றன. நம்மைப் பலவாறுகச் சிந்திக்கத் தூண்டுகின்றன. உயர்ந்த நிலையில் இருப்பவர், ஒழுங்காகச் செயல் புரிவதில் உள்ள உண்மை விளங்குகிறது.

''உண்டால் அம்ம, இவ்வுலகம்'' என்ற தமிழ்ப் பாடல்—புறநானூற்றுச் செய்யுள்—நம் கருத்தை அள்ளுகிறது. அந்த உயர்ந்த நினைவுகளில் நம் இதயம் கனிந்து நெகிழ்கிறது.

ஏறத்தாழ 75 வயதை எட்டிவிட்ட நேரத்திலும், கடமையை உணர்ந்து பணியாற்றும் அவரது தொண்டுள்ளம், நம்மை உணர்ச்சிக்கோளமாக்குகிறது.

• • •

நன்றியுணர்வோடு, மாளிகையைத் திரும்பிப் பார்க்கிறோம்.

''உயர்வே உள்ளுக! கடமையைத் தொடர்ந்து செய்க'' என்ற கருத்தலைகள், நம் மனத் திரையில் எதிரொலிக்கின்றன.

சுற்றிலுமுள்ள பசுமைக் காட்சிகள், மனதின் நிறைவுக்கேற்ப, கண்ணுக்கும் நிறைவைத் தருகின்றன.

'இன்சொலால் ஈத்தளிக்கவல்லார்க்கு' இவ்வுலகு, தன் புகழை அள்ளித் தருவதுபோல், ஜனநாயகத்துக்கு பெருமைத் தேடித்தரும் வகையில் பணியாற்றும் ஆளுநர் பணிகள், நம் சிந்தையிலே சுற்றிச் சுழன்று கொண்டிருக்கின்றன.

''ஆம். முறை செய்து காப்பாற்றும் இறைமாட்சியின் மாண்பு மறக்கக்கூடியதா?''

ஆசிரியர்

முதல் அட்டைப் படம்:

மேதகு ஆளுநரும், அவருடைய மனைவியாரும், இவ்விதழ் அட்டைப் படத்தை அலங்கரிக்கிறார்கள்.



# ஊருக்கு நல்லவர்

, ஒரு சிறிய கிராமம்; அதற்கொரு சிறிய ஊராட்சி மன்றம்; அம் மன்றத்திற்கொரு கல்விக் கழகம்; அதன் செயலாளர், திரு. பாடீல் அவர்கள் அவருடன், 'பஞ்சாயத்து ராஜ்' என்ற ஆங்கில திங்கள் இதழ் ஆசிரியர் நடத்திய பேட்டியினை சுருக்கமாக கூறுகிறது இக் கட்டுரை.

நான் அவரை ஊராட்சிக் கூட்டத்தில் சந்தித்தேன். திடகாத்திரமான அவர், புன்னகையுடன் என்னை நோக்கினார்.

ஊராட்சித் தலைவர் என்னை அவருக்கு அறிமுகம் செய்ய விரும்பினார். "எங்கள் ஊர் தீவிர விவசாயி திரு தத்தாத்ரே பாடீல் இவர்தாம்" என்று அவரை எனக்கு அறிமுகம் செய்தார்.

இரு கரங்களையும் குவித்து, அன்பான குரலில் "வணக்கம்" என்றார் திரு. பாடீல்.

மனங்கவரும் ஆற்றல்......

முதல் சந்திப்பிலேயே அவர் என்னை பெரிதும் கவர்ந்தார்.

"எங்கள் கல்விக் கழகத்தின் செயலாளரும் இவர்தான்" என்றார் ஊராட்சித் தலைவர்.

"எதுவரை தாங்கள் படித்திருக்கிறீர்கள்?" நான் கேட்டேன்.

"நான்காவது வகுப்புவரைதான்" என்றார் அவர் சிரித்துக் கொண்டே.

"என்னுடைய சிறுவயதில் நான் பள்ளி செல்லவில்லை; என் தந்தைக்கு உதவியாக இருந்தே காலத்தைக் கடத்தி விட்டேன்; அந்தத் தவறை இன்று நன்கு உணர்கிறேன். எனவேதான், எங்கள் ஊரில் எந்தக் குழந்தையும் பள்ளி செல்லாது இருக்கக்கூடாது என்ற குறிக்கோளுடன் பணியாற்றுகிறேன்" என்று மேலும் கூறினார்.

மாலை வெயிலில் அவரது முகம் மகிழ்ச்சியால் பிரகாசித்தது.

"தங்களது எண்ணம் விரைவிலே ஈடேறும் என்பதில் எனக்கு முழு நம்பிக்கையிருக்கிறது" என்றேன்.

"எல்லாம் அவன் செயல்" என்று அவர், ஆகாயத்தை நோக்கி கரம் குவித்தார்; ஆம். அவர் தெய்வ நம்பிக்கையில் மிகுந்த பற்றுள்ளவர்.

"தங்களது வேளாண்மை எவ்வாறிருக்கிறது?" என்றேன் நான்.

"மக்காச் சோளம், பருத்தி ஆகிய இரண்டையும் பயிர் செய்கிறேன். என்னிடம் இருபத்தைந்து ஏக்கர் நிலமிருக்கிறது. அதில் பதினெட்டு ஏக்கருக்கு நல்ல பாசன வசதியிருக்கிறது: ஓர் ஏக்கரில் 15 குவிண்டால் சோளம் விளைவித்திருக்கிறேன். வீரிய ஒட்டுச் சோள ரகத்தை பயிர் செய்ததில் எனக்கு ஏக்கருக்கு 21 குவிண்டால் மகசூல் கிடைத்திருக்கிறது. என்றார் திரு. பாடீல்.

"வீரிய ஒட்டுச் சோளத்தை மட்டுமே ஏன் பயிரிடக்கூடாது?"

"அடுத்த ஆண்டு அவ்வாறே செய்வதற்கு திட்டமிட்டுள்ளேன்"

"எங்கள் வட்டாரம் முழுவதிலும் வீரிய ஒட்டுச் சோளம் பயிரிடப் போகிறோம் அதற்கு திரு. பாடீல் போன்ற தீவிர விவசாயிகள் முன் வந்து, குறிக்கோளை நிறைவேற்றித் தர வேண்டும்" என்றார் வட்டார அலுவலர்.

"என்னிடம் ஒரு டிராக்டர் இருக்கிறது" என்றார் திரு. பாடீல் மெதுவாக.

"அப்படியா இன்னும் வேறு எவரிடமும் டிராக்டர் இருக்கிறதா?" என்றேன் ஆவல் மிகுதியில்.

"இவர் ஒருவரிடம் தாம் டிராக்டர் இருக்கிறது; அதை மற்றவர்களுக்கு வாடகைக்குத் தருகிறார், மற்றவருக்கு உதவும் மனப் போக்குள்ளவர் திரு. பாடீல் அவர்கள். வேளாண்மையில் சக உழவர்களுக்கு இவர் ஒரு வழிகாட்டியாக இருந்து, அவர்களின் வாழ்வை மேம்படுத்துவதில் பெரும் துணை நிற்கிறார் திரு. பாடீல்" என்று அவரது, சேவையை விளக்குகிறார், ஊராட்சித் தலைவர்.

நெஞ்சில் நிறைந்தவர்......

திரு. பாடீல், வெட்கத்தால் தலை குனிந்து தரையை கீறிக் கொண்டிருந்தார்.

தாதாலா கிராமத்தை விட்டு வெளியேறிய பிறகும்கூட வெகு நாட்கள் வரை திரு, பாடீல் என் நினைவிலேயே நின்று செயல்பட்டுக் கொண்டிருந்தார்.

அவரைப் போன்ற செயல் வீரர்கள் தீவிர உழவர்களால் தாம், நம்நாடு உணவுத்துறையில் தன் தேவையை நிறைவாக்கிக் கொள்ள முடியும்.

# நல்வாழ்வுப் பணிகள்

நந்தூர் ஒரு சாதாரண கிராமம். இது மேற்கு வங்காளத்திலுள்ள பர்த்துவான் மாவட்டத்திலுள்ளது. இதன் மக்கள் தொகை 1,160 மட்டுமே.

இக்கிராமத்திற்குப் போதிய போக்குவரத்து சாலை வசதிகள் உள்ளன. அஞ்சல் நிலையம், ஆரம்பப்பள்ளி, பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் ஆகியவை இருக்கின்றன.

இக்கிராம மக்களில் 80 சதவீதத்தினர் வேளாண்மையையும், எஞ்சியுள்ளவர்கள் மட்பாண்டம் செய்தல், தச்சு வேலைகளைச் சார்ந்தும் வாழ்கின்றனர். 640 ஏக்கர் பரப்பளவுள்ள இக்கிராமத்தில் 512 ஏக்கர் நிலங்களில் மட்டுமே சாகுபடி செய்யப்படுகின்றன. இதில் 80 சதவீத நிலங்கள் தாமோதர நதி அணைக்கட்டினால் பாசன வசதியை பெறுகிறது. இக்கிராமத்தில் பயிரிடப் படுபவைகளில் முக்கியமானவை நெல், மழைக்கால காய்கறிகள், உருளைக் கிழங்கு, கோதுமை முதலியவை ஆகும்.

## நகருடன் ஒன்றிய வாழ்க்கை

இக்கிராமத்திலுள்ள ஆரம்பப் பள்ளியும், பக்கத்து கிராமத்தில் உள்ள உயர்நிலைப் பள்ளியும், இக்கிராமத்தில் படித்தவர்களின் எண்ணிக்கையை மிகுதியாக்கியுள்ளன. முதியோர் கல்வி நிலையம் சில காலம் பணியாற்றியது. நிதி வசதியின்மையால் தொடர்ந்து பணியாற்ற இயலவில்லை. கல்லூரிப் படிப்பை ஆறு மைல் தூரமே உள்ள பர்த்துவான் நகருக்குச் சென்று பெறலாம். சுலபமான போக்குவரத்து வசதியிருப்பதால் நகரத்தோடு இக்கிராமம் நெருங்கிய தொடர்பு கொண்டுள்ளது. இக்கிராம மக்கள் பயன்படுத்தும் ஆடை அணிகள், பிளாஸ்டிக்கில் செய்யப்பட்ட பொருள்கள், நல்ல ஆசனங்கள், வானொலிகள் ஆகியவற்றை காணுகையில், இவர்கள் நகர வாழ்க்கையோடு ஒன்றிவிட்டார்கள் என்பது தெளிவாகிறது.

## மாறாத தன்மை

இங்குள்ள பெரிய வீடுகள் சுமாரான வீடுகள் மற்றும் இங்கு தருவிக்கப்படும் செய்தித் தாள்கள் கிராம மக்களின் வாழ்க்கை முறையை முற்றிலும் மாற்றிவிட்டன. ஆனாலும் கிராம வாழ்க்கைக்கு அடிப்படையான முறைகளும், அங்கு பழக்கத்தில் உள்ள முறைகளும் என்றும்போல் மாறாமல் ஒரே தன்மையுடையதாக இருக்கிறது.

## இளைஞர் சங்கங்களின் தோற்றம்

நந்தூர் கிராமத்தின் பக்கத்தில் உள்ள ஜோடேராம் கிராமம் மிகவும் முன்னேற்றமடைந்துள்ள ஒரு கிராமம். முன்னேற்ற திட்டங்களில் பெரும்பான்மையானவற்றை இக்கிராமம் மேற்கொண்டுள்ளது. இங்கு இளைஞர் சங்கம் ஒன்று தொடங்கப்பட்டுள்ளது. இந்த கிராமத்தின் திட்டங்களை நிறைவேற்றும் பொறுப்பு பர்த்துவான் நகரத்திற்கு இருப்பதால் பத்து இளைஞர்சங்கங்கள் ஏற்படுத்தவேண்டிய குறியளவு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தை நிறைவேற்றுவதில், திறமைமிக்க அநேக நந்தூர் இளைஞர்கள் ஆர்வமாக இருப்பது, ஊராட்சி ஒன்றிய அலுவலர்களின் கவனத்தைக் கவர்ந்துள்ளது. கிராமத்து இளைஞர் தலைவர்களுக்கும், அலுவலர்களுக்கும் தொடர்பு ஏற்பட்டதனால் இளைஞர் சங்கம் ஏற்பட உதவியாக இருந்தது" கிராமத்து முதியவர்களும் இளைஞர் சங்கத்திற்கென தற்காலிகமான ஓர் இட வசதி ஏற்படுத்தி கொடுத்து ஒத்துழைத்தார்கள். இந்தச் சங்கம் 1964-ம் ஆண்டில் பிப்ரவரி மாதம் 8-ம் தேதி ஏற்பட்டதிலிருந்து, இரண்டு திங்களுக்கு எவ்வித செயல்களையும் மேற்கொள்ளவில்லை. இதன் பின் அதிக மனிதசக்தி தேவையுள்ள, பணச்செலவு அதிகமாகும் வேலைகளை மேற்கொள்ளாமல் பணியாற்றி வந்தது.

## மூன்று செயல் திட்டங்கள்

1964–65-ம் ஆண்டில் இச் சங்கம் 3 வகை செயல் திட்டங்களை மேற்கொண்டது. அடுத்த ஆண்டில், மூன்று தலைப்பின்கீழ் ஏழு அம்ச செயல் திட்டம் ஒன்றை மேற்கொண்டது. அவையாவன (1) பொருளாதாரம் (2) பொழுதுபோக்கு (3) சமுதாய நலப்பணிகள். இந்திய அரசின் வளர்ச்சி இயக்குநர் அலுவலகம் தெரிவித்த செயல்முறைப்படி இளைஞர் சங்கம், கூட்டாகவும் தனித்தனியாகவும் பொருளாதார திட்டங்களை மேற்கொண்டன. இதன் முன்னோடித் திட்டமாக 1965-ஆம் ஆண்டு தரிசாக உள்ள நிலங்களில் கூட்டாக நெல் சாகுபடி தொடங்கப்பட்டது. இந்த நிலங்களை ஊராட்சிகள் ஒதுக்கிக்கொடுத்தன. இந்த நிலம் தாமோதர பள்ளத்தாக்கு கார்பரேஷன் நீர்ப்பாசன திட்டத்தின்கீழ் உள்ளன. 1965-ஆம் ஆண்டில் நிலத்தை சீர்திருத்தும் பணி தொடங்கி வைக்கப்பட்டது. இதற்கு அடுத்த ஆண்டு, சங்க உறுப்பினர்களின் உதவியோடு நிலச் சீர்திருத்த வேலை ஆரம்பிக்கப்பட்டது. உறுப்பினர்கள் நாற்றங்காலை எழுப்புவதற்குத் தேவையான நெல்விதைகளை இலவசமாக கொடுத்து உதவினார்கள். சங்க உறுப்பினர்களில் 15 பேர்களின் உடல் உழைப்பும், மற்றவர்களின் தொழில் நுட்ப உதவியும் மற்றும் தேவையான உதவிகளும் இத்திட்டத்திற்கு கிடைத்தன. இந்த நிலத்தில் ஒரு குவிண்டால் நெல் உற்பத்தி செய்யப்பட்டு, அங்குள்ள கூட்டுறவுச் சங்கத்திற்கு விற்கப்பட்டது.

—42-ம் பக்கம் பார்க்க.



# பிற மாநிலங்களில்..

துன்பங்களும் துயரங்களும் தனித்து வருவதில்லை. அத்துடன் பல சோதனைகளும் வருவதுண்டு என்பதற்கேற்ப, ஒரிசா மாநிலத்திலுள்ள முருடா என்ற கிராம மக்கள் சொல்லொண்ணா துன்பங்களை அனுபவித்தனர். அவர்களின் துன்பங்கள் கண்ணீர் வடிக்கத் தக்கவை.

சென்ற ஆண்டு பெய்த மழையினாலும், புயற் காற்றாலும் அதிக வெள்ளம் ஏற்பட்டு, அவர்களுடைய நெல்வயல்கள், வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டன. இந்த வெள்ளப் பெருக்கத்திற்குப் பின் தோன்றிய அல்லல்களில், தங்களுக்கு மறு வாழ்வு இருக்கிறதா என்ற நம்பிக்கையையே அவர்கள் இழந்துவிட்டனர். எங்கும் ஒரே துன்ப நிகழ்ச்சிகளே காணப்பட்டன..

## இடரை எதிர்த்து

முருடா கிராமத்து மக்களால் இவ்வளவு பெரிய இயற்கை சீற்றத்தை சமாளிப்பதென்பது மிகவும் துயர் நிறைந்த செயல்தான். எனினும் இயற்கையின் கோபத்திற்கு அவர்கள் பலி ஆடுகள்போன்று மௌனமாக இருக்க முடியாது என்பதை தெளிவாக அறிந்திருந்தனர். எல்லாம் விதியின் செயல் என்று இருக்காமல், இடரை எதிர்த்து போராடுவதற்குத் தங்களை, செயல்வீரர்களாக்கிக் கொண்டனர். இவர்களுக்குக் கிடைத்த உதவியையும் ஒத்துழைப்பையும் கொண்டு, இக் கிராம மக்கள் தங்களின் வருங்காலத்தைச் செம்மைப்படுத்திக்கொள்ளவும், தங்களின் வருங்காலச் சந்ததியினரின் நல்வாழ்விற்காக கடினமாக உழைக்கத் தொடங்கினர். இவர்களின் மறு வாழ்விற்கு வேண்டிய ஒத்துழைப்பு

களை இவ்வூராட்சியின் வளர்ச்சி அதிகாரியும் பிறரும் அளித்தனர். மாவட்ட நீதிபதி திரு என். சி. பெருரியா என்பவரும் இயற்கையின் சீற்றத்தை எதிர்த்துப் போராடும் முருடா மக்களுக்கு வேண்டிய உதவிகள் கிடைப்பதற்கு தனிக் கவனம் செலுத்தினார்.

**உழைப்பும் உறுதியும் உருவாக்கிய பாசன வசதி**

இக் கிராமத்திற்கு அண்மையிலேயே இருந்த சில நீரோடைகளுக்கு கரைகள் கட்டி, அந்த நீரானது வயல்களின் பாசனத்திற்குத் திருப்பி விடப்பட்டது. இதனால் இப் பகுதியிலுள்ள வயல்கள் எல்லாம் பசுமையாகக் காட்சியளிக்கத் தொடங்கின. இக் காட்சி, பக்கத்து கிராம மக்களின் கவனத்தை இதன்பால் ஈர்த்தது. தங்கள் கிராமத்திலுள்ள குளத்திலிருந்தும், இவ்வாறு ஒரு கரை கட்டினால், தாங்களும் நீரை கொண்டு சென்று பாசனம் செய்யலாமே என்ற நம்பிக்கை அவர்களுக்கும் ஏற்பட்டது. இவ்வாறான கரை கட்டுவதற்கு ரூபாய் 600 தேவைப்பட்டது. இதை ஒருவழியாகச் சமாளித்தபின், தங்களின் உடல் உழைப்பாலும், உறுதியாலும் கரை கட்டி முடிக்கப் பெற்றது.

பல நூறு ஆண்டுகளாக இங்குள்ள நீரை பயன்படுத்தாமல் இருந்ததை தங்களது காலத்திலாவது கரைகட்டி நீரை பாசனத்திற்குத் திருப்பி விட்டதைப் பற்றி இக் கிராம மக்கள் பெருமை கொண்டனர். கங்கை நதிக்கு அளிக்கும் ஒரு புனிதத் தன்மை இக்குளத்து நீருக்கும் உண்டு என்று அவர்கள் கருதினர்.

**ஒவ்வொரு சிற்றூரிலும்**

குளத்திற்குக் கரை அமைத்துப் பாசன வசதியை ஏற்படுத்த முடியும் என்பதை அறிந்த அப்பகுதி மக்கள் அனைவரும், தங்கள் தங்கள் ஊரில் கிடைக்கும் நீரை பாசனத்திற்கு உபயோகிக்கத் தொடங்கினர். இவ்வாறு அஜானு என்ற கிராம மக்களும் தங்கள் கிராமத்திற்கு அண்மையில் ஓடும் நீரோடைக்கு கரைகள் கட்டி 250 ஏக்கர் நிலத்தைப் பாசன வசதி உள்ளதாக மாற்றி அமைத்தனர்.

இவ்வாறு இந்தியாவின் கிராமப் புறங்கள், எந்தவித விளம்பரமும் இல்லாமல், வெளியுலக தொடர்பும் இன்றி பல அரும்பெரும் சாதனைகளைச் செய்துகொண்டிருக்கின்றன. ஒரிசாவைச் சேர்ந்த இந்த மக்கள் தங்களது கடின உழைப்பாலும் தீரத்தாலும், 550 ஏக்கர் நிலங்களை வரட்சிக் கொடுமையிலிருந்து செழிப்பானதாக மாற்றியிருக்கிறார்கள்.

முதலில் பயிரிடப்பட்டுள்ள நெல்லின் அறுவடைக்குபின், அதே வயலில் கோதுமை, உயர் விளைச்சல் ரக நெல், காய்கறிகள் ஆகியவற்றைப் பயிரிட விவசாயிகள் திட்டமிட்டுள்ளனர். தற்போது ஏற்படுத்தியிருக்கும் கரைகளை கன மழையும், வெள்ளமும் சேதப்படுத்தாமல் காப்பதுதாம் இவர்களுடைய பிரச்னையாக இருக்கிறது. இந்தப் பிரச்னையைச் சமாளிப்பதற்கு பணம் தேவைப்படுகிறது. இந்தக் கரைகளை இக்கிராம மக்கள் 'ஜகன்நாத்' கோயிலைப்போல புனிதமானதாகக் கருதுவதால், எப்பாடுபட்டேனும், இக்கரைகளைப் பாதுகாப்போம் என்று உறுதி கூறுகின்றனர். அவர்கள் மேலும், "நமது ராணுவ வீரர்கள் இமயமலை அடிவாரத்தில் நின்று நாட்டின் எல்லைகளை இமை கொட்டாது காப்பதுபோல், நாங்களும் இக்கரைகளைக் கண்காணித்து வருகிறோம்" என்று உறுதியுடன் கூறுகின்றனர்.

நல் வாழ்வுப் பணிகள்—40-ம் பக்கத் தொடர்ச்சி.

இந்த சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் கோழிப்பண்ணை, வாத்துப் பண்ணை, வீட்டுக்காய்கறித் தோட்டம் போன்ற பொருளாதார வளர்ச்சி திட்டங்களை தனித்தனியாக ஆரம்பித்து நடத்தினார்கள். வீட்டுக் காய்கறித் தோட்டத்தை 10 உறுப்பினர்கள் மேற்கொண்டனர். உறுப்பினர்களுக்கு விதைகளும் நாற்றுகளும் மற்றும் விவசாய வழிமுறைகளும் இலவசமாக கிடைத்தன.

**சத்துள்ள உணவு உற்பத்தியில் சங்கங்கள்.**

இளைஞர் சங்க உறுப்பினர்கள் கோழிப் பண்ணைகளை தனித்தனியே தொடங்குவதற்கு உதவியாகஒவ்வொருவருக்கும் நான்கு கோழிக் குஞ்சுகள் அளிக்கப்பட்டன. இப் பண்ணைகளை, உறுப்பினர்கள் மிகவும் ஆர்வத்துடன் நடத்தி வந்தனர். ஆனால் ஒரு வாரத்தில் குஞ்சுகள் இறந்துவிட்டன. சிறு குஞ்சுகளை எப்படி வளர்ப்பது என்ற அனுபவமும் பழக்கமும் இல்லாமையே குஞ்சுகள் இறப்பதற்கு காரணமாக இருந்தன. சங்க உறுப்பினர்களில் ஒருவர், வாத்து பண்ணை ஆரம்பிக்க முன்வந்ததால், அவருக்கு உயர்வகையைச் சேர்ந்த ஆறு குஞ்சுகள் இலவசமாகக் கொடுக்கப்பட்டன. வாத்துக் குஞ்சுகளை வளர்ப்பது பற்றிய போதிய அனுபவம் இல்லாமை இவருக்கு சற்று சிரமமாகவே இருந்தது. அதனால் இவர் இத் திட்டத்தைக் கைவிட்டு விட்டார்.

**சந்ததியின் நல்வாழ்விற்காக**

இந்தச் சங்கம் 1964-ல் ஊராட்சியால் ஆரம்பித்து வைக்கப்பட்ட சமுதாய வேலைத் திட்டங்களில் பங்கு கொண்டு பணியாற்றத் தீர்மானித்தது. ஓர் ஆரம்ப பள்ளிக் கட்டிடம் கட்டுவதற்கு தாங்களே முன்வந்து, உடல் உழைப்பைக் கொடுப்பதற்கு சங்க உறுப்பினர்கள் முன் வந்தனர். இந்தக் கிராமத்திற்கு மிகவும் தேவையாக இருந்த சாலை ஒன்றைப் பழுது பார்ப்பதற்கும் இவர்கள் உடல் உழைப்பு தருவதற்கு முன்வந்தனர். மேலும் இவர்கள் உரக் குழி ஒன்றைத் தோண்டி, அதில் கழிவுப் பொருட்களை நிரப்பி அதை நெல் சாகுபடிக்கு பயன்படுத்தினர்.

தேசிய நெடுஞ்சாலையில் பஸ்ஸிலிருந்து இறங்கி, இரண்டு பர்லாங் தூரத்திலுள்ள நந்தூர் கிராமத்திற்கு வந்தால், இங்கு வாழும் குறைந்த அளவுள்ள மக்கள் தங்களின் வருங்காலச் சந்ததியினரின் நல் வாழ்வுக்காக இந்தக் கிராமத்தை சிறந்த முறையில் உருவாக்குவதற்கு அவர்கள் எடுத்துக்கொண்ட நல் வாழ்வுப் பணிகளை நாம் தெளிவாக நேரில் அறிந்துகொள்ளமுடியும்.



**இதோ ஒரு யோசனை !**

# மிகு விளைச்சலுக்கு

மிகு விளைச்சலை அடைவதற்கு நல்ல தரமான விதைகளைப் பயன்படுத்துவதுதான் ஒரே சிறந்த வழி. நல்ல விதைகளைக்கொண்டு, சிறந்த சாகுபடி முறைகளையும் மேற்கொண்டால், எவ்விதப் பயிரும், அமோக விளைச்சலைக் கொடுப்பது திண்ணம். அறுவடையிலிருந்து நமக்குக் கிடைக்கும் விதைகளில், வைக்கோல், கற்கள், தூசுகள், மண், நோயால் பீடிக்கப்பட்ட விதைகள், நன்கு பக்குவமடைந்து முதிராத விதைகள் ஆகியவை கலந்துள்ளன. சில விதைகளை விதைத்தவுடன் முளைவிடாததற்கு காரணம், அவை நோயால் பாதிக்கப்பட்டதாகவும், உடைந்ததாகவும் இருப்பதே. இப்படிப்பட்ட விதைகளை நாம் விரும்பி விதைக்க மாட்டோம் என்பது திண்ணம். ஆகவே, நாம் நல்ல பொருக்கு விதைகளையே தேர்ந்தெடுத்து விதைக்க வேண்டும்.

## பொருக்கு விதைகளால் விளைச்சல் சிறக்கும்....

பொருக்கு விதைகளை தயாரித்துக் கொடுப்பவர்கள், நமக்கு சிறந்த விதைகளையும், நன்கு முளைவிடக்கூடிய விதைகளை மட்டுமே வினியோகிக்கிறார்கள். இவர்கள் விதைகளில் கலந்திருக்கும் வைக்கோல். சிறு கற்கள் மண், பாதிக்கப்பட்ட விதை, பக்குவமடையாத, உடைந்த விதை ஆகியவற்றை நீக்கிவிட்டு, நல்ல விதைகளையே விவசாயிகளுக்கு கொடுக்கிறார்கள். மேலும் விதைக்கு ஏற்றவாறு, அவற்றை உலரவைத்து பக்குவப்படுத்துகிறார்கள். இவை போன்ற பொருக்கு விதைகளை நாம் சாகுபடிக்கு பயன்படுத்தினால், விதைகள் கழிவு இல்லாமல், எல்லாவிதைகளும் முளைவிடும் என்பதில் ஐயமில்லை. சிலர் நல்ல விதைகளைத் தேர்ந்தெடுப்பதற்கு, விதைகளை ஒரு வாளித் தண்ணீரில் போட்டு, அதில் மூழ்கும் விதைகள் நல்ல விதைகள் என்று நினைக்கிறார்கள். இந்த முறையினால் தண்ணீரில் மூழ்கும் விதைகள், பக்குவமடைந்து முதிர்ந்த விதைகள் என்பதை மட்டுமே நாம் அறிந்து கொள்ள முடியும். ஆகையால், பொருக்கு விதைகளை சாகுபடி செய்து ரசாயன உரங்கள் வீணாகாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். பொருக்கு விதைகளில் ரசாயன கலவைகள் சேர்ந்திருப்பதால், இவை விதைகளுக்கு ஏற்படக்கூடிய நோய்கள் மற்றும் விதைகள் முளைவிடுவதைத் தடுக்கும் கிருமிகளை அழித்து செடிகள் நன்கு வளர்வதற்குத் துணை செய்கின்றன. இவ்வாறு பொருக்கு விதைகளை விதைப்பதால், விதைத்த விதைகள் அனைத்தும் முளைத்து, அவை செழிப்புடன் வளர்வதற்கு நாம் உறுதி செய்தவர்களாவோம்.

அடுத்து வரும் சாகுபடிகளில், நாம் பொருக்கு விதைகளையே பயன்படுத்தி, அதிலுள்ள நன்மைகள் அனைத்தையுமே அடைய முயற்சிக்க வேண்டும்.

## வீட்டுக்கும் நாட்டுக்கும் மட்டுமல்ல, உலகுக்கே

## நல்வழிகாட்டும்

# ஒரேவழி, முதல்வழி

**மக்கள் தொகைப் பெருக்கத்தால்—வாழ்க்கைத் தரத்தில் குறைவு ஏற்படுவதுடன், போதுமான அளவு உணவும் கிடைப்பதில்லை. அவ்வாறு கிடைப்பினும் சத்துள்ள உணவைப் பெறுவது எளிதன்று.**

மக்கள் தொகைப் பெருக்கத்தால்—சுகாதாரத்திற்கு கேடு;

சுற்றுப்புறத் துப்புரவிற்கும் கேடு.

மக்கள் தொகைப் பெருக்கத்தால்-

போதுமான மருத்துவ வசதி இல்லை; வீட்டு வசதி இல்லை;

இன்னும் எவ்வளவோ! இதற்கு ஒரே வழி, அதுவும் முதல் வழி..

நாம் மூன்று ஐந்தாண்டுத் திட்டங்கள் நிறைவேற்றியும், நமது மக்களின் சராசரி உணவு 12·8 அவுன்சிலிருந்து 12·4 அவுன்சாகக் குறைந்துள்ளது. உணவுப் பொருட்களின் உற்பத்தி அதிகரித்தும், மக்கள் பெருக்கத்தின் காரணமாக ஒவ்வொருவரின் சராசரி உணவுத் தேவையும் போதுமானதாக இல்லை. முன்னேற்றமடைந்துள்ள மேல்நாடுகளுடன் நமது மக்களின் சராசரி உணவை ஒப்பிடுகையில் நமது உணவின் அளவு குறைந்திருப்பதோடன்றி, அதனுடைய தரமும் சத்துள்ளதாக இல்லை என்பது கண்கூடு. எல்லா விலையும் அதிகரித்து இருக்கும் தற்போதைய நிலையில், சாதாரண ஏழை மக்கள், சத்துள்ள உணவுகளான பழங்கள், பால், நெய், முட்டை, மீன், மாமிசம் போன்றவற்றை வாங்கி, அவற்றை தங்களது உணவுகளில் சேர்த்துக்கொள்ள முடியாது.

சத்துள்ள உணவுகளை உட்கொள்ள முடியாததால் உடல்நிலை பாதிக்கப்படுகிறது. குறிப்பாக பெண்களும் குழந்தைகளும் மோசமாகப் பாதிக்கப்படுகின்றனர். தரங்குறைந்த, போதுமான சத்தில்லா உணவுகளை வெகுநாட்கள் சாப்பிட்டு வருவதால், உடலின் எடை குறைந்து, நோய்களை எதிர்த்து நிற்கும் ஆற்றலை உடலுறுப்புக்கள் இழந்துவிடுகின்றன. இதனால் உடலுருக்கி நோய், பெரிபெரி, ஸ்கர்வி, ரிக்கட்ஸ் மற்றும் பல நோய்கள் ஏற்படுகின்றன. அதனால் குழந்தைகள் எப்போதும் சுறுசுறுப்பற்று, சோம்பலாகவே இருப்பதோடு, அவர்களின் வளர்ச்சியும் பாதிக்கப்பட்டு, உடலின் எடையும் குறைகிறது.

**சுகாதார கேடுகளுக்கு ஆளாக வேண்டிய நிலை....**

பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப, உற்பத்தியின் அளவு பெருகாததால் போதுமான ஆடைகள் கிடைப்பதில்லை. ஆடைகள் தயாரிப்பில் உற்பத்தியைப் அதிகப்படுத்தினாலும், அதிகமாகிக்கொண்டிருக்கும் மக்கள் தொகை, ஆடைகளின் அதிக உற்பத்தியை ஈடுசெய்து விடுகிறது. பெரும்பான்மையானவர்களுக்கு போதுமான ஆடைகள் இல்லாமல், இவர்கள் குளிரைத் தாங்க முடியாமல், பல சுகாதாரக் கேடுகளுக்கு உள்ளாகிறார்கள். ஆண்டு ஒன்றிற்கு அமெரிக்க நாட்டினர் தலைக்கு 131 மீட்டர் துணியை அணிகிறார்கள். ஆனால் நமது நாட்டினர் தலைக்கு ஆண்டுக்கு 19 மீட்டர் துணியைத்தான் பயன்படுத்துகிறார்கள்.

மனிதனின் உடல் நலத்திற்கு, போதுமான சுகாதார வசதியுள்ள வீடும், துப்புரவான சுற்றுப்புறமும் தேவை. சுகாதாரமற்ற வீடும், சூழ்நிலையுந்தான் குழந்தைகள் அடிக்கடி நோயால் அவதியுறுவதற்குக் காரணங்கள் ஆகும். சிறிய வீடுகளில் அதிகமானவர்கள் நெருக்கமாக வாழ்ந்து வருவதால், அவர்கள் இளம் வயதிலேயே எலும்புருக்கி நோய், நிமோனியா, மற்றும் இன்புளுயன்சா ஆகிய நோய்களால் தாக்கப்படுகின்றனர். வீட்டு வசதிப் பிரச்சினை ஏற்கெனவே, மிகவும் கடுமையாக இருக்கிறது. இத்துடன் ஆண்டு ஒன்றுக்கு அதிகரித்துவரும் 120 லட்சம் மக்கள் பெருக்கம், மேலும் வீட்டுத் தொகையைக் கூடுதல் ஆக்குகிறது. போதுமான சுகாதார வசதியற்ற நகரங்களிலும், குடிசைகளிலும், மக்கள் நெருக்கமாக வாழ்ந்து வருவதால், இவர்களை நோய்கள் மிகவும் விரைவிலேயே பற்றிக்கொள்கின்றன.

**மருத்துவ தேவையிலும் நெருக்கடி....**

நாட்டின் வருவாய் குறைவாக இருப்பதால், ஒருவருடைய ஆண்டு வருமானம் ரூ. 350 ஆக இருக்கிறது. போதுமான சுகாதார வசதிகள் நாடு முழுவதும் ஏற்படுத்த முடியாமல் இருக்கின்றன. பயிற்சி பெற்ற மருத்துவர்கள் போதுமான அளவில் இல்லாததால் குறைந்த அளவு மருத்துவத் தேவையைக் கூட நிறைவேற்ற இயலவில்லை.

மருத்துவர்களில் 67 சதவீதத்தினர் நகரங்களிலும், எஞ்சியுள்ளவர்கள் கிராமங்களிலும் பணிபுரிகின்றனர். கிராமங்களில் பணிபுரிகிறவர்கள் நாட்டின் மூலை முடுக்குகளுக்கு இன்னும் செல்லாமல் மாவட்ட தலைமை இடங்களிலே இருந்து விடுகின்றனர். தேவையான கவனிப்பும், மருத்துவ வசதியும் இல்லாமல், அதிக அளவில் தாய், சேய் மரணங்கள் ஏற்படுகின்றன. இதற்குக் காரணம் போதிய நிதி வசதியில்லாமை, பயிற்சி பெற்ற மருத்துவர்களின் பற்றுக்குறை, சுகாதாரமற்ற வீட்டு வசதி, சரியான உணவின்மை, பயிற்சிபெற்ற தாதிகள் இன்மை ஆகியவையேதாம்.

மக்கள் பெருக்கத்திற்குத் தாய்மார்கள் காரணமாக இருப்பதோடு, திட்டமற்ற மகப்பேற்றால், அவர்களின் உடல்நிலை மிகவும் பாதிக்கப்படுகிறது

**மகப்பேறு அதிகம், மரணத்திற்கு வழி....**

ஐந்து அல்லது ஆறு குழந்தைகள் பெற்ற தாய்மார்களுக்கு, பின்பு குழந்தை பெறுவதில் ஆபத்து இல்லை என்ற ஒரு தவறான நம்பிக்கை இருந்து வருகிறது. உண்மை என்னவெனில், நான்கு குழந்தை பெற்ற பின்புதான் குழந்தைப் பேற்றில் இரு மடங்கு சிக்கல் இருக்கிறது. முதல் குழந்தை பெற்றதைக் காட்டிலும் ஐந்து மடங்கு ஆபத்து ஆறு குழந்தைக்குப் பின்பு ஏற்படும் பிரசவத்தால் ஏற்படுகிறதென்று கூறுகிறார்கள். ஆகவே மூன்று குழந்தைகளுக்குப்பின் மகப்பேறு இல்லாமல் கட்டுப்படுத்துவது நாட்டிற்கு நன்மை பயப்பதோடு, தாய்மார்களின் மரணத்தையும் குறைக்கிறது.

போதுமான பொருளாதார வசதியின்மை, தரமான உணவின்மை, அதிக மக்கள் பெருக்கம், தேவையான மருத்துவ, சுகாதார வசதிகள் இன்மை ஆகியவைதாம், நமது பிரச்னையாக இருக்கிறது. நாம் மகிழ்ச்சியாக இருக்க நமது மக்கள் தொகைப் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதுதான் முதல் வழியும் ஒரே வழியுமாகும். எனவே அனைவரும் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் ஆர்வம் காட்டி செயல்படுவோமாக.

---

"பஞ்சாயத்து ராஜ்", "இன்டென்சிவ் அக்ரிகல்சர்" "குருக்ஷேத்ரா" இதழ்களிலிருந்து இடம் பெறுபவை :
பக்கங்கள் : 1, 39 முதல் 45 வரை.

**Articles reproduced from 'Panchayati Raj' on pages : 39 to 42, 44 and 45, from " Intensive Agriculture "** on page 43 and from " Kurushetra " on page 1.

*With the best compliments of:*

## DALMIA CEMENT (BHARAT) Ltd.

DALMIAPURAM

H.O.: 4, SCINDIA HOUSE, NEW DELHI.

A DALMIA ENTERPRISE

*Manufacturers of:*

PORTLAND CEMENT
PORTLAND POZZOLANA CEMENT
REFRACTORIES

## K. C. A. D. Chidambara Nadar & Co.,

SATHUR

*Agents:*

Shaw Wallace & Company Limited, Madras
Standard Paper Industries, Madras
Esso Standard Easten Inc., Madras

*Branches:*

Sivakasi, Rajapalayam, Sankarankoil, Madras & Cochin

*Dealers in:*

Gelatine, Crocodile Brand Glue Flakes, Star Brand Fertilisers
Star Brand Animal Feeds, Water Proof Packing Paper Rolls
AND
Esso Match Wax, Esso Paraffin Wax
AND
Esso Industrial Lubricants, Etc.

மகளிர்—குழந்தைகள் பகுதி

சிறு சேமிப்புக் கட்டுரை

# ஒரு கல்லில் இரு மாங்காய்

[திருமதி என். புஷ்பவல்லி, சென்னை-24.]

சிறு சேமிப்பின் அவசியம் பற்றி எளிய தமிழில், இரத்தினச் சுருக்கமாக விளக்குகிறது, இக் கட்டுரை. அனைவரும், குறிப்பாக மகளிர் படித்துப் பயன் பெறவேண்டியது இது. 'கிராம நலத்'தில் இதழ் தோறும் மகளிர்-குழந்தைகளுக்காக அவர்களுக்குப் பயன்படும் விஷயங்கள்-இரண்டு பக்கங்கள் வெளியிடலாம்'' என்று அண்மையில் கருத்துத் தெரிவித்தார், தமிழ்க ஆளுநரின் மனைவியார் சர்தாரிணி உஜ்ஜல் சிங். (பக்கம் 37) அவர்களுடைய வேண்டுகோளை இந்த இதழிலேயே ''கிராமநலம்'' நிறைவேற்ற முன்வந்துள்ளது. தொடர்ந்துவரும் இதழ்களிலும் 'மகளிர்-குழந்தைகள் பகுதிக்கு' என்று, இரண்டு பக்கங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

—ஆசிரியர்.]

அப்போது எனக்குத் திருமணமான புதிது. குடும்ப நிர்வாகத்தில் நான் ஒரு கற்றுக்குட்டி. கணவர் தரும் பணத்தை அப்படியே செலவழித்துவிட்டு நிற்பேன். அப்போதெல்லாம் பக்கத்து வீட்டுக் கல்யாணி அம்மாள் திடீரென்று 2 தங்க வளையல்களைக் கொண்டுவந்து காட்டி, ''இது எப்படி இருக்கு புஷ்பா'' என்று கேட்பார். இன்னொருநாள் ஒரு காஞ்சீபுரம் பட்டுப் புடவையைக் கொண்டுவந்து விமர்சிப்பார். அந்த அம்மாளுக்கு ஏது இவ்வளவு பணம்? எப்படி இவையெல்லாம் வாங்குகிறார் என்று எனக்கு ஆச்சரியமாக இருக்கும். எனக்குப் பணம் சேமிக்கவேண்டும் என்ற ஆசைதான். ஆனால் எப்படி சேமிப்பது என்பதுதான் தெரியாமலிருந்தேன்.

ஒருநாள் அந்த அம்மாவிடம் கேட்டதற்கு "நீ ஒரு பைத்தியக்காரி. உன் கணவன் கொடுக்கிற பணத்தையெல்லாம் தீர்த்து விடுகிறாய். நான் அப்படி செய்வதில்லை. என் கணவர் வீட்டுச் செலவுக்குக் கொடுக்கும் பணத்தில் கொஞ்சம் கொஞ்சம் மீதம் பிடிக்கிறேன், அதிலிருந்து மாதாமாதம் சீட்டுக் கட்டுகிறேன்', என்று விளக்கினார்.

## தவறான பாதை

என் கணவருக்கு இந்த சீட்டுக் கட்டும் வேலை கடுகத்தனையும் பிடிக்காது. சீட்டு பிடிப்பது மோசடி என்று அடிக்கடி சொல்லுவார். எனவே, வேறு எப்படிச் சேமிப்பது என்ற கேள்வி எனக்குள் பிறந்தது. தங்க வளையல் ஆசை என்னை விட்டால்தானே? மீண்டும் அந்த அம்மாளை அணுகினேன். 'அப்படியா நீ ஒருத்தி' இதற்குப்போய் உன் கணவரின் சம்மதத்தை எதிர்பார்க்கிறாயா? அவருக்குத் தெரியாமல் கட்டு, என்று விஷயத்தைப் போட்டு உடைத்தார். நானும் அந்த அம்மாளின் யோசனையைப் பின்பற்றினேன்.

திடீர் என்று ஒருநாள் பக்கத்து வீட்டில் ஒரே கூச்சல். நான் எட்டிப் பார்த்தேன்.

''அவன் நல்லா இருப்பானா? என் வயத்திலே அடிச்சிட்டானே!'' என்று பதைபதைத்துக் கொண்டிருந்தார் கல்யாணி அம்மாள். விஷயம் இதுதான். கல்யாணி அம்மாள் இரண்டுமூன்று இடங்களில் சீட்டுக் கட்டுவது உண்டு. ஓரிடத்தில் 500 ரூபாய் சீட்டுக் கட்டிவந்தார். அதில் சுமார் 300 ரூபாய்வரை கட்டி முடித்துவிட்டார். இதற்கிடையில் சீட்டு பிடித்தவன், பணத்தோடு ஓடிவிட்டான். பாவம் கல்யாணி அம்மாள் வீட்டுச் செலவுகளைச் சுருக்கி, சிறுகச் சிறுக மிச்சம் பிடித்த பணம் இப்படி அடியோடு போய்விட்டால் எப்படி இருக்கும்?

நல்லவேளை, நான் சீட்டுக் கட்டுவது வேறு இடத்தில். இருந்தாலும் அன்றுமுதல் எனக்கு நிம்மதியான தூக்கமே கிடையாது. இது தவிர, திருச்சியில் சீட்டுக் கம்பெனி மோசடி, சென்னையில் மோசடி என்று அடிக்கடி பத்திரிகை செய்திகள் வந்து என் நிம்மதியைக் கெடுத்த வண்ணமாய் இருந்தன. என் கணவரிடமும் சொல்ல முடியாமல், ரகசியமாகவும் வைத்துக்கொள்ள முடியாமல் நான் பட்ட பாடு எனக்குத்தான் தெரியும்.

## புதிய பாதை

புது வருடப்பிறப்பன்று என் கணவர் எனக்கு ஒரு பரிசு கொண்டு வந்தார். சேலையோ, நகையோ அல்ல அது; பாஸ் புக்—தபாலாபீஸ் சேமிப்புக் கணக்குப் புத்தகம். இருப்பினும் அது அன்று எனக்கு தந்த மகிழ்ச்சி நான் வேறு எப்போதும் அடைந்ததில்லை. முதல் வேலையாக சீட்டுப் பணத்தைத் திரும்பப்பெற்று பாஸ் புத்தகத்தில்போட்டேன்.

இது நடந்து ஐந்தாறு ஆண்டுகளாகிவிட்டன. அஞ்சலகத்தில் பணம் போடப்போட, பணம் சேரச்சேர ஆசையும் வளர்ந்தது. அது இயற்கை. நீங்களும் பணம் சேர்க்கத் தொடங்கினுல் அந்த அனுபவம் புரியும். தொடர்ந்து நான் எங்கள் குழந்தைகள் பேரிலும் வளரும் மாத சேமிப்புத் திட்டத்தில் பணம் போட ஆரம்பித்தேன். இப்போது எங்கள் வீட்டில் சிறுசேமிப்புக் கணக்கு இல்லாதவர்கள் யாருமே இடையாது அப்போதைக்கப்போது பணம் சேர்த்து, திரும்ப பெற்றதும் வீட்டுத் தேவைகளான ரேடியோ, பீரோ இப்படி ஏதாவது வாங்கி வருகிறேன். அது மட்டுமல்ல, என் மூத்த குழந்தையின் கல்லூரிப் படிப்புக்கென்று இப்போதே பணம் கட்டி வருகிறேன்.

இதை நான் உங்களிடம் கூறவேண்டிய காரணம், நான் சேமிக்கத் தெரியாமலிருந்த காலத்தில், தவருன முறையில் சேமித்தபோது அனுபவித்த சிரமங்களையும் ஒழுங்காக சிறுசேமிப்பில் பணம் போட ஆரம்பித்தபின் ஏற்படும் நிம்மதியையும் பூரிப்பையும், ஒப்பிட்டுப்பார்த்தபின் அதை என்போன்ற ஆயிரக்கணக்கான சகோதரிகள், அதுவும் குறிப்பாக கிராமப்புற மாதர்கள் தெரிந்துகொண்டு பின்பற்ற வேண்டும் என்ற என் தணியாத ஆவல்தான்.

### ஒரே கல்லில் இரு மாங்காய்

நம் சுயநலமதில் பொதுநலமும் கலந்திருக்கிறது. நாம் அஞ்சலகத்தில் போடும் ஒவ்வொரு ரூபாயும், பத்திரமாக வட்டியோடு திரும்பக் கிடைப்பதோடு, நாட்



டின் திட்டங்களை நிறைவேற்றவும் பயன்படுகிறது. ஒரே கல்லில் இரு மாங்காய் விழவைப்பது இச் சிறுசேமிப்புத் திட்டம். எனவேதான் இதை மக்கள் இயக்கமாக மாற்றவேண்டும் என்று அடிக்கடி வலியுறுத்திப் பேசி வருகிருர், நமது மக்கள் திலகமும் சிறுசேமிப்பு ஆலோசனைக் குழுத் துணைத் தலைவருமான திரு. எம். ஜி. ராமச்சந்திரன் அவர்கள். அதே காரணத்தால்தான் தமிழகம் இந்தியாவில் சிறுசேமிப்பில் முதலிடம் வகிக்க வேண்டும் என்கிருர், மதிப்புக்குரிய நமது மாண்புமிகு முதல்வர் திரு சி. என். அண்ணாதுரை அவர்கள்.

ஆமாம்! மிகவும் சுலபமாகச் சொல்லி விட்டார்கள்! இந்த விலைவாசி உயர்வு காலத்தில் எப்படி முடியும் என்று நீங்கள் கேட்கலாம்.

மனம் உண்டானுல் மார்க்கம் உண்டு. நம் கணவன்மார்கள் சம்பாதிக்கிருர்கள். ஆயினும் குடும்பச் செலவுக்கான பணம் நம் கையில்தான் புழங்குகிறது. அதிலும் கிராமப்புறங்களில் வரவு செலவு அதிகம். அதாவது தோட்டத்தில் விளையும் பயிர் வகைகள் காய்கறிகள் ஆகியவை விற்ற பணம் தாய்மார்கள் கையில் வர வழியுண்டு. அவ்வப்போது நியாயமான செலவுகள் போக மீதிப் பணத்தை தபாலாபீஸில் போட்டு வைக்கலாம்.

### சில வழிகள்

சேமிப்புக்கான வழிகள் இதோ சில. சிக்கனம்தான் சேமிப்பின் முதற் படி. கண்ட கண்ட பொருள்கள் வாங்குவதையும் பொருள்களை வீண் விரயம் செய்வதையும் தடுத்து மிச்சப்படுத்துவது அடுத்த படி. மூன்ருவதாக ஒரு ஒழுங்குமுறை, கட்டுப்பாட்டை வகுத்துக் கொள்வது. எப்படியும் மாதம் இவ்வளவு பணத்தை மீதப்படுத்துவது என்று கொண்டால் நீங்கள் சேமிப்புக் கணக்கைத் தொடங்கவேண்டியதுதான். பணம் தானுக சேர ஆரம்பிக்கும். அடுத்து சேமிப்பதற்கு ஒரு குறிக்கோள், ஒரு லட்சியம் அவசியம். கிராமங்களில் எடுத்துக்கொண்டால் கிணற்றிற்கும் 'பம்பு செட்' வாங்குவதற்கு என்றும் வளரும் சேமிப்புத் திட்டத்தில் பணம் போட்டு வரலாம். மாடு வாங்குவதற்கு என்று பணம் சேர்க்கலாம். வசதி உள்ள விவசாயிகள் டிராக்டர்கள் வாங்குவதற்குக்கூட பணம் சேமித்து வரலாம்.

தாய்மார்களாகிய உங்களின் தேவையைப்பற்றிக் குறிப்பிடவில்லையே என்று கோபப்படாதீர்கள். உங்கள் மக்களின் நல்வாழ்வுதானே உங்கள் குறிக்கோளாக இருக்க முடியும். எனவே, நீங்கள் மகனின் மேற்படிப்புக்கென்ரே, மகளின் திருமணத்திற்கென்ரே, ஒரு குறிப்பிட்ட லட்சியத்துடன் அஞ்சலகத்தில் பணம் போட்டு வாருங்கள். பணம் சேரச்சேர நீங்கள் அதை சேமிப்பதற்காக எடுத்துக்கொள்ளும் சிறு சிரமங்கள் காற்ருய் பறந்துவிடும். தன்னை அறியாமல் பெருமிதம் அடைவீர்கள்.

சேர்ந்த பணத்தை அஞ்சலகத்தில் கணக்குத் துவக்க சிரமம் இல்லை. அதற்கு வசதியாக அரசினர் ஏறத்தாழ எல்லா அஞ்சலகங்களிலும் இந்த சேமிப்பு வங்கி வசதி ஏற்படுத்தியிருக்கிருர்கள். கிராமங்களில் உள்ள அஞ்சலகங்களில்கூட இந்த வசதி உண்டு. சமீபத்தில்தான் மத்திய அரசினர் சுமார் பத்தாயிரம் அஞ்சலகங்களில் இந்த திட்டத்தை விரிவுபடுத்தியுள்ளனர். இத் திட்டம் மத்திய அரசினரது எனினும், அதன் முதலீடுகளில் பெரும் பகுதி, மாநில அரசின் உபயோகத்திற்குத்தான் தரப்படுகிறது.

எனவே, சிறுசேமிப்பை ஒவ்வொருவரும் குடும்பத் திட்டமாகக் கொள்ளவேண்டும். மக்கள்மீது வரிப்பளுவைச் சுமத்தாமல், நல்ல நல்ல திட்டங்களை உருவாக்கித் தரவேண்டும் என்ற நல்லெண்ணம் கொண்ட அரசுக்கு நாம் செய்யக்கூடிய கைம்மாறு இதுதான்.

—o—

கிராம நலம் பகுதி-2
GRAMANALAM PART-2

# ஊராட்சி அரசிதழ்
# PANCHAYAT GAZETTE

(இந்தப் பகுதியில் ஊராட்சி, ஊராட்சி வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய அரசு ஆணைகள், குறிப்பாணைகள் விதிகள் முதலியவற்றின் தமிழாக்கம் சுருக்கமாக இடம் பெறுகிறது.)

—o—

## அகவிலைப்படி—அகவிலைப்படி விகிதங்களில் மாற்றம்—ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன

## ALLOWANCES—Dearness Allowance—Revised rates and pay limits for eligibility—Orders issued.

தமிழக அரசு ஊழியர்களின் அகவிலைப்படி விகிதங்களை 1—6—1968 முதல் (அதாவது 1—7—1968 அன்று கிடைக்கக் கூடிய, 1968-ம் ஆண்டு ஜூன் திங்களுக்குரிய ஊதியத்திலிருந்து) கீழ்க்கண்டவாறு மாற்றியமைப்பதென அரசு முடிவு செய்துள்ளது.

| ஊதிய வரம்பு. (1) | அகவிலைப்படி விகிதம். (2) |
|---|---|
| | ரூ. பை. |
| ரூ. 90-க்கு கீழே .. | 65 00 |
| ரூ. 90-ம் அதற்கு மேலும், ஆனுல் ரூ. 150-க்கு கீழே. | 91 00 |
| ரூ. 150-ம் அதற்கு மேலும், ஆனுல் ரூ. 210-க்கு கீழே. | 114 00 |
| ரூ. 210-ம் அதற்கு மேலும், ஆனுல் ரூ. 400-க்கு கீழே. | 137 00 |
| ரூ. 400-ம் அதற்கு மேலும், ஆனுல் ரூ. 450-க்கு கீழே. | 150 00 |
| ரூ. 450-ம் அதற்கு மேலும், ஆனுல் ரூ. 500-க்கு அதிகமில்லாமல். | 153 00 |
| ரூ. 500-க்கு அதிகமாக, ஆனுல் ரூ. 532-க்கு அதிகமில்லாமல். | ஊதியம் ரூ. 653-க்கு எவ்வளவு குறைகிறதோ அந்த அளவுத் தொகை. |

உயர்மட்ட அளவில் ஊதியம் பெறுவோருக்கு அகவிலைப்படி விகிதங்களில் மாற்றம் எதுமிருக்காது.

2. அகவிலைப்படி விகிதங்களை கணக்கிடுகையில் சிறப்பு ஊதியத்தையும் கணக்கில் கொள்ளவேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

3. உள்ளாட்சி நிறுவனங்களில் பணியாற்றும் ஆசிரியர்கள் நீங்கலாக உள்ள ஏனைய ஊழியர்களுக்கு, இதே போன்று கூடுதல் அகவிலைப் படியைப் பற்றிய ஆணைகள், கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையிலிருந்து தனியே பிறப்பிக்கப்படும். உள்ளாட்சி நிறுவனங்களிலும், உதவிபெறும் பள்ளிகளிலும், பணியாற்றும் ஆசிரியர்களுக்குரிய அகவிலைப்படியைப் பற்றிய ஆணைகள் அரசின் கல்வித் துறையிலிருந்து பிறப்பிக்கப்படும்.

* * *

(நிதித்துறையின் 29-5-1968ன் அரசு ஆணை எண் 464 ன் சுருக்கம்)

## சத்துணவுத் திட்டம்—சத்துணவுத் திட்ட செயற்குழுவை மீண்டும் அமைத்தல்—ஆணையிடப் படுகிறது

## Applied Nutrition Programme—Working Committee on Applied Nutrition Programme Reconstitution—Ordered

சத்துணவு திட்ட செயற்குழுவானது கீழ்க்காணும் உறுப்பினர்களைக்கொண்டு மீண்டும் அமைக்கப்படவேண்டு, மென்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

| | | |
|---|---|---|
| 1 | அரசுச் செயலாளர், கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறை. | தலைவர் |
| 2 | கிராம வளர்ச்சி இயக்குநர், சென்னை. | உறுப்பினர் |
| 3 | விவசாய இயக்குநர், சென்னை. | ,, |
| 4 | கால்நடை பராமரிப்பு இயக்குநர், சென்னை. | ,, |
| 5 | மீன்துறை இயக்குநர், சென்னை. | ,, |
| 6 | சுகாதாரப் பணிகள் குடும்பக் கட்டுபாடு இயக்குநர், சென்னை. | ,, |
| 7 | சுகாதாரப் பணிகள் குடும்பக் கட்டுப்பாடு இணை இயக்குநர், சென்னை. | ,, |
| 8 | மகளிர் நல இயக்குநர், சென்னை. | ,, |
| 9 | அரசு துணைச் செயலாளர், சுகாதார குடும்பக் கட்டுப்பாடு துறை. | உறுப்பினர் |
| 10 | அரசு துணைச் செயலாளர் (திட்டம்) நிதித் துறை. | ,, |
| 11 | கிராமவளர்ச்சி கூட்டுஇயக்குநர் (கல்வி) | ,, |
| 12 | தலைவர், மாநில சமுதாயநல ஆயம். | ,, |

கிராம வளர்ச்சி இயக்குநர் உறுப்பினராக இருப்பதோடு, குழுவின் செயலாளராகவும் இருப்பார்.

2. வேலைகளின் வளர்ச்சி பற்றி அறிவதற்கு, தேவை ஏழும்போதெல்லாம் குழுவின் கூட்டம் நடைபெறும் வேலையின் முன்னேற்றம் பற்றி அறிந்து கொள்வதற்கு, அவசியமேற்படும்போது, குழு சுற்றுப்பயணம் மேற் கொள்ளலாம். குழுவின் தலைமையிடம் சென்னையில் இருக்கும்.

கிராமவளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 25-3-1968 நாளிட்ட அரசு ஆணை எண் 591-ம் மற்றும் அதே துறையின் 20-4-1968 குறிப்பாணை எண் 49784/68-ன் சுருக்கம்

## புத்தகங்களும் வெளியீடுகளும்—கவிசுப்பிரமணிய பாரதியாரின் நூல்கள்—விற்பனைசம்பந்தமாக

## Books and Publications—Works of Kavi Subramania Bharathi—Availability—Regarding

கீழ்க்காணும் கவி சுப்பிரமணிய பாரதியாருடைய நூல்கள் தமிழக எழுதுபொருள், அச்சு இயக்குநரிடம் விலைக்குக் கிடைக்கும்.

| வரிசை எண் 1 | நூலின் பெயர் 2 | ஒரு நூலின் விலை 3 ரூ. | பை. | எழுதுபொருள் அச்சு இயக்குநரிடம் இருப்பு மொத்த பிரதிகள் 4 |
|---|---|---|---|---|
| 1 | வேதாந்த பாடல்கள் | 0 | 35 | 571 |
| 2 | குயில் | 0 | 50 | 1391 |
| 3 | சுயசரிதையும் பரிபாடல்களும் | 0 | 81 | 357 |
| 4 | பதஞ்சலியோக வித்திரம் | 0 | 37 | 598 |
| 5 | வேதரிஷிகளின் கவிதை | 0 | 37 | 548 |
| 6 | பகவத் கீதை முன்னுரை | 0 | 37 | 411 |
| 7 | சந்திரிகையின் கதை | 0 | 87 | 143 |
| 8 | தராசு | 0 | 50 | 514 |
| 9 | கட்டுரைகள் | 1 | 25 | 916 |
| 10 | கட்டுரைகள் கலைகள் | 1 | 00 | 74 |
| 11 | சமூகம் | 1 | 75 | 280 |
| 12 | பாரதி கதை திரட்டு | 0 | 25 | 400 |
| 13 | பாரதி மணி மலர் | 0 | 85 | 813 |
| 14 | அக்கினி | 1 | 00 | 25 |
| 15 | பாரதியாரும் அவருடைய நூல்களும் | 0 | 25 | 15 |
| 16 | பாரதி விளக்கம் | 0 | 50 | 847 |
| 17 | பாரதி நூல்கள் கவிதை | 1 | 62 | 16 |
| 18 | பாரதிநூல்கள் புத்தகம் I | 5 | 00 | 826 |
| 19 | பாரதிநூல்கள் புத்தகம் II | 5 | 00 | 849 |
| 20 | பாரதிநூல்கள் புத்தகம் III | 5 | 00 | 810 |
| 21 | பாரதிநூல்கள் புத்தகம் IV | 5 | 00 | 898 |

மேற்காணும் வெளியீடுகளை, ஊராட்சி ஒன்றிய பள்ளித் தலைவர்களின் கவனத்திற்கு கொண்டு வந்து, நிதி வசதிக் கேற்ப, இந்த நூல்களை தமிழக எழுதுபொருள், அச்சு இயக்குநரிடமிருந்து நேராகவே விலைக்கு வாங்குமாறு அவர்களுக்கு கூறும்படி, ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கிராமவளர்ச்சி இயக்குநரின் 1968-ம் ஆண்டு மார்ச் 2-ம் நாளிட்ட சுற்றறிக்கை குறிப்பாணை எண் 80776/67-ன் சுருக்கம்



## மக்கள் தொகைக் கணக்கெடுப்பு—ஊராட்சி ஒன்றிய வாரியான மக்கள் தொகைக் கணக்கு

## Census Figures, 1961—Panchayat Union-wise figures of population-Communicated

அலுவலக காரியங்கள் அனைத்திற்கும் (அரசு மானியங்கள் பெறுவது உட்பட) இந்த மக்கள் தொகைக் கணக்கே அதிகாரப்பூர்வமானதாக பின்பற்றப்படவேண்டும் என்பதற்காக, 1961-ம் ஆண்டு, மக்கள் தொகைக் கணக் கெடுப்பின்படி, ஊராட்சி ஒன்றியக் குழுக்களிலுள்ள மக்கள் தொகை கணக்குகள் (மக்கள் தொகை கணக்கெடுப்பு கண்காணிப்பாளரால் தரப்பட்டவாறு), மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாவட்ட வருவாய் அதிகாரிகள், வருவாய்க் கோட்ட அதிகாரிகள் மற்றும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் அனைவருக்கும் அனுப்பி வைக்கப்பட்டன. இந்த மக்கள் தொகை எண்ணிக்கைகளை வெளியிட்ட பிறகு, ஊராட்சி ஒன்றியங் களின் எல்லை வரம்புகளில், சில மாறுதல்கள் ஏற்பட் டுள்ளதால், மேற்கண்ட அரசு குறிப்பாணையில் கண்டுள்ள மக்கள் தொகைக் கணக்கிலும் மாற்றங்கள் தேவைப்படு கின்றன. ஊராட்சி ஒன்றியங்களின் எல்லை வரம்புகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள மாறுதல்களைக் கருத்தில் கொண்டு 1961-ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் சரியான மக்கள் தொகைக் கணக்கை, கிராம வளர்ச்சி இயக்குநர், தமது 9-1-1968 நாளிட்ட கடிதத்தில் அரசுக்கு தற்போது அளித்துள்ளார்.

2. இந்தக் குறிப்பாணையின் இணைப்பில் தற்போது அனுப்பி வைக்கப்பட்டுள்ள மக்கள் தொகை எண் ணிக்கையையே அலுவலக காரியங்கள் அனைத்திற்கும், அதிகாரப்பூர்வமான எண்ணிக்கையாக பின்பற்றவேண்டு மென்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

### இணைப்பு

| வரிசை எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | மக்கள் தொகை | வரிசை எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | மக்கள் தொகை |
|---|---|---|---|---|---|
| | வட ஆர்க்காடு (வடக்கு வேலூர்) | | | வடஆர்க்காடு (தெற்கு வேலூர்) | |
| 1 | கே.வி. குப்பம் | 73,250 | 1 | துரிஞ்சாபுரம் | 62,529 |
| 2 | ஆர்க்காடு | 69 625 | 2 | கீழ்பெண்ணாத்தூர் | 72,617 |
| 3 | திருப்பத்தூர் | 159,472 | 3 | கலசப்பாக்கம் | 74,801 |
| 4 | சோளிங்கபுரம் | 92,189 | 4 | போளூர் | 110,655 |
| 5 | வாலாஜா | 46,274 | 5 | வெம்பாக்கம் | 75,921 |
| 6 | காவேரிப்பாக்கம் | 93,141 | 6 | பெரணமல்லூர் | 64,493 |
| 7 | காணியம்பாடி | 58,919 | 7 | சேத்துப்பட்டு | 70,561 |
| 8 | நெமிலி | 82,118 | 8 | ஆரணி | 61,581 |
| 9 | கந்திலி | 64,490 | 9 | செங்கம் | 81,838 |
| 10 | மாதனூர் | 50,298 | 10 | செய்யாறு | 75 647 |
| 11 | பெரணம்பட்டு | 109,593 | 11 | அனக்காவூர் | 58,288 |
| 12 | அரக்கோணம் | 47,607 | 12 | கஸ்தம்பாடி | 66,682 |
| 13 | திமிரி | 92,888 | 13 | வந்தவாசி | 82,642 |
| 14 | ஆலங்காயம் | 61,216 | 14 | தெள்ளார் | 74,162 |
| 15 | காட்பாடி | 65,656 | 15 | திருவண்ணாமலை | 77,285 |
| 16 | குடியாத்தம் | 86,345 | 16 | புதுப்பாளையம் | 55,726 |
| 17 | நாட்றம்பள்ளி | 49,559 | 17 | தண்டராம்பட்டு | 85,139 |
| 18 | அணைக்கட்டு | 85,378 | | | |
| 19 | வேலூர் | 61,681 | | | |
| | | 1,449,699 | | | 1,250,567 |

**கிராம நலம்**

**ஆண்டு சந்தா ரூ. 2.**

தனிப் பிரதி விற்பனைக்குக் கிடையாது.

| வரிசை எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | மக்கள் தொகை |
|---|---|---|
| | **தென் ஆர்க்காடு (வடக்கு கடலூர்)** | |
| 1 | மேல்மலையனூர் | 86,267 |
| 2 | உளுந்தூர்பேட்டை | 76,987 |
| 3 | செஞ்சி | 95,977 |
| 4 | திருநாவலூர் | 67,704 |
| 5 | கோலியனூர் | 78458 |
| 6 | மரக்காணம் | 93,079 |
| 7 | காணை | 75,478 |
| 8 | திருவெண்ணெய் நல்லூர் | 77,169 |
| 9 | ஒலக்கூர் | 59,090 |
| 10 | முகையூர் | 104,967 |
| 11 | வானூர் | 90,934 |
| 12 | திருக்கோயிலூர் | 73,284 |
| 13 | கண்டமங்கலம் | 80,517 |
| 14 | விக்ரவாண்டி | 78,663 |
| 15 | மயிலம் | 75,371 |
| 16 | வல்லம் | 72,199 |
| | | 1,286,144 |

| வரிசை எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | மக்கள் தொகை |
|---|---|---|
| | **தென் ஆர்க்காடு (தெற்கு கடலூர்)** | |
| 1 | கீரப்பாளையம் (ஒரத்தூர்) | 75,102 |
| 2 | மேல்புவனகிரி | 70,049 |
| 3 | பண்ணுருட்டி | 97,888 |
| 4 | குறிஞ்சிப்பாடி | 110,850 |
| 5 | சின்னசேலம் | 80,566 |
| 6 | மங்களூர் | 89,443 |
| 7 | கள்ளக்குறிச்சி | 80,075 |
| 8 | தியாகதுருகம் | 60,332 |
| 9 | பரங்கிப்பேட்டை | 84,206 |
| 10 | நல்லூர் | 80,341 |
| 11 | கடலூர் | 97,774 |
| 12 | நெல்லிக்குப்பம் | 115,655 |
| 13 | குமராட்சி | 80,274 |
| 14 | கம்மாபுரம் | 90,031 |
| 15 | சங்கராபுரம் | 75,435 |
| 16 | ரிஷிவந்தியம் | 66,890 |
| 17 | கல்ராயன் குன்று | 20,180 |
| 18 | காட்டுமன்னார் கோயில் | 83,672 |
| 19 | விருத்தாசலம் | 87,057 |
| | | 1,545,820 |

—தொடரும்.

**எதிர் அட்டைப் பக்கம்—பட விளக்கம்:**

பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்கள், கிழக்குத்திசை நாடுகளில் சுற்றுப் பயணம் செய்ய, சென்னை வழியாக புறப்பட்டுச் சென்றபொழுது, மீனம்பாக்கம் விமான நிலையத்தில் மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவரை வழியனுப்பி வைத்தார் (19-5-68).

## இந்த இதழில்...


| | பக்கம் |
|---|---|
| தலைவாயிலின் திறவுகோல் .. .. | 1 |
| மூன்று உண்மைகள் .. .. | 3 |
| பொன்னி வள நாட்டினரே புறப்படுவீர் .. | 5 |
| நகராட்சித் தலைவர்கள் ஆணையாளர்கள் கூட்டுமாநாடு | 7 |
| எழுத்தாளர் கார்க்கி-அகிலன் .. | 9 |
| கூட்டுறவு இயக்கம் எட்டுச் சுரைக்காயா? .. | 13 |
| ஆளுநர் மாளிகையிலே (சிறப்புக் கட்டுரை) .. | 29 |


## அடுத்த இதழில்...

முதல் அமைச்சர்கள் மாநாடு—படங்களுடன்

திருவள்ளுவர் (சிறப்புக் கட்டுரை)
—திரு மு. ரா. பெருமாள் முதலியார்

அனைத்துலகுக்கும் அதுவே பொதுமறை

திருவள்ளுவர் ஆண்டு—ஆராய்ச்சிக் கட்டுரை

விலங்கின வளர்ப்பு—நகராட்சிகளின் பொறுப்புகள்.


ஆசிரியக் குழுத் தலைவர் :
திரு T. A. S. பாலகிருஷ்ணன், I.A.S.

வெளியிடுபவர் : திரு . ஆர். சுவாமிநாதன், ஐ. ஏ. எஸ்.
(பொறுப்பு)

ஆசிரியர் : திரு எஸ். வேங்கடசாமி, எம். ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Director of Rural Development, Madras-9. Chairman of the Editorial Committee: Thiru T. A. S. Balakrishnan, I.A.S., Wrapper printed at Vadapalani Press, Madras-26.





**வட ஆர்க்காடு மாவட்ட கூட்டுறவு சர்க்கரை ஆலை**

(வரையறுக்கப்பட்டது)

வட புதுப்பட்டு அஞ்சல், ஜோலார்பேட்டை வழி

தமிழ்நாடு

62738

| | | |
|---|---|---|
| அங்கீகாரம் பெற்ற பங்கு மூலதனம் | .. | ரூ. 1,00,00,000 |
| செலுத்தப்பட்ட பங்கு மூலதனம் | .. | ரூ. 79,82,000 |
| ஆலையில் கரும்பு அரைப்புத் திறன் | .. | 1250 மெ. டன்கள். |
| ஆலையின் விவகார எல்லை | .. | திருப்பத்தூர், வேலூர், குடியாத்தம், தாலூகாக்கள். (வட ஆர்க்காடு). |

அங்கத்தினர்கள், அலுவலர்கள், தொழிலாளர்கள் யாவரின் உழைப்பாலும் ஒத்துழைப்பாலும் ஆலையின் உற்பத்தி முதல் தரமாகவும், தரத்தில் உயர்ந்தும் ஓங்கி நிற்கிறது.

அங்கத்தினர்களின் நல்வாழ்வே எங்கள் குறிக்கோள்.

எச். எச். ஷாகிர்,
பொது மேலாளர்.

மு. பொ. வடிவேல்,
தலைவர்.

தந்தி : "SUGARS" (ஆம்பூர்)

தொலைபேசி : 264, 269 (ஆம்பூர்)

நிறுவனம் : 1942

தந்தி : செண்ட்ரல்ஸ்
தொலைபேசி எண் : 50

# தென்னார்க்காடு மாவட்ட கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம் லிமிடெட்,

நெ. இ. 1487, கடலூர்-1.

* * *

மாவட்ட விவசாயிகளுக்குத் தேவையான இரசாயன உரங்கள், சங்கத்தின் வாயிலாக வினியோகிக்கப்படுகின்றன. மற்றும் தரமான நெல், அரிசி, பருப்பு வகைகள், கோதுமை பண்டங்கள், சர்க்கரை, காப்பிக்கொட்டை, மற்றும் பல சரக்கு சாமான்கள் மொத்த விற்பனை செய்யப்படுகின்றன. குழந்தை உணவு களும், அலங்கார சாமான்களும், சைக்கிள் டயர், டியூப்களும் விற்பனை செய்யப் படுகின்றன.

கூட்டுறவு மார்க் கலப்பு உரங்கள், நெல், கரும்பு, வேர்க்கடலை போன்ற பயிர்களுக்கு ஏற்றவாறு சங்கத்தில் தயாரிக்கப்படுகின்றன. எங்கள் கலப்பு உரங்கள் விவசாயிகளுக்கு நல்ல மாகூலை அளிக்கின்றன.

கடலூர் முதுநகர் பக்தவத்சலம் மார்க்கெட்டில் உள்ள சங்கத்தின் ஜவுளி விற்பனை நிலையத்தில், தற்கால நாகரீகத்திற்கேற்ற நவீன ரகங்களில் பல தரப்பட்ட மில்களின் வேஷ்டி, புடவைகளும், சர்ட்டிங், கோட்டிங் மற்றும் நைலான், சாட்டின், டெரிகாட்டன், டெர்லின், சில்க் வகையராக்களும், திருப்பூர் ''ஸ்டைலக்ஸ்'' பனியன்களும், நேர்த்தியான கைத்தறி துணிகளும் நயமான விலையில் கிடைக்கும்.

''சேவையே எங்கள் குறிக்கோள்''

மு. சுப்பையா, பி.காம் (ஹானர்ஸ்)
கூட்டுறவு துணைப் பதிவாளர்/செயலாளர்.

டி. டீ. முத்துக்குமாரசாமி நாயுடு,
தலைவர்.






# கிராமநலம்

தமிழக அரசின் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை மாத இதழ்

கதிர் 13 ஜூன் 1968 நெல் 9


செய்திப் பேழை :

## தமிழகத்தின் தலைநகரில்
# முதலமைச்சர்கள் மாநாடு

சென்னையில் 1968 ஜூன் திங்கள் 11, 12 நாட்களில் நடைபெற்ற மாநில முதலமைச்சர்கள்—சமுதாய நலத் திட்டம், கூட்டுறவு பற்றிய மாநில முதல் அமைச்சர்கள் மாநாடு—வரலாற்றுச் சிறப்பு மிகுந்த மாநாடாகும்.

சென்னை நகர் வனப்பின் ஓர் அங்கமாகத் திகழும் ராஜாஜி மண்டபத்தில் கூடியது முதலமைச்சர்கள் மாநாடு. புதிய பொலிவும் வண்ண நிறைவும் பெற்றுத் திகழ்ந்த அந்த மாமண்டபம், காண்போரின் கருத்தை எல்லாம் கவர்ந்ததில் வியப்பேது?

ஜூன் திங்கள் 11-ம் நாள் காலை 10 மணிக்கு மாநாடு தொடங்கியது. முதல் நாள் மாநாட்டின் நோக்கம், சமுதாய வளர்ச்சித் திட்டங்களைப்பற்றியும், அவற்றின் எதிர்கால ஆக்கத் திட்டங்களைப் பற்றியும் ஆராய்வதாகும்.

மாநாட்டுக்கு வந்திருந்த மேதகு தமிழக ஆளுநர், மத்திய உணவு அமைச்சர் திரு ஜகஜீவன்ராம், மத்திய அரசின் சமுதாய நல ராஜாங்க அமைச்சர் திரு குருபாதசாமி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர், ஏனைய மாநில முதலமைச்சர்கள், சமுதாய நல அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகியோரை மாண்புமிகு தமிழக உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி வரவேற்றார்.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி தமது வரவேற்புரையில் குறிப்பிட்டதாவது:—

''தமிழகத்தில் புதிய அரசு 1967–ம் ஆண்டு மார்ச் திங்களில் பொறுப்பை ஏற்றபோது, சமுதாய வளர்ச்சித் திட்டத்தின். நடைமுறை பற்றி, பொது மக்கள் கூறிவந்த பல்வேறு குறைபாடுகளைக் கவனிக்க நேரிட்டது. சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களுக்காக 10 கோடி ரூபாய் செலவிடப்படுவதாகவும், அந்தத் தொகையில் 6 கோடி ரூபாய் அலுவலர்களுக்காக செலவிடப்படுவதாகக் கூறப்பட்டது. எனவே, சமுதாய நலத் திட்டங்களைப் பற்றி கவனமாக ஆராயவேண்டிய நிலை எங்களுக்கு ஏற்பட்டது.


எதிர்ப்பக்கம் : சமுதாய நலத்திட்டம், கூட்டுறவு பற்றிய மாநில முதலமைச்சர்கள் மாநாட்டில், தமிழக முதலமைச்சர் அவர்கள் உரை நிகழ்த்துவதை, எதிர்ப்பக்கத்தில் காணலாம்.
←

தமிழகத்திலுள்ள 374 ஊராட்சி ஒன்றிய மன்றங்களின் வாயிலாக 1967–68-ம் ஆண்டில் கிராமப்புறங்களிலே செலவான தொகை 55 கோடியே 79 லட்சம் ரூபாய் என்று நாங்கள் மதிப்பிட்டோம். பல்வேறு திட்டங்களுக்கு செலவு விவரம் வருமாறு:—

| | | (ரூபாய் கோடி கணக்கில்) |
|---|---|---|
| 1. | தொடக்கக்கல்வி மானியம் | 21.23 |
| 2. | ஈட்டு மானியம் .. | 10.06 |
| 3. | பராமரிப்பு, வளர்ச்சித் திட்டப் பணிகளுக்கான மானியம் .. | 17.70 |
| 4. | இதர பல்வகை மானியங்கள் .. | 1.10 |
| 5. | அலுவலர்களுக்கான செலவு (அரசு, ஊராட்சி ஒன்றியங்கள்) .. | 5.70 |
| | மொத்தம் .. | 55.79 |

இந்த 55 கோடியே 79 லட்ச ரூபாயில், ஊராட்சி ஒன்றியங்கள் தாமாகவே திரட்டிக்கொள்கின்ற தொகை 8 கோடியே 60 லட்சம் ரூபாயாகும்.

மாநில அரசின் நிதிநிலை அறிக்கையின் படி, 1967–68-ம் ஆண்டின் மொத்த செலவு 217 கோடியே 19 லட்ச ரூபாயாகும். இந்தப் புள்ளி விவரங்களை நன்கு ஆராய்ந்ததில், நிர்வாகச் செலவுக்காக ஆகும் 5 கோடியே 70 லட்சம் ரூபாய் நியாயமானதென்றே ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

உள்ளூர் வளர்ச்சிக்கான வேலைத் திட்டங்கள் (Local Development Works) பெருகிய வண்ணம் இருக்கின்றன. வரவினங்களின் பற்றாக்குறையாலும், மத்திய அரசின் மானியங்கள் குறைவாக இருப்பதாலும், இத்தேவைகளை நாங்கள் நிறைவேற்ற இயலவில்லை. பன்னெடுங்காலமாக கிராம மக்கள், தங்களுடைய வளர்ச்சியை எதிர்நோக்கி காத்திருக்கிறார்கள். அவர்களின் தேவைகளை நாம் நிறைவேற்றாவிடில், அவர்கள் பொறுமையை இழந்து விடுவார்கள். எனவே, நம்முடைய நிதிநிலை திட்டத்தில் கிராம வளர்ச்சிக்கென அதிகமான தொகையை நாம் ஒதுக்க வேண்டுமென்று இங்கே கூடியுள்ள முதலமைச்சர்கள், மத்திய அமைச்சர்கள் ஆகியோர்களிடம் பணிவன்புடன் தெரிவித்துக்கொள்கிறேன். கிராம வளர்ச்சிக்கென, மத்திய அரசும் அதிகமான நிதிகளை ஒதுக்க வேண்டும்.

## ஊழையும் உப்பக்கம் காண்போம்!

உள்ளூரிலேயே நன்கொடைகளை பெருமளவில் திரட்டக்கூடிய வாய்ப்புகளைப் பற்றியும் நாம் ஆராய வேண்டும். "சிரணி" என அழைக்கப்பெறும், மக்கள் அணி ஒன்றை, தமிழக முதலமைச்சர் நிறுவியுள்ளார். இந்தச் "சிரணி" தொடக்கத்தில் ஒரு பரபரப்பை உண்டாக்கியது. இது ஒரு சேனை அல்ல. இதற்கு அரசியல் முத்திரையோ, அல்லது வேறு எந்தச் சார்போ இல்லை. ஊராட்சி ஒன்றியம் ஒவ்வொன்றிலும். 50 பேர் வீதம் ஒவ்வொரு மாவட்டத்திலும், 1000 பேருக்கு குறையாத தொண்டர்கள் தாமாக முன் வந்து உழைப்பு அல்லது பணம் மற்றும் பொருள்களை உள்ளாட்சி நிறுவனங்களுக்கு வழங்குகிறார்கள். பள்ளிகளை கட்டி, சாலைகளை அமைத்து, அல்லது கால்வாய்களை தூர் எடுத்துச் சீர்படுத்தி தொண்டாற்றுகின்றார்கள். மருத்துவர்கள் பொறியாளர்கள், ஆசிரியர்கள், தச்சர்கள் செங்கல் தயாரிப்போர், கொத்து வேலை செய்வோர் மற்றும் இதர தொழில் நுட்பம் அறிந்த உழைப்பாளர்கள் இச்சிரணியில் சேர்ந்துள்ளனர். இச்சிரணித் தொண்டர்களால் செயலாற்றப்படுகின்ற பணிகளால் ஏற்படுகின்ற ஆக்க வேலைகளின் காரணமாக, அரசாங்கச் செலவின் அளவு குறைகிறது. இது பற்றி அச்சடிக்கப்பட்ட சிறு வெளியீடு ஒன்று, பிரதிநிதிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்த இயக்கத்திற்கு சிறப்பான வரவேற்பு கிடைத்துள்ளது.

கிராம வளர்ச்சியில் அடுத்த கட்டமாக கவனம் செலுத்தியது வேளாண்மை முன்னேற்றமாகும். ஊராட்சி ஒன்றியங்களுக்கு, கடந்த ஒன்பது மாதங்களாக நாங்கள் அளிக்க ஒப்புக்கொண்டவை வருமாறு:

| | |
|---|---|
| இயந்திரக் கலப்பைகள் | 559 |
| தெளிப்பான்கள் | 2059 |
| சமுதாயக் கிணறுகள் | 1059 |
| சிறு கலப்பைகள் | 1059 |
| காய்கறித் தோட்டம் | 5059 |

நமது அன்பிற்குரிய முதலமைச்சரின் பிறந்த நாளான 15–9–1968-க்குள், மேற் கண்ட குறியீட்டு அளவுகள் அனைத்தும் நிறைவேறி, உழவர்களுக்கு நற்பலன் கிடைக்கும்;

'ஊழையும் உப்பக்கம் காண்பவர் உலைவின்றித்
தாழாது உஞற்று பவர்"

என்பது தமிழ் மறை.

கிராமங்களை மேம்பாட்டைச் செய்யும் தாராள முயற்சியில் ஈடுபட்டுள்ள நாம் வெற்றியடைவது உறுதியாகும்.

### மேதகு ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங்

மாநாட்டை தொடங்கி வைத்த மேதகு ஆளுநர் சர்தார் உஜ்ஜல் சிங் அவர்கள், சமுதாய வளர்ச்சித் திட்டத்தில் நாம் ஆற்றியுள்ள சாதனையின் பட்டியலை எடுத்துரைத்தார்.

மேதகு ஆளுநர் தமது உரையில் குறிப்பிட்டதாவது:–

"கிராமங்களின் பரபரப்பையும் மக்கள் தொகையையும் கருதி, கிராம வளர்ச்சித் திட்டங்கள் உருவாகவும், ஒருங்கிணைந்த முறையில் அமைவதும் அவசியமாகும். தமிழகத்தில் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில், 500-க்கு மேல் மக்கள் தொகையுள்ள ஒவ்வொரு சிற்றூரிலும் குடிநீர், பள்ளி, மருத்துவ வசதி, சாலை வசதிகள் செய்து தரப்படும் என்றும் நம்புகிறேன். இதற்குப் பெருமளவு பணம் செலவானாலும், ஒதுக்கத் தயங்கக் கூடாது.

வேளாண்மைக்குத் தேவையான கடன் வசதிகள், உரம் முதலியன உரிய நேரத்தில் விவசாயிகளுக்குக் கிடைக்கச் செய்வது ஊராட்சி ஒன்றியங்களின் கடமையாகும்".

"குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரச்சாரத்திலும் ஊராட்சிகளுக்கு நிரம்ப பங்குண்டு" என்று ஆளுநர் சுட்டிக்காட்டினார்.

"சமுதாய வளர்ச்சித் திட்டம் வெற்றி பெற, தேர்ந்தெடுக்கப்பட்ட பயிற்சி பெற்ற நல்ல மேற்பார்வை அதிகாரிகளை நியமித்தல் வேண்டும் என்றார் கவர்னர். மகாராஷ்டிரம், தமிழகம், குஜராத் ஆகிய மாநிலங்களில் ஊராட்சி முறை வெற்றி பெறக் காரணம், தீவிர கவனம் செலுத்தியதனால்தான். 500-க்கு மேற்பட்ட மக்கள் வாழும் கிராமத்தில் 4-வது திட்டக் காலத்தில் அதிக குடிதண்ணீர் வசதியும் சாலை வசதியும் கிடைக்கும். நம் நாட்டு தலைவர்கள் கனவு கண்டு வந்த சமுதாயத்தை ஏற்படுத்த கூட்டுறவின் பணி முக்கியம் வாய்ந்தது" என்று ஆளுநர் வலியுறுத்தினார்.

## சமுதாயம் செழிக்க...

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை அவர்கள் தமது சிறப்புரையில் குறிப்பிட்டதாவது:

"கிராமப் பொருளாதார வளர்ச்சிக்கு சமுதாய நலத் திட்டமும் கூட்டுறவுத் திட்டங்களும் மிக முக்கியமானவை. இத்துறையில் கடந்த 15, 20 ஆண்டுகளில் நாம் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டோம். பணியாற்றினோம்.

ஆனால் இப்பொழுது அந்தத் திட்டங்கள் நேரிய முறையில் செயல்படுகின்றனவா? நாம் எதிர்பார்த்த லட்சியம் ஈடேறுகிறதா? வேலை முறைகளில் மாற்றம் ஏதேனும் தேவையா என்பதையும் ஆராயும் கட்டத்திற்கு வந்திருக்கிறோம். இது பற்றி நன்கு தீவிரமாக சிந்தித்து முடிவு எடுத்து செயல்பட வேண்டும். அதோடு எதிர்காலத்தில் இந்தச் சமுதாய வளர்ச்சித் திட்டங்கள், எந்த அடிப்படையில் எந்த இலட்சியத்தோடு இயங்கவேண்டும் என்பதை ஆராய்வது பொருத்தமானது.

கிராம வளர்ச்சித் திட்டங்களில், பொறுப்பு அதிகாரிகளுக்கா அல்லது தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கா என்ற பிரச்னையில் தொடக்க காலத்திலே இருந்து முரண்பாடான கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளுக்குத்

தான் அதிகாரம் இருக்கவேண்டும் என்று ஒருபுறம் கேட்கப்படுகிறது.

கிராம வளர்ச்சித் திட்டங்களுக்காக கோடிக்கணக்கில் பணம் செலவிடப்படுவதால் அவ்வாறு செலவிடப்பட்ட பணத்திற்கு சட்ட மன்றத்தில் பதில் கூற வேண்டிய பொறுப்பு அதிகாரிகளுக்கே இருப்பதால், இதில் அதிகாரிகளுக்கே அதிக அதிகாரம் இருக்கவேண்டும் என்று இன்னொரு தரப்பில் கூறப்படுகிறது.

ஆகவே இவ்விரண்டுக்கும் வழி காணும் வகையில் கிராமப் பணிகளுக்காக ஒதுக்கப்பட்ட பணம் உரிய வகையில் செலவிடப்பட்டு, எதிர்பார்க்கும் பலன் கிடைக்கும் வகையில் ஒரு மாற்றுத் திட்டத்தைக் கண்டுபிடிப்பது நலம். இதற்கான வழிகளை தமிழக அரசு மிகுந்த கவனத்துடன் ஆராய்ந்து கொண்டு இருக்கிறது.

கடந்த ஆண்டு தமிழகத்தில் புதிய அரசு பதவி ஏற்றவுடன், இத்துறையில் மிகுதியாக பல பதவிகள் இருப்பதாக நிபுணர்கள் கூறினர். ஒருசமயம் அப்பதவிகளை குறைக்கலாமா என்று அரசு யோசித்தது. அப்படி செய்தால், பெருத்த அளவு வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும் என்ற காரணத்தால் அதிக அளவில் உள்ளவர்களை மேலும் பயனுள்ள வகையில் பயன்படுத்துவதற்கான வழி வகைகளை அரசு ஆராய்ந்து வருகிறது. அதாவது அவர்களுக்கு அதிக வேலை தரப்பட்டு மிகுந்த பயனுடையவர்களாக ஆக்கப்படுவார்கள்.

ஊராட்சி வளர்ச்சி முறை திட்டங்களில் இன்னொரு முக்கிய பிரச்னையாக இருப்பது மூன்று மட்டங்களில் ஊராட்சி வளர்ச்சித் திட்டங்கள் இயங்குவதா அல்லது வேறு முறை வேண்டுமா என்பது. மூன்று மட்டங்கள் முறையில் தான் தமிழ் நாட்டில் ஊராட்சி வளர்ச்சி முறை இயங்குகிறது. அதையொட்டி, மாவட்டந்தோறும் மாவட்ட வளர்ச்சி மன்றம் என்கிற அமைப்பு உள்ளது. வேறு மாநிலங்களில் இதை 'ஜில்லா பரிஷத்' என்று அழைக்கிறார்கள். இந்த மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களுக்கு அரசாங்க அதிகாரியான கலெக்டர் தலைமை வகிப்பதா அல்லது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி தலைமை வகிக்க வேண்டுமா என்பது பற்றியும் நீண்டகாலமாக சர்ச்சை இருந்துவருகிறது. தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரதிநிதிதான் தலைமைவகிக்க வேண்டுமென்ற கோரிக்கையும் இப்பொழுது வலுப்பட்டு வருகிறது. ஆனால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதி தலைமை வகித்தால், மாவட்டத்திலுள்ள ஏனைய மாவட்ட அதிகாரிகளின் பொறுப்புகளையும் தொடர்புகளையும் வளர்ச்சித் திட்டங்களுடன் இணைப்பதில் இடையூறு நிகழலாம். ஆகவே இதைப் பற்றியும் ஆராய்ந்து முடிவு காண்பது அவசியமாகிறது.

தமிழகத்தில் ஏறத்தாழ 12,000 ஊராட்சிகள் உள்ளன. தங்களுடைய தேவைகளை நிறைவு செய்துகொள்ளுமளவில் நிதி வசதி பெற்றவையல்ல அவை. விளக்கு வசதி, துப்புரவு ஆகியவற்றிற்கு கூட போதிய அளவு பணம் ஒதுக்க முடியவில்லை என்பது கண்கூடு. இந்நிலையை எப்படி நிறைவு செய்யலாம்? செலவைக் குறைத்தா அல்லது வருமானத்தை அதிகரித்தா என்பதையும் ஆராய்வது அவசியமாகும். ஒவ்வொரு ஊராட்சிக்கும் ஓர் எழுத்தரை நியமித்தாலும் ஆண்டுதோறும் அரசுக்கு ஆகும் செலவு 45 லட்சம் ஆகும்.

கிராம வளர்ச்சிப் பணிகளுக்காக ஒதுக்கப்படும் பணம் போதாது. ஒதுககப்பட்ட பணத்தைக்கொண்டு கிராமப் பகுதிகளில் குடிநீர், விளக்கு வசதி, சுகாதார வசதிகள் போன்ற அடிப்படை வசதிகளைச் செய்துகொள்ள முடியவில்லை. குறிப்பாக கிராம, குடி தண்ணீர் திட்டத்திற்காக ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் ஆண்டு ஒன்றுக்கு 15,000 ரூபாய் என்று கொடுக்கப்படுகிறது. இது சிறிதளவுகூட போதாது. இந்த 15,000 ரூபாயில் ஆண்டிற்கு 2 கிணறுகளைத் தான் வெட்ட முடியும். இது போதுமானதென்று சொல்ல எவரும் துணிய மாட்டார்கள்,

இந்த வேகத்தில் செல்வோமானால், கிராம மக்களுடைய அத்தியாவசியத் தேவையான குடி நீர், விளக்கு வசதி, சுகாதார வசதி போன்றவற்றை

[16-ம் பக்கம் பார்க்க]






# கூட்டுறவுகளின் மூலம் விற்பனை வாய்ப்புக்களை அவனுக்குதவுகிறது ஸ்டேட் பாங்க்

இன்று பொன் கொழிக்கும் அவனுடைய அறுவடைக்குக் காத்துநிற்கிறது சந்தை. காரணம், கூட்டுறவுகளின் மூலம் சமயத்திலே கைகொடுக்க முன்வந்த ஸ்டேட் பாங்கின் பேருதவியே. 2200 கிளைகளுக்கு மேல் உடைய ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியாவும் அதன் துணையகங்களும் அவை மூலம் ஆண்டுதோறும் கூட்டுறவு பாங்குகளுக்கு மட்டுமின்றி, விற்பனையிடல் மற்றும் பிராஸஸிங் கழகங்கள், சர்க்கரை ஆலைகள், தொழில்துறைக் கூட்டுறவுகள், நுகர்வுப் பண்டக் கூட்டுறவு மண்டிகள் ஆகியவை போன்ற கூட்டுறவுகளுக்கே நேரிடையாக நிதி உதவியும் பிற உதவிகளும் வழங்குகின்றன.

## சேவை புரிவதற்கே ஸ்டேட் பாங்க்

**சிறப்புக் கட்டுரை :**




திரு மு. ரா. பெருமாள் முதலியார், எம்.ஏ., எல்.டி., தமிழ் வளர்ச்சித் துறை இயக்குநர்.

திருவள்ளுவர் 1999 ஆண்டுகளுக்கு முன் தோன்றியவர். இந்த ஆண்டு தை மாதத்தில் அவருடைய இரண்டாயிரம் ஆண்டுவிழா நடைபெறவிருக்கிறது. அவர் எழுதியருளிய திருக்குறளை உலக அறிஞர் அனைவரும் பாராட்டுகின்றனர். அது பல மொழிகளில் பெயர்த்தெழுதப் பெற்றிருக்கிறது. அது அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பால்களையுடையது. அதனால் அது முப்பால் என்னும் பெயரையும் பெற்றுள்ளது. அது 133 அதிகாரங்களைக் கொண்டது. ஒவ்வோர் அதிகாரத்திலும் 10 பாக்கள் இருக்கின்றன. இந்தப் பாக்கள் குறள் வெண்பா வகையைச் சேர்ந்தவை. வெண்பா என்பது வெண்டளை யால் ஆனது என்பதையும் செப்பலோசையை உடையது என்பதையும் அனைவரும் அறிவர்.

அறிஞர் அடையும் வியப்பு....

குறள் வெண்பாவில் ஏழு சீர்களேயிருக்கும். இந்த ஏழுசீர்களை வைத்துக்கொண்டு எத்தகைய அரிய கருத்துக்களை ஒவ்வொரு குறளிலும் வள்ளுவர் எழுதியிருக்கிருர் என்று எண்ணிப் பார்க்கும்போது, அறிஞர் அடைகின்ற வியப்புக்கு அளவேயில்லை.

இதனை இதனுல் இவன்முடிக்கும் என்றாய்ந்து
அதனை அவன்கண் விடல்.

காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
பேதைமை யெல்லாம் தரும்.

அரசுத்துறைகளும், தனியார்துறை நிறுவனங்கள், நிலையங்கள், அமைப்புக்கள் ஆகியவைகளும் தங்களுக்குத் தேவையான அலுவலர்களைத் தெரிந்தெடுக்கும் நேரத்தில், மேலே காட்டிய இரண்டு குறள்களிலுமுள்ள வள்ளுவர் அறிவுரையை மனத்திற் கொள்வார்களானுல் எவ்வளவு நன்மையுண்டாகும்; சிறப்புத் தகுதிகளையுடைய தனிமனிதர்கள் எத்தகையதொரு மனநிறைவை எய்துவர். சமுதாயமும் எந்தெந்த நிலையில் எந்தெந்தத் துறையில் என்னென்ன பயனை எய்த முடியுமோ அவ்வப்பயன் அனைத்தையும் முழு நிறைவுபெற்ற நிலையில் அடையுமன்றே ?

இந்த இரண்டு குறள்களையும் நான் பள்ளிப் பருவத்திலேயே மனப்பாடஞ் செய்திருந்தேன். ஆனுல், அவற்றின் பொருட்செறிவை அப்போது நான் அறியவில்லை. இப்போது வாழ்க்கையில் அடிபட்டு ஓரளவு முதிர்ச்சியுற்றிருக்கிற நிலையில், அக் குறட்பாக்களின் பொருளை நன்கு அறிகிறேன். மேலும், தமிழிலேயே குறளைத் தவிர ஏனைய பல நூல்களை இப்போது படித்திருக்கிறேன். ஆங்கிலத்திலும் பல சிறந்த



நூல்களைப் படித்திருக்கிறேன். ஏனைய மொழிகளிலுள்ள சிறந்த நூல்கள் பலவற்றை ஆங்கில மொழிபெயர்ப்பில் படித்திருக்கிறேன். படித்தவற்றைப் பற்றி ஓரளவு சிந்தித்தும் இருக்கிறேன். இன்றைக்கு எனக்கிருக்கும் நூலறிவு, பட்டறிவு, சிந்தனையாற்றல் ஆகியவற்றையெல்லாம் வைத்துக் கொண்டு இந்தக் குறட்பாக்களின் பொருளை நினைக்கும்போதெல்லாம் முன்பில்லாத வியப்பும் இறும்பூதும் எய்துகிறேன். அதனுற்றுன் ''தீதற்ருேர் உள்ளுதொறுள்ளதொறுள்ள முருக்குமே வள்ளுவர் வாய்மொழி மாண்பு" என்று அந்தக்காலப் புலவரொருவர் பாடினுர்.

> அடுத்த ஆண்டில் (1969-ல்) திருவள்ளுவப் பெருந்தகையின் ஈராயிரம் ஆண்டுவிழா சிறப்பான முறையில் நடைபெற இருக்கிறது. திருக்குறள் உலகப் பொது மறை. தனி மனிதனின் நல்வாழ்வுக்கும் சமுதாய அறநெறிக்கும் உள்ளங்களின் இன்ப அன்பு வாழ்வுக்கும் அடிப்படையான கருத்துக்களைக் கோடிட்டுக் காட்டும் தனிப்பெருமை திருக்குறளுக்கு உண்டு. தமிழ் நாட்டில் தோன்றிய இச்சான்ருேர் நினைவாக, இவ்வாண்டு ஜூன் 10-ம் நாள், தமிழக அரசு இதற்கென சிறப்பு விடுமுறை நாளாக அளித்தது.
>
> வாழ்க்கைக்குத் தேவையான, சமுதாய வளர்ச்சிக்கு ஊன்றுகோல்களாகத் திகழும் அடிப்படை ஒழுக்க நெறிகள் சிறந்த முறையில் திருக்குறளில் தொகுத்தளிக்கப் பட்டுள்ளன. அவ்வகையில் திருக்குறளின் தனிச் சிறப்பியல்புகள் பற்றி ஆராய்கிறது இக்கட்டுரை. கட்டுரை ஆசிரியர் தமிழ்ப் பெரும் புலவர். தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர். அவர் கூறும் கருத்துக்கள் அனைவரின் இதயங்களிலே தேக்கி வைத்துக்கொள்ள வேண்டிய கருவூலங்களாகும்.
>
> —ஆசிரியர்

தமிழனின் பொற் காலம்

வள்ளுவர் வாழ்ந்த காலம் தமிழகத்தின் சிறந்த காலம் என்று கூறலாம். அன்று தமிழக வணிகர்கள் மத்தியதரைக் கடல் நாடுகளுடனும் கிழக்கத்திய நாடுகளுடனும் பெருவாணிபம் நடத்தி வந்தார்கள், அதனுல் அந்நாடுகளுக்கும் தமிழகத்துக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு இருந்தது. அத் தொடர்பின் பயனுக, அறிஞர்களுடைய கருத்துக்களும் துய்க்கும் பொருள்களோடு சேர்ந்து ஏற்றுமதியும் இறக்குமதியும் ஆகியிருக்குமல்லவா ? அவ்வாறு இறக்குமதியான கருத்துக்களில் சாக்கிரட்டிஸ், பிளேட்டோ, அரிஸ்டாட்டல், கன்பியூசியஸ் ஆகியவர்களுடைய கருத்துக்களும் இருந்திருக்கும். அதுபோலவே மகத நாட்டைச் சேர்ந்த கௌத்தலியருடைய கருத்துக்களும் தமிழ்நாட்டுக்கு வந்திருக்கும். இதற்கெல்லாம் முன்னரே ஆரியமதக்கோட்பாடுகளும், சைனமதக் கோட்பாடுகளும், புத்தமதக் கோட்பாடுகளும் தமிழகத்திற்கு வந்துவிட்டன. ஆகவே, தமிழ் மக்களின் வாழ்க்கை முறையில் வேகமான மாறுதல்கள் நிகழ்ந்திருக்கும். அந்த வேகத்தின் காரணமாகத் தமிழ் மக்கள் மனத்தில் ஐயமும், குழப்பமும், ஓரளவு அச்சமும் தோன்றியிருக்கும்.

வள்ளுவர் கண்ட சமுதாய நெறி

இந்த நிலையில், கிறிஸ்து சகாப்தம் தோன்றுகின்ற நேரத்தில், முப்பது முப்பத்தைந்து வயதுடைய திருவள்ளுவர் தமிழ்த்தாய் செய்த தவத்தின் பயனுகத் திருமயிலையில் வாழ்ந்து வந்தார். தமிழ் மக்களுடைய தனித்தன்மை வாய்ந்த வாழ்க்கை முறையினையும், ஆரியம், சமணம், பௌத்தம், கிரேக்கம் முதலிய புதிய கருத்துக்கள் அந்த வாழ்க்கை முறையில் செய்து வந்த மாறுதல்களையும் பற்றி சிந்தித்துப் பார்த்தார். சிந்தனையின் பயனுகத் தெளிவு பிறந்தது. தம்முடைய மனக்கண்ணில் புதியதோர் எதிர்காலச் சமுதாயத்தைக் கண்டார். அந்தச் சமுதாயத்தில் தனி மனிதன் குணங்கள் எப்படியிருக்க வேண்டும், வாழ்க்கைத் துறைகள் பலவற்றிலும் ஈடுபடுவதற்கு அவனுக்கு எத்தகைய இயல்புகளும் திறன்களும் வேண்டும் என்பதையும் அவர் உணர்ந்தார். அதன்பின், அவர் வள்ளுவத்திற் காணும் மனிதனையும் சமுதாயத்தையும் படைத்தார். அந்த லட்சிய மனிதனையும் லட்சிய சமுதாயத்தையும் பற்றி அவர் சொல்லாத செய்தியில்லை. அதனுற்றுன் ''எல்லாப் பொருளும் இதன்பால் உள, இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லையால்'' என்ருெரு புலவர் வியந்துபாடினுர். அந்த லட்சிய சமுதாயமும் மனிதனும் எதையெதைச் செய்யலாம் எதையெதைச் செய்யக் கூடாது என்பதையெல்லாம் ஐயந்திரிபுக்கிடமின்றி ஆணித்தரமாகக் கூறிவிட்டார். அவருக்கு எல்லாமே தெரிந்திருந்ததால்தான், அவ்

வளவு துணிவாக ஒவ்வொன்றையும் அறுதியிட்டுக் கூறினர். அதனாற்றான் "தானே முழுதுணர்ந்து தண்டமிழின் வெண்குறளால் அறம் முதலியவற்றைத் திருவள்ளுவர் பாடியருளினர்" என்றொரு புலவர் போற்றுகிறார்.

### திருவள்ளுவரின் தனித் திறமை

இப்படி ஆணித்தரமாகச் சொல்வதற்கு ஏற்ற கருவியாக அமைந்தது குறட்பா. வள்ளுவர் சொல்லுகின்ற முறைக்கேற்ற யாப்பு வேறொன்றிருக்க முடியாது. ஆனல் பொதுவாக, குறட்பாக்களைத் தொடர்ந்து படித்தால், எவ்வளவு ஆர்வமுள்ளவரும் அலுத்துவிடுவர்.




ஆனல், வள்ளுவருடைய குறட்பாக்களைப் படிப்போர் யாருக்கும் அலுப்புத் தட்டுவதில்லை. அதற்குமாறாக அவர்கள் சிந்தைக்கினிய, செவிக்கினிய, வாய்க்கினிய அந்தப்பாக்களின் கவிச்சுவையில் ஆழ்ந்து தம்மை மறந்த பேரின்ப நிலையில் திளைக்கிறார்கள். "முகைமொக்குள் உள்ளது நாற்றம்போல் பேதை நகைமொக்குள் உள்ளதொன்றுண்டு" என்னும் குறளைப் படிக்கும் புலவர்கள் எத்தகைய பேரின்பத்தை எய்துவர். அதனாற்றான் வள்ளுவரைத் தவிர ஏனைய சிறந்த புலவர் எவரும் குறட்பாவில் தமது நூலை எழுத முயலவில்லை. குறட்பாவைக் கையாளுவதற்கு அவர் ஒருவரால்தான் முடிந்தது.

இத்தகைய குறட்பாக்கள் ஆயிரத்து முன்னூற்று முப்பதில் ஓர் இலட்சிய மனிதனையும் இலட்சிய சமுதாயத்தையும் படைத்தவர் எத்தகைய ஆற்றல் வாய்ந்தவராக இருந்திருக்க வேண்டும். உலகத்தின் நூறு சிறந்த அறிஞர்கள் ஒன்று சேர்ந்து நூருண்டு முயன்றாலும் இந்தச் செயற்கரிய செயலைச் செய்திருக்க முடியாது. எனவே, இந்த உலகம் தோன்றிய நாள்முதல் வள்ளுவரைப் போல் வேறொருவர் பிறக்கவில்லை. திருக்குறளைப்போல் வேறொரு நூல் தோன்றவில்லை என்று அறிந்தோர் கூறுகின்றனர்.

### குறள்நெறி

திருக்குறளில் காணும் சமுதாயம் இலட்சிய சமுதாயம். எனவே, தமிழகத்தில் மட்டுமின்றி. உலகின் வேறெந்தப் பகுதியிலும் இதுவரையில் அத்தகைய சமுதாயம் இருந்ததில்லை. இனிமேலும் இருக்காது. மனிதர்கள் திருக்குறள் கூறும் வாழ்க்கை நெறியை இயன்றவரையில் பின்பற்றுவதன் மூலம், அந்த லட்சிய சமுதாயமிருக்கும் திசையிற் சென்று கொண்டிருக்கலாம். மக்கட்பண்பின் வளர்ச்சிக்கு அஃதொன்றே வழி.

திருவள்ளுவர் தமிழகத்திற்கு மட்டுமின்றி உலக முழுதிற்குமே தமது நெறியை வகுத்தார். திருக்குறளில் எந்தப்பாட்டிலும் தமிழ் நாடு என்ற சொற்றொடரைக் காணேம். ஏனைய சிறந்த புலவர்களெல்லாம் தமிழ்நாட்டை, தமிழ்மொழியை, மூவேந்தரை, குறுநில மன்னரை, வள்ளல்களைப்பற்றிப் பாடினர்கள். ஆனல், வள்ளுவரோ நாட்டை, மொழியை, வேந்தை, அமைச்சை, படையைப் பற்றிப் பாடினர், வாலறிவனைப் பற்றிப் பாடினர். வகைப்பட்ட சமயங்களைப் பேசவில்லை, ஆகவே தமது குறளை எழுதும்போதே திருவள்ளுவர் அஃது உலக மக்கள் அனைவர்க்கும் எல்லா காலத்திலும், எல்லா நிலையிலும், எல்லாத் துறையிலும் பயன்படவேண்டுமென்று நினைத்து எழுதினர். அதனாற்றனே, "வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு" என்று பாரதி பெருமிதத்துடன் பாடிப் பரவசமெய்தினன்.

---



# வள்ளுவர் காட்டும் வழி



திரு ந. பாண்டியன்

செந்தமிழ் உள்ளுணர்வும் சிந்தித்துச் செயலாற்றும் சீரிளமைத் திறனும் கொண்ட மாணவர்களைப் பெற்ற ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில், 'பொங்கல் விழா' கல்லூரியின் பொது அரங்கில், தமிழ் மன்றத்தின் சார்பில் கொண்டாடப்பட்டது.

வண்ணக்கோலமிட்டு, வாடாத மலரிதழால் "நல்வரவு" அமைத்து எண்ணற்ற புலவர்களின் பண்மொழி, வயங்கும் மலர்படைத்து, வாசனைப் பொருள் தூவி, வாழையிளங் கன்றுகளை வாசலிலே நிறுத்தி, புது வண்ணங் கொண்ட பொங்கல் பானை வைத்து, பூங்கரும்பு சாய்த்துக் கட்டி, மாவிலைத் தோரணங்கள் ஆட, மங்கள இசை முழங்க, எண்ணத்தையும், கண்களையும் கவரும் வகையில், மருத்துவ மாணவர்களும், மாணவியரும் பொது அரங்கை அலங்கரித்திருந்தனர். தமிழக அரசு உள்ளாட்சித்துறை அமைச்சரும், விழா தலைவருமான திரு மா. முத்துசாமி அவர்கள், "திருக்குறளைத் தேசிய நூலாக்க இது போன்ற விழாக்களில் உறுதி ஏற்க வேண்டு" மென்று கூறி, சீரிய சொற்பொழிவாற்றினர்.

"உறுபசியும் ஓவாப் பிணியும் செறுபகையும் சேராதியல்வது நாடு" என்றார் வள்ளுவர். பசிப்பிணியை உழவர்கள் தீர்க்கின்றனர். உடற்பிணியை மருத்துவர்களாகிய நீங்கள் தீர்க்கின்றீர்கள், மனித சமுதாயத்திற்கு உணவு கொடுத்து உயிர் கொடுக்கிறார்கள் உழவர்கள். இந்த உயிர் தங்கியிருக்கும் உடலுக்கு ஊறு நேரா வண்ணம் மருத்துவம் செய்கின்றீர்கள் நீங்கள். ஆதலால் உழவர்களும் நீங்களும் உலகியலில் ஒருவிதத்தில் ஒத்தவர்களே. அதனுல் தான் உழவர்களுக்காக உரிய இந்தப் பொங்கல் விழாவை நாட்பல கடந்தும், இன்றேனும் நடத்தும் ஆர்வம் கொண்டிருக்கிறீர்கள். உழவர்களை இந்நாடு மதிக்கத் தொடங்கிவிட்டது என்பதை இத்தகைய விழாக்களில் இருந்து உணரலாம்' என்றார் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

### ஐயப்பாடு கொள்ளலாமா ?

" இலக்கியத்தில் மட்டுமின்றி விஞ்ஞானத் துறையிலும்—மருத்துவத் துறையிலும் தமிழகம் சிறப்புற்றிருந்ததற்குச் சான்றுகள் பலவுள. இப்படிச் சிறப்பு வாய்ந்த மொழியை வைத்துக்கொண்டுள்ள நாம் "தமிழால் முடியுமா? " என்று ஐயப்பாடு கொள்ளலாமா ?

சீன நாடு பஞ்சத்தால் அடிபட்டாலும் சீன மொழியை வைத்துக் கொண்டே விஞ்ஞானத்தில் முன்னேறுகிறது. இயற்கையே தொல்லை கொடுக்கும் நாடான ஜப்பான் இரண்டாம் உலகப்போரில் சின்னபின்னப்படுத்தப்பட்ட பின்பும் விஞ்ஞானத்திலும் பொருளாதாரத்திலும் பிற நாடுகள் வியக்கும் வண்ணம் முன்னேறிக்கொண்டு வருகிறது. அவர்கள் தாய்மொழியை வைத்துத்தான்

[தமிழ் மாணவர் சமுதாயம், தாய் மொழிப் பற்று மிக்க சமுதாயமாக, தொண்டார்வம் கொண்ட சமுதாயமாக, ஆக்கப் பணிபுரியும் அடலேறுகள் கொண்ட பாசறையாக திகழ்வது கண்டு, நல்லிதயம் படைத்த அனைவரும் பேருவகை கொள்கின்றனர். தாய் மொழி மீது தமிழக மாணவர்கள் கொண்டுள்ள பற்று அன்னைத் தமிழ் மீது அவர்கள் கொண்டுள்ள பாசம் பற்பல தமிழ் விழாக்களை அவர்கள் எடுப்பதற்கு ஊன்றுகோலாக அமைவதில் வியப்பொன்றுமில்லை. அண்மையில் சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் நடைபெற்ற தமிழ் விழா, இதற்கு நல்லதொரு எடுத்துக் காட்டாக அமைந்துள்ளது. இரு அமைச்சர்கள் கலந்து கொண்ட அவ் விழா பற்றி, பூரிப்புடன் இக்கட்டுரையில் எடுத்துக், கூறுகிறார், ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி தமிழ் மன்றச் செயலாளர், திரு ந. பாண்டியன் அவர்கள்.

—ஆசிரியர்.]

முன்னேறுகிறார்களே தவிர, அயல் மொழியைக் கொண் டல்ல.

"நேற்றுத் தோன்றிய மொழிகள் அவை. அவை அந்த அளவுக்கு இருக்கும் போது இலக்கியச் சிறப்பும். நாகரிகச் சிறப்பும்—வரலாற்றுச் சிறப்பும் உடைய நம் தமிழ் மொழி எந்நிலையில் இருக்க வேண்டும் என் பதைக் கொஞ்சம் சிந்தித்தால் தெளிவாகும்.

**தமிழால் ஏன் முடியாது!**

"உலகத் தமிழ் மாநாட்டின் போது இலங்கை நாட்டிலிருந்து வந்த திருச்செல்வம் அவர்கள் இலங்கையில் மருத்துவக் கல்லூரிப் பட்டப் படிப்பு தமிழில்தான் போதிக்கப்படுகிறது என்றார். மேலும் விஞ்ஞானத்திற்குத் தகுந்த தமிழ்ச் சொற்களை கொண்ட நூலை தமிழ் நாட்டிலுள்ள பேராசிரியர்களிடமிருந்து பெற்றோம் என்று கூறினார். இலங்கையிலுள்ள அவர்கள், தமது மருத்துவக் கல்லூரிகளில் தமிழ் பயிற்சி மொழி ஆவதில் இவ்வளவு தூரம் அக்கறை காட்டினால், தமிழகத்தில் உள்ள நாம் எந்த அளவுக்கு அக்கறை காட்டவேண்டும். இலங்கையிலுள்ளவர்களுக்கு தமிழில் மருத்துவக் கலைச் சொற்களை இங்குள்ள பேராசிரியர்கள் கொடுக்கிறார்கள் என்றால், தமிழகத்திற்கு ஏன் தரமாட்டார்கள்?



"நாட்டின் ஒற்றுமை யுணர்வுக்காக தேசியப் பறவை என்றோம். தேசிய கீதம் என்கிறோம். அப்படிக் கூறுவதால் மட்டும், ஒற்றுமையுணர்வைக் காண முடியாது. அதற்கு அனைவரையும் இணைத்து வைக்கும் மன உணர்வு தேவை. மன உணர்வை வலியுறுத்தும் தேசிய இலக்கியம்—பல்வேறு மொழிகளில் மொழி பெயர்க்கப்பட்ட சிறப்பு வாய்ந்த இலக்கியம்—எந்தக் காலமும் ஏற்றுக்கொள்ளும் கருத்துக்களை வழங்கும் இலக்கியம் திருக்குறள்தான்.

எல்லாப் பொருளும் இதில் உண்டு, இதன்பால் இல்லாத எப்பொருளும் இல்லை, அப்படிப்பட்ட திருக்குறளை மருத்துவர்களாகிய நீங்கள் நண்பர்களோடு பேசுவது மட்டுமின்றி மேடையில் முழங்குவது மட்டுமின்றி மருத்துவம் பார்க்க வரும் நோயாளிகளிடமும் கூறலாம்.

**உள்ளத்தில் உறுதிகொள்வோமாக!..**

'ஒருவருக்குக் கையில் புண் வந்து துன்பப்படும்போது துயரத்தை மறந்து இருங்கள் துயரம் போய்விடும்' என்று மருத்துவர்கள் ஆறுதல் கூறும்போது "இடுக்கண்வருங்கால் நகுக" என்று வள்ளுவரே கூறியிருக்கிறார் என்று அப்பாடலைக் கூறலாம்.

இப்படிப் பலவற்றிற்கும் பயன்படுவது திருக்குறள்; அதை தேசிய நூலாக்க இந்த விழாவில் நாம் உறுதியெடுத்துக்கொள்வது முறையல்லவா? என்றார் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

பொதுப் பணித் துறை அமைச்சர் மாண்புமிகு கலைஞர் திரு மு. கருணாநிதி அவர்கள் "பழந்தமிழர்களின் நல்லுணர்ச்சிகளை இதயத்திலேற்றி புதுவாழ்வு காண்போம்" என்று கூறி சீரிய சொற்பொழிவு ஆற்றினார்.

"உழவர்களும் நீங்களும் ஒருவிதத்தில் ஒருவருக்கொருவர் ஒத்தவர்களே. உழவர்கள் பயிர்களைப் பாதுகாக்கிறார்கள். நீங்கள் உயிர்களைப் பாதுகாக்கிறீர்கள். அவர்களும் அறுக்கிறார்கள்—கதிர்களை! நீங்களும் அறுக்கிறீர்கள். அவர்கள் நெல்லைத் தாளோடு அறுத்துக் கட்டுக் கட்டுகிறார்கள். நீங்களும் கட்டுக் கட்டுகிறீர்கள். பயிரில் விழுந்த நோய்க்கு பூச்சி மருந்தை அவர்கள் தெளிக்கிறார்கள், நீங்களும் மருந்து தருகிறீர்கள்.

இங்கு நடப்பதைப் போன்ற விழாக்களை நாம் கொண்டாடுவது, தமிழர்கள் ஒரு காலத்தில் எப்படியிருந்தார்கள், எப்படி வாழ்ந்தார்கள் என்பதை எண்ணிப் பார்க்கத்தான்; அவர்கள் வாழ்ந்ததைப் போல வாழ முடியாது எனினும், அவர்கள் வாழ்க்கையின் உணர்வுகளை நாம் பெறவேண்டும் என்பதற்காகத்தான்.

தேர்க்காலிலே கன்றைக் கொன்ற விதிவிடங்களை தன் மகனென்றும் பாராமல் தேர்க் காலில் வைத்துக்கொன்று நீதியுடன் ஆட்சி நடத்திய மனுநீதிச் சோழனை நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அதுபோல நாம் வாழ முடியாது, காரோட்டிச் செல்லும்போது தன் மகன் எதேனும் ஒரு கன்றின் மேல் ஏற்றிக் காயப்படுத்தினால், அதேபோல் எந்தத் தந்தையும் மகனைப் படுக்கவைத்துக்காரை அவன் மீது ஏற்றிக் காயப்படுத் நினைக்கமாட்டார்- ஆனால் மனுநீதிச் சோழனிடமிருந்த நீதி புணர்வு—ஒருதலைப்பட்சமில்லாத நீதியுணர்வை நாம் பெறவேண்டும்.

முல்லைக்குத் தேர் தந்தான் பாரி என்றால் அவருடைய கொடைத்தன்மைக்காக எடுத்துக் கூறப்பட்டது அது. முல்லைக்கொடி துவள்வதைக் கூட பழந் தமிழ் மன்னர்கள் பொறுத்துக்கொள்ள மாட்டார்கள் என்பதை இதனால் உணரலாம். அதுபோல நாம் இருக்கவேண்டும் என்பதற்காக நாம் காரில் செல்லும்போது துவள்கின்ற முல்லைக் கொடியைக் கண்டால் பியட்காரை நிறுத்தி ஏற்றிப் படரவிட்டுச் செல்ல மாட்டோம்; ஆனால் அத்தகைய கொடை மனப்பான்மை இருக்கவேண்டும். கொடையுணர்வு நாம் பெறவேண்டும்.

நமக்குள்ள இலக்கியவளம்—காவிய வளம்—நாட்டுச் சிறப்பு வேறு எந்த நாட்டவர்க்கும் இல்லையென்றாலும், இன்றுவரை நாம் ஏன் உயராமலிருக்கிறோம். என்பதற்கான காரணத்தைத் துருவித் துருவி ஆராய நாம் அரசியலுக்குப் போகத் தேவையில்லை.

[30-ம் பக்கம் பார்க்க.]



# திருவள்ளுவர் ஆண்டு 2000

சிறுவை **நச்சினார்க்கினியன்.**

தமிழர்களுக்கென்று ஒரு வரலாற்றுக் காலத்தை வகுத்துக்கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறது, இக்கட்டுரை. திருவள்ளுவர் பெயரால் அமையும் தொடராண்டே, தமிழர்களுக்குச் சாலப் பொருத்தமுடையது என்பதை வலியுறுத்திக் கூறும் இக்கட்டுரையில், அக் கூற்றினுக்கு ஆதாரமாக, பல்வேறு காரண காரியங்களை எடுத்து விளக்கியுள்ளார், இக் கட்டுரை ஆசிரியர். வரலாற்றுக் கண்ணோட்டத்துடன் இப் பிரச்னையை ஆராயும் இக்கட்டுரையில் காணப்படும் கருத்துகள், தமிழர் சமுதாயத்தின் சிந்தனைக்கு விருந்தாக அமையத்தக்கன. —ஆசிரியர்.]

"செய்தக்க அல்ல செயக்கெடும், செய்தக்க
செய்யாமை யானுங் கெடும்"

என்பது திருவள்ளுவர் கூறிய பொய்யா மொழி. "பருவத்தே பயிர்செய்" என்பதும் தமிழகப் பழமொழிகளில் ஒன்று. இன்று, தமிழகத்தில் நல்ல சூழ்நிலையும் தக்க பருவமும் அமைந்துள்ளன. அதாவது, தமிழகத்தின் முயற்சியால் "திருவள்ளுவர் அஞ்சல் தலை" வெளியிட்டதன் மூலம், தமிழக சட்ட மன்றப் பேரவையில் "திருவள்ளுவர் திருநாளுக்கு விடுமுறை" அளித்ததின் மூலம், "திருவள்ளுவர் நாற்காலி" என்ற அமைப்பின் வழி, தமிழக மூன்று பல்கலைக் கழகங்களுக்கும் "மூலதனம்" அளித்து பெருமை கொண்டதின் மூலமும், தமிழ் நாடு தனது பழம் பெருமையை உலகம் உவப்ப சிறக்கச் செய்து வருவது கண்டு தமிழ் உள்ளங்கள் யாவும் ஒரு புதிய மன நெகிழ்ச்சி, உடல் சிலிர்ப்பு, உள்ளப் பூரிப்பு ஆகிய உணர்வுகள் பெற்று இன்ப நிலையில் களிபேருவகை அடைந்து நிற்கின்றன.

இந்நிலையில் நாம் மறந்து இருக்கும் ஒரு செய்தியை நாமே நம் நினைவிற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டுள்ளோம். அதுதான் நமக்கென்று அமையவேண்டிய தொடராண்டு. தமிழ் இனத்துக்கு நீண்ட பெரும் வரலாறு உண்டு. உலக மொழிகளில் காணக் கிடைக்காத ஒப்பற்ற இலக்கண இலக்கிய நூல்களும் இருக்கின்றன. தமிழ் மொழி அமைப்பு இன்ன காலத்தில் உண்டானது என்று சொல்ல முடியாத ஒரு வரலாற்று முற்காலச் சிறப்புடையது என்பது, மொழி வல்லுநர்கள் கண்ட முடிவு. இத்தகு சிறப்புகள் இருந்தும், தமிழ் இனத்துக்கு என்று இருந்த தமிழ் ஆண்டுக் கணக்கு எங்ஙனமோ மறந்து நடைமுறையில் இல்லாது போயிற்று. (இதற்குப பற்பல உண்மையான வரலாற்றுக் காரணங்கள் உண்டு. அவை இங்கு விவரித்துக்கூறின் பெருகும்.)

**நம்பிக்கை ஒளி**

"தை பிறந்தால் வழி பிறக்கும்" என்பது தமிழகத்தின் நெடுநாளைய பழமொழி. சூரியன் சுற்றும் நிலையின் கணக்கினை ஆய்ந்து அந்நாளில் தைத் திங்களையே ஆண்டின் முதல் திங்களாகக் கொண்டனர். தை முதல் ஆனி ஈறாக ஒரு பகுதி, ஆடி முதல் மார்கழி ஈறாக, மற்றொரு பகுதி. ஆடி முதல் மார்கழி ஈறாக உள்ள காலம் இருள்நிலை கொண்டது. தை முதல் ஆனி ஈறாகக் கொண்ட காலம் பகல்நிலை கொண்டது. ஓர் ஆண்டில் ஆடி முதல் மார்கழி ஈறாக உள்ள காலத்தில், அதாவது ஆடிக் காற்றிலும் அடுத்துள்ள ஐப்பசி மழையிலும் மார்கழிப் பனியிலும் குளிரிலும் இடர்படும்பொழுது மக்கள் உள்ளத்தில் "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்ற நம்பிக்கை ஒலி பேரொலியாய்க் கேட்கிறது.

இந்த இரவு நிலை மாறிப் பகல்நிலை பெற்றுப் பயன் தரும் தைப் பிறப்பு நாளைப் புத்தாண்டின் புனித நாளாய், பிறப்பு நாளாய்ப் பழந்தமிழர் கொண்டாடி வந்தனர். இன்றுங்கூட தைப் பிறப்பைத் தனிப்பெருஞ் சிறப்பாய்த் தமிழர்கள் கொண்டாடி வருகிறார்கள். ஆகவே, நாம் தைத் திங்களையே ஆண்டின் முதல் திங்களாய்க் கணக்கெடுத்து செயலாக்கல் நலம் பயக்கும்.

'தமிழ் நாடு குறிப்பிட்ட ஓர் ஆண்டிற்கு முன்னே இப்படி இருந்தது, பின்னர் இப்படி ஆயது" என்று சொல்வதற்கு ஓர் ஆண்டுக் கணக்கு இதுபோது இல்லை. மேலை நாட்டார் கிறித்துவுக்கு முன் இப்படி இருந்தோம், கிறித்துவுக்குப் பின் இப்படி இருக்கிறோம் என்று காட்ட ஒரு கால அளவை வைத்துக் கொண்டிருக்கின்றனர். நம்மிடமிருந்து நேற்றுப் பிரிந்து சென்று இன்று மலையாளர் என்ற பெயர் தாங்கியுள்ள சொந் தமிழர் களும் தமக்கென்று "கொல்லம் ஆண்டு" என்ற கணக்கை வகுத்துக்கொண்டனர்.

ஆனால் தமிழர்களாகிய நாமோ அறுபது ஆண்டு வட்டத்திலேயே சுற்றி சுழன்று வருகிறோம். இந்த அறுபது ஆண்டு சக்கர வட்டத்தில் ஒரு குறிப்பிட்ட பிறப்பு அல்லது இறப்பு நிகழ்ச்சி ஒரு நள ஆண்டில் ஏற்பட்டு இரண்டு மூன்று நள ஆண்டுகள் சுற்றிக் கழிந்துவிட்டால், எந்த நள ஆண்டில் அந்தப் பிறப்போ, இறப்போ ஏற்பட்டது என்ற மருட்சி ஏற்படவே செய்கிறது. ஆகவே 60 ஆண்டுச் சக்கர வட்டத்தில் சுழலாது, நமக்கென ஒரு வரலாற்றுக் காலத்தை நாம் வகுத்துக் கொள்ள வேண்டும்.



திரு க. நமச்சிவாய முதலியார்

ஆகவே, நாம் அமைத்துக்கொள்ளும் தமிழ்த் தொடர் ஆண்டு நம்மிடை வாழ்ந்த-நமக்கு என்றும் மங்காத புகழினைத் தேடித் தந்த-நாமும் அவரை உலகினுக்கே ஈந்து வான் புகழ் கொண்ட-ஒரு தலைமை சான்ற புலவரது பெயரால், மனிதக் குலத்திற்கு வாழ்க்கை அமைப்பு முறை சட்டத்தையே உருவாக்கி அளித்த உலகக் கவிஞர் திருவள்ளுவர் பெயரால் அமையும் தொடராண்டாயின். இனி தமிழர்களுக்கு ஒரு தொடராண்டில்லை என்ற பேச்சும் இல்லை, குறையும் இல்லை.

### திருவள்ளுவர் திருநாள்

எனவே, 1935-ல் சென்னைப் பச்சையப்பன் மண்டபத்தில் பேராசிரியர் நமச்சிவாயர் அமைப்பாளராய் இருந்து, உலகம் முழுவதும் உள்ள அறிஞர்களுக்கெல்லாம் அழைப்புகள் விடுத்துக் கொண்டாடிய "திருவள்ளுவர் திருநாளில்" தலைமை வகித்துப் பேசிய ஆசிரியர் மறைமலையடிகளார், திருவள்ளுவர் காலத்தைப்பற்றிய தெள்ளிய பல ஆய்வுரைகளைக் கூறி முடிப்பாக, "எனவே, திருவள்ளுவர் காலம் 2-ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதென்பது எளிதிற் பெறப்படும். கிறித்துப் பிறப்பதற்கு 30-ஆண்டுகட்கு முன் திருவள்ளுவர் பிறந்தார் என்பது நான் ஆராய்ந்து கண்ட முடிவாகும்." எனக் கூறினார்கள். அப்பேரவையில் கூடியிருந்த திருவாளர்கள் திரு. வி. க., நாவலர் ந. மு. வேங்கடசாமி நாட்டார், த. வே. உமாமகேசுவரம் பிள்ளை, பேராசிரியர் பாரிப்பாக்கம், கண்ணப்ப முதலியார், திருவாட்டி. ஈ. த. இராசேச்சுவரி அம்மையார் இன்ன பிற பெரும் புலவர்கள் அக் கருத்து சாலவும் பொருத்தமுடையது எனக் கண்டார்கள்.

இத்தகு சீரிய நற்கருத்தைச் செயல்படுத்த வேண்டி, முத்தமிழ்க் காவலர் திரு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களும், மதுரை திருமுருகன் நிலயத்தார், மதுரைத் திருவள்ளுவர் கழகத்தார், திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார், சென்னை நக்கீரர் கழகத்தார்போன்ற பல இலக்கிய நிறுவனங்கள் இடைவிடாது செய்த முயற்சியின் பயனாகவும், திரு கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்கள் இதற்கென சில ஆக்க பூர்வமான திட்டங்களைச் செயல்படுத்தியதின் காரணமாகவும், தமிழகத்தில் பல நாளிதழ்கள், கிழமை இதழ்கள், திங்கள் இதழ்கள், ஆசிரியர் மறைமலையடிகளார் கண்ட ஆய்வின்படி திருவள்ளுவர் தொடர் ஆண்டினை மேற்கொண்டனர். அதனை ஒட்டி பல இலக்கிய நிறுவனங்கள் தங்கள் விழா அழைப்பிதழ்களிலும், பொதுமக்கள் தமிழ்த் திருமண அழைப்பிதழ்களிலும் திருவள்ளுவர் தொடர் ஆண்டினை மேற்கொள்ளத் தலைப்பட்டனர்.

மேலும் திருவள்ளுவர் ஆண்டினை, 1932-ம் ஆண்டு முதல் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் தம் திருக்குறள் நாட் குறிப்பு ஏட்டில் பதிப்பித்ததின் மூலமும், 1947 முதல் மதுரை திருமுருகன் நிலயத்தார் திருவள்ளுவர் நாட் காட்டி அச்சிட்டதின் மூலமும், 30—11—1947-ல் சென்னையில் நடந்த இரண்டாவது தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் திரு எஸ். மலையப்பன் அவர்கள் கொண்டுவந்து நிறைவேற்றிய திருவள்ளுவர் ஆண்டுத் தீர்மானத்தின் மூலமும், நாட்டில் ஒரு நல்ல மறுமலர்ச்சி ஏற்படத் தொடங்கியது.



### தமிழர் கடமை

ஆகவே, இன்று திருவள்ளுவர் தொடர் ஆண்டு 1999 நடைபெறுகிறது. அடுத்த ஆண்டு திருவள்ளுவர் ஆண்டு 2000 ஆகும். இன்றைய முறைப்படி இத்தொடர் ஆண்டினை இன்று நாளிதழ்கள், கிழமை இதழ்கள், திங்கள் இதழ்கள் ஆக சுமார் 30 இதழ்களுக்குமேல் பயன்படுத்தி வருகின்றன. மேலும் ஆண்டு மலர்களிலும், பல்வேறு அழைப்பிதழ்களிலும், மிக வேகமாகத் திருவள்ளுவர் ஆண்டு பரவி வருகிறது. திருவள்ளுவர் ஆண்டு 2000க்குள் தமிழகத்தில் உள்ள எல்லா எழுத்தாளர்களும் அறிஞர் பெருமக்களும் இதனையே கடமையாகக் கொண்டு அவரவர்கள் தொடர்பு கொண்டுள்ள ஆட்சிக் கழகங்கள், மன்றங்கள், படிப்பகங்கள், இலக்கிய நிறுவனங்கள் அனைத்திலும் தங்களது தலைப்புத் தாள்களில், தங்கள் கடிதப் போக்குவரத்துகளில் திருவள்ளுவர் ஆண்டினையே இட்டு வழக்கப்படுத்த வேண்டியது அவரவர் கடமைகளாகும்.




ஒரு சிலருக்கு இத் தொடர் ஆண்டில் ஐயம் இருக்குமாயின் பின்னர் தக்க ஆய்வு தலைப்படுங்கால் நாம் மாற்றிக்கொள்வதில் இழுக்கொன்றும் இல்லை. இது போது இருப்பதைக் கொண்டு, தக்கார் எடுத்த ஆய்வினை ஒட்டி உலகத்தோடு பீடுநடை போட்டு முன்னே செல்வோம். தமிழ் இனம், தமிழ்மொழி வளம் திருவள்ளுவருக்கு முன்பு இப்படி இருந்தது, திருவள்ளுவருக்குப் பின்பு இப்படி ஆயிற்று என்ற முடிவுகளை உலகத்திற்கு எடுத்துச் சொல்வோம்.

### அவச்சொல்லை போக்குவோம்

"இனி ஒரு விதி செய்வோம் அதை எந்நாளும் காப்போம்" என்ற பாரதியாரின் தூய மொழிப்படி, அறிஞர்கள் அனைவரும் தம்முடைய வேற்றுமைகளை மறந்து, தமிழின் பெயரால், வள்ளுவரின் பெயரால் ஒன்று கூடித் திருவள்ளுவர் ஆண்டினைப் பரப்புவோம். அதன் மூலம் தமிழ் இனத்திற்கு ஒரு தொடர் ஆண்டில்லை என்ற அவச் சொல்லை அழித்தவர்களாவோம். தமிழன் தலை நிமிர்ந்து, வரலாற்றுச் சுவடியில் நேரே செல்ல வழி வகுத்தவர்களாவோம். நம்மை நாம் உணர்ந்தவர்களாவோம்.

திருவள்ளுவர் ஆண்டு 2000-க்குள் எங்கும் தமிழ், எல்லாம் தமிழ் என்ற நிலை எய்துவதோடு, திருக்குறள் சுவடி இல்லாத ஒரு தனிக் குடியும் தமிழகத்தில் இல்லை என்ற பெருமையையும் தமிழ் நாடு தேடிக்கொள்ள வேண்டும்.

வாழ்க வள்ளுவம்! வெல்க திருக்குறள்!


உங்களுடைய தானியங்களை பூச்சிகளிலிருந்து குறைந்த விலையில் பாதுகாப்பதற்கு
**(by way of fumigation of food grains)**
இப்பொழுது இந்தியாவில் தயாரிக்கப்படும், வேண்டுமளவு கிடைக்கும்

卐 "ஸெல்போஸ்" (அலுமினியம் பால்பைடு) மிகவும் உதவி புரிகிறது.

உங்களுடைய நிலத்தை எலிகளிடமிருந்து

卐 "ஸெல்போஸ்" (அலுமினியம் பால்பைடு) சுலபமாக பாதுகாக்கிறது.

மற்றும் விவரங்களுக்கு கடிதம் எழுதுக :
EXCEL INDUSTRIES LIMITED,
184-87, Swami Vivekananda Road,
JOGESHWARI, BOMBAY-60NB.
Phone: 571361, 573584.

# புதியதோர் உலகு செய்வோம்

## சோழவரம்

(செங்கல்பட்டு மாவட்டம்)

சோழவரம் ஊராட்சி ஒன்றியத்தில் சிரமதான் தொண்டர்களால் கட்டி முடிக்கப்பட்ட பள்ளிகளை ஆட்டந்தாங்கல், நல்லூர், ஆமூர் ஆகிய கிராமங்களில் தமிழக உணவு, வருவாய்த்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் 1968-ம் ஆண்டு மே திங்கள் 6-ம் நாளன்று திறந்து வைத்தார். கிராமிய வேலைத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட பெரிய பள்ளி ஒன்றை அலமாதியிலும், நீர் அழுத்த தொட்டி ஒன்றை சோழவரத்திலும் ஆசிரியை குடியிருப்பு ஒன்றை ஆட்டந்தாங்கலிலும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார். கிராம வேலைத் திட்டத்தின்கீழ் கட்டப்பட்ட மற்றொரு பெரிய பள்ளியை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கே. இலட்சுமிகாந்தன் பாரதி, ஐ.ஏ.எஸ். அவர்கள் ஆமூரில் திறந்து வைத்தார்.

இவ் விழாக்களுக்கு பொன்னேரி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. பா. நாகலிங்கம் அவர்கள் தலைமை வகித்தார்.

[இந்த இதழிலிருந்து தொடங்கப்பட்டுள்ள புதிய பகுதி இது. ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆற்றும் அரும் பணிகள் இங்கே சுருக்கமாக வெளியிடப்படுகிறது.]

## செம்பனார்கோவில்

(தஞ்சாவூர் மாவட்டம்)

செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த காலமநல்லூர் கிராமத்தில் ஒன்றிய ஆரம்ப பள்ளிக்குரிய புதிய கட்டிடம் ஒன்று ரூ. 11,000 மதிப்பில கட்டப்பட்டதை 1968-ம் ஆண்டு மே மாதம் 26-ம் தேதியன்று தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சி. ஜி. ரெங்கபாஷ்யம், ஐ.ஏ.எஸ். அவர்கள் திறந்து வைத்தார்.

செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றியத்தை சேர்ந்த பாகசாலை கிராமத்தில், தாய்சேய் நல விடுதியின் புதிய கட்டிடத்தை 1968-ம் ஆண்டு மே திங்கள் 26-ம் நாளில் தஞ்சை மாவட்ட ஆட்சித் தலைவரால் திறந்து வைக்கப்பட்டது.

### விவசாயக் கிடங்கு

செம்பனார்கோவில் ஊராட்சி ஒன்றிய சதுக்கத்தில் புதிதாக ரூ. 21,000 மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய விவசாய கிடங்கு ஒன்றையும், 1968-ம் ஆண்டு ஜூன் திங்கள் 7-ம்நாளன்று மாவட்ட ஆட்சித் தலைவரே திறந்து வைத்தார்.

1968-ம் ஆண்டு ஜூன் திங்கள் 7-ம் நாள் மாலை 6 மணிக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. சி. ஜி. ரெங்கபாஷ்யம், ஐ.ஏ.எஸ். அவர்கள் தலைமையில் நீர்ப்பாசனத் திட்டம், சம்பாவில் ஆடுதுறை 27 நெல் சாகுபடி செய்தல் என்பது பற்றிய கருத்தரங்கு நடைபெற்றது. செம்பனார் கோவில் ஒன்றியத்தை சேர்ந்த பல தீவிர விவசாயிகள் இக் கருத்தரங்கில் பங்குகொண்டு, தங்கள் கருத்தை தெரிவித்தனர். மாவட்ட ஆட்சித் தலைவர் தக்கவாறு பதிலளித்தார்.

## சின்னமனூர் ஊராட்சி ஒன்றியம்

(மதுரை மாவட்டம்)

சின்னமனூர் வட்டாரத்தைச் சேர்ந்த வேப்பம்பட்டியில் தொட்டோடை பாசன வாய்க்காலில் இரண்டு இடங்களில் ஏற்பட்ட பெரிய உடைப்புகளை அடைக்கவும், இரண்டு பர்லாங் தூரத்திற்கு தூர்வை மணல் எடுக்கவும் கரைகள் பலப்படுத்துவதுமான ரூ. 3,000 பெறுமான வேலையை சிரமதானப் படை உறுப்பினர்கள் மூலம் 1968-ம் ஆண்டு ஜூன் திங்கள் 10-ம் நாள் முதல் 12-ம் நாள் வரை மூன்று நாட்களில் எடுத்துக் கொள்ளப்பட்டன. 18 ஊராட்சிகளிலிருந்து 50 உறுப்பினர்கள் வேப்பம்பட்டி, காமாட்சிபுரம், சின்னமனூர் முதலிய இடங்களிலிருந்து 200 மேற்பட்ட பொதுமக்களும், ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் 30 பேர்களும் மேற்கண்ட வேலையில் பங்கு கொண்டனர். 1968-ம் ஆண்டு ஜூன் திங்கள் 10-ம் நாளில் இந்த வேலையை தேனி சட்டமன்ற தொகுதி உறுப்பினர், திரு. பி. டி. ஆர். பழனிவேல்ராசன் அவர்கள், சின்னமனூர் ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவர் திரு. சிவசிதம்பரசூரியநாராயணன் அவர்கள் தலைமையில் தொடங்கி வைத்து சொற்பொழிவாற்றினார்கள். ஆணையாளர் திரு. அ. சிவகுருநாதன் எல்லோரையும் வரவேற்றார். மற்றும் திருவாளர்கள் வேலுச்சாமி, எம். ரத்தினம் வே. ரத்தினம் முதலானோர் பேசினார்கள். ஒன்றியப் பொறியாளர் திரு. மாயாண்டி உடனிருந்து வேலையை செய்வதற்கு நல்ல ஏற்பாடுகள் செய்திருந்தார். கடந்த 10 ஆண்டுகளாக செய்யப்படாமல் இருந்த இந்த வேலையை சிரமதானம் மூலம் செய்ததை ஊராட்சி மன்ற தலைவர் திரு. கருப்பையா, மற்றும் பொதுமக்கள் பெரிதும் பாராட்டி மகிழ்ச்சி தெரிவித்தார்கள்.

## ஓசூர் ஒன்றியம்

(தர்மபுரி மாவட்டம்)

ஓசூர் ஊராட்சி ஒன்றியத்தில் 1967–68-ம் ஆண்டில் கீழ்க்கண்ட முன்னேற்ற வேலைகள் நடைபெற்றிருக்கின்றன.

| | | |
|---|---|---|
| புதிய கிணறுகள் வெட்ட கடன் வழங்கியது | ரூ. | 2,05,000 |
| கிணறு வெட்ட கடன் வழங்கியது | | 15,000 |
| பம்பு செட்டுகள் அமைக்க | | 41,000 |
| புதிய கிணறுகளுக்கு மானியம் | ரூ. | 15,000 |
| இணைப்பு சாலைகள் போட செலவழித்தது | | 14,077 |
| குடிநீர் கிணறுகள் வெட்ட | | 33,107 |
| விவசாய வளர்ச்சிக்கு செலவிட்டது | | 23,618 |

ஓசூர் நகரத்தில் குடிநீர் வழங்க ரூ. 25,000 செலவில் குழாய்கள் போடப்பட்டுள்ளன. மேலும், ரூ. 25,000 செலவில் மற்றொரு மேல்நிலைத் தொட்டி கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. 15 இணைப்பு சாலைகள் போடப்பட்டு வருகிறது. இணைப்பு சாலைகளுக்கு ரூ. 14,077 இதுவரை செலவிடப்பட்டுள்ளது. குடிதண்ணீர் வசதிக்காக ரூ. 33,107 செலவிடப்பட்டுள்ளது.

விவசாய வளர்ச்சிக்காக டிரிலிங் இயந்திரம் ஒன்று வாங்கப்பட்டுள்ளது. ரூ. 40,000 செலவில் டிராக்டர் வாங்க தீவிரமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. விவசாயிகளுக்கு புதிய கிணறுகள் வெட்ட ரூ. 2,05,000 கடனாக அளிக்கப்பட்டுள்ளது. மின்சாரம் மற்றும் ஆயில் என்ஜின் பம்புசெட்டுகள் வைக்க ரூ. 41,000-ம் கிணறு அடிவெட்டு வெட்டுவதற்கு ரூ. 15,000-ம் கடனாக விவசாயிகளுக்கு அளிக்கப்பட்டுள்ளது. ரூ. 24,000 செலவில் விவசாயக் கிடங்கு கட்டப்பட்டு வருகிறது. சிறுபாசன வசதிக்காக பல ஏரிகள் ரூ. 29,700 செலவில் சீர் செய்யப்பட்டுள்ளது.


கவனிக்கவும் -
யானை டிரேட் மார்க்
யானை டிரேட் மார்க், உர மூட்டைகளில் இருக்கிறதா என்று கவனித்து வாங்கவும்
பாக்ட் கம்பெனியாரின் உரத் தயாரிப்புகள்
பாக்டம்பாஸ்
(அமோனியம் பாஸ்பேட் 16 : 20)
அல்ட்ராபாஸ்
(மிகவும் பொடியாகத் தூளாக்கப்பட்ட மினரல் பாஸ்பேட்)
அமோனியம் ஸல்பேட்
சூபர்பாஸ்பேட்
N.P.K. கலப்பு உரங்கள்
FACT
பாக்ட் ...யானை மார்க் உரங்கள்
பெர்டிலைஸர்ஸ் அண்டு கெமிகல்ஸ் திருவிதாங்கூர் லிமிடெட்
பதிவு காரியாலயம்: ஏலூர், உத்யோகமண்டல், P. O. கேரள ராஜ்யம்
பிராந்திய அலுவலகம்: 2வது மாடி 19, கமாண்டர்-இன்-சீப்ரோடு எழும்பூர் சென்னை
Criterion-FT-2004 A

முதலமைச்சர்கள் மாநாடு—4-ம் பக்கத் தொடர்ச்சி.

நாம் சமீப எதிர்காலத்தில் செய்து கொடுக்கவே முடியாது. இந்த அத்தியாவசியத் தேவைகளை கிராம மக்களுக்குச் செய்து கொடுப்பதில் இனியும் காலதாமதம் செய்வோமானால் மக்கள் பொறுக்க மாட்டார்கள். அரசுக்கு எதிராக கிளர்ந்தெழுவார்கள்,

உயர்நிலைப் பள்ளி கல்வி, கல்லூரிக் கல்வி ஆகியவற்றிற்கு ஆகும் செலவைச் சரிக்கட்ட மத்திய அரசு பணம் கொடுக்கிறது. ஆனால் அடிப்படைத் தேவையான ஆரம்பக் கல்விக்கு மத்திய நிதி உதவி கொடுக்கப் படாதது விசித்திரமாகத் தோன்றுகிறது,

எல்லோருக்கும் கட்டாயமாக இலவச ஆரம்பக் கல்வி கொடுக்கப்பட வேண்டும் என்று அரசியல் சட்டம் கூறுகிறது. ஆனால், அந்த இலவசக் கல்வி வசதியை செய்து கொடுப்பதற்கு, மத்திய அரசு மான்யம் கொடுப்பதில்லை. இது பொருத்தமற்றது ஆகும். கிராம வளர்ச்சிப் பணிகளுக்காக தமிழக அரசு ஆண்டு தோறும் ரூ. 58 கோடி செலவிடுகிறது. இதில் ரூ. 22 கோடிக்கும் சற்று அதிகமான தொகையை ஆரம்பக் கல்வி திட்டத்துக்காக ஊராட்சி ஒன்றியங்கள் செலவிட்டுவிடுகின்றன. மீதமுள்ள ரூ. 26 கோடி, இதர கிராம வளர்ச்சி வேலைகளை செய்ய போதுமானதாக இல்லை.

ஆகவே, பள்ளிக்கூட, கல்லூரிக் கல்விக்காக மத்திய அரசு நிதி உதவி செய்வதைப் போல, அரசியல் சட்ட ஆணையைப் நிறைவேற்றும் தொடக்க கல்வித் திட்டத்துக்காக நிதி உதவ வேண்டும் என்று மத்திய அரசை கேட்டுக்கொள்கிறேன். அதேபோல், கிராம குடிநீர், சுகாதாரம், விளக்கு வசதிகள் செய்து கொடுப்பதற்கும் மத்திய அரசு நிதி உதவி செய்ய வேண்டிக் கொள்கிறேன்.

குறிப்பாக குடிநீர்த் திட்டத்துக்காக ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஆண்டுக்கு கொடுக்கப்படும் ரூ. 15 ஆயிரம் போதுமானது அல்ல. குறைந்த அளவு இதற்கு ஆண்டுக்கு ரூ. 1 லட்சமாக ஒதுக்கும் வகையில் மத்திய அரசு நிதியாக தர வேண்டும்.''

## திரு. ஜகஜீவன்ராம்

''கிராமப் பகுதிகளின் அதிக அளவு வளர்ச்சிக்கு, சமுதாய நலத் திட்டத்தை சீர்படுத்தி, அதற்கு புதிய பலத்தையும் வேகத்தையும் ஊட்டுவதைத் தவிர வேறு வழியில்லை'' என்றார் இந்திய அரசு உணவு-வேளாண்மை அமைச்சர் திரு. ஜகஜீவன் ராம். ''ஊராட்சி அமைப்புகள் ஏற்பட்டு சில ஆண்டுகளே ஆவதால், அவை இன்னும் பக்குவம் அடையவில்லை. எந்த நிர்வாக அமைப்புக்கும் உரிய குறைகள் ஊராட்சி அமைப்பிலும் உள்ளது. குறிப்பாக கிராமங்களில் சாதி அடிப்படையில் கோஷ்டி மனப்பான்மை இருப்பதை மறுப்பதற்கில்லை. ஒவ்வொரு கோஷ்டியும் ஊராட்சியின் அதிகாரங்களைத் தனக்குச் சாதகமாக பயன்படுத்திக் கொள்ள முயற்சிக்கின்றன'' என்று கருத்துத் தெரிவித்தார் திரு ஜகஜீவன் ராம்.

''ஆனாலும் தமிழகம், மகாராஷ்டிரம், குஜராத் மாநிலங்களின் அனுபவத்தைக் கொண்டு ஆராய்ந்தால், ஊராட்சிகளுக்கு அதிகாரமும், வருவாய் வாய்ப்புகளும் வழங்கி, அவை ஒழுங்காக பயன்படுத்தப்படுவதற்கான உறுதியான ஏற்பாட்டை செய்வது ஒன்றுதான் பரிகாரம் என்று தோன்றுகிறது. சமுதாய நல திட்டங்களில் பயன் உண்டு என்றும், அத்திட்டங்கள் இதுவரை செயல்பட்ட விதம் பற்றியும் சில வட்டாரங்களில் ஐயப்பாடு எழுப்பப்பட்டுள்ளன. சமுதாய நலத் திட்டங்களை அறவே கைவிட சிலர் யோசனை கூறியுள்ளனர். ஆகவே இந்த பிரச்னைக்கு புதிய நோக்கு ஏற்பட வேண்டிய தருணம் வந்துவிட்டது. சமுதாய நல திட்டத்திற்கான பரந்த குறிக்கோள்களை உருவாக்கவும், அதன் நிர்வாக சீரமைப்பிற்கு யோசனை கூறவும், இந்த மாநாடு உதவி புரியவேண்டும்.

மிகு விளைச்சல் தரும் கலப்பு ரக விதைகள், ரசாயன உரங்கள், பூச்சி, நோய் கொல்லிகள் ஆகியவற்றின் பயன் பிரபலமாகி வருகிறது. இவற்றினால் விவசாய சமுதாயத்தில் ஏற்படும் வளர்ச்சி பரவலாக இல்லாவிட்டால் அதன் விளைவாக புதிய பிரச்னைகள் தலை காட்டும். புதிய விவசாய முறைகளை பண வசதியுள்ள பெரிய விவசாயிகள் எளிதில் பின்பற்ற முடிகிறது. சிறிய விவசாயிகள், வசதி குறைவு காரணமாக பழங்கால முறைகளைத் தான் பின்பற்ற முடிகிறது. இந்த ஏற்றத் தாழ்வினால் சமூக புரைசல் ஏற்படும். இதை தவிர்க்க சமுதாய நலத் திட்ட ஊராட்சி நிறுவனங்கள் பாடுபட வேண்டும். எல்லா விவசாயிகளும் நவீன விவசாய முறைகளைப் பின்பற்றி பயன் அடைய அவை உதவி புரியும் என நம்புகிறேன்.

சமுதாய நலத் திட்டம் செயல்படுவதில் சில அடிப்படை இலட்சியங்கள் உண்டு. அந்தத் திட்டத்தில் மக்கள் சுயமாகவே பங்கெடுத்துக் கொள்ளும்படி செய்யவேண்டுமென்பது ஓர் இலட்சியம். அவர்கள் தங்களது சொந்த முயற்சியையே கூடுமான அளவுக்கு நம்பியிருக்க வேண்டும். அரசாங்கம் தொழில் நுட்ப உதவியைப் போன்ற உதவிகளைத் தான் செய்யும். சமுதாயம் பூராவுமே வளர்ச்சிக்கான அடிப்படை அமைப்பு என்பது இத்திட்டத்தின் மற்றொரு பகுதி.

இந்த லட்சியங்களின் அடிப்படையில் தான் சமுதாய நலத் திட்டத்தின் வெற்றி, தோல்வியை மதிப்பிட வேண்டும். திட்டத்தில் பொது மக்கள் பங்கெடுத்துக் கொள்கிறார்களா, தாங்களாகவே அவ்வாறு செய்கிறார்களா, அதற்கு ஊக்கமளிக்கப்படுகிறதா, சமுதாயம் முழுவதும் அத் திட்டத்தால் பயன் அடைந்திருக்கிறதா அல்லது செல்வாக்குள்ளவர்கள் மட்டுமே பயனடைந்துள்ளனரா? இந்த அடிப்படையில் தான் சமுதாய நலத் திட்டத்தை ஆராய வேண்டும்.''

தமிழ்நாட்டில் சமுதாய வளர்ச்சி திட்டத்தின் முன்னேற்றத்தை சித்தரிக்கும் கண்காட்சியொன்றை, இந்திய அரசு சமுதாய நல ராஜாங்க அமைச்சர் திரு எம். எஸ். குருபாத சாமி திறந்து வைத்தார்.

## திரு. செ. மாதவன்

''சிறிய விவசாயிகளை கூட்டுறவு சாகுபடி சங்கங்களின் கீழ் கொண்டுவருவதற்கான ஒரு முறையை நாம் வகுக்க வேண்டும்'' என்று மாநாட்டின் இரண்டாவது நாள் (12—6—68) கூட்டத்தில் ''கூட்டுறவு'' பற்றி விவாதிக்கையில், தமிழக கூட்டுறவு அமைச்சர் திரு. செ. மாதவன் கூறினார்.

''நமது நாடு பெரும்பாலும் சிறிய விவசாயிகளையே கொண்டது. அவர்களது நிலைமை குறித்து தனிக் கவனம் செலுத்தப்படவேண்டும். இந்த விவசாயிகள் நவீன விவசாய முறைகளை பின்பற்றாவிட்டால் விவசாய உற்பத்தியில் பெரிய முன்னேற்றம் எதையும் நாம் காணமுடியாது. எனவே இந்த விவசாயிகளை கூட்டுறவு சாகுபடி சங்கங்களின் கீழ் கொண்டு வருவதற்கான ஒரு முறையை நாம் வகுக்கவேண்டும்.

விவசாயிகள் கூட்டுறவு சாகுபடி சங்கத்தில் சேர்ந்தாலும், நிலங்கள் அவர்களுக்கே சொந்தமானவையாக இருக்கும். அதே சமயத்தில், கூட்டுறவில் சேர்வதன் மூலம் நவீன விவசாய முறைகளை அவர்கள் பயன்படுத்த முடியும். இத்தகைய சாகுபடி சங்கங்களே நமது நாட்டில் வெற்றி காணமுடியும்'' என்று அமைச்சர் திரு செ. மாதவன் கூறினார்.

''குறைந்த அளவு வருமானமுள்ள ஏழை மக்களை சுயநலமிகளின் பிடியிலிருந்து மீட்பதே கூட்டுறவு இயக்கத்தின் முக்கிய நோக்கம். இதனை நீங்கள் அடிக்கடி வலியுறுத்தி வருகிறீர்கள்.

ஏகபோக மனப்போக்கும், சுய நலமிகளின் பிடியும் கூட்டுறவு இயக்கம் வெற்றிகரமாக நடப்பதை தடைப்படுத்துகின்றன. கூட்டுறவு இயக்கத்துக்கு புத்துயிர் ஊட்டி, இதனை மக்கள் இயக்கமாக நாம் மாற்ற வேண்டும்.

மக்களின் பொருளாதாரத் துறையில் பின்தங்கிய நிலையில் உள்ளவர்களின் பல பிரச்னைகளுக்கு பரிகாரம் கூட்டுறவு இயக்கம். இதனை எல்லோரும் ஒப்புக் கொள்கின்றனர். மக்களில் எல்லா தரப்பாருக்கும் கூட்டுறவு இயக்கம் பயன்படும் என்றபோதிலும், அடிப்படையில் இது குறைந்த வருமானம் உடையவர்களில் மேம்பாட்டுக்கானதாகும்.

அரசினால் வகுக்கப்படும் பல திட்டங்களில் கூட்டுறவுத் துறை தொடர்பு கொள்கிறது. எந்த நோக்கத்துடன் கூட்டுறவு அமைப்புகள் ஏற்படுத்தப் படுகின்றனவோ அந்த நோக்கத்தை அவை பூர்த்தி செய்கின்றன.

தனியார் துறை போட்டியை சமாளித்து நிற்க, கூட்டுறவு இயக்கத்துக்கு, மத்திய மாநில அரசுகள் உதவி அளித்து வருகின்றன.

விவசாயக் கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கங்கள் விவசாய உற்பத்தியைப் பெருக்குவதில் நல்ல பணியாற்றி வருகின்றன. தன்னிறைவை பெற, விவசாய உற்பத்தியைப் பெருக்க சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படும். இந்த சமயத்தில், இந்த சங்கங்களின் பணி குறிப்பிடத்தக்கதாக உள்ளது.

தமிழ்நாட்டில் விவசாய உற்பத்திக் கடனாக கொடுக்கப்பட்ட தொகை கடந்த 3 ஆண்டுகளில் முறையே 30 கோடியே 75 லட்சம் ரூபாய்; 31 கோடியே 41 லட்சம் ரூபாய்; 37 கோடியே 26 லட்சம் ரூபாய். உற்பத்தியைப் பெருக்கவும், அதே சமயத்தில் உற்பத்திப் பொருள்களை விவசாயிகளுக்கு ஆதாயம் கிடைக்கும் வகையில் விற்பனை செய்யவும் கடன் விரிவு திட்டங்கள் வகுக்கப்படுகின்றன.

பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையில் உள்ள மக்கள், கூட்டுறவு இயக்கத்தின் முழுப் பயனை அடை முடியாமல் இருக்கிறது.

கூட்டுறவு அமைப்புகளின் நிர்வாகத்தைச் சீர்படுத்த பலவித முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், எல்லாம் சரியாக இல்லை என்ற நிலையே இருக்கிறது. ஆதாரக் கடன் வழங்கு சங்கங்களினால் வழங்கப்படும் கடன்கள் சிறிய, நிலச்சுவான்தார்களுக்கும், நிலமற்ற விவசாயிகளுக்கும் போய்ச் சேருவதில்லை; சில செல்வாக்கு உடையவர் இந்த சங்கங்களினால் பெரும்பலன் அடைகிறார்கள் என்று குறை கூறப்படுகிறது, தன்னலத்தைப் பெரிதாகக் கொள்ளும் சில சிறு கும்பல்கள் கூட்டுறவு சங்கங்களை தங்கள் பிடியில் வைத்துக்கொண்டு, பலன் அடைந்து வருகின்றன. இது, மத்திய, மாநில அரசுகளின் கவனத்தில் இருக்கிறது.

### திரு ஜெகஜீவன் ராம்

மாநாட்டின் இரண்டாம் நாள், திரு. ஜெகஜீவன்ராம் அவர்கள் கூட்டுறவு இயக்கம் சிறப்பட பல கருத்துக்களை எடுத்துரைத்தார். அவர் கூறியதாவது:—

"கூட்டுறவுக் கடன் நிறுவனத்திற்கு முதுகெலும்பு போல தற்போது 3 கட்ட அமைப்பு விளங்குகிறது, இந்த 3 கட்ட அமைப்பில் ஒன்று அல்லது இரண்டை ஒழிப்பது பற்றி ஆராயலாம்.

கூட்டுறவு இயக்கத்தில் விவசாயத்துக்கு நீண்டகால கடன் வழங்க தனி அமைப்பும் நீடிக்க வேண்டுமா என்பது பற்றி ஆராய வேண்டும்.

உற்பத்தி கடனை வழங்க கூட்டுறவு விற்பனை சங்கங்களுக்கு அதிகாரம் வழங்குவது பற்றியும் ஆலோசிக்கவேண்டும்.

சாதாரண விவசாயிக்கு பயன் அளிக்கும் வகையில் கூட்டுறவு இயக்கம் செயல்படவேண்டும்.

கூட்டுறவு சங்கங்களின் தினசரி நிர்வாகத்தை மேற்கொள்ள நிர்வாக ஊழியர்கள் பிரிவை தனியாக அமைப்பது பற்றி ஆராயவேண்டும்.

(1) விவசாயத் திட்டங்களுக்கு கூட்டுறவு இயக்கத்தினால் போதிய ஆதரவு அளிக்க முடிந்திருக்கிறதா? (2) சிறிய விவசாயிகளின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் கூட்டுறவு இயக்கம் எந்த அளவுக்கு பணியாற்றியுள்ளது? (3) கூட்டுறவு இயக்கத்தில் பிற்போக்கு சக்திகளை எந்த அளவுக்கு ஒழிக்கமுடியும்? (4) கூட்டுறவுச் சங்கங்கள் அமைப்பு, நடைமுறைகள் ஆகியவற்றை இன்னமும் எந்த அளவுக்கு எளிதாக ஆக்க முடியும்? (5) நிலமற்ற விவசாயிகளுக்கும், தொழிலாளர்களுக்கும் கடன் வழங்கி, சிறந்த வேலை வாய்ப்பு அளிப்பதில் கூட்டுறவு இயக்கம் எந்த அளவுக்கு பணியாற்ற முடியும்? (6) விவசாயம் சம்பந்தப்பட்ட தொழில்களுக்கு கூட்டுறவு இயக்கம் எந்த அளவு உதவி அளிக்க முடியும்? என்பது பற்றியும் கவனிக்கவேண்டும்.

விவசாய உற்பத்தித் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு சிறந்த சாதனமாக கூட்டுறவு இயக்கம் விளங்குகிறது.

### திரு எம். எஸ். குருபாத சாமி

மத்திய அரசு உணவு வேளாண்மை, சமுதாய நலத்திட்டம் கூட்டுறவுத்துறை ராஜாங்க அமைச்சர் திரு எம். எஸ். குருபாதசாமி இரண்டு நாட்களும் மாநாட்டில் உரையாற்றினர்.

[—20-ம் பக்கம் பார்க்க.]



# இலட்சியச் சின்னம்

"எங்கள் கிராமமான நாடிபுடியில் உங்களை மிகவும் கவர்ந்தது எது?", என்று கேட்டார் திரு காளா வெங்கடராவ்.

ஆந்திர மாநிலத்திலுள்ள கிழக்கு கோதாவரி மாவட்ட ஜில்லா பரிஷத் செயலாளர் அவர். காளா வெங்கடாரவின் சொந்த ஊரான நாடிபுடியில் சுற்றுப் பயணம் செய்துவிட்டு திரும்பிய போதுதான் அவரைச் சந்திக்க முடிந்தது, அப்பொழுதுதான் அவர் மேற்கண்டவாறு கேட்டார்.

"நாடிபுடி பல்நோக்கு கூட்டுறவு கடன் வழங்கும் சங்கம்தான்" என்று தயக்கமில்லாமல் என்னால் பதில் சொல்ல முடிந்தது.

ஆமாம், நாடிபுடி பல்நோக்கு கூட்டுறவு கடன் வழங்கும் சங்கம் அந்த அளவுக்கு சீரிய முறையில் பணியாற்றி வருகிறது. இன்னும் சொல்லுவதென்றால் நாடிபுடி ஊராட்சி மன்றத்தின் சாதனையைவிட நாடிபுடி பல்நோக்கு கூட்டுறவு கடன் வழங்கும் சங்கத்தின் சாதனைகள் தாம் அதிகம். அந்தக் கிராமத்தில் முன்னேற்றத்திற்கு முழு முதற் காரணமாக இருப்பது இந்தக் கூட்டுறவுச் சங்கம்தான்.

### தனித்தியங்கும் சங்கம்

1964-ஆம் ஆண்டில்தான் நாடிபுடி கூட்டுறவு கடன் வழங்கும் சங்கம் தொடங்கப்பட்டது. தொடக்க காலத்தில் 60 உறுப்பினர்கள்தான். அவர்களுடைய பங்காகச் செலுத்தப்பட்ட மூலதனம் ரூ. 535. இப்பொழுது அச்சங்கத்தின் உறுப்பினர்கள் 500. அவர்கள் மூலதனமாக செலுத்தியுள்ள பங்குத் தொகை ரூ. 3,817.

விவசாயிகள், விவசாயிகள் அல்லாதவர்கள் முதலியோருக்கு பல வகையிலும் இச்சங்கம் உதவுகிறது. வேறு எந்த அமைப்பின் உதவியில்லாமல் தனித்து இயங்குகிறது இச்சங்கம்.

### கடன் வழங்கும் சிறந்த சங்கம்

நாடிபுடி கூட்டுறவு கடன் வழங்கும் சங்கம் மேற்கு கோதாவரி விற்பனை கழகத்தில் கிளை நிறுவனமாக இருந்தும் பணியாற்றுகிறது. இரசாயன உரங்கள், பொறுக்கு விதைகள் மற்றும் வேளாண்மைக்குத் தேவையான பொருள்களை நாடிபுடி ஊராட்சி சார்பிலும், மேற்கு கோதாவரி விற்பனைக் கழகச் சார்பிலும் வழங்குகிறது. இதில் மிகவும் குறிப்பாகச் சுட்டிக்காட்ட வேண்டியது நாடிபுடி பல்நோக்கு கூட்டுறவு கடன் வழங்கும் சங்கத்திற்கு அதன் உறுப்பினர் யாரும் அளவுக்கு மீறிய கடன் பாக்கி வைப்பதில்லை. இந்த சங்கம்தான் மேற்கு கோதாவரி மாவட்டத்தின் சிறந்த கடன் வழங்கும் கூட்டுறவுச் சங்கமாக 1960-61-ம் ஆண்டு தேர்ந்தெடுக்கப்பட்டது.

1965-66-ம் ஆண்டில் இந்தச் சங்கம் அதன் உறுப்பினர்களுக்கு மட்டும் ரூ. 27,800 கடன் கொடுத்துள்ளது.



விவசாயிகள் தங்களுடைய உற்பத்திப் பொருள்களை விற்பனைச் செய்யவும் இந்தக் கூட்டுறவுச் சங்கம் பெருமளவில் உதவிகளை செய்துள்ளது. உணவு தானியங்களை பாதுகாப்பாக வைப்பதற்காக ரூ. 14,000 செலவில் ஒரு கட்டிடத்தையும் கட்டியுள்ளது.

### நீங்காத பற்றுள்ள தலைவர்

சுருக்கமாகச் சொன்னால் நாடிபுடி விவசாயிகளின் பொருளாதார மேம்பாட்டுக்கு பல்வகையிலும் உதவியுள்ளது. கூட்டுறவு இலட்சியத்தில் நீங்கா பற்றுடைய திரு நெக்கண்டி. வேங்கட ஜனார்த்தனராவ் அவர்கள் இச்சங்கத்தின் தலைவராக பணியாற்றுகிறார்.

வேளாண்மைக்கு நாடிபுடி பல்நோக்கு கூட்டுறவுச் சங்கம் ஆற்றும் உதவிகளால் அப்பகுதியில் புதிய மறு மலர்ச்சி தோன்றிவிட்டது.

நாடிபுடி ஊராட்சி மன்றமும், நாடிபுடியின் வளர்ச்சிக்கு பல்வகையில் துணை புரிந்துள்ளது.

ஆந்திர மாநிலத்தில் மேற்கு கோதவரி மாவட்டத்தில் போடூர் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள நாடிபுடி ஊராட்சி, நாட்டிலுள்ள ஊராட்சிகள் அனைத்துக்கும் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. இலட்சியச் சின்னமாக காட்சி அளிக்கிறது.

விவசாயத் துறையில் நாடிபுடி ஊராட்சி ஆற்றியுள்ள பணிகள் ஏராளம். வேளாண்மையில் புதிய

[—45-ம் பக்கம் பார்க்க]

முதலமைச்சர்கள் மாநாடு—18-ம பக்கத் தொடர்ச்சி.

"ஐந்தாண்டுத் திட்ட இலக்குகளை எய்தும் முயற்சியில் புதிய அமைப்புகள் ஏற்படுத்தப்படுகிறதே தவிர, அவற்றின் திறமையில் போதிய கவனம் செலுத்தப்படவில்லை என்றும், இதன் விளைவாக கூட்டுறவுத்துறையின் சாதனை புள்ளி விவர ரீதியில் பிரம்மாண்டமானதாகத் தோன்றினாலும்-உயரிய, கூட்டுறவு இலட்சிய உணர்வு போதிய அளவு புலப்படவில்லை" என்று திரு குருபாதசாமி கூறினார்.

பலதரப்பட்ட கூட்டுறவு அமைப்புகள் பெருகியுள்ளனவே தவிர, அவற்றில் பெரும்பாலானவை பொருளாதார ரீதியில்கட்டுப்படியானவையல்ல. மூன்றாவதாக, கூட்டுறவு இயக்கத்தின் பல முனை வளர்ச்சிக்கு ஏற்ற நிர்வாக, மேற்பார்வை அதிகாரிகள் அமைப்பு உருவாகவில்லை என்றும், இந்த குறைபாடுகளின் விளைவாகக் கூட்டுறவுச் சங்கங்கள் அரசாங்க உதவியை நம்பியிருக்கும் நிலை இருக்கிறதே தவிர சுய பலமுள்ளதாக இல்லை" என்றும் கூறினார்.

"கூட்டுறவுச் சங்கங்கள் வழங்கும் கடன் தொகையில் பெரும்பகுதி அதிக வருமானமுள்ள விவசாயிகளுக்கே போய்ச் சேருகிறது என்ற புகார் பற்றிக் குறிப்பிட்டு" அதற்கு விளக்கம் கூறுகையில் "விவசாயக் கடன் முறை, நாட்டில் உள்ள நில உடைமை முறையைப் பொறுத்தே இருக்கும் என்றும், நம் நாட்டின் நில உடைமை முறை சிறிய விவசாயிகளுக்கு சாதகமாக இல்லை" என்றும் கூறினார். 'மேல்தளத்தில் உள்ள 6·4 சதவிகித சாகுபடியாளர்களிடம் 22·4 சதவிகித நிலம் இருக்கிறது. அடி மட்டத்தில் உள்ள 16 சதவிகிதத்தினரிடம் 4·6 சதவிகித நிலம்தான் இருக்கிறது. இதனால் உற்பத்தியுடன் இணைக்கப்படும் கடன் முறையில் பெரிய விவசாயிகளுக்குத் தரப்படும் கடன் தொகை அவர்களது எண்ணிக்கை அடிப்படையில் சேர வேண்டியதைவிட மிக அதிகமாக இருப்பது இயற்கையே'' என்றார்.

கூட்டுறவுச் சங்கங்களில் ஏகபோகத்தைத் தடுக்க பதவியைப் பொறுத்தவரையில் காலவரையறையை ஏற்படுத்தலாமென அவர் ஆலோசனை வழங்கினார்.

## மாநாட்டு முடிவுகள்

முதலமைச்சர்கள் மாநாட்டு முடிவுகளை ஒவ்வொரு நாளும் செய்தியாளர்களிடம் மத்திய அரசு உணவு, வேளாண்மை சமுதாய நலத்திட்டம், கூட்டுறவு ராஜாங்க அமைச்சர் திரு எம்.எஸ். குருபாதசாமி தெரிவித்தார்,

சமுதாய நலத்திட்டம், ஊராட்சி முறையை தொடர்ந்து நீடிப்பதென முதலமைச்சர்கள் முடிவெடுத்தனர்.

கிராமங்களின் நலன், வளர்ச்சி, அவ்விரு திட்டங்களையும் தீவிரப்படுத்துவதென்று முடிவு எடுக்கப்பட்டது.

இணக்கமான கிராம வளர்ச்சிப் பணிக்காக, சமுதாய நலத் துறை முன்பு தாக்கல் செய்த கொள்கை அறிக்கையை முதல்வர்கள் அனைவரும் பொதுவாக ஒப்புக்கொண்டனர்.

சமுதாய நலத் திட்டம், ஊராட்சி அமைப்பு முறைக்கு கூடுதலாக ரூ. 150 கோடி ஒதுக்கும்படி முதலமைச்சர்கள் கோருவார்கள்.

சமுதாய நலத்திட்டம், ஊராட்சி முறை ஆகிய இரு திட்டங்களுக்கும் ஒரு வட்டார வளர்ச்சிப் பகுதியில் உள்ள மக்களுக்கு ஒருவருக்கு 2 ரூபாய் வீதமும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர், மலைவாழ் மக்கள் ஆகியவர்களுக்கு ஒருவருக்கு 4 ரூபாய் வீதமும் நிதி ஒதுக்க வேண்டும் என்று கூறப்பட்ட கருத்தை மாநாடு கவனத்தில் கொண்டு, மலைவாழ் மக்கள் (பழங்குடி மக்கள்) பெரும்பான்மையான உள்ள வட்டார வளர்ச்சிப் பகுதிகளுக்கு தனிக் கவனம் தேவை; திட்டம் நிறைவேற்றப்படும் பொழுது இதைச் செய்ய வேண்டும்; சமுதாயத்தில் பலவீனமான பகுதியினருக்கு போதிய வாய்ப்புகள் அளிக்கப்பட வேண்டும்; இவைகளை பரிசீலித்து முடிவு செய்ய ஓர் ஆய்வுக்குழு தேவை என்றும் மாநாட்டில் வலியுறுத்தப்பட்டது,



முதல் கட்ட, இரண்டாவது கட்ட வளர்ச்சியில் உள்ள வட்டாரங்களுக்கு தற்சமயம் கிடைக்க வேண்டிய நிதி உதவி தொடர்ந்து கிடைக்க வகை செய்யவேண்டும் என்றும் கருதப்பட்டது.

### ஊராட்சி முறை

மக்களாட்சி முறையின் அடிப்படைக்கும் நல்வாய்ப்பாக அமைந்துள்ள ஊராட்சி முறை நீடிக்கவேண்டும்.

ஊராட்சி அமைப்புகள் இரண்டு இரண்டு அடுக்காக இருக்கவேண்டுமா, மூவடுக்கா இருக்க வேண்டுமா என்பதை மாநில அரசுகளின் விருப்பத்திற்கே விட்டுவிடுவதென்றும் கருதப்பட்டது. மருத்துவபணி தேவைப்படாத குடும்பக்கட்டுப்பாடு பணியை சமுதாய நல அமைப்புகளிடம் அளிக்கலாம் என்றும் கூறப்பட்டது.

கூடுதல் வருவாயைத் திரட்ட, ஊராட்சி அமைப்புகளுக்கு மத்திய அரசு, மாநில அரசு உதவ வேண்டுமென்றும் வலியுறுத்தப்பட்டது.

### கூட்டுறவு இயக்கத்தை வலுப்படுத்த....

இரண்டாம் நாள் மாநாட்டில் கூட்டுறவு இயக்கத்தின் குறைகளை களைவது பற்றி முடிவு எடுக்கப்பட்டது.

கூட்டுறவு இயக்கம் நன்கு நிலை பெறாத இடங்களில், ஆரம்பச் சங்கங்களுக்கும், மத்திய சங்கங்களுக்கும் விரைவில் விறுவிறுப்பு ஊட்ட வேண்டும் என்றும் கூட்டுறவு வசதிகள் போதிய அளவு இல்லாத இடங்களில், விவசாய கடன் வசதி கார்ப்பரேஷன் போன்ற மாற்று வசதிகளை எற்படுத்தித் தர வேண்டும் என்றும் முடிவு செய்யப்பட்டது.

உற்பத்தித் திட்டங்களுக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் அளிக்கப்படும் உதவி போதிய அளவுள்ளதாக இருக்கவேண்டும்.

சிறிய விவசாயிகளுக்கும், வசதி குறைந்தவர்களுக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் பயன்படக் கூடியதாகச் செய்யும் வகையில், மாறுதல்கள் ஏற்படுத்த வேண்டும். கடன் வழங்குவதற்கு சொத்துக்களை அடிப்படையாகக்கொள்வதற்குப் பதிலாக இந்தக் கடன் உதவியால் உற்பத்தி எவ்வளவு பெருகும், கடனைத் திருப்பித் தருவதற்கான சக்தி எவ்வளவு அதிகரிக்கும் என்பதை அடிப்படையாகக் கொள்ள வேண்டும். இப்படிச் செய்தால் கடன் கொடுக்கும் பணத்தில் ஒரு பகுதி திரும்பி வராமற் போகும் அபாயமும் இருக்கிறது. இதை மத்திய அரசும் மாநில அரசும் ஏற்க வேண்டும்,

காலா காலத்தில் சிரமமின்றி போதிய கடன் வசதி கிடைக்கச் செய்யவேண்டி, கடனுதவி கொள்கை, நடைமுறை, கடனுதவி வரம்பு ஆகியவற்றில் கடுமையைக் குறைக்க வேண்டும்.

சுய நல உரிமையாளர்களின் ஆதிக்கத்தை ஒடுக்குவதற்காக பல நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

சங்கங்களின் நிர்வாகக் குழுக்களில் சிறிய விவசாயிகளுக்கும், வசதியற்ற பிரிவினருக்கும் இடங்கள் ஒதுக்கவேண்டும். ஒருவர் ஒரே நிறுவனத்தில் இரண்டுமுறைக்கு மேல் பதவி வகிப்பதையும், ஒரே சமயத்தில் இரண்டு நிறுவனங்களுக்கு மேல் பதவி வகிப்பதையும் கட்டுப்படுத்த வேண்டும்.

சங்க நிர்வாகிகளுக்கு கடனுதவியளிப்பதை கட்டுப்படுத்தவேண்டும் அதிகாரிகள் மேற்பார்வையில் தேர்தல்களை ஒழுங்காக நடத்த வேண்டும்.

கூட்டுறவு இயக்கத்திலுள்ள கடனுதவி சங்கங்கள், நில வளர்ச்சிப் பாங்குகள், மார்க்கெட்டிங் சங்கங்கள், பண்டகசாலை சங்கங்கள் ஆகிய நான்கு பிரிவுகளில் முக்கியமான பணிகளுக்கு பொதுவான சிப்பந்திகள் பிரிவு ஒன்றை ஒவ்வொரு மாநிலமும் உருவாக்க வேண்டும்.

கூட்டுறவு கடன் வசதிகள் அதிகரிக்கப்பட வேண்டும். சான்றாக சர்க்கரை ஆலைகள், மார்க்கெட்டிங் சங்கங்கள் போன்றவை உற்பத்தி பணிகளுக்காக, தனது உறுப்பினர்களுக்கு கடன் வசதி அளிப்பதை அனுமதிக்க வேண்டும்

தற்போது சங்கங்கள் வைத்துக் கொண்டிருக்கும் அதிகப்பற்றுகளின் அளவைக் குறைத்துக் கொள்ள மனப்பூர்வமாக முயல வேண்டும்.

கூட்டுறவு இயக்க நிறுவனங்களுக்கும் ஊராட்சி முறை அமைப்புகளுக்குமிடையில் இணைப்பு ஏற்படுத்த (ஒருவருக்கொருவர் பிரதிநிதித்துவம் அளிப்பதன் மூலம்) விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கூட்டுறவு இயக்க ஊழியர்களுக்கு பயிற்சியளிக்கவும் விவரங்களை உணரவும் வேலை திட்டமொன்று வகுக்கப்பட வேண்டும்.

போலிச் சங்கங்களைக் கலைக்க கூட்டுறவு பதிவாளருக்குப போதிய அதிகாரம் அளிக்க வேண்டும். இதற்கான நடைமுறைகள் இலகுவாக்கப்பட வேண்டும். 'பம்பு செட்'டுகள் வைப்பதற்காக அளிக்கப்படும் கடனுதவியை, உற்பத்திக்கான கடனுதவி திட்டத்தின் கீழ் கொண்டு வரவேண்டும்

அரசு துறைகள், நிறுவனங்கள் ஏஜென்சிகள் தரும் பிரச்னையில் கூட்டுறவு சங்கங்களுக்கு முன்னுரிமை தர வேண்டும்.

## வரலாற்று சிறப்பு பெற்ற மாநாடு

சென்னையில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாடு வரலாற்றுச் சிறப்புப் பெற்ற மாநாடாகும்.

இத்தனை ஆண்டுகாலம் சமுதாய நலத் திட்டம், கூட்டுறவு இயக்கம் ஆகிய துறைகளில் நாம் ஆற்றியுள்ள பணி, சென்றுள்ள தூரம், இலட்சியத்தை நோக்கி செல்ல வேண்டிய வழி, இடையே நேரும் இடையூறுகள் முதலியன பற்றி ஆராயும் வாய்ப்பைப் பெற்ற மாநாடு இது.

விவேகானந்தர், அண்ணல் காந்தியடிகள் முதலியோர், இந்தியாவின் எதிர்காலம் இந்நாட்டிலுள்ள கோடிக்கணக்கான கிராம மக்களின் மேம்பாட்டில் தானிருக்கிறது என்றுர்கள்.

அந்த உத்தமர்களின் நல்லுரைக்கு செவி சாய்த்து—
ஊராட்சி முறைக்கு மேலும் வலிவூட்டி—
சமுதாயம் செழிக்க......
கூட்டுறவு மூலம் நாட்டு உயர்வைக் காண......
நாம் கொண்டுள்ள ஆள்வினை உடமை திருவினையாக்கும்.

'ஊழையும் உப்பக்கம் காண்போம்'. வெற்றி நமதே-என்பதை நாட்டுக்கு எடுத்துரைத்ததுதான் சென்னையில் நடைபெற்ற முதலமைச்சர்கள் மாநாடு.

(மாநாட்டு படங்கள் இந்த இதழின் நடுப் பக்கங்களில்......)


விவசாயிகளுக்கு வேளாண்மை ஆண்டு முழுதும்
வேலை வாய்ப்பளிக்கும் முழுநேரத் தொழிலும் அல்ல;

விவசாயத்தின் மூலம் கிடைக்கும்
வருமானமும் போதுமானதல்ல.

**கதரும் கிராமத் தொழில்களும்**

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலை வாய்ப்பளிக்கின்றன.

* கதர் - கிராமத் தொழில்களை ஆதரிப்பது
* உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்.

தமிழ்நாட்டுக் கதர் - கிராமத் தொழில் ஆயத்தின்
நிறுவனங்களில் உற்பத்தி செய்யப் பெற்ற

* கதர் * கதர்ப்பட்டு * சோப் * தேன் * செக்கெண்ணெய் * தோல் பொருள்கள் * பனைவெல்லம் * சர்க்கரை * மண்பாண்டம் * வார்ப்படங்கள் * பித்தளை, வெண்கலப் பாத்திரங்கள் * பனைப் பொருள்கள்— இன்னும்—

பற்பல கைநுட்பத் தொழில் பொருள்கள்
கதர்-கிராமத் தொழில் விற்பனை நிலையங்களிலும்
சென்னை "குறளகத்"தில் இயங்கும்
கதர்-கிராமத் தொழில் அங்காடியிலும்
விற்பனைக்கு உள்ளன.

வெளியீடு—

கதர்-கிராமத் தொழில் துறை,
2, சர் தேசிகாச்சாரி ரோடு, சென்னை-4.










படம். 1. மாண்புமிகு முதலமைச்சரின் பிறந்த நாள் காணிக்கையாக அளிக்கப்படவிருக்கும் ஓராண்டுத் திட்ட வேலைகளில் கண்டுள்ள முன்னேற்றம், நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் கிராம வளர்ச்சித் திட்டங்கள் பற்றி, மாவட்ட ஆட்சித் தலைவர்களுடன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள் 5-6-1968-ல் விவாதித்தார்.

படம். 2 செங்கை மாவட்டம், வாலாஜாபாத் ஊராட்சி ஒன்றியம், குண்ணவாக்கம் பள்ளிக் கட்டிடத்தை, மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. இரா நெடுஞ்செழியன் 18—4—1968-ல் திறந்து வைத்தார்.

படம். 3 இராமநாதபுரம் மாவட்டம், திருப்பத்தூர் ஊராட்சி ஒன்றியம், துவார் கிராமத்தில், மாண்புமிகு உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் சமுதாய நீர்ப்பாசனக் கிணறு ஒன்றினை, ஜூன் முதல் வாரத்தில், துவக்கி வைத்தார்.



படம். 4 ஜூன் மாதத்தில், சென்னையில், தீ விபத்தால் பாதிக்கப்பட்ட குடிசை வாழ் மக்களை, மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள், நேரில் சந்தித்து, ஆறுதல் கூறினர்.



படம். 5 சீரிய பணியாற்றி வரும் கோவை மாவட்டம், கோபிச்செட்டிப்பாளையம் சீரணிப் படையினரின் அணி வகுப்பை, மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எஸ். பி. அம்புரோஸ், ஐ. ஏ. எஸ்., பார்வையிட்டார் (20-3-1968)





# அனைத்திந்திய முதலமைச்சர்கள் மாநாடு

(சமுதாய வளர்ச்சி- கூட்டுறவு பகுதி)













(11, 12, ஜூன் '68 ல் சென்னை நகரில்)

(சிறப்புக் கட்டுரை இந்த இதழில்)

















படம். 1 சென்னையில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட குடிசை வாழ் மக்களை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினர், மாண்புமிகு உணவமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் (14-6-1968)

படம். 2 மாநில பழங்குடி மக்கள் புனர்வாழ்வுக்கான ஆலோசனைக் குழுவின் கூட்டம் சென்னை கோட்டையில், 1-6-1968 அன்று, மாண்புமிகு அரிசன நலச் செய்தித் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

படம். 3 செங்கை மாவட்டம், திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம். சிறுங்குன்றம் ஊராட்சி அலுவலகக் கட்டடத்தை 16-4-1968 அன்று, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ஏ. கோவிந்தசாமி அவர்கள் திறந்து வைத்தார்.

படம். 4 திருப்போரூர் ஊராட்சி ஒன்றியம், கேளம்பாக்கத்தில் 29-3-1968-ல். ஆரம்ப சுகாதார நிலையத்தை, உதவி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ரங்காராவ், ஐ. ஏ. எஸ்., திறந்து வைத்தார். ஊராட்சி ஒன்றியப் பெருந்தலைவர் திரு. கே. எஸ். சுப்பிரமணிய முதலியார் தலைமை வகித்தார்.

படம். 5 தென் ஆர்க்காடு மாவட்டம், விழுப்புரம் நகரில், ரூ. 8,000 செலவில் கட்டப்படவிருக்கும் ஒரு பள்ளிக் கூடத்திற்கு வழிபாதை அமைக்கும் பணியை, சிரணிப்படையினர் செய்து முடித்தனர்.

கடிதம் சொல்லும் நிகழ்ச்சி :

# "இனியொரு விதி செய்வோம்"

நெஞ்சிற்கினிய நண்ப !

நெடுநாட்களுக்குப் பிறகு கடிதம் எழுதுகிறேன். 'அலுவல் மிகுதி ஆகவே எழுதமுடியவில்லை' என்ற வாடிக்கையான என் காரணம் உனக்கு வேடிக்கையாகத் தெரியும் என்பதால் அதை எழுதவில்லை. நான் எழுத நினைத்ததைப் பற்றியே எழுதத் தொடங்கி விடுகிறேன்.

முன்னறியா இன்பத்தை நான் அண்மையில் நுகர நேர்ந்தது. அந்த இன்பத்தையும் மகிழ்ச்சியையும் உன்னிடம் பங்கிட்டுக் கொள்ள விரும்பினேன். அதன் விளைவே இக்கடிதம்.

தமிழார்வம் மிக்க பலர் தலைமைச் செயலகத்தில் பணியாற்றி வருகின்றனர். அவர்களை ஊக்குவிக்கும் முறையிலும், தமிழுக்கு நற்றொண்டு ஆற்றவேண்டுமென்ற ஆர்வத்தாலும் தலைமைச் செயலக முத்தமிழ் மன்றம் உருப்பெற்றுள்ளது. கடந்த திங்கள் அதன் தொடக்க விழா நடைபெற்றது.

தொடக்க விழாவில் வரவேற்புரை நிகழ்த்திய மன்ற அவைத்தலைவர் திரு கோ. முத்துப்பிள்ளை அவர்கள் தமது வரவேற்புரையில் முத்தமிழ் மன்றத் தொடக்கத்தால் தாம் முன்னறியா இன்பத்தை அனுபவிப்பதாக கூறினர்.




இந்த விழாவில் கலந்து கொண்ட அரசு அலுவலர்கள் அனைவருமே முன்னறியா 'அந்த இன்பத்தை' அனுபவித்தனர். தமிழ் வளர்ச்சி இயக்குநர் தமிழ்ப் பெரும்புலவர் திரு மு. ரா. பெருமாள் முதலியார் அவர்கள் வாழ்த்துரையில் தமிழ் பெற்றுவரும் ஏற்றங்களை எடுத்துரைத்தார்.

முத்தமிழ் இசைச் சித்தர் சிதம்பரம் திரு எஸ். ஜெயராமன் அவர்களும் நடிப்பிசைப் புலவர் திரு கே. ஆர். இராமசாமி அவர்களும் இசை விருந்தளித்தனர். விழாவில் சிறப்புரையாற்றிய மாண்புமிகு சுகாதார அமைச்சர் திரு சாதிக் பாட்சா அவர்கள், வருகின்ற நாட்களில் மன்றம் திட்டங்கள் பல வகுத்துச் செம்மையான வகையில் தாமதமின்றி தமிழ்த் தொண்டாற்ற வேண்டும் என்று வாழ்த்துரைத்தார்.

விழாவின் சிறப்புக்கு ஒரு சிறப்பாய் அமைந்தது, உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு திரு மா. முத்துசாமி அவர்களின் சிறப்புரை:

" தமிழ்த்தாய்க்குரிய இடம் நாட்டிலே அளிக்கப்பட்டு வருகிறது என்பதன் அடையாளமே முத்தமிழ் மன்றம்; தமிழார்வம் தமிழ் உணர்வுகளாக உருவாகிவரும் நேரமிது" என்பதை அமைச்சர் அழகாக எடுத்துரைத்தார்.

"தேமதுர தமிழோசை உலகமெலாம் பரவுவதற்கு முன்பு உள்ளூரிலேயே நல்ல முறையில் தமிழோசையைக் கேட்க நாம் உழைக்க வேண்டாமா என்றும்" வினவினர்.

நியாயமான கேள்விதானே அது ?

" அதே நேரத்தில் 'தமிழன் என்றொரு இனமுண்டு, தனியே அவருக்கொரு குணமுண்டு" என்று நம்மிலேயே ஒருவர் இன்னொருவரிடம் சொல்ல அவர் " அப்படியா? " என்று வியப்புடன் கேட்டால் என்ன பயன் ? வெளிநாட்டார் அல்லவா நம்மைப் பற்றி அப்படி புகழ்ந்துரைக்க வேண்டும். அந்த நிலையை உருவாக்க வேண்டாமா ?" என்றார் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

"அரசு அலுவலகங்களில் பணியாற்றுவோரின் தமிழார்வமும், பற்றும், புலமையும் குடத்திலிட்ட விளக்காக இருந்தது போதும், இனியேனும் புதிய தமிழிலக்கியங்கள் தோன்ற வழிவகுப்போம்" என்றார் அமைச்சர்.

"அமைச்சர்கள் மட்டும் குறிப்புகளையும் பிறவற்றையும் தமிழில் எழுதினால் போதாது. அலுவலகங்களில் உள்ள அனைவரும் தமிழில் எழுத வேண்டும்" என்பதை அமைச்சர் சுட்டிக் காட்டினார்.

அமரகவி பாரதியின் 'இனியொரு விதி செய்வோம்' என்ற வரியை எடுத்துரைத்த உள்ளாட்சித் துறை அமைச்சர், "தமிழிலேயே நிர்வாக முறைகளையும் பணிகளையும் எழுதுவோம், தமிழிலேயே கையெழுத்திடுவோம் என்று நாம் விதி வகுத்துக் கொள்ளவேண்டும்" என்றார்.

"ஒவ்வொரு திங்களும் இன்ன இன்ன செலவுகளுக்கு என்று பணத்தை ஒதுக்கி செலவிடும் நாம், தமிழ் நூல்களை வாங்க திங்கள்தோறும் சிறு தொகையை ஒதுக்கக்கூடாதா ? இதனால் தமிழ் இலக்கியங்கள் வளர்ச்சியடையவும், புதிய நூல்கள் வெளிவரவும் வாய்ப்புகள் உருவாகுமே" என்றார் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

ஆமாம் நண்ப! இனிமேல் ஒவ்வொரு திங்களும் தமிழ்ப் புத்தகங்களுக்கென ஒரு சிறு தொகையைச் செலவிட நான் முடிவு செய்துவிட்டேன். அமைச்சர் பேச்சின் விளைவு இது.

முத்தமிழ் மன்றத்தை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் திரு மு. கருணாநிதி அவர்கள் தொடங்கி வைத்தார்.

அமைச்சரின் சொற்பொழிவில் அவருக்கே உரிய இலக்கிய உவமைகள், கலை நயமும் கருத்தாழமும் மிக்கதுமான காட்சிகளும் நிகழ்ச்சிகளும் நிறைந்திருந்தன என்று நான் எழுதுவது 'தேன் தித்திக்கும்', 'மல்லிகை மணக்கும்' என்று விளக்கம் தருவது போன்றதாகும்.



எப்படிப்பட்ட இலக்கியங்களுக்கு நாம் உரிமையாளர்கள் என்பதை அவர் தம் உரையில் எடுத்துரைத்தார். 'கேட்டார்ப் பிணிக்க கேளாரும் வேட்ப' அவர் எடுத்துரைத்த இலக்கிய காட்சிகள் ஏராளம் ! ஏராளம் !

திருக்குறளில் எல்லாச் சுவைகளையும் காணலாம் என்பதை அழகுற அமைச்சர் எடுத்துரைத்தார். தமிழ் மூதாட்டி—புறநானூற்றுப் பெருமாட்டி. ஒருத்தியை அவர் படம் பிடித்துக் காட்டினார், அவருக்கே உரிய கவிதை வரிகளால் !

சுருங்கச் சொன்னால் அன்றைய மாலைப் பொழுது பயனுள்ள பொழுதாக இருந்தது.

திருக்குறள் கருத்துகள் ஓரங்க நாடகங்களாக வெளிவர வேண்டுமென்றும் பொதுப் பணித் துறை அமைச்சர் வலியுறுத்தினார்.

அரசு அலுவலர்களின் தாய்மொழிப் பற்று, நாட்டுக்கு நலம் பயக்கும் என்பதை முத்தமிழ் மன்ற தொடக்க நிகழ்ச்சிகள் எனக்கு அறிவுறுத்தின.

முத்தமிழ் மன்ற அமைப்புக் கூட்டங்களில் நடத்தப்பட்ட வெண்பாப் போட்டி, சொற்பொழிவுகள் முதலியவற்றில் சிறந்து விளங்கியவர்களுக்குப் பரிசுகள் அளிக்கப்பட்டன. அந்தக் காட்சிகளை பார்த்த பொழுதே அடுத்த முறை பரிசு பெறுவோர் பட்டியலில் நானும் ஒருவனாக இருக்க, முத்தமிழ் மன்ற நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள முடிவு செய்துவிட்டேன்.

'முத்தமிழ் மன்றம்'—அரசு அலுவலர்களிடையே தூங்கிக் கிடக்கும் தமிழார்வத்தைத் தூண்டிவிடும் தூண்டுகோல்.

குடத்திலிட்ட விளக்காக இருப்பவர்களை குன்றின் மீதிட்ட விளக்காக்கும் முயற்சி.

நண்ப, அரசு அலுவலகங்களில் பணியாற்றும் தமிழ்ப் பற்றுடையோர் தமிழை வளர்க்க 'இனியொரு விதி செய்வார்கள்' என்ற நம்பிக்கையின் அடையாளமே முத்தமிழ் மன்றம்.

தலைமைச் செயலகம் போல அரசு அலுவலகங்கள் அனைத்திலும் முத்தமிழ் மன்றங்கள் தோன்றும். தாய்மொழிப் பற்றுடையோர் தோற்றுவிப்பர் என்று நம்புகிறேன்.

உங்கள் அலுவலகத்திலும், தலைமைச் செயலகம் போன்று முத்தமிழ் மன்றம் ஒன்றினை அமைத்திட முயற்சி செய்வீர்கள் என்று எண்ணுகிறேன். என் ஆவலும் அதுதான் !

நான் நலம்; நாடலும் அஃதே அவண்

பிற பின்,

என்றும் உன்,

நம்பி.

(குறிப்பு.—தலைமைச் செயலக முத்தமிழ் மன்றத் தொடக்க விழா பற்றிய கற்பனைக் கடிதம் இது.)





பாரிவேருக்கு
தனிச்சிறப்பு
தருவது எது?

கட்டடக் கலைத்துறையில் முதன்மை வகிப்பவர்கள், நிர்மாணத் துறையில் அனுபவம் மிக்க பொறியியலாளர், உபயோகிப்பவர் எல்லோரும் பாரிவேரைப் பாராட்டிப் பேசுகின்றனர். செயல் திறன் காரணமாக ஒவ்வொரு வீட்டுக்கும் தனிச்சிறப்பு தரும் அவசிய அமைப்பாக அது இருப்பதை அனைவரும் போற்றுகின்றனர்.
பாரிவேர் விட்ரியஸில் நேர்த்திமிக்க தோற்றத்துடன் நீடித்த உழைப்பும் உறுதியும் சேர்ந்தமைந்துள்ளன — உபயோகத்தில் பூரண திருப்தியை அளிப்பது.
முத்துப் போன்ற வெண்ணிறத்திலும், மற்றும் ப்ரிம்ரோஸ், டர்க்காயிஸ் நீலம், ஆகாய நீலம், பீஜ், இளம்பச்சை வர்ணங்களிலும் இது கிடைக்கிறது.
• வழவழப்புடன் கூடிய பளபளப்பு • நீரை உறிஞ்சாது
• பூரண சுகாதாரமானது • விரிசல் விழாதது
பாரிவேர் விட்ரியஸ்தான் நவீன மோஸ்தர் வீட்டுக்கு முழுமை தருவது.

Parryware
VITREOUS

(டி.ஜி.எஸ். அண்ட் டி.யினால் அங்கீகரிக்கப்பட்டது)
விரிசல் விழாத விட்ரியஸ் வெண் களிமண்ணைக் கொண்டு இங்கிலாந்தைச் சேர்ந்த டௌல்டன் அண்ட் கம்பெனியின் தொழில் நுட்ப ஆலோசனையுடன் தயாரிப்பது.

ஈ.ஐ.டி.—பாரி லிமிடெட் (இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது. உறுப்பினர் பொறுப்புவரையறுக்கப்பட்டது)
டேர் ஹவுஸ், சென்னை - 1.

வள்ளுவர் காட்டும் வழி—10-ம் பக்கத் தொடர்ச்சி.

தமிழ் வளரவேண்டும் என்பதற்காக மளிகைக் கடைக் காரர்கள், ஜவுளிக் கடைக்காரர்கள் மேடையேறி முழங்க வேண்டுமென்று தேவையில்லை. இருந்த இடத்திலிருந்து கொண்டே அவர்கள் தமிழ் வளர்ப்பதில் அக்கறை காட்டலாம். ஜவுளிக்கடை என்று பெயர்ப் பலகையில் எழுதி வைப்பதற்குப் பதிலாகத் துணிக்கடை என்று எழுதலாம். பெட்டிக் கடைக்காரர் இத்தனை நயாபைசா என்று கூறுவதற்குப் பதிலாக இத்தனை புதுக்காசு என்று கூறலாம். இப்படி ஆங்காங்கே இருந்த இடத்திலிருந்தே தமிழை வளர்க்கலாம்.

முழுமை பெறுவோம்:

நம் இலக்கியத்தில் என்ன இல்லை, வீரம்—காதல்—பண்பாடு—வரலாறு அனைத்தும் இருக்கின்றன. தனி வரலாற்று நூலாக இல்லாவிட்டாலும் தமிழிலக்கியத் திலே வரலாறு பின்னப்பட்டிருக்கிறது. அப்படிப்பட்ட இலக்கியங்களை நாம் காப்பாற்ற வேண்டும். இலக்கியங் களின் பெயர்களை மட்டும் தெரிந்து வைத்திருந்தால் போதாது. ஏதேனும் ஓர் இலக்கியத்திலாவது முழுமை பெற்றிருக்க வேண்டும்.

நம்முடைய திருக்குறளில், வாழ்வில்—வாழ்வால் விளையும் இன்பியல்—அதையொட்டி அரசியல் இவ்வளவும் கூறப்பட்டிருக்கிறது. திருக்குறள் இந்தியாவுக்கே தேசிய நூலாக வேண்டும்.

எம்மதமும் சம்மதமாய் ஏற்றுக்கொள்ளக்கூடிய திருக்குறள் இந்தியாவுக்கு மட்டுமல்ல, அகில உலகுக்கும் தேசிய நூலாகும் என்றார் மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கலைஞர் கருணாநிதி அவர்கள்.

'ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி பொங்கல் விழாவில்' பொதுமறைக்குப் புவி முழுதும் புகழ்த்தேட வழி காட்டினார் அமைச்சர்கள்.

'நோய் நாடி நோய் முதல் நாடி. அது தணிக்கும் மருத்துவத் துறையின் இளைய தலைமுறையினர், அமைச் சர்கள் வழிகாட்டிய பின்னர் வாளாவிருப்பார்களா?

தமிழ்நாட்டின் மூலைமுடுக்குகளில் உள்ள எல்லாக் கிராமங்களிலும் பணியாற்றுகின்ற ஊராட்சிகள், நூல் நிலையங்கள், செய்தி நிலையங்கள், பள்ளிக்கூடங்கள், மகளிர் மன்றங்கள் முதலிய பல்வேறு நிறுவனங்களுக்கெல்லாம் செல்லும் "கிராமநலம்" இதழில், கிராம மக்களுக்குத் தேவையான பொருள்கள் பற்றிய தகவல்களும், கிராமங்களில் தயாராகும் பண்டங்கள் பற்றிய விவரங்களும் விளம்பரங்களாக ஏற்றுக்கொள்ளப்படும்.

## "கிராமநலம்" விளம்பரக் கட்டண விவரம்

| | அவ்வப்போது வெளியிடப்படும் விளம்பரங்களுக்கு. (1) ஒவ்வொரு இதழுக்கும். ரூ. | குத்தகையாக ஒரே இடஅளவிற்கு (குறைந்தது 12 விளம்பரங்கள்). (2) ஒவ்வொரு இதழுக்கும். ரூ. |
|---|---|---|
| **இரண்டாவது, மூன்றாவது அட்டைப் பக்கங்கள் (ஒரே வண்ணத்தில்)** | | |
| முழுப் பக்கம் .. | 420 | 815 |
| அரைப் பக்கம் .. | 215 | 165 |
| **நான்காவது அட்டைப் பக்கம் (இரண்டு வண்ணங்களில்)** | | |
| முழுப் பக்கம் .. | 450 | 825 |
| அரைப் பக்கம் .. | 280 | 170 |
| **உள்பக்கம்—** | | |
| முழுப் பக்கம் .. | 400 | 800 |
| அரைப் பக்கம் .. | 210 | 160 |




# கல்வெட்டுக்கள் கூறும் வரலாறு

இரா. நாகசாமி, எம்.ஏ.,
(இயக்குநர், தொல் பொருள் ஆராய்ச்சித் துறை, தமிழக அரசு)

தமிழ்நாட்டில் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக ஊர்ச் சபைகள் பணிபுரிந்து வருகின்றன. அவை எவ்வாறு பணிபுரிந்தன என்பது வரலாற்று ஆசிரியர்களுக்குத் தெரியும். சிலருக்கு உத்தரமேரூர் ஊராட்சி கல்வெட்டைப் பற்றியும் தெரியும். ஆனால் இன்று இருப்பது போல் பத்திரம் பதிவு செய்வது அக்காலத்தில் இருந்ததா? ஊர் நிலங்களுக்கு எல்லைகள் எவை என்று குறிக்க (ரிஜிஸ்டர்கள்) பதிவுப் புத்தகங்கள் உண்டா? ஊர் கணக்குப்பிள்ளை என்ன வேலைகளைக் கவனித்தார்? ஊரில் உள்ள வீடுகளுக்கு வரி உண்டா? குளம், ஏரி முதலிய வற்றிலிருந்து பாயும் நீர்க்கு வரி உண்டா? அதை யார் வசூலித்தனர்? ஓர் ஊர் நிலத்தில் என்ன என்ன பயிர்கள் செய்யப்பட்டன? ஓராண்டுக்கு ஒரு வேலி நிலத்துக்கு வரும் குத்தகை எவ்வளவு? அக்காலத்தில் ஒரு போகம் பயிர் செய்தல், இருபோகம் பயிர் செய்தல் முதலியன தெரியுமா? இது போன்ற விவரங்களை நம் முன்னோர் குறித்து வைத்துள்ளரா என்று ஐயம் எழும். சுருங்கச் சொன்னால் மக்களுடைய சாதாரண வாழ்வைக் குறிக்கும் நூல்கள் உண்டா என்று கேட்கலாம்.

உண்டு. ஒவ்வொரு ஊர்ப்பற்றியும் அவ்வூ ரில் இருந்த நிலம், வாய்க்கால், அவற்றின் பெயர் முதலியவை களைப் பற்றி கூறும் குறிப்புகள் உள்ளன. இவை அனைத்தும் அந்தந்த ஊர்களில் காணப்படும் கல்வெட்டு களில் உள்ளன. தமி ழகத்தில் இதுவரைக் கண்டுள்ள கல்வெட்டு கள் 25,000. இன்னும் படி எடுக்க வேண்டி யவை எவ்வளவோ! மன்னன் உத்தரவிட் டால் அது எவ்வாறுபதிவு செய்யப்பட்டது, ஊர்ச்சபை ஒரு நிலத்தை விற்றால் அது எவ்வாறு பதிவு செய்யப்பட்டது. முதலியவற்றைப் பற்றி கல்வெட்டுகள் குறிப்பதை ஈண்டு காணலாம்:

அக்காலத்தில் கோயில்கள் ஊர்களின் உயிர்நாடியாக விளங்கின. எனவே கோயில்களுடன் தொடர்புடைய நிலங்களைப் பற்றி இவற்றில் குறிப்புகள் காணப்படுகின்றன. இருப்பினும் ஏனைய நிலங்களைப் பற்றிய பதிவு முறைகளும் இவை போன்றவையே. மன்னன் ஒரு நிலத்தை கோயிலில் வழிபாட்டுக்காக தானம் அளித்தான் என்று வைத்துக் கொள்வோம்.

மன்னன் இத்தானத்தை அளித்தபோது எந்த ஊரில், எந்த மாளிகையில் தங்கியிருந்தான்? அவன் அமர்ந்திருந்த ஆசனத்தின் பெயர் என்ன முதலிய விவரங்கள் பல கல்வெட்டுகளில் குறிக்கப்படுகின்றன.

உதாரணமாக கீழ்வரும் கல்வெட்டைப் பார்க்கலாம்.

"உடையார் ஸ்ரீசுந்தர சோழபாண்டிய தேவர் ராஜேந்திர சோழபுரத்துக் கோயினுள்ளால் ஆட்டத்து வெளிமேலை மண்டபத்து எழுந்தருளி இருந்து...."

என்று ஆயிரம் ஆண்டு களுக்கும் முற்பட்ட கல்வெட்டு ஒன்று குறிக் கிறது. இக்கல்வெட்டில் இராஜேந்திர சோழபுரத் துக் கோயில் என்பது இராஜேந்திர சோழ புரத்து அரச மாளிகை யைக் குறிக்கும். இதே போல் பாண்டியன் ஸ்ரீவல்லபன் என்ற மன்னனின் கல்வெட் டும் உள்ளது. அதில் "சக்கரவர்த்திகள் ஸ்ரீவல்லபதேவர் மாடக் குளக்கீழ் மதுரைக் கோயிலில் உள்ளாலை

உலகத்தின் பல பகுதிகள் நாகரிகம் என்றால் என்ன என்றே அறியாத காலத்தில், நயத்தக்க நல்வாழ்வு கண்டு வாழ்ந்தவர்கள் தமிழ் மக்கள். பண்டைத் தமிழகத்தின் அந்தப் பொற்காலம் வரலாற்று ஆசிரியர்களால் புகழ்ந்துரைக்கப்படுகிறது. சீர் பெற்ற வாழ்வு, பேர் பெற்ற புகழ், வேர் பெற்ற பழக்க வழக்கங்கள், ஊர் பெற்ற ஆட்சி முறை அத்தனையும் எத்தனைச் சிறப்பு பெற்றவை என்பதை நமக்கு விளக்கும் காலக் கண்ணாடிகளாக இருப்பவை கல்வெட்டுகள்.

அந்தக் கல்வெட்டுகள் கூறும் வரலாற்றை இங்கே நமக்குத் தொகுத்து தொடர்க் கட்டுரையாகத் தர முன்வந்திருக்கிறார், தமிழக அரசின் தொல்பொருள் ஆராய்ச்சித் துறை இயக்குநர். —ஆசிரியர்.

நாடகசாலையில் பள்ளிக்கட்டில் பாண்டியராயனில் எழுந்தருளிஇருந்து" என்று காணப்படுகிறது. இதிலிருந்து மதுரையில் மன்னனுடைய மாளிகை மாடக்குளத்தில் இருந்தது என்றும், அதில் நாடகசாலை ஒன்று இருந்தது என்றும் அறிகிறோம். பள்ளிக்கட்டில் பாண்டிராயன் என்பது அரசன் அமர்ந்திருந்த அரசகட்டிலின் பெயராம். இதுபோன்று அரசன் இருந்த மாளிகை, இடம், கட்டில் முதலியவற்றைக் குறிக்கும் கல்வெட்டுகள் நூற்றுக்கணக்கில் உள்ளன.

அரசன் இட்ட உத்தரவைப் பதிவு செய்ய பல அதிகாரிகள் இருந்தனர். இவர்களுக்கு பல பெயர்கள் இருந்தன. அரசன் நன்கு எழுதப்படிக்க கற்றிருந்தவன் ஆயினும், அவன் வாய்மொழியாகவே ஆணை இடுவன். அதைக் கேட்டு உரிய, வாசகங்களை இட்டு ஓலையில் எழுதுபவனுக்கு திருமந்திர ஓலை என்று பெயர். அவர் எழுதிய வாசகங்கள் சரியாக உள்ளனவா இல்லையா என்று ஒப்பிட்டுப் பார்ப்பவர்கள் உண்டு. அவர்களுக்கு திருமந்திர ஓலைநாயகம் என்று பெயர். அவர்கள் ஒப்பிட்டு புகுந்ததை, அந்தந்த ஊர்களுக்குரிய பொத்தகங்களில் எழுதும்படி ஆணையிடும் அதிகாரிகள் உண்டு. அவர்களுக்கு விடையில் அதிகாரிகள் என்று பெயர். இவர்களையே 'புரவுவரிதிணைக் களம்' என்றும் குறிப்பர். இவ்வதிகாரிகளை கண்காணிப்பவர்களும் உண்டு. அவர்களை 'புரவுவரிதிணைக்களத்து கண்காணி' அல்லது 'புரவுவரிதிணைக்களத்து நாயகம்' என்பர். இவர்கள் இட்ட ஆணையை 'புரவுவரிதிணைக்களப் பொத்தகக் கணக்கு' என்ற அதிகாரி வாசிப்பார். அதை வரியிலிடுபவர்க்கு 'கீழ்க்கணக்கு' என்று பெயர். இதுதவிர "பட்டோலை எழுதுதல்" என்ற பணியும் உண்டு. அவ்வதிகாரிக்கு "முகவெட்டி" அல்லது 'பூட்சி பாட்டம்" என்ற பெயர் காணப்படுகிறது.

இதிலிருந்து ஓர் உண்மை பெறப்படும். அதிகாரிகளின் பதவிப் பெயர்கள் அவர்கள் பணியாலேயே அழைக்கப் பட்டதைக் காண்கிறோம். உதாரணமாக எழுதுபவர்க்கு 'கணக்கு' என்று பெயர் இருந்தது. 'கணக்கர்' என்ற பெயர் இல்லை. அதேபோல் 'திருமந்திர ஓலை' (ஓலையர் அல்ல) புரவுவரி திணைக்களம், என்று பதவிப் பெயர்களைக் காண்கிறோம். அதுதவிர ஒவ்வொரு அதிகாரிகளைப் பற்றியும் ஊர், குடி முதலிய முழு விவரங்களும் குறிக்கப்பட்டிருக்கும். உதாரணமாக ஒரு புரவுவரி திணைக் களத்து அதிகாரியின் பெயர் "க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டு, வேளா நாட்டு, பொம்பன்றூர் கிழவரான வீர ராஜேந்திர தமிழதரையர்" என்று காணப்படுகிறது.

கங்கை கொண்ட சோழபுரத்துக் கோயிலுக்கு, வீர ராஜேந்திரசோழர் சில நிலங்களை அளித்தார். அவை அவர் தந்தையான முதலாம் இராஜேந்திர சோழருடைய ஆட்சியாண்டு 24-வது முதலே அமுலுக்கு வர ஆணையிட்டார். அவ்வாணை எவ்வாறு எழுதப்பட்டது என்று உதாரணமாக இங்கு காணலாம்.

"கோ இராஜகேசரி வன்மரான உடையார் ஸ்ரீ வீர ராஜேந்திர சோழ தேவர் காஞ்சிபுரத்துக் கோயிலுனுள் ளால் திருமஞ்சனச் சாலையில் தானம் பண்ணி

எழுந்தருளா நிற்க

## சத்திய விஜயநகரத்தின் சாதனை

வட ஆர்க்காடு மாவட்டத்தில் 1966–67-ம் ஆண்டில், மாவட்ட அளவில் சிறந்த முறையில் பணியாற்றியமைக்கு முதற்பரிசாக ஆரணி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த, சத்திய விஜய நகரம் கிராம சேவகி, செல்வி சுந்தரதாஸுக்கு 24—4—1968-ம் நாள் வேலூரில் நடைபெற்ற வட, தென் வேலூர் மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டத்தில், மாவட்ட ஆட்சித் தலைவர் திரு பி. எம். பெல்லியப்பா, ஐ.ஏ.எஸ்., அவர்கள் தலைமையில், பெரணமல்லூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு அண்ணாமலை கவுண்டர் அவர்களால், பாராட்டுப்பத்திரம் அளிக்கப் பட்டது.

ஏற்கனவே, சத்திய விஜய நகரத்தில் சிறந்த முறையில் வானொலிமன்றம் இயங்கி வந்தமைக்கு ஒரு சுழற் கேடயமும், டிரான்சிஸ்டர் ரேடியோவும் சென்ற ஆண்டு இறுதியில் நடைபெற்ற வானொலி மன்றக் கருத்தரங்கில் பரிசாக அளிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

கங்கைகொண்ட சோழீச்சுரமுடையார்க்கு பூர்வதேசமும்
கங்கையும் கடாரமுங்
கொண்டருளின அய்யர்க்கு யாண்டு 24-வது முதல்
இறுப்பதாக
தேவதான பிரும்மதேய இறையிலியாக
வரியிலிடத் திருவாய்மொழிந்தருளினூர்
என்று
திருமந்திர ஓலை
ராஜேந்திர பல்லவரையந் எழுத்தினாலும்
ஓலைநாயகம்
வாணாதிராஜனும், மதுராந்தக பிரும்மராஜனும்,
பிரும்மாதி ராஜனும் ஒப்பிட்டு புகுந்த கேழ்விப்படியே
வரியிலிட
வீரசோழ மண்டலத்து முற்கை வல்லநாட்டு பிடகமான
பிராந்தகச்சதூர் வேதிமங்கலத்து
தேவர்க்குதாநாமாக வரியிலிட்டபடியும்
புரவுவரித்திணைக்களம்
மேற்படியார்களும்
வாசித்த வரிப்பொத்தகணக்கு
அத்திப்புலியூருடையானும்
புரவுவரித்திணைக்களத்து விசக்கணக்கு கீழ்க்கணக்கு
நாவலூருடையான் மந்மநாபந் சங்கனும்
பட்டோலை எழுதின புரவுவரித்திணைக்கள முகவெட்டி
அருமொழி தேவவளநாட்டு செல்லூர் நாட்டுச்
சொல்லூருடையான் கோணல் ஆதித்தனும்
வரியிலிடுவித்த புரவுவரித்திணைக்களம்
நிருபமாத்தாண்ட மூவேந்த வேளானும் இருந்து
யாண்டு ஐந்தாவது, நாள் முந்நூற்று நாற்பத்தெட்டி
நால் வரியிலிட்டது "

அரசனின் ஆணை எவ்வாறு உரிய பொத்தங்களில் எழுதப்பட்டது என்பதற்கு சுமார் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எழுதப்பட்ட மேற்படி கல்வெட்டு சாட்சி



பகர்கிறது. மொழிந்தருள, எழுத, ஒப்பிட, வரியிலிடுவித்த, வரியிலிட்ட, என்ற எளிமையான தமிழ்ச் சொற்கள் எவ்வளவு சிறப்பாக பதிவு முறையில் உபயோகப் படுத்தப்பட்டுள்ளன என்று காணுங்கள்.

இதுமட்டுமா. கீழ்க்கண்ட சொற்றொடர்களைக் காண்க.

காா்மறு நிலம்
இரண்டு பூ விளையும் நிலம்
ஒரு பூவிளையும் நிலம்
நஞ்செய்
புன்செய்
வரகு விளையும் நிலம்
மஞ்சள் விளையும் நிலம்
எள்ளு விளையும் நிலம்
தானசாலை நிலம்
தெங்கும் மாவும் நின்ற நிலம்
தெங்கும் மாவும் வைத்த நிலம்
மாந்தோட்டம்
சுற்றுத்தெங்கு வைத்த தோட்டம்
சுற்றுத் தெங்கு கொடித் தோட்டம்
கமுகுத் தோட்டம்
மஞ்சள் தோட்டம்
கரிதனையும் (கருணை) வழுதலையும் (கத்தரி)
நடலாந்தோட்டம் இவ்வூர் நிலத்தை ஊடறுத்
துப்புறவூர்க்குப்பாயும் வாய்க்கால் இவ்வூர் நிலத்தாறே
போன......பேராறு
இவ்வூர் ஆற்றுக்குலை உடைந்து ஏரியாய் நீர்க்கோப்பாய்
நின்ற இடம்

இவை கல்வெட்டுகளில் காணப்படும் சொற்றொடர்களாகும்.

இவை தவிர ஒரு கல்வெட்டில் கீழ்க்கண்டவாறு குறிக்கப்பட்டுள்ளது. "நன்செய், புன்செய், நத்தம், குளம், குளப்பரப்பு, காடு, களர், திடர், ஏரி, நீர்நிலை, மரநிலை, ஆற்றுக்கால், ஊற்றுக்கால் உள்ளிட்ட" என்று காண்கிறோம். தமிழ் சொற்களை எவ்வாறு ஆட்சியில் கையாண்டிருக்கிறார்கள் என்று இன்னம் எவ்வளவோ வகைகளில் கல்வெட்டுக்களிலிருந்து காணலாம்.


தொலை பேசி எண் 118

# ஆர். மனோகரன் அண்ட் கம்பெனி,

2, வடக்கு ரத வீதி, ஸ்ரீவில்லிபுத்தூர்,
இராமநாதபுரம் மாவட்டம்.

விநியோகஸ்தர்கள் :

| | |
|---|---|
| ✲ கிர்லாஸ்கர் டீசல் ஆயில் என்ஜின்கள் | ✲ பாரி கம்பெனி உரங்கள் |
| ✲ கிர்லாஸ்கர் மின்சார பம்பு செட்டுகள் | ✲ பாரி கம்பெனி பூச்சி பூஞ்சாள மருந்துகள். |
| 1. வீரிய ஒட்டுச் சோளம், வீரிய ஒட்டு கம்பு விதைகள். | 2. பயிர்களுக்கு காண்டிராக்டாக பூச்சி பூஞ்சாள மருந்துகள் அடித்துக் கொடுக்கப்படும். |
| ✲ நில அடமான வங்கி கடன்களுக்கும் சப்ளை செய்கிறோம். | "ஆதித்யா" பவர் ஸ்பிரேயர்கள் |

卐

கிளை :

## ஆர். மனோகரன் அண்ட் கம்பெனி,

வத்திராயிருப்பு.

# தமிழக உழவரின் சாதனை

சேலம் மாவட்டத்தில் சிங்கவந்தாபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு கே. ரங்கசாமி புரிந்துள்ள சாதனையைக் குறித்து அவர் மட்டுமல்ல தமிழகமே பெருமைப் படுகிறது எனலாம். ஓர் ஏக்கரில் 36 மூட்டை சோளம் அறுவடை செய்து ஒரு சாதனையை நிகழ்த்தினார் அவர். சாதாரண ரக சோளத்தை விதைத்திருந்தால் பத்துப் பன்னிரண்டு மூட்டைகள் தாம் கிடைத்திருக்கும்.

## புத்துலகு நோக்கி......!

உயர் விளைச்சல் தரும் சி. எச். எஸ்-1 என்னும் நல்ல ரக சோள விதைகளைத்தான் திரு ரங்கசாமி பயன்படுத்தினார். இந்த சாதனைக்காக, தமிழக அரசின் 1966-67-ம் ஆண்டிற்குரிய இரண்டாவது பரிசாக ஆயிரம் ரூபாய் அவருக்குக் கிடைத்தது.



திரு கே. ரங்கசாமி, தமது ஏழு ஏக்கர் நிலத்தில் மரவள்ளிக் கிழங்கு, சாதாரண ரக சோளம், நெல் முதலியவற்றைப் பயிரிடுவது வழக்கம். இதில் அவர் தம்முடைய தந்தையாரையே பின்பற்றி வந்தார். சென்ற ஆண்டு, அவருடைய அண்டை நிலத்துக்காரர், சோளம் சாகுபடி செய்வதற்காக, வேளாண்மை வளர்ச்சி அதிகாரிகளின் உதவியுடன் திட்டம் ஒன்றைத் தயாரித்தார். இதையறிந்த திரு ரங்கசாமி, ஆவல் உந்த, பக்கத்து நில சொந்தக்காரரை அணுகி விவரம் கேட்டார், உள்ளூர் கிராம சேவக், திரு ரங்கசாமிக்கும் இன்னும் பத்துப் பெருக்கும் பண்ணைத் திட்டம் ஒன்றை தயாரித்துக் கொடுத்தார். அத்துடன், விதைகள் உரம், பூச்சி கொல்லி மருந்துகள் முதலியவற்றை அவர் பெறுவதற்கு உதவி, தகுந்த ஆலோசனையும் வழங்கினார், அந்த கிராம சேவக்.

இரண்டாவது களையெடுப்பு நடந்ததையடுத்து மீண்டும் உரமிடப்பட்டது. அதன் பின்னர் என்ட்ரின் மருந்து தெளிக்கப்பட்டது.

அறுபதே நாட்களில் பயிர் மூன்றடி வளர்ந்து கதிர்கள் விட்டிருத்ததைக் காண, திரு ரங்கசாமிக்கு எல்லையற்ற மகிழ்ச்சி. இதைப் போன்றதொரு காட்சியை அதுவரையில் தாம் கண்டதில்லை என்று அவர் பெருமிதமடைந்தார்.

### அனுபவத்தின் அடையாளம்

கதிர்களைத் தாக்கும் பூச்சிகளைக் கொல்வதற்கு பி.எச்.சி. பத்து சத விகித மருந்தைத் தூவினார். அதன்பிறகு, ஒரு முறை மழை பெய்தது. மூன்று முறை கிணற்றுப் பாசனம் செய்ததும் கதிர்கள்

# சோளம் தந்த பரிசு

ஜனவரி கடைசி வாரத்தில், மரவள்ளி பயிரிட்டு சாகுபடியான பிறகு, திரு ரங்கசாமி ஓர் ஏக்கர் நிலத்தை நான்கு முறைகள் உழுது, 25 வண்டி உரமிட்டு பண்படுத்தினார். அதன் பிறகு ஐந்தாம் முறையாக மீண்டும் உழுதார்.

### காலமறிந்து செய்த செயல்களால்........

வட்டார விவசாயத் துறை அதிகாரியிடமிருந்து ஆறு கிலோ கிராம் தேர்ந்த விதைகளைப் பெற்று, அவற்றை பிப்ரவரி முதல் வாரத்தில் விதைத்தார். திரு ரங்கசாமி, இருபது நாட்களுக்குப் பிறகு களையெடுக்கும் வேலையில் 25 பெண்களை ஈடுபடுத்தினார். 40 கிலோ கலப்புரம் இட்டு நீர் பாய்ச்சப்பட்டது.

சுமார் முப்பது நாட்களுக்குப் பின்னர், பயிரைப் பூச்சிகள் தாக்கத் தொடங்கியதைக் கவனித்து, திரு ரங்கசாமி ஃபாலிடால், எகாடின் கலவை மருந்தைத் தெளித்தார். இந்த கட்டத்தில் நல்ல மழைபெய்து உதவிற்று.

முற்றி, மே திங்கள் மத்தியில் அறுவடைக்குத் தயாராக நின்றன.

அறுவடை செய்வதற்குப் பக்கத்து நிலக்காரரின் டிராக்டர் உதவியைப் பெறவேண்டியதாயிற்று என்று திரு ரங்ககாமி கூறினார். இந்த உயர் விளைச்சல் ரகம் அவருக்கு அரசாங்கப் பரிசைப் பெற்றுத் தந்தது. ஒரே போகத்தில் அவருக்கு நிகரமாக 1,250 ரூபாய் வருமானம் கிடைத்தது.

1966–67-ம் ஆண்டில் ஆயிரம் ரூபாய் பரிசு பெற்ற திரு ரங்கசாமி. 1967–68-ம் ஆண்டுக்கான அனைத்திந்திய விளைச்சல் போட்டியிலும் கலந்து கொள்ளவிருக்கிறார். வருங்காலத்தில் புதிய ரகங்களையே தொடர்ந்து பயன்படுத்தப் போவதாக அவர் கூறுவது அனுபவத்தின் அடையாளமல்லவா ?

# சீரிய பணியாற்றும் நகராட்சிகள்

## வேலூர் நகராட்சி

இந்நகராட்சி, 1866-ம் ஆண்டு தொடங்கியது. முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை, அவர்கள் தலைமையில் அண்மையில் இந்த நகராட்சியின் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. பல முக்கிய தலைவர்கள் கலந்து கொண்டார்கள்.

**தொடக்கக் கல்வி:**—இந்நகராட்சி 37 தொடக்கப் பள்ளிகளை நடத்தி வருகிறது. மொத்தம் 230 ஆசிரியர்களும் ஆசிரியைகளும் பணியாற்றி வருகிறார்கள். நாள் தோறும் 2,000 பிள்ளைகளுக்கு மேல் மதிய உணவு அளிக்கப்பட்டு வருகிறது. அலுவலகத்தில் தூய்மையான முறையில் அமைக்கப்பட்ட சமையல் அறையில் உணவு தயாரித்து, "கேர்" நிறுவனத்தாரால் அளிக்கப்பட்ட எவர்சில்வர் பாத்திரங்களிலும், மூன்று சக்கர டெம்போ வான்களிலும், நாள் தோறும் உரிய காலத்தில் ஒவ்வொரு பள்ளிக்கும் உணவு கொடுக்கப்படுகிறது. இதுவன்றி "கேர்" நிறுவனத்தார் மதிய உணவு நிலையத்திற்கு வேண்டிய காய்கறிகள் தடையின்றி கிடைப்பதற்காக, ஒவ்வொரு பள்ளிக்கும் தோட்டக் கருவிகளும், காய்கறி விதைகளும் கொடுத்து உதவி உள்ளனர். தொடக்கக் கல்விக்கு 1966–67-ம் ஆண்டு 4,28,538-ம், 1967–68-ல் 5,25,000 செலவழிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

**சாலைகள்.**—இந்நகராட்சி 74·7 கிலோ மீட்டர் நீள சாலைகளை அமைத்து, 58·7 நீள சாலைகளை தார் சாலை சிமிட்டி சாலையாகவும் அமைத்து அவை நல்ல நிலைமையில் பாதுகாக்கப்படுகின்றன.

**விளக்கு வசதி.**—மொத்தம் 2,911 விளக்குகள் இந்நகராட்சி எல்லையில் அமைக்கப்பட்டு உள்ளன. இவற்றில் 248 குழாய் விளக்குகள், 100 வாட்டு விளக்குகளில் 397, பாதரச விளக்குகள் 86 உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

615 பொதுக் குழாய்களும், 6,200 வீட்டுக்கு குழாய்களும் பயனில் இருந்து வருகிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் ரூ. 13.39 லட்ச செலவில் 6 அங்குல குடிநீர்க் குழாய்கள் பொருத்தப்பட்டு முடிவடைந்தது:

**அங்காடிகள்.**—ஏற்கனவே உள்ள நேதாஜி அங்காடியின் மேற்குப் பகுதியில் 16 லட்ச ரூபாய் செலவில் கடைகள் கட்டுவதற்காக, அரசுத் துறை மேற்பார்வை பொறியாளரால் நடவடிக்கை எடுக்கப்பட்டு, பணி தொடங்கும் தருவாயில் உள்ளது.

**உயர் நிலைக் கல்வி.**—பெண்களுக்கென தனியாக ஒரு கல்வி நிலையமும், மற்ற 4 உயர் நிலைப் பள்ளிகளுமாக 5 உயர் நிலைப் பள்ளிகள் ஆண்டு தோறும் ரூ. 3,52,000 செலவில் நடத்தப்பட்டு வருகிறது.

நகரில் துப்புரவு முதலியவற்றிற்காக 1967–68-ம் ஆண்டிற்கு 9,21,000 ரூபாய் செலவழிக்கத் திட்டமிடப்பட்டு, செலவாகி வருகிறது.

## சிதம்பரம் நகராட்சி

சிதம்பரம் பழஞ்சிறப்பு வாய்ந்த திருத்தலமாகும். உலகப் புகழ் பெற்ற தில்லை நடராசர் ஆலயம் இங்கே உள்ளது. நகர எல்லைக்குக் கிழக்கே புகழ் மிக்க அண்ணாமலை பல்கலைக்கழகம் உள்ளது. இந்நகரில் 1872-ல் நகராட்சி உருவாகியது. அதிலிருந்து இதன் பரப்பு 1·84 சதுர மைலாகவே உள்ளது. 1961-வது ஆண்டு கணக்கெடுப்பின்படி, இந்நகரின் மக்கள் தொகை 40,740. தற்போது இரண்டாவது நிலை பெற்ற நகராட்சியாக இயங்கி வருகிறது.

**அறிவு விளக்கப் பணி.**—இந்நகராட்சி, 12 ஆதாரக் கல்வி பள்ளிகளை நடத்தி வருகிறது. கொத்தங்குடித் தெருவிலும் மாணிக்கிட்சிதர் சந்திலும் நகராட்சி தனக்குச்சொந்தமான மனையில் ஒவ்வொன்றும் ரூ. 75,000 செலவில் அண்மையில் பள்ளிக் கட்டிடங்கள் கட்டியுள்ளது. மேலும் சம்பந்தக்காரத் தெருவில் நீண்ட நாள் (99 ஆண்டுகள்) குத்தகைக்கு எடுத்துள்ள மனையில் சுமார் ரூ. 20,000 செலவில் ஒரு பள்ளி கட்டியுள்ளது.

**பயணி விடுதிகள்.**—தற்போது 3 அறைகள் கொண்ட நகராட்சிப் பயணிகள் விடுதியில் எப்பொழுதும் இட நெருக்கடி இருந்து வருவதால், சுமார் ரூ. 20,000 செலவில் மூன்று அறைகள் கொண்ட மற்றொரு பயணிகள் விடுதி அண்மையில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.



**திறந்தவெளிக் கலையரங்கம்.**—நகரின் எல்லை நுழைவாயிலின் அருகில் பொதுக் கூட்டங்கள், கலா நிகழ்ச்சிகள், நாடகங்கள் இவைகள் நடத்துவதற்கு அரசினரால் சுமார் 1½ ஏக்கர் நிலம் இனமாக நகராட்சிக்கு வழங்கப்பட்டு, அதில் சுமார் ரூ. 30,000 செலவில் திறந்த வெளி கலை அரங்கு கட்ட முடிவு செய்து விரைவில் கட்ட வேலை தொடங்க இருக்கிறது.

## விழுப்புரம் நகராட்சி

### துப்புரவு ஊழியர்களுக்குக் குடியிருப்பு வசதி

தமிழக அரசின் கடன் மான்ய திட்டத்தில் இந் நகராட்சி மன்றம் அதன் துப்புரவு ஊழியர்களுக்கு குடியிருப்பு வீடுகள் கட்டித்தரும் பணியினை மேற்கொண்டு செயல்படுத்துகிறது. இத்திட்டத்தின்கீழ் 84 வீடுகள் மொத்தம் ரூ. 1,94,000 மதிப்பீட்டுச் செலவில் கட்ட திட்டம் தயாரிக்கப்பட்டது.

அரசினர் இந்த 84 வீடுகளுக்கும் மான்யமாக ரூ. 42,000 கொடுத்துள்ளனர். மீதியுள்ள ரூ. 1,52,000. அரசினர் கடனுதவியுடன் கட்டி முடிப்பதென முடிவு செய்து இவ்வாண்டில் ரூ. 63,000 கடன் பெறப்பட்டுள்ளது.

84 வீடுகளில், 20 வீடுகள் 1966-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் கட்டி முடிக்கப்பட்டு, தமிழக முன்னாள் முதலமைச்சர் திரு எம். பக்தவத்சலம் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. இங்கே ரூ. 1,000 செலவில் ஒரு குடிநீர்க் கிணறு கட்டப்பட்டுள்ளது. மூன்று மின்கம்பங்கள் நட்டு, தெருவிளக்கு வசதியும் செய்யப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள 64 வீடுகளும் துரிதமாக கட்டப்பட்டு வருகின்றன.

இந்நகருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் வசதி திட்டம் ரூ. 37·05 லட்சம் செலவில் அரசினரால் அனுமதிக்கப்பட்டு, அரசினர் கடன் திட்டத்தில் செயல்பட்டு வருகிறது. கூடிய விரைவில் இத்திட்டம் நடைமுறைக்கு வர விரைவில் ஆவன செய்யப்பட்டு வருகின்றன. இத்திட்டம் செயலுக்கு வந்தால், நகருக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் கிடைக்கும்.

## பெரியகுளம் நகராட்சி

இந் நகராட்சி எல்லைக்குள் உள்ள மலம், குப்பை முதலியவற்றை அகற்றி அதை துரிதமாக உரக் கிடங்குகளுக்கு எடுத்து செல்வதற்காக, இரண்டு டிராக்டர்களும் டிரைலருடன் விலைக்கு வாங்கும் பொருட்டு, அரசினரிடமிருந்து ரூ. 50,000-ஐ கடனாக பெற்று, அவை 1963-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1-ம் தேதி முதல் உபயோகப்படுத்தப்பட்டு வருகின்றன. இதனால் நகரில் உள்ள குப்பைக் கூளங்கள் துரிதமாக அகற்றவும், அதை உரக் கிடங்குகளுக்கு எடுத்துச் செல்ல மிக்க வசதியாக உள்ளது. இதன் மூலம் பொது சுகாதாரப் பிரிவில் குப்பை விற்பனை மூலம் அதிக வருமானம் கிடைக்க வழி செய்யப்பட்டுள்ளது.

இந் நகராட்சியில் குடியிருப்பு இல்லாத நகரசுத்தித் தொழிலாளர்களுக்காக, தென்கரையில் ஒவ்வொரு பகுதியும் இரண்டு வீடுகள், கொண்ட இரண்டு பகுதிகளும் வடகரையில் 3 பகுதிகளும் (மொத்தம் 10 வீடுகள் கொண்ட 5 பகுதிகள்) கட்ட மதிப்பு ரூ. 4,800 வீதம் மன்றத்தாரால் ஒப்பளிக்கப்பட்டு, தற்சமயம் தென் கரையில் இரண்டு வீடுகள் கொண்ட 2 பகுதிகள் (4 வீடுகள்) கட்டி முடிக்கப்பட்டும், மீதி 3 பகுதிகள் முடியும் தருவாயிலும் உள்ளன. இதற்கு 2 வீடுகள் கொண்ட ஒரு பகுதிக்கு மட்டும் அரசினரின் மானியமாக ரூ. 1,500 வழங்கப்பட்டுள்ளது. மீதி அரசினர் மான்யம் ரூ. 6,000 ஐயும் வழங்கக் கோரி நகராட்சிகளின் ஆய்வாளர் அவர்களுக்கு மனு செய்யப்பட்டுள்ளது. இவை போக மீதி தொகையை நகராட்சி நிதியிலிருந்து செலவு செய்யப்பட்டுள்ளது.

## நாகர்கோவில் நகராட்சி

### புதிய அலுவலகக் கட்டிடத் திறப்பு விழா

"நகர் நலமே; நாட்டு நலம்" என்ற தன்மையில் பணியாற்றி வரும் நாகர்கோவில் நகராட்சி, கன்னியா குமரி மாவட்டத்தின் முதல் நிலை நகராட்சியாகும்.

இந் நகராட்சியில் இரண்டு இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள புதிய அலுவலகக் கட்டிடத்தின் திறப்பு விழா அண்மையில் நடைபெற்றது. 1968-ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 23-ம் நாள் அன்று மன்றத் தலைவர் திரு சி. கிறிஸ்தோபர் அவர்கள் தலைமையில், முன்னாள் நகர் மன்றத் தலைவர் எம். டி. அனந்தராமன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இவ்விழாவினையொட்டி நண்பகலில் ஏழைகளுக்கு உணவளிக்கப்பட்டதுடன் விளையாட்டுப் போட்டிகளும் நடைபெற்றன.

அன்று மாலையில், இந்நகர் இந்துக் கல்லூரியின் முதல்வர் திரு ஸ்ரீதரமேனோன், எம். ஏ., அவர்கள் தலைமையில், புதிய கட்டிடத்தில் அமையப்பெற்றுள்ள நகர் மன்ற மண்டபத்தில், வான்புகழ் வள்ளுவர், அமரர் லால்பகதூர் சாஸ்திரி, இந் நகர் மன்றத்தில் நற்பணிகள் பல ஆற்றிய முன்னாள் நகர் மன்றத் தலைவர்கள் ஆகியோருடைய திருவுருவப் படங்கள் திறந்து வைக்கப்பட்டன.

அனைத்து இந்திய முதலமைச்சர்கள் மாநாடு—தொடர் நிகழ்ச்சி.

**வ**ருங்காலத் தலைமுறையை உருவாக்கும் பொறுப்பை ஏற்றுக்கொண்டோர்—

ஈந்துச் சிவந்த கரங்களை உடையோர்—

வலதுகைக் கொடுப்பதை இடதுகை அறியாவண்ணம் கொடுப்போர்—

அன்னச் சத்திரங்கள் ஆயிரம் கட்டுவதைவிட, ஓர் ஏழைக்கு எழுத்தறிவித்தல் புண்ணியம் கோடி என்பதை உணர்ந்தோர்—

தனிப்பட்ட மனிதர்கள், நிறுவனங்கள் உதவிபுரிய முன்வந்தாலன்றி ஆர்வத்துக்கும் சாதனைக்கும் இடையேயுள்ள இடைவெளியை எந்த அரசினாலும் நிறை செய்ய முடியாது என்பதை உணர்ந்த கொள்கைச் சான்றோர் குழுமியிருந்த பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில் 'அந்த விழா' நடைபெற்றது,

ஆம். 11-6-1968 அன்று சென்னையில் நடைபெற்ற 'பள்ளி வளர்ச்சியில் சமுதாயத் தொண்டு' விழாக் கூட்டம், சரித்திர முக்கியத்துவம் பெற்ற நிகழ்ச்சியாகும்.

பள்ளிக்கூடங்கள் வளர்ச்சிக்குப் பொது மக்கள் அளிக்கும் உதவித் திட்டம் பற்றிய பொருட்காட்சியும் அதையொட்டி விழாக் கூட்டமும் நடைபெற்றன.

மத்திய அரசு உணவு, வேளாண்மை சமுதாய வளர்ச்சி, கூட்டுறவு அமைச்சர் திரு ஜகஜீவன்ராம் அவர்கள் பொருட்காட்சியை திறந்து வைத்தார். விழாவுக்கு தமிழக ஆளுநர் மேதகு சர்தார் உஜ்ஜல் சிங் தலைமை வகித்தார்.

விழாவுக்கு வந்திருந்த அனைவரையும், மாண்புமிகு கல்வியமைச்சர் திரு நெடுஞ்செழியன் அவர்கள் வரவேற்றார்.

**பத்தாண்டுகளில் தமிழகத்தின் சாதனை**

கல்வியமைச்சர் தமது வரவேற்புரையில் கடந்த பத்தாண்டுக் காலத்தில் தமிழகத்தில் பள்ளிச் சீரமைப்புக்கு மக்கள் அளித்துள்ள உதவிகளைப் பற்றி விரிவாக எடுத்துரைத்தார்.

பத்தாண்டுகளில் 347 பள்ளிச் சீரமைப்பு மாநாடுகள் நடைபெற்றுள்ளன.

இத் திட்டத்தின் மூலம் ரூ. 10 கோடி மதிப்புக்கு பள்ளிச்சீரமைப்புகள் நடைபெற்றுள்ளன. இக் கூட்டத்தின் வாயிலாக மட்டும், ரூபாய் 83 லட்சத்துக்கு நன்கொடைப் பொருள்கள் கிடைத்துள்ளன என்றும் கல்வியமைச்சர் கூறினார்,

பள்ளிக் கல்வி இயக்குநர் திரு எம். டி. பால், சென்னை நகர மேயர் திரு அபிபுல்லா பேக், திரு எஸ். பாலகிருஷ்ண ஜோஷி, பி. ஹேமாவதி முதலியோர் பேசினர்.

மேதகு ஆளுநர் அவர்கள் தமது தலைமையுரையில், கல்விப் பிரச்னை அரசையும் தனிப்பட்ட நிறுவனங்களையும் பொறுத்ததல்ல— பொது மக்களுக்கும் கல்விப் பிரச்னையில் கடமையிருக்கிறது என்பதை தெளிவுப்படுத்தினார்.

**புகழ் வளர்க்கும் தமிழகம்**

பள்ளிச் சீரமைப்புக்கு நன்கொடை வழங்கியோர், அந்தத் தொகைகளையும் பிறவற்றையும், மேதகு ஆளுநர் மூலம் தொடர்புடைய பள்ளிகளுக்கு அளித்தனர்.

இலட்சக்கணக்கான ரூபாய்களை, பள்ளிகளுக்கு வாரி வழங்கும் வள்ளண்மையுடைவர்களால், தமிழகத்தின் வரலாற்றில் மேலும் பல புகழேடுகள் இணைக்கப்பட்டன.

## பள்ளி வளர்ச்சியில் சமுதாயத்தின் பங்கு



இந்த விழாவில் தமிழக அமைச்சர்கள் மட்டுமின்றி, முதலமைச்சர்கள் மாநாட்டில் கலந்து கொள்ள வந்திருந்த பிற மாநில முதலமைச்சர்கள் (குறிப்பாக, கேரள முதலமைச்சர் திரு இ. எம். எஸ். நம்பூத்திரிபாத் அவர்கள்), உள்ளாட்சித்துறை அமைச்சர்கள், அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தமிழக மக்கள் கல்விக்காக நன்கொடையாக வாரி வழங்குவதைக் கண்டு அப் பெருமக்கள்




அகங்குளிர்ந்தனர். அவர்களின் விழிகள் எல்லாம், 'தமிழகம் வழி காட்டுகிறது நமக்கெல்லாம்' என்பதைச் சொல்லாமல் சொல்லின.

**வெற்றியின் இரகசியம்**

பொருட்காட்சியைத் திறந்து வைத்த அமைச்சர் திரு ஜகஜீவன்ராம் அவர்கள் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

''தமிழகத்தில் பகலுணவுத் திட்டமும், தொடக்கக் கல்வித் திட்டமும், வெற்றியடைந்ததுபோல, வேறெந்த மாநிலத்திலும் வெற்றியடையவில்லை.

தமிழகத்தின் வெற்றிக்கு, பொது மக்களின் ஒத்துழைப்புதான் காரணம்.

இங்கு, பள்ளி அபிவிருத்திக்கு போட்டி போட்டுக் கொண்டு நன்கொடை வழங்கியதைப் பார்த்தேன். நன்கொடைப் பொருள்களைப் பார்த்தேன். கல்வித் துறையில் தமிழ் நாடு மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறது.

கல்வி முறையில், ஏழைகளுக்கு ஒருவகைக் கல்வியும் பணக்காரர் குழந்தைகளுக்கு வேறு வகைக் கல்வியும் அளிக்கப்படுகிறது. இதனால் இரு வேறு வகையான குடி மக்கள் உருவாகிறார்கள். பிறகு சமூகத்தில் ஏற்றத் தாழ்வை ஒழிக்க முடியாது.

தமிழக முதலமைச்சர் பேராற்றல் மிகுந்த மனிதர். ஏற்றத் தாழ்வில்லாத சமத்துவ சமுதாயம், பேதம் ஒழிந்த சமுதாயம் காண்பதே அவரின் குறிக்கோள்.

அந்த இலட்சியத்தை அடைய, சமூகத்தின் ஒத்துழைப்பைப் பெற்று, அவர் தமது இலட்சியத்தை நோக்கி மேலும் முன்னேறுவார் என்ற நம்பிக்கை எனக்கு உண்டு.''

அடுத்து, பொருட்காட்சிச் சிறப்பு மலரை வெளியிட்ட மத்திய அரசு சமுதாய வளர்ச்சி, கூட்டுறவு ராஜாங்க அமைச்சர் திரு எம். எஸ். குருபாதசாமி அவர்கள், தமிழகத்தின் சாதனைகளுக்குப் பாராட்டுத் தெரிவித்தார்.

**'அஞ்சேல்' என்ற சொல்லும் 'அடையா நெடுங்கதவும்'**

விழாவில் சிறப்புரையாற்றிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை அவர்கள் குறிப்பிட்டதாவது:—

''உண்மையான விசுவாசத்துடன் ஆணும் பெண்ணும் முழுமனதுடன் எந்த ஒரு பணியில் ஈடுபட்டாலும், அந்தப் பணி எவ்வளவு உயர்ந்ததாக இருந்தாலும், அதில் வெற்றியடைய முடியும் என்பதற்கு, இந்நிகழ்ச்சி ஓர் எடுத்துக்காட்டாகும். சமூகத்தின் உதவியைக் கேட்டுப் பெற கல்வியைக் காட்டிலும் சிறந்த இலட்சியம் வேறிருக்க முடியாது.

ஏசுநாதர்கூட கூறினார் ''தட்டுங்கள், திறக்கப்படும், கேளுங்கள், கொடுக்கப்படும்'' என்று.

ஆனால் தட்டுவதற்குப் பொருத்தமான கதவை தேர்ந்தெடுக்க வேண்டும். அதுமட்டுமல்ல, கதவைத் தட்டுவதிலும், நளினம் வேண்டும். ஆனால் தமிழ்நாட்டு ஆசிரியர்கள் பொருத்தமான கதவை, பொருத்தமான நேரத்தில் தட்டுவதில் நல்ல அனுபவம் வாய்ந்தவர்கள். ஆனால், பழைய தமிழகத்தில் கதவைத் தட்டுகிற சிரமம்கூட இருந்ததில்லை. அந்தக் காலத்தில் வாரி வழங்கும் வள்ளல் ஒருவரின் வீட்டுக் கதவு எப்போதும் திறந்தே இருந்ததாம். ''அடையா நெடுங்கதவும் அஞ்சேல் என்ற சொல்லும்'' என்று அவரைப் பற்றி தமிழ் இலக்கியத்தில் வர்ணித்தார்கள். அது தமிழ்ப் பண்பாடு, அந்தப் பண்பாடு,

தொண்டில் ஈடுபடுகிறவர்களுக்கு பெருந் துணையாக இருந்து வருகிறது. எப்போதுமே வளர்ந்து வரும் சமூகத்தில் ஆசைகளும் வளரும். ஆனால் நம்முடைய சுதந்திர நாட்டில் இன்னும் அடிப்படையான தேவைகூட பூர்த்தி செய்யப்படவில்லை.

முன்பு ஒரு காலத்தில் சமுதாயத்தின் சில பகுதி மக்கள் படிக்க முடியாது. அவர்கள் படிக்கக் கூடாது என்று ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தனர்.

நல்லவேளையாக அந்தக் காலம் மறைந்து விட்டது. இனி தமிழகத்தில் அப்படிப்பட்ட காலம் திரும்பி வராது.

தமிழ்நாட்டில் சமூகப் புரட்சி துவங்கிவிட்டது. நூற்றாண்டுக் காலங்களாக பழக்கத்தில் இருந்த அடக்கி வைக்கும் முறை மறைந்தது.

இப்போது எல்லோரும் படிக்கலாம். வாயில் வெள்ளிக் கரண்டியால் உணவு ஊட்டப்படும் சீமான் வீட்டுச் செல்லப்பிள்ளையானாலும், கலயத்தில் கஞ்சி குடிக்கும் ஏழையின் மகன் ஆனாலும் யார் வேண்டுமானாலும் சரி இப்போது படிக்கலாம்.

'இதில் மனிதனுக்கு மனிதன் பேதமில்லை. ஒருவன் கல்வி கற்றால் சமூகம் படிக்கிறது' என்றார் பொருள்.

நமது இலட்சியங்களுக்கும், அவை நிறைவேற்றப்படுவதற்கும் இடையிலே வேறுபாடு இருக்கிறது, அதற்காக பெரிதிலும் பெரிதான இலட்சியங்களை வகுத்துக் கொள்வதை நாம் கைவிட வேண்டியதில்லை. லட்சியம் சிறந்ததாக உயர்ந்ததாகத்தான் இருக்க வேண்டும். நாம் அந்த இலட்சியத்தை நோக்கி முன்னேறும் போது இலட்சியத்துக்கு சிதைவு நேராமலும் பார்த்துக்கொள்ள வேண்டும்.

தமிழகத்தில் கல்வி வசதி பெருகியிருப்பதற்கு, அரசாங்க முயற்சி மட்டும் காரணம் அல்ல. அரசாங்கத்தால் மட்டும் அந்தப் பணியைச் செவ்வனே செய்து முடித்திருக்க இயலாது.

ஆரம்பப் பள்ளிகளில் இருந்து உயர்ந்த கல்லூரிகள் வரை உருப்பெறுவதற்கு எண்ணற்ற கொடை உள்ளம் கொண்டோர் வாரி வழங்கினர்; தனிப்பட்ட இத்தகைய கொடையாளர்களால் தமிழ் நாட்டில் கல்விக் கோயில்கள் எழுந்தன'' என்றார் முதலமைச்சர்.

மேலும் முதலமைச்சர் அவர்கள் ஆசிரியர்களின் பெருமைகளை எடுத்துரைத்தார்.

இந் நாட்டின் வருங்காலச் சமுதாயத்திற்கு வடிவம் அமைக்கும் அவர்களது அரும்பெரும் பணிகளை புகழ்ந்துரைத்தார்.

**அமைச்சரா? ஆசிரியரா?**

விழா முடிவில் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்கள் நன்றி கூறினார்.

நன்றியுரை நவிலும் பொழுதும்கூட, கையொலியைப் பலமுறை பெறமுடியும் என்பதை, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன் சொல்லாற்றலால் நிரூபித்தார்.

''நான் அமைச்சர் என்பதால்தான், இங்கு நன்றி கூறச் சொன்னார்கள் என்று நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் பேரறிஞர் அண்ணா




அவர்கள் ஆசிரியத் தொழிலின் பெருமையை எடுத்துரைத்த பிறகு, அமைச்சராக இருந்து நன்றி சொல்வதைவிட, ஆசிரியராக இருந்து நன்றி சொல்லுவதுதான் பெருமை என்று எண்ணி ஆசிரியராக நன்றி கூறுகிறேன்'' என்றாரோ இல்லையோ, மண்டபம் அதிரும்படி கையொலி எழும்பியது.

'பிச்சைப்புகினும் கற்கை நன்றே' என்ற தமிழ் மக்களின் பண்பாட்டை அமைச்சர் எடுத்துரைத்தார்.

மொத்தத்தில் 'பள்ளிச் சீரமைப்பில் சமூகத்தின் ஊழியம்' எவ்வளவு முக்கியமானது என்பதை விழா விளக்கியது. அதுமட்டுமல்ல—

இந்தியாவில் உள்ள ஏனைய மாநிலங்களுக்கு, எத்தனையோ துறைகளில் வழிகாட்டியாக விளங்கும் தமிழகம், பள்ளி வளர்ச்சியில் சமுதாயத்தின் பங்கை பெறுவதிலும் வழிகாட்டியாக விளங்குகிறது என்பதை யார்தான் மறுக்க முடியும்?

—நமது செய்தியாளர்.

படம் : மூன்றாவது அட்டைப் பக்கத்தில் காண்க.



# மக்கள் அன்பால்....!

இந்தியாவின் சிறந்த கிராம சேவக், கிராம சேவகி என்ற பாராட்டைப் பெற்றோரை, நாம் சந்திக்கும் வாய்ப்பை ஏற்படுத்தித் தந்துள்ளார், "பஞ்சாயத்து ராஜ்" என்ற ஆங்கில திங்கள் இதழின் செய்தியாளர்.

''நாட்டின் மிக உயரிய பரிசை தங்களின் அயரா உழைப்பாலும் தொண்டுள்ளத்தாலும் பெற்றுள்ள அவர்களோ '' மக்களின் அன்பினாலேயே எங்களுக்கு இப்பாராட்டு கிடைத்துள்ளது. கிராம மக்களுக்கு நாங்கள் ஆற்ற வேண்டிய கடமைகள் ஏராளம், ஏராளம்" என்கின்றனர் அடக்கத்துடன்.

அப்படிப்பட்டவர்களை நாம் சந்திப்பது நமக்கு பெருமையும் மகிழ்ச்சியுமல்லவா ?

கிராம நல ஊழியர்களுக்கான நாட்டின் மிக உயரிய விருதை பெற்றவர்களைச் சந்திக்கப் போகிறோம்.

முதலில் நாம் சந்திக்கப் போகும் கிராம சேவக், திரு டி. ஜி. மராத்தே. இவர்தான் 1966–67-ம் ஆண்டின் சிறந்த கிராம சேவக்காக தேர்ந்தெடுக்கப் பட்டவர்.

மகாராஷ்டிர மாநிலத்தைச் சேர்ந்த டி, ஜி. மராத்தே உறுதியான குரலில் சொல்கிறார் :

" எங்களுடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் கிராம சேவக் அனைவரும் மிகுந்த மகிழ்ச்சியுடன் இருக்கிறார்கள் என்று சொல்லமுடியாது. கிராம சேவக்களின் வேலை உயர்வுக்கான வாய்ப்பு குறைவு என்பதும் உங்களுக்குத் தெரியும். ஆனால் மக்களின் மகத்தான அன்பு வெள்ளம் எங்களை ஊக்குவிக்கிறது.

" சமுதாயப் பணிகளில் ஈடுபடும்பொழுது, எங்களுடைய சொந்தக் கவலைகளை, பிரச்னைகளை, லாப நட்டங்களை மறந்துவிடுகிறோம். நாட்டின் வளர்ச்சித் திட்டங்களைச் செயல்படுத்த மக்கள் சக்திகளைத் திரட்டி உழைக்கும் பொழுது உண்டாகும் உற்சாகம் அளிக்கும் மன நிறைவு ஈடு இணையற்றது."

இவ்வாறு சொல்லிக்கொண்டு வரும்பொழுதே திரு மராத்தேயின் கண்கள் பிரகாசிக்கின்றன.

சில நிமிட நேரத்திலேயே திரு. மராத்தேயை நாம் புரிந்து கொள்கிறோம். அவர் 1966–67-ம் ஆண்டின் இந்தியாவின் சிறந்த கிராம சேவக்காக ஏன் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதற்கு நமக்கு உடனே விடை கிடைத்துவிட்டது. நாம் பெருமிதத்துடன் அவரைப் பார்க்கிறோம்.

கட்டுக்கோப்பான நல்லுடல் வாய்க்கப்பெற்ற திரு மராத்தேக்கு முப்பத்து நான்கு வயதாகிறது.

**பணியுமாம் பெருமை......!**

பள்ளி ஆசிரியாக வாழ்க்கையைத் தொடங்கியவர் மராத்தே. ஆனால் கிராம வளர்ச்சிப் பணிகளில் அவருக்கிருந்த ஈடுபாடும், ஆர்வத் துடிப்பும் ஆரம்பப் பள்ளி ஆசிரியர் வேலையிலிருந்து விலகி, கிராம சேவக் பணியை மேற்கொள்ள செய்துவிட்டன. கிராம வளர்ச்சிப் பணிகளில் பன்னிரண்டு ஆண்டுகள் சேவை செய்தார்.

சிறந்த கிராம சேவக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள அவரது வெற்றியைப் பற்றி வினவியபோது அடக்கத்தோடு அவர் சொல்கிறார் :

" இது எனக்கு சொந்த முறையில் கிடைத்த வெற்றி அல்ல. மக்கள் அனைவருக்கும் கிடைத்த பரிசாகும்.

அவர்கள் தங்கள் திறமையை வெளிப்படுத்தினார்கள். அதன் விளைவாகவே எனக்குக் கிடைத்தது இந்தப் பரிசு"!

புன்னகைப் பூத்த முகத்தோடு அவர் சொல்வதை நாம் எப்படி நம்பாமல் இருக்கமுடியும் ?

அவரைப் பற்றிக் கேட்கிறோம்: "திருமணமாகிவிட்டது. மூன்று குழந்தைகள்; அவ்வளவுதான்" என்கிறார்.

திரு மராத்தே மகாராஷ்டிர மாநிலத்திலுள்ள அகோலா வட்டத்தில் பணியாற்றுகிறார். அகோலாவுக்கு 1964-ம் ஆண்டில் இவர் மாற்றுதலாகி வந்தார். அகோலா வட்டம் 49,093 ஏக்கர் பரப்புடையது. மகாராஷ்டிர மாநிலத்தில், சீரடைந்துவரும் பகுதிகளில் அகோலாவும் ஒன்றாகும்.

அகோலா வட்டத்திலுள்ள ஐம்பது கிராம மக்களையும் மெதுவாக, அதே நேரத்தில் ஒழுங்காக நம்பிக்கை கொள்ளச்செய்து வெற்றி நோக்கி நடக்கத் தூண்டியவர் திரு மராத்தே. அவர்களுடைய "பழைய மனநிலையை" மாற்றியமைத்த பெருமையும் இவருக்குண்டு.

"வேளாண்மை உற்பத்திப் பெருக்கமே என்னுடைய முதல் குறிக்கோள். எனவே, மிகு விளைச்சலுக்காக இரசாயன உரங்களை அதிக அளவில் பயன்படுத்தும்படி மக்களைத் தூண்டினேன். அவர்களும் ஊக்கத்துடன் ஈடுபட்டனர். பாசன வசதியற்றிருந்த இடங்களுக்குப் பாசன வசதி பெருகத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டேன்" என்கிறார் மராத்தே.

மொத்தத்தில் அகோலா வட்டத்திலுள்ள விவசாயப் பெருங்குடி மக்களின் விளைச்சல் மிகுதியாகியிருப்பதற்கு முக்கிய காரணம் திரு மராத்தே என்றால் அது மிகை யாகாது.

அது மட்டுமல்ல, அகோலா வட்டத்தில் கோழிப் பண்ணைகள் வைப்பதற்காகவும் பெரும் முயற்சிகளை மராத்தே மேற்கொண்டார். கோழிக் குஞ்சு பொறிப் பதற்காக மட்டும் 95,005 முட்டைகளை கிராம மக்களுக்கு வழங்க ஏற்பாடு செய்தார். இது கிராம மக்கள் கோழிப் பண்ணைகளை ஏற்படுத்த வழி வகுத்தது. இப்பொழுது ஏராளமான கோழிப் பண்ணைகள் அங்குள்ளன.

மேலும் அகோலா வட்டத்தில் கூட்டுறவு அமைப்புகளை ஏற்படுத்த பெரும் முயற்சிகளை எடுத்துக்கொண்டு வெற்றியும் கண்டார்.

அதன் விளைவு—

**அகோலா வட்டத்திலுள்ள ஒவ்வொரு கிராமமும் கூட்டுறவு அமைப்புகளுடன் இணைந்துள்ளது.**

இப்பொழுது நாம் கிராம சேவகிகளுக்கான நாட்டின் மிக உயர்ந்த விருதைப் பெற்றுள்ள திருமதி யூ. எஸ். தோராகல்லைச் சந்திக்கப்போகிறோம்.

## இலட்சியம் இவ்வளவு மட்டுமல்ல

திருமதி தோராகல்லுக்குரிய இன்னொரு பெருஞ்சிறப்பு என்ன தெரியுமா ?

திருமதி தோரா கிராம சேவகியாகப் பணியாற்றத் தொடங்கிய முதலாவது ஆண்டின் முடிவிலேயே நாட்டின் பெரும் பரிசை பெற்றிருக்கிறார்.

பெருமகிழ்ச்சியுடன் அவருக்கு வாழ்த்துகளைத் தெரி விக்கிறோம்.

"இதுதான் என்னுடைய முன்னேற்றத்தின் அடையாளம் என்று நான் கருதவில்லை. நான் மேலும் மேலும் முன்னேற விரும்புகிறேன்" என்கிறார் திருமதி தோராகல். அவருடைய தன்னம்பிக்கையை அவரது குரல் எடுத்துக் காட்டுகிறது.

கிராம வளர்ச்சிப் பணிகளுக்கு முற்றிலும் புதியவரான திருமதி தோராகல் முதலாண்டிலேயே பரிசு பெற்று விட்டு, நான் முன்னேறவில்லை என்று அடக்கத்துடன் கூறுவது நம்மை மகிழ்ச்சியில் திளைக்க வைக்கிறது. கணவனை இழந்து அவர் இரண்டு குழந்தைகளுக்குத் தாய் என்பது தெரிந்தவுடன் வியப்புடன் கேட்கிறோம் :

"குழந்தைகளை கவனித்துக்கொண்டும், குடும்பப் பொறுப்புகளை முழுதும் ஏற்றுக்கொண்டும் சிறந்த கிராம சேவகியாக எப்படி பணியாற்ற முடிகிறது ? நீங்கள் கிராம சேவகியாகப் பணியாற்ற புறப்பட்ட பிறகு உங்கள் குழந்தைகளை யார் கவனித்துக்கொள்கிறார்கள் "— என்று.

முகத்தில் புன்னகையைத் தவழவிட்டுக்கொண்டு திருமதி தோராகல் சொல்கிறார் : "என் குழந்தைகள் வளர்ந்தவர்கள். ஒரு குழந்தை ஆறாவதும், இன்னொரு குழந்தை ஐந்தாவதும் படிக்கிறார்கள். அவர்களை அவர்களே கவனித்துக்கொள்வார்கள்".

மேலும் திருமதி தோரா தொடர்ந்து சொல்வார் :

"என்னுடைய கணவரின் திடீர் மரணத்திற்குப் பிறகு என் குழந்தைகளை வளர்க்க ஒரு வேலையைத் தேடிக் கொள்ள விரும்பினேன். என்னுடைய குறைந்த கல்விக்கு ஏற்ப (எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்திருக்கிறார்.) "கிராம சேவகி" வேலையைத் தவிர வேறு சிறந்த பணி இல்லை என்ற முடிவுக்கு வந்தேன். நான் 1966 ஏப்ரல் நான்காம் நாள் கிராம சேவகி வேலையில்

[44-ம் பக்கம் பார்க்க]





## பழங்குடி மக்களுக்கு புதுவாழ்வு

ஆந்திரப் பிரதேசத்திலுள்ள முன்சிங்பட்டு ஊராட்சி ஆதிவாசிகள் வாழும் பகுதியாகும். இங்கு நிதி வசதி போதுமான அளவில் இல்லாதிருந்தும், பணியாற்றுவதற்கு பயிற்சி பெற்றுள்ள ஆசிரியர்கள் கிடைப்பது சிரமமாக இருந்தும் ஆந்திரப் பிரதேசத்தின் மற்ற பகுதிகளோடு எந்தவித சாலை போக்குவரத்து மற்றும் செய்தி போக்குவரத்து இல்லாதிருந்தும், இந்த ஊராட்சி கல்வியில் ஆச்சரியப்படத்தக்க மிகப் பெரிய சாதனை புரிந்துள்ளது. எல்லா ஊராட்சிகளும் பொதுவாக வசூலிக்கிற நிலத் தீர்வை, கல்வி தீர்வை போன்றவைகளை இந்த ஊராட்சியிலும் பெறுவதற்கு வேண்டிய முன் நடவடிக்கைகளை இங்கு இன்னும் நிறைவேற்றப்படவில்லை. இந்தப் பகுதி பின் தங்கியதாக இருப்பதற்கு முக்கிய காரணம், இவைகள் ஆந்திரப் பிரதேசத்தின் மற்ற பகுதிகளோடு தொடர்பு இல்லாமல் இருப்பதுதான். திறமைமிக்க ஆசிரியர்கள் பொதுவாக கிராமப் புறங்களில் பணியாற்றுவதற்கு தயங்குகிறார்கள். மிகவும் பின்தங்கிய கிராமப்புறங்களில் பணியாற்றுவதற்கு இழப்பு ஊதியமும் சேவைக்கு பாராட்டும் இல்லாததால் இப்பகுதிகளில் பணியாற்றுவதற்கு திறமை மிக்கவர்கள் வருவதற்கு தயங்குகிறார்கள்.

முன்சிங்பட்டு ஊராட்சியை 1962–ம் ஆண்டு ஆரம்பிக்கும் போது ஒன்பது அரசு பள்ளிகளும் ஆறு தனியார் பள்ளி களும் நடைபெற்று வந்தது. இந்த பதினைந்து பள்ளி களும் இப்பகுதியில் வாழும் 24 ஆயிரம் மக்களின் கல்வி வசதிக்கு போதுமானதாக இருந்தது. ஆதிவாசிகள் வசிக்கும் இந்தப் பகுதி 170 சதுர மைல் பரப்பளவுள்ள காடுகளும் மலைகளும் சூழ்ந்த பிரதேசம். இங்குள்ள 22 சட்ட பூர்வமான ஊராட்சிகள் இம்மலைப் பிரதேசத்தில் பரவலாக அமைந்துள்ளது.

முன்சிங்பட்டு ஊராட்சி ஒன்றியத்தின் தலைவரான திருமட்டம் சிட்டிபாடல் என்பவர் சமுதாய அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் மேலும் பதினைந்து பள்ளிகளை இவ் வூராட்சியின் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள பகுதிகளில் திறப்பதற்கு தீவிர முயற்சி எடுத்துக்கொண்டார். கிடைக்கக்கூடிய வசதிகளை ஆண்டுதோறும் கல்விக்கு செல விட்டதால் அதிகப்படி செலவு ஏற்பட்டு மற்ற அபிவிருத்தி வேலைகளுக்கு தடங்கல் ஏற்பட்டன. சமூகத்திலுள்ள மக்கள் அனைவரும் எழுத்தறிவு உள்ளவர்களாகவும் கற்றவர் களாகவும் ஆகும்வரை எந்தவித சாதனையையும் ஏற்படுத்த முடியாது என்பதைக் கருத்தில் கொண்டு கல்விக்கு முதல் முக்கியத்துவம் கொடுப்பது அவசியமாகும். 'கருப்பு கொண்டா" என்ற இடத்தில் சமீபத்தில் ஆரம்பிக்கப்பட்ட தொடக்க பள்ளியையும் சேர்த்து மொத்தம் 31 பள்ளிகள் இங்கு இருக்கின்றன. இன்னும் மூன்று ஊராட்சிகளில் மட்டும்தான் தொடக்கப்பள்ளி ஆரம்பிக்க வேண்டியதிருக்கிறது. நவீன நாகரிக மக்களோடு இந்த ஊராட்சி மக்களும் சரி சமமாக இருப்பதற்காக ஜோலாபட்டு என்ற இடத்திலுள்ள தொடக்கப்பள்ளி உயர்நிலைப்பள்ளியாக்கப்பட்டது. இதே மாதிரி கோட்டாவில் உள்ள அரசு தொடக்கப் பள்ளியும் உயர்தொடக்கப்பள்ளியாக மாற்றப்பட்டு 1966–67-இல்

ஆறும் படிவம் ஆரம்பிக்கப்பட்டது. இந்த இரண்டு உயர் தொடக்கப் பள்ளிகளும், மற்றும் "கிலகாடா" என்ற இடத்தில் ஏற்கனவே உள்ள பள்ளியும் இப்பகுதியில் உள்ள மக்களின் அறியாமையைப் போக்கும் என்பது உறுதி.

மாணவர்களுக்கு இலவசமாக சாப்பாடு போடும் திட்டம் வெற்றிகரமாக நடந்து வருகிறது. 'கிலகாடா" என்ற இடத்தில் 40 மாணவர்களுக்கு இலவசமாக அரசு உணவு விடுதி ஒன்றும் இதேபோல 'சூசாஸ் கோட்டா" என்ற இடத்தில் உள்ள உணவு விடுதியும் ஆதிவாசி மாணவர்களுக்காக இயங்கி வருகிறது. கடந்த 15 ஆண்டுகளில் இந்த உணவு விடுதி 50 ஆசிரியர்களை உருவாக்குவதற்கு காரணமாக இருந்திருக்கிறது. முன்சிங் என்ற இடத்தில் ஆசிரம முறையில் அமைந்த பள்ளி ஒன்றையும், ஜோலாபட்டு என்ற இடத்தில் இலவச விடுதி ஒன்றையும் ஏற்படுத்துவதற்கு இந்த ஊராட்சி ஒன்றியத்தின் தலைவர் தீவிர முயற்சி மேற்கொண்டுள்ளார். இந்த பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டால் மாணவர்களின் இடவசதி பிரச்சனைக்கு பரிகாரமாக இருக்கும் என்று நம்பபபடுகிறது. 'கேர்" நிறுவனத்தின் ஒத்துழைப்புடன் மதிய உணவு திட்டத்தை நிறைவேற்றினால் அதிகம் பேர் பள்ளிக்கு வருவார்கள் என்ற அடிப்படையில், இத் திட்டம் செயல்படவிருக்கிறது. 600 மாணவர்கள் பயனடையும்படி 17 இடங்களில் பால் விநியோகிக்கப் படுகிறது. பாக்கியுள்ள 14 பள்ளிகளுக்கு மதிய உணவு கொடுக்கப்படவேண்டும் என்ற மக்களின் கோரிக்கை விரைவில் நிறைவேறறப்படும் என்று தெரிகிறது.

விசாகபட்டிணம் மாவட்ட ஆட்சித் தலைவரான திரு. அபிட்குசைன் என்பவரின் முயற்சியினால் ஜோலாபட்டில் ஒரு உயர்நிலைப்பள்ளி ஏற்பட்டது. இப்பள்ளி இப்பகுதி மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகிறது. இப் பள்ளிக்கு 40 மைல் சுற்றளவில் உள்ள மாணவர்கள் உயர் கல்விக்காக வேறு பள்ளிக்குச் செல்லத் தேவை யில்லை. பலகாலமாக பின்தங்கிய நிலையில் இருந்த மக்களை விழிப்படையச் செய்து அவர்களுக்கு கல்வியறிவு ஏற்படுவதற்கு முன்சிங்பட்டு ஊராட்சி சிறந்த பணியாற்றி யுள்ளது. இவர்களின் ஏழ்மை நிலைக்கு காரணம் அறியாமையே ஆகும். அறியாமையை ஒழித்ததினால், முன்சிங்பட்டில் வசிக்கும் ஆதிவாசிகளுக்கு விடிவுகாலம் ஏற்பட்டுவிட்டதென்று உறுதியாகச் சொல்லலாம்.

மக்கள் அன்பால்—42-ம் பக்கத் தொடர்ச்சி.

அமர்ந்தேன். என்னுடைய இயற்கையான குணம், ஏற்றுக்கொண்ட பொறுப்புகள் அனைத்தையும் இயன்ற வகையில் திறம்படச் செய்து முடிப்பதுதான்".

" உங்கள் வெற்றியின் இரகசியம் இதுதானா ?"—நாம் கேட்கிறோம்.

" எனக்குத் தெரியாது "—என்று சிரித்துக் கொண்டே பதில் சொல்கிறார் திருமதி தோராகல்.

இவர் பணியாற்றும் ஜாம்கண்டி வட்டாரத்திலுள்ள மக்கள் அனைவரும் இவரை அறிவார்கள். திருமதி தோராகல்லுக்கு மராத்தி, கன்னடம், இந்தி ஆகிய மொழிகள் தெரியும்.

" பல்வேறு மொழி பேசும் மக்களிடையே பணி யாற்றும்பொழுது மூன்று மொழிகள் எனக்குத் தெரிந்திருப்பது மிகவும் நன்மையாக இருக்கிறது " என்கிறார் திருமதி தோராகல்.

திருமதி தோராகல் ஓராண்டுக் காலத்திற்குள் ஆற் றியுள்ள பணிகளின் பட்டியல் நீளமானது.

பெண்களிடம் வீட்டுத் தோட்டம் போடும்படி வலியுறுத்தி 29 வீட்டுத் தோட்டங்களைப் போடவைத்திருக்கிறார். உரக் குழிகள் கோழிப் பண்ணைகள் போன்றவற்றை ஏற்படுத்த ஊக்குவித்திருக்கிறார். வீட்டுச் சுற்றுப் புறங்களைச் சுத்தமாக வைத்துக்கொள்வது, கழிவுநீர் வீட்டின் பக்கம் தேங்காமல் பார்த்துக்கொள்ளுவது, சத்துள்ள உணவுப் பொருள்களை உட்கொள்வது, தச்சு வேலை முதலியவற்றில் கிராமப் பெண்களுக்கு ஆர்வம் ஏற்படும்படி செய்வது ஆகிய பணிகளை ஆற்றியுள்ளார் திருமதி தோராகல்.

இப்படிப் பற்பல பணிகளை ஆர்வத்துடன் செய்து முடித்திருக்கிறார் அவர்.

அவர் பணியாற்றும் வட்டாரத்தில் கிராமத்திற்கு ஒன்றாக நான்கு மகளிர் மன்றங்களை ஏற்படுத்தி யுள்ளார்.

" சில நேரங்களில் களைப்புடன் நான் வீடு திரும்பு வேன். அப்பொழுது என்னுடைய குழந்தைகள் நன்றாக தூங்கிக்கொண்டிருப்பார்கள். வேலையின் காரணமாக நான் அவர்கள் விழித்துக்கொண்டிருக்கும் நேரத்தில் வந்து பேச முடிவதில்லை. மனமும் வாட்டமாகவே இருக்கும்.

" அதே நேரத்தில் என் கண்முன்னே ஊமையாக உள்ள சகோதரிகள் முகமும் அழும் அவர்களுடைய குழந்தைகள் முகங்களும் தெரியும். மனதைத் தேற்றிக் கொள்வேன். மறுநாள் வழக்கம்போல எனது பணியைத் தொடர புறப்பட்டுவிடுவேன்".

புனிதமான கடமையில் ஈடுபட்டிருக்கும் அவருடைய பொறுப்புள்ள பேச்சு, நம் நெஞ்சில் நீங்கா இடம் பெறுகிறது. நாம் விடைபெற்றுக்கொள்கிறோம்.

மக்களின் அன்புப் பிணைப்புக்கு ஆளானவர்கள் கிராம நலப் பணியாளர்கள். அவர்களுடைய அயரா உழைப்பின் வெற்றிக்கு அடிப்படைக் காரணங்களில் ஒன்று மக்கள் அன்பும் ஆதரவும் என்பதை யார் மறுக்க முடியும் ?



இலட்சியச் சின்னம்—19-ம் பக்கத் தொடர்ச்சி.

முறைகளை கையாளுதல், இரசாயன உரங்களைப் பயன்படுத்துதல், இரசா யன உரங்கள் கிடைக்காத பொழுது கலப்பு உரங்களைப் பயன்படுத்தல் போன்ற முறைகளை விவசாயிகளிடம் புகுத்தியது, நாடிபுடி ஊராட்சி மன் றம் தான். விவசாயிகள் பழத்தோட் டங்களையும், புதிய காய்கறி வகைகளை யும் உற்பத்தி செய்யும் நாடிபுடி ஊராட்சி முயற்சி எடுத்தது.

### முயற்சியின் பயன்

பெரும் முயற்சி செய்ததால் 1962-ம் ஆண்டில் விவசாயத்திற்காக மின்சக்தி கொண்டுவரப்பட்டது.

அது முதல் நாடிபுடி வரலாற்றில் புதிய அத்தியாயம் தொடங்கியது. தெருவெல்லம் மின் விளக்குகள் எரியத் தொடங்கின. நிலத்தின் அடி யிலுள்ள நீரை விவசாயத்திற்குப் பயன்படுத்த நாடிபுடி விவசாயிகள் முன்வந்தனர். இப்பொழுது நாடி புடியில் 16 மின்சார மோட்டார்கள், 25 வடிமுனை குழாய்கள், 15 ஆயில் இஞ்சின்கள் வேலை செய்கின்றன.

நாடிபுடி ஊராட்சி தன்னுடைய திட்டங்களில் முக்கியத்துவம் அளித்து சுகாதார பணிகளை செய்திருக்கிறது. இப்பொழுது 19 நவீன கழிவுக் கூடங்கள் அங்கு இருக்கின்றன.

நாடிபுடியின் பெரும் பிரச்னையாக இருந்தது குடிநீர் பிரச்னையாகும். ஊராட்சி மன்றம் இப்பிரச்னையில் தீர்வு காண, ரூபாய் 60,000 செலவில் திட்டம் வகுத்து செயல்படுத்தி வருகிறது. தெருவெல்லாம் குடி நீர் குழாய்கள் அமைக்கப்பட்டுள்ளன.

நாடிபுடியில் மகப்பேறு மருத்துவ மனையும் ஒன்றுள்ளது. இங்கு இல வசமாக மருத்துவ உதவி அளிக்கப் படுகிறது.

### சீரிய முறையில் சாலைகள்

நாடிபுடி ஊராட்சி மன்றம் கட்டாய தொடக்க கல்வி அமுல்படுத்தப்படு கிறது. இவ்வூரில் உள்ள எல்லா குழந்தைகளுக்கும் ஐந்து தொடக்க பள்ளிகள் உள்ளன. இப்பள்ளி களுக்காக ரூபாய் இருபத்தைந்தா யிரம் செலவில் கட்டிடங்கள் கட்டப் பட்டுள்ளன. தொடக்கப்பள்ளி களில் படிக்கும் மாணவர்களின் எண்ணிக்கை 330 ஆகும்.

நாடிபுடியின் சாலைகள் சீரிய முறையில் செப்பனிடப்பட்டு பாது காத்து வரப்படுகின்றன. போக்கு வரத்தின் முக்கியத்துவத்தை உணர்ந்து சாலைகள் ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளன.

நாடிபுடியில் ஒரு மகளிர் மன்றமும் இளைஞர் மன்றமும் உள்ளன. ஊராட்சி மன்றம் நூல் நிலையம் ஒன்றினையும் ஏற்படுத்தியுள்ளது. ஊராட்சி ஏற்படுத்திய சிறு சேமிப்புத் திட்டத்தில் 100 பேர் பங்கெடுத்துக் கொண்டனர். ரூபாய் 5,000 முதலீடு செய்துள்ளனர்.

### ஒழுங்காக வரி செலுத்தும் கிராமம்

நாடிபுடியிலுள்ள பின்தங்கிய, தாழ்த்தப்பட்ட வகுப்பு மக்களின் பொருளாதார நிலையும் மேம்பட்டு தான் உள்ளது. தாழ்த்தப்பட்ட மக் களின் சேரி பகுதியிலும் மின்விளக்கு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

திரு நெக்கண்டி வேங்கட ஜனார்த் தனராவ் 1961-ம் ஆண்டிலிருந்து இவ்வூராட்சியின் தலைவராக இருந்து வருகிறார். இவர் ஒரு மனதாகவும் தேர்ந்தெடுக்கபபட்டவர் ஆவர்.

இவ்வூரில் 1961-ம் ஆண்டு முதல் ஊராட்சி வரிகள் ஒழுங்காக வரி வசூ லித்து வருகிறது.

நாடிபுடியில் சாதி பாகுபாடுகளோ, குழுச் சண்டைகளோ கிடையாது.

ஆமாம், ஊராட்சி மன்றங்கள் ஒரு சீரிய எடுத்துக்காட்டாக் விளங்கும் நாடிபுடி ஊராட்சி மன்றம் ஓர் இலட் சியச் சின்னம் தான்!

"பஞ்சாயத்து ராஜ்", இதழிலிருந்து இடம் பெறுபவை :
பக்கங்கள் : 19, 34, 35, 41 முதல் 45 வரை.
Articles reproduced from 'Panchayati Raj' on pages :
19, 34, 35 and from 41 to 45.

கிராம நலம் பகுதி-1
GRAMANALAM PART-1

# ஊராட்சி அரசிதழ்

# PANCHAYAT GAZETTE

(இந்தப் பகுதியில் ஊராட்சி, ஊராட்சி வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய அரசு ஆணைகள், குறிப்பாணைகள் விதிகள் முதலியவற்றின் தமிழாக்கம் சுருக்கமாக இடம் பெறுகிறது.)

———o———

## ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி ஆசிரியர்களை மாற்றுதல்—பின்பற்றப்படவேண்டிய விதிகள்.

## Establishment—Panchayat Union Elementary School Teachers—Transfers—Rules to be followed by Adhoc body.

ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களை மாற்றுவது பற்றி அரசு அவ்வப்போது விளக்க ஆணைகள் பிறப்பித்துள்ளது. இதற்கென்றே அமைக்கப்பட்டிருந்த குழுக்களின் நடவடிக்கைகளை கடந்த ஈராண்டுகளாக கவனித்து வந்தபின், இது குறித்து சீரான நடைமுறையொன்றை பின்பற்ற வேண்டுமெனபதற்கென, கிராம வளர்ச்சி இயக்குநர் விதிகளின் வரைவு ஒன்றை அரசிற்கு சமர்ப்பித்துள்ளார். கிராம வளர்ச்சி இயக்குநர் சமர்ப்பித்த வரைவு விதிகளை அரசு பரிசீலனை செய்து, அவற்றை இவ்வாணையின் இணைப்பிலுள்ளவாறு அரசு வெளியிடுகிறது. ஊராட்சி ஒன்றியங்களின் தொடக்கப்பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களை இடமாற்றும் வேளைகளில், அவ்விதிகள் பின்பற்றப்பட வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

### விதிகள்

1. குறுகிய தலைப்பு.—"ஊராட்சி ஒன்றிய குழுக்களின் பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களை மாற்றுதல் பற்றிய விதிகள், 1968" என்று இவ்விதிகள், அழைக்கப்பெறும்.

2. வரையறை.—இவ் விதிகளில், பொருள் அல்லது சந்தர்ப்பத்திற்கு வேறு பொருள் இருந்தாலன்றி :

(அ) "தனிப்பட்ட குழு" என்பது, கீழ்க்கண்ட விதி 6-ல் ஏற்படுத்தப்பட்டுள்ள குழுவைக் குறிக்கும்.

(ஆ) "ஆண்டு" என்பது, கல்வி நிறுவனங்களில் பின்பற்றப்படும் கல்வி ஆண்டைக் குறிக்கும்.

3. விதிகளை செயல்படுத்துதல்.—ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளிகளில் பணியாற்றும் (உயர்தொடக்கப் பள்ளிகளையும் சேர்த்து) நிலையான, மாற்று நிலையிலுள்ள (Officiating) அல்லது தற்காலிக ஆசிரியர்கள் அனைவருக்கும் இவ்விதிகள் பொருந்தும்.

4. இடமாற்றுதல் ஆணைகளை பிறப்பிக்கும் அதிகாரி.—ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் பணியாற்றும் ஆசிரியர்களை நியமிக்கும் அதிகாரம் பெற்ற ஊராட்சி ஒன்றிய ஆணையாளரே, அவரது கட்டுப்பாட்டிலுள்ள ஆசிரியர்களையும் மாற்றுவதற்கு அதிகாரம் படைத்தவராவர் ஆனால் இந்த அதிகாரம் விதிகள் 5, 7, 8 மற்றும் 9 ஆகியவற்றில் பிறப்பிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள், வரைமுறைகளுக்கு உட்பட்டதாகும்.

5. ஆசிரியர்களை மாற்றுவதில் பின்பற்றப்படவேண்டிய நடைமுறை—

(அ) இட மாற்றங்களைக் கோரி எழுதப்பெறும் விண்ணப்பங்கள் அனைத்தும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளருக்கே முகவரியிட்டு அனுப்பப்படவேண்டும். இதற்கென ஒரு பதிவேடு ஏற்படுத்தி, அவ்விண்ணப்பங்களை அதில் உடனே பதிவு செய்தல் வேண்டும்.

(ஆ) ஆசிரியர்களிடமிருந்து பெறப்பட்டுள்ள விண்ணப்பங்கள் அனைத்தின் விவரங்களையும், நிர்வாக வசதியை யொட்டி இடமாற்றங்கள் செய்ய விரும்பும் ஊராட்சி ஒன்றிய ஆணையாளரின் கோரிக்கைகளையும், இவ்விதிகளின் இணைப்பிலுள்ள அறிக்கையில் எழுதி, அவற்றின் நகலை, தனிப்பட்ட குழுவின் உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும், கூட்டத்தின் தொடக்கத்தில் அளிக்கவேண்டும்.

6. தனிப்பட்ட குழுவின் அமைப்பு.—

(அ) மேற்காணும் விதி 5-ல் குறிப்பிடப்பட்டுள்ள தனிப்பட்ட குழுவில், கீழ்க்கண்டவர்கள் உறுப்பினர்களாவார்கள்:—

(1) அவ்வொன்றியத்தை உள்ளடக்கிய கோட்டத்தின், வருவாய்க் கோட்ட அதிகாரி.

(2) ஊராட்சி ஒன்றியக் குழுவின் தலைவர் (ஏர்க்காடு, வால்பாறை வட்டாரங்கள் தவிர).

(3) அப்பகுதிக்குரிய, பள்ளிகளின் துணை ஆய்வாளர் அல்லது பள்ளிகளின் ஆய்வாளர்.

(4) அத்தொகுதிக்குரிய சட்டமன்ற உறுப்பினர் அல்லது உறுப்பினர்கள்.

(ஆ) இத்தனிப்பட்ட குழுவிற்கு, வருவாய்க் கோட்ட அதிகாரி தலைவராகவும், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் உறுப்பினர்-செயலாளராகவும் இருப்பார்கள்.

7. தனிப்பட்ட குழுவின் செயல்முறைகள், நடவடிக்கைகள்.—

(அ) இத் தனிப்பட்ட குழு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில் ஊராட்சி ஒன்றியத் தலைவர் நிர்ணயிக்கும் காலத்தில் கூடி, ஆண்டு தொடக்கத்திற்கு முன்னரேயே மாற்றங்களைக் குறித்து முடிவெடுக்கும். இக்குழுவின் கூட்டம், ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெறுதல் வேண்டும். சாதாரணமாக, வருவாய்க் கோட்ட அதிகாரி, ஒரு வட்டாரத்தில் முற்பகலில் ஒரு கூட்டத்தையும், அதையடுத்த வட்டாரத்தில் அதே நாள் பிற்பகல் இன்னொரு கூட்டத்தையும் கூட்டுவார். எக்காரணத்தை முன்னிட்டும் ஒரே நாளில் இரண்டு கூட்டங்களுக்குமேல் நடைபெறுக கூடாது.

(ஆ) வருவாய்க் கோட்ட அதிகாரியின் வருகை இல்லாமல், எந்த கூட்டமும் நடைபெறக் கூடாது.



(இ) உறுப்பினர்கள் அனைவருக்கும் குறைந்தது மூன்று முழு நாட்கள் அறிவிப்புத் தரவேண்டும்.

(ஈ) கூட்டத்திற்கு மூன்று பேர் குறைந்த அளவாக வருகை தந்திருத்தல் வேண்டும்.

(உ) இந்த தனிப்பட்டக் குழு, விதி 5-ன்படி குழுவில் வைக்கப்பட்டுள்ள விண்ணப்பங்களையும், கோரிக்கைகளையும் பரிசீலித்து முடிவெடுக்கும்; அம்முடிவுகள் எழுத்தில் இருக்கவேண்டும்.

(ஊ) கூட்டத்தின் செயல்முறை குறிப்புகளில் தலைவரும், வருகை தந்துள்ள உறுப்பினர்களும் கையெழுத்திடுதல் வேண்டும்.

(எ) இத்தனிப்பட்ட குழுவின் செயல்முறைகள், அடங்கிய ஆவணங்கள், ஆணையாளரின் பாதுகாப்பில் இருக்கும்.

(ஏ) தனிப்பட்டக் குழுவின் முடிவுகளை எவ்வித மாற்றமுமின்றி, ஊராட்சி ஒன்றிய ஆணையாளரால் நிறைவேற்றி வைக்கப்படுதல் வேண்டும்.

(ஐ) முடிவிற்கு வருவதில், உறுப்பினர்களிடையே உடன்பாடு இல்லையெனில், இத்தனிப்பட்டக் குழுவிற்குரிய தலைவரின் (அதாவது வருவாய்க் கோட்ட அதிகாரி) தீர்மானமே, முடிவானது. ஆனால் அத்தீர்மானம் விதி 10-ல் அடங்கியுள்ள விதித்துறைகளுக்கு (Provision) உட்பட்டதாகும்.

8. ஊராட்சி ஒன்றிய பகுதிக்குள் ஆசிரியர்களை மாற்றுவதற்குள்ள வரம்புகள்:—

ஆண்டு ஆரம்பித்தபிறகு, இடமாற்றத்தைக் குறித்து எவ்வித விண்ணப்பத்தையோ, கோரிக்கையையோ சாதாரணமாக வரவேற்கக் கூடாது.

ஆனால் ஆண்டு நடப்பில், சில விலக்கான நேர்வுகளில் கோரிக்கைகளை பரிசீலிக்க நேரிட்டால், அவற்றை வருவாய்க் கோட்ட அதிகாரி வாயிலாக, மாவட்ட ஆட்சித் தலைவருக்கு ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அனுப்பவேண்டும். அக்கோரிக்கையின் நகல் ஒன்றை ஊராட்சி ஒன்றியத் தலைவருக்குத் தரவேண்டும். மாவட்ட ஆட்சித் தலைவரின் ஒப்புதலை பெற்ற பின்னரே இடமாற்றத்தை செயல்படுத்தவேண்டும்.

இரு ஆசிரியர்கள் ஒருவருக்கொருவர் உடன்பட்டு, எழுத்து மூலம் முறையிட்டுக்கொண்டு ஒன்றிய வரம்பிற்குள்ளேயே இடமாற்றத்தைக் கோரின், அதை அனுமதிக்கவேண்டும். அதை ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், மாவட்ட ஆட்சித் தலைவருக்குத் தெரிவிக்க வேண்டியதில்லை. ஆனால் ஊராட்சி ஒன்றிய மன்றத்தின் தலைவருடைய முன் அனுமதியுடனேயே அந்த இடமாற்றங்களைச் செய்ய வேண்டும்.

(ஆ) இருவர் உடன்பட்டுக் கோரும் இடமாற்றத்தை, ஓராண்டில் ஒரு முறைக்கு மேல் ஒருவருக்கு அளிக்கக் கூடாது.

(இ) உடன்பட்டு செய்யும் இடமாற்றங்களோ, மற்ற எவ்வகை இடமாற்றங்களோ, ஆண்டின் இறுதியில் தேர்வு காலங்களில் நிகழக்கூடாது.

(ஈ) ஒரு பள்ளியில் குறைந்தது மூன்றாண்டுகள் பணி செய்வதற்கு முன்னரேயே, அவ்வாசிரியர்/ஆசிரியையை அப்பள்ளியிலிருந்து மாற்றக் கூடாது.

ஆனால், ஓர் ஆசிரியர் அப்பள்ளியில் மூன்றாண்டுகள் பணியை முடிக்காத நிலையில், நிர்வாக அடிப்படையில் அவரை மாற்றவேண்டியிருப்பின், தனிப்பட்டக் குழுவானது, அம்மாற்றத்திற்குரிய காரணங்களை எழுத்து மூலம் பதிவு செய்யவேண்டும்.

மேலும் மூன்றாண்டுகளுக்கு குறைவாக ஒரு பள்ளியில் சேவை செய்திருந்த ஓர் ஆசிரியர் அல்லது ஆசிரியை, தன்னுடைய சொந்த விருப்பின்மீது மாற்றங்கள் கோரினால், அதுபற்றி தனிப்பட்டக் குழு தீவிர பரிசீலித்து, எழுத்து மூலம் பதிவு செய்த பின்னரே அவ்வேண்டுகோளுக்கு இணங்கலாம்.

9. ஓர் ஒன்றியத்திலிருந்து இன்னொரு ஒன்றியத்திற்கும், ஒரு மாவட்டத்திலிருந்து மற்றொரு மாவட்டத்திற்கும் இடமாற்றங்கள் கோரும் விண்ணப்பங்களை பரிசீலிப்பது இத் தனிப்பட்டக் குழுவின் வரம்பிற்கு புறம்பானதாகும்.

10. ஆணையை மாற்றும் அதிகாரம்.—இவ்விதிகளை செயல்படுத்துதல் மற்றும் இவ்விதிகளைப் பற்றிய பொதுவான அல்லது சிறப்பான ஆணைகளை பிறப்பிப்பதற்கும், தனிப்பட்டக் குழுவின் முடிவுகள் பற்றிய ஆவணங்களை தருவித்து அதன்மீது தகுந்த ஆணைகள் பிறப்பிப்பதற்கும் அல்லது அவற்றின்மீது விசாரணை நடத்த எந்த ஒருவருக்கு அதிகாரம் அளிக்கவும், அரசிற்கு அதிகாரம் உண்டு.

### இணைப்பு

| வரிசை எண். | ஆசிரியரின் பெயர். | இப்போதுள்ள பள்ளியில் பள்ளியின் பெயர். | இப்போதுள்ள பள்ளியில் சேவையின் காலம். | மாற்றத்தைக் கோரும் இடம் அல்லது மாற்ற இருக்கும் கோரிக்கை. | தனிப்பட்ட குழுவின் முடிவு. |
|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) |

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 18—5—1968 அரசு ஆணை எண் 968-ன் சுருக்கம்.)

## மக்கள் தொகைக் கணக்கெடுப்பு—ஊராட்சி ஒன்றியவாரியான மக்கள் தொகை கணக்கு

(சென்ற இதழ் தொடர்ச்சி.)

| வரிசை எண். | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | மக்கள் தொகை | வரிசை எண். | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | மக்கள் தொகை |
|---|---|---|---|---|---|
| | செங்கல்பட்டு (வடக்கு) வளர்ச்சி மாவட்டம் | | | | |
| 1 | திருவள்ளூர் | 57,792 | 10 | ராமகிருஷ்ணராஜுபேட்டை | 51,052 |
| 2 | கடம்பத்தூர் | 60,602 | 11 | சோழவரம் | 52,875 |
| 3 | பூண்டி | 65,734 | 12 | திருவாலங்காடு | 53,465 |
| 4 | பள்ளிப்பட்டு | 57,755 | 13 | மாதவரம் | 58,331 |
| 5 | ஊத்துககோட்டை | 66,529 | 14 | திருத்தணி | 51,542 |
| 6 | மீஞ்சூர் | 91,219 | | | |
| 7 | பறங்கிமலை | 114,226 | | | 975,628 |
| 8 | கும்மிடிபூண்டி | 86,704 | | | |
| 9 | வில்லிவாககம் | 107,800 | | | |

| வரிசை எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | | மக்கள் தொகை |
|---|---|---|---|
| | **செங்கல்பட்டு (தெற்கு) வளர்ச்சி மாவட்டம்** | | |
| 1 | திருக்கழுக்குன்றம் | .. | 85,130 |
| 2 | ஸ்ரீ பெரும்புதூர் | .. | 62,488 |
| 3 | பூவிருந்தவல்லி | .. | 95,067 |
| 4 | மதுராந்தகம் | .. | 90,896 |
| 5 | உத்திரமேரூர் | .. | 92,773 |
| 6 | காட்டன்குளத்தூர் | .. | 69.505 |
| 7 | குன்றத்தூர் (படப்பை) | .. | 78 172 |
| 8 | காஞ்சிபுரம் | .. | 59,325 |
| 9 | அச்சரப்பாக்கம் | .. | 70.806 |
| 10 | வாலாஜாபாத் | .. | 77,255 |
| 11 | திருப்போரூர் | .. | 65,465 |
| 12 | சித்தாமூர் | .. | 70,110 |
| 13 | லத்தூர் | .. | 51,815 |
| | | | 968,807 |
| | **கோயம்புத்தூர் (கிழக்கு)** | | |
| 1 | சத்தியமங்கலம் | .. | 57,876 |
| 2 | கோபிச்செட்டிபாளையம் | .. | 79,803 |
| 3 | பெருந்துறை | .. | 83,701 |

| வரிசை எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | | மக்கள் தொகை |
|---|---|---|---|
| | **கோயம்புத்தூர் (கிழக்கு)—தொடர்ச்சி.** | | |
| 4 | ஈரோடு | .. | 72,716 |
| 5 | கொடுமுடி | .. | 71,967 |
| 6 | மொடக்குறிச்சி | .. | 87,075 |
| 7 | தூக்கநாயக்கன்பாளையம் | .. | 52,937 |
| 8 | காங்கேயம் | .. | 54,343 |
| 9 | வெள்ளைக்கோயில் | .. | 54,854 |
| 10 | குண்டடம் | .. | 61,314 |
| 11 | பவானி | .. | 95,085 |
| 12 | தாராபுரம் | .. | 66,648 |
| 13 | பவானி சாகர் | .. | 66,157 |
| 14 | தாளவாடி | .. | 28,953 |
| 15 | மூலனூர் | .. | 62,697 |
| 16 | அம்மாபேட்டை | .. | 85,699 |
| 17 | அந்தியூர் | .. | 71,716 |
| 18 | ஊத்துக்குளி | .. | 58,899 |
| 19 | நம்பியூர் | .. | 89,492 |
| 20 | சென்னிமலை | .. | 63,417 |
| | | | 1,365,349 |

—தொடரும்

**எதிர்ப்பக்கம்:**

**மேலே:**—சமுதாய நலத் திட்டம், கூட்டுறவு பற்றிய மாநில முதலமைச்சர்கள் மாநாட்டையொட்டி, சென்னை ராஜாஜி மண்டபத்தில் நடைபெற்ற, கண்காட்சியில், மத்திய அரசு உணவு-வேளாண்மை அமைச்சர் திரு ஜகஜீவன்ராம், தமிழக முதலமைச்சர், உணவு—வருவாய் அமைச்சர், உள்ளாட்சி அமைச்சர் ஆகியோர்.

**கீழே:**—சென்னையில் நடைபெற்ற 'பள்ளிச் சீரமைப்பில் சமுதாயத்தின் உதவி' பற்றிய மாநாட்டை ஒட்டி நடைபெற்ற பொருட்காட்சியில், 'சென்னை மாநகராட்சி மாணவர்களுக்கு இலவசமாக வழங்கும் கற்பலகைகள் (Slates), இவ்வாறு அழகுற வீடுபோல் அமைக்கப்பட்டுள்ளது. கட்டுரை 38-ம் பக்கம்.

## இந்த இதழில்...

| | | பக்கம் |
|---|---|---|
| தமிழகத்தின் தலைநகரில்— முதல் அமைச்சர்கள் மாநாடு | .. .. | 1 |
| " வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து "— திரு மு. ரா. பெருமாள் முதலியார் | | 6 |
| வள்ளுவர் காட்டும் வழி— திரு ந. பாண்டியன் | .. .. | 9 |
| திருவள்ளுவர் ஆண்டு—2000 சிறுவை நச்சினார்க்கினியன் | .. .. | 11 |
| " இனியொரு விதி செய்வோம் " | .. .. | 27 |
| கல்வெட்டுகள் கூறும் வரலாறு— திரு இரா. நாகசாமி எம். ஏ. | .. .. | 31 |

## அடுத்த இதழில்...

'புதியசேனை' ஆனால் நல்லசேனை'—
சேவைப் பற்றிய கட்டுரை.

எத்தனை கோடி வெற்றி—
இடைப்பாடி ஊராட்சி ஒன்றிய வெற்றிகள் பற்றி மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் பாராட்டு.

கருத்தைக் கவர்ந்த கழுகுமலை—
தமிழகத்தின் சிறந்த கிராமம் பற்றிய சிறப்புக் கட்டுரை (படங்களுடன்).

காஞ்சித் தலைநகர் திருவிழா—
செங்கல்பட்டு மாவட்ட தலைநகர் காஞ்சிபுரத்திற்கு மாற்றியது பற்றிய செய்தித் தொகுப்பு.

மிகுவிளைச்சல் உணவு தானியங்கள் பற்றி திருச்சி வானொலி நிலையத்திலிருந்து ஒலிபரப்பாகவிருக்கும் சிறப்பு கவிய ரங்கத்துக்கான புதிய ஏற்பாடு விவரம்.

ஆசிரியக் குழுத் தலைவர்:
திரு T. A. S. பாலகிருஷ்ணன், I.A.S.

வெளியிடுபவர்: திரு ஆர். சுவாமிநாதன், ஐ. ஏ. எஸ். (பொறுப்பு)

ஆசிரியர்: திரு எஸ். வேங்கடசாமி, எம். ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Director of Rural Development, Madras-9. Chairman of the Editorial Committee: Thiru T. A. S. Balakrishnan, I.A.S.,
Wrapper printed at Vadapalani Press, Madras-26.








REGD. No M. 7277

© தமிழக அரசு 1968

# அளவோடு பெற்று வளமோடு வாழுங்கள்



சிவப்பு முக்கோணம்
குடும்ப நல திட்டத்தின் சின்னம்

## குடும்பக்கட்டுப்பாடு செய்திடுவீர்

# கிராமநலம்

ஜூலை-68

- கழுகுமலை
- தமிழகத்தின்
- சிறந்த கிராமம்

சிறப்புக்கட்டுரை உள்ளே



முதல் பரிசு பெற்ற ஊர்ப்பணியாளர்





# கிராமநலம்

தமிழக அரசின் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை மாத இதழ்

கதிர் 13 ஜூலை 1968 நெல் 10


செய்திப் பேழை :

## காஞ்சித் தலைநகர் விழா!

பல்லவ பேரரசின் தலை நகரமாக விளங்கி வரலாற்றில் கீர்த்தி மிக்க புகழேடுகளை தனது சொந்தமாக்கிக் கொண்ட காஞ்சிமாநகர், மீண்டும் தலைநகராக மகுடம் சூட்டிக்கொண்டது.

இதுநாள் வரை சென்னையிலிருந்தே செயல்பட்டு வந்த செங்கற்பட்டுமாவட்ட தலைமை அலுவலகங்கள் ஜூலை முதல் நாளிலிருந்து காஞ்சிக்கு மாற்றப்பட்டன. இதை ஒட்டி காஞ்சித் தலைநகர் விழா, ஜூலைத் திங்கள் ஆறும் நாள் காஞ்சியில் நடைபெற்றது. விழாவுக்கு மாண்புமிகு முதலமைச்சர் அண்ணாதுரை அவர்கள் தலைமை வகித்தார்.

### பங்கு கொண்டோர்

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு லட்சுமிகாந்தன் பாரதி அனைவரையும் வரவேற்றார்.

தலைமையகத்தை துவக்கி வைத்து மாண்புமிகு உணவமைச்சர் திரு.கே. எ. மதியழகன் உரையாற்றினார்.

அரசு ஊழியர் குடியிருப்புமனைக்கு மாண்புமிகு சட்ட அமைச்சர் மாதவன் அடிக்கல் நாட்டினார்.

புதிய தலைமையகக் கட்டிடங்களுக்கும், காவல் துறை கட்டிடங்களுக்கும் மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் கருணாநிதி அடிக்கல் நாட்டினார்.

விழாவில் மாண்புமிகு அமைச்சர்கள் திரு எ. கோவிந்தசாமி, திருமதி சத்தியவாணிமுத்து, திரு மா. முத்துசாமி, திரு சாதிக்பாட்சா ஆகியோரும் கலந்து கொண்டனர். விழாவில் முதலமைச்சர் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு :—

"ஆடவரும் பெண்டிரும் வாலிபர்களும் வயோதிகர்களும் செங்கற்பட்டு மாவட்டத் தலைநகராக காஞ்சிபுரம் ஆக்கப்படுகிற இந்த விழாவில் பங்கு கொண்டிருப்பது — இந்த முடிவு, எந்த அளவு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்பதைத் தெளிவாக்கியுள்ளது.

### நெடு நாள் விருப்பம்

ஒரு சர்க்கார் அலுவலகம் எங்கிருந்தால் என்ன, எங்கே மாற்றப்பட்டால் என்ன என்றில்லாமல் நாட்டு மக்கள் அக்கறை காட்டுவது — நீண்ட நாள் விருப்பம் நிறைவேறுகிறது என்பதற்கு அரிய எடுத்துக்காட்டு.

சொந்தக் கட்டிடத்தில் தலைமையகம் இன்று இல்லாமலிருந்தாலும், முறையே பொதுப் பணி அமைச்சரும், வருவாய்த் துறை அமைச்சரும், கூட்டுறவுத் துறை அமைச்சரும் கட்டிட கால்கோள் விழாக்களை நடத்தி சொந்தக் கட்டிடம் எழும் என்ற உறுதியை அளித்திருக்கிறார்கள்.

அலுவலகங்களாக மாளிகை எழில் மிக்க கட்டிடங்களும் அலுவலர் குடியிருப்புகளும் எழ இருக்கின்றன.

காஞ்சி தலைநகர் ஆவதற்கு எல்லா விதத்திலும் தகுதி வாய்ந்தது என்பதை வரலாற்றுச் சான்றுகளுடன் அமைச்சர்கள் கருணாநிதியும் மதியழகனும் எடுத்துக் கூறினார்கள்.

"இப்படி காஞ்சிபுரம் தலைநகர் ஆக்கப்படுவதை எந்தக் கட்சியும் எதிர்க்கவில்லை. முன்னாள் முதலமைச்சர் திரு பக்தவத்சலம் அவர்களும் இந்தக் கருத்தை வெளியிட்டிருக்கிறார்.

முன்னாலிருந்தவர்கள் செய்ய நினைத்த நல்ல காரியங்களை நிறைவேற்றுவது எனது கடமை.

முன்பிருந்தவர்கள் தேவையில்லை என்று விட்டு விட்டாலும் அது நன்மை தரத்தக்கதாயிருந்தால் அப்படிப்பட்ட நல்லவை நடைபெறவொட்டாமல் குந்தகம் செய்ய மாட்டேன் என்பதனை எடுத்துக் காட்ட இந்த தலைநகர் மாற்றம் செய்யப்படுகிறது.

இந்த விழாவை ஒட்டிய சிறப்பு மலர் ஒன்றில் திரு பக்தவத்சலம் "செங்கற்பட்டு மாவட்டத்தின் தலை நகரம்மாவட்டத்துக்கு வெளி இடத்தில் இருப்பது அவ்வளவாகத் திருப்தி அளிக்கவில்லை" என்று எழுதியிருக்கிறார்.

**வழக்கு மன்றம் செங்கற்பட்டிலேயே**

மாவட்டத் தலைநகராக காஞ்சிபுரம் ஆனாலும் வழக்கு மன்றத் தலைநகராக செங்கற்பட்டே விளங்கும் என்ற செய்தியை வழக்கறிஞர்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஒரு தலைநகரிலேயே எல்லா அதிகாரங்களும் குவியும் நிலை நீடிக்கக் கூடாது. அது ஏற்றதல்ல. சோழ மண்டலத்தின் தலைமை ஒரு காலத்தில் தொண்டை மண்டலம் இருந்தாலும், துறைமுகப் பட்டினங்களாக மாமல்லபுரமும் சதுரங்கப் பட்டினமும் விளங்கின.

அதுபோல காஞ்சிபுரம் தலைநகராக இருப்பினும் வழக்கு மன்றத் கவும் அவர் அறிந்து செய்ய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. சிற்றூர்களுக்கெல்லாம் செல்லும் வாய்ப்பு இருக்கிறது.

**சிறப்பு மிக்க காஞ்சி**

வரலாற்றுச் சிறப்பு மிக்க காஞ்சியில் இன்று வறுமை தாண்டவமாடுகிறது. நோய் வாய்ப்பட்டவன் முன்னால் உண்ட விருந்தை நினைப்பதுபோல வறுமை வாய்ப்பட்டவர்கள் பழைய நினைப்பை நினைக்கத் தோன்றுகிறது. அப்படிப்பட்ட வறுமையை ஓட்ட கைத்தறி நெசவாளர்களும், விவசாயிகளும் தங்கள் தங்கள் தொழில்களை நிலை நிறுத்திக் கொள்ள சேமமான வாழ்வை அவர்களுக்குப் பெற்றுத்தர மாவட்ட ஆட்சித் தலைவரும் பிற அதிகாரிகளும் கடமை ஆற்ற வேண்டும்.

மக்களுடன் பழகிக்குறைகளை அறிந்து அவற்றைத் தீர்க்கும் வகையில் சர்க்கார் அதிகாரிகள் பணி ஆற்றினால் மாநிலத்தில் ஆள்கின்ற சர்க்காருக்கும் சிறப்பு வரும் கிராம ஜனநாயகத்தை வளர்க்கும் துறையில் சர்க்கார் அதிகாரிகள் தங்கள் கடமைகளை செவ்வனே ஆற்றவேண்டும்.

சிங்காரச் சென்னையிலிருந்து, கடற்கரைக் காற்று வீசும் சென்னையிலிருந்து பதிவு பெறு ஊழியர்களை கதகதப்பான இந்த இடத்திற்கு மாற்றியது பற்றி சிலர் கவலைப்படலாம்.

கடற்கரைக் காற்று இங்கு இல்லை. ஒரு புறம் வேகவதியும் மறுபுறம் பாலாறும் இருக்கின்றன. அவற்றை நீரோட்டம் உள்ளதாக ஆக்கினால் சென்னையை விட குளிர்ந்த காற்று இங்கே அனுபவிக்கலாம்.

**மன்னர்கள் உண்ட காற்று அலுவலர்களுக்கு**

வேகவதி திட்டம் ஒன்று தீட்டப்பட்டு என்ன காரணத்தாலோ நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. — இப்போது மீண்டும் அத்திட்டம் பரிசீலனையில் இருக்கிறது. அது நிறைவேற்றப்பட்டால் கடற் காற்றை விட நல்ல காற்றை உண்டு மகிழலாம். சென்னை கடற்கரை

# செந்தமிழ்க் காஞ்சி செங்கை மாவட்ட தலைநகராகியது

தலைநகராக செங்கற்பட்டு நீடிக்க வேண்டும்.

**காஞ்சியே காரணம்**

முன்பே கூறியிருக்கிறேன். என்னிடமிருப்பதாகச் சொல்லப்படும் திறமைகளுக்கெல்லாம் காஞ்சிபுரம் தான் காரணம் என்று.

குறைகள் ஏதாவது இருப்பின் இங்கே பிறந்தும் இப்படிப்பட்ட குறைகள் இருக்கிறதே என்று வருத்தப்படவேண்டும்.

காஞ்சிபுரம் தலைநகர் ஆவதால் மக்கள் பொறுப்பும் அதிகமாகிறது. இங்கே தொழில் வளம் பெருக, வாணிபம், கல்வி வசதி வளர அதிக வாய்ப்புகள் ஏற்பட வேண்டும்.

மாவட்ட ஆட்சித் தலைவர் சென்னையில் இருந்தால் காரியங்கள் தாமதமாக நடந்ததென்று மக்கள் கருதலாம். இனி அவர் காஞ்சிக்கே வந்திருப்பதால், வேண்டிய வளர்ச்சிகளை தேவைகளை விரைவாகவும் விரிவாகவும் மக்கள் வரும்போது அவர்களை அன்புடன் வரவேற்று காரியங்கள் செய்யக் கூடியதாக இருந்தால் வாக்களித்து- இயலாததாக இருந்தால் இதமாக எடுத்துக் கூறி விளக்கி அனுப்ப வேண்டும். தாமத நிலையை தவிர்த்திடும் வகையில் அதிகாரிகள் செயல்பட்டால் உண்மையான ஜனநாயகத்தின் பலனை மக்கள் அனுபவிக்கமுடியும்.

**ஜனநாயகத்தின் பயிற்சிக்கூடம்**

ஒவ்வொரு சர்க்கார் அலுவலகமும் ஜனநாயகத்தின் பயிற்சிக் கூடமாக ஆக வேண்டும், அப்போது தான் ஜனநாயகம் வளரும்.

பள்ளிக்கூடங்களில் கல்லூரிகளில் ஆபிரகாம் லிங்கன், காந்தியடிகள், கென்னடி ஆகியோர் ஜனநாயகத்தைப் பற்றி மேற்கோள் காட்டி விடுவதால் மட்டும் ஜனநாயகம் வளர்ந்து விடாது. ஒவ்வொரு சர்க்கார் துறை அதிகாரியும் ஜனநாயகத்தை வளர்க்கும் முறையில் பணியாற்ற வேண்டும்.

காற்றை மன்னர்கள் உண்டதில்லை. வேகவதி—பாலாற்றின் காற்றை மன்னர்கள் உண்டு மகிழ்ந்திருக்கிறார்கள். அரசு ஊழியர்களை அப்படிப்பட்ட இடத்திற்கு அழைத்து வந்திருக்கிறோம்.

அரசு ஊழியர்களிடையே கவலையைப் போக்கத்தக்க வகையில் வசதியுள்ள வீடுகள் கட்டித்தர வேண்டும் என்றும் உத்தரவிட்டிருக்கிறோம்" என்றார் முதலமைச்சர்.

விழாவிற்கு முன்னால், போலீஸ் அணிவகுப்பு நடைபெற்றது. சிறுவர் சிறுமியர் பங்கு கொண்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

காஞ்சி தலைநகராகும் விழாவை யொட்டி நகரமே இன்று விழாக் கோலம் பூண்டிருந்தது. எங்கு நோக்கினும் கொடிகளும் தோரணங்களுமாகக் காட்சியளித்தன. மாவட்டம் முழுவதிலும் இருந்து பல்லாயிரக்கணக்கான மக்கள் வந்து விழாவில் பங்கு கொண்டனர்.



# மொரிஷியஸ் தீவினிலே



(மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து)

[மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து அம்மையார் அவர்கள், அண்மையில் மொரிஷியஸ் தீவிற்குச் சென்று மீண்டது அனைவரும் அறிந்ததே. மொரிஷியஸ் தீவின் வளர்ச்சியையும் மக்கள் வாழ்க்கையையும் இக்கட்டுரையில் நமக்கு படம் பிடித்து காட்டுகிறார்கள்.
—ஆசிரியர்.]

மொரிஷியஸ் நாடு 7 லட்சத்து 18 ஆயிரம் மக்களைக் கொண்ட நாடு. அதில் 1 லட்சத்து 22 ஆயிரம் மக்கள் தமிழ் மக்கள். தமிழர்களில் 80,000 பேர் இந்துக்கள் மற்றவர்கள் கிறிஸ்தவர்கள், இஸ்லாமியர்கள் இவர்கள் தமிழர்களாகச் சென்று வேறு மதங்களை தழுவிக்கொண்டு வாழ்கின்றனர்.

அழகிய சின்னஞ்சிறு மொரீஷியஸ் தீவில் 80 ஆயிரம் தமிழர்கள் வாழ்கின்றனர். 50 ஆயிரம் பேர் தமிழர்களாகச் சென்று வேறு மதங்களைத் தழுவிக் கொண்டு வாழ்கின்றனர். இவர்களெல்லாம் பல தலைமுறைகளுக்கு முன்னர், பிழைப்புக்காக அங்கு குடியேறியுள்ளவர்கள். ஆப்பிரிக்காவைச் சுற்றிக் கொண்டு கப்பல் மூலம் இந்தியாவுடன் வாணிபம் செய்யப் புறப்பட்ட டச்சுக்காரர்கள் முதன் முதலில் மொரிஷியஸ் தீவைக் கண்டு, அதனை ஓய்வுத் தளமாகப் பயன்படுத்தினர். இவர்களைத் தொடர்ந்து, பிரஞ்சு, பிரிட்டிஷ் நாட்டாரும் இங்கு தங்கினர். கப்பலுக்கு எண்ணெய் ஊற்றுவது, சுத்தம் செய்வது மற்றும் ஓய்வு பெறுவதற்கும் பயன்பட்ட மொரிஷியஸ் தீவு பிரஞ்சு ஆதிக்கத்திலிருந்து, பின்னர் ஆங்கிலேயர் ஆதிக்கத்தில் இருந்து அண்மையில் விடுதலை அடைந்தது.

டச்சு, பிரஞ்சு, ஆங்கிலேயர்களால் மொரிஷியஸ் தீவை வளப்படுத்த ஏழை இந்தியர்கள் பெரும்பாலும் தமிழர்கள் இங்கு குடியேற்றப் பட்டனர்.

வெள்ளையர் ஆதிக்க காலத்திலிருந்து மொரிஷியஸ் தீவில் முறையான ஆட்சி நடைபெற்று வருகிறது. 19-ம் நூற்றுண்டிலிருந்தே ஆங்கில பிரஞ்சு பத்திரிகைகள் வெளியிடப்பட்டு வருகின்றன.

பீகார் மாநிலத்திலிருந்து குடியேறியுள்ள சிவசேகர் ராம் கூலம் என்பவர்தான் சுதந்திர மோரீஸ் தீவின் பிரதமராக இருக்கிறார். பாண்டிச்சேரியிலிருந்து சென்ற வீராசாமி ரெங்காடு என்பவர் நிதி அமைச்சராக்கப்பட்டுள்ளார். சட்டசபை எதிர்க்கட்சித் தலைவராகவும் ஒரு தமிழர்தான் இருக்கிறார். அதோடு சபாபதி முருகன் எனும் இரு தமிழர்கள் இரண்டு நகராண்மைக் கழக மேயர்களாக உள்ளனர்.

நாம் எப்படி முதலமைச்சரை அண்ணா என்று அழைக்கிறோமோ அப்படி அவர்கள் அவர்களுடைய பிரதமரை சாச்சா என்று அழைக்கிறார்கள்.

மொரிஷியஸை நான்கு மாவட்டங்களாகப் பிரித்திருக்கிறார்கள். ஊராட்சிகளும் இருக்கின்றன. மாவட்ட ஆட்சித் தலைவரை கமிஷனர் என்று அழைக்கிறார்கள்.

பல தலைமுறைகளாக தமிழகத்துடன் தொடர்பற்று, தமிழ் மொழியைப் பேசும் பழக்க வழக்கமும் அடியோடு அற்றுப்போய் இருக்கும் மோரீஸ் தமிழர்கள், என்னைக் கண்டதும், ஏதோ கனவிலிருந்து விழித்து கொண்டதுபோல, தமிழ் உணர்வும் ஆர்வமும் ஆர்வத்துடிப்பும் மேலிட்டு புத்துயிர் பெற்றுள்ளனர்.

சிலர் என்னை நெருங்கி "ஊரிலிருந்து வந்தீர்களா: கல்யாணம் ஆகிவிட்டதா ? குழந்

தைகள் இருக்கிறதா-? என்று தமிழில் பேசி மகிழ்ந்தனர். அவர்கள் அனைவரும் முதியவர்கள். இளையோருக்கு தமிழ் தெரியவில்லை.

## கிரியோல் மொழி

பெயரால், மொழியால், இனத்தால் நாம் தமிழர்கள், தமிழ்நாட்டவர்கள், எனும் உணர்வு மட்டும் தான் மொரிஷியஸ் தமிழர்களிடம் காணப்படுகிறது. ஆனால் நடை, உடை, பாவனை. பேச்சு ஆகியவற்றில் முற்றிலும் மாறுபட்டுக் காணப்படுகின்றனர். தமிழ் பேச்சு வழக்கே தெரியவில்லை· கலப்படமான கிரியோல் மொழியில் தான் பேசுகின்றனர்.

பொன்னுசாமி என்னும் தமிழ்ப் பெயரை பொன்னுசாமி என்றும், கோவிந்தன் என்பதை கோவிந்தா என்றும் பிரஞ்சு பாணியில் நீட்டி முழக்கிக் கூறுகின்றனர்.

மொரிஷியஸ் தீவில் மாரியம்மன், மீனாட்சி கோயில்கள் உள்ளன. தை மாதத்தில் மட்டும் திருவிழா நடக்கிறது. வீட்டுக்கு வீடு திருக்குறளும் திருவள்ளுவர் படமும் உள்ளன. ராஜா சர் முத்தையா செட்டியாரும், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகமும் பல தமிழ் நூல்களை அனுப்பியுள்ளனர்· ஆனால் திருக்குறளை பைபிள் என்றும் திருவள்ளுவரை ஏசு கிறிஸ்து என்றும் பலரும் கூறுமளவுக்கு தமிழத் தொடர்பும் பழக்க வழக்கமும் அற்றுவிட்டிருப்பதாக கூறப்படுகிறது.



மொரிஷியஸ் தமிழர்களுக்குத் தமிழ் கற்றுத் தருவதற்காக பி. ஓ. எல். படித்த பழனி சாமி எனும் தமிழாசிரியர் அங்கே இருக்கிறார், ஆனால் உரல், ஒணான், ஒட்டகம், காக்கை முதலிய படங்களைக் கொண்டு எழுத்துக்களைச் சொல்லிப் புரிய வைக்க அவர் படும்பாடு சொல்லி முடியாது. காரணம் உரல், காக்கை முதலியன அங்கே கிடையாது. எனவே. அந்நாட்டுக்கு ஏற்ற பாடங்களைக் கொண்டு, புதிய புத்தகம் ஒன்றைப் பழனிசாமி தயாரித்து வருவதாகவும் அவர் தெரிவித்தார்.



தமிழாசிரியர்களையும், இசை, நடனம் முதலிய கலாச்சாரப் பயிற்சியாளர்களையும் அனுப்பி உதவும்படி. தமிழர்கள் கேட்டுக் கொண்டனர். தாய்நாட்டுத் தொடர்பைப் புதுப்பித்துத் தொடரவும் துடிக்கின்றனர்.

## கொலையின்மைக்கு விழா

பல்வேறு மொழி, கலாச்சாரம் கொண்ட மோரிஸ் தீவில் கடந்த இரண்டாண்டுகளாக ஒரு கொலை நிகழ்ச்சியும் நடைபெறவில்லை. இதனை அவர்கள் ஒரு விழாவாகவே கொண்டாடினர்.

திருமணமுறை எல்லாம் மாலை மாற்றல் தான். அங்குள்ள தமிழர்கள் மீனாட்சி அம்மன் கோவிலுக்குச் சென்று நம் நாட்டுப் பண்பாட்டின்படி தாலி கட்டுகிறார்கள். இங்கிருந்து அங்கு சென்ற ரங்கநாதன், சீனிவாசன் என்பவர்கள் அந்தப் பழக்கத்தை ஏற்படுத்தியுள்ளார்.

பெரும்பாலும் அங்கு புடவைக்குப் பதிலாக பெண்கள் கவுன்தான் அணிகிறார்கள். வட இந்தியப் பெண்களும் முக்காடிட்டுக் கொள்வதில்லை. உடையில்தான் மாற்றமே தவிர பெயர்கள் எல்லாம் சிவகாமி, சங்கரி போன்றவைகளாக இருக்கின்றன. அங்கு மில்கள் கிடையாது. பெரும்பாலும் அங்கே வெளி நாட்டுப் பொருள்கள்தான் விற்பனை செய்யப் படுகின்றன. உள்ளூர் உற்பத்தி சாமான்கள் அரிது என்றே கூறலாம்.

சின்னஞ்சிறிய தீவான அங்கு மக்கள் பெருக்கம் அதிகரித்து வருவதும் ஒரு பிரச்னை


கவனிக்கவும் -
யானை டிரேட் மார்க்
யானை டிரேட் மார்க், உர மூட்டைகளில்
இருக்கிறதா என்று கவனித்து வாங்கவும்

பாக்ட் கம்பெனியாரின்
உரத் தயாரிப்புகள்
பாக்டம்பாஸ்
(அமோனியம் பாஸ்பேட் 16 : 20)
அல்ட்ராபாஸ்
(மிகவும் பொடியாகத் தூளாக்கபபட்ட மினரல் பாஸ்பேட்)
அமோனியம் ஸல்பேட்
சுபர்பாஸ்பேட்
N.P.K. கலப்பு உரங்கள்

FACT

பாக்ட் ...யானை மார்க் உரங்கள்

பெர்டிலைஸர்ஸ் அண்டு கெமிகல்ஸ் திருவிதாங்கூர் லிமிடெட்
பதிவு காரியாலயம்: ஏலூர், உத்யோகமண்டல், P. O. கேரள ராஜ்யம்
பிராந்திய அலுவலகம்: 2வது மாடி 19, கமாண்டர்-இன்-சீப்ரோடு எழும்பூர் சென்னை

Criterion-FT-2004 A



128, சின்னமனூர் கூட்டுறவு விவசாய பாங்க் லிமிடெட்
மதுரை மாவட்டம்

திரு வீரப்ப நாயக்கர்
தலைவர்.

சேதுராம்
காரியதரிசி.

பாங்கிலிருந்து விவசாய முன்னேற்றத்திற்கு—குறுகிய காலக்கடன், மத்திய காலக்கடன் வழங்கி வருகிறோம். விவசாயிகளுக்கு வேண்டிய உரம் சப்ளை செய்கிறோம். மேலும், சேவிங்ஸ் டிபாசிட், கரண்ட் டிபாசிட், பிக்சட் டிபாசிட் பெற்றுக் கொள்ளப்படும்.

சேதுராம்
காரியதரிசி.

யாகும். அங்குள்ளோர் குடும்பக் கட்டுப் பாட்டை ஆதரிக்கிறார்கள்.

அங்கு அடிக்கடி புயல் ஏற்படுவதால் பொதுவாக வீடுகள் யாவும் மரத்தாலோ அல்லது தகரத்தாலோ தான் கட்டப்பட்டிருக்கின்றன. தொழிலாளர்களுக்கு அரசாங்கம் 20 ரூபாய் வாடகையில் வீடு கட்டிக் கொடுத்துள்ளது. 15, 20 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த வீடுகள் தொழிலாளர்களுக்கே உரிமையாகி விடுகின்றன.

பயிர்களில் மிக நல்ல விளைச்சலைக் கொடுப்பது கரும்பு. அந்த மண், கரும்பு விளைவதற்கேற்ப அமைந்துள்ளது, சமீப காலத்தில் நெல் சாகுபடி செய்யத் தொடங்கியிருக்கிறார்கள். தேயிலை போன்றவற்றையும், சாகுபடி செய்யத் தொடங்கியிருக்கிறார்கள்.

அருமையான தீவு அது. தட்ப வெப்ப நிலை உதக மண்டலம் போன்றுள்ளது. கடலில் உட் கடைகள் இரண்டு கல் தொலைவுக்கு இருப்பதால் அலைகள் கரையில் இல்லை. ஆதலால் கடற்கரைப் பகுதிகளில் மீன் பிடித்தும் நீந்தியும் விடுமுறை நாட்களை கழிக்கிறார்கள். கடற்கரையோரமாக வசதியுள்ளவர்கள் குடிசைகளை அமைத்துக்கொண்டிருக்கிறார்கள்.

அங்கு வானொலி நிலையம் இருக்கிறது. மொரிஷியஸ் வானொலி கார்ப்பரேஷன் என்று இருக்கிறது. அதில் தமிழ் நிகழ்ச்சிகள் ஒலிபரப்பு செய்வதில்லை. தமிழ் நிகழ்ச்சிகள் மொரிஷியஸ் மக்கள் கேட்கும் வகையில் ஒலிபரப்ப தக்க ஏற்பாடு செய்யும்படி மத்திய அரசை நாம் வலியுறுத்த வேண்டும்.

### நாம் செய்யவேண்டியவை:

மொரிஷியஸ் தமிழ் மக்களுக்கு நாம் செய்ய வேண்டியவைகள் வருமாறு :—

1. வானொலியில் தமிழ் ஒலிபரப்ப வகை செய்யவேண்டும்.

2. தமிழ் இசைத் தட்டுகள், ரிகார்டர்கள் போன்றவற்றை அவர்களுக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

3. அங்கிருந்து தமிழ் நாடு வந்து கல்வி கற்க மாணவர்களுக்கு உதவிச் சம்பளம் வழங்க ஏற்பாடு செய்வது.

4. இங்கிருந்து கணவன் மனைவியாக உள்ள கருநாடக இசை நடனம் அறிந்தவர்களை அங்கே அனுப்பி, அக்கலையைப் பரவச் செய்வது.

5. தமிழ் ஆசிரியர்களை அனுப்பி வைத்து தமிழ் கற்க அவர்களை ஊக்கமளிப்பது.

6. தமிழ் பத்திரிகைகள், தமிழ் இசைகள் ஆகியவற்றைக் கேட்டும் இன்புறச் செய்ய ஏற்பாடு செய்வது.

மோரிஸ் தீவில் 72 ஆயிரம் வானொலிப் பெட்டிகளும், 11 ஆயிரம் டெலிவிஷன்களும் உள்ளன.

பிழைப்பு தேடி எங்கோ சென்று, தமிழ்ப் பேச்சு, பழக்கத்தை மறந்து கிடைக்கும் மோரிஸ் தாய் தமிழகத்துடன் மீண்டும் தொடர்பும் அதன் மூலம் மீண்டும் தமிழ வாழ்வையும் பெறுவதற்கு அம்மக்கள் பேருக்கம் காட்டுகின்றனர்.

## 'கிராம நலம்' சிறப்பு வெளியீடு

தமிழகத்திலுள்ள ஊராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் பெயர்கள் அடங்கிய மாவட்டவாரியான சிறப்பு வெளியீடு ஒன்று தயாராகிக்கொண்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறோம். அவ்வெளியீட்டில் ஊராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திலும் பொறுப்பேற்று நற்பணியாற்றிவரும் தலைவர்களின் பெயர்களுடன் தமிழக சட்டப் பேரவை, சட்ட மன்ற உறுப்பினர்களின் பெயர்கள் மற்றும் நாடாளுமன்ற, மாநிலங்கள் அவை உறுப்பினர்களின் பெயர்களும், தன்னகத்தே கொண்டு அது வெளிவரும்.

'கிராமநலம்' இதழிற்கு ஆண்டுச் சந்தா அனுப்பியுள்ள அனைவருக்கும் அச்சிறப்பிதழ் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். தனிப் பிரதி விலை ரூபாய் ஒன்று.



# எத்தனை கோடி வெற்றி ...

(மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி.)

'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத வெற்றி என்றே சங்கே முழங்கு' என்று பட்டி தொட்டி எல்லாம் முழக்கம் கேட்கும் நாளிது. கிராமப்புறங்களிலுள்ள மக்கள் ஒன்றுபட்டு உழைப்பதால் அரும்பெரும் செயல்களை எளிதில் நிறைவேற்றி வெற்றியைக் குவிக்கிறார்கள் என்பதை காண்கிறோம்.

அந்த வெற்றி வரிசையிலே இணைந்து, கண்ணையும் கருத்தையும் கவரும் வகையில் அறியதொரு சாதனையை சேலம் மாவட்டம் இடைப்பாடி ஊராட்சி ஒன்றியத்தினர் வெள்ளரி வெள்ளியில் செய்து முடித்திருப்பதை நெஞ்ச நிறைவோடு மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் பாராட்டியுரைத்திருப்பதை கட்டுரை வடிவில் வெளியிடுவதில் பெருமிதம் கொள்கிறோம்.

—ஆசிரியர்.

கிராமப்புறங்களில் இருக்கக்கூடிய மக்கள் ஒற்றுமையாக இருந்து காரியங்களைச் செய்தால் எவ்வளவு நல்ல ஆக்க வேலைகளைச் செய்து முடிக்க முடியும் என்பதை இடைப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பணிகள் நமக்கு மிகத் தெளிவாக காட்டுகின்றன.

பொறுப்புள்ள மிகவும் பயன்தரத்தக்க மற்றவர்களுக்கெல்லாம் வழி காட்டத் தக்கச் செயல்கள் இடைப்பாடி ஒன்றியத்தில் நடைபெறுகின்றன.

கோனேரிபட்டியில் பள்ளிக்கூட தோட்டம் அமைப்பதற்காக ஏறத்தாழ ஒன்றரை ஏக்கர் நிலத்தைத் தேர்ந்தெடுத்து செப்பனிட்டுச் சீராக்கப்படுகிறது. அதை மிஞ்சத்தக்கவகையில் நல்லஊருக்கு அருகில் இவ்வளவு காலமாக புறம்போக்கு என்று போடப்பட்டிருந்த நிலத்தை சீராக்கும் பணி மேற்கொள்ளப் பட்டுள்ளது. இந் நிலத்தின் மதிப்பு, இப்போதைய நிலவரப்படி ரூ. 75,000. சீர்படுத்தி, செப்பனிட்டு நல்ல தண்ணீர் வசதிகளை எல்லாம் ஏற்படுத்தி பயனுள்ளவகையில் பயிராக்கினால் மேலும் விலை மதிப்புள்ளதாக ஆக்க முடியும்.

### ஓராண்டுத் திட்டம்

இப்படிப்பட்ட அருமையான பூமி இவ்வளவு நாளாகப் பயன்படுத்தாமல் இருந்ததை மாற்றி, இன்றைக்கு இந்த முயற்சியில் ஈடுபட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியதாகும். முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளை ஒட்டி சமுதாயத்திற்கு நன்மைத் தரத்தக்க திட்டங்கள் என யாதாகிலும் செய்ய முடியுமா என்று நான் நினைத்து நினைத்து பார்த்து, இது போல் புறம்போக்கு நிலங்கள் வேண்டுமென்ற ஓர் எண்ணத்தைக் கொண்டு, அது போலவே சமுதாய நலக் கிணறு அமைக்க, கிராமப் புறத்திலே இருக்கின்ற விவசாயிகளுக்கு உழவுக் கருவிகள், மருந்து தெளிக்கின்ற கருவிகள், கல்லை உடைக்கின்ற கருவிகள், கிணற்றை ஆழப்படுத்துகின்ற கருவிகள் இப்படிப்பட்ட கருவிகளை எல்லாம் வாங்கித்தந்தால், அவர்கள் அதைப் பயன்படுத்தி மேலும் விளைச்சலைப் பெருக்க முடியும் என்கிற அந்த அடிப்படையிலேதான் ஓராண்டு என்ற அந்த திட்டத்தினை வெளியிட்டேன்.

ஓராண்டு திட்டத்தினுடைய உண்மையான நோக்கங்களை உணர்ந்த கிராம மக்களும் சீரணியினரும் தங்களை முழுமையாக ஈடுபத்திக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிந்து மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். வெள்ளரி வெள்ளி ஊராட்சி மன்றத்தின் சார்பாக 5 ஏக்கர் நிலத்திற்கு மேலாக தேர்ந்தெடுத்து, அதனைப் பக்குவப்படுத்தி, பயன்படுத்தி, பயனுள்ள நிலமாக மாற்றி, அதிலிருந்து வருகின்ற விளைச்சலைக் கொண்டு இந்த பகுதியில் இருக்கின்ற இந்தக் கிராமத்தைச் சார்ந்த பள்ளிக்கூடங்களில் படிக்கின்ற மாணவர்களுக்கான மதிய உணவினை ஒரு பொது இடத்திலே வைத்து, சமைத்து வழங்குகின்ற முயற்சி மிகச் சிறந்ததாகும். செப்பனிடப்பட்டு வரும் தோட்டத்தில் எந்தக் காரணத்தைக் கொண்டும் கூலிக்கு வேலை செய்கின்ற ஆட்களை தயவு செய்து அமர்த்தக்கூடாது.

இருப்பினும் நம்மாலே இயலாமல் இயந்திரங்களைக் கொண்டோ அல்லது மாடுகளைக் கொண்டோ செய்ய வேண்டும் என்ற வேலைகளைத் அப்படிப்பட்ட முறையில் செய்ய வேண்டும். அந்த முறையில் ஆசிரியர் பெருமக்களும், மாணவர்களும் சீரணியினரும் சேர்ந்து

அந்தத் தோட்டத்தை வளமுடையதாக ஆக்க வேண்டும். வெள்ளரி வெள்ளியிலுள்ள தோட்டம் மட்டுமல்லாமல் இன்னும் இடைப்பாடி ஒன்றியத்திலே ஓர் ஐந்தாறு இடங்களிலே இதுபோல் புறம்போக்கு நிலங்களைப் பயன்படுத்தி, பொது மதிய உணவு மையம் அமைப்பதற்கான, விளைச்சலை பெருக்குகின்ற திட்டங்களை மேற்கொள்ளப்பட்டு, நடைமுறையில் இருப்பதாக அறிந்து மகிழ்கிறேன்.

## முதலமைச்சரின் கருத்துரை

சில நாட்களுக்கு முன்னால் நம்முடைய மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் "கிராம நல" பத்திரிகைக்கு அவருடைய கருத்தை எழுதி அனுப்புமாறு கேட்டிருந்தோம். முதலமைச்சர் அவர்கள் ஓர் ஆய்வுரை கொடுத்திருக்கிறார்கள். "இந்த பத்திரிகைகளில் அமைச்சர்களுடைய படங்களையும், தலைவர்களுடைய படங்களையும் நடக்கின்ற விழாக்களில் அவர்கள் மேடையில் உட்கார்ந்து இருக்கின்ற காட்சிகளையும், படமாக்கி கொடுப்பதிலே எனக்கு மகிழ்ச்சி இல்லை. அங்கங்கே சீரணி நண்பர்கள் ஆற்றுகின்ற பணியினையும், பள்ளிக்கூட மாணவர்களும், ஆசிரியர்களும் செய்கின்ற காரியங்களையும் அவர்கள் நடவு நடுகின்ற காட்சிகளையும் அவர்கள் பாதை அமைக்கின்ற காட்சிகளையும் அவர்கள் பள்ளிக்கூடம் கட்டுகின்ற காட்சிகளையும், அவர் வேளாண்மைத் துறையில், ஈடுபட்டுச் செயலாக்குகின்ற காட்சிகளையும், படமாக்கி வெளியிட்டு பயன்பெற முடியும்" என்ற கருத்தை எழுதிக் கொடுத்திருக்கிறார்கள்.

அப்படி அவர்கள் எழுதிக் கொடுத்ததற்கு இன்றைக்கு நல்ல பல புகைப்படங்களை நான் பெற்றுச் செல்கின்ற வாய்ப்பு கிடைத்து இருக்கிறது. படங்கள் அடுத்த இதழில், நல்ல பல பணியாற்றுகின்ற அந்த சூழ்நிலையில் அறிஞர் அண்ணா அவர்களுக்குக் காணிக்கை ஆக்க ஒரு நல்ல அருமையான வாய்ப்பு கிடைத்திருக்கிறது. சென்னைக்குச் சென்றவுடன் அறிஞர் அண்ணா அவர்களைச் சந்தித்து, ஓராண்டு திட்டத்தில் இடைப்பாடி ஊராட்சி ஒன்றியத்தில் இன்னின்ன வேலைகளை எடுத்துச் செய்கிறார்கள். மனநிறைவு அளிக்கத்தக்கதாக இருக்கிறது. அவசியம் நீங்கள் அங்கு செய்து வருகின்ற காரியங்களை எல்லாம் போய் பார்த்து வர வேண்டும் என்று எப்படியாவது வாதாடி அவசியம் உங்களுக்கு ஒரு நாள் தேதியும் வாங்கிக் கொடுத்து இடைப்பாடி தொகுதிகளை எல்லாம் பார்க்கச் செய்வேன்.

இடைப்பாடி ஊராட்சி ஒன்றியத்தினுடைய தலைவர் அவர்கள் மிக சிறப்பாக செயலாற்றி வருகிறார்கள்.

சீரணியை, அறிஞர் அண்ணா அவர்கள் அதிகமாக நம்பிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் மூலமாக முயன்றால் முடியாதது ஒன்றுமில்லை என்று சொல்லத்தக்க அளவிற்கு அவர்களாலே காரியம் சாதிக்க முடியும் என்று நம்பியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட காரியங்களை ஆற்றுகின்ற அருமை நண்பர்களை வழி நடத்தி செல்லுகின்ற பொறுப்பை என்னாலே சரியாக நிர்வகிக்க முடியும் என்று கருதி, அமெரிக்காவிற்கு செல்லுகின்ற நேரத்திலே அந்த பொறுப்பை ஒப்படைத்தார்கள். திரும்பவும் என்னிடத்திலேயே கொடுத்து தொடர்ந்து செயலாற்றச் சொல்லியிருக்கிறார்கள்.

## ஏற்றம் காண உறுதி

மக்களுடைய நம்பிக்கையும், நல்லெண்ணமும், ஒத்துழைப்பும் நிச்சயமாக கிடைக்கும். எடுத்துக் கொண்டு இருக்கின்ற அந்தத் துறையில் என்னால் ஏற்றம் காண முடியும் என்று உறுதியாக நம்புகிறேன். இப்படிப்பட்ட பயன் உள்ள திட்டங்களைச் செய்திருக்கின்ற ஒன்றியங்களுக்கு நான் என்னால் ஆன எல்லா உதவிகளையும் செய்ய கடமைப் பட்டிருக்கிறேன்.

நான் பள்ளிக்கூடத்திலே ஆசிரியனாக இருக்கின்ற காலத்திலேயே நாமக்கல்லில் நகர் புறத்திலே இருக்கின்ற அத்தனை பேருக்கும் ஒரு பொதுவான இடத்திலே உணவு சமைத்து வழங்குகின்ற முயற்சியை மேற்கொண்டால், அதனால் ஆசிரியர்கள் படுகின்ற அல்லல், தொல்லைகள் எல்லாம் நீங்குமென்றும், மாணவர்களுக்கு நியாயமாக உணவு கிடைக்கும் என்கிற நம்பிக்கையில் ஊராட்சி ஒன்றியத்தின் துணையோடு, பொது மதிய உணவு மையம் ஒன்றை ஓர் ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்னரே என்னுடைய முயற்சி எடுத்து நிறுவினேன். ஆயிரம் மாணவர்கள் அதிலே உணவு உண்டு வருகிறார்கள். அன்று தொடங்கி இன்று வரை அது சிறப்பான முறையிலே நடைபெற்று வருகிறது. அந்த முயற்சியினுடைய விளைவாகத் தான் நாம், நம்முடைய நகரத்தின் பல்வேறு பகுதிகளிலும், தமிழ் நாட்டின் பல்வேறு பகுதிகளிலும், இப்படிப்பட்ட பொது மதிய உணவு மையங்களை நிறுவி வருகின்றோம்.




விவசாயிகளுக்கு வேளாண்மை ஆண்டு முழுதும்
வேலை வாய்ப்பளிக்கும் முழுநேரத் தொழிலும் அல்ல.

விவசாயத்தின் மூலம் கிடைக்கும்
வருமானமும் போதுமானதல்ல.

**கதரும் கிராமத் தொழில்களும்**

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலை வாய்ப்பளிக்கின்றன.

* கதர் - கிராமத் தொழில்களை ஆதரிப்பது
* உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்.

தமிழ்நாட்டுக் கதர் - கிராமத் தொழில் ஆயத்தின்
நிறுவனங்களில் உற்பத்தி செய்யப் பெற்ற
* கதர் * கதர்ப்பட்டு * சோப் * தேன் * செக்கெண்ணெய் * தோல் பொருள்கள் * பனைவெல்லம் * சர்க்கரை * மண்பாண்டம் * வார்ப்படங்கள் * பித்தளை, வெண்கலப் பாத்திரங்கள் * பனைப் பொருள்கள் — இன்னும்—

பற்பல கைநுட்பத் தொழில் பொருள்கள்
கதர்-கிராமத் தொழில் விற்பனை நிலையங்களிலும்
சென்னை "குறளகத்"தில் இயங்கும்
கதர்-கிராமத் தொழில் அங்காடியிலும்
விற்பனைக்கு உள்ளன.

வெளியீடு—

கதர்-கிராமத் தொழில் துறை,
2, சர் தேசிகாச்சாரி ரோடு, சென்னை-4.



சுத்தமான தேன்! சிறந்த உணவு!!
உயர்ந்த மருந்துப் பொருள்!!!

**மார்த்தாண்டம் தேனீ வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கம் லிட்.,**

**எண் 2050, கன்னியாகுமரி மாவட்டம்**

நாங்கள் சுத்தமான அக்மார்க்கு செய்த தேனும், தேன் எடுக்கும் கருவிகளும் மிதமான விலைக்கு சில்லறையாகவும் மொத்தமாகவும் ஆர்டர்களின்மேல் அனுப்பிக் கொடுக்கின்றோம்.

பர்ணபாஸ்,
தலைவர்.

அதேபோல் வெள்ளரி வெள்ளியில் ஏறத்தாழ 250 மாணவர்களுக்கு ஒரே இடத்திலே சமைத்து, உணவு அளிக்கின்ற முயற்சியினை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதனாலே ஆசிரியர்களுக்கு இருக்கின்ற தொல்லை குறையும். உணவு வீணாவது தவிர்க்கப்படும், மாணவர்கள் அனைவருக்கும் ஒரே மாதிரியான உணவு சத்துள்ள உணவு கிடைக்கும். இங்கே இருக்கின்ற அனைவருடைய முயற்சியினாலும், கோழிப்பண்ணை எல்லாம் வைத்து, வளர்த்து அதிலே இருந்து கோழி முட்டைகளையெல்லாம் எடுத்து, மாணவர்களுக்கே பயன்படுத்துவதாக அறிந்தேன். இன்றைக்குப் பள்ளிக்கூடத்திலேயே ஒரு கோழிப் பண்ணை வைத்து, அதிலே கிடைக்கிற முட்டைகளை எடுத்து, நல்ல மாணவர்களுக்குச் சத்துள்ள உணவாக கொடுக்கின்ற காட்சியைப் பார்க்கின்ற பொழுது, நாம் கல்வித் துறையிலே எந்த அளவிற்குக் கவனம் செலுத்துகிறோம் என்பதை எண்ணி, எண்ணி பெருமகிழ்வு அடைகிறேன். இந்த முட்டைகளை மாணவர்களுக்கு நல்ல முறையில் பயன்படுத்தத் தக்க வகையில் செயல்படுவது மிகச் சிறப்பான பணியாகும்.

### மதிய உணவிற்கு புதிய முறைகள்

இந்த இடைப்பாடி ஒன்றியத்திற்கு சத்து உணவு திட்டத்தையும் இந்த ஆண்டிலே அமுல்படுத்துவதற்குத் தொடர்புடைய அதிகாரிகளைக் கலந்து ஆவன செய்யப்படும். அது கிடைக்குமானால் மேலும் நல்ல பல உதவிகளும் கிடைத்து, இதுபோல கோழிப்பண்ணைகளை ஒவ்வொரு இடத்திலும் ஆரம்பிக்கின்ற வசதிகளையும், வாய்ப்பினையும் பெற முடியும். அதுவுமல்லாமல் அமெரிக்க 'கேர்' நிறுவனத்தார் மதிய உணவு சமைக்க மையம் அமைப்பதற்காக ஒரு திட்டத்தை இன்று வைத்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த திட்டத்தை மாவட்ட வாரியாக எடுத்துச் செயலாற்றுவதாக இருந்தது. ஆனால் அதை இப்பொழுது மாற்றி ஒவ்வொரு மாவட்டத்திலும் குறிப்பிட்ட சில இடங்களை எடுத்துக் கொண்டு அங்கே இந்தப் பொது மதிய உணவு மையத்தை அமைக்கிற ஒத்துழைப்பை அவர்கள் தருவதாக வாக்களித்திருக்கிறார்கள்.

அதாவது ஒரு ஐந்து அல்லது பத்து ஏக்கர் நிலம் இருக்கக்கூடிய பகுதியை அவர்களுக்குக் காட்டினால் அந்த நிலத்தில் கிணற்றை வெட்டிக் கொடுத்தால், அதிலே பம்பு செட்டுகளை அமைத்துக் கொடுப்பதற்கும் விவசாய கருவிகளை வழங்குவதற்கும் அவர்கள் தயாராக இருக்கிறார்கள். அப்படிக் கிடைக்கின்ற நெல்லினைக் கொண்டு, ஒரு மத்திய இடத்திலே உணவு சாலை அமைத்து விஞ்ஞான முறைப்படி உணவைத் தயாரித்து, தயாரிக்கப்பட்ட உணவுகளை நல்ல வாகனங்களிலே, வைத்து எல்லாப் பள்ளிக்கூடங்களுக்கும் அனுப்புகின்ற அந்த ஒரு திட்டம் அவர்களிடத்திலே நடைமுறையிலே இருக்கின்றது.

### துணைநின்று செயலாற்ற வேண்டும்

வெள்ளரி வெள்ளியில் எனக்கு நீங்கள் ஏராளமான நிலங்களை காட்டி இருக்கிறீர்கள். கிணறுகளைகூட வெட்டிவிட்டீர்கள். மின்சார இணைப்புக்களைகூட பொறுத்தி விட்டீர்கள். இனிமேல் செய்ய வேண்டியதெல்லாம் அந்த நிலங்களைச் சீர்திருத்தி, செப்பனிட்டுப் பயன்படுத்துவதற்காக கருவிகளையும், அதிலே இருந்து விளைச்சலை எடுத்து, ஒரு மத்திய இடத்திலே சமைப்பதற்கான முயற்சிகளையும் மேற்கொள்ளுவது தான்.

அப்படிச் செய்தால் இடைப்பாடி ஊராட்சி ஒன்றியம் முழுமைக்கும் ஒரே இடத்திலிருந்து உணவு சமைத்துக் கொடுக்க முடியும். அந்தத் திட்டத்தை இந்த இடைப்பாடி ஒன்றியத்திற்குத் தருவதற்கு நான் நிச்சயமாக முடிவு எடுப்பேன். இப்படிப்பட்ட இடங்கள் கிடைக்கவில்லையே என்றுதான் நாளெல்லாம் உள்ளபடியே கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறேன். இடைப்பாடியிலுள்ள உள்ள கல்வித் துறை அதிகாரிகளும், ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளும், மற்றும் ஊராட்சி மன்றத் தலைவர்களும் கலந்து பேசி, அதை எந்த இடத்திலே அந்த மதிய உணவுச் சாலையை அமைத்தால் சிறப்புடையதாக இருக்குமென்று கருதி, அதனை நீங்கள் அமைத்துக் கொடுத்தால், அதன் மூலமாக அவர்கள் உணவுகளை வழங்குகின்ற காரியங்களை எல்லாம் செய்து கொடுக்க தயாராக இருக்கிறார்கள். ஆகவே அதற்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

இந்த காரியங்கள் எல்லாம் நடைபெற வேண்டுமானால் அதற்கு எங்கோ இருந்து வருகின்ற உத்தரவு அடிப்படையாக இருந்த பயன் இல்லை. இவ்வளவு பெருந்தன்மையோடும் மற்ற நாட்டுக்காரர்கள் நமக்கு உதவி செய்ய

[18-ம் பக்கம் பார்க்க.[



# விலங்கின வளர்ப்பு—நகராட்சிகளின் பொறுப்புகள்

[டாக்டர் ஐ.டி. மந்திரமூர்த்தி, ஜி. எம். வி. சி., பி.வி. எஸ்ஸி. இயக்குநர், கால்நடை பராமரிப்புத் துறை, தமிழக அரசு]

நகர்ப்புறங்களில் மக்கள் தொகை மிகுதியாகி நெருக்கடியே நிறைந்திருக்கிறது. மக்களுக்குத் தேவைப்படும் பால் வழங்கும் பொருட்டு, கால்நடைகளும் நகரங்களின் மத்தியிலே கட்டிக் காக்கப்படுகின்றன. இந்தக் கால்நடைகளுக்கு ஏற்படும் நோய் எளிதாக மனிதர்களுக்கும் பரவ முடிகிறது. கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்களையும், அதற்கான தடுப்பு முறைகள் பற்றியும், அதற்காக நகராட்சிகள் மேற்கொள்ளவேண்டிய பாதுகாப்பு முறை குறித்தும் தெளிவாகக் கூறுகிறது இக்கட்டுரை—ஆசிரியர்.

அறிவியல் வளர்ந்து அனைத்தும் இயந்திர மயமாகி வரும் இந்நாளில் கூட கால்நடைகளின் முக்கியத்துவம் சிறிதும் குறையவில்லை. மாறாக சத்துணவு வழங்குவதில் இவைகளின்தேவை நாளுக்கு நாள் உயர்ந்துக்கொண்டே போவதை கண்கூடாகக் காண்கிறோம். பால், இறைச்சி, முட்டைபோன்ற கால்நடை உணவுப் பொருட்கள் சத்துணவுகளாக விளங்குவது மட்டுமின்றி தானிய உணவுப் பற்றுக்குறையை ஓரளவு நிவர்த்தி செய்வதற்கும் உறுதுணையாக இருக்கிறது. நம் பாரத நாட்டில் விவசாய வேலைகளுக்கும், உரத்திற்கும் கால்நடைகளின் இன்றியமையாமை இன்னும்பல நூற்றாண்டுகளுக்கு நீடித்திருக்கும் என்பதில் ஐயமில்லை. கால்நடை அபிவிருத்தியிலும் அவைகளின் சுகாதாரத்திலும் கிராமங்கள் அதிகப்பங்கு வகிக்கின்றன என்பது உண்மையே, இருப்பினும் பல கிராமங்களை மையமாகக்கொண்டு விளங்குகின்ற நகர்ப்புறங்களிலும் கால்நடை பராமரிப்புப் பணிகள், குறிப்பாக கால்நடைகளின் நோய்கள், அவற்றின் சிகிச்சை, தடுப்பு, இறந்த கால்நடைகளை அப்புறப்படுத்துதல், பால், இறைச்சி இவைகளின் ஆய்வு, கால்நடை சந்தைகள், பால் வற்றிய பசுக்களின் பராமரிப்பு, கால்நடை வளர்ச்சி ஆகிய பல்வேறு பணிகளிலும் நகராட்சி மன்றங்களின் பொறுப்புகள் பற்றி சற்று ஆராய்வோம்.

**கால்நடைகளிடமிருந்து மனிதர்களுக்கு பரவும் நோய்கள்:**

இருமிகளாலும், நுண்ணுயிர்களாலும் தோன்றும் ஒரு சில நோய்கள கால்நடைகளை முக்கியமாக தாக்குவது மட்டுமின்றி மனிதர்களுக்கும் பரவலாம். இவைகளில் நாய்வெறி நோய் மாடுகளின் க்ஷயரோகம் (Tuberculosis) ப்ரூசில்லா நோய் அடைப்பான், கோமாரி மாட்டம்மை போன்ற நோய்கள் முக்கியமானவைகளாகும்.

வெறிகொண்ட நாய்கள் மனிதர்களைக் கடிக்கும் பொழுது மனிதர்களுக்கு ஹைட்ரோ போபியா என்ற வெறிநோய் உண்டாகி, மனிதனும் நாய்போல் குலைத்து, பாடுபட்டு இறந்துவிட நேரிடுகிறது. ஒருமுறை நோய் கண்டுவிட்டால் அதை மருந்துபோட்டு குணப் படுத்தமுடியாது. மனிதன் இறப்பது நிச்சயம். நகராட்சி பகுதிகளில் இதற்குரிய தடுப்பு நடவடிக்கைகள் அனைத்தும் எடுத்துக்கொள்ள வேண்டும்.

1. நகரிலுள்ள நாய்களுக்கு லைசென்ஸ் வழங்குவதோடு அவ்வாறு லைசென்ஸ் இல்லாத நாய்களை பிடித்து அழித்துவிடுதல் நலமாகும். லைசென்ஸ் வழங்கும் எல்லா நாய்களுக்கும் வெறிநாய் தடுப்பு மருந்து போட்ட பிறகுதான் லைசென்ஸ் கொடுக்கவேண்டும்.

2. ஏதேனும் ஒரு நாய்க்கு வெறிநோய் வந்திருக்கிறது என்று சிறிது தெரிந்தாலும் உடனே கால்நடை மருத்துவருக்கு செய்தி அனுப்பி தக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

3. இத்தகைய நாய் யாரையேனும் கடித்திருந்தாலும் உடனே அவர்களுக்கு தடுப்பு ஊசிகள் போட ஏற்பாடு செய்ய வேண்டும். இக்கொடிய நோயை தடுப்பதில் கால்நடை மருத்துவருடன் நகராட்சி மன்றங்களின் ஒத்துழைப்பு மிகத் தேவை.

க்ஷயரோகம் கொண்ட பசுவிலிருந்து கறக்கும்பாலை நன்கு காய்ச்சாமல் அருந்துவது, இத்தகைய

நாய் கண்ட மாடுகளுடனே அதிகநேரம் இருப்பது போன்ற காரணங்களினுல் மனிதர்களுக்கும் கூயரோகம் பரவலாம். இத்தகையமாடுகளை தனியே அப்புறப்படுத்தி, அவைகளை பரிசீலித்து, வியாதியற்றவைகளை தூய்மையுடன் நன்ருகப் பேணி, சுற்றுப்புறங்களை தூய்மையுடன் வைத்துக்கொள்வது இன்றியமையாததாகும்.

'ப்ருசில்லோசிஸ்' என்ற மாடுகளைத் தாக்கும் ஒருவித நோயும் மனிதர்களுக்கு வரலாம். இதனுல் விட்டு விட்டு அடிக்கும் காய்ச்சல், உடல்வலி, மூட்டுகளில் வலி போன்ற தொந்தரவுகள் ஏற்பட்டு, சில சமயங்களில் இறப்பும் நேரிடும். இத்தகைய நோய்கண்ட மாடுகளையும் தனிப்படுத்தி கால்நடை மருத்துவரின் உதவிகொண்டு தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டும்.

மாடுகளுக்குத் தோன்றும் அடைப்பான் நோய்க் கிருமிகளும் மனிதர்களை தாக்குவதால் உடல் புண் ஏற்படும். எனவே அடைப்பான் நோயினுல் இறந்த மாடுகளையும் ஆடுகளையும் கிருமிநாசினிகள் தூவி ஆழப் புதைத்துவிட வேண்டும். அவை தவிர மாட்டு அம்மை, கோமாரி ஆகிய நோய்கள் கண்ட மாடுகளை கையாளும்போது ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். இந்நோய்கள் கண்ட பசுகளிடயிருந்து கறக்கும் பாலை நன்கு காய்ச்சிக் குடிக்க வேண்டும். கால்நடைகளுக்குத் தோன்றும் ஒருசில குடற் பூச்சிகள், உண்ணிகள், பேன்கள் மனிதர்களுக்கும் பரவலாம். இதற்கு தக்க தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

**கால்நடைகளின் சிகிச்சை:**

மனிதர்களைப்போலவே கால்நடைகளுக்கு தோன்றும் உடற்கூறு நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதிலும் நகராட்சி களுக்கு பெரும் பங்கு உண்டு. கால்நடை மருத்துவமனை நகரில் நன்முறையில் செயல்பட்டு மக்களுக்கு தேவை யான சேவை செய்யவேண்டுமானுல் அங்குள்ள நக ராட்சிகள் அக்கால்நடை மருத்துவமனையின் வளர்ச்சியில் ஊக்கமும் ஆக்கமும் எடுத்துக்கொள்ளவேண்டும்.

**கால்நடை அபிவிருத்தி:**

நகரில் பெரும்பாலும் பாலுக்காக மாடுகள் வளர்க்கப் படுகின்றன. அவற்றின் தரத்தை உயர்த்துவதில் நாமெல்லோரும் ஈடுபடவேண்டும். தரம் உயர்த்தப்பட வேண்டுமானுல் முதன்முதலில் தரமற்ற காளைகளைக் காயடித்து குறைத்துவிடவேண்டும். பிறகு இம்மாடுகளை உயர்ரகப் பொலிக்காளைக்கொண்டு, செயற்கைமுறையில் கருத்தருவித்தல் நலமாகும். இதனுல் பால் கொடுக்கும் அளவை பெருக்கலாம். பெரும்பான்மையான நகரங்களில் செயற்கை இனமுறை வளர்ச்சிநிலையங்கள் பணிபுரிகின்றன. இந்நிலையங்களின் சேவையையும் நன்கு பயன்படுத்திக்கொள்ளல் வேண்டும். மேலும் நகர் வாழ்மக்கள் தங்கள் வீடுகளில் கோழிகள் வளர்க் கவும், ஆடுகளை அதிகரிக்கவும், பன்றிகளைப் பராமரிக்கவும், பலவித உதவிகள் அளிக்கப்படுகின்றன.

மாட்டுப்பாலின் மூலம் பல நோய்கள் மனிதர்களுக்கு பரவுவதால் தக்க கால்நடை வைத்தியரைக் கொண்டு மக்களுக்கு விநியோகிக்கப்படும் பாலை பரிசோதனை செய்து, அதன்பிறகு வழங்கும்படி செய்யவேண்டும். நகராட்சிகளின் கீழ் உள்ள பால்பண்ணைகளையும்



கால்நடை மருத்துவர்களின் கண்காணிப்பில் இருக்கும் படி செய்தல்வேண்டும். பாலில் கலப்படம் ஆகாதவாறும் பார்த்துக்கொள்ளவேண்டும்.

**இறைச்சி ஆய்வு:**

நகரில் வாழும் மக்களுக்கு வழங்கப்படும் இறைச்சியை யும் தக்க கால்நடை மருத்துவரின் பரிசோதனைக்குப்பிறகே விநியோகிக்கப்படவேண்டும். ஏனென்ருல் இறைச்சியின் மூலம் நோய்கள் மனிதர்களுக்குப் பரவும். ஆடு மாடு இறைச்சிக்காக வெட்டுவதற்கு முன்பும் வெட்டிய பிறகும் கால்நடை மருத்துவர்களால் பரிசோதனை செய்யப்படுகின்றன. மனிதர்கள் உண்ணத்தகாதது என்று ஒதுக்கப்படும் இறைச்சியை விநியோகம் செய்யாதவாறு பார்த்துக்கொள்ளல் மிகவும் அவசியம்.

நகராட்சிகளுக்கு போதிய பணவசதி இருந்தால் பால் வற்றிய பசுக்களுக்கு தனியே ஒரு பண்ணை அமைத்துப் பராமரிக்கலாம். கால்நடைகள் வயதாகி அவை பயனற்று போகும் காலத்தில் அவற்றைக் கருணை உள்ளம் கொண்டு காக்கவேண்டுமானுல் கால்நடைப் பட்டிகளை நிறுவி அவை களில் இத்தகைய கால்நடைகளைப் பராமரிக்கலாம். மாடுகளும், மற்றைய பிராணிகளும் தெருக்களில் திரிந்து போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் செய்ய இந்த ஏற்பாடு வழி செய்கிறது. நகரில் பணவசதி படைத்தவர் களும், இதற்கென நன்கொடைகள் வழங்கி இத்தகைய கால்நடைப் பட்டிகளைப் பராமரிப்பது ஓர் சிறந்த போற்றற் குரிய செயலாகும்.



# வெற்றியின் அழைப்பு

ராம்தா சின்னஞ் சிறிய கிராம மாகும்.

சம்பல்பூர் மாவட்டத்திலுள்ள பராபலி வட்டாரத்திலிருந்து மூன்றுகல் தொலைவிலுள்ள ஊர் அது.

ராம்தாவில் முன்னூறு வீடுகள் உள்ளன. இவ்வூர் மக்களில் பெரும் பாலோர் குலுதா வகுப்பு மக்கள் ஆவார்கள். குலுதா வகுப்பு மக்கள் விவசாயத்தில் கெட்டிக்காரர்கள் என்பது சம்பல்பூர் மாவட்டத்திலுள்ள அனைவரும் அறிவர். அது மட்டுமல்ல, சம்பல்பூர் மாவட்டத்திலுள்ள சாகுபடி நிலத்தில் முக்கால் பகுதி நிலத் துக்குச் சொந்தக்காரர்கள் குலுதா வகுப்பு மக்கள்தாம்.

1960–ம் ஆண்டு வரை ராம்தாவில் ஒரு போகம் மட்டும் சாகுபடி செய் வார்கள். குறுகிய கால பயிர் பருவத்தில் மட்டும் நெல் சாகுபடி செய் வார்கள். பாசனத்திற்கு மழை நீரையே நம்பியிருந்ததால் அவர்கள் பெரும் அவதிக்கு ஆளாகவேண்டி யிருந்தது. மழை பெய்துவிட்டால் நீண்டகாலப் பயிர் பருவத்திலும் கோதுமை, நெல், நிலக்கடலை உருளைக் கிழங்கு முதலியவற்றை பயிர்செய்ய முடியாமல் தவித்தார்கள். பெரும் பகுதி சாகுபடி நிலங்களுக்குப் பாசன வசதிகள் மிகவும் தேவைப்பட்டன.

### வெற்றிக்கு நல்வரவு

திரு. செலுபிரதான் ஆர்வத் துடிப்புள்ள அவ்வூர் விவசாயி. அவர்தான் வேளாண்மைத்துறையில் புத்தம்புதிய முறைகளை கையாள முன் வந்தார். ராம்தாவில் திரு செலுபிர தானுக்குப் பதினைந்து ஏக்கர் நிலம் உள்ளது. 1967-ஆம் ஆண்டில் உயர் ரக நெல்லான ஐ. ஆர். 8 போன்ற ரக நெல் ரகங்களைப் பயிரிட்டார்.

அண்டையிலுள்ள வட்டாரங்களில் நல்ல முறையில் சாகுபடி செய்பவர் களைத் சந்தித்து அவர்கள் சாகுபடி செய்வதில் கையாளும் புதிய முறை களை அறிந்தார், செலுபிரதான். மேலும் அவர் உள்ளூரிலேயே உள்ள கிராம நல ஊழியரிடம் தமது புதிய சாகுபடி முறைக்கு உதவும்படி கேட் டுக்கொண்டார். பின்னர் செலுபிர தான் பாரபல்லி வட்டார வளர்ச்சி அதிகாரியைச் சந்தித்து, விவசாய அதி காரி ஒருவரை அனுப்பி தொழில் நுட்ப ஆலோசனை அளிக்கும்படி வேண்டிக் கொண்டார்.

செலுபிரதான் விருப்பத்திற்கிணங்க விவசாய அதிகாரியும், கிராம நல ஊழியரும் ராம்தாவுக்குச் சென்று, ஐ. ஆர். 8 மற்ற புதிய நெல் ரகங் களைப் பற்றி விவசாயிகளுக்கு எடுத் துரைத்தார்கள். இரசாயன உரங்களைப் பயன்படுத்தவேண்டிய அவசியத்தை யும் விளக்கினுர்கள்.

இரசாயன உரங்களை எப்படி, எப் போது பயன்படுத்துவது என்பதைப் பற்றிய விவரங்களை எல்லாம் செலு பிரதானுக்கு கிராம ஊழியர் எடுத் துரைத்தார். ஆகவே, 1967-ம் ஆண் டில் ஒன்றரை ஏக்கர் நிலத்தில் ஐ. ஆர். 8 நெல் ரகத்தைப் பயிரிட்டார் செலுபிரதான். ஆனுல் பயிர்களுக்குத் தேவையான இரசாயன உரங்களை வாங்குவதில் செலுபிரதானுக்கு பல இடையூறுகள் ஏற்பட்டன.

### கைமேல் பலன்

செலுபிரதான் ஒவ்வொரு ஏக் கருக்கும் ரூ. 360 வரை செலவிட்டார். ஓர் ஏக்கருக்கு இவ்வளவு செல விடுவது . பெருந்தொகைதான் எனி னும் செலுபிரதான் தயங்கவில்லை. அதன் விளைவாக கைமேல் பயன் கிடைத்தது.

மிகு விளைச்சல் தரக்கூடிய உயர்ரக வித்துகளைப் பயன்படுத்தியதால் விளைச் சலும் மிகுதியாக இருந்தது. அந்தப் பக்கத்தில் யாருக்கும் செலுபிரதா னுக்கு விளைந்ததுபோல் விளைச்ச லில்லை. ஓர் ஏக்கர் நிலத்திற்கு மட்டும் 75 மணங்கு நெல் விளைந்தது.

செலுபிரதானின் கடின உழைப்பும் புதிய முறையில் சாகுபடி செய்ய வேண்டும் என்ற ஆர்வமும் வெற்றி யின் அடிப்படையாகி விட்டன. சுற்றுப் புற வட்டாரங்களுக்குச் செலுபிரதான் மிகுவிளைச்சலுக்கு வழிகாட்டியாகிவிட் டார். அவரை குலுதா வகுப்பினர் பின்பற்றுவதில் தயக்கம் காட்டுவார் களா என்ன? வெற்றியின் அழைப்பை விரும்பாதாருண்டோ?

**க**ல்லூரிகளில் படித்துப் பட்டங்கள் பல பெற்றவர்கள் அலுவலகங்களில் அதிகாரிகளாகவும், விஞ்ஞானிகளாகவும்தான் பணியாற்ற வேண்டுமா? வேளாண்மையில் கவனம் செலுத்தி வயல்களில் இறங்கி, நிலங்களை உழுது, உணவு உற்பத்தியைப் பெருக்கலாகாதா?

ஏன் முடியாது? ஏன் கூடாது? இக் கேள்விகளுக்கு விடையளிக்கின்றனர் உத்தரப்பிரதேசத்திலும், பஞ்சாபிலும் உள்ள படித்து பட்டம் பெற்று, முன்னோடிகளாகத் திகழும் இளைஞர்கள், அவர்கள்கைப் பட்ட இடங்களெல்லாம் தங்கங்களாக மாறுகின்றன.

இவ்விரு மாநிலங்களிலுமுள்ள சில படித்த இளைஞர்கள் தமது அலுவலகப் பதவிகளை உதறித் தள்ளிவிட்டு, வேளாண்மையில் ஈடுபட்டுள்ளனர். அவர்கள், தங்களது வயல்களை அமைத்துள்ள விதமே அலாதி அழகைத் தருகிறது. நவீன முறைகளைக் கையாண்டு, புதிய உத்திகளைப் புகுத்தி, மிகுவிளைச்சல் தானியங்களை விளைவிக்கும் பொருக்கு விதைகளைக் கையாண்டு, பெருமளவில் உற்பத்தி செய்து குவிக்கின்றனர்.

### விவசாயமே மூச்சு

இப்பகுதி வாழ் மக்களுக்கு இதே ஒரு பேச்சாக இருக்கிறது. அரசுப் பதவிகளிலிருந்து ஓய்வு பெறவிருக்கும் சில பெரிய அதிகாரிகள்கூட தமது வேலையைத் துறந்துவிட்டு, இப் பட்டதாரி உழவர்கள் போன்று, வேளாண்மையில் தீவிரமாக ஈடுபடலாமா வென்று யோசித்து வருகின்றனர். அந்த நிலைக்கு, இந்த இளைஞர்களின் விவசாய முறை, அதன் வெற்றி அவர்களைக் கவர்ந்துள்ளது.

இக் கூற்றுகளுக்குச் சான்றாக இருபத்து ஐந்து வயதுள்ள திரு லலித் ஓபிராய் அவர்களைக் கூறலாம். டில்லி பல்கலைக் கழகத்தில் பயின்று, 1966-ம் ஆண்டில் எம்.ஏ. பட்டம் பெற்றவர் இவர். பட்டம் பெற்ற உடனேயே அவர், ருத்ராபூர் என்ற ஊருக்குச் சென்று, கோதுமைப்பயிர் விவசாயத்தில் முனைந்து விட்டார்.

இமாலய அடிவாரத்தில், அவரது கோதுமைப் பயிர் நன்கு செழித்து வளர்ந்து, கண்களுக்கு விருந்தாய் காட்சியளிக்கிறது.

### எதையும் துறக்கத் தயார்

இன்னொரு இளைஞர்; பெயர் திரு லட்சுமி கன்னா. இவர் லலித் ஓபிராயின் வயல்களையும், செழிப்புற வளர்ந்துள்ள பயிர்களைக்கண்ட பிறகு, இவரும் வேளாண்மையில் ஈடுபட்டுவிட்டார். இவர் ஒரு கல்லூரியில் துணைப் பேராசிரியராகப் பணியாற்றியவர். அப்பதவியை, வேளாண்மைக்கென உதறித் தள்ளிவிட்டார்.

திரு லலித் ஓபிராய், 70 ஏக்கர் நிலத்தில் விவசாயத்தைத் தொடங்கினார். பிறகு இன்னொரு 200 ஏக்கருக்கு பண்ணையை விரிவுபடுத்தினார். பாசன வசதியைத் தாமே ஏற்படுத்திக் கொண்டார். வளர்ச்சி அதிகாரிகளுடன், முறையாக அவ்வப்போது தொடர்புகொண்டு அவர்களது ஆலோசனைகளைக் கேட்டு, விவசாயத்தில் வெற்றி யடைந்துவருகிறார்.

"எது எவ்வாறிருப்பினும், விவசாயத்தில் விதைகள் தாம் மிகவும் முக்கியம்" என்கிறார் ஓபிராய். விவசாயக் கல்லூரியிலுள்ள பொருக்கு விதை நிலையத்திலிருந்து விதைகளைப் பெறுகிறார் இதன் காரணமாக, நெல்லும், கரும்பும், பன்மடங்கு பெருகியுள்ளது. சென்ற ஆண்டுகளை விட, இவ்வாண்டு கூடுதல் உற்பத்தி கிடைக்கும் என கூறுகிறார் இவர்.

### ஒட்டு ரக விதைகளே எங்கும்.

பெரிய, பெரிய பண்ணைகளில், மட்டுமே ஒட்டு ரக விதைகள் பயன்படுத்தப்படுகின்றன. என்று கூறுவதற்கில்லை. சிறிய நிலங்களின் உரிமையாளர்கள்கூட ஒட்டு ரக விதைகளையே கையாள்கின்றனர். ரமேஸ்வர்பூர் கிராமத்தில் எவருக்கும் 15 ஏக்கர் நிலம்கூட கிடையாது; குறைவாகத்தானிருக்கிறது. ஆனால் அனைவருமே இந்தரக விதைகளையே பெருமளவில் உபயோகிக்கின்றனர். கடந்த 12 திங்கள் காலத்தில், குறைந்தது 20 குழாய்க் கிணறுகள் இவ்வூரில் தோன்றி விட்டன.

1930-ம் ஆண்டில் விவசாயப் பட்டம் பெற்ற திரு மான்சிங், 16 ஆண்டுகள் விவசாயமே செய்து வந்தார். ஆனால், அவருக்கு அதில்





பெரும் தோல்வியே கிடைத்தது. உடைந்த உள்ளத்தோடு, வேலையைத் தேடி, நகருக்கு புறப்பட்டுவிட்டார் அவர்.

### நாட்டுப்புறத்திற்குத் திரும்பினர், நகருக்குச் சென்றவர்.

பதினைறு ஆண்டுகளாக, எவ்வகை பூச்சிகள், அவரது பயிரை நாசமடித்தனவோ, அவற்றை ஒழிக்க ஒரு பூச்சிகொல்லி கண்டு பிடிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிந்த திரு. மான்சிங், வேலையை விட்டு விட்டு கிராமத்திற்கு மீண்டு, வேளாண்மையில் புகுந்தார். சென்ற ஆண்டு நெற் பயிர் செய்தார். இவ்வாண்டு கோதுமைப் பயிர் செய்கிறார்.

இவர்களெல்லாம், விவசாயத்தில் இவ்வளவு ஆர்வம் காட்டி, உழைப்பதற்கு காரணம் என்ன? 'ஒட்டுரக விதைகளே' என்பதுதான் அதற்குரிய தகுந்த பதில்.

### இறைவனும் விஞ்ஞானியாகி விட்டார்

பஞ்சாப் மாநிலத்தில் தான் பொறுக்குரக விதைகளின் முழு வெற்றியையும் காண முடிகிறது. வலிவு மிக்க அவ் விவசாயிகள் "மெக்சிகன் கோதுமை" விதைகளைக் கையாண்டு, உற்பத்தியைப் பன்மடங்கு பெருக்கி, பயன் அடைந்துள்ளனர். இங்குள்ள 1,700,000 ஏக்கர் நிலங்களில், மெக்சிகன் கோதுமையானது 900,000 ஏக்கர் நிலங்களில் பயிரிடப்படுகிறது.

"இப்போதெல்லாம் பஞ்சாப் மாநிலத்தில் நீண்டு உயர்ந்த பயிர்களைக் காணமுடியாது" என்று ஒரு முதியவர் கூறுகிறார். எல்லாப் பயிர்களும் ஒரு சீராக வளர்ந்துள்ளன. கதிர்களெல்லாம் மொத்தமாகவும், தானியங்களெல்லாம் கனமாகவும் இருக்கின்றன. உரிய நேரத்தில் பெய்த மழையும் இதற்கொரு காரணம் "ஏன், கடவுள் கூட ஒரு விஞ்ஞானி யாகி விட்டார்" என்று ஒரு விவசாயி கூறுகிறார்.

# நகருக்குச் சென்றவர் கிராமத்திற்குத் திரும்பினர்

"ஜாவோதி" என்ற கிராமத்திலுள்ள உழவர்கள், பிறரது நிலங்களையும் குத்தகைக்கு எடுத்துக் கொண்டு, கோதுமைப் பயிர் செய்கின்றனர். தங்களது நிலம் மிகவும் சிறியதாக இருப்பதே இதற்கொரு காரணம் என்றாலும், விவசாயத்தில் தற்போது போதிய ஆதாயம் கிடைப்பதே இதன் உள் நோக்கம் என்று தெரிகிறது.

### விதையைக் கண்டுபிடித்த பெருமகன்

இந்த மெச்சிகன் கோதுமை ரகத்தைக் கண்டு பிடித்து, உழவர்களுக்கு உதவிய அந்த உத்தமர் யார்? அவர்தான் டாக்டர் நார்மன். இ. போர்லாக். இவர்தான் மெக்சிகன் கோதுமை ரகத்தையும், இன்னபிற உயர் ரக விளச்சல் விதைகளையும் கண்டறிந்தவர்.

"தெராய், லூதியானு ஆகிய இடங்களில் இந்த ரக கோதுமைப் பயிரைக்கண்டு மகிழ்வுற்றேன். மெக்சிகோவில் 15 ஆண்டுகளில் செய்தனவற்றை, இங்கு 3 ஆண்டுகளில் செய்து விட்டனர்" என்று பெருமையுடன் கூறுகிறார், டாக்டர் நார்மன் இ. போர்லாக்.

# சீரிய பணியாற்றும் நகராட்சிகள்

## அருப்புக்கோட்டை நகராட்சி

(இராமநாதபுரம் மாவட்டம்)

அருப்புக்கோட்டை நகரில் 1886-ம் ஆண்டில் 12 நியமன உறுப்பினர்களுடன் ஒரு யூனியன் போர்டு உருவாக்கப்பட்டு அதுவே பின்பு 1931-ல் அருப்புக்கோட்டை பஞ்சாயத்து போர்டு என்று பெயர் மாற்றப்பட்டது. 1948-ல் மூன்றாவது நிலை நகராட்சியாகவும் 1953-ல் இரண்டாவது நிலை நகராட்சியாகவும் உயர்த்தப்பட்டது. 24 வட்டங்களையும் 28 உறுப்பினர்களையும்கொண்டு இயங்கி வரும் இந்நகராட்சி அண்மையில்நடந்தநகராட்சிகள் தேர்தலுக்கு பின்பு 28 வட்டங்களும் 32 உறுப்பினர்களும் கொண்டே செயலாற்றிவரும். இந்நகராட்சி 6 சதுர மைல் பரப்பும், 1961-ம் ஆண்டு மக்கள் கணைப்பின்படி 50213 மக்கட் தொகையும் கொண்டதாகும்.

ஏழைக் கைத்தறி நெசவுத் தொழிலாளர்கள் பெரும்பான்மையினராக உள்ள இந் நகராட்சியின் மொத்த ஆண்டு வருமானம் சுமார் 8 லட்சம் ரூபாய்களாகும்.

### இலவச பாட நூல்கள்

அருப்புக்கோட்டை நகராட்சி நகர மக்களுக்கு செய்து வரும் அரும்பணிகள் பலவாகும். சுமார் பன்னிரண்டு மைல் நீளத்திற்கு சிமெண்ட் காங்கிரீட் சாலைகளும் ஐந்தரை மைல் நீளமுள்ள தார்ச்சாலைகளும் ஆறரை மைல் நீளத்திற்கு கப்பிச் சாலைகளும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்நகராட்சி, 5 தொடக்கப் பள்ளிகளையும், உயர் தொடக்கப்பள்ளி ஒன்றையும், உயர்நிலைப்பள்ளி ஒன்றையும் நிறுவி மக்களுக்கு கல்விப் பணியாற்றி வருகிறது. ஏழைக் குழந்தைகளுக்கு ஆண்டுதோறும் இலவசமாக சிலேட்டுகளும் புத்தகங்களும் வழங்கப்படுகின்றன. 1966-67-ம் ஆண்டில் எஸ்.எஸ்.எல்.சி. பொதுத் தேர்வில் நகராட்சி உயர்நிலைப் பள்ளியிலிருந்து அனுப்பப்பட்ட 111 மாணவர்களில் 102 பேர் தேர்வு பெற்றனர். இது அனுப்பப்பட்ட மாணவர்களில் 92 சத வீதம் ஆகும். குடிதண்ணீர் தேவைகளுக்காக 6 இடங்களில் ஆழக் குழாய்க் கிணறுகள் அமைக்கப்பட்டு குடிநீரானது நான்கு டிராக்டர்கள் மூலம் நகர மக்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது. 962 மின்விளக்குகளும், 127 டியூப் லைட்டுகளும், 30 மெர்குரி லைட்டுகளும் அமைக்கப்பட்டு இரவு நேரங்களில் நகருக்கு ஒளியூட்டப்படுகிறது. மக்களின் பொழுதுபோக்கிற்காகவும், குழந்தைகள் விளையாடவும் 4 இடங்களில் பூங்காக்கள் அமைக்கப்பட்டு அவைகளில் வானொலி பெட்டிகளும் வைக்கப்பட்டுள்ளது.

### கலவை உரத் தயாரிப்பில் முதல் பரிசு

மக்களுக்கு வைத்திய வசதிகள் அளிப்பதற்காக சித்த மருத்துவ மனை ஒன்றும் மூன்று மகப்பேறு மற்றும் குழந்தைகள் நல இல்லங்களும் நகராட்சியினரால் நடத்தப்பட்டு வருகின்றன. மகப்பேறு மருத்துவ மனை ஒன்று கட்டப்பட்டு அரசினருக்கு வழங்கப்பட்டுள்ளது. கலவை உரத் தயாரிப்பில் தமிழகத்திலேயே இந் நகராட்சி முதன்மை பெற்று அரசினரால் சுழற்கோப்பையும் வழங்கப் பெற்றுள்ளது.



இந் நகராட்சியின் முக்கிய தேவைகளில் ஒன்றான குடிநீர் வழங்கும் திட்டத்திற்கு 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிற்கு அரசினரின் ஒப்பளிப்பு பெற்று அடிக்கல் நாட்டப்பட்டு திட்ட வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன.

துப்புரவுப் பணியாளர்களின் குடியிருப்புக்காக ரூ. 60,000 மதிப்பீட்டில் ஏற்கனவே 20 குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளன. மேலும் 10 வீடுகள் கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுக்கொண்டுள்ளன.

இந் நகர மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வாராந்திர சந்தை தினசரி மார்க்கெட் மற்றும் சலவைத் துறை அமைக்க நகராட்சியினரால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

## நெல்லிக்குப்பம் நகராட்சி

1968-ம் ஆண்டு மார்ச் திங்களில் பணியாற்றியுள்ளவை.

போக்குவரத்துக்கள் :

18 சாலைகளின் பராமரிப்புக்காக .. ரூ. 8404·70

மூன்று இடங்களில் மதகுகள் கட்ட ரூ. 1564·65 மார்ச்சு மாதத்தில் செலவு செய்யப்பட்டுள்ளது.

தண்ணீர் வழங்குதல்:

ரூ. 326·70 செலவில், இரண்டு இடங்களில் உள்ள கைப்பம்புகளின் பிளாட்பாரமும், சோக்பிட் அமைக்கப்பட்டது.

மூலதன வேலைகள்:

போக்குவரத்து :

அரசால் 1967-68-ம் ஆண்டில் செய்ய அனுமதிக்கப்பட்ட இரண்டு தார் சாலை வேலைகளுக்காக கீழ்க்கண்டவாறு செலவு செய்யப்பட்டுள்ளது.

| | ரூ. பை. |
|---|---|
| 1. கே. எஸ். ஏ. ஆர். ரோட்டில் இருந்து கள்ளச்சேரி வரை தூசு இல்லாத தளமுள்ள தார் சாலை போட | 3,755·75 |
| 2. முஸ்லீம் கருமார வீதியிலிருந்து வாணுள் வீதி வரை தூசு இல்லாத தளமுள்ள தார் சாலை போட | 3,978·75 |
| | 7,73,4·50 |


FDSEID 960



நாட்டுக்கு உணவளிக்க உதவும்
உழவுப் பெருங்குடி மக்களுக்கு
பன்னெடுங்காலமாய் பணிபுரிவது பாரி

Parry's

ஈ. ஐ. டி.—பாரி லிமிடெட்
(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது.
உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)
உர இலாகா, டேர் ஹவுஸ், மதராஸ்-1.

உரங்கள் ● பூச்சி நாசினிகள் ● வீரிய ஒட்டு விதைகள் ● ஸ்ப்ரேயர்கள் ● நிபுணத்துவம் மிக்க விவசாயத்துக்கான சேவை

எத்தனைகோடி வெற்றி 10-ம் பக்கத் தொடர்ச்சி.

தயாராக இருக்கிறார்கள். அரசாங்கமும். இந்த திட்டத்திற்கு ஆதரவு அளிக்க தயாராக இருக்கிறது. ஆனால் கீழே உள்ள அதிகாரிகள் பல்வேறு துறையைச் சார்ந்தவர்கள். அந்த பல்வேறு துறையைச் சார்ந்தவர்களும் ஒன்றாக இணைந்து, கூடி, கலந்து பேசி முடிவெடுக்க வேண்டும். எல்லாவற்றையும் எழுதி, நான் மூலமாக அனுப்புகிற காரியத்தைச் செய்தால் அது சில வேலைகளில் மூன்று வருடம், நான்கு வருடங்கள்கூட ஆகும். இதற்கு எல்லாத துறைகளிலும் தொடர்பிருக்கிறது. மின்சாரத் துறையிலே தொடர்பிருக்கிறது. வேளாண்மைத் துறைக்கு இதிலே தொடர்பிருக்கிறது. கல்வித் துறைக்கு இதிலே தொடர்பிருக்கிறது. உள்ளாட்சித் துறைக்கும் இதிலே தொடர்பிருக்கிறது. இவ்வளவு பேரும் கலந்து, திட்டத்தை உருவாக்க வேண்டும்,

இந்த ஊரிலே இருக்கக்கூடிய பள்ளித்துணை ஆய்வாளரும், இந்த மாவட்ட கல்வி அலுவலரும் இது பற்றி உடனடியாக கலந்து பேசி, விரைவாக இந்த திட்டத்தைச் செயலாக்கி, அதனுடைய முடிவை எனக்கு அனுப்புவார்களானால், அதைத்தான் நான் மகிழ்ச்சியோடு ஏற்றுக் கொள்வேன். அதற்கு அனைவரும் உறுதுணையாக இருந்து காரியங்களைச் செய்ய வேண்டும். திட்டங்களைக் கொடுப்பது பார்த்து, திட்டங்களைப் பற்றி பயனடைகின்ற பொறுப்பு அதிகாரிகள் கையிலே இருக்கின்றது. அதை அதிகாரிகள் செய்வார்களானால், அதிகாரிகளை இங்கே இருக்கக்கூடிய பெரும் மக்கள் தெய்வமாக கருதுவார்கள். இந்த மனப்பக்குவமும், மன விலாசமும். அதிகாரிகளுக்கு அதிகமாக இருக்க வேண்டும். அவர்கள் யார் பெரியவர்கள் என்று போராட்டத்தை நடத்திக் கொண்டு இருக்காமல் யார் பெரியவர்களாக இருந்தாலும் சரி, காரியம் முடிய வேண்டும் என்கிற அந்த உணர்ச்சியோடு இவைகளை செய்கின்ற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்,

இவைகளை அத்தனையும் சேர்த்துப் பார்க்கின்றபொழுது இடைப்பாடி ஒன்றியத்தில் நல்ல மனநிறைவு அளிக்கத்தக்க வேலைகளைச் செய்கிறீர்கள், மக்களுக்குப் பயனுள்ள வேலைகளைச் செய்கிறார்கள், அந்த வேலைக்கு ஊரிலே உள்ள பிரமுகர்கள் அத்தனைபேரும் ஒத்துழைப்பு தருகிறார்கள் என்று நான் பார்த்துப் பூரிப்பும், பெருமையும் அடைகிறேன். இந்த ஒத்துழைப்பையும் மற்றவைகளையும் மற்ற பகுதியிலே உள்ளவர்களும் பயனடைய தக்க வகைக்கு இடைப்பாடி ஒன்றியம் விளம்பரப் படுத்த வேண்டும், எடுத்துச் சொல்ல வேண்டும் ஆகவே இந்த காரியங்களிலே நீங்கள் மேலும் முயன்று மேலும் பல நன்மைகளைச் செய்துதர வேண்டும், அடுத்த முறை நான் இந்த பகுதியிலே இருக்கின்ற வயல் வெளிகள் நல்ல விளைச்சலைப் பார்த்துப் பூரிக்க வேண்டும், நீங்கள் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்; முயன்றால் முடியும். அப்படிப்பட்ட ஆக்க பூர்வமான ஆற்றலை உடையவர்கள் நாம் என்பதை எடுத்துக்காட்ட வேண்டும்.

## 'கிராமநலம்' சந்தா

கிராமநலம், ஆண்டுச் சந்தா ரூ. 2. ஓராண்டிற்கு குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. தனி இதழ் விற்பனைக்கு கிடையாது.

'கிராமநலம்' இதழிற்கு பெரும்பான்மையான சந்தாதாரர்களைச் சேர்த்து, கிராமநலம் பணிகள் யாவும் தமிழகத்திலுள்ள மூலைமுடுக்குகளுக்குச் சென்றடைய பரவவேண்டும் என்ற நன்நோக்கத்தில், கிராமவளர்ச்சி உள்ளாட்சித் துறையின் அரசுச் செயலாளர் திரு. டி.ஏ.எஸ். பாலகிருஷ்ணன், ஐ.ஏ.எஸ். அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர்களுக்கு வேண்டுகோள் விடுத்துள்ளார். அதன் வாயிலாக நற்பயன் விளையும் என நம்புகிறோம்.

ஆசிரியர்.



# எலிகளை ஒழிக்க....

## கேள்வியும் — பதிலும்

**கேள்வி : ஒரு மனிதனுக்கு ஆறு எலிகள் பகை என்று சொல்லப்படுகிறது. இது எவ்வாறு கணக்கிடப் பட்டது?**

பதில் : ஒரு மனிதனின் உணவுத் தேவையின் அளவினதாக, உணவை ஆறு எலிகள் உண்டு வாழ்கின்றன என்பதன் கருத்தில்தான் கூறப்பட்டது.

**கேள்வி : 'ஜிங் பாஸ்பைடு' விஷத்தை உணவில் கலந்து வைத்தாலும், எலிகள் தின்றுவிட்டு இறப்பதில்லை. காரணம் என்ன ?**

பதில் : இந்த விஷத்தை பத்தொன்பது பங்கு உணவிற்கு ஒரு பங்கு வீதம் கலந்து வைத்தால் எலிகள் நிச்சயமாக இறக்கவே செய்யும். விஷம் தின்ற எலிகள் உயிரோடு இருப்பதாகக் கூறுவது தவறு.

**கேள்வி : வயல்களில் நண்டுகளும் பாம்புகளும் இருக்கின்றன. அவற்றால் பயிர்களுக்குக் கெடுதல் ஏற்படும் என்று கருதப்படுகிறது. தங்கள் பதில் என்ன ?**

பதில் : நண்டுகள் பயிர்களின் கதிரை வெட்டுவதால் சேதம் ஏற்படக் கூடும். ஆனால் பாம்புகள் பயிரை நாசம் செய்யும் எலிகளை மட்டுமே கொன்று தின்னும். பயிர்களுக்குச் சேதம் விளைவிக்காது.

**கேள்வி : வயல்களில் எலிகள் எந்தக் காலங்களில் வந்து சேருகின்றன ?**

பதில் : எலிகள் பொதுவாக வளமான காலங்களில் தான் அதிகமாகக் குட்டி போடுகின்றன. மேலும், எலி நாலுகால் பிராணி. ஆகையால் எப்பொழுது அவை வயலுக்கு வருகின்றன என்பதை நிர்ணயித்துச் சொல்ல முடியாது. ஆனாலும் வயல் எலிகள் அங்கேயேதான் வளை தோண்டி வாழுகின்றன.

**கேள்வி : வயல்களுக்கு நீர் பாய்ச்சும் போது, எலிவளைகளில் நீர் புகுந்து அவை இறந்து விடும் என உறுப்பினர் கூறு கிறார். தங்கள் கருத்து என்ன ?**

பதில் : வெள்ளெலிகளைத் தவிர, மற்ற எலிகள் எல்லாம் தண்ணீரில் நீந்திச் செல்லும் திறமையுடையன வாகும். எலிவளைகளில் எலிகள் தங்குமிடம், நீர் மட்டத்தைவிட தாழ்வாக அமையாமல், சிறிது உயர மாகவே உள்ள வயல் வரம்புகளில் அமைந்திருப்பதால், எலிகள் நீர் பாய்ச்சுவதால் இறக்க வழியில்லை.

**கேள்வி : வயல்களில் உள்ள வரப்புகளில் எலிகள் குடியிருப்பதைத் தடுக்க என்னென்ன வழி வகைகள் உண்டு ?**

பதில் : பொதுவாக எலிகளைச் சுமார் ஆறு முறைகளால் ஒழித்துக் கட்டலாம் :

(1) ஒரே சமயத்தில் சாகுபடிப் பரப்பில் வரப்புகளை வெட்டி எலிகளைப் பிடித்தல்.

(2) கிட்டி வைத்துப் பிடித்தல்.

(3) விஷம் கலந்த ஆகாரம் வைத்துக் கொல்லுதல்.

(4) விளக்கின் வெளிச்சத்தைக் கொண்டு பிடித்தல்.

(5) சிறிய வரப்புகள் அமைத்தல்.

(6) எலிகளின் விரோதிகளை அழிக்காமல் இருப்பது போன்ற முறைகளால் எலிகளை அழிக்க இயலும்.

**கேள்வி : பல வகை எலி ஒழிப்பு முறைகளில் எந்த வகையில் எலிகளை ஒழிப்பது சுலபம்?**

பதில் : கதிர் அறுவடை சமயத்தில், வளைகளில், காது கண் திறக்காமலிருக்கும் குட்டிகளுடன், வரப்புகளை வெட்டி தாய் எலியோடு பிடிக்கலாம். மண்ணில் ஈரம் இருப்பதால் வெட்டுவது சுலபம். இம்முறையால் அதிக எலிகளை அழிப்பதோடல்லாமல், அதன் இனப்பெருக்கத்தையும் தடுக்க முடிகிறது. வயல்களில் உள்ள எலிகளை இனப்பெருக்கக் காலமாகிய அக்டோபர், பிப்ரவரி, மார்ச் மாதங்களில் வரப்புகளை வெட்டிப் பிடிக்கலாம்.

**கேள்வி : புல்எலி, கறம்பு எலி, சுண்டெலி, என எவ்வாறு உருவத்தைக் கொண்டு வித்தியாசம் தெரிந்து கொள்வது ?**

பதில் : உருவத்தைக் கொண்டு எலிகளை ஒருவாறு கண்டுபிடிக்க முடியும். கறம்பெலி எல்லா எலிகளை விடப் பெரியது ஆகும். புல்லெலியின் வயிற்றின் அடிப் பாகம் சிறிது வெண்மை நிறத்துடன் இருக்கும்.



G.N.—6A

# கருத்தைக் கவர்ந்த கழுகுமலை

சமுதாய நலத்திட்டங்களின் வாயிலாக, அரசு ஒத்துழைப்போடும், சுய முயற்சியாலும், கிராமங்கள் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொண்டுள்ளன என்பது கண்கூடான உண்மையாகும். இவ்வகையில் தமிழகத்தின் தலை சிறந்த கிராமமாக, கழுகுமலை பேரூராட்சி தேர்ந்தெடுக்கப்பட்டு, தமிழக அரசினரால் ரூ. 1,000 முதல் பரிசு பெறும் அரிய சிறப்பினைப் பெற்றுள்ளது.

வீரம் செறிந்த திருநெல்வேலி மாவட்டத்தில், கயத்தாறு ஊராட்சி ஒன்றியத்தில் கழுகுமலை அமைந்துள்ளது.

கழுகுமலை என்ற பெயருக்கே காரணமாக அமைந்துள்ள மலையின் உயரம் 300 அடிகளாகும்.

இது திருச்சி மலைக்கோட்டையை விட சற்று உயரமானது. இம்மலையின் உச்சியில் பிள்ளையார் கோவிலும் அக்கோவிலுக்குச் செல்லும் வழியில் புத்தர் சிலையும் சமண விக்கிரகங்களும் உள்ளன. சிவன் கோவில் ஒன்று மலையை மேலிருந்து கீழாகக் குடைந்து வெட்டப்பட்டிருப்பதால் வெட்டுவான் கோவில் என்று, காரணப் பெயருடன் அழைக்கப்படுகிறது.

பல்லவ அரசு தமிழகத்தில் புகழோடு அரசோச்சிய காலத்தில், சமணர் இங்கு கழுவேற்றப் பட்டதால், இவ்வூர் கழுகுமலை என பெயர் பெற்றதாகக் கூறுவர். ஒவ்வொரு ஆண்டிலும், கழுவேற்றும் திருவிழா, பங்குனி உத்திரம் ஆறும் திருவிழாவின்போதும், தைப்பூசம் ஆறும் திருவிழாவின்போதும் இரவில் நடைபெறுகிறது.

பாரம்பரியமாகவே கழுகுமலை பாடல் பெற்ற தலமாகும். மலையடிவாரத்தில் தமிழ் கடவுளாகிய முருக பெருமான் கோவில் கொண்டுள்ளார்.

கழுகுமலையில் இந்து, முஸ்லீம், கிருஸ்த்துவர் ஆகிய சமுதாயத்தினர் ஒருமைப்பாடு உணர்வுடன் ஊர் முன்னேற்றத்திற்கு பெரிதும் உதவுகின்றனர். "ஒன்றுபட்ட உழைப்பே உயர்வுக்கான ஒரே வழி" என்ற அடிப்படை உணர்வே—இன்று தமிழகத்தின் தலைசிறந்த கிராமமாகத் திகழும் வாய்ப்பினைக் கொடுத்துள்ளது.

7,408 மக்கள் தொகையைக் கொண்ட இவ்வூரில் 350 குடும்பத்தினர் உழவுத் தொழிலை மேற்கொண்டுள்ளனர். பெரும்பாலும் புன்செய் பயிர்களை விளைவிக்கப் படுகின்றன. இங்குள்ள 30 பாசனக் கிணறுகளில் 21 மின் இறைவை வசதியைப் பெற்றுள்ளன. அரசினரால் சிபாரிசு செய்யப்படும் திருந்திய விவசாய முறைகளும், பொறுக்கு விதைகளும், கையாளப்படுகின்றன.

**கால்நடை வளர்ச்சிக்காக**

கால் நடை வளர்ச்சிக்காக இங்கு அரசினரால் கிராம கால்நடை கேந்திரம் ஒன்று இயங்கி வருகிறது. சென்ற ஆண்டில் 1,444 எருமைகளுக்கும் 953 பசுக்களுக்கும் செயற்கை முறையில் கருத்தரிக்கச் செய்யப்பட்டுள்ளன. கால் நடைச் செல்வத்தைப் பேணிப் பாதுகாப்பதில் அம்மக்களின் ஆர்வத்தைச் இது சுட்டிக்காட்டுகிறது.

கழுகுமலையில் உள்ள மாட்டுத் தாவணி தமிழகமெங்கும் புகழ் பெற்றது. 100 ஏக்கர் பரப்புள்ள இச்சந்தையில் ஆண்டுதோறும், தை பங்குனி மாதங்களில் 24,000 கால்

[30-ம் பக்கம் பார்க்க.]

படங்கள் : எதிர்ப் பக்கம்





தமிழகத்தின் சிறந்த கிராமம்
'பரிசு பெற்ற கழுகுமலை'

படம் 1. தமிழகத்தின் சிறந்த கிராமமாகத் தேர்ந்தெடுக்கப் பட்ட கழுகுமலை கிராமம் கழுகாசல மூர்த்தி ஆலயத்தின் திருக்குளம்.

படம் 2. கழுகுமலை கிராமத்தின் ஊர் பொதுத் தோற்றம்.

(கழுகுமலை பேரூராட்சி மன்ற உறுப்பினர்களை மூன்றாவது அட்டையில் காண்க.)

# நட்புறவுப் பயணம்



சோவியத்
மாநகராட்சித்
தலைவர்கள்
சென்னை
வந்தபோது
(ஏப்ரல் - '68)

உள்ளாட்சித்துறை அமைச்சர் தலைமையில்
சென்னை மாநகராட்சி தூதுக்குழுவினர்
சோவியத் நாடுமுதலான அயல் நாடுகளுக்குப்
புறப்பட்ட நாளில்.... (21-7-68)













படத் தொகுப்பு விளக்கம்

(1) வருவாய்த்துறை வாரியத்தின் புதிய கட்டிடமான எழிலகத்தை, சென்னையில் 4-7-68 அன்று மாண்புமிகு முதலமைச்சர் திறந்து வைத்தார்.

(2) எழிலகத்தின் தோற்றம்.

(3) காஞ்சியில் 6-7-68 அன்று, செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கட்டிடத்திற்கு, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அடிக்கல் நாட்டினார்.

(4) காஞ்சிபுரத்தில் கட்டப்படும் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்தின் மாதிரி தோற்றம்.

(5) செங்கல்பட்டு மாவட்ட தலைநகர் மாற்றத்தை ஒட்டி காஞ்சியில் நடைபெற்ற கிராம பொருட்காட்சியில் கால்நடைகளைப் பார்வையிடுகிறார் மாண்புமிகு முதலமைச்சர்.

(6) மொரிஷியஸ் தீவுக்குச் சென்றிருந்த பொழுது மாண்புமிகு செய்தித்துறை அமைச்சர் திருமதி சத்தியவாணிமுத்து, அந்நாட்டு தலைமையமைச்சர் திரு ராமகூலம் (Ramgoolam) அவர்களுக்கு திருக்குறள் நூலை பரிசளித்தார்.

# ஊர்ப்பணிக்கு ஓர் அணி



ஒரு புதிய கால்வாய் பாய்ந்தோடுகிறது. அதற்கு மேலுள்ள பாலத்திலிருந்து பார்த்தால் சுற்றுப்புறங்களில் எல்லாமே தெரிகிறது. இடது பக்கம் நிலம் உயர்ந்து உயர்ந்து ஒரு சிறிய சிவப்பு குன்றில் போய்ச் சேருகிறது. அதன் அடிவாரத்தில் பாம்பண்டலம் ஏரி. வலது பக்கம் வயல்களுக்கு அப்பால் கிட்டத்தட்ட 350 ஏக்கர் ஆயக்கட்டு பகுதியைக் கொண்ட மற்றொரு ஏரி. செங்கல்பட்டு மாவட்டத்தில் உள்ள ஒத்திக்காடு கிராமத்தைத்தான் பார்க்கிறோம்.

இந்த புதிய கால்வாய் உயர்ந்த நிலப்பகுதியையும், மேல் ஏரியையும் வயல்கள் வழியாக பாசன ஏரியுடன் இணைக்கிறது. இதன் நீளம் 1,700 அடி.

## இதற்கு என்ன சிறப்பு

கீழ் ஏரியில் உள்ள தண்ணீர் பாசனத்திற்குப் போதாது. விவசாயிகள் இதுவரை மிகவும் சிரமத்துக்குள்ளாகி வந்தார்கள். ஜூலை மாதத்தில் ஏதோ மழை பெய்கிறது. ஆனால் கொளுத்தும் வெயிலினால் காய்ந்து கிடக்கும் நிலத்துக்கு இந்த மழையின் நினைவு கூட பசுமையாக இல்லை. டிசம்பர் மாதத்தில் பெய்யும் மழைதான் சாகுபடிக்கு உதவுகிறது. இப்போது இந்தக் கால்வாயில் தண்ணீரே இல்லை. கீழ் ஏரியில் சேறு படிந்து கிடக்கிறது. ஆனால் டிசம்பர் வந்து விட்டால் இந்த நிலப்பரப்பு முழுவதும் ஒரு வடிகால் பகுதியாக மாறிவிடும். அப்போது இந்தப் பாசன ஏரியில் தண்ணீர் நிறைந்திருக்கும்.

இந்தியாவில் இத்தகைய கால்வாய்கள் ஆயிரக்கணக்கில் இருக்கும். பிறகு இந்த ஒரு கால்வாயை மட்டும் ஏன் குறிப்பிட வேண்டும்? இதற்கு ஒரு நல்ல காரணம் இருக்கிறது. நாடெங்கிலும் சேனைகள் வளர்ந்து வருகிறதே என்று மக்கள் கவலைப் பட்டுக்கொண்டிருக்கும்போது ஒரு புதுரக சேனை செய்துவரும் செயலான அலுவல்களுக்கு இந்தக் கால்வாய் ஒரு சான்று ஆதலால்தான் இந்தக் கால்வாய்க்கு மட்டும் அதிக முக்கியத்துவம்.

## சீரணியின் நோக்கம்

சீரணி என்றாலே சுபிட்சத்துக்கான படை என்றுதான் பொருள். 1967 ஜூன் 17-ஆம் தேதி தமிழக முதலமைச்சர் மாநில சட்ட சபையில் சீரணி அமைப்பையும் இதன் நோக்கங்களையும் அறிவித்தார். அப்போது அவர் சொன்னார், "அரசு வகுக்கும் திட்டங்களும், அவற்றை நிறைவேற்றுவதில் நிர்வாகத் துறையினர் காட்டும் திறமையும் அக்கறையும் மட்டும் இருந்தால் நாட்டில் ஒரு புதிய சமூக விழிப்புணர்வை உருவாக்கி விட முடியாது. நாம் ஓர் உணர்ச்சி வேகத்தைத் தூண்டி விட வேண்டும். இந்த உணர்ச்சி வேகம் சமூகத்தை தட்டி எழுப்ப வேண்டும். ஒரு புதிய சமூக முறையை உருவாக்குவதில் ஒவ்வொருவரும் பங்கு வகிக்கும் வகையில் இது தூண்டி விடப்பட வேண்டும். நமது மக்களுள் சில ஆயிரக்கணக்கானவர்கள் தங்களுக்காகவும், தங்கள் குடும்பங்களுக்காகவும் இயன்றதைச் செய்த பிறகு ஒரு நாளைக்கு ஒரு மணி நேர உழைப்பையாவது நாட்டின் பொது நலனுக்காக வழங்கினால் நமது சமூகத்தின் முன்னேற்றம் உறுதியாகி விடும். ஆயிரக்கணக்கான மக்கள் இவ்வாறு கருதுகிறார்கள் என்ற நம்பிக்கையில் அரசாங்கம் முதல் நடவடிக்கையாக சீரணிப் படைகளை அமைக்க தீர்மானித்திருக்கிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆயிரம் பேர் சேர்த்துகொள்ளப்படுவார்கள். இந்தப் படையின் உறுப்பினர்களுக்கு அரசாங்கத்திடமிருந்து ஊதியம் கிடைக்காது. ஆனால் வேண்டிய கருவிகளும் இயந்திர சாதனங்களும் கிடைக்கும். குளங்களைப் பழுது பார்ப்பது, சாலைகளை மேலும் சீராக்குவது, தரிசு நிலங்களை சாகுபடிக்கு உகந்ததாய் மாற்றுவது, முதியோருக்கு பாடம் சொல்லிக் கொடுப்பது போன்ற அலுவல்களில் இவர்கள் ஓய்வு நேரத்தில் ஈடுபடுவார்கள். அந்தந்த இலாகாக்களின் தொழில் நுட்பச் சிப்பந்திகள் சீரணிப் படையினருக்கு வழிகாட்டி உதவுவார்கள்".

ஒத்திக்காடு கால்வாய் திட்டத்தையும், அதே தொகுதியில் இதுபோன்ற மேலும்இரண்டு திட்டங்களையும் மக்கள் தாங்களே முன் வந்து செய்து முடித்திருக்கிறார்கள். விளைபொருள் உற்பத்திக்குத்தான் இந்த திட்டத்தில் முதல் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது என்றாலும், கிராமங்களில் மற்ற வசதிகளுக்கு முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார்கள். இதே தொகுதியில் உள்ள பெரத்தூர் கிராமத்தில் ஒரு ஹரிஜனக் குடியிருப்பில் 2,000 அடி நீளத்துக்கு சாலைகள் அமைத்திருக்கிறார்கள். ஜலதாரைக் கால்வாய்களையும் அமைத்திருக்கிறார்கள். பக்கத்தில் உள்ள சோழவரம் தொகுதியில் கிராம வாசிகள் தங்கள் குழந்தைகளுக்காக புதிய பள்ளிக் கட்டிடங்கள் கட்டுவதற்கான தீவிரத் திட்டம் ஒன்றில் கவனம் செலுத்தி வருகிறார்கள். இந்தத் தொகுதியில் இத்தகைய 23 புதிய கட்டிடங்கள் இவற்றுக்கான பொருள்களை அரசே வழங்கிற்று; உழைப்பை மக்கள் வழங்கினர்.

சாகுபடியாளர்களுக்கு முற்போக்கு சிந்தனையும், உழைக்கும் மனப்போக்கும் இருந்தால் எந்த அளவுக்கு மாறுதல் ஏற்படுத்த முடியும் என்பதற்கு இந்தப் பகுதி ஓர் எடுத்துக்காட்டாகும். மழை இல்லை என்பது உண்மை; ஆனால் பம்ப்செட்டுகளினால் பாசன வசதி ஏற்படுத்தி மழையின்மையினால் ஏற்படும் இன்னல்களைத் தீர்த்து விட்டார்கள். இந்தப் பகுதியில் மின்சார வசதி இல்லாத ஒரு கிராமம் கூட கிடையாது. இந்தப் பகுதியில் சாகுபடிக்கு உகந்த நெல் வகைகளைத் தெரிந்தெடுத்து வழங்கியிருக்கிறது பக்கத்திலுள்ள திரூர்குப்பம் நெல் ஆராய்ச்சி நிலையம்" அரசாங்க விதைப் பண்ணையொன்று நல்ல தரமான விதைகளை வழங்குகிறது. சோளத்தையும் கரும்பையும் இப்போது புதிதாய் சாகுபடி செய்யத் தொடங்கியிருக்கிறார்கள்.

விளைபொருள் உற்பத்திப் பெருக்கத்துக்கு வேண்டிய வசதிகளை கிராமவாசிகளுக்கு வழங்குவதற்காக **ஊராட்சி நிறுவனங்கள்** தங்கள் வசமுள்ள நிதியை முழுமையாய் பயன்படுத்தும் பொருட்டு இந்த **ஆண்டு** மாநிலமெங்கிலும் நிறைவேற்றப்படும் ஓராண்டு திட்டத்தை இந்தத் தொகுதியும் நிறைவேற்றி வருகிறது. விவசாயிகளுக்கு வாடகைக்கு கொடுப்பதற்காக ட்ராக்டர்களையும், மற்ற கருவிகளையும் வாங்குகிறார்கள். பம்ப் செட்டுகளை அமைக்கிறார்கள்.

### 28,000 தொண்டர்கள்

சிரமதானப்படை மிகச் சிறப்பாக பணிபுரிகிறது என்று மாநிலத்தின் பல பகுதிகளிலிருந்து வந்துள்ள தகவல்கள் தெரிவிக்கின்றன. கருவிகளுக்கும் யந்திர சாதனங்களுக்குமாக 1967–68-ஆம் ஆண்டில்—அதாவது சிரமதானப்படையின் முதல் ஆண்டில்—அரசாங்கம் பத்து லட்சம் ரூபாய் ஒதுக்கியது. இந்தத் தொகை முழுவதும் பயன்படுத்தப்பட்டு விட்டது. சுமார் 28,000 தொண்டர்கள் கிட்டத்தட்ட 17½ லட்சம் ரூபாய் மதிப்புக்கு இலவசமாக உழைத்திருக்கிறார்கள். ஏரிகளை புதுப்பித்திருக்கிறார்கள். வண்டல் மண்ணை அகற்றியிருக்கிறார்கள், பாசனக் கால்வாய்களை வெட்டியிருக்கிறார்கள், தரிசு நிலங்களை சாகுபடிக்கு உகந்ததாய் மாற்றியிருக்கிறார்கள்.

சிரமதானப்படையின் அலுவல்களை திரு ஜயப்பிரகாஷ் நாராயண் புகழ்ந்துரைத்திருக்கிறார். "இந்த முயற்சிக்கு காந்திஜீ முழு மனதுடன் ஆசி கூறியிருப்பார். நாட்டின் வருங்காலம், அதன் சுபிட்சமும் சமாதானமும், மக்கள் செய்யும் இதுபோன்ற அலுவல்களைத்தான் நம்பியிருக்கிறது" என்று அவர் கூறுகிறார்.

## பிற மாநிலங்களில்

### கடனில்லா கிராமங்கள்

**ம**காராஷ்டிரா மாநிலத்தின் அவுரங்காபாத் மாவட்டத்திலுள்ள 12 கிராமங்கள் "கடனில்லா கிராமங்கள்" என்று அழைக்கப்படுகின்றன.

இக்கிராமவாசிகளிடமிருந்து தக்காவிக் கடன் நிலுவையாக ரூ. 10,000 வசூலிக்கப்பட்டுள்ளது. தேசியப் பாதுகாப்புப் பத்திரத்தில் ரூ. 10,000 அஞ்சலக சேமிப்பு வங்கியில் ரூ. 40,000 இக்கிராமவாசிகள் செலுத்தி, நாட்டின் வளர்ச்சியில் பங்கு பெற்றுள்ளனர்.

❖ ❖ ❖

### வரிப்பாக்கியே இல்லாத ஊராட்சிகள்

**கி**ழக்கு கோதாவரி மாவட்டத் (ஆந்திர மாநிலம்) திலுள்ள, ராயாவரம் ஊராட்சி சமிதியிலுள்ள 46 ஊராட்சிகள் அனைத்திலும் வரிப்பாக்கியே இல்லை. வரிகள் அனைத்தையும் அவர்கள் பாக்கி ஏதுமின்றி செலுத்தி விட்டனர். நடப்பாண்டில், இவ்வரியச் செயலைப் புரிந்த சமிதியாக, ராயாவரம் சமிதி அழைக்கப்படுகின்றது.



## மகளிர் - குழந்தைகள் பகுதி

**அண்மையில் தொடங்கப்பெற்ற புதிய பகுதி—மகளிர் குழந்தைகள் பகுதி. இந்த இதழில் தஞ்சை மாவட்டத்திலுள்ள கொரடாச்சேரி வட்டாரத்திலுள்ள மகளிர் மன்றங்கள் ஆற்றிவரும் அரும்பணிகள் பற்றிய சுருக்கமாக கட்டுரையை வெளியிடுகிறோம்.**

## கொரடாச்சேரி ஒன்றியத்தில்

## மகளிர் மன்றங்கள் பணி

**த**ஞ்சாவூர் மாவட்டம் கொரடாச்சேரி வட்டாரத்திலுள்ள 44 ஊராட்சி மன்றங்களிலும் 44 மகளிர் மன்றங்கள் நல்ல முறையில் இயங்கி வருகின்றன. ஒரு மன்றத்தில் சராசரி 20 உறுப்பினர் வீதம் உள்ளனர். இவற்றை மன்ற அமைப்பாளர்கள் பொறுப்பேற்று நடத்தி வருகின்றனர். இந்த அமைப்பாளர்களுக்கு மூன்று மாதங்களுக்கு ரூ. 15 உதவித் தொகை வழங்கப்படுகிறது. இவர்களுக்கு முக்கிய சேவிகாக்கள், கிராம சேவிகா ஆகியோர் பணியின் விவரங்களை சொல்லித்தருகின்றனர். இது தவிர, 3 மாதங்களுக்கு ஒரு முறை வட்டாரத்தில் "அமைப்பாளர் கூட்டம்" நடத்தப்படுகிறது. இதில் ஊராட்சி ஒன்றியத் தலைவர், ஆணையர் மாவட்ட மாதர் நல அதிகாரி, மற்றும் சமூக நலக் குழுவின் உறுப்பினர் முதலானோர் கலந்து கொண்டு மகளிர் மன்றத்தில் செய்யக்கூடிய, செய்யவேண்டிய வேலை விவரங்கள் பற்றி முடிவு எடுக்கிறார்கள்.

இவற்றில் 36 மன்றங்களுக்கு தையல் கைத்தொழில் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன. இதில் இரண்டு கதர், கிராமக் கைத்தொழில் ஆயத்தின் தையல் இயந்திரங்கள் ஆகும்.

நான்கு தையல் ஆசிரியைகள் நியமிக்கப்பட்டு மகளிர் மன்றங்களில் தையல் வேலை கற்றுத் தருகின்றனர்.

மகளிர் மன்றங்களில், தையல் மற்ற கைவேலைகளை கற்றுக்கொடுப்பதுடன் குடும்பத்திற்கு உதவக்கூடிய விவரங்களாக உணவை சத்து கெடாமல் பக்குவம் செய்வது பற்றியும், உணவு சேமிப்பு வகை பற்றியும் கலப்பு உணவு, உயிர் சத்துக்கள் இவற்றின் அவசியம் பற்றியும், அவ்வப்போது எடுத்துச் சொல்லி, செயல் முறைகளும் செய்து காட்டப்படுகின்றன. சிக்கனம் சேமிப்பு, குடும்ப நிர்வாகம், குடும்ப வரவு, செலவுத் திட்டம் இவை போதிக்கப்படுகிறது. வீட்டுத் தோட்டம்

பாடுவதாலும், கோழி வளர்ப்பதாலும் அன்றாட தேவைகளை வீட்டிலேயே தயார் செய்து கொள்வதாலும் சேமிக்கும் பணத்தை, வளரும் சேமிப்புக் கணக்கில் போட உதவி செய்யப்படுகிறது. இதுவரை 682 பெண்களுக்கு அஞ்சலக சேமிப்புக் கணக்கும் ஆரம்பித்து தரப்பட்டுள்ளது.

### ஆண்டுதோறும் குழந்தைக் காட்சிகள்

குடும்பக் கட்டுப்பாடு முறையில் கருத்தடை சாதனங்கள் உபயோகிக்கப்படுகின்றன. பெண்களின் மனமகிழ்வுக்காகவும், பொழுது போக்கிற்காகவும், கலை, கலாச்சாரம் சம்பந்தமாக பாட்டு, பக்திப்பாடல், கும்மி, பஜனை போன்றவை வாரத்திற்கு ஒருமுறை நடத்தப்படுகிறது. சிறு பொழுதுபோக்கு விளையாட்டுகளும் அவ்வப்பொழுது நடக்கும். ஒவ்வொரு தாய், சேய் நல விடுதியிலும் ஒவ்வொரு ஆண்டும் குழந்தை காட்சிகள் நடத்தப்படுகின்றது. இதில் குழந்தை வளர்ப்பு, சுத்தம், சுகாதாரம் குடும்பநலத் திட்டம் விளக்கப்படுகிறது. மற்றும் தேசிய விழாக்களும், பெரியோர்கள் பிறந்ததின விழாக்களும், மத சம்பந்தமான விழாக்களும் மகளிர் மன்றங்களில் நல்ல முறையில் கொண்டாடப்படுகிறது. அதுசமயம், அந்தந்த நிகழ்ச்சிகளுக்கு சம்பந்தமான சொற்பொழிவுகள் நடக்கும்.

சமூகக் கல்விக்கான நூல்கள், ஒரு மன்றத்திற்கு ஒரு ஆண்டிற்கு ரூ. 10-க்கு வாங்கி வழங்கப்படுகின்றன. சமூகத்தில் பழகும் விதம், பொது இடங்களை சுத்தமாக வைத்துக் கொள்ளும் முறை, பொது சுகாதாரம் முதலியவை கற்றுத் தரப்படுகின்றன. இந்திய அரசியல் அமைப்பில் அத்தியாவசியமான சில சட்ட திட்டங்கள், தீண்டாமை, வாக்குரிமை வாக்கை பயன்படுத்தும் முறை, அரசு கொள்கைகள், அவ்வப்போது அரசு பிறப்பிக்கும் ஆணைகள் இவற்றை கிராமிய பெண்களிடையே எடுத்துச் சொல்லி அவர்களை விவரம் தெரிந்த பெண்களாகின்ற நிலை உருவாக்கப்படுகிறது. இவை பொதுவாக மகளிர் மன்றங்களிலும், பெண் பயிற்சி முகாமிலும் விளக்கப்படுகிறது.

வாழ்வில் வசதி குறைந்தவர்களுக்கு பல விதங்களிலும் மகளிர் மன்றம் உதவி செய்து வருகிறது. தையல் தேர்வு பெற்ற பெண்களில் 4 பேர் தையல் ஆசிரியையாகவும், 2 பேர் பள்ளியில் பகுதி நேர தொழில் ஆசிரியைகளாகவும், 3 பேர் பால சேவிகைகளாகவும் வட்டாரத்தின் உதவியால் பணியில் சேர்த்துள்ளனர். இரண்டு பெண்களுக்கு தாய் சேய் நல விடுதியில் ஆயா வேலை வாங்கித் தரப்பட்டுள்ளது. மூன்று கைம் பெண்கள், அரசினரின் சேவை இல்லத்தில் சேர்ந்து படித்துவிட்டு தற்போது பள்ளி ஆசிரியையாகவும், செவிலித் தாயாகவும் பணியாற்றுகின்றனர். மற்றும் இருவர் தற்போது தஞ்சை சேவை இல்லத்திலும் திருச்சி சேவா சங்கத்திலும், படித்து வருகின்றனர். கல்வியற்ற ஏழைப்பெண்கள் இருவர் தஞ்சையில் தனவந்தர் வீட்டில் சமையல் வேலையில் அமர்த்தப்பட்டுள்ளனர். மூன்று பெண்கள் தாம்பரம் சேவை இல்லத்தில் தற்போது தையல் பயிற்சி பெற்று வருகின்றனர்.

சமூக நல ஆயம் வழங்கும் மானியம் ஆண்டிற்கு ரூ. 750 பெற்று குளிக்கரையில் ஒரு குழந்தைகள் காப்பகம் நடைபெற்று வருகிறது. இதற்கு குளிக்கரை ஊராட்சியினரும் ஆண்டிற்கு ரூ. 500 நன்கொடை தருகின்றனர்.

### அமைப்பாளரின் அரும்பணி..

அம்மையப்பன் என்ற ஊரில் ரூ. 3,300 மதிப்பீட்டில் 50 சதம் மக்கள் பங்குத் தொகை கட்டி, ஒரு மாதர் சங்க கட்டிடம் கட்டி முடித்து அதில் மகளிர் மன்றம் நடைபெறுகிறது.

ஆர்ப்பாரில் ஒரு மகளிர் வானொலி மன்றம் ஆரம்பிக்கப்பட்டு ரூ. 420-க்கு ஒரு வானொலிப்பெட்டி வழங்கப்பட்டுள்ளது. மக்கள் அதில் ரூ. 300 பங்குத் தொகையாக கட்டியுள்ளனர். மகளிர் மன்றங்களின் அமைப்பாளர் திருமதி திரிபுரசுந்தரி அம்மாள் தலைமையில் நல்ல முறையில் நிகழ்ச்சிகள் கேட்கப்படுகிறது. பின்பு கேட்ட செய்திகள் பற்றி பட்டிமன்றமும் நடத்தப்படுகிறது. வட்டாரத்திலுள்ள 44 அமைப்பாளர்களில் இவர் தனிச் சிறப்புடன் பணியாற்றுகிறார்.

அத்திக்கடையில் முஸ்லீம் மகளிர் மன்றமும், எலவனூர் குடியில் அரிசன மகளிர் மன்றமும் எல்லாபணிகளிலும் பங்குபெற்று சிறந்த முறையில் பணியாற்றுகின்றன.



*Manufacturers of :*

1. Paper cutting machine
2. Paper punching machine
3. Tobacco cutting machine
4. Hand pumps
5. Brass cylinders for hand pumps
6. All machineries for hand made match industries
7. Tin rollers for textile mills
8. Cast iron parts for cement factories, spinning mills, Textiles, Litho and offset machine parts and other parts as per parties' specifications

THE KAKA INDIAN FOUNDRY

THIRUTHANGAL P.O.

(Via) SIVAKASI, RAMANATHAPURAM DISTRICT

தச்சுத் தொழில் உற்பத்தி நிலையம்

கயத்தாறு

கயத்தாறு அஞ்சல் — திருநெல்வேலி மாவட்டம்

கயத்தாறு ஊராட்சி ஒன்றிய நிர்வாகத்தில் இயங்கும் தச்சுத் தொழில் உற்பத்தி நிலையத்தில் குறைந்த விலையில், உயர்ந்த ரக மரங்களைக் கொண்டு குறிப்பிட்ட காலத்தில் விவசாயிகளுக்கும், பள்ளிகளுக்கும், வீட்டுத் தேவைகளுக்கும், மற்றும் பல்வேறு அரசாங்க அலுவலகங்களுக்கும் தேவையான எல்லாவித மரச் சாமான்களும் வேண்டுகோளின் பேரில் கைதேர்ந்த தொழிலாளர்களைக் கொண்டு நல்ல முறையில் செய்து கொடுக்கப்படும்.

குறிப்பு :

உயர்ந்த ரக வண்டிகள் செய்வதற்கு தமிழகத்திலேயே சிறந்த இடம் கயத்தாறு.
விபரங்களுக்குக் கயத்தாறு ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் அவர்களை அணுகுக.

எஸ். ஜெபராஜ்,
தொழில் வளர்ச்சி அலுவலர்.

ச. த. ஜெயபாலன், பி.ஏ.,
ஆணையாளர்.

எஸ். கோதண்டராமுத் தேவர்,
பெருந்தலைவர்.

20-ம் பக்கத் தொடர்ச்சி—கருத்தைக் கவர்ந்த கழுகுமலை.

நடைகள் விற்பனையாகின்றன. இச் சந்தையின் சுகாதார நலனுக்காக ஆண்டிற்கு ரூ. 5,000 வரை செலவழிக்கப்படுகிறது, இச்சந்தை ஆண்டிற்கு ரூ. 36,000-க்கு குத்தகைக்கு விடப்படுகிறது.

### கூட்டுறவே விட்டுயர்வு

தனக்கென வாழாது பிறருக்கென வாழும் பண்பாடே வளமான வாழ்வுக்கு வழியமைக்கும் என்பதை உணர்ந்த கழுகுமலை வாழ் மக்கள் கூட்டுறவுத் துறையிலும் முன்னணியில் உள்ளனர். 509 உறுப்பினர்களைக் கொண்ட கூட்டுறவுப் பண்டகசாலையும், இரு கூட்டுறவு நாணயச் சங்கங்களும்—ஆண்டு தோறும் லாபம் பெறும் அளவுக்குச் சிறப்புற இயங்குகின்றன.

### தொழில் வளம் சிறக்க....

தீப்பெட்டி தயாரிக்கும் தொழிலின் காரணமாகத் தமிழகத்தின் ஸ்விடன் என்றே கழுகுமலை அழைக்கப்படுகிறது. இங்கு தீப்பெட்டித் தொழிற்சாலைகள் லாபகரமாக இயங்குகின்றன. உற்பத்தி வரியாக அரசினருக்கு, ஆண்டுக்கு ரூ. 8 லட்சம் செலுத்தப்படுகிறது. பருத்தி அரைக்கும் தொழில், எண்ணெய்த் தொழில், பனைத் தொழில் ஆகியவை இங்குச் செழிப்புற்று வளர்கின்றன. இங்குள்ள பனை பொருள் கூட்டுறவு விற்பனை நிலையத்திலிருந்து ஆண்டொன்றுக்கு ரூ. 1,27,635 பெறுமானமுள்ள பனை பொருட்கள் விற்பனையாகின்றன. கல்வேலைத் தொழிலும் இங்குச் சிறப்பான இடத்தைப் பெறுகின்றது. 46 உறுப்பினர்களைக் கொண்ட தேசிய கல்வேலைத் தொழிலாளர் சங்கம் அரசினரால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இங்கு உயர் நிலைப்பள்ளி ஒன்றும், ஆரம்பப்பள்ளி ஒன்றும், உயர் ஆரம்பப் பள்ளிகள் இரண்டும் இயங்கி வருகின்றன. 58 ஆசிரியர்களிடம் 1,684 மாணவர்கள் பயின்று, 90 சத விகிதத்திற்குக் குறையாமல் தேர்ச்சி பெறுகின்றனர். 235 ஏழை மாணவர்களுக்கு முறையாக மதிய உணவு அளிக்கப்படுகிறது.

### நோயற்ற வாழ்வு

இங்கு ஊராட்சி ஒன்றிய மருத்துவ மனை செயல்பட்டு வருகின்றது ஊராட்சி ஒன்றியம் ஆண்டொன்றுக்கு இம்மருத்துவ மனையை நடத்த ரூ. 16,000 செலவிடுகின்றது. நாளொன்றுக்கு 150 நோயுற்றோர் இம் மருத்துவ மனையால் பயனடைகின்றனர். சுகாதார வசதிகள் காரணமாய் இறப்பு விகிதம் 1,000-க்கு 16 ஆக குறைந்துள்ளது. குடும்ப நலத்திட்டத்தை செயல் படுத்துவதிலும் கழுகு மலைக்குத் தனியிடம் உண்டு. பிறப்பு விகிதமும் 1,000-க்கு 32 ஆக தற்போது குறைந்து வருகிறது.

### சாலை—குடிநீர் வசதிகள்

பேரூராட்சி பராமரிப்பின் கீழ் 1¼ மைல் நீளமுள்ள சிமெண்ட் சாலையும், கப்பிய சாலை 2 மைல் நீளமும், மண்சாலை 3 மைல் நீளமும் உள்ளன. மனித சக்தி திட்டமும் இங்குச் செயல்படுகிறது. குடி நீர் வசதிக்காக 19 குழாய்க் கிணறுகளும், ஒரு தெப்பமும், 10 குடி நீர் கிணறுகளும், இரு மேல் நிலை குடிநீர்த் தொட்டிகளும் பயன்படுகின்றன. இதில் ஒன்று ரூ. 10,000 செலவில் மக்களின் முழுப்பங்குத் தொகையுடன் உருவானதென்பது குறிப்பிடத் தக்கதாகும்.

### சிறுசேமிப்பு

கழுகுமலை மக்கள் சிறு சேமிப்பிலும் ஈடுபாடு உள்ளவர்கள். இங்கு 297 சேமிப்புக் கணக்குகளில் ரூ. 28,000-ம் 99 வளரும் மாத சேமிப்புக் கணக்குகளில் ரூ. 7,040-ம் ரூ. 3,900 தேசீய பாதுகாப்பு சேமிப்புப் பத்திரங்களிலும் முதலீடு செய்யப்பட்டுள்ளன.

95 சத விகிதம் வழக்குகளை வெற்றிகரமாக முடித்தமைக்கு 1967-ம் ஆண்டில் கழுகுமலை காவல் நிலையமும், மாவட்ட அளவில் முதல் பரிசைப் பெற்றுள்ளது.

### அண்ணாவின் அடிச்சுவட்டில்....

அம்பர் ராட்டை இங்குள்ள ராட்டை உற்பத்தி நிலையத்திலிருந்து நாட்டின் பல பாகங்களுக்கு அனுப்பப்படுகின்றன. ஆண்டு தோறும் 85,450 சிட்டை அளவில் கதர் நூல் உற்பத்தியாகிறது.

அரிசன மாணவர்களுக்கு விடுதி ஒன்று அரசினரால் ஆரம்பிக்கப்பட்டு, 50 மாணவர்கள் பயன் பெறுகின்றனர். தாழ்த்தப்பட்ட மக்களுக்கு குடியிருப்பு நிலம் ஒதுக்கப்பட்டு, அவர்களே தங்கள் கைப்பொருள் கொண்டு 13 குடியிருப்புகளை ரூ. 13,000 செலவில் அமைத்துள்ளனர்.

### திருமணம் செய்ய வசதி

குறைந்த செலவில் திருமணம் நடத்துவதற்கு வசதியான ஐந்து திருமண மண்டபங்கள் உள்ளன.

### சிரமியின் சிறப்பான பணி

கயத்தாறு ஊராட்சி ஒன்றியத்தில் 50 பேர்களைக் கொண்ட சிரமப் படையில், கழுகுமலைத் தொண்டர்கள் 13 பேர் உள்ளனர் சிரமிகள் சாலை அமைப்பு, பள்ளிகளுக்கு வெள்ளையடிப்பு ஆகிய பயனுள்ள வேலைகளில் ஈடுபடுகிறார்கள்.

கழுகுமலை பேரூராட்சியின் ஆண்டு வருமானம் ரூ. 66,000 ஆகும். ஆண்டு தோறும் சகல வரிகளையும், நிலுவை எதுவுமின்றி, எவ்வித நிர்பந்த நடவடிக்கையுமின்றி, வசூலிக்கப்படுகிறது என்பது போற்றத் தக்கதோடு, பின்பற்ற வேண்டியதுமாகும். பேரூராட்சியின் தலைவரான திரு என். எஸ். ராமசாமி நாயக்கர் மக்கள் தொண்டே பெரிதெனக் கொண்டு பணியாற்றும் பண்பாளர்.

### வழிகாட்டும் பேரூராட்சியின்நிர்வாகம்

ஒன்றுபட்ட உழைப்பே உயர்வளிக்கும் என்ற குறிக்கோளுடன் அயராது பாடுபட்டு, தமிழகத்தில் முதன்மைபெற்ற கழுகுமலை, மற்றையோருக் கெல்லாம் நல்லதொரு வழி காட்டியாகத் திகழ்கிறது.

பல்வேறு துறைகளிலும் வளர்ச்சி கண்டு முதல் பரிசு பெற்ற கழுகுமலை பேரூராட்சி, ஆக்க வேலைகளில் முனைந்து நின்று மேலும் பல வெற்றிகளைக் காண வாழ்த்துவதோடு, அதன் சிறப்பியல்புகளை நாட்டறியச் செய்வதில் கிராமநலம் பெருமிதம் கொள்கிறது.



# புதியதோர் உலகு செய்வோம்

[சென்ற இதழிலிருந்து தொடங்கப்பட்டுள்ள புதிய பகுதி இது. ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆற்றும் அரும்பணிகள் இங்கே சுருக்கமாக வெளியிடப்படுகிறது. —ஆசிரியர்.

## மேலூர் தெற்கு ஊராட்சி ஒன்றியம்

(மதுரை மாவட்டம்).

மதுரை மாவட்டத்திலுள்ள மேலூர் தெற்கு ஊராட்சி ஒன்றியம் மூலம் மே 1968-ல் நடைபெற்ற வேலைகள் விவரம் வருமாறு :

சிறு சேமிப்பு திட்டத்தின் கீழ் ரூ. 40,482·00 வசூல் செய்யப்பட்டுள்ளது. குடும்ப நலத் திட்ட அறுவை சிகிச்சை 25 பேர்களுக்கு செய்யப்பட்டுள்ளது.

1. ஒரக்காடு, 2. பூதூர், 3. மாபுஸ்தான்பேட்டை காலனி, 4. திருநிலை, 5. விச்சூர், 3 கட்டிடங்கள், 6. ஜனப்பன்சத்திரம், 7. பஞ்செட்டி, 2 கட்டிடங்கள், 8. வெக்குநல்லூர், 9. சின்னம்பேடுபேட்டை.

ஒன்றியத்திலிருந்து சுண்ணாம்பு மட்டும் அளிக்கப்பட்டது. வெள்ளை அடித்தல், துப்புரவு செய்தல் முதலிய எல்லா வேலைகளையும் சிரமித் தொண்டர்களே செய்து முடித்தனர். தொண்டர்கள் செய்த வேலையின் மதிப்பு சுமார் ரூ. 450 ஆகும்.

விவசாய முன்னேற்றத் திட்டத்தில் உயர் ரக ஏ.டி.டி. 27 நெல் விதை 250 ஏக்கரில் பயிரிடப்பட்டுள்ளது. கால்நடைப் பிரிவில் 137 கால்நடைகளுக்கு மருத்துவம் செய்யப்பட்டது. 39 கால்நடைகளுக்கு காயடிக்கப்பட்டதுடன், 853 கால்நடைகளுக்கு தடுப்பு ஊசியும் போடப்பட்டுள்ளது.

கருமார்களின் பொது வேலைக் கடன்கள் திருவாதவூர், கீழவளவு, சுத்தப்பட்டி ஆகியவற்றில் உள்ளதை தொடர்ந்து பராமரிக்க சம்பந்தப்பட்ட ஊராட்சிகளில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## சோழவரம் ஒன்றியம்

சோழவரம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கீழ்க்கண்ட 12 பள்ளிக் கட்டிடங்களுக்கு கோடை விடுமுறையில் சிரமித் தொண்டர்களால் வெள்ளை அடித்து சுத்தம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

### திருவட்டார்

திருவட்டார் ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் 97 பேர்களுக்குக் குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. விவசாயத் திட்டத்தின் கீழ் 663 கிலோ நெல் விதைகள் விவசாயிகளுக்கு கொடுக்கப்பட்டது.

1,290 டன் கலப்பு உரம் தயார் செய்யப்பட்டது. 743 கோழிகளுக்கும், 101 மாடுகளுக்கும் தடுப்பு ஊசி போடப்பட்டன.

### முஞ்சிறை

முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத்தில் 81 டன் இரசாயன உரம் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. பயிர் பாதுகாப்பு திட்டத்தின்கீழ் 11 டியூப் தெளிப்பான்கள் அளிக்கப்பட்டுள்ளது. 14 மாடுகளுக்குக் காயடிக்கப்பட்டுள்ளது. மாதாந்திர வளரும் கணக்குகளும் 17 திறக்கப்பட்டுள்ளன.

### கிள்ளியூர்

கால்நடைத் திட்டத்தின் கீழ் 623 கால் நடைகளுக்கு தடுப்பு ஊசி போடப்பட்டுள்ளது.

### அகஸ்தீஸ்வரம்

அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றிய எல்லையில் 58 பேர்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது. ஒன்றியத்தின் கீழ் செயல்படுகிற கொல்லு நச்சுக் கூடத்தில், நச்சு பிரிவில் ரூ. 1,267 மதிப்புள்ள பொருள்கள் உற்பத்தியாகியுள்ளன. ரூ. 2,645 மதிப்புள்ள பொருள்கள் விற்பனையுமாகியுள்ளன. கொல்லுப் பிரிவில் ரூ. 2,353 மதிப்புள்ள பொருள்கள் உற்பத்தியாகியதுடன் ரூ. 661 மதிப்புள்ள பொருள்கள் விற்பனையுமாகியுள்ளன. விவசாயிகளுக்கு 300 தென்னங் கன்றுகளும் 22 டன் நெல் விதைகளும் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

### தோவாளை

தோவாளை ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் சுப்பிரமணியபுரம் அழகிய நகர் ஆகிய இடங்களில் முறையே ரூ. 17,500 ரூ. 21,900 மதிப்பீட்டில் உயர் நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டப்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரால் திறந்து வைக்கப்பட்டது.

### குருந்தங்கோடு

குருந்தங்கோடு ஊராட்சி ஒன்றிய எல்லைக்குள் விவசாயத் திட்டத்தின் கீழ் 1,200 தென்னங் கன்றுகளும், 2½ டன் நெல் விதையும் விநியோகம் செய்யப்பட்டது. பயிர் பாதுகாப்பு மருந்து 450 கிராம், மற்றும் பூச்சி கொல்லி புட்டிகள் 38-ம் விநியோகம் செய்யப்பட்டன. கால்நடை திட்டத்தின் கீழ் 481 கோழிகளுக்கும், 50 மாடுகளுக்கும் தடுப்பு ஊசி போடப்பட்டன.

மீன் வளம் பெருகுவதற்காக ரூ. 10,600 மதிப்புள்ள நைலான் நூல் மீனவர்களுக்கு விநியோகிக்கப்பட்டது. தபால் நிலைய சேமிப்பு கணக்கில், ரூ. 5,400-ம் வளரும் மாதக் கணக்கில் ரூ. 5,175-ம் சேமிக்கப்

பட்டது. குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் 28 நபர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

### மேல்புறம்

விவசாயிகளுக்கு 2,115 தென்னங் கன்றுகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது. 113 ஏக்கர் நிலத்தில் பயிர் பாதுகாப்பு முறை கையாளப் பட்டது. குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் 52 நபர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

### இராஜாக்கமங்கலம்

இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றிய வட்டாரத்தில் முதல் தர நெல் வித்துக்கள் 15·477 கிலோ விநியோகம் செய்யப்பட்டது. 66 ஏக்கர் காய்கறி தோட்டங்களுக்கு பயிர் பாதுகாப்பு செய்யப் பட்டன. விவசாயிகளுக்கு 350 தென்னங் கன்றுகள் விநியோகம் செய்யப் பட்டது. கால்நடைத் திட்டத்தில் 46 கால் நடைகளுக்கு சிகிச்சை செய்யப் பட்டது. 1,172 கோழிகளுக்கு தடுப்பு ஊசி போடப்பட்டது. குடும்பக் கட்டுப் பாடு திட்டத்தில் 37 பேர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது.

### தக்கலை

தக்கலை ஊராட்சி ஒன்றியத்தில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் 21 நபர்களுக்கு அறுவை சிகிச்சை **செய்ய**ப்பட்டுள்ளது. சிறு சேமிப்பு **திட்டத்**தின் கீழ் ரூ. 11,630 வசூல் செய்யப்பட்டுள்ளது. 280 கோழி களுக்கு தடுப்பு ஊசி போடப் பட்டது. 30 கிலோ நைலான் விலை பாதி விலையில் விநியோகம் செய்யப் பட்டுள்ளது.

### கொங்குணுபுரம் ஒன்றியம்

கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்தில் மே திங்களில் ஆற்றிய பணிகள் வருமாறு:—

கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வாழக்குட்டபட்டி காவடிக்காரனூர், ரங்கம்பாளையம் கிராமங்களில் கிராமத்திற்கு ரூ. 10,000 மதிப்பீட்டில் பள்ளிக் கட்டிடங்கள் கட்டி முடிக்கப்பட்டன.

இந்த ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த முந்தையம்பட்டியில் ரூ. 3,000 மதிப்பீட்டில் ஒரு பள்ளிக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

வெள்ளாளபுரம் கிராமத்தில் ரூ. 3,000 ஒரு பள்ளிக்கூடம் கட்டி முடிக்கப்பட்டு 29—5—1968 அன்று திறந்து வைக்கப்பட்டது.

### மகளிர் நலம்

வெள்ளாளபுரம் வாசுகி மகளிர் மன்றத்தின் சார்பில் ரூ. 150 பெருமான குடிநீர் பாத்திரங்கள் வெள்ளாளபுரம் துவக்கப் பள்ளிக்கு அன்பளிப்பாக அளிக்கப்பட்டது.

### சிரமிப் படை

இந்த ஊராட்சி ஒன்றியத்திலுள்ள 38 பள்ளிகளிலும் உள்ள எல்லா கட்டிடங்களுக்கும் சிரமிப் படை தொண்டர்கள், ஆசிரியர்கள் மற்றும் பொது மக்களின் உதவியுடன் வெள்ளையடித்து முடிக்கப் பட்டுள்ளது.

### கடன் விநியோகம்

இந்த ஊராட்சி ஒன்றியத்தில், 1967–68 நிதி ஆண்டில் புதிய கிணறு மானியத் திட்டத்தின்கீழ் ரூ. 1,78,000 கிணறுகள் அடி. வெட்டுக்கும் உழவு மாடுகள் வாங்கவும் ரூ. 63,000-மும், பம்பு செட்டுகள் வாங்க ரூ. 15,000-மும் விவசாயிகளுக்குக் கடன் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

இந்த ஊராட்சி ஒன்றியத்தின் சுமார் ரூ. 14,000 அளவில் கிணறுகளுக்கு துளைபோடும் கருவி ஒன்று வாங்கப்பட்டு விவசாயிகளுக்கு வாடகைக்கு விடப்பட்டு வருகிறது.

Phone: 245

HABIB STORES

"SYED MANZIL", VIRUDHUNAGAR

*Branch:* SATTUR

*Agents:*

* M/s. General Radio & Appliances Limited.

* M/s. Addisons Paints & Chemicals.

* M/s. National Tobacco Company of India Limited.

* M/s. Nutrine Confectionery Company Private Limited.

*Proprietors:* HABIB INDUSTRIES, Virudhunagar,

*Manufacturers:* Quality Water Proof Papers and Allied Products

# தெவிட்டாத இன்பம்

**என்றும்போல் அன்றையபொழுதும் மலர்ந்தது பிர்சா கிராமத்தில் நிர்மலமான ஆகாயம்; குளிர்ந்த காற்று மக்களின் மனதில் ஒரு நிம்மதியை, நம்பிக்கையையூட்டின. மக்கள் அவரவர் வேலையில் முனைந்து செயல்படுபவராயினர். ஆனால் அது சிறிது நேரத்திலேயே மாறிவிட்டது.**

எட்டு திக்குக்களிலிருந்தும் கார்கள் அக்கிராமத்தையடைந்தன. அவற்றில் சில 'ஜீப்' கார்கள்; சில பெரிய கார்கள். அவையனைத்தும் சிவப்பு முக்கோணத்தைத் தாங்கிக் கொண்டு ஓர் அணியில் வந்து நின்றன. அவை மருத்துவர்கள், உதவியாளர்கள், மருந்துகள், கருவிகளைக் கொணர்ந்தன.

அலகாபாத் மாவட்டத்திலுள்ள "உருவா" வட்டாரத்தலைமையிடமே ஒரு சிறு மருத்துவக்கூடமாக மாறி விட்டிருந்தது. கார்களிலிருந்து இறங்கிய மருத்துவர்களும், உதவியாளர்களும் பற்பல அறைகளுக்குட் சென்று தங்களை தயார் படுத்திக் கொண்டு விட்டனர். அவர்கள் கிராமவாசிகளை எதிர் நோக்கிய வண்ணம் இருந்தனர்.

### மனமுவந்து முன் வந்தனர்

இவையெல்லாம் எதற்காக இருக்கலாம்? கிராமவாசிகளை, குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தில் சேர்த்து, அவர்களுக்கு அறுவைச் சிகிச்சை செய்யவும், கருத்தடை வளையத்தைப் (லூப்) பொருத்துவதற்காகத்தான்.

காலை மணி பதினொன்றைச் சிறிது தாண்டியிருக்கலாம். மக்கள் மெதுவாக வந்து கொண்டிருந்தனர், வட்டாரத் தலைமையிடத்தை நோக்கி. நேரம் செல்லச் செல்ல, மக்கள் பெருமளவில் வரத் தொடங்கி விட்டனர்.

### எதிர்நோக்கிய கிராமவாசிகள்

அக் கூட்டத்தில் அறுவை சிகிச்சை செய்து கொள்ள வந்திருந்தோரும், அவர்களை அழைத்து வந்திருந்தோரும், கருத்தடை வளையத்தை தரித்துக்கொள்ள வந்திருந்த மகளிரும் காணப்பட்டனர். அவர்கள் வரிசையில் நின்று தமது முறையை எதிர்நோக்கிக் காத்திருந்தனர். மருத்துவர்களும் சுறுசுறுப்புடன் பணியில் ஈடுபட்டனர்.

மாலையில் எல்லோருக்கும் சிகிச்சை முடிந்தவுடன், கணக்கிட்டு பார்க்கையில், அறுவை சிகிச்சை செய்து கொண்டோரும், "லூப்" பொருத்திக் கொண்டவருமாக 200 பேர்கள், குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை உளமார ஏற்றுக்கொண்டிருந்தனர்.

### இது ஒன்றல்ல

இவ்வட்டாரம் ஒன்றுதான், இப்பகுதியில் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் ஆர்வம் காட்டினதாக எண்ண வேண்டாம். இதற்கு நான்கு நாட்கள் முன்னதாக, கோரா ஆன் என்ற மற்றொரு இடத்தில் 285 கிராமவாசிகள், இப் பயனைப் பெற்றனர்.

அலகாபாத் மாவட்டத்திலுள்ள இன்னொரு வட்டாரம் மேஜா. இங்குள்ள நிலங்களில் 16 சத வீதத்திற்குத்தான் நீர்ப்பாசன வசதியிருக்கிறது. ஆனால் இந்த குறைந்த அளவு பாசனத்தைச் சார்ந்து சுமார் இரண்டரை லட்சம் மக்கள் வாழ்கின்றனர்.

### வறட்சி அளித்த தைரியம்

சென்ற ஆண்டு ஏற்பட்ட கடுமையான வறட்சியால், மேஜா வட்டம் பெரும் அவதிக்குள்ளாகியது; மக்கள் அதை தைரியத்துடன் எதிர்த்து போராடி வாகை சூடினாலும், மனதில் நிறைவு இல்லை. எனவே அவர்கள் எண்ணம் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு தானே திரும்பியது.

வெள்ளத்தை எதிர்த்து போராடலாம்; வறட்சியுடன் போரிட்டு வெல்லலாம். அவை யெல்லாம் சிறிது காலம் துன்பம் தந்து பின் மறையக் கூடியவை. ஆனால் மக்கள் தொகைப் பெருக்கமோ, காலா காலம், தலை முறைக்கு வந்த, பிரச்னையல்லவா? எனவே மேஜா மக்களின் ஆர்வம் இதில் சென்றதில் வியப்பில்லை.

### இருமுறை முதல் பரிசு

1967-ம் ஆண்டு டிசம்பர் திங்களில் நடைபெற்ற குடும்பக் கட்டுப்பாடு இயக்கத்தில் மேஜா வட்டம் முதல் பரிசைத் தட்டிக்கொண்டு சென்று விட்டது. அந்த வட்டாரத்தில் சுமார் 500 பேர்கள் அறுவைச் சிகிச்சைச் செய்து கொண்டும், "லூப்" பொருத்திக் கொண்டும், குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை மனதார ஏற்றுக் கொண்டனர். "திட்டமிட்டக் குடும்பம், தெவிட்டாத இன்பம்" அல்லவா?

அடுத்த ஆண்டு, அதாவது 1968 பிப்ரவரி நடைபெற்ற குடும்பக் கட்டுப்பாடு இயக்கத்திலும், மேஜா வட்டமே முதல் பரிசைப் பெற்றது. இது போது 600 பேர்கள் இத்திட்டத்தில் பங்கு பெற்று மகிழ் வெய்தினர்.

மக்கள் தொகைப் பெருக்கத்தை எதிர்த்துப் போராடும் நம் கிராமங்களின் பிரதிநிதியாக மேஜா வட்டம் விளங்குகிறது. எதிரிகளின் படையெடுப்பைவிட, மக்கள் தொகைப் பெருக்கம் பயங்கரமானது என்று எண்ணி, அவர்கள் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை ஏற்று, பிற கிராமங்களுக்கு ஒரு சான்றாக விளங்குகிறார்கள்.

சுமார் பத்தாண்டுகளுக்கு முன்பு, திராட்சைப் பயிர் செய்வதில் முனைந்தேன். ஆனால் அதில் எனக்கு பெரிய தோல்வியே ஏற்பட்டது. எனவே இம்மாதிரி ஆபத்து நிறைந்த பயிர்களில் ஈடுபடுவது தவறு” என்று என் சக உழவர்கள் என்னை எச்சரித்தார்கள். “என்னை ஒரு முட்டாள்” என்று கூட சொல்ல அவர்கள் தவறவில்லை.

# ஓர் இனிப்புக் கதை

“இப்போது எப்படி?”

“ஆனால் இப்போது என்னுடைய மதுரமான திராட்சை களை அவர்கள் நாள்தோறும் சுவைத்து இன்புற்றிருக்கின்றனர். என்னைப் பெரிதும் பாராட்டுகின்றனர்” என்றார் திரு மாணிக்க ராவ் பாடில்.

மைசூர் மாநிலத்திலுள்ள பீதார் மாவட்டத்தின் ஹல்லி என்ற கிராமத்தைச் சேர்ந்த திரு பாடில் அவர்களுக்கு, திராட்சை உற்பத்தியில் பெரிதும் ஆர்வம் உண்டு. அதில் முனைந்து ஈடுபட்டு, அதில் வெற்றிகாண அவர் துடிதுடித்துக் கொண்டிருந்தார். தொடக்கத்தில் சில ஆண்டுகள் அவர் தோல்வியையே தழுவினாலும், இறுதியில் வெற்றி, இலாபம் அவர் பக்கம் தான்.

“நண்பர்களின் எச்சரிக்கைகளுக்கு சிறிதும் செவி சாய்க்காமல், இப் பயிரில் முனைந்தேன். ஓர் ஏக்கர் நிலத்தில், 1957-ம் ஆண்டு திராட்சை நட்டேன். ஆனால் [என்னுடைய அறியாமையின் காரணமாக, எனக்கு தோல்வியே கிடைத்தது. கிராமவாசிகளின் நகைப்புக்கு ஆளானேன்” என்றார் திரு பாடில்.

ஆனால் திரு பாடில் சிறிதும் மனம் தளரவில்லை. மீண்டும் அடுத்த ஆண்டில் திராட்சைப் பயிர் செய்யத் தொடங்கினார். அயராது உழைத்து, பயிரைக் காப்பாற்றினார். அப்படியிருந்தும் கூட அவருக்குக் கிடைத்த மகசூல் திருப்திகரமாயில்லை.

## இறுதிவரை இழப்பல்ல

மைசூர் அரசின் தோட்டக்கலைத் துறை இவரது மாவட்டமான பீதாரில் ஓர் அலுவலகத்தை ஏற்படுத்தியது. அந்த ஆண்டிலேயே இவருக்கும் புது உற்சாகம் ஏற்பட்டது. அலுவலர்களை அணுகி, இவரது பயிர் பற்றி விசாரணை செய்ய முற்பட்டு, செயலிலும் இறங்கினார். தோட்டக்கலைத் துறை அலுவலர்கள் இவருக்குத் தேவையான தொழில் நுட்ப அறிவையும், யோசனைகளையும் மனமுவந்து அளித்து, பல வழிகளில் உதவி செய்தனர்.

அதுவரை, அவருக்கு, திராட்சைப் பயிரில் பெரும் இழப்பு தான் கிடைத்ததேயன்றி, பிறரின் நகைச் சொல்லிற்கு உரியவராகவும் இருந்தார்.



தோட்டக்கலைத் துறையினரின் ஆலோசனைகளை, திறம்பட பின்பற்றி குழிகள் தோண்டி, நட்டு, உரமிட்டு, பூச்சி மருந்துகள் அடித்து பயிரை செவ்வனே, கண்ணும் கருத்துமாய் பாதுகாத்தார். இரும்புக் கம்பிகளைக் கொண்டு நல்ல பந்தலை அமைத்தார். தொழில் நுட்பத்தை நன்கு கையாண்டதால், 1962-ம் ஆண்டில் அவருக்கு பெருமளவில் மகசூல் கிடைத்து. அதன் வாயிலாக அவருக்கு சுமார் ரூ 7,000 இலாபம் கிடைத்தது. இதைத் தவிர இன்னொரு முக்கியமான இலாபமும் அவருக்குத் தானாகவே கிடைத்தது. அதுதான் அவருக்குக் கிடைத்த, மனோதிடம், தன்னம்பிக்கை.

## எண்ணிலடங்கா தோட்டங்கள்

வெற்றிவாகை சூடிய அவருக்கு திராட்சைப் பயிரில் மேலும் ஆர்வம் பெருகுகிறது. ஓர் ஏக்கரில் பயிர்செய்த அவர், மேலும் ஓர் ஏக்கருக்கு திராட்சையை விரிவு படுத்தினார். தோட்டக்கலைத் துறையினர் தெரிவித்த வழி முறைகளை, செயல் விளக்கங்களை அப்படியே கவனமாக பின்பற்றினார்.

அதன் காரணமாக அவருக்கு ஆண்டிற்கு ரூ. 15,000 முதல் ரூ. 20,000 வரை வருவாய் கிடைக்கிறது. பீதார் மாவட்டத்திற்கே, அவர் தான் ஒரு மாதிரி திராட்சை விவசாயி. அவருடைய திராட்சைத் தோட்டமே மற்றவர்களின் தோட்டத்திற்கு ஒரு முன்மாதிரி. இவரைப்பின்பற்றிபெரும் பாலானவர்கள் திரட்சைப் பயிரில் ஈடுபட்டுள்ளனர். பீதார் மாவட்டத்தில் எண்ணிலடங்கா தோட்டங்களை இன்று காணமுடிகிறது.

திராட்சைப் பயிர் செய்வதில் திரு பாடில் ஒரு நிபுணராகி விட்டார் என்றே கூறலாம். “ஒரு புதிய டாக்டருக்கு, பழைய நோயாளி எவ்வளவோ சிறந்தவர்” என்கிறார் திரு பாடில். இது அவர் கண்ட அனுபவம்.

அவர் திராட்சையை எப்படி பயிரிடுகிறார்? அதை அறிவது பயனுடையதல்லவா?

15 முதல் 20 அடி இடை வெளியில் அவர் தண்டுகளை நடுகிறார். நட்ட 6 முதல் 9 மாதங்களுக்குள், கற்கலாலான தூண்களை நட்டு, வலுவான பந்தலை அமைக்க வேண்டும். வலுவான பந்தலிருந்தால், அனேக செலவுகள் தானே குறையும்” என்கிறார் திரு பாடில் அவர்கள்.



## வெற்றிக்கு உழைப்பு

அக்டோபர்-நவம்பர் மற்றும் மார்ச் ஏப்ரல் மாதங்களில்—அதாவது ஆண்டிற்கு இரு முறை—அவற்றை வெட்டி விடவேண்டும். அவ்வாறு செய்கையில் 'கால' நிலையை கருத்தில் கொள்ள வேண்டும்.

தகுந்த முறையில் கலவையுரங்களையும், ரசாயன உரங்களையும் இடுவது, உரிய காலத்தில் பூச்சி மருந்துகளைத் தூவுதலும், தெளித்தலும் அடுத்தடுத்து கவனிக்க வேண்டிய முக்கியமான காரியங்களாவன. திரு பாடில், ஓர் ஏக்கருக்கு 30 வண்டி கலவையுரமும், ஒரு செடிக்கு 5 கிலோ கடலைப் புண்ணுக்கு, 3 கிலோ மீன் உரமும் இட்டார். இவை தவிர, ஒரு செடிக்கு ஒரு கிலோ பொட்டாசியம் சல்பேட், 4 கிலோ சூப்பர் பாஸ்பேட், ¼ கிலோ அம்மோனியம் சல்பேட், ஒரு கிலோ ஸ்பார்டின் ஆகியவற்றை எப்ரல், அக்டோபர் மாதங்களில், இட வேண்டும். பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை பூச்சி மருந்து அடிப்பது மிகவும் அவசியம்.

## கண்கொள்ளாத் திராட்சை.

திரு மாணிக்கராவ் பாடிலின் திராட்சைத் தோட்டத்தில், ஒரு கொடியில் 200 திராட்சைக் குலைகளை காண்பது, கண்களுக்கு பெருவிருந்தாய் காட்சியளிக்கிறது. ஒரு குலை சுமார் ஒரு கிலோ எடை இருக்கிறது. இம்மாதிரியான குலைகளுக்கு கனத்தைத்தாங்க அடியிலிருந்து முட்டு கொடுப்பது அவசியம். அவ்வாறு அடியிலிருந்து குலைகளுக்கு முட்டுக் கொடுக்கக் கூடிய முறையில் பயிர் செழித்து வளர்ந்துள்ளதென்றால், திரு பாடிலுக்கு அதை விட பெருமை, உற்சாகம் வேறென்ன இருக்க முடியும்?

“உங்களுக்கு திராட்சைப் பயிரில் மட்டும் ஆர்வம் இருக்கிறதா?” என்று அவரை கேட்டதற்கு, “நெல், ஒட்டுச் சோளம், காய்கறிகள், மிளகாய் போன்றவற்றை பயிர் செய்வதிலும் எனக்கு ஈடுபாடு உண்டு. ஆனால் பீதார் மாவட்ட மண், வெட்பநிலை ஆகியவற்றைக் கொண்டு நோக்கினால், திராட்சைப் பயிரே சாலச் சிறந்தது” என்றார் திரு பாடில்.

“பஞ்சாயத்து ராஜ்”, இதழிலிருந்து இடம் பெறுபவை :
பக்கங்கள் : 13, 14, 15, 25, 26, 33முதல் 35 வரை

Articles reproduced from 'Panchayati Raj' etc on pages :
13, 14, 15, 25, 26, and from 33 to 35.

# அளவோடு பெற்று வளமோடு வாழுங்கள்



குடும்பக்கட்டுப்பாடு செய்திடுவீர்



கிராம நலம் பகுதி-2
GRAMANALAM PART-2

# ஊராட்சி அரசிதழ்
# PANCHAYAT GAZETTE


(இந்தப் பகுதியில் ஊராட்சி, ஊராட்சி வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய அரசு ஆணைகள் குறிப்பாணைகள் விதிகள் முதலியவற்றின் தமிழாக்கம் சுருக்கமாக இடம் பெறுகிறது.)

———o———

## ஊராட்சி வளர்ச்சி—19686-9-ம் ஆண்டு மானியங்களை முறைப்படுத்தல்—வழியுரைக்கும் விளக்க ஆணைகள்—பிறப்பிக்கப்படுகின்றன

## Panchayat Development—Regulation of statutory and non—statutory grants during the year 1968-69—Guiding instructions—issued —

1968-69-ம் ஆண்டில், ஊராட்சி ஒன்றியங்களின் பல்வேறு திட்டங்களில் ஏற்படும் செலவினங்களுக்கு தேவையான வழியுரைக்கும் விளக்க ஆணைகள் கிராமவளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1967-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 28-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1806-ல் பிறப்பிக்கப்பட்டன. (இவ்வாணையின் தமிழாக்கத்தை 1967-ம் ஆண்டு நவம்பர் திங்கள் "கிராம நலம்" இதழில் காண்க.) ஊராட்சி ஒன்றியங்களுக்கான செலவினங்களை 1968–69-ம் ஆண்டு முழுவதற்கும் முறைப்படுத்துவதற்கு தகுந்த விளக்க ஆணைகள் பிறப்பிக்க வேண்டியது பற்றி அரசு பரிசீலனை செய்தது.

2. அதற்கேற்ப 1968–69-ம் ஆண்டில் செலவினங்களை முறைப்படுத்துவதற்கு, 1960-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 16-ம் நாளிட்ட கிராம வளர்ச்சி அரசு ஆணை எண் 664 மற்றும் கிராம, வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 25-1-1961-நாளிட்ட அரசு ஆணைஎண் 211 ஆகியவற்றில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணைகளுடன் இவ்வாணையின் இணைப்பிலுள்ள விளக்ககுறிப்புகளும் சேர்ந்து பின்பற்றப்பட வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

### இணைப்பு

#### விளக்கக் குறிப்புகள்

**பிரிவு 1—உள்ளூர் வருவாய் சாதாரணமானவை**

1. உள்ளூர் செஸ்வரி
2. உள்ளூர் மேல் வரி
3. பதிவுப் பத்திர மேல் வரி
4. கேளிக்கை வரி, மற்றும் காட்சி வரியின் மீது மேல் வரி
5. கிராம வீட்டு வரி
6. உள்ளூர் சிறிய வருவாய்கள்

1968–69-ம் ஆண்டிற்கு மேற்கண்ட வருவாய் மற்றும் மானியங்களை முறைப்படுத்த 1960-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 16-ம் நாளிட்ட கிராம வளர்ச்சி அரசு ஆணை எண் 664, கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1961-ம் ஆண்டு ஜனவரி திங்கள் 25-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 211 மற்றும்அவற்றின்பின்பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் அனைத்தும் பின்பற்றப்பட வேண்டும்.

**பிரிவு II—அரசு மானியங்கள் (சட்டத்தில் வருபவை):**

7. நிலவரி ஒதுக்கீடு (சட்டத்தில் வருபவை).
8. உள்ளூர் கல்வி மானியம்.
9. உள்ளூர் செஸ் மேல் வரி இணைப்பு மானியம்.
10. உள்ளூர் விலைசுள் மானியம்.
11. கிராம வீட்டு வரி இணைப்பு மானியம்.

1968-69-ம் ஆண்டுக்கு மேற்கண்ட மானியங்களை முறைப்படுத்த 1960-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 16-ம் நாளிட்ட கிராம வளர்ச்சி அரசு ஆணை எண் 664, மற்றும் கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 1961-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 25-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 211 ஆகியவற்றில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணைகள் பின்பற்றப்பட வேண்டும்.

**பிரிவு 111—அரசு மானியங்கள் (சட்டத்தில் வராதவை).**

12. கல்வி துணை மானியம்.
13. ஆசிரியர்களின் அகவிலைப்படிக்குரிய சிறப்பு மானியம்.
14. மதிய உணவு மானியம்.

1968–69-ம் ஆண்டிற்கு மேற்கண்ட மானியங்களை முறைப்படுத்த, தற்போதுள்ள விளக்க ஆணைகள் பின்பற்றப்படவேண்டும்.

15. சமூகக் கல்வி மானியம் 1968–69-ம் ஆண்டில் ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு இம்மானியத்தின் கீழ் ஏற்படும் செலவு ரூ. 2,000-க்குள் (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்)இருக்க வேண்டும். கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1960-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 10-ம் நாளிட்ட அரசு

ஆணை 2604-ல் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணைகளுக்கு ஏற்ப 1968–69-ம் ஆண்டிற்கும் திட்டங்கள் உருவாக்கப்பட வேண்டும்.

**16. மகளிர், சேய்நல மானியம்**

இந்த மானியத்திற்கான ஆணைகள் தனியாக பிறப்பிக்கப்படும்.

**17. கிராம வேலைகள் மானியம்**

**(அ) இணைப்புச் சாலைகள்**

1968–69-ம் ஆண்டில், ஓர் ஊராட்சி ஒன்றியத்திற்கு, இம் மானியத்தின் கீழ், இணைப்புச் சாலைகளுக்காகும் செலவுகள் ரூ. 16,100-க்குள் (ரூபாய் பதினாறாயிரத்து நூறு மட்டும்) இருக்க வேண்டும். அரிஜனங்கள் மற்றும் இதர பின் தங்கிய வகுப்பினரின் நலனுக்காக, மேற்கொள்ளப்படும் இணைப்புச் சாலைகளுக்காகும் செலவில் 10 சத விதத்தை அரிஜன நலத் துறை அளிக்கவேண்டும் என்று கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1964-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 4-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1414-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் இந்த ஆண்டிற்கும் பொருந்தும்.

**(ஆ) குடிநீர் விநியோகம்**

சாதாரணக் கிணறு வேலைகள் மற்றும் குழாய் மூலம் குடிநீர் விநியோகம் ஆகியவற்றிற்கு 1968–69-ம் ஆண்டில் ஓர் ஒன்றியத்திற்கு ஏற்படும் செலவுகள் முறையே ரூ. 14,800 (ரூபாய் பதினான்காயிரத்து எண்ணூறு மட்டும்) மற்றும் ரூ. 10,750 (ரூபாய் பத்தாயிரத்து எழுநூற்றி ஐம்பது மட்டும்)க்குள் இருக்கவேண்டும். அரிஜனங்கள் மற்றும் பின் தங்கிய வகுப்பினரின் நலனுக்காக மேற்கொள்ளப்படும் குடிநீர் வேலைகளுக்கு ஏற்படும் செலவில் 15 சத விதத்தை அரிஜன நலத் துறை வழங்க வேண்டுமென்று, கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1964-ம் ஆண்டு ஜூலைத் திங்கள் 4-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1414-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் இதற்குப் பொருந்தும்.

**(இ) பள்ளிக் கட்டிடங்கள்**

ஓர் ஒன்றியத்திற்கு 1968–69-ம் ஆண்டிற்கு ஏற்படும் செலவு ரூ. 7,600 (ரூபாய் எழாயிரத்து அறுநூறு மட்டும்) இருக்க வேண்டும். இவ்வாணையின் இணைப்பில் விவரிக்கப்பட்டுள்ள இரண்டாம் நிலையை கடந்த வட்டாரங்களுக்கு (இணைப்பில் பிற்சேர்க்கை) ஏற்படும் செலவுகள் 28 Education-of-Development Schemes By schemes in tho Fourth Plan III Parmacy (iii) Grants to Local Bodies—H- Educational grants to Post Stago II Blocks) என்ற கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்படவேண்டும்.

கிராம வேலைகள் மானியத்திலுள்ள நிதி ஒதுக்கீட்டில் 20 சத வீதம் அரிஜனங்களின் நன்மைக்குரிய வேலைகளில் மட்டும் செலவிடப் படவேண்டும்.

**18. உள்ளூர் பாசன மானியம்**

கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1964-ம் ஆண்டு ஆகஸ்டுத் திங்கள் 13-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1681-ல் பிறப்பிக்கப்பட்ட ஆணைகளின்படி. இந்த மானியத்திற்குரிய செலவுகள் முறைப்படுத்தப் படவேண்டும்.

**19. வேளாண்மை மானியம்**

கீழ்க்காணும் திட்டங்களுக்குரிய செலவினங்கள் 1968–69-ல் அவற்றிற் கெதிராக குறிப்பிட்டுள்ள தொகைகளுக்குள் இருக்கவேண்டும்.

**1. வேளாண்மைத் திட்டங்கள்.**— ஓர் ஒன்றியத்திற்கு ரூ. 21,800 (ரூபாய் இருபத்தி ஒராயிரத்து எண்ணூறு மட்டும்).

**2. கால்நடைபராமரிப்புத் திட்டங்கள்.**- ஓர் ஒன்றியத்திற்கு ரூ. 6,10· (ரூபாய் ஆறுயிரத்து நூறு மட்டும்).

**3. மீன்வளம்.**—மீன்வளம் திட்டங்களுக்கான செலவுகளை முறைப் படுத்துவதற்குரிய ஆணைகள் தனியே பிறப்பிக்கப்படும்.

இத் திட்டங்களை நிறைவேற்ற கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1966-ம் ஆண்டு ஆகஸ்ட் 26-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 2064 மற்றும் அத்துறையின் 1966-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 3-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 2115 ஆகியவற்றில் பிறப்பிக்கப்பட்டுள்ள ஆணைகள் பின்பற்றப்படவேண்டும்.

**20. மகப்பேறு நிலையங்கள் நிர்வகிப்பு மானியம்.**

**21. மருந்தகங்கள் நிர்வகிப்பு மானியம்.**

இம் மானியங்களை முறைப்படுத்த இப்பொழுதுள்ள ஆணைகள் பின்பற்றப்பட வேண்டும்.

## பிரிவு IV—உள்ளூர் வருவாய் (சிறப்பானவை)

**22. உள்ளூர் பாசனக் கட்டணம்**

**23. கிராம வளர்ச்சி விகிதங்கள்**

**24. தன்னிச்சையாக அளிக்கும் வளர்ச்சி நன்கொடைகள்**

மேற்கண்ட வருவாய் ஆதாரங்களை முறைப்படுத்த 1960-ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 16-ம் நாளிட்ட கிராம வளர்ச்சி அரசு ஆணை எண் 664 மற்றும் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1961-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 25-ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 211 ஆகியவற்றில் பிறப்பிக்கப்பட்ட ஆணைகள் பின் பற்றப்பட வேண்டும்.

## பொதுவானவை

இவ்வாணையில் விவரிக்கப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகளெல்லாம், முடிவுறாத வேலைகளுக்கே முதலில் பயன்படுத்தப்படவேண்டும். முடிவுறாத வேலைகளுக்குரிய செலவுகளைச் சரிக்கட்டிய பின்னரே, புதிய வேலைகளை மேற்கொள்ள வேண்டும் என்று வருவாய்க் கோட்ட அதிகாரிகளுக்கு தெரிவிக்கப்படுகிறது. சில ஊராட்சி ஒன்றியங்களின் தேவைகள் சற்று கூடுதலாகவே இருக்கலாம். அப்படிப்பட்ட ஊராட்சி ஒன்றியங்களின் தேவைகளை நிறைவு செய்ய அக் கோட்டத்திற்குரிய நிதி ஒதுக்கீட்டை, அக் கோட்டத்திலுள்ள ஊராட்சி ஒன்றியங்களிடையே தாம் விரும்பியபடி. வருவாய்க் கோட்ட அதிகாரிகள் மறு நிதி ஒதுக்கீடு செய்யலாம். ஆனால், இந்த மறு நிதி ஒதுக்கீடானது அக் கோட்டம் முழுவதற்கும் சம்பந்தப்பட்ட திட்டத்திற்குரிய நிதி ஒதுக்கீட்டிற்கு மேற்படக் கூடாது. அதேபோன்று மாவட்ட அளவில், சம்பந்தப்பட்ட திட்டத்திற்குரிய நிதி ஒதுக்கீட்டை, அந்த மாவட்டத்திற்கு அந்த திட்டம் முழுவதற்குமுள்ள நிதி ஒதுக்கீட்டிற்குள் மறு நிதி ஒதுக்கீடு செய்ய, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு மாற்றங்கள் செய்கையில் சமுதாய வளர்ச்சித் திட்டத்திலுள்ள முதல் நிலை, இரண்டாம் நிலை வட்டாரங்கள் ஒரு புறத்திலும் இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்கள் மற்றொரு புறத்திலும் தனித் தனியே உள்ளவாறு மறு நிதி ஒதுக்கீட்டை தனியைப்படுத்திக் கொள்ள வேண்டும்.

இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்களின் பெயர்களை பிற்சேர்க்கையில் காண்க. பல்வேறு திட்டங்களுக்குரிய செலவினங்கள், பற்று வைக்கப்படவேண்டிய கணக்குத் தலைப்புகள், கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தின் குறிப்பாணை எண் 63240. கணக்கு 1/68-1 நாள் 5—4—1968-ன்படி. இருக்கவேண்டும்.



## இணைப்பிற்குரிய பிற்சேர்க்கை

1968–69-ல் இரண்டாம் நிலையைக் கடந்த வட்டாரங்கள் பட்டியல்.

**1. செங்கற்பட்டு மாவட்டம் :**

1 திருக்கழுக்குன்றம்
2 பூண்டி.
3 திருவள்ளூர்
4 கடம்பத்தூர்
5 பள்ளிபேட்டை
6 எல்லாபுரம்
7 ஸ்ரீபெரும்புதூர்
8 பூவிருந்தவல்லி
9 மதுராந்தகம்
10 பரங்கிமலை
11 மீஞ்சூர்
12 காட்டாங்குளத்தூர்
13 உத்திரமேரூர்

**வட ஆர்க்காடு மாவட்டம் :**

14 கலைப்பாக்கம்
15 துரிஞ்சாபுரம்
16 கீழ்ப்பெண்ணாத்தூர்
17 போளூர்
18 கே. வி. புரம்
19 சேத்துப்பட்டு
20 ஆர்க்காடு
21 வேம்பாக்கம்
22 பெரணமல்லூர்
23 திருப்பத்தூர்
24 ஆரணி

**தென் ஆர்க்காடு மாவட்டம் :**

25 கீரப்பாளையம்
26 மேல்புவணகிரி
27 பண்ருட்டி.
28 குறிஞ்சிப்பாடி.
29 சின்னசேலம்
30 மேலமலையனூர்
31 கள்ளக்குறிச்சி
32 செஞ்சி
33 மங்களூர்
34 உடுமலைப்பேட்டை
35 மரக்காணம்
36 திருநாவலூர்
37 கோலியனூர்

**தஞ்சாவூர் மாவட்டம் :**

38 திருத்துறைப்பூண்டி.
39 வேதாரணியம்
40 தலைஞாயிறு
41 அம்மாபேட்டை
42 வலங்கைமான்
43 கொள்ளிடம்
44 சீர்காழி
45 திருப்பனந்தாள்
46 மாயூரம்
47 செம்பனார் கோவில்
48 குத்தாலம்
49 கும்பகோணம்
50 திருவிடைமருதூர்
51 பாபநாசம்
52 முத்துப்பேட்டை
53 பட்டுக்கோட்டை
54 ஒரத்தநாடு
55 ஆவுடையார்கோவில்
56 நாகப்பட்டினம்
57 கீவளூர்
58 குடவாசல்

**திருச்சிராப்பள்ளி மாவட்டம் :**

59 கே. பரமத்தி
60 வேப்பந்தட்டி.
61 முசிறி
62 தாத்தையங்கார் பேட்டை
63 திருவரங்குளம்
64 அரவக்குறிச்சி
65 தொட்டியம்
66 திருமானூர்
67 பெம்பலூர்
68 துறையூர்
69 அரியலூர்
70 லால்குடி.
71 குளித்தலை

**மதுரை மாவட்டம் :**

72 மதுரை (கிழக்கு)
73 மேலூர் (வடக்கு)
74 வாடிப்பட்டி.
75 அலங்கா நல்லூர்
76 ரெட்டியார் சத்திரம்
77 ஆத்தூர்
78 மேலூர் (தெற்கு)
79 மதுரை (மேற்கு)
80 உசிலம்பட்டி.
81 செல்லம்பட்டி.
82 திருமங்கலம்
83 கள்ளிக்குடி.
84 டி.. கல்லுப்பட்டி.
85 சேடப்பட்டி.
86 திண்டுக்கல்
87 போடிநாயக்கனூர்
88 பழனி
89 ஆண்டிப்பட்டி.
90 வத்தலக்குண்டு
91 நத்தம்
92 திருப்பரங்குன்றம்

**இராமநாதபுரம் மாவட்டம் :**

93 ஸ்ரீவில்லிப்புத்தூர்
94 சிவகாசி
95 வத்திராயிருப்பு
96 ராஜபாளையம்
97 சிங்கம்புணரி
98 கண்ணங்குடி.
99 இராஜசிங்கமங்கலம்
100 திருவாடானை
101 காளையார் கோவில்
102 தேவகோட்டை
103 கமுதி
104 விருதுநகர்
105 கரியாப்பட்டி.
106 கல்லல்
107 மானமதுரை
108 கடலாடி.
109 முதுகுளத்தூர்
110 சாத்தூர்
111 பரமக்குடி.
112 வெம்பக் கோட்டை

### திருநெல்வேலி மாவட்டம் :

113 பரமக்குடி.
114 சேரன்மாதேவி
115 சங்கரன்கோவில்
116 மேல நீலித நல்லூர்
117 குருவிக்குளம்
118 கோவில்பட்டி.
119 வள்ளியூர்
120 இராதாபுரம்
121 மானூர்
122 ஆலங்குளம்
123 கருங்குளம்
124 சாத்தான்குளம்
125 வாசுதேவ நல்லூர்
126 ஆத்துக்குடி.

### கன்னியாகுமரி மாவட்டம் :

127 அகஸ்தீஸ்வரம்
128 மேல்புறம்
129 முன்சிறை
130 கிள்ளியூர்
131 குருந்தன்கோடு
132 இராஜாக்கமங்கலம்

### நீலகிரி மாவட்டம் :

133 உதகமண்டலம்
134 குன்னூர்
135 கோட்டகிரி
136 கூடலூர்

### கோயம்புத்தூர் மாவட்டம் :

137 சத்யமங்கலம்
138 கோபிசெட்டிப்பாளையம்
139 ஈரோடு
140 பெருந்துறை
141 கொடுமுடி
142 மொடக்குறிச்சி
143 தூக்கநாயக்கன்பாளையம்
144 பல்லடம்
145 சுல்தான்பேட்டை
146 திருப்பூர்
147 பொங்களூர்
148 காங்கேயம்
149 வெள்ளக் கோவில்
150 குண்டடம்
151 தாராபுரம்
152 அவினாசி
153 சூலூர்
154 பவானி
155 கிணத்துக்கடவு
156 பவானிசாகர்
157 பெரியநாயக்கன்பாளையம்
158 தளவாடி.

### சேலம் மாவட்டம் :

159 கங்கவல்லி
160 தளவாசல்
161 பெத்தநாயக்கன் பாளையம்
162 ஆத்தூர்
163 கொளத்தூர்
164 நாமகிரிப்பேட்டை
165 நங்கவல்லி
166 மேச்சேரி

### தர்மபுரி மாவட்டம் :

167 கிருஷ்ணகிரி
168 வேப்பனப்பள்ளி
169 காவேரிப் பட்டினம்
170 பருகூர்
171 பென்னாகரம்
172 ஊத்தங்கரை
173 மொரப்பூர்
174 ஓசூர்
175 தர்மபுரி

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 26—6—1968 தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1237-ன் சுருக்கம்.)

---

## ஊராட்சிகளிலுள்ள சாலைகளின் முன்னேற்றம்—பேரூராட்சிகளில் தூசு படியாத மேற்பரப்புள்ள சாலைகளை அமைக்க மானியம்.

## Grants—Improvements to village roads within Panchayats for providing dustless surfacing of roads—Budget provision for 1968—69—Rs. 5 lakhs—Sanctioned.

தூசு படியாத மேற்பரப்புள்ள சாலைகளை அமைக்க, பேரூராட்சிகளுக்கு பாதி மானியம் வழங்க, நடப்பாண்டு நிதி நிலை அறிக்கையில் ரூ.5 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது. கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ம் நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 155539-ஏ-ல் கண்டுள்ளபடி, தூசு படியாத மேற்பரப்புள்ள சாலைகளை அமைக்க ஏற்படும் செலவுகளுக்கு பாதி மானியம் அளிக்கும் வகையில் பேரூராட்சிகளை தேர்ந்தெடுத்து, அவற்றிற்கு மானியம் வழங்கும் அதிகாரம் கிராம வளர்ச்சி இயக்குநருக்கு அளிக்கப்பட்டது.

2. இச் செலவினம் "50. பொதுப் பணி 1—மானிய உதவி சி. கிராமப் போக்குவரத்துக்காக, உள்ளாட்சி நிறுவனங்களுக்கு மானியங்கள் (1) ஊராட்சி பகுதி [50 Public works—1. Grants-in-aid-c. Grants to local bodies for village Communication—[i]. Panchayat area"] என்ற கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

3. இதில் பின்பற்றப்பட வேண்டிய நடை முறை விதிகளைப் பொறுத்த வரையில், கிராம வளர்ச்சி இயக்குநரின் கருத்துக்களை அரசு ஏற்றுக் கொண்டு, கீழ்க்கண்ட ஆணைகளை பிறப்பிக்கிறது.

(அ) கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ம் நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 155539-ஏ-ல் வெளியிடப்பட்டுள்ள விளக்க ஆணைகளைத் தழுவி, ஊராட்சிக்கு 2 விதம், இத்திட்டத்தை ஊராட்சிகள் மேற்கொள்ள வேண்டும்.

(ஆ) தொடர்புள்ள வருவாய்க் கோட்ட அதிகாரியின் பொறுப்பில் இம் மானியம் ஒப்படைக்கப்படும். வேலைகளை நிறைவேற்றியதன் பேரில் இம் மானியத் தொகையை தொடர்புள்ள ஊராட்சிக்கு அவர் தருவார்.

(இ) பேரூராட்சிகளில் நடைபெறும் வேலைகளின் முன்னேற்றத்தை அப்பகுதியின் வருவாய்க்கோட்ட அதிகாரி மேற்பார்வையிடுவார்.

(ஈ) மாதாந்திர முன்னேற்ற அறிக்கையும், ஓராண்டு செலவின பட்டியல்களையும் கிராம வளர்ச்சி இயக்குநருக்கு அனுப்பி வைக்க வேண்டும். இத்திட்டம் நிறைவேற்றப்பட்டு வருவதை அவர் பரிசீலித்து, கவனித்து வருவார்.

4. கிராம வளர்ச்சி இயக்குநரே திட்டத்தின் கட்டுப்பாட்டு அதிகாரியாகவும் நிதிக் கட்டுப்பாடு அதிகாரியாகவும் தொடர்ந்திருந்து வருவதோடு, நிதிகளை ஒதுக்குவதற்கும் மானியம் பயன்படுத்தப்படுவதை கவனிப்பதற்கும் அவரே பொறுப்பாளியாவார்.

5. கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1965-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 21-ம் நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 155539-ஏ-ல் பிறப்பிக்கப்பட்ட விளக்க ஆணைகள், இந்த அளவிற்கு மாற்றப்படுகின்றன.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 27-6-1968-பட்ட அரசு ஆணை எண் 1245-ன் சுருக்கம்).



---

## கிராமத் தொழில்கள் திட்டங்கள்—கிராமத் தொழில்களுக்கான திட்டக் குழுக்கள்—நாங்குநேரி ஓமலூர், ஸ்ரீபெரும்புத்தூர்—மீண்டும் அமைத்தல்—ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன,

## Rural Industries Project—Project Committees for Rural Industries—Nanguneri, Omalur Sriperumbudur—Reconstitution—Orders-Issued.

நாங்குநேரி, ஓமலூர், ஸ்ரீபெரும்புதூர் ஆகிய இடங்களிலுள்ள கிராமத் தொழில்களுக்கான மூன்று திட்டக் குழுக்களின் பதவிக்காலம் 31—8—1967 அன்று முடிவுற்றுவிட்டது.

2. நாங்குநேரி, ஓமலூர், ஸ்ரீ பெரும்புதூர் ஆகிய இடங்களிலுள்ள கிராமத் தொழில்களுக்குரிய மூன்று திட்டக் குழுக்கள் இவ்வாணையின் மூன்று இணைப்புகளிலும் உள்ளவாறு, உடனடியாக, மீண்டும் அமைக்கப்படவேண்டுமென்று, அரசு ஆணை பிறப்பிக்கிறது.

3. இக்குழுவிலுள்ள உறுப்பினர்களின் பதவிக் காலம் 31—3—1972-அன்று முடிவுறும். சாதாரணமாக், இக்குழுக்கள் இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை கூடும். அவசியமாயின், அடிக்கடியும் கூடும்.

** ** **

### இணைப்பு 1

#### மீண்டும் அமைக்கப்பட்ட திட்டக் குழு நாங்குநேரி [திருநெல்வேலி மாவட்டம்]

1. திரு ஹாஜி எம். எம்., பீர் முஹம்மது, எம்.எல்.ஏ.—தலைவர்.
2. திட்ட அதிகாரி, கிராமத் தொழில்கள் திட்டம், நாங்குநேரி—செயலாளர்.
3. வருவாய்க் கோட்ட அதிகாரி, சேரன் மாதேவி.
4. மாவட்ட கதர், கிராமத் தொழில்கள் அதிகாரி திருநெல்வேலி.
5. தொழில், வணிக உதவி இயக்குநர், திருநெல்வேலி.
6. மாவட்ட மகளிர் நல அதிகாரி, திருநெல்வேலி.
7. கோழி வளர்ப்பு வளர்ச்சி அதிகாரி, தென்காசி.
8. மாவட்ட வேலை வாய்ப்பு அதிகாரி, தென்காடு.
9. மீன் வளர்ச்சி துணை இயக்குநர், தூத்துக்குடி.
10. கோட்ட மின் பொறியாளர் (இயக்குதல் பராமரிப்பு), திருநெல்வேலி.
11. கோட்டப் பொறியாளர், (இயக்குதல், பராமரிப்பு, மின்சாரம்) நாகர்கோவில்.
12. ஏஜெண்ட், ஸ்டேட் பாங்க் ஆப் இந்தியா, திருநெல்வேலி.
13. தலைவர், தெற்கு திருநெல்வேலி மாவட்ட வளர்ச்சி மன்றத்தின், தொழில்கள், தொழிலாளர் நல நிலைக் குழு.
14. தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, நாங்குநேரி.
15. தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, இராதாபுரம்.
16. தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, களக்காடு.
17. தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, வள்ளியூர்.
18. திட்டப்பகுதியிலுள்ள சட்டமன்ற, பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும்.
19. திரு ராதாசங்கர், தலைவர், இராதாபுரம், ஊராட்சி.
20. திரு கலைஞர் எம். பி. எம். அப்துல் காதர், எருவாடி.
21. திரு எஸ். சேதுராமலிங்கம், நிலக்கிழார், களக்காடு.
22. திரு எம். பி. கிளமெண்ட், பி.ஏ., பி.எல்., வழக்கறிஞர், தொணுவர் அஞ்சல், நாங்குநேரி.

## இணைப்பு 2

மீண்டும் அமைக்கப்பட்ட திட்டக்குழு, ஓமலூர்
(சேலம் மாவட்டம்)

1. திரு கே. ஆர். கோவிந்தன், பி.ஏ., பி.எல்., எம்.எல்.ஏ.—தலைவர்.
2. திட்ட அதிகாரி, கிராமத் தொழில்கள் திட்டம், ஓமலூர்—செயலாளர்.
3. வருவாய்க் கோட்ட அதிகாரி, மேட்டூர்.
4. மாவட்ட கதர், கிராமத் தொழில்கள் அதிகாரி, சேலம்.
5. தொழில், வணிக துணை இயக்குநர், சேலம்.
6. மாவட்ட மகளிர் நல அதிகாரி, சேலம்.
7. கோழி வளர்ப்பு வளர்ச்சி அதிகாரி, சேலம்.
8. மாவட்ட வேலை வாய்ப்பு அதிகாரி, சேலம்.
9. மீன் வளர்ச்சி உதவி இயக்குநர், மேட்டூர்.
10. கோட்டப் பொறியாளர் (அமைப்பு வேலை) மேட்டூர் மின்சார அமைப்பு, சேலம்.
11. ஏஜெண்ட், ஸ்டேட் பாங்கு ஆஃப் இந்தியா, மேட்டூர்.
12. தலைவர், வடக்கு சேலம் மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் தொழில்கள், தொழிலாளர் நல நிலைக் குழு.
13. தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, ஓமலூர்.
14. தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, காடையாம்பட்டி.
15. தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, தாரமங்கலம்.
16. தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, மேச்சேரி.
17. தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, நங்கவல்லி.
18. தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, கொளத்தூர்.
19. திட்டப் பகுதியிலுள்ள சட்ட மன்ற, நாடாளு மன்ற உறுப்பினர்கள் அனைவரும்.
20. திரு எ. பானு, சேலம் கேம்ப், மேட்டூர், அணை, ஆர். எஸ்., சேலம் மாவட்டம்.
21. திரு பி. என். வெங்கடாசலம், தலைவர் புக்கம்பட்டி ஊராட்சி, ஊராட்சி ஒன்றியம்,
22. திரு பெருமாள், தலைவர், கருவல்லி, ஊராட்சி, கடையாம்பட்டி, ஊராட்சி ஒன்றியம், ஓமலூர், தாலுகா. சேலம் மாவட்டம்.
23. திரு கே. ராமலிங்க ஆசாரி, தலைவர், கொளத்தூர் கருமார், தச்சுத் தொழிலாளர் கூட்டுறவு தொழில் சங்கம் லிமிடெட்.

## இணைப்பு 3

மீண்டும் அமைக்கப்பட்ட ஸ்ரீபெரும்புதூர்
[செங்கற்பட்டு மாவட்டம்]

1. திரு டி. ராஜரத்தினம், எம்.எல்.ஏ.—தலைவர்.
2. திட்ட அதிகாரி, கிராமத் தொழில்கள் திட்டம், ஸ்ரீபெரும்புதூர்—செயலாளர்.
3. வருவாய்க் கோட்ட அதிகாரி, காஞ்சிபுரம்.
4. வருவாய்க் கோட்ட அதிகாரி, திருவள்ளூர்.
5. மாவட்ட கதர், கிராமத் தொழில்கள் அதிகாரி, செங்கற்பட்டு (இருப்பு—சென்னை).
6. தொழில், வணிக உதவி இயக்குநர், செங்கற்பட்டு (இருப்பு—சென்னை).
7. மாவட்ட மகளிர் நல அதிகாரி, செங்கற்பட்டு (இருப்பு—சென்னை).
8. கோழி வளர்ப்பு வளர்ச்சி அதிகாரி, செங்கற்பட்டு.
9. மாவட்ட வேலை வாய்ப்பு அதிகாரி, செங்கற்பட்டு (இருப்பு—சென்னை).
10. மீன் வளர்ச்சி உதவி இயக்குநர், செங்கற்பட்டு (இருப்பு—சென்னை).
11. கோட்ட பொறியாளர், (மின்சாரம்) அமைப்பு வேலைப் பிரிவு, காஞ்சிபுரம்.
12. ஏஜெண்ட், ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியா, ஸ்ரீபெரும்புதூர்.
13. தலைவர், வடக்கு செங்கற்பட்டு மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் தொழில்கள் தொழிலாளர் நல நிலைக் குழு.
14. தலைவர், தெற்கு செங்கற்பட்டு மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் தொழில்கள், தொழிலாளர் நல நிலைக் குழு.
15. தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, ஸ்ரீ பெரும்புதூர்.
16. தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, பூவிருந்தவல்லி.
17. தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, குன்னத்தூர்.
18. தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, [illegible].
19. தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, கடம்பத்தூர்.
20. தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, பூண்டி.
21. தலைவர், ஊராட்சி ஒன்றியக் குழு, ஊத்துக்கோட்டை.
22. திட்டப் பகுதியிலுள்ள சட்டமன்ற நாடாளு மன்ற உறுப்பினர்கள் அனைவரும்.
23. திரு ஆர். எஸ். ராதாகிருஷ்ணன், கவரைத் தெரு, பூவிருந்தவல்லி, சென்னை.
24. ரெவரண்ட், ஃபாதர் இன்னையா, பி.ஏ., பி.டி., செல்லப்பட்டிடை இடையர்பாக்கம் அஞ்சல், அரக்கோணம் வழி.
25. திரு ஜி. தாஸ், உரிமையாளர், சந்திரா பேப்பர் பேண்ட், கரந்தாங்கல் கிராமம், ஸ்ரீபெரும்புதூர், அஞ்சல்.
26. திரு மணிவாசகம், தலைவர், கன்னிகைப்ப கிராமம் மற்றும் அஞ்சல் பெரியபாளையம் வழி திருவள்ளூர் தாலுகா.

(கிராம வளர்ச்சி உள்ளாட்சித்துறையின் 1968 ம் ஆண்டு ஜூன் மாதம் 27 ம் தேதியிட்ட அரசாங்க ஆணை எண் 1262.)



## குழந்தைகள் காப்பகங்கள்—"கேர்" நிறுவனத்தின் உதவியுடன் பள்ளி செல்லாத குழந்தைகளுக்கு உணவளித்தல், மற்றும் குழந்தைகள் காப்பகங்களுக்கு கட்டிடங்கள் கட்டுதல்.

**Child Welfare—Kuzhandhaigal Kappagams in Madras State—Programme of pre-school feeding and construction of buildings for Kuzhandhaigal Kappagams in collaboration with "CARE"—Proposal approved in principle—Orders issued.**

இம் மாநிலத்தில் தற்போது 1,000 குழந்தைகள் காப்பகங்கள் அல்லது முன்னிலைப் பள்ளிகள் உள்ளன. அவை 2-முதல் 5-வயது வரையிலான, பள்ளி செல்லும் வயதடையாத குழந்தைகளின் நலனை கவனிக்க, மகளிர் நலத் துறையின் ஆதரவில் செயல்படுகின்றன.

2. பள்ளி செல்லும் வயதடையாத குழந்தைகளுக்கு உணவளிக்கவும், குழந்தைகள் காப்பகங்களுக்கு கட்டிடங்கள் கட்டவும், மாநில அரசுடன் ஒத்துழைத்து, திட்டமொன்றை தொகுக்க, "கேர்" (CARE) நிறுவனம் முன் வந்துள்ளது. இத் திட்டம் இரண்டு பிரிவுகளைக் கொண்டது. (அ) இப்போதுள்ள 1,000 குழந்தைகள் காப்பகங்களிலும் உணவளிக்கும் திட்டம் (ஆ) இப்போதுள்ள 1,000 குழந்தைகள் காப்பகங்களுக்கு, கட்டிடங்கள் இல்லாத இடங்களில், கட்டிடங்களைக் கட்டுதல்.

உணவளிக்கும் திட்டம்.—குழந்தைகள் காப்பகத்திலுள்ள ஒவ்வொரு குழந்தைக்கும் இணையாக, காப்பகத்திலில்லாத மற்றொரு குழந்தைக்கும், கருவுற்ற மகளிர் ஒருவருக்கும் உணவளிக்க "கேர்" நிறுவனம் பொறுப்பேற்றுளது. ஒவ்வொருவருக்கும் நாளொன்றிற்கு 90 கிராம் வீதம் மாதம் ஒன்றிற்கு 22 நாட்களுக்குரிய உணவுப் பொருட்கள் "கேர்" நிறுவனம் வழங்கும். அவற்றிற்குரிய போக்குவரத்து, எரிபொருள், சமையல்காரர்களின் ஊதியம், ஊறுகாய், மற்றும் இதர செலவினங்களை மாநில அரசு ஏற்றுக்கொள்ள வேண்டும். இத் திட்டத்தை நிறைவேற்ற, "கேர்" நிறுவனத்திற்கு ஏற்படும் நிர்வாகச் செலவையும் கூட, அரசே ஏற்றுக் கொள்ள வேண்டும். இத் திட்டத்தை செயல்படுத்த, அரசிற்கு ஏறக்குறைய சுமார் 21 முதல் 22 லட்ச ரூபாய் செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த உணவளிக்கும் திட்டத்திற்கு அந்நிறுவனத்தின் உதவியானது, குறைந்தது 5 ஆண்டுகளுக்கு கிடைக்கும் என்று, "கேர்" நிறுவனம் உறுதியளித்துள்ளது. உள்ளூரில் ஏற்படும் செலவுகளை பொறுத்த வரையில் குறைந்தது 50 சத வீதமாவது பொது மக்களிடமிருந்து உள்ளூர் நன்கொடையாக வசூலிக்கப்பட வேண்டுமென்று முடிவு செய்யப்பட்டுள்ளது.

**கட்டிடங்கள் கட்டுதல்.**—நெடுஞ்சாலை, கிராமப் பணிகள் துறையுடன் கலந்தாலோசித்து, ரூ. 4,750 மதிப்பளவில் ஒரு கட்டிடம் கட்ட மாதிரித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. கட்டப்பட வேண்டிய ஒவ்வொரு குழந்தைகள் காப்பக கட்டிடத்திற்கும் ரூ. 3,500-ஐ காப்புத் தொகையாக தொடர்புள்ள ஊராட்சி ஒன்றிய ஆணையாளரிடம் செலுத்த "கேர்" நிறுவனம் ஒப்புக் கொண்டுள்ளது. எஞ்சிய ரூ. 1,250—ஆனது உள்ளூர் நன்கொடை மூலம் பெறப்படும். செலவில் எந்த ஒரு பகுதியையும் மாநில அரசோ, ஊராட்சிகளோ, ஊராட்சி ஒன்றியங்களோ ஏற்றுக் கொள்ளாது. கிராம வளர்ச்சி இயக்குநருடனும், மகளிர் நல இயக்குநருடனும் கலந்தாலோசித்து, குழந்தைகள் காப்பகம் கட்டப்பட வேண்டிய இடங்கள் பற்றி பிறகு முடிவு செய்யப்படும்.

3. இக் கோரிக்கைகளை அரசு பரிசீலனை செய்து, இத் திட்டங்களுக்கு கொள்கையளவில் அனுமதியளிக்கிறது. இதற்கு ஏற்படும் மொத்த செலவுகள் போன்ற மேலும் இதர பொறுப்புகளை சென்னையிலுள்ள "கேர்" நிறுவனத்துடன் கலந்தாலோசித்து அனுமதியளிக்கும் வகையில் மேலும் ஆணைகள் நாளடைவில் பிறப்பிக்கப்படும். இத் திட்டத்தை வெற்றிகரமாக செயல்படுத்த, ஊராட்சிகள் ஊராட்சி ஒன்றியங்களின் நெருங்கிய ஒருங்கிணைப்பு அவசியம் தேவையிருப்பதால், இத்திட்டத்திற்கு கிராம வளர்ச்சி இயக்குநரே பொறுப்புள்ளவராக இருக்கவேண்டுமென்றும் அரசு தீர்மானித்துள்ளது.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 17-5-1968 நாளிட்ட அரசு ஆணை எண் 963-ன் சுருக்கம்.)

மக்கள் தொகைக் கணக்கெடுப்பு—ஊராட்சி ஒன்றியவாரியான மக்கள் தொகை கணக்கு

(சென்ற இதழ் தொடர்ச்சி.)

| வரிசை எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | மக்கள் தொகை | வரிசை எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | மக்கள் தொகை |
|---|---|---|---|---|---|
| | கோயம்புத்தூர் (மேற்கு) | | | தர்மபுரி | |
| 1 | பல்லடம் | 54.410 | 1 | கிருஷ்ணகிரி | 47,021 |
| 2 | சுல்தான்பேட்டை | 50,336 | 2 | வேப்பனப்பள்ளி | 44,444 |
| 3 | திருப்போரூர் | 67,991 | 3 | காவேரிப்பட்டணம் | 109,165 |
| 4 | பொங்கலூர் | 45,860 | 4 | பருகூர் | 88033 |
| 5 | அவனாசி | 95,080 | 5 | ஊத்தங்கரை | 104,118 |
| 6 | சூலூர் | 92,676 | 6 | பெண்ணாகரம் | 92,378 |
| 7 | பெரியநாயக்கன் பாளையம் | 64,271 | 7 | ஓசூர் | 66,169 |
| 8 | கிணத்துக்கடவு | 74,620 | 8 | தர்மபுரி | 59,317 |
| 9 | உடுமலைப் பேட்டை | 92,994 | 9 | மொரப்பூர் | 81,127 |
| 10 | தொண்டமுத்தூர் | 62,582 | 10 | பாபிரெட்டிப்பட்டி | 57,314 |
| 11 | அன்னூர் | 74,540 | 11 | சூளகிரி | 73,127 |
| 12 | பொள்ளாச்சி (வடக்கு) | 72,615 | 12 | நல்லம்பள்ளி | 80,371 |
| 13 | பொள்ளாச்சி (தெற்கு) | 54,957 | 13 | பாலக்கோடு | 114,484 |
| 14 | சர்க்கார் சாமக் குளம் | 57,300 | 14 | தளி | 100,005 |
| 15 | காரமடை | 89,578 | 15 | அரூர் | 77,162 |
| 16 | குடிமங்களம் | 43,268 | 16 | கெலமங்களம் | 85,153 |
| 17 | பேரூர் | 100,989 | | | |
| 18 | மதுக்கரை | 69,084 | | | |
| 19 | ஆனைமலை | 93,743 | | | |
| 20 | மடத்துக் குளம் | 56,142 | | | |
| 21 | வால்பாறை | 80,029 | | | |
| | | 1,493,139 | | | 1,280,288 |

—தொடரும்.

## 1 இந்த இதழில்...


| | பக்கம் |
|---|---|
| காஞ்சித் தலைநகர் விழா .. .. | 1 |
| மொரிஷியஸ் தீவினிலே.. .. .. | 3 |
| எத்தனை கோடி வெற்றி .. .. | 7 |
| விலங்கின வளர்ப்பு— | |
| நகராட்சிகளின் பொறுப்புகள் .. .. | 11 |
| கருத்தைக் கவர்ந்த கழுகு மலை .. .. | 20 |


## அடுத்த இதழில்...

தமிழகத்தின் சிறந்த ஊர்ப்பணியாளர்—அட்டைப்படத்துடன் சிறப்புக் கட்டுரை.

தமிழகத்தின் சிறந்த கிராமமென இரண்டாவது பரிசு பெற்ற அனந்தலை.

"கவியரங்கம்" விழாவிற்கு மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சரின் பாராட்டுக் கவிதை.

காந்தியடிகள் நாட்காட்டி—மாண்புமிகு கல்வி அமைச்சரின் வேண்டுகோள்.


ஆசிரியக் குழுத் தலைவர் :

திரு T. A. S. பாலகிருஷ்ணன், I.A.S.

வெளியிடுபவர் : திரு ஜி. திருமால், எம்.ஏ. ஐ. ஏ. எஸ்.

ஆசிரியர் : திரு. எஸ். வேங்கடசாமி, எம். ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras. Edited by the Public Relations Officer and published by the Director of Rural Development, Madras-9. Chairman of the Editorial Committee: Thiru T. A. S. Balakrishnan, I.A.S., Wrapper printed at Vadapalani Press, Madras-26.


# கழுகுமலை தமிழகத்தின் சிறந்த கிராமம்

(நெல்லை மாவட்டம்)



பேரூராட்சி மன்ற உறுப்பினர்கள்



REGD. No. M. 7277

© தமிழக அரசு, 1968


**Stanes**

ஸ்டேன்ஸ் நிறுவனத்தார் மகிழ்ச்சியுடன் அளிக்கும்

"கோல்டு ஸீட்" வீரிய ஒட்டு விதைகள்

உயர் விளைச்சலுக்கும், பெருகிய லாபத்துக்கும் உத்திரவாதமானவை.
நவீன முறையில் வெளிநாட்டு இயந்திரங்களில் பக்குவமாகி, அதிக முளைப்பு
வீரிய சக்தியும், அங்கீகரிக்கப்பட்ட இன சுத்தமும் பெற்றவை.

தற்போது வினியோகத்திலிருக்கும் எங்களது உன்னத ரகங்கள் :—

1. "கோல்டு ஸீட்" வீரிய ஒட்டு சோளம் CHS-I
2. "கோல்டு ஸீட்" வீரிய ஒட்டு கம்பு HB1-I
3. "கோல்டு ஸீட்" வீரிய மக்காச் சோளம்

(a) டெக்கான் (தக்ஷிண வீரிய மக்காச் சோளம்)—மஞ்சள் ரகம்
(b) கங்கா—3 (குறைந்த வயது—மஞ்சள் ரகம்)
(c) கங்கா சபேட்—2 (வெள்ளை ரகம்)
(d) ஹை-ஸ்டார்ச் (வெள்ளை ரகம்)

விதை உற்பத்தியாளர்கள் :—

தந்தி : "கோல்டுஸீட்" — போன் : 30442

கோயமுத்தூர் ஸீட்ஸ் கார்ப்பரேஷன்,
பேரூர், கோயமுத்தூர்-10.

உங்களது விதைத் தேவைக்கும், விபரங்களுக்கும் :—

டி. ஸ்டேன்ஸ் & கம்பெனி லிட்,
உர இலாகா,
த. பெட்டி எண் 1312, கோயமுத்தூர்-18.

தந்தி : ஸ்டேன்ஸ். போன் : 23351, 23352, 23353, 23354.

தொழிற்சாலைகள் :—

| | | | |
|---|---|---|---|
| வளவனூர், விழுப்புரம், போன்-25 | துடியலூர், போன்: 25385 | ஆவன்யாபுரம், மதுரை, போன் : 5533 | தச்சநல்லூர், திருநெல்வேலி, போன் : 195 |


# கிராமநலம்




❋ முதல் பரிசு பெற்ற
ஊர்ப்பணியாளர் ❋

ஆகஸ்ட் 1968 * சிறப்புக்கட்டுரை






# கிராமநலம்

தமிழக அரசின் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை மாத இதழ்

கதிர் 13 | ஆகஸ்ட் 1968 | நெல் 11




(மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி)

*[நல்லோர் உழவர், வானொலி வாயிலாக, "சொல்லோர் உழவராகி" குடந்தையில் 13—8—1968 அன்று நடைபெற்ற கவியரங்கில் பங்குகொண்டதைப் பாராட்டும் பா.]*

(அறுசுவை அகவல்)

"அறுசுவை கொண்டது அருந்தமிழ் விருந்து;
ஆர்வம் மிகுந்த அன்பர் உலகம்,
இன்முகம் பொலிய, இதயம் களித்தெழ,
ஈன்றோர் சான்றோர் ஆன்றோர் அனைவரும்,
உயர்ரக மணி விதை ஊட்டும் வளத்தை
ஊரார் உணர உயர்கவி கேட்டோம்.
எழில் நிறை வானொலி என்றும் வாழ்க
ஏர்த் தொழில் வல்லார் எதிலும் வல்லார்.
ஐயம் இல்லை: அறிக இவ்வையம்
ஒப்புமை யில்லா உயர்விதை ஆறும்
ஓங்கி, விளைச்சல் உயர்ந்திடச் சிறந்து
ஔவை புகழ்போல் வளர்க! தழைக்க!!"

*[மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் இக் கவிதையை, அமைச்சர் அவர்கள் அச்சமயம் வெளிநாட்டிலிருந்ததால், கவியரங்கில், கிராம வளர்ச்சித் துறை இயக்குநர் திரு ஜி. திருமால் அவர்கள் வாசித்தளித்தார்.]*

---

எதிர்ப்புறம் அட்டையில் (மேலே) குடந்தையில் 1968-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13-ம் தேதி அன்று நடைபெற்ற விவசாயக் கவியரங்கத்தையும், (கீழே) முதற் பரிசு பெற்ற ஆறு விவசாயக் கவிஞர்களையும் காணலாம். [முதல் அட்டைப்படம் : சிறப்புக் கட்டுரை—12-ம் பக்கம்]

சுதந்திரத் திருநாளான ஆகஸ்டு பதினைந்தாம் தேதியன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தமிழக மக்களுக்கு வானொலி மூலம் விடுத்த செய்தியின் முழு விவரம் வருமாறு:—

# எதிர்காலத்தின் பொன்னொளி

[மாண்புமிகு முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை]

"இன்று சுதந்திரத் திருநாள்—ஆகஸ்டு 15—அடிமைத் தளைகள் அறுபட்ட நாள்—ஆங்கில ஏகாதிபத்தியம் அகன்ற நாள்—நம்மை நாமே ஆண்டு கொள்ளும் உரிமையினைப் பெற்ற நாள்—வெற்றித் திருநாள்—விழா நாள்!

இந்தியா, பிரிட்டிஷ் பிடியிலிருந்து தன்னை விடுவித்துக்கொண்ட நாளை—சுதந்தரம் பெற்ற நாளை—ஒவ்வோர் ஆண்டும் விழாவாக்கி மகிழ்கிறோம்!

### பெருமித நிலை....

உலகிலே உள்ள பல்வேறு நாடுகளும், சுதந்திரத் திருநாளின் போது, நமக்கு வாழ்த்துச் செய்திகளை வழங்கி மகிழ்கின்றன.

அடிமைப்பட்டுக் கிடக்கும் நாடுகளின் பட்டியலிலே இருந்து வந்த இந்தியா, உலக அரங்கிலே சுதந்திரம் பெற்ற நாடுகளின் வரிசையிலே பெருமிதத்துடன் வீற்றிருக்கும் நிலையைப் பெற்றுத் தந்த நாளே, 1947 ஆகஸ்டு பதினைந்து.

நாட்டுக்கான புதிய வரலாற்றை பொன் எழுத்துக்களால் எழுதத் துவங்கிய அந்த ஆகஸ்டு 15—ஒவ்வோர் ஆண்டும் நாட்டுக்குத் திருநாளாகிறது.

மகிழ்ச்சியும் எழுச்சியும் பெற்றிட-வாழ்த்தும் வணக்கமும் கூறிட—உறுதியும் அஞ்சாமையும் பெற்றிட—சுருக்கமாகக் கூறுவதனால், பெற்ற சுதந்திரத்துக்கு ஏற்றவர்களாக நம்மை ஆக்கி கொள்ள—சுதந்திரத்தின் முழுப் பயனை நாட்டவர் அனைவரும் பெற்றிட—அதற்கான அறிவாற்றலையும் பண்பாட்டையும் வளர்த்துக் கொள்ளவே இந்த ஆகஸ்டு பதினைந்து.

வீரம்—வெற்றியைத் தந்தது: தியாகம்-சுதந்திரத்தை தந்தது: வீரமும் தியாகமும் போற்றத்தக்கவை : அதிலும் உலக உத்தமர் காந்தியடிகள் வகுத்தளித்த அறநெறி நின்று இந்தியா பெற்ற சுதந்திரம் உலக வரலாற்றுக்கே ஒரு புதுமையானதாகும்.

'இந்தியா விடுதலை பெற வேண்டும்' என்ற நல்லெண்ணம் கொண்டிருந்தவர்களிலேயே பலரும், இங்கும் சரி—வேறு நாடுகளிலும் சரி—'காந்தியடிகளின் போர்முறைபலன் தரும்' என்ற நம்பிக்கையைப் பெற்றிட முடியவில்லை—துவக்கத்தில். ஆனால், ஆண்டுகள் செல்லச் செல்ல, 'விடுதலை பெற்றாக வேண்டும்' என்ற ஆர்வமும் எழுச்சியும், 'அதற்காக எந்தத் தியாகமும் மேற்கொள்வோம்' என்ற உறுதியும் படித்தோரிடம் மட்டுமல்ல—பாமரர் என்று கூறப்படுவோரிடமும் எழுந்தது, ஏகாதிபத்தியம் தகர்ந்தது.

கோட்டையில் சுதந்திர தின அணிவகுப்பு (15-8-68)





### அண்ணல் காட்டிய பாதை

இன்று அண்ணலுக்கும் அவர் காட்டிய பாதை நின்று அறப்போர் நடாத்தி—இன்னுயிரை



இழந்து.....தியாக பூமியாக இந்நாட்டை மாற்றி அமைத்தோருக்கும் நாட்டு மக்கள் அஞ்சலி செய்வது முறை—கடமை.

என்ற திடமான எண்ணமும் தோன்றி எதிர் காலத்துப்பொன்னொளியும் நமது கண்களுக்குத் தெரிந்திடக்கூடிய நாள் ஆகஸ்டு பதினைந்து:

இன்று இலண்டனிலும், மாஸ்கோவிலும், வாஷிங்டனிலும், டோக்கியோவிலும், பெர்லின் பாரீஸ், ரோம் போன்ற தலை நகர்களிலெல்லாம், 'இந்தியா மிகப்பெரிய நாடு, பன்னெடுங் காலம் அடிமைப்பட்டுக்கிடந்தது: இருபத்தொரு ஆண்டுகளுக்கு முன்பே விடுதலை பெற்றது. இன்று அங்கு சுதந்திரநாள் விழா' என்று பேசுவர் முகமலர்ச்சியுடன் :

### அன்றும் இன்றும்

முன்பு அடிமைப்பட்டுக் கிடந்தபோது :

" ஐயோ பாவம் " என்ற முறையிலும், 'அவர்களால் என்ன ஆகும்?' என்ற முறையிலும் "இந்தியாவா! அங்கு மக்கள் 'அஞ்சி அஞ்சிச் சாவார் : அவர் அஞ்சாத பொருளில்லை அவனியிலே" என்ற விதமாகவும் இந்தியாவைப் பற்றிப் பேசினர்.

இன்று ? விடுதலை பெற்று—புதுவாழ்வு பெற்று—இந்தியா இன்று ஒளிமையமான எதிர்காலத்தைப் பெற்றிடும் உறுதியுடன் விளங்குகிறது என்று பாராட்டியும் வாழ்த்தியும் பேசுகின்றனர்.

காலத்தின் புகழ் ஒளி கண்களுக்குத் தெரிவது மட்டுமல்ல—இன்று நம்மை எதிர்நோக்கியுள்ள பிரச்சினைகளை—இன்னல்களை நாம் தீர்த்துக் கொள்ளத்தக்க ஆற்றலைப் பெற்றிட முடியும், பெற்றுக்கொள்வோம் என்ற உறுதியையும் அந்த உறுதி வழி நின்று பணியாற்றி நாட்டினைப் புன்னகைப் பூக்கோட்டமாக்கிட முடியும்

## விடுதலை நாள் விழா

## மாண்புமிகு முதலமைச்சரின் பேருரை

'அத்தகையோரின் வழிவழி வந்துள்ளோம்' என்று நினைவுபடுத்திக்கொள்வதும் எழுச்சி பெற்றிடத் தேவை :

வல்லமைமிக்க ஓர் ஏகாதிபத்தியத்தின் பிடியிலிருந்து விடுபடும் ஆற்றலைப் பெற்றிட முடிந்தது என்று எண்ணும்போது, கடந்த

ஆங்கில ஏகாதிபத்தியத்தின் பிடியிலே நாடு இருந்ததாலே விளைந்த கேடுகள் யாவை ? —வறுமை : அறியாமை, சமூகத்தில் சோர்வு, தன்னம்பிக்கையற்ற நிலை, திகைப்பு, தடுமாற்றம், இயற்கை வளத்தையும் பயன்படுத்த முடியாத நிலைமை, உரிமையற்ற நிலைமை.

இத்தனை கேடுகளுக்கும் காரணம்? இந்திய மக்கள் அறிவாற்றலற்றவர்கள் என்பது அல்ல : அவர்கள் அடிமைத்தனத்திலே சிக்கிக்கொண்டதுதான் என்பதனை உலகப்பேரறிவாளர் உணர்ந்தனர் : எடுத்துரைத்தனர் : சுதந்திர இந்தியா இந்தக் கேடுகளற்ற நாடாகத் திகழ முடியும் என்ற நம்பிக்கையைத் தெரிவித்தனர்.

வோம்—எந்த அளவு நமது நோக்கம் ஈடேறியிருக்கிறது. . . . வாழ்வும் வளமும் சமூகத்தில் எந்த அளவு பரவியிருக்கிறது—என்ற கேள்வியை நம்மை நாமே கேட்டுக்கொள்ளத் தானேவேண்டும்? கணக்கு பார்த்துக்கொள்ளத்தானே வேண்டும் : ஆகஸ்டு 15 அத்தகைய கணக்குப் பார்க்கும் நாள்.

## கணக்குப் பார்க்கும் நாள்

சுதந்திரம் கிடைத்து, இருபது ஆண்டுகளுக்கும் மேல் உருண்டோடிவிட்டன. இனி இங்கு இன்னும் இழிவும் வறுமையும் அறியாமையும் சமூகத்தில் சோர்வும், சுரண்டல் முறையும் இருந்திடின், உலகு, ' இதற்குக் காரணம் ஏகாதிபத்தியம் ' என்று எங்ஙனம் கூறும்?

நம்மை நாமே அல்லவா ஆளுகின்றோம்? நமது வாழ்வை அமைத்துக்கொள்ளும் பொறுப்பும் உரிமையும் நம்மிடமே அல்லவா இருக்கிறது? பிறர் எவருடைய கட்டளைக்கும் காத்திருக்கவேண்டிய நிலையா இன்று?—இல்லையே! எனவே உலகு கேட்கிறது? கேட்கத்தானே செய்யும். உலகு என்ன? நம்முடைய உள்ளமே கூடக் கேட்கத்தானே செய்கிறது. சுதந்திர நாடு ஆனபிறகு நாட்டின் வளமும் வாழ்வும் எந்த அளவு பெருகி உள்ளன? ' சாமான்யர்கள் ' என்ற பட்டியலிலே அடைப்பட்டுவிட்டிருக்கும் கோடிக்கணக்கான ஏழை எளியோர், உழவர், தொழிலாளர் எத்தகைய புதுவாழ்வை பெற்றுள்ளனர் ' என்ற கேள்விஎழாமலிருக்க முடியுமா?

### வளம் ஒருபுறம் : வறுமை மறுபக்கம்

அந்நியர் ஆண்டபோதே, ' இன்னல் துடைக்கப்படவேண்டும். வாழ்வு வளம் பெற வேண்டும் ' என்று கேட்டோமே? அந்த நிலை




காண்கின்றோம்—கைகட்டி வாய் பொத்தி நின்றிருந்த நிலை இல்லை. எங்கும் நம்மவர்களே அரசோச்சுகின்றனர்! எழில் மாடக் கூடங்கள், தொழிற் சாலைகள், அறிவாலயங்கள், மருத்துவமனைகள், புதிய பாதைகள், பாங்கான பணிமனைகள் எழுப்பியுள்ளனர்! உற்பத்திப் பெருகி, நாட்டுப் பொதுச் செல்வம் வளருவது தெரிகிறது.

ஆனால் இவைகள் பளிச்சிட்டுக் கொண்டிருக்கும்போதே, பிறிதோர் புறம் சேரிகள், சகதி நிறை இடங்கள்—கூரைகள்—குமுறிக்கிடக்கும் மக்கள், வேலையில்லாதார் தொகை வீங்கிற்

## வாழ்வில் வளம் பெற்றோமா ?

யைப் பெற்றளித்திட உன்னால்முடியாது : உனக்கு மனமும் எழாது என்றுரைத்தோமே—நம்மை நாமே ஆண்டால் மட்டுமே நல்ல நிலை நாட்டுக்கு ஏற்பட முடியும் என்று கூறி, ஏகாதிபத்தியத்தை விரட்டினோமே. இன்று நம்மை நாமே ஆண்டுகொள்ளும் வாய்ப்பினை இருபது ஆண்டுகளுக்கும் மேலாகப் பெற்றுள்

திடக்காண்கிறோம். பாதைகளையும் பள்ளங்களையும் பாங்கான மாளிகைகளையும் சிங்காரத் தோட்டங்களையும் வெள்ளையர்கூட அமைத்தனர்—ஓரளவு. ஆனால் இவை பளபளப்பூட்டும் முறை, புண்ணுக்குப் புனுகுபூசும் வழி, மனமயக்கத்தைத் தருவதாகச் செய்யப்படுவது.

[23-ம் பக்கம் பார்க்கவும்]






காந்தியடிகள் நாட்காட்டி

இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.,
கல்வி-தொழில் அமைச்சர்

காந்தி நூற்றாண்டு விழா
மாநிலக் குழு அலுவலகம்,
கோட்டை, சென்னை-9.

பேரன்புடையீர்,

வணக்கம். காந்தியடிகள் நூற்றாண்டு விழா, இந்த ஆண்டு அக்டோபர் திங்கள் 2-ஆம் நாளிலிருந்து, 1969 அக்டோபர் திங்கள் 2-ஆம் நாள் வரை நாடெங்கும் கோலாகலமாகக் கொண்டாடப்பட இருக்கின்றது. சமுதாயத்திலுள்ள அனைத்துப் பிரிவினரும் மிக்க ஆர்வத்தோடும் எழுச்சியோடும் பங்குகொண்டு, காந்தியடிகளுக்கு நன்றிக் கடன் செலுத்தும் இச்சீரிய நிகழ்ச்சியில், வணிகப் பெருமக்களும் தொழிலதிபர்களும் சிறப்பாகப் பணியாற்ற முன்வருமாறு நான் அன்புடன் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

நாட்டின் விடுதலைக்குப் பிறகு மலர்ந்துள்ள இளந் தலைமுறையினர் காந்தியடிகளை நேரிற் கண்டு மகிழும் பேறு பெறவில்லை. அவரது அறிவுரைகளையும் அறவுரைகளையும் நூல்கள் வாயிலாக அறிந்தே அவரது உள்ளத்தைப் புரிந்து கொண்டு அவர்பால் அன்பும் மதிப்பும் வைத்துள்ளனர். இத்தகைய இளந் தலைமுறையினரின் உள்ளத்தில் காந்தியடிகளின் திருவுருவமும், கொள்கை முழக்கமும் இடம் பெறுகின்றவகையில், அழகிய காலண்டர்களை வெளியிட்டு உதவுமாறு தங்களை அன்புடன் வேண்டுகின்றேன்.

இயற்கை எழில் குலுங்கும் காட்சிகளும், நாட்டின் பொருளாதார, சமூக முன்னேற்றங்களை ஓவியமாகக் காட்டும் காட்சிகளும் இடம் பெற்ற காலண்டர்கள் ஒவ்வோர் ஆண்டு ஏராளமாக வெளி வந்த வண்ணம் இருக்கின்றன. இந்த ஆண்டில் இப்படி ஒரு புதுமை செய்வது, காந்தியடிகளின் நூற்றாண்டு விழாவுக்கு மிகப் பொருத்தமாக இருக்கும் என எண்ணுகிறேன்.

பச்சிளங் குழந்தைக்கும் காந்தியடிகள் என்று புரியக்கூடிய அவரது பலவிதப் படங்கள் இருக்கின்றன. அவர் ஆழ்ந்து சிந்தித்து அரிய கருத்துக்களைத் தெரிவிக்காத துறையே இல்லை. இவற்றைப் பயன்படுத்திக் கொண்டு, காந்தியடிகள் பற்றிய எழிலும் எண்ணச் செறிவும் நிறைந்த காலண்டர்களை உருவாக்குவது கடினமாக இராது. தாங்கள் இவ்வகையில் சிந்தித்துச் செயல்பட்டு, காந்தி நூற்றாண்டு விழாக் குழுவினருக்கு உறுதுணையாக நின்று, நூற்றாண்டு விழா மிகப் பொலிவோடு தமிழகத்தில் கொண்டாடப்பட, 1969-ம் ஆண்டில் 'காந்தியடிகள் காலண்டர்களை' வெளியிடும் தங்கள் கடமையினை நிறைவேற்ற முன் வருமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

தங்களன்புள்ள,

இரா. நெடுஞ்செழியன்,
கல்வி-தொழில் அமைச்சர்

உயிர்த் துடிப்புள்ள
சக்தியின் ஊற்று!

VOLTAS

மெக்கார்மிக்

இன்டர்நேஷனல் டிராக்டர் B-275

பயிர்வளம் பெருகித் தழைத்தோங்கவே

அபார இழுதிறனைத் தரவல்லதாய், தேவைக்கேற்ப ஆக்கம்பெறும், ஆற்றல் மிகுந்த 35 ஹெச். பி. டீஸல் என்ஜினை உடையது இந்த டிராக்டர். எல்லா நிலைகளிலும் இயங்கி எத்தகைய பண்ணை வேலைக்கும் ஏற்றபடி உதவுமாறு உருவாக்கப்பட்டுள்ளது, இழுவை வேலைகளுக்குப் பொருத்தமானது.

எடுப்பான சிறப்பியல்புகள் :

- 4 ஸிலிண்டர் ஹெவி டியூட்டி என்ஜின்
- வெப்பநிலைக்குரிய ரேடியேட்டர்
- சீரான இடைவெளிகளோடு அமைந்த பத்து வேகநிலைகள்
- டிபரன்ஷியல் லாக்
- நன்றாக்குளிர்ப்புள்ள டிஸ்க் பிரேக்குகள்
- [illegible]
- இணைபொருந்தும் பண்ணைச் சாதனங்கள்.

INTERNATIONAL TRACTOR

—நாத்திறதும் சேவைக்கும் ஒரு சர்வதேசச் சின்னம்

தயாரிப்பாளர்கள் :

இன்டர்நேஷனல் டிராக்டர் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட்.

ஏகபோக விநியோகஸ்தர்கள் :

வால்டாஸ் லிமிடெட்
அக்ரோ-இன்டஸ்ட்ரியல் பிராடக்ட்ஸ் டிவிஷன்.

150-B, மவுண்டு ரோடு,
சென்னை-2.





2-சக்கர டிரெயிலர்



தண்டு முனை மவுல்டுபோர்டு கலப்பை

ஆஃப்ஸெட் சட்டிக் கலப்பை

கொத்துக்கலப்பை

PS/IT/1A/69 TAM

'நமக்குத் தொழில் கவிதை, நாட்டுக்குழைத்தல்' என்ற அமரகவி பாரதியாரின் கவிதை வரிகளை மாற்றி நமக்குத் தொழில் உழவு, நாட்டுக்குழைத்தல் என்று ஆறு கவிஞர்கள் இல்லை, உழவர் பெருங் குடியினர் குடந்தைக் கவியரங்கில் நிரூபித்தனர்.

1968 ஆகஸ்ட் மாதம் 13-ம் நாளன்று குடந்தை மூர்த்தி கலையரங்கில் மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் திரு கருணாநிதி அவர்கள் தலைமையில் நடைபெற்ற கவியரங்கில், நல்லோர் உழவர்கள், சொல்லேர் உழவர்களாகக் காட்சி அளித்தனர்.

திருச்சி வானொலி நிலையத்திலிருந்து ஒலிபரப்பாகும் வேளாண்மை நிகழ்ச்சிகளின் இரண்டு ஆண்டு நிறைவை ஒட்டி நடைபெற்ற இக் கவியரங்கம் புதுமையானது.

திருச்சி மாவட்டம் காரைக்குறிச்சியைச் சேர்ந்த திரு கரும்பாயிரம் அவர்கள் ஆடுதுறை 27 நெல் பற்றிய கவிதையை அரங்கேற்றினார்.

தர்மபுரி மாவட்டம் மூக்கனூர்ப்பட்டியைச் சேர்ந்த திரு இரா கண்ணிமை ஐ. ஆர். எட்டு நெல்லைப் பற்றிய கவிதையை அரங்கேற்றினார்.

சேலம் மாவட்டம் சின்னகரசபாளையம் ஊரைச் சேர்ந்த திரு மூவேந்தன் என்கிற தமிழரசு அவர்கள் வீரிய ஒட்டுச் சோளம் பற்றிய கவிதையை அரங்கேற்றினார்.

வட ஆர்க்காடு மாவட்டம் கம்மவான்பேட்டை திரு கே. எஸ். இராதாகிருஷ்ணன் அவர்கள் எச். பி. 1 வீரிய கம்புப் பற்றிய கவிதையை அரங்கேற்றினார்.

# நமக்குத் தொழில் உழவு

(குடந்தை திரு எஸ். பி. தியாகராஜன், எம். ஏ.)

"பார் முழுதும் ஏர்முனையிலே" என்று உழவர் பெருமக்கள் பாட்டிலே கொண்டாட்டம் போடுவது பழமையான காட்சியாக இருக்கலாம். ஆனால் உயர் வளரக உணவுப் பயிர்கள் பற்றி தாளாண்மை மிக்க வேளாண்மைப் பெருமக்கள் தம் தம் அனுபவத்தை கவிதையாக்கி, அரங்கேற்ற வைத்த திருச்சி வானொலி நிலையத்தினரின் சீரிய பணி புதுமையானது—இந்தியா முழுமைக்கும் புதுமையான காட்சி தான். அப்புதுமைக் காட்சியினைக் கண்டு, கேட்டு மகிழ்ந்த கட்டுரையாசிரியர், புகழ்மிக்க, சுவையான நிகழ்ச்சிகளை, கண்கொள்ளாக் காட்சிகளை கட்டுரையாக்கித் தருகிறார், சுவை குன்றாமல்.

—ஆசிரியர்]

தலைப்பு—புதிய பாதை.

பொருள்—உயர் வளரகப் பயிர்களைப் பற்றியது. அதாவது (1) ஆடுதுறை 27 நெல், (2) ஐ. ஆர் 8 நெல் (3) சி. எஸ். எச். 1 சோளம் (4) எச். பி. 1 கம்பு (5) வீரிய ஒட்டு மக்காச் சோளம் (6) கோ. 7 ராகி ஆகிய உயர் விளைச்சல் தானியங்களைப் பற்றியதாகும்.

இக்கவியரங்கத்தில் கலந்து கொள்ளும்படி மாநிலம் முழுவதுமுள்ள புலமைப் படைத்த விவசாயப் பெருங்குடி மக்கள் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள்.

முதலில் வட்டார அளவில் விவசாயக் கவிஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பின்னர் மாவட்ட அளவில் ஒவ்வொரு ரக தானியத்திற்கும் ஒரு கவிஞராக ஆறு சிறந்த கவிஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மாவட்ட அளவில் தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயக் கவிஞர்களிலிருந்து மாநில அளவில் ஆறு சிறந்த கவிஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

அந்த ஆறு விவசாயக் கவிஞர்களும் தங்கள் கவிதைகளை குடந்தை கவியரங்கில் அரங்கேற்றினர். 'சிறந்த விவசாயக் கவிஞர்' என்பதற்கான சான்றிதழும் டிரான்ஸிஸ்டரும், பூச்சி மருந்து தெளிப்பானும் அந்த ஆறு கவிஞர்களுக்கும், மாண்புமிகு வேளாண்மை அமைச்சர் திரு ஏ. கோவிந்தசாமி அவர்கள் அளித்தார்கள்.

கோவை மாவட்டம் குனியமுத்தூரைச் சேர்ந்த திரு நஞ்சப்பா வீரிய ஒட்டு மக்காச் சோளம் பற்றிய கவிதையை அரங்கேற்றினார்.

மதுரை மாவட்டம் தாமரைக்குளத்தைச் சேர்ந்த திரு ப. செல்லபாண்டியன் அவர்கள் கோ-7 ராகி பற்றிய கவிதையை அரங்கேற்றினார்.

விழாவின் தொடக்கத்திலே வரவேற்புரை வழங்கிய திருச்சி வானொலி நிலைய இயக்குநர் திரு எம். எஸ். கோபால் அவர்களின் வரவேற்புரையே கவிதை வடிவில் இருந்தது. கவிதைகளை தேர்ந்தெடுத்த முறைகளை எல்லாம் கவிதை வடிவில் ஆக்கித் தந்தார்.

" அரங்கி லுள்ளார் அவைதந்த கவிஞர் ஏறு
திட்டுகின்ற திட்டமெல்லாம் திறம்படவே செயலாற்ற
காட்டுகின்ற புதியபாதை வழியே சென்றிடுவோம்
ஊட்டந்தரும் உணவு பயிர் விளைச்சல் செய்திடுவோம்
வாட்டமின்றி வாழ்வதற்கு வழிகாண வேண்டு
மெனில்
நாட்டமுடன் வேளாண்மை நன்முறையில் செய்திடு
வோம் "

என்ற வானொலி நிலைய இயக்குநரின் கவிதை வரிகள் செவிக்குமட்டும் உணவில்லை; நம் நினைவுக்கும் நெஞ்சுக்கும் நீதியாகவும்-நியதியாகவும் அமைந்தன.



மாநில அளவில் கவியரங்கில் பங்குகொண்ட சிறந்த விவசாயக் கவிஞர்களுக்கு மாண்புமிகு விவசாய அமைச்சர் பரிசளித்தார்.

நெல்லென்றும் வரகென்றும்
கம்பென்றும் கரும்பென்றும்
உளுந்தென்றும் பருப்பென்றும்
எள்ளென்றும் கொள்ளென்றும்
உணவு பெருக்கிடுவீர்—உற்பத்தி செய்
திடுவீர்"

என்ற கவிதை வரிகள் நகைச்சுவையோடு நல்ல கருத்துக்களை அழகாக வலியுறுத்துகின்றன. பொதுப்பணி அமைச்சர் அவர்கள் பரிசுபெற்ற கவிஞரை அழைத்து—

"காடுகமழ் நீடுபுகழ்
பீடுமிகு நாடுநிதம்
பாடுபட விடுநிறை
ஆடுதுறை இருபத்தேழு"

என்று கூறிய விதம் மிகச் சிறப்பாக இருந்தது.

### புதிய முயற்சி

விவசாயக் கவிஞர்கள் உயர் விளைச்சல் ரகப் பயிர்களைப் பயிரிடும் முறைகளை கவிதை வடிவில் தந்தார்கள். வேளாண்மை உலகுக்கு இது புது முயற்சி. இந்தியா முழுவதற்கும் வழிகாட்டும் திட்டம்.

தமிழக அரசு வேளாண்மைத் துறையில் மாபெரும் புரட்சியை உருவாக்கி வருகிறது. அப்புரட்சியில் பங்கேற்கும் நல்லோர் உழவர்கள் சொல்லேர் உழவர்களாக இருக்கின்றனர். அவர்களது புலமை நாட்டுக்கு நல்வழி காட்டுவதாக அமைந்துள்ளது. அந்த வேளாண்மைக் கவிஞர்கள் நம்மை அழைத்துச்செல்லும் புதிய பாதை வெற்றிப் பாதையாக இருக்கும்.

அத்தனையும் அடிக்கரும்பெனச் சொல்லத்தகும் அக் கவிதைகளை முழு வடிவில் வாசகர்கள் சுவைக்க 'கிராம நலம்' வெளியிடும் என்னும் நம்பிக்கையால், அவைகளை நான் விவரிக்கவில்லை.

பொதுப்பணித்துறை அமைச்சர் திரு கருணாநிதி அவர்களின் தலைமை உரையைப்பற்றி சொல்லவா வேண்டும்? தாம் கலைஞர் மட்டுமல்ல; கவிஞர்கூட என்பதை நிலை நாட்டினார்.

பரிசுபெற்ற கவிஞர்களில் உழவுத் தொழிலில் உயரிய இடம்பெற்றிருக்கும் தஞ்சைத் தரணியைச் சேர்ந்தவர்கள் ஒருவர்கூட இல்லை என்ற குறையை பொதுப்பணி அமைச்சர் அவர்கள் தமது கவிதைகளால் போக்கிவிட்டார்.

கற்பனையழகும் கலைநயமுமிக்க அமைச்சரின் கவிதையில் தமிழகத்தின் ஆறுகளை வரிசைப்படுத்தி ஒரு சிறு கதை கூறிய அழகே அழகு.

உழுவார் உலகத்தார்க்கு ஆணி என்பதை விளக்கிட உழவனோர் தாமரை என்றும், உழவனோர் மன்னன் என்றும், உழவனோர் வீரன் என்றும், உழவனோர் ஒளியன் என்றும், உழவனோர் தெய்வம் என்றும் அமைச்சர் விளக்கிய நயம், அவரது கவிதைத் திறனுக்கும் அறிவாற்றலுக்கும் சீரிய எடுத்துக்காட்டு.

"பின் நிலையில் இருந்திட்டோம் பலநாளாய் உணவில்
தன்னிறைவு காண்பதற்கு ஊக்கம் கொள்வோம்
அந்நிலை எய்திட
முன்னிலை நிற்கும் நம் அரசு
நாட்டிலே உற்பத்தி பெருக்கென்றால்—அதைவிடுத்து
வீட்டினிலே உற்பத்தி பெருக்குகின்றார்......
முத்தென்றும் மணியென்றும்
சிட்டென்றும் சிமிழென்றும்
கண்ணென்றும் மூக்கென்றும்
கணக்கின்றி பெறுதல் விட்டு ..

புதிய பாதை கவியரங்க விழாவின்போது வெளிநாட்டிலிருந்த தமிழக உள்ளாட்சி அமைச்சர் கவிதையிலே தமது வாழ்த்துகளை அனுப்பியிருந்தார்கள். கிராம வளர்ச்சித்துறை இயக்குநர் திரு திருமால் அவர்கள் விழாவில் வாசித்த அக்கவிதையில்—

"ஈன்றோர் சான்றோர் ஆன்றோர் அனைவரும்
உயர்ரக மணி விதை ஊட்டும் வளத்தை
ஊரார் உரை உயர்கவி கேட்போம்"

என்று கூறியிருப்பது சாலப் பொருத்தமானதாகும்.

ஆமாம். அந்த வேளாண்மைக் கவியரங்கம் புதுமையானது—புகழுக்குரியது என்பதைவிட—அக்கவியரங்கைக் கேட்டோரை 'நமக்குத் தொழில் உழவு' என்பதைச் சொல்லிக்கொள்வதை பெருமைக்குரியதாக்கியது. பெருமிதம் கொள்ளச்செய்தது. இதைவிட அக்கவியரங்க வெற்றிக்கு வேறு சான்று வேண்டுமா?

[ மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரின் கவியரங்கத் தலைமையுரை (கவிதை வடிவில்) முழுதும் அடுத்த இதழில் இடம் பெறும்.]



# இரண்டாவது சிறந்த கிராமமெனப் பரிசு பெற்ற அனந்தலை

[செங்கற்பட்டு மாவட்டம் வாலாசாபாத் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அனந்தலை கிராமம், தமிழகத்தின் இரண்டாவது சிறந்த கிராமமென்று (1966-67) தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது. அக்கிராமத்தைப் பற்றிய குறிப்புகளைக் கீழே காணலாம்.]

ஒரு கிராமத்தில் மக்கள் சமுதாயம் தனது வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்வதற்கான அடிப்படைத் தேவை, பங்கேற்கும் தலைவருக்கு பொதுப் பணியில் இருக்கும் ஆர்வமும், கிராம நலனுக்கான காரியங்களில் மக்களின் ஒன்றுபட்ட ஒத்துழைப்புமேயாகும்.

அனந்தலை—கொளத்தூர், எடக்குப்பம், புதுப்பேட்டை ஆகிய உட்கடை கிராமங்களைக் கொண்ட ரெவின்யூ கிராமமாகும். 1959-ல் இங்கு ஊராட்சி மன்றம் அமைக்கப்பட்டது. மக்கள் தொகை 2829 ஆகும். அனந்தலை ஊராட்சியின் சராசரி ஆண்டு வருவாய் ரூ. 5,000. பெண் உறுப்பினர் உள்பட 12 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கிறார்கள்.

### தேடிக்கொண்ட பொது வசதிகள்

அனந்தலை ஊராட்சி நான்கு மைல்கள் நீளமுள்ள பொதுப் பாதைகளையும் குடிநீர் வசதிக்கென 6 பொதுக் கிணறுகளையும் பராமரித்து வருகிறது. ஊராட்சியில் உள்ளடங்கிய எல்லாக் கிராமங்களிலும் 5 வானொலிப்பெட்டிகள் உள்ளன. சிறுவர் பூங்கா ஒன்றும் படிப்பகத்துடன் கூடிய நூல் நிலையமொன்றும் நன்கு பயன்படுகிறது.

சுமார் 25 ஏக்கர் பரப்புள்ள ஒரு பெரிய பழத்தோட்டம் இன்று பூத்துக் குலுங்கி நிற்பது, ஊராட்சியின் சிறப்பான பணிகளில் ஒன்றாகும். இவை என்றென்றும் ஊராட்சிக்கு வருவாய் அளிக்கும் பயனுள்ளதாகும்.

### கூட்டுறவே நாட்டுயர்வு

இங்கு 1929-ம் வருடமே பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் உருவாகி செயலாற்றுகிறது.

அச்சங்கத்தின் வாயிலாக—விவசாயப் பெருமக்கள் தனிப்பட்டவர்களின் கடன் சுமையிலிருந்து தப்ப முடிகிறது. இதனையொட்டி பெரிய அளவில் விற்பனைச் சங்கமொன்றையும் அமைக்க ஏற்பாடு நடைபெறுகிறது.

[அனந்தலை ஊராட்சியின் தலைவர், உறுப்பினர்கள் படம் பக்கம் 26-ல்]

### கல்வியே அழியாச் செல்வம்

அனந்தலை ஊராட்சியில்-வாலாஜா ஊராட்சி ஒன்றியப் பள்ளிகள் இரண்டும், தனியார் உயர் ஆரம்பப் பள்ளி ஒன்றும் இயங்கி வருகின்றன. மொத்த பள்ளி வயதுப் பிள்ளைகள் 494. இதில், கல்வி பயிலும் குழந்தைகள் 407. இப்பள்ளிகளில் சுமார் 175 பிள்ளைகளுக்கு மதிய உணவு அளிக்கும் திட்டம் தொடர்ந்து திறம்படச் செயல்பட்டு வருகிறது.

### மகளிர் நலம்

1963—ல் தொடங்கப்பெற்று, 40 அங்கத்தினர்களைக் கொண்ட மாதர் சங்கம் சிறப்புடன் 'பணியாற்றி வருகிறது. பூத்தையல், ஆடை தைத்தல் முதலியன கற்பிக்கப்படுகின்றன. குழந்தைகள் கண்காணிப்பு, சத்துணவுத் திட்டம், சிறு சேமிப்பு, குடும்பக் கட்டுப்பாடு ஆகியவற்றில் மாதர் சங்கம் சிறப்பான பணியாற்றுகிறது.

### சமூகக் கல்வி

அனந்தலையில் கிராம வானொலி மன்றம் அமைக்கப்பட்டு, தொடர்ந்து இயங்குகிறது. மன்ற உறுப்பினர்கள் நிகழ்ச்சிகளைக் கேட்டு, கூறப்படும் அரிய கருத்துக்களை தெரிந்து, செயல்முறைக்குக் கொண்டுவந்து நற்பயன் பல பெற்றுள்ளனர்.

### உயிரூட்டும் விவசாயம்

இங்கு பெரும்பாலும் விவசாயிகளால் திருந்திய முறை விவசாயக் கருவிகளே பயன்படுத்தப்படுகின்றன. சிறிய புதிய ரக வித்துக்களும், ரசாயன உரங்களும், பசுந்தாள் உரங்களும் பெரும் அளவு பயன்படுத்தப்படுகின்றன. கிளிரி சிடியா, ஐபோமியா போன்ற, நிரந்தரமாக தழையுரம் கொடுக்கும் செடிகள் பெருமளவு பயிராக்கப்பட்டுள்ளன, இதன் அரிய பயனை விவசாயப் பெருமக்கள் அனைவருமே அறிந்துள்ளனர்.

ஊராட்சியின் மூலமாக—23 கம்போஸ்ட் உரக் குழிகள் வெட்டப்பட்டு சிறந்த கம்போஸ்ட் உரமும் தயாரிக்கப்படுகிறது. அறுவடைக்குப்பின் நன்செய் நிலங்களில் பசுந்தாள்—உரவகைப் பயிர்கள் விதைக்கப்படுகின்றன.

விளை நிலங்களிலிருந்து மண் மாதிரி எடுத்து, பரிசோதனைக்கு அனுப்பி, கூறப்படும் ஆலோசனை பின்பற்றப்படுகிறது. உணவு உற்பத்தி அதிகரிப்பதற்கான வழிமுறைகள் அனைத்திலும் அனந்தலை விவசாயிகள் ஆர்வத்தோடு பங்கு கொள்கின்றனர். அவர்களின் ஆற்றலை வளர்க்கும் விதத்தில் ஊராட்சித் தலைவர் திரு அ. கு. முருகப்ப கவுண்டர், பொதுப் பணிகளில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்.

தமிழகத்தின் இரண்டாவது தலைசிறந்த கிராமமாக பரிசு பெற்றுள்ள அனந்தலை ஊராட்சி, மேலும் பயனுள்ள காரியங்களை முன்னின்று முடித்து பெருமையுறுமென நம்புவோமாக.

—o—

## புதிய ரக தக்காளி

"தக்காளியில் பல ரகங்கள் இருக்கின்றன. கோயமுத்தூர் விவசாயக் கல்லூரி ஆராய்ச்சிக் கூடத்தில் 245 தக்காளி வகைகளை ஆராய்ந்து, எல்லாப் பருவங்களிலும் வளரக்கூடியதும், சுமாரான நிறுவனத்தில் நல்ல மகசூலையும் உயர்ரகப் பழங்களை தரக்கூடியதுமான, Co—1 என்ற புதிய ரகம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இதன் வயது 135 நாட்களே. ஏக்கர் ஒன்றுக்கு 15,000 முதல் 20,000 கிலோ கிராம் வரை மகசூல் கிடைக்கிறது. பழத்தைத் துளைக்கும் புழுக்களாலும், இலைப்புள்ளி நோயாலும் இந்த புதிய ரகத் தக்காளி அதிகம் பாதிக்கப்படுவதில்லை. ஓர் ஏக்கர் பயிரிட 120 கிராம் விதை தேவைப்படும். அருகிலுள்ள ஊராட்சி ஒன்றிய விவசாய டிப்போவிலிருந்து இந்த விதையைப் பெறலாம், இந்த ரகம் வீட்டுத் தோட்டத்துக்கும் ஏற்றதாகும்.









அண்ணல் காந்தியடிகள் அமரரான போது, நமது மாண்புமிகு முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை அவர்கள் அவ்வமயம் ஆற்றிய உரையிலிருந்து சில பகுதிகள்

"நாம் அரசுரிமை இழந்திருந்த போது அவர் பிறந்தார். அவர் மறையும்போது நாம் அரசுரிமை பெற்று வாழ்கிறோம்."

"அவர் பிறந்தபோது நமது நாடு, உலகிலே இழிவும் பழியும் தாங்கிய நாடாக இருந்தது. உலக மன்றத்திலே நமக்கு இடம் கிடையாது. இன்று நாம் இருந்தால் உலக மன்றததிலே புதியதோர் பலம் என்று பல நாடுகள் எண்ணும் நிலை ஏற்பட்டு விட்டது."

"அவர் பிறந்தபோது, கோயில்கள் மூடிக்கிடந்தன. தீண்டாதார் என்று தீயோரால் அழைக்கப்பட்டு வந்த தியாகப் பரம்பரையினருக்கு அவர் கண் மூடுமுன், மூடிக்கிடந்த கோயில்கள்எல்லாம் திறந்துவிட்டன."

"குடித்துக்கிடப்பது மிகச் சாதாரணம். சகஜம் என்று யாரும் எண்ணிக் கொண்டிருந்த நாட்கள், அவர் பிறந்த காலம். மது விலக்குச் சட்டம் அமுல் நடத்தப்படுவதைக் கண்டான பிறகே அவர் மறைந்தார்."

"இவ்வளவையும், அவர் மந்திரக் கோல் கொண்டோ, யாக குண்டத் தருகே நின்றோ சாதிக்கவில்லை - மக்களிடையே வாழ்ந்து மக்களின் மகத்தான சக்தியைத் திரட்டிக் காட்டிச் சாதித்தார். புதிய வாழ்வு தந்தார். புதிய அந்தஸ்து தந்தார். நாட்டிலே உற்ற மற்றக் கொடுமைகள், ஜாதிச் சனியன், வறுமை, அறியாமை ஆகியவற்றை அடியோடு களைந்தெறிந்துவிட்டு, "உலகினர் கண்டு பின்பற்றத் தக்க முறையிலே உன்னதமானஇலட்சியங்களைக்கொண்ட ஒருசமுதாயத்தைக் காணவிரும்பினார். அதற்காக அரும்பாடுபட்டு வந்தார்."

"விடுதலை பெற்றுத் தந்ததோடு வேலை முடிந்தது என்று அவர் முடிவு கட்டவில்லை. நாட்டை மீட்க வேண்டும் — நல்லாட்சி அமைக்க வேண்டும்—மக்களை நல்லவர்களாக்க வேண்டும்—வீரம்—திறம், விவேகம், மூன்றையும் விரும்பினார். மக்களை நல்லவர்களாக்கவேண்டும் என்பதே அவருடைய இறுதி இலட்சியம், நல்ல மனிதர்களால்தான் நல்லாட்சி நடத்த முடியும். நாட்டுக்கு விடுதலையும் கிடைத்து மக்கள் நல்லவர்களாகாமல், கொலை பாதகர்கள், கொள்ளைக்காரர்கள், ஆதிக்க வெறியர்கள், ஆள் விழுங்கிகள், ஆகியோரின் ஆதிக்கம் அழிந்து படாதிருந்தால், விடுதலையால என்ன பலன்? வேடனிடமிருந்து மீட்டு வந்த புள்ளிமானை வேங்கையின் முன்பு துள்ளி விளையாட விடுவதா?"

"இதை எண்ணினர், நாடு விடுதலை பெற்றதும் நல்லாட்சி அமைக்கும் வழி கூறி, அந்தப் பொறுப்பை, உடனிருந்தோரிடம் தந்தார். மக்களை நல்லவர்களாக்கும் நற்பணி புரியலானார்."

"ஒரு தலை முறையிலே வீரன் தோன்றி விடுதலை தருவான். மற்றோர் தலைமுறையிலே நிபுணர் தோன்றி நல்லாட்சி அமைப்பார். பிறிதோர் சமயம், பேரறிஞர் தோன்றி மக்களுக்கு நல்வழி காட்டுவார். உத்தமர் காந்தியாரின் உள்ளம் இந்த மூன்று பண்புகளையும் காலத்தில் ஒன்றுக்கொன்று குறையாத அளவில் கொண்டு இருந்தது. மூன்று தலைமுறைகள் மூன்று தனித்தனித் தலைவர்கள்— கொள்ள வேண்டிய குணத்தை அவர் ஒருவர் கொண்டிருந்தார்."

"அவர் அளித்த விதையோ இருக்கிறது. இதோ, இதைத் தூவுவேன். இதோ இருக்கிறது. பூந்தோட்டம் காண்பேன், அந்த உருவில் அவரைக் காண்பேன், அந்த மனத்திலே அவர் பெருமை தெரியக் கண்டு மகிழ்வேன்—அவர் செய்து வந்த பணியை, நான் மேற்கொள்வேன் என்று கூறவேண்டும்—அவர் அனைவரும் ஒன்று, எனும் அன்பு மார்க்கக் கருத்தைத் தூவி வந்தார். அதை நாம் செய்து முடிப்போம் என்பதே, நமது உறுதியாக இருக்க வேண்டும்."

"புத்தர் காலத்திலே நடந்தேறியது போல், புதிய வழியைக்கொள்வோம் என்ற உறுதிகொண்டு உழைப்பதே, நாம் அந்த உத்தமருக்கு எழுப்பக் கூடிய நிலையான ஞாபகச் சின்னம்."

[மூலம்: அண்ணாவின் வானொலி உரை தொகுப்பு: 'கண்ணப்பன்']

தமிழகத்தின் சிறந்த ஊர்ப்பணியாளர்
திரு ஏ. சுவாமிநாதன்




[திரு .ஜி. சாந்தசீலன், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர், பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம் ]

"உணவு உற்பத்திப் பெருக்கத்திற்கான திருந்திய விவசாய முறைகளை மேற்கொள்வதற்கு: 'கிராம சேவக்' கின் சேவை எங்களுக்கு உறுதுணையாக இருக்கிறது" என்ற ஒருமித்த கருத்து, அந்தப் பகுதி விவசாயப் பெருமக்களிடையே நிலவுகிறது

"விவசாயிகளுக்குத் தேவையான உதவிகளைச் செய்வதே எனது கடமை. அதற்கென்வே நான் பயிற்சி பெற்றுள்ளேன். எனது பணியைச் செய்து முடிப்பதில் நான் எப்பொழுதும் விழிப்புடன் இருக்கிறேன்" என்கிறார் ஊர்ப்பணியாளர் திரு ஏ.சுவாமிநாதன்.

தமிழக அரசு ஆண்டு தோறும், சிறப்பாகச் செயலாற்றும் கிராம சேவக்குகளைத் தேர்ந்தெடுத்து, பரிசளித்து ஊக்குவிக்கிறது 1965—66-ம் ஆண்டிற்கென தமிழகத்திலேயே சிறந்த கிராம சேவக்கென முதல் பரிசு பெற்றுள்ளார், செங்கல்பட்டு மாவட்டம், பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம், திருமழிசையில் பணிபுரியும் கிராம சேவக் திரு ஏ சுவாமிநாதன்.

சுவாமிநாதன்—பயிற்சி முடிந்து கிராம சேவக்காக அலுவலை மேற்கொண்டு நான்கு ஆண்டுகளே கடந்துள்ளன. ஆயினும், அவரது சாதனைகளின் புகழ் தமிழக மெங்கும் பரவுகிறது

சுவாமிநாதன், திருநெல்வேலி மாவட்டத்தில் விரம் மிகுந்த பாஞ்சாலங் குறிச்சியின் அருகிலுள்ள கீழமுடிமண் என்னும் கிராமத்தில் விவசாயக் குடும்பத்திலே பிறந்தவர். அவர் பணிபுரியவந்த திருமழிசை, 1414 ஏக்கர் நன்செய்யும் 1030 ஏக்கர் புன்செய்யும் விளை நிலமாகக் கொண்ட பகுதியாகும். குறுகிய காலத்தில் அமோக விளைச்சல் கொடுக்கக்கூடிய நெல் ரகங்களான ஏடிடி 2, கல்சர் 2410, ஐ.ஆர்.—8 போன்றவை பரவ, தீவிர முயற்சிகள்செய்து வெற்றிகண்டுள்ளார் இவர். 1965—66 வருடத்தில் சுமார் 200 ஏக்கர் ஏடிடி 27 நெல் ரகத்தை 'கட்டுக்கோப்பான சாகுபடி முறை'ப்படி பயிரிடச் செய்து, அதை ஒரு விழாவாகவே கொண்டாடி, எங்கும் பரவச் செய்திருக்கிறார். இளைஞர்கள் விவசாய சங்க அமைப்புகளில் இவருக்கு மிகுந்த ஆர்வமுண்டு "இந்த அமைப்புகளின் மூலமாகத்தான், திருந்திய முறை விவசாயத்தை எளிதில் புகுத்த முடியும். மருந்து தெளிக்கும் கருவி, சேறுகலக்கும் கருவி, தழை மிதிக்கும் கருவி ஆகியவை இந்த சங்கங்களின் மூலமாக ஏழை விவசாயிகளுக்குக் குறைந்த வாடகைக்குக் கொடுக்க முடிகிறது" என்கிறார் சுவாமிநாதன். இவருடைய தீவிர முயற்சியின் காரணமாகவே, திருமழிசையில் ஒரு கூட்டுறவு பண்டக சாலையும், மாதர்கள் கூட்டுறவு பண்டக சாலை ஒன்றும் உருவாகி திறம்பட இயங்கி வருகின்றன

பயிர்ப் பாதுகாப்புக்கென ஒரே காலத்தில் மின் விசை மருந்து தெளிப்பான்களை கொண்டு கிராமத்தில் உள்ள எல்லா வயல் பரப்புகளிலும் (mass sprayer) மருந்துதெளித்து அந்த வட்டாரத்திலேயே புதியதொரு சாதனையை ஏற்படுத்தி இருக்கிறார்.

ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாக புதிய விவசாயக் கிணறுகள் வெட்டுவதற்கு மான்யம் கடன் மூலம்—சுமார் 200 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும்படி செய்திருக்கிறார். மேலும் கால்நடைத் தீவன உற்பத்தித் திட்டத்தின் கீழ் 25 ஏக்கர் நீர்பாசன வசதி பெற்றுள்ளது இவரது முயற்சியால்.

அதிக முட்டையிடும் கோழி இன குஞ்சுகளை வீடுகள் தோறும் வளர்த்து, பயன்

## ஊர்ப் பணியாளரைப் பாராட்டி . . .

"என் கடன் பணிசெய்து கிடப்பதே !" என்ற தூய தொண்டுள்ளத்தோடு, பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்தின் திருமழிசைப் பகுதியில் ஊர்ப்பணியாளராக (கிராம சேவக்) பணிபுரிகின்ற திரு ஏ. சாமிநாதன், தமிழகத்திலேயே சிறந்த ஊர்ப்பணியாளரென தேர்ந்தெடுக்கப்பட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணா அவர்களிடம் முதற்பரிசை பெற்றவராவார்.

இவர் 1965—66ம் ஆண்டு முதல் விவசாயத்தில் பல மாறுதல்களை செய்து இருக்கிறார். காலங்கருதி இடத்தாற்செயின் என்பதற்கிணங்க, விவசாயிகளுக்கு தரமான விதைகள், நாற்றாங்கால் விடுதல், நாற்று நடுதல், உரமிடுதல் ஆகிய இவைகளைக் கற்பித்து, நவீனகால முறைகளை செயல்படுத்திக் காட்டுகிறார்.

"ஏரினும் நன்றாம் எருவிடுதல் கட்டபின்
நீரினும் நன்றதன் காப்பு.

என்ற குறள் நெறிக்கிணங்க, விவசாயிகளுக்கு அம்முறைகளை எடுத்து விளக்கி, அவர்களுடன் இரண்டறக் கலந்து விவசாயத்தை ஊக்கப்படுத்தி வரும் திரு. சாமிநாதன் அவர்களின் அளப்பருஞ்செயலைக் கண்டு பேருவகை அடைகின்றேன்.



அதோடன்றி, தமிழக அரசு விவசாயிகளுக்கு வழங்கும் உரக்கடன், கறவை மாடு, ஆடு வளர்ப்பு, கோழி வளர்ப்பு ஆகிய திட்டங்களை முறையுடன் செயல்படுத்தி, பலன் கொழிக்கச் செய்துள்ளார். பவர்ஸ்பிரேயர், டஸ்டர் போன்ற கருவிகளை, தானே ஊராட்சி ஒன்றியத்திலிருந்து எடுத்து வந்து, அப்பகுதியில் 120 ஏக்கர் நஞ்சை நிலங்களுக்கு பூச்சிக் கொல்லி மருந்து தெளிக்க வைத்து, பூச்சிகளைப் போக்கி, விவசாயத்திற்கும் விவசாயிகளுக்கும், ஊக்கமளித்து வருவதைக் காண மட்டற்ற மகிழ்வெய்துகிறேன்.

நம் நாடு விவசாயத்தில் தன்னிறைவு அடைய வேண்டுமென்ற நன்னோக்கத்தோடு, மற்றவர்களுக்கு முன்னோடியாக சேவை செய்து, விவசாயிகளுக்கும், விவசாயத்திற்கும் ஊக்கமளித்து, ஆக்கம் பெற அயராது உழைத்து வரும் திரு. சாமிநாதன் அவர்கள் நீடு வாழ்க! நெடிது வாழ்க என வாழ்த்துகிறேன்."

டி. இராசரத்தினம்,
சட்ட மன்ற உறுப்பினர்.
திருப்பெரும்புதூர் தொகுதி,
தமிழக அரசு.



பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்தைத் சேர்ந்த திருமழிசை மையத்தில் வேலை செய்யும் ஊர்ப்பணியாளர். திரு ஏ. சுவாமிநாதன் பயிற்சிக்காலத்தில் அவர்கள் கற்றுக்கொண்டவைகளை நிறைவேற்றுவதில் ஆர்வமும் தீவிரமும் கொண்டவராக விளங்குகிறார். பொறுக்கு

பெற வேண்டும் என்பதில் இவருக்கு தனிப்பட்ட ஆர்வம் உண்டு. செயற்கை முறையில் குஞ்சு பொறிக்கும் கருவி (Incubator)யைகொண்டு சுமார் 850 குஞ்சுகள் வரை விநியோகம் செய்திருக்கிருர். திருமழிசையில் கால்நடைகளுக்கு தொற்றுநோய் கண்டுவிட்டால், அங்குள்ள திரைப்படக் கொட்டகையில், தடுப்பு முறைகளை எடுத்துச் சொல்லும் 'சிலேடு' விளம்பரங்கள் காட்டப்படும். இது கிராம சேவக்கின் கைப்பொருளிலிருந்து செய்யப்படுவது. கால்நடைகளுக்கு தடுப்புஊசி போட்டுக்கொள்ள விளம்பரத்தைக் கண்டதும் வரிசையில் நிற்பார்களாம் விவசாயிகள்.

திருமழிசையில் கால் நடை செயற்கை முறை இனவிருத்தி நிலையம் இருக்கிறது. ஒரு வருடத்திற்கு சுமார் 1,500 பசுக்களுக்கும் எருமைகளுக்கும் சிந்து, ஜெர்சி, முரா போன்ற நிறைய பால்தரும் இனங்களின் செயற்கை முறை இனவிருத்தி நடைபெறுகிறது. இதைகிராம சேவக்கின் ஆர்வத்தின் பலனுகவும் கொள்ளலாம்.

திருமழிசையில் இரண்டு தேவஸ்தான குளங்கள் இருக்கின்றன. அவை துர்நாற்றம் நிறைந்து பயனற்றவையாக இருந்தன. சத்துணவுத் திட்டப்படி, 35,000 மீன் குஞ்சுகளை மான்யமுறையில் வாங்கி குளங்களில் விட்டு, மீன் வளத்தைப் பெருக்கி இருப்பதோடு, குளங்களையும் பயன்படுமாறு செய்தது இவரது முயற்சியின் பயனுகும். தற்போது இந்தக் குளங்களிலிருந்து மீன், கர்ப்பிணிகளுக்கும், பள்ளி மதிய உணவிற்கும் பயன்படுத்தப் படுகிறதென்பது குறிப்பிடத்தக்கதொன்ருகும்.

"மக்களோடு இவ்விதம் ஒன்றிப்போக எவ்வாறு வழிவகுத்துக்கொண்டீர்கள்" என்று கேட்டபோது திரு சுவாமிநாதன் கூறினர் :—

"விவசாயிகள் என்னை கண்டு கொள்ளும்படி குறிப்பிட்ட நேரங்களில் தலைமை இருப்பிடத்தில் தங்கி இருப்பேன். உடனுக்குடன் அவர்களின் தேவைகளையும் பூர்த்திசெய்து அனுப்புவேன். வேலையின் காரணமாக வெளியே சென்றிருக்கும் நேரங்களில், எனது இல்லத்தின் முன்பு உள்ள தகவல் பலகையில், எந்த இடத்திற்குச் சென்றிருக்கிறேன் என்பதை தவருது குறிப்பிடுவேன். அலுவல் நேரங்களில் விவசாயிகளுக்கு மத்தியில் இருப்பதையே நான் பெரிதும் விரும்புகிறேன்" என்ருர். அவரது குரலில் நிறைந்திருக்கும் ஆர்வத்திலே எண்ணியதை முடிப்பதில் கொண்டுள்ள நம்பிக்கையை உணர முடிகிறது. மீண்டும் ஒருமுறை அந்தக் குரலைக் கேட்கத் தோன்றுகிறது. ஏனெனில், அதுவே இந்த நாட்டை வலுப்படுத்துவதாகும்.

---



விதை ரகங்களை இந்தப் பகுதியில் பரப்பியதுடன், பெரிய அளவில் செந்திய முறை சாகுபடி செய்ய விவசாயிகளை ஊக்குவித்துள்ளார். இதற்கெனவே திருமழிசையிலும், செம்பரம்பாக்கத்திலும் இளைஞர் விவசாயச் சங்கங்களை ஏற்படுத்தி, பயனுள்ள புதிய விவசாயக் கருவிகளை ஏழை விவசாயிகளுக்கு குறைந்த விலையில் வாடகைக்குக் கொடுக்க ஏற்பாடு செய்துள்ளார்.

இம்மாதிரி கிராம நல ஊழியர்கள் வட்டாரம் முழுவதிலும் பொறுப் புணர்ச்சியுடனும், அக்கறையுடன் பணியாற்றிஞல் வட்டாரம் நல்ல அபிவிருத்தி காணுவதுடன், கிராமங்களில் விவசாயமும் மற்ற கைத் தொழில்களும், நல்ல முறையில் வளர்ச்சி பெற்று நாட்டுக்குப் பயனுள்ளதாக அமையும். திரு சுவாமிநாதன் இந்த முயற்சியில் மேலும் மேலும் வளர்ச்சியடைந்து, ஏனையோருக்கும் வழிகாட்டியாகத் திகழவேண்டுமென விரும்புகிறேன்.

ஜே. மதன்ராஜ்,
பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத் தலைவர்.

☀ ☀ ☀

பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த திருமழிசை பேரூராட்சியைச் சேர்ந்த கிராம நல ஊழியர் திரு சுவாமிநாதன் அவர்கள் சுமார் நான்கு வருடங்களாக பணிபுரிந்து வருகின்ருர். பொது மக்களோடு நல்ல தொடர்பு கொண்டு சீரிய முறையில் கிராமத்திற்கு தேவையான நற்பணிகளை நல்ல முறையில் செய்து வருகின்ருர் என்பதை என் மனமார்ந்த எண்ணத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

டி. வி. ராதா,
தலைவர்,
திருமழிசை பேரூராட்சி.






செங்கற்பட்டு மாவட்டம்

[ஆக்கப்பணிகளில் பெரும் கவனம் செலுத்தி, ஊர்தோறும் இல்லந்தோறும் மகிழ்ச்சி ததும்பிட புதியதோர் உலகம் சமைத்து, வெற்றியின் விளைநிலமாக தமிழகத்தை உருவாக்கி, வருகிறது, நமது அரசு. அந்த வெற்றியின் விளைநிலத்தில் நாம் கண்டதையும் கேட்டதையும் தொகுத்து கட்டுரையாக்கித் தருகிருர் நஜன். இக்கட்டுரைத் தொடர் 'கிராம நலம்' இதழில் அவ்வப்போது இடம்பெறும். —ஆ-ர்]

## தாகத்திற்குத் தண்ணீர்

'நஜன்'

மனிதன் உயிர்வாழ மிக மிக முக்கியமாக வேண்டியது தண்ணீர். உண்ண உணவில்லாமலும் உயிர் வாழலாம். ஆனல் தண்ணீர் இல்லாமல் உயிர் வாழவே முடியாது. அதனுல்தான் தவித்த வாய்க்குத் தண்ணீர் கொடுப்பது மிக மிக புண்ணியம் என்று ஆன்ருேர் கருதினர்.

பண்டைத் தமிழர்கள் நிலத்தை ஐந்தாகப் பிரித்ததில் பாலை என்பதும் ஒன்று. தண்ணீர் இல்லாமல் வறண்ட மணற்பாங்கான நிலம் தான் பாலை. பண்டைத் தமிழகத்தில் நிலம் ஐந்தாகப் பிரிக்கப்பட்டிருந்தும் பாலை என்பது இடையவே இடையாது. (இப்போது திருநெல்வேலியில் ஒரு சிறு இடம் பாலையாக இருப்பதாகக் கூறப்படுகிறது.)

இந்த தண்ணீரின் அவசியத்தைத் தமிழக அரசு நன்கு உணர்ந்து அதை மக்களுக்குக் கிடைக்கச் செய்வதில் எவ்வளவு அக்கறை காட்டியிருக்கிருர்கள் என்பதை செங்கற்பட்டு மாவட்டத்தில் சமீபத்தில் சுற்றுப் பிரயாணம் செய்தபோது நேரில் காணும் வாய்ப்பு கிடைத்தது. எங்கெங்கு கிணறுகள் உள்ளதோ அங்கெல்லாம் அழுத்த விசை (Pressure) பம்புகள் அமைத்து குழாயைத் திறந்தால் தண்ணீர் கொட்டும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றன. தண்ணீர் கொண்டு வருவதற்காக ஆறு எங்கே, குளம் எங்கே என்று நீண்ட தூரம் தேடிச் சென்று குடங்களில் தண்ணீர் கொண்டுவரும் தொல்லை இப்போது செங்கற்பட்டு கிராமங்களில் குறைந்துக் கொண்டுவருகிறது.

சில கிராமங்களில் உயரத்தில் (overhead tank) தண்ணீர் தொட்டிகள் கட்டி, குடிக்கும் தண்ணீர் தாராளமாக வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

குழாய்கள் அடியில் தண்ணீர் எடுத்துச் செல்ல வரும் தாய்க்குலத்தினரின் மட்டற்ற மகிழ்ச்சியை



G.N.—4A

அவர்கள் முகத்திலிருந்தே தெரிந்து கொள்ள முடிகிறது. "மவராசன் குடிக்க தண்ணீர் கிடைக்க இந்த ஏற்பாடு செய்திருக்கிறான் அவன் நல்லாயிருக்கணும்" என்று வாழ்த்தினாள் ஒரு மூதாட்டி. இந்த குடி தண்ணீர் திட்டம் பற்றி செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியாளர் திரு லட்சுமி காந்தன் பாரதி என்னிடம் குறிப்பிடுகையில் "சென்ற மார்ச் மாதத்தில் இந்த தண்ணீர் வழங்கும் திட்டத்தை ஒரு பெரும் விழாவாகவே பத்து தினங்கள் கொண்டாடினோம். அப்போது வராது போய்விட்டீர்களே! மக்களின் ஆர்வமும் மகிழ்ச்சியையும் நான் எப்படி வருணிப்பது? கடும் கோடையில் இம்மாவட்டம் குடிக்க தண்ணீர் இல்லை என்று தவிக்கவில்லை. இந்த அரசின் மாபெரும் சாதனைகளில் இது ஒன்று" என்றார்.

செங்கற்பட்டு மாவட்டம் பெரும்பாலும் ஏரிப் பாசனங்களாலும் கிணறு பாசனங்களாலும் தன் விவசாயத்தை நடத்திவருகிறது. கிணறு பாசனம் மூலம் விவசாயம் நடைபெறுவதை 'இறைப்பட்டறை' என கூறுகிறார்கள். மின்சார பம்புகள் பரவலாக விநியோகிக்கப்பட்டிருக்கிறபடியால், எங்கு பார்த்தாலும் விவசாய வேலைகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. எங்கு பார்த்தாலும் பச்சைப் பசேலென்று வயல்கள் காணப்படுவதால் தப்பித் தவறி தஞ்சை மாவட்டத்திற்கே வந்து விட்டோமா என்ற பிரமை ஏற்படுகிறது. பாலாறு வறண்டு காணப்படுகிறதே யொழிய மணலுக்கடியில் நிரந்தர ஊற்றுகள் மறைந்த செல்வமாக இருந்து வருகிறது.

நமது மாண்புமிகு முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை அவர்கள் செங்கற்பட்டு மாவட்டத் தலைமைச் செயலகம் காஞ்சிக்கு மாற்றப்பட்ட விழாவில் பேசுகையில் இந்த மறைந்த செல்வத்தை எப்படி பயன்படுத்துகிறது என்பது குறித்துத் தீவிரக் கவனம் செலுத்தப்படவிருப்பதாகக் கூறினார்.

குழாய்க் கிணறுகள் அமைக்கும் திட்டம் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. திருவாலங்காட்டிலும் திருத்தணிகையிலும் குழாய்க் கிணறு



குழாய்க் கிணறுகள் அமைத்தல்.

அமைக்கும் இயந்திரங்கள் செயல்பட்டு வருகின்றன.

செங்கற்பட்டு மாவட்டத்தில் மற்றொரு முக்கியமான விஷயம் பூமிக்கடியில் நீர் ஓட்டம் சில பகுதிகளில் இருப்பது. 'டிரங்' ரோடு ஓரமாக இந்த நீரோட்டம் இருப்பதாகவும் இரு புறங்களில் 2 மைல் தூரத்திற்கு எப்போதும் பாசன வசதி இருப்பதாகவும் அதற்கு மேற்பட்ட தூரங்களுக்கு இந்த ஓட்டத்தின் நீர் வசதி இருப்பதில்லை என்றும் செங்கற்பட்டு திருவள்ளூர் வட்டார நிலச்சுவான்தாரரான திரு ஜி. ஆர். ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

பூண்டியிலுள்ள நீர்ப்பாசன ஆராய்ச்சி நிலையத்திற்குச் சென்றிருந்தபோது அங்குள்ள அதிகாரியை இதுபற்றி விசாரித்தபொழுது இப்போதுதான் பூமிக்குள் இருக்கும் தண்ணீர் விஷயமாக ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்படவிருக்கின்றனவென்றும் இந்த நீரோட்ட விஷயம் ஆராய்வதற்குரியதுதான் என்றும் (இவ்) விஷயம்பற்றி ஆராய்ச்சி நிலையம் விரைவில் கவனிக்கும் என்றும் கூறினார்.

நீர்ப்பாசன ஆராய்ச்சிக்கு இந்த இடத்தை ஏன் தேர்ந்தெடுத்திருக்கிறார்கள் என்று கேட்டேன். பூண்டித் தேக்கத்தில் நீர் பெருக்கு அதிகமாக இருக்கும் காரணமாகவே இந்த இடம் தேர்ந்தெடுக்கப்பட்டதாம். தமிழ்நாடு மட்டுமின்றி அண்டை மாநிலங்களுக்கும் இங்கு நடைபெறும் ஆராய்ச்சி பயன்பட்டுவருவதாக அந்த அதிகாரி தெரிவித்தார்.





மின்சாரக் குழாய்கள் மூலம் நீர் இறைத்தல்.

ஆறுகளின் போக்கு பற்றியும் அதற்கேற்ப நீர் நிலை அமைப்பது பற்றியும் இங்கே ஆராய்ச்சிகள் செய்யப்படுகின்றன. கீழ்பவானி, மணி முத்தாறு, மலம்புழா, துங்கப்பத்திரா, கிருஷ்ணா, பெண்ணாறு திட்டங்களில் அணைக்கட்டுவதற்கு முன் தோன்றிய பிரச்னைகள் இங்கு செய்யப்பட்ட ஆராய்ச்சியின் விளைவாக சமாளிக்கப்பட்டன. தமிழகத்திலுள்ள பாசன ஆராய்ச்சி நிலையம் இது ஒன்றே ஒன்றுதான்.

## 2 மக்கள் தொடர்புக்கு ஒரு திட்டம்

ஊராட்சி நிறுவனங்களின் மூலம் மக்கள் எவ்வளவுக்குப் பயன்படுகிறார்கள் என்பது நேரில் பார்த்தபோது தான் தெரிந்தது. கிராம சேவக்குகளும், கிராம சேவிகளும் எவ்வளவு தூரம் மக்களுக்கு சேவை செய்ய முடியும் என்பதையும் நேரில் உணர முடிந்தது. பூந்தமல்லி வட்டார கிராம சேவகர் திரு சுவாமிநாதனும் திருவள்ளூர் வட்டார கிராம சேவிகை செல்வி வசந்த குமாரியும் தங்களுடைய சிறந்த சேவைக்காக தலா ரூ. 1,000 பரிசு அரசாங்கத்தினிடமிருந்து பெற்றிருக்கிறார்கள்.

ஒரு கிராம சேவகர் ஒரு மாதத்தில் சுமார் 20 கிராமங்களுக்குச் சென்று அங்குள்ள மக்களிடையே வேலை செய்யவேண்டும். ஆரம்பத்தில் கிராம மக்கள் "இவர்கள் சொல்வதை சொல்லிவிட்டுப் போகட்டும்" என்ற அலட்சிய மனோபாவத்துடன் தான் இருந்தார்களாம். ஆனால் நாளடைவில் 'நம் நன்மைக்குத்தான் சொல்கிறார்கள்" என்பதை உணர்ந்து ஒத்துழைக்க ஆரம்பித்தார்களாம். இப்போது அவர்கள் என்னை அவர்கள் குடும்பத்தில் "ஒருவர் போல பாவிக்கிறார்கள்" என்கிறார் செல்வி வசந்த குமாரி.

"உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு வேறொன்றும் செய்ய வேண்டியதில்லை. கிராம மக்களுக்குத் தேவையானவற்றை காலாகாலத்தில் போதிய அளவு கொடுத்து வந்தாலே போதும்" என்கிறார், கிராம சேவகர் திரு. சுவாமிநாதன்.

ஏராளமானவர்கள் அரசாங்கம் தரும் உதவிகளை நாடி ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களுக்கு வருகிறார்கள். அரசு அதிகாரியிடமிருந்து முன்பு போல அல்லாமல் இப்போது துரிதமாக உதவி கிடைத்து வருவதாக அவர்களில் ஒருவர் கூறினார்.

மாவட்ட ஆட்சித் தலைவர் திரு லட்சுமிகாந்தன் பாரதி மக்களுக்கு நிர்வாகத்தினிடம் இன்னும் அதிக நம்பிக்கை ஏற்பட ஒரு திட்டம் வைத்திருக்கிறார். இது பற்றி அவர் என்னிடம் குறிப்பிட்டதாவது:

"பொது மக்களிடமிருந்து வரும் ஒவ்வொரு மனுவுக்கும் அல்லது முறையீட்டுக்கும் ஒரு 'கார்டு' உடனடியாக அனுப்பப்படும். அதில் மனுவிலுள்ளத் தன்மைக்கே ஒரு தேதி குறிப்பிட்டு அதற்குள் பதிலை எதிர்பார்க்கலாம் என்று அறிவிக்கப்பட்டிருக்கும். குறிப்பிட்ட அந்தத் தேதிக்குள் கடிதம் போட்டவருக்கு பதில் அனுப்பப்பட்டுவிடும். அப்படி அதற்குள் அரசாங்கத்தினிடமிருந்து பதில் வராவிட்டால் அக்கடிதம் எழுதியவர் தமக்கு வந்த கார்டை எடுத்து வந்து மாவட்ட ஆட்சியாளரையே நேரில் காணலாம். இம்முறை மூலம் நிர்வாகமும் சீர்படும், பொதுமக்களுக்கும் அரசிடம் அதிக நம்பிக்கை ஏற்படும் என்றும் திரு பாரதி தெரிவித்தார். இத்திட்டத்தை வெகு சீக்கிரமே தான் அமல் நடத்த இருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

திரு லட்சுமிகாந்தன்பாரதி இளைஞர். சுறுசுறுப்பும் எதையும் நுணுக்கத்துடன் நோக்கும் திறனும் கொண்டவர். இவர் இம்மாவட்ட ஆட்சியாளராக வந்தது செங்கற்பட்டின் பல அதிருஷ்டங்களில் ஒன்று என்று செங்கை மாவட்ட மக்கள் கூறுகிறார்கள்.

காஞ்சியில் சமீபத்தில் நடைபெற்றப் பொருள் காட்சியில் பொது மக்கள் பயன் பெறவேண்டும் என்கிற மாவட்ட ஆட்சியாளரின் துடிப்பு வெளிப்பட்டது. கண்காட்சியில் ஆடம்பரமான அரங்குகள் எதுவும் இல்லை. ஆனால் கிராமங்களிலிருந்து வரும் விவசாயிக்கு பயன் தரும் முறையில் சில அம்சங்கள் இருந்தன." உங்களுக்கு பொறுக்கு விதை வேண்டுமா? ரசாயன உரம் வேண்டுமா? அல்லது ஒரு சிறு தொழில் ஆரம்பிக்க வேண்டுமா? நீங்கள் அவைகளைப் பெற இதைச் செய்ய வேண்டும்: இந்த இடத்திற்கு வந்தால் உங்களுக்கு இந்த உதவி கிடைக்கும், போன்ற தகவல்கள் இக்கண்காட்சியில் இடம் பெற்றன. இக்கண்காட்சியைப் போலவே சென்ற மார்ச் மாதத்தில் மதுராந்தகத்தில் ஒரு கண்காட்சி நடைபெற்றதென்றும் அதன் மூலம் அநேக கிராம வாசிகள் பயன்பெற்றனர் என்றும் திரு பாரதி தெரிவித்தார். ஒரு கிராமவாசி யாருடைய சிபார்சுமின்றி தனக்கு வேண்டிய உதவியை காலதாமதமின்றி அரசினரிடம் பெறவேண்டும்' அத்தகைய சூழ்நிலையை ஏற்படுத்துவதே தன் லட்சியம் என்று அவர் தெரிவித்தார்.

32-ம் பக்கம் பார்க்க

# சுபிட்சத்துக்கும் தாராளமான தண்ணீர் வசதிக்கும்
## பம்புடன் கூடிய
## Kirloskar கிர்லோஸ்கர் மோட்டார்
## நம்பத்தகுந்தது



நல்ல
மகசூல்



விவசாயிக்கு
சுபிட்சத்தை
அளிக்கிறது



தாராளமான
தண்ணீர்



நல்ல மகசூலை
அளிக்கிறது

பம்புடன் கூடிய நம்பத்தகுந்த ஒரு
Kirloskar கிர்லோஸ்கர்
மோட்டார்
தாராளமான தண்ணீர்
வசதியை அளிக்கிறது.



பம்புடன்
இணைக்கப்பட்ட ஒரு
கிர்லோஸ்கர் மோட்டார்

KE
**கிர்லோஸ்கர் எலெக்ட்ரிக் கம்பெனி லிமிடெட்,**
த. பெ. எண் 1017; பெங்களூர்-3, இந்தியா
பூரண விநியோகஸ்தர்கள்: பாரி & கம்பெனி லிமிடெட்
த. பெ. எண் 12, மதராஸ்-1. • த. பெ. எண் 208 கலகத்தா-1.
த. பெ. எண் 506, பம்பாய்-1 BR. • த. பெ. எண் 172, புதுடில்லி-1.

IPAR-713/1 TAM


# நிலக்கடலை சாகுபடியில் எனது அனுபவம்

திரு கே. பி. குப்புசாமி, விளாம்பட்டி, மதுரை மாவட்டம்.



திரு கே.பி. குப்புசாமி— விவசாயத்தில் ஆர்வம் மிக்க இளைஞர். 1965—66 ஆண்டிற்கென நடந்த நிலக்கடலை விளைச்சல் மாநில போட்டியில் முதல் பரிசு பெற்றுள்ளது, அவரது சீரிய முயற்சிகளுக்குத் தக்கதொரு சான்றாகும். எவ்வாறு அப் பரிசு பெற முடிந்ததென்பதை அவரே தெளிவுபடக் கூறுகிறார்.

"சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால் உழந்தும் உழவே தலை" என்ற குறளின் உண்மைப் பொருளை உணர்ந்து, எந்த பயிரையும் உற்சாகத்துடன் முறைப்படி சாகுபடி செய்தால் உற்பத்தி உயரும் என்பதில் ஐயமில்லை. நாடும் மக்களும் இன்று உழவர் பெருமக்களின் செயற்திறனில் நம்பிக்கை வைத்துள்ள நிலையில், விஞ்ஞானத்தின்துணை கொண்டு விளை பொருளை மிகுதியாகப் பெருக்கி உணவுக்கும், உடைக்கும் தொழிலுக்கும் அந்நியச் செலவாணிக்கும் வழிவகுத்துக் கொடுக்கவேண்டியது, நம் விவசாயப் பெருமக்கள் ஒவ்வொருவருடைய கடமையாகும்.

விவசாயத் துறையினரின் சிபாரிசுகளை முறைப்படி கடைபிடித்து, நான் டி. எம். வி. 2 ரக நிலக்கடலைப் பயிரை 1965–66–ம் ஆண்டில் கோடையில் இறவைப்பயிராக சாகுபடி செய்தேன். அதில் கிடைத்த மகசூலை வைத்து எனக்கு மாநிலப் பரிசு வழங்கப்பட்டுள்ளது. பிறரும் தெரிந்து பயன் பெறுமாறு நான் செய்த சாகுபடிக் குறிப்புகளை இங்கே சுருக்கமாகக் கூற விரும்புகிறேன்.

நிலத்தை கூப்பர் 11–ஆம் நம்பர் இரும்பு கலப்பையால் 6 முறை உழவு செய்தேன்.

**எருவும் எருவிடுதலும்:**—ஏக்கருக்கு 20 வண்டி வீதம் நன்கு மக்கிய கம்போஸ்ட் உரம் போட்டு, மீண்டும் உழவு செய்தேன். கடைசி உழவில் ஏக்கருக்கு 4 மூட்டை (160 கிலோ) வீதம் "நடராஜா மார்க்" 7-ஆம் நம்பர் ஸ்டாண்டர்டு கலப்பு உரத்தை உழவு சாலில் போட்டேன்.

**விதையும் விதைப்பும்:**—ஏக்கருக்கு 55 கிலோ வீதம் டி. எம். வி. 2 நிலக்கடலை விதைப்பருப்பை, 110 கிராம் அக்ரசான் மருந்து கலந்து விதைத்தேன். முதலில் ஏர் உழுது செல்ல அதன் உழவு சாலில் ஒரு மூட்டை 7-ஆம் நம்பர் கலப்பு உரத்தை மேலே கூறியபடி போட்டுச் செல்ல, அதன் பின்பு, ஓர் ஏர் உழுது செல்ல அதன் சாலில் கடலைப் பருப்பைப் போட்டுச் செல்ல, விதைக்கப்பட்டது. கடலை விதைப்பிற்கு முன் ஒரு முறை நீர் பாய்ச்சப்பட்டது. விதைத்த பின் நீர் பாச்சுதலுக்காக 6'×4 அளவில் பாத்திகள் அமைக்கப்பட்டன.

**நீர்பாய்ச்சுதல்:**— விதைப்பதற்காக உழுவதற்கு முன்பே தண்ணீர் பாய்ச்சப்பட்டது. பின் ஏர் சாலில் கடலை விதைத்து, பாத்திகள் அமைத்த பின் 10 நாட்களுக்கு ஒரு முறை நீர் பாய்ச்சப்பட்டது.

கடலை விதைத்த 20 நாட்களுக்குப் பிறகு முதற் களை வெட்டப்பட்டது. மறுபடியும் 20 நாட்கள் கழித்து திரும்பவும் களைக்கொத்தால் களைவெட்டி, செடிகளை மிதித்து செடியின் வாதுக்கள் அலுங்குமாறு மேலே இலேசாகப்போடப்பட்டது.

**பயிர்ப் பாதுகாப்பு:**—கடலை விதைத்த ஒரு மாதம் கழித்து, எண்டிரின்

[22-ம் பக்கம் பார்க்க]

[மதுரை மாவட்டம் நத்தம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சிறுகுடி கிராமத்திலுள்ள விவசாயி திரு எஸ். ஏ. செல்லத்துரை. அவர், ஐ. ஆர். 8 நெல் சாகுபடி செய்து, மாவட்டப் பயிர் விளைச்சல் போட்டியில்கலந்து 1968-ம் ஆண்டு ஜூன் திங்கள் 25-ம் நாள் அதிகாரிகள் பொதுமக்கள் முன்னிலையில் 50 சென்ட் நிலத்தை அறுவடை செய்ததில், ஏக்கருக்கு மூட்டைக்கு 48 படி கொண்ட 77 மூட்டைகள் அதாவது 385 கிலோ நெல் என்ற கணக்கில் மகசூல் கண்டிருந்தது. ஐ. ஆர். 8 நெல் சாகுபடியில் அமோக விளைச்சல் பெற்ற திரு செல்லத்துரை, தமது அனுபவத்தை நமக்குச் சுவைபட எடுத்துரைக்கிறார்.

—ஆசிரியர்.]

## அமோக விளைச்சல் தரும் நெல் ஐ. ஆர். 8

"மாடுகட்டிப் போரடித்தால் மாளாது செந்நெல்லென்று யானை கட்டிப் போரடிக்கும் அழகான தென்மதுரை" என்ற சிறப்பு மிக்க மதுரை மாவட்டம் நத்தம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சிறுகுடி எனது சொந்த ஊர். அந்தக் கிராமத்தில் நான் 1·50 ஏக்கர் தோட்ட சாகுபடிக்கு உரிமையுள்ள ஒரு சாதாரண விவசாயி. நான் பலபத்திரிக்கைகள் வாயிலாகவும், அரசாங்கத்திலிருந்து வெளியிடும் மேழிச் செல்வம், "கிராம நலம்" முதலிய பத்திரிகைகள் மூலமாகவும் அதிசய நெல் ஐ. ஆர். 8-ஐப் பற்றிய விபரம் தெரிந்து நாளும் அந்த நெல்லைச் சாகுபடி செய்ய வேண்டுமென்று ஆவல் கொண்டிருந்தேன். இது பற்றி எங்கள் தொகுதி கிராம சேவகிடம் எனது ஆவலைச் சொல்லியிருந்தேன். அவர் நமது ஊராட்சி ஒன்றியத்துக்கு 1968-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 1-ந் தேதி ஐ. ஆர். 8 நெல் வருகிறது என்று சொல்லி அன்று 15 கிலோ நெல் வாங்கிக் கொடுத்தார்.

நான் 15 கிலோ நெல்லையும் 8 சென்ட் நாற்றங்காலில் பரவினேன் (10 சென்டில் பரவும்படி கிராம சேவக் சொல்லியிருந்தார்) நாற்றங்கால் 8 சென்டையும் 6 உழவு செய்து 20 கட்டு பசுந்தழை, ஒரு வண்டி கம்போஸ்ட் உரம் போட்டு நாற்றங்கால் தயார் செய்தேன். நாற்றுப் பரவிய 20 நாட்கள் கழித்து பயிருக்கு பேன் மற்றும் விட்டி இருந்ததால் பி.ஹெச்சி. 10%. தூவினேன். நாற்று வளராமல் இருந்ததால் 20 நாட்கள் கழித்து யூரியா 5 கிலோ மேல் உரம் போட்டேன்.

### என்னென்ன செய்தேன்....

எனக்கு 70 சென்ட் நிலம்தான் இந்த நேரத்தில் நெல் சாகுபடி செய்வதற்கு தயாராக இருந்தது. அதில் 40 ஆடுகளும், 25 மாடுகளும் உள்ள கிடை 30 நாட்கள் வைத்தேன். 70 சென்ட் இடத்தை 7 உழவு போல் கலப்பையால் உழவு செய்து 2,000 கிலோ பசுந்தழை உரமும், என்.பி.கே. 14: 14: 14: கலப்பு உரம் 120 கிலோ அடி உரமாகப் போட்டு பரம்படித்து நாற்றுப் பாவிய 30 நாட்கள் கழித்து சாதாரண முறையில் ஒரு நாற்று வைத்து 12 சென்டும், 58 சென்ட் இரண்டு நாற்று வைத்து சாதாரண முறையில் 8 அங்குலம் இடைவெளியிட்டு 14 பெண்களால் 70 சென்டும் நடவு செய்யப்பட்டது.



பின் 15 தினங்கள் கழித்து கிராம சேவகின் அறிவுரையின்படி ஒரு பாட்டில் எண்டிரின் (250 மில்லி கிராம்) ஸ்ரெப்டோ சைக்கிளின் 3 கிராமும் கலந்து 60 படி தண்ணீரில் கலந்து தெளித்தேன். பின் நட்ட 20 நாட்கள் கழித்து 20 பெண்களை வைத்து முதல் முறையாக களை எடுக்கப்பட்டது. முதல் களை எடுத்த 3 தினங்கள் கழித்து யூரியா 30 கிலோ உரம் முதல் முறையாகப் போட்டேன். பின் இரண்டாவது தவணையாக முதலில் மருந்தடித்த 15 தினங்கள் கழித்து எண்டிரின் 1 பாட்டில் ஸ்ரெப்டோ சைக்கிளின் 3 கிராம் இரண்டையும் 60 படி தண்ணீரில் சேர்த்துத் தெளித்தேன். இரண்டாவது தடவை மருந்தடித்த 3-வது நாள் இரண்டாவது தவணையாக, 10



# தமிழக உழவரின் சாதனை

பெண்களை வைத்து களை எடுக்கப்பட்டது. பின் 9 நாட்கள் கழித்து அதிகமாக களை இருந்ததால் மூன்றாவது முறையாக 10 பெண்களை வைத்து களை எடுக்கப்பட்டது. களை எடுத்த மறுநாள் அதாவது இரண்டாவது தவணையாக 20 கிலோ யூரியா மேல் உரம் போடப்பட்டது. (38-வது நாள்) பின் மூன்றாவது தவணையாக பாலிடால் ஒரு பாட்டில் (100 சி. சி.) ஸ்ரெப்டோ சைக்கிள் 3 கிராமும் 60 படி தண்ணீரில் கலந்து தெளிக்கப்பட்டது. (நட்ட 60-வது நாள்) மேலும் நெல்லின் தாள் மஞ்சளாகவே இருந்ததால் விவசாய வளர்ச்சி அதிகாரி அவர்கள் பார்வையிட்டு

திரு எஸ். ஏ. செல்லத்துரை, சிறுகுடி




பாலிடால் மட்டும் அடிக்கும்படி கூறினர். அதன்படி பாலிடால் மட்டும் 1½ பாட்டில் 70 படி தண்ணீல் தெளிக்கப்பட்டது.

70 சென்டும் தோட்டச் சாகுபடி ஆதலால் மின்சார மோட்டாரிலிருந்து (3 ஹெச். பி.) தினமும் 2 மணி நேரம் தண்ணீர் பாய்ச்சப்பட்டு வந்தது.

நான் மாவட்டப் போட்டியில் கலந்து கொள்வதற்கு ரூ. 5 கட்டியிருந்ததால் 1968-ம் ஆண்டு ஜூன் திங்கள் 25-ம் நாள் மதுரை மாவட்ட கலெக்டரின் தனி உதவியாளர் திரு பி. வரதராஜுலு, மாவட்ட விவசாய அலுவலர் திரு சு. விநயகம் நத்தம் ஊராட்சி ஒன்றியம் பெருந்தலைவர் திரு பி. தம்பி நாயக்கர் மற்றும் கிராமப் பொதுமக்கள் முன்னிலையில் 50 சென்ட் அறுவடை செய்யப்பட்டது. 50 சென்டிலும் (48 படி) 38½ மூட்டையும், கிலோ 1,926. 5 கிலோ நெல் இருந்தது. ஏக்கருக்கு 77 மூட்டை (48 படி மூட்டை) 3,853 கிலோ. நான் சாகுபடி செய் 70 சென்டிலும் 54 மூட்டை நெல் அதாவது 2,699 கிலோ நெல் கண்டு முதலானது.

### பக்கபலமாக நின்றவர்கள்

நான் நல்ல முறையில் இந்த ஐ. ஆர். 8 நெல்லைப் பயிர் செய்து ஏக்கருக்கு 3,853 கிலோ மகசூல் பெறுவதற்கு முக்கிய காரணம் எங்கள் தொகுதி கிராமசேவக் திரு என். பி. ராமையாவும், எங்கள் வட்டார விவசாய வளர்ச்சி அதிகாரி திரு வெ. கோபாலகிருஷ்ணன் ஆகிய இருவரின் முழு முயற்சியாகும். எங்கள் தொகுதி கிராம சேவக் 10 தினங்களுக்கு ஒரு முறை நெல்லைப் பார்வையிட்டு மருந்தடிப்பது மேல் உரம் மற்றும் அவ்வப்போது ஆலோசனைகள் கூறி வந்தார். விவசாய வளர்ச்சி அதிகாரி இரு முறை பார்வையிட்டு பயிரின் தன்மை, மேற்கொண்டு செய்யவேண்டிய முறை பற்றி எடுத்துச் சொல்லி வந்தார். குறிப்பாக மூன்று முறை மருந்து அடித்த பின்னும் பயிர் மஞ்சளாகவே இருந்தது. அவர்கள் பார்வையிட் பாலிடால் மட்டும் தெளிக்கும்படி கூறினர். அதன்படி 1½ பாட்டில் 70 படி தண்ணீரில் தெளித்தேன். பின் பயிர் பச்சை நிறமாகி நல்ல முறையில் இருந்தது.

### அறிந்துகொண்ட உண்மைகள்

இந்தப் பயிரில் முக்கியமாக நான் தெரிந்துகொண்டது அதிக உரமிட்டால் கிளைகள் அதிகம் இருக்கும். எனக்கு 10 முதல் 20 கிளைகள் வரை இருந்தது. குறிப்பாக குறிப்பிட்ட நேரத்தில் தவறாமல் ஸ்ரெப்டோ சைக்கிளின் மருந்தும் பூச்சி கொல்லி மருந்தையும் சேர்த்து குறைந்தது மூன்று முறையாவது தெளிக்க வேண்டும். நடவு செய்து ஒரு நாற்று வைத்து இடைவெளி விட்டு நடவு செய்தால் தான் கிளைகள் அதிகம் இருக்கும். நான் இரண்டு நாற்று வைத்ததைவிட ஒரு நாற்று வைத்து நட்ட இடத்தில்தான் அதிகமான கிளைகளும் நெல் கதிரின் மணியும் நல்ல முறையில் இருந்தது. எங்கள் கிராமத்திலும் பல விவசாயிகள் இந்த ஐ. ஆர். 8 நெல்லை சாகுபடி செய்ததில் ஏக்கருக்கு 30 மூட்டை முதல் 38 மூட்டை (48 படி) நெல் மகசூல் இருந்தது. காரணம் மேற்படி பயிர்கள் சரியான நேரத்தில் மருந்து அடிக்கவில்லை. தக்க உரமும் தண்ணீரும் விடவில்லை.

[32-ம் பக்கம் பார்க்க.]

[19-ம் பக்கத் தொடர்ச்சி]

மருந்து ஒரு முறையும், மீண்டும் 20 நாட்கள் கழித்து பாரத்தியான் மருந்து ஒரு முறையும் முன் தடுப்பாக தெளிக்கப்பட்டன. பூச்சி, நோய் எதுவும் பயிரைத் தாக்கவில்லை.

அறுவடை:—கடலை நன்கு முற்றியதும், அதாவது விதைத்ததிலிருந்து 110 நாட்கள் கழித்து அறுவடை செய்யப்பட்டது. போட்டிக்காக 50 செண்டு நிலத்தில் அறுவடை முறைப்படி அலுவலர்களால் செய்யப்பட்டு, மகசூல் கணக்கிடப்பட்டது.

மகசூல்:—ஏக்கருக்கு 2,100 கிலோ (உலராதது) வீதம் கடலை மகசூல் கிடைத்தது. இது நன்கு காய்ந்து சுத்தம் செய்த பிறகு ஏக்கருக்கு 1,102½ கிலோ (சுமார் 31 மூட்டைகள்) என்று கணக்கிடப்பட்டது.

வரவு:—1,102½ கிலோ (365 கிலோ கொண்ட 30 மூட்டையும் 22½ கிலோவும்).

| | ரூ. | பை. |
|---|---|---|
| மூட்டை ரூ. 60 வீதம் | 1,845 | 00 |
| கடலை செடியின் மதிப்பு | 30 | 00 |
| | 1,875 | 00 |
| செலவு | 533 | 00 |
| நிகர லாபம் | 1,342 | 00 |

—

## பாராட்டுகிறோம்

சேலம் மாவட்டம், ஆத்தூர் ஊராட்சி ஒன்றியத்தின் ஆணையர், தமது பிரத்தியேக முயற்சியால், ' கிராம நலம் ' இதழுக்கு, 237 ஓராண்டு சந்தாதாரர்களை சேர்த்துள்ளார். ஏனைய ஆணையர்களும் பின்பற்றத்தக்க, சிறிய செயலினைச் செய்துள்ள திரு கே. எஸ். கிருஷ்ணமூர்த்தியைப் பாராட்டுகிறோம்.




### கவிஞர் பேகன்

[ சேனைப் படைத் தலைவன் தன் தோழர்கட்குச் சொன்ன வீரவுரையாக இக்கவிதை அமைந்துள்ளது.]

[தனதான்ன தனதானன
தானதானன தனனு]

திரு நாட்டினை உருவாக்கிட
ஒருங்காகவே எழுந்நீர் !
செயலாற்றலிற பெருத்தானைபோர்
திறன் வாய்ந்தசி ரணியீர் !

வரலாற்றினைத் தெரிந்தோரெலாம்
வளமான நம் பழமை
வகையானவையும் உணர்வார்களே
வளர்ந்தோங்குக பெருமை !

சிறந்தோங்கிடுக் படைச்சேனி
குறிக்கோளின் உறுதி
செறிந்தோங்கிடப் புதிதாம்பணி
நிறைந்தோறுநாம் புரிவோம்.

அறமே வழி ! அறிவே துணை !
அறிஞர் சொலே படையாம் !
அயரோயினி ஒரு நாழிகை
அரும் நாட்டினைச் சமைப்போம் !

உழவே தலை ! தொழிலே உரம் !
உயர்ந்தோங்கிட உழைப்போம் !
உறுமேன்மைகள் உயர்கல்வியால்
உணர்ந்தோமினை வளர்ப்போம் !

உழைப்பே பொருள் ! பொருளே வளம் !
வளமே அரண் ! உணர்வீர் !
உலகாண்டிட விரைவிரெவில்
உழைப்பீர் நலம் வளர்ப்பீர் !

பழமைபெறும் இதட்நாட்டில்நாம்
பதுக்குங்களத் பிழம்பே !
பகலோனொள ஒளிர்வோம். குறை
பரவ-உல களைப்போம் !

தொழுவோம் தமிழ் ! வளர்வோம் இனி !
தொடுவோம் நிலாப் பறந்தே !
தொடர்ந்தே பணி புரிவோம் இனி
யுயுத்தெங்கணும் எழுந்தே.



முதலமைச்சரின் வானொலிச் சிறப்புரை—4-ம் பக்கத் தொடர்ச்சி.

உண்மை இந்தியா இது அல்ல ! அந்த இந்தியா இருளில் நெளிகிறது—வறுமையில் உழல்கிறது என்று கூறினேம் ! உண்மையைக் கூறினேம் !

### தெளிவு பெறும் நன்னாள்

இருபது ஆண்டுகளுக்கும் மேலாக ஆன பிறகு, 'நாமும்' சில புதிய வளங்கள் பெற்றுள்ளோம்" என்பதை மட்டும் எடுத்துக்காட்டினால்

இப்போது அழைப்புவேறெவருக்கு விடுத்திட வேண்டும்—இன்று எத்தகைய செயல் வீரர் தேவை—என்பது பற்றிச் சிந்தித்திட வேண்டும்.

மறைந்த லால்பகதூர் "மறவர் வாழ்க, உழவர் வாழ்க" என்று முழங்கினர்.

## புதுவாழ்வு, புது வளம், ஒரு புறம்

'இது போதுமா?' என்ற கேள்வியும் 'சாமானியர்களின் வாழ்வு செம்மைப்பட்டதா?' என்ற கேள்வியும் எழத்தானே செய்யும் ? பிறர் கேட்பானேன்—நாமே நம்மைக் கேட்டுக்



கொள்ளவேண்டிய கேள்வி அல்லவா அது ? அந்தக் கேள்வியைக் கேட்டு பதிலறிந்து தெளிவும் ஆர்வமும் பெற்றுப் பணியாற்ற வேண்டும் மென அழைப்பு விடுத்திடும் நன்னாள்—ஆகஸ்டு பதினைந்து.

பெற்ற சுதந்திரத்தைப் பிறநாட்டவன் எவனும் அழித்திட முனைந்திடில், அவனை அழித்தொழித்து நாட்டின் மானத்தையும் சுதந்திரத்தையும் பாது காத்திடபடை வீரர் தேவை—நிரம்ப உளர்—தமது ஆற்றலையும் உலகுக்கு எடுத்துக்காட்டி அழியாப்புகழ்பெற்றுக் குவித்தனர்.

### குமுறும் உள்ளத்தின் கேள்வி

அந்நியரால் ஏற்படக்கூடிய ஆபத்தைவிட கொடுமையானது 'சுதந்திரம் வந்து நாம் கண்ட சுகம் என்ன' என்ற சலிப்பு உணர்ச்சி ! அந்த சலிப்புணர்ச்சி வாழ்வில் வளம் காணுதோருக்கு எழத்தான் செய்யும்.

"அந்நியர் சுரண்டுகின்றனர்—நாம் அவதிப்படுகின்றோம்! அவர்கள் பருகுவது இனிப்புச் சாறு! நமக்குக் கிடைப்பதோ வெறும் சக்கை! அவர்களுக்குச் சிங்கார மாளிகை. செல்வ மிறுக்குகள்—நமக்கோ ஓட்டைக் குடிசை—ஒடிந்த வாழ்வு" என்று ஏழை எளியோர் குமுறிடும்போது சோதனைக்கு இடையிலேயும் ஒரு நம்பிக்கை தவழ்ந்திட முடிந்தது—அந்நிய ஆதிக்கம் அகற்றப்படுமானால் அக்கிரமம்

## கூரைகள், குமுறிக் கிடக்கும் மக்கள், மறுபுறம்

அஞ்சா நெஞ்சினரே! அனைத்தையும் இழந்தேனும்—சுதந்திரம் பெற்றுத் தீருவோம் என்ற உறுதி கொண்டாரே ! தியாகச் செம்மல்களே ! வாரீர்! நாட்டு விடுதலைக்காக அறப்போர் நடாத்திட வாரீர் ! என்று சுதந்திரப் போராட்டத்துக்கான அழைப்பைக் காந்தியடிகள் விடுத்தார். மக்கள் திரண்டெழுந்தனர்—போர்த் தொடுத்தனர். வெற்றி கண்டனர் !

அழிந்துபடும். நீதி நிலைத்திடும். நிம்மதி பிறந்திடும் என்ற நம்பிக்கை.

சுதந்திரம் கிடைத்தான பிறகு 'வலியோர் சிலர் எளியோர்தமை வதை புரிவதும் இருந்துவரின், வேதனையுடன், திகைப்பல்லவா மக்கள் உள்ளத்திலே கொதித்திடும்?

வந்த சுதந்திரம் யாருக்கு? நமக்கு இல்லை போலத் தெரிகிறதே? நமது வாழ்விலே எந்த

(முதலமைச்சரின் வானொலிச் சிறப்புரை)

மாற்றமும் காணோமே என்ற கேள்விகள் மனதைக் குடையும்போது உள்ளம் எரிமலை யாகிவிடுமே!

பிறகு அமைதி எங்ஙனம் நிலைத்திடும்—சமுகக் கட்டுக்கோப்பு எப்படிக் கெட்டிப்படும்?

பெற்ற சுதந்திரம் ஒரு சிலருக்காக அல்ல—அனைவருக்கும். நாட்டுச் செல்வமும் வளமும்

''வாழ்வு, உரிமை மட்டுமல்ல கடமை என்பது எவரும் மறுக்க முடியாத பேருண்மை யாகும்.

கண்மூடிகளாக மக்கள் இன்னும் உள்ளனர் என்று எண்ணிக்கொண்டு உழைப்பின் பலனை வஞ்சகமாக சுரண்டி வாழ்பவர்கள் சுதந்திரத்தின் பகைவர்கள்;

## அல்ல நிலையை அகற்ற..

ஒரு சிலருக்காக அல்ல—அனைவருக்கும். பாடுபடுவது பலன் பெறுவதும் பொது நீதியாக இருந்திடவேண்டும். பாடுபட பல்லோர். பலனைப் பெற ஒரு சிறு பிரிவினர் என்ற நிலை இருத்தல் கூடாது என்ற பொது நீதி வெறும் நல்லுரையாக மட்டும் இருந்துவிடாமல், நடைமுறையாதல் வேண்டும். நாடு அப்போது தான் புத்தொளி பெற்றிடும்—புதுவாழ்வுபெற்றிடும்!

ஆகஸ்டு 15-ல் விழாக் கொண்டாடும்போது—நமது தேசியக் கொடி பட்டொளி வீசிப் பறந்திடும்போது—காண்போர் அனைவரும், இது தமது உரிமைக் கொடி, சமத்துவக் கொடி, சமதர்மக் கொடி என்ற பெருமிதம் கொண்டிடும் நிலையைப் பாடுபட்டுப் பெறுக வேண்டும்.

இந்தத் தூய பணிக்காகத் தம்மை ஒப்படைக்கக்கூடிய ஆடவருக்கும், ஆரணங்குகளுக்கும், நாட்டின் சார்பில் அன்பழைப்பு விடுத்திடும் அருமைத் திருநாள்—ஆகஸ்டு பதினைந்து.

நாட்டுவளம் பெருக்கிட உழவர் பெருமக்களும் தொழிலாளத் தோழர்களும் அணி திரண்டு நின்றிடவேண்டும். உற்பத்தியைப் பெருக்கிட

உழைப்பு—மிகுந்த பலனை தந்திட, தொழில் உலகில் அமைதி நிலவிட வேண்டும்



—அமளியற்ற நிலைவேண்டும். மனித சக்தியாயினும் இயந்திரத்தின் சக்தியாயினும் முழு அளவில் பயன்படும் வழிகாணவேண்டும்.

## அனைவரும் பாடுபடுவோம் வாரீர்!

வேண்டும். நாட்டுச் செல்வம் மிகுந்திட வேண்டும்.

### உரிமையும் கடமையும்

அந்தத் தூயவர்களின் உழைப்புக்கு ஏற்ற வண்ணம், அவர்களின் வாழ்வு செம்மைப்பட வேண்டும். அதற்கான சமுக நீதி நிலைத்திட வேண்டும்.

மக்கள் தொகை எவரையும் மருட்டும் அளவுக்கு வளர்ந்து கொண்டே போகும். நமது நாட்டில், உற்பத்தியின் அளவு முறை—வகை-திறன்—தரம் எனும் எதிலேயும் குந்தகமோ, குலைவோ, குறையோ ஏற்பட்டு விட்டாலும், அடிமைத்தனத்தின்போது அனுபவித்த அல்லலையும் மிஞ்சியதான அல்லல் நம்மைத் தாக்கும்.

[44-ம் பக்கம் பார்க்க.]





1.



2.








3.



4.



5.

படம் 1. மருத்துவ நிலையம் அமைப்பதற்கான சிரமதானப் பணியை சின்னமனூர் ஊராட்சி ஒன்றியத்தில் (மதுரை மாவட்டம்) 4-7-1968 அன்று மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தொடங்கி வைத்தார்.

படம் 2. திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த சிறுமலை பழையூர் கிராமத்தில் கட்டப்படவிருக்கும் தொடக்கப்பள்ளிக்கட்டிடத்திற்கு சிரமதானத் தொண்டர்கள் ஆற்றும் அரும்பணி.

படம் 3. மதுரை மேற்கு ஊராட்சி ஒன்றியத்திலுள்ள கே. புதூர் கிராமத்தில் கல்குளம் கண்மாயை சிரமதானத் தொண்டர்கள் தூர் எடுத்து, குளக்கரையை உயர்த்தி, பலப்படுத்தும் பணியில், மதுரை வருவாய்க் கோட்ட அதிகாரி திரு எஸ்.பு. காசிராஜன் அவர்கள் பங்கு பெற்றார்.

படம் 4. பூவானந்தபுரம் (சின்னமனூர் ஊராட்சி ஒன்றியம்) வாய்க்காலை செம்மைப்படுத்தும் பணியில், சிரமியர் ஈடுபட்டுள்ள காட்சி.

படம் 5. ஓடைப்பட்டி தம்பிரான் ஊருந்து கரையை, தூர் எடுக்கும் பணியில் 24-6-1968-ல் சிரமதானத் தொண்டர்கள் ஈடுபட்டனர்.







படம் 1. இடைப்பாடி ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த வெள்ளரிவெள்ளியில் ஊராட்சி பொது மதிய உணவு மையத் திறப்பு விழாவின்போது, ஜேஸிப் படையினர் எச். பி. 1 கம்பு நாற்று நடுதலை, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கண்டு மகிழ்ந்தார். அமைச்சருக்கு அருகில், இடைப்பாடி தொகுதி, சட்ட மன்ற உறுப்பினர் திரு அ. ஆறுமுகம், பனமரத்துப்பட்டி தொகுதி, சட்ட மன்ற உறுப்பினர் திரு டி. பொன்னுமலை ஆகியோர்.

படம் 2. பொது மதிய உணவு மையத்திற்கு பொதுமக்கள் அளித்த ரூ. 1,200 மதிப்புள்ள மதிய உணவுக்கான பாத்திரங்கள்.

படம் 3. வெள்ளரிவெள்ளி ஊராட்சியின் பொது மதிய உணவு மையத் திறப்பு விழாவில் 1968-ம் ஆண்டு ஜூன் திங்கள் 7-ம் நாள் அன்று எச். பி. 1 கம்பு நாற்று நட, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் நீர்பாய்ச்சுதல். அருகில் திரு டி. பொன்னுமலை (பனமரத்துப்பட்டி தொகுதி சட்டமன்ற உறுப்பினர்).

படம் 4. வெள்ளரி வெள்ளியில் பொது மதிய உணவு தோட்டத்தில் உள்ளாட்சித் துறை அமைச்சர்

படம் 5. கோனேரிப்பட்டி மின்பண்ணை துவக்க விழாவில் இடைப்பாடி ஒன்றியத் தலைவர் திரு செல்லப்பன் உரையாற்றுகிறார்.





வெள்ளரி வெள்ளி ஊராட்சி

# பொது மதிய உணவு மையம்

"கண்ணுடையார் என்பவர் கற்றோர்" என்ற பொய்யா மொழிக்கிணங்க, மக்களை அறிவுசால் மக்களாக்கிடும் கல்விக்காக, தமிழக அரசு நல்ல பல திட்டங்களைத் தீட்டி வருகிறது. செவிக்கு உணவாகிய கல்வியைப் புகட்டி, அதே நேரத்தில் தோன்றும் வயிற்றுப் பசி போக்க அமுதமாகிய மதிய உணவையும் கொடுத்துத் தரத்தை உயர்த்தப் பாடுபடும் நமது அரசு, ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் எல்லா பள்ளிகளுக்கும் ஒரு பொது மதிய உணவு மையம் அமைக்க 15—3—68-ஆம் தேதிய கடிதம் எண் 97971-இ 8/67-11-ல் ஓர் ஆணையிடுவதற்கு முன்பே, சோதனை முயற்சியாக சேலம் மாவட்டம் இடைப்பாடி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் அமைக்கப்பட்டதே, வெள்ளரி வெள்ளி ஊராட்சி பொது மதிய உணவு மையமாகும்.

ஊராட்சி நிதி நிலையில் பெரும் பகுதி மதிய உணவிற்குச் செலவாகுவதைத் தவிர்க்கவும், தரமான சத்துள்ள உணவைச் சிக்கனமாக சமைத்து வழங்குவதும்தான், பொது மதிய உணவு மையத்தின் குறிக்கோள்களாகும்.

வெள்ளரி வெள்ளி எல்லையில் உள்ள 9 பள்ளிகளில் மதிய உணவு பெறும் மாணவர்கள், மற்ற விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன. ஊராட்சி செலவிடும் தொகை, அதன் வருட வருமானத்தில் மிக கணிசமானதாகும்.

| வரிசை எண்ணும் பள்ளியின் பெயரும். | படிக்கும் மாணவர்கள். | மதிய உணவு பெறும் மாணவர்கள். | ஆகும் செலவு. அரசினர் மானியம். | ஆகும் செலவு. ஊராட்சி பங்கு. | வெள்ளரி வெள்ளியிலிருந்து பள்ளி உள்ள தூரம். |
|---|---|---|---|---|---|
| (1) | (3) | (3) | (4) | (5) | (6) |
| | | | ரூபாய். | ரூபாய். | மை. பர். |
| 1 வெள்ளரிவெள்ளி .. .. .. | 378 | 96 | 1,152 | 768 | ... |
| 2 மாக்கனூர் .. .. .. .. .. | 76 | 19 | 300 | 200 | 2—4 |
| 3 கல்லபாளையம் .. .. .. .. | 80 | 25 | 228 | 152 | 1—3 |
| 4 ஊமையகவுண்டனூர் .. .. .. | 41 | 15 | 180 | 120 | 1—0 |
| 5 புதுப்பட்டி .. .. .. ... | 46 | 10 | 120 | 80 | 2—0 |
| 6 சுள்ளிமுள்ளூர் .. .. .. .. | 53 | 15 | 180 | 120 | 1—4 |
| 7 குஞ்சாம்பாளையம் .. .. .. .. | 84 | 20 | 264 | 176 | 1—4 |
| 8 வேப்பமரத்துப்பட்டி .. .. .. | 36 | 22 | 240 | 160 | 1—0 |
| 9 வேட்டுவப்பட்டி .. .. .. .. | 53 | 20 | 240 | 160 | 1—0 |
| மொத்தம் .. | 847 | 242 | 2,904 | 1,936 | |

[படங்கள் : எதிர்பக்கத்தில்].

இவைகளுக்காக உணவு தயாரிக்க ரூ. 3,000 செலவில், ஒரு சமையலறையும், கிடங்கும் நிறுவப்பட்டுள்ளன. ஏற்கெனவே வேலை செய்து வரும் பள்ளி சேவகியைச் சமையல் வேலைகளைக் கவனிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இம்மையத்திற்காக ஊர்ப் பொது மக்கள் தங்கள் மேலான ஆதரவைத் தெரிவித்தும், ரூ. 1,200-க்கு மதிப்பான சமையல் பாத்திரங்கள், உணவு எடுத்துச் செல்ல பாத்திரங்கள், சாப்பிடும் தட்டுகள் முதலானவைகளை நன்கொடையாகவளித்தும், சமையல் கூடத்திற்குத் தங்கள் செலவில் மேல் நிலை குடிநீர் தொட்டியிலிருந்து குழாய் அமைத்து தண்ணீர் கொண்டு வரவும் ஏற்பாடு செய்துள்ளனர்.

### மதிய உணவு வழங்குதல்

தூரமுள்ள பள்ளிகளுக்கு உணவு வழங்குவதன் பொருட்டு ரூ. 300 செலவில் ஒரு மிதிவண்டி வாங்கப்பட்டுள்ளது. தோட்டத்திற்குத் தோட்டக்காரனை நியமனம் செய்து, இதற்குப் பயன்படுத்திக் கொள்ளப்படுகிறது. வெள்ளரிவெள்ளி உயர் துவக்கப் பள்ளி கடைநிலை ஊழியரும், சமையல் வேலைகளை முடித்த பின் பள்ளி சேவகியும் அருகிலுள்ள பள்ளிகளுக்கு உணவு எடுத்துச் செல்லப் பயன்படுத்தப்படுகின்றனர். உணவு, தட்டு மூலம் வைத்துப் பூட்டப்பட்டு வெள்ளரிவெள்ளி மதிய உணவு மையச் செயலாளரான தலைமையாசிரியரிடம் ஒரு சாவியும், சம்பந்தப்பட்ட பள்ளி ஆசிரியரிடம் ஒரு சாவியும் கொடுக்கப்பட்டு மிகப் பத்திரமாக விநியோகிக்கப்படுகிறது.

### மதிய உணவிற்கான தோட்டம்

மதிய உணவிற்கான தானியங்களையும், காய்கறிகளையும் நாமே சிக்கன முறையில் உற்பத்தி செய்து, நன்முறையில் இயக்கிவர, பள்ளிக்கு அருகில் பயிர் செய்ய, லாயக்கில்லாத 5·59 ஏக்ரா பரப்புள்ள 587/4, 587/3, 587/8-எ, என்ற சர்வே எண்ணுள்ள மந்தவெளி இடத்தைக் தேர்ந்தெடுத்து, அங்குள்ள முட்புதர்கள், பாறுங்கல், சரளைகள் இவைகளை அப்புறப்படுத்தி, ரூ. 3,000 செலவில் காடு திருத்தி கழனியாக்கப்பட்டது. பயனற்ற முட்புதர்கள் யாவும் மதிய உணவு சமையலுக்காகப் பயன்படுத்தப்பட்டு, இதுவரை விறகு விலைக்கு வாங்க வேண்டிய அவசியமில்லாமற் செய்துவிட்டது. நிலத்தினைச் சுற்றி இரு பக்கங்களிலும் வேலி கட்டி, உயிர் வேலியும் போடப்பட்டது.

தோட்டத்தில் வடபுறத்தில் உள்ள கிணற்றை ரூ. 3,000 செலவில் ஆழப்படுத்தி, பொது மக்கள் நன்கொடையாகவும், ஊராட்சி துணையோடு அளித்த பம்ப் செட் ஒன்றையும் பொருத்தி தோட்டத்திற்கு, 560 அடி நீளம் சிமெண்ட் குழாய்கள் மூலம் தண்ணீர் பாய்ச்ச வசதியளிக்கப்பட்டுள்ளது. பள்ளிக்கு அருகிலுள்ள கிணறு ரூ. 3,000 செலவில் அகலப்படுத்தி, ஆழப்படுத்தப்பட்டு மேல் நிலை நீர்த் தேக்க தொட்டிக்குப் பம்ப் மூலம் நீர் இறைக்க மின் சாதனமும் பொருத்தப்பட்டுள்ளது. இவ்விரு கிணறுகளிலிருந்தும் கிடைக்கும் நீர், பம்ப் செட் மூலம் தோட்டத்திற்கு வருடம் முழுவதும் கிடைக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பள்ளி, ஊராட்சி அலுவலகம், போன்ற கட்டிடங்கள் போக மீதம் 5 ஏக்கராவில் முதற் கட்டமாக வீரிய கம்பு 0·20 செண்டிலும், தென்னங் கன்றுகள் 100-ம், பசுந்தாள் உரச் செடிகளும், முருங்கை மரமும் வைக்கப்பட்டு மீதி நிலத்தில் சோளமும் பயிராக்கப்பட்டுள்ளன.

தோட்டத்தில் ஆகும் செலவும், வருமானமும், வருமாறு :—

### முதல் போகம்

| வருமானம் | | செலவு. வேலை விவரங்கள். | செலவின் மதிப்பு. ரூ. | சிரமதானத் தொண்டரின் பங்கு. |
|---|---|---|---|---|
| 1 மகசூல் ஓர் ஏகராவிற்குச் நெல் சுமார் 20 மூட்டைகள் வீதம் 4 ஏகராவிற்கு (மூட்டை 1க்கு ரூ.50வீதம்). | 4,000 | 1. நாற்றங்கால் தயாரித்தல். | 5<br>80 | சிரமதானத் தொண்டர்களைக் கொண்டு செய்தல். |
| | | 2. விதைகள் .. .. | 80 | .... |
| | | 3. நடவு வயல் தயாரித்தல். | 400 | விசை உழவு கருவிகொண்டு செய்தல். |
| 2 வைக்கோல் பில் .. .. | 500 | 4. ஏரு, ஏரு இடுதல் .. | 550 | ஏரு இடுதல் 15 சிரமதானத் தொண்டர்கள் கொண்டு செய்தல்—3 நாட்கள். |
| | 4,500 | | | |
| | | 5. நடவு .. .. .. | 80 | 15 சிரமதானத் தொண்டர்கள் கொண்டு செய்தல்—4 நாட்கள். |
| | | 6. பயிர்ப் பாதுகாப்பு .. | 50 | 2 சிரமதானத் தொண்டர்கள் 2 நாட்கள். |
| | | 7. நீர் இறைத்தல் .. | 300 | .... |



| | | |
|---|---|---|
| 8. களை எடுத்தல் .. .. | 50 | 10 சிரமதானத் தொண்டர்கள் 4 நாட்கள். |
| 9. அறுவடை .. .. | 150 | 15 சிரமதானத் தொண்டர்கள் 4 நாட்கள். |
| 10. மொத்த செலவு .. | 1,930 | |
| சிரமதானத் தொண்டர் மூலம் செய்த வேலையின் மதிப்பை கழிக்க. | 410 | |
| நிகர செலவு .. | 1,520 | |
| நிகர லாபம் .. | 2,980 | |

### இரண்டாம் போகம், மூன்றும் போகம்.

| வருமானம். | செலவு. வேலையின் விவரங்கள். | செலவினங்கள். | சிரமதானத் தொண்டர்களின் பங்கு. |
|---|---|---|---|
| 1 மகசூல் ஓர் ஏக்கருக்கு சுமார் 17 மூட்டைகள் வீதம் 4 ஏக்கருக்கு 68 மூட்டைகள் (நெல்) மூட்டை ஒன்று ரூ. 50 வீதம் 68 மூட்டைக்கு. 3,400 | 1. நாற்றங்கால் தயாரித்தல். | 80 | 5 சிரமதானத் தொண்டர்களை கொண்டு செய்தல். |
| | 2. விதைகள் .. .. | 80 | .... |
| | 3. நடவு வயல் தயாரித்தல். | 300 | விசை உழவு கருவிகொண்டு செய்தல். |
| | 4. ஏரு. ஏரு இடுதல் .. | 450 | ஏரு இடுதல் 15 சிரமதானத் தொண்டர்கள் கொண்டு செய்தல். 3 நாட்கள். |

45-ம் பக்கம் பார்க்க.


பயனுள்ள ஒரு திட்டமும், தேவையான வழிவகையறிவும், அதற்குரிய திறமையும் உங்களிடம் இருக்குமேயானல்



சொந்தமாக உங்கள் சிறுதொழிலைத் துவக்கிக்கொள்ள நாங்கள் நிதி உதவி வழங்குகிறோம்!

மேற்கொண்டு தகவலறிய, அருகிலுள்ள ஸ்டேட் பாங்க் அலுவலகத்தோடு தொடர்பு கொள்ளவும்.

சேவை புரிவதற்கே ஸ்டேட் பாங்க்

S. 315 TMG

வெற்றி மாளிகையின் வாயிலிலே—17-ம் பக்கத் தொடர்ச்சி.

பதவிக்குப் புதிதாக வருபவர் ஒவ்வொருவரும் தனக்கு முன்பு இருந்தவரைவிடதான் புதிதாக எதையாவது செய்யவேண்டும் என்ற ஆர்வத்தைக் கொண்டிருப்பார்கள் என்றும் அதை அரசினர் பயன்படுத்திக்கொண்டு மக்களுக்கு அவர்கள் மூலம் அதிக பயன் கிடைக்க உற்சாகப்படுத்த வேண்டும் என்றும் அவர் கூறினர்.

இம்மாவட்டம் செய்துள்ள வேலைகளை பின்கண்ட புள்ளிவிவரங்களே விளக்கும்.

ஓர் ஆண்டுல்.

| | |
|---|---|
| அரிஜனங்களுக்காக தண்ணீர் வழங்கும் தொட்டிகள். | 32 |
| குடிதண்ணீர் வழங்க மேல்தள தொட்டிகள். | 40 |
| கட்டப்பட்டப் பள்ளிக்கூடங்கள். | 76 |
| விவசாயக் கிடங்குகள் — | 17 |
| கால்நடை மருத்துவ மனைகள். | 2 |
| பஞ்சாயத்துக் கட்டிடங்கள். | 22 |
| தாய்சேய் நல விடுதிகள். | 5 |
| ஆசிரியைகளுக்கு விடுதிகள். | 5 |
| சிரமிப்படையினர் செய்துள்ள பணிகள். | 35 |

1967-68-ல் செங்கற்பட்டு மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள்.

| திட்டத்தின் பெயர். | வேலைத்திட்ட எண்ணிக்கை, | முடிந்த வேலைகள். | பாக்கியுள்ளவை. |
|---|---|---|---|
| சாதாரணக் கிணறு திட்டம் .. .. | 496 | 347 | 149 |
| குழாய் அமைத்து தண்ணீர் வழங்கல் .. | 96 | 29 | 65 |
| பள்ளிக் கட்டிடங்கள் .. .. .. | 244 | 91 | 193 |
| இணைப்புச் சாலைகள் .. .. .. | 516 | 322 | 195 |
| உள்ளூர் சாலைகள் .. .. .. | 271 | 192 | 79 |
| உள்ளூர் பாசனம் .. .. .. | 620 | 417 | 203 |
| முன்னுள் மின் பகுதி வேலைகள் .. | 194 | 156 | 38 |
| ஆசிரியைகள் விடுதிகள் .. .. | 9 | 5 | 4 |
| | 2505 | 1590 | 915 |

சோழவரம் பகுதியில் மட்டும் சிரமிப்படையினர் 22 திட்டங்களை நிறைவேற்றியுள்ளனர். படப்பையில் மிகக் குறைந்த காலத்தில் ஒரு பள்ளிக் கட்டிடம் சிரமிப்படையினரால கட்டப்பட்டுள்ளது.

## தமிழக உழவரின் சாதனை

21-ம் பக்க தொடர்ச்சி.

அத்தோடு இந்த நெல்லை நான் பயிர் செய்ததில் தெரிந்துகொண்டது; கதிர் அறுவடை செய்ததற்கு நான்கு நாட்களுக்கு முன்பு வரை தண்ணீர் பாய்ச்ச வேண்டும். நான் கதிர் அறுவடை செய்வதற்கு 15 தினங்களுக்கு முன்பே சாதாரண நெல்லுக்கு தண்ணீரை நிறுத்தியது போல் நிறுத்திவிட்டதால் அதிக பதராகிவிட்டது.

ஆதலால் இந்த ஐ. ஆர். 8 நெல்லை விவசாயம் செய்யும் விவசாயிகள் தங்கள் தொகுதியிலுள்ள கிராம சேவக், விவசாய வளர்ச்சி அதிகாரியின் ஆலோசனையை அடிக்கடி கேட்டுக்கொண்டால், கட்டாயம் 4,000 கிலோ வரை மகசூல் சாதாரணமாக பெறலாம். அடுத்த தடவை இந்த ஐ. ஆர். 8 நெல்லைச் சாகுபடி செய்து 5,000 கிலோவிலிருந்து 6,000 கிலோ வரை மகசூல் பெறலாம் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது. ஆதலால் நான் கடைசியாக கூறிக் கொள்வது எல்லா விவசாய நண்பர்களும் இந்த அமோக விளைச்சல் தரும் ஐ. ஆர். 8 நெல்லை நவீன முறையில் சாகுபடி செய்யவேண்டும் அதனுல் நமது நாட்டின் பசிப்பிணி அறவே ஒழிந்து போகும்.




FDSEID 968



நாட்டுக்கு உணவளிக்க உதவும்
உழவுப் பெருங்குடி மக்களுக்கு
பன்னெடுங்காலமாய் பணிபுரிவது பாரி

Parry's

ஈ. ஐ. டி.—பாரி லிமிடெட்
(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது. உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)
உர இலாகா, டேர் ஹவுஸ், மதராஸ்-1.

உரங்கள் ● பூச்சி நாசினிகள் ● வீரிய ஒட்டு விதைகள் ● ஸ்ப்ரேயர்கள் ● நிபுணத்துவம் மிக்க விவசாயத்துக்கான சேவை

கூட்டுறவே நாட்டுயர்வு !

A - 1928

ஒட்டன்சத்திரம் "கற்பகத்தரு" நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி விற்பனைச் சங்கம் லிமிடெட்.,

ஒட்டன்சத்திரம்.

ஒட்டன்சத்திரம் அஞ்சல். பழனி வட்டம். மதுரை மாவட்டம்.

எங்கள் சங்கத்தில்

20S, 50×4×8; 4×9 சன்னக்கரை, பெரியகரை வேட்டி. மடிகளும்,
,, 33×4×6×4×7×4×8 துண்டு மடிகளும்,
,, 26×4×6; 4×5 துவாலை மடி. ரகங்களும்,
,, மலபார் ரக துண்டு மடிகளும்,
50×1×12 காடா & கலர் பீஸ்களும்,
50×4×8; 1×2 டைமன் வேட்டி ரகங்களும்

மொத்தமாகவும், சில்லரையாகவும் அரசினர் தள்ளுபடி கழித்து கிடைக்கும்.
எங்களது தயாரிப்பு ரகங்கள்
எல்லா Co-optex விற்பனை நிலையங்களிலும் கிடைக்கும்.

மு. சுப்பய்யா முதலியார்,
தலைவர்.

# மதுரை மாவட்ட கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம்

வரையறுக்கப்பட்டது ஏ. 1437 மதுரை.

31, வெங்கலக்கடைத் தெரு, மதுரை-1.

தபால் பெட்டி எண் 118
தொலைபேசி எண் 2166

தந்தி விலாசம்: கோஹோல்சேல்.

இச்சங்கம் அரசின் ஏஜண்டாக இருந்து, மதுரை மாவட்டம் முழுவதும் இரசாயன உரம் விநியோகம் செய்கிறது.

எங்கள் சங்கத்தில், நெல், கரும்பு, வாழை, மிளகாய், நிலக்கடலை, மற்றும் இதர பயிர்களுக்கு "புரு மார்க்" கலப்பு உரங்களைத் தயார் செய்து விநியோகம் செய்கிறோம். எங்கள் கலப்பு உரம் நல்ல பயனைத் தரவல்லது. கூட்டுறவுச் சங்கங்களும், விவசாயிகளும் தங்களது தேவைக்கு எங்கள் "புரு மார்க்" கலப்பு உரத்தையே வாங்கி பயனடைய வேண்டுகிறோம்.

வே. ஆ. இராமையா,
துணைப்பதிவாளர்-இணைச்செயலாளர்,

எஸ். வைத்தியலிங்கம்,
துணைப்பதிவாளர்/தனி அதிகாரி.




"ஆடுதுறை 27 நெல் ரகம்—பணத்தோட்டம்" என்று "பஞ்சாயத்து ராஜ்" இதழ் தமிழகத்து நிகழ்ச்சி ஒன்றுக்கு தலைப்பிட்டு கட்டுரை வெளியிட்டுள்ளது. அந்தக் கட்டுரையின் தமிழாக்கம் இங்கே தரப்படுகிறது:



1965-ம் ஆண்டில் நடைபெற்ற நிகழ்ச்சி இது.

தமிழகத்திலுள்ள தென்னார்க்காடு மாவட்டத்திலுள்ள விளாகம் என்னும் கிராமத்தைச்சேர்ந்த விவசாயி திரு எஸ். இராமலிங்கம் அவருடைய நண்பர்கள் தங்கள் மாவட்டத்தில் புதிதாக அறிமுகப்படுத்தியிருக்கும் ஆடுதுறை 27 புதிய நெல் ரகத்தைப் பற்றி அவரிடம் சொன்னார்கள்.

இராமலிங்கத்தின் நண்பர் ஒருவர் தஞ்சைமாவட்டத்திலுள்ள கும்பகோணம் வட்டத்தைச்சேர்ந்தவர் ஆடுதுறை 27 நெல் ஓர் எக்கருக்கு 50 மூட்டைகளுக்கு மேலாக—அதாவது 3000 கிலோகிராமுக்கு மேலாக விளைச்சல் தருவதாக தெரிவித்தார்.

அறுவடைக்கு முன்பு நண்பருடைய கிராமத்திற்குச் சென்று ஆடுதுறை 27 நெல் விளைச்சலைப் பார்த்தார், பார்த்தவுடனேயே அடுத்த ஆண்டு சாகுபடி செய்ய 10 மூட்டை விதை நெல்லை நண்பரிடம் வாங்கிவந்தார்.

தென்னார்க்காடுமாவட்டத்தில் புதிய ரக நெல்லை சாகுபடிசெய்த கிராமங்களில் விளாகம் ஒன்று.

விளாகத்திற்கு பாசன வசதி வீராணம் ஏரியிலிருந்து கிடைக்கிறது. இங்கு 300 எக்கர் நிலம் சாகுபடி செய்து வரப்படுகிறது. ராமலிங்கம் ஆண்டுதோறும் 20-லிருந்து 30 எக்கர் நிலம் வரை ஆடுதுறை நெல்லை சாகுபடி செய்து வந்தார். இதை கண்ட மற்ற விவசாயிகளும் படிப்படியாக ஆடுதுறை 27 நெல் ரகத்தைப் பயிரிட தொடங்கிவிட்டனர்.

திரு ராமலிங்கம் ஆடுதுறை 27 நெல் சாகுபடி செய்யும் பொழுது விவசாயத் துறையினர் ஆலோசனைகளை மிகுந்த கவனத்துடன் கடைப்பிடித்தார். நாற்றங்கால்தயாரிப்பு நடுகை வயலைப் பக்குவபடுத்துவது—காலத்தில் உர மிடுதல்—பயிர்பாதுகாப்பு முறைகளை மேற்கொள்ளுதல் முதலிய முறைகளை கடைப்பிடித்தார்.

### கற்பகத் தரு

அதன் விளைவு—ஆடுதுறை 27 நெல்—கற்பகத் தருவாகிவிட்டது, அவருக்கு கடந்த ஆண்டு 25 எக்கர் நிலத்தில் ஆடுதுறை 27 நெல் சாகுபடி செய்தார் ராமலிங்கம் சராசரியாக ஒரு எக்கருக்கு 60 கிலோ கொண்ட 45 மூடைகள் விளைந்திருந்தது.

சாகுபடி செய்ய ஓர் எக்கருக்கு ராமலிங்கத்திற்குச் செலவான தொகை ரூ. 400. ஆனால் ஓர் எக்கரில் விளைந்த நெல்லை விற்றதில் கிடைத்த பணம் ரூ. 1,200. ஓர் எக்கருக்கு மட்டும் அவருக்கு கிடைத்தலாபம் ரூ. 800

நானூறு ரூபாய் செலவு செய்தால் எண்ணூறு ரூபாய் லாபம் அதுவும் 105 நாட்களில், ஆடுதுறை 27 நெல் சாகுபடி மூலமாக.

பிறகு ஏன், ராமலிங்கம் ஆடுதுறை 27 நெல் ரகத்தை பணத்தோட்டம், கற்பகத்தரு என்று சொல்லமாட்டார்?

# புதிய முயற்சி

# நாட்டுக்கு நல்வழி காட்டும் கேரள மாணவர்கள்

"செப்டம்பர் திங்களில் வரும் ஓணம் திருநாளுக்குள் ஒவ்வொரு மாணவனும் ஒரு பாரா நெல் உற்பத்தி செய்யவேண்டும்".

இந்த முழக்கத்தை கேரள மாநிலத்திலுள்ள ஒவ்வொரு மாணவனும் முழங்கிக்கொண்டிருக்கிறார்கள்.

'பாரா' என்பது எட்டு கிலோ நெல்லுக்கு சமமான கேரள மாநிலத்தில் வழங்கும் அளவு முறையாகும்.

ஒவ்வொரு மாணவனும் நெல் உற்பத்தி செய்ய வேண்டும் என்ற கருத்து கேரளம் முழுவதும் பரவியிருக்கிறது. எல்லா மாணவர்களும் ஓணம் திருநாளுக்குள் ஒரு பாரா நெல்லை உற்பத்தி செய்வதில் முழுமூச்சாக ஈடுபட்டிருக்கிறார்கள்.

மாணவர்கள் நெல் உற்பத்தி செய்யவேண்டும் என்பதற்காக அமைக்கப்பட்டுள்ள மாணவர்கள் அமைப்புகள் இப்பணியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

மிகு விளைச்சல் தரக்கூடியதாகமான ஐ.ஆர்-8 நெல் அடங்கிய இரண்டு லட்சம் பொட்டலங்கள் கேரள மாநிலம் முழுவதுமுள்ள மாணவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கேரள மாநிலத்தில் ஆல்வேயில் உள்ள இரசாயன உரத் தொழிற்சாலையிலிருந்து (FACT) இந்தத் திட்டத்திற்காக உரங்கள் வழங்கப்பட்டுள்ளன. மாணவர்கள் நெல் உற்பத்தி செய்யும் இந்தத் திட்டத்தின் நோக்கம் மாணவர்கள் தங்கள் சொந்த உழைப்பினால் தங்கள் வீட்டுத் தோட்டத்திலோ சுற்றுப் புறத்திலோ, மொட்டை மாடியிலே, பூந்தொட்டிகளிலோ நெல்லை உற்பத்தி செய்யவேண்டும் என்பதுதான்.

ஐ.ஆர்.-8 நெல் விதைகள் வளர்ச்சியடைய 120 நாட்கள் ஆகும். செப்டம்பர் மாதத்தில் மாணவர்களின் இந்தச் சாகுபடியால் குறைந்தது இரண்டு லட்சம் பாரா நெல் கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மாணவர்களுடைய அமைப்புகள், கேரள மாநில பள்ளிக்கூடங்களிலும் கல்லூரிகளிலும் உழவர் சங்கங்களை அமைக்க முயற்சி செய்துகொண்டிருக்கின்றன. அது மட்டுமல்ல, சிறு நில உடைமையாளர்களுக்குரிய பிரச்னைகளைப் பற்றி மேலீடான ஆராய்ச்சி செய்யவும் அவர்களுடைய நிலங்களில் மண் வள சோதனை செய்ய உதவவும், மாணவர் அமைப்புகள் திட்டமிட்டுள்ளன.






விவசாயிகளுக்குத் துணை செய்கின்ற உயிர்ப் பிராணிகளில் நாயையும் முக்கியமான ஒன்றாகக் கருதலாம். கிராமங்களில் ஒவ்வொரு விவசாயியும் நாய் வளர்ப்பதைப் பலர் கண்டிருக்கலாம் வீட்டுக்கும், கால்நடை பண்ணைக்கும் காவலனாக இருந்து நாய் விவசாயிகளுக்குச் செய்யும் உதவி மிகப் பெரிதாகும். வயல்களில் ஆடுகளைக் கொண்டுபோய் "கிடை" போடும் வழக்கம் எல்லா இடங்களிலும் உண்டு. அந்த ஆடுகளை யாரும் திருடிச் சென்றுவிடாமலிருக்க விவசாயிகள் வயலில் போய்ப் படுத்துக்கொள்வார்கள். அவர்கள் வளர்க்கும் நாயும் அக்காவல் வேலையில் அவர்களுக்குப் பெருந்துணை புரியும். நாய்களின் உதவி இல்லையானால் இரவு நேரத்தில் ஆட்டுக் கிடைகளில் ஆடுகளைத் துன்புறுத்த வரும் ஓநாய், நரி முதலான விலங்குகளின் தொந்தரவையும், திருடர்கள் பயத்தையும் விவசாயிகள் பயத்தையும் விவசாயிகள் தவிர்ப்பது மிகக் கடினமாகிவிடும்.

வயல்களில் அறுவடை செய்த தானியங்களைக் காவல் புரிவதற்கும் நாய்கள் துணை புரிகின்றன. தானியங்களை வீட்டில் கொண்டுவந்து சேர்த்த பிறகும் விவசாயிகள் திருடர்களுக்கு அஞ்சி எச்சரிக்கையாக வாழவேண்டியதிருக்கிறது. நரி முதலிய உயிர்ப் பிராணிகள் சில சமயம் ஊருக்குள் புகுந்து விவசாயிகளின் ஆடு, கோழி முதலியனவற்றைக் கவர்ந்து சென்று விடுவதுண்டு. விவசாயிகளின் வீட்டிலுள்ள நாய்கள் இப்படிப்பட்ட தொல்லைகளிலிருந்து விவசாயிகளின் செல்வத்தைக் காக்கும்.

விவசாயக் குடும்பத்தினர் வயலில் வேலை செய்யும்போது தங்கள் குழந்தைகளையும் பொருள்களையும் மரத்தடியிலோ, தனியிடத்திலோ விட்டுச் செல்வதுண்டு. அப்போது நாய்கள் அவற்றின் அருகிலிருந்து காவல் காத்து உதவும். நாய்களுக்கு இருக்கும் மோப்பச் சக்தி காரணமாகச் சில கொடிய மிருகங்களின் சஞ்சாரத்தை அவைகள் சுலபமாகக் கண்டுகொள்கின்றன. நாய்களுக்கு நல்ல நினைவாற்றலும் உண்டு. இதனால் வீட்டிலும் வயலிலும் நாய்கள் விவசாயிக்குத் தக்க பாதுகாவலனாகவும், உயிர்த் தோழனாகவும் விளங்க முடிகிறது. விவசாயிகளுக்கு வயலில் வேலை அதிகமில்லாத கோடை மாதங்களில் முயல் வேட்டை முதலானவற்றிற்காக அவர் செல்வதுண்டு. அப்படி வேட்டைக்குச் செல்லும் காலங்களில் நாய்களையும் கூட்டிச் செல்வார்கள். வேட்டையின் போது நாய்கள் அவர்களுக்குப் பெருந்துணை புரியும்.

நாய் ஒரு நன்றியுள்ள பிராணி. சில ஜாதி நாய்கள் பார்ப்பதற்கும் மிக அழகாய் இருக்கும். அதனுடைய எஜமான விசுவாசம், நன்றி மறவாமையும் கருதிப் பெரியவர்களெல்லாங்கூட அச்சிறு பிராணியின் சிறப்பை மிகவும் பலப்படப் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். இலக்கியங்களில் நாயின் நன்றி மறவாமை மிகச் சிறப்பித்துப் பேசப்படுகிறது.

வெளிநாடுகளில் கிராமவாசிகள் நாய்களைச் சில சிறு சிறு வேலைகள் செய்யவும் பழக்கி வைத்திருக்கிறார்கள். சிறு வண்டிகளை இழுப்பதற்கும், காய்கறிக்கூடை முதலானவற்றைத் தூக்கிக்கொண்டு துணையாக உடன் வருவதற்கும், பள்ளிக்கூடப் பிள்ளைகளுக்குத் துணையாகச் செல்வதற்கும் குருடர்களுக்கு வழிகாட்டிச் செல்வதற்கும் நாய்களைப் பழக்கலாம்.

இப்படிப் பலவகையிலும் மனிதர்க்கு உதவக்கூடிய நாய்களைத் தெரிந்தெடுத்து வளர்ப்பதிலும் நாம் சில முறைகளை அனுசரிக்க வேண்டும்.

குழந்தைகளை நல்ல முறையில் சொல்லிக்கொடுத்து வளர்த்தால் எப்படி அவைகள் நாட்டிற்கு நல்ல குடிமக்களாக வளர்ந்து வாழ்வார்களோ அதுபோல நாய்களையும் நல்ல தரமறிந்து செவ்வையாக வளர்த்தால் அவைகள் அளவு கடந்த வேலைகளுக்கு உதவும்.

குட்டியாக இருக்கும்போது நாய்களை வளர்ப்பதில் சில சிரமங்கள் உண்டு. கண்ட இடத்தில் அவைகள் மலஜலம் கழிக்காதபடி முதலில் அவற்றிற்குப் பயிற்சி அளிக்க வேண்டும். சிறிது அக்கறையோடு பயிற்சி அளித்தால் அவற்றைச் சுத்தமாக இருக்கும்படி எளிதில் செய்துவிடமுடியும். ஆகாரம் கொடுப்பதைக்கூட முறையான வேளையும், நேரமும் வைத்துக் கொடுத்து வரவேண்டும். ஒரு குறிப்பிட்ட நேரத்தில்தான் உணவு கொடுப்பதென்று முறை வைத்துக்கொண்டால் சரியான நேரம் வந்ததும் நாய்கள் எஜமானை நினைவூட்டத் தொடங்கும், நாய் வளர்ப்பவர்கள் ஆரம்பத்தில் ஒவ்வொரு பிரச்சினையும் கருத்து

செலுத்தி ஒவ்வொரு காரியத்திலும் நன்கு அவற்றைப் பழக்கிவிட்டால் பிறகு அவர்களுக்கு ஒருவித சிரமமும் இருக்கமாட்டாது. கெடியாரம் தவறினாலும் மணியும் நேரமும் தவறாதபடி நாய்கள் தனக்குரிய காரியத்தை அவ்வப்போது செய்யும்.

நாய்களை எந்த நேரமும் கட்டிப் போடாமல் சில நேரங்களில் அவிழ்த்துவிட்டுச் சுதந்திரமாகத் திரியவிட வேண்டும். நாய்கள் நல்லறிவுடைய பிராணிகளாக இருந்தாலும் அவற்றின் அறிவின் எல்லைக்கும் ஒரு வரையறை உண்டு. எனவே அவைகள் ஏதும் தவறு செய்தால் உடனே கோபங்கொண்டு அவற்றைத் துன்புறுத்திவிடக்கூடாது. சாட்டையை வைத்துக் குத்தினாலும் எஜமானிடம் வாலைக் குழைத்து நன்றியோடு நடக்கும் பிராணி நாய் ஒன்றுதான். வேறு எந்தப் பிராணிக்கும் இந்தக் குணம் கிடையாது. இந்தச் சிறந்த குணத்தை நாம் மிகவும் மதித்து நாய்களைத் துன்புறுத்தாமல் பேண வேண்டும்.

[மத்திய அரசு இந்திய விவசாய ஆராய்ச்சிக் கழகம் செய்தி வெளியீட்டிலிருந்து.]

## மண் பரிசோதனை

"ஓர் ஏக்கர் நிலப்பரப்பில் கலப்பை செல்லும் ஆழத்திற்கு உள்ள மண்ணின் எடை சுமார் 20 லட்சம் இராத்தல் என மதிப்பிடப்பட்டுள்ளது. ஒரு பானை சோற்றிற்கு ஒரு சோறு பதம் பார்ப்பது போல் ஓர் ஏக்கர் நிலத்தில் ஓர் இராத்தல் மண்ணைப் பரிசோதனைக்கென எடுத்தால் போதுமானதாகும். மாதிரியை எடுப்பதற்கு தகுந்த காலம் அறுவடைக்குப் பின் அல்லது நடவுக்கு முன் ஆகும். உரமிட்ட வயலில் மூன்று மாதத்திற்குள் மண் மாதிரி எடுக்கக்கூடாது."

✦ ✦ ✦

## தெரியுமா?

"நம் நாட்டில் நாள்தோறும் பத்தாயிரம் ரயில்களுக்குமேல் ஓடிக்கொண்டிருக்கின்றன. நாடு விடுதலை அடைவதற்கு முன் இருந்ததைவிட இப்பொழுது இருமடங்குக்குமேல் ரயில் பிரயாணிகளின் எண்ணிக்கை பெருகியிருக்கிறது.

ரயில்கள் ஏற்றிச் செல்லும் சாமான்களின் அளவு 15 ஆண்டுகளில் இரு மடங்குக்குமேல் அதிகரித்திருக்கிறது.

ரயில்வே சாதனங்கள் எல்லாம் இப்பொழுது நம் நாட்டிலேயே தயாரிக்கப்படுகின்றன. வாகனங்களை ஏற்றுமதி செய்யவும் தொடங்கியுள்ளோம்.

மூன்று ஐந்தாண்டுத் திட்டங்களில் ரயில்வே வளர்ச்சிக்கு சுமார் மூவாயிரம் கோடி ரூபாய் செலவாகியிருக்கிறது."

[மத்திய அரசு வெளியீட்டுத்துறையின் நல்வாழ்வை நோக்கி நமது ரயில்வே என்ற வெளியீட்டிலிருந்து.]



# அங்கும் இங்கும்

### "கிராமநலம்" துணுக்குகள்

## ஒட்டு ரகப் பயிர்கள்

மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள ஜல்கான் மாவட்ட பரிஷத் பகுதியில் உள்ள சுமார் 2,80,000 ஏக்கர் நிலத்தில் ஒட்டு ரக தானியங்களை பயிர் செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்கென மத்திய கூட்டுறவு வங்கி ரூ. 85 லட்சம் நிதி உதவியளிக்க அனுமதி வழங்கியுள்ளது.

சென்ற ஆண்டு 40,000 ஏக்கர்களில் தான் ஒட்டு ரக தானியங்கள் பயிர் செய்யப்பட்டன. இவ்வாண்டு 1,75,000 ஏக்கரில் கேழ்வரகும் 90,000 ஏக்கரில் கம்பும், 15,000 ஏக்கரில் சோளமும் பயிரிட உத்தேசிக்கப் பட்டுள்ளது. இவற்றிற்குத் தேவையான உரங்கள், விதைகள், பூச்சி மருந்துகள் அனைத்தும் இம்மாவட்டத்திலுள்ள 127 நிலையங்களின் வாயிலாக உழவர்களுக்கு விநியோகிக்கப்படும்.

⁂ ⁂ ⁂

## ஜம்மு—காஷ்மீரில் வேளாண்மை.

பொறுக்கு விதைகள், உரங்கள் போதிய மிகு பாசன வசதி ஆகியவற்றை திறம்பட பயன்படுத்தியதில், உணவு உற்பத்தி நன்கு பெருகியுள்ளது. 1951-52-ல் ஒரு ஹெக்டேரில் 8·69 குவிண்டால் அரிசிதான் கிடைத்தது. அது 1966-67-ல் 12·17, குவிண்டாலாக அதிகரித்துள்ளது. இது தவிர சோளம், 4,80 குவிண்டாலிலிருந்து 9·23 குவிண்டாலுக்கும், கோதுமை 3·88 குவிண்டாலிலிருந்து 6·57 குவிண்டாலுக்கும் பெருகியுள்ளன.

மூன்றாவது திட்ட காலத்தில் 28,000 டன்கள் தான் ரசாயன உரங்கள் பயன்படுத்தப்பட்டன. அந்த அளவு 1967-68-ம் ஆண்டில், சுமார் ஒரு லட்சம் டன்னுக்கு அதிகமாகியுள்ளது. 1950-51-க்குப் பிறகு, மீன் உற்பத்தி ஏழு மடங்கிற்கு அதிகரித்துள்ளது.

# செய்தி பேழை

**ஆந்திராவில் ஒரு மாவட்டத்திலே 29,048 குடும்பக் கட்டுப்பாடு சிகிச்சைகள்**

கிழக்கு கோதாவரி மாவட்ட (ஆந்திர மாநிலம்) த்தில் குடும்பக் கட்டுப்பாடு முகாம்கள், 1967-68-ஆம் ஆண்டில் நடத்தப்பட்டன. அவற்றின் பயனாக, 29,048 பேர்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு அறுவை சிகிச்சைகள் செய்யப்பெற்றன. ஆந்திர மாநிலத்திலேயே அதிகமான பேர்களுக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டது இந்த மாவட்டத்தில் தான்.

# பிற மாநிலங்களில்..

**மேற்கு வங்கத்தில் கோதுமைப் பயிர்**

முர்ஷிதாபாத் மாவட்டத்திலுள்ள மாமிம்பூர் என்ற கிராமத்தில் பன்னெடுங்காலமாக நெற்பயிரே பயிரிடப்பட்டது. ஆனால் திரு. பங்கிம் போஸ் என்பவர், உயர் ரக கோதுமை விதைகளைக் கொண்டு ஓர் ஏக்கரில் 67·5 மணங்கு கோதுமையை மகசூல் செய்துள்ளார். 1967-ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 24-ம நாள் அன்று விதைக்கப்பட்ட அப்பயிர், 1968 ஆம் ஆண்டு மார்ச்சு மாதம் 25ம் நாள் அன்று, விவசாயத் துறை அலுவலர்கள் முன்னிலையில் அறுவடை செய்யப் பட்டது.

"பஞ்சாயத்து ராஜ்", "குருக்ஷேத்ரா" இதழ்களிலிருந்து இடம் பெறுபவை: பக்கங்கள் 19, 22 மற்றும் 35 முதல் 40 வரை.

Articles reproduced from "Krukshetra" on pages 19 and 22, and from "Panchayati Raj" on pages 35 to 40.



※ புதுக்கோட்டை நகராட்சி

※ தென்காசி நகராட்சி

※ வேலூர் நகராட்சி

※ கோவில்பட்டி நகராட்சி

※ இடைப்பாடி நகராட்சி

# சிறப்புடன் பணியாற்றும் நகராட்சிகள்

## புதுக்கோட்டை நகராட்சி

வெளியூர் பயணிகள் புதுக்கோட்டை நகருக்கு வருகையில் தங்குதற்கு வசதியான 'பயணிகள் தங்கும் விடுதி' இல்லை என்ற குறையை போக்க, இந்நகராட்சி 'தங்கும் விடுதி' கட்டுவதற்கு நகரின் மையத்திலும், அலுவலகங்கள், கடை வீதி, பெருந்து நிலையம் இவற்றின் அருகிலும் உள்ள விசாலமான இடத்தை தேர்ந்தெடுத்து கட்டிடம் கட்டுவதற்காக சென்னை மாநில முன்னாள் ஆளுநர் உயர்திரு ஸ்ரீ பிரகாசா அவர்களால், 1954-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 13-ம் நாளன்று அடிக்கல் நாட்டப்பட்டது. அதன் பின்னர், இரண்டு குடும்ப அறைகளும், ஆறு ஒருவர் தங்கும் அறைகளும் கட்டப்பட்டு, 'நகராட்சி சத்தியமூர்த்தி ஞாபகார்த்த தங்கும் விடுதி' என பெயரிடப்பட்டு நகராட்சி தலைவர் திரு க. தர்மராஜபிள்ளை அவர்களால் 1958-ம் ஆண்டு எப்ரல் மாதம் 14-ம் நாள் திறந்து வைக்கப்பட்டது. இதை கட்டி முடிக்க ரூ. 42,350—0, ஆகியது. இந்த அறைகள் எல்லாம் நவீன வசதிகளுடன் மிகவும் பயனுள்ளதாக உள்ளன.

போதுமான தங்கும் அறைகள் இல்லையென்ற பயணிகளின் பெரும் குறையைப் போக்க, மேல் தளத்தில் இரண்டு குடும்ப அறைகளும் ஆறு ஒருவர் தங்கும் அறைகளும் கீழ்கட்டிடத்தில் தனி நபர் அறையில் குளியலறையும், கழிவு அறையும் இல்லை என்ற குறையும் போக்க குளியலறையும், கழிவு அறையும் கட்டப்பட்டன. இதற்காக ரூ. 55000— செலவாயிற்று. இதில் எல்லாவிதமான நவீன வசதிகளும் மேலும் ரூ, 15,000 செலவில் பொருத்தப்பட்டுள்ளன.

பயணிகளின் வசதிக்காக கட்டிடத்தின் முன்புறத்தில் சைவ, அசைவ உணவு விடுதிகள் கட்ட திட்டமிடப்பட்டுள்ளது. இவை இரண்டும் வருகிற இரண்டாண்டுக்குள் முடிவு பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதற்கு துரித நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகிறது.

இந்த மேல் மாடிக் கட்டிடத்தை நகராட்சித் துணைத் தலைவர் திரு டி. இராஜகோபாலன் அவர்கள் தலைமையில், தலைவர் திரு க. தர்மராஜபிள்ளை அவர்களால் 1968-ம் ஆண்டு மே மாதம் 23-ம் நாள் திறந்து வைக்கப்பட்டது.

# கவனிக்கவும் -
# யானை டிரேட் மார்க்

யானை டிரேட் மார்க், உர மூட்டைகளில்
இருக்கிறதா என்று கவனித்து வாங்கவும்

பாக்ட் கம்பெனியாரின்
உரத் தயாரிப்புகள்

பாக்டம்பாஸ்
(அமோனியம் பாஸ்பேட் 16 : 20)

அல்ட்ராபாஸ்
(மிகவும் பொடியாகத் தூளாக்கப்பட்ட மினரல் பாஸ்பேட்)

அமோனியம் ஸல்பேட்
சூபர்பாஸ்பேட்
N.P.K. கலப்பு உரங்கள்

பாக்ட் ...யானை மார்க் உரங்கள்

பெர்டிலைஸர்ஸ் அண்டு கெமிகல்ஸ் திருவிதாங்கூர் லிமிடெட்
பதிவு காரியாலயம்: ஏலூர், உத்யோகமண்டல், P. O. கேரள ராஜ்யம்
பிராந்திய அலுவலகம்: 2வது மாடி 19, கமாண்டர்-இன்-சீப்ரோடு எழும்பூர் சென்னை

Criterion-FT-2004



விவசாயிகளுக்கு வேளாண்மை ஆண்டு முழுதும்
வேலை வாய்ப்பளிக்கும் முழுநேரத் தொழிலும் அல்ல.

விவசாயத்தின் மூலம் கிடைக்கும்
வருமானமும் போதுமானதல்ல.

## கதரும் கிராமத் தொழில்களும்

விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலை வாய்ப்பளிக்கின்றன.

- கதர் - கிராமத் தொழில்களை ஆதரிப்பது
- உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்.

தமிழ்நாட்டுக் கதர் - கிராமத் தொழில் ஆயத்தின்
நிறுவனங்களில் உற்பத்தி செய்யப் பெற்ற

• கதர் • கதர்ப்பட்டு • சோப் • தேன் • செக்கெண்ணெய் • தோல் பொருள்கள் • பனைவெல்லம் • சர்க்கரை • மண்பாண்டம் • வார்ப்படங்கள் • பித்தளை, வெண்கலப் பாத்திரங்கள் • பனைப் பொருள்கள்—இன்றும்—

பற்பல கைநுட்பத் தொழில் பொருள்கள்
கதர்-கிராமத் தொழில் விற்பனை நிலையங்களிலும்
சென்னை "குறளகத்"தில் இயங்கும்'
கதர்-கிராமத் தொழில் அங்காடியிலும்
விற்பனைக்கு உள்ளன.

வெளியீடு—

கதர்-கிராமத் தொழில் துறை,
2, சர் தேசிகாச்சாரி ரோடு, சென்னை-4.


## தென்காசி நகராட்சி

தென்காசி நகராட்சியில் துப்புரவு ஊழியர்களுக்கு இரண்டாவது கட்டமாக பன்னிரண்டு வீடுகள் ரூபாய் இருபத்து இரண்டாயிரத்து ஐநூற்றி ஐந்து செலவில் தமிழக அரசு மானியம் பெற்று 1968 மே மாதத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.

## வேலூர் நகராட்சி

வேலூர் நகராட்சி, 1866-ம் ஆண்டு தொடங்கி, 1966-ஆம் ஆண்டு இப்போதைய மாண்புமிகு முதல் அமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் தலைமையில் நூற்றாண்டு விழா கொண்டாடப்பட்டது. பல முக்கிய தலைவர்கள் கலந்துகொண்டனர்.

இந்நகராட்சி 37 தொடக்கப் பள்ளிகளை நடத்தி வருகிறது. மொத்தம் 230 ஆசிரியர்களும் ஆசிரியைகளும் இப்பள்ளிகளில் பணியாற்றுகிறார்கள், நாள்தோறும் 2,000 பிள்ளைகளுக்கு மேல் மதிய உணவு அளிக்கப்பட்டு வருகிறது. தூய்மையான முறையில் அமைக்கப்பட்ட சமையல் அறையில உணவு தயாரித்து, "கேர்" நிறுவனத்தாரால் அளிக்கப்பட்ட 'எவர் சில்வர்' பாத்திரங்களிலும் மூன்று சக்கர டெம்போவான்களிலும், நாள் தோறும் உரிய காலத்தில் ஒவ்வொரு பள்ளிக்கும் உணவு கொடுக்கப்பட்டு வரப்படுகிறது. இதுவன்றி "கேர்" நிறுவனத்தார் மதிய உணவு நிலையத்திற்கு காய்கறி பதார்த்தங்கள் தடங்கலின்றி கிடைப்பதற்காக ஒவ்வொரு பள்ளிக்கும் தோட்டக் கருவிகளும், காய்கறி விதைகளும் உதவி உள்ளனர். தொடக்கக் கல்விக்கு, 1966-67 ஆம் ஆண்டு 4,28,538 1967-68-ல் 5,25,000 செலவழிக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

இந்நகராட்சி 74·7 கிலோ மீட்டர், நீள சாலைகளை அமைத்து 58, 7 கிலோ மீட்டர் நீள சாலைகளை தார் பாதை சிமெண்ட் சாலையாகவும் அமைத்து நல்ல நிலைமையில் பாதுகாக்கிறது.

மொத்தம் 2,941 விளக்குகள் உள்ளன. அவற்றில் 248 குழாய் விளக்குகள் 397, 100 வாட்டு விளக்குகளும் 86 பாதரச விளக்குகளும் குறிப்பிடத்தக்கன.

ஏற்கனவே உள்ள நேதாஜி அங்காடியின் மேற்கு பகுதியில், 16 லட்ச ரூபாய் செலவில் கடைகள் கட்டுவதற்காக அரசின் மேற்பார்வை பொறியாளரால் நடவடிக்கை எடுககப்பட்டு திட்டம் தொடங்கும் தருவாயில் உள்ளது.

**உயர்நிலைக் கல்வி:**—பெண்களுக்கென தனியாக ஒரு கல்வி நிலையமும், 4 உயர்நிலைப் பள்ளிகளுமாக 5 உயர்நிலைப் பள்ளிகள் ஆண்டு தோறும் 3,52,000 செலவில் நடத்தப்பட்டு வருகிறது.

## கோவில்பட்டி நகராட்சி

இந்நகராட்சியின் சேரணிப்படையினர் மூலம் கட்டிமுடிக்கவேண்டிய இரண்டு பள்ளிக்கூட வகுப்பறை வேலைகளுக்கு அரசினால் வழங்கப்பட்ட ரூ. 2,400/-நிதியை இந்நகராட்சி பெற்று, கட்டிட வேலைகளுக்குரிய சாமான்கள் வாங்கப்பட்டன. ஒரு பள்ளிக்கூட வகுப்பு அறை கட்டி முடிக்கப்பட்டுவிட்டது.

நகராட்சி நாட் சந்தையில் ரூ. 36,000 மதிப்பீடுள்ள 18 கடைகள் கட்டுவதற்கான கட்டிட் வேலைகள் துவக்கப்பட்டு வேலை நடைபெற்று முடியும் தருவாயில் உள்ளது.

நகராட்சியின் வருவாயை அதிகரிக்கும் பொருட்டு, தமிழக அரசின் சிறு தொழில் துறை நிறுவனத்திலிருந்து ரூ. 14,763-05 விலைக்கு 9 பெட்டிக்கடைகள் வாங்கப்பட்டு நகரின் முக்கிய இடங்களில் நிறுவி மாத வாடகைக்கு விடப்பட்டுள்ளது. அதன் மூலம் ஆண்டிற்கு ரூ. 5,016 வருவாய் எதிர்பாக்கப்படுகிறது.

## இடைப்பாடி நகராட்சி

இடைப்பாடி நகராட்சியினரால் நகரச் சேரணிப் படையின் உதவிக் கொண்டு கட்டப்பட்ட ரூ. 12,000 மதிப்புள்ள ஒரு பள்ளிக் கட்டிடம் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்களால், 1968 ஆண்டு ஜூன் மாதம் 7-ந்நாள் அன்று திறந்து வைக்கப்பட்டது. இக் கட்டிடம் கட்டுவதற்கான நிலம் இலவசமாக ஊர் பிரமுகர் ஒருவரால்கொடுக்கப்பட்டது. ஊர் மக்கள் கட்டிடம் கட்ட நன்கொடையாக ரூ. 1,000 வழங்கினர். அரசினர் மேற்கூரைக்கான சிமிண்ட் அட்டைகள் சாமான்களை, ரூ. 4,000 மதிப்பில் வழங்கினர். நகராட்சி அதன் நிதியிலிருந்து மரம், செங்கல், சிமிண்ட் மற்ற சில சாமான்கள் வாங்கவும், முக்கிய மரவேலைகள், பூச்சு வேலை செய்ய கூலியாகவும், ரூ. 5,500 செலவு செய்துள்ளது, ரூ. 2,500 சேரணிப்படையினரின் உழைப்பின் காரணமாக மிச்சம் செய்யப்பட்டதாகும். மணல், செங்கல் மற்ற பொருள்களை லாரியில்கொண்டு வரவும் ஜல்லி உடைக்கவும் கட்டுவேலை செய்யவும் சேரணியின் உதவியில் ரூ. 2,500 மதிப்புள்ள வேலைகளும் பொருளும் இந்நகராட்சிக்கு சேரணிப் படையினரின் உழைப்பின் மூலம் கிடைத்தது. இக் கட்டிடம் 1968-ம் ஆண்டு மே மாதம் 26-ம் நாள்கட்ட ஆரம்பித்து, 12 நாட்களில் கட்டி முடிக்கப்பட்டது. சேரணிப்படையினரின் இச் சீரிய முயற்சியையும் பணியையும் அதை நன்கு பயன்படுத்திக்கொண்ட மாநகராட்சியையும் அமைச்சர் அவர்கள் ஊக்குவித்து இன்னும் பல அரிய பணிகளைச் செய்து முடிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

———

## குழந்தைகள் பகுதி :



குட்டிக் குட்டிப் பூனையாம்!
குறும்பு செய்யும் பூனையாம்!
குட்டிக் கர்ணம் போடுமாம்!
குதித்துக் குதித்து ஓடுமாம்!
பாலைத் திருடிக் குடிக்குமாம்!
பக்குவ மாய் நடிக்குமாம்!
பந்தை விட்டு எறிந்ததும்
பாய்ந்து பிடித்துக் கொள்ளுமாம்!
சுண்டெலியைக் கண்டதும்
சுறுசுறுப் பாய்ச் செல்லுமாம்!
'நண்டுப்' பிடி, போடுமாம்!
நன்றும் கொன்று தின்னுமாம்!

முதலமைச்சரின் வானொலிச் சிறப்புரை—24-ம் பக்கத் தொடர்ச்சி.

இதனை நன்கு உணர்ந்து, 'சுயராஜ்யம் என்பது சுக ராஜ்யமாகிறது' என்று மகிழ்ந்து கூறத் தக்க நிலைப் பெற்றிடப்பாடுபட வேண்டும்.

இந்த எல்லோரையும் கரம் கூப்பி அழைத்து—அணிகளாக அமைத்து—உடனிருந்து பணியாற்றுவதே அரசின் கடமை. அந்த அரசினை இன்று நடத்திச் சென்றிட அனுமதி பெற்றவன் என்ற முறையில் நாட்டினரே! நல்லோரே! உழவர்களே! உழைப்பாளிகளே! தொழில் வித்தகர்களே! விஞ்ஞானிகளே! அலுவலர்களே! ஆசிரியப் பெரியோர்களே! மாணவ நண்பர்காள்! உங்கள் அனைவரையும் அழைக்கின்றேன்.

"விழா நாள் இன்று. விழிகளில் களிநடமிடும் நாள். கோலாகலமாகக் கொடி பறந்திடும் நாள். நாட்டுப் பண் எங்கும் கேட்டிடும் நாள். மகிழ்ச்சி பெறுவோம்—எழுச்சி பெறுவோம். ஆனால் அதேபோது கடமையைக் கவனத்தில் கொள்வோம்!

### நாட்டுக்காக உழைப்போம்

எத்தனை கடுமையான உழைப்பு தேவை என்றாலும் 'நாட்டுக்காகத் தந்திடுவோம்' என்ற உறுதி கொள்வோம். குருதிக் கொட்டிப் பெற்ற சுதந்திரத்தின் பயனைப் பெற்றிட உழைப்போம் வாரீர் என்று அனைவரையும் அழைக்கிறேன்.

சுதந்திரப் போராட்டத்தில் வெற்றி கண்ட நாடு. இனி, வளம் பெருகிட, வாழ்வு நிறைந்திட, பசியையும் பஞ்சத்தையும் பற்றாக்குறையையும் போக்கிடப் போர் தொடுத்தாகவேண்டும்.

சமூகக் கொடுமைகளை வீழ்த்தி, மக்களுக்கு சமத்துவ வாழ்வு பெற்றளித்திடப் போர் நடத்தித் தீர வேண்டும். விழா தரும் மகிழ்ச்சி நமக்கெல்லாம் இதற்கான ஆற்றலைத் தந்திடும் என்று நம்புகிறேன்."

வணக்கம்.

—o—



வெள்ளரி வெள்ளி பொது மதிய உணவு மையம்—31-ம் பக்கத் தொடர்ச்சி.

| | | | | |
|---|---|---|---|---|
| 4 வைக்கோல் மதிப்பு .. | 400 | 5. நடவு .. .. .. | 50 | 15 சீரணித் தொண்டர்கள் செய்தல். 4 நாட்கள். |
| | 3,800 | 6. பயிர்ப் பாதுகாப்பு.. .. | 40 | 2 சீரணித் தொண்டர்கள் கொண்டு செய்தல். 2 நாட்கள். |
| | | 7. களை எடுத்தல் .. .. | 50 | 10 சீரணித் தொண்டர்கள் கொண்டு செய்தல். 4 நாட்கள். |
| | | 8. நீர் இறைத்தல் .. .. | 300 | .... |
| | | 9. அறுவடை .. .. | 150 | 15 சீரணித் தொண்டர்கள் கொண்டு செய்தல். |
| | | மொத்தம் .. | 1,500 | |
| | | சீரணித் தொண்டர்கள் மூலம் செய்த செலவுகள். | 380 | |
| | | நிகர செலவு .. | 2,120 | |
| | | நிகர லாபம் .. | 2,680 | |

### காய்கறி உற்பத்தி

242 மாணவர்களுக்கு உணவிற்கு ஒரு நாளுக்கு தேவைப்படும் காய்கறிகள் :—

| | | |
|---|---|---|
| தக்காளி .. .. | 5 | கிலோ |
| கத்தரி .. .. .. | 8 | ,, |
| மிளகாய் .. .. | 1 | ,, |
| வெண்டை .. .. | 5 | ,, |

இந்த காய்கறி சாகுபடிக்கான நிலத்தை பண் படுத்துதல், விதைத்தல், முதலிய வேலைகளை ஆசிரியர்களின் துணை கொண்டு மாணவர்களால் செயல்படுத்தப்படுபவை.

0·25 செண்ட் தக்காளியும், 0·50 செண்டில் கத்தரி, வெண்டை, புடல், பாகல், பீர்கன் முதலியவைகள் வைத்தல். 0·25 செண்டில் பூசணி, பரங்கி, முருங்கை, கருவேப்பிலை வைத்தல். துவக்க நிலையில் 100 தென்னங் கன்றுகள் நடலாம். ஐந்து ஆண்டுகளுக்குப் பின்னர் கன்றுகள் வளர்ச்சி பெற்று பலன்தரும் கட்டத்தில் சுமார் ரூ. 2,000 வருமானம் கிடைக்க நியாயமுண்டு.

### வருமானம்

| | ரூபாய். |
|---|---|
| 1 நெல் முதல் போகம் .. .. .. .. .. .. | 2,980 |
| 2 இரண்டாம், மூன்றும் போகம் .. .. .. .. .. | 5,360 |
| 3 காய்கறி மூலம் கிடைக்கும் வருமானம் .. .. .. .. | 500 |
| 4 தென்னை மூலம் சுமார் வரவு .. .. .. .. .. | 2,000 |
| மொத்தம் .. | 10,840 |

| | |
|---|---|
| 1 வெள்ளரிவெள்ளி ஊராட்சி எல்லையில் உள்ள பள்ளிகளின் எண்ணிக்கை. .. | 9 |
| 2 மதிய உணவு பெறும் மாணவ, மாணவிகள் .. .. .. | 218 |
| 3 நாளொன்றுக்கு ஒரு மாணவனுக்கு 6 பைசா வீதம் .. .. | 14—88 |
| 4 நாளொன்றுக்கு 4 பைசா வீதம் .. .. .. .. .. | 9—92 |
| 5 ஒரு மாணவனுக்கு ஒரு நாளைக்கு 10 பைசா வீதம் .. .. | 24—80 |
| 6 ஆண்டு ஒன்றில் உணவு வழங்கப்படும் நாட்கள் .. .. .. | 200 |
| 7 ஓர் ஆண்டிற்கு ஆகும் மொத்த செலவு — — — — | ரூ. 4,960 |
| 8 நிகர லாபம் (10,480—4,960) .. — .. — .. | ரூ. 5,880 |

சத்துணவு கொடுப்பதற்கு உதவாக ஏற்கெனவே பள்ளியில் 27 கோழிகளைக்கொண்ட பண்ணையை விரிவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றன. இதனுல் மேலும் அதிகப்படியான முட்டைகள் மாணவர்களுக்கு வழங்க இயலும்.

இந்த மையம் சரியான முறையில் செயல்படத் துவங்கும்பொழுது மேற்கொண்டு இந்தப் பள்ளிகளில் பயிலும் 500 மாணவர்களுக்கும் 0-30 பைசா மதிப்புள்ள மதிய உணவு வழங்க முடியும். இன்னும் 2 ஆண்டிற்குள் அரசாங்க ஊராட்சி மான்யங்கள் பெருமல் இயங்க திட்டமிடப்பட்டுள்ளது.

இதேபோன்ற திட்டங்கள் இருப்பாளி, குண்டுமலைக்காடு, செட்டிமாங்குறிச்சி ஆகிய ஊராட்சிகளிலும் கீழ்க்கண்டவாறு செயல்பட்டு வருகின்றது.

| வரிசை எண்ணும், மையத்தின் பெயரும். | பள்ளி பெயர். | தூரம். | பள்ளியில் படிப்பவர்கள். | மதிய உணவு பெறுபவர்கள். | மொத்த செலவு. | மதிய உணவிற்கு சாகுபடி நிலம். | பரப்பு. |
|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| | | மை. பர். | | | ரூ. | ச. நெ. | ஏ. செ. |
| 1 செட்டிமாங்குறிச்சி .. | 1. செட்டிமாங்குறிச்சி. | .. | 131 | 40 | 800 | 190/2 | 5-31 |
| | 2. சவுரிபாளையம் .. | 1—6 | 81 | 40 | 800 | .. | .. |
| | 3. கொத்தாபாளையம். | 2—2 | 107 | 55 | 1,100 | 200/2 | 1—3 |
| 2 குண்டுமலைக்காடு .. | 1. அடுவாப்பட்டி .. | 1—0 | 116 | 25 | 500 | 279 | .. |
| | 2. குண்டுமலைக்காடு. | .. | 67 | 25 | 500 | 279 | 3—82 |
| | 3. பக்கநாடு .. | 1—0 | 131 | 60 | 1,200 | 279 | .. |
| 3 இருப்பாளி .. .. | 1. அம்மாபியூர் .. | 2—3 | 100 | 25 | 500 | .. | .. |
| | 2. இருப்பாளி .. | .. | 134 | 60 | 1,200 | .. | .. |
| | 3. காட்டுவளவு .. | 1—0 | 139 | 60 | 1,200 | 122/1 | 4—09 |
| | 4. குருக்கள்பட்டி .. | 2—4 | 172 | 40 | 800 | 122/2 | 4—42 |
| | 5. மேலக்கரைப்பட்டி .. | 1—0 | 50 | 25 | 500 | .. | .. |
| | 6. ராமகவுண்டனூர். | 2—0 | 170 | 40 | 800 | .. | .. |
| | 7. செவிடனூர் .. | 2—6 | 80 | 40 | 800 | .. | .. |

மேற்கண்ட இடங்களில் நிலம் சீர்படுத்தப்பட்டு வருகின்றன. தோட்டத்தைப் பராமரிக்கவும், உணவை எடுத்துச் செல்லவும், தோட்டக்காவலர் ஒருவரை நியமனம் செய்யவும், பள்ளி ஆயாவைச் சமையல் வேலைகளைக் கவனிக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், சித்தூர், கோனேரிப்பட்டி ஆகிய ஊர்களில் ஆரம்ப வேலை துவக்கப்பட்டுள்ளது. 49 ஊராட்சி ஒன்றிய பள்ளிகளில் இனி 11 ஊராட்சிகளுக்கும், 11 சமையல் கூடங்கள் மட்டுமே செயல்படும். மதிய உணவு தனிக்கைகள் 11 மையங்களில் மட்டுமே செய்யப்படும். எல்லா மையங்களிலும் திட்டம் முழுமையாக செயல்படும்போது, அரசு, ஊராட்சி மான்யங்கள் எதுமின்றி சுயமாக சிறப்பாக செயல்பட முடியும். சத்துள்ள உணவுவகை வேண்டிய மட்டும் வழங்க நிச்சயமாக இத் திட்டம் உறுதுணை புரியும்.

## ‘ கிராமநலம் ’ சிறப்பு வெளியீடு

தமிழகத்திலுள்ள ஊராட்சிகள், பேரூராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள் ஆகியவற்றின் பெயர்கள் அடங்கிய மாவட்டவாரியான சிறப்பு வெளியீடு ஒன்று தயாராகிக்கொண்டிருக்கிறது என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறோம். அவ்வெளியீட்டில் ஊராட்சி, பேரூராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திலும் பொறுப்பேற்று நற்பணியாற்றிவரும் தலைவர்களின் பெயர்களுடன் தமிழக சட்டப்பேரவை, சட்டமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் மற்றும் நாடாளுமன்ற, மாநிலங்களவை உறுப்பினர்களின் பெயர்களும். தவறாமல் தொகுத்துக் கொண்டு விரைவில் வெளிவரும் ‘ கிராமநலம் ’ இதழிற்கு ஆண்டு சந்தா அனுப்பியுள்ள அனைவருக்கும் இச்சிறப்பிதழ் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். தனிப் பிரதி விலை ரூபாய் ஒன்று.

இச்சிறப்புவெளியீடு வெளிவரும் மாதம், அதற்கான பணம் அனுப்ப வேண்டிய விவரங்கள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும். அதுவரையில் சிறப்பு வெளியீடு கேட்டு பணம் அனுப்ப வேண்டாமெனக் கேட்டுக்கொள்ளப்படுகிறது.



கிராம நலம்
GRAMANALAM
ஊராட்சி அரசிதழ்
PANCHAYAT GAZETTE

(இந்தப் பகுதியில் ஊராட்சி, ஊராட்சி வளர்ச்சித் திட்டங்கள் பற்றிய அரசு ஆணைகள், குறிப்பாணைகள், விதிகள் முதலியவற்றின் தமிழாக்கம் சுருக்கமாக இடம் பெறுகிறது.)

—o—

## “கிராமநலம்”--ஊராட்சி நிறுவனங்கள் சந்தா செலுத்துதல்.

## “GRAMANALAM”—Supply to Panchayat Institutions—Payment of subscription—Procedure—Intimated.

ஊராட்சி ஒன்றிய ஆணையர்களின் நிர்வாகத்திற்கு உட்பட்ட ஊராட்சி நிறுவனங்களுக்கு, “கிராமநலம்” சந்தா தொகைகளை கீழ் கொடுத்திருக்கும் முறைப்படி செலுத்தவேண்டும் என்று ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் கேட்டுக்கொள்ளப்படுவதோடு, அவர்கள் கிராம வளர்ச்சி இயக்குநரின் 21—3—1967 நாளிட்ட குறிப்பாணையில் தங்கள் கவனத்தைச் செலுத்தும்படியும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

1. தொடர்புடைய ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள், “கிராமநலம்” திங்கள் இதழுக்கு ஆண்டுச் சந்தாவான ரூபாய் இரண்டை மொத்தமாக கருவூலத்தில் (“L 11 Miscellaneous in miscellaneous”) என்ற தலைப்பின்கீழ் முன்பணமாக செலுத்த வேண்டும். ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள், சமூகக் கல்வி நிலையங்கள், மகளிர் மன்றங்கள், ஊராட்சி மற்றும் ஊராட்சி நிறுவனங்களுக்கு விநியோகிக்கப்படவேண்டிய “கிராம நல”த்தின் மொத்த நகல்களின் எண்ணிக்கையை கிராம வளர்ச்சி இயக்குநருக்கு அறிவிக்கும்போது, சந்தா செலுத்திய விவரங்களுக்கு செலுத்துச் சீட்டின் உண்மை நகல் ஒன்றும் சேர்த்து வைத்து அனுப்பப்படவேண்டும்.

2. ஊராட்சி ஒன்றிய ஆணையாளர்கள் வங்கி சீட்டாகவோ (Bank Drafts), வங்கிகளின் பத்திரங்களாகவோ (Demand Drafts) அல்லது தபால் மூலமாகவோ பணமோ, “கிராமநலம்” சந்தாவிற்காக கிராம வளர்ச்சி இயக்குநருக்கு அனுப்பக்கூடாது.

3. “கிராமநலம்” இதழ்களை அனுப்புவதில் சிக்கனத்தை ஏற்படுத்துவதற்கும், அவை பத்திரமாக போய்ச் சேருவதை உறுதிப்படுத்துவதற்காகவும் தமிழக அச்சு, எழுதுபொருள் இயக்குநர் “கிராமநலம்” இதழ்களை மொத்தமாக பதிவு அஞ்சலில் அனுப்பிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார். ஊராட்சி நிறுவனங்களுக்கு “கிராமநலம்” பிரதிகளை தனித்தனியாக விநியோகிக்க வேண்டும் என்ற ஊராட்சி ஒன்றிய ஆணையர்களின் கோரிக்கை ஏற்கக்கூடியதன்று.

4. “கிராமநலம்” இதழ்களை மொத்தமாக விநியோகிப்பதற்கு உதவும்பொருட்டு, ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் பணம் செலுத்தும்போது தங்களின் மொத்தத் தேவையை சேர்த்து அனுப்பவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அச்சு, எழுது பொருள் இயக்குநரிடமிருந்து, சந்தா செலுத்தியதற்கு உரிய “கிராம நலம்” இதழ் கிடைக்கப்பெற்றவுடன், ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் சந்தா செலுத்திய ஊராட்சி நிறுவனங்களுக்கு “கிராம நலம்” பிரதிகளை விநியோகிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

5. பலருடைய சந்தாக்கள் அவ்வப்போது புதிப்பிக்கப்படாததனுல், அவர்களுக்கு “கிராமநலம்” பிரதிகளின் விநியோகத்தை நிறுத்தி வைக்கப்பட்டிருப்பது, ஊராட்சி ஒன்றிய ஆணையர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. “கிராம நலம்” பிரதிகளின் விநியோகத்தில் தடங்கல் ஏற்படாமல் இருப்பதற்கு, பழைய சந்தாக்களை உரிய காலத்தில் புதுப்பிக்கும்படியும், புதிய சந்தாத் தொகைகளை மொத்தமாக முன் பணமாகவே அனுப்பிவைக்கும்படியும் ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

6. மேற்குறிப்பிட்டுள்ள பத்தி 1-ல் உள்ளவாறு செலுத்துச் சீட்டின் உண்மை நகலோடு (Attested Copy of the Chalan) கீழ்க்காணும் இணைப்பு விவரங்களும் சேர்த்து அனுப்பப்பட வேண்டும்.

## "கிராமநலம்" பிரதியை மொத்தமாக விநியோகிப்பதற்குரிய விண்ணப்ப விவரம்.

ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் — மாவட்டம்.

ஊராட்சி ஒன்றியத் தொடக்கப்பள்ளிகளுக்கு சந்தாச் செலுத்திய மொத்த "கிராமநலம்" இதழ்கள்.

ஊராட்சிகளின் மற்ற நிறுவனங்களுக்கு சந்தா செலுத்தப்பட்ட மொத்த "கிராமநலம்" இதழ்கள்.

சமூகக் கல்வி நிலையங்களுக்கு சந்தாச் செலுத்திய மொத்த "கிராமநலம்" இதழ்கள்.

கருவூலச் செலுத்துச் சீட்டின் உண்மை நகலின்படி, சந்தா செலுத்திய மொத்த "கிராமநலம்" இதழ்கள்.

மகளிர் மன்றங்களுக்கு சந்தா செலுத்தப்பட்ட மொத்த "கிராம நலம்" இதழ்கள்.

ஊராட்சி மன்றங்களுக்கு சந்தா செலுத்தப்பட்ட மொத்த "கிராம நலம்" இதழ்கள்.

ஊராட்சி ஒன்றிய ஆணையாளரின் கையொப்பம்.

(கிராம வளர்ச்சி இயக்குநரின் 18-3-1968 நாளிட்ட குறிப்பாணை எண் 49010-ன் சுருக்கம்.)

---

## நகராட்சி கட்டிடங்களில் சிலைகள்-உருவப் படங்கள் அமைத்தல்-ஆணைகள் பிறப்பிக்கப்படுகின்றன

## Statues and portraits—Installation in municipal premises—Maintenance charges—Collection of—Orders—Issued.

உள்ளாட்சி நிறுவனங்களில் சிறந்த சேவை செய்துள்ள பெருந்தலைவர், தலைவர்கள், உறுப்பினர்கள் ஆகியவர்களை சிறப்பிப்பதற்காக அவர்களுடைய உள்ளாட்சி நிறுவனக் கட்டிடங்களில் உருவப்படங்கள் ஏற்படுத்துவது, தனிப்பட்டவர்கள் நிதி உதவியிலிருந்து சரிக்கட்ட வேண்டும் என்று கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 1953–ஆம் ஆண்டு ஜனவரி 3-ஆம் நாளிட்ட அரசு ஆணை எண் 17-இல் ஆணை பிறப்பிக்கப்பட்டது. இந்திய தேசியத் தலைவர்களின் உருவப்படங்களை ஏற்படுத்துவதற்கு ஆகும் செலவுகளை தனிப்பட்டவர்கள் நிதி உதவியில் இருந்து சரிகட்டுவதாக இருந்தால், உருவப்படம் ஏற்படுத்துவதற்கு அரசு அனுமதியளிக்கும்.

2. ஏற்கனவே நிறுவப்பட்ட உருவப் படங்களுக்கு பேணுதல் செலவு, மறுபடி வர்ணம் தீட்டுதல் ஆகிய செலவுகளை நகராட்சி நிதியிலிருந்து செய்யவேண்டும் என்ற கோரிக்கை தற்போது அரசிற்கு வந்திருக்கிறது. உருவப்படம் ஏற்படுத்த இசைவதற்கு முன்னால் வசூலிக்கப்பட்ட தனி நபர்கள் நிதி பற்றியும் வருங்காலத்தில், நியாயமான பேணுதல் செலவு பற்றிய திட்டவரையறை செய்யவேண்டுமெனவும் அரசு கருதுகிறது.

3. உருவப்படங்கள், சிலைகள் ஆகியவைகள் வைப்பதற்கு ஒப்புக்கொள்ளும்போது பேணுதல் செலவுகளுக்காக சிலைகளுக்கு செலவாகும் தொகையில் 20 சத விகிதமும் உருவப்படமானால் அதற்கு சமமான தொகையையும் வசூலிக்கவேண்டுமென்று அரசு ஆணையிடுகிறது.

(கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 1968–ஆம் ஆண்டு மார்ச் 27-ஆம் நாளிட்ட அரசு ஆணை எண். 623-ன் சுருக்கம்.)



## ஊராட்சி ஒன்றியங்களின் மக்கள் தொகைக் கணக்கு

சென்ற இதழ் தொடர்ச்சி.

| வரிசை எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | மக்கள் தொகை |
|---|---|---|
| | **கன்னியாகுமரி** | |
| 1 | அகஸ்தீஸ்வரம் | 85,853 |
| 2 | முன்சிறை | 108,464 |
| 3 | கிள்ளியூர் | 93,520 |
| 4 | மேல்புரம் | 101,859 |
| 5 | இராஜாக்கமங்கலம் | 81,545 |
| 6 | குருந்தங்கோடு | 109,672 |
| 7 | தோவாளை | 62,292 |
| 8 | திருவட்டார் | 91,066 |
| 9 | தக்கலை | 109,565 |
| | | 846,,836 |
| | **நீலகிரி** | |
| 1 | உதகமண்டலம் | 116,033 |
| 2 | கூனூர் | 73,884 |
| 3 | கோட்டகிரி | 53,846 |
| 4 | கூடலூர் | 69,522 |
| | | 313,285 |
| | **மதுரை (கிழக்கு)** | |
| 1 | வாடிப்பட்டி | 65,174 |
| 2 | அலங்காநல்லூர் | 68,558 |
| 3 | மதுரை (கிழக்கு) | 59,191 |
| 4 | மேலூர் (வடக்கு) | 69,315 |
| 5 | மதுரை (மேற்கு) | 64,102 |
| 6 | மேலூர் (தெற்கு) | 93,933 |
| 7 | உசிலம்பட்டி | 68,110 |
| 8 | செல்லம்பட்டி | 65,334 |
| 9 | திருமங்கலம் | 75,322 |
| 10 | கள்ளிக்குடி | 54,392 |
| 11 | டி. கல்லுப்பட்டி | 63,727 |
| 12 | சேடப்பட்டி | 83,797 |
| 13 | திருப்பரங்குன்றம் | 1,22,547 |
| 14 | நத்தம் | 70,272 |
| 15 | வத்தலக்குண்டு | 63,555 |
| 16 | நிலக்கோட்டை | 93,719 |
| | | [illegible],190,048 |
| | **மதுரை (மேற்கு)** | |
| 1 | ஆத்தூர் | 1,06,668 |
| 2 | ரெட்டியார்சத்திரம் | 81,765 |
| 3 | திண்டுக்கல் | 66.832 |
| 4 | பழனி | 75,989 |
| 5 | போடிநாயக்கனூர் | 59,051 |
| 6 | ஆண்டிப்பட்டி | 1,03,745 |
| 7 | கொடைக்கானல் | 39,858 |
| 8 | வேடசந்தூர் | 66,827 |
| 9 | கம்பம் | 65,601 |
| 10 | பெரியகுளம் | 82,628 |
| 11 | தேனி | 49,265 |
| 12 | சின்னமனூர் | 73.971 |
| 13 | சாணார்ப்பட்டி | 69.386 |
| 14 | வட மதுரை | 57,116 |
| 15 | ஒட்டன் சத்திரம் | 81,868 |
| 16 | தொப்பம்பட்டி | 89,012 |
| 17 | பாளையம் | 61,006 |
| 18 | உத்தமபாளையம் | 80,661 |
| | | 1,311,279 |
| | **இராமநாதபுரம் (கிழக்கு)** | |
| 1 | சிங்கம்புணரி | 72,120 |
| 2 | காளையார்கோவில் | 70,486 |
| 3 | திருவாடானை | 44,890 |
| 4 | தேவகோட்டை | 49,909 |
| 5 | கமுதி | 89,489 |
| 6 | கல்லல் | 66,010 |
| 7 | மானாமதுரை | 67,629 |
| 8 | கடலாடி | 85,527 |
| 9 | முதுகுளத்தூர் | 59.107 |
| 10 | பரமக்குடி | 48,062 |
| 11 | மண்டபம் | 68,887 |
| 12 | கண்ணங்குடி | 43,707 |
| 13 | இராஜசிங்கமங்கலம் | 51,786 |
| 14 | இராமநாதபுரம் | 33,623 |
| 15 | போகலூர் | 70,045 |
| 16 | சாக்கோட்டை | 62,918 |
| 17 | திருப்புவனம் | 66,885 |
| 18 | திருப்புல்லாணி | 62,004 |
| 19 | திருப்பத்தூர் | 68,349 |
| 20 | சிவகங்கை | 74,632 |
| 21 | இளையான்குடி | 75,449 |
| | | 1332,414 |

| வரிசை எண் | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | மக்கள் தொகை |
|---|---|---|
| | **இராமநாதபுரம் (மேற்கு)** | |
| 1 | சிவகாசி | 68,460 |
| 2 | ஸ்ரீவில்லிபுத்தூர் | 61,322 |
| 3 | வத்திராயிருப்பு | 77,914 |
| 4 | ராஜபாளையம் | 92,838 |
| 5 | விருதுநகர் | 71,856 |
| 6 | காரியாபட்டி | 57,384 |
| 7 | சாத்தூர் | 67,071 |
| 8 | வெம்பக்கோட்டை | 60,948 |
| 9 | நரிக்குடி | 53,867 |
| 10 | அருப்புக்கோட்டை | 52,920 |
| 11 | திருச்சுழி | 55,678 |
| | | 7,20,238 |
| | **சேலம் (வடக்கு)** | |
| 1 | கங்கவல்லி | 68,674 |
| 2 | தலைவாசல் | 66,991 |
| 3 | பெத்தநாயக்கன்பாளையம் | 72,462 |
| 4 | ஆத்தூர் | 59,366 |
| 5 | குளத்தூர் | 44,214 |
| 6 | மேச்சேரி | 63,066 |
| 7 | நங்கவள்ளி | 68,276 |
| 8 | வாழப்பாடி | 61,234 |
| 9 | வீரபாண்டி | 76,980 |
| 10 | ஓமலூர் | 95,209 |
| 11 | தாரமங்கலம் | 57,246 |
| 12 | சேலம் | 89,045 |
| 13 | காரிப்பட்டி | 80,018 |
| 14 | பனமரத்துப்பட்டி | 60,191 |
| 15 | காடையாம்பட்டி | 69,316 |
| 16 | ஏர்க்காடு | 23,753 |
| | | 10,56,101 |
| | **சேலம் (தெற்கு)** | |
| 1 | நாமகிரிப்பேட்டை | 63,134 |
| 2 | இடைப்பாடி | 52,013 |
| 3 | பரமத்தி | 54,905 |
| 4 | திருச்செங்கோடு | 58,348 |
| 5 | சேந்தமங்கலம் | 51,178 |
| 6 | மோகனூர் | 58,805 |
| 7 | சங்ககிரி | 74,787 |
| 8 | கபிலமலை | 55,811 |
| 9 | பள்ளிப்பாளையம் | 60,631 |
| 10 | நாமக்கல் | 72,043 |
| 11 | மல்லசமுத்திரம் | 52,055 |
| 12 | எருமைப்பட்டி | 56,060 |
| 13 | வெண்ணந்தூர் | 53,274 |
| 14 | எலச்சிபாளையம் | 54,247 |
| 15 | கொங்கணாபுரம் | 41,129 |
| 16 | மகுடஞ்சாவடி | 50,016 |
| 17 | புதுச்சத்திரம் | 55,546 |
| 18 | ராசிபுரம் | 51,270 |
| 19 | கொல்லிமலை | 21,020 |
| | (ஆதிவாசிகள் வளர்ச்சி) | |
| | | 1,010,272 |
| | **தஞ்சாவூர் (கிழக்கு)** | |
| 1 | திருத்துறைப்பூண்டி | 65,137 |
| 2 | தலைஞாயிறு | 45,320 |
| 3 | வேதாரண்யம் | 1,02,319 |
| 4 | கொள்ளிடம் | 85,578 |
| 5 | சீர்காழி | 1,00,200 |
| 6 | மாயூரம் | 96,893 |
| 7 | செம்பனார்கோயில் | 1,20,214 |
| 8 | குத்தாலம் | 89,554 |
| 9 | முத்துப்பேட்டை | 62,046 |
| 10 | நாகப்பட்டினம் | 92,249 |
| 11 | கீவளூர் | 49,416 |
| 12 | குடவாசல் | 70,216 |
| 13 | கோட்டூர் | 70,740 |
| 14 | கொரடாச்சேரி | 63,665 |
| 15 | திருமருகல் | 59,660 |
| 16 | நன்னிலம் | 73,476 |
| 17 | நீடாமங்கலம் | 76,815 |
| 18 | மன்னார்குடி | 90,715 |
| 19 | திருவாரூர் | 48,444 |
| | | 1,468.063 |



| வரிசை எண். | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | மக்கள் தொகை |
|---|---|---|
| | **தஞ்சாவூர் (மேற்கு)** | |
| 1 | அம்மாபேட்டை | 76,962 |
| 2 | வலங்கைமான் | 63,098 |
| 3 | திருப்பனந்தாள் | 69,327 |
| 4 | திருவிடைமருதூர் | 113,234 |
| 5 | கும்பகோணம் | 92,726 |
| 6 | பாபநாசம் | 92,841 |
| 7 | ஒரத்தநாடு | 113,621 |
| 8 | பட்டுக்கோட்டை | 81,496 |
| 9 | ஆவுடையார்கோவில் | 58,349 |
| 10 | பூதலூர் | 66,372 |
| 11 | சேதுபாவாசத்திரம் | 54,415 |
| 12 | திருவையாறு | 85,493 |
| 13 | திருவோணம் | 80,535 |
| 14 | பேராவூரணி | 74,587 |
| 15 | தஞ்சாவூர் | 98,686 |
| 16 | மதுக்கூர் | 55,348 |
| 17 | அறந்தாங்கி | 97,619 |
| | | 1,374,709 |
| | **திருச்சிராப்பள்ளி (வடக்கு)** | |
| 1 | தாத்தையங்கார்பேட்டை | 68,680 |
| 2 | முசிறி | 77,148 |
| 3 | வேப்பந்தட்டை | 75,892 |
| 4 | தொட்டியம் | 86,941 |
| 5 | துறையூர் | 85,335 |
| 6 | பெரம்பலூர் | 64,828 |
| 7 | திருமானூர் | 76,390 |
| 8 | லால்குடி | 97,123 |
| 9 | அரியலூர் | 71,196 |
| 10 | உப்பிலியாபுரம் | 64.616 |
| 11 | மணிகண்டம் | 60,025 |
| 12 | ஆண்டிமடம் | 70,342 |
| 13 | டி. பாலூர் | 65,556 |
| 14 | புள்ளம்பாடி | 73,446 |
| 15 | ஜெயங்கொண்டம் | 90,719 |
| 16 | மணச்சநல்லூர் | 95,663 |
| 17 | ஆலத்தூர் | 63,774 |
| 18 | வேப்பூர் | 82,245 |
| 19 | செந்துறை | 63,489 |
| 20 | திருவரம்பூர் | 83,736 |
| 21 | அந்தநல்லூர் | 57,244 |
| | | 1,564,388 |
| | **திருச்சிராப்பள்ளி (தெற்கு)** | |
| 1 | கே. பரமத்தி | 79,330 |
| 2 | திருவரங்குளம் | 89,830 |
| 3 | அரவக்குறிச்சி | 65,096 |
| 4 | குளித்தலை | 108,980 |
| 5 | தாந்தோணி | 74,167 |
| 6 | கரம்பக்குடி | 50,161 |
| 7 | கீரனூர் | 45,757 |
| 8 | வையம்பட்டி | 57,498 |
| 9 | அரிமளம் | 49,831 |
| 10 | கடவூர் | 62,221 |
| 11 | மருங்காபுரி | 62,748 |
| 12 | அன்னவாசல் | 62,719 |
| 13 | பொன்னமராவதி | 62,234 |
| 14 | கரூர் | 76,005 |
| 15 | விராலிமலை | 60,824 |
| 16 | மணப்பாறை | 47,412 |
| 17 | கிருஷ்ணராயபுரம் | 82,388 |
| 18 | திருமயம் | 50,594 |
| | | 1,187,795 |
| | **திருநெல்வேலி (வடக்கு)** | |
| 1 | சங்கரன்கோயில் | 60,582 |
| 2 | மேலநீலிதநல்லூர் | 54,541 |
| 3 | குருவிகுளம் | 77,677 |
| 4 | கோவில்பட்டி | 69,610 |

| வரிசை எண். | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | மக்கள் தொகை |
|---|---|---|
| 5 | கருங்குளம் | 63,773 |
| 6 | தூத்துக்குடி | 51,303 |
| 7 | சாத்தான்குளம் | 70,276 |
| 8 | வாசுதேவநல்லூர் | 88,350 |
| 9 | ஓட்டப்பிடாரம் | 92,872 |
| 10 | உடன்குடி | 60,714 |
| 11 | புதூர் | 62,878 |
| 12 | திருச்செந்தூர் | 70,501 |
| 13 | விளாத்திகுளம் | 72,344 |
| 14 | ஸ்ரீவைகுண்டம் | 91,654 |
| 15 | ஆழ்வார் திருநகரி | 90,100 |
| 16 | கயத்தாறு | 82,061 |
| | | 1,159,316 |

| வரிசை எண். | ஊராட்சி ஒன்றியத்தின் பெயர் | மக்கள் தொகை |
|---|---|---|
| | திருநெல்வேலி (தெற்கு) | |
| 1 | சேரன்மாதேவி | 83,730 |
| 2 | பாப்பாகுடி | 49,505 |
| 3 | வள்ளியூர் | 92,672 |
| 4 | மானூர் | 73,942 |
| 5 | ஆலங்குளம் | 66,596 |
| 6 | சாதாபுரம் | 78,610 |
| 7 | செங்கோட்டை | 45,045 |
| 8 | தென்காசி | 61,631 |
| 9 | கீழப்பாவூர் | 89,562 |
| 10 | கடயம் | 66,479 |
| 11 | நாங்குநேரி | 83,797 |
| 12 | பாளையங்கோட்டை | 86,277 |
| 13 | கடையநல்லூர் | 42,129 |
| 14 | களக்காடு | 69,927 |
| 15 | அம்பாசமுத்திரம் | 93,568 |
| | | 1,064,370 |

(கிராம வளர்ச்சி உள்ளாட்சித் துறையின் 10—2—1968 நாளிட்ட அரசு குறிப்பாணை எண் 3814-ன் சுருக்கம்.)

## இந்த இதழில்...

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | உள்ளாட்சி அமைச்சரின் பாராட்டுப் பா .. | 1 |
| 2. | முதலமைச்சரின் வானொலிச் சிறப்புரை (15—8—68) .. .. .. | 2 |
| 3. | காந்தியடிகள் நூற்றாண்டு விழா—கல்வி அமைச்சரின் கடிதம் (12—7—68) .. | 5 |
| 4. | சொல்லேர் உழவர் கவியரங்கம் .. | 7 |
| 5. | அனந்தலை—தமிழகத்தின் இரண்டாவது சிறந்த கிராமம் .. .. .. | 9 |
| 6. | திரு எ. சுவாமிநாதன்—முதற் பரிசு பெற்ற ஊர்ப்பணியாளர் .. .. | 12 |
| 7. | வெற்றி மாளிகையின் வாயிலிலே .. | 15 |
| 8. | வெள்ளரி வெள்ளி—தனிச் சிறப்பு .. | 20 |

## அடுத்த இதழில்...

1. புதிய பாதை (கவியரங்கம்)—
மாண்புமிகு பொதுப்பணி அமைச்சரின் தலைமையுரை (கவிதை வடிவில்)
2. வெளிநாடுகளில் கண்ட உள்ளாட்சிப் பணிகள் (மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்)
3. அண்ணா பிறந்த நாள் பெருமங்கல வாழ்த்து—பேராசிரியர் இலக்குவனார்.
4. கிராமங்கள் தோறும் மகளிர் மன்றம்
5. கூட்டுறவு மூலம் விவசாயக்கடன் பெறுவது எப்படி ?
6. ஆட்சி மொழி-பயிற்சி மொழி-ஒரு விளக்கம்
7. தமிழகத்தின் இரண்டாவது சிறந்த ஊர்ப்பணியாளர் திரு அய்யம்பெருமாள் (தர்மபுரி மாவட்டம்).

ஆசிரியக் குழுத் தலைவர் :
திரு T. A. S. பாலகிருஷ்ணன், I.A.S.

வெளியிடுபவர் : திரு ஜி. திருமால், எம்.ஏ.; ஐ.ஏ.எஸ்.
ஆசிரியர் : திரு எஸ். வேங்கடசாமி, எம். ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras, by the Public Relations Officer and published by the Director of Rural Development, Madras-9 Chairman of the Editorial Committee Thiru T. A. S. Balakrishnan, I.A.S.,
Wrapper printed at Vadapalani Press, Madras-26.


# அளவோடு பெற்று வளமோடு வாழுங்கள்



குடும்பக்கட்டுப்பாடு செய்திடுவீர்

REGD. No. M. 7277 © தமிழக அரசு, 1968

**Stanes**

ஸ்டேன்ஸ் நிறுவனத்தார் மகிழ்ச்சியுடன் அளிக்கும்
"கோல்டு ஸீட்" விரிய ஒட்டு விதைகள்

உயர் விளைச்சலுக்கும், பெருகிய லாபத்துக்கும் உத்திரவாதமானவை.
நவீன முறையில் வெளிநாட்டு இயந்திரங்களில் பக்குவமாகி, அதிக முளைப்பு விரிய சக்தியும், அங்கீகரிக்கப்பட்ட இன சுத்தமும் பெற்றவை.

தற்போது விநியோகத்திலிருக்கும் எங்களது உன்னத ரகங்கள் :—

1. "கோல்டு ஸீட்" விரிய ஒட்டு சோளம் CHS-I
2. "கோல்டு ஸீட்" விரிய ஒட்டு கம்பு HBI-I
3. "கோல்டு ஸீட்" விரிய மக்காச் சோளம்

(a) டெக்கான் (தக்ஷிண விரிய மக்காச் சோளம்)—மஞ்சள் ரகம்
(b) கங்கா—3 (குறைந்த வயது—மஞ்சள் ரகம்)
(c) கங்கா சபேட்—2 (வெள்ளை ரகம்)
(d) ஹை-ஸ்டார்ச் (வெள்ளை ரகம்)

விதை உற்பத்தியாளர்கள் :—

தந்தி : "கோல்டுஸீட்" போன் : 30412

கோயமுத்தூர் ஸீட்ஸ் கார்ப்பரேஷன்,
பேரூர், கோயமுத்தூர்-10.

உங்களது விதைத் தேவைக்கும், விபரங்களுக்கும் :—

டி. ஸ்டேன்ஸ் & கம்பெனி லிட்,
உர இலாகா,
த. பெட்டி எண் 1312, கோயமுத்தூர்-18.

தந்தி : ஸ்டேன்ஸ். போன் : 23351, 23352, 23353, 23354.

தொழிற்சாலைகள் :—

| | | | |
|---|---|---|---|
| வளவனூர், விழுப்புரம், போன்-25 | துடியலூர், போன்: 25385 | ஆவன்யாபுரம், மதுரை, போன் : 5533 | தச்சநல்லூர், திருநெல்வேலி, போன் : 195 |






# கிராமநலம்

தமிழக அரசின் கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறை மாத இதழ்

கதிர் 13 செப்டம்பர் 1968 நெல் 12


## நமது காணிக்கை

"நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது"

என்னும் தமிழ் மறைக்குத் தனித்ததொரு இலக்கணமாய்த் திகழ்ந்து, தான் பிறந்த ஊராரும், தண்டமிழ் நாட்டாரும், உலகாரும் போற்றும் உத்தமராய் விளங்கி, வையத்துள் வாழ் வாங்கு வாழ்ந்து, மற்றவர்க்கு வாழும் வழிகாட்டி நிற்கும்

தமிழ்த்தாயின் திருமகன்
தமிழகத்தின் தலைமகன்
பேரறிஞர் பெருந்தகை

அண்ணா அவர்களின் 60-வது பிறந்த நாள் இந்நாள்! இன்ப நாள்!

இன்று அவர் இங்கில்லை என்றாலும், இனி என்றும் நம்மோடு இருக்கத் தக்க வலிவும், பொலிவும் பெற்று வரவேண்டும் என்று வாயார, மனதார வாழ்த்துரைக்கும் கோடான கோடி நல்லிதயங்களோடு, உள்ளாட்சித் துறை ஊழியர்கள், ஊருக் குழைக்கும் சேரணித் தோழர்கள்—கதர் கிராமக் கைத்தொழில் ஆயத்தின் தொண்டர்கள்—நாங்களும் சேர்ந்து "வாழ்க பேரறிஞர்—வாழ்க நம் முதல்வர்—வாழ்க பல்லாண்டு" என வாழ்த்தி வணங்குவதில், பெருமையும், பூரிப்பும், பேரின்பமும் அடைகின்றோம்.

வெறும் வாழ்த்துக்கள் மட்டும் அவரை வசியப்படுத்தாது என்பதை நாமறிவோம்! இந்த் நாடறியும்! "அதிகாலை தொடங்கி இரவு மட்டும் நம் நலம் சேர்ப்பதல்லால், பொது வாழ்வுக்கு இதுவரையில் என்ன செய்தோம்"? நாடு வாழ—நந்தமிழ் வாழ—நானிலம் வாழ—உழைப்போர் உயர—உழவர் சிறக்க, நாம் ஆற்றிய தொண்டுகள் எவை? இந்தச் சிந்தனையோடு இரவும் பகலும் தன் வகையில் ஒன்றெனக் கருதி, காலமெல்லாம் பாடுபட்டுவரும் நாட்டின் காவலருக்கு—நாம் இந்த ஓராண்டுக் காலத்தில் ஆற்றிய பணியின் அளவையும்—இனி வரும் ஆண்டில் ஆற்ற இருக்கும் பணியின் நிலையையும் காணிக்கையாக்குவதே அவருக்குக் காட்டும் நன்றி! கடப்பாடு! வாழ்த்து—வணக்கம் எல்லாம்...."

—மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்கள்
(15—9—68-ல் ஆற்றிய வானொலி உரையிலிருந்து.)

முதல் அட்டைப் படம்: உள்ளாட்சித் துறையின் ஓராண்டுத் திட்ட விளக்கம். சிறப்புக் கட்டுரையை 6-ம் பக்கத்தில் காணலாம்.

[மாண்புமிகு தமிழக முதல்வரைப் பற்றியும் அவருடைய அன்றாட அலுவல்கள், அவருடைய குடும்பத்தினர், அவருக்குத் தொண்டர்கள் பற்றியும் படம் பிடித்துக் காட்டுகிறது இக்கட்டுரை. தமிழகத்தின் கிராமங்களிலே வாழும் இலட்சோப இலட்சக் கணக்கான கிராம மக்களும் தமிழக முதல்வரைப் பற்றி அறிந்துகொள்ள இக்கட்டுரை பயன்படும் என நம்புகிறோம்.

இக்கட்டுரை 1—9—68-ல் அச்சுக்கு அனுப்பப் பட்டது. அதன்பிறகு ஏற்பட்ட எதிர்பாராத வரலாற்றுப் புகழ்பெற்ற நிகழ்ச்சிகளை அனைவரும் அறிவர். மருத்துவ சிகிச்சைக்காக நமது முதல்வர் அமெரிக்கா சென்றபொழுது அவர்பால் உலக மக்கள் அனைவரும் காட்டிய அன்பும் பரிவும் உள்ளத்தை உருக்குவன.

முதல்வர் அவர்கள் தம்முடைய நுங்கம்பாக்கம் வீட்டில் 'தாயகத்தில்' வாழ்ந்த எளிய, ஆடம்பர மற்ற வாழ்க்கை முறையை, இக்கட்டுரை விளக்கு கிறது.

—ஆசிரியர்]




# தாயகத்திலே தமிழக முதல்வர்

கிருஷ்ணன்

திரு பி. ஆர். முத்து

'அவரது பொறுமை, பாதிக்கப் பட்டோரிடம் அவர் காட்டும் பரிவு, இடைவிடாத கூச்சல்கள், அமளிதுமளிகளுக்கு ஈடு கொடுக்கும் மனத் திண்மை, தனி மனிதர்களின் ஆற்றல்களிலும் திறமையான சுயாட்சி முறையிலும் அவருக்கிருந்த அசையாத நம்பிக்கை—இவைதான் அமைச்சுப் பொறுப்பேற்ற ஆரம்ப நாட்களில் அவரைச் சிறந்த அரசியல் மேதை என்று இனங் காட்டின'

என்று வின்ஸ்டன் சர்ச்சில் பற்றி வைகண்ட் சைமன் கூறிய மதிப்பீடுதான், நம் முதல்வரை எண்ணும்போது, நினைவுக்கு வருகின்றது.

'10 டவுனிங்தெரு' என்று சொன்னதுமே அது பிரிட்டிஷ் முதல்வரின் இல்லம் என்று சொல்வது போலே, '9 அவினியூ சாலை' என்றதும், நம் முடைய முதல்வரின் வீடு அது என்று சொல்லு மளவுக்குஅது மக்கள் கருத்தில் பதிந்திருக்கிறது.

சென்னை நுங்கம்பாக்கம் பகுதியில் நடுத்தர, எளிய வகுப்பினர் வாழும் பகுதியில் அமைந்த சாலை, அவென்யூசாலை.

பெயருக்கு ஏற்ப, வரிசையாக மரங்கள் அணி செய்யும் அச்சாலையின் மத்தியில் அமைந்திருக் கும் எளிமையும், அழகும் நிறைந்த மனைதான் நம் முதல்வருடையது.

நம்முடைய தமிழக முதல்வர் திரு சி. என். அண்ணாதுரை அவர்களின் பெயரைச் சுருக்கிப் பாசத்தோடு அண்ணா என்றே அழைக்கிறார்கள்



1909-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 15-ம் நாள் வரலாறு சமைத்த காஞ்சி மாநகரில் பிறந்த நம்முடைய முதல்வர் அண்ணா அவர்களுக்கு இந்த ஆண்டு 60 வயது தொடங்குகிறது.

நெய்யும் தொழில் செய்யும் எளியக் குடும் பத்தில் பிறந்த அவர், வாழ்வில் நெளிவுசுளிவு களை நிரல்பட அறிந்தவர்.

## புது மரபு கண்டவர்

சீர்திருத்த இயக்கத்தின் பேச்சாளராய் வேர் விட்டு, இலக்கியப் பேரொளியாய் முகிழ்த்து, அரும்பி, சமுதாயச் சிற்பியாய் மலர்ந்து, மணம் பரப்பி, அரசியல் வாதியாய்க் கனிந்திருக்கும் அண்ணா அவர்கள், தமிழகத்து முதல்வராய்ப் பொறுப்பேற்ற அன்று 1967-ம் ஆண்டு மார்ச் 6-ம் நாள் மாலை சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டைத் திடலில் நடைபெற்ற கூட்டத்தில் அரசு ஊழியர்களை 'நண்பர்களே' என்று விளித்து ஒரு புதிய மரபையே தோற்றுவித்தார்.

"அவர் எழுத்தாளர்—பேச்சாளர்—வசனம் வல்லார்—உரையாடல் நிபுணர்—இசைஞானி, ஒரு கல்வி முறையையே வகுத்து அளித்தவர், கல்லூரி நிறுவியவர்; பெரிய அரசியல் கட்சி ஒன்றைக் கருவாக்கி உருவாக்கி வளர்த்த பெருமை அவருடையது"

என்று அமெரிக்க உரிமைக்கு வித்திட்ட தாமஸ் ஜெபர்சன் பற்றி, வரலாற்றாசிரியர்கள் சொல் வது போலவே, நமது முதல்வரைப் பற்றியும் சொல்லலாம்.



முதல்வரின் துணைவியார்— உறவினர் சிலருடன்

எழுதினாலும் பேசினாலும் அவர் சொல்லில் உயிர் இருக்கும். சில நேரங்களில் அவை கொஞ்சும்-தவழும். சில நேரங்களில் குதித்துத் தாவும். சில நேரங்களில் கேட்போரைக் கிளுகிளுப்பூட்டி நெஞ்சை நெகிழ்விக்கும். சில நேரங்களில் இறக்கை முளைத்துப் பறக்கும்; இன்னுஞ் சில நேரம் ஈட்டியாய் மாறி எதிரியைத் துளைக்கும். உயிர்த்துடிப்புடன் நர்த்தனமிடும் அந்தச் சொல்லின் சிறப்புதான், அவர் வாழ்வின் வெற்றி ரகசியம்.

அவர் இந்த அரசுக்கு மட்டும் முதல்வர் அல்லர்; அனைத்துக்கும் முதல்வர். வள்ளுவர் சொன்னது போல "அவர் தோன்றும் துறையெல்லாம் புகழோடு தோன்றுகிறார்."

சிரித்த முகம் அவருக்கு! சிந்தனைத் தேக்கிய நெற்றி, ஊடுருவிப் பாயும் அகன்ற விழிகள், மிகப் பொறுமையான போக்கு, இனியவே பேசும் பண்பு—இவைதான் நம்முடைய முதல்வர் அண்ணா அவர்கள்!

ஆமாம். காட்சிக்கு எளியவர், பழக்க வழக்கங்களில் படாடோபம் இல்லாதவர், அரசுக்குச் சொந்தமான வளமனை வேண்டாமென்று அவர் தம் சொந்த வீட்டிலேயே இருந்து வருகிறார்.

✦ ✦

வடக்குப் பார்த்த அந்த வீட்டின் பெயர் 'தாயகம்'. அவருக்குத் தமிழ்மண்ணின் மீதுள்ள அன்பின் வெளிப்பாடு அது. நெஞ்சையள்ளும் வண்ணம் பூசிய சுவரில் இருபுறமும் பெரிய இரும்புக் கதவுகள். இடையே ஒற்றைச் சிறுகதவு:

கார்களும் மனிதர்களுமாய் முதல்வரைக் காணவந்த கூட்டம் அங்கே நெரிகிறது. அவரவருக்கு ஒரு குறை—ஒரு தேவை—ஒரு கடமை:

காட்சிக்கு எளியவர்

இவ்வளவு இருந்தும் அங்கே நிலவும் அமைதி. உள்ளே முதல்வர் இருக்கிறார் என்பதன் முன்னறிவிப்பு! உள்ளே முன்றிலில் மா, வேம்பு மரங்கள் தண்ணிழல் தருகின்றன! அரைவட்ட வடிவில் அமைந்து, கண்ணுக்கு விருந்தளிக்கும் பூச் செடிகள் தொட்டிகளில் வைக்கப்பட்டிருக்கின்றன!

முன்னேறி உள்ளே சென்றால், இடப்புறத்தில் பாதுகாப்பு அலுவலர்கள் இருப்பறை. அருகில் ஓர் அறிவிப்பு:

"அலுவலக அதிகாரிகளுடன் கலந்துரையாடல் நாளாக புதன்கிழமை குறிக்கப்பட்டிருப்பதால், அன்று, மற்றவர்கள் கண்டு கருத்தறிவிக்க வரவேண்டுவதில்லை என தெரிவிக்கப் படுகிறது"

உள்ளே நுழைந்ததும் ஒரு வரவேற்பறை. நீலச் சுவரே பின்னணியாய் அமைய, இடையிடையே வெளிர், மஞ்சள் திரைச் சீலைகள் அழகு செய்கின்றன! கலைநயம் பொதித்த

[42-ம் பக்கம் பார்க்கவும்]





திரு. அய்யம்பெருமாள்
இரண்டாவது
பரிசு பெற்ற
ஊர்ப்பணியாளர்

## ஊரை உயர்த்தும் திருப்பணி—

தருமபுரி மாவட்டத்தைச் சேர்ந்த முதல் நிலை கிராம நல ஊழியர் திரு அய்யம் பெருமாள் 1965-66 ஆண்டில் கிருஷ்ணகிரி வட்டாரத்தில் கிருஷ்ணகிரி தொகுதியில் சிறப்பான பணி புரிந்ததற்காக, மாநிலத்தில் இரண்டாவதாக சிறப்புப் பணியாற்றிய ஊர்ப் பணியாளராக (கிராம சேவக்) தேர்ந்தெடுககப்பட்டுள்ளார்.

திரு அய்யம்பெருமாள் 1953-ம் ஆண்டு மதுரை மாவட்டம் காந்தி கிராமத்தில் உள்ள கிராமியப் பயிற்சிப் பள்ளியில் கிராமநல ஊழியராக பயிற்சியில் சேர்ந்து 6 மாத கால பயிற்சி பெற்று மதுரை மாவட்டத்தில் ஆத்தூர் வட்டாரத்தில் கிராம நல ஊழியராக பணியில் சேர்ந்தார். பின்னர் மாறுதலில் முன்னுள் சேலம் மாவட்டத்திற்கு வந்து தற்போதுள்ள பிரிக்கப்பட்ட தருமபுரி மாவட்டத்தில் பணி புரிந்து வருகிறார்.

1965-66 ஆண்டில் கிருஷ்ணகிரி வட்டாரத்தில் கிருஷ்ணகிரி தொகுதியில் இவர் ஆற்றிய சிறப்புப் பணிகள் பாராட்டுதலுக்குரியன.

விவசாயிகளின் தேவைக்கேற்ப, பொறுக்கு விதை நெல் 555 கிலோவும், எண்ணெய் வித்துக்கள் 104 கிலோவும் இந்த ஆண்டில் இவரால் விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டது. திருந்திய முறைச் சாகுபடி விளக்கங்களுக்காக நெல் 120 வயல்களிலும், மற்ற தானியங்கள் 500 வயல்களிலும் செயல் விளக்கம் செய்து நிரூபித்திருக்கிறார்.

### மக்களுடன் நெருங்கிய தொடர்பு.

இவருடைய பிரிவில் இவரது முயற்சியால் 67 மருந்து தெளிக்கும் கருவிகளும், 171 கலப்பைகளும், மற்றும் மண் வாரி பறம்பு பலகை போன்ற 101 கருவிகளும் விநியோகித்துள்ளார். இவர் பிரிவில் 467 ஏக்கர் பரப்பில் பசுந்தாள் உரச் செடிகளை உற்பத்தி செய்ய ஏற்பாடு செய்து, அப்பகுதிக்குத் தேவையான பசுந்தாள் உரத்திற்காக வசதி செய்துள்ளார்.

இவர் விவசாயிகளிடையேயும் மற்ற பொது மக்களிடையேயும் நெருங்கிய தொடர்பு கொண்டு, விவசாய முன்னேற்றத்துக்கும் மற்றும் பொது நல காரியங்களுக்கும் மிக்க பாடுபட்டு இம் மாநிலத்திலேயே 1965—66-ம் ஆண்டின் இரண்டாவது சிறந்த ஊர்ப்பணியாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

# உள்ளாட்சித் துறையின் ஓராண்டுச் சாதனை



மாண்புமிகு முதலமைச்சர் திரு. சி. என். அண்ணாதுரை அவர்களின் 59-வது பிறந்த நாளில் (15—9—1967) உள்ளாட்சித் துறை அளிக்கும் காணிக்கையாக, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி அவர்கள் ஓராண்டுத் திட்டம் ஒன்றினை வெளியிட்டார்.

தமிழக ஊராட்சி மன்றங்கள் தோன்றுதொட்டே கிராம முன்னேற்றத்தில் பெரும் பங்கு கொண்டு பெருமிதம் கொள்ளத்தக்க வகையில் பணியாற்றி வந்துள்ளன. மேலும் பொலிவூட்டும் வகையில், மாண்புமிகு முதலமைச்சரின் 59-வது பிறந்தநாளன்று (15—9—67) ஊராட்சி மன்றங்களும் ஊராட்சி ஒன்றியங்களும் கிராமங்களுக்கு பெரும் பயன்தரத்தக்க வகையில் கீழ்க்காணும் திட்டங்களை மேற்கொண்டு செயல் படுத்தப்படுவதென முடிவு செய்யப்பட்டது. இதன் மூலம் கிராம நலம் பெருகவும் தமிழகத்தின் முன்னேற்றம் கூடவும் வழி ஏற்படும் என்ற நம்பிக்கையின் அடிப்படையில் இந்நிறுவனங்கள் செயலில் இறங்கின. சென்ற ஆண்டு மாண்புமிகு முதலமைச்சரின் 59-வது பிறந்த நாளன்று மேற்கொள்ளப்பட்ட இத் திட்டங்கள், இவ்வாண்டு முதலமைச்சரின் 60-வது பிறந்த நாளன்று முடிக்கப்பட்டு, ஓராண்டுச் சாதனையாக (One year plan) செயற்படுத்தப் பட்டன.

ஓராண்டுச் சாதனையாக மேற்கொள்ளப்பட்ட திட்டங்கள்:

(1) 1,059 சமுதாய நலப் பாசனக் கிணறுகளைத் தோண்டி விசைப் பொறிகள் அமைத்து விவசாயிகட்கு உதவுதல்.

(2) 559 டிராக்டர்கள், 1,059 டில்லர்கள், 2,059 ஸ்ப்ரேயர்கள் வாங்கி, குறைந்த கட்டணத்தில் விவசாயிகட்குப் பயன் படுமாறு செய்தல்.

(3) ஊராட்சி ஒன்றியப் பள்ளிகளில், மதிய உணவுக்கு உதவியாக இருக்கும் வகையில் 5,059 காய்கறித் தோட்டங்களை அமைத் தல்.

(4) ஆரணிக்கருகில் உள்ள பூசிமலைக் குப்பத்தில் அரசினருக்குச் சொந்தமாக உள்ள 320 ஏக்கர் தரிசு நிலத்தில் விவசாயப் பண்ணை அமைக்க வகைசெய்தல்.

(5) இவை தவிர, பேரூராட்சி மன்றங்களிலும் ஊராட்சி ஒன்றியங்களிலும் தேவையான இடங்களில் பலநோக்கு மண்டபங்கள் அமைத்து, ஏழை எளியவர்கள் அவற்றைத் திருமண மண்டபங்களாகவும், பல்சுவை நிகழ்ச்சிகள் நிகழ்விடங்களாகவும் பயன்படுத்திக்கொள்ள அனுமதித்தல்.

இத்திட்டத்தை ஓராண்டுக் காலத்திற்குள் ஊராட்சி மன்றங்கள், ஊராட்சி ஒன்றியங்கள் செய்து முடிக்கும் வகையில் செயற் குறிப்புகளும், செயல் திட்டங்களும் தீட்டப்பட்டன. மாண்புமிகு முதலமைச்சரின் 60-வது பிறந்தநாளன்று உள்ளாட்சித் துறை காணிக்கையாக நிறைவேற்றி அளிக்கும் இந்த ஓராண்டுத் திட்டம் வெற்றியுடன் செய்து முடிக்கப்பட்டது.

அவ்வாண்டில் நடைபெற்ற உள்ளாட்சித்துறை சம்பந்தமான கூட்டங்கள் அத்தனையிலும் இந்த ஓராண்டுத் திட்டத்தின் வேலைவிவரங்களை செயல்படுத்துவது பற்றி தம்முடைய ஆக்கபூர்வமான யோசனைகளை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி வலியுறுத்திக் கூறிவந்துள்ளார். "இத்திட்டத்தை முழுவெற்றியடையச்செய்ய அனைவரும் முழுமூச்சுடன் பாடுபடவேண்டுமென்றும், அதன்மூலம் கிராமமக்களுக்கு பயனுள்ள சேவையை நாம் செய்தவர்களாவோம்" என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் வேண்டுகோள் விடுத்தார்.

### ஒற்றுமை உணர்வுடன் பணியாற்றி

உள்ளாட்சித் துறையினர் அனைவரும் மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரின் வேண்டுகோளை சிரமேற்கொண்டு, அனைவரும் ஒரு குடும்ப பாசத்துடன் தாங்கள் எல்லாம் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் என்ற ஒற்றுமை உணர்வுடன் பாடுபட்டு, ஓராண்டுத் திட்டத்தின் இலக்குகளை அடைவதில் ஒன்றுபட்டு உழைத்து வெற்றிதேடித்தந்துள்ளனர். அதிகாரிகள், பொதுமக்கள் அனைவரின் ஆர்வம் நிறைந்த ஒத்துழைப்புடன் குறிப்பிட்ட காலவரையறைக்குள் ஐந்து அம்சத் திட்டம் வெற்றியுடன் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் கிராம வளர்ச்சிக்கு புதியதோர் ஊக்கத்தையும் எழுச்சியையும் அளிப்பதற்காகவே உருவாக்கப்பட்டது.

சமுதாய நலக் கிணறுகள் அமைத்தல்—டிராக்டர்கள் வாங்கி உழவர்கட்கு வாடகைக்கு வழங்குதல்—மருந்து தெளிப்பான்கள் வாங்கி வழங்குதல்—மதிய உணவுக்கு ஊக்கம் அளிக்கும் பள்ளித் தோட்டங்கள் அமைத்தல்—டில்லர்கள் வாங்கிப் பயன்படுத்தல்—மண மண்டபங்கள் அமைத்தல் ஆகியவை ஓராண்டுத் திட்டத்தில் முக்கிய இடம் பெற்றன! இதனை இந்நாட்டு விவசாயப் பெருங்குடி மக்கள் விரும்பிவரவேற்றுப் பாராட்டினர்.

[18-ம் பக்கம் பார்க்க]



வானொலிப் பேச்சு:

# வெளிநாடுகளில் கண்ட உள்ளாட்சி வளர்ச்சிப் பணிகள்

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்
திரு மா. முத்துசாமி

"பகுத்துண்டு பல்லுயிர்
ஓம்புதல் நூலோர்
தொகுத்தவற்றுள் எல்
லாந் தலை"

என்ற வள்ளுவர் வாய்மொழியைச செயலாக்கும் நோக்கோடு, காஞ்சி தந்த கருவூலம்-கன்னித் தமிழ்க் காவலர்—பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் தலைமைப் பொறுப்பு ஏற்றுள்ள தமிழகத்தின் தலைநகராம் சென்னை மாநகராட்சியின் தூதுக் குழுவிற்குத் தலைமையேற்று, ரோம், பாரிஸ், லண்டன், ஆம்ஸர்டாம், ஜெர்மானிய ஜனநாயகக்குடியரசு, சோவியத் ஒன்றியம் ஆகிய இடங்களுக்குச் சென்று, பலவற்றைக் கண்டு, கருத்துவளம் பெற்றுத் தாயகம் திரும்பியதில், எல்லையற்ற மகிழ்ச்சியும் பூரிப்பு ஏற்படுகின்றது."

'தேமதுரத் தமிழோசை உலக மெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும்' என்ற முழக்கத்தை எழுப்பிய கவிஞர் பெருமகனின் கனவு, நனவாகும் வண்ணம், அண்மைக் காலத்தில், காரியங்கள் நடைபெற்று வருகின்றன."

"சென்ற சில திங்களுக்கு முன், பேரறிஞர் அண்ணா அவர்களின் செந்தமிழ்ச் சுவையை 'யேல்" பல்கலைக் கழகமும், அமெரிக்க நாட்டின் மற்றபல பகுதிகளும், பருகியதை நாம் அறிவோம். மாண்புமிக்க உணவுத்துறை அமைச்சர் மதியழகன் அவர்கள், ரோம் நகரிலும், மாண்புமிக்க செய்தித்துறை அமைச்சர் சகோதரி சத்தியவாணிமுத்து அவர்கள், 'மொரிஷியஸ்' தீவிலும் தமிழ் முழக்கமிட்டுத் திரும்பிய காட்சியினைக் கண்டு, தமிழகமே களிபேருவகை, கொண்டது. அத்தகையோர் வழிநின்று, நானும், நம் மாநகராட்சிக் குழுவினரும் தமிழின் சிறப்பை—தமிழறிஞர் தம் சிறப்பை தரணிக்கு எடுத்துக் காட்டும் வாய்ப்பினைப் பெற்றோம்.

தமிழகத்தின் பெரு மக்கள் பல்லோர் எங்களை வாழ்த்தி வழியனுப்பினர்.



## தரணி போற்றும் தமிழகம்

செல்லுமிடங்களில் இப் பணியினைச் சிறப்புறச் செய்ய வேண்டும் என்ற விருப்புடன் வான்புகழ்க் கொண்ட வள்ளுவரையும், வையகத்து மக்கள் வாழும் நெறிமுறைகளை







படம் 1: ரோம், பாரிஸ், லண்டன், ஆம்ஸ்ட்டர்டாம், ஜெர்மானிய ஜனநாயகக் குடியரசு, சோவியத் ஒன்றியம் ஆகிய இடங்களுக்கு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு மா. முத்துசாமி தலைமையில் புறப்பட்ட சென்னை மாநகராட்சித் தூதுக் குழுவினருடன், பம்பாயில் ஏர்-இந்தியா விமான அதிகாரிகள்.



படம் 2: சென்னை மாநகராட்சி தூதுக் குழுவினருக்கு இங்கிலாந்திலுள்ள இந்திய தூதுவரகத்தில் அளிக்கப்பட்ட வரவேற்பு.

படம் 3.: சென்னை மாநகராட்சி தூதுக் குழுவினர் பங்கேற்ற லண்டன் நிகழ்ச்சிகளை ஒலிபரப்பிய பி. பி. சி. வானொலி நிலைய தமிழோசை தயாரிப்புக் குழுவினர்.












சென்ற நாடுகளிலுள்ள மாநகரங்களின் தலைவர்கள், நகரக் குழுவினர் பலரை, நமது மாநகராட்சிக் குழுவினர் சந்தித்தனர். அவர்கள் நகரத்தின் முன்னேற்றத்தை மனத்தில் கொண்டு பல புதிய திட்டங்களைத் தீட்டி செயலாக்குவதைக் கேட்டறிந்தனர். தமிழகத்தின் சிறந்த கைவண்ணப் பொருள்களை அவர்களுக்குப் பரிசாக மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் அளித்தார்.

வகுத்துத் தந்த தொல்காப்பியத்தையும், உலகமே வியந்து பாராட்டிய உலகத்தமிழ் மாநாட்டின் அழியாச்சின்னமாக விளங்கிய மலரையும், இயல் இசை நாடகம் ஆகிய முத்தமிழின் மூலம் மூவேந்தர் ஆண்டிருந்த



தமிழகத்தின் சிறப்பை தரணிக்குக் காட்டிய இளங்கோவடிகளின் சிலப்பதிகாரத்தை, எல்லோரும் அறியும் வண்ணம், எளிய இனிய தமிழில், கலைஞர் அவர்கள் எழுதித் தந்த சிலம்பையும், தமிழ்நாட்டின் கைவண்ணப் பொருள்களையும் எங்களோடு எடுத்துச் சென்றோம். சென்ற நாடுகள் அனைத்திலும், எங்களுக்குச் சிறப்பான வரவேற்பு கிடைத்தது.

ரோம், லண்டன், ஹாலே, வால்காகிரேடு ஆகிய நகரங்களில், உலகத் தமிழ் மாநாட்டுத் திரைப் படத்தைக் காட்டிய போது, அவர்கள் காட்டிய உற்சாகமும் வரவேற்பும் ஆரவாரமும் மகிழ்ச்சியும் எங்களைத் திணற வைத்தன.

தமிழ் கூறும் நல்லுலகின் பண்டைச் சிறப்பினையும், அதனைக் கட்டிக்காக்க இன்றைய தமிழகம் மேற்கொண்டுள்ள முயற்சிகளையும், உலகம் அறிந்து போற்றுகிறது என்ற பெருமித உணர்வோடு, நாங்கள் நிமிர்ந்து நின்றோம்.

தமிழிலக்கியப் பெட்டகங்களை, ஆங்காங்குள்ள பெரியோர்கள் சிலருக்கு வழங்கியபோது "தமிழுக்குத் தொண்டு செய்கிறோம்" என்ற தணியாத மகிழ்வு எங்களுக்கும், வாங்கிய பொழுது, "தமிழின் சிறப்பு எவ்வளவு உயர்ந்தது" என்ற எண்ணம், அவர்களுக்கும், ஏற்பட்டது.

குறிப்பாக எல்லா நாடுகளிலும் தமிழ் மொழியின் சிறப்பினையும், தமிழ்நாட்டின் சிறப்பினையும், தமிழகத்துத் தலைமகன் பேரறிஞர் அண்ணாவின் பெருமையினையும், கற்றோர் பலரும் தெளிவுறத் தெரிந்துள்ள பான்மையினைக் கண்டோம்.

லண்டன் மாநகரத்துத் தமிழ்ச் சங்கத்தின் வரவேற்பு, எங்கள் வாழ்நாளில் மறக்க முடியாத ஒன்றாகும்.

தமிழகம், இலங்கை, மலேசியா, மொரிஷியஸ் மற்றும் பல பகுதிகளிலிருந்து அங்கு வந்து வாழ்கின்ற தமிழினத்தைச் சார்ந்தோரும், தமிழறிந்த சான்றோரும் ஒன்றுகூடி, பல்லாண்டு காலமாக இச்சங்கத்தைப் பெருமையுற நடத்தி வருகின்றனர். தமிழறிந்த ஆங்கிலப் பெரு மக்கள் சிலரும், இச் சங்கத்தில் அங்கம் வகிப்பது, குறிப்பிடத் தக்கது.

செட்டி நாட்டைச் சார்ந்த திரு மெய்யப்பன் அவர்கள் தலைவராகவும், திரு ராஜ்ரோஸ் அவர்கள் செயலாளராகவும் இருந்து இதனைக் கட்டிக் காத்து வருகின்றனர். இச்சங்கம் வளர, தமிழகத்துப் பெருமக்கள், ஒல்லும் வகையில் எல்லாம், உதவக் கடமைப்பட்டவர்கள் என்பதை, எடுத்துரைப்பது எனது கடமையாகும்.

அரியதோர் வாய்ப்பு

மார்நகரங்களின் தலைவர்கள், நகரக் குழுவினர் பலரைக் காணவும் நகராட்சி நிர்வாக முறைகளை அறியவும் வாய்ப்பு கிடைத்தது. நகரத்தின் முன்னேற்றத்தை மனத்தில் கொண்டு, பல புதிய திட்டங்களைத் தீட்டி அவற்றைச் செயலாக்குவதில் முனைந்துள்ள காட்சியினைக் கண்டோம். குறிப்பாக, ஜெர்மன் ஜனநாயகக் குடியரசு நகரங்களான 'ஹாலே' 'பெர்லின்' ஆகிய நகரங்களின் வளர்ச்சியும், சோவியத் ஒன்றியத்தின் தலைநகரான மாஸ்கோவின் முன்னேற்றமும், 'வால்காகிரேட்" நகர அமைப்பும், எங்கள் கண்ணையும் கருத்தையும் கவர்ந்தன.

உலகப் பெரும் போரின் விளைவாக, பெரும்பாலும் நிர்மூலமாக்கப்பட்ட இந்த நகரங்கள், இன்றைக்கு எழிலோடு காட்சி அளிக்கின்றன.





நகரத்தின் தேவைகள் அனைத்தையும், நகர மன்றங்களே ஏற்று, அவற்றைத் தீர்த்து வைப்பதில் மகத்தான வெற்றி கண்டுள்ளன. 65 லட்சம் மக்கள் வாழும் மாஸ்கோ நகரின் குடியிருப்புப் பிரச்னையைத் திறமையாகச் சமாளித்துள்ளனர்.

வீட்டு வசதி—வியத்தகு சாதனை

ஆண்டு ஒன்றுக்கு, சுமார் ஐந்து லட்சம் மக்களுக்குப் புதிய வீடுகள் மாஸ்கோ நகரில் அமைக்கப்படுவதாக, அந்நகரத் தலைவர் அவர்கள் விளக்கினார்கள்.

மாஸ்கோ, வால்காகிரேட், பெர்லின், ஹாலே போன்ற நகரங்களில், அவர்கள் வீடுகளை அமைக்கும் முறையே விந்தையாக உள்ளது. உறுதியான வீடுகளை, குறைந்த செலவில், குறுகிய காலத்தில் கட்டி முடிக்கின்றனர். பல மாடிக் கட்டிடங்களுக்குத் தேவைப்படும் சுவர் உள்ளிட்ட பகுதிகள் அனைத்தையும் தொழிற்சாலைகளில் உருவாக்கி, அவற்றைக் கொண்டு கட்டிடங்களை உருவாக்குகிறார்கள். இத்தகைய (Pre-fabricated Units) ஒவ்வொரு நகரிலும் அமைக்கப்பட்டு, இப்பகுதிகள் உருவாக்கப்படுவதைக் கண்டோம். வளர்ந்து வரும் சென்னை, கோவை, மதுரை போன்ற நகரங்களில், இம்முறை பின்பற்றப்படுமானால், அது பெரும் பயனை விளைவிக்கும் என்பதில், ஐயமில்லை. தமிழக அரசின் துணையோடு இம் முயற்சியில் ஈடுபட, நகர் மன்றங்கள் முன் வரும் என்று நம்புகிறேன்.

கிழக்கு பெர்லின் நகரத்தின் ஊடே நெளிந்து வளைந்து செல்லுகின்றபலநீரோடைகளை ஒன்றாக இணைத்து, ஏறத்தாழ முப்பது கல் தொலைவிற்கு, விசைப்படகுகள் செல்லும் வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளனர். பெர்லின் நகரத் தலைவரோடு, ஞாயிற்றுக்கிழமை மாலை வேளையில், நாங்கள் உல்லாசப் படகுப் பயணத்தை மேற்கொண்டோம். மூன்று மணி நேரம் எங்கள் பயணம் நீடித்தது. கால்வாயின் இருபுறங்களிலும் அமைந்துள்ள பசுமையான சோலைகளிடையே அமைக்கப்பட்டுள்ள ஓய்வுக் கூடங்களில் தங்கி, பெர்லின் நகர மக்கள் அனைவருமே மகிழ்வோடு படகுப் பயணம் மேற்கொண்டு, பொழுதுபோக்குவது மட்டற்ற மகிழ்ச்சியைக் கொடுத்தது.

அப்பொழுது, சிங்காரச் சென்னையில் ஓடும் கூவம் ஆற்றிலும் ஒரு நாள் படகில் செல்வோம் என்ற உணர்வு, உள்ளத்தில், எழுந்தது. "அந்நாள் விரைவில் வருமென", எனது அருகிலிருந்த நண்பர் முனுசாமி அவர்கள் உறுதியோடு தெரிவித்தார். 'முயற்சி திருவினையாக்கும்' என்று முழுமையாக நம்புகிறேன்.

நகரின் கல்விக் கூடங்கள், சுகாதார நிலையங்கள், போக்குவரத்து, சாலை அமைப்பு, நீர் வழங்கும் திட்டம், நீச்சல் குளங்கள், மனமகிழ் மன்றங்கள், விளையாட்டு மைதானங்கள், விளக்கு வசதிகள் முதலிய அனைத்துமே, சீரிய முறையில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பினைக் கண்டோம்.

மாஸ்கோ, வால்கா நகரங்கள் தூய்மையாகவும், அழகாகவும் அமைக்கப்பட்டுள்ளன. விடிவதற்குள், வீதிகள் அனைத்தும் கழுவப் பட்டு தூய்மைப்படுத்தப்படுகின்றன.

இவ்வளவு விரைவான முன்னேற்றங்களுக்குக் காரணம் என்ன? அந்நாட்டின் தொழில் முன்னேற்றமும் மக்களின் கட்டுப்பாடான உழைப்பும், அவர்கள் வகுத்துக்கொண்டுள்ள விதிமுறைகளும் அடிப்படைக் காரணங்களாகும்.

நகரத்தின் வருவாயும் அதிகம்; நகர் மன்றங்களின் அதிகாரங்களும் அதிகம். இந்த இரண்டும், நகரத்தின் வளர்ச்சிக்குப் பெரும் துணையாக விளங்குகின்றன. நமக்குள்ள நிதி

[15-ம் பக்கம் பார்க்கவும்].



'ஹாலே' நகரத்தின் எழில் தோற்றம்





# சம்பாவில் இருபோக சாகுபடித் திட்டம் 1968-69.

## தஞ்சாவூர்.

### இரண்டாம் பயிருக்கேற்ற நெல் ரக சிபாரிசுகளுடன்கூடிய சாகுபடித் திட்டம்

| வரிசை எண். | ஆடுதுறை 27-ஐ இந்த தேதியில் விதைத்தால்? | நடவு செய்யும் காலம். | அறுவடைக் காலம். | அடுத்த இரண்டாம் பயிரைச் சாகுபடி செய்யும் முறை. இரண்டாம் பயிர் ரகம். | பயிரின் வயது. | விதைக்கும் காலம். | நடவு செய்யும் காலம். | அறுவடைக் காலம். |
|---|---|---|---|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) | (9) |
| 1 | ஆனி 24 முதல் 30 வரை (ஜூலை 7 முதல் 13 வரை) | ஆடி 18 முதல் 24 வரை (ஆகஸ்டு 2 முதல் 8 வரை) | ஐப்பசி 7 முதல் 13 வரை (அக்டோபர் 22 முதல் 28 வரை) | கோ. 25 | 165 நாட்கள் | ஆவணி 17 முதல் 23 வரை (செப்டம்பர் 1 முதல் 7 வரை) | ஐப்பசி 8 முதல் 21 வரை (அக்டோபர் 23 முதல் நவம்பர் 5 வரை) | மாசி 1 முதல 7 வரை (பிப்ரவரி 15 முதல் 21 வரை) |
| 2 | ஆனி 31 முதல் ஆடி 5 வரை (ஜூலை 14 முதல் 20 வரை) | ஆடி 25 முதல் 31 வரை (ஆகஸ்டு 9 முதல் 15 வரை) | ஐப்பசி 14 முதல் 21 வரை (அக்டோபர் 29 முதல் நவம்பர் 5 வரை) | ஏ.டி.டி. 8<br>ஏ.எஸ்.டி. 11 | 150 நாட்கள்<br>.. | புரட்டாசி 9 முதல் 15 வரை (செப்டம்பர் 24 முதல் 30 வரை) | ஐப்பசி 22 முதல் 28 வரை (நவம்பர் 6 முதல் 12 வரை) | மாசி 8 முதல் 15 வரை (பிப்ரவரி 22 முதல் 28 வரை) |
| 3 | ஆடி 6 முதல் 9 வரை (ஜூலை 21 முதல் 24 வரை) | ஆவணி 1 முதல் 7 வரை (ஆகஸ்டு 16 முதல் 22 வரை) | ஐப்பசி 22 முதல் 28 வரை (நவம்பர் 6 முதல் 12 வரை) | ஏ.எஸ்.டி. 5 | 140 நாட்கள் | புரட்டாசி 21 முதல் 24 வரை (அக்டோபர் 6 முதல் 9 வரை) | ஐப்பசி 23 முதல் 26 வரை (நவம்பர் 7 முதல் 10 வரை) | மாசி 15 முதல் 17 வரை (பிப்ரவரி 26 முதல் 28 வரை) |
| 4 | ஆடி 9 முதல் 13 வரை (ஜூலை 24 முதல் 28 வரை) | ஆவணி 7 முதல் 13 வரை (ஆகஸ்டு 22 முதல் 28 வரை) | ஐப்பசி 25 முதல் கார்த்திகை 1 வரை (நவம்பர் 9 முதல் 15 வரை) | கோ. 32 | 135 நாட்கள் | புரட்டாசி 24 முதல் 30 வரை (அக்டோபர் 9 முதல் 15 வரை) | ஐப்பசி 26 முதல் கார்த்திகை 2 வரை (நவம்பர் 10 முதல் 16 வரை) | மாசி 9 முதல் 12 வரை (பிப்ரவரி 21 முதல் 24 வரை) |
| 5 | ஆடி 17 முதல் 23 வரை (ஆகஸ்டு 1 முதல் 7 வரை) | ஆவணி 10 முதல் 15 வரை (ஆகஸ்டு 25 முதல் 30 வரை) | கார்த்திகை 1 முதல் 6 வரை (நவம்பர் 15 முதல் 20 வரை) | கோ. 29 | 110 நாட்கள் | ஐப்பசி 17 முதல் கார்த்திகை 1 வரை (நவம்பர் 1 முதல் 15 வரை) | கார்த்திகை 11 முதல் 21 வரை (நவம்பர் 25 முதல் டிசம்பர் 5 வரை) | மாசி 8 முதல் 16 வரை (பிப்ரவரி 20 முதல் 28 வரை) |

*FOR ECONOMY*
*EFFICIENCY AND DURABILITY USE*

## WAVIN HARD P.V.C. PIPES

*FOR CONVEYING POTABLE WATER*
*NOW SERVING THOUSANDS OF PEOPLE*
*IN SEVERAL VILLAGES IN MADRAS STATE*

# WAVIN INDIA LTD.

AMBATTUR MADRAS-58

*Stock can be had from :*

**BOB & JAASKO**
20, ANDERSON STREET,
MADRAS.

**SOUTHERN ELECTRIC CORPORATION,**
AVANASHI ROAD,
COIMBATORE.



*With the best compliments of*

# REICHHOLD CHEMICALS INDIA LIMITED

Post Bag No. 3
• KANNABIRAN KOIL STREET, MADHAVARAM, MADRAS-60

*Tele:* 65551, 65552 & 65553 *Grams:* 'Beckacite'

*Manufacturers of the following synthetic resins :*

**Abrasives:** VARCUM Phenolic Resins

**Foundry:** FOUNDREZ Phenolic Resins for Shell moulds and cores

**Reinforced Plastics and Laminates:** POLYLITE Polyester Resins

**Paints and Printing Inks:** BECKOSOL alkyd Resins, STYRESOL styrenated alkyd Resins, BECKACITE hard resins, BECKAMINE urea-formaldehyde Resins and SUPER-BECKAMINE melamine-formaldehyde Resins

**Plywood, Particle Board and Furniture:** PLYAMINE and FORAMINE urea-formaldehyde Resins PLYOPHEN Phenolic Adhesives for Plywoods



# இண்டியனுயில் நம்முடையது !



நான் வேலை செய்யும் தொழிற்சாலையில் "தொழிலக உரைசல்" எதுவும் கிடையாது. யந்திரங்களில் அசையும் உறுப்புகளுக்கிடையே உரைசலின்றி தடுக்க இண்டியனுயில் மகோன்னத ஏக மோபில் எண்ணெகள், கிரீஸ்கள் மற்றும் ரசாயனக் கலவைகளை வினியோகிக்கின்றது. தவிர அதன் தொழில் நுட்பச் சேவை சிப்பந்திகள் லூப்ரிகேஷன் பிரச்னைகளில் தங்கள் நிபுண ஆலோசனைகளை வழங்குகின்றனர்.

இண்டியனுயில் மக்களுக்கான கிராமங்களில் விளைச்சலைப் பெருக்க எனக்கு உதவுகின்றது. எனது புத்தம் புதிய டிராக்டருக்கு டீசல் எண்ணெயும், எனது பாசன வேலைக்கான பம்புக்கு லேசான டீசல் எண்ணெயும், உரங்களுக்கு நாப்தா மற்றும் எனது பண்ணைக் கருவிகளுக்கு பசை எண்ணெகளும் அதுதான் சப்ளை செய்கின்றது.

இண்டியனுயில் இவ்வளவும் செய்ய முடிகிறதென்றால் அது நமக்குச் சொந்தமாக இருப்பதே காரணம்.

INDIANOIL

இண்டியன் ஆயில் கார்ப்பொரேஷன் லிமிடெட்

IOC 7117 CTAM

அறுபதாண்டு அகவை எய்தும் பேரறிஞர் அண்ணாவின்
பிறந்த நாள் வாழ்த்துக் கவிதை

# பெருமங்கல வாழ்த்து

உலக முதன்மொழி உயர்தனிச் செம்மொழி
இலக்கணச் செப்பமும் இலக்கிய வளமும்
இயல்பாய்க்கொண்டே இலங்கிடும் தொன்மொழி
கற்போர் தம்மைக்காமுறச்செயும் மொழி
என்றே போற்றிடும் இனிய தமிழ் மொழி
தன்னிடம் சுருங்கித் தாழ்நிலை யுற்றுமே
அல்லற் பட்டே ஆற்று தழுதிட
''அடிமை களைந்து உரிமை யளிப்பேன்.
அஞ்சுதல் தவிர்க: அரற்றுதல் விடுக"
என்னுமாப்போல் இன்தமிழ் நாட்டின்
ஆட்சியை ஏற்றுள அறிஞர் பெருமான்
அண்ணா பெருமை அறையப்போமோ ?
சித்திரப் பாவையின் செயலற்றிருக்க
கேட்போருள்ளம் கிளர்ந்தெழுமாறு
சொலும்திறன் கொண்டே தோமில் நெறியில்
மக்களைக் கவர்ந்த மாபேரியக்கம்
அமைத்து முதல்வராய் அரியணை யேறிய
தலைவர் இவர்போல். தரணியில் உண்டோ ?
பகையையும் நட்பாய்ப் பாங்குடன் கருதி
குற்றம் மறந்து சுற்றமாய் ஆக்கிடும்
அன்பில் பெரியார் : அணைத்துச் செல்வதில்
அன்னையே இவர் : ஆதலின் இவரை
வயதில் முதியரும் வாயும் மனமும்
இன்புறும் வகையில் எம்அண்ணா என
எவர்உளங் களினும் இனிதே குடிகொளும்
அன்புத் தலைவராய் ஆட்சி செய்பவர் :
மாறுபட்டோரும் மகிழ்ந்திடுமாறு
கொள்கையைவிட்டே குலவுவோர் போன்றே
விட்டுக் கொடுத்தே வேண்டுவன முடிக்கும்
அரசியல் சதுரை அணியாய்ப் பெற்றவர்
மார்க்சின் நெறியை வையகம் ஏற்க,
திட்டம் தீட்டிச் செயல்முறைப்படுத்திய
உருசியப் பெரியர் உயர்புகழ் இலெனின்போல்
வள்ளுவர் நெறியை வையகம் ஏற்க
உள்ளி உள்ளி உழைத்திடும் திறலர்:
முதலமைச்சராக முதல் நிலையுற்றதும்,
காட்சிக் கெளியராய்க் கடுஞ்சொலற்றராய்,
பழமை போற்றும் பண்பு மிக்குடையராய்,
அற்றூர் அழிபசி தீர்க்கும் நெறியில்
எந்த நாட்டிலும் எவரும் கொளாரா
ஒரு படி அரிசி ஒருஉருபா யெனும்
திட்டம் புகுத்தினர்: தீர்ந்தது பசியும்,
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் எனும்
உயர்புகழ் பெற்றனர்: உணவினும் சிறிய
உயிரினும் விழுமிய ஒண்மொழி காக்க
இந்தியாம் அரவு இன்தமிழ் அணங்கைப்
பற்றிச் சுற்றிடா வண்ணம் பயில்தரு
கல்விப் பூங்கா காத்திடும் வேலியாம்
இருமொழித் திட்டம் இயற்றினர் இனிதே:



அகத்து நாட்டில் அவரவர் மொழியும்
புறத்து நாட்டின் புதுமை தெரிய
ஆங்கிலம் எனும் ஓர் அறிவு மொழியும்
எவர்க்கும் சாறும்: இம்மொழிக் கொள்கையே
இந்தியக் கண்டம் இணைந்து திகழும்
வாய்ப்பினை நல்கும்; வல்லாண்மையால்
விரும்பா மொழியை அரும்பாம் சிறுர்தலை
சுமத்தின் பெறுவது சொல்லொணாத் துயரே
ஒற்றுமைநாடி வேற்றுமை விதைக்கும்
இன்னாச் செயலுக் கிறுதி கண்டார்.
எங்கும் தமிழே; எதிலும் தமிழே;
எல்லாம் தமிழிலே எனும் நிலை ஆக்கினார்.
உலக அரங்கில் உயர் இடம் பெற்றிட
உலகத் தமிழ் மாநாடு துணையாகச்
சிறப்புற நடாத்திச் சேர்த்தனர் புகழை.
போட்டியும் பூசலும் புன்முறைச் செயல்களும்,
நாட்டினை அலைக்கும் நலமல் செய்திகள்
எங்கும் கேட்பினும் இன்தமிழ் நாட்டில்
அறிஞர் அண்ணா ஆளுந் திறனால்
அமைதியும் ஒழுங்கும் அரியணை வீற்றுள
என்பதை யறிந்த இருநில மாந்தர்
தத்தம் நாட்டில் தலைவர் அண்ணா
காட்சி தந்து, களிப்பினை நல்க
அழைக்க எண்ணவே அமெரிக்காதான்
முந்திக் கொண்டது; எதிலும் முன் நிற்கும்
செல்வச் சிறப்புடை சிரார் திறனால்.
உலகப்புகழுடை உயர்பேரரசியல்
தலைவர் தம்மைத் தம்மிடம் அழைத்து
சிறப்புச் செய்யும் சீர்மிகு ஏல் எனும்
பல்கலைக் கழகம் பாங்குடன் அழைத்திட
அறிஞர் அண்ணா அன்புடன் ஏற்றனர்.
ஆயிரக் கணக்கில் அமெரிக்கா சென்றுள்ளனர்
தமிழராய்ச் சென்று தமிழ்ப் புகழ் பரப்பியோர்
விரல்விட்டெண்ணும் மிகச் சிலரேயே.
தம்புகழ் அறிந்தோர் தமிழ்ப்புகழ் அறிந்திட
ஒல்காப் புகழுடைத் தொல்காப்பியத்தையும்
உலகப் பொதுமறை உயர்திருக்குறளையும்
நெஞ்சையள்ளும் நீள் புகழ்ச் சிலம்பையும்,
தம்முடன் கொண்டே தமிழ்உரு வெடுத்துச்
செல்வது மானவும் தீந்தமிழ் நாட்டினர்
பண்பெலாம் திரண்டு பருவுடல் கொண்டு
அகல்வது போலவும் அன்பர் பல்லாயிரவர்
மீனம்பாக்க விண்வழித் துறையில்
உவகை பொங்க ஒருங்கு திரண்டு
வாழ்த்துக்கூறி வணங்கி கை கூப்பிட
இன்துணையாக இனிய சொக்கலிங்கனார்
புன்னகை பூத்த பொலிவு முகமும்
அன்பும் பண்பும் அடக்கமும் ஆற்றலும்
தமக்குறு அணிகளாய்த்தாங்கும் தோற்றமும்
கொண்டு அண்ணாவின் குறிவழி ஒழுகிடும்
தனிச்செயலராகத் தழுவும் நிழல்போல்
உடன் வழிகொள்ள உலகப்பயணம்
ஏப்பிரல் திங்களில் ஏற்றுமே பிரிந்தனர்.
ஞாயிறு பிரியும் நல்மரை மலரென
வாடிய முகமுடன் மகிழ்ந்தே நின்றோம்.
சென்னையின் ஆளுநர் சீர்மிகு ஏல் துரை
உதவிய கொடையால் உயிர்ப்புற் றோங்கிய
பல்கலைக் கழகம் பயின்ற எண்டன் சப்பு
(Hendon Chubb)
அமைத்த அறக்கட்டளையால் அரசியல்
உயர் பேரறிஞரை உவந்து அழைத்து
மாணவர் தம்முடன் மகிழ்ந்து குலவி
உண்டு உறைந்து ஒருசில நாட்கள்
தோழமை கொள்ளும் தூய நல் திட்டம்

அளிப்போர்:
டாக்டர் சி. இலக்குவனார்

[நாடறிந்த தமிழறிஞரும், இப்போது ஐதராபாத் உசுமானியா பல்கலைக் கழகத்தின் தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவராகப் பணியாற்றுபவருமான தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் சி. இலக்குவனார் அவர்கள், பண்டைத் தமிழ் மரபை ஒட்டி, தமிழக முதல்வருக்கு வழங்கியுள்ள வாழ்த்துப் பாமாலையை பெருமங்கல வாழ்த்து என்ற தீந்தமிழ்ப் பெயரில்—வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்-ஆசிரியர்.]

அமெரிக்கரல்லா அரசியல் தலைவர்
இதுவரை எவரும் எய்தினர் அல்லர்.
அண்ணு பெற்றனர் அத்தகு சிறப்பை.
அறிவுடை ஒருவரை அயலரும் போற்றுவர்.
ஞாயிறு தன்னை நற்குடை மறைக்குமோ?
ஐந்து நாட்கள் அன்புறுதோழராய்
திமோத்தி துவைத்துக் கல்லூரி கொண்டே
பெரும் பேறுற்ற தாய் பெரிதும் மகிழ்ந்தது.
மாணவர் குழாமும் மற்றுள்ள அறிஞரும்
பேராசிரியர்களும் அவர்தம் பெண்டிரும்
விருந்துகள் அளித்தே விருந்தினைப் பெற்றனர்.
வினுதலும் விடுத்தலும் விரைவாய் இயல
அண்ணுவின் திறன் அறிந்து மகிழ்ந்தனர்.
"இந்தியக்கண்டம் இனிய அமைதியை
நாடியுழைக்கும் நற்பணிக்குரியது
ஆங்கிலம் ஒன்றே அறிவையும் இணைப்பையும்
இனிதே நல்கும்: இந்தி நல்காது.
நேருவின் பின்னர் நீள்பெருந் தலைவருள்
ஒருவரே யாகி உயரிய ஆட்சியும்
பொறுப்பார் தலைமையும் புகழுறு தமிழகம்
பெற்றிடச் செய்த பெருமகன் என்றே
"நகர முழக்கம்" நவின்று புகழ்ந்தது.
உழவுத்துறையிலும் உணவுத்துறையிலும்
அறிவன அறிந்து அங்குள மக்களின்
அன்பில் ஆழ்ந்தும் அறிவால் ஆழ்த்தியும்
தமிழகச் சிறப்பைத் தாம் கொண்டு சென்ற
பொருளால், நூல்களால், புகல்திரைச் சுரு
ளால்
உரையால், செயலால் உணர்த்தி, மீண்டனர்
அமெரிக்காவின் ஆட்சித் தலைவரே
அறிஞரைக் கண்டு அன்பிற் கலந்திலர்
உழைப்பால் உயர்ந்தே ஓங்கிடு சப்பான்
அன்புடன் அழைத்திட அங்கும் சென்றே
உழவினும் தொழிலினும் உயர் அறிவியலினும்
தம்மொழிப்பற்றினும் தாளாண்மையினும்
சிறப்புறுமாற்றைச் சிந்தையில் தேக்கி
இன் தமிழ் நாட்டை எல்லாத் துறையினும்
உயர்த்தும் திட்டம் உளத்திற் பெற்றே
சென்ற இடமெல்லாம் சிறப்பினை எய்தி
நாட்டுக்குறுபயன் நன்கு தெரிந்தே
தாயைக்கூடும் தலைமகன் போல
தமிழ் நா டடைந்தார்; தண்மதி கண்ட
கடலெனத் திரண்டு களித்தனர் மக்கள்'
மக்கள் நலனே மாண்புறு கடனுய்
தக்கன ஆற்றித் தகவில அகற்றி
என்றும் இனியராய் ஏழைகள் தோழராய்
ஆட்சித் தேரை அணியுறச் செலுத்தி
உலகப்புகழ் பேறும் உயர்நலம் பேற்றுடன்
அறுபதாம் ஆண்டை அடையும் அண்ணு
இளைஞர்க்கு இளைஞராய் என்றும் வாழ்க.
வாழ்க்கைத் துணைவியாம் மகளிர் தலைவியாம்
இராணி அம்மையார் இனிய புரப்புடன்
நீன்று வாழ்க! நீள் தமிழ் பகையை
வென்று வாழ்கவே! வெல்க தமிழே!

---

## ஓராண்டுச் சாதனை:

[7-ம் பக்கத் தொடர்ச்சி.]

"எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார் திண்ணியராகப் பெறின்" அல்லவா? ஊராட்சி மன்றத்தார்—ஒன்றியக் குழுவினர்—ஒன்றியத் தலைவர்கள்—நகராட்சி மன்றத்தார்—இவ்வமைப்புக்களில் பணியாற்றும் இலட்சக் கணக்கான ஊழியர்கள்—உள்ளாட்சித் துறையினர்—கிராம வளர்ச்சித் துறையினர் ஆகியோர் இப்பணியில் காட்டிய ஆர்வமும், ஒத்துழைப்பும் இத்திட்டத்தின் வெற்றிக்கு மூல முதற்காரணம் என்பது உண்மை!

### திட்டத்தின் அடிப்படை நோக்கம்

தாமாகவே கிணறெடுத்துப் பயிரிட இயலாத சிறு நிலச் சொந்தக்காரர்கள் சிலரை ஒன்றாகக்கொண்டு, ஊராட்சி ஒன்றியமே ஒரு கிணறமைத்து மின் இணைப்புத் தந்து உதவும் திட்டமான சமுதாய நலக் கிணற்றுத் திட்டம், நன்முறையில் செயலாக்கப்பட்டு ஏறத்தாழ 500 கிணறுகள் அமைக்கப்பட்டுள்ளன. எனினும், குறியீட்டளவை எட்டும் வகையில் இவ்வாண்டு மேலும் ஊக்கமும், உற்சாகமும் காட்டப்படும்.

டிராக்டர்களைப் பயன்படுத்துவதில் உழவர்கள் காட்டும் ஆர்வம் பாராட்டத்தக்கது! இவ்வாண்டில், இதுவரை ஏறக்குறைய 400 டிராக்டர்கள் வாங்கப்பட்டுள்ளன! தேவையான அளவு டிராக்டர்கள் கிடைக்காமையே குறியீட்டளவை எட்டப் பெருந்தடையாக இருக்கிறது.

444 டில்லர்கள் வாங்கி வழங்கப்படுவதன் மூலம் நல்ல பலன் விளைந்துள்ளது!

பூச்சி மருந்துத் தெளிப்பான்கள் (sprayers and dusters) 2059 வாங்கத் திட்டமிட்டிருந்தாலும், அதன் பயன் கருதி இதுவரை 4612 வாங்கிப் பயன்படுத்தப்பட்டு வருவது பாராட்டுக்குரியதாகும்!

காய்கறித் தோட்டம் 5059 அமைப்பதென்ற திட்டத்தையும் மிஞ்சி 6872 அமைக்கப்பட்டுள்ளன.

இதன்றித் திருமண மண்டபங்கள் பல அமைக்கப்பட்டும், முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டும் வருகின்றன.

இவற்றையெல்லாம் காணும்போது ஓராண்டுச் சிறப்புத் திட்டம் மனநிறைவு கொள்ளத்தக்க வகையில் செயலாக்கப்பட்டுள்ளது என்றே கூறலாம்.

தன் முயற்சி, தன்னம்பிக்கை ஆகிய இரு பண்புகளுக்கும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சரின் உள்ளத்தில் தனி இடம் இருப்பதாலும், அவை மக்கள் அனைவரிடையேயும் வேரூன்றி வளரவேண்டும் என்ற குறிக்கோளுடன், இந்த ஓராண்டுத் திட்டம் வகுக்கப்பட்டது என்பது இங்கு நினைவு கொள்ளத்தக்கது.

— 0 —






இராமகிருஷ்ணபுரத்து வீதிகளில் சற்றே உலவி வந்தால் போதும்; உங்களுக்குப் பசியெடுக்கும் அழகிய பசுமையான காய்கறிகளையும், தோட்டங்களையும் கண்ணுறும்போது உங்களுக்கு விருந்துண்பது போல ஓர் எண்ணம் தோன்றி, பசி ஏற்படும். அவ்வளவு காய்கறிகள்! அத்தனை செழுமை அங்கே!

### எங்கிலும் பசுமை, வளமை!

வாழைப் பழங்கள், பாப்பாளிப் பழங்கள், தக்காளி, உருளைக்கிழங்கு, பீன்ஸ், கத்திரிக்காய், பூசணிக்காய், முட்டைகோஸ், காலிபிளவர் போன்ற வகை வகையான பழங்கள், காய்கறிகளனைத்தும் பயிரிடப்படுகின்றன.

இராமகிருஷ்ணபுரம் என்பது, புது டில்லியிலுள்ள அரசு ஊழியர்கள் வசிக்கும் குடியிருப்பாகும். அக்குடியிருப்பின் அடித்தளத்தில் வாழும் ஒவ்வொரு குடும்பமும் ஒரு காய்கறித் தோட்டத்தை அமைத்து, கண்ணும் கருத்துமாய்ப் பேணிப் பாதுகாத்து, பசுமையான, சத்துள்ள காய்கறிகளை விளைவித்துக் கொள்கின்றன.

இவைமட்டுமல்ல! அங்கே கோழிப் பண்ணையும் இருக்கிறது. எங்கிருந்தோ ஓர் ஆடு கத்துவதும் காதில் விழும்.

### விலைவாசி குறைந்தது

"இக் குடியிருப்பிலுள்ள காய்கறி அங்காடியில் காய்கறிகளின் விலை குறைந்து விட்டது. காரணம், இந்த வீட்டுக் காய்கறித் தோட்டங்கள் தாம்! இக்குடியிருப்பிற்கு அருகில் எவ்வித பெரிய காய்கறி அங்காடியே இல்லை. எனவே இவ்வாறு இந்த அரசு ஊழியர்கள் காய்கறிகளை விளைவித்துக் கொள்ளவில்லை யெனில், அவற்றின் விலை பன்மடங்கு பெருகியிருக்கும் என்பதில் துளியும் ஐயமில்லை" என்கிறார் அங்குள்ள ஓர் அரசு ஊழியர்.

**சிறு நகர்களிலும், மாநகர்களிலும் வாழ் மக்கள், காய்கறித் தோட்டங்களை அமைப்பதில் பெரிதும் ஆர்வம் காட்டுகின்றனர். இதற்குச் சான்றாக, டில்லியிலுள்ள இராமகிருஷ்ண புரத்தைக் கூறலாம்.**

### நிலத்தை பண்படுத்துதல்

இளைஞர்கள் மட்டுமே இப்பணியில் ஈடுபட்டுள்ளனர் என்று கூறுதற்கில்லை. ஓய்வு பெற்று, தங்களது பிள்ளைகளுடன் வசிக்கும் முதியோர்கள் கூட, மிகுந்த ஆர்வத்துடன் தோட்ட வேலையில் கவனத்தைச் செலுத்துகின்றனர்.

தோட்டத்தை அமைப்பதற்கு மூன்று அடி ஆழம் முதலில் தோண்டுகிறார்கள். கட்டிட கற்கள் போன்றவற்றை அகற்றி நிலத்தைப் பண்படுத்துகிறார்கள். தோட்டத்திற்குத் தேவையான விதைகளை 'இந்திய வேளாண்மை ஆராய்ச்சி நிறுவனத்தின்' தோட்டக்கலைப் பிரிவு அளிக்கிறது. தோட்டம் அமைப்பதற்குரிய ஆலோசனைகளை 'காய்கறித் தோட்டக்குழு' அளிக்கிறது.

### காய்கறி தோட்டபுரம்

எட்டு அடி நீளம், ஐந்து அடி அகலமுள்ள ஒரு பாத்திக்கு, கால் கிலோ ரசாயன உரமிடப்படுகிறது. காலிபிளவர் பயிருக்கு மட்டும் அரை கிலோ உரம் தேவை.

வீட்டுக் காய்கறித் தோட்டத்திற்குரிய போட்டியில் பங்கு பெறுவதற்காக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்களில், பெரும்பான்மையானவை, இராமகிருஷ்ணபுரத்திலிருந்து தாம் வருகின்றன என்று கூறப்படுகிறது.

எனவே இராமகிருஷ்ணபுரத்தை 'வீட்டு காய்கறி தோட்டபுரம்' என்று ஏன் அழைக்கலாகாது? நீங்களே சொல்லுங்கள்!

'அளவோடு பெற்று வளமோடு வாழுங்கள்' 'திட்டமிட்ட குடும்பம் தெவிட்டாத இன்பம்' என்ற நல் வாழ்வுக்கான விளம்பரங்களெல்லாம் நற்பயனளித்து வருகின்றன. குடும்பக் கட்டுப்பாடு முறைகளையெல்லாம் மக்கள் கடைப்பிடித்து, தங்களது குடும்பங்களை பேணிப் பாதுகாக்க தொடங்கிவிட்டனர். குடும்பக் கட்டுப்பாடு திட்டத்திற்கு மக்களிடையே மகத்தான ஆதரவு நாளுக்குநாள் வண்ணமாய் பெருகி வருகிறது.

இதற்குச் சான்றாக, மகாராஷ்டிரா மாநிலத்திலுள்ள 'பெத்' என்ற ஒரு கிராமத்தைக் கூறலாம்.

'பெத்' கிராமத்தின் மக்கள் தொகை 927 மட்டுமே. சென்ற ஆண்டு இந்த 13 குழந்தைகளே பிறந்திருக்கின்றன. இந்த 13 குழந்தைகளிலும் 11 குழந்தைகள், இக் கிராமவாசிகளின் மகள்களுக்கு (வெளியூரிலிருந்து பிரசவத்திற்கு வந்தவர்கள்) பிறந்தவர்கள். எனவே ஓராண்டிலே இக்கிராமத்தில் வசிப்போருக்கு பிறந்த குழந்தைகள் இரண்டேதாம்.

இது இயற்கையாகவே ஏற்பட்டதா? இல்லையென்றால் இதற்குக் காரணம் என்ன? அறிய வேண்டாமா?

கருத்தடை வளையம் (லூப்) அணிந்து கொண்டுள்ளனர். கணக்கிட்டுப் பார்க்கையில், குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை மேற்கொள்ள வேண்டிய பருவத்தில் அல்லது அவசியத்தில் எவரும் அதை ஏற்றுக்கொள்ளாமல் இல்லை என்று அறுதியிட்டுக் கூறலாம்.

'பெத்' கிராமத்திற்கு ஒரு தோழமை கிராமமும் இருக்கிறது. 'மூர்த்தி' என்ற கிராமத்தில் 339 பேர்கள் வசிக்கின்றனர். இவர்களில் 80 பேர்கள் குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தை மேற்கொள்ள வேண்டியவர்கள். 15 பேர்களுக்கு குழந்தைகளே இல்லை; 41 பேர்களுக்கு ஒன்று முதல் மூன்று குழந்தைகள்; எஞ்சிய 21 பேர்களுக்கு, 4 அல்லது அதற்கு




'பெத்' கிராமத்தின் ஊராட்சித் தலைவர், உறுப்பினர்கள் ஆகியோர் தாம் இதற்கு வழிகாட்டிகள். குடும்பக் கட்டுப்பாடுத் திட்டத்தை வரவேற்று, மருத்துவ மனைக்குச் சென்று, முதன் முதலில் அறுவைச் சிகிச்சை செய்துகொண்டு பிறருக்கு முன்மாதிரியாக விளங்கினர். பின், தெருவெல்லாம் குடும்பக் கட்டுப்பாடு பற்றி முழக்கமிட்டனர். வெற்றி அவர்கள் பக்கந்தாம்! சொல்லவும் வேண்டுமோ?

எல்லோரும் விரும்பிய முறை

ஏற்கனவே 8 பெண்கள் உட்பட, 70 பேர்கள் அறுவை சிகிச்சை செய்து கொண்டு விட்டனர். 30 பெண்கள் மேற்பட்ட குழந்தைகள் உண்டு. எனவே அறுவை சிகிச்சைகள் 67 பேர்களுக்குச் செய்யப்பட்டன. அதன் மூலம், 'மூர்த்தி' கிராமத்தில் குடும்பக் கட்டுப்பாடுத் திட்டம் முழுமையடைந்தது.

உங்கள் ஊர் எப்படி ?

அடுத்து, 'பங்காரி' என்ற ஊரில் உள்ள 500 பேர்கள், குடும்பக் கட்டுப்பாடு திட்டத்தில் ஏதேனும் ஒரு முறையையாவது பின்பற்றி வாழ்கின்றனர்.

நாட்டிற்கு எடுத்துக்காட்டாக இக் கிராமங்கள் செயல்பட்டன என்பது பெருமிதப்படக்கூடிய செய்தியன்றோ! உங்கள் ஊர் எப்படி?



# ஒரு பார்வை இதோ வெற்றிப் பட்டியல்

1967-68-ம் ஆண்டில் நம் நாட்டில் உணவு தானியங்களின் உற்பத்தி மொத்தம் 9 கோடி 50 இலட்சம் டன்னாகும். இது கடந்த ஆண்டைவிட 2 கோடி டன் அதிகமாகும்.

இதற்கு முன்பு நம் நாட்டில் அதிக அளவு உணவு தானிய உற்பத்தி 1964-65 ஆண்டில் ஏற்பட்டது. அப்பொழுது விளைச்சல் 8 கோடியே 90 இலட்சம் டன்னாகும்.

• • •

நம் நாட்டில் 1967-68-ம் ஆண்டில் மிகு விளைச்சல் தரக்கூடிய உணவுப் பயிர்கள், 60 இலட்சம் ஹெக்டேர்களில் பயிரிடப்பட்டிருந்தது. இப்பொழுது 1968-69-ம் ஆண்டில் 85 இலட்சம் ஹெக்டேர்களில் பயிரிடப்பட்டு வருகிறது.

• • •

கடந்த ஆண்டு, தமிழ் நாட்டிலுள்ள தஞ்சை மாவட்டத்திலும் ஆந்திர மாநிலத்திலுள்ள மேற்கு கோதாவரி மாவட்டத்திலும் குறுவை நெல் விளைச்சலில் புதிய சாதனை ஏற்படுத்தப்பட்டுள்ளது. தஞ்சையில் ஒரு ஹெக்டேருக்கு 19.3 குவிண்டால் நெல்லும், மேற்கு கோதாவரியில் ஒரு ஹெக்டேருக்கு 17.8 குவிண்டால் நெல்லும் விளைந்துள்ளன.

• • •

மிகு விளைச்சல் சாகுபடித் திட்டத்தினால், பரவலாக நம் நாட்டில் குறுகிய காலப் பயிர் சாகுபடி நல்ல முறையில் உயர்ந்துள்ளது. சராசரியாக கேரள மாநிலம் பாலக்காடு பகுதியில் 3 சத விதம் உயர்ந்துள்ளது. அஸாம் மாநிலம், கச்சார் பகுதியில் 82 சத விதம் உயர்ந்துள்ளது.

• • •

இவ்வாண்டு சிறிய பாசனத் திட்டங்களுக்காக நாடு முழுமைக்கும் ரூ. 156 கோடி செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. இதனால் 2 இலட்சம் கிணறுகளும் 42 ஆயிரம குழாய்க் கிணறுகளும் ஆயிரம் வடிமுனைக் குழாய்களும் 2 இலட்சத்திற்கும் மேற்பட்ட குழாய்களும் அமைக்கப்படும். இதன் விளைவாக, பாசன வசதி பெறவிருக்கும் நிலத்தின் பரப்பளவு 13 இலட்சத்து 70 ஆயிரம் ஹெக்டேர்கள்.

• • •

1965-66-ம் ஆண்டில் பயிர்ப் பாதுகாப்பு 1 கோடியே 66 இலட்சம் ஹெக்டேர்களுக்கு அளிக்கப்பட்டது. 1966-67-ம் ஆண்டில் பயிர்ப் பாதுகாப்பு 2 கோடியே 43 இலட்சம் ஹெக்டேர்களுக்குத் தரப்பட்டது. கடந்த ஆண்டு (1967-68) பயிர்ப் பாதுகாப்பு 3 கோடியே 64 இலட்சம் ஹெக்டேர்களுக்கு உயர்ந்திருந்தது. இவ்வாண்டு பயிர்ப் பாதுகாப்பு 5 கோடியே 50 இலட்சம் ஹெக்டேருக்குத் தரப்படும்

# இதோ ஒரு முறை:

வேளாண்மையில் அதிக கவனம் செலுத்தி, உற்பத்தியைப் பெருக்கி, மிகுந்த அளவில் ஆதாயத்தைக் காண விரும்பும் உழவர் பெருமக்கள் மிக்க உள்ளனர். அவர்களில் பெரும்பாலோர் மாநில அரசு, மைய அரசு வெளியிடும் பண்ணைச் செய்திகளடங்கிய வார, திங்கள் வெளியீடுகளைப் பெற்று, படித்து, ஆராய்ந்து பயனடைகின்றனர். நாளிதழ்களும் அவ்வப்போது சிறிது இடத்தை ஒதுக்கி, பண்ணைச் செய்திகளையும் குறிப்புகளையும் வெளியிடுகின்றன.




இதுபோன்ற வெளியீடுகள், நாளிதழ்களில் வெளிவருவன அனைத்தும் உடனே பயன்படும் என்று கூறுவதற்கில்லை; ஆனால் அவை வருங்காலத்திலே உரிய நேரத்தில் தேவைப்படும். எனவே அவற்றை படித்து விட்டு, புறக்கணிக்காமல், போற்றிப் பாதுகாத்து, நற்பயனை அடைய சில குறிப்புகளைக் கீழே காணலாம்.

## இருவித காகித உறைகள்

பெரிய காகித உறைகள் (கவர்கள்) சிலவற்றை நீங்களே செய்துகொள்ளுங்கள். இல்லாவிடில், விலைக்கு வாங்குங்கள். ஒவ்வொன்றின் மீதும் கோதுமை, நெல், தொழு உரம் மற்றும் உரமிடுதல், ரசாயன உரம் மற்றும் ரசாயன உரமிடுதல், கால் நடைகள், கோழிப் பண்ணை, தேனீ வளர்ப்பு, பழங்கள், பூச்சி மருந்துகள், நோய்கள் என்று பெரிய எழுத்துக்களில் எழுதிக் கொள்ளுங்கள். இப்போது ஒரு முக்கிய வேலை முடிந்து விட்டது.

அடுத்ததாக, சில சிறிய காகித உறைகளையும் வாங்கிக் கொள்ளுங்கள்; அல்லது நீங்களே செய்து கொள்ளலாம். இந்த உறைகளில் கீழ்க்கண்டவாறு எழுதுங்கள்.

நெல்-ரகங்கள்; நெல்-பசுந்தாள உரம்; நெல்-நோய், நெல்-பூச்சி மருந்து, கோதுமை-ரகங்கள், கோதுமை-உரமிடுதல், கால்நடை-



மாடுகளை பாதுகாத்தல், கால்நடை உணவு; கோழிப் பண்ணை-பண்ணை அமைத்தல், கோழிப் பண்ணை-நோய்கள் போன்று எழுதிக் கொள்ளலாம்.

எந்த ஒரு பொருள்பற்றி நீங்கள் படிக்கும்போதும், அந்த குறிப்பை முறையாக கத்தரித்து, தகுந்த, சிறிய உறையில் போட்டுக் கொள்ளுங்கள். அந்த சிறிய உறையை அதற்குரிய பெரிய உறையில் போடுங்கள்.

## படித்ததை விடாதீர்கள்!

சான்றாக, நெற்பயிரைத் தாக்கும் நோய்களைப்பற்றிய செய்தியை நீங்கள் பார்த்தீர்கள் என்று வைத்துக் கொள்வோம். அந்த செய்தி அடங்கிய குறிப்பை தனியே கத்தரித்து எடுத்து, அதை 'நெல் நோய்' என்று பெயரிட்டுள்ள சிறிய உறையுள் போட்டு, அதை 'நெல்' என்ற பெரிய உறையினுள் போட்டு பத்திரமாக வைத்துக் கொள்ளுங்கள்.

இம்முறையைப் பின்பற்றினால் வேளாண்மைக் குறிப்புகள் அனைத்தும் உங்களிடம் எப்போதும் தயாராக இருக்கும். உரிய நேரத்தில், உடனே எடுத்துப் படித்து, செயல்பட்டு, பெரும் பயன் அடையலாம்.





[கிராமங்களில் இன்று பல்வேறு துறைகளிலும் நல்லதொரு விழிப்புணர்ச்சி ஏற்பட்டுள்ளது. நாட்டை உயர்த்தும் திருப்பணியில், கிராம மக்களும் ஈடுபாடு கொண்டு, தொண்டுள்ளத்துடன் பணியாற்றி வருகிறார்கள். கிராம மகளிரும் இப்பணியில் ஈடுபட்டுள்ளனர். கிராம மகளிரிடையே ஏற்பட்டுள்ள இந்த மறுமலர்ச்சி உணர்வு, பணி புரிய வேண்டுமென்ற ஆர்வம், , முறையாக வகைப்படுத்தப்பட்டு, ஆக்க ரீதியில் மலர்வதற்கு ஓர் அமைப்பு தேவையல்லவா? அந்த அமைப்புதான், கிராம மகளிர் மன்றம்—ஆசிரியர்.]

நமது நாட்டில் நகரங்களைவிட கிராமங்கள் மிகுதியாக உள்ளன. அதனால் கிராம நலனும் முன்னேற்றமும் நாட்டின் வளர்ச்சிக்கு ஏதுவாகும். நாளுக்குநாள் கிராமங்கள் பல வகையில் வளர்ந்து, நகர மக்களும் விரும்பிக் குடியேறும் அளவுக்கு வாய்ப்பும் நல்ல வசதியும் பெருகிவருவதைக் காண்கின்றோம். பெரும்பாலான கிராமங்களில் மின்சாரத்தினால் ஏற்படக்கூடிய பயன்கள் அனைத்தையும் பெறமுடிகின்றன. ஊராட்சிகள் நல்ல சேவை செய்து வருகின்றன. தெருவில் விளக்குகளும், பலரும் கேட்டறியும்படியான பொது இடங்களில் வானொலியும் அமைத்து அன்றாட செய்திகள், விலைவாசிகள், பயிர்செய் முறைகள் போன்ற பல தேவையான செய்திகளைக் கேட்டறிய, மக்களுக்கு வாய்ப்பினை ஏற்படுத்தியுள்ளனர். மேலும் பால் பண்ணைகள், கால்நடைப் பண்ணைகள், கிராமத்தொழில்கள் செய்திகளைக் கேட்கும்போது மக்கள் உள்ளத்தில் ஊக்கம் ஏற்பட்டுச் செயலாற்ற சிந்திக்கின்றனர். பல வகையிலும் வளர்ச்சியடைந்து வருகின்ற இடங்களில் இளைஞர் மன்றம், படிக்கும் இடம் (Reading Room), சிறிய நூல் நிலையம் போன்றனவும் காணப்படுகின்றன. ஆனால் மகளிர் மன்றம் பரவலாக இருப்பதாகத் தெரியவில்லை. ஆழ்ந்து நோக்கின், ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு மகளிர் மன்றம் இன்றியமையாததாகத் தோன்றும்.

## மகளிர் மன்றத் தொடக்கம்

ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு பெரிய வீட்டுக்காரர் இருப்பர். சிலவிடங்களில் அங்குப்படித்த பெண்களும் இருப்பர். அவர்களிடம் மக்களுக்கு அன்பும் மதிப்பும் உண்டு. அந்தப் பெரிய வீட்டில் உள்ள




திருமதி மோகூர் வாசுகி, M. A., M. Litt., தமிழ்த்துறை, தில்லி பல்கலைக்கழக மகளிர் கல்லூரி, தில்லி.

மகளிர்களில் திறமிக்க ஒருவர் மகளிர் மன்றம் தொடங்கி செயலாற்ற முன்வரவேண்டும். இதற்கு ஆடவர்கள் ஒத்துழைப்பும் தேவையாகும். ஊர்மக்களுக்கு அறிவித்துவிட்டு ஒருநல்ல நாளில் ஆரம்ப விழா நடத்துவது நல்லது. அந்த ஊரில் பெரியவர் என்று கருதும் ஒருவரையோ அல்லது வெளியேயிருந்து யாரையாகிலும் அழைத்தோ ஆரம்பித்து வைக்கும்படி செய்வது சிறப்பாகும். ஆரம்ப விழாவானது மகளிர் உள்ளத்தில் தூண்டுதலையும், ஆக்க வேலையில் ஈடுபட ஊக்கத்தையும் ஏற்படுத்திவிடக் கூடும். மகளிர் மனங்கொண்டால் மாபெரும் சாதனைகள் செய்யக்கூடும். இதை நம் அனுபவங்களில் கண்டும் இருக்கிறோம்

## திட்டமிடுதல்

மகளிர் பலரும் கூடித் தங்களுக்குத் தலைவியையும், செயலாளரையும் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும். ஆண்டுக்கு ஒருமுறை அல்லது இருமுறை இத்தகைய தேர்தல் நடைபெறவேண்டும். அப்பொழுதுதான் அனைவருக்கும் வாய்ப்பு ஏற்பட வழியுண்டு. எல்லோரும் கலந்து யோசித்து வசதியான நாளும் காலமும் முடிவு செய்துகொள்ளுதல் நலம். பெரும்பாலும் மாலைநேரம் 6 மணியிலிருந்து 8 மணிவரை வைத்துக்கொள்வது சிறப்பாகும். பலருக்கும் ஓய்வாக வரக்கூடிய நேரமுமாகும். நன்கு யோசித்து மக்கள் சூழ்நிலை, இடத்திற்கு ஏற்ப முடிவுசெய்துகொள்வது பொருத்தமாகும்.

## வாரந்தோறும் கூடுதல்

வாரத்திற்கு ஒருநாள் கூடுவது என்று முடிவுசெய்து கொள்ளவேண்டும். கூடிய பிறகு செய்ய வேண்டிய செயல்கள் என்னவென்று திட்டமிட்டுக் கொள்ளல் நல்லது. சொல்லும், செயலும்

பயனுடையனவாக இருத்தல் வேண்டும். மூன்று பிரிவுகளாக மகளிரை வயதுக்கேற்றவாறு பிரித்தல் நல்லது. மணமாகாத கன்னிப் பெண்கள் (கிராமங்களில் 20 வயதுக்குமேல் திருமணமாகாமல் கன்னியாகவிருப்பது அரிதாகும்), இல்லக் கிழத்திகள், ஐம்பது வயதுக்கு மேற்பட்டவர்கள் என்று பிரித்துக் கொள்ளுதல் சிறப்பாகும். செயலில் அவரவர்கள் தகுதிக்கேற்ற முறையில் ஆர்வமும் சுவையுமிருக்கும். அதனால், இவ்வாறு பிரிவுகளாகப் பிரித்துச் செயலாற்றுவது எளிமையும் இனிமையும் தரும்.

### இளம் பெண்கள்

இவர்கள் எதிர்காலக் குடும்பத் தலைவிகளாகச் செல்லக் கூடியவர்கள். குடும்பத்திற்கு ஏற்ற நல்ல தலைவியாக இருக்கவேண்டிய பண்புகள் சிலவற்றைச் சொல்லித் தருதல் வேண்டும். கல்வியை இவர்களின் தரத்திற்கேற்றவாறு புத்தகங்களைக்கொண்டு இனிமையாகவும், நகைச் சுவையுடனும் பாடங்களைச் சொல்லித்தர வேண்டும். துணிகள் தைப்பதற்கும், எம்பிராய்டரி பூவேலைகள் செய்யவும், அழகிய திரைச்சீலைகள் பின்னவும் பிற வேலைகளும் செய்யத் தூண்டலாம். அவர்கள் விரும்பினால் சிற்றுண்டி வகைகளில் சிலவற்றை செய்து காட்டலாம். எந்தத் துறையில் ஆர்வம் இருக்கிறது என்று தெரிந்துகொண்டு அந்தப் பகுதியில் வளர்வதற்குரிய வாய்ப்பினை அளிக்க வேண்டும். கைவேலைகள் செய்யும் போது வேடிக்கையாக பொழுதுபோக்க பாடல்கள் பாடவோ, கதைகள் சொல்லவோ ஏற்பாடு செய்துகொள்வது நல்லது. கைகள் வேலை செய்துகொண்டிருக்கும்; காதுகள் இனிமையாகக் கேட்டு இதயங்குளிர நேரங் கழித்துவிட்டுப் பயனையும் பெற்றுச் செல்லலாம்.

### இல்லக்கிழத்தியர்

இல்லறம் ஏற்று நடத்துகின்றவர்களுக்குப் பொறுப்பு மிக உண்டு. இல்லறத்தில் உள்ள ஒவ்வொரு உறுப்பினரையும் அன்புடனும், அக்கறையுடனும் நடத்தும் பொறுப்பு இருக்கவேண்டும். சோம்பியிராமல் குடும்ப வேலைகளைச் செம்மையாகக் கவனிப்பதுதான் சிறந்த இல்லறத் தலைவிக்கு அழகாகும். திருவள்ளுவரும் சிறந்த பெண் யார் என்பதற்கு இலக்கணம் கூறுகிறார். அதாவது தன்னையும் காத்துக்கொண்டு, தன்னைக் கொண்ட கணவனையும் அன்பாகப் பேணிப் பாதுகாத்து நல்ல புகழையும் பெற்றுச் சோர்வின்றியிருப்பவளே பெண் என்கிறார். இதை,

> 'தற்காத்துத் தற்கொண்டான் பேணித் தகைசான்ற
> சொற்காத்துச் சோர்விலாள் பெண்'

என்ற குறள் அறிவிக்கிறது. குடும்பத்தில் எத்தனையோ இடங்களில் சோர்வு ஏற்பட வழியுண்டு. அதைப் பெண்ணானவள் திறமையாக வென்று, சோர்வு இன்றி எப்பொழுதும் ஊக்கமும், உற்சாகமும் கொண்டு கடமையைச் செய்யவேண்டும் என்பதுதான் பொருளாகும்.

மன்றத்தில் குடும்பத்திற்கு வேண்டிய முறையில் சில செயல்களைச் சொல்லிக்கொடுத்தால், செயலில் கண்டு பயன் நுகரும்போது ஆடவரும் தங்கள் இல்லத்தரசி மன்றத்தில் அறிந்தவற்றைக் கண்டு மேலும் வளர வாய்ப்பையளிப்பர். குடும்பத்தை நடத்தும் விதம், உணவுப் பொருள்களைப் பாதுகாக்கும் முறைகள், சுவையான பொருள்கள் சிலவற்றைத் தயாரிக்கும் விதம், நாட்பட வைத்திருக்கும் பொருள்கள் ஊறுகாய், வற்றல் போன்றவற்றைத் தயாரிக்கும் முறைகளைச் சொல்லித்தரலாம். வாழ்க்கைக்குப் பயனும் ஏற்படும்.

குடும்பத் தலைவிக்கு வரவுக்கேற்ற செலவு செய்யத் தெரியவேண்டும். முடிந்தால் தேவையிருப்பின் வருமானம் பெற வழியையும் காட்டவேண்டும். விசிறிகட்டுதல், தடுக்குப் பின்னுதல், ஓலையில் கூடை, பெட்டி செய்தல், துணி தைத்தல் போன்ற வேலைகளைத் தெரிந்துகொண்டு குடும்ப வேலையோடு நேரம் இருக்கும்போதெல்லாம் தான் பிறந்த குடிக்கு ஏற்ற ஒழுக்கத்தைப் பெற்றும் தன்னைக் கொண்ட கணவனின் வருவாய்க்குத் தக்க முறையில் செலவு செய்யக்கூடியவளும் ஆன தலைவியே இல்வாழ்க்கைக்குத் துணைவியாவாள். இதனை,

> "மனைத்தக்க மாண்புடையள் ஆகித்தற் கொண்டான்
> வளத்தக்காள் வாழ்க்கைத் துணை."

என்று வள்ளுவர் கூறுகிறார்.

---

## திட்டமிட்ட குடும்பம்-தெவிட்டாத இன்பம்

* இந்தியாவின் மக்கள் தொகை நாளுக்கு நாள் பயங்கரமாகப் பெருகிக் கொண்டே வருகிறது.

** உலக நிலப்பரப்பில், இந்தியாவின் நிலப் பரப்பு 2·4 சதவிகிதம் தான். ஆனால் உலக மக்கள் தொகையில் இந்தியாவின் மக்கள் தொகை 14 சதவிகிதம் !

*** உலக மக்களில் ஏழு பேரில், ஒருவர் இந்தியர் !

---






கிராமத் தொழில்கள் பெருகச் செய்யவேண்டும். எளிய நடையில் சிறு நூல்கள் உள்ளன. அதைப் படிக்கும் படியும், எடுத்துச் சொல்லியும், கோழிப்பண்ணை பால் பண்ணை போன்ற தொழில்களைப் பெருக்கலாம். வீட்டுத் தோட்டங்களில் பயனுடைய காய்கறிகள் பயிரிட்டுப் பயனடையச் செய்யவேண்டும். அரசாங்கம் கிராம மக்களுக்கு பலவகையில் தேவைக்குப் பணஉதவி செய்கிறார்கள். ஆடவர் மட்டுமின்றி பெண்களும் நன்மையடைய வாய்ப்பை ஏற்படுத்திக்கொள்ள முடியும்.

குழந்தைகளைப் பராமரிக்கும் முறையைச் சொல்லித் தருதல் வேண்டும். அவசிய மற்ற செலவுகளைக் குறைக்க வழி காணவேண்டும். தேவையற்ற பொருட்களை வாங்கிக் குவிக்கும் மனப்பான்மையை மாற்றிக்கொள்ள வேண்டும். நம்மையறியாமலே சில செயல்கள் அர்த்தமின்றி செய்வதைப் பார்க்கின்றோம். இவ்வாறு எடுத்துச்சொல்லும்போது குறைவாக நினைக்கக்கூடாது. எல்லாருக்கும் எல்லாமே தெரியும் என்று நினைப்பது தவறு. தெரியாதவர்கள் தெரிந்துகொள்ளட்டும். தெரிந்தவர்கள் நினைவில் கொண்டுவருவது நல்லது.

குடும்பக் கட்டுப்பாட்டைப் பற்றியும் எடுத்துச்சொல்ல வேண்டும். இந்த வார்த்தையைக் கேட்டும் கிராம மக்கள் அஞ்சுகிறார்கள். பலர் இழிவாகப் பேசுகிறார்கள். அதனால் மக்கள் புரிந்துகொள்ளும் முறையில் திறமையாகவும் திட்டமாக வாழ நினைக்கும் ஒரு நல்ல குடும்பத்திற்குக் கட்டுப்பாடு அவசியம் என்றும் கூறி இனிமையாக விளக்கிவிட்டால் போதும். அவர்கள் பலருக்குத் தெரிவித்துக் காட்டுத் தீபோல் செய்தியைப் பரவிவிடும்படி செய்வர்.

ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்பே வாழ்க்கை எப்படி அமைத்துக்கொள்ள வேண்டும். இனிமையாக வாழ்வது எப்படி? குடும்பக் கட்டுப்பாடு என்ன என்பதை நாகரிகமான முறையில் காட்டியுள்ள அழகையும் சிறப்பையும் தமிழன் பெருமிதத்துடன் சொல்லிக்கொண்டு வருகின்ற தொல்காப்பியத்தில் காணலாம். இதற்காகவாகிலும் மக்கள் பழம் பெருமையை அறிய விரும்ப வேண்டும்.

### முதியோர்களுக்கு

இவர்கள் அதிக உழைப்பை மேற்கொள்ள முடியாது. சிறப்பாக கொஞ்சநேரமாகிலும் நல்ல முறையில் பொழுதைக் கழிக்க வேண்டும் என்று நினைக்கவே தோன்றும். அதற்காக மன்றம் செல்லலாம் என்ற நோக்கம் ஏற்படச் செய்யவேண்டும். நல்ல சிறந்தோருடைய வாழ்க்கை வரலாறுகளையும், அடியார்களின் பெருமைகளையும், காரைக்காலம்மையார் ஆண்டாள் போன்றவர்களின் அன்பு நெறியையும்; ஔவையார், பொன்முடியார் போன்ற அறிவுச் சுடர்களையும்; கண்ணகி, மங்கையர்க்கரசி போன்ற கற்பின் செல்விகளையும்பற்றி எளிய முறையில் எடுத்துச்சொல்ல வேண்டும். அதைக்கேட்ட தாய்மார்கள் நம் நாட்டின் பெண்மணிகளின் பெருமையை நினைந்து மகிழ்ந்து நாம் வாழும் நிலையையும் எண்ணுவார்கள். தமிழ்நாட்டில் பெண்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னே இவ்வளவு முன்னேற்றமாக இருந்தார்கள் என்று நினைக்கும்போது நம் நிலை வெட்கப்படவேண்டியதாகவுள்ளது என்பர். நல்ல பாடல்களை இனிய குரலுடன் பாடிக் காட்டினால் நல்லது. சிலருக்கு வேலைசெய்ய முடியுமானால் இல்லக்கிழத்தியர் பகுதியில் கொடுக்கப்பட்ட பயனுடைய வேலைகளில் தங்கள் ஆற்றலுக்கும் விருப்பத்திற்கும் ஏற்றவாறு எடுத்துச் செய்யலாம்.

### நாட்டின் கண்கள்

மேற்கண்ட முறையில் மகளிர் மன்றம் நடத்திப் பார்த்தபிறகு பயன் நன்கு உணரலாம். இதை நடத்த செலவு மிகக் குறைவாகவே ஆகும். ஆரம்பத்தில் ஒருவர் செலவில் தொடங்குவது நல்லது. அதற்குப் பிறகு உறுப்பினர்கள் சிறு தொகையைக் கொடுத்து செலவுக்கு ஏற்பாடு செய்யலாம். நாளடைவில் ஆர்வமுடன் செயல் ஆற்றிவந்தால் பொதுமக்களும், செல்வந்தர்களும் தங்களால் இயன்ற உதவியை பணமூலமாகவும், பிறபொருட்கள் மூலமாகவும் மன்றத்திற்கு அளித்து மேலும் வளர வாய்ப்பை ஏற்படுத்துவர். எந்தச் செயலையும் ஆர்வமுடன் தொடங்கி அக்கறையுடன் செய்துமுடித்தால் நல்ல பயனைத் தனிப்பட்டவரும், நாட்டினரும் பெறுவது உறுதியாகும். பெண்கள் நாட்டின் கண்கள் ஆவர். எனவே அவர்கள் முன்னேறினால் நாடு முன்னேறும் என்பதில் ஐயமுண்டோ?

## இடைவெளி தேவை !

"நம்நாட்டில் மக்கட்தொகைப் பெருக்கம் மிக வேகமாக நடந்து வருகிறது. நிபுணர் கணக்குப்படி நாம் ஒவ்வொரு ஆண்டும் ஓர் ஆஸ்திரேலியா நாட்டு மக்கள் தொகையை உண்டுபண்ணி, மக்கட் தொகையைப் பெருக்கிக் கொண்டிருக்கிறோம். இதைத் தடுத்தாக வேண்டும்.

ஒரு காலம் இருந்தது. குழந்தைகளைச் செல்வம் என்ற காலம். அதுவும் 2 அல்லது 3 குழந்தைகள் வரைதான். அதற்கும் மேலிருந்தால் குழந்தை எத்தனை என்று கேட்பதில்லை. குழந்தை குட்டி எத்தனை என்றுதான் கேட்கிறோம். ஆகையால் குட்டி வேண்டாம். குழந்தை என்ற அளவோடு, குடும்பத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டியதுதான். முதல் குழந்தைக்கும் இரண்டாவது குழந்தைக்கும் நடுவில் இடைவெளி இருக்கவேண்டும். நாம் சினிமாவுக்குப் போகிறோம். மூன்று மணிநேரம் நடக்கக்கூடிய அந்த சினிமாவில்கூட, 15 நிமிடங்கள் இடைவெளி விடுகிறார்கள். ஆனால் பிள்ளைகள் பெறுவதில் இடைவெளியே இல்லாமல் செய்கிறோம்!"

[மாண்புமிகு முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை]

---



# புதிய பாதை

## உயர் வளரக உணவுப் பயிர்கள்

## (வானொலி) கவியரங்கம் (13.8.1968)

### தலைவர்: மாண்புமிகு பொதுப்ப அமைச்சர் திரு மு.கருணாநிதி



"தாளாண்மை கொண்டிங்கு
தமிழரசைச் சிறப்பாக்கும்
வேளாண்மைத் துறையமைச்ச—கவிதை
வாளாண்மை கொண்டிங்கு—உழவுப்
பேராண்மை காட்டவந்த புலவர்களே—
தஞ்சேய் விளைகின்ற மரகதமணிகள் கண்டு
—இது
நஞ்சேய் எனமகிழ்கின்றாள் நிலமடந்தை
தஞ்சை விளைகின்ற மரகத நெல்மணிகள்
கண்டு—இது
தஞ்சை என மகிழ்கின்றாள் நிலமடந்தை
புகார் இருக்கும் தஞ்சைக் கடைமடையில்—பூம்
புகார் இருக்கும் தஞ்சைக் கடலோரம்
மிகார் என் சொல்லை இங்குளார் அதனால்
புகார் நிய நினைவுடனே மூன்
புகார்த் திகைத்திருநாள்
மூன்பு
கார்த்திகைத் திருநாள்
மூன்பு கார் திகைத்து
இருநாள் ஒருநாள் அல்ல பலநாள்
பருவமழையின்றி போனாலும்
தருவமீன்போல் ஒளிகாட்டி, தஞ்சையின்
வெற்றிப்
புருவம் தூக்கி நின்றீர் வாழ்க நன்று.
வானின்று உலகம் வழங்கி வருதலால்
தானமிழ்தம் மழையன்றோ
துப்பார்க்குத் துப்பாய துப்பாக்கித்
துப்பார்க்குத்
துப்பாயதூஉம் மழையன்றோ
நீர் இன்று அமையாது உலகெனினும்—அதனை
வகைப்படுத்த
ஆறின்றி இயலாது என உணர்ந்தார்
ஆறுகண்டார் அதனாலே சோறுகண்டார்
எத்தனை ஆறு
இத்தரை மீது
பத்தரை மாற்று
முத்திரைப் பொன்னும்
சித்திர நெல்லை
சிரிக்கச் செய்தது பச்சைப்பட்டு
விரிக்கச் செய்தது வறுமைப் பேயை
எரிக்கச் செய்தது
வீட்டோரம் காட்டோரம்—தேர்தன்
ஓட்டோரம் இருக்கும் நல்லீர்—நீறு
ஆற்றோரம் பாரீர் இன்று என்
பாட்டோரம் வாரீர் நன்று
குடமுருட்டி காவிரிப் பெண் ஆடுகின்ற காட்சி
கண்டு—காதல்
கொள் இடம் இதுதான் என்று; காதல்
கொள்ளிடம் இதுதான் என்று
வீரசோழன் வருகின்றான் ஓடம்போக்கி
என்மேல்
வை கை என்று வளைகின்றான்
வைகை என்று வளைகின்றான்; உன் பல்
மணிமுத்தா என நெளிகின்றான்
காவிரியோ கண் சிரிட்டி என்
மன்னியார் வருகின்றாள்
மறைந்திடுக அத்தான் என்கின்றாள்
அவனோ
வரட்டுமே மன்னியார் நம்
காதலுக்கு அவளென்ன கல்லணையா?
காமினி பாமினி நாமினி காதலர்கள்
ஆம் இனி திருமணமென்று பிறருக்குச் சொல்லி
விடு
காதல் அக்கினியாறுமோ கண்ணே அருகில்
வந்துவிடு

காதல் அக்னி ஆ கண்ணே அருகில்
வந்துவிடு

அவளோ,
யாரும் நம்மீது தப் ஞர் : நம்
காதல் பிரிக்க வெ
பிறர்
வெட்டார் நம் உற ம்—அத்தான்
வெட்கம் என்னைத் தென்றான்
வீரசோழன் விரைந் துக் கொண்டவாறு
பாலாறும் முன்னே வோம் வா என்றான்
மஞ்சளார் முகவதியு ன் மடிமீது சாய்ந்த
படி
என்றாள்
மணமெப்போது அ பெரிதாக நடக்கு
பெரியாறு தலைமை மென்றான்
காதல் கதை
ஆறுகளை ஒன்றாக இ ப்புக்
பின்னியதாய்க் கரு பருக்கும் நதிகளுக்கு
ஆங்கா நன்றி சொல்வோம்
கூறுகளைச் சீராக்கி
ஷி

உழுவார் உலகத்தா
உழுந்தும் உழ்வேத ழ்த்துரைக்க
எழுவார் வள்ளுவ
உழவனோர் தாமரை வாழ்வு
சேற்றில் மலரும் அ
உழவனோர் மன்னன் தலையில்
நாற்று முடியிருக்கும்
உழவனோர் வீரன்— ளைத் தில
போர் இருக்கும் அ போர்,)
(வைகே
உழவனோர் ஓவியன்— அவன்
வயல்கள் அ
வரைந்த சித்தி
உழவனோர் தெய்வம்
உயிர்களைக் கா
டியில் உழைக்கின்ற
குருவை முன்வைத்து
திருவைப் போற்றிடு டுபட்டு வருகின்றீர்
நிலம் பிறந்த நாளா ன்னுயிரைக்
நலம் சிறக்க நாட்டு கொடுக்கின்றீர்—

உடலில் லை
பலம் இருக்கும் வள கின்றீர்
வயல் வெளியி று பழங்
கலம், மரக்கால், படி கின்றீர்
கணக்கெழுதிப் டான்
உழுதவன் கணக்குப் தென்று
உழக்கெதுவும் ர்—
உதட்டையே பிதுக்கு த்ததாலே
ஏவிந்த நிலையென்று தைக்கு
ஏற்றமிகு முன்னேற்ற வழி கண்டோம்

கண்டவழி மல்ல, கவி யரங்கப
ஏட்டோடு இருப்பது தல்ல
பாட்டோடு முடிவது ழித்தெழுக—தமிழ்
வீட்டோடு கிடப்பவ ன்று துடித்தெழுக
நாட்டோரே விடுதலை ழல்கின்றீர்
காட்டோடு கழனியோ மல்கின்றீர்
ஆட்டோடு மாட்டோ ர்செய்தால்
பழைய முறைமாற்றி ழியுண்டு
நிறையப் பலன்கிடை இருட்டுநிலை
உழக்குதான் மிச்சமெ றைந்துவிடும்
கிழக்கு வெளுத்தது யிர்செய்ய
நந்தன்போல் ஓர் இர லை
நான் உம்மை அ

கந்தா, கடம்பா, கருப்பா, முனியா என்று
கருவேல மரத்தடியில் மிராசுதார் போடும்
கூச்சல்
கால்நடையைக் கட்டிப்போட்டு
அவை கருணையுடன் தந்த உரம்,
சால்கொண்டு மனித முதுகொடிய
இறைத்த தண்ணீர்—தார்க்
கோல்கொண்டு குத்துவதால் சுற்றும் எருது—
இப்படி—
பரம்பரையாய் நடக்கின்ற உழவுத் தொழிலில்
பம்பரத்தின் வேகந்தான் வேண்டுமென்று
இணைக்கின்றோம் விஞ்ஞானத்தை
படித்தவர்கள் மேல் நாட்டில்
விதைக்கின்றார்
விளைக்கின்றார்
விஞ்ஞானக் கருவியினால்....
உழுகின்றார்....
இங்கோ படித்தவர்கள் அழுகின்றார்
—பயிர் விளைக்க
விழுகின்றார் வரிசையாக வேலைதேடி
உணவளிக்கும் வேலையினும்
உயர்ந்ததோ வேறோர் வேலை!
ஓதுவரர் எல்லாம் உழுவார் தலைக்கடையில்
என்றால்
பழைய பொருள்
படித்தவர்கள் தொழுதிடுவார்—ஏர்
பிடித்தவரை என்பதுதான்!
அதுமாற்றி நாம் அமைக்கவேண்டு மன்றோ!
"ஓதுவார் எல்லாம் உழுவார் தலைக்கடையின்"
படித்தவர் எல்லாம் உழுவார்....
தலைக்கடையில்.... !
தலைமடையில்....
கடைமடையில் உழுவார்!....
பின் நிலையில் இருந்திட்டோம் பலநாளாய்
உணவில்
தன்னிறைவு காண்பதற்கு ஊக்கம் கொள்வோம்
அந்நிலை எய்திட
முன்னிலை நிற்குது நம் அரசு:
நாட்டினிலே உற்பத்தி பெருக்கென்றால்—அதை
விடுத்து
வீட்டினிலே உற்பத்தி பெருக்குகின்றார்....
முத்தென்றும்
மணியென்றும்
சிட்டென்றும்
சிமிழென்றும்
கண்ணென்றும்
மூக்கென்றும்
கணக்கின்றிப் பெறுதல்விட்டு....
நெல் என்றும்
வரகென்றும்
கம்பென்றும்
கரும்பென்றும்
உளுந்தென்றும்
பருப்பென்றும்
எள் என்றும்
கொள் என்றும்
உணவு பெருக்கிடுவீர்—உற்பத்தி செய்திடுவீர்;
அதை உணர்த்த
உருவான கவியரங்கில்
உழவர்களாம் நண்பர் சிலர் கவிஞர்
உழுதுகாட்ட வந்துள்ளார்
வரவேற்கிறேன்...."

[மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சரின்
தலைமை உரை (கவிதை வடிவில்)]








# ஓயாத உழைப்பு!

தமிழகத்திலுள்ள எண்ணிறந்த கிராமங்கள், குக்கிராமங்கள், மூலை முடுக்குகளுக்கெல்லாம் மின் வசதியை ஏற்படுத்தித் தந்து, தமிழகத்தை மின்மயமாக, ஒளிமயமாகத் திகழச்செய்து தமிழக மின்சார வாரியம் நற்பணியாற்றி வருகிறது (Madras State Electricity Board).

நாட்டிலுள்ள ஏனைய மின்சார வாரியங்களின் பணிகள் அனைத்தையும் மிஞ்சும் நிலையில், அவற்றை யெல்லாம் பின்னிறுத்தி, வீறுநடைபோட்டு, வெற்றிபாதையில் அமைதியான புரட்சியை ஏற்படுத்தி, கிராம மக்களின் வாழ்க்கையில் ஒளி மயமான எதிர் காலத்தை உருவாக்கி இருக்கிறது தமிழக மின்சார வாரியத்தின் வளர்ச்சிப் பணிகள்.

1961-ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட கணக் கெடுப்பின்படி, தமிழகத்தில் 15,078 நகரங்களும் கிராமங்களும் உள்ளன. இவை தவிர சுமார் 39,000 உட்கடை கிராமங்களும் தமிழகத்தில் உள்ளன. இவற்றில் 9,354 கிராமங்களுக்கும் 18,877 உட்கடை கிராமங்களுக்கும் மின்சார வசதி அளிக்கப்பட்டிருப்பதுடன், 341,649 மின்சார பம்புசெட்களுக்கும் மின்தொடர்பு கொடுக்கப் பட்டுள்ளது.

**வேளாண்மைக்கு 23 சதவீத மின்சாரம்.**

கடந்த மூன்று ஐந்தாண்டு திட்டங்களிலும் 1966–67, 1967–68-ம் ஆண்டுகளிலும், தமிழக மின்சார வாரியம் அடைந்துள்ள முன்னேற்றமும், ஆற்றிய பணிகளும் வருமாறு :—

| வரிசை எண். | காலம். | மின்வசதி அளிக்கப்பட்ட கிராமங்கள்; குக்கிரா மங்கள். | | மின்தொடர்பு கொடுக்கப் பட்ட பம்புசெட்டுகள். | | செலவு. (கோடியில்.) |
|---|---|---|---|---|---|---|
| | | இலக்கு. | சாதனை. | இலக்கு. | சாதனை. | ரூ. |
| 1. | முதல் திட்டம் .. .. | 1,250 | 1,900 | — | 18,000 | 10·26 |
| 2. | இரண்டாம் திட்டம் .. | 5,000 | 6,600 | 50,000 | 84,000 | 27·58 |
| 3. | மூன்றுவது திட்டம் .. .. | 8,000 | 11,000 | 100,000 | 1,33,000 | 37·20 |
| 4. | 1966–67 .. .. .. | 2,500 | 3,000 | 30,000 | 33,400 | 8·26 |
| 5. | 1967–68 .. .. .. | 2,600 | 3,210 | 40,000 | 51,746 | 11·74 |

1960–61-ம் ஆண்டு கணக்கெடுப்பின் படி இன்று தமிழகத்தில் 909,115 பாசனக் கிணறுகள் இருக்கின்றன. அவற்றில் 341,649 கிணறுகளில் பம்புசெட்டுகள் பொருத்தப்பட்டு, மின்சாரத்தால் இயங்குகின்றன. இது தவிர, தனியார் மின்சார நிறுவத்தினர் 1967–68-ம் ஆண்டில் சுமார் 2,000 பம்புசெட்டுகளுக்கு மின்சாரத் தொடர்பு அளித்துள்ளனர். மொத்த மின்சாரத்தில் 23 சதவீதம் வேளாண்மைக்கே பயன்படுகிறது.

> ‘‘வேளாண்மை முன்னேற்றத்திற்கும், தொழில் முன்னேற்றத்திற்கும், மின்சாரத் திட்டங்களை ஊக்கமுடன் நிறைவேற்றிவருவது இன்றியமையாததென அரசாங்கம் உணர்ந்துள்ளது. மின்சாரத் திட்டங்களுக் காக 1968–69-ம் ஆண்டுத் திட்டத்தில் 32·17 கோடி ரூபாய் ஒதுக்கப்படுவதால், திட்ட நிறைவேற்றத்தில் காணப்படும் தற்போதைய விரைவு, செம்மையாகப் பேணி வரப்படும். இந்த முதலீடும், அவ்வாண்டில் நிறைவேறிவரும் பணியின் முன்னேற்றத்தையொட்டி யும், தமது நிதிநிலையையொட்டியும், மேலும் உயர்த் தப்பட வேண்டியிருக்கும்......எனவே, வருகிற ஆண் டில் நமது மாநிலத்தில் கூடுதல் மின்சாரம் தேவை யென்ற குரல் எங்கிருந்து கேட்கப்பட்டாலும், தமிழ் நாடு மின்சார வாரியம், அக்குரலுக்கு மதிப்புக் கொடுத்து, அதிக மின்சாரம் வழங்கும் நிலையில் இருக்கும் என்பதிலே ஐயமில்லை. நமக்குக்கிட்டும் நிதி வசதிக்குட்பட்டு. இந்த நிலையில் கிராம மின்சார வசதித் திட்டங்களுக்கு 6 கோடி ரூபாய் மட்டுமே நம்மால் வகை செய்ய முடிந்திருக்கிறது. 1965–66-லும், 1966–67-லும் இந்திய அரசு, கிராம மின்வசதித் திட்டங்களின் முக்கியத்துவத்தை உணர்ந்து, திட்டத் திற்குப் புறம்பாக சிறப்பு உதவி அளித்துள்ளது. உற்பத்தியைப் பெருக்குவதில், இறைவைப் பாசனத் திட்டங்கள் உடனடியாகப் பயன் தருகின்றன. எனவே இதனை மத்திய அரசு உணர்ந்து. அதற்கேற்ற கூடுதல் நிதி வசதியை அளிக்க முன்வரவேண்டும்.’’
>
> [மாண்புமிகு முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை—1968–69-ம் ஆண்டு நிதி நிலை உரை.]

**21,000 கிராமத் தொழில்களுக்கு மின்வசதி.**

தமிழகத்திலுள்ள நகரங்கள், கிராமங்களில் 62 சதவீதத்திற்கு மின்சார வசதி அளிக்கப்பட்டுவிட்டது. இது மட்டுமன்றி 21,000 கிராமத் தொழில்களுக்கும் மின் வசதி செய்து தரப்பட்டுள்ளதும் ஒரு மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

தமிழகத்தில் மூன்று இடங் களில் கிராமத் தொழில்கள் திட்டம் செயல்பட்டு வருவது அனைவரும் அறிந்ததே. செங்கல்பட்டு மாவட்டத் திலுள்ள ஸ்ரீ பெரும்புதூர், சேலம் மாவட்டத்திலுள்ள ஓமலூர், திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள நாங்குநேரி, ஆகிய இடங்களில் இத்திட்டம் நன்முறையில் இயங்கி வருகிறது. இத்திட்டப் பகுதிகளில் ஏற்பட்டுள்ள வளர்ச்சியை விளக்குகிறது கீழ்க்கண்ட அட்டவணை :—

| வரிசை எண். | விவரம். | ஸ்ரீபெரும் புதூர். | ஓமலூர் திட்டப் பகுதி. | நாங்குநேரி திட்டப் பகுதி. |
|---|---|---|---|---|
| 1. | திட்டப் பகுதியிலுள்ள மொத்த கிராமங்கள், குக்கிராமங்களின் எண்ணிக்கை. | 857 | 1,397 | 934 |
| 2. | 1968–ம் ஆண்டு மே திங்கள் 1-ம் நாள் அன்றுடன் மின்வசதி அளிக்கப்பட்டுள்ள கிராமங்கள், குக்கிராமங்களின் எண்ணிக்கை. | 495 | 552 | 528 |
| 3. | மின்வசதி அளிக்கப்பட்டுள்ளதன் சதவீதம் .. .. | 58·/. | 40·/. | 56·5·/. |

மேற்கண்ட அட்டவணையிலிருந்து ஸ்ரீபெரும்புதூர் பகுதியில் 58 சதவிகித கிராமங்களுக்கும், ஓமலூர் பகுதியில் 40 சதவிகித கிராமங்களுக்கும், நான்குநேரியில் 56·5 சதவிகித கிராமங்களுக்கும் மின்வசதி அளிக்கப்பட்டிருப்பது நன்கு தெளிவாகிறது.

**அரிசன குடியிருப்புகளுக்கு மின்வசதி.**

அரிசனங்கள் வாழ் குடியிருப்புகளுக்கு மின் வசதியை ஏற்படுத்தித் தருவதற்கு, மின்சார வாரியம், தனது, சிறப்பான கவனத்தைச் செலுத்தி வருகிறது. அண்மை ஆண்டுகளில், ஆண்டுதோறும் 300 அரிசன குடியிருப்புகளுக்கு மின்சார வசதி தரப்பட்டுள்ளது. 1967-68-ம் ஆண்டில் மட்டும் 443 குடியிருப்புகளுக்கு மின்சார வசதி அளிக்கப்பட்டுள்ளது. 1968-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாள் முடிவாக உள்ள ஆண்டுகளில், 2,700-க்கும் அதிகமான அரிசன குடியிருப்புகளில் மின்சார வசதி உள்ளன.

ஏற்கனவே மின்வசதி செய்து தரப்பட்டுள்ள கிராமங்களைச் சார்ந்திருக்கும் அரிசன குடியிருப்புகளுக்கு மின்வசதி அளிப்பதற்காக தமிழக அரசு ஆண்டொன்றுக்கு ரூ. 3 லட்சம் உதவித் தொகை அளித்தது. இத்தொகை 1967-68-ம் ஆண்டில், ரூ. 4 லட்சமாக உயர்த்தப்பட்டுள்ளது.

**அயராத பணி.**

தஞ்சை மாவட்டத்தில் உணவு உற்பத்தியை பன்மடங்கு பெருக்குவதற்கு தமிழக அரசு பற்பல மேன்மையான திட்டங்களை உருவாக்கி, செயல்படுத்தி வெற்றிகண்டு வருகிறதல்லவா ? அவற்றிற்கு உறுதுணையாக மின்சார வாரியமும் தனது அயராத பணியை உற்ற நேரத்தில் ஆற்றத் தவறுவதில்லை. வடிமுனைக் குழாய்களுக்கும், கிணறுகளுக்கும் மின்சார வசதியை உடனே ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. மின்சார வாரியம் 1968-ம் ஆண்டு மார்ச் திங்கள் 31-ம் நாளில், 416 வடிமுனைக் குழாய்களுக்கும், 250 கிணறுகளுக்கும், மின் தொடர்பு அளிக்கப்பட்டுள்ளது.

| தஞ்சாவூர் மாவட்டம். | வடிமுனைக் குழாய்கள். | கிணறுகள். | கூடுதல். |
|---|---|---|---|
| 31—3—1967-ல். | 145 | 66 | 211 |
| 1967-68-ம் ஆண்டில். | 271 | 184 | 455 |
| 31—3—1968 அன்று. | 416 | 250 | 666 |

நிதி நிலைத் திட்டத்தில் 1968-69-ம் ஆண்டிற்கென ஒதுக்கப்பட்ட தொகை ரூ. 6 கோடியாகும். இதைக்கொண்டு சுமார் 24,000 பம்பு செட்டுகளுக்கும், 1,700 கிராமங்களுக்கும் மின்வசதி செய்து தர இயலும். மேலும் ஏற்செனவே ரூ. 28 கோடிக்கு திட்டங்கள் அனுமதிக்கப்பட்டு செயல்படுத்தப்படவேண்டியுள்ளன. பம்பு செட்டுகளுக்கு மின்சார வசதி பெருமளவு தேவைப்படுகிறது. எனவே இவ்வாண்டில் 50,000 பம்பு செட்டுகளுக்கு மின் தொடர்பு கொடுக்க வேண்டுமென திட்டமிடப்பட்டுள்ளது.

**செயற்படவிருப்பவை :**

மேற்சொன்ன 50,000 பம்பு செட்டுகள், 3,000 கிராமங்கள், குக்கிராமங்கள் ஆகியவற்றிற்கு மின் வசதியளிக்க ரூ. 12·5 கோடி தேவைப்படும். இந்த நிதி நடப்பு ஆண்டிலேயே கிடைக்கும் என நம்பப்படுகிறது.

தஞ்சாவூர் மாவட்டத்தில் 1968-69 ஆண்டிலே 1,500 வடிமுனைக் குழாய், மற்றும் கிணறுகளுக்கு மின் வசதியளிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இதற்கென ரூ. 75 லட்சம் தேவைப்படும். எனவே அதற்காக ஒரு தனிக் கடனை வழங்க அரசு இசைந்துள்ளது.

1968-69-ம் ஆண்டில் 350 அரிசன குடியிருப்புகளுக்கு மின்வசதி அளிக்கப்படும்.

## கிராம நலம்

**சந்தா விவரம்:**

ஆண்டு சந்தா 2 ரூபாய்.
ஓர் ஆண்டுக்கு குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
தனிப்பிரதி விற்பனைக்குக் கிடையாது.

**சந்தா அனுப்ப வேண்டிய முகவரி :**

மக்கள் தொடர்பு அதிகாரி,
கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகம்,
செயின்ட் ஜார்ஜ் கோட்டை, சென்னை-9.



# ஆட்சிமொழி பயிற்சிமொழி பற்றி ஒரு விளக்கம்

திரு மு.ரா. பெருமாள் முதலியார்
தமிழ் வளர்ச்சி இயக்குநர், தமிழக அரசு.

'தெருவெல்லாம் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்' என்று முரசறைந்தான் அமரகவி பாரதி. அவன் கண்ட கனவு இன்று நனவாகிக் கொண்டு வருகிறது. 'எங்கும் தமிழ்' எதிலும் தமிழ்' என்று பூரிப்புடனும் பெருமிதத்துடனும் பாராட்டத்தக்க வகையில் இன்று செயல்கள் நடைபெற்று வருகின்றன.

கோட்டையிலே இன்று தமிழன்னை கோலோச்சுகிறாள். ஆட்சி மொழி தமிழ்; அதுமட்டுமல்ல; கல்லூரிகளில் தமிழ பயிற்சி மொழியாக ஆக்கப்பட்டுள்ளது. "தமிழால் முடியுமா" என்று சந்தேகக் கண்களுடன் வினு எழுப்புவோருக்கு, இக்கட்டுரை நல்ல பதிலாகும். "கல்லூரிகளில் தமிழ் பயிற்சிமொழியாக" நிச்சயம் இருக்க முடியும், என்று அறுதியிட்டுக் கூறுகிறார், தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர். தமிழக அரசின் மொழிக் கொள்புகயை மிகவும் அழகாக, தெளிந்த முறையில் எடுத்து விளக்கியுள்ளார். அனைவரும் படித்து விளக்கம் பெறவேண்டிய பயனுள்ள கட்டுரை இது— ஆசிரியர்.

1968-ம் ஆண்டு சனவரி மாதம் 23-ம் தேதி தமிழக வரலாற்றில் ஒரு மிக முக்கியமான நாள். அன்று தமிழக சட்ட மன்றப் பேரவையில், மொழிபற்றிய ஒரு முக்கியமான தீர்மானம் நிறைவேறியது. ஐந்தாண்டுகளுக்குள் அரசு அலுவலங்களில் தமிழே ஆட்சி மொழியாக இருக்குமென்றும், புதுமுக வகுப்பு, பி.எ., பி.எஸ்.ஸி., வகுப்புகள் ஆகியவற்றில் தமிழே பயிற்சி மொழியாக இருக்குமென்றும் அந்தத் தீர்மானம் கூறுகின்றது. அந்த தீர்மானத்தைச் செயல்படுத்தத் தேவையான நடவடிக்கைகள் இப்போது எடுக்கப்பெற்று வருகின்றன. முன்னரே தொடங்கிய நடவடிக்கைகளை விரைவுபடுத்தியும், புதிய நடவடிக்கைகளை இப்போது எடுத்தும் தீர்மானத்திற்காணும் நோக்கங்களை நிறைவேற்ற அரசு முயல்கின்றது.

### எங்கும் தமிழ்—எல்லாம் தமிழ்

மாவட்ட நிலையிலுள்ள எல்லா அலுவலகங்களிலும் இப்போது தமிழே ஆட்சிமொழியாக இருக்கின்றது. துறைத் தலைமை அலுவலங்களிலும் தமிழ்த் திட்டம் ஓரளவு செயல்பட்டு வருகின்றது. தலைமைச் செயலகத்தில் தமிழ் வளர்ச்சித்துறை செய்தி, விளம்பரத்துறை ஆகியவற்றில் தமிழே ஆட்சி மொழியாக இருக்கின்றது. ஏனைய துறைகளைப் பொறுத்தவரையில் பொது மக்களிடமிருந்து தமிழில் வரும் கடிதங்களுக்குத் தமிழிலேயே பதில் எழுத வேண்டுமென்ற நிலை இப்போது நடைமுறையில் இருக்கின்றது. இன்னும் ஓர் ஆண்டுக்குள் துறைத்தலைமை அலுவலங்களில் முழுத்தமிழ்த்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டுமென்று அரசு விரும்புகிறது.

கல்லூரிகளில் தமிழைப் பயிற்சி மொழியாக்கும் முயற்சி சில ஆண்டுகளுக்கு முன்னரே மேற்கொள்ளப்பட்டது. அம்முயற்சி குறிப்பிடத்தக்க அளவுக்கு வெற்றி பெறவில்லை. புகுமுக வகுப்பில் ஆங்கிலமே பயிற்சி மொழியாக இருந்த நேரத்தில் பி.எ. வகுப்பில் ஒருசில பாடங்களைத் தமிழில் கற்பிப்பதற்கு முயன்றதே அதற்குக் காரணமாகும். பள்ளியிறுதி வகுப்பு வரையில் தமிழிலேயே எல்லாப் பாடங்களையும் பயின்ற மாணவர்கள் புகுமுக வகுப்பில் விருப்பப் பாடங்களை ஆங்கிலத்தில் பயின்று, அதன் பின்னர் பி.எ. வகுப்பில் அவற்றை மீண்டும் தமிழில் பயில வேண்டுமென்னும் கோட்பாடு நடைமுறைக்கு ஒத்துவரக் கூடியதன்று. எனவே, 1968-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 23-ஆம் தேதியன்று சட்டமன்றப் பேரவை நிறைவேற்றிய தீர்மானத்தை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கு உண்மையான முயற்சிகளை செய்யும்வகையில், முதற்படியாக இவ்வாண்டு புகுமுக வகுப்பில் வரலாறு, பொருளாதாரம் போன்ற பாடங்களை மட்டுமன்றி, கணிதம் அறிவியல் முதலிய

**ஆண்டவனுக்கே தேவையென்றால்,**
**நமக்கில்லையா ?**

'ஆண்டவனையே எடுத்துக்கொள்ளுங்கள். பரமசிவனுக்கு இரண்டு குழந்தைகள் தான். ஒருவர் விநாயகர். மற்றொருவர் முருகர். குடும்பக் கட்டுப்பாடு வேண்டாம் என்று விநாயகர் திருமணத்தினின்று ஒதுங்கிவிட்டார். மற்றொருவரான முருகருக்கு இரண்டு மனைவிகள். ஆனால் குழந்தை இல்லை. முருகனுக்கே குடும்பக் கட்டுப்பாடு தேவையென்றால், நமக்குத் தேவையில்லையா ? 20 ஆண்டுகளுக்கு கொஞ்சம் மனத்தை திடப்படுத்திக் கொள்ளுங்கள். நாட்டின் உற்பத்தியைப் பெருக்கி, தொழில் வளத்தை ஏற்படுத்தி, வருமானத்தை உயர்த்தி, வாழ்க்கைத் தரம் உயர்ந்து, வளர வேண்டியவைகள் வளர்ந்து செல்வம் பெருகினால், பிறகு குழந்தைச் செல்வத்தைக் கவனிக்கலாம்."

*[மாண்புமிகு முதலமைச்சர் திரு சி. என். அண்ணாதுரை]*

பாடங்களையும் தமிழிலேயே கற்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

புகுமுக வகுப்புக் கணித அறிவியல் பாடங்களுக்குத் தமிழில் இதுவரையில் பாடநூல்கள் வரவில்லை. எனவே, முதல் முயற்சியாக 15—8—1968 அன்று 10 நூல்கள் வெளியிடப்பட்டன.

**தவறான கருத்துக்களைப் போக்குவோம்**

இந்த வெளியீட்டு விழாவில் ஆட்சி மொழி-பயிற்சி மொழி ஆகியவற்றைப்பற்றிப் பொது மக்களிடம் நிலவி வருகின்ற தவறான கருத்துக்களை ஆராய்ந்து அவர்களுக்கு இந்த விஷயத்தில் மன அமைதி தருவது இன்றியமையாதது. தமிழைப் பயிற்சிமொழியாக்குவதன் மூலம் ஆங்கிலத்தைப் புறக்கணிப்பதாகவும் நாளடைவில் அம்மொழிப் பயிற்சியை அறவே ஒழித்துவிடப் போவதாகவும் பொது மக்களில் சிலர் கருதுகின்றனர். மாணவர்களில் சிலரும் அவ்வாறே கருதுவதாகத் தெரிகின்றது. தமிழைக் கல்லூரிகளில் பயிற்சி மொழியாக்குவதென்றால், ஆங்கிலப் பயிற்சியை ஒழித்துவிடுவது என்று கருதுவது தவறாகும். புகுமுக வகுப்பிலும் பி.ஏ., பி.எஸ்ஸி. வகுப்புக்களிலும் மாணவர்கள் கற்கின்ற பாடங்கள் மூன்று பிரிவுகளாக இருக்கின்றன. பிரிவு—1: ஆங்கிலம்; பிரிவு—2: தமிழ் அல்லது வேறொரு மொழி; பிரிவு—3: விருப்பப் பாடங்கள். இப்போது எடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளின் மூலம் விருப்பப்பாடங்கள் தமிழில் கற்பிக்கப்பெறும். எப்போதும் போலவே மாணவர்கள் முதற்பிரிவில் ஆங்கில மொழியைப் பயில்வார்கள். இரண்டாம் பிரிவில் தமிழ் மொழியைப் பயில்வார்கள். ஆகவே தமிழகத்தில் ஆங்கிலமே ஒழிந்து போகுமென்ற அச்சம் காரணமற்றது.

**வேலைவாய்ப்புகள் குறையாது**

தமிழே கல்லூரிப் பயிற்சி மொழியானால் தமிழகப் பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புகள் குறைந்துபோகுமென்று சிலர் அஞ்சுகிறார்கள். இதுவும் காரணமற்ற ஓர் அச்சமாகும். தமிழக அரசு அலுவலகங்களிலெல்லாம் தமிழே ஆட்சி மொழியாக இருக்கும் நிலை வருகின்றபோது அவ்வலுவலகங்களில் வேலை செய்வதற்குத் தமிழைப்பயிற்சி மொழியாகக்கொண்டு பட்டம் பெற்றவர்களைவிட அதிக தகுதியுடையவர்கள் வேறெவரும் இரார். எனவே, தமிழ்ப் பட்டதாரிகளுக்குத் தமிழகத்தில் வேலை வாய்ப்புகள் குறைந்துவிடுமென்று சொல்வது தவறாகும். வெளி மாநிலங்களில் தமிழகப் பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புக்கள் இல்லாமலே போய்விடுமோ என்று சில மாணவர்களும் பெற்றோர்களும் அஞ்சுகின்றனர். எல்லா மாநிலங்களிலும் அவ்வம் மாநில மொழியே ஆட்சி மொழியாக இருக்கவேண்டுமென்பது இன்றைய கோட்பாடு. எனவே தமிழகப்பட்டதாரிகளுக்கு வெளி மாநிலங்களில் வேலை வாய்ப்புக்கள் இல்லாமல் போகுமானால் அது தமிழகக் கல்லூரிகளில் தமிழைப் பயிற்சி மொழியாக்கியதால்தான் என்று சொல்ல முடியாது. இனி மைய அரசினர் அலுவலகங்களிலும் பணித்தொகுதிகளிலும் தமிழகப்பட்டதாரிகளுக்கு வேலை வாய்ப்புக்கள் இல்லாமல் போகுமென்று நினைக்கின்றவர்கள் மிகப்பலர் இருக்கின்றனர். ஹிந்திமொழி வழங்காத மாநிலங்களெல்லாம், விரும்பினாலொழிய மைய அரசின் அலுவலகங்களில் ஆங்கிலமும் ஹிந்தியுடன் சேர்ந்து ஆட்சிமொழியாக இருக்குமென்பது நாடாளுமன்றம் நிறைவேற்றியுள்ள சட்டமாகும். தமிழகப் பட்டதாரிகள் முன்போலவே இனிமேலும் ஆங்கிலத்தை முக்கியமான பாடமாகப் பயில்வார்களாதலால் மைய அரசின் அலுவலகங்களில் வேலை செய்வதற்கு அவர்களுக்கு எவ்வித தகுதிக்குறைவும் ஏற்படாது என்பது தெளிவு. மேலும் அரசின் வேண்டுகோளின்படியும் அது தருகின்ற பொருளுதவியோடும் தமிழகப்பல்கலைக் கழகங்கள் ஆங்கிலமொழிப்பயிற்சியின் தரத்தை மேலும் உயர்த்துவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுத்து வருகின்றன. இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்க்கின்ற பெற்றோரும் மாணவர்களும் தமிழ் பயிற்சிமொழியாவதை எதிர்க்கமாட்டார்களென்றும் அதனை உற்சாகத்துடன் ஆதரிப்பார்களென்றும் நாம் நம்பலாம். இன்றைக்கு இருக்கின்ற ஐயத்திற்கும் அச்சத்திற்கும் காரணம், பயிற்சிமொழி பற்றி நாம் போதுமான அளவு பேச்சிலும் எழுத்திலும் விளக்கம் கொடுக்காமல் இருப்பதேயாகுமென்று நான் கருதுகின்றேன்.

இனி, மாநில அரசு அலுவலர் தேர்வுக்கழகமும் (Madras Public Service Commission] மைய அரசு அலுவலர் தேர்வுக் கழகமும் (Union Public Service Commission) நடத்துகின்ற போட்டித் தேர்வுகளில் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொண்டு படித்து வருகின்ற தமிழகப் பட்டதாரிகளுக்கு யாதேனும் இடைஞ்சல் இருக்குமா என்பதைப்பற்றி ஆராய்வது இன்றியமையாதது. இப்போது பி. ஏ. பி.எஸ்ஸி, பட்டதாரிகளுக்காகத் தமிழக அரசு அலுவலர் தேர்வுக் கழகம் நடத்துகின்ற போட்டித்

(41-ம் பக்கம் பார்க்கவும்.)



FDSEID 968



நாட்டுக்கு உணவளிக்க உதவும்
உழவுப் பெருங்குடி மக்களுக்கு
பன்னெடுங்காலமாய் பணிபுரிவது பாரி

Parry's

ஈ. ஐ. டி.—பாரி லிமிடெட்
(இங்கிலாந்தில் இணைக்கப்பட்டது.
உறுப்பினர்களின் பொறுப்பு வரையறுக்கப்பட்டது.)
உர இலாகா, டேர் ஹவுஸ், மதறாஸ்-1.

உரங்கள் • பூச்சி நாசினிகள் • வீரிய ஒட்டு விதைகள் • ஸ்ப்ரேயர்கள் • நிபுணத்துவம் மிக்க விவசாயத்துக்கான சேவை

விவசாயிகளுக்கு வேளாண்மை ஆண்டு முழுதும்
வேலை வாய்ப்பளிக்கும் முழுநேரத் தொழிலும் அல்ல.

விவசாயத்தின் மூலம் கிடைக்கும்
வருமானமும் போதுமானதல்ல.

**கதரும் கிராமத் தொழில்களும்**

**விவசாயிகளுக்கு ஊதியத்துடன் கூடிய வேலை வாய்ப்பளிக்கின்றன.**

- கதர் - கிராமத் தொழில்களை ஆதரிப்பது
- உணவு உற்பத்திக்கு உழைக்கும் கிராம மக்களுக்கு உதவுவதாகும்

தமிழ்நாட்டுக் கதர் - கிராமத் தொழில் ஆயத்தின்
நிறுவனங்களில் உற்பத்தி செய்யப் பெற்ற

• கதர் • கதர்ப்பட்டு • சோப் • தேன் • செக்கெண்ணெய் • தோல் பொருள்கள் • பனைவெல்லம் • சர்க்கரை • மண்பாண்டம் • வார்ப்படங்கள் • பித்தளை, வெண்கலப் பாத்திரங்கள் • பனைப் பொருள்கள்—இன்னும்—

பற்பல கைநுட்பத் தொழில் பொருள்கள்
கதர்-கிராமத் தொழில் விற்பனை நிலையங்களிலும்
சென்னை "குறளகத்"தில் இயங்கும்
கதர்-கிராமத் தொழில் அங்காடியிலும்
விற்பனைக்கு உள்ளன.

வெளியீடு—
கதர்-கிராமத் தொழில் துறை,
2, சர் தேசிகாச்சாரி ரோடு, சென்னை-4

வானொலிப் பேச்சு :

# கூட்டுறவு மூலம் விவசாயக் கடன் பெறுவது எப்படி ?

நமது நாடு ஒரு பரந்த விவசாய நாடு வேளாண்மைத் தொழிலேயே பிரதானமாக நம்பி இருக்கும் நாடு. இத் தொழிலைச் செய்யும் விவசாயியை பற்றி ஒரு முதுமொழி உண்டு. அவன் பிறப்பதும் கடனில், வாழ்வதும் கடனில், இறுதியில் அவன் விட்டு செல்வதும் கடன். இது ஒரு வகையில் உண்மைதான். அவனது கடன் பளுவை நீக்காமல், அவனது பொருளாதார நிலை உயரமுடியாது. "கடன்பட்டான் நெஞ்சம்போல் கலங்கினான் இலங்கை வேந்தன்" என்ற கருத்திற்கு ஒப்பாக நம் நாட்டு விவசாயிகளின் நிலை இருந்தது. இக்கஷ்ட நிலையிலிருந்து விவசாயிகளை விடுவிக்க நாற்பது ஆண்டுகளுக்கு முன்னால் கூட்டுறவு நில அடமான வங்கிகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தோற்றுவிக்கப்பட்டு தற்போது நம் தமிழகத்தில் வட்டத்திற்கு (தாலுக்கா) ஒன்றாக 106 பிரதம நில அடமான வங்கிகள் செயலாற்றி வருகின்றன. இவ்வங்கிகள் மூன்றாவது ஐந்தாண்டு திட்ட ஆரம்பக்காலம் வரை, விவசாயிகள் கொண்ட முன் கடனை அவர்கள் காட்டும் ஈட்டுச் சொத்துக்களின் பேரில் அவைகளைச் சட்ட பூர்வமாக பரிசீலனை செய்து, கடன்கள் வழங்கப்பட்டு வந்திருக்கின்றன. அவ்விதம் பரிசீலனை செய்யும்போது, விவசாயிகளினால் நில அடமான வங்கியார் கோரும் மூலப் பத்திரங்கள் தாக்கல் செய்வது பெரும்பாலும் கஷ்டமாக இருந்ததால், அவர்களுக்கு வங்கியிலிருந்து கடன் கிடைப்பதில் காலதாமதம் ஏற்பட்டிருக்குமே தவிர, வங்கியிலிருந்து கடன்பெற்று, அதன் மூலம் தங்களது சொத்துக்களையும், பொருளாதார நிலையையும் சீர் செய்து கொண்ட விவசாயிகள் ஏராளம்.

## விவசாயிகள் அறிய வேண்டியது என்னென்ன ?

நம் நாடு விவசாய நாடாக இருந்தபோதிலும், உணவுப் பொருள் விளைச்சலில் தன்னிறைவு பெற்று விளங்கவில்லை என்பதோடல்லாமல், பிற நாட்டினரையும் கையேந்தி நிற்கின்ற அவல நிலை இருந்து வருகிறது என்பது வெள்ளிடை மலையாகும். இதை உணர்ந்த நமது இந்தியப் பேரரசு, விவசாய வளர்ச்சிக்கும் பெருக்கத்திற்கும் தேவையான பண வசதியை விவசாயிகளுக்கு நீண்ட காலக்கடனாக விரைவில், மிகவும் எளிதில் வழங்கத் தீர்மானித்து, இப்பணியை கூட்டுறவு நில அடமான வங்கியில் ஒப்படைத்திருக்கிறது. நம் தமிழக அரசு விவசாயிகளுக்கு, மிக எளிதில், விரைவில் நில அபிவிருத்திக் கடன்கள் கிடைப்பதற்கு, நில அடமான வங்கி சட்ட திட்டத்தில் பெரும் மாற்றங்கள் செய்திருக்கிறது. இதன்படி நில அடமான வங்கியில் கடன் பெற விரும்பும் விவசாயி தெரிந்துகொள்ள வேண்டியது என்ன என்பதைப் பார்ப்போம்.

எந்தெந்த காரியங்களுக்காக நில அடமான வங்கியில் கடன் பெறலாம் ?

புதுக்கிணறு வெட்ட, பழைய கிணறை ஆழப் படுத்த நீரேற்ற யந்திரங்கள் நிறுவ, இயந்திரக் கலப்பை வாங்க, கழனிதிருத்த, வடிமுனைக் கிணறு, குழாய்க் கிணறு, அமைக்க

மேற்சொன்னக் காரியங்களுக்கு ஒரு விவசாயி ரூ. 40,000 வரை கடன் பெறலாம்.

கடன் வாங்கப்பட்ட காரியத்திற்கு அனுசரணையாக இருக்கவேண்டுமாகையால் பம்புசெட் வாங்கிப்பொருத்து வதற்கும், கிணறு ஆழப்படுத்துவதற்கும் டிராக்டர் வாங்கவும், 10 வருடத் தவணையிலும் புதிய கிணறு எடுப்பதற்கு 15 வருடத் தவணையிலும் எட்டேகால் சத விகித வட்டியில் கடன் வழங்கப்படுகிறது.

திரு பி. பி. கே. இராஜா சிதம்பரம்,
துணைத் தலைவர், மாநில அடைமான வங்கி.



## விவசாயி செய்யவேண்டியது என்னென்ன ?

கடன்கோரும் விவசாயி செய்யவேண்டியது என்ன ? முதலில் அந்தந்த வட்டாரத்தில் உள்ள நில அடமான வங்கியில் ரூ. 10–50 செலுத்தி அங்கத்தினராகப் பதிவு செய்து கொள்ள வேண்டும். அங்கத்தினர்களாகச் சேர விரும்பும் நமூனாவை அந்த அந்த வட்டார வளர்ச்சி அலுவலகத்திலிருந்தோ, அல்லது சம்பந்தப்பட்டநில அடமான வங்கிகளிலிருந்தோ இலவசமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

புதிய கிணறுகள் வெட்டுதல், பம்புசெட்யந்திரங்கள் அமைத்தல் போன்ற காரியங்களுக்காக கடன் பெற விரும்பும் விவ்சாயிகள் அந்தந்த வட்டார வளர்ச்சி அலுவலகத்திலிருந்து கடன் மனு நமூனாக்கள் பெற்று, தனது சொத்து சம்பந்தமான கிரைய, மூல ஆவனங்களை அத்துடன் இணைத்து, வட்டார வளர்ச்சி கூட்டுறவு அதிகாரியிடம் கொடுக்க வேண்டும். ஈடுகாட்டப்படும் சொத்து சம்பந்தமான கிராமக் கணக்கு பிள்ளையிடம் பெற வேண்டிய தகவல்களை அந்தந்த வட்டார வளர்ச்சி அதிகாரியோ அல்லது கிராம நல ஊழியர்களோ பெற்று மேல் நடவடிக்கை எடுப்பார்கள். ஈடு காட்டப்படும் நிலங்களுக்கு 13 வருடங்களுக்கு விஸ்தரிப்பு அதிகாரியே வில்லங்க சான்றிதழ்கள் பெறுவார்கள். கடன் தொகை ரூ. 5,000 வரை வில்லங்க சான்றிதழ் இலவசமாகப் பெறலாம். கடன்தொகை ரூபாய் 5,000-க்குமேல் வில்லங்க கட்டணம் ரூ. 22-50 மட்டும் செலுத்தினால் போதும். சான்றிதழ்களில் காணப்படும் வில்லங்கம் சம்பந்தமான ஆவனங்களையும் மனுதார் விஸ்தரிப்பு அதிகாரிகளிடமே கொடுக்கவேண்டும். அதன்பின் அடமானம் காட்டப்படும் நிலங்களைக் கூட்டுறவு விஸ்தரிப்பு அதிகாரியே பார்வை இட்டு நிலமதிப்பீடு செய்கிறார். நில மதிப்பீடு செய்வதில் ஈடு காண்பிக்கும் நிலங்கள் உள்ள கிராமத்தில் கடன் மனு தேதிக்கு முன் ஐந்து ஆண்டுகளில் சராசரி கிரைய மதிப்பில் 70 சத விகிதம் கடன்கள் வழங்க சிபாரிசு செய்கிறார் அவ்விதம் தகவல் இல்லாவிடில் பக்கத்துக் கிராமத்தில் உள்ள ஈடுகாண்பிக்கும் நிலத்தின் தரத்தை ஒத்த நிலங்களின் கிரைய மதிப்பை ஆதாரமாகக்கொண்டு மேல் கண்ட சத விகிதத்தில் கடன் தொகை சிபாரிசு செய்யப்படுகிறது.

புதிய கிணறு வெட்ட, பம்புசெட் வாங்க கடன் கோரும் விவசாயிகளுக்குப் போதிய அளவு, சொத்து மதிப்பு இல்லாமல்போனால் அபிவிருத்திக்குப் பிறகு சொத்தின் மதிப்பு எவ்வளவு இருக்குமோ அதையே ஆதாரமாகக் கொண்டு கடன் வழங்கப்படுகிறது.

கிணறு வெட்டுவதற்கான மதிப்பீட்டை அந்தந்த வட்டார வளர்ச்சி அலுவலகத்திலுள்ள இளநிலை பொறியாளரிடமிருந்து பெறுவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது.

"மிகு பயன்தரும் தானிய வகைத் திட்டமும் பாசனவசதிகளைப் பெருக்கும் திட்டமும், ஒன்றோடொன்று இணைந்து செயல்பட வேண்டுமென்றும், குறிப்பாக, ஒருபோகநன்செய் நிலங்களை இருபோக நன்செய் நிலங்களாக மாற்றுவதற்கு நாம் முனைந்து செயல்பட வேண்டுமென்றும் அரசு உணர்கிறது. இதற்காக இறைவைப் பாசனத்திற்குரிய வசதிகளை விரிவுப்படுத்த வேண்டியிருக்கும். இந்த நிலையில், கிணறுகள், துளைகிணறுகள், வடிமுனைக் குழாய்க் கிணறுகள் இவற்றைத் தோண்டும் திட்டங்களும், விசை யேற்றங்களை நிறுவும் திட்டங்களும் சிறப்பான இடம் பெறுகின்றன. ரிசர்வ் வங்கியும், ஆயுள் காப் புறுதிக் கழகமும், வர்த்தக வங்கிகளும் இப்போது வேளாண்மை உற்பத்தித் திட்டங்களுக்குப் பெருமளவில் கடன் வழங்க முன்வருகின்றன. ஆயினும் இந்த நிறுவனங்களிடமிருந்து பெறும் கடன் உதவி, கூட்டுறவுத் துறையின் மூலமாகவன்றி, அரசிற்கு நேரடியாகக் கிட்டாது....

....அடுத்த ஆண்டில் சிறுபாசனத் திட்டங்களுக்குக் கடன் வழங்கல் பற்றி, சில பெரிய கொள்கை முடிவுகளை நாம் எடுத்துள்ளோம். அரசு இப்போது செய்துள்ள முறைப்படி, கிணறுகள் தோண்டுவதற்கும், விசையேற்றங்கள் அமைப்பதற்கும் வழங்கப்படுகிற புதிய கடன்கள், நில அடைமான வங்கிகளின் வாயிலாகவே கிடைக்கும். இதைப் போலவே, விரைவில், செவ்விய முறையில் செயல்பட இருக்கும் வேளாண்மைத் தொழிற் கழகம், விசையேற்றங்களையும், டிராக்டர்களையும் தவணைக் கொள்முதல் அடிப்படையில் வழங்குவதற்குப் பொறுப்பேற்கும்....

....நில அடைமான வங்கிகளின் மூலமாகவும், வேளாண்மைத் தொழிற் கழகத்தின் மூலமாகவும் கிட்டும்படி செய்துள்ள உதவித் தொகை உட்பட, உழவர்களுக்குக் கிடைக்கும் உதவித் தொகை எந்த வகையிலும் குன்றாது—குறையாது. அதற்கு மாறாக, சிறுபாசனத் திட்டங்களுக்கென உழவர் பெருமக்களுக்குக் கிடைக்கும் கடன் உதவி கணிசமான அளவிற்கு உயரும்."

[மாண்புமிகு முதலமைச்சர் திரு சி. என் அண்ணாதுரை. 68–69 நிதி நிலை உரையிலிருந்து.]

கவனிக்கவும் -
யானை டிரேட் மார்க்
யானை டிரேட் மார்க், உர மூட்டைகளில்
இருக்கிறதா என்று கவனித்து வாங்கவும்
பாக்ட் கம்பெனியாரின்
உரத் தயாரிப்புகள்
பாக்டம்பாஸ்
(அமோனியம் பாஸ்பேட் 16 : 20)
அல்ட்ராபாஸ்
(மிகவும் பொடியாகத் தூளாக்கப்பட்ட மினரல் பாஸ்பேட்)
அமோனியம் ஸல்பேட்
சூபர்பாஸ்பேட்
N.P.K. கலப்பு உரங்கள்
FACT
பாக்ட் ...யானை மார்க் உரங்கள்
பெர்டிலைஸர்ஸ் அண்டு கெமிகல்ஸ் திருவிதாங்கூர் லிமிடெட்
பதிவு காரியாலயம்: ஏலூர், உத்யோகமண்டல், P. O. கேரள ராஜ்யம்
பிராந்திய அலுவலகம்: 2வது மாடி 19, கமாண்டர்-இன்-சீப்ரோடு எழும்பூர் சென்னை
Criterion-FT-2004 A

**எளிய முறைகளில் தீர்வு:**

நிலமதிப்பீடு செய்தபின் கடன் மனுவை சிபாரிசு செய்து சம்பந்தப்பட்ட பிரதம நில அடமான வங்கிகளுக்கு அனுப்பி வைக்கிறார். அவ்விதம் வந்த கடன் மனுக்களுக்கு பிரதம நில அடமான வங்கியின் சட்ட ஆலோசகர் அபிப்பிராயம் பெறப்படும். அதன்பின் வங்கித் தலைவர் அவர்கள் கடன்மனுக்களை அநுமதி செய்கிறார். அதையடுத்து அந்தக் கடன் மனுக்களை சென்னை கூட்டுறவு மத்திய நில அடமான வங்கியின் ஒப்புதலுக்கு அனுப்பி வைக்கிறார். ஒப்புதல் பெறும் காலத்தை குறைக்கும் பொருட்டு சென்னை கூட்டுறவு மத்திய நில அடமான வங்கியார் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் தனித்தனியே கிளை அலுவலகங்கள் நிறுவி செயலாற்றி வருகின்றார்கள். கடன் வழங்கும் ஒப்புதல் கிடைத்தவுடன், மனுதாரரிட மிருந்து அடமான கடன் பத்திரம பதிவு செய்து வாங்கப் படுகிறது. இதற்கு பத்திர ஸ்டாம்பு செலவு கிடையாது. பத்திரங்களை பதிவு செய்வதிலும் ரூ. 5,000 வரை பாதித் கட்டணமும் அதற்குமேல் உள்ளவைகளுக்கு முழு கட்டணமும் செலுத்தவேண்டும். அதன்பின் இரண்டொரு தினங்களில் கடன் வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது.

மனுதார் பிரதம நில அடமான வங்கியிலிருந்து பணம் பட்டுவாடா பெறும் சமயத்தில்,பங்குத் தொகைக்காக கடன்தொகையில் ரூ. 100-க்கு ரூ. 2 வீதம் செலுத்த வேண்டும். இத்துடன் வங்கியின் நிர்வாகக் கட்டணம், கடன்தொகை அடிப்படையில் ரூ. 1,000-க்கு ரூ. 2 வீதம் செலுத்தவேண்டும். ஆனால் செலுத்த வேண்டிய அதிக பட்ச ரூ. 25 ஆகவும், குறைந்தது ரூ. 5 ஆகவும் இருக்கும். இதே அளவில் சட்ட ஆலோசனைக் கட்டணமும ரூ. 1,000-க்கு ரூ. 2 வீதம் செலுத்த வேண்டும்.

**கருவிகள் வாங்க உதவி:**

கிணறுவெட்ட அநுமதி செய்யப்பட்ட கடன்தொகையை மூன்று தவணைகளில் 40:30:30 என்ற விகித அடிப் படையில் பணம் பட்டுவாடா செய்யப்படும். இரண்டாவது மூன்றாவது தவணைகள் பட்டுவாடா செய்யுமுன் ஏற்கனவே கொடுத்த கடன் முழுமையும் பயன்படுத்தப் பட்டிருக்கின்றனவா என்பதை அதிகாரிகள் பார்வையிடு வார்கள். அவ்விதம் பூர்த்தி செய்யப்பட்ட 'புதிய கிணறு திட்டப்படி வெட்டும் மனுதாரர்களுக்கு கடன்தொகையில் ரூ. 100-க்கு 25 என்ற விகிதத்தில் ரூ. 500-க்கு மேல் படாமல் மான்யமாக வழங்கப்படும். மேற்படி மான்ய தொகை கடன் நிலுவையில் வரவு வைத்துக் கொள்ளப் படும்.

பம்புசெட் ஏனைய விவசாயக் கருவிகள் வாங்குவதற்கு அநுமதி செய்யப்பட்ட கடன்தொகை நேரடியாக சம்பந்தப் பட்ட கம்பெனிகளுக்கே கொடுக்கப்படும்.மேற்படி விவசாயக் கருவிகள் மனுதாரர் விருப்பப்படி. அவரவர்கள் விரும்பும் கம்பெனிகளிடமிருந்து வாங்கிக் கொள்ளலாம்.

கிணறுவெட்ட, பம்புசெட் அமைத்தல் போன்ற காரியங்கள் தவிர, ஏனைய காரியங்களுக்கு கடன்பெற விரும்பும் விவசாயிகள் நேராகவே சம்பந்தப்பட்ட பிரதம நில அடமான வங்கிகளில் கடன் மனு செய்யலாம்.

[வானொலிப் பேச்சு—13-8-68].






வேளாண்மையில் புதுமையை, புத்துணர்ச்சியை, புரட்சியை விளைவித்தது, சென்ற ஆண்டு. உணவு உற்பத்தியை பன்மடங்கு பெருக்கியதும் சென்ற ஆண்டே. ஒருபோக விளைச்சல் நிலங்கள் இருபோகங்களாகவும், இருபோக நிலங்கள் முப்போக நிலங் களாகவும் மாற்றப்பட்டு மிகு விளைச்சல் காணப்பட்டது. நமக்கி ருக்கும் நீர்ப்பாசன வசதிகள் அனைத்தும், முழுவதுமாக பயன் படுத்தப்பட்டதும் சென்ற ஆண்டில் தாம்.

பன்முறை சாகுபடித் திட்டம் நல்ல விளைச்சலைத் தந் துள்ளது. சுமார் 72 லட்சம் ஏக்கர் நிலங்கள் இத்திட்டத்தில் செயல்படுத்தப்பட்டுள்ளன. அடுத்த ஆண்டில் மேலும் 1.5 கோடி ஏக்கர் நிலத்திலும் அதற்கடுத்த மூன்று ஆண்டுகளில் 3 கோடி ஏக்கர் நிலத்திலும் அத்திட்டம் விரிவுபடுத்தப்பட விருக்கிறது.

## தமிழகத்தின் ஆர்வம்

இப்பன்முறை சாகுபடித் திட்டத்திற்கு, மாநில அரசுகளிடையே நல்ல வரவேற்பும் ஆர்வமும்' உள்ளன. தீவிர உழவர்களும் இதை உளமார வரவேற்கின்றனர். தமிழகமும், ஆந்திர மாநில மும் இப்பன்முறை விளைச்சல் திட்டத்திற்கு பெரிதும் முக்கியத் துவம் அளித்து, பெருமளவில் இத்திட்டத்தை செயல்படுத்தி வாகை சூடியுள்ளன.

தஞ்சைத் தரணியிலே சம்பா சாகுபடியாகும் 9 லட்சம் ஏக்கர் நிலங்களில் இரண்டு லட்சம் ஏக்கர் நிலத்திற்கும் மேற்பட்ட ஏக்கர்கள் இருமுறை சாகுபடித் திட்டத்தின்கீழ் கொண்டுவரப் பட்டுள்ளன. அதிசய நெல் ஏ.டி.டி.-27 ரகத்தைக் கொண்டு, தஞ்சை மாவட்டத்தில் உற்பத்தி பன்மடங்காகப் பெருகியுள்ளது.

## புதியதோர் திட்டம்

பன்முறை விளைச்சல் திட்டத்தை மேற்கொள்ள அரியானா, குஜராத், மகாராஷ்டிரா மாநிலங்களும் முயற்சியெடுத்துக் கொண்டுள்ளன.

இவ்விளைச்சல் திட்டத்தை குறுகிய கால பயிர்களுக்கே செயல் படுத்துவது என்று தீர்மானிக்கப்பட்டது. அவற்றில் நெல், மக்காச்சோளம், சோளம், கம்பு, கோதுமை பயிர்கள் அடங்கு வன. ஆனால், அண்மையில் பார்லி, ராகி, எண்ணெய்வித்துக் கள், உருளைக்கிழங்கு, காய்கறிகளும் சேர்த்துக்கொள்ளப்பட் டுள்ளன.

சிறு சேமிப்புத் திட்டத்தில் புல்தானு மாவட்டம் (மகாராஷ்டிரா மாநிலம்) சிறப்புற்று விளங்குகிறது. இம்மாவட்டத்தில் நடைபெற்ற சிறுசேமிப்பு இயக்கம் பெருமளவில் வெற்றியைத் தேடித் தந்துள்ளது. இம்மாவட்டத்தில் மட்டும் 21 லட்சம் ரூபாய் சிறுசேமிப்பிற்கென திரட்டப் பெற்றுள்ளது. இது தவிர, பல்வேறு சிறு சேமிப்பு முதலீடுகளில் 60 லட்சம் ரூபாய்களை புல்தானு மக்கள் முதலீடு செய்துள்ளனர் என்பது மிக்க மகிழ்ச்சி தரும் ஒரு செய்தியாகும். இத்தொகைகளை வெறும் புள்ளி விவரங்கள் என்ற அளவிலேயே எண்ணுவதைத் தவிர்த்து, மக்களிடையே ஏற்பட்டுள்ள சிறு சேமிப்பு உணர்ச்சியை சீர்தூக்கிப் பார்ப்பது சாலச் சிறந்ததாகும்.

**1966-67**-ம் ஆண்டில் மட்டும் இம்மாவட்டத்தில் 10,000 அஞ்சலக சேமிப்புக் கணக்குகளையும், 2,000 வளரும் சேமிப்புத் தொகை கணக்குகளையும் தொடங்குவதென திட்டமிடப்பட்டது. மக்களின் ஒத்துழைப்பும், ஆர்வமும் பெருமளவில் இருந்ததனால், திட்ட இலக்கைவிட 350 சதவீதம் அதிகமாகவே சாதனை கிடைத்தது. அவ்வாண்டின் இறுதியில் 35,152 அஞ்சலக கணக்குகள் தொடங்கப்பட்டதுடன், 7,727 வளரும் சேமிப்புத் தொகை கணக்குகள் ஆரம்பிக்கப்படலாயின.

1966-67-ம் ஆண்டின் சாதனை இம்மாவட்டத்திற்கே ஓர் அரிய வெற்றியென எண்ணினால், அடுத்த ஆண்டில் அடைந்துள்ள வளர்ச்சி ஒரு மாபெரும் முன்னேற்றமாகும்.

1966-67-ம் ஆண்டில், 12,000 அஞ்சலகக் கணக்குகளும் 1,500 வளரும் சேமிப்புத் தொகை கணக்குகளும் தொடங்குவதற்கு ஆவன செய்யவேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது. ஆனால் ஆண்டின் இறுதியில் 56,026 அஞ்சலகக்கணக்குகள், 6,757 வளரும் சேமிப்புத் தொகை கணக்குகளும் தொடங்கப்பட்டிருந்தன. இது திட்டஇலக்கை விட 450 சதவீதம் கூடுதலான முன்னேற்றமாகும்.

### "சேமிப்பு மாவட்டம்"

இவ்வரிய வெற்றிக்குக் காரணம், சேமிப்பு இயக்க அலுவலர்களின் தளராத உழைப்பும் மக்களின் ஒன்றுபட்ட ஒத்துழைப்புமே யாகும் என்பது வெளிப்படை. மாவட்டம் முழுவதையும் "சேமிப்பு மாவட்டமாக" மாற்றுவதே, திட்டத்தின் அடித்தள நோக்கமாகும். அது விரைவில் நிறைவேறலாம்.

இம்மாவட்டத்திலுள்ள கிராமங்கள் அனைத்தும் ஒன்றையொன்று போட்டியிட்டுக்கொண்டு, சேமிப்புத் துறையில் முன்னேறுகின்றன. ஒவ்வொரு கிராமமும், "சேமிப்பு கிராமம்" என்ற விருதைப் பெற பெரிதும் ஆர்வம் காட்டுகின்றன. இம்மாவட்டத்திலுள்ள 1224 கிராமங்களில், 328 கிராமங்கள் "சேமிப்பு கிராமங்கள்" என்ற விருதைப் பெற்றுவிட்டன.

### சேமிப்புத் திட்டத்தில் போட்டி மனப்பான்மை

கிராமங்கள் மட்டுமே இதில் போட்டியிடுகின்றன என்று கொள்வதற்கில்லை. சமிதிகளும் ஒன்றையொன்று முந்திக்கொண்டுவிடுகின்றன. மோடலா, சிகான் என்ற இரு ஊராட்சி சமிதிகள் முழுவதுமே சேமிப்பு இயக்கத்தில் பங்கு பெற்றுள்ளன.

மோடலா ஊராட்சி சமிதியிலுள்ள 14,273 குடும்பங்களும், சிகான் ஊராட்சி சமிதியிலுள்ள 17,220 குடும்பங்களும் சிறுசேமிப்பு திட்டத்தில் பங்கு பெற்றுள்ளன.

### "சேமிப்பு நகரங்கள்"

நகரங்களும் இத்திட்டத்தில் பின்னடைவதில்லை. நந்துரா, டியூல்கான், மெஹ்கார், சிகான் ஆகிய நான்கு நகரங்களும் 'சேமிப்பு நகரங்கள்' என அழைக்கப்படுகின்றன.

இரு ஊராட்சி சமிதிகளை, சிறு சேமிப்புத் திட்டத்தில் முதன் முதலில் கொண்டு வந்த பெருமை புல்தானு மாவட்டத்தையே சாரும் என எளிதில் கூறலாம்.

### மக்களின் ஆர்வம்

அதிகாரிகளின் ஒருங்கிணைந்த முயற்சி, மாவட்ட பரிஷத்தின் உற்சாகம் இதற்கு உறுதுணையாக இருந்தும், மக்கள் இத்திட்டத்திற்கு காட்டிய ஊக்கமும், அதில் தாமாகவே பங்கு பெற முன் வந்த அவர்களின் ஆர்வமுமே இத் திட்டம் பெருமளவில் வெற்றியடைந்ததற்கு சிறப்பான காரணங்களாகும்.




# சீரிய பணியாற்றும் நகராட்சிகள்

## விழுப்புரம் நகராட்சி

### முன்னோடி குடிநீர்த்திட்டம்

இந்நகராட்சியில் குடிநீர் வசதிக்கு வீட்டுக்கிணறுகளும், நகராட்சிப்பொதுக் கிணறுகளும் இருக்கின்றன. இருப்பினும் அவை பாதுகாக்கப்பட்ட இனிய நீர் அன்று. எனவே மக்கட்கு பாதுகாக்கப்பட்ட குடிநீரின் அவசியத்தை, இந்த நகராட்சி மன்றம் உணர்ந்து, பாதுகாக்கப்பட்ட நீரளிப்புத் திட்டத்தை இந்நகருக்கு ஏற்படுத்த ஆய்வு வேலைகளை மேற்கொள்ளுமாறு அரசினரை வேண்டிக்கொண்டது. அதற்கிணங்க ஆய்வு வேலை 1959-ம் ஆண்டு அனுமதிக்கப்பட்டு, 1960-ம் ஆண்டு தொடங்கி முடிக்கப்பட்டது. பின்னர் இந்நகருக்கு நீரளிப்பு திட்டத்தை அரசினர் அனுமதித்தனர்.

இந்நீரளிப்பு திட்டத்தின் மதிப்பீடு ரூ. 34.07 லட்சம் ஆகும். 1967-68-ம் ஆண்டு, 1968 மார்ச் மாதம் முடிய இந்நீரளிப்பு திட்டத்திற்கு கீழ்க் குறிப்பிட்டுள்ளவாறு ரூ. 28,67,150 செலுத்தப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | நகராட்சி நிதியிலிருந்து | 2,59,150 |
| 2. | அரசினரிடமிருந்து கடனைப் பெற்று செலுத்தியுள்ளது | 26,08,000 |
| | | 28,67,150 |

இந்நகருக்கருகிலுள்ள பெண்ணையாற்றிலிருந்து நீர் அளிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் 1966-ல் இந்நகரில் எதிர்பார்க்கப்படும் மக்கட் தொகையான 80,000 நபருக்கு நாளொன்றுக்கு 15 காலன் வீதம் வழங்கக்கூடியதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் விரைவில் முடிவடையும் தருவாயிலுள்ளது.

இத்திட்டத்தின் பணிகள் ஓரளவு முன்னேற்றம் கண்டபோது மக்கள் உடனடியாக அதன் பயனைப்பெற முன்னோடித் திட்ட மொன்றை அமைக்க அரசினர் அனுமதி மன்றத்தால் கோரப்பட்டது. அரசும் ரூ. 20,300 செலவில் இத்திட்டத்தை அமைக்க உத்தரவிட்டது.

இத்திட்டப்பணிகள் அனைத்தும் முடிக்கப்பெற்று, 1968-ம் ஆண்டு ஜூலை மாதம் 3-ம் தேதி அன்று தமிழக அரசு மாண்புமிகு கல்வி, தொழில்துறை அமைச்சர் திரு இரா. நெடுஞ்செழியன் அவர்களால் துவக்கி வைக்கப்பட்டது.

இத்திட்டத்தின்படி குடிநீர் விநியோகக் குழாய்களின் மூலம் நகரில் பல்வேறு பகுதிகளில் கட்டப்பட்டிருக்கும் 40 குடிநீர் குழாய்கள் மூலம் பொது மக்களுக்கு நீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் மூலமாகவும் அடுத்து முடிவு பெறவிருக்கும் பெரும் திட்டத்தின் மூலமாகவும் இந்நரகமானது சுகாதாரத்திலும் தொழில் முன்னேற்றத்திலும் வர்த்தக வளர்ச்சியிலும் மேம்பாடு அடையும் என உறுதியாக நம்பலாம்.

### 2. பயணி விடுதிக் கட்டிடத் திறப்பு விழா

இந்நகராட்சியால் நான்கு அறைகள் கொண்ட பயணி விடுதி ஒன்று நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. இந்நகர் சென்னைக்கும், திருச்சி, மதுரை முதலானவைகளுக்கும் நடுவே அமைந்துள்ளதால், இந்நகராட்சி பயணி விடுதி பெரிதும் விரும்பப்படுகிற அளவில் உள்ளது. அத்துடன் உபயோகிப்போரின் தேவையும் பெருகி வரலாயிற்று. பெருகிவரும் இத்தேவையைப் பூர்த்திசெய்யும் வகையில் மதிப்பீட்டுச் செலவு ரூ. 8000-ல் இரு அறைகள் கொண்ட ஒரு புதுக்கட்டிடம் இம்மன்றத்தால் கட்டி முடிக்கப்பட்டது. அதனை 1968-ம் ஆண்டு ஜூலை மாதம் 3-ம் தேதி அன்று தமிழக அரசு மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு எ. கோவிந்தசாமி அவர்கள் திறந்துவைத்தார்.

## கடையநல்லூர் நகராட்சி

(திருநெல்வேலி மாவட்டம்)

கடையநல்லூர் நகராட்சி முத்துக்கிருஷ்ணபுரம் முத்தாரம்மன் கோவில் தென்வடல் தெருவில் பொது மக்கள் போக்குவரத்திற்கு வசதி செய்து கொடுக்க சுமார் ரூ. 1,500-செலவில் விரி சுவர் கட்டப்பட்டது. கலந்தர் மஸ்கான் தெருவில் பொதுமக்கள் போக்குவரத்திற்கு வசதி செய்து கொடுக்க சுமார் ரூ. 845-செலவில் ஓடையை பழுது பாத்து செப்பனிடப்பட்டது. இந்நகரில் சில முக்கியமான சந்திப்பு உள்ள இடங்களில் இரவு காலங்களில் பொதுமக்கள் போக்குவரத்திற்கு இடைஞ்சல் இல்லாத நிலைமையில் புதிதாக 53 மின்சார விளக்குகள் அமைத்து வசதி செய்து கொடுக்கப்பட்டுள்ளது.

## திருவள்ளூர் நகராட்சி

திருவள்ளுவர் நகராட்சி இயற்றிய தீர்மானத்தில் 1968-69-ம் ஆண்டிற்கு . நீரளிப்பு முன்னோடி திட்டத்திற்கு பொது சுகாதார பொறியியல் இலாக்காவினரால் பராமரிக்கும் செலவை ஏற்றுக்கொள்ளத் தீர்மானித்தது.

தற்போது இந்நகர்மன்றத்தின் சுகாதார பணியாளர்களின் எண்ணிக்கை குறைவாக இருக்கிற காரணத்தால், மேலும் ஆறு பேர்களை மேலதிகாரிகளின் நியமிக்க நகராட்சி தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

தென் பிராந்திய ரயில்வே உபயோகிப்பவரின் ஆலோசனைக் குழுவுக்கு இந்நகர் மன்றத்தின் பிரதிநிதியாக திரு. கே. ஆனைவந்தார், நகர்மன்ற தலைவரை இந்நகர் மன்றம் தேர்ந்து எடுத்திருக்கிறது.

இந்நகர் மன்றத்திற்கு வருவாயை பெருக்குவதற்கான சாலை ஓரங்களில் பெட்டிக் கடைகளை நிறுவத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

மதுரை, திருச்சி, திருநெல்வேலி, மற்றும சேலம் போன்ற முக்கிய நகரங்களிலிருந்து வரும் இலங்கை அகதிகளின் வியாபார சௌகரியத்திற்கு, அங்காடிகள் கட்டி. அவர்களுக்கு குத்தகைக்கு விடவும் அதற்காக ஒரு லட்சம் ரூபாய் அரசினரிடம் மான்யமாக கோரவும் இந் நகர்மன்றம் தீர்மானித்துள்ளது.


டி. 825, கும்பகோணம் தாலுக்கா கூட்டுறவு விற்பனைச் சங்கம் லிமிடெட்

(வரையறுக்கப்பட்டது)

காரைக்கால் ரோடு : கும்பகோணம்.

பணி

கும்பகோணம், திருவிடைமருதூர் ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த விவசாயப் பெருங்குடி மக்களுக்கு:

32 கிராம கூட்டுறவுக் சடன் விவசாயக் கடன் சங்கங்களின் மூலமாக, தேவையான பல்வேறு வகைப்பட்ட ரசாயன உர வகைகளையும் உரிய காலத்தில் வழங்கி வருகிறோம்.

மேலும், இந்த ஆண்டு குறுவை மகசூலில், தஞ்சை கூட்டுறவு வர்த்தகக் கழகத்தின் ஏஜண்டாகப் பணிபுரிந்து, கும்பகோணம் தாலுக்காவிலுள்ள 41 கிராம கூட்டுறவு விவசாயக் கடன சங்கங்களின் ஒத்துழைப்புடன் ஏறத்தாழ 1,50,000 மூட்டைகளுக்கு மேல் நெல் கொள்முதல் செய்து, விவசாயப் பெருங்குடி மக்கள் பல்வேறு வகைகளிலும் பலன் அடையும்படி செய்துள்ளோம் என்பது குறித்து மகிழ்ச்சியடைகிறோம்.

நோக்கம்

விவசாயப் பெருங்குடி மக்களிடமிருந்து தமிழக அரசினால் நிர்ணயிக்கப்பட்ட விலையில், சரியான எடையுடன், தரமான நெல்லைக் கொள்முதல் செய்வதன் மூலம், நேர்மையையும், நாணயத்தையும் எல்லா நிலைகளிலும் கடைப்பிடிக்கும்படி செய்தலும், விவசாயத் தேவைகளை உடனுக்குடன் கிடைக்கச் செய்வதும் எங்கள் குறிக்கோளாகும்.

உங்கள் விவசாயத் தேவைகளுக்கு

எங்கள் சங்கத்தை அணுகுங்கள்

இதுவரை நீங்கள் இச்சங்கத்தில் உறுப்பினராகாவிடில் உடன் சேர்ந்து பயன் அடையுங்கள்.

தலைவர் :

கி. ரா. சிவப்பிரகாசம்

கோ. சுப்ரமணியன்,
உதவி செயலாளர்.

து. ஜெயராமன்,
செயலாளர்.




[ஆட்சிமொழி-பயிற்சி மொழி—32-ம் பக்கத் தொடர்ச்சி.]

தேர்வுகளில் பட்டதாரிகளுடைய தமிழ் மொழியறிவையும் ஆங்கில மொழியறிவையும் சோதிப்பதற்குரிய தேர்வுகளோடு, அவர்கள் கற்ற விருப்பப்பாடங்களிலும் அவர்கள் அடைந்துள்ள பயிற்சியின் தரத்தைச் சோதனை செய்வதற்கான தேர்வுகளும் இடம் பெறுகின்றன. அந்தத் தேர்வுகள் இப்போது ஆங்கிலத்தில் நடைபெறுகின்றன. அதனால் தமிழைப் பயிற்சி மொழியாகக்கொண்டு பட்டம் பெறுகின்ற மாணவர்களுக்கு இடைஞ்சல் ஏற்படும். எனவே, அந்தத் தேர்வுகளெல்லாம் தமிழிலேயே நடைபெற வேண்டுமென்று அரசு ஆணை பிறப்பிக்கலாமா என்பது கேள்வி. இன்றைய நிலையில் அரசு அததகையதோர் ஆணையைப் பிறப்பிக்கமுடியாது. ஏனெனில் இப்போது புகுமுக வகுப்பிலும் பி.ஏ, பி.எஸ்.ஸி., வகுப்புகளிலும் ஆங்கிலம் தமிழ் ஆகிய இரண்டுமே பயிற்சி மொழிகளாக இருக்கின்றன. எனவே, தமிழக அரசு அலுவலர் தேர்வுக்கழகம் நடத்துகின்ற தேர்வுகளில் கலந்து கொள்கின்றவர்கள் . தாங்கள் பயின்ற விருப்பப்பாடங்களைத் தமிழிலும் எழுதலாமென்று ஆணை பிறப்பித்தால் இப்போதைக்குப் போதுமானது. இந்த விஷயமும் அரசினர் கவனத்தில் இப்போதிருக்கின்றதென்று நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். மைய அரசு தேர்வுக்கழகம் நடத்துகின்ற அகில இந்திய ஊழியர்களின் போட்டித் தேர்வுகளை மாநில மொழிகளிலும் 1969-ம் ஆண்டிலேயே நடத்தப்போவதாக மைய அரசினிடமிருந்து நமது அரசுக்கு இப்போது ' தகவல் வந்திருக்கின்றது. எனவே, தமிழைப் பயிற்சிமொழியாக்குவதன் மூலம வேலை வாய்ப்புக்கள் குறைந்துவிடுமென்று நினைப்பதற்கு எந்தவிதக் காரணமும் இல்லை. மேலும், தமிழைப் பயிற்சி மொழியாகக்கொண்டு பட்டம் பெற்றவர்களுககு வேலை தருவதில் அரசுதுறைகள் சிலவற்றில் தனிச் சலுகை தரப்படுமென்று மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் பல மேடைகளில் கூறி இருக்கிறார்கள். எந்தத் துறைகளில் இந்தத் தனிச்சலுகை தரலாமென்று விஷயமும் இப்போது அரசினர் ஆய்வில் இருக்கின்றது.

தமிழைக் கல்லூரிப் பயிற்சி மொழியாக்கும் இந்த நேரத்தில் தமிழில் தேவையான பாடநூல் பார்வைநூல் இருக்கின்றனவா, தேவையான எண்ணிக்கையில் கலைச் சொற்கள் இருக்கின்றனவா, ஆசிரியர்கள் தமிழ் கற்பிப்பதற்குப் போதுமான திறன்களைப் பெற்றிருக்கின்றனரா என்ற கேள்விகள் எழுகின்றன. கல்வியின் தரம் குறையாமல் இருக்க வேண்டுமானால் இந்த மூன்று விஷயத்திலும் நாம் போதுமான அளவு கவனம் செலுத்த வேண்டுவது இன்றியமையாதது. பாடநூல்கள், பார்வை நூல்கள் ஆகியவற்றைப் பொறுத்தவரையில் நம்முடைய முயற்சி இப்போது தொடக்க நிலையில்தான் இருக்கின்றது என்பதை மறுக்கமுடியாது. எனினும் இன்னும் ஓர் ஐந்தாண்டுகளுக்குள்ளே ஒவ்வொரு பாடத்திற்கும் தரமான பல நூல்களைத் தமிழ் வெளியீட்டுக் கழகமும் தனியார்த் துறையினரும் வெளியிடுவார்கள் என்று நாம் நம்பலாம். தமிழைப்பயிற்சிமொழியாகச் செய்த பின்னரே நூல்களை எழுதுவதற்கும் வெளியிடுவதற்கும் தனியார்த் துறையில் ஆர்வம் பிறக்கும். தமிழ் வெளியீட்டுக் கழகம் பலதுறைகளிலும் ஏராளமான நூல்களை வெளியிடுவதற்குரிய திட்டம் ஒன்றினை வகுப்பதற்காக, அரசு முயன்று கொண்டிருக்கிறது. இதற்காக 'பொருளுதவி செய்வதற்கு மைய அரசும் இணங்கியிருக்கின்றது. எனவே, நாளடைவில் தேவையான நூல்கள் போதுமான எண்ணிக்கையில் வெளிவரும் என்று நம்பலாம்.

### அரசினரின் ஆக்கப்பணிகள்

தமிழை பயிற்சிமொழியாக்கப் வேண்டுமென்று தமிழக அரசு முடிவு செய்தபோது கல்லூரித் தமிழ்க்குழு ஒன்று நியமிக்கப்பெற்றது. அந்தக் குழுவின் வேலையில் திரு. ஜி.ஆர். தாமோதரன் அவர்களும், பேராசிரியர் சி. வேலாதயும் அவர்களும் காலஞ்சென்ற அரசுத்துணைச் செயலாளர் திரு. கண்ணையன் அவர்களும் மிகத்தீவிரமாக ஈடுபட்டார்கள். அதன் பின்னர் அந்த வேலையைச் செய்வதற்சாக 1962-ம் ஆண்டு எப்ரல் மாதம் முதல் தேதியன்று தமிழ் வெளியீட்டுக் கழகம் நிறுவப்பெற்றது. கடந்த ஆறு ஆண்டுகளாக அந்தக் கழகம் கல்லூரிப்பாடநூல்களை வெளியிடும் வேலையில் ஈடுபட்டுள்ளது. 15—8—1968 தேதியன்று வெளிவந்த பத்து நூல்களையும் சேர்த்துக்கணக்கிட்டால், தமிழ் வெளியீட்டுக் கழகம் இதுவரையில் வெளியிட்டிருக்கிற நூல்களின் எண்ணிக்கை 160 ஆகும்.

நூலாசிரியர்களும் கல்லூரி ஆசிரியர்களும் தங்களுடைய வேலையைச் சரிவரச் செய்யவேண்டுமென்றால், அவர்களிடத்தில் தேவையான கலைச்சொற்கள் இருக்கவேண்டும். இந்தத் துறையில் நாம் உடனடியாகக் கவனம் செலுத்த வேண்டும். இப்போது கோவை கலைக்கதிர் அலுவலகத்

[46-ம் பக்கம் பார்க்க.]


திட்டமிட்ட குடும்பம்-தெவிட்டாத இன்பம்

நமது இலட்சியம்

* மக்கள் தொகைப் பெருக்கத்தை 41'லிருந்து 25'க்கு கொண்டுவரவேண்டும்

** குழந்தை பிறப்பிக்கக்கூடிய நிலையில் உள்ள 90 மிலியன் தம்பதிகள் 'சிறு குடும்பம்' என்ற கொள்கையை ஏற்றுக்கொள்ள வேண்டும்.

*** இத் தம்பதிகளில் குறைந்த பட்சமாக 50 சதவிகித தம்பதிகளாவது குடும்பக் கட்டுப்பாடு முறைகளை நடைமுறையில் முழுக்க முழுக்க அனுசரிக்கச் செய்யப்படவேண்டும்.

 [4-ம் பக்கத் தொடர்ச்சி]

பிரம்பு நாற்காலிகள்! அவற்றில் முதல்வரைக் காணவந்தவர்கள். தரையில் வண்ணக் கயிற்றாலான விரிப்பு! பளபளப்பான டீ பாய்கள்! ஒரு புறம் உள்ள அலமாரியில் மக்களிடம் அவருக்குள்ள பிடிப்பை உணர்த்தும் பரிசுப் பொருள்கள்!

பார்வையாளரைப் பாதுகாப்பு அலுவலர் தம் கண்ணாலே அளந்துகொள்கிறார்!

உள்ளே நுழைகையில், முதல்வர் அண்ணா அவர்களின் படம்—பல் தெரிய, மலர மலரச் சிரிக்கும் படம்! சென்னை கலைக் கல்லூரி மாணவர்கள் அன்பளிப்பாம் அது!

அடுத்து, திரைவிலக்கிச் சென்றால், வலப் புறத்தில் முதல்வரைச் சந்திக்கும் கூடம். கூடத்தின் வடமேற்குக் கோடியில் கிழக்குப் பார்த்தவாறு அண்ணா அமர்ந்திருக்கிறார். அவருக்கு இடப்புறம் சிறிது தள்ளி, அண்ணா அவர்களின் தனிச் செயலாளர் திரு சொக்கலிங்கம் அமர்ந்திருக்கிறார்.

## கடுஞ்சொல் அல்லர்

கூடத்தின் அடக்கமும் எளிமையும் காட்சியழகும் கண்ணையும் கருத்தையும் நிறைகின்றன. சுவர்களில் நாற்புறமும் அணி அணியாய் அமைந்து வரிசை செய்கின்றன வரவேற்புரைகளும், வாழ்த்துரைகளும்

கீழே கயிற்று விரிப்பு! 10, 12 சோபாக்கள், பிரம்பு நாற்காலிகள்! அவற்றுக்குக் கதர்த் துணியாலான உறைகள்! ஒரு புறம்,

'தூங்காமை கல்வி துணிவுடைமை இம்மூன்றும்
நீங்கா நிறைபெற்று ஆளவந்த அண்ணாவை'

வாழ்த்திக் கொண்டு ஒரு நிலைக் கண்ணாடி—குடிசை வாழ் மக்களின் தெளிந்த மனத்தின் பிரதிபலிப்பான அன்பளிப்பு அது! முதல்வருக்கு அவ்வப்போது செய்திகளைச் சொல்ல கூடத்தின் ஓரத்தில் ஒரு டெலிபிரிண்டர்!

கைகூப்பி மகிழ்ச்சியோடு வரவேற்கிறார் அண்ணா! கட்டிடத்தில், கடைகாலில் விரிசல்! ஆனால்கலசத்தில் பளபளப்பு!'என்று கிராமங்கள் புறக்கணிக்கப் பட்டதைச் சுட்டிக்காட்டி கிராமங்கள் நலம்பெற வழிகாணும் முதல்வரிடம் நாம் புதிதாகச் செய்தி கேட்டுத் தொல்லை தர வேண்டாமென்று ஒதுங்கிக் கொண்டு, காத்திருக்கும் பார்வையாளரை அனுமதிக்கச் சொல்கிறோம். காலையில் கிட்டத்தட்ட 8·30 மணிக்கு பார்வையாளர்களைப் பார்க்கத் தொடங்கிய அண்ணா அவர்கள் 10·00, 10·30 மணிக்கு அதனை முடித்துக் கொண்டு கோட்டைக்குச் செல்ல தயாராகிறார்.

மேலே மாடியில், வலப்புறத்தில் (சிறப்பு விருந்தினரை வரவேற்கும்) வனப்புமிக்க எழிற் கூடம் இருக்கிறது. விண்ணிலே விதானம் மேலே! மரகதப் பச்சை விரிப்பு கீழே! மென் காற்றில் அசைந்து கொடுக்கும் வெளுர் மஞ்சள் திரைச் சீலைகள்! எளிமையுடன் அமைதியும் அழகும் ததும்பும் ஓர் அற்புதமான சூழ்நிலை அது! அதுதான் மிக முக்கியமானவர்களுடன் முதல்வர் அண்ணா அவர்கள் கலந்துரையாடும் கவின் மிகு கூடம்! சுவரில் ஒரு புறம் முதல்வர் படம் எதிர்ச் சுவரில் அவரை அருமையோடு வளர்த்து ஆளாக்கிய தொத்தா இராசாமணி அம்மையாரின் படம். அதோ அந்தப் பக்கம் அமெரிக்கப் பயணத்தின் போது வாடிகன் நகரத்தில் போப்பாண்டவரைச் சந்தித்துப் பேசுகையில் எடுக்கப்பட்ட வண்ணப் படம்.

## எதிர்காலத்தின் விடிவெள்ளி

ஒரு புறம் (Seal of the Common wealth of Puert rico) அதன் விளக்கம் பட்டோலைபோல் தொங்குகிறது. இருபுறங்களிலும் கண்ணாடிக் கதவிட்ட காட்சிப் பொருள் வைப்பறைகள்! அவற்றில் கைவினை வல்லார் கருத்துடன் செய்த கண்கவர் வண்ணக் கலைப்பொருள்கள் அழகுற அடுக்கி வைக்கப் பட்டிருக்கின்றன. அவற்றில் சில அண்மைக் காலப் பரிசுகள்! பல அவர் முதல்வராகு முன்பே அளிக்கப் பட்டவை! சிந்தனையைத் தூண்டும் ஜப்பான் நாட்டுக் கலைப் பொருள்களும் உள்ளன. ஒரு புறம் வாயைப் பொத்தி — கண்ணைமூடி — காதை அடைத்த மூன்று குரங்குகள் காந்தியடிகளின் அறிவுரையை நினைவு படுத்திக் கொண்டிருக்கின்றன.

அழகிய தாங்கி ஒன்றின் மேலே மரத்திற் செதுக்கிய மலேசிய நாட்டு ஏழைத் தொழிலாளியின் சிலை! 'வதைப்படத்தான் பிறந்தோமா வகைபடவே வழியில்லையா' என்று ஏங்கிச் சாம்பும் ஏழையரின் கண்ணீர் துடைக்கத் துடிக்கும் முதல்வர் அண்ணா அவர்களின் மனத்துக்கு ஒரு விளக்கம் அது!

அந்த அறையின் தென்புறமும் மேற்புறமும் முதல்வரின் குடும்பத்தார் வதியும் பகுதி!

நம்முடைய முதல்வர் அண்ணா அவர்களின் துணைவியார் திருமதி இராணி அம்மையார் அவர்களை அண்ணி என்றே அனைவரும் அன்புடன் அழைக்கிறார்கள். அண்ணா மனைவி அண்ணிதானே! அவர்களைத் தவிர, அண்ணாவின் மக்கள் பரிமளம், இளங்கோவன், கௌதமன், பாபு, திருமதி சரோஜா பரிமளம்; திருமதி விசயா இளங்கோவன், குழந்தைகள் மலர் மன்னன், கண்மணி ஆகியோரும் அந்த வீட்டில் இருக்கிறார்கள்.

வீட்டுப் பொறுப்புகள் அனைத்தையும் மருமக்கள் உதவியோடு அண்ணியாரே திறம்பட நிர்வகிக்கிறார்!

அத்துடன் இல்லை, திருமதி இராணி அம்மையார், இராசாமணி மகளிர் மன்றம் போன்ற அமைப்புகளை நிறுவியும், பிற சமூக சேவை நிலையங்களோடு தொடர்பு கொண்டும் நல்ல பணியாற்றி வருகிறார்.

[45-ம் பக்கம் பார்க்கவும்]











படம் 1 : தமிழக அரசு பரிசுச் சீட்டு விற்பனையை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 15–8–68 அன்று துவக்கி வைத்தபொழுது, முதல் பரிசுச் சீட்டை மேதகு ஆளுநர் சர்தார் உஜ்ஜல்சிங் வாங்குகிறார்.

படம் 2 : தமிழ் வெளியீட்டுக் கழகப் புதிய வெளியீடுகளை, மாண்புமிகு கல்வியமைச்சர் தலைமையில், 15–8–68 அன்று, மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் வெளியிட்டார்.

படம் 3 : செஞ்சிலுவை சங்கத்தின் சென்னைக் கிளையினர் தேனாம்பேட்டையில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட குடிசைவாழ் மக்களுக்கு அளித்த ஆடைகளை, மாண்புமிகு பொதுப்பணி அமைச்சர் 7–8–68 அன்று வழங்கினார்.

படம் 4 : சென்னை அரசினர் தோட்டத்தில் மாநகர் காய்கறி விளைச்சல் திட்டத்தை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 9–8–68 அன்று துவக்கி வைத்தார்.



படம் 1, 2 : சோவியத் நாட்டில் வால்கா கிரேட் நகரில் வரிசையாக அமைக்கப்பட்டுள்ள வீரர்கள் சிலைகளை தூதுக்குழுவினர் பார்வையிடுகின்றனர்.

படம் 3 : ரோம் நகரில் ஜூலியஸ் சீஸர் சிலையின் முன்பு மாநகராட்சிக் குழுவினர்.

படம் 4 : வால்காகிரேட் நகரத் தலைவர்களுடன் தூதுக்குழுவினர்.

படம் 5 : வெளிநாட்டு சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு, 21-8-68 அன்று சென்னை திரும்பிய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரை, அமைச்சரவை சார்பில் மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு ஏ. கோவிந்தசாமி வரவேற்றார்.



[வெளிநாடுகளில் கண்ட..]

[12-ம் பக்கத் தொடர்ச்சி.]

வசதிகளைக்கொண்டு, கண்டறிந்து வந்தவைகள் அனைத்தையும் உடனடியாக நடைமுறைப் படுத்த இயலாது எனினும், இயன்றவரை முயன்று, முன்னேற்றம் காண முற்படுவோமாக!

பல்வேறு நாட்டு மக்களையும், அவர்களின் பண்பாடுகளையும், பழக்க வழக்கங்களையும் நிர்வாக முறைகளையும் இந்திய உபகண்டத்தின் மீது அவர்கள் கொண்டுள்ள நட்புறவையும் நல்லெண்ணத்தையும் அறிந்துகொள்ள, இப் பயணம் பெருந்துணை புரிந்தது என்பதில், துளியும் ஐயமில்லை.

தூதுக் குழுவில் இடம் பெற்ற உறுப்பினர்களான சென்னை மாநகர தந்தை டாக்டர் அபிபுல்லாபேக், முன்னாள் மேயர் திரு வி. முனுசாமி, திரு ஜி. உமாபதி, திரு ஹாஜி சிலார் மியான், சென்னை மாநகராட்சி ஆணையர் ஜே. ஏ. அம்பாசங்கர் ஆகியோர், கடமை புணர்வோடும், கண்ணியத்தோடும், கட்டுப்பாட்டோடும், பயணத்தைப் பயனுள்ளதாக்கினர். அக்குழுவினருக்கு என் நன்றி உரித்தாகட்டும்.

லண்டனில், பி.பி.சி. வானொலி நிலையத்திலிருந்து ஒலிபரப்பாகிய "ஊராளுமன்றத்திலிருந்து. பாராளுமன்றம் வரை" என்ற தலைப்பில் நடைப்பெற்ற கருத்தரங்கு நிகழ்ச்சியில், மாநகராட்சித் தூதுக் குழுவினர் அனைவரும், பங்கேற்றோம்.

புரட்சிக் கவிஞரும் லெனினும்

மாஸ்கோ வானொலி நிலையத்திலிருந்து 'லெனினது நாடு' என்னும் தலைப்பில் பேசும் வாய்ப்பைப் பெற்றேன். அப்பொழுது, பாவேந்தர் பாரதிதாசன் அவர்களின் "உலகம் உன்னுடையது" என்ற கவிதை வரிகளை எடுத்துக்கூற நேர்ந்தது! குறிப்பாக.

"மனிதரில் நீயுமோர் மனிதன் மண்ணன்று!
இமைதிற! எழுந்து நன்றாய் எண்ணுவாய்!
மீசையை முறுக்கி மேலே ஏற்று!
விழித்த விழியில் மேதினிக் கொளிசெய்!"

என்ற வரிகளை, நான் நினைவூட்டியபோது, அவை லெனின் அவர்களின் வீர உரைகளை எதிரொலிப்பதாக தமிழறிந்த சோவியத் நாட்டினர் கூறினர்.

அந்தந்த நாடுகளின் வானொலி நிலையங்கள் மட்டுமன்றி, நாங்கள் சென்ற இடங்களிலுள்ள செய்தித்தாள்கள் எல்லாம், எங்கள் வருகையைப் பற்றிய செய்திகளை, நன்கு வெளியிட்டு, நட்புறவுக்கு உரமூட்டின என்பதை, மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

வைகை நதி பாயும் வளமார் தமிழகத்தின் தலைநகராம் சென்னையும் வால்கா நதி பாயும் வால்காகிரேடும் நட்பு நகரங்களாக இணைந்துள்ளன. "யாதும் ஊரே யாவருங் கேளிர்" என்ற தத்துவத்திற்கு எடுத்துக் காட்டாய் விளங்குகின்ற இந் நட்புறவு, நாளும் வளர வேண்டும்! நாடு பயன் பெறவேண்டும்!!"

[வானொலிப் பேச்சு 1-9-68]

---

நாயகத்திலே தமிழக முதல்வர்: [42-ம் பக்கத் தொடர்ச்சி]

முதல்வரின் நேர்முக உதவியாளர்களான திருவாளர் எஸ். கஜேந்திரன், சாமிநாதன், பெருமாள் ஆகியோர் முறை போட்டுக்கொண்டு உதவி செய்கிறார்கள். இரவும் பகலும் இருபத்து நான்கு மணி நேரமும் பாதுகாப்பு ஏற்பாடுகளைக் கவனித்துக் கொள்வோர், திருவாளர்கள் இராமானுசம், கருப்பையா, செல்வம், என். அரங்கசாமி, இராமகிருஷ்ணன் ஆகியோர்!

ஆக்கப் பணிபுரியும் அண்ணன்

காலை 10-30 மணி அளவில் தலைமைச் செயலகம் புறப்படும் முதல்வர் இரவு எந்த நேரம் திரும்புவார் என்பதற்கு ஒரு கணக்கே இல்லை. அவர் வாழ்க்கை முறையே அப்படி! வீடு திரும்பியபிறகு, கடிதம் பார்க்கத் தொடங்கினால், இரவு இரண்டோ, இரண்டரையோ ஆகிவிடுகிறது. சில நாட்களில் விடியவிடிய 5·00 மணிவரைகூட விழித்திருந்துப் பொதுமக்களின் கருத்துரை நிறைந்த கடிதங்களைப் படிக்கிறாராம். ஒரு சிறு நுணுக்கம்கூட அவர் கவனத்திலிருந்து தப்புவதில்லை என்று துணைவர்கள் சொல்கிறார்கள்.

அமெரிக்கரல்லாத வேறு யாருக்குமே இது வரை கிடைக்காத யேல் பல்கலைக் கழகச் பெலோஷிப் கௌரவம் இந்திய மண்ணில் தமிழராய்ப் பிறந்த நம் முதல்வருக்கே கிடைத்த பெருமை போற்றத்தக்க ஒன்றாகும். தம் நிர்வாகத்தில் மத்திய அரசின் தலையீடுகள், வரம்பு மீறல்களை தாமஸ் ஜெபர்சனைவிட வாதத்திறமையோடு சந்தித்துக்கொண்டிருக்கும் நம் முதல்வர், அனைவரையும் அணைத்துக் கொண்டு ஆரவாரமின்றி அமைதியாக ஆக்கப்பணி செய்கிறார் என்று இந்திய நாடே அவரைப் பாராட்டிக் கொண்டிருக்கிறது.

"எல்லையற்ற வான மண்டலங்களின் ஆராய்ச்சியில் மூழ்கி, விசித்திரமான கோள்களையும் அதிசயக் கதிர்களைப் பொழிந்து தம் ஈர்ப்பு, ஆற்றலால் விரைந்து சுழன்றுவியப் பூட்டும் விண் மீன்களையும் காண்பதில் வெற்றி காணும் வான சாஸ்திரி போல, வங்க மக்களின் இதய வானில் புகுந்து, அவர்தம் விசித்திர மனோபாவங்களைக் காண்கிறார்."

என்று சரத் சந்திரரைப் பற்றி மகாகவி தாகூர் கூறிய புகழுரைகளை, நம் முதல்வர்மீது பொருத்துவதில் மிகையேதும் உண்டோ?

—(o)—

## திட்டமிட்ட குடும்பம்-தெவிட்டாத இன்பம்

நம் நாட்டில், உணவு உற்பத்தி 1951-ல் 55 மிலியன் டன்கள். 1965-ல் இது 72 டன் மிலியனுகப் பெருகியது.

ஆனல்—

தனி நபருக்கு கிடைக்கும் உணவின் சராசரி அளவு 12·8 அவுன்ஸ் என்றிருந்தது, 12·4 அவுன்சாகக் குறைந்துவிட்டது.

காரணம்—

140 மிலியன் மக்கள் என்ற அளவில் அதிகமாக மக்கள் தொகை பெருகிவிட்டதே !

---

ஆட்சிமொழி-பயிற்சிமொழி

திலும், சென்னைக் கலைக்களஞ்சிய அலுவலகத்திலும், தமிழ் வெளியீட்டுக் கழக அலுவலகத்திலும் சுமார் 20,000 கலைச் சொற்கள் இருக்கின்றன. ஆனல் இவையே போதுமென்று கருதுவது பேதமையாகும். ஹிந்தியில் இப்போது இரண்டு லட்சம் கலைச்சொற்கள் உருவாக்கப்பட்டுவிட்டன. அந்த கலைச்சொற்களை வைத்துக்கொண்டு பி.ஏ., பி.எஸ்.ஸி. வகுப்புக்களில் எவ்விதக் குறைப்பாடுமின்றி ஹிந்தியைப் பயிற்சி மொழியாக்க முடியுமென்று மைய அரசு கூறுகின்றது. கலைச் சொல்லாக்கத்திற்கென்றே மைய அரசில் ஒரு குழு இருக்கின்றது. அந்தக் குழுவில் 11 பேர் உறுப்பினர்களாக இருக்கின்றனர். அது நிரந்தரமான் ஒரு குழு. நாமும் போதுமான எண்ணிக்கையில் கலைச்சொற்களை உருவாக்குவதற்காக ஒரு நிரந்தரமான குழுவை நியமிக்கலாமா என்பதை முடிவு செய்யவேண்டும்.

### கல்வியின் தரம் குறையாமல்..

தமிழிலேயே எல்லா கலைச்சொற்களும் இருந்தால் தமிழ் மக்களுக்குப் பெருமகிழ்ச்சி ஏற்படுமென்பதில் ஐயமில்லை. ஆனல், பல்வேறு காரணங்களால், ஆங்கிலம், ஜெர்மன், பிரெஞ்சு, ருசியம் முதலிய மொழிகள் வளர்ந்திருக்கின்ற அளவுக்குத் தமிழ் வளரவில்லை என்பதை அறியாதார் யாரும் இலர். ஆதலால் தமிழில் இன்றைய தேவைக்கேற்ற கலைச்சொற்கள் இல்லை. எனவே கல்லூரிகளில் இப்போதே தமிழைப் பயிற்சிமொழியாக்குவதன்மூலம், கல்வியின் தரம் குறையாமல் பார்த்துக் கொள்வது இன்றியமையாதது. தரமான கல்வியென்ருல் மாணவர்கள் தாங்கள் விரும்பித் தெரிந்தெடுக்கின்ற துறைகளில் நல்ல செய்தியறிவுடையவர்களாகவும் அவர்களில் ஒரு சிலரேனும் ஆராய்ச்சி ஆர்வமும் திறனும் உடையவர்களாகவும் இருக்கவேண்டும் என்பது பொருள்.

நாள்தோறும் வளர்ந்துகொண்டே வருகின்ற பொருளாதார, விஞ்ஞான, தொழில் நுட்பத்துறைகளில் புதிய புதிய நூல்கள் வந்துகொண்டே இருக்கின்றன, அவற்றையெல்லாமே மொழிபெயர்ப்பது இயலாத காரியம். எனவே, அவ்வப்போது ஆங்கிலத்தில் வருகின்ற நூல்களையும் பருவ இதழ்களையும் படித்து புரிந்துகொள்வதற்கு ஏற்ற திறன் நமது கல்லூரி மாணவர்களிடத்திலும் ஆசிரியர்களிடத்திலும் இருக்கவேண்டும். ஆதலால் அவர்களுக்குப் போதுமான ஆங்கில அறிவு இருக்கவேண்டியது இன்றியமையாதது. ஆங்கில மொழியறிவோடு, அவர்கள் ஆங்கிலக் கலைச் சொற்களையும் அறிந்தவர்களாக இருக்க

[41-ம் பக்கத் தொடர்ச்சி]

வேண்டும். ஆங்கிலக் கலைச்சொற்கள் என்று சொல்வதற்குப் பதிலாக நாம் அகில உலகக் கலைச்சொற்கள் (International Technical Terms) என்று சொல்வது பொருத்தமாக இருக்கும். தமிழைப் பயிற்சிமொழியாக்குகின்ற இந்த நேரத்தில் நாம் ஆங்கில மொழியில் அடைந்துள்ள திறன்களை உயர்த்துவதற்கும் அகில உலகக் கலைச்சொற்களை அறிந்து கொள்வதற்கும் முயலவேண்டும். எனவே, தமிழிலேயே கலைச்சொற்களை உருவாக்கினுல்கூட நாம் எழுதுகின்ற நூல்களிலும் பேராசிரியர்களது சொற்பொழிவுகளிலும் அகிலஉலகக்கலைச் சொற்களும் கையாளப்படுவது இன்றியமையாதது. அவ்வாறில்லாவிட்டால் நமது மாணவர்களும் ஆசிரியர்களும் நாள்தோறும் நவநவமாய் வந்து கொண்டிருக்கும் ஆங்கில நூல்களை படித்து அவற்றிலுள்ள நவீனச் செய்தியறிவைப் பெற முடியாமற்போகும். அதன் விளைவாக, நமதுநாடு இன்றைய உலகில் அடையவேண்டிய முன்னேற்றத்தை அடையவே முடியாது.

### செய்தியறிவுக்கு முதல் இடம்

எனவே, நாம் பொருளாதார, விஞ்ஞானத் துறைகளில் மாணவர்களுக்குரிய பாடங்களைக் கற்பிக்கின்ற நேரத்தில் தமிழ் மொழியின் தூய்மையைக் கருதாமல் செய்தியறிவுக்கு முதன்மை கொடுப்பது இன்றியமையாதது. இதனை முதலமைச்சர் அவர்களும் கல்வியமைச்சர் அவர்களும் பல மேடைகளில் பலமுறை வற்புறுத்திக் கூறியிருக்கின்றனர். நூலாசிரியர்களும் கல்லூரிப் பேராசிரியர்களும் இதனை மறந்துவிடக்கூடாது. கல்லூரிப் பேராசிரியர்கள், தேவையானல், ஆங்கிலமும் தமிழும் கலந்த நடையை வகுப்புக்களில் பயன்படுத்தலாமென்றும், மாணவர்களும் ஆங்கிலத்திலேனும் தமிழிலேனும் விடைகளை எழுதலாமென்றும் தமிழில் எழுதுகின்றபோது ஆங்கிலக் கலைச் சொற்களைப் பயன்படுத்தி ஒரு கலப்பு நடையைக் கையாளலாமென்றும் கல்வியமைச்சர் அவர்கள் பலமுறை எடுத்துக்கூறியிருக்கிருர்கள். செய்தியறிவுக்கு முதன்மையும் மொழிக்கு இரண்டாமிடமும் கொடுக்கவேண்டுமென்பது தெளிவு. பொதுமக்களும் மாணவர்களும் பல்கலைக் கழக அதிகாரிகளும் கல்லூரிப்பேராசிரியர்களும் அரசின் கொள்கையை நன்கு உணர்ந்து, தமிழைக் கல்லூரிப் பயிற்சி மொழியாக்கும் திட்டம் வெற்றியடைவதற்குத் தேவையான எல்லா உதவிகளையும் செய்வார்களென்று நம்புவோமாக.

---

[தமிழக அரசின் மொழிக் கொள்கை, கல்லூரிகளில் தமிழ் பயிற்சி மொழி பற்றிய அரசின் விளக்கக் குறிப்பு அடுத்த இதழில் இடம்பெறும். திரு நெ. து. சுந்தரவடிவேலனர் தமிழக அரசின் தலைமைக் கல்வி ஆலோசகராக பதவியேற்ற பிறகு வெளியிடப்பட்ட குறிப்பு இது.]




## உழவர்களுக்குப் பயிற்சி

மிகு விளைச்சல் தரும் தானியங்களைப் பயிர் செய்வதற்குத் தேவையான பயிற்சியை உழவர்களுக்கு அளிப்பதற்கென, மத்திய பிரதேச மாநில அரசு, இரண்டு பயிற்சிப் பள்ளிகளைத் தொடங்கியுள்ளது. அப்பள்ளிகளில் ஒன்றிரண்டு வாரங்களுக்கு பயிற்சியளிக்கப்படுகிறது. தவிர, தீவிர உழவர்களுக்கென்று சிறப்பான முறையில் 2 முதல் மூன்று வாரங்களுக்கு தனியே பாடங்களும் சொல்லித் தரப்படுகின்றன.

## ஒவ்வொரு தாலுகாவிலும் நில அடமான வங்கிகள் :

உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு உதவக்கூடிய முறையில், உழவர்களுக்கு நீண்டகாலத் தவணையில் கடனுதவி அளிக்க பஞ்சாப் மாநில அரசு ஒரு திட்டம் உருவாக்கியுள்ளது. அதன்படி, ஒவ்வொரு தாலுகாவிலும் ஒரு கூட்டுறவு நில அடமான வங்கி அமைக்கப்படவிருக்கிறது.

## 'கிராமநலம்' துணுக்குகள்

### நில வளத்திற்கு வங்கிக் கடன் உதவி

புதிய கிணறுகளைத் தோண்டுவதற்கென ரூ. 83·5 லட்சமும், பழைய கிணறுகளை செப்பனிடுவதற்கென ரூ. 1·4 லட்சமும் கடன் உதவியாக உழவர்களுக்கு, அவுரங்கபாத்திலுள்ள மாவட்ட கூட்டுறவு நில வள வங்கி அளித்துள்ளது. 1,013 எண்ணெய் என்ஜின்களும் 475 மின்சார மோட்டார்களும் வாங்குவதற்கென ரூ. 99,76,800-ஐ இவ் வங்கி மேலும் கடனுக வழங்கியுள்ளது.

சுமார் 1,728 புதிய கிணறுகள் தோண்டப்பட்டுள்ளன. 80 பழைய கிணறுகள் செப்பனிடப்பட்டுள்ளன.

---

"பஞ்சாயத்து ராஜ்", "இன்டென்சிவ் அக்ரிகல்சர்" இதழ்களிலிருந்து இடம் பெறுபவை: பக்கங்கள் 19, 20, 21, 22, 37, 38, 47.

Articles reproduced from "Intensive Agriculture" on pages 22, and from "Panchayati Raj" on pages 19 to 21 and 37, 38 and 47.

ஜி. திருமால், எம்.ஏ., ஐ.ஏ.எஸ்.,
கிராம வளர்ச்சி இயக்குநர்.

கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகம்,
சென்னை-9.

நேர்முகக் கடித எண் : 160837/கி. வ. இ. கணக்கு. 4/68, தேதி : 4-9-1968.

அன்புடையீர்,

பொருள்.—ஆரம்பக் கல்வி—ஊராட்சி ஒன்றிய ஆரம்பப் பள்ளிகளில் குழந்தைகளைச் சேர்ப்பது—சம்பந்தமாக.

ஊராட்சி ஒன்றியங்களின் மிக முக்கிய பணி கல்விப் பணி என்பதனை அப்பணியினையே ஏற்று ஏற்றமுறச் செயல்படுத்தும் தங்களுக்கு நான் வலியுறுத்தத் தேவையில்லை. ஊராட்சி ஒன்றியங்கள் கல்விப் பணியினை ஏற்றுக் கொண்ட பின்னர், பற்பல ஆரம்பப் பள்ளிகள் ஆரம்பிக்கப்பட்டு, ஊருக்கு ஒரு பள்ளி நடைபெற்று வருவதை அனைவரும் அறிவோம். பள்ளிகள் பல ஆரம்பிக்கப்பட்ட போதிலும், பள்ளிக்கு அதன் சுற்று வட்டாரங்களிலே உள்ள பள்ளி வயதடைந்த எல்லாக் குழந்தைகளையும், எல்லாப் பெற்றோர்களும் அனுப்பிவைக்கிறார்கள் என்று சொல்ல முடியாது. இன்னும் பலர் பள்ளிகளில் சேர்க்கப்பட வேண்டியிருக்கிறது.

எனவே தாங்களும், ஆணையரும், கல்வி வளர்ச்சி அலுவலரும். ஊராட்சித் தலைவர்களும், கல்வித் துறையினரும் ஒன்று சேர்ந்து தங்கள் ஒன்றியத்திலுள்ள பள்ளி வயதடைந்த எல்லாக் குழந்தைகளையும் வருகின்ற 1-10-1968 (விஜயதசமி) அன்று, பள்ளிகளில் சேர்க்கத் தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டுகிறேன். பள்ளிகளில் எல்லாக் குழந்தைகளையும் சேர்த்துவிட்டால், அரசினரிடமிருந்து தங்கள் ஒன்றியத்திற்குக் கிடைக்கின்ற நிதி உதவியும் அதிகப்படும் என்பதும் தங்களுக்குத் தெரிந்ததே. பள்ளிக்கட்டிட நிதியாக, புதிதாக ஏற்படும் ஒவ்வொரு பள்ளி இடத்திற்கும் ரூ. 15 வீதமும், அதிகப்படியான ஆசிரியர்களின் 5%க்கு தலைக்கு ரூ. 1,000 வீதம் தற்காலிகக் கொட்டகைகள் அமைப்பதற்கும், 6—11 வயதினருக்குள்ள ஆசிரியர்களின் 10%க்கு தலைக்கு ரூ. 300 வீதமும், 11—14 வயதினருக்குள்ள ஆசிரியர்களின் 10%க்கு தலைக்கு ரூ. 350 வீதமும் பள்ளி உபகரணங்களுக்கும் அரசினர் நிதி அளிக்கின்றார்கள். இம்மாதிரி அளிக்கப்படும் மானியம், புதிதாக நியமிக்கப்பட்ட எல்லா ஆசிரியர்களுக்கும் கிடைக்காது. ஆனால் அதில் ஒரு பகுதியினருக்கே கிடைக்கும். இருந்த போதிலும், கிராம மக்களின் ஒத்துழைப்புடன் பள்ளிச் சீரமைப்பு வேலையாக பல தற்காலிக கட்டிடங்களை அமைப்பது அவ்வளவு கடினமான காரியமல்ல. ஆகவே இதுபற்றி உடனே செயல்படத் தொடங்குதல் நலம்.

பள்ளி வயதடைந்த குழந்தைகளனைவரையும் பள்ளிகளில் சேர்ப்பிப்பதோடுமட்டுமல்லாமல் ஊராட்சி சமூகக் கல்வி குழுக்களையும் தக்க முறையில் செயல்படுத்த வேண்டுமென்பதையும் நான் வலியுறுத்த விரும்புகிறேன். தங்கள் ஒன்றியத்தில் 24-9-1968 முதல் 1-10-1968 வரை கல்வி வாரமாகக் கொண்டாட வேண்டும் என்றும் விரும்புகிறேன்.

பள்ளிகளில் குழந்தைகளைச் சேர்ப்பிப்பதோடு மட்டுமல்லாமல், சேர்க்கப்பட்ட குழந்தைகள் ஒழுங்காகப் பள்ளிக்குச் சென்று கல்வி பயிலுவதையும் கவனித்துக் கொள்ளவேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். இதுபற்றித் தாங்கள் எடுத்த நடவடிக்கைகளை அறிய ஆவலுள்ளவனாக இருக்கிறேன்.

வணக்கம்.

தங்கள் அன்புள்ள,

ஜி. திருமால்.

பெறுநர்,
திரு
பெருந்தலைவர், ஊராட்சி ஒன்றியம்.

# ஊராட்சி அரசிதழ்

கிராமநலம் பகுதி 2
GRAMAHALAM PART-2

# PANCHAYAT GAZETTE

(இந்தப் பகுதியில் ஊராட்சி, ஊராட்சித் திட்டங்கள் பற்றிய அரசு ஆணைகள், குறிப்பாணைகள், விதிகள் முதலியவற்றின் தமிழாக்கம் சுருக்கமாக இடம் பெறுகிறது.)

---

## நன்னிலம் பேரூராட்சி (தஞ்சாவூர் மாவட்டம்) ஓராண்டுக் காலம் வரை கலைக்கப்படுகிறது.

## Panchayat—Nannilam Town Panchayat (Thanjavur District)—Dissolution for a period of one year—Ordered.

தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள நன்னிலம் பேரூராட்சியின் நிர்வாகம் மக்கள் நல்வாழ்விற்கு ஏற்ப செயல்படவில்லை என்பதும், உறுப்பினர்களால் உருவாக்கப்படும் இடையூறுகள், முட்டுக்கட்டைகள் காரணமாக அவ்வூராட்சி மனநிறைவு அளிக்கும் வகையிலோ, திறமையாகவோ செயல்படவில்லை என்பதும் அரசின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டுள்ளது. நன்னிலம் பேரூராட்சியில் உண்டாக்கப்படும் முட்டுக் கட்டையின் காரணமாக அவ்வூராட்சியின் நிர்வாகம் சீர்குலைந்து வருகிறது, அவ்வூராட்சியின் மீது சட்டப்படி ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகளை அது தொடர்ந்து புறக்கணித்து வருவதுடன் அதனுடைய அதிகாரங்களையும் அவ்வூராட்சி தவறுகக் கையாளுகிறது என்று அரசு கருதுகிறது. ஆகவே, 1968-ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் முதல் நாளிலிருந்து ஓராண்டுக் காலத்திற்கு அவ்வூராட்சியைக் கலைத்துவிட்டு, பின்பு 1969-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் நாளிலிருந்து மீண்டும் நன்னிலம் ஊராட்சியைப் புதிதாக அமைப்பது என்று அரசு தீர்மானித்து, அத் தீர்மானத்தை செயல்படுத்துவதற்கு எதிராகக் காரணங்கள் காட்டும்படி, 1958-ம் ஆண்டு தமிழக ஊராட்சிகள் சட்டத்தின் 154(2)-வது பிரிவின்படி அவ்வூராட்சிக்கு ஓர் அறிவிப்பு அனுப்பப் பட்டது.

1968-ம் ஆண்டு ஜூலை மாதம் 12-ம் தேதி அன்று கூட்டப்பட்ட ஊராட்சிக் கூட்டத்தில், அரசின் தீர்மானத் திற்கு எவ்வித ஆட்சேபனையும் தங்களுக்கு இல்லை யென்று எட்டு உறுப்பினர்கள் கூறியுள்ளனர். அரசு அனுப்பிவைத்த அறிவிப்பில் கண்டுள்ள காரணங்களை ஆறு உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டுள்ளனர். எனவே, அவ்வூராட்சியை ஓராண்டு காலத்திற்குக் கலைத்துவிட அவ்வூராட்சிக்கு எவ்வித மறுப்பும் இல்லை யென்பதை அரசு பரிசீலனை செய்தது. எனவே, ஊராட்சி

1968-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் நாளி லிருந்து ஓராண்டுக் காலத்திற்கு கலைக்கப்பட்டு, மீண்டும் 1969-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் முதல் நாளிலிருந்து புதிதாக அமைக்கப்பட வேண்டும் என்று அரசு ஆணை பிறப்பிக்கிறது.

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 31-8-1968 நாளிட்ட அரசு ஆணை 1752-ன் சுருக்கம்.)

## 1967-68-ம் ஆண்டுக்குரிய வரிகள் அனைத்தையும் முழுமையாக வசூல் செய்த பேரூராட்சிகளின் பெயர்கள்.

வரிசை எண் — பேரூராட்சிகளின் பெயர்கள்

### தஞ்சாவூர் மாவட்டம்

1. நன்னிலம்
2. குடவாசல்
3. சீர்காழி
4. திருக்காட்டுப்பள்ளி
5. கூத்தாநல்லூர்
6. ஆடுதுறை
7. அய்யம்பேட்டை
8. வில்லட்டூர்

### தென்ஆர்க்காடு மாவட்டம்

9. பரங்கிப்பேட்டை
10. ஸ்ரீமுஷ்ணம்
11. லால்பேட்டை
12. காட்டுமன்னார் கோயில்

### வட ஆர்க்காடு மாவட்டம்

13. கண்ணமங்கலம்
14. நாட்டராம்பள்ளி
15. உதயேந்திரம்
16. பேரணாம்பட்டு
17. ஆலங்காயம்
18. திமிரி
19. கலவை
20. சோளிங்கர்
21. தோறைபாடி
22. காவிரிப்பாக்கம்
23. பனம்பாக்கம்
24. போனார்

### கன்னியாகுமரி மாவட்டம்

25. தாமரைக்குளம்
26. இராஜக்கமங்கலம்
27. வில்லுக்குறி
28. திருவிச்சம்கோடு
29. பாகோடு
30. பாலுக்கல்
31. குன்னத்தூர்
32. ஏழுதேசம
33. மிதிலம்
34. கீழ்க்குளம்
35. கன்னியாகுமரி
36. அகஸ்தீஸ்வரம்
37. மருங்கூர்
38. சுசீந்திரம்
39. அழகப்பாபுரம்
40. நீண்டகரை—வடச்சேரி
41. தர்மாபுரம்
42. தெங்கம்புதூர்
43. தாழக்குடி
44. தோவாளை
45. அரம்போளி
46. பூதம்பாண்டி
47. அழகிய பாண்டியபுரம்
48. குளச்சல்
49. தாளக்குளம்
50. மணவாளக்குறிச்சி
51. கடியாப்பட்டினம்
52. இரணியல்
53. வளவச்சகோஷ்டம்
54. கூத்தநலலூர்
55. இடைக்கோடு
56. வில்லவங்கோடு
57. மெதுக்கும்மல்
58. கொல்லங்கோடு
59. ஆறுதேசம்
60. பைங்குளம்
61. ஆத்தூர்
62. மீக்கேடு
63. திருவெட்டார்
64. திருபரப்பு
65. கிள்ளியூர்
66. கீழ்மிதிலம்
67. நாட்டாளம்

### தர்மபுரி மாவட்டம்

68. மாரண்டஹள்ளி

### கோயம்புத்தூர் மாவட்டம்

69. கணியூர்
70. பெரிய நேங்கமம்
71. வேட்டைக்காரன்புதூர்
72. கன்னியாவாடி
73. முதூர்
74. வீரப்பன்சத்திரம்
75. சென்னிமலை
76. வடுகப்பட்டி
77. புளியப்பட்டி
78. காசிபாளையம்
79. தம்பியூர்
80. லக்கம்பாட்டி
81. கூகலூர்
82. பி. மேட்டுப்பாளையம்
83. அம்மாப்பேட்டை

### மதுரை மாவட்டம்

84. அய்யம்பாளையம்
85. அய்யலூர்
86. ஓட்டன்சத்திரம்
87. பாலசமுத்திரம்
88. அகரம்
89. அம்மயநாயக்கனூர்
90. பிளமேடு
91. சோழவந்தான்
92. பேரையூர்
93. கோதாடை
94. பொன்மேனி
95. ஆவணியாபுரம்
96. ஏ. வெள்ளாளப்பட்டி
97. ஹார்விப்பட்டி (நகரியம்)
98. காமயங்கவுண்டன்பட்டி
99. தேவாரம்
100. ஹனுமந்தப்பட்டி
101. கோம்பை
102. பண்ணைபுரம்

### திருநெல்வேலி மாவட்டம்

103. ஆழ்வார்குறிச்சி
104. கள்ளிடைக்குறிச்சி
105. பத்தமடை
106. மேலச்சியல்
107. கோபாலசமுத்திரம்
108. பனங்குடி
109. ஏர்வாடி
110. திசையன்விளை
111. சிவகிரி
112. ராயகிரி
113. கருகுமலை
114. கடம்பூர்
115. ஸ்ரீவைகுண்டம்
116. திருச்செந்தூர்
117. ஏரல்
118. தென்திருப்பேரை
119. ஆலங்குளம்
120. கீழப்பாவூர்
121. சுரண்டை
122. வடகரைகீழப்பிடாகை
123. இலஞ்சி
124. புளியாரை

### சேலம் மாவட்டம்

125. பள்ளிப்பாளையம்
126. மல்லசமுத்திரம்
127. செந்தாரைப்பட்டி
128. ஏத்தாப்பூர்
129. அயோத்தியாப்பட்டினம்
130. பெத்தநாயக்கன்பாளையம்
131. கிரிப்பட்டி
132. மேச்சேரி
133. குளத்தூர்
134. மோகனூர்
135. பாண்டமங்கலம்
136. வெங்கரை

### திருச்சிராப்பள்ளி மாவட்டம்

137. தாந்தோணி
138. நங்கவரம்
139. இனாம் கருவூர்
140. குளித்தலை
141. அரவக்குறிச்சி
142. உப்பிட்ட மங்கலம்
143. ஜெயங்கொண்டம்
144. உடையார்பாளையம்
145. சிறுகாமணி
146. ஆலங்குடி
147. கரம்பக்குடி
148. அரிமளம்
149. பொன்னமராவதி
150. முசிறி
151. தண்டலைப்புதூர்
152. தொட்டியம்
153. காட்டுப்புதூர்
154. தாத்தையங்கார்பேட்டை
155. துறையூர்
156. புவளூர்

### நீலகிரி மாவட்டம்

இல்லை

### இராமநாதபுரம் மாவட்டம்

இல்லை

### செங்கல்பட்டு மாவட்டம்

இல்லை

---

## உருவப்படங்கள்—ஊராட்சி, ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள், பள்ளிகள் மற்றும் ஊராட்சிகளால் நடத்தப்படுகின்ற இதர நிறுவனங்கள்—திருவள்ளுவரின் திருவுருவப்படத்தின் கீழ், திருக்குறள் பாக்களை அழகுற அமைத்தல்—பரிந்துரைக்கப்படுகிறது

## Portraits—Panchayats and Panchayat Union offices, schools and other institutions run by Panchayats—Instructions regarding display of Couplets from Thirukkural below the portrait of Thiruvalluvar—Recommended.

ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் மற்றும் அவற்றால் நடத்தப்படுகின்ற இதர நிறுவனங்களில், அரசு அனுமதித்த திருவள்ளுவரின் திருவுருவப்படத்தை அமைக்கலாமென்று கிராமவளர்ச்சி, உள்ளாட்சித்துறையின் 1967-ம் ஆண்டு ஜூன் மாதம் 23-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 1193-ல், அரசு பரிந்துரைந்துள்ளது. உள்ளாட்சி நிறுவனங்களில் பணியாற்றும் அலுவலர்கள் அனைவரின் கருத்திலும், திருக்குறளின் அரிய நோக்கங்களை பதியவைக்கும் முறையில், திருவள்ளுவரின் திருவுருவப்படத்திற்குக் கீழே திருக்குறள் பாக்களை அழகுற அமைக்க வேண்டிய அவசியத்தை அரசு பரிசீலித்தது.

தமிழக அரசின், தமிழ் வளர்ச்சி இயக்குநர் பரிந்துரைத்துள்ள குறள்பாக்கள் மூன்று கீழே தரப்பட்டுள்ளன.

1. காதன்மை கந்தா அறிவறியார்த் தேறுதல்
   பேதைமை எல்லாந் தரும்.
2. வெள்ளத் தனைய மலர் நீட்டம் மாந்தர்தம்
   உள்ளத் தனைய துயர்வு.
3. ஒழுக்கத்தி னெய்துவர் மேன்மை இழுக்கத்தின்
   எய்துவ ரெய்தாப் பழி.

தமது அலுவலகங்கள், நிறுவனங்கள் ஆகியவற்றில் அமைக்கப்பட்டிருக்கும் திருவள்ளுவரின் திருவுருவப் படத்தின் கீழ், மேற்காணும் திருக்குறள் பாக்களில் ஏதேனும் ஒன்றை தகுந்த முறையில் அமைக்க வேண்டுமென்று, உள்ளாட்சி நிறுவனங்களின் நிர்வாக அதிகாரிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

*(கிராம வளர்ச்சி இயக்குநர் அலுவலகத்தின் 17—8—1968 நாளிட்ட சுற்றறிக்கை எண் 53254-ன் சுருக்கம்)*

**1966-ம் ஆண்டு தமிழக பொதுக் கட்டிடங்கள் (உரிமம் வழங்குதல்) சட்டம்—விதி 6-க்கு விளக்கம்—திருத்தம்—வெளியிடப்படுகிறது.**

**Rules—Madras Public Buildings (Licensing) Rules, 1966—Explanation under Rules 6—Amendment—Issued.**

பிற்சேர்க்கையிலுள்ள அறிவிப்பு செயிண்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழில் பிரிசுரிக்கப்படும்.

1.62738

**பிற்சேர்க்கை**

**அறிவிப்பு**

1965-ம் ஆண்டு தமிழக பொதுக் கட்டிடங்கள் [உரிமம் வழங்குதல்) சட்டத் (தமிழகச் சட்டம் 13/1965)-திலுள்ள பிரிவு 25-ல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைப் பயன்படுத்தி, 1966-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 16-ம் நாளிட்ட செயிண்ட் ஜார்ஜ் கோட்டை அரசிதழ் பாகம் II, பக்கங்கள் 125–133-ல் வெளியிடப்பட்டுள்ள கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1966-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 4-ம் தேதியிட்ட அறிவிப்பு எஸ்.ஆர்.ஓ. எண். ஏ. 158—உடன் வெளியிடப்பட்ட 1966-ம் ஆண்டு தமிழக பொதுக் கட்டிடங்கள் (உரிமம் வழங்குதல்) விதிகளுக்கு, தமிழக ஆளுநர் அவர்கள், கீழ்க்கண்ட திருத்தங்களைச் செய்கிறார்.

**திருத்தம்**

சொல்லப்பட்ட விதிகளில், விதி 6-க்குள்ள விளக்கத் திற்குப் பதிலாக, கீழ்க்கண்ட விளக்கத்தைக் கொள்ள வேண்டும். அதாவது,—

"விளக்கம்—ஒவ்வொரு கட்டிடத்திற்கும் தனித்தனியே உரிமம் (Licence) வழங்கப்படும். ஒரு கட்டிடத்திற்கென வழங்கப்பெற்ற உரிமமானது, அக்கட்டிடம் முழுவதிலும், அல்லது அதன் ஒரு பகுதியில் சட்டப்படி வசிக்கும் அனைவருக்கும் மற்றும் அதை பொதுக் கட்டிடமாக பயன் படுத்துபவர்கள் அனைவருக்கும் செல்லும்."

(கிராம வளர்ச்சி, உள்ளாட்சித் துறையின் 1968-ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14-ம் நாளிட்ட அரசு ஆணை எண் 255-ன் சுருக்கம்)

---

## இந்த இதழில்


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | நமது காணிக்கை .. .. .. | 1 |
| 2. | தாயகத்திலே தமிழக முதல்வர் .. | 2 |
| 3. | உள்ளாட்சித் துறையின் ஓராண்டுச் சாதனை .. .. .. .. | 6 |
| 4. | வெளிநாடுகளில் கண்ட உள்ளாட்சி வளர்ச்சிப் பணிகள் .. .. | 8 |
| 5. | அண்ணாவின் பிறந்த நாள் பெருமங்கல வாழ்த்து .. .. .. | 16 |
| 6. | கிராமங்கள் தோறும் மகளிர் மன்றம் | 23 |
| 7. | புதிய பாதை-விவசாயக் கவியரங்கம் (பொதுப்பணித்துறை அமைச்சரின் தலைமை உரை-(கவிதை வடிவில்] | 26—27 |


## அடுத்த இதழில்...


1. சீரணிப்படையின் சாதனை
2. புதியபாதை-விவசாயக் கவியரங்கம் வேளாண்மைக் கவிஞர்களின் கவிதைகள்
3. "பசியிலிருந்து விடுதலை"
4. ஊராட்சித் திட்டங்களும்-செயல்படுத்தும் முறைகளும்
5. உலகநாடுகள் பலகணி
6. காந்தி அண்ணலின் நூற்றாண்டு விழா-படங்களுடன்
7. கண்டதும் கேட்டதும்


---


ஆசிரியக் குழுத் தலைவர் : திரு T. A. S. பாலகிருஷ்ணன், I.A.S.

வெளியிடுபவர் : திரு ஜி. திருமால், எம்.ஏ.; ஐ.ஏ.எஸ்.

ஆசிரியர் : திரு எஸ். வேங்கடசாமி, எம்.ஏ.

Printed by the Director of Stationery and Printing, Madras, on behalf of the Government of Madras.
Edited by the Public Relations Officer and Published by the Director of Rural Development, Madras-9.
Chairman of the Editorial Committee Thiru T. A. S. Balakrishnan, I.A.S.
Wrapper printed at Vadapalani Press, Madras-26.


REGD. No M. 7277 © தமிழக அரசு 1968

# அளவோடு பெற்று வளமோடு வாழுங்கள்



சிவப்பு முக்கோணம் குடும்ப நல திட்டத்தின் சின்னம்

## குடும்பக்கட்டுப்பாடு செய்திடுவீர்

# Stanes

## ஸ்டேன்ஸ் நிறுவனத்தார் மகிழ்ச்சியுடன் அளிக்கும்
## "கோல்டு ஸீட்" வீரிய ஒட்டு விதைகள்

உயர் விளைச்சலுக்கும், பெருகிய லாபத்துக்கும் உத்திரவாதமானவை.
நவீன முறையில் வெளிநாட்டு இயந்திரங்களில் பக்குவமாகி, அதிக முளைப்பு வீரிய சக்தியும், அங்கீகரிக்கப்பட்ட இன சுத்தமும் பெற்றவை.

தற்போது வினியோகத்திலிருக்கும் எங்களது உன்னத ரகங்கள் :—

1. "கோல்டு ஸீட்" வீரிய ஒட்டு சோளம் CHS-I
2. "கோல்டு ஸீட்" வீரிய ஒட்டு கம்பு HBI-I
3. "கோல்டு ஸீட்" வீரிய மக்காச் சோளம்

(a) டெக்கான் (தக்ஷிண வீரிய மக்காச் சோளம்)—மஞ்சள் ரகம்
(b) கங்கா—3 (குறைந்த வயது—மஞ்சள் ரகம்)
(c) கங்கா சபேட்—2 (வெள்ளை ரகம்)
(d) ஹை-ஸ்டார்ச் (வெள்ளை ரகம்)

விதை உற்பத்தியாளர்கள் :—

தந்தி : "கோல்டுஸீட்" போன் : 30442

## கோயமுத்தூர் ஸீட்ஸ் கார்ப்பரேஷன்,
பேரூர், கோயமுத்தூர்-10.

உங்களது விதைத் தேவைக்கும், விபரங்களுக்கும் :—

## டி. ஸ்டேன்ஸ் & கம்பெனி லிட்,
உர இலாகா,
த. பெட்டி எண் 1312, கோயமுத்தூர்-18.

தந்தி : ஸ்டேன்ஸ். போன் : 23351, 23352, 23353, 23354.

தொழிற்சாலைகள் :—

| | | | |
|---|---|---|---|
| வளவனூர், விழுப்புரம், போன்-25 | துடியலூர், போன்: 25385 | ஆவன்யாபுரம், மதுரை, போன் : 5533 | தச்சநல்லூர், திருநெல்வேலி, போன் : 195 |